Catalog

INDEX ........ 1
1 ........ 73
2 ........ 387

கணபதி துணை.

எட்டுத்தொகையுள் ஒன்றாகிய

# புறநானூறுமூலமும் உரையும்.

இவை

கும்பகோணம் காலெஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

பல பிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்து,

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

சென்னை:

வே. நா. ஜூபிலி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

1894.

Copyright Registered.

விலை—ரூபா ௪.

# இப்புத்தகத்தில் அடங்கியவை.


க. முகவுரை.

உ. இந்நூலிற்கண்ட நாமமுதலியன.

ங. பாடினோர் வரலாறு.

ச. பாடினோர் நாமபேதங்கள்.

ரு. பாடப்பட்டோர் வரலாறு.

சா. பாடப்பட்டோர் நாமபேதங்கள்.

எ. விஷய சூசிகை.

அ. புறநானூறு மூலமும் உரையும்.

கூ. பாட்டுமுதற்குறிப்பகராதி.

கo. திணைவிளக்கம்.

கக. துறைவிளக்கம்.

கஉ. துறைக்குறிப்பு.

கங. அரும்பதவகராதி.

கச. இலக்கணக்குறிப்பகராதி.

கரு. பிரயோகவிளக்கம்.

கசா. பிழைத்திருத்தம்.

கஎ. வி. வேங்கையரவர்களெழுதிய விசேடக்குறிப்பு.

கஅ. வி. கனகசபைப்பிள்ளையவர்களெழுதிய விசேடக்குறிப்பு.

கணபதி துணை.

# முகவுரை.

புறநானூறென்பது, அமிழ்திற் சிறந்த தமிழ்மொழியதனை ஒன்பான் சுவைபுணர்த் தன்பால் வளர்த்தருள் நச்சும் பெருமை *முச்சங்கத்துள் கடைச்சங்கப் புலவர்கள் அருளிச்செய்த எட்டுத்தொகையுள் ஒன்று; எட்டுத்தொகையாவன: நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு பதிற்றுப்பத்து பரிபாடல் கலித்தொகை அகநானூறு புறநானூறு என்பன. இதனை அடியில்வரும் வெண்பாவி னுணர்க.

> " நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
> றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென்
> றித்திறத்த வெட்டுத் தொகை."

இவற்றுள் ஒவ்வொன்றும் பலராற்செய்யப்பட்டுத் தொழில் அளவு பாட்டு பொருளென்பனவற்றுள் ஒவ்வொன்றால் தொகுக்கப்பட்டமையின், இவை தொகையென்று பெயர்பெற்றனவென்பர்.

இவற்றுள்,—

க. நற்றிணை:—இது, கடவுள்வாழ்த்துச்செய்யுள்முதலிய ச0க - அகவற்பாக்களையுடையது; இப்பாக்களுள், முதற்செய்யுளாகிய கடவுள் வாழ்த்துப் பாரதம்பாடியபெருந்தேவனாராலும், மற்றை நானூறுபாக்களும் கபிலர்முதல் ஆலங்குடிவங்கனாரிறுதியாகவுள்ள புலவர் பலராலும் இயற்றப்பட்டன; பொருளின்பகுதியாகிய அகம் புறமென்னுமிரண்டனுள் அகத்தின்பகுதிகளையே பொருளாகவுடையது. மேற்கூறிய அகவற்பாக்கள், ஒன்பதடிச்சிறுமையும் பன்னிரண்டடிப்பெருமையுமுள்ளவைகள். இத்தொகை தொகுப்பித்தோன், பன்னாடுதந்த பாண்டியன்மாறன்வழுதி. இதற்கு உரை கிடைத்திலது.

உ. குறுந்தொகை:— இது கடவுள்வாழ்த்துச் செய்யுள்முதலிய ச0உ - அகவற்பாக்களையுடையது. இவற்றுள், முதற்பாவாகிய கடவுள்

* முச்சங்கத்தின் வரலாறுகளை இறையனாரகப்பொருளுரையிலும் சிலப்பதிகாரவுரையிலும் காண்க.

வாழ்த்துப் பாரதம்பாடியபெருந்தேவனாரும் மற்றை சஙிசு - பாக்கள் திப்புத்தோளார்முதல் அம்மூவனாரிறுதியாகவுள்ள புலவர் இருநூற்று நால்வராலும் இயற்றப்பட்டுள்ளன; அகத்தின்பகுதிகளையே பொருளாக வுடையது. மேற்கூறிய அகவற்பாக்கள் நாலடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் உள்ளவைகள். இத்தொகைமுடித்தான் பூரிக்கோ. இஃது அளவால் தொகுக்கப்பட்டதென்பர். இத்தொகையின் பாக்களுள் இருபதுபாக்களொழிந்த மற்றைப்பாக்களுக்குப் பேராசிரியர் பொருளெழுதினரென்றும் அவரெழுதாதொழிந்த இருபதுபாக்களுக்கும் நச்சினார்க்கினியர் பொருளெழுதினரென்றும் பின்னுள்ள பாடல்கள் உணர்த்துகின்றன: "பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியு, மாரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்குஞ் - சாரத், திருத்தகு மாமுனிசெய் சிந்தாமணியும், விருத்திநச்சி னார்க்கினிய மே," "நல்லறி வுடைய தொல்பேராசான், கல்வியுங் காட்சியுங் காசினி யறியப், பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற், கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய, விதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்தும்"; இவை நச்சினார்க்கினியருரைச்சிறப்புப் பாயிரம். "பேராசிரியரும் 'யானே யீண்டை யோனே' என்னுங் குறுந்தொகைச் செய்யுளில் மீனெறிதூண்டிலென்பதனை வினையுவமமென்றார்" என்று தொல்காப்பியம், அகத்திணையியல் ருசு - ம் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலாலும் இத்தொகைக்குப் பேராசிரியர் பொருளெழுதினரென்பது ஊகித்தறியப்படுகின்றது. அவ்வுரை கிடைத்திலது.

ரு. ஐங்குறுநூறு:—இஃது அகத்தின் பகுதியாகிய மருதமுதலிய ஐந்திணைகளையும் நூறுநூறு அகவற்பாக்களால் விளக்குவது; கடவுள் வாழ்த்துச்செய்யுள்முதலிய ருoக - அகவற்பாக்களையுடையது; இப்பாக்களுள் கடவுள்வாழ்த்துப் பாரதம்பாடியபெருந்தேவனாராலும், மருதத்திணையைக்குறித்த முதல்நூறு ஓரம்போகியாராலும், நெய்தற்றிணையைக்குறித்த இரண்டாநூறு அம்மூவனாராலும், குறிஞ்சித்திணையைக்குறித்த மூன்றாநூறு கபிலராலும், பாலைத்திணையைக்குறித்த நான்காநூறு ஓதலாந்தையாராலும், முல்லைத்திணையைக்குறித்த ஐந்தாநூறு பேயனாராலும் இயற்றப்பட்டுள்ளன. இதனை அடியில்வரும் வெண்பாவாலுணர்க.

"மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலர் - கருதிய
பாலையோ தல்லாந்தை பன்முல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு."

இதிலுள்ள பாக்களினுடைய அடிகளின் சிறுமைபெருமை தெரியவில்லை. இத்தொகை தொகுத்தார் புலத்துறைமுற்றிய கூடலூர்கிழார்;

தொகுப்பித்தான் யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை. இதற்கு உரை கிடைத்திலது.

௪. பதிற்றுப்பத்து:—இது சேரர்குலத்தாரையே பாடியது; இத்தொகையால் அக்காலத்திருந்த சேரர்பலருடைய வள்ளன்மையும் வீரமும் பின்னுமுள்ள வரலாறுகள் பலவும் நன்குபுலப்படும். இஃது, ஒவ்வொருபுலவர் பப்பத்தாகச்செய்த நூறுபாட்டுக்களையுடையது. இதனாலேயே இத்தொகை பத்துப்பகுதியாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் முதற்பத்தும் பத்தாம்பத்தும் இப்பொழுது பலவிடத்துப்பிரதிகளிலுங் காணப்படாமையால் அவை இறந்தனபோலும். எஞ்சியவற்றுள்,—

இரண்டாம்பத்து, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார்பாடி உம்பற்காட்டு ஐஞ்ஞூறூர் பிரமதாயம்பெற்று முப்பத்தெட்டியாண்டு தென்னாட்டுள்வருவதனிற் பாகமும்பெற்றது.

மூன்றாம்பத்து, இமயவரம்பன்றம்பி பல்யானைச்செல்புகழ்க்குட்டுவனைப் பாலைக்கௌதமனார்பாடிச் சுவர்க்கம்பெற்றது.

நான்காம்பத்து, களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைக்காப்பியாற்றுக் காப்பியனார்பாடி நாற்பதுநூறாயிரம்பொன் பரிசிலும் அவன் ஆள்வதிற் பாகமும் பெற்றது.

ஐந்தாம்பத்து, கோச்செங்குட்டுவனைப் பரணர்பாடி உம்பற்காட்டு வாரியையும் அவன்மகன் குட்டுவன்சேரலையும் பரிசில்பெற்றது.

ஆறாம்பத்து, நாடுகோட்பாடுசேரலாதனைக் காக்கைபாடினியார் நச்சென்னையார்பாடி ஒன்பதுகாப் பொன்னும் நூறாயிரங்காணமும்பெற்று அவன்பக்கத்து இருத்தல்கொண்டது.

ஏழாம்பத்து, செல்வக்கடுங்கோவாழியாதனைக் கபிலர்பாடி நூறாயிரங் காணமும் அவன் ஒரு பெரியமலைமீதேறிக் கண்டுகொடுத்தநாடும் பரிசில்பெற்றது.

எட்டாம்பத்து, தகடூரெறிந்தபெருஞ்சேரலிரும்பொறையை அரிசில் கிழார்பாடி ஒன்பதுநூறாயிரங்காணம் பரிசில்பெற்றது.

ஒன்பதாம்பத்து, குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையைப் பெருங்குன்றூர்கிழார்பாடி முப்பத்தீராயிரம் காணமுதலியன்பெற்றது.

இந்நூலிலுள்ள பாக்களினுடைய அடிகளின் சிறுமைபெருமை புலப்படவில்லை. இத்தொகையைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும்

இன்னாரின்னாரென்றும் தெரியவில்லை. இதற்கு அரும்பதவுரை ஒன்றுண்டு.

ரு. **பரிபாடல்**:—ஒருவகைப் பாவின்பெயராகிய பரிபாடலென்பது அப்பாவாலாகிய நூலுக்காயிற்று. இஃது, எழுபதுபாட்டுக்களையுடையதென்றும், அவ்வெழுபதுள் அ - பாட்டுத் திருமாலுக்கும் ௩௧ - குமரவேளுக்கும் க - டுலுக்கும் உசு - வையையாற்றிற்கும் ச - மதுரைக்குமாகப் பகுக்கப்பட்டுள்ளனவென்றும் அடியில்வரும் வெண்பா விளக்குகின்றது.

"திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் கார்கோளுக் கொன்று - மருவினிய
வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்."

அவ்வெழுபது பாடல்களுள் இப்பொழுதுகிடைத்தவை இருபதே; மற்றவை பிரதிகளிற்காணப்படவில்லை. இயற்றிய ஆசிரியர்களின்பெயர் அவ்வப்பாட்டுக்களின்பின்னர் எழுதப்பட்டுள்ளன. இந்நூலிலுள்ள பாக்களினுடைய அடிகளின் சிறுமைபெருமை விளங்கவில்லை. இதனைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னாரின்னாரென்றும் புலப்படவில்லை. இத்தொகை பாட்டாற்பெருக்கப்பட்டது. இதற்குப் பழைய வுரை ஒன்றுள்ளது.

சு. **கலித்தொகை**:— இது கடவுள்வாழ்த்துச் செய்யுள்முதலிய நூற்றைம்பது கலிப்பாக்களையுடையது; அகத்தின்பகுதியாகிய பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்தலென்னும் ஐந்திணைக்குமுரிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள்களை இனிதுவிளக்குவது; சொல்லினிமை பொருளினிமையில் மிகச்சிறந்தது. இதிலுள்ள செய்யுட்கள் பல புலவராற்செய்யப்பட்டனவென்று பழையவுரைகளைக்கொண்டு ஊகித்தறியப்படுமாயினும் கிடைத்தபிரதிகளில் அவ்வச்செய்யுளின்பின்னர் இயற்றிய ஆசிரியர்களின் பெயர்கள் மற்றைத்தொகைகளிற்போல எழுதப்படாமையின் இயற்றியவர் இன்னாரின்னாரென்று தெரிந்துகொள்ளக்கூடவில்லை. இந்நூலிலுள்ள பாக்களினுடைய அடிகளின் சிறுமைபெருமையும் விளங்கவில்லை. இதற்கு நச்சினார்க்கினியர் உரைசெய்திருக்கின்றனர். இது குறுங்கலித்தொகையென்றும் கலியென்றும் கூறப்படும். இத்தொகை பாட்டாற்பெருக்கப்பட்டது.

எ. **அகநானூறு**:—இது கடவுள்வாழ்த்துச்செய்யுள்முதலிய சoஂ - அகவற்பாக்களையுடையது; இவற்றுள், பாரதம்பாடியபெருந்தேவனாரால் முதற்செய்யுளாகிய கடவுள்வாழ்த்தும் மாமூலனார்முதல் உலோச்சனா

ரிறுதியாகவுள்ள புலவர் பலரால் மற்றைநானூறும் இயற்றப்பட்டுள்ளன; அகத்தின்பகுதிகளையே பொருளாகவுடையது. மேற்கூறிய அகவற்பாக்கள் பதின்மூன்றடிச்சிறுமையும் முப்பத்தேழடிப்பெருமையுமுள்ளவைகள். இவற்றுள் கடவுள்வாழ்த்தொழிந்த நானூறுபாக்களில் முன்புள்ள கஉ0 - பாக்கள் களிற்றியானைநிரையெனவும் அவற்றின்பின்புள்ள கஅ0 - பாக்கள் மணிமிடைபவளமெனவும் மற்றையநூறுபாக்கள் நித்திலக்கோவையெனவும் கூறப்படும். இத்தொகை தொகுத்தான், மதுரை உப்பூரிகுடிகிழார் மகனுவான் உருத்திரசன்மன். தொகுப்பித்தான் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. இத்தொகை அகமெனவும் அகப்பாட்டெனவும் நெடுந்தொகையெனவும் கூறப்படும். இது பொருளாற்பெருக்கப்பட்டது.

புறநானூற்றின் வரலாற்றிற்கு அங்கமாக நற்றிணைமுதலிய ஏழுதொகைகளின் வரலாறுகள் இதுவரையிற் கூறப்பட்டன.

அ. புறநானூறு :—இது கடவுள்வாழ்த்துச்செய்யுள்முதலிய ச00 - அகவற்பாக்களையுடையது. அப்பாக்களுள் முதற்செய்யுளாகிய கடவுள் வாழ்த்துப் பாரதம்பாடியபெருந்தேவனாரானும் மற்றை ௩௯௯ - பாக்களும் முரஞ்சியூர் முடிநாகராயர்முதல் கோவூர்கிழாரிறுதியாகவுள்ள புலவர் பலராலும் இயற்றப்பட்டுள்ளன. இதனைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னாரின்னாரென்று விளங்கவில்லை. இந்நூலிலுள்ள பாக்களினுடைய அடிகளின் சிறுமைபெருமையும் தெரியவில்லை. இது புறப்பாட்டெனவும் புறமெனவும் வழங்கும். இது பொருளாற்பெருக்கப்பட்டது. இங்கே பொருளென்றது, அகம் புறமென்னுமிரண்டனுள் புறத்தை.

அகமாவது ஒத்த அன்பினராகிய தலைவனுந்தலைவியும் தம்முட்கூடுகின்றகாலத்துப்பிறந்து அக்கூட்டத்தின்பின்பு அவ்விருவராலும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப்புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் எப்பொழுதும் உள்ளத்துணர்வாலேயே அனுபவிக்கப்படும் இன்பம்; இன்பம்பற்றி அகத்தேநிகழும் ஒழுக்கத்தை அகமென்றது ஆகுபெயர்; அகம் - உள். புறமாவது மேற்கூறிய ஒத்த அன்புடையாராலேயேயன்றி எல்லாராலும் அனுபவித்துணரப்பட்டு இஃது இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக்கூறப்படும்பொருள்; அஃது அறனும் பொருளும்; அறனும் பொருளும்பற்றிப் புறத்தேநிகழுமொழுக்கத்தைப் புறமென்றது ஆகுபெயர்; புறம் - வெளி. இந்நூல், மேற்கூறிய புறத்தின்பகுதியாகிய வெட்சிமுதலிய திணைகளுக்குரிய துறைப்பொருளமைந்த ச00 - பாக்களையுடைமையின், புறநானூறென்று பெயர்பெற்றது. வெட்சிமுதலிய திணைகளா

வன :—வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணையென்பன. திணை - ஒழுக்கம். துறை - மக்களும் விலங்குகள்முதலியனவும்சென்று நீருண்ணும் துறைபோலப் பலவகைப்பட்டபொருளும் ஒருவகைப்பட்டு இயங்குதற்குரியவழி. ஈண்டுக்கூறிய திணை துறைகளின் விவரணங்களைப் பின்னர்ச்சேர்க்கப்பட்டுள்ள திணைவிளக்கத்திலும் துறைவிளக்கத்திலும் முறையே காண்க.

இந்நூலால், பண்டைக்காலத்து இத்தமிழ்நாட்டிலிருந்த சேரசோழ பாண்டியர்களாகிய முடியுடைவேந்தர், சிற்றரசர், அமைச்சர், சேனைத்தலைவர், வீரரென்கிற பலருடைய சரித்திரங்களும், கடையெழுவள்ளல்களின் சரித்திரங்களும், கடைச்சங்கப்புலவர் பலருடையசரித்திரங்களும், அக்காலத்துள்ளாருடைய நடைமுதலியனவும் இன்னும்பற்பலவும் நன்கு புலப்படும். இந்நூற்செய்யுட்களிற் பாடப்பட்டவர்கள் ஒருகாலத்தாரல்லர்; ஒருகுலத்தாரல்லர்; ஒருசாதியாரல்லர்; ஓரிடத்தாருமல்லர். பாடியவர்களும் இத்தன்மையரே. இவர்களில் அந்தணர் சிலர்; அரசர் பலர்; வணிகர் பலர்; வேளாளர் பலர். பாடியவர்களுள் பெண்பாலாருமுளர்.

முன்னோ ரிடையே யிந்நா டாண்ட, காவலர் பல்லோர் பாவலர் பல்லோர், மாசரி தத்தை யாசற விளக்கிச், சொற்சுவை பொருட்சுவை துவன்றியெஞ் ஞான்று, மொப்புமை யில்லாத் திப்பிய நடையுடைத், திறப்பா டமைந்தவிப் புறப்பாட் டுக்கள், தெய்வ வணக்கஞ் செய்யுமி னென்பவும், அறத்தின் பகுதியை உறத்தெரிப் பனவும், பாவ வழியை நீவனன் றென்பவும், இம்மைப் பயனொடு மறுமைப் பயனைச், செம்மையின் வகுத்துத் தெரிவிப் பனவும், அந்தண ரியல்பைத் தந்துரைப் பனவும், அரச நீதிய யுரைசெய் வனவும், வணிக ரியல்பைத் துணிவுறுப் பனவும், வேளாண் மாக்களின் றாளாண் மையினை, யியம்பு வனவும் வயம்புரி போர்க்கு, முந்துறு மரசரைச் சந்துசெய் வனவும், ஒற்றுமைப் பயனைச் சொற்றிடு வனவும், வீரச் சிறப்பை யாரத் தெரிப்பவும், இல்லற மாகிய நல்லற முரைப்பவுந், துறவற மதனைத் திறவிதிற் றெரிப்பவு, மிடித்துன் பத்தை யெடுத்துரைப் பனவும், வண்மையுந் தண்மையு முண்மையுந் திண்மையு, மென்னு மிவற்றைப் பன்னு வனவும், அளியையு மொளியையுந் தெளிவுறுப் பனவுந், தம்மைப் புரந்தோர் தாமாய்ந் திடவே, புலவர்கள் புலம்பியல்பு தெரிப்பவு, நட்பின் பயனை நன்கியம் புநவுங், கல்விப் பயனைக் கட்டுரைப் பனவும், நீர்நிலை பெருக்கென நிகழ்த்து வனவு, மானந் தன்னைத் தானன் குரைப்பவும், இளமையும் யாக்கையும் வளமையு நிலையா, வென்றே யிசைத்து நன்றேயப் பனவும், அருளுடை மையினை மருளறத் தெரிப்ப

வும், தாமரைத் தொழுகென் றானுற விதிப்பவும், அவாவின் கேடே தவா வின் பென்பவும், இனியவை கூற னனிநல னென்பவும், உழவின் பெரு மையை யழகுற வுரைப்பவு, நன்றி யறிக வென்றிசைப் பனவுங், கொடுங் கோன் மையினை விடுங்கோ ளென்பவுந், தவத்தின் பெருமையைத் தவப்ப கர் வனவு, மடியெனும் பிணியைக் கடிமி னென்பவுங், கொலையெனும் பகையைத் தொலைமி னென்பவு, நல்லோர்ப் புணர்ந்து புல்லோர்த் தணந்து, தாழ்வொன் றின்றி வாழ்மி னென்பவுஞ், சுற்றம் புரக்கு நற்றிற முரைப்பவுங், கற்பின் றிறத்தைக் கற்பிப் பனவு, மக்கட் பேற்றின் மாண்புரைப் பனவுங், கணவனை யிழந்த டணமலி கூந்த, றீப்பாய் செய்தி தெரிவிப் பனவுங், கைம்மை விரத வெம்மை விரிப்பவும், இன்னும் பற்பல பன்னு வனவுமாய்ச், செப்புந ரெவர்க்கு மெய்ப்பிடை வைப்பாய், அரும் பெறன் மரபிற் பெரும்பயன் றருமே. என்று ஒருவாறு பொதுப்படத் தொகுத்துக்கூறுவதன்றி இன்னபாடல் இத்தன்மையது இன்னபாடல் இத் தன்மையதென்று தனித்தனியே எடுத்துக்காட்டி இவற்றின் அருமை பெருமைகளைச் சீராட்டிப் பாராட்டுதற்கு ஒருசிறிதும் வல்லேனல்லேன்.

இவை நூலாசிரியர் பலருடைய உள்ளத்தையும் உரையாசிரியர் பல ருடைய உள்ளத்தையும் தம்வசமாக்கி அவற்றைத் தமக்கு முழுமணிப் பீடிகையாகக்கொண்டு வீற்றிருந்தனவென்பதை, அவரவரருளிச்செய்த நூல்களும் உரைகளும் இவற்றின் சொன்னடை பொருணடைகளை இடை யிடையே பெரும்பாலுந்தழுவியிருத்தலே நன்குபுலப்படுத்தும்.

இந்நூற்குக்கிடைத்தவுரை, பதப்பொருளை இனிதுவிளக்கி உரிய இடங்களிற் சொற்களைமுடித்துக்காட்டி இலக்கணக்குறிப்பையும் திணை துறைகளையும் ஆங்காங்குள்ள பழமொழிகளையும் அணியையும் சொன் னயம் பொருணயங்களையும் நன்குபுலப்படுத்துவது; இதில் இக்காலத்து வழங்காதசொற்கள் பலவுள்ளன. அன்றியும், இதன் இடையிடையே சிற்சிலவாக்கியங்கள் அவ்வவ்விடத்திற்குப் பொருத்தமில்லாதனவாகக் காணப்பட்டன. அவற்றைச் செவ்வைசெய்துகொள்ளுதற்கு இப்பொ ழுது தக்கசாதனம் கிடையாமையாலும் இனி நல்லபிரதிகள் கிடைப்பின், அவற்றைக்கொண்டு செவ்வைசெய்துகொள்ளலாமென்றும் அவற்றை மாற்றுது பிரதிகளிலிருந்தவாறே பதிப்பித்தேன். இவ்வுரை, இந்நூலின் முதல் இருநூற்றறுபத்தாறு பாடல்களுக்குமட்டுமே கிடைத்தது; மே லுள்ளபாடல்களுக்கு ஒருபிரதியிலும் கிடைத்திலது; உசஉ-ம் பாடலுக்கு மேற்பட்டுள்ளவற்றினுரை இடையிடையே சிதைந்து மாறியிருக் கிறது. இவ்வுரையாசிரியர் இன்னாரென்று தெரியவில்லை. இவர் சில பாடல்களின் விசேடவுரையில் எழுதும் மறுப்புக்கள், இந்நூற்குப்

பழையவுரை ஒன்றிருந்ததென்பதைக் குறிப்பிக்கின்றன. அவ்வுரை இப்பொழுது கிடைக்கவில்லை.

உரையில்லாதமூலங்கள் எழுத்துஞ்சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு வேறுபட்டிருந்ததன்றி, இவற்றுள், சிலபாடல்களின்பின் திணையெழுதப்படாமலும் சிலவற்றின்பின் துறையெழுதப்படாமலும் சிலவற்றின்பின் இரண்டுமெழுதப்படாமலும் சிலவற்றின்பின் பாடினோர்பெயர் சிதைந்தும் சிலவற்றின்பின் பாடப்பட்டோர்பெயர் சிதைந்தும் சிலவற்றின்பின் இருவர்பெயருமே சிதைந்தும் சிலபாடல்கள் இரண்டிடத்து எழுதப்பட்டு இரண்டெண்களையேற்றும் வேறுவேறிடத்தில் இருத்தற்குரிய இரண்டுபாடல்கள் ஒருங்கெழுதப்பட்டு ஓரெண்ணையேற்றும் சில முதற்பாகங்குறைந்தும் சில இடைப்பாகங்குறைந்தும் சில கடைப்பாகங்குறைந்தும் சில முற்றுமின்றியும் ஒருபாடலின் அடிகளுள் ஒன்றும் பலவும் வேறுபாடல்களின் அடிகளோடுகலந்தும் ஓரடியே ஒருபாட்டுட் சிலவிடத்துவரப்பெற்றும் பொருளுண்மைகாணுதவண்ணம் இன்னும் பலவகைப்படமாறியும் கையெழுத்துப்பிரதிகளிலிருந்தன. இவற்றைப் பரிசோதித்துவருகையில், இந்நூலிலிருந்து வேறுநூல்களினுடைய பழையவுரைகளின் இடையிடையே உரையாசிரியர்களால் பூர்த்தியாகவும் சிறிதுசிறிதாகவும் எடுத்துக்காட்டப்பட்டிருந்த உதாரணங்கள், சிற்சிலபாடல்களிலுள்ள வழுக்களைநீக்கிச் செவ்வைசெய்துகொண்டு பொருளுண்மைகாணுதற்கும், சிற்சிலபாடல்களிற் குறைந்தபாகங்களை நிரப்பிக்கொள்ளுதற்கும், பிறழ்ந்துகிடக்கும் சிலபாடல்களை ஒழுங்குபடுத்தி வரையறைசெய்துகொள்ளுதற்கும் பெருந்துணையாகவிருந்தன.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில், "மாற்றருங்கூற்றம்" என்னும் சூத்திரவுரையில், 'மீனுண்கொக்கின் என்னும் புறப்பாட்டுமது' என்று நச்சினார்க்கினியரெடுத்துக்காட்டிய முதற்குறிப்புச்செய்யுள் ஒருபிரதியிலும் கிடைத்திலது.

பாடல்களிலும், அவற்றின்பின்னர்த் திணைதுறைகளையும் பாடப்பட்டோர் பாடினோர்களையும் தனித்தனியேதெரிவிக்கும் வாக்கியங்களிலும், உரைகளிலும், பிரதிகளிற் சொற்கள் சிதைந்தவிடத்தைப் புலப்படுத்தற்கு (.........) இவ்வொற்றைப்புள்ளிநிரைகள் அமைக்கப்பட்டுள்ளன. பாடபேதங்களும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன.

உரைகிடையாதவிடத்து ஒருவகையாலும் பொருள்காணுதவிதம் சிதைவுற்றிருந்தமூலங்கள் ஏட்டுப்பிரதியிலிருந்தபடியே புள்ளியிடுதல் முதலியனவின்றிப் பதிப்பிக்கப்பட்டன.

# முகவுரை.

இந்நூற்கு இலக்கணம் அகத்தியமும் தொல்காப்பியமுமேயென்பதும் இதில் ஒவ்வொருபாட்டின்பின்னும் எழுதப்பட்டுள்ள திணையும் துறையும் அவ்வப்பாட்டிற்கு ஏற்றனவல்லவென்பதும் நச்சினார்க்கினியர் கருத்து; அவர்கருத்து அன்னதாதல், 'தத்தம் புதுநூல்வழிகளால் புறநானூற்றிற்குத் துறைகூறினாரேனும் அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திரப்பொருளாகத் துறைகூறவேண்டுமென்றறிக' என்று தொல்காப்பியப்புறத்திணையியலில் "கொடுப்போரேத்தி" என்னும் சூத்திரவுரையில் அவரெழுதியிருத்தலாலும் மேற்கூறிய புறத்திணையியலுரையில் இந்நூற்பாட்டுக்களுட்சிலவற்றை வேறு திணைதுறைகளுக்கு உதாரணமாகக்காட்டி அவர் மறுத்தலாலும் துணியப்படும்.

பாடினோரும் பாடப்பட்டோருமாகிய இருவகையார் பெயர்களுட் சிலபெயர், கையெழுத்துப் பிரதிகளில், பலவகைப்பட்ட விசேடணத்தோடுகூடியும் கூடாமலும் வேறுவேறிடத்து வேறுவேறுவிதமாக எழுதப்பட்டுமிருந்தன; அவை இன்னபெயரின் பரியாயங்களெனத்தெரிந்தும் அவற்றை ஒரேவிதமாகத் திருத்திவிடாமல் ஏனைத்தொகைகளிலும் மற்றைநூல்களிலும் உரைகளிலும் வழங்கும் பழையவழக்கத்தைத் தெரிவித்தற்கு அவை பிரதிகளில் இருந்தவாறே பதிப்பிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றற்கு உதாரணம்:—

க. மாந்தரஞ்சேரலிரும்பொறை
உ. சேரமான்மாந்தரஞ்சேரலிரும்பொறை
ங. சேரமான்யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை
ச. கோச்சேரமான்யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை

மேற்கூறிய இருவகையோருடைய பெயர்களிற் சிலபெயர்களுக்குக் காரணம் புலப்படுகின்றது; பலவற்றிற்குப்புலப்படவில்லை.

இத்தமிழ்நாட்டின் பழைய சரித்திரங்களைத்தெரிந்துகொள்ளுதலிலும் தெரிவித்தலிலுமே பெரும்பாலும் காலங்கழித்து உழைத்துவரும் உபகாரிகளாகிய விவேகிகள், இந்நூலை நன்கு ஆராய்ச்சிசெய்வார்களாயின் இதனால் பலர் வரலாறுகள்முதலியன தெரிந்துகொள்ளுதல்கூடும்.

இந்நூலுரையாசிரியர் மேற்கோளாக எடுத்துக்காட்டிய நூல்கள்:—

இலக்கணம் ... ... ... ... தொல்காப்பியம்.

இலக்கியம் ... ... ... ... { க. கலித்தொகை. / உ. சீவகசிந்தாமணி. / ங. பெரும்பாணாற்றுப்படை. }

இவ்வுரையைப்பதிப்பிக்குங்காலத்து இடம்விளங்காமேற்கோள்களுள் பின்பு இடம்விளங்கியது :—

| புறப்பாட்டின் எண். | | நூல். |
|---|---|---|
| உகூ௦. | "அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப் பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி" | பெரும்பாணாற்றுப் படை ; க - உ. |

இடம்விளங்காத மேற்கோள்கள் :—

சக.
எஅ. } "ஏவ விளையர் தாய்வயிறு கரிப்ப"
கருக.

ககூஅ. "பண்டுகொடுமென்"

கசஎ. "பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் செலியரோ வென்னை"

உரையாசிரியரெடுத்துக்காட்டிய வழக்குக்கள் :—

ககூகூ, 'கொண்டைமேற் காற்றடிக்க'

ககூஅ. 'கிளியீடுவாய்த்தாற்போல்வன்'

இந்நூலிலும் உரையிலுங்கண்ட அரியசொற்கள் :—

(எண்கள் பாட்டினெண்கள்.)

அடார், கக.
அடிக்கீழ், சாஎ.
அணுமை, உ௦க, உசா௦.
அதரிதிரித்தல், கூஎ௦, கூஎக, கூஎகூ.
அதற்பட, உகசா.
அருப்புத்தொழில், ச.
அல்லிப்பாவை, கூகூ.
ஆவுதி, உ.
ஆன்பொருந்தம், கூசா.
இட்டிய, கஎஎ.
இடைகழி, கஎரு.
ஒப்பமிட்ட நீலமணி, கசஎ.
ஒருதலை, ருகூ.
ஒருவீர், ருஅ.
ஓரிபாய்தல், க௦க.
ஓரியர், கஎசா.
கட்டிலெய்திறனே, கஎ.
கடாவழித்தல், கூருகூ.
கண்ணுறை, கரு.
கதுவாய், கூஎ.
கந்தாரம், உருஅ.
காவிய, ககூஅ.
காளாம்பி, ககூச.
குறித்துமாறெதிர்ப்பை, கூகூ.
கூப்பீடு, சச.
கைநீட்டு, கூஅ.
கொளுத்துச்செறிந்த, கரு௦.
கோசர், கசாக, கூகசா.
சாணகம், உசக.
செண்டுவெளி, கஎச, உஉ௦.
தலையாட்டம், உ, ச.
தறிகை, உ௦சா.
தாளியடிக்கப்பட்ட, கஉ௦.
துஞ்சிய, கூச, சசா, ருக, ருஅ, சாக, கஎகூ, ககூஎ, கூஎகூ, கூஅஎ.
நெருநற்று, கசகூ, கசஎ.
பல்லியாடிய, கஉ௦.
பவணழிந்து, க௦க.
பவரழிந்து, க௦க.
பனைநுகும்பு, உசக.
பார்ப்பார்ப்படுக்க,ககூ.
பாறுமயிர், உக.
பிசிர், உஉரு.
பெண்டாட்டி, கஉரு.
பையாப்பு, உஉக.
மட்டையாகியதலை, உசாக.
முகுத்தம், உ௦ச.
முட்டுக்கள், ககூக,

முதுமக்கட்டாழி, ௨௫௬.
முழூத்தம், ௨0௪.
முழுநெறி, ௧௧௬.
மூரிநிமிர்தல், ௫௨.
வடக்கிருத்தல், ௬௬.
வண்டற்பாவை, ௨௪௩.
வளையமாலை, ௭௬.
வேணுவியோர், ௪௩.

இந்நூலை அச்சிட்டுவருகையில், சிலாசாதனமுதலியவற்றால் அறிதற்குரிய சிலவற்றைத் தெரிந்துகொள்ளுதற்பொருட்டு ம-ா-ா-ஸ்ரீ வி. வெங்கையரவர்களையும், ம-ா-ா-ஸ்ரீ வி. கனகசபைப்பிள்ளையவர்களையும் எழுதிவினவினேன். அதற்கு அவர்கள் அன்புடன் எழுதியனுப்பிய விடைகள், பின்பு அவர்கள்பெயருடன் பதிப்பிக்கப்படும்.

இதனைப் பதிப்பிக்குங்காலத்து ஒப்புநோக்குதல்முதலிய பேருதவிகளை மிகுந்த ஊக்கத்துடன் செய்துவந்த திருவல்லிக்கேணி ஸ்ரீமத். வை. மு. சடகோபராமானுஜாசாரியருடைய அன்புடைமை ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று.

இந்நூற்பரிசோதனைக்கும் எனக்கும் எத்தனையோதூரமென்பதைச் சொல்லவேண்டுவதில்லை; ஆதலின், இப்பதிப்பிற்காணப்படும் பிழைகளையும் அவற்றின் திருத்தங்களையும் விவேகிகள் தயைசெய்து தெரிவிப்பார்களாயின், அவற்றை அன்புடன் சிரமேற்கொண்டு அந்நன்றியை எழுமையும் பாராட்டுவேன்.

## கிடைத்த கையெழுத்துப்பிரதிகள்.

### புறநானூற்று மூலப்பிரதிகள்.

| பிரதிக்குரியவர்கள். | பிரதியை உதவிசெய்தவர்கள். | பாடல் வரையறை. |
|---|---|---|
| திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகரவர்கள். | பிரதிக்குரியவர்களே. | ௧- ௪00. |
| திருத்தணிகைச் சரவணப்பெருமாளையரவர்கள். | யாழ்ப்பாணம், சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள். | ௧- ௪00. |
| யாழ்ப்பாணத்து நல்லூர், சதாசிவப்பிள்ளையவர்கள். திரு. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள். | சென்னை, பா. வாசுதேவமுதலியாரவர்கள். | ௨௬௭-௩௬௧. |
| யாழ்ப்பாணம், வி. கனகசபைப்பிள்ளையவர்கள். | பிரதிக்குரியவர்களே. | ௧-௩௬௧. |
| திருமயிலை, சண்முகம்பிள்ளையவர்கள். | திருவனந்தபுரம், பி. சுந்தரம்பிள்ளையவர்கள். | ௩-௩௧௧. |

புறநானூற்று உரைப்பிரதிகள்.

| | | |
|---|---|---|
| திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகரவர்கள். | பிரதிக்குரியவர்களே. | க- உகூ0. |
| ஷை ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகரவர்கள். | பிரதிக்குரியவர்களே. | க- க0எ. |
| ஆழ்வார்திருநகரி, தாயவலந்தீர்த்தகவிராயரவர்கள். | ஸ்ரீ வைகுண்டம், ஈ.சுப்பராயமுதலியாரவர்கள். | க- உகூக. |
| மிதிலைப்பட்டி, அழகிய சிற்றம்பலக்கவிராயரவர்கள். | பிரதிக்குரியவர்களது பரம்பரையோராகிய அழகிய சிற்றம்பலக்கவிராயரவர்கள். | க- உகூகூ. |
| ,, | ,, | க- கஎக. |
| திருநெல்வேலியைச்சார்ந்த வண்ணார்பேட்டை, திருப்பாற்கடனாதகவிராயரவர்கள். | யாழ்ப்பாணம், சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள். | க- உகூ0. |
| தென்காசி, சுப்பையாப்பிள்ளையவர்கள். | மேலகரம், திரிகூடராஜப்பக்கவிராயரவர்கள். | க- சஅ. |
| ,, [பதவுரை சிதிலம்] | ,, | க- ருஎ. |
| ,, ,, | ,, | எ- சஅ. |
| தூற்றுக்குடி, குமாரசாமிப்பிள்ளையவர்கள். | ஆறுமுகமங்கலம், ஏ. சுந்தரமூர்த்திப்பிள்ளையவர்கள். | க- உககூ. |
| ,, | ,, | க- ககூகூ. |

ஆக மூலப்பிரதிகள் - ரு ; உரைப்பிரதிகள் - கக.

இந்நூலை எழுதுங்காலத்தும் ஒப்புநோக்கிப் பரிசோதிக்குங்காலத்தும் பதிப்பிக்குங்காலத்தும் உடனிருந்து அன்புடன் உதவிசெய்தோர்:—

திருமானூர், ம-ா-ா-ஸ்ரீ அ. கிருஷ்ணையர்.
மணலூர், ,, இராமானுஜாசாரியர்.
ஸ்ரீ சோக்கலிங்கத்தம்பிரானவர்கள்.
திருப்பெருந்துறை, பொன்னுச்சாமிபிள்ளை.

இந்நூலை அச்சிற்பதிப்பித்தற்குப் பொருளுதவிசெய்தோர்:—

**ம-ா-ா-ஸ்ரீ கே. சுந்தரராமஐயரவர்கள்.**

சிறுவயல் ஜமீந்தாரவர்களாகிய

**,, முத்துராமலிங்கத்தேவரவர்கள்.**

**,, அ. இராமநாதசெட்டியார்.**

ஒன்றுக்கும்பற்றாத சிறியேனை இம்முயற்சியிற் புகுத்தி நடத்தி நிறைவேற்றியருளிய எல்லாம்வல்ல எம்பிரானது திருவருளை அனவரதமும் சிந்தித்துவந்திக்கின்றேன்.

இங்ஙனம்,
உ. வே. சாமிநாதையன்.

# இந்நூலிற்கண்ட நாடுமுதலியன.

## (௧.—நாடுகள்.)

கோனாடு—இது சோழநாட்டு உண்ணாடுகளுளொன்று. ௫௪, ௬௧, ௧௬௭, ௧௮௦, ௧௯௭, ௩௯௪.

சோனாடு—௧௬௬, ௧௮௧.

பறம்புநாடு—இது வேள்பாரியினுடையது; முந்நூறு ஊர்களையுடையது. ௧௧௦.

மாறோக்கம்—இது கொற்கையைச்சூழ்ந்தநாடென்பர்; மாறோகமெனவும் வழங்கும். ௩௭, ௩௯, ௧௨௬, ௧௭௪, ௨௨௬, ௨௮௦, ௩௮௩.

முக்காவனாடு—௮௦.

## (௨.—கூற்றங்கள்.)

மிழலைக்கூற்றம்—இது வேள் எவ்வியுடையது; கடற்கரையிலுள்ளது. ௨௪.

முத்தூற்றுக்கூற்றம்—இது பழையவேளிரால் ஆளப்பட்டது; மருதநிலத்துள்ளது; முத்தூர்க்கூற்றமெனவும் வழங்கும். ௨௪.

## (௩.—ஊர்கள்.)

அம்பர்—௩௮௫.

அரையம்—இது பெரியதொருநகரம்; சிற்றரையம் பேரரையமென்னும் இரண்டுகூற்றினையுடையது. ௨௦௨.

அள்ளூர்—௩௦௬.

ஆடுதுறை—௨௨௭.

ஆமூர்—இதுமுக்காவனாட்டுள்ளது. ௮௦.

ஆய்குடி—இஃது ஆயென்னும் வள்ளலின் ஊர்; பொதியின்மலைச் சாரலிலுள்ளது. ௧௩௨.

ஆலங்கானம் — இது தலையாலங்கானமென்னும் பெயரையுடையது; இப்பொழுது தலையாலங்காடென்று வழங்கப்படுகின்றது. ௨௩.

ஆலங்குடி—௩௧௯.

ஆலத்தூர்—௩௪, ௩௬, ௬௯, ௨௨௫, ௩௨௪.

ஆவூர்—௩௮, ௪௦, ௪௪, ௧௬௬, ௧௭௭, ௧௯௬, ௨௬௧, ௩௦௧, ௩௨௨.

இடைக்காடு—௪௨.

இடைக்குன்றூர்—௭௬.

இலங்கை, ௩௭௯.

ஈந்தூர் — இஃது ஈந்தையென்றும் வழங்கப்படும்; இதனை "ஈந்தையோனே பாண்பசிப் பகைஞன்" என்பதனாலுணர்க. ௧௮௦.

உறையூர் — இது சோழர்களுடைய பழையநகரம். இஃது உறந்தையென்றும் கோழியென்றும் வழங்கப்படும். ௧௩, ௨௭, ௩௯, ௪௫, ௬௭, ௫௮, ௬௦, ௬௯, ௭௮, ௧௨௭, ௧௭௦, ௨௨௦, ௨௬௪, ௩௨௧, ௩௨௫, ௩௩௧.

உறையூரேணிச்சேரி—௧௩, ௧௨௭, ௨௪௧, ௩௭௪.

எக்கூர்—(ஒக்கூர்) ௨௪௮.

எயில்— பாண்டிநாட்டுள்ள ஊர்களுள் ஒன்று. ௭௧.

எறிச்சிலூர்—இது கோனாட்டுள்ள ஊர்களுளொன்று. ௫௪, ௬௧, ௧௬௭, ௧௮௦, ௧௯௭, ௩௯௪.

ஐயூர்—௨௧, ௫௧, ௨௨௮, ௩௧௪, ௩௯௯.

ஒக்கூர்—௨௪௮, ௨௭௯.

ஒல்லையூர்—௭௧, ௨௪௨.

கரும்பனூர்—௩௮௧, ௩௮௪.

கருவூர்—இது சேரருடைய இராசதானி. இதற்கு வஞ்சியென்றும் பெயருண்டு. ௧௧, ௧௩, ௩௨, ௩௬, ௭௮, ௧௬௮, ௨௧௯, ௩௭௩, ௩௮௦.

காவிரிப்பூம்பட்டினம்—௫௭, ௫௮, ௧௭௧, ௩௫௩.

கானப்பேர்—இதுசிறந்தபேரரண்; பலசிற்றரண்களையுடையது; இதின்தலைவன் வேங்கைமார்பன்; இவனைவென்று இதனைக் கைக்கொண்டான் உக்கிரப்பெருவழுதி; இஃது இக்காலத்துக் காளையார்கோயிலென்று வழங்கப்படுகின்றது; கானப்பெயர் என்றுங் கூறுவர். ௨௧, ௩௬௭.

குடவாயில் — 'குடவாயிற்கோட்டம்' எச, உசஉ.
குறுங்கோழியூர்—கஎ, உ0, உஉ.
குன்றூர்—கூகூஅ.
கூடலூர்—உஉக..
கோவலூர்—இஃது அதியமான் நெடுமான் அஞ்சியால் ஒருகாலத்து எறியப்பட்டது; இது கோவல் எனவும் வழங்கும். கக.
கோஹூர்—கூக, சக, சச, சரு, சசா, சஎ, சாஅ, எ0, கூ0அ, கூஎகூ, கூஅஉ, கூஅசா, ச00.
சிற்றையம்—இஃது அரையமென்னும் நகரத்தின் ஒரு கூற்றின் பெயர். உ0உ.
சிறுகுடி—இது பண்ணனுடையவூர். எ0, கஎகூ, கூஅஅ.
செந்தில்—திருச்செந்தூர். ருரு.
தகடூர்—ரு0, உகூ0.
தங்கால்—இது பாண்டிநாட்டுள்ள ஊர்களுளொன்றென்று சிலப்பதிகாரத்தால் தெரிகின்றது. கூஉசா.
தலையாலங்கானம் — இது நெடுஞ்செழியன் இருபெருவேந்தரையும் ஐம்பெருவேளிரையும் பொருதுவென்றவூர்; இஃது ஆலங்கானம் எனவும் தலையாலங்காடு எனவும் வழங்கும். கஎ, கக, உகூ, எஉ, எசா, கூஎக.
தழும்பனூர்—கூசஅ.
துவராபதி—உ0க.
துறையூர்—ககூசா.
தொண்டி—இது கடற்கரையிலுள்ளதாகிய ஒருநகரம். கஅ, சஅ.
நெய்தலங்கானல்—இஃது இளஞ்சேட்சென்னியின் நகரம்; நெய்தலங்கானலையென்றும் வழங்கப்படும். க0, உ0கூ.
பாமுளூர் — இது சேரநாட்டுள்ளது. உ0கூ.
பிசிர்—இது பாண்டிநாட்டிலுள்ளதோரூர். சாஎ, கககூ, உகஉ, உகரு, உகசா.
பிடவூர் — இது சோழநாட்டுள்ளது. கூகரு.
புல்லாற்றூர்—உககூ.
பூஞ்சாற்றூர்—இது சோழநாட்டுள்ளது. கசாசா.
பெருங்குன்றூர்—கசஎ, உக0, உசாசா, கூகஅ.
பேரையம்—இஃது அரையகரத்தின் ஒருபாகமாக உள்ளது. உ0உ.
பொருந்தில்—ருகூ.
பொறையாறு. கூகக.
மதுரை—ருசா, ருஅ, கசாஎ, கஅ0, கஅக, ககஎ, உசஎ, உசாஉ, கூ0ரு, கூ0க, கூஉக, கூகூ0, கூகூச, கூசக, கூரு0, கூருக.
மாங்குடி—உச, உசா, எஉ, கூகக, கூகூரு, கூஎஉ.
மாவிலங்கை — இஃது ஓய்மானல்லியக்கோடனூர். கஎசா.
முகையலூர்—இது சோழநாட்டுள்ளது. கஅக, உசாரு.
முரஞ்சியூர்—உ.
முள்ளூர்—கஎச.
மையல்—இது பாண்டிநாட்டுள்ளதோரூர்; இது மாவனுடையது. எக.
வஞ்சி—கூகூ.
வல்லார்—ஓரூர். கஅக.
வாட்டாறு—கூகசா.
விரிச்சியூர்—உகூஉ.
விரியூர்—கூகூஉ.
விளங்கில். ருகூ.
வெண்ணி — கரிகாற் பெருவளத்தான் சேரமான்பெருஞ்சேரலாதனை வென்ற ஊர். சாசா.
வெள்ளைக்குடி—கூரு.
வேம்பற்றூர்—கூகஎ.

## (ச.—மலைகள்.)

இமயம்—உ, கசாசா.
குடகமலை—கசாசா.
குதிரைமலை—இஃது, எழினி அதியமான்மலையென்று கருஅ-ம் பாட்டாலும் பிட்டங்கொற்றனுடையதென்று கசாஅ-ம் பாட்டாலும் தெரிகின்றது.
கொண்கானம் — ஒருமலை. (கொங்கணம்) கருச.
கொல்லி—இது வல்விலோரியின் மலை. உஉ, கருஉ.
கோடை—இது கடியநெடுவேட்டுவன் மலை. உ0ரு.
தோட்டிமலை — இது கண்டீரக்கோப்பெருநள்ளியுடையது. கரு0.
தோன்றிமலை—கூகக.
நாஞ்சின்மலை—ககூஎ, கூஅ0.

பறழ்பு—இது வேள்பாரியின்மலை. ௧௧௦, ௧௭௬.
பூங்குன்றம்—௧௯௨.
பொதியின்மலை—௨, ௩௩.
முதிரம்—குமணன்மலை. ௧௫௮, ௧௬௦, ௧௬௧.
முள்ளூர்மலை—இது மலையமான் திருமுடிக்காரியுடையது; இதில் ஒருகாலத்துப் பகைவர்க்கஞ்சிச் சோழனொருவன் ஒளித்திருந்தான். ௧௭௪.
வேங்கடம்—௩௮௫, ௩௮௯.

## (௫.—ஆறுகள்.)

ஆன்பொருந்தம்—இது கருவூரைச்சார்ந்த ஓராறு; ஆன்பொருநையென்றும் பொருநையென்றும் வழங்கப்படும். ௧௧, ௩௬, ௩௮௭.
கங்கை—௧௬௧.
காரியாறு—௪௭.
காவிரி—௧௬௬.
குமரி—௬, ௧௭.
பஃறுளி—இது வடிம்பலம்பநின்ற பாண்டியனாலுண்டாக்கப்பட்டது. ௯.
பெண்ணை—௧௨௬.
வையை—௭௧.

## (௬.—இன்னவென்று விளங்காதவைகள்.)

அரிசில்—௧௪௬, ௨௩௦, ௨௮௧, ௨௮௫, ௩௦௪, ௩௪௨.
இலவந்திகைப்பள்ளி—௫௫, ௬௧, ௧௧௬, ௧௯௮.
எருமைவெளி—௩௦௩.
ஏறை—௧௫௭.
கண்டீரம்—௧௪௮.
கள்ளில்—௧௭௫.
காரி—௬.
குராப்பள்ளி—௫௮, ௬௦, ௧௯௭, ௩௭௩, ௨௨௬, ௩௮௬, ௩௯௩, ௩௯௭.
குளமுற்றம்—௩௪, ௪௬, ௬௯, ௧௭௩.
கூடகாரம்—௫௧.
கோட்டம்பலம்—௨௪௫.
சிக்கற்பள்ளி—௩௮௭.
சித்திரமாடம்—௫௯.
நச்சென்னை—௨௭௮.
நாலை—௧௭௯.
நொச்சிநியமம்—௨௯௩.
மல்லி—௧[illegible]௭.
விச்சி—௨௦௦.
வீரைவெளி—௩௨௦.
வேண்மாடம்—௧௩.

# பாடினோர் வரலாறு.

(எண்கள் பாட்டினெண்கள்.)

அடைநெடுங்கல்லியார் :— இவராற்பாடப்பட்டவர்கள்பெயரும், இவர்காலத்தவர் இன்னாரென்பதும் விளங்கவில்லை. ௩௪௪, ௩௪௫.

அண்டர்மகன் குறுவழுதி :— இவராற்பாடப்பட்டவர் பெயர்முதலியன விளங்கவில்லை; ௩௪௬.

அணநெடுங்க...........யார் :—௨௮௩.

அரிசில்கிழார் :—இவருடனிருந்தபுலவர் பொன்முடியார்; பேகனென்னும்வள்ளலால் துறக்கப்பட்டகண்ணகியை அவனோடுசேர்த்தல்வேண்டி அவனைப்பாடினர்; அதியமான் தகடூர்பொருதுவீழ்ந்த எழினியின் பிரிவாற்றாதுவருந்திப் புலம்பினர்; பதிற்றுப்பத்தில் எட்டாம்பத்தைப்பாடித் தகடூரெறிந்தபெருஞ்சேரலிரும்பொறையிடம் ஒன்பதுநூறாயிரங்காணம் பரிசில்பெற்றனர். தகடூர்யாத்திரையென்னும் நூலில் இவராற்பாடப்பட்ட பாடல்களும் சில உள்ளனவென்பது, தொல்காப்பியப்புறத்திணையியலில் ௮-௧௨-ம் சூத்திரமுதலியவற்றிற்கு நச்சினார்க்கினியரெழுதிய உரையால்விளங்குகின்றது. இவராற்பாடப்பட்ட மற்றையோர்பெயர் தெரியவில்லை; கிழார் - உரியவர். ௧௪௬, ௨௩0, ௨௮௧, ௨௮௫, ௩00, ௩0௪, ௩௪௨.

அள்ளூர் நன்முல்லையார் :—௩0௬.

ஆடுதுறைமாசாத்தனார் :—இவர், சோழன் குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவன் இறந்தபொழுது அவன்பிரிவாற்றாது புலம்பிப் பாடினர். ௨௨௭.

ஆலங்குடிவங்கனார் :—௩௧௯.

ஆலத்தூர்கிழார் :—இவர் மிக்க நன்றியறிவுடையோர்; இவராற்பாடப்பட்டோர் சோழன்குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவன், சோழன் நலங்கிள்ளி. ௩௪, ௩௬, ௬௯, ௨௨௫, ௩௨௪.

ஆலியார் :— இப்பெயர் சிலபிரதிகளில் ஆனியாரென்றும் காணப்படுகின்றது. ௨௯௮.

ஆவூர்கிழார் :—இப்பெயர் ஆவூரழகியாரெனவும் சில பிரதியிலுள்ளது. ௩௨௨.

ஆவூர்மூலங்கிழார் :— இவராற்பாடப்பட்டோர் சோழன்குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவன், சோணாட்டுப்பூஞ்சாற்றூர்ப்பார்ப்பான், கௌணியன்விண்ணந்தாயன், மல்லிகிழான் காரியாதி, பாண்டியன் கீரஞ்சாத்தன், பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சியநன்மாறன்; மற்றையோர்பெயர்விளங்கவில்லை. ௩௮, ௪0, ௧௬௬, ௧௭௭, ௧௭௮, ௧௯௬, ௨௬௧, ௩0௧.

இடைக்காடனார் :—இவர், இடைக்காடென்னும் ஊரிலுள்ளாராதலின் இப்பெயர் பெற்றார்; இவராற்பாடப்பட்டோன் சோழன்குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவன். ௪௨.

இடைக்குன்றூர்கிழார் :— இவர் பாண்டியன் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் இருபெருவேந்தரையும் ஐம்பெருவேளிரையும் வென்றபெ

மூது அவன்போர்த்திறத்தை வியந்துபாடினர்; இவராற்பாடப்பட்டவன் அவனே. எசு, எஎ, எஅ, எகூ.

இரும்பிடர்த்தலையார் :—இவர் சோழன்கரிகாலனுடைய அம்மான்; அவனுக்குப் பெருந்துணையாயிருந்தவர்; இதனை, "சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும், பிடர்த்தலைப் பேரானைப் பெற்றே - கடைக்காற், செயிரறு செங்கோல் செலீஇயினன்" என்னும் பழமொழி சுoடு - ம் வெண்பாவாலும் அதன் பழைய உரையாலு முணர்க. இவராற்பாடப்பட்டோன் பாண்டியன் கருங் கையொள்வாட்பெரும்பெயர்வழுதி. கூ.

உலோச்சனார் :—இவராற்பாடப்பட்டோன் சோழன் இராசசூயம்வேட்டபெருநற் கிள்ளி. உடுஅ, உஎசு, கூஎஎ.

உறையூர் இளம்பொன்வாணிகனார் :—இவர் வணிகரென்றுதெரிகிறது. உசுசு.

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் :—இவர் அந்தணர்; இதனைத் தொல்காப் பியம் மரபியல், எசு - ம் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியரெழுதிய விசேட வுரையானுணர்க. இவராற்பாடப்பட்டோர் சோழன் முடித்தலைக்கோப்பெரு நற்கிள்ளி, ஆய்என்னும் வள்ளல். இவர் ஆய் இறந்தபின்பும் இருந்தனர்; இவர்பெயர் மோசியெனவும் வழங்கும்; "மோசிபாடிய வாயும்" என இந்நூல் கடுஅ - ம்பாட்டிற் கூறியிருத்தல் காண்க. கூ, கஉஎ, கஉஅ, கஉகூ, கஙo, கஙக, கஙஉ, கஙங, கஙசு, கஙடு, கடுஅ, உசக, ஙஎசு, ஙஎடு.

உறையூர் மருத்துவன் தாமோதரனார் :—இவராற்பாடப்பட்டோர் சோழன் குராப் பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன், பிட்டங்கொற்றன். சுo, கஎo, ஙஉக.

உறையூர் முதுகண்ணன்சாத்தனார் : — இவராற்பாடப்பட்டோன் சோழன்நலங் கிள்ளி. உஎ, உஅ, உகூ, ஙo, ஙஉடு.

உறையூர் முதுகூத்தனார் :—இப்பெயர் உறையூர்முதுகூற்றனாரெனவும் பிரதிகளிற் காணப்படுகின்றது. ஙஙக.

ஊன்பொதி பசுங்குடையார் :—இவராற்பாடப்பட்டோர் சோழன் செய்தலங் கானல் இளஞ்சேட்சென்னி, சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்செ ன்னி. கo, உoங, ஙஎo, ஙஎஅ.

எருக்காட்டூர்த்தாயங்கண்ணனார் :—இவராற்பாடப்பட்டோன் சோழன் குளமுற் றத்துத்துஞ்சியகிள்ளிவளவன். ஙகூஎ.

எருமை வெளியனார் :—உஎங, ஙoங.

ஐயாதிச் சிறுவெண்டேரையார் :—இப்பெயர் சிறுவெண்டேரையாரெனவும் வழ ங்கும். ஙசுங.

ஐயூர் முடவனார் :—இப்பெயர் ஐயூர்கிழாரெனவும் உறையூர்முடவனாரெனவும் சில பிரதியிலுள்ளது. இவராற் பாடப்பட்டோர் பாண்டியன் கூடகாரத்துத்துஞ் சிய மாறன்வழுதி, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், தாமான் தோன்றிக்கோன். டுக, உஉஅ, ஙகசு, ஙகூகூ.

ஐயூர் மூலங்கிழார் :—இவராற் பாடப்பட்டோன் கானப்பேரெயில்கடந்த உக்கிரப் பெருவழுதி. உக.

ஒக்கூர் மாசாத்தனார் :—இப்பெயர், எக்கூர்மாசாத்தனாரெனவும் சில பிரதிகளிற் காணப்படுகின்றது. உஅசு.

ஒக்கூர் மாசாத்தியார் :—உஎகூ.

ஒருசிறைப்பெரியனார் :—இவராற் பாடப்பட்டோன் நாஞ்சில்வள்ளுவன். கூஎ.

ஒருஉத்தனார் :—உஎரு.

ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன் :—இவன் பாண்டியர்களுள் ஒருவன்; போரில் வல்லவன்; செய்யுள் செய்தலிலும் திறமையுடையோன்; இதனை இவன்பாடிய பாடல் புலப்படுத்தும்; இவன்பெயர் பூதபாண்டியனெனவும் வழங்கும்; இவன் நட்பினர் மையலென்னும் ஊரிலுள்ள மாவன், எயிலென்னும் ஊரிலுள்ளானாகிய ஆந்தை, அந்துவஞ்சாத்தன், ஆதனழிசி, இயக்கன் என்னுமிவர்கள். இவன் மனைவி, இவன் இறந்தவுடனே தீயிற்பாய்ந்து இறந்தாள். எக, உசசா, உசஎ.

ஓரம்போகியார் :—இப்பெயர் ஒன்றௌருழவரென்றும் சிலபிரதியிலுள்ளது. இவர் எட்டுத்தொகையுள் ஒன்றாகிய ஐங்குறுநூற்றில் மருதத்தைப் பொருளாகவுடைய முதலாம் நூறு இயற்றிய ஆசிரியர்; இதனை, "மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன், கருதுங் குறிஞ்சி கபிலர் - கருதிய, பாலையோ தல்லாந்தை பன்முல்லை பேயனே, நூலையோ தைங்குறு நூறு" என்னும் வெண்பாவாலுணர்க. உஅச.

ஓரேருழவர் :—இப்பெயர் ஒன்றௌருழவரெனவும் வழங்கும். ககங.

ஔவையார் :—இவர் அதியமான் நெடுமான் அஞ்சியிடம் அமுதமயமாகிய நெல்லிக்கனிபெற்று அவனைப்புகழ்ந்தார். இவர் அத்தன்மையதாகிய நெல்லிக்கனியுண்டது, இந்நூலில் கூக - ம் பாட்டினாலும் க00 - ம் திருக்குறளுக்குப் பரிமேலழகரெழுதிய விசேடவுரையாலும் வெளியாகின்றது. இவராற்பாடப்பட்டோர் அதியமான்நெடுமானஞ்சி, தொண்டைமான், அதியமான்மகன் பொகுட்டெழினி, நாஞ்சில்வள்ளுவன், சேரமான் மாவெண்கோ, பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதி, சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி. அஎ, அஅ, அகூ, கூ0, கூக, கூஉ, கூங, கூச, கூரு, கூசா, கூஎ, கூஅ, கூகூ, க00, க0க, க0உ, க0ங, க0ச, கச0, கஅஎ, உ0சா, உஙக, உஙஉ, உஙரு, உசாகூ, உஅசா, உகூ0, உகூரு, ஙகக, ஙகரு, ஙசாஎ, ஙகூ0, ஙகூஉ.

கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி :—இவன் அரசன். கஅஉ.

கண்ணகனார் :—இவர் காலத்தவர் கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார்முதலியோர். உகஅ.

கணியன் பூங்குன்றன் :—ககூஉ.

கதையங்கண்ணனார் :—ஙருசா.

கபிலர் :—இவர் அந்தணர்; வேள்பாரியின் நண்பர்; அவன் இறந்தபின்பு அவன் மகளிரை அழைத்துச்சென்று மணம்செய்துகொள்ளும்படி விச்சிக்கோன், இருங்கோவேள் என்பவர்களை வேண்டி அவர்கள் மறுத்ததுகண்டு வெறுத்துப் பின்பு அம்மகளிரைப் பார்ப்பார்ப்படுத்துத் தம்கடனைக்கழித்தனர். எட்டுத்தொகையுள் ஒன்றாகிய ஐந்துறுநூற்றிற் குறிஞ்சியைப் பொருளாகவுடைய மூன்றாம்நூறு இயற்றியவர் இவரே; இதனை, 'மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன் - கருதுங் குறிஞ்சி கபிலர்' என்னும் வெண்பாவானுணர்க. பதிற்றுப் பத்தில் ஏழாம்பத்தைப்பாடிச் சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதனிடம் நூறாயிரங்காணமும் அவன் ஒருமலைமீதேறிக் கண்டுகொடுத்தநாடும் பரிசிலாகப்பெற்றனர்; இதனைப் பதிற்றுப்பத்துரையாலுணர்க. பத்துப்பாட்டினுள்

ஒன்றாகிய பெருங்குறிஞ்சி யென்றுவழங்கும் குறிஞ்சிப்பாட்டும், பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்றாகிய இன்னாநாற்பதும் இவரருளிச்செய்தனவே. இவராற் பாடப்பட்டோர் (சேரமான்கடுங்கோவாழியாதன்) சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதன், வேள்பாரி, அகுதை, மலையமான்திருமுடிக்காரி, வையாவிக்கோப்பெரும்பேகன், விச்சிக்கோன், இருங்கோவேள்; இவர் அவ்வச்சமயத்திற் கூறியபாடல்கள் மிகவும் வியக்கத்தக்கவை. (௫௩-ம் பாடல்) "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" எனவும், (௧௨௬-ம் பாடல்) "புலனழுக் கற்ற வந்த ணாளன்" எனவும் (௧௭௪-ம் பாடல்) "பொய்யா நாவிற்கபிலன்" எனவும் பொருந்திலிளங்கீரனாராலும், மாறோக்கத்து நப்பசலையாராலும் இந்நூலில் இவர் புகழப்பட்டிருத்தல்காண்க. அ, ௧௪, ௫௩, ௧0௫, ௧0௬, ௧0௭, ௧0அ, ௧0௯, ௧௧0, ௧௧௧, ௧௧௩, ௧௧௪, ௧௧௫, ௧௧௬, ௧௧௭, ௧௧அ, ௧௧௯, ௧௨0, ௧௨௧, ௧௨௨, ௧௨௩, ௧௨௪, ௧௨௬, ௧௪௩, ௧௭௪, ௨00, ௨0௧, ௨0௨, ௨௩௬, ௩௩௭, ௩௪௭.

கயமனார் :—௨௫௪.

கருங்குழலாதனார் :—இவராற்பாடப்பட்டோன், சோழன் கரிகாற்பெருவளத்தான். இவர் அவன் இறந்தபின்பும் இருந்தார். ௭, ௨௨௪.

கருவூர்க்கதப்பிள்ளை :—இவராற் பாடப்பட்டோன் நாஞ்சில்வள்ளுவன். ௩அ0.

கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார் :—இவராற்பாடப்பட்டோன் பிட்டங்கொற்றன். ௧௬அ.

கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் :—இப்பெயர், கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப்பூதனாதனாரெனவும் பிரதிகளிற் காணப்படுகின்றது. இவர், கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்ததுகண்டு மனமுருகிப் பாடினர். ௨௧௯.

கல்லாடனார் :—இவர் செய்தநூல் கல்லாடமென்பது; தொல்காப்பியத்திற்கு இவர் ஓருரை செய்தாரென்று கூறுவர்; இதனை, "ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்திற், குறையிடை யிட்ட வீரர்கல் லாடர்" என்னும் ஆன்றோர்திருவாக்காலுணர்க. இவராற்பாடப்பட்டோர் பாண்டியன் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன், அம்பர்கிழான் அருவந்தை, பொறையாற்றுகிழான். ௨௩, ௨௫, ௩௭௧, ௩அ௫, ௩௯௧.

கழாத்தலையார் :—இவர், சேரமான்குடக்கோநெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப்பெருநற்கிள்ளியும் போர்ப்புறத்துப்பொருதுவீழ்ந்து இறந்ததுகண்டு மனம்வருந்திப் பாடினர்; இருங்கோவேளின் முன்னோரில் ஒருவன் இவரை இகழ்ந்தமையால் அவனதுநகரமாகிய அரையமென்பது அழிவுற்றது. இவராற்பாடப்பட்டோர் மேற்கூறிய அரசரும் சேரமான்பெருஞ்சேரலாதனும். ௬௨, ௬௫, ௨0௨, ௨௭0, ௨அஅ, ௨அ௯, ௩௬அ.

கழைதின்யானையார் :—இவராற்பாடப்பட்டோன் வல்விலோரி. ௨0௪.

கள்ளில்ஆத்திரையனார் :—இவராற்பாடப்பட்டோன் ஆதனுங்கன். ௧௭௫, ௩அ௯.

காக்கைபாடினியார் நச்சென்னையார் :—(இப்பெயர், காக்கைபாடினியார் நச்செள்ளையாரெனவும்வழங்கும்.) இவர், பதிற்றுப்பத்தில் ஆறும்பத்துப்பாடி நாடுகோட்பாடு சேரலாதனிடம் ஒன்பதுகாப்பொன்னும் நூறாயிரம் காணமும்

பெற்று அவன்பக்கத்து இருத்தல்கொண்டனர். இதனைப் பதிற்றுப்பத்தின் உரையாலுணர்க. உ௬௮.

காரிகிழார் :—இப்பெயர் கானட்டனாரென்றும் சிலபிரதிகளிற் காணப்படுகின்றது. இவராற் பாடப்பட்டோன் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி. ௬.

காவட்டனார் :—இப்பெயர் கானட்டனாரெனவும் வழங்கும். இவராற்பாடப்பட்டோன் அந்துவஞ்சேரல். ௩௫௯.

காவற்பெண்டு :—௮௬,

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் :—இப்பெயர் காரிக்கண்ணனாரெனவும் வழங்கும். இவர் வணிகர்; இதனைத் தொல்காப்பியமரபியலில் ௭௪-ம் சூத்திரத்தின் நச்சினார்க்கினியருரையாலுணர்க. இவராற் பாடப்பட்டோர் பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறன், சோழன்குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன், பாண்டியன் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி, பிட்டங்கொற்றன். ௫௭, ௫௮, ௧௬௯, ௧௭௧, ௩௫௩.

குட்டுவன்கீரனார் :—இவராற்பாடப்பட்டோன் ஆய் என்னும் வள்ளல். ௨௪௦.

குடபுலவியனார் :—இவராற்பாடப்பட்டோன் பாண்டியன்நெடுஞ்செழியன். ௧௮, ௧௯.

குடவாயில்நல்லாதனார் :—இவர் ஒல்லையூர்கிழான்மகன் பெருஞ்சாத்தன் இறந்தபின்பு பிரிவாற்றாது வருந்திப்பாடினர். ௨௪௨.

குண்டுகட்பாலியாதன் :—இவராற்பாடப்பட்டோன் சேரமான்சிக்கற்பள்ளித்துஞ்சிய செல்வக்கடுங்கோவாழியாதன். ௩௮௭.

குளம்பாதாயனார் :—இப்பெயர் குளம்பாதயானாரென்றும் சிலபிரதிகளிலுள்ளது. ௨௫௩.

குறமகள் இளவெயினி :—இவராற்பாடப்பட்டோன் ஏறைக்கோன். ௧௫௭.

குறுங்கோழியூர்கிழார் :— இவராற்பாடப்பட்டோன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை. இவர்பெயர் குறுங்கோளியூர்கிழாரெனவும் வழங்கும். ௧௭, ௨௦, ௨௨.

குன்றூர்கிழார்மகனார் :—இவராற்பாடப்பட்டோன் நெடுவேளாதன். ௩௩௮.

கூகைக்கோழியார் :—௩௬௪.

கூடலூர்கிழார் :— எட்டுத்தொகையுள் ஒன்றாகிய ஐங்குறுநூறு தொகுத்தோர் இவரே. பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்றாகிய முதுமொழிக்காஞ்சி இவரால் அருளிச்செய்யப்பட்டதே. 'புலத்துறைமுற்றிய கூடலூர்கிழார்' எனவும் ஆன்றோராற் சிறப்பித்துக்கூறப்படுவர். இவர், கோச்சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை இறந்தபொழுது வருந்திப் பாடினர். ௨௨௯.

கோடைபாடியபெரும்பூதனார் :—௨௫௯.

கோதமனார் :— இவர்பெயர் கௌதமனாரெனவும் பாலைக்கௌதமனாரெனவும் வழங்கும்; இவர் அந்தணர். இவர் எட்டுத்தொகையினுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்தில் மூன்றாம்பத்துப்பாடி இமயவரம்பன்தம்பி பல்யானைச்செல்கெழுகுட்டுவனாற் சுவர்க்கம்பெற்றார். இதனை, பதிற்றுப்பத்துரையாலும், தொல்காப்பியப்புறத்திணையியல் ௨௫-ம் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியரெழுதிய

விசேடவுரையாலும், "தொடுத்தபெரும்புலவன்" என்னும் பழமொழி ௩௧௬-ம் செய்யுளின் பழைய உரையாலும் உணர்க. இவராற்பாடப்பட்டோன் தருமபுத்திரன். ௩௬௬.

கோப்பெருஞ்சோழன் :—இவன்வரலாற்றைப் பாடப்பட்டோர் பெயர்வரிசையிற் கண்டுகொள்க; இவன் பாடியபாடல்கள் ௨௧௪, ௨௧௫, ௨௧௬.

கோவூர்கிழார் :—இவர்பெயர் கோவூரழகியாரெனவும் வழங்கும்; இவராற்பாடப்பட்டோரும் இவர்காலத்தவரும்: சோழன்நலங்கிள்ளி, சோழன்குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன், காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி, சோழன் குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன், சிறுகுடிகிழான் பண்ணன். இவர் சோழன்நலங்கிள்ளியிடத்திருந்து உறையூர்புகுந்த இளந்தத்தனைக் காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்றுவந்தானென்று கொல்லப்புகுந்தவிடத்து அவனைப்பாடி இளந்தத்தனைப் பிழைப்பித்தார். ௩௧, ௩௨, ௩௩, ௪௧, ௪௪, ௪௫, ௪௬, ௪௭, ௬௮, ௭0, ௩0௮, ௩௭௩, ௩௮௨, ௩௮௬, ௪00.

கோனாட்டு எறிச்சிலூர் மாடலன்மதுரைக்குமரனார் :— இவராற்பாடப்பட்டோர் சேரமான்குட்டுவன்கோதை, சோழன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளிசேட்சென்னி, ஏனாதிதிருக்கிள்ளி, ஈர்ந்தூர்கிழான், தோயன்மாறன், சோழன்குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன், சோழிய ஏனாதிதிருக்குட்டுவன். ௫௪, ௬௧, ௧௬௭, ௧௮0, ௧௯௭, ௩௯௪.

சங்கவருணரென்னும் நாகரியர் :— இவர்பாடல், யாக்கைநிலையாமைமுதலியவற்றை வற்புறுத்திக்கூறும்; இவராற்பாடப்பட்டோன் நந்துமாறன். ௩௬0.

சாத்தந்தையார் :— இவர், பதினெண்கீழ்க்கணக்கினுளொன்றாகிய திணைமொழியைம்பதென்னும் நூலாசிரியரான கண்ணஞ்சேந்தனாருடைய தந்தையார். இவராற்பாடப்பட்டோன் சோழன்போர்வைக்கோப்பெருநற்கிள்ளி. ௮0, ௮௧, ௮௨, ௨௮௭.

சிறுவெண்டேரையார் :—௩௬௨.

சேரமான்கணைக்காலிரும்பொறை :— இவன் சோழன் செங்கணானோடுபோர்செய்து பிடிக்கப்பட்டுக் குடவாயிற்கோட்டத்துச்சிறையிற்கிடந்து தண்ணீர்தாவென்றுகேட்டு உடனேபெறாது பின்புபெற்று அதனை மானத்தால் உண்ணாது கைக்கொண்டிருந்து "குழவியிறப்பினும்" என்னும் பாடலைப்பாடித் தன் கருத்தைப்புலப்படுத்தி அப்பால் துஞ்சினான். ௭௪.

சேரமான்கோட்டம்பலத்துத்துஞ்சியமாக்கோதை :— இவன், தன்மனைவியிறந்தபொழுது பிரிவாற்றாது "யாங்குப்பெரிதாயினும்" என்னும் பாடலைப்பாடினன். ௨௪௫.

சோணாட்டுமுகையலூர்ச்சிறுகருந்தும்பியார் :—இவராற்பாடப்பட்டோன் வல்லார்கிழான்பண்ணன். ௧௮௧, ௨௬௫.

சோழன் குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவன் :— இவன், பாடப்பட்டவர்களிலொருவன்; இவன்வரலாற்றை அவர்வரிசையிற் காண்க. இவனாற்பாடப்பட்டோன், சிறுகுடிகிழான்பண்ணன். ௧௭௩.

சோழன் நல்லுருத்திரன் :— இப்பெயர், சோழன் நல்லுத்தரனெனவும் பிரதிகளில் உள்ளது. இவன் முயற்சியுடையோரிடத்து மிக்கவிருப்பும் முயற்சி

யில்லாரிடத்து மிக்கவெறுப்புமுடையானென்று இவன் பாடியபாடல் தெரிவிக்கின்றது. ககo.

சோழன் நலங்கிள்ளி :—இவன், பாடப்பட்டோர்களில் ஒருவன்; இவன்வரலாற்றை அவர் பெயர்வரிசையிற்காண்க. இன்னும், இவன் பகைவரை அஞ்சாது வெல்லும் ஆற்றலுடையவனென்றும் பொதுமகளிரைச் சிறிதும் விரும்பாதவனென்றும் இரப்போர்க்கு எவற்றையும் வரையாதுகொடுக்கும் வள்ளலென்றும் செங்கோலை உடையவனென்றும் இவன் பாடியபாடல்கள் தெரிவிக்கின்றன. எங, எரு.

தங்கால் பூட்கோவலனார் :— இப்பெயர் தங்கால்தாட்கோவலனாரெனவும் வழங்கும். ஙஉங.

தாமப்பல் கண்ணனார் :—இவர் அந்தணர்; இவராற்பாடப்பட்டோன் சோழன் நலங்கிள்ளிதம்பிமாவளத்தான். சங.

தாயங்கண்ணியார் :—உருo.

திருத்தாமனார் :— இவராற்பாடப்பட்டோன் சேரமான்வஞ்சன். ஙகஅ.

துய்பிசேர்கீரனார் :—உசக.

துறையூர் ஓடைகிழார் :—இப்பெயர் துறையூர் அரிசில் கிழாரெனவும் பிரதிகளிலுள்ளது. இவராற்பாடப்பட்டோன் ஆய் என்னும் வள்ளல். கஙங.

தொடித்தலைவிழுத்தண்டினார் :—இவராற்பாடப்பட்டோன் ஒல்லையூர்கிழான்மகன் பெருஞ்சாத்தன். உசங.

தொண்டைமான் இளந்திரையன் :—இவன் காஞ்சிநகரத்திருந்த ஓரரசன்; பாடுதலில்வல்லவன்; கடியலூர் உருத்திரங்கண்ணனார்பாடிய பெரும்பாணாற்றுப் படைத்தலைவன் இவனே; இவன்பெயர்க்காரணத்தைப் பத்துப்பாட்டு ககக-ம் பக்கத்திற்காண்க. இவன்காலத்துப் புலவர் மேற்கூறிய உருத்திரங்கண்ணனார். கஅரு.

நரிவெரூஉத்தலையார் :—இவர், யாதுகாரணத்தாலோ தம்முடம்பு வேறுபட்டிருந்து சேரமான் கருவூரேறிய ஒள்வாட்கோப்பெருஞ்சேரலிரும்பொறையைக் கண்டநாளில் அவ்வேறுபாடு நீங்கித் தம்முடம்புபெற்றனர். இதனை, புறநானூற்றின் ரு - ம் பாட்டின் பின்புள்ள வாக்கியத்தாலும், தொல்காப்பிய மெய்ப்பாட்டியலில் "புதுமை பெருமை" என்னும் எ - ம் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியரெழுதிய விசேடவுரையாலுமுணர்க. இவராற்பாடப்பட்டோன் மேற்கூறிய சேரமான்கருவூரேறிய ஒள்வாட்கோப்பெருஞ்சேரலிரும்பொறை. ரு, ககரு.

நல்லிறையனார் :— இவராற்பாடப்பட்டோன் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன். ஙகங.

நன்னாகனார் :—இவராற்பாடப்பட்டோன் கரும்பனூர்கிழான். ஙஅக.

நெட்டிமையார் :—இவராற்பாடப்பட்டோன் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி. கூ, கஉ, கரு.

நெடுங்கழுத்துப்பரணர் :—உகக.

நெடும்பல்லியத்தனார் :—இவராற்பாடப்பட்டோன் பாண்டியன் பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதி. சுச.

நொச்சி நியமங்கிழார் :உகங.

பக்குடுக்கை நன்கணியார் :—௧௯௪.

பரணர் :—இவர் எட்டுத்தொகையினுள் ஒன்ருகிய பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்துப் பாடிக் கோச்செங்குட்டுவனிடம் உம்பற்காட்டுவாரியையும் அவன்மகன் குட்டுவன் சேரலையும் பரிசிலாகப்பெற்றனர்; இதனை மேற்கூறிய பதிற்றுப்பத்துரையாலுணர்க. இவராற்பாடப்பட்டோர் சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னி, சேரமான்குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி, வையாவிக்கோப்பெரும்பேகன், சேரமான் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன். "அமரர்ப்பேணியும்" என்னும் ஔவையாருடைய பாட்டினுல் அதியமான் நெடுமானஞ்சியை இவர் புகழ்ந்திருப்பதாகத் தெரிகின்றது. ௪, ௬௩, ௯௯, ௧௪௧, ௧௪௨, ௧௪௩, ௧௪௪, ௧௪௫, ௩௩௬, ௩௪௧, ௩௪௩, ௩௪௮, ௩௫௨, ௩௫௪, ௩௬௯.

பாண்டரங்கண்ணனர் :—இவராற்பாடப்பட்டோன் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி. ௧௬.

பாண்டியன் அறிவுடைநம்பி :—இவன் அரசன்; புதல்வர்களாலுண்டாகு மின்பம் இம்மையின்பம் எல்லாவற்றிலும் சிறந்ததென்பதை, "படைப்புப் பலபடைத்து" என்னும் பாடலால் நன்குவிளக்கியிருக்கின்றனன்; இவன் காலத்துப் புலவர் பிசிராந்தையார். ௧௮௮.

பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன் :—இவன், கற்றோர்பால் மிக்க மதிப்புடையனென்றும் கற்றலையே பெரும்பயனுக எண்ணியவனென்றும் இவன்பாடியபாடல் விளக்குகின்றது. சிலப்பதிகாரக் கதாநாயகனுகிய கோவலனைக் கொல்வித்தவன் இவனே. இதனை, சிலப்பதிகாரமதுரைக்காண்டத்தின் இறுதிக்கட்டுரையாலுணர்க. ௧௮௩.

பாண்டியன் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன்:—இவன் பாடப்பட்டவருளொருவன்; இவன்வரலாற்றை அவர்வரிசையிற்காண்க. இவன் பகைவரைவெல்லுதலிற் சிறந்தவனென்பதும் குடிகளைப்பாதுகாத்தலில் வன்மையுடையோனென்பதும் புலவர்களால் மதிக்கப்படுதலில் மிக்க நாட்டமுடையோனென்பதும் இரப்போர்க்கு வேண்டியவற்றைக் கொடுத்தலையுடையோனென்பதும் இவன்பாடியபாட்டால் விளங்குகின்றன. ௭௨.

பாரதம்பாடியபெருந்தேவனுர் :— இவர் தமிழில் பாரதகதையை உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுளாக இயற்றிய ஆசிரியர்; இதனை, தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு நச்சினர்க்கினியரெழுதிய உரையிற் பரக்கக்காணலாம். நற்றிணைமுதலிய தொகைகளிலுள்ள கடவுள்வாழ்த்துக்கள் இவராலேயே செய்யப்பட்டுள்ளன. ௧.

பாரிமகளிர் :—இவர், பாரியென்னும்வள்ளலுடைய மகளிர்; இவர்களுள் ஒருத்தி, மழையில்லாத வறட்காலத்தில் இரந்துவந்த ஒருபாணனுக்குச் சோறுபெருமையால் பொன்னை உலையிற்பெய்து சோருக்கிக்கொடுத்தாளென்று (பழமொழி, ௧௭௧) "மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்துப், பாரி மடமகள் பாண்மகற்கு - நீருலையுட், பொன்றந்து கொண்டு புகர்வாக நல்கினு, ளொன்றுரு முன்றிலோ வில்" என்னும் வெண்பாவால் விளங்குகின்றது. இவர், தமதுதந்தையிறந்தபின்பு அவன்பிரிவாற்ருது வருந்திப் புலம்பிப்பாடினர்;

பின்பு, தமது தந்தையின்தோழராகிய கபிலரால் பார்ப்பார்க்கு மணஞ்செய்து கொடுக்கப்பட்டார். கஉஉ, உ00, உ0க, உ0உ.

பாலைபாடியபெருங்கடுங்கோ:—இவன் சேரருள் ஒருவன்; பாடப்பட்டாருள் ஒருவன்; இப்பெயர் சேரமான் பாலைபாடியபெருங்கடுங்கோவெனவும் வழங்கும். உ௮உ.

பிசிராந்தையார்:—இவர் பாண்டிநாட்டுள்ள பிசிரென்னுமூரிலுள்ளார்; கோப்பெருஞ்சோழனுடைய உயிர்த்தோழர்; அவன்துறந்து உயிர்நீத்ததுகேட்டுத் தாமும் உடன் உயிர்நீத்தார்; இவர்பெயர் இரும்பிசிராந்தையாரெனவும் வழங்கும்; இவராற்பாடப்பட்டோர் கோப்பெருஞ்சோழன், பாண்டியன் அறிவுடைநம்பி. கூஎ, க௮ச, கஙக, உகஉ.

பிரமனார்:—கூ௫எ.

புல்லாற்றூர் எயிற்றியனார்:—இவர், கோப்பெருஞ்சோழன் தன்மக்களோடு போர் செய்தற்கு எழுந்தபொழுது பாடித் தடுத்தனர்; புல்லாற்றூர் எயிற்றியாரெனவும் பிரதிபேதமுண்டு; இவராற்பாடப்பட்டோன் மேற்கூறிய கோப்பெருஞ்சோழன். உகங.

புறத்திணைநன்னாகனார்:—இவர்பெயர் நன்னாகனாரெனவும் வழங்கும். இவராற்பாடப்பட்டோர் ஓய்மான்நல்லியக்கோடன், ஓய்மான்நல்லியாதன், ஓய்மான் வில்லியாதன், கரும்பனூர்கிழான். கஎ௫, ங௭௫, ஙஎக, ங௮க, ங௮ச.

பூங்கணுத்திரையார்:—உஎஎ.

பூதப்பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு:—இவள் தன்கணவனாகிய பூதப்பாண்டியன் இறந்தபொழுது அவன்பிரிவாற்றாது வருந்தி, மற்றைமகளிர்போல் யான் இனி உயிரோடிரேனென்று, "பல்சான் றீரே" என்னும் பாடலைப் பாடித் தீயிற்பாய்ந்தாள். இவள்காலத்துப்புலவர் மதுரைப் பேராலவாயார். உசரு, உசஎ.

பெருங்குன்றூர்கிழார்:—இவர், எட்டுத்தொகையுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்தில் ஒன்பதாம்பத்துப்பாடிச் சேரமான்குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையிடம் முப்பத்திராயிரம் காணமுதலியனபெற்றனர். இதனை, பதிற்றுப்பத்துரையாலுணர்க. வையாவிக்கோப் பெரும்பேகனாற்றுறக்கப்பட்ட கண்ணகியென்பவளை அவனுடன்சேர்த்தற்கு அவனைப்பாடினர். இவராற்பாடப்பட்டோர் வையாவிக்கோப் பெரும்பேகன், சேரமான் குடக்கோச்சேரலிரும்பொறை, சோழன்உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னி. கசஎ, உக0, உகக, உசரு, ஙக௮.

பெருங்கோழிநாய்கன்மகள் கண்ணனார்:—இப்பெயர், பெருங்கோழிநாய்கன்மகள் நக்கண்ணையாரெனவும் பிரதிகளிற்காணப்படுகின்றது. இவராற்பாடப்பட்டோன் சோழன்போர்வைக்கோப்பெருநற்கிள்ளி. ['பெருங்கோழிநாய்கனொருவன் ஒத்த அன்பினாற்காமமுறாதவழியும் குணச்சிறப்பின்றித் தானே காமுற்றுக்கூறியது' என்பது, தொல்காப்பியம் புறத்திணையியல் உ௮ - ம் சூத்திரம் நச்சினார்க்கினியருரை.] ௮ங, ௮ச, ௮ரு.

பெருஞ்சித்திரனார்:—இவர்பாடல்களில் வறுமைத்துன்பம் நன்குபுலப்படும்; இவர் பாடிய "முரசுகடிப் பிகுப்பவும்" என்னும் கரு௮ - ம் பாட்டில் கடையெழுவள்ளல்களின் புகழ்கள் மிகவும் பாராட்டப்பட்டிருக்கின்றன. இவராற்

பாடப்பட்டோர் குமணன், இளவெளிமான், அதியமான்நெடுமானஞ்சி, வெளிமான். கடுஅ, கடுக, கசுO, கசுக, கசுஉ, கசுரு, உOஎ, உOஅ, உகஎ, உகஅ.

பெருந்தலைச்சாத்தனூர் :—இவர், இளங்கண்டீரக்கோவும் இளவிச்சிக்கோவும் சேர்ந்திருந்தபொழுதுசென்று இளவிச்சிக்கோவை மதியாது இளங்கண்டீரக்கோவைத்தழீஇ அதற்குக்காரணமும்கூறினர்; தம்பியால்நாடுகொள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த குமணனைக்கண்டு அவன்தன் தலைதுணித்தற்கு வாள்கொடுப்ப அதனைக்கொணர்ந்து இளங்குமணற்குக்காட்டி அவன்மனத்திலிருந்த மாறுபாட்டைப் போக்கினர்; இவராற்பாடப்பட்டோரும் இவர்காலத்தோரும்: இளங்கண்டீரக்கோ, இளவிச்சிக்கோ, குமணன், இளங்குமணன், கடியநெடுவேட்டுவன், மூவன். கடுக, கசுச, கசுரு, உOரு, உOகூ, உகச.

பெரும்பதுமனார் :—கககூ.

பேய்மகள் இளவெயினி :— இப்பெயர் பேய்மகளிளவினியென்றும் சிலபிரதிகளிற் காணப்படுகின்றது. இவளாற்பாடப்பட்டோன் சேரமான்பாலைபாடிய பெருங்கடுங்கோ. கக.

பேரெயின்முறுவலார் :—இவராற்பாடப்பட்டோன் நம்பிநெடுஞ்செழியன். உகக.

பொத்தியார் :—இவர் கோப்பெருஞ்சோழன் உயிர்த்தோழர்; இவருடைய ஊர் உறையூர்; அவன் வடக்கிருத்தற்குச்செல்லும்பொழுது உடன்சென்று, "நீர் பிள்ளையைப்பெற்றபின்பு ஈங்குவாரும்" என்று அவன்சொல்லக்கேட்டு மீண்டு வந்து உறையூர்புகுந்து அவன்பிரிவாற்றாதுவருந்திச் சிலநாளிருந்து புதல்வன் பிறந்தபின்பு சென்று அவன்நடுகற்கண்டுவருந்தி 'எனக்கு இடந்தா' என்று கேட்டு அவன் இடங்கொடுக்கப்பெற்று வியப்புற்று அவனைப்பாடித் தாமும் வடக்கிருந்து உயிர்நீத்தனர். இவராற்பாடப்பட்டோர் கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார். உகஎ, உஉO, உஉக, உஉஉ, உஉரு.

பொய்கையார் :— சோழன்செங்கணானும் சேரமான்கணைக்காலிரும்பொறையும் போர்ப்புறத்துப்பொருதுழிச் சேரமான்கணைக்காலிரும்பொறையைப்பற்றிக் கொண்டு சோழன்செங்கணான் சிறைவைத்துழி இவர் களவழிநாற்பது பாடி அவனை வீடுகொண்டார். இவராற்பாடப்பட்டோன் சேரமான்கோக்கோதைமார்பன். சஅ, சகூ.

பொருந்திலிளங்கீரனார் :— இவராற்பாடப்பட்டோன் சேரன்மாந்தரஞ்சேரலிரும்பொறை. ருரு.

பொன்முடியார் :— இவர், சேரமான்தகடூரெறிந்தபெருஞ்சேரலிரும்பொறையின் நண்பர்; தகடூர்யாத்திரையென்னும் நூலில் இவராற்செய்யப்பட்ட பாடல்களுமுள்ளனவென்பது தொல்காப்பியப்பொருளதிகாரநச்சினார்க்கினியருரையால் விளங்குகின்றது; இவருடனிருந்தோர் அரிசில்கிழார். இவராற்பாடப்பட்டோன் அதியமான்நெடுமானஞ்சி. உகரு, ருகO, ருகஉ.

மதுரை அளக்கர்ஞாழார்மகனார் மள்ளனார் :—இவராற்பாடப்பட்டோன் சிறுகுடிகிழான்பண்ணன். ருஅஅ.

மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார் :—இவர் வணிகர்; இதனை, தொல்காப்பியம் மரபியல் எஎ - ம் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியரெழுதியவுரையானுணர்க. ருஉரு.

மதுரை இளங்கண்ணிக்கௌசிகனார் :—கூ0க.

மதுரை ஓலைக்கடைக் கண்ணம்புகுந்தாராயத்தனார் :—கூரு0.

மதுரைக்கணக்காயனார் :—கூகூ0.

மதுரைக்கணக்காயனார்மகனார் நக்கீரனார் :— இவர், கீரங்கொற்றனார் தந்தை; ஆலவாயெம்பெருமானடிகளருளிச்செய்த களவியலுக்கு உரைகண்டோர்; இதனை, இறையனாரகப்பொருளுரையாலுணர்க. பத்துப்பாட்டினுள் திருமுருகாற்றுப்படையும் நெடுநல்வாடையும் இயற்றியவர் இவரே; இவராற்பாடப்பட்டோன் பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறன். டுசு, கஅக.

மதுரைக் கள்ளிற்கடையத்தன்வெண்ணாகனார் :—கூகசு.

மதுரைக்கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் :— இவர் வணிகர்; இவராற்பாடப்பட்டோன் பாண்டியன் சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறன். ஐந்துகாப்பியத்துள் ஒன்றாகிய மணிமேகலை நூலாசிரியர் இவரே. டுகூ.

மதுரைத் தமிழ்க்கூத்தனார் :—கூகூஎ.

மதுரை நக்கீரர் :—இவராற்பாடப்பட்டோன் சோழநாட்டுப் பிடவூர்கிழார்மகன் பெருஞ்சாத்தன். கூகரு.

மதுரைப்படைமங்கமன்னியார் :—கூருக.

மதுரைப்பூதனிளநாகனார் :—உஎசு.

மதுரைப் பேராலவாயார் :—இவர் பூதப்பாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு தன் கணவனிறந்தவுடன் தானும் இறத்தற்குத் தீப்பாய்தல்கண்டு வியந்துபாடினர். உசஎ, உகூஉ.

மதுரை மருதனிளநாகனார் :—இவர்பெயர் மருதனிளநாகனாரெனவும் வழங்கும்; இவராற்பாடப்பட்டோன் பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன்; இவருடையபாடலில் முருகக்கடவுளெழுந்தருளிய திருச்செந்தூர் புகழ்ந்து கூறப்பட்டுள்ளது. டுரு, கூசக.

மதுவேளாசான் :—கூ0ரு.

மருதனிளநாகனார் :—மதுரை மருதனிள நாகனாரென்பவர் இவரே. இவராற்பாடப்பட்டோன் பாண்டியன் கூடகாரத்துத்துஞ்சியமாறன்வழுதி, நாஞ்சில்வள்ளுவன். இவர்பெயர், மருதினிள நாகனாரென்றும் சில பிரதிகளிலுள்ளது. டுஉ, கஙஅ, கஙக, கச0.

மாங்குடிகிழார் :—இவராற்பாடப்பட்டோர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், வாட்டாற்று எழினியாதன். உச, உசு, கூகங, கூகரு, கூஎஉ, கூகூசு.

மார்க்கண்டேயனார் :—இவர் செய்தநூலைத் தலையாய ஓத்தென்பர் நச்சினார்க்கினியர்; மார்க்கண்டேயனார்காஞ்சியென்று இவர்பெயரால் ஒருநூல் வழங்குகின்றது. கூசுரு.

மாதிமாதிரத்தனார் :—கஅசு.

மாற்பித்தியார் :—உருக, உருஉ.

மாறோக்கத்து நப்பசலையார் :—இவராற்பாடப்பட்டோர் சோழன்குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவன், மலையமான் திருமுடிக்காரி, மலையமான் சோழியவேனாதி திருக்கண்ணன்; இவர்பெயர் மாறோகத்து நப்பசலையாரெனவும் மாறோக்கத்து நப்பாலையார் எனவும் வழங்கும். [மாறோக்கம் - கொற்கையைச் சூழ்ந்ததோர்நாடு.] கூஎ, கூகூ, கஉசு, கஎச, உ.உசு, உஅ0, கூஅங.

முதையலூர்ச்சிறுகருந்தும்பியார் :—உசுரு.

முரஞ்சியூர்முடிநாகராயர் :— இவராற்பாடப்பட்டோன் சேரமான் பெருஞ்சோற்று உதியன்சேரலாதன். உ.

மோசிகீரனார் :—இவராற்பாடப்பட்டோர் சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை, கொண்கானங்கிழான். இவர்பெயர் மோசுகீரனாரெனவும் வழங்கும். ருo, கருச, கருரு, கருசு, கஅசு.

மோசிசாத்தனார் :—உஎஉ.

வடநெடுந்தத்தனார் :—இவராற்பாடப்பட்டோன் நாலைகிழவன்நாகன். இவர்பெயர் வடமநெடுந்தத்தனாரெனவும் வடமநெடுந் தச்சனாரெனவும் சிலபிரதியிற் காணப்படுகின்றது. கஎகூ.

வடமவண்ணக்கன்தாமோதரனார் :—இவர்பாடப்பெற்றோன் பிட்டங்கொற்றன். கஎஉ.

வடமவண்ணக்கன் பெரியசாத்தனார் :—இப்பெயர், வடவண்ணக்கன் பெருஞ்சாத்தனாரெனவும், வடமவண்ணத்தன் பேரிசாத்தனெனவும் சில பிரதிகளிற்காணப்படுகின்றது ; இவர் பாடப்பெற்றோர் தேர்வண்மலையன், பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறன். கஉரு, ககஅ.

வடமோதங்கிழார் :—உசுo.

வடவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் :—இவராற்பாடப்பட்டோன் தேர்வண்மலையன். கஉரு.

வன்பரணர் :— இவராற்பாடப்பட்டோர் வையாவிக்கோப்பெரும்பேகன், கண்டீரக்கோப்பெருநள்ளி, வல்விலோரி. கசச, கசரு, கசஅ, கசகூ, கருo, கருஉ, கருங, உருரு.

வான்மீகியார் :—முதற்சங்கத்து வான்மீகனாரென்று ஒருவருளர். அவர் செய்த நூலைத் தலையாய ஓத்தென்பர் நச்சினார்க்கினியர் ; இவர் அவரல்லர். ஙருஅ.

விரிச்சியூர் நன்னாகனார் :—உகூஉ.

விரியூர் நக்கனார் :—விரியூர் அங்கனென்றும் பிரதிபேதமுண்டு. ஙஙஉ.

வீரைவெளியனார் :—ஙஉo.

வெண்ணிக்குயத்தியார் :— இவர்பாடப்பெற்றோன் சோழன் கரிகாற்பெருவளத்தான் ; வெண்ணிற்குயத்தியாரெனவும் பிரதிபேதமுண்டு. வெண்ணியென்பது ஒரூர். சுசு.

வெள்ளெருக்கிலையார் :—இவராற்பாடப்பட்டோன் வேள் எவ்வி ; இவர் அவன் இறந்தபின்பும் இருந்தனர். உஙங, உஙச.

வெள்ளைக்குடி நாகனார் :—இவர் சோழன்குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனைப்பாடிப் பழஞ்செய்க் கடன்வீடு கொண்டார். ஙரு.

வெள்ளைமாளர் :—உகசு.

வெறிபாடிய காமக்கண்ணியார் :—இப்பெயர், வெறியாடிய காமக்கண்ணியாரெனவும் சிலபிரதிகளிலுள்ளது. உஎக, ஙoஉ.

வேம்பற்றூர்க்குமரனார் :—ஙகள.

---

ஆசிரியர்பெயர் இல்லாத பாட்டுக்கள் :—உசச, உருசு, உருஎ, உசுங, உசுஎ, உசுஅ, உகஎ, ஙoஎ, ஙஉங, ஙஉஎ, ஙஉஅ, ஙஙங, ஙஙகூ, ஙசo, ஙசுக.

---

# பாடினோருடைய நாமபேதங்கள்.

ஆவியார்.
ஆனியார்.

ஆவூர்கிழார்.
ஆவூரழகியார்.

உறையூர் இளம்பொன்வாணிகனார்.
...............ன்சாத்தங்கொற்றனார்.

உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார்.
ஏணிச்சேரிமுடமோசியார்.
மோசி........................

உறையூர் முதுகூத்தனார்.
உறையூர் முதுகூற்றனார்.

ஐயாதிச்சிறுவெண்டேரையார்.
சிறுவெண்டேரையார்.

ஐயூர்முடவனார்.
ஐயூர்கிழார்.
உறையூர்முடவனார்.

ஒக்கூர்மாசாத்தனார்.
எக்கூர்மாசாத்தனார்.

ஒரேருழவர்.
ஒன்றுருழவர்.

கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப்பூதநாதனார்
கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப்பூதனாதனார்

காக்கைபாடினியார் நச்செள்ளையார்.
காக்கைபாடினியார் நச்செள்ளையார்.

காவட்டனார்.
கானட்டனார்.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.
காரிக்கண்ணனார்.

குளம்பாதாயனார்.
குளம்பாதயானார்.

குறுங்கோழியூர்கிழார்.
குறுங்கோளியூர்கிழார்.

கோதமனார்.
கௌதமனார்.

கோவூர்கிழார்.
கோவூரழகியார்.

சோணாட்டுமுகையலூர்ச் சிறுகருந்தும்பியார்.
முகையலூர்ச்சிறுகருந்தும்பியார்.

சோழன்நல்லுருத்திரன்.
சோழன்நல்லுத்தரன்.

தங்கால் பூட்கோவலனார்.
தங்கால் நாட்கோவலனார்.

துறையூர் ஓடைகிழார்.
துறையூர் அரிசில்கிழார்.

பாலையாடியபெருங்கடுங்கோ.
சேரமான்பாலைபாடியபெருங்கடுங்கோ.

பிசிராந்தையார்.
இரும்பிசிராந்தையார்.

புல்லாற்றூர் எயிற்றியனார்.
புல்லாற்றூர் எயிற்றியார்.

புறத்திணைநன்னாகனார்.
நன்னாகனார்.

பெருங்கோழிநாய்கன்மகன் கண்ணனார்
பெருங்கோழிநாய்கன்மகள் நக்கண்ணையார்.

பேய்மகள் இளவெயினி.
பேய்மகள் இளவினி.

மதுரைக்கணக்காயனார்மகனார் நக்கீரர்.
மதுரைநக்கீரர்.

மதுரைமருதனிளநாகனார்.
மருதனிளநாகனார்.
மருதினிளநாகனார்.

மாறோக்கத்துநப்பசலையார்.
மாறோக்கத்துநப்பாலையார்.
மாறோகத்துநப்பசலையார்.

மோசிகீரனார்.
மோசுகீரனார்.

வடநெடுந்தத்தனார்.
வடமநெடுநத்தனார்.
வடமநெடுந்தச்சனார்.

வடமவண்ணக்கன்பெரியசாத்தனார்.
வடவண்ணக்கன்பெருஞ்சாத்தனார்.
வடமவண்ணத்தன்பேரிசாத்தன்.

விரியூர்நக்கனார்.
விரியூர்அங்கனார்.

வெண்ணிக்குயத்தியார்.
வெண்ணிற்குயத்தியார்.

வெறிபாடியகாமக்கண்ணியார்.
வெறியாடியகாமக்கண்ணியார்.

# பாடப்பட்டோர் வரலாறு.

அகுதை :—இவன் பரிசிலர்க்கு யானைகொடுக்கும் கொடையாளிகளுள் ஒருவன்; போர்செய்தலில் வல்லவன்; இவனூர் மதுரை; இவற்றை "பாவடி யானை பரிசிலர்க் கருகாச், சீர்கெழு நோன்றா ளகுதை", "மணநாறு மார்பின் மறப்போரகுதை, குண்டுநீர் வரைப்பிற் கூடல்" என்பவற்றாலுணர்க. இவனைப் புகழ்ந்தபுலவர் கபிலர். ௨௩௩, ௩௪௭.

அதியமான் தகடூர்பொருதுவீழ்ந்த எழினி :—இவன் ஓரரசன்; போரில் வல்லவன்; சிறந்த கொடையாளிகளுள் ஒருவன்; செங்கோலையுடையவன்; இவன் யுத்தத்தில் இறந்தபொழுது பிரிவாற்றாதுவருந்தி யமனைநோக்கி, "நோயுழந்து வைகிய வுலகினு மிகநனி, நீயிழந் தனையே யறனில் கூற்றம், வாழ்தலின் வரூஉம் வயல்வள னறியான், வீழ்குடி யுழவன் வித்துண் டாஅங், கொருவ னுருயி ருண்ணு யாயி, னோரார் பல்லுயிர் பருகி, யார்குவை மன்னோவவ னமரடு களத்தே" என்று அரிசில்கிழார் கூறியபாட்டே இவன் இத்தன்மையனாதலை நன்குபுலப்படுத்தும்: அதியமான்தகடூரெறிந்துவீழ்ந்த எழினியென்றும் பிரதிபேதமுண்டு. ௨௩௦.

அதியமான் நெடுமானஞ்சி :—இவன் கடையெழுவள்ளலிலொருவன்; யுத்தத்தில் பேர்பெற்றவீரன்; ஒருவகைவீரர்களாகிய மழவர்களுக்குத் தலைவன்; ஒருகாலத்தில், உண்டோர்க்கு நெடுங்காலம்சீவித்திருத்தலைச்செய்யும் கருநெல்லிப்பழத்தைப்பெற்று அதனை ஔவைக்குக்கொடுத்துப் புகழ்பெற்றவன்; காஞ்சிநகரத்திருந்த தொண்டைமானென்னுமரசனிடம் ஔவையைத் தூதுவிடுத்தோன்; சேரமானுடைய உறவினன்; பனைமாலையையுடையவன்; வெட்சிப்பூவையும் வேங்கைப்பூவையுமணிவோன்; சேரன், சோழன், திதியன், எருமையூரன், இருங்கோவேண்மான், பாண்டியன், பொருநன் என்னும் அரசரெழுவர்க்குரிய ஏழிலாஞ்சனையுநாடும் அரசவுரிமையையுடையோன்; மேற்கூறிய அரசர் எழுவரோடு பகைத்து மேற்சென்று அவரைப் போரில்வென்றோன்; பரணர்புகழ்ந்துபாடும்படி கோவலூரையும்வென்றான். இவனுடைய வூர் தகடூர்; இவன்மலை குதிரைமலை; இவன்மகன் பொகுட்டெழினி; இவன் முன்னோர், தேவர்களைப்போற்றி வழிபட்டு விண்ணுலகிலிருந்து கரும்பை இவ்வுலகிற்கொணர்ந்தனர். இவன்பெயர் அதிகமான் நெடுமானஞ்சியெனவும், நெடுமானஞ்சியெனவும், அஞ்சியெனவும் வழங்கும். இவன் சேரமான் பெருஞ்சேரலிரும்பொறையால் வெல்லப்பட்டானென்று பதிற்றுப்பத்துள் எட்டாம் பத்தினால் விளங்குகின்றது. 'ஒருவன்மேற்சென்றுழி ஒருவன் எதிர்செல்லாது தன்மதிற்புறத்தவருந்துணையும் இருப்பின் அஃது உழிஞையினடங்கும்; அது சேரமான்செல்வுழித் தகடூரிடை அதிகமானிருந்ததாம்' என்பது தொல்காப்பியம், புறத்திணையியல், ௭-ம் சூத்திரம் நச்சினார்க்கினியருரை. இவனைப் பாடியவர்கள்: ஔவையார், பரணர், பெருஞ்சித்திரனார், பொன்முடியார் ௮௭, ௮௮, ௮௯, ௯௦, ௯௧, ௯௨, ௯௩, ௯௪, ௯௫, ௯௭, ௯௮, ௯௯, ௧௦௦, ௧௦௧, ௧௦௩, ௧௦௪, ௨௦௬, ௨௦௮, ௨௩௧, ௨௩௨, ௨௩௫, ௩௧௦, ௩௧௫, ௩௯௦.

அதியமான் நெடுமானஞ்சிமகன் பொகுட்டெழினி :—இவன் கொடையும் இன்பச்சிறப்பும் வென்றிச்சிறப்புமுடையோன்; இவன்பெயர் அதியமான்மகன் பொகுட்டெழினியெனவும் வழங்கும்; இவனைப்பாடியவர் ஔவையார். ௯௬, ௧0௨, ௩௯௨.

அந்துவஞ்சாத்தன் :—இவன் ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியனுடைய நண்பருள் ஒருவன்; "உரைசா லந்துவஞ் சாத்தனும்" ௭௧.

அந்துவன்கீரன் : — இவனுக்குக் கொடையைச்செவியறிவுறுத்திப் பாடியபுலவர் காவட்டனார். ௩௫௯.

அம்பர்கிழாஅன் அருவந்தை :—இவனைப் பாடியபுலவர் கல்லாடனார்; [அம்பரென்பது சோழநாட்டின்கண்ணதோரூர். கிழான்=கிழவன் - உரியவன்.] 'செறிகுணத் தம்பர் கிழவோன் சேந்தன்' எனவும், 'கற்ற நாவினன் கேட்ட செவியினன், முற்ற வுணர்ந்த மூதறி வாளன், நாகரிக நாட்டத் தாரிய னருவந்தை, தேருங் காட்சிச் சேந்தன்' எனவும் திவாகரத்துள்ள தொகுதியிறுதிக்கட்டுரைகளிற் கூறப்பட்டிருப்பவன் இவனே. ௩௮௫.

ஆதனழிசி :—ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியனுடைய நண்பருள் ஒருவன்; 'ஆதனழிசியும்' ௭௧.

ஆதனுங்கன் :—இவன் கொடையாளிகளுள் ஒருவன்; வேங்கடத்தின் தலைவன்; இவனைப்பாடியபுலவர் கள்ளில்ஆத்திரையனார். இவன் அருமைபெருமையை இப்புலவர்பாடிய அடியிற்குறித்தஎண்ணுள்ளபாடல்கள் நன்குபுலப்படுத்தும். ௧௭௫, ௩௮௯.

ஆந்தை :—இவன் ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியனுடைய நண்பருள் ஒருவன்; இவனுடையவூர் எயிலென்பது; 'மன்னெயி லாந்தையும்' ௭௧.

ஆய் :—இவன், இருவகைவேளாளரில் உழுவித்துண்போர்வகையினன்; அரசராற் கொடுக்கப்படும் வேளென்னும் உரிமையடைந்தோன்; கடையெழுவள்ளல்களில் ஒருவன்; சிறந்தவீரன்; பொதியின்மலைத்தலைவன்; அதனருகேயுள்ள ஆய்குடியென்பது இவனுடையவூர்; ஆய் அண்டிரனென்றும், அண்டிரனென்றும் இவன்பெயர் வழங்கும்; பாணர்க்கும் இரவலர்க்கும் யானைகளையும் பிறவற்றையும் மிகுதியாகக்கொடுத்தோன்; சுரபுன்னைப்பூமாலையை உடையவன்; கொங்குநாட்டாரோடு போர்செய்து அவர்களைப் புறங்காட்டியோடச் செய்தோன்; யாதொருபயனையுங்கருதாது இரவலர்க்குக்கொடுத்து மகிழ்வித்தலையே கடனாகவுடையோன்; இவனுடைய நற்குணநற்செய்கைகள்யாவும் மனமுருகிப் புலவர்கள் இவனைப்பாடியபாட்டுக்களால் நன்குபுலப்படும்; அப்பாட்டுக்களின் எண்கள் அடியிற்கொடுக்கப்பட்டுள்ளன; இன்னும், பாம்பு பெற்றுக்கொடுத்த நீலவுடையினை ஆலின்கீழெழுந்தருளியதலைவனுக்கு [பரமசிவனுக்கு] இவன்கொடுத்தனன்; இதனை [அடி - ௯௬ - ௯௯] "நீல நாக நல்கிய கலிங்க, மாலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த, சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோ, ளார்வ நன்மொழி யாயும்" என்னும் சிறுபாணாற்றுப்படையாலுணர்க. இவனைப்பாடியபுலவர்கள் உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார், துறையூர் ஓடைகிழார், குட்டுவன் கீரனார். இவர்களுள் இவன் இறந்த பின்பும் இருந்தோர் துறையூர் ஓடைகிழாரொழிந்த மற்றையோர். ௧௨௭, ௧௨௮, ௧௨௯, ௧௩0, ௧௩௧, ௧௩௨, ௧௩௩, ௧௩௪, ௧௩௫, ௧௩௬, ௧௫௮, ௨௪0, ௨௪௧, ௩௭௪, ௩௭௫.

இயக்கன் :—இவன் ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியனுடைய நண்பருள் ஒருவன்; "வெஞ்சினவியக்கனும்" ௭௧.

இருங்கோவேள் :—இவன் கொடையாளிகளுள் ஒருவன்; வடபக்கத்தில் ஒரு முனிவருடைய ஓமகுண்டத்திற்றோன்றித் துவராபதியை [துவாரசமுத்திரம்] ஆண்டு நாற்பத்தொன்பதுதலைமுறை தொன்றுபட்டுவந்தவேளிர்களுள் ஒருவன்; ஒருபெரியோர்தவஞ்செய்துகொண்டிருக்கையில் அவர்க்கு இடையூறு செய்யவந்த புலியொன்றை அவர்கட்டளையின்படி கொன்றமையால் இவனுக்குப் புலிகடிமாலென்று ஒருபெயருண்டாயிற்றென்பர்; இவற்றை "நீயே, வடபான் முனிவன் றடவினுட் டோன்றிச், செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை, யுவரா வீகைத் துவரை யாண்டு, நாற்பத் தொன்பது வழிமுறை வந்த, வேளிருள் வேளே", "ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்" என்பவற்றாலுணர்க. வேள்பாரி இறந்தபின்பு அவன்புதல்வியரை யழைத்துவந்து மணஞ்செய்துகொள்ளும்படி கபிலர் புகழ்ந்துவேண்ட, அதற்கு உடம்படாது மறுத்தமையால் இவன் அவரால் வெறுக்கப்பட்டான். ௨௦௧, ௨௦௨.

இளங்கண்டீரக்கோ :—இவன் கண்டீரக்கோவின்தம்பி; இவனும் இளவிச்சிக்கோவும் ஒருங்கிருந்தபொழுது அங்குவந்த பெருந்தலைச்சாத்தனார் இவனைமட்டும் தழுவ அவன் இவ்வாறுசெய்தது என்னையென, அவர் இவன் மேம்பாட்டைப் புகழ்ந்தும் அவனை அவமதித்தும் பாடினர். ௧௫௧.

இளங்குமணன் :—இவன் குமணன்தம்பி; இவன், தன்தமையனும் சிறந்தகொடையாளியுமாகிய குமணன்பாற் பகைமையுற்று அவன்நாட்டைக்கைக்கொண்டு, காட்டிற்புகுந்து ஒளித்திருந்த அவனைக் கொல்லநினைந்து பின்பு பெருந்தலைச்சாத்தனாரால அப்பகைமையொழிந்தான். ௧௬௫.

இளந்தத்தன் :—இவன் ஒருபுலவன்; சோழன் நலங்கிள்ளியிடத்திருந்து உறையூர் புகுந்தபொழுது, ஒற்றுவந்தானென்று காரியாற்றுத்துஞ்சியநெடுங்கிள்ளியால் எண்ணப்பட்டு, அவன்கொல்லப்புகுந்தவிடத்துக் கோவூர்கிழாராற் பாடிவிடுவிக்கப்பட்டான். ௪௭.

இளவிச்சிக்கோ :— இவன் விச்சிக்கோவின்தம்பி: இவனைப்பற்றியவரலாற்றை 'இளங்கண்டீரக்கோ' என்பதிற்காண்க. இவன்பெயர் இளவச்சிரக்கோவெனவும்வழங்கும்; இவன்காலத்துப்புலவர் பெருந்தலைச்சாத்தனார். ௧௫௧.

இளவெளிமான் :—இவன் வெளிமானுடையதம்பி; அவனிறந்தபின்பு பெருஞ்சித்திரனார்வந்து, 'பரிசில்கொடு' என்றுகேட்ப, சிறிதுகொடுத்தமையின் அவரால் அவமதித்துப்பாடப்பெற்றான்; இவன்காலத்துப்புலவர் பெருஞ்சித்திரனார். ௨௦௭, ௨௩௭.

ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறன் : — இவன் சிறிதுசெல்வமுடையனாயினும் பரிசிலர்க்கு இல்லையென்னாதுகொடுப்போன்; தன்அரசனுக்குவந்த துன்பங்களைத்தாங்கிப் பகைவரைவெல்லும் வீரமுடையோன்; இவனைப்பாடியபுலவர் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன்மதுரைக்குமரனார். ௧௮௦.

எழினி அதியமான் :—இவன் கடையெழுவள்ளலிலொருவன்; கூவிளங்கண்ணியையுடையோன்; குதிரைமலை இவனுடையது. ௧௫௮.

ஏறைக்கோன் :—இவன் குறவர்கள்தலைவன்; காந்தட்பூமாலையை அணிவோன்; மலைநாட்டையாள்வோன்; நற்குணநற்செய்கையை உடையவன்; இவனைப் பாடியவர் குறமகள் இளவெயினி. ௧௫௭.

# பாட்டப்பட்டோர் வரலாறு.

ஏறுதி திருக்கிள்ளி :—இவன் கொடையும் வீரமுமுடையோன்; இவனைப்பாடிய புலவர் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன்மதுரைக்குமரனார்; ஏறுதியென்பது அரசனாற்கொடுக்கப்படும் பட்டப்பெயர். இதனைத் தொல்காப்பியப்புறத் திணையியல் அ-ம் சூத்திரம் நச்சினார்க்கினியருரையிற்காண்க. கசுஎ.

ஒல்லையூர்கிழான்மகன் பெருஞ்சாத்தன் :—இவன் வீரர்க்கும் பாணர்க்கும் விறலியர்க்கும் பேருதவிபுரிந்தோன்; வலியவீரன்; இவன் இறந்தபின்பு பிரிவாற்றுதுபாடிய புலவர், குடவாயில்நல்லாதனார், தொடித்தலைவிழுத்தண்டினார். இவன்பெயர் சாத்தனெனவும்வழங்கும். உசஉ, உசங.

ஓய்மான்நல்லியக்கோடன் :—இவன் ஓர் சிற்றரசன். மாவிலங்கையென்னுமூர்க்குத் தலைவன்; இடைக்கழிநாட்டுநல்லூர் நத்தத்தனார்பாடிய சிறுபாணாற்றுப் படைத்தலைவன் இவனே. அந்நூலால், இவனுக்கு எயிற்பட்டினம், வேலூர், ஆமூர்முதலிய ஊர்களிருந்தனவென்பதும், இவன் கடையெழுவள்ளல்களின் பின் இருந்தவனென்பதும் விளங்குகின்றன. இவன்பெயர் ஏறுமாநாட்டு நல்லியக்கோடனெனவும் வழங்கும். இவனைப்பாடியபுலவர் புறத்திணைநன்னாகனார். கஎசு.

ஓய்மான்நல்லியாதன் :—இவன் கொடையாளிகளுள் ஒருவன்; இவனைப்பாடிய புலவர் புறத்திணைநன்னாகனார். ௩எசு.

ஓய்மான்வில்லியாதன்: —இவன் இலங்கையென்னுமூர்க்குத்தலைவன்; இவ்விலங்கை மேற்கூறிய மாவிலங்கையென்னுமூரென்பதும், இவன் மேற்கூறிய ஓய்மான்நல்லியக்கோடன் பரம்பரையைச் சார்ந்தோனென்பதும் ஊகித்தறியப்படுகின்றன. இவனைப்பாடியபுலவர் புறத்திணைநன்னாகனார். ௩௭௯.

கடியநெடுவேட்டுவன் :—இவன் கொடையாளிகளுளொருவன்; வேடர்கள் தலைவன்; தன்னைச்சார்ந்தவர்களுக்கு உதவிபுரிந்து பகைவர்களை அழிக்கும் வன்மையுடையவன்; கோடையென்னும் மலைக்குத்தலைவன்; இவனைப்பாடியவர் பெருந்தலைச்சாத்தனார். உ0டு.

கண்டீரக்கோப்பெருநள்ளி :—இவன் கடையெழுவள்ளல்களிலொருவன்; தோட்டியென்னும் மலைக்கும் அதனைச்சார்ந்த மலைநாட்டிற்கும் காட்டுநாட்டிற்கும் தலைவன்; (அடி - கO௩ - கO௭.) "கரவாது, நட்டோ ருவப்ப நடைப்பரிகார, முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத், துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு, நளிமலை நாட னள்ளியும்" எனச் சிறுபாணாற்றுப் படையிலும் இவனைப்புகழ்ந்துகூறினர்; இவன்பெயர் கண்டிற்கோப்பெருநள்ளியெனவும் நள்ளியெனவும் வழங்கும்; இவனைப்பாடியபுலவர் வன்பரணர், பெருந்தலைச்சாத்தனார். கசஅ, கசக, கடுO, கடுஅ.

கண்ணகி :—இவள், வையாவிக்கோப் பெரும்பேகனுக்குரியவள்; ஒருகாலத்து அவனாற்றுறக்கப்பட்டுப் பிரிவாற்றாதுவருந்திக் கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் என்பவர்கள் தன்னை அவனோடு சேர்த்துவைத்தற்கு அவனைப் பாடிவேண்டும்படி, பெருமையுற்றவள். இதனைத் தொல்காப்பியம், புறத்திணையியல் ௩டு-ம் சூத்திரம் *நச்சினார்க்கினியருரையானு முணர்க.

---

* 'கண்ணகிகாரணமாக வையாவிக்கோப்பெரும்பேகனைப் பரணர்பாடிய கைக்கிளைவகைப் பாடாண்பாட்டு' என்பது, தொல், புறத்திணையியல் ௩டு - ம் சூத்திரம் நச்சினார்க்கினியருரை.

இவள், சிலப்பதிகாரத்துக் கூறப்பட்டுள்ள கண்ணகியல்லள். கசகூ, கசஅ, கசரு, கசகூ, கசஎ.

கபிலர் :—இவர்வரலாற்றைப் பாடினோர்வரிசையிற் காண்க. நிகூ, கஉகூ, கஎச.

கரிகால்வளவன் :—கூகூ.

கரும்பனூர்கிழான் :—இவன் வேங்கடத்தைச்சார்ந்த நாட்டையுடையவன்; இவனைப் பாடியவர் புறத்திணைநன்னாகனார். கூஅக, கூஅச.

காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி :—இவன் சோழபரம்பரையைச்சார்ந்தோன்; உறையூரிலிருந்தோன்; சோழன் நலங்கிள்ளிக்குப் பகைவன்; இவன்பெயர் நெடுங்கிள்ளியெனவும் வழங்கும்; இவனைப்பாடியவர் கோவூர்கிழார்; 'இளந்தத்தன்' என்பவரும் இவன்காலத்தவரே. சச, சரு, சஎ.

கானப்பேரெயில்கடந்த உக்கிரப்பெருவழுதி :—இவன், சேரமான்மாவெண்கோ, சோழன் இராசசூயம்வேட்டபெருநற்கிள்ளி இவர்களுடையநண்பன்; கடைச்சங்கமிரீஇய பாண்டியர் நாற்பத்தொன்பதின்மருள் ஒருவன்; இதனை இறையனாரகப்பொருளுரையாலும் சிலப்பதிகாரவுரையாலுமுணர்க. இவன் முன்னிலையில் திருக்குறள் அரங்கேற்றப்பட்டது; அக்குறளுக்கு இவன்கொடுத்த "நான்மறையின் மெய்ப்பொருளை" என்னும் வெண்பாவே இதற்குத்தக்க சான்றாகும்; எட்டுத்தொகையுள் அகநானூறு தொகுப்பித்தான் இவனே. "புலவரையிறந்த" என்னும் புறப்பாட்டால், வேங்கைமார்பனென்னும் பகைவனைவென்று அவன் ஆட்சியிலிருந்த பலசிற்றரண்களையுடைய கானப்பேரரணைக் கைக்கொண்டானென்று விளங்குகின்றது. இவன்பெயர், பாண்டியன் உக்கிரப்பெருவழுதியெனவும், உக்கிரப்பெருவழுதியெனவும், பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதியெனவும் வழங்கும். இவனைப் பாடியபுலவர் ஐயூர்மூலங்கிழார், ஔவையார். உக, கூகூஎ.

குமணன் :— இவன் மிக்ககொடையாளி; முதிரமென்னும் மலைக்குத்தலைவன்; இவன்காலம் கடையெழுவள்ளல்களின் பிற்காலம். தன்தம்பியால் நாடுகொள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்தபொழுது பெருந்தலைச்சாத்தனாரிரப்பத் தன்தலைகொடுத்தற்கு வாளைக்கொடுத்தோன். இவன் கொடைவிசேடமுதலியவற்றை அடியிற்குறித்த எண்களுள்ளபாடல்கள் நன்குபுலப்படுத்தும். இவனைப் பாடிய புலவர் பெருஞ்சித்திரனார், பெருந்தலைச்சாத்தனார். கருஅ, கருகூ, கசுo, கசுக, கசுஉ, கசுகூ, கசுச, கசுரு.

கோண்கானங்கிழான் :—இவன், கொடை, வெற்றி இரண்டுமுடையோன்; கொண்கானமென்னும் மலைக்குத்தலைவன்; [கொண்கானம் - கொங்கணம்.] இவனைப் பாடியபுலவர் மோசிகீரனார். கருச, கருரு, கருசு.

கோச்சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை : — இவன் செங்கோலையுடையவன்; யானையினதுபார்வைபோலும் பார்வையையுடையவன்; கொல்லிமலைக்குத்தலைவன்; விளங்கிலென்னுமூருக்குப் பகைவரான்வந்ததுன்பத்தைத்தீர்த்தோன்; கபிலருடைய நண்பன்; கடற்கரையிலுள்ள தொண்டியென்னுநகரத்தை ஆண்டோன்; ஒருகாலத்து, பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்றநெடுஞ்செழியனாற்கட்டப்பட்டுப் பின்பு அதனை நீக்கிக்கொண்டு புகழ்பெற்றோன்; சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியொடு போர்செய்தான்; இவன்பெயர் யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்

பொறையெனவும், சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை யெனவும், சேரன் மாந்தரஞ்சேரலிரும்பொறையெனவும் வழங்கும். எட்டுத் தொகையுள் ஒன்றாகிய ஐங்குறுநூறு தொகுப்பித்தோன் இவனே. இவனைப் பாடியபுலவர் குறுங்கோழியூர்கிழார், பொருந்தில் இளங்கீரனார், கூடலூர் கிழார்; இவருள் இவன் இறந்தபின்பும் இருந்தவர் கூடலூர்கிழார். கள, உ௦, உஉ, ருக, கஉரு, உஉக.

கோப்பெருஞ்சோழன்:—இவனுடைய ராசதானி உறையூர்; பிசிராந்தையார்க்கும் பொத்தியார்க்கும் உயிர்நண்பன்; இவன் தன்பிள்ளைகளிருவரோடு பகைமைகொண்டு போர்செய்தற்கு எழுந்தபொழுது புல்லாற்றூர் எயிற்றியனாரால் சமாதானம்செய்யப்பட்டான். செய்யுள்செய்தலில் வல்லவன்; இவன், பின்பு எல்லாவற்றையுந்துறந்து வடக்கிருந்து, உடன்உயிர்நீத்தற்குவந்த பொத்தியாரை 'மகன்பிறந்தபின்வருக' எனக்கூறித் தான் உயிர்நீத்துக் கல்லாகியும் அவ்வாறுவந்த அவர்க்கு இடங்கொடுத்துப் புகழ்பெற்றுவிளங்கினான்; இவன் வடக்கிருந்ததைக்கேட்டு வந்த பிசிராந்தையாரும் உடன்உயிர்நீத்தனர்; இதனைத் திருக்குறள் எக - ம் அதிகாரம் நட்பு ரு - ம் பாட்டிற்குப் பரிமேலழகரெழுதிய விசேடவுரையானும், தொல்காப்பியம் புறத்திணையியல் நச்சினார்க்கினியருரையானுமுணர்க. இவனைப் பாடியபுலவர் பிசிராந்தையார், புல்லாற்றூரெயிற்றியனார், பொத்தியார், கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப்பூதநாதனார்; இவ்வரசனும் இப்புலவர்களும் அவ்வச்சமயத்துக்கூறிய பாடல்கள் மிக அற்புதமானவை. அதனை அடியிற்குறித்த எண்களமைந்தசெய்யுட்களாலுணர்க. சுஎ, கககூ, உகஉ, உகங, உகச, உகரு, உகசு, உகஎ, உகஅ, உஉ௦, உஉக, உஉஉ, உஉங.

சிறுகுடிகிழான்பண்ணன்:—இவன் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனுடைய நண்பருளொருவன்; சிறந்தகொடையாளி; "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன், பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப், புன்காழ் நெல்லிப் பைங்காய்" என அகநானூறு - ருச - ம் பாட்டிலும் இவன் பாராட்டப்பட்டிருத்தல்காண்க. இவன்பெயர் பண்ணனெனவும் வழங்கும். இவனைப்பாடியவர்கள் கோவூர்கிழார், சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன், மதுரை அளக்கர் ஞாழார்மகனார் மள்ளனார். எ௦, கஎங, ருஅஅ.

சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை:—இவன் சோழன் முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளியின் பகைவன்; உறையூர் ஏணிச்சேரி முடமோசியாருடைய நண்பன். கங.

சேரமான் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன்:—இவன் போரில்வல்லவன்; இவனைப்பாடிய புலவர் பரணர். ஙஙக.

சேரமான் கடுங்கோவாழியாதன்:—இவன் சிறந்தவீரன்; இவன்பெயர், சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதனெனவும், சேரமான் சிக்கற்பள்ளித்துஞ்சிய செல்வக்கடுங்கோவாழியாதனெனவும் வழங்கும். பதிற்றுப்பத்தில், கபிலர் பாடிய ஏழாம்பத்துக்கேட்டு, அவர்க்கு நூறாயிரம்காணமும், ஒரு மலைமீதேறிக்கண்டநாடும் பரிசிலாகக் கொடுத்தனன். இதனைப் பதிற்றுப்பத்தினுரையாலுணர்க. இவனைப் பாடியபுலவர் கபிலர், குண்டுகட்பாலியாதன். அ, கச, ஙஅஎ.

சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரலிரும்பொறை :—இவனைக் கண்டபொழுது நரிவெரூஉத்தலையார்க்குப் பழைய நல்லுடம்புகிடைத்தது; இவனைப்பாடிய புலவர் அவரே. ௫.

சேரமான்குட்டுவன்கோதை :—இவன் இரவலர்க்கு வேண்டியவற்றைக் கொடுப்பவன்; வீரன்; குட்டுவன் - குட்டநாட்டரசன்; [குட்டநாடு - மலைநாட்டின் ஒரு பகுதி.] இவனைப்பாடியபுலவர் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார். ௫௪.

சேரமான் குடக்கோச் சேரலிரும்பொறை :—இவன்பெயர் சேரமான்குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை யெனவும் வழங்கும். பதிற்றுப்பத்தில், பெருங்குன்றூர்கிழார் பாடிய ஒன்பதாம்பத்திற்குத் தலைவன் இவனே. இதனைப் பதிற்றுப்பத்துரையாலுணர்க. இவனைப்பாடியவர் பெருங்குன்றூர்கிழார். ௨௧௦, ௨௧௧.

சேரமான்குடக்கோ நெடுஞ்சேரலாதன் :—இவன் சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியோடு போர்செய்திறந்தான். அக்காலத்து அக்களத்தில் இவனைப் பாடியபுலவர் கழாத்தலையார், பரணர். ௬௨, ௬௩, ௩௬௮.

சேரமான்கோக்கோதைமார்பன் :— இவன் சிறந்தகொடையாளி; இவன்நகரம் தொண்டியென்பது; இவனைப்பாடியபுலவர் பொய்கையார். ௪௮, ௪௯.

சேரமான் சிக்கற்பள்ளித்துஞ்சிய செல்வக்கடுங்கோவாழியாதன் :—இவன் சிறந்தகொடையாளி. இவனைப்பாடியபுலவன் குண்டுகட்பாலியாதன். ௩௮௭.

சேரமான்செல்வக் கடுங்கோவாழியாதன் :—இவனைப்பாடியபுலவர் கபிலர். ௧௪.

சேரமான்தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை :—இவன், தன் முரசுகட்டிலின்மேல் அறியாமல் ஏறித்துயின்ற மோசிகீரனாரைத் துன்பஞ்செய்யாமல் அவர் எழுமளவும் கவரிகொண்டு வீசியதனால் அவராற்புகழ்ந்து பாடப்பெற்றான். பதிற்றுப்பத்துள் எட்டாம்பத்திற்குத் தலைவன் இவனே. அது பாடிய அரிசில்கிழார்க்கு ஒன்பதுநூறாயிரங்காணம்பொன் பரிசில் கொடுத்தான். அதியமானுடைய தகடூரை வென்றான். தகடூர்யாத்திரையென்பது இவன் காலத்துச் செய்யப்பட்டதுபோலும். இவனைப்பாடியபுலவர் மோசிகீரனார், அரிசில் கிழார். ௫௦.

சேரமான்பாமுளூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி :—இவன், அரசர்களுக்கு இன்றியமையாத குணங்கள்பலவும் நிறைந்தவன்; ஒருகாலத்துச் சேரமானுடைய பாமுளூரைவென்று கைக்கொண்டான். இதனாலேயே இவனுக்கு இப்பெயர்வந்தது; இரப்போரைப்பாதுகாத்தலையே விரதமாகவுடையவன்; இவன்பெயர் சோழன் நெய்தலங்கான லிளஞ்சேட்சென்னியெனவும் வழங்கும். சேரமான் பாமுளூரென்பதற்குச் சேரமானுடைய பாமுளூரென்று பொருள்கொள்க. இவனைப்பாடியபுலவர் ஊன்பொதிபசுங்குடையார். ௧௦, ௨௦௩.

சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ :—இவன், கொடையும், வீரமும் உடையோன்; பாடுதலில்வல்லவன். இவன்பெயர் பாலைபாடிய பெருங்கடுங்கோவெனவும் வழங்கும். இவனைப்பாடியவள் பேய்மகள் இளவெயினி. ௧௧, ௨௮௨.

சேரமான் பெருஞ்சேரலாதன் :—இவன், சோழன் கரிகாற் பெருவளத்தானோடு

போர்செய்து புறப்புண்ணுற்று, நாணி வடக்கிருந்தான். இவனைப்பாடியபுலவர் கழாத்தலையார், வெண்ணிக்குயத்தியார். சுரு, சுசு.

சேரமான் பெருஞ்சோற்று உதியன்சேரலாதன் :—இவன், பாரதப்போரில் பாண்டவர் துரியோதனாதியரென்னும் இருவகையார் சேனைக்கும் உணவளித்தான். இக்கருத்தினை, "ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த, போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த, சேரன் பொறையன் மலையன் றிறம்பாடிக், கார்செய் குழலாட வாடாமோ வூசல், கடம்பெறிந்த வாபாடி யாடாமோ வூசல்" என்னும் சிலப்பதிகார வாழ்த்துக்காதைச் செய்யுளும் நன்குபுலப்படுத்தும். இதனாலேயே இவன் இப்பெயர்பெற்றான். இவனைப்பாடியபுலவர் முரஞ்சியூர் முடிநாகராயர். உ.

சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறை:—இவன் சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியோடு போர்செய்தான்; இவன்காலத்துப்புலவர் பொருந்திலிளங்கீரனார், வடவண்ணக்கன் பெருஞ்சாத்தனார்.ருங, கஉரு.

சேரமான்மாவெண்கோ :—இவன்காலத்தரசர் பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியும். இவனைப்பாடியவர் ஔவையார். ளசுஎ.

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை :—இவனைப் பாடியபுலவர் குறுங்கோழியூர்கிழார். உ0, உஉ.

சேரமான் வஞ்சன் :—இவன் பரிசிலர்க்கு வேண்டியவற்றைக் கொடுப்போன். இவனைப்பாடியபுலவர் திருத்தாமனார். ளருஅ.

சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப்பார்ப்பான் கௌணியன்விண்ணந்தாயன் :—இவன், அந்தணர்திலகன். ஓதல் முதலிய அறுவகைத்தொழிலிலும் சிறந்து பார்ப்பனவாகை பெற்றோன்; மிக்க கொடையாளி; இவனைப்பாடியபுலவர் ஆவூர் மூலங்கிழார். கசுசு.

சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி :—இவன், யுத்தத்தில்வல்லவன். தேர்வண்மலையனென்பவனைத் துணையாகக்கொண்டு சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறையோடுபொருது அவனைவென்றான். சேரமான் மாவெண்கோவோடும், பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதியோடும் நட்புடையோன். இவனைப்பாடியபுலவர் பாண்டரங்கண்ணனார், ஔவையார், உலோச்சனார். இன்னும் இவன்காலத்துப்புலவர் வடவண்ணக்கன்பெருஞ்சாத்தனார். கசு, கஉரு, ளசுஎ, ளஎஎ.

சோழன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி :—இவன் சிறந்தவீரன். இவனைப்பாடியபுலவர் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார். சுக.

சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னி :—இவன், சோழன் கரிகாற்பெருவளத்தான்தந்தை; அழுந்தூர் வேளிடைமகட்கொண்டோன். இதனைத் தொல்காப்பிய அகத்திணையியல் ௩0 - ம் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியரெழுதிய உரையாலுணர்க. [அடி - கங0] "உருவப் பஃறே ரிளையோன் சிறுவன்" என்றார் பொருநராற்றுப்படையிலும். வீரத்திலும் கொடையிலும் சிறந்தோன். இவன்பெயர் இளையோனெனவும் வழங்கும். இவனைப்பாடியபுலவர் பரணர், பெருங்குன்றூர்கிழார். சு, உசுசு.

சோழன்கரிகாற்பெருவளத்தான் :—இவன், சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னிபுதல்வன். நாங்கூர் வேளிடைமகட்கொண்டோன். இதனை, தொல்காப்பியம், அகத்திணையியல் ௩௦ - ம் சூத்திரம் நச்சினார்க்கினியருரையாலுணர்க. தம்முள்மாறுபட்டுவந்து தன்னை இளையனென்றிகழ்ந்த முதியோர் பொருட்டுத் தான் முதியனாய்வந்து அவர்கள்வழக்கைத் தீர்த்தானென்றும், தான் கருவூரிலிருக்கையில், கழுமலமென்னு மூரிலிருந்த யானையாற் கொண்டுவரப்பட்டு அரசாட்சிக்குரியனாயினனென்றும், இளமையில் நெருப்பாற்சுடப்பட்டு உயிர்பிழைத்தானென்றும், இரும்பிடர்த்தலையாரை அம்மானாக உடையனென்றும் பழமொழி, ௨௧, ௩௨, ௧௦௫ - ம் வெண்பாவாலும் அவற்றின் உரையாலும் விளங்குகின்றன. *முடத்தாமக்கண்ணியார் பாடிய பொருநராற்றுப்படைக்கும், கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலைக்கும் தலைவன் இவனே. பட்டினப்பாலைகேட்டுக் கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்குப் பதினாறுநூறாயிரம்பொன் பரிசளித்தானென்று கலிங்கத்துப்பரணி, இராசபாரம்பரியம் - ௨௨ - ம் செய்யுளால் விளங்குகின்றது. வெண்ணியென்னும் ஊர்ப்புறத்தேயுள்ள போர்க்களத்திற் சேரமான் பெருஞ்சேரலாதனோடு போர்செய்து அவனைவென்றான். இவனோடு அக்களத்தில் ஒரு பாண்டியனையும் இவன் வென்றானென்பது [அடி ௧௪௩ - ௧௪௮] "இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை,யரவாய் வேம்பி னங்குழைத் தெரியலு, மோங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த, விருபெரு வேந்தரு மொருகளத் தவிய, வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட், கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்" என்னும் பொருநராற்றுப்படையால் விளங்குகின்றது. இவன் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அரசாட்சி செய்தானென்பதும், ஒருகாலத்து இமயமலைவரையிற்சென்று இடையிலுள்ள அரசர்களை வென்றானென்பதும் சிலப்பதிகாரத்தாற் றெரிகின்றன. இவன் வீரருட்சிறந்த வீரன். இவன்பெயர் சோழன் கரிகால்வளவனெனவும், கரிகாலனெனவும் வழங்கும். இவனைப்பாடியவர்கள் கருங்குழலாதனார், வெண்ணிக்குயத்தியார். இவருள் இவன் இறந்த பின்பும் இருந்தோர் கருங்குழலாதனார். ௭, ௬௫, ௬௬, ௨௨௪.

சோழன் குராப்பள்ளித்துஞ்சியகிள்ளிவளவன் :—இவன், ஒரு சேரனோடுபகைத்துக் கருவூரையழித்தான். இவனைப்பாடியபுலவர் கோவூர்கிழார். ௩௭௩.

சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன் : — இவன் பாண்டியன் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதியோடு நட்புடையன். அவனைப் பாடியபுலவர் காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனார், உறையூர்மருத்துவன்றாமோதரனார், கோனாட்டு எறிச்சிலூர் மாடலன்மதுரைக்குமரனார். ௫௮, ௬௦, ௧௯௭.

சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் : — இவனது இராசதானி உறையூர்; மிக்ககொடையும் வீரமும் உடையோன். செய்யுள்செய்தலில் வல்லவன். கருவூரை முற்றுகைசெய்து சேரனைவென்றவன். இவனைப்பாடிய புலவர் ஆலத்தூர்கிழார், வெள்ளைக்குடிநாகனார், மாறோக்கத்துநப்பசலையார், ஆவூர்மூலங்கிழார், கோவூர்கிழார், இடைக்காடனார், ஆடுதுறைமாசாத்தனார், ஐயூர்முடவனார், நல்லிறையனார், எருக்காட்டூர்த்தாயங்கண்ணனார். இவருள், இவன் இறந்தபின்புமிருந்து பிரிவாற்றாது வருந்தியவர்கள் மாறோக்கத்துநப்

பசலையார், ஐயூர்முடவனார். இன்னும் இவன் சரித்திரவிரிவை அடியிற்குறித்த எண்ணுள்ளபாடல்களாலுணர்க. ௩௪, ௩௫, ௩௬, ௩௭, ௩௮, ௩௯, ௪0, ௪௧, ௪௨, ௪௬, ௬௯, ௭0, ௧௭௩, ௨௨௬, ௨௨௭, ௨௨௮, ௩௮௬, ௩௯௩, ௩௯௭.

சோழன்செங்கணான் :—இவன் சேரமான் கணைக்காலிரும்பொறையோடு போர் செய்து அவனைப்பிடித்துக்கட்டிச் சிறைப்படுத்தினான். பொய்கையார்பாடிய 'களவழி நாற்பது' என்னும் நூலின்தலைவன் இவனே. இவன்காலத்துப்புலவர் பொய்கையார். ௭௪.

சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி :—இவன் மிக்க வீரமும் கொடையு முடையோன்; இவனைப் பாடிய புலவர் ஊன்பொதிபசுங்குடையார். ௩௭0, ௩௭௮.

சோழன்நல்லுருத்திரன் :—இவன் நற்குண நற்செய்கையையுடையோன்; செய்யுள்செய்தலில் வல்லவன்; இவன் பாடிய பாடலால், சிறந்தநட்புடையோர் பாற்பழகுதலில் மிக்க விருப்பமுடையோனென்பது வெளியாகின்றது. இவன் பெயர் சோழன் நல்லுத்தரனெனவும் வழங்கும். ௧௯0.

சோழன்நலங்கிள்ளி :—இவன் கவிசெய்தலில் வல்லவன்; பாண்டியநாட்டிலிருந்த எழரண்களை அழித்துக் கைக்கொண்டு அவற்றில் தனது புலிக்கொடியை நாட்டினான்; தனது தாயத்தாரோடுபகைத்து அவர்களிருந்த ஆவூரையும் உறையூரையும் முற்றுகைசெய்தான்; மாவளத்தான் என்பவனுக்குத்தமையன்; இவனுக்குச் சேட்சென்னியென்றும் புட்பகையென்றும் தேர்வண்கிள்ளியென்றும் பெயருண்டு; நெடுங்கிள்ளியென்பவனோடு பகைமையுடையோன்; முன்னர், போர்செய்து வெற்றிகொள்ளுதலையே பொருளாகக்கொண்டிருந்த இவன், உறையூர்முதுகண்ணன் சாத்தனார்சொல்லால் பின்பு அதனைத் துறந்து அறஞ்செய்தலையே மேற்கொண்டான்; இவனைப்பாடியபுலவர்கள் உறையூர் முதுகண்ணன்சாத்தனார், கோவூர்கிழார், ஆலத்தூர்கிழார். ௨௭, ௨௮, ௨௯, ௩0, ௩௧, ௩௨, ௩௩, ௪௩, ௪௪, ௪௫, ௪௭, ௬௮, ௭௩, ௭௫, ௨௨௫, ௩௮௨, ௪00.

சோழன் நலங்கிள்ளிதம்பி மாவளத்தான் :—இவனைப்பாடியவர் தாமப்பல்கண்ணனார். ௪௩.

சோழன் நெய்தலங்கானலிளஞ்சேட்சென்னி :—இவனைப்பாடியவர் ஊன்பொதிபசுங்குடையார். ௧0.

சோழன்போர்வைக்கோப் பெருநற்கிள்ளி :—இவன் தித்தனென்னுஞ் சோழனுடையமகன். அவனோடு பகைத்து நாடிழந்து வறுமையுற்றுப் புல்லரிசிக்கூழையுண்டிருந்தான்; முக்காவனாட்டு ஆமூர்மல்லனைப் பொருதுகொன்றான், இவனைப்பாடியவர்கள் சாத்தந்தையார், பெருங்கோழி நாய்கன்மகள் கண்ணனார். ௮0, ௮௧, ௮௨, ௮௩, ௮௪, ௮௫.

சோழன் முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி :— இவன் சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையோடு பகைமையுடையன்; இவனைப்பாடியபுலவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார். ௧௩.

சோழன்வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி :—இவன் சேரமான் குடக்கோநெடுஞ்சேரலாதனோடு போர்செய்திறந்தான். அக்காலத்து இவனைப்பாடியபுலவர் கழாத்தலையார், பரணர்; இவன்பெயர் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியெனவும் வழங்கும். ௬௨, ௬௩, ௩௬௮.

சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி :—இவன்காலத்துப் புலவர் கழாத் தலையார். ௬௬௮.

சோழநாட்டுப் பிடவூர்கிழார்மகன் பெருஞ்சாத்தன் :—இவன் வேளாளரில் உழுவித்துண்போன் ; முடியுடைவேந்தற்கு மகட்கொடைநேர்தற்கு உரியோன் ; இதனைத் தொல்காப்பியம் அகத்திணையியல் ௬௦ - ம் சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையானுணர்க. இவனைப்பாடியபுலவர் மதுரைநக்கீரர். ௩௯௫.

சோழியவேனாதி திருக்குட்டுவன் :—இவன் மிக்ககொடையாளி ; இவனைப்பாடிய புலவர் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார். ௩௯௪.

தந்துமாறன் :—இவனைப்பாடியபுலவர் சங்கவருணரென்னும் நாகரியர். ௩௬௦.

தருமபுத்திரன் :—இவன் ஓரரசன் ; இவனைப்பாடியபுலவர் கோதமனார். ௩௬௬.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் :—இவன் இளமைப்பருவத்தில் தலையாலங்கானத்தில் கோச்சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறையோடு போர்செய்து அவனைச் சிறைப்படுத்திய தன்றிச் சேரன், சோழன் திதியன் எழினி எருமையூரன், இருங்கோவேண்மான் பொருநன் என்பவரையும் வென்றான் ; வேள் எவ்வியின் மிழலைக்கூற்றத்தையும் பழைய வேளிருடைய முத்தூற்றுக்கூற்றத்தையும் கைக்கொண்டான் ; மறக்களவேள்வியும் அறக்களவேள்வியும் செய்தான் ; செய்யுள் செய்தலில் வல்லவன். புலவர்களிடத்து மிக்க அன்புள்ளவன். உத்தமகுணங்கள் பலவுமுடையோன். மாங்குடிமருதனாரியற்றிய மதுரைக்காஞ்சிக்குத் தலைவன் இவனே. இவன்பெருமைகள் விரிப்பிற்பெருகும். இவன்பெயர் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனெனவும், நெடுஞ்செழியனெனவும் வழங்கும். இவனைப்பாடியபுலவர் குடபுலவியனார், கல்லாடனார், மாங்குடிகிழார், இடைக்குன்றூர்கிழார். கஎ, க௮, கக, உ௩, உ௪, உ௫, உ௬, எ௨, எ௬, எஎ, எ௮, எக, ௩எக, ௩எ௨.

தாமான் தோன்றிக்கோன் :—இவன் தோன்றியென்னும் மலைக்குத் தலைவன் ; இவனைப்பாடியபுலவர் ஐயூர்முடவனார். ௩௯௯.

தித்தன் :—இவன் உறையூரிலிருந்த ஒருசோழன் ; சோழன்போர்வைக்கோப்பெருநற்கிள்ளியின்தந்தை. அவனோடு மிக்கபகைமைகொண்டிருந்தான். "நொச்சிவேலித் தித்த னுறந்தை" என அகநானூற்றிற்கூறப்பட்டவன் இவனே. ௮௦, ௩௫௮.

தேர்வண்மலையன் :—இவன் சிறந்தவீரன் ; சோழன் இராசசூயம்வேட்டபெருநற்கிள்ளிக்குத்துணையாய்நின்று சேரமான்மாந்தரஞ்சேரலிரும்பொறையைவென்றான் ; இவனைப்பாடியபுலவர் வடவண்ணக்கன்பெருஞ்சாத்தனார். க௨௫.

தொண்டைமான் :— இவன் காஞ்சிநகரத்திருந்த ஓரரசன் ; அதியமான்நெடுமானஞ்சிகாலமும் இவன்காலமும் ஒன்றே ; இவன்காலத்தவர் ஔவையார். ௯௫.

நம்பிநெடுஞ்செழியன் :—இவன் அரசர்களுக்குரிய எல்லா இன்பங்களையும் அனுபவித்ததன்றி எல்லாநன்மைகளையுமுடையன். இவனைப்பாடியபுலவர் பேரெயின்முறுவலார். உ௩௯.

நள்ளி :—இவன் கடையெழுவள்ளல்களில் ஒருவன். க௫௮.

நன்னன் :— இவன் விச்சிக்கோவின்பரம்பரையில்முன்னுள்ளோன்; பல்குன்றக் கோட்டமுடையவன்; இவன்மகன் நன்னன்மீது இரணியமுட்டத்துப்பெருங் குன்றூர்ப்பெருங்கௌசிகனார் மலைபடுகடாம்பாடினார்; "பெண்கொலைபுரிந்த நன்னன்போல" என்று கூறியிருத்தலால், இவன் பெண்கொலைபுரிந்தவனென்றுதெரிகிறது. ஆயினும் "நறவுமகி ழிருக்கை நன்னன் வேண்மான், வயலை வேலி வியலூ ரன்ன" எனவும், "சூழி யானைச் சுடர்ப்பூ ணன்னன், பாழி யன்ன" எனவும் அகநானூற்றிற் கூறியிருத்தலால் புகழுடையவனென்றே நினைக்கப்படுகிறான். கடுக.

நாஞ்சில்வள்ளுவன் :—இவன் நாஞ்சில்மலையையுடையவன்; சேரனிட்டத்தன்புற்று அவனுக்குப் படைத்துணையாய்நின்றோன்; பரிசிலர்க்குவேண்டியவற்றைக் கொடுப்போன்; இவனைப்பாடியபுலவர் ஒருசிறைப்பெரியனார், மருதன் இள நாகனார், கருவூர்க்கதப்பிள்ளை. கஙஎ, கஙஅ, கஙக, கசం, ஙஅ௦.

நாலைகிழவன் நாகன் :— இவன் பாண்டியனுடையவீரன்; மிக்ககொடையை யுடையவன்; இவனைப்பாடியபுலவர் வடநெடுந்தத்தனார். கஎக.

நெடுங்கிள்ளி :—இவன் சோழர்பரம்பரையைச்சார்ந்தோன்; ஆவூரும் உறையூரும் இவனுடையவை; சோழன்நலங்கிள்ளி இவற்றை முற்றியிருந்தபொழுது கோட்டைவாயிலை அடைத்துக்கொண்டு உள்ளேயிருந்த இவன் பின்பு கோவூர் கிழாரால் தேற்றப்பட்டான்; காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளியெனவும் இவனுக்குப்பெயருண்டு; இவனைப்பாடியபுலவர் கோவூர்கிழார். சச, சடு, சஎ.

நெடுவேளாதன் :—இவனைப்பாடியவர் குன்றூர்கிழார்மகனார். ஙஙஅ.

பரதவர் :—தென்றிசைக்கட்குறுநிலமன்னர்; "தென்பரதவர் மிடல்சாய" என இந்நூலிலும், "தென்பரதவர் போரேறே" என மதுரைக்காஞ்சியிலும் கூறி யிருத்தல்காண்க. ஙஎஅ.

பழையன் :— இவன் பாண்டிநாட்டிலுள்ள மோகூரிலிருந்த குறுநிலமன்னன்; இதனை மதுரைக்காஞ்சியாலுணர்க. இவன் காவல்மரமாக ஒரு வேம்பினை வளர்த்துவந்தானென்று பதிற்றுப்பத்தால் தெரிகிறது.

பாண்டியன் அறிவுடைநம்பி :—இவன் சிறந்த அறிவுடையோன்; இவன்காலத்துப் புலவர் பிசிராந்தையார். கஅச, கஅஅ.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சியநன்மாறன் :—இவன் தமிழ்நாட்டரசர் மூவரிலும் மேம்பட்டுவிளங்கினோன். இவனைப்பாடியபுலவர் மதுரை மருத னிளநாகனார், மதுரைக்கணக்காயனார்மகனார் நக்கீரனார், காவிரிப்பூம்பட்டி னத்துக்காரிக்கண்ணனார், ஆவூர்மூலங்கிழார், வடமவண்ணக்கன் பெரியசாத்த னார். டுடு, டுசு, டுஎ, ககக, ககஅ.

பாண்டியன் கருங்கையொள்வாட்பெரும்பெயர்வழுதி :— இவன் மிக்கவீரமுங் கொடையுமுடையோன். இவனைப்பாடியபுலவர் இரும்பிடர்த்தலையார். ங.

பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதி :—இவனைப்பாடியவர் ஔவை யார். ஙகஎ.

பாண்டியன் கீரஞ்சாத்தன் :—இவன் வந்தோர்க்கு அன்புடன் உணவளிப்போன்; சிறந்தவீரன்; இவன்பெயர் பாண்டிக்குதிரைச்சாக்கையவனெனவும் கையெ

மூத்துப்பிரதிகளிற் காணப்படுகின்றது. இவனைப்பாடியவர் ஆவூர்மூலங்கிழார். கஎஅ.

பாண்டியன் கூடகாரத்துத்துஞ்சியமாறன்வழுதி :—இவன் மிக்கவீரச்செல்வமுடையோன்; வடநாட்டரசரைவென்று அடிப்படுத்தினோன். இவனைப்பாடிய புலவர் ஐயூர்முடவனார், மருதனிளநாகனார். ருக, ருஉ.

பாண்டியன் சித்திரமாடத்துத்துஞ்சியநன்மாறன்:—இவன் தன்னைச்சேர்ந்தோர்க்கு மிக்கநன்மையும் பகைவர்க்கு மிக்கதுன்பமும்புரிபவன்; இவனைப்பாடியவர் மதுரைக்கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார். ருக.

பாண்டியன் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் : — இவன்வரலாற்றைத் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் என்பதிற் காண்க. கஎ, கஅ, கக, உரு, உசு, உ௬, உகூ, எஉ, எரு, எஎ, எஅ, எகூ, ருஎக, ருஎஉ.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி :—இவன் அனேகயாகங்களைச் செய்தவன். பல பகைவர்களையும் அறப்போரால்வென்று மறக்களவேள்வி புரிந்தோன்; பெரியவள்ளல்; சிவபெருமானிடத்து மிக்க பத்தியுடையோன்; இவனைப்பாடியபுலவர் காரிகிழார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தனார். சு, கூ, கஉ, க௫, சுசு.

பாண்டியன் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி :—இவன் சோழன்குராப்பள்ளித்துஞ்சிய பெருமாவளவனோடு நட்புடையன்; இவன்காலத்துப்புலவர் காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனார். ருஅ.

பாரி :—இவன், கடையெழுவள்ளலில் ஒருவன்; முந்நூறு ஊரையுடைய பறம்பு நாட்டிற்கும் பறம்புமலைக்கும் தலைவன்; முல்லைக்கொடிக்குத் தேர்கொடுத்தோன்; இவற்றை [அடி - அகூ - கூக] "சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய, பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற், பறம்பிற் கோமான் பாரியும்" என்னும் சிறுபாணாற்றுப்படையானுணர்க. தன்னுடைய முந்நூறு ஊரையும், மற்றைப்பொருள்கள் எல்லாவற்றையும் பரிசிலர்க்குக்கொடுத்தோன். மிக்க பராக்கிரமமுடையவன். இவனை வெல்லக்கருதிய தமிழ்நாட்டுவேந்தர் மூவரும் போரில் வெல்லவொண்ணாமையின் வஞ்சித்துக்கொன்றனர். இவன் இறந்தபின்பு இவன்நண்பராகிய கபிலர் சென்று இவன்மகளிரை மணஞ்செய்துகொள்ளும்படி விச்சிக்கோனையும், இருங்கோவேளையும் வேண்டி, அவர் மறுப்ப, அப்பால் அம்மகளிரைப் பார்ப்பார்க்கு மணம்புணர்வித்தனர். இவனைப்பற்றிப் பலவாறாக அவ்வச்சமயங்களில் கபிலர்பாடியசெய்யுட்களை ஊன்றிப்படிப்பின் யாரும் மனமுருகாதிரார். சைவசமயாசாரியருள் ஒருவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்திநாயனார் "கொடுக்கி லாதானைப் பாரி யேயென்று கூறினுங் கொடுப் பாரிலை" என்று அருளிச்செய்திருத்தலின் இவன்காலம் அவர்காலத்துக்கு முந்தியதாகல்வேண்டும். இவன்மலைச்சுனை, புலவர்பலராலும்புகழப்பட்டுள்ளது. இவன்பெயர் வேள்பாரி எனவும் வழங்கும். இவனைப்பாடியவர் கபிலர், இவன்மகளிர் முதலியோர். இவன் இறந்தபின்பும் இருந்தபுலவர் புறத்திணைநன்னாகனார். க0௫, க0சு, க0எ, க0அ, க0கூ, கக0, ககக, கக௨, ககரு, ககச, கக௫, ககசு, ககஎ, ககஅ, கககூ, க௨0, க௫அ, கஎசு, ௨00, ௨0க, ௨0௨, ௨கசு.

பிட்டங்கொற்றன் :—இவன், குதிரைமலைத்தலைவன். சேரனுடைய சேனாதிபதி. மிக்க கொடையாளிகளுள் ஒருவன். இவன்பெயர் பிட்டனெனவும் வழங்கும். இவனைப்பாடியபுலவர் கருவூர் கந்தப்பிள்ளைசாத்தனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், வடமவண்ணக்கன் தாமோதரனார். ௧௬௮, ௧௬௯, ௧௭௦, ௧௭௧, ௧௭௨.

பேகன் :—இவன் கடையெழுவள்ளலில் ஒருவன். இவன் வரலாற்றை வையாவிக் கோப்பெரும்பேகனென்பதிற்காண்க. ௧௫௮.

பொறையாற்றுகிழான் ;—இவன் பொறையாறென்னு மூருக்குரியவன். மிக்க கொடையையுடையோன். இவனைப்பாடியவர் கல்லாடனார். ௩௯௧.

மல்லிகிழான்காரியாதி :—இவன் குடநாட்டையுடையவன். வருவோர்க்கு மிக்க அன்புடன்கொடுக்கும் கொடையையுடையான். இவனைப்பாடியவர் ஆவூர் மூலங்கிழார். ௧௭௭.

மலையமான்திருமுடிக்காரி :—இவன், பெண்ணையாற்றங்கரையின்கணுள்ள மலாடென்றுவழங்கும் மலையமானாட்டின் அரசன். கோவலூர் இவனது இராசதானி. தமிழ்நாட்டரசர் மூவர்க்கும் ஒவ்வொருசமயத்து யுத்தத்திலுதவிபுரிந்தவன். புலவர்க்குப் பரமோபகாரி ; முள்ளூர்மலையையுடையான் ; அந்தணர்க்கு நிலங்கொடுத்தோன் ; கடையெழுவள்ளலிலொருவனென்று கூறப்படும் மலையனிவனே. இவன்குதிரைக்குக் காரியென்று பெயர். இவன்புகழ்முதலியன அடியிற்குறித்த எண்ணமைந்த பாடல்களால் இனிது புலப்படும். கடையெழுவள்ளலிலொருவனாகிய ஓரியென்பவனோடு போர்செய்தவன் ; இதனை [அடி. ௧௧௦-௧௧௧] "காரிக் குதிரைக் காரியொடு மலைந்த, வோரிக் குதிரை யோரியும்" என்னும் சிறுபாணாற்றுப்படையாலுணர்க. இன்னும் "துஞ்சா முழவிற் கோவற் கோமான், நெடுந்தேர்க் காரி கொடுங்கா முன்றுறைப். பெண்ணையம் பேர்யாற்று நுண்ணறல் கடுக்கு, நெறியிருங் கதுப்பி னின்பே தைக்கு" எனவும், "முரண்கொடுப்பிற் செவ்வேன் மலையன், முள்ளூர்க்கானம்" எனவும், "ஓடா மலையன் வேலிற், கடிதின் மின்னுமிக் கார்" எனவும், "ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப், பலருடன் கழித்தவாண் மலையன தொருவேற், கோடியாங்கு" எனவும் அகநானூறு முதலியவற்றிற் சான்றோர் இவனைப்பாராட்டியிருத்தல்காண்க. இவன்பெயர் மலையமானெனவும், காரியெனவும், மலையனெனவும் வழங்கும். இவனைப்பாடியபுலவர் கபிலர், மாறோக்கத்து நப்பசலையார். ௧௨௧, ௧௨௨, ௧௨௩, ௧௨௪, ௧௨௫, ௧௫௮.

மலையமான்சோழியவேனாதி திருக்கண்ணன் :—இவன் மலையமானாட்டுள்ள கோவலூர்க்கரசன் ; முள்ளூர் மலையையுடையவன். சோழராசனுக்குப் பேருதவி புரிந்தோன். இரவலர்க்கு வைபபுத்திரவியம்போன்றவன். இவன்பெயர் மலையமான் சோழியவேனாதி திருக்கிள்ளியெனவும் வழங்கும். இவனைப்பாடிய புலவர் மாறோக்கத்து நப்பசலையார். ௧௭௪.

மலையமான் மக்கள் :—இவர்கள், தம்குலப்பகைவனாகிய சோழன் குளமுற்றத்துத் துஞ்சியகிள்ளிவளவன் தம்மை யானைக்கு இடத்தொடங்கியபொழுது கோவூர்கிழாரால் பாடி உய்விக்கப்பட்டார்கள். ௪௬.

மாங்குடிமருதனார் :—இவர் பத்துப்பாட்டுள் மதுரைக்காஞ்சி ஆசிரியர்; பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் நன்குமதிக்கப் பாடப்பட்டார். எ௨.

மாவளத்தான் :—இவன் சோழன்நலங்கிள்ளி தம்பி; தாமப்பல்கண்ணனாரோடு வட்டாடியபொழுது, அவர்கைகரப்பத் தான் வெகுண்டு வட்டுக்கொண்டெறிந்து, அவர் 'நீ சோழன்மகனல்லை' என்றுசொல்ல, நாணமுற்று, பின்பு அவராற்புகழ்ந்து பாடப்பெற்றான். இவனைப்பாடியவர் மேற்கூறிய தாமப்பல்கண்ணனார். சங.

முக்காவல்நாட்டு ஆமூர்மல்லன் :—இவன் மற்போரிற் சிறந்தவன்; உறையூரிலிருந்த சோழனாகிய தித்தன்மகன்; சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளியாற் பொருது கொல்லப்பட்டவன். இவன் காலத்தவர் சாத்தந்தையார். அ௦, அக, அ௨.

மூவன் :—இவன் சிற்றரசன். விரைந்து பரிசில்கொடாமையால் பெருந்தலைச்சாத்தனாரால் இகழ்ந்து பாடப்பட்டான். இவன்காலத்தவர் அவரே. ௨௦௯.

யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை :—இவன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாற் கட்டுண்டான்; இவனைப்பாடியவர் குறுங்கோழியூர்கிழார். கஎ, ௨௦, ௨௨.

வடிம்பலம்பநின்றபாண்டியன் :—இவன் கடற்றெய்வத்திற்குப் பெரியதோர் விழவுசெய்தான்; பஃறுளியாற்றை யுண்டாக்கினான். இன்னும் இவன்பெருமையை மதுரைக்காஞ்சியாலும், சிலப்பதிகாரத்தாலுமுணர்க. க.

வல்லார்கிழான்பண்ணன் :—இவன் வல்லாரென்னுமூரிலுள்ளவன்; பண்ணனென்னு மியற்பெயரையுடையான்; சிற்றரசன். இவனைப்பாடியபுலவர் சோணாட்டு முகையலூர்ச்சிறுகருந்தும்பியார். கஅக.

வல்விலோரி :—இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன்; கொல்லிமலைக்கும் அதைச்சார்ந்த நாட்டிற்கும் தலைவன்; "காரிக் குதிரைக் காரியொடு மலைந்த, ஓரிக் குதிரை யோரியும்" எனச்சிறுபாணாற்றுப்படையிலும் இவனைப்புகழ்ந்து கூறினர். இவன்பெயர் ஆதனோரியெனவும் வழங்கும். இவனைப்பாடியபுலவர் வன்பரணர், கழைதின்யானையார். கரு௨, கருங, கருஅ, ௨௦ச.

வாட்டாற்றெழினியாதன் :—இவன் சிறந்தகொடையாளி. வாட்டாறு என்னுமூரிலுள்ளவன். இவனைப்பாடியபுலவர் மாங்குடிகிழார். ௩௯௬.

விச்சிக்கோன் :—இவன் சிற்றரசருளொருவன். பாரிமகளிரை மணஞ்செய்துகொள்ளும்படி கபிலரால் வேண்டிப்பாடப்பெற்றான். இவனைப்பாடியவர் மேற்கூறிய கபிலரே. ௨௦௦.

வெளிமான் :—இவன் சிற்றரசன்; மிக்ககொடையாளி; இவன்காலத்தவரும், இவனிறந்தபின்பு பிரிவாற்றாதவருங்கிப்பாடியவரும் பெருஞ்சித்திரனார். கசுஉ, ௨௦எ, ௨௩எ, ௨௩அ.

வேங்கைமார்பன் :—இவன் கானப்பேரெயிலின்தலைவன்; பாண்டியன் உக்கிரப்பெருவழுதியால் வெல்லப்பட்டான். இவன்காலத்துப்புலவர் ஐயூர்மூலங்கிழார். ௨க.

வேள் எவ்வி :—இவன், *வேளாளருள் உழுவித்துண்போர்வகையினன். மிழலைக் கூற்றத்துத்தலைவன். மிகுந்தகொடையாளி. தலையாலங்கானத்துச்செருவென்றபாண்டியன் நெடுஞ்செழியனால் வெல்லப்பட்டோன். பாரி என்னும் வள்ளலை இவன்குலத்தோனென்பர். "ஓம்பா வீகை மாவே ளெவ்வி", "எவ்வி தொல்குடி", "போரடு தானை யெவ்வி" என இப்புறநானூற்றிலும், "எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர், பூவில் வறுந்தலை போல" என வேறுநூலிலும் சான்றோர் இவனைப்புகழ்ந்து கூறியிருத்தல் காண்க. இவனைப்பாடியவர்கள் மாங்குடிகிழார், கபிலர், வெள்ளெருக்கிலையார். இவருள், இவன் இறந்தபின் வருந்திப்புலம்பியவர் வெள்ளெருக்கிலையார். ௨௪, ௨௦௨, ௨௩௩, ௨௩௪.

வேள்பாரி :—இவன் கடையெழுவள்ளல்களி லொருவன்; இவன்வரலாற்றை 'பாரி' என்பதிற்காண்க. ௧௦௫, ௧௨௦, ௨௩௬.

வையாவிக்கோப்பெரும்பேகன் :—இவன், கடையெழுவள்ளலில் ஒருவன். மலைநாட்டையுடையவன். மயிற்பறவைக்குப் போர்வைகொடுத்தோன். இவனது ஊர் நல்லூரென்பது. ஆவியர்குடியிற் பிறந்தவன். இதனை இவன்பெயராலும், சிறுபாணாற்றுப்படையாலுமுணர்க. தனக்குரியவளாகிய கண்ணகியென்பவளைத்துறந்ததனால், 'இவனை யங்கீகரித்துக்கொள்க' என்று கபிலர்முதலிய புலவர்களால் இரந்துபாடப்பெற்றான். 'கண்ணகிகாரணமாக வையாவிக்கோப்பெரும்பேகனைப் பரணர்பாடிய கைக்கிளைவகைப்பாடாண்பாட்டு' என்பது தொல்காப்பியம், புறத்திணையியல் ௩௫ - ம் சூத்திரம் நச்சினார்க்கினியருரை. (அடி - அ௫ - அஎ), "கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய, வருந்திற லணங்கி னாவியர் பெருமகன், பெருங்க லடன் பேகனும்" என்றார் சிறுபாணாற்றுப்படையிலும். இவன்பெயர் பேகனெனவும் வழங்கும். இவனைப் பாடியபுலவர்கள், பரணர், கபிலர், வன்பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார். ௧௪௧, ௧௪௨, ௧௪௩, ௧௪௪, ௧௪௫, ௧௪௬, ௧௪௭, ௧௫௮.

---

* வேளாளர் உழுவித்துண்போரும், உழுதுண்போருமென இருவகையினர். அவருள், உழுவித்துண்போர் மண்டிலமாக்களும், தண்டத்தலைவருமாய்ச் சோழநாட்டுப்பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்லமும், கிழாருமுதலியபதியிற்றோன்றி வேளெனவும், அரசெனவும் உரிமையெய்தினோரும், பாண்டியநாட்டுக் காவிதிப்பட்டமெய்தினோரும், குறுமுடிக்குடிப்பிறந்தோர்முதலியோருமாய் முடியுடைவேந்தர்க்கு மகட்கொடைக்குரிய வேளாளராம் என்பது, தொல்காப்பிய அகத்திணையியல் ௩௦ - ம் சூத்திரம் நச்சினார்க்கினியருரை.

# பாடப்பட்டோருடைய நாமபேதங்கள்.

அதியமான் தகடூர் பொருதுவீழ்ந்த எழினி.
அதியமான் தகடூர் எறிந்துவீழ்ந்த எழினி.

அதியமான் நெடுமானஞ்சி.
அதிகமான் நெடுமானஞ்சி.
நெடுமானஞ்சி.
அஞ்சி.

அதியமான் நெடுமானஞ்சிமகன் பொகுட்டெழினி.
அதியமான்மகன் பொகுட்டெழினி.

ஆய்.
ஆய் அண்டிரன்.
அண்டிரன்.

இளவிச்சிக்கோ.
இளவெச்சிரக்கோ.

ஒல்லையூர்கிழான்மகன் பெருஞ்சாத்தன்.
சாத்தன்.

ஓய்மான் நல்லியக்கோடன்.
எறுமாநாட்டு நல்லியக்கோடன்.

கண்டீரக்கோப்பெருநள்ளி.
கண்டிறக்கோப்பெருநள்ளி.
நள்ளி.

காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி.
நெடுங்கிள்ளி.

கானப்பேரெயில்கடந்த உக்கிரப்பெருவழுதி.
பாண்டியன் உக்கிரப்பெருவழுதி.
உக்கிரப்பெருவழுதி.
கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதி.

கோச்சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை.
சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை.
யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை.
சேரன் மாந்தரஞ்சேரலிரும்பொறை.

சிறுகுடிகிழான்பண்ணன்.
பண்ணன்.

சேரமான் கடுங்கோவாழியாதன்.
சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதன்.
சேரமான் சிக்கற்பள்ளித்துஞ்சிய செல்வக்கடுங்கோவாழியாதன்.

சேரமான் குடக்கோச்சேரலிரும்பொறை.
சேரமான் குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை.

சேரமான் பாமுளூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி.
சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி.

சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ.
பாலைபாடிய பெருங்கடுங்கோ.

சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னி.
இளையோன்.

சோழன் கரிகாற்பெருவளத்தான்.
சோழன் கரிகால்வளவன்.
கரிகாலன்.

சோழன் நல்லுருத்திரன்.
சோழன் நல்லுத்தரன்.

சோழன் நலங்கிள்ளி.
சேட்சென்னி.
புட்பகை.
தேர்வண்கிள்ளி.

சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி.
சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி.

தலையாலங்கானத்துச் செருவென்றநெடுஞ்செழியன்.
பாண்டியன் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன்.
நெடுஞ்செழியன்.

நெடுங்கிள்ளி.
காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி.

பாண்டியன் கீரஞ்சாத்தன்.
பாண்டிக்குதிரைச் சாக்கையவன்.

பாரி.
வேள்பாரி.

பிட்டங்கொற்றன்.
பிட்டன்.

மலையமான் திருமுடிக்காரி.
மலையமான்.
காரி.
மலையன்.

மலையமான் சோழியவேனாதிதிருக்கண்ணன்.
மலையமான் சோழியவேனாதிதிருக்கிள்ளி.

வல்விலோரி.
ஆதனோரி.

வையாவிக்கோப் பெரும்பேகன்.
பேகன்.

புறநானூற்றின்

# விஷயசூசிகை.

(எண்கள் பாட்டின் எண்.)

## அ.

அகநாடு, ௨௮.
அகல், ௨௬௯.
அகழி, ௧௪, ௧௮, ௨௧, ௩௭, ௩௫௦.
அகழிதோண்டுதல், ௧௪.
அகிற்புகை, ௩௩௭.
அகுதை (=ஒருவன்), ௨௩௩, ௩௪௭.
அங்குசம், ௧௪.
அச்சுமரம், ௯௦, ௧௦௨, ௨௫௬.
அஞ்சி, ௯௧, ௯௨, ௧௦௩, ௨௦௬, ௩௧௦, ௩௧௫.
அடக்கமுடைமை, ௩௦.
அடிசில், ௧௬௦
அடியுறை (=ஒருவகைவணக்கமொழி), ௬௭, ௧௯௮.
அடுப்பு, ௧௬௪, ௩௭௨.
அண்டிரன் (= ஆயென்னும்வள்ளல்), ௧௩௧, ௨௪௧.
அண்ணுத்தல், ௫௪.
அணில், ௨௪௬, ௩௦௭.
அதரிதிரித்தல், ௩௭௦, ௩௭௧, ௩௭௩.
அதியமான்நெடுமானஞ்சி ஏழரசரோடு போர்செய்தது, ௯௯.
அதியமான்நெடுமானஞ்சிபனைமாலையையுடையனென்பதும், சேரருடைய உறவினனென்பதும், ௯௯.
அதியமான்நெடுமானஞ்சியின் முன்னோர்க்கு வரங்கொடுத்தற்குத் தேவர்கள் வந்திருந்ததோர்சோலை, ௯௯.
அதியமான்நெடுமானஞ்சியின்முன்னோர் கரும்பை இவ்வுலகிற்கொணர்ந்தது, ௯௯, ௩௯௨.
அதியர், ௯௧, ௩௯௨.
அதிரல், ௨௬௯.
அந்தணர், ௧, ௨, ௬, ௯, ௨௬, ௩௪, ௯௩, ௧௨௨, ௨௨௪, ௩௬௧, ௩௬௨, ௩௬௭.
அந்தணர்க்கு அரசன் நாடுகொடுத்தல், ௧௨௨.
அந்தணருடைய அக்கினிகாரியம், ௧௨௨.
அந்தணருடைய ஆசி, ௬.
அந்தியக்கிரியை, ௩௬௩.
அந்துவஞ்சாத்தன், ௭௧.
அம்பர், ௩௮௫.
அம்பலம், ௫௨.
அம்புறாத்தூணி, ௯௮.
அம்பு, ௯, ௧௩, ௧௯, ௨௩, ௪௩; ௧௫௨, ௧௬௮, ௨௮௭.
அம்புத்தொடை, ௧௫௨.
அம்புவிகாட்டல், ௧௬௦.
அமிர்தம், ௧௮௨.
அயிரைமீன், ௬௭.
அர்த்தநூல், ௧௬௬.
அரசர் (=அரசன்), ௧௮, ௫௪, ௧௧௧, ௧௧௯, ௧௨௭, ௧௫௪, ௧௫௬, ௧௭௭, ௧௮௬, ௧௮௯, ௨௬௫.
அரசர்அடி, ௭.
அரசர் அறிவு அன்பு கண்ணோட்டமுடையராதல்வேண்டுமென்பது, ௨௦.
அரசர் இம்மையிற் செய்யவேண்டியவை, ௨௩௯.
அரசர் இராப்பொழுது போக்குதல், ௩௬௬.
அரசர் இறைகொள்ளுமுறை, ௧௮௪.
அரசர் இன்சொல்லும் எளியசெவ்வியும் உடையராதல்வேண்டுமென்றல், ௩௫, ௪௦.
அரசர் உலகத்தைவலமாகவந்து பகைவரைவெல்லுதல், ௩௧, ௨௨௫.
அரசர் ஒருபக்கஞ்சார்தலாகாதென்பது, ௬.
அரசர்களில் யுத்தத்திலிறவாமல் நோயாலிறந்தவர்கள் சுவர்க்கம்புகுதற்கு அவர்களுடம்பைத் தருப்பையிற்கிடத்தி வாளாற்பிளத்தல், ௯௩.

அரசர்களினியல்பு, ஙரு, ருரு, எச.
அரசர்களுடைய குடைகள் செல்லுமுறை, ஙக.
அரசர்குதிரை, உகூ.
அரசரீகை, எ.
அரசர்கைச்செயல், கச.
அரசர்கோயில், கஎஎ.
அரசர் சிவாலயத்தை வலம்வருகையில் அவர்குடை தாழவேண்டுமென்பது, சா.
அரசர் சினந்தணியவேண்டுங்காலம், சா.
அரசர்செல்வம், ககஎ.
அரசர் தம்வலியை அடக்கிக்கொள்ளுதல், ஙo.
அரசர் தமக்குரிய அடையாளமாலையுடனே புறத்திணைமாலையையுஞ்சூடுதல், உஉ.
அரசர்தலைவணங்குமிடம், சா.
அரசர் துறந்து தவஞ்செய்தல், உகஎ, உருக, உருஉ.
அரசர் நாடுகாத்தல், ரு.
அரசர் நெறியறிந்து இறைகொள்ளவேண்டுமென்றல், கஅச.
அரசர் பகற்பொழுதுபோக்கல், சாகூ, ஙசாரு.
அரசர் பகைவரூரைக் கொளுத்தலும் அவர்காவன்மரத்தை வெட்டுதலும், எ, உங.
அரசர் பகைவர்பிழையைப் பொறுத்தலும் அவரையழித்தற்கு உசாவுதலும், உ.
அரசர் பாணர்க்குப் பொற்றாமரைகொடுத்தல், சாகூ.
அரசர் பாவிகளோடு சேரலாகாதென்றல், ரு.
அரசர் பொதுச்சொற்பொருமை, அ.
அரசர் போரிற்சபதஞ்செய்தல், உரு, எக, எஉ, எங.
அரசர்மார்பு, ங, எ, உக.
அரசர் யாகஞ்செய்தல், உசா.
அரசர்வலி, உ, எ.
அரசர்வில், எ.
அரசர்வீரத்தைப் பாடினியாடுதல், கக.
அரசர்வீரம், ஙக.
அரசரருள், உ.
அரசருடைய அக்கினிகாரியம், உருக.
அரசருடையஅரண்மனைவாயிலிற்பள்ளியெழுச்சிக்காலத்திற் சங்கமூதப்படுதல், உஉரு.
அரசருடையகாலையோலக்கம், உகூ.
அரசாட்சி, சா, எங, கஅரு.
அரசுரிமை, எரு.
அரண், கஎ, உo, ஙஎ.
அரம், ஙசா.
அரிசி, கசo, ஙஎக, ஙகூ.
அரிவாள், ஙசஅ.
அருஞ்சுரம், உங.
அருந்ததி, கஉஉ.
அருவந்தை, ஙஅரு.
அருவி, கoரு, ககரு, கஉச, கஉசா, கஙஎ, கசங, கசஎ, கசஅ, கருo, கருஉ, கருச, கருஅ, கசாஅ, ககூஅ, உஉகூ, உருக, உருஉ, ஙசாக, ஙகூஅ.
அரையமென்னும்நகரம் கழாஅத்தலையாரால் அழிந்ததற்குக்காரணம், உoஉ.
அல்லிப்பாவை, ஙங.
அல்லியக்கூத்து, ஙங.
அல்லியரிசியுணவு, உருo.
அலை, உ.
அவரை, கஉo, உகரு, ஙஙரு, ஙஎரு.
அவலை வாயிலடக்கிக்கொண்டு மடுவிற்பாய்தல், சாங.
அவிழ், கருக, கசாo.
அழுகை, கஎச.
அளவர், ஙo.
அறச்சபை, எக.
அறஞ்செய்யவேண்டுமென்றல், உஅ.
அறப்போர், கூ, சாஉ.
அறம்பொருளின்பம், உஅ, ஙக.
அறிவில்லார், கoசா.
அறிவுடையோன் இளையனாயினும் அரசன் அவன்வழிச் செல்வானென்பது, கஅங.
அறிவுடையோன்வறுமை பயன்படுதலும் அறிவில்லாதோன்செல்வம் பயன்படாமையும், ககஎ.
அறிவையுடைய அரசனாலுண்டாகும் நன்மையும் அஃதில்லாதோனால் உண்டாகும் தீமையும், கஅச.
அன்பில்லாதபார்வை, உகo.
அன்னச்சேவல், சாஎ, கஉஅ.
அன்னம் மீனை உண்ணுதல், சாஎ.
அனுடநாள், உஉகூ.

## ஆ.

ஆகாயத்தின் மேற்பாகத்திற் காற்றுச் செல்லாதென்பது, ஙரு.
ஆகாயம், உ, ஙo, ஙரு, உஉஅ, உஎo.

ஆகுதிசெய்தல், ௯௯.
ஆகுளி (=பறைவிசேடம்), ௩௭௧.
ஆசினிமரம், ௧௫௮.
ஆஞ்ஞாசக்கிரம், ௯௯, ௨௭௦.
ஆட்டிறைச்சி, ௨௬௧.
ஆட்டினம், ௫௪.
ஆட்டுக்கிடாய், ௩௩, ௧௧௩, ௨௬௨, ௩௬௪.
ஆடு, ௫௪, ௧௯௭.
ஆடை, ௩௮௩.
ஆண்புலி, ௫௨.
ஆண்மை, ௫௫, ௧௫௪.
ஆண்யானை, ௪௦.
ஆத்திமரம், ௪௫, ௩௩௮.
ஆத்திமாலை, ௪௩, ௪௫, ௮௧, ௮௨.
ஆதனழிசி (=ஒருவன்), ௭௧.
ஆதனுங்கன், ௧௭௫, ௩௮௯.
ஆந்தை (=ஒருவன்), ௭௧.
ஆபரணம், ௬௭, ௬௯, ௮௮, ௧௦௫, ௧௩௦, ௧௩௮, ௧௬௦, ௧௭௧, ௨௦௦, ௨௧௮, ௨௨௨.
ஆம்பல், ௧௬, ௬௧, ௭௦, ௨௦௯, ௩௮௩.
ஆம்பல்மலரால் தழைசெய்தல், ௨௪௮.
ஆம்பலிலை, ௨௬[illegible].
ஆம்பலிலையால் மதுவையுண்டல், ௨௦௯.
ஆம்பலினிடத்துண்டாகும் புல்லரிசியைக் கைம்மைநோன்பினருண்டல், ௨௪௮.
ஆம்பற்கிழங்கு, ௧௭௬.
ஆம்பற்றண்டாற் செய்த வளை, ௬௩, ௩௫௨.
ஆமூர், ௮௦.
ஆமூர்மல்லன், ௮௦.
ஆமை, ௪௨, ௭௦, ௨௪௯, ௩௭௯, ௩௮௭.
ஆமைமுட்டை, ௧௭௬.
ஆமையிறைச்சி, ௨௧௨.
ஆய் (=ஒருவள்ளல்), ௧௨௭, ௧௨௮, ௧௩௨, ௧௩௩, ௧௩௪, ௧௩௫, ௧௩௬, ௧௫௮, ௨௪௦, ௩௭௪, ௩௭௫.
ஆய் இரவலர்க்கு யானைகொடுத்தல், ௧௨௯.
ஆய்குடி, ௧௩௨.
ஆய் சுரபுன்னைப்பூமாலையையுடையவனென்பது, ௧௩௧.
ஆயர்மகன், ௨௧௫.
ஆயுதக்கட்டில், ௪௧.
ஆயுதக்காம்பு, ௯௫.
ஆயுதக்கொட்டில், ௯௫.
ஆயுதங்களுக்கு நெய்பூசிப் பீலியணிந்து மாலைசூட்டுதல், ௯௫.
ஆயுதப்புண்வடுவுற்ற உடம்பு, ௧௮௦.
ஆயுதம், ௪௧, ௯௫.
ஆரக்கால், ௨௫௬.
ஆரம், ௧௫௨, ௩௬௨, ௩௬௮, ௩௭௨.
ஆரல்மீன், ௨௧௨, ௨௪௯.
ஆரல்மீன்குட்டிறைச்சி, ௨௧௨.
ஆரல்மீன்முட்டை, ௩௪௨.
ஆலங்கானம், ௨௩.
ஆலத்தூர், ௩௬.
ஆலம்பழம், ௧௯௯.
ஆலம்பொந்து, ௩௬௪.
ஆலம்வீழ், ௫௮.
ஆலமரத்தில்தெய்வமிருத்தல், ௧௯௯.
ஆலமரம், ௫௮, ௨௫௪, ௩௬௪, ௩௭௦.
ஆலிலையின்கண் திருமால்மேவுதல், ௧௯௮.
ஆற்றிடைக்குறை, ௨௧௯.
ஆற்றின்கூடல், ௨௭௩.
ஆற்றுநீரை மலைகுறுக்கேதடுத்துநிற்றல், ௧௬௯.
ஆற்றுமணலினும் ஆயுள் சிறக்கவென்றல், ௯, ௪௩.
ஆறங்கம், ௧௬௬.
ஆறு, ௪௨, ௧௬௯, ௧௯௨, ௨௭௩.
ஆன்பொருந்தம் (=ஒருநதி), ௧௧, ௩௬, ௩௮௭.
ஆனேறு, ௧.

## இ.

இசைகேட்போர் தலையசைத்துக்கேட்டல், ௧௪௫.
இட்டியவாயில், ௧௭௭.
இடபக்கொடி, ௧, ௫௬.
இடி, ௧௭, ௩௭, ௫௮, ௮௧, ௧௨௬, ௧௬௦, ௨௧௧, ௩௬௫.
இடிவெள்ளியதென்பது, ௫௮.
இடைகழி, ௧௭௫.
இடைச்சி, ௩௩.
இடையர் வேனிலில் வேங்கைமரத்தின் கொம்பைக்கழித்தல், ௨௨௪.
இடையன், ௫௪, ௨௨௪, ௨௬௫, ௩௨௪, ௩௩௧, ௩௩௯, ௩௯௦.
இந்திரவில், ௨௦.
இந்திரன்கோயில், ௨௪௧.
இப்பி, ௫௩.
இப்பிறப்பு, ௨௩௬.
இம்மை மறுமை, ௨௧௪.
இம்மையிற்செய்தவினைப்பயன் மறுமையில் அநுபவிக்கப்படுமென்றல், ௧௭௪.

இம்மையின்பம், ௧௯௧.
இமயம், ௨, ௬, ௩௪, ௩௯, ௬௭, ௧௩௨, ௧௬௬, ௨௧௪, ௩௬௯.
இயக்கன் (=ஒருவன்), ௭௧.
இரப்போர்க்கு ஆபரணங்களைக்கொடுத்தல், ௫௬.
இரப்போரியல்பு, ௪௭.
இரவலர், ௪௮, ௭௦, ௧௧௯, ௧௫௬, ௧௬௨.
இரவலர்ஊர்ப்பொதுவில்தங்கல், ௧௨௮.
இராவணனாற் கொண்டுபோகப்பட்டபொழுது சீதை ஆபரணங்களைக்கழற்றிப்போகட்டது, ௩௭௮.
இருங்கோவேள், ௨௦௧, ௨௦௨.
இருசுடர், ௬௫.
இருப்பைப்பூ, ௩௮௪.
இரும்பு, ௧௭௦.
இரும்புண்டநீர், ௨௧.
இருமருந்து, ௭௦.
இருமல், ௨௪௩.
இருவாட்சி, ௩௪௨.
இருவினை, ௨௧௪.
இருவினைப்பயன் இல்லையென்பாரோடு சேரலாகாதென்பது, ௨௯.
இருள், ௯௦, ௧௦௨, ௧௭௪.
இலக்கம் (=லக்ஷியம்), ௪.
இலங்கை, ௩௭௯.
இலந்தைமரம், ௩௨௫.
இலந்தைமன்றம், ௩௪.
இலைக்கறி, ௧௪௦, ௧௫௯, ௧௯௭.
இலைக்கறியில் அரிசிமாவைத் தூவுதல், ௧௪௦.
இழிசினன், ௨௮௭, ௨௮௯.
இளங்களிறு, ௧௦௩.
இளம்பல்கோசர், ௧௬௯.
இளமரச்சோலை, ௨௩௯.
இளமை, ௪௬.
இளையபெண், ௩௪௧.
இறந்தபின்பு செய்யுங்கிரியை, ௩௬௦.
இறந்தவருடம்பைத் தருப்பையிற்கிடத்தல், ௯௩.
இறந்தவீரன்பெயரை நடுகல்லில் எழுதுவித்து அதிற்பீலியைச்சூட்டி அவ்விடத்துப் புடைவையாற் சிறியபந்தர் போடுவித்தல், ௨௬௦.
இறந்தோர்க்குப் பலிகொடுக்குமிடம், ௨௪௯.
இறந்தோருடம்பைச் சுடுதல், ௨௩௧, ௨௪௦.
இறந்தோனுக்கு மெழுகப்பட்ட சிறிய இடத்தில் தருப்பையின்மேல் அவன் மனைவி பிண்டம்வைத்தல், ௨௩௪.
இறுமீன் (இஃது இறுலெனவும் வழங்கும்), ௩௪௨.
இறைச்சி, ௧௪.
இன்சொல், ௪௦.

ஈ.

ஈந்து (=ஒருமரம்), ௧௧௬.
ஈயல், ௫௧, ௧௧௯.
ஈர், ௧௩௬.
ஈரந்தூர், ௧௮௦.

உ.

உட்பகை, ௬௮.
உடன்கட்டையேறுதல், ௨௪௬.
உடுக்கை, ௭௦.
உடும்பின்நிணம், ௩௨௬.
உடும்பு, ௬௮, ௧௫௨, ௩௨௫, ௩௨௬, ௩௩௩.
உடை, ௩௫௬.
உடைந்தவளை, ௯௦.
உடைப்புக்களை அடைத்தல், ௭.
உடைமரம், ௩௬௩.
உடைமுள், ௩௨௪.
உண்கலம், ௧௬௦, ௨௩௫.
உண்ணுதல், ௬௧, ௨௧௨.
உண்பன நாழி உடுப்பன இரண்டென்றல், ௧௮௯.
உண்போர் சபதஞ்செய்துகொண்டுண்ணுதல், ௧௭௮.
உணவின்சிறப்பு, ௧௮.
உணவு, ௧௨௭, ௩௮௨.
உணவு ஆக்கல், ௧௬.
உணவுகொடுத்தோர்பெருமை, ௧௮.
உத்தரநாள், ௨௨௯.
உப்பு, ௬௦, ௩௧௩, ௩௮௬.
உப்புவண்டி, ௬௦.
உப்புவாணிகர், ௮௪, ௧௦௨, ௧௧௩, ௧௧௬.
உரல், ௩௩௩.
உருளி, ௨௨௮.
உருளை, ௧௮௫.
உலக்கை, ௭௨, ௩௯௯.
உலகத்திற்கு அரசன் உயிரென்றல், ௧௮௬.
உலகம், ௧௪௫.
உலகங்காக்குந்தேவர், ௫௬.
உலகியற்கை, ௭௬, ௧௯௪.
உலை, ௧௫௯, ௧௭௨.

உலையிடத்து அடைதல், ௧௭௦.
உலோபருடைய நட்பு ஆகாதென்றல், ௧௯௦.
உவர்க்கூவல், ௩௩௧.
உவா, ௬௫.
உவாவில் சூரியனும்சந்திரனும் தம்முட் சந்தித்தல், ௬௫.
உழவர், ௧௩, ௪௨, ௬௫, ௧௦௯, ௨௦௯, ௨௩௦, ௨௮௯, ௩௮௪, ௩௯௫.
உழவர்தொழில், ௧௩.
உழவர்மகளிர், ௩௩.
உழவின்பெருமை, ௩௫.
உழுத எருமைக்கடா, ௧௨௫.
உழிஞைக்கொடி, ௭௬, ௭௭.
உழிஞைக்கொடியைச் சூடுதல், ௭௬, ௭௭.
உழுஞ்சில், ௩௭௦.
உழுதல், ௧௨௦.
உழுந்து, ௨௯௯.
உள்ளடி, ௧௭௧.
உற்பாதம், ௩௫, ௪௧, ௧௧௭, ௨௨௯, ௩௮௮, ௩௯௭.
உறையூர், ௩௯, ௫௮, ௬௭, ௬௮, ௬௯, ௨௧௨, ௩௫௨, ௩௯௫.
உறையூர்ச்சபை, ௩௯.
உன்னமரம், ௩.

ஊ.

ஊகம்புல், ௩௦௭, ௩௨௪.
ஊமன், ௨௩௮.
ஊர், ௮௩, ௩௫௧, ௩௭௯.
ஊர்காப்பவர் இடையாமத்தில் விளக்குக்கொண்டுசெல்லுதல், ௩௭.
ஊனைச்சுடுதல், ௭௦.
ஊன், ௩௮௪.
ஊன்சோற்றுத்திரளை, ௩௩.

எ.

எட்டாநாட்பிறை, ௧௧௮.
எடுத்துவிட்டுச்செல்லுதல், ௯௬.
எண்ணெய்துறை, ௫௦.
எண்வகையெச்சம், ௨௮.
எந்திரப்பொறி, ௧௭௭.
எய்ப்பன்றித்தசை, ௧௭௭.
எயிலென்னுமூர், ௭௧.
எருக்கு, ௧௦௬.
எருது, ௬௦, ௧௦௨, ௩௨௭, ௩௯௯.
எருமை, ௫, ௨௯௭.
எருமைக்கடா, ௯௦, ௩௬௬, ௩௯௫.
எல்லரி (=ஒருவாத்தியம்), ௧௫௨.
எலி, ௧௯௦, ௨௧௧, ௨௩௭, ௩௨௧, ௩௨௨, ௩௨௪.
எவ்வி (=ஒருவேள்), ௨௪, ௨௦௨, ௨௩௩.
எழினிஅதியமான் கூவிளங்கண்ணியையுடையவனென்பது, ௧௫௮.
எழினி, ௨௩௦.
எழுகடல், ௮௧.
எள்ளிளங்காய், ௧௨௦.
எறும்பு, மழைபெய்யுங்காலத்தைப்பார்த்துமுட்டையையெடுத்துக்கொண்டு மேட்டுநிலத்தையடைதல், ௧௭௩.

ஏ.

ஏணி, ௩௦௫.
ஏத்தம் (=ஏற்றம்), ௩௨௨.
ஏர்க்களவுருவகம், ௩௬௧.
ஏழிலாஞ்சனை, ௯௧.
ஏழுவள்ளல், ௧௫௮.
ஏற்றுத்தோல்முரசம், ௨௮௮.
ஏறு, ௨௫௧, ௨௮௮, ௩௩௧.
ஏறைக்கோன் குறவர்தலைவனென்பது, ௧௫௭.

ஐ.

ஐந்தலைநாகம், ௩௭.
ஐம்படைத்தாலி, ௭௭.
ஐம்பூதம், ௨.
ஐம்பொறி, ௨௬௬.
ஐவனநெல், ௧௫௧, ௧௭௨.

ஒ.

ஒருகட்பறை, ௨௬௩.
ஒருதலைமாக்கிணை, ௬௪, ௩௯௨, ௩௯௪.
ஒருமாநிலம், ௧௮௪.
ஒல்லையூர்நாடு, ௨௪௨.
ஒற்றுமையின்பயன், ௫௮.

ஓ.

ஓடம், ௨௬௧.
ஓதம், ௨௨.
ஓரி (= ஒருவள்ளல்), ௧௫௨, ௧௫௩, ௧௫௮, ௨௦௪.

ஔ.

ஔவைநெல்லிக்கனிபெற்றது, ௯௧.

க.

கங்கை, ௧௬௧.
கட்டில், ௮௨, ௨௮௬.
கடகப்பெட்டி, ௩௩.
கடம்பன், ௩௩௫.
கடம்பு, ௨௩.
கடமாவேறு, ௨௦௨.

கடல், ௨, ௨0, ௩0, ௩௧, ௩௫, ௪௨, ௪௯, ௫௫, ௫௮, ௬௬, ௧௨௨, ௧௩௭, ௧௫௪, ௧௬0, ௧௬௧, ௨0௪, ௩௮௬.
கடல்நீக், ௧௯௮.
கடல்முள்ளிப்பூமாலை, ௨௪.
கடலை, ௧௨0.
கடற்கரை, ௧௭, ௨௪, ௪௮, ௪௯, ௬0, ௩௮௬.
கடற்றுளி, ௧௯௮.
கடற்றெய்வவிழா, ௯.
கடன்மணல், ௧௯௮.
கடாவழித்தல், ௩௫௩.
கடுவன், ௧௫௮, ௨00.
கடைக்கொள்ளி, ௧0௮.
கடைசியர், ௬௧.
கடைந்துநெருப்பெடுத்தல், ௧௫0, ௨௪௭.
கடைமடை, ௪௨.
கண்கள்பசத்தல், ௯௬.
கண்டீரக்கோ, ௧௫௧.
கண்ணன், ௫௮.
கண்ணி, ௩௯, ௭௬, ௧௪௩, ௧௪௪.
கண்ணுறை, ௧௫, ௬௧.
கணணேணி, ௧0௫.
கணவனிறந்தபின் மனைவி கூந்தலைநீக்கிக்கொள்ளுதல், ௨௫, ௨௩௮, ௨௫0, ௨௬௧.
கணவனையிழந்தமனைவி ஆபரணங்களைநீக்கிவிடுதல், ௨௨௪.
கணவனையிழந்த மனைவியின் புலம்பல், ௨௫௩, ௨௫௪.
கணவனோடுசேர்ந்திருக்குமகளிர், ௧௯௪.
கணிச்சிப்படை, ௪௨, ௧௯௫.
கணையமரத்தாற்கதவைத்தடுத்தல், ௯௭.
கணையமரம், ௧௪, ௩௯, ௬௧, ௯0, ௯௮.
கதவு, ௪௪, ௩௪௧.
கதிர், ௧௩௮, ௧௯0.
கந்தன்; ௩௮0.
கந்தாரமென்னுமது, ௨௫௮.
கப்பல், ௧௩, ௨௬, ௩0, ௬௬, ௧௨௬, ௨௩௮, ௩௬௮, ௪00.
கப்பற்பாய், ௩0.
கபிலர், ௫௩, ௧௭௪.
கபிலர் அந்தணரென்பது, ௨00.
கபிலர் பாரியின் நண்பரென்பதும் அந்தணரென்பதும், ௨0௧.
கம்பிளை நூலென்றல், ௨௯.
கம்மியன், ௩௫௨.
கயன்மீன், ௨௪௯.
கயன்முள், ௧௯௫.
கரந்தை, ௨௬௧, ௨௬௯, ௩௪0.
கரம்பை, ௨௮௫, ௩0௨.
கராம், ௩௭.
கரிகாற்பெருவளவன் யாகஞ்செய்தது, ௨௨௪.
கரியமுருடு, ௨௪௬.
கருங்கல், ௫.
கருடக்கொடி, ௫௬.
கருநெய்தல், ௧௪௪.
கரும்பறுப்பார், ௪௨.
கரும்பனூரன், ௩௮௧.
கரும்பினபூ, ௩௫, ௩௮௪.
கரும்பு, ௧௬, ௨௨, ௨௪, ௨௮, ௩௫, ௪௨, ௧௩௭, ௩௨௨, ௩௮௬.
கருவூர், ௧௧, ௩௨, ௩௯, ௩௭௩, ௩௮௭.
கருனை, ௩௯௫, ௩௯௮.
கல், ௯0.
கல்வியில்லாதவனைத் தாயும்வெறுப்பாளென்பது, ௧௮௩.
கல்வியுடையோன் கீழ்க்குலத்தோனாயினும் அவன்கல்வியின்பொருட்டு மேற்குலத்தோனும் அவனுக்கு வழிபாடு செய்வானென்பது, ௧௮௩.
கல்வியையுடையோர் வறுமையால் அக்கல்வியை வெறுத்தல், ௬௮.
கல்விவிளக்கமுடையோர், ௫௩.
கலப்பை, ௧௯, ௨0, ௫௬.
கலாவம், ௧௩௩, ௧௪௬.
கவர்த்தவழி, ௧௧௬.
கவரிமா, ௧௩௨.
கவைத்தவேலமுள், ௯௮.
கழஞ்சு, ௧௧.
கழல்முள்வேலி, ௩0௬.
கழல்வடிவாகவும் கிண்ணிவடிவாகவும் செய்து செறிக்கப்பட்ட உருக்களையுடைய கேடகம், ௯௭.
கழல், வீரத்திற்கும் வென்றிக்கும் கட்டப்படுவதென்றல், ௧00.
கழி, ௧௭, ௨௯, ௪௮, ௩௩௯, ௩௮௬.
கழுகின்சேவல், ௨௩௮.
கழுகு, ௩௭0.
கழுதை, ௧௪, ௩௯௨.
கள், ௨௯, ௬௮, ௮0, ௧௧௫, ௧௨௫, ௧௭௨, ௨௧௨, ௨௯0.
கள்ளி, ௨௨௫, ௨௪௫, ௩௨௨, ௩௬0, ௩௬௩.
கள்ளிநீழற்கடவுள், ௨௬0.
கள்ளின்கலங்கல், ௨௯௮.
கள்ளின்தெளிவு, ௫௬, ௧௧௫, ௧௨0, ௧௭0, ௩௬0, ௩௯௨, ௩௯௭.

கள்ளின்தெளிவைப் பாணர்க்குக்கொடுத்தல், ௧௭௦.
கள்ளின்தெளிவைப் பொற்கலத்துண்ணல், ௨௪, ௫௯.
கள்ளையுண்டோர் விடாய்மிகுத்துப் புளிச்சுவையை விரும்புவரென்றல், ௧௭௭.
களங்கொள்ளுதல், ௯௨.
களமர், ௨௧௨.
களர்நிலக்கிணறு, ௩௧௧.
களர்நிலம், ௧௪௨, ௧௯௩, ௨௨௫, ௨௪௫, ௨௯௦, ௩௯௨.
களவேள்வி, ௨௯, ௮௮, ௩௭௨.
களவேள்விமுதலியன போருக்குரிய விழாவென்றல், ௮௮.
களாப்பழம், ௧௨௭, ௧௪௫, ௧௭௬.
களி (=மண்), ௨௯௯.
களைகளைதல், ௧௨௦.
கற்பகச்சோலை, ௩௮.
கற்பு, ௧௯௮.
கற்றல்நன்றெனல், ௧௮௩.
கறி, ௧௪.
கறையான், ௫௧.
கன்முழை, ௮௯.
கன்னிப்போர், ௭௯.

கா.

காக்கை, ௨௩௮, ௩௪௨, ௩௯௨.
காஞ்சி, ௩௯௫.
காஞ்சிப்பூ, ௧௮.
காஞ்சிபாடல், ௨௮௧, ௨௯௯.
காஞ்சிமாலை, ௩௪௪.
காட்டாறு, ௧௭௭.
காட்டுக்கோழி, ௫௨, ௩௨௦.
காட்டுநாடு, ௧௫௦.
காட்டுப்பசு, ௧௧௭.
காட்டுப்பசுவின்குழவி, ௩௧௯, ௩௨௩.
காட்டுவழி, ௧௫௦.
காட்டுவாயில், ௯௮.
காழ், ௩௯௯.
காடு, ௫, ௫௨, ௯௦, ௧௪௪, ௧௫௭, ௧௯௦, ௧௭௭, ௨௦௯, ௨௫௭, ௨௫௯, ௩௮௩.
காந்தட்கிழங்கு, ௧௯௮.
காந்தட்பூமாலை, ௧௫௭.
காந்தண்மொட்டு, ௧௪௪.
காந்தள், ௯௦, ௧௪௪.
காய்த்தநெல், ௧௮௪.
கார்காலத்துமழை, ௧௧௯, ௧௨௦, ௧௪௭.
கார்த்திகைநாளின்முதற்கால், ௨௨௯.
காரிக்குதிரை, ௧௫௮.
காரிநாடு, ௧௨௨.
காரியாறு, ௪௭.
காரைப்பழம், ௨௫௮.
காலன், ௨௩, ௪௧, ௨௪௦.
காலைப்பொழுது, ௧௪௯, ௨௩௨.
காலைமண்டியாகச்செய்துகொள்ளல், ௮௦.
காலைமுரசம், ௧௯௧.
காலையந்தி, ௩௪.
காலையில் மதுவையுண்ணுதல், ௧௨௩.
காவற்குத்தியிடுதல், ௧௭௨.
காவற்காடு, ௨௧.
காவன்மரம், ௨௩, ௫௭, ௧௯௨, ௩௩௯.
காவிரிநதி, ௩௫, ௪௩, ௫௮, ௯௮, ௧௯௯, ௧௭௪, ௩௯௩, ௩௯௯.
காவுதல் (=தோளாற்சுமத்தல்), ௧௩௯.
காளாம்பி, ௧௯௪.
காளை, ௧௭௧.
காற்று, ௨, ௩௦, ௪௧, ௫௧.
காற்றுணவு, ௪௩.
கானப்பேரரண், ௨௧.

கி.

கிண்கிணி, ௭௭, ௧௯௮.
கிணை (=ஒருவகைப்பறை), ௭௦, ௭௮, ௭௯, ௧௧௧, ௩௦௯, ௩௧௯, ௩௫௯, ௩௭௩, ௩௭௪, ௩௭௮, ௩௮௨, ௩௮௩, ௩௮௭, ௩௯௩, ௩௯௪, ௩௯௭, ௪௦௦.
கிணைமகள், ௩௯௯.
கிணைமகன், ௩௭௯, ௩௮௮.
கிணையின்கோல், ௩௮௨.
கிளி, ௧௩௮, ௩௯௫.
கிளிகடிகருவி, ௪௯.

கீ.

கீழ்கடல் சகரரால் தோண்டப்பட்டதென்பது, ௬.
கீழ்காற்று, ௩௪.
கீழ்மடை, ௪௨.

கு.

குகை, ௫௨, ௧௫௨, ௧௫௭, ௧௫௮, ௧௭௪, ௩௯௮.
குச்சுப்புல், ௨௫௭.
குடகமலை, ௧௯௯.
குடநாடு, ௧௭, ௧௭௭.
குடம், ௩௫௯.
குடர், ௧௯௦, ௨௭௫.
குடவாயிற்கோட்டம், ௭௪.
குடிகள், ௩௫, ௧௨௦, ௧௭௦.
குடிதாங்கல், ௫௮.

குடுமி, ௭௭, ௧௬௦, ௨௭௯, ௩௧௦.
குடை (=பனையோலையாற்செய்யப்பட்டது), ௩௫௨.
குதிரை, ௨, ௪, ௧௪, ௧௫, ௧௬, ௩௧, ௩௯, ௪௩, ௪௪, ௫௫, ௬௩, ௯௭, ௯௮, ௧௧௬, ௧௪௧, ௧௪௬, ௧௭௮, ௧௯௭, ௨௦௫, ௨௨௯, ௨௪௦, ௨௭௩, ௩௦௩, ௩௦௪, ௩௪௫, ௩௫௨, ௩௫௯.
குதிரைக்கதி, ௧௯௭.
குதிரைத்தொழில், ௧௪.
குதிரைப்பந்தி, ௧௭௮.
குதிரைமலை, ௧௫௮, ௧௬௮.
குப்பி, ௫௬.
குப்பை, ௧௧௬.
குப்பைக்கீரை, ௧௫௯.
குமணன், ௧௫௮, ௧௬௦, ௧௬௩.
குமணன் பெருந்தலைச்சாத்தனார்க்கு வாள்கொடுத்தது, ௧௬௫.
குமரியாறு, ௬, ௧௭, ௬௭.
குயச்சிறுவர் கலம்வனையுந்திகிரி, ௩௨.
குயவன், ௨௨௮, ௨௫௬.
குயில்வாய், ௨௬௯.
குரவை, ௨௨, ௨௪, ௧௨௯, ௩௯௬.
குரங்கு, ௧௩௬.
குராற்பசு, ௩௨௫.
குருடன், ௭௩.
குருதி, ௧௫௦.
குருதிப்பலி, ௫௦.
குருந்து (=மரவிசேடம்), ௩௩௫.
குருவிச்சேவல், ௩௧௮.
குவளை, ௪௨, ௧௦௫, ௧௧௬, ௧௩௨, ௧௩௭.
குழந்தை, ௪௪, ௨௩௦.
குழந்தைகளாலுண்டாகுமின்பம், ௧௮௮.
குளநெல், ௩௩.
குளம், ௪௪, ௭௫, ௩௪௧, ௩௮௬.
குளமுற்றம், ௩௪.
குற்றஞ்செய்தோர் வணங்கிநடந்தால் அரசன் அவர்களுக்கு அருள்செய்தல் வேண்டுமென்றல், ௧௦.
குற்றஞ்செய்தோரை அக்குற்றத்திற்கேற்ப அரசன் தண்டிக்கவேண்டுமென்றல், ௧௦.
குறடு, ௨௬௧, ௨௯௦.
குறத்தி, ௧௦௮.
குறவர், ௧௨௭, ௧௪௩, ௧௫௭, ௨௩௧, ௨௩௬.
குறவர்க்குக் காந்தட்பூமாலை யென்பது, ௧௫௭.
குறளைகூறுவோர்மொழியைக் கொள்ளலாகாதென்பது, ௩௫.
குறிஞ்சி, ௩௭௪.
குறிய அரண், ௧௭௭.
குறியவளை, ௧௧௩.
குறியெதிர்ப்பை, ௧௬௩.
குறுந்தடி, ௧௪௩, ௩௬௫.
குறும்பர், ௯௭.
குறும்பூழ், ௨௧௪.
குறும்பூழ் வேட்டுவன், ௨௧௪.
குறைவில்லாத மேற்கோளையுடையோரது நட்பைக்கொள்ளவேண்டும், ௧௯௦.
குன்றி, ௧௫௯, ௩௪௦.

கூ.

கூத்தச்சுற்றம், ௧௫௩.
கூத்தர், ௨௯, ௧௬௪, ௨௨௧.
கூத்தர் ஆடுங்களம், ௨௮.
கூதளம், ௩௮௦.
கூதாளி, ௧௬௮.
கூதிர்க்காலம், ௧௫௦.
கூந்தல், ௧௩௩, ௧௩௮, ௧௩௯, ௧௪௬, ௧௪௭, ௨௪௭.
கூந்தலைக் கழற்கனியால்வகிர்தல், ௯௭, ௨௦௨.
கூந்தற்குப்புகையூட்டுதல், ௧௪௬.
கூரை, ௨௨, ௩௩௨.
கூவிளங்கண்ணி, ௧௫௮.
கூவிளவிறகு, ௩௭௨.
கூவையிலைப்பந்தர், ௨௯.
கூழ், ௧௬௦.
கூளி, ௨௩.
கூற்றைநோக்கிக்கூறியது, ௨௨௭, ௨௩௦.

கெ.

கெடிற்றுமீன், ௧௮, ௩௮௪.

கே.

கேசம், ௨௬௯.
கேடகத்தில் இருப்பாணியும் பட்டமுமறைதல், ௧௫.
கேடகத்தின்காம்பு, ௯௮.
கேடகத்தையும் வேலையும் கைக்கொள்ளுதல், ௧௫.
கேடகம், ௪, ௧௫, ௧௬, ௧௭, ௬௩, ௯௭, ௨௮௨, ௨௮௫, ௩௪௫.
கேணி, ௩௬௪, ௩௯௨.
கேழற்பன்றி, ௧௭௬, ௧௯௦.
கேள்வி, ௫௩, ௭௨, ௩௬௦.

கை.

கை, ௫௯, ௯௦, ௯௬.
கைம்மைநோன்பினருடைய உணவுமுதலியன, ௨௪௬.

கைம்மைநோன்பு, உ௫, ௬உ, உ௪௬, உ௫0, உ௬0, உ௬௧.
கைவளைமுறி, உ௩எ.

## கொ.

கொக்கு, ௩௪உ, ௩௯௫, ௩௯௮.
கொங்கர், ௧௩0.
கொங்கு, ௩எ௩.
கொடாமையாலுண்டாகும்தீங்கு, உஎ.
கொடி, ௩௮, ௩௬உ.
கொடியோரைத்தண்டித்தலிலும் செவ்வியோரைப்பாதுகாத்தலிலும் அரசர்க்குச் சோம்பலாகாது, உ௯.
கொடுங்கோல், உஉ, எ௧.
கொடுவாள், உஉ௪.
கொடைப்பெருமை, உஎ, உ௯, ௩௯, ௪உ, ௫௫, ௧0௧, ௧0உ, ௧0௩, ௧௩௪, ௧௪௧, ௧௪௯, ௧௫௩, ௧எ௧, ௧௮0, ௧௮௯, உ0௩, ௩௬௬.
கொடைமடம், ௧௪உ.
கொடையாலுண்டாகும்பயன், உஎ.
கொடையாளிகள்செல்வம் இரப்போர்க்கே உரித்தென்பது, ௧௯௯.
கொடையின்பெருமையும் கொடாமையின் சிறுமையும், உ0௪.
கொடையையுடையோர் பகையைவெல்வாரென்றல், உஎ.
கொண்கானமென்னுமலை, ௧௫௪, ௧௫௫, ௧௫௬.
கொண்டை, ௬௧.
கொண்டைமேற்காற்றடிக்கவென்னும் வழக்கு, ௧௩௩.
கொண்கானங்கிழான், ௧௫௫.
கொல்லன், ௩௬, ௧எ0, ௧௮0, ௩௧உ.
கொல்லன்கூடம், ௧எ0.
கொல்லன்பணிக்களரி, ௯௫.
கொல்லன் வேலைவடித்தல், ௧௮0.
கொல்லிப்பாவை, உ௫௧.
கொல்லிமலை, உஉ, ௧௫உ, ௧௫௮.
கொல்லை, ௧௫௯.
கொள், ௧0௫, ௩௩௫, ௩௯உ.
கொள்ளேனென்பதன் உயர்வும் கொள்வேனென்பதன் தாழ்வும், உ0௪.
கொள்ளி, ௩உ௫.
கொள்ளை, எ௮.
கொன்றை, ௧.

## கோ.

கோங்கு, ௩உ௧.
கோசர், ௧௬௯, ௩௯௬.
கோட்டான், உ௩௮.
கோட்புக்கதெங்கு, ௧எ.
கோடாலி, உ௩.
கோடாலியின்கை, ௩௬.
கோடைக்காலம், ௧௩எ, ௧௬௧, ௧எ௪, உஉ௪, உ௩எ, ௩௮௧, ௩௮௯, ௩௯௫.
கோடைமலை, உ0௫.
கோண்மீன், ௩௯உ.
கோப்பெருஞ்சோழன், உ௧உ.
கோபம், ௫௬, எஉ.
கோயில் (=அரண்மனை), ௬எ.
கோலோகம், ௬.
கோவதைமுதலியவற்றை வாக்காற்சொல்லலும் ஆகாதென்பது, ௩௪.
கோவலூர், ௯௯.
கோவூர், ௬எ.
கோழி, உ௮, ௫உ, ௩௬௪, ௩௮௩.
கோனாடு, ௫௪, ௬௧, ௧௬எ, ௧௮0, ௧௯எ, ௩௯௪.

## ச.

சக்கரம், உ௩௩.
சக்கரவாளசக்கரவர்த்திகள், ௧எ௫.
சககமனம், ௬உ.
சகடம், ௧0உ, ௧௮௫.
சகடை, ௬0.
சங்கிலி, எ௪.
சங்கு, ௫௬, உஉ௫, உ௬௬, ௩௯எ.
சடங்கு, உஉ௪.
சடை, ௧, ௫௬, ௧௬௬, உ௫௧, உ௫உ.
சந்தனம், ௫௮, ௧0௮, ௧௬௧, உ௩௯.
சந்தனவிறகு, ௧௬௮.
சந்திரன், ௬, ௮, ௧௩, உஉ, உ௫, உஎ, ௩௧, ௩௮, ௫௫, ௫௬, ௫௯, ௬0, ௬எ, ௧0உ, ௧௧உ, ௧௬0, உ௩௧, உ௬0, ௩எ௬, ௩௯௬, ௪00.
சந்து, எ௮.
சந்துசெய்தல், ௩௬.
சபை, ௮௩.
சமைக்கப்பட்டபானை, உ௩எ.
சல்லி, (=பறைவிசேடம்), ௧௫உ.
சனிமீன், ௧௧எ.

## சா.

சாக்காட்டுப்பறை, ௧௯௪.
சாகாடு, உ௫௬.
சாடி, உ௯எ, ௩௧௯.
சாத்தன், ௩௯௫.
சாமரம், ௫0.

சாரல், ௧௦௮.
சான்றோர், ௩௪, ௧௯௧.
சான்றோர் சான்றோர்பால் நட்புடையராவார்; சால்பில்லோர் சால்பில்லோர்பால் நட்புடையராவா ரென்பது, ௨௧௮.

சி.

சிகரம், ௧௩௫.
சிங்கம், ௭௧.
சித்திரம். ௨௫௧.
சிப்பி, ௫௩.
சிலம்பு, ௩௬, ௮௫.
சிவபெருமான், ௧, ௬, ௫௫, ௫௬, ௯௧, ௧௬௬, ௧௯௮.
சிவபெருமான் அணிந்தருளிய பிறை நெற்றிபோல் விளங்குகின்றதென்பது, ௯௧.
சிவபெருமான் திருக்கோயில், ௬.
சிவபெருமான் நெற்றிக்கண், ௫௫.
சிவபெருமான் முப்புரங்களை எரித்தது, ௫௫.
சிவபெருமானுடைய திருவுருவம் கொடி குண்டிகை நீலகண்டம் பிறை மாலை வாகனம், ௧.
சிற்றரண், ௨௧, ௯௭.
சிற்றாறு, ௨௬௦.
சிற்றூர், ௧௪௩, ௧௭௦, ௨௮௫, ௩௦௨, ௩௨௮, ௩௩௦.
சிற்றரசர், ௧௯௭.
சிற்றரசன் குதிரை, ௨௯௯.
சிறந்த அரசன் அரசாட்சிசெய்யுந்தன்மை, ௭௫.
சிறந்தகுடி, ௧௫௯.
சிறியயாழ், ௧௦௯, ௧௨௭, ௧௩௫, ௧௩௮, ௧௪௪, ௧௪௫, ௧௪௬, ௧௪௭, ௧௫௫, ௨௮௫, ௩௦௮.
சிறியோன் அரசாட்சிசெய்தல், ௭௫.
சிறுகடுகு, ௨௮௧, ௩௫௮.
சிறுகாடு, ௧௨௬.
சிறுகுடி (=ஓரூர்), ௭௦.
சிறுகுடில், ௮௬, ௧௧௬, ௧௨௦, ௧௨௯, ௩௧௮, ௩௩௨.
சிறுகுவடு, ௧௧௮.
சிறுகுளம், ௧௧௮.
சிறுசோற்றுவிழா, ௩௩.
சிறுசோறு, ௨௩௫.
சிறுதூறு, ௧௭௭.
சிறுபறை, ௬௪, ௧௫௨.
சிறுபிள்ளைகள், ௪௬, ௬௧, ௯௪, ௧௦௪, ௧௭௩, ௩௭௩.
சிறுபிள்ளைகள் சோற்றை யேந்திச்செல்லுதல், ௧௭௩.
சிறுபிள்ளைகள் யானையைநீராட்டல், ௯௪.
சிறுமுழா, ௧௦௩.
சிறுவெண்கடுகு, ௨௯௬.
சிறுவெண் கடுகைப் பாதுகாவலாகப் புகைத்தல், ௯௮.

சீ.

சீப்பு, ௩௦௫.
சீலைப்பேன், ௧௩௬.

சு.

சுக்கிரன், ௧௧௭.
சுக்கிரோதயம், ௩௮௫, ௩௯௭.
சுகிர்ந்தபஞ்சு, ௧௨௫.
சுடுகாட்டில்தெய்வமிருத்தல், ௨௪௭.
சுடுகாட்டுப்பறவை, ௨௩௮.
சுடுகாடு, ௨௨௫, ௨௩௮, ௨௪௦, ௨௪௫, ௨௪௭, ௨௫௦, ௩௫௬, ௩௫௯, ௩௬௩.
சுரபுன்னை, ௧௫௮.
சுரபுன்னைப்பூமாலை, ௩௩௧.
சுரம், ௪௭, ௧௦௩, ௧௩௬, ௧௪௦, ௧௪௧, ௧௪௩, ௧௫௨, ௧௬௧, ௨௬௫.
சுரைக்கொடி, ௧௧௬.
சுவர்க்கத்திற்குமேற்பட்டது கோலோகமென்றல், ௬.
சுவர்க்கம்புகுதல், ௨௪௯.
சுளகு, ௨௪௯.
சுற்றம், ௪௭, ௬௯.
சுறாமீன், ௧௩.
சுனை, ௧௦௯, ௧௧௬, ௧௩௨.

சூ.

சூட்டிறைச்சி, ௩௯௭.
சூடு, ௨௧௨.
சூதாடுகருவி, ௫௨.
சூரபன்மா, ௨௩.
சூரியன், ௨, ௪, ௬, ௮, ௨௫, ௩௪, ௩௫, ௩௮, ௪௧, ௪௩, ௫௫, ௫௬, ௫௯, ௮௨, ௯௦, ௧௩௬, ௧௬௦, ௨௨௮, ௩௭௪, ௩௭௬.
சூரியனதுகதி, ௩௦.
சூரியனதுவீதி, ௩௦.
சூரியனது வெம்மையைத் தாங்கிச்செல்லுமுனிவர், ௪௩.
சூரியனை அசுரர் ஒருகாலத்துமறைத்தபொழுது திருமால் வெளிப்படுத்தியது, ௧௭௪.
சூளை, ௨௨௮.

## செ.

செங்கழுநீர், ௧௧௬.
செங்கழுநீரின் முழுப்பூவாற் செய்யப்பட்ட தழையென்பதை மகளிர் அரையிலணிதல், ௧௧௬
செங்கோல், ௨௦, ௩௫, ௩௯, ௪௨, ௫௫, ௧௧௭, ௨௨௧, ௨௩௦.
செம்மறியாட்டுத்தசை, ௯௬.
செய்யுள், ௫௩.
செருந்தி, ௩௯௦.
செல்வத்தின்பயன் கொடுத்தலென்றல் முதலியன, ௧௮௯.
செல்வர், ௧௮௮.
செவ்வழிப்பண், ௧௪௪, ௧௪௬, ௧௪௭, ௧௪௯.
செவ்வாய்மீன், ௬௦.
செவ்வானம், ௪, ௧௬.
செவ்வியெளிமை, ௩௫, ௪௦, ௫௪.

## சே.

சேமவச்சு, ௧௦௨.
சேரன், ௩௯, ௧௨௬, ௧௭௨.
சேரன் இமயமலையில் விற்பொறியை எழுதுவித்தது, ௩௯.
சேரன் பனந்தோட்டை அணிதல், ௨௨, ௪௫.
சேரனொருவன் மேல்கடலிற் கப்பல் செலுத்தியவிடத்து மற்றையோர்கப்பல் செல்லாமை, ௧௨௬.
சேறு, ௧௭௫, ௨௪௯.
சேறுகுத்தி, ௬௧.
சேனை, ௧௭, ௩௭, ௩௮, ௪௧, ௪௨, ௬௨, ௭௧, ௭௨, ௯௭, ௯௮, ௧௧௦, ௧௧௬, ௧௨௨, ௧௫௬, ௧௬௯, ௧௮௬, ௧௯௭, ௨௦௧, ௨௦௫, ௨௧௧, ௨௨௬, ௨௨௮, ௩௦௧, ௩௧௪, ௩௫௧, ௩௬௨, ௩௭௩.

## சொ.

சொற்பிறழ்ச்சியாகாது, ௩.

## சோ.

சோலை, ௩௩, ௩௬, ௩௩௮, ௩௪௫.
சோழகுலத்தின்பெருமை, ௩௫, ௩௯.
சோழநாடு, ௧௩, ௩௫, ௩௮, ௪௦, ௬௧, ௬௭, ௬௮, ௧௬௬, ௧௭௪, ௨௧௨, ௩௮௨.
சோழர்களிலொருவன் கப்பலைச் செலுத்தற்குக் காற்றை ஏவல்கொண்டது, ௬௬.
சோழன், ௫௮, ௩௭௮.
சோழன் தூங்கெயிலெறிந்தது, ௩௯.
சோழன் பகைமேற்செலவு, ௪௧.
சோழனொருவன் முள்ளூர்மலையிற் பகைவர்க்கஞ்சி ஒளித்திருந்தபொழுது மலையமான் சோழியவேனாதி திருக்கண்ணன் அவனைப்பாதுகாத்தானென்பது, ௧௭௪.
சோற்றுக்கட்டிகொடுத்தல், ௧௭௭.
சோற்றுத்திரளை, ௩௩.
சோறு, ௧௭௨, ௨௬௧.

## ஞா.

ஞாயில், ௨௧, ௩௫௦.

## த.

தகரமரம், ௧௩௨.
தச்சன், ௮௭, ௨௩௦.
தச்சன்சிறுவர், ௨௦௬.
தசை, ௨௫௮.
தடாரி(=பறைவிசேடம்), ௩௬௮, ௩௬௯, ௩௭௦, ௩௭௧, ௩௭௨, ௩௭௬, ௩௮௧, ௩௮௫, ௩௯௦.
தடி, ௧௫௦.
தண்ணுமை, ௧௫, ௨௭௦, ௨௮௯, ௨௯௩, ௩௪௮,
தமர்பிழைசெய்யிற் பொறுக்கவேண்டுமென்றல், ௧௫௭.
தமிழ்நாட்டரசர், ௩௫, ௧௦௯, ௧௧௦, ௨௦௫, ௩௫௭.
தயிர், ௨௧௫.
தயிர்கடைதல், ௨௫௭.
தயிர்மிடா, ௩௩.
தரமறிதலரிதென்றல், ௧௨௧.
தருப்பை, ௯௩, ௨௩௪, ௩௬௦.
தருமத்தின்பெருமை, ௫௫.
தருமநூல், ௧௫, ௩௪.
தலைகுனியாதநெற்போர், ௬௧.
தலையாலங்கானத்துச் செருவென்றநெடுஞ்செழியனால் வெல்லப்பட்ட எழுவர், ௧௯, ௭௬.
தவம், ௨௫௧, ௨௫௨, ௩௫௮.
தழும்பனூர், ௩௪௮.
தழை (=உடைவிசேடம்), ௬௧, ௧௧௬, ௨௪௮, ௩௪௦.
தழைப்பந்தர், ௨௬௨.
தழைமாலை, ௫௪, ௨௬௯.
தளிர், ௧௫௯.
தனக்குள்ளதுன்பத்தைக் குறிப்பித்தற்கு இரங்கற்பண்ணைவாசித்தல், ௧௪௪, ௧௪௯, ௧௪௭.

## தா.

தாகம், ௧௫௪.
தாடி, ௮௩, ௨௫௭, ௨௫௮.
தாமரை, ௨௪௬, ௩௯௭.
தாமரைப்பூ, ௨௭, ௨௮.
தாமரையிலை, ௨௭.
தாலம், ௧௨௦.
தாழி, ௨௨௮, ௨௩௮, ௨௫௬, ௩௬௪.
தாள்வாழ்கவென்றல், ௧௦௧, ௧௦௩, ௧௭௧.
தாளி, ௨௫௨, ௩௨௮.
தாளிப்பு, ௧௨௭, ௧௬௦, ௨௫௦, ௩௬௦.

## தி.

திசை, ௩௦, ௪௧.
தித்தன் (=ஒருசோழன்), ௮௦, ௩௫௨, ௩௯௫.
திமில், ௨௪.
திமில்விளக்கு, ௬௦.
திருச்செந்தூர், ௫௫.
திருமால், ௫௬, ௫௭, ௫௮, ௧௭௪.
திரை, ௧௯௫.
தில்லந்தளிர், ௨௫௨.
தில்லைமரம், ௨௫௨.
திறை, ௨௨, ௯௭, ௧௫௬.
திறைப்பொருளைச் சுற்றத்தார்க்குக்கொடுத்தல், ௨௨.
தினை, ௨௮, ௧௧௯, ௧௨௦, ௧௪௩, ௧௫௯, ௧௬௮, ௩௧௯, ௩௨௮, ௩௩௩, ௩௩௫.
தினைச்சோறு, ௧௪௩, ௧௬௮, ௩௨௦.

## தீ.

தீ, ௫௧.
தீக்கடைகோல், ௩௧௫.
தீயகறு, ௪௧.
தீயநிலமாயினும் நல்லோரால் நல்லதாதலும் நல்ல நிலமாயினும் தீயோரால் தீதாதலும், ௧௮௭.

## து.

துக்கக்குறிப்பு, ௧௪௪, ௧௫௪.
துகிற்கொடி, ௧, ௧௯௭.
துடரிப்பழம் புளிப்புடையதென்பது, ௧௭௭.
துடி (=பறைவிசேடம்), ௧௭௦.
துடியர், ௨௯௧, ௩௩௫.
துடுப்பு, ௨௬, ௩௭௨.
தும்பை, ௨, ௯௬, ௩௪௭.
தும்பைமாலை, ௯௬.
தும்பைமாலை யொன்றற்செய்யப்படுதல், ௨.
துரியோதனன்முதலியநூற்றுவர், ௨.
துலாக்கோல் யானைத்தந்தத்தாற்செய்யப்படுதல், ௩௯.
துலாக்கோற்றட்டு, ௪௩.
துலாம், ௩௯.
துவராபதி (=துவாரஸமுத்திரம்), ௨௦௧.
துவை, ௧௪, ௧௧௩, ௧௬௦, ௨௫௦, ௩௬௦, ௩௯௦.
துறுகல், ௨௦௨.
துறைமுகம், ௩௦.
துறையூர், ௧௩௬.

## தூ.

தூக்கணங்குருவியின்கூடு, ௨௨௫.
தூங்கெயில், ௩௯.
தூண், ௮௬.
தூண்டில், ௩௯௯.
தூணில் தெய்வங்களிருத்தல், ௫௨.
தூது, ௨௮௪.
தூமக்கோள், ௧௧௭.

## தெ.

தெங்கு, ௧௭, ௨௪, ௨௯, ௬௧.
தெப்பம், ௧௯௨.
தெய்வத்திற்குரியவோசை, ௫௨.
தெய்வம், ௧௦௬, ௧௪௩, ௧௫௮.
தெய்வம் உடம்பிலேறப்பட்ட புலைமகள், ௨௫௯.
தெய்வம் ஒருவன்கொடுக்கும் எல்லாப்பூக்களையுமேற்றுக்கொள்ளுமென்றல், ௧௦௬.
தெய்வலோகம், ௧௭௪.
தெரு, ௩௪௫.
தெளிவில்லாதோர், ௨௧௪.
தெறுழ்க்கொடியின்பூ, ௧௧௯.

## தே.

தேமல், ௩௫௦, ௩௫௨, ௩௫௪.
தேர், ௪, ௧௧, ௩௯, ௪௫, ௫௫, ௮௭, ௧௦௧, ௧௦௯, ௧௨௩, ௧௪௧, ௧௪௪, ௧௪௫, ௧௪௬, ௧௯௭, ௨௦௦, ௩௪௫, ௩௫௧, ௩௫௯, ௩௬௮.
தேர்க்கால், ௮௭.
தேர்க்கொடிஞ்சி, ௭௭.
தேர்கொடுத்தல், ௧௧௪, ௧௨௧.
தேரில் மணிகட்டுதல், ௨௦௦.
தேவர், ௩௮, ௫௫, ௬௨, ௯௯.
தேவருலகத்துள்ளகுறைவு, ௩௮.
தேவருலகம், ௨௨.
தேள், ௩௯௨.
தேனீ, ௯௩.

### தை.

தைமாதத்திற் குளம்குளிர்ந்திருத்தல், ௭௦.
தையல், ௧௩௬.

### தொ.

தொண்டிநகரம், ௧௭, ௪௮.
தொழுவர், ௨௪, ௩௭௧.

### தோ.

தோட்டிமலை, ௧௫௦.
தோணி, ௨௧௯, ௩௪௩.
தோல், ௩௧௭.
தோள், ௬௧.
தோன்றிக்கோ, ௩௯௯.

### ந.

நகர், ௧௪௮.
நட்பு, ௧௯௦, ௨௧௬, ௨௧௭.
நடுகல், ௨௨௧, ௨௨௩, ௨௩௨, ௨௬௦, ௨௬௧, ௨௬௩, ௩௦௬, ௩௧௪.
நடுகல்லாயினனென்றல், ௨௨௧.
நடுகல்லிற் சிவந்தபூமாலையையும் பீலியையுஞ்சூட்டி அதில் வீரன்பெயரையுமெழுதி அவ்விடத்துக் கல்லால்திட்டைசெய்தல், ௨௬௪.
நடுகல்லிற்குப் பீலிசூட்டல்முதலியன, ௩௨௯.
நடுகல்லிற்குப்பீலிசூட்டி மதுவைநிவேதித்தல், ௨௩௨.
நடுகல்லிற் பெயர்பொறித்தல், ௨௬௪.
நடுகல்லைத்தொழுதல், ௨௬௩.
நத்தை, ௨௬௬.
நரகம், ௫.
நரந்தப்பூ, ௨௩௫.
நரந்தை, ௧௩௨.
நரி, ௨௧௧, ௩௫௯, ௩௬௯, ௩௭௩.
நரை, ௧௯௫, ௨௭௦.
நரைக்கூந்தல், ௨௭௬.
நரையின்மைக்குக்காரணம், ௧௯௦.
நல்லியக்கோடன், ௧௭௬.
நல்வினை, ௨௧௪.
நல்வினைசெய்தற்கு வலியில்லையாயினும் தீவினைசெய்தலையொழியவேண்டுமென்பது, ௧௯௫.
நலங்கிள்ளி, ௩௮௨.
நள்ளி, ௧௪௮, ௧௪௯, ௧௫௦, ௧௫௮.
நற்குணமில்லோர், ௧௦௬.
நறுநெய், ௧௨௦, ௨௪௬.
நறும்புல், ௧௩௨.
நறைக்கொடியின்நாரால் வேங்கைப்பூவைத்தொடுத்தல், ௧௬௮.
நறைப்புகை, ௨௮௧.
நன்றியறிதல், ௩௪, ௧௭௫.
நன்னன், ௧௫௧.
நன்னெறிக்கண்ணேயொழுகுதற்கு இல்வாழ்க்கை தடையாமென்றல், ௧௯௩.
நனவிற்காணப்படும் உற்பாதம், ௪௧.

### நா.

நா, ௪௭.
நாஞ்சில்மலை, ௧௩௭, ௧௩௯, ௧௪௦, ௩௮௦.
நாடு, ௨, ௮௯, ௨௪௦.
நாத்திகரோடு கூடலாகாதென்றல், ௨௯.
நாய், ௩௩, ௭௪, ௨௦௫.
நார், ௧௧, ௧௭௦.
நாராசம், ௭௦.
நாரை, ௨௪, ௨௦௯, ௩௫௧, ௩௫௪, ௩௮௪.
நால்வேதம், ௬, ௧௫.
நாலையென்னுமூர், ௧௭௯.
நாவற்பழம், ௧௭௭.
நாளோலக்கம், ௫௪, ௧௨௩.
நாற்றிசை, ௧௨௧.

### நி.

நிணம், ௧௦௩, ௧௨௫, ௧௭௭, ௨௫௮, ௩௮௪, ௩௯௩.
நிலத்திற்குமுன் நீர் உள்ளதென்பது, ௯.
நிலா, ௧௧௨.
நிலை, ௪௪.
நிலையாமை, ௨௯.
நிழல், ௨௧௯.
நிழலில்லாதஇடத்துள்ள தனிமரம் பயன்படுதல், ௧௧௯.
நின் நாண்மீன் நிலைத்திடுகவென்றல், ௨௪.

### நீ.

நீர், ௨, ௫௧, ௧௩௭, ௧௫௦.
நீரணை, ௨௬௩.
நீராடல், ௨௪௩.
நீரில்லாத ஆறு, ௨௬௧.
நீர்க்கோழி, ௩௯௫.
நீர்ச்சண்டை, ௪௨.
நீர்ச்சோறு, ௨௪௬.
நீர்த்துளி, ௧௪௭, ௧௬௦.
நீர்த்துறை, ௮௪, ௯௪, ௯௬, ௧௩௮, ௨௦௪, ௨௪௩.
நீர்நிலை, ௨௬௬.

நீர்நிலையைப்பெருக்கவேண்டுமென்றல், கஅ.
நீர்நிறைந்தபள்ளம், கஙஎ.
நீர்வழங்கும்வாய்த்தலை, உச.
நீலக்கச்சை, உஎச.
நீலகண்டம், க, கூக,
நீலமணி, ருசு, கசஎ, கரு0.
நீலமணியையுச்சியிற்றரித்தல், கரு0.

## நு.

நுகம், க0உ, கஎகூ.
நுளையர்தொழில், உச.

## நூ.

நூலரிமாலை, உஅச.
நூலிழை, கஙசு.

## நெ.

நெடுஞ்செழியன் இளமைப்பருவத்துப் போர்செய்தது, எஎ.
நெடுமோனஞ்சி, கூஉ.
நெய், சுரு, ஙஅச.
நெய்க்கடலை, கஉ0.
நெய்தல், சஅ, சுக, உ0கூ, ஙஙகூ.
நெய்தலங்கானலென்னுமூர், க0.
நெய்தற்பறை, ஙஅக.
நெய்யால் மிதித்துத்திரட்டியகவளம், சச.
நெய்யுலை, உசுக.
நெருஞ்சிப்பூச் சூரியனைநோக்குதல், கருரு.
நெருப்பு, உ, சக, கஉரு.
நெல், உச, ஙங, ஙரு, கூஎ, கூஅ, கஅசு, உ0கூ, ஙஅச, ஙகூகூ.
நெல்லறுப்பார், சஉ, ஙசஅ.
நெல்லி, கூக, கஎ0, ஙகச, ஙஅசு.
நெல்லிக்கனி, கூக.
நெல்லிவிதை, கஎ0.
நெல்லின்குப்பை, கஎக.
நெல்லினரிசி, ஙகஅ
நெல்லுகுத்துப்பரவுங்கடவுள், ஙஙரு.
நெற்கதிர், சகூ, ஙஙஅ.
நெற்கதிரைவேய்தல், உஉ.
நெற்கவளம், சச, ஙஙஎ.
நெற்களம், கஎக.
நெற்கூடு, கசஅ, உஅஎ, ஙஎசு, ஙகூக.
நெற்சூடு, சுக.
நெற்பொலி, உங0.
நெற்போர், உச, சுக, உ0கூ, ஙகூ0.

## நொ.

நொச்சித்தழை, உஎக, உஎஉ.
நொச்சித்தழையை மகளிரிடையிலணிதல், உஎஉ.
நொச்சியை வீரர்தலையிலணிதல், உஎஉ.

## நோ.

நோய், உசரு.

## ப.

பஃறுளியாறு, கூ.
பகடு, சு0, கூ0, ங0எ.
பகன்றை, கசு.
பகன்றைப்பூ, ஙகூங.
பகைமேற்செலவைப்பாடினிபாடுதல், கரு.
பகையரசர்கொடுத்ததிறைகளை அரசர் பரிசிலர்க்குக்கொடுத்தல், உஉ.
பகைவர், சு, எச, கூஉ, உகங.
பகைவர்நாட்டைச்சுடும்புகையால் அரசன்மாலை வாடுகவென்றல், சு.
பகைவர்நாண்மீன் நில்லாமற் பட்டுப்போவதாகவென்றல், உச.
பகைவருடையஅரணிற் கொண்டபொருள்களைப் பரிசிலர்க்குக்கொடுத்தல், சு, க0ங.
பகைவருடைய இடங்கள் அவரிடத்தேயிருப்பவும் அவற்றைப் பாணர்க்குக் கொடுத்தல், உ0ங.
பகைவருடையகாவன்மரத்தில் தமது யானையைக்கட்டுதல், ருஎ.
பகைவருடையகாவன்மரத்தை வெட்டுவித்தல், உங, ஙசு, ருஎ.
பகைவருடையநாட்டின்கணுள்ள ஊர்களைச்சுடுதல், சு, எ, கசு, உங, ருஎ, க0ங.
பகைவருடையநாட்டுவயலில் தமது குதிரைமுதலியவற்றைச் செலுத்துதல், கரு.
பகைவருடையநாட்டுவயலைக் கொள்ளையூட்டுதல், எ, கசு, ருஎ.
பகைவருடையநாட்டையும் அரண்களையும்அழித்துக் கழுதையேரால்உழுது, வரகு கொள்முதலியவற்றைவிதைத்தல், கரு, ஙகூஉ.
பகைவர்நாட்டைக்கைக்கொண்டு பரிசிலர்க்கு இனியனசெய்தல், கஉ.
பகைவருடையபொருள்களில் தாம் கொள்வனவற்றைக்கொண்டு பிறவற்றைச்சிதறிவிடுதல், உங.

பகைவருடையபொருள்களைத் தம்வீரரீற்கொள்வித்தல், ௨௩.
பகைவருடையமனைமரங்களை விறகாக்கொள்ளுதல், ௧௬.
பகைவருடையமுடிப்பொன்னால் கழல்செய்வித்துப்புனைதல், ௪௦.
பகைவருடையமுரசத்தை வௌவுதல், ௨௫, ௨௬, ௭௨, ௧௭௯.
பகைவருடைய யானையின்நெற்றிப்பட்டப்பொன்னால்தாமரைசெய்வித்துப் பாணர்க்குச்சூட்டுதல், ௧௨௬.
பகைவரை அழிக்கத்தொடங்குங்கால் பசுமுதலியவற்றைநோக்கி நீர்விலகுமினென்றல், ௯.
பங்குனிமாதம், ௨௨௯.
பசப்பு, ௮௪.
பசி, ௬௯, ௧௩௬, ௧௪௧, ௧௫௦, ௧௫௯, ௧௬௦, ௧௬௩, ௨௩௦, ௪௦௦.
பசு, ௩௪, ௧௩௮, ௨௫௯.
பசுக்கன்று, ௨௭௫.
பசுத்தொழு, ௧௭௧.
பசுநிரை, ௨௨௪, ௨௩௦, ௨௬௯.
பசுப்பால், ௩௮௯.
பட்டினி, ௩௭௧.
படாம், ௧௪௧, ௧௪௫.
படுமலைப்பாலைப்பண், ௧௩௫.
படை, ௧௭௭, ௩௨௬.
படைக்கலக்கொட்டில், ௯௫.
படைக்கலம்பயில்வோர்முருக்கமரத்தாற்செய்ததூணத்தை இலக்காகக்கொண்டு அதில் ஆயுதங்களைச்செலுத்துதல், ௧௬௯.
படைமடம், ௧௪௨.
படையிறந்தபின்பு தலைவரிறத்தல் அறப்போரென்பது, ௬௨.
படைவாள், ௪௨.
பண்டங்களேற்றியவண்டி, ௯௦.
பண்டம், ௧௦௨.
பண்ணன், ௭௦, ௧௭௩, ௧௮௧, ௩௮௮.
பதலை, ௧௫௨.
பதினெண்கணம், ௧.
பந்தர், ௩௨௪, ௩௩௧.
பயறு, ௨௯௭.
பயன்கருதாது கொடுக்கவேண்டுமென்பது, ௧௩௪.
பயிர் (= விலங்கின் ஓசைக்குறிப்பு), ௧௫௭.
பரணர், ௯௯.
பரதவர், ௨௪, ௩௦, ௩௭௮.
பரிசில், ௧௦௧, ௧௪௫, ௧௪௭, ௧௫௯.
பரிசில்வாழ்க்கை, ௪௭.
பரிசிலர், ௩௮, ௧௨௧, ௧௩௫, ௧௬௮, ௨௩௭.
பரிசிலர்க்குத்தேர்கொடுத்தல், ௬௯.
பரிசிலர்க்கு யானைகொடுத்தல், ௧௪௦.
பரிசிலர்வாழ்க்கை, ௨௦௬.
பரிசிலருடையதரமறிந்துகொடுத்தல் சிறந்ததென்பது, ௨௦௮.
பரிசை, ௧௬, ௧௭, ௯௭.
பருக்கைக்கல், ௨௪௬, ௨௫௭, ௨௬௪.
பருத்தி, ௨௯௯, ௩௨௪, ௩௯௩.
பருத்திநூற்கும்பெண், ௧௨௫.
பருந்தின்சிறகு, ௧௫௦.
பருந்து, ௩, ௪௩, ௬௨, ௬௪, ௧௫௦, ௧௭௯, ௨௬௯, ௨௭௯, ௩௪௩, ௩௬௦, ௩௭௦, ௩௭௩.
பல்லி, ௨௫௬.
பலராமன், ௫௬, ௫௮.
பலாச்சுளை, ௧௨௯.
பலாப்பழத்தைக் குரங்குகளுண்டல், ௨௦௦.
பலாப்பழம், ௧௦௯, ௨௦௦, ௨௩௬.
பலாமரம், ௧௦௯, ௧௨௮, ௧௨௯, ௧௪௦, ௧௫௦, ௧௫௮, ௩௮௦.
பலி, ௫௨, ௧௪௩, ௩௭௪.
பவழம், ௨௧௮.
பழஞ்சோறு, ௩௯௫, ௩௯௯.
பழந்துணி, ௬௯, ௧௩௬, ௧௩௮, ௧௫௦, ௩௭௬, ௩௮௫, ௩௯௦, ௩௯௨, ௩௯௩, ௩௯௮, ௪௦௦.
பழித்ததுபோலப்புகழ்தல், ௧௨.
பழுத்தமரத்தில் பறவைகளொலித்தல், ௧௭௩.
பழைய ஊர், ௩௭.
பழையசுவர், ௨௧௧.
பள்ளம், ௧௦௨.
பறந்தலை, ௨௩௭, ௩௭௩.
பறம்பில் உண்டாகும் நான்குபொருள்கள், ௧௦௯.
பறம்புநாடு, ௧௧௦, ௧௧௮.
பறம்புநாடு முந்நூறு ஊர்களையுடையதென்பது, ௧௧௦.
பறம்புமலை, ௧௦௮, ௧௦௯, ௧௧௦, ௧௧௩, ௧௫௮, ௧௭௬, ௩௩௭.
பறம்புமலைச்சுனை, ௧௭௬.
பறவைக்கூடு, ௩௯௭.
பறவைநிமித்தம், ௬௮, ௧௨௪, ௨௦௪.
பறை, ௬௮.
பறையன், ௩௩௫.

பன்றி, ௧௫௨.
பன்றிஉழுதல், ௧௬௮.
பன்றுடையார்களைவடித்தல், ௧௭௦.
பனங்கருக்கு, ௨௯.
பனங்கிழங்கைச்சுட்டுண்ணுதல், ௨௨௫.
பனந்துண்டம், ௩௫.
பனந்தோட்டையும் வெட்சிப்பூவையும் வேங்கைப்பூவோடுசேர்த்துத் தலையிலணிந்துகொள்ளுதல், ௧௦௦.
பனந்தோடு, ௧௦௦.
பனம்பழம். ௨௨௫.
பனம்பிசிர், ௨௨௫.
பனை, ௨௪, ௩௫, ௪௫, ௬௧, ௮௫, ௧௦௦, ௧௬௧, ௨௨௫, ௨௯௭, ௩௩௮, ௩௪௦.
பனைக்கொடி, ௫௬.
பனைநரும்பு, ௨௪௯.
பனைநுங்கு, ௨௨௫, ௩௮௯.
பனையோலையாலலங்கரித்தல், ௨௬௫.
பனையோலையாற்செய்யப்பட்ட குடையிலேயுண்ணுதல், ௧௭௭.

## பா.

பாகல், ௧௬, ௩௯௯.
பாசறை, ௩௩, ௬௨, ௬௪, ௬௯, ௨௮௫, ௨௯௩, ௩௦௧, ௩௦௪, ௩௦௯, ௩௬௨, ௩௭௧, ௩௭௨, ௩௭௩.
பாசறையியல்பு, ௨௨.
பாசறையிற் பாண்சுற்றத்திற்கு ஊன்சோற்றுத்திரளையைக் கொடுத்தல், ௩௩.
பாசி, ௩௯௨.
பாடற்றுறை இருபத்தொன்று, ௧௫௨.
பாடுவோர், ௨௨௧.
பாடை, ௩௬௦, ௩௬௩.
பாண்டவர், ௨.
பாண்டிநாட்டில் ஏழரண்களிருந்தன என்பது, ௩௩.
பாண்டியர் மன்றத்தில்உள்ள வேம்பின் தளிரை அணிதல், ௭௬, ௭௭, ௭௯.
பாண்டியன் (=பாண்டியர்), ௩, ௩௩, ௫௫, ௫௮, ௫௯, ௧௭௯.
பாண்டியன் வேப்பந்தளிரோடு உழிஞைக்கொடியைச்சூடுதல், ௭௬, ௭௭.
பாணர்(=பாணனு)க்குப் பொற்றாமரைப்பூக்கொடுத்தல், ௧௧, ௧௨, ௨௯, ௬௯, ௩௧௯, ௩௬௪.
பாணர்க்கு மதுக்கொடுத்தல், ௨௨௪.
பாணர்களை உண்பித்தல், ௩௩, ௩௪.
பாணன் (பாணர்), ௧௧, ௨௯, ௩௪, ௬௯, ௭௦, ௧௧௫, ௧௨௬, ௧௨௭, ௧௩௫, ௧௪௧, ௧௭௩, ௨௧௨, ௨௩௫, ௨௪௨, ௨௪௪, ௨௮௫, ௩௩௫.
பாத்தி, ௩௮௬.
பாதகங்கள், ௩௪.
பாதியிரவு, ௨௨௯.
பாதிரிமரம், ௭௦.
பாதிரியரும்பு, ௩௯௯.
பாம்படிக்குங்கோல், ௮௯.
பாம்பின்தலைகெடும்படி இடியொலித்தல், ௨௧௧.
பாம்பின்பல், ௩௭, ௧௨௬.
பாம்பின்புற்று, ௩௦௯.
பாம்பு, ௧௭, ௫௮, ௮௩, ௧௨௬, ௨௧௧, ௩௬௫, ௩௮௨, ௩௯௩, ௩௯௭.
பாம்புதோலுரித்தல், ௨௬௦.
பாய், ௨௪௬, ௩௧௭.
பாய்மரம், ௩௦.
பார், ௧௮௫.
பார்ப்பார், ௩௪, ௪௩.
பார்ப்பார்க்குப் பொன்னைத் தாரைவார்த்துக்கொடுத்தல், ௩௬௭.
பார்வைமான், ௩௨௦.
பாரதப்போரில் ஒருசேரன் இருவகைப் படையையுமுண்பித்தது, ௨.
பாரி (=ஒருவள்ளல்), ௧௦௫, ௧௦௬, ௧௦௭, ௧௦௮, ௧௦௯, ௧௧௦, ௧௧௩, ௧௧௬, ௧௫௮, ௨௦௦, ௨௦௧, ௨௦௨, ௨௩௬.
பாரி எவ்விகுலத்தானென்பது, ௨௦௨.
பாரிமகளிர், ௨௦௦, ௨௦௧, ௨௦௨.
பாரி முல்லைக்கொடிக்குத் தேர்கொடுத்தது, ௨௦௦, ௨௦௧.
பால், ௩௪, ௧௬௮.
பாலை உலையாகவைத்தல், ௧௬௮.
பாவை, ௧௧.
பாழ், ௨௩, ௨௨௫, ௩௮௧.
பாழூர், ௧௫௫.
பாழூர்க்கிணறு, ௧௩௨.
பாற்பானை, ௬௫.
பாறை, ௧௧௮.
பானை, ௧௬௮, ௨௫௭, ௩௭௧.

## பி.

பிசிராந்தையார், ௬௭.
பிசிரென்னுமூர், ௬௭, ௨௧௫.
பிட்டங்கொற்றன் வேங்கைப்பூமாலையைச்சூடிக்கொள்வனென்பது, ௧௬௮.
பிட்டங்கொற்றனுடையதலைவன் சேரனென்பது, ௧௭௨.

பிட்டன், ௧௯, ௧௭௨.
பிடவூர், ௩௯௫.
பிண்டம், ௨௩௪, ௩௬0,
பிண்டோதகக்கிரியை, ௯.
பிணஞ்சுடுதற்கடுக்கும் விறகடுக்கு, ௨௩௧, ௨௪௫.
பிணத்தைத் தாழியாற்கவித்துப்புதைத்தல், ௨௨௮, ௨௩௮, ௨௫௬.
பிணப்படுக்கை, ௨௪௫, ௨௪௬.
பிதிரர், ௯.
பிரமதேவன், ௧௯௪.
பிரிந்தமகளிர், ௧௯௪.
பிள்ளை (பிள்ளைகள்), ௧௬0, ௧௮௮, ௧௯௮, ௨௧௧, ௨௫0, ௨௭௩.
பிள்ளைகளில்லோர் பயனடையாரென்பது, ௧௮௮.
பிள்ளைகளின்துயரத்தைத் தாய்போக்குதல், ௧௬0.
பிள்ளைகளுடைய இளஞ்சொல், ௯௨.
பிள்ளைப்பேறு, ௮௨.
பிறர்க்காகமுயல்வோர்தன்மை, ௧௮௨.
பிறருடையகுற்றஞ்சொல்வோரைத்தேறலாகாதென்பது, ௧0.
பிறருடையவறுமையைக் கண்டவிடத்துத் தாம் நாணவேண்டுமென்பது, ௧௫௭.
பிறை, ௧, ௫௫, ௯௧.
பிறைமுடி, ௯௧.
பின்படை, ௮௮.

## பீ.

பீர்க்கு, ௧௧௬.
பீலிக்கண்ணி, ௨௭௪.

## பு.

புகழ், ௧௧, ௨௭, ௨௯, ௩௧, ௫0, ௫௩, ௫௬, ௧௨௩, ௧௩௩, ௧௩௫, ௧௪௫, ௧௪௮, ௧௫௯, ௧௬0, ௧௬௫, ௧௬௮, ௨0௨, ௨௧௩, ௨௨௮, ௩௫௯.
புகழ்மாலை, ௧௭௬.
புகார், ௩0.
புகை, ௧0௩, ௧0௮, ௨௨௮.
புண்ணியம், ௩௧, ௩௯, ௫௫, ௧0௮, ௧௬௬.
புண்வழலை, ௨0௨.
புதல், ௧௧௭, ௩௫௨.
புதிதுண்ணுதல், ௧௬௮.
புதைக்குங்கலம், ௨௨௮, ௨௩௮, ௨௫௬.
புல், ௧௧௬, ௧௧௭, ௧௬0, ௨௪௮.
புல்லரிசி, ௨௪௮.
புல்லால்வேயப்பட்ட சிறியமனை, ௧௨0.
புல்வாய்மான், ௧௯௩.
புலம்பல், ௨௩௨, ௨௩௪, ௨௩௫, ௨௪௨.
புலவர், ௧௨, ௪௨, ௭௨, ௧0௭, ௧௩௫, ௨௩௫, ௨௪0.
புலவர்க்கு யானையுந்தேருங்கொடுத்தல், ௧௨.
புலவருடைய தகுதியையறிந்துகொடுக்கவேண்டுமென்பது, ௧௨௧.
புலி, ௨௩, ௩௩, ௪௨, ௫௨, ௫௪, ௭௩, ௭௮, ௮௬, ௯0, ௧00, ௧௩௫, ௧௫௨, ௧௭0, ௧௯0, ௨0௨, ௨௩௭, ௨௫௫, ௩௨௩.
புலி இடம்வீழ்ந்தஉணவை உண்ணாதென்பது, ௧௯0,
புலிக்கண், ௨௬௯.
புலிக்குருளை, ௪௨.
புலிகடிமால், ௨0௧, ௨0௨.
புலித்தோல், ௩௭௪.
புலித்தோலாற்செய்யப்பட்ட கவசம், ௧௩.
புலிப்பற்றாலி, ௩௭௪.
புலிப்பொறி, ௩௩, ௫௮, ௧௭௪.
புலி பன்றித்தசையையும் யானையிறைச்சியையும் உண்டல், ௧௯0.
புலியின் இரை, ௫௨.
புலியேறு, ௧௫௭.
புலியையகப்படுத்தும் எந்திரம், ௧௯.
புலைத்தி, ௨௫௯, ௩௧௧.
புலைமகன், ௮௨, ௧௭0, ௨௮௭.
புலையன்துடிகொட்டுதல், ௧௭0.
புழுதி, ௧௨0.
புள், ௪௭, ௪௯.
புள்ளிமான்கலை, ௧௫௨.
புள்ளினங்கள் ஆலம்பழத்தையுண்ணுதல், ௧௯௯.
புள்ளினங்களினியல்பு, ௨0௯.
புளி, ௨௬௬, ௩௯௯.
புளிங்கறி, ௧௧௯.
புளிங்கூழ், ௨௧௫, ௩௯௯.
புளிச்சுவை, ௧௭௭.
புற்கை, ௬௪, ௮௪.
புற்று, ௫௧, ௧௧௯, ௧௫௨, ௩௨௯, ௩௩௩.
புறச்சமயத்தோர், ௧௬௬.
புறப்படும்முகூர்த்தம், ௨0௪.
புறப்புண், ௬௫, ௬௬.
புறவின்துயரத்தை ஓரரசன் மாற்றியகதை, ௩௭, ௩௯, ௪௩, ௪௬.
புறவின்முட்டை, ௩௪.
புறவு, ௪௩, ௩௨௭.
புன்புலம் (=புன்செய்), ௧௮, ௩௪, ௧௧௭.

புன்னை, உச, ஙஅசு.
புன்னைப்பூமாலை, உச.
புனங்காப்போர், சக.
புனம், கஙஅ, கசங, கருக, உஙக.
புனர்பூசம், உஉக.

## பூ.

பூங்குன்றம், ககங.
பூஞ்சோலை, ஙங, ககசு.
பூணூல், கசுசு.
பூண்கட்டியதண்டு, உசங.
பூதம், ஙசுக.
பூமி, உ, ங, கஉ, உ௦, ருஅ, கஙஎ, உ௦க, உ௦ங, உகங, ஙசுங.
பூமிக்குக்கீழே நீர்நிலையுண்டென்பது, சு.
பூவடிவமமைந்தஆடை, உஎச.
பூழின்சேவல், ஙஉக.
பூளை, உங.

## பெ.

பெண்கள் மதுவைப் பொற்கலத்தேந்தி யுண்ணுதல், உச.
பெண்யானை, ச௦, சச, கங௦, கருக, உஙச, ங௦ங.
பெண்ணையாறு, கஉசு.
பெரியகல்லையுடைய அடார், கங.
பெரியயாழ், கருஉ.
பெருங்கண்ணுறை, கரு.
பெருங்கொடை, ஙசு௦.
பெருங்கோக்கிள்ளி, சுஎ.
பெருஞ்சோறு, உ, உஙரு.
பெருவங்கியம், கருஉ.

## பே.

பேகன் (=ஒருவள்ளல்), கசக, கசஉ, கசங, கசச, கசரு, கசசு, கருஅ.
பேகன் மயிலுக்குப்படாங்கொடுத்தது, கசக, கசரு.
பேய், உஙஅ.
பேய்ப்பெண்டிர், சுஉ.
பேய்மகள், ஙசுக, ஙஎ௦, ஙஎக.
பேய்மகளிர், சுஉ, ஙருக.
பேராந்தை, கஎ௦, உச௦, உசுக, ஙருக, ஙசுஉ, ஙசுச, ஙஎ௦.
பேராந்தைசுட்டுக்குவியென்றுகூவுதல், உச௦.

## பொ.

பொருவற்பறவை, உஙஅ.
பொத்தியார் (=ஒருபுலவர்), உகஉ.
பொதியமலை, உ, ஙங, கஉஅ, உகரு.
பொதியமலைச்சந்தனம், ருசு.
பொதுமகளிர், எங.
பொருந்து, உச௦.
பொய், ருக.
பொய்கை, உசசு, உசக, உஅஎ, ஙருக, ஙருச.
பொரியல், உசுக.
பொருந்தில், ருங.
பொருள், உ௦உ.
பொற்கம்பி, கஙரு.
பொற்கலத்தில் உண்ணுதல், கசு௦.
பொற்படையால் அலங்கரித்தகுதிரை, கஙரு.
பொற்படையால் அலங்கரித்ததேர், கஉங.
பொற்படையால் அலங்கரித்தயானை, கஎஎ.
பொற்றளிர் உழிஞை, ரு௦.
பொற்றாமரை, கஉசு, கசக.
பொற்றாமரைமாலை, உங, ஙகங.
பொற்றும்பை, உ, உஉ, ஙஎ.
பொன், கருஉ, உகஅ, ஙருசு.
பொன்னரிமாலை, ஙக, ஙஎ, கசக, கருங, உஉ௦, உஉசு, ஙருஉ.
பொன்னோடு, ஙஅ.
பொன்னுபாணம், எசு, உஉஎ.

## போ.

போர்க்களக்காட்சி, சுங.
போர்க்களத்தைத் தனதாக்கிக்கொள்ளு தல், ருங.
போர்க்களம், உசு, ஙரு, சுஉ, சுச, அஎ, கூஅ, உஉஎ, உஙரு, ஙஎங, ஙகஉ.
போர்செய்தற்கு விழாவெடுத்தல், அச.
போர்ப்பறை, எசு, எஅ, உஎக.
போர்வீரர் பகைவரைப்பார்த்திருத்தல், ங.
போர்வீரரிருப்பு, ங.
போர்வீரரும் யானையும் போர்ப்பறை முன்னர்ச் செல்லவேண்டுமென்றல், எக.
போர்வை, ஙகக.
போரில் பகைவரை முரசத்தோடுகைக் கொள்ளுதல், எஉ.

## ம.

மகளிர், ஙச, சஉ, சச, ருங, சுஅ, கூசு, ககசு, ககஎ, கஉ௦, கஙக, கசுக, கஎசு, உ௦க, உஉக, உச௦, உசங, உருக.

மகளிர் ஆய்பற்றண்டாற்செய்த வளையையணிந்துகொள்ளுதல், ௬௩.
மகளிர் கண்கள், ௧௧௧, ௧௪௬, ௧௪௭.
மகளிர் கணவருடனிறத்தல், ௬௨.
மகளிர் கூந்தல், ௯௭.
மகளிர் கை, ௨௫௩.
மகளிர் நடை, ௧௩௩.
மகளிர் மார்பிலறைந்துகொள்ளுதல், ௨௩௭.
மகளிர் முன்கை, ௧௧.
மகளிர் விரல், ௧௪௪.
மகளிர் விளையாட்டு, ௧௭௬.
மங்கலியசூத்திரம், ௧௨௭.
மட்டையாகியதலை, ௨௬௧.
மடல், ௩௭௦, ௩௭௧.
மடு, ௩௭, ௨௪௩.
மடுவில் இளைஞர்பாய்ந்து முழுகி மண்ணெடுத்துவருதல், ௨௪௩.
மண்டை (=பாணர்கைப்பாத்திரம்), ௧௦௩, ௧௧௫, ௧௨௫, ௧௫௫, ௧௭௯, ௨௩௫, ௨௬௧, ௨௮௬, ௩௫௨, ௩௮௬, ௩௯௮.
மணப்பறை, ௧௯௪.
மணல், ௩௩, ௫௩, ௯௦, ௧௩௬, ௧௭௮, ௨௪௩, ௨௬௨, ௩௬௩.
மணலினும் பலகாலம் வாழ்வாயாகவென்றல், ௫௫.
மணற்குன்று, ௧௭௭.
மணி, ௫௩, ௧௫௨, ௨௮௧, ௩௫௬.
மணிக்கோவையாகிய ஆபரணம், ௮௯.
மணிகள்நெருங்கப்பதித்தகுவளைப்பூவை வெள்ளிநாராற்றொடுத்த பொன்னரி மாலை, ௧௫௩.
மத்தளம், ௧௨௮, ௧௬௪.
மதில், ௧௭, ௧௮, ௨௧, ௩௬, ௩௭, ௪௦, ௪௪, ௯௩, ௯௭, ௨௦௧, ௨௨௪, ௨௭௨, ௩௪௩, ௩௫௦, ௩௫௫, ௩௮௭.
மதிற்சூட்டு, ௨௧.
மதிற்படை, ௨௨௪.
மது, ௨௪, ௩௪, ௫௬, ௬௫, ௧௦௯, ௧௧௩, ௧௧௪, ௧௫௨, ௧௬௦, ௨௧௨, ௨௨௪, ௨௩௯, ௨௫௮, ௨௬௨.
மதுக்குடம், ௨௨௪, ௨௩௯.
மதுரை, ௩௨, ௫௮, ௩௪௭.
மதுவை நிலத்திற்புதைத்துவைத்து முற்றச்செய்தல், ௧௨௦.
மதுவை மூங்கிற்குழாயில்வார்த்து முதிரவைத்தல், ௧௨௯.
மந்தி, ௧௨௮, ௧௫௮, ௨௦௦, ௨௪௭.
மந்திரிச்சுற்றத்தினிலக்கணம், ௨.
மயில், ௧௩, ௬௦, ௧௧௬, ௧௨௭, ௧௩௩, ௧௪௧, ௧௪௫, ௧௪௬, ௨௫௨, ௩௪௪, ௩௯௫.
மயில்வாகனம், ௫௬.
மயிற்கொடி முருகக்கடவுளுக்கு உரித்தென்பது, ௫௬.
மயிற்பீலியால் மாலைதொடுத்தல், ௫௦, ௨௭௪.
மயிற்பேடை, ௧௨௦.
மரத்துண்டம், ௨௩௧.
மரநிழல், ௨௧௯.
மரம், ௧௦௯, ௧௧௬, ௧௩௬, ௨௭௦, ௨௭௩, ௩௪௮.
மரல், ௩௭௦.
மரல்நார், ௨௬௪.
மருதநிலம், ௧௬.
மருதப்பண், ௧௪௯.
மருதமரம், ௫௨, ௨௪௩, ௩௪௪, ௩௫௨.
மருந்துகொள்ளுமரம், ௧௮௦.
மருப்பு (=யாழுறுப்புள்ளொன்று), ௨௪௨.
மரையா, ௧௬௮, ௧௭௦, ௨௯௭.
மரையாவின்பால், ௧௬௮.
மலங்குமீன், ௬௧.
மலை, ௨௨, ௪௨, ௫௨, ௯௧, ௧௦௩, ௧௦௫, ௧௦௯, ௧௧௧, ௧௨௦, ௧௨௫, ௧௩௧, ௧௩௫, ௧௩௬, ௧௩௮, ௧௪௦, ௧௪௩, ௧௪௭, ௧௫௨, ௧௫௬, ௧௫௭, ௧௫௮, ௧௭௦, ௧௯௮, ௨௧௧, ௨௫௫.
மலைக்குகை, ௩௭.
மலைச்சாரல், ௯௦, ௧௫௦.
மலைச்சிகரம், ௧௦௫.
மலைநாடு, ௬௦.
மலைப்பக்கம், ௧௩௭, ௨௦௦.
மலைமல்லிகை, ௧௬௮, ௩௮௦.
மலையன், ௧௨௩, ௧௨௪, ௧௨௫, ௧௫௮.
மலையிடத்துப் பொன்னுண்டாதல், ௧௫௨, ௨௦௧.
மலையில் தெய்வமிருத்தல், ௧௫௧.
மலையில்வாழ்வோருணவு, ௧௬௮.
மலையுச்சி, ௧௨௦, ௧௩௯.
மலைவழி, ௧௩௫.
மழவர், ௮௮, ௯௦.
மழு, ௫௬, ௨௦௬.
மழை, ௩௪, ௮௨, ௧௦௭, ௧௩௭, ௧௪௨, ௧௪௩, ௧௪௪, ௧௫௯, ௧௭௪, ௧௯௨, ௩௯௭.
மழைத்துளி, ௧௨௩, ௩௬௭, ௩௮௫.
மழைத்துளியினும் பலகாலம்வாழ்கவென்றல், ௩௪.
மழை வேண்டுங்காலத்துப்பெய்வித்தற்கும் வேண்டாக்காலத்துஒழித்தற்கும்

குறவர்தெய்வத்திற்குப் பலிதூவுதல், ௧௪௩.
மற்போர், ௮௦.
மறக்குடிமகளிர், ௧௯, ௨௭௭, ௨௭௮, ௨௭௯.
மறத்தி, ௧௮௧.
மறவர், ௪௩, ௧௭௭, ௨௫௮, ௨௭௦, ௨௭௪.
மறவர்தொழில், ௬௮.
மறுபிறப்பு, ௨௩௬.
மன்றத்தில் பரிசிலர்தங்குதல், ௧௩௫.
மன்றத்தில் முழவுதூக்கப்படுதல், ௮௯.
மன்றம் (=மன்று), ௪௬, ௭௬, ௭௯, ௧௨௮, ௧௮௧, ௨௨௦, ௨௭௦, ௩௦௯, ௩௨௫, ௩௩௩, ௩௭௧, ௩௭௩, ௩௭௪, ௩௮௭, ௩௮௯, ௩௯௦.
மன்றவிளவு, ௧௮௧.
மன்றவேம்பு, ௭௬.
மனைவி, ௨௨௨.
மனைவி, இறந்தகணவனுக்கு உணவுகொடுத்தற்பொருட்டுச் சிறியவிடத்தை மெழுகுதல், ௨௪௯.

## மா.

மாங்கனி, ௩௯௯.
மாங்குடிமருதனார், ௭௨.
மாடம், ௫௩, ௬௭, ௮௯, ௩௭௮, ௩௯௦.
மாணிக்கம், ௧௭௨, ௨௧௮.
மாதம், ௮௭.
மாயோன், ௫௭.
மார்ச்சனை, ௧௫௨, ௧௬௪.
மார்பிற்செம்பொறியிருத்தல் உத்தமவிலக்கணமென்றல், ௬௮.
மார்பு, ௧௦, ௫௯, ௧௫௫, ௧௫௭, ௧௬௧, ௧௯௮, ௨௦௯, ௨௧௧, ௩௯௪.
மாலை, ௪௮, ௬௧, ௯௫, ௧௪௬, ௧௭௨, ௨௨௭, ௨௬௯.
மாலைக்காலம், ௬௭, ௧௪௪, ௧௪௯, ௨௩௨.
மாலைப்பந்து, ௩௩.
மாலையந்தி, ௩௪.
மாலையில் இலையைச்சேர்த்துக்கட்டுதல், ௨௩.
மாவன், ௭௧.
மாவிலங்கையென்னுமூர், ௧௭௬.
மாறோக்கம்=மாறோகம் (ஒருநாடு), ௩௭, ௩௯, ௧௨௬, ௨௮௦.
மான், ௨, ௩௩, ௯௦, ௧௩௮, ௧௫௦, ௨௪௭, ௩௭௪.
மான்கலை, ௨௩, ௧௫௨, ௧௫௭, ௧௬௧, ௩௨௦.
மான்குட்டி, ௨.
மான்பிணை, ௨௩, ௧௫௭.
மான்றசைப்புழுக்கல், ௧௫௨.
மானிறைச்சி, ௧௬௮.

## மி.

மிருகசீரிடநாள், ௨௨௯.
மிழலைக்கூற்றம், ௨௪.
மிளகுகொடி, ௧௬௮.
மிளகுமூடை.
மின், ௪௨.

## மீ.

மீன், ௭, ௧௩, ௨௯, ௧௩௮, ௩௯௬.
மீனக்கொடி, ௫௮.
மீனைச்சுடுதல், ௫௨.

## மு.

முக்காவனாடு, ௮௦.
முக்குதல் (=மொக்குதல்), ௬௩.
முசுக்கலை, ௧௧௬, ௨௩௬.
முசுண்டை, ௩௨௦.
முசுறி, ௩௪௩.
முஞ்ஞை, ௧௯௭, ௩௨௦, ௩௨௮.
முஞ்ஞையிலை, ௧௯௭.
முட்டுக்கள், ௨௦௬.
முத்தாரம், ௧௯, ௧௫௦.
முத்தியின்பத்தைத்தரும் நற்செய்கைகளை அறிந்து செய்துகொள்கவென்றல், ௧௯௪.
முத்தீ, ௨, ௩௬௭.
முத்து, ௫௩, ௫௮, ௨௧௮, ௩௫௬, ௩௮௦.
முத்தூற்றுக்கூற்றம், ௨௪.
முதலை, ௩௭, ௧௦௪.
முதற்போர்க்குச்செல்லுகையில் வீரர் நீராடிச்செல்லவேண்டுமென்றல், ௭௯.
முதியவள்கூந்தல், ௧௫௯.
முதிரமலை, ௧௫௮, ௧௬௦, ௧௬௩.
முதுமக்கட்டாழி, ௨௫௬.
முதுமை, ௧௫௯.
முந்நீரென்பதற்குப்பொருள், ௯.
மும்முரசம், ௫௮.
முயல், ௩௪, ௩௨௮, ௩௩௩, ௩௩௪, ௩௩௯, ௩௮௪, ௩௯௫, ௩௯௬.
முயலின்குட்டிறைச்சி, ௩௪, ௩௧௯.
முயற்சி, ௧௦௯, ௧௪௮, ௨௧௩.
முயற்சியாலீட்டியபொருளில் நல்லனவற்றைப் பரிசிலர்க்குவழங்கி எஞ்சியதை ஒருவனுண்ணவேண்டுமென்றல், ௧௨௫.
முயற்சியில்லாதவனுடம்பு அழகிழந்திருத்தல், ௬௯.

முரசு, ௧௭, ௩௬, ௫0, ௫௮, ௬௨, ௬௩, ௯௩, ௧0௯, ௧௧௨, ௧௨௬, ௧௩௭, ௧௪௩, ௧௫௮, ௧௬௧, ௧௭௪, ௧௭௯, ௧௯௭, ௨௨௯, ௨௩௮, ௨௪௧, ௨௭0, ௨௮௮, ௩௬௨, ௩௬௫, ௩௬௯, ௩௮௭, ௩௯௭.
முரசுகட்டில், ௫0.
முருக்கமரம், ௧௬௯.
முருகக்கடவுள், ௧௬, ௨௩, ௫௬, ௧௨0, ௧௨௫.
முருகக்கடவுள்கோயில், ௨௯௯.
முருகக்கடவுள் திருச்செந்திலிருத்தல், ௫௫.
முருகக்கடவுள் போரிற்சிறந்தவரென்றல், ௧௪.
முருகக்கடவுளின் யானைவாகனம், ௫௨.
முல்லைக்கொடி, ௧௧௭, ௧௪௪, ௨00, ௨௪௨, ௩௩௫, ௩௯௯, ௩௫௨, ௩௯௫.
முல்லைநிலம், ௩௮௬.
முழவு, ௬௫, ௮௫, ௮௮, ௮௯, ௧0௩, ௧௫௨, ௨௩௬.
முழுத்தசை, ௨௧௯.
முழுநெறி, ௧௧௬.
முன், ௧௭௧, ௨௨௫.
முன்வேலி, ௧௧௬, ௩0௧.
முன்வேலியையுடையதோட்டம், ௧௯௭.
முள்ளம்பன்றி, ௩௨௫, ௩௭௪.
முன்னோர்மலை, ௧௨௩, ௧௨௬, ௧௭௪.
முற்றம், ௧௭0, ௧௭௮.
முற்றுகை, ௪௪.
முறைமைசெய்தல், ௩௯.
முன்கைக்கடகம், ௧௫0, ௧௫௩.
முன்படை, ௮௮, ௯௩.
முன்பு ஒருதொழிலைச்செய்து பின்பு பிழைக்கச்செய்தேமென்று கருதலாகாதென்றல், ௧0.
முனிவர், ௪௩.

## மூ.

மூங்கில், ௭௩, ௧0௯, ௧௨0, ௧௫௮, ௧௬௬, ௧௬௮, ௨00, ௨௭௭, ௩௭0, ௩௯௫.
மூங்கில்இழைந்து ஒலித்தல், ௧௨0.
மூங்கில்நெல், ௧0௯.
மூங்கில்முளை, ௭௩.
மூங்கிற்பட்டை, ௨௫௩.
மூதிற்பெண்டிர், ௧௯.
மூப்பு, ௨௪௩.
மூப்புடையவள், ௧௫௯, ௨௭0, ௨௭௭, ௨௭௮.
மூப்புடையோர்பேசுதல், ௨௪௩.
மூரிநிமிர்தல், ௫௨.
மூவகையுலகமும் இன்னவென்பது, ௬.

## மெ.

மெய், ௧0.
மெய்புகுகருவி, ௧௩.
மெழுகடை, ௧0௩.
மென்புலம், ௪௨.
மென்மை, ௫௫.

## மே.

மேகம், ௩௫, ௫௪, ௧0௩, ௧௩௧, ௧௪௩, ௧௬௧, ௨0௩, ௨0௫, ௨௬௬.
மேட்டுநிலம், ௧0௨, ௧௨0.
மேட இராசி, ௨௨௯.
மேல்கடல் பழையகடலென்பது, ௬.
மேலீடு, ௬௧.

## மை.

மையலென்னுமூர், ௭௪.

## மோ.

மோசியென்னும்புலவர், ௧௫௮.
மோர், ௧௫௯.

## ய.

யமன், ௩, ௧௯, ௪௨, ௫௬, ௭௫, ௯௮, ௧௯௫, ௨0௯, ௨௨௬, ௨௨௭, ௨௩௭, ௨௩௮, ௨௫௫, ௩௬௧, ௩௬௨, ௩௬௩, ௩௬௬.
யமன் பாசத்தாற்கட்டுதல், ௧௯௫.
யமனைவைதல், ௨௨௧.
யவனர் தேறல் கொணர்தல், ௫௬.

## யா.

யாகசாலை, ௧௫, ௨௨௪.
யாகஞ்செய்வோர் கலைமானினது உரிப்புத்தோலைத் தோளிலணிதல், ௧௬௬.
யாகத்தின்முடிவில் விருந்தினரைப்பேணுதல், ௧௬௬.
யாகத்திற்குரிய எழுவகைக்காட்டுப்பசு, ௧௬௬.
யாகபத்தினிகள் நெற்றியில் ஜாலகத்தைச்சூடிக்கொள்ளுதல், ௧௬௬.
யாகபத்தினிகள் யாகத்தில் தலைவர்க்கு ஏவல்செய்தல், ௧௬௬.
யாகம், ௧௫, ௧௨௨, ௧௬௬, ௨௨௪, ௪00.
யாழ், ௬௪, ௬௫, ௬௯, ௭0, ௯௨, ௧0௯, ௧௨௭, ௧௩௫, ௧௪௪, ௧௪௫, ௧௪௯, ௧௫௨, ௧௬௩, ௧௬௪, ௨௮௧.
யாழ்த்தொடை, ௭0.
யாழ்த்தோல், ௩0௮.
யாழ்நரம்பு, ௧0௯, ௧௩௫, ௧௬௪, ௩0௮.
யாழ்ப்பத்தர், ௧௩௬.
யாழ்ப்புலவர், ௧௫௫.
யாழின்கோடு, ௧௨௭, ௧௪௫, ௧௫௫, ௨௪௨,

யாளி, ௨௦௭.
யானை, ௩, ௪, ௬, ௧௩, ௧௪, ௧௫, ௧௬, ௧௭, ௧௯, ௨௨, ௨௪, ௨௬, ௩௦, ௩௧, ௩௫, ௩௭, ௩௮, ௩௯, ௪௨, ௪௪, ௪௬, ௫௩, ௫௫, ௬௩, ௬௪, ௬௮, ௬௯, ௭௨, ௭௩, ௭௯, ௮௦, ௮௧, ௯௩, ௯௪, ௯௬, ௯௭, ௯௮, ௧௦௦, ௧௦௧, ௧௦௪, ௧௦௯, ௧௧௪, ௧௧௫, ௧௨௫, ௧௨௬, ௧௩௧, ௧௩௭, ௧௪௦, ௧௪௧, ௧௪௨, ௧௪௫, ௧௪௮, ௧௫௨, ௧௫௩, ௧௫௯, ௧௬௧, ௧௬௨, ௧௬௫, ௧௭௦, ௧௭௧, ௧௭௭, ௧௭௮, ௧௮௪, ௧௯௭, ௨௦௦, ௨௨௦, ௨௨௮, ௨௨௯, ௨௩௩, ௨௩௭, ௨௩௮, ௨௪௭, ௨௭௦, ௨௭௫, ௨௮௭, ௩௦௧, ௩௧௦, ௩௩௫, ௩௩௬, ௩௩௯, ௩௪௫, ௩௫௧, ௩௫௯, ௩௬௮, ௩௬௯, ௩௭௦, ௩௭௧, ௩௮௭, ௩௯௪.
யானை எறிகல்லைக் கவுளில் அடக்கிக் கொள்ளுதல், ௩௦.
யானைக்கம்பம், ௨௩, ௪௪, ௧௨௭, ௧௭௮, ௨௨௦.
யானைக்கவளம், ௪௪, ௧௦௧, ௧௧௪, ௧௮௪.
யானைக்கழுத்து, ௨௨.
யானைக்கன்று, ௩௬௧.
யானைக்கன்று விளங்கனியெடுத்தல், ௧௮௧.
யானைக்கூடம், ௨௨௦.
யானைக்கை, ௩, ௨௨, ௧௬௧.
யானை கொம்பால்மதிலைக்குத்துதல், ௩௧.
யானைக்கொம்பிலுண்டாகியமுத்தத்தை விறலியர்க்குக்கொடுத்தல், ௧௭௦.
யானைக்கொம்பு, ௨௨, ௩௯, ௯௪, ௧௦௧, ௧௫௯, ௧௬௧, ௧௭௦, ௨௮௭.
யானைக்கொம்புமுற்றினால் முத்துண்டாமென்பது, ௧௬௧.
யானைச்சூல், ௧௩௦.
யானைத்தலை, ௨௨.
யானைத்திறை, ௩௫௭.
யானைத்தொழில், ௧௪.
யானைநடை, ௨௨.
யானைநிற்றல், ௨௨.
யானை நெட்டுயிர்ப்புக்கொள்ளல், ௨௬௧.
யானைநெற்றி, ௩.
யானை நெற்றிப்பட்டம், ௩, ௧௨௬, ௧௬௧, ௩௨௬.
யானைநோக்கு, ௨௨.
யானைப்பாகன், ௨௨௦.
யானைப்பிணம், ௨௮௪.
யானைப்போர், ௬, ௧௩, ௩௧.
யானைமணி, ௩, ௨௨, ௧௬௧, ௧௬௫, ௨௦௨.
யானைமத்தகம், ௨௨.
யானைமதம், ௩, ௨௨, ௯௩, ௯௪.
யானைமுகத்துப்புள்ளி, ௧௧௯.
யானை முழாவொலியைக்கேட்டல், ௬௮
யானை மூங்கிலைத்தின்றல், ௮௦.
யானைமேற்கொடி, ௯, ௩௮.
யானையாற் கணையமரத்தைமுறிப்பித்தல், ௧௪.
யானையாற் பகைவருடைய காவற்பொய்கையைக் கலக்குவித்துப்படிவித்தல், ௧௫, ௨௩.
யானையாற் பகைவருடைய மதிலரண் கொள்ளுதல், ௩, ௬.
யானையின் அடி, ௨௨.
யானையின் ஆபரணம், ௧௫௩.
யானையின் தந்தப்பூண், ௯௭.
யானையின் போர்த்தொழிலை, ௩, ௨௬.
யானையுங் கன்றுங் கொடுத்தல், ௧௩௫.
யானையைப்பிடிக்கும் குழி, ௧௭.
யானைவடிவு, ௨௨.
யானைவேட்டுவன், ௨௧௪.

## யு.

யுத்தத்தில் இறந்தோருடைய உடம்பை மூடியகற்குவை, ௩.
யுத்தத்தில்மாண்டோர் சுவர்க்கம்புகுதல், ௬௨.
யுத்தத்திற் கொல்லப்பட்டார் இவரென்பது, ௯.
யுத்தம், ௪, ௬௨, ௬௩, ௮௮, ௯௩, ௧௩௯, ௧௭௮, ௨௨௪.

## யூ.

யூபத்தம்பம், ௧௫, ௨௨௪, ௪௦௦.

## வ.

வஞ்சன், ௩௯௮.
வஞ்சி (=கருவூர்), ௧௧, ௩௨, ௩௯, ௩௭௩, ௩௮௭.
வஞ்சிக்கிளை, ௩௮௪.
வஞ்சிபாடுதல், ௩௭௮, ௩௯௪.
வடக்கிருத்தல், ௬௫, ௬௬, ௨௦௯, ௨௧௪, ௨௧௬.
வடநாட்டரசர், ௩௧, ௫௨.
வடிம்பலம்பநின்ற பாண்டியனாற் பஃறுளியாறு உண்டாக்கப்பட்டதென்பது, ௯.
வடுகர், ௩௭௮.
வண்டற்பாவை, ௧௧, ௨௪௩.
வண்டி, ௯௦.
வண்டிப்பார், ௯௦.

வண்டு, ௬௫, ௭௦, ௧௦௫.
வயல், ௧௪, ௨௯, ௪௯, ௫௨, ௫௭, ௬௧, ௯௮, ௧௧௭, ௧௪௨, ௨௬௬, ௩௩௮, ௩௫௪, ௩௮௬, ௩௯௬.
வயலைக்கொடி, ௩௦௫.
வயாவுற்றமகளிர் மண்ணுண்ணல், ௨௦.
வயிற்றுத்தீ, ௭௪.
வரகரிசியைப் பாலுலையிற்பெய்து சமைத்த அன்னத்தைத் தேனோடுகலந்து உண்ணல், ௩௪.
வரகின்சூல், ௧௨௦.
வரகின்சோறு, ௩௪, ௧௯௭, ௨௧௫.
வரகு, ௩௪, ௧௨௦, ௨௧௫, ௩௨௧, ௩௨௨, ௩௨௭, ௩௩௫, ௩௮௪.
வரால், ௧௮, ௨௪௯, ௩௯௯.
வராலிறைச்சி, ௩௯௯.
வரிசை, ௪௭, ௧௨௧, ௧௪௦.
வரிப்பொருண்மைப்பாட்டு, ௧௩௫.
வலி, ௫௪.
வலைஞர், ௨௪௯.
வழிப்பறி, ௧௬௧.
வழிப்பறிபறிப்போர், ௧௩௬, ௧௬௧.
வள்ளிக்கிழங்கு, ௧௦௯.
வள்ளைக்கொடி, ௧௬, ௩௯௯.
வளர்ந்தது தேய்தற்கும் தேய்ந்தது வளர்தற்கும், பிறந்தது இறத்தற்கும் இறந்தது பிறத்தற்கும் சந்திரன் உவமையாமென்றல், ௨௭.
வளை, ௩௬, ௫௩, ௭௭, ௮௩, ௧௦௩, ௧௧௩, ௧௩௫, ௨௩௯.
வளைகளின்முறி, ௨௩௭.
வளையமாலை, ௭௬.
வற்றல், ௪௧.
வற்றியகுளம், ௧௪௨.
வறுமை, ௬௮, ௧௩௬, ௧௩௯, ௧௪௦, ௧௫௯, ௧௬௦, ௧௬௪, ௧௯௬, ௨௧௦, ௨௧௧, ௨௬௬, ௩௭௫, ௩௭௬, ௩௯௩.
வறுமையையே அனுபவித்தோர், பொருள்கண்டவிடத்து அடையும்மயக்கம், ௩௭௮.
வறை, ௩௮௬.
வன்புலம், ௪௨, ௧௪௬.

## வா.

வாட்டாறு (= ஓரூர்), ௩௯௬.
வாட்போர், ௧௬௧.
வாணிகன், ௧௩௪.
வாத்தியங்களைப் பரிசிலர் காவிற்றூக்கி வருதல், ௧௦௩.
வாத்தியம், ௧௫௩, ௨௮௧.
வாத்தியவகை, ௧௫௨.
வாய்த்தலை, ௧௭௬.
வார், ௫௦.
வாழைப்பூ, ௨௩௭.
வாழையிலையிலுண்டல், ௧௬௮.
வாள், ௩, ௪, ௫௦, ௯௧, ௯௩, ௯௭, ௧௦௯, ௨௪௬, ௨௬௯, ௩௪௫, ௩௬௯.
வாள்வடு, ௧௬௭.
வாள்வீரர், ௧௩.
வாளைமீன், ௧௮, ௪௨, ௬௧, ௯௭, ௨௪௯, ௨௮௭, ௩௨௨, ௩௩௯, ௩௯௫.
வாளைமீன்தடி, ௬௧.
வானம்பாடிப்புள் நீர்த்துளியைவிரும்புதலுடைத்தென்பது, ௧௯௮.

## வி.

விச்சிக்கோ, ௨௦௦.
விடியற்காலம், ௩௭௪, ௩௮௫, ௩௯௨, ௩௯௭, ௩௯௮, ௪௦௦.
விண்மீன், ௧௦௯, ௧௨௯, ௧௬௦, ௨௭௦, ௩௬௭.
விண்வீழ்கொள்ளி, ௪௧.
விதவை, ௩௨௬.
விதி, ௧௭௬, ௨௩௬.
விதை, ௨௨௭, ௨௩௦.
விமானம், ௨௭.
விரகு, ௨௨௭, ௨௬௧.
விரிச்சிபார்த்தல், ௨௮௦.
விருந்து, ௪௬.
வில், ௨௩, ௪௩, ௭௭, ௧௫௨, ௩௨௨.
வில்லாட்கள், ௧௬௮.
விலாவென்பு, ௬௮.
விழவு, ௨௨, ௩௧, ௩௩, ௬௫, ௮௨, ௮௪, ௯௬, ௨௧௨.
விழுப்புண், ௨௩௩.
விளக்கம், ௨௪௭.
விளங்கில் (=ஓரூர்), ௫௩.
விளரிப்பண், ௨௬௦.
விளாம்பழம், ௧௮௧.
விளைந்தகள், ௧௩.
விற்பொறி, ௩௯.
விறகுவெட்டுவோர், ௭௦.
விறலியர் (விறலி), ௩௨, ௬௦, ௬௪, ௭௦, ௮௯, ௧௦௩, ௧௦௫, ௧௦௯, ௧௧௧, ௧௩௩, ௧௩௫, ௧௩௯, ௧௪௦, ௧௪௧, ௧௫௨, ௧௭௨, ௨௪௨, ௨௪௪, ௨௪௭.
விறலியர்க்கு ஆபரணங்கொடுத்தல், ௧௧, ௧௦௫.

விறலியர்க்குப் பூவிலைகொடுத்தல், ௩௨.
விறலியர்க்கு மாலைகொடுத்தல், ௩௬௪.

வீ.

வீட்டியல்பை அறியவேண்டுமென்றல், ௧௯௪.
வீட்டின் இறப்பு, ௧௨௯, ௩௧௫.
வீட்டின்பக்கத்துள்ள கிளையைப்பறித்தல், ௧௪௦.
வீட்டுக்கோழி, ௩௯௫.
வீட்டெலி, ௨௧௧.
வீடு, ௪௪, ௧௬௦, ௩௩௮.
வீதி, ௩௩௮.
வீரக்கழல், ௩, ௪, ௩௬, ௪௦, ௭௬, ௭௭, ௮௩, ௯௯, ௧௦௦, ௧௨௧, ௧௨௨, ௧௨௫, ௧௪௨.
வீரச்செல்வம், ௯௧.
வீரபானம், ௧௭௮, ௨௩௮.
வீரம், ௬௧.
வீரமுரசம், ௩, ௫௦, ௨௧௧.
வீரமுரசம் நீராடல், ௫௦.
வீரமேம்பட்டவார்த்தை, ௧௭௮.
வீரர் (வீரன்), ௩, ௨௪, ௩௧, ௪௩, ௫௫, ௫௭, ௬௨, ௬௮, ௭௮, ௮௪, ௮௭, ௮௯, ௯௩, ௯௮, ௨௨௭, ௨௬௦, ௨௬௩, ௩௫௧.
வீரர் சுவர்க்கம்புகுதல், ௨௬௦.
வீரர், தம்மிலும் மேம்பட்டவர்களோடு போர்செய்தற்குப்போகையிற் செய்துகொள்ளுதல், ௪௧.
வீரர் தோள், ௩௯.
வீரர் முல்லைப்பூவைச்சூடுதல், ௨௪௨.
வீரர் வஞ்சினங்கூறல், ௨௫, ௭௧, ௭௨, ௭௩.
வீரவளை, ௨௬, ௯௧, ௧௨௮.
வீரனொருவன் இறந்தபொழுது அவன் வீட்டைநோக்கிப்புலவரொருவர் இரங்கிக்கூறியது.

வெ.

வெட்சிப்பூ, ௧௦௦, ௨௦௨.
வெண்காந்தள், ௯௦.
வெண்கொற்றக்குடை, ௩, ௨௨, ௩௧, ௩௫, ௬௦, ௬௨, ௭௫, ௧௭௫, ௧௯௭, ௨௧௩, ௨௨௯, ௨௩௧, ௨௬௬, ௩௬௭.
வெண்ணி (=ஓரூர்), ௬௬.
வெண்ணெட்டி, ௭௫.
வெண்புடைவை, ௨௮௬, ௨௯௧.
வெயிலால்வாடியகாடு, ௧௬௦.
வெருக்குவிடை, ௩௨௪.
வெருகு, ௧௧௭, ௩௨௬.
வெள்ளரிக்காய், ௨௪௬.
வெள்ளரிவிதை, ௨௪௬.
வெள்ளாடு, ௨௮௬.
வெள்ளாம்பல், ௨௪௮.
வெள்ளி, ௧௧.
வெள்ளிக்கலம், ௩௮௪.
வெள்ளிநார், ௧௧.
வெள்ளெள், ௨௪௬, ௩௨௧.
வெள்ளைவரகு, ௩௯௨.

வே.

வேங்கடமலை, ௩௮௧, ௩௮௫, ௩௮௯, ௩௯௧.
வேங்கைப்பூ, ௧௦௦, ௧௩௭, ௨௦௨, ௨௬௫.
வேங்கைப்பூமாலை, ௧௬௮.
வேங்கைப்பூவைப் பனையோலையால் அலங்கரித்துத்தொடுத்தல், ௨௬௫.
வேங்கைமரம், ௧௦௮, ௧௨௦, ௧௨௯, ௧௩௭, ௨௦௨, ௨௨௪, ௩௩௬, ௩௫௨, ௩௯௦.
வேங்கைமார்பன், ௨௧.
வேட்டை, ௧௫௨.
வேடர் (வேடன்), ௩௩, ௧௫௨, ௧௫௯, ௧௮௯, ௨௦௨, ௨௦௫, ௨௪௭, ௩௨௪.
வேணாவியோர், ௪௩.
வேதம், ௨, ௬, ௧௫, ௧௬௬, ௩௬௨.
வேதிகை, ௫௩.
வேப்பமாலை, ௪௫.
வேம்பின்காய், ௩௮௯.
வேம்பு, ௪௫, ௭௬, ௭௭, ௭௯, ௨௮௧, ௨௯௬, ௩௩௮, ௩௭௧.
வேய்ங்குழல், ௧௪௩, ௨௮௧.
வேர்வு, ௧௦௦, ௧௩௬, ௧௬௦, ௩௮௬.
வேல், ௧௫, ௨௧, ௨௫, ௨௬, ௪௨, ௫௭, ௫௮, ௬௩, ௮௮, ௯௫, ௯௭, ௯௮, ௯௯, ௧௧௧, ௧௧௬, ௧௧௮, ௧௩௦, ௧௫௭, ௧௭௨, ௧௭௫, ௨௦௦, ௨௪௯, ௨௭௫, ௨௮௫, ௨௮௭, ௩௦௮; ௩௩௨, ௩௪௫, ௩௫௪, ௩௭௦.
வேலின் உட்டுளை, ௯௭.
வேலின் உறை, ௯௮.
வேலைவடித்தல், ௧௮௦.
வேள்வித்துறை இருபத்தொன்று, ௧௬௬.
வேளிர் ஒருமுனிவன்ஓமகுண்டத்திற் தோன்றியது, ௨௦௧.
வேளை, ௨௩, ௨௪௬.
வேளைப்பூ, ௨௧௫.
வேளையிலை வேவை, ௨௪௬.

வை.

வையையாறு, ௭௧.

கணபதி துணை.

# எட்டுத்தொகையுள்

ஒன்றாகிய

# புறநானூறு

## மூலமும் உரையும்.

(க.) கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை
யூர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப
கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே
பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்
பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே
யெல்லா வுயிர்க்கு மேம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே.

கடவுள்வாழ்த்து.

பாரதம்பாடிய பெருந்தேவனார் பாடியது.

இதன்பொருள்.—திருமுடிமேற் சூடப்படுங்கண்ணி, கார்காலத்துமலரும் நறிய கொன்றைப்பூ; அழகிய நிறத்தையுடைய திருமார்பின்மாலையும், அக்கொன்றைப்பூ; ஏறப்படுவது, தூய வெளிய ஆனேறு; மிக்க பெருமைபொருந்திய கொடியும், அவ் வானேறென்று சொல்லுவர்; நஞ்சினதுகறுப்பு, திருமிடற்றை அழகுசெய்தலும் செய்தது; அக்கறுப்பு, தான் மறுவாயும், வானோரை உய்யக்கொண்டமையின், வேதத்தைப்பயிலும் அந்தணராற் புகழவும்படும்; பெண்வடிவு, ஒருபக்கமாயிற்று; ஆய அவ்வடிவுதான், தன்னுள்ளேயொடுக்கி மறைக்கினும் மறைக்கப்படும்; பிறை,

*திருநுதற்கு அழகாயது; அப்பிறைதான், பெரியோன் சூடுதலால், பதினெண் கணங்களாலும் புகழவும்படும்; எவ்வகைப்பட்ட உயிர்களுக்கும் காவலாகிய, நீர் தொலைவறியாக்குண்டிகையானும் தாழ்ந்த திருச்சடையானும் சிறந்த செய்தற்கரிய தவத்தினையுடையோனுக்கு.—என்றவாறு.

தன்னுளடக்கிக் கரக்கினுங்கரக்குமென்பதற்கு அவ்வடிவுதான் எல்லாப்பொருளையும் தன்னுள்ளேயடக்கி அவ்விறைவன்கூற்றிலே மறையினுமறையுமென்று உரைப்பினுமமையும். நீரறவறியாக்கரகம் - கங்கையென்பாருமுளர். அக்கறை, அவ்வுரு, அப்பிறை எனநின்ற எழுவாய்கட்கு நுவலவும்படும், கரக்கினுங்கரக்கும், ஏத்தவும்படும் எனநின்ற பயனிலைகளை நிரலேகொடுக்க. இவ்வெழுவாய்களையும், பிறவற்றையும் அருந்தவத்தோற்கென்னும் நான்காவதனோடுமுடிக்க. ஏமமாகிய அருந்தவத்தோனென்க; ஏமமாகிய நீரெனினும் அமையும். அணியலுமணிந்தன்றென்பது, †"உண்ணலு முண்ணேன்" என்பதுபோல நின்றது. பதினெண்கணங்களாவார்: தேவரும் அசுரரும் முனிவரும் கின்னரரும் கிம்புருடரும் கருடரும் இயக்கரும் இராக்கதரும் கந்தருவரும் சித்தரும் சாரணரும் வித்தியாதரரும் நாகரும் பூதரும் வேதாளரும் தாரகரும் ஆகாசவாசிகளும் போகபூமியோருமெனவிவர்; பிறவாறுமுரைப்பர்.

இப்பெரியோனை மனமொழிமெய்களான்வணங்க, அறமுதல்நான்கும் பயக்குமென்பது கருத்தாகக்கொள்க. (க)

உ.) மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயுந்
தீமுரணிய நீரும், என்றாங்
கைம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்
வலியுந் தெறலு மளியு முடையோய்
நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பி னன்னாட்டுப் பொருந
வான வரம்பனை நீயோ பெரும
வலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
*ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்

---

* திருநுதலதென்றும் பிரதிபேதமுண்டு.

† கலித்தொகை, முதலாவது பாலை, உஉ:—"உண்ணலு முண்ணேன் வாழலும் வாழேன், தோணல முண்டு துறக்கப் பட்டோர், வேணீ ருண்ட குடையோ ரன்னர்."

பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
பாஅல்புளிப்பினும் பகலிருளினு
நாஅல்வேத நெறிதிரியினுந்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி *நிலியரோ வத்தை யடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
யந்தி யந்தண ரருங்கட னிறுக்கு
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே.

திணை - பாடாண்டிணை ; துறை - †செவியறிவுறூஉ ; வாழ்த்தியலுமாம்.

சேரமான்பெருஞ்சோற்று உதியன்சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது.

இ - ள்.—அணுச்செறிந்தநிலனும், அந்நிலத்தின் ஓங்கிய ஆகாயமும், அவ்வாகாயத்தைத்தடவிவரும காற்றும், அக்காற்றின்கண் தலைப்பட்டதீயும், அத்தீயோடு மாறுபட்ட நீருமென ஐவகைப்பட்ட பெரிய பூதத்தினது தன்மைபோலப் பகைவர் பிழைசெய்தால் அப்பிழையைப் பொறுத்தலும், அப்பிழை பொறுக்குமளவல்லவாயின் அவரை அழித்தற்கு உசாவும் உசாவினது அகலமும், அவரை அழித்தற்கேற்ற மனவலியும் சதுரங்கவலியும், அவ்வாற்றால் அவரை அழித்தலும், அவர் வழிப்பட்டால் அவர்க்குச்செய்யும் அருளுமுடையோய், நினது கடற்கட்டோன்றிய ஞாயிறு பின்னும் நினது வெளிய தலைபொருந்திய திரையையுடைய மேல்கடற்கண்ணே மூழ்கும் புதுவருவாய் இடையறாத ஊர்களையுடைய நல்ல நாட்டிற்கு வேந்தே, வானவரம்ப, பெரும, நீ, அசைந்த தலையாட்டமணிந்த குதிரையையுடைய பாண்டவரைவருடனே சினந்து நிலத்தைத் தம்மிடத்தேகொண்ட பொற்பூந் தும்பையையுடைய துரியோதனன்முதலாகிய நூற்றுவரும் பொருது போர்க்களத்தின்கட் படுந்துணையும் பெருஞ்சோறாகிய மிக்க உணவை இருபடைக்கும் வரையாதுவழங்கினோய், பால் தன் இனிமையொழிந்து புளிப்பினும், ஞாயிறு தன்விளக்கமொழிந்து இருளினும், நான்குவேதத்தினது ஒழுக்கம் வேறுபடினும் வேறுபாடில்லாத சூழ்ச்சியையுடைய மந்திரிச்சுற்றத்தோடு ஒழியாது நெடுங்காலம்விளங்கித் துளக்கமின்றிநிற்பாயாக ; அரைமலையின்கட் சிறியதலையையுடைய மறிகளையுடையவாகிய பெரியகண்ணையுடைய மான்பிணைகள் அந்திக்காலத்தே அந்தணர் செய்தற்கரிய கடனாகிய ஆவுதியைப்பண்ணும் முத்தீயாகிய விளக்கின்கண்ணே துயிலும் பொற்சிகரங்களையுடைய இமயமலையும் பொதியின்மலையும்போன்று.—எ - று,

குளிக்குநாடென இயையும் ; குளிக்குநாடென இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்துமேல் ஏறிநின்றது. நீயோ, ஓ - அசைநிலை; அன்றி, இதனை வினை

* நிலையரோவென்றும் பாடம்.

† இப்பாட்டினை, மக்கட்பாடாண்டிணைக்குரிய துறைகளுள் ஓம்படைவாழ்த்திற்கு உதாரணமாகக் காட்டினர் நச்சினார்க்கினியர் ; அதனை, தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியலில், "தாவி னல்லிசை" என்னும் ௩௪-ம் சூத்திரவுரையிற் காண்க.

வாக்கி, ஞாயிறு குளிக்குமென்பதனை முற்றாக்கி, இதனை அவ்வினையிற்குப் பொரு ளாக்கி உரைப்பாருமுளர். முத்தீயாவன: ஆகவனீயம், காருகபத்தியம், தென்றிசை யங்கி. ஆங்கும், அத்தையும் - அசைநிலை. வானவரம்பனை, ஐகாரம் - முன்னிலை விளக்கிநின்றது. நிலந்தலைக்கொண்டவென்பதற்கு நிலங்கோடல் காரணமாகத் தலைக்கட்கூடிய வெனினுமமையும்.

போற்றார்ப்பொறுத்தல்முதலிய குணங்களையுடையோய், பொருந, வரையாது கொடுத்தோய், வானவரம்ப, பெரும, நீ, புளிப்பினும் இருளினும் திரியினும் இமய மும் பொதியமும்போன்று நடுக்கின்றிச் சுற்றமொடு விளங்கி நிற்பாயாகவெனக் கூட்டி வினைமுடிவுசெய்க.

போற்றார்ப்பொறுத்தல்முதலாகிய குணங்களை அரசியலடைவாற் கூறுகின்ற ராதலின், பூதங்களின் அடைவு கூறாராயினர்.

இதனாற்சொல்லியது, * தன்கடற்பிறந்தஞாயிறு தன்கடற்குளிக்குநாடனாத லாற் செல்வமுடையையாகவென்று வாழ்த்தவேண்டுவதின்மையின், நீடுவாழ்க வென வாழ்த்தியவாறாயிற்று. (௨)

௩.) உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை
நிலவுக்கடல் வரைப்பின் மண்ணக நிழற்ற
வேம முரச மிழுமென முழங்க
நேமி யுய்த்த நேஎ நெஞ்சிற்
றவிரா வீகைக் கவுரியர் மருக
செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ
†பொன்னோடைப் புகரணி நுதற்
றுன்னருந்திறற் கமழ்கடாஅத்
தெயிறு படையாக வெயிற்கத விடாஅக்
கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற்
பெருங்கை யானையிரும் பிடர்த்தலை யிருந்து
மருந்தில் கூற்றத் தருந்தொழில் ‡சாயாக்
கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி
நிலம்பெயரினு நின்சொற்பெயரல்
பொலங்கழற்காற் புலர்சாந்தின்
விலங்ககன்ற வியன்மார்ப
வூரில்ல வுயவரிய
நீரில்ல நீளிடைய
பார்வ லிருக்கைக் கவிகண் ணோக்கிற்

---

* வானவரம்பனுதலாற்செல்வமுடையையாகவென்றுவாழ்த்தவேண்டுவதின் மையின், நீடுவாழ்கவென வாழ்த்தியவாறாயிற்றென்றும் பிரதிபேதமுண்டு.

† பொன்னினோடையென்றும் பாடம்.

‡ சாவாவென்றும் பாடம்.

செந்தொடை பிழையா வன்க ணாடவ
ரம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந் துயவு
முன்ன மரத்த துன்னருங் கவலை
நின்னசை வேட்கையி னிரவலர் வருவதை
முன்ன முகத்தி னுணர்ந்தவ
ரின்மை தீர்த்தல் வன்மை யானே.*

திணையும் துறையும் அவை.

பாண்டியன்கருங்கையொள்வாட்பெரும்பெயர்வழுதியை இரும்பிடர்த்தலையார் பாடியது.

இ - ள்.—உவாநாளின் மதியினது வடிவுபோலும் வடிவினையுடைய உயர்ந்த வெண்கொற்றக்குடை நிலைபெற்ற கடலெல்லைக்கண் நிலத்தை நிழற்செய்ய, காவலாகிய வீரமுரசம் இழுமெனமுழங்கும் ஓசையையுடைத்தாய்முழங்க, சக்கரத்தைச்செலுத்திய ஈரமுடைய நெஞ்சினையும் ஒழியாத வண்மையையுமுடைய பாண்டியர் மரபினுள்ளாய், குற்றமற்ற கற்பினையுடைய சேயிழைக்குத்தலைவ, பொன்னணியன்ற பட்டத்தையுடைய புகரணிந்த மத்தகத்தினையும், அணுகுதற்கரிய வலியையும், மணநாறும் மதத்தினையுமுடைய, கொம்பு படைக்கலமாகக்கொண்டு பகைவர் மதிலின்கட் கதவைக்குத்திக் கயிற்றாற்பிணித்தலைச்செய்த கவிழ்ந்த மணியையணிந்த பக்கத்தையும், பெருங்கையையுமுடைய யானையினது பெரிய கழுத்திடத்தேயிருந்து பரிகாரமில்லாத கூற்றத்தினது பொறுத்தற்கரிய கொலைத்தொழிலுக்கு இளையாத வலிய கையின்கண்ணே ஒள்ளிய வாளினையுடைய பெரும்பெயர்வழுதி, நிலம்பிறழினும் நினது ஆணையாகிய சொற் பிறழாதொழியல்வேண்டும்; பொன்னாற்செய்யப்பட்ட வீரக்கழல்புனைந்த காலினையும் பூசிப்புலர்ந்த சந்தனத்தையுடைத்தாகிய குறுக்ககன்ற பரந்த மார்பினையுமுடையோய், ஊரில்லாதனவும், பொறுத்தற்கரிய உயங்குதலையுடையனவும், நீரில்லாதனவும், நீண்ட வழியனவுமாகிய, வம்பலரைநலியச் சேய்மைக்கண்ணே பார்த்திருக்குமிருப்பினையும், கையாற் கவிக்கப்பட்ட கண்ணாற்குறித்துப்பார்க்கும் பார்வையையும், செவ்விய தொடைபிழையாத தறுகண்மையையுமுடைய மறவர்தாம் அம்பைவிடுதலாற் பட்டோரது உடன்மூடிய புதிய கற்குவையின்மேலே திருந்திய சிறகினையும் வளைந்த வாயினையுமுடைய பருந்திருந்துவருந்தும் உன்னமரத்தினையுடையவாகிய அணுகுதற்கரிய கவர்த்த வழியின்கண்ணே நின்பால் நச்சிய விருப்பத்தால் இரப்போர்வருகுவர்; அவர்மனக்குறிப்பை அவர்முகத்தானறிந்து அவருடைய வறுமையைத் தீர்த்தலைவல்ல தன்மையான்.—எ - று.

நுதலையும் திறலையும், கடாத்தையும் மருங்கையும் பெருங்கையையுமுடைய யானைப்பிடர்த்தலையிருந்து எயிறுபடையாக எயிற்கதவிட்டுக் கூற்றத்தருந்தொழில் சாயாப் பெரும்பெயர்வழுதியென மாறிக்கூட்டுக; *காலாலடுதல் கையாலூக்குதலின்றி எயிறுபடையாக எயிற்கதவெடுக்கைவிடாதபெருங்கையானையென இயைத்

காவிவிடுதலென்றும் பிரதிபேதமுண்டு.

துறைப்பினுமமையும்; எயிற்கதவிட்டுக் கயிறுபிணிக்கொண்டவென இயைத்துரைப்பாருமுளர். ஊரில்ல உயவரிய நீரில்ல நீளிடையவாகிய உன்னமரத்த கவலையெனவும், பருந்திருந்துயவும் துன்னருங்கவலையெனவும் இயையும்.

மருக, கணவ, வழுதி, மார்ப, இரவலர்வருவது, அவர் இன்மைதீர்த்தல் வன்மையான்; அதனால், நின்சொற் பெயராதொழியல்வேண்டுமெனக் கூட்டி வினைமுடிவுசெய்க.

வாழ்த்தியலாதல்விளங்க, வேண்டுமென ஒருசொல் தந்துரைக்கப்பட்டது. (௩)

(௪.) வாள், வலந்தர மறுப்பட்டன
செவ்வா னத்து வனப்புப் போன்றன
தாள், களங்கொளக் கழல்பறைந்தன
கொல் லேற்றின் மருப்புப் போன்றன
தோல், துவைத்தம்பிற் றுளைதோன்றுவ
நிலைக்கொரா அ விலக்கம்போன்றன
மாவே, யெறிபதத்தா னிடங்காட்டக்
*கறுழ்பொருத செவ்வாயா
னெருத்துவவ்விய புலிபோன்றன
களிறே, கதவெறியாச் சிவந்துரா அய்
நுதிமழுங்கிய வெண்கோட்டா
னுயிருண்ணுங் கூற்றுப்போன்றன
நீயே, யலங்குளைப் பரீஇயிவுளிப்
பொலந்தேர்மிசைப் †பொலிவுதோன்றி
மாக்கட னிவந்தெழுதருஞ்
செஞ்ஞா யிற்றுக் கவினை மாதோ
வனையை யாகன் மாறே
தாயி றூவாக் குழவி போல
வோவாது கூஉ நின் னுடற்றியோர் நாடே.

திணை - வஞ்சி; துறை - கொற்றவள்ளை.

சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னியைப் பரணர்பாடியது.

இ - ள்.—வாள் வெற்றியைத்தருதலாற் குருதிக்கறைபட்டன, செக்கர்வானத்தினது அழகையொத்தன; கால் புடைபெயர்ந்து போர்செய்து களத்தைத் தமதாக்கிக்கொள்ளுதலால் வீரக்கழல் ‡அருப்புத்தொழில் புறைந்தன, கொல்லும் ஆனேற்றினது கோட்டையொத்தன; பரிசைகள் ஒலித்துத் தைத்த அம்புகளால்

* கதழ்பொருதவென்றும் பாடம்.

† பொலிவொடுதோன்றியென்றும் பாடம்.

‡ ஆர்ப்புத்தொழிலென்றும் பிரதிபேதமுண்டு.

துணைதோன்றுவன, நிலையிற்றப்பாத இலக்கத்தையொத்தன; குதிரைகள், எதிரியை எறியும் காலமுடையான் இடவாய் வலவாயாகிய இடத்தைக்காட்ட முகக்கருவி பொரப்பட்ட செவ்வாயையுடைமையான் மான்முதலாயினவற்றின்கழுத்தைக்கவ்வி உதிரம் ஊற்றியுண்ட புலியையொத்தன; களிறுகள், கதவைமுறித்து வெகுண்டு உலாவி நுனைதேய்ந்த வெளிய கோட்டையுடைமையான் உயிரையுண்ணும் கூற்றையொத்தன; நீதான், அசைந்த தலையாட்டமணிந்த கதியையுடைய குதிரையாற் பூட்டப்பட்ட பொற்றேரின்மேலே பொலிவொடுதோன்றுதலாற் கரிய கடலின் கண்ணே ஓங்கியெழுகின்ற செய்ய ஞாயிற்றினது ஒளியையுடையை; அத்தன்மையையாதலால், தாயில்லாத உண்ணாக்குழவிபோல ஒழியாது கூப்பிடும், நின்னைச் சினப்பித்தவருடைய நாடு.—எ - று.

நாடென்றது, நாட்டுள்வாழ்வாரை. யாறென்பது, எதுப்பொருள்படுவதோர் இடைச்சொல். கழல்பறிந்தனவென்றோதி, அதற்கு வீரக்கழனீங்கிய அவையென்று உரைப்பாருமுளர். வாளாகிய மறுப்பட்டவையெனவும், கழலாகிய பறைந்தவையெனவும், தோலாகிய துணைதோன்றுவவெனவும் கொள்க. துவைத்துத் தோன்றுவவென இயையும். எறிபதத்தானென்பதற்கு ஒதுங்கும் காலையுடையானென்று உரைப்பாருமுளர்.

செஞ்ஞாயிற்றுக்கவினையென்ற துணையும் மன்னவன்புகழும்; ஓவாது கூஉநின் உடற்றியோர் நாடென ஒன்னார்நாடழிபிரங்கலுமாதலான், இது கொற்றவள்ளையாயிற்று.

(ரு.) *எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றானிற் பரக்கும் யானைய முன்பிற்
கானக நாடனை நீயோ பெரும
நீயோ ராகலி னின்னொன்று மொழிவ
லருளு மன்பு நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்
குழவி கொள்பவரி னோம்புமதி
யளிதோ தானேயது பெறலருங் குரைத்தே.

திணை - பாடாண்டிணை; துறை - செவியறிவுறூஉ; பொருண்மொழிக் காஞ்சியுமாம்.

---

* இப்பாட்டினை, மக்கட்பாடாண்டிணைக்குரிய துறைகளுள் வாயுறைவாழ்த்திற்கு உதாரணமாகக்காட்டி, இதனுள் நிரயங்கொள்பவரொடொன்றாது காவலை ஓம்பென வேம்பும் கடுவும்போல வெய்தாகக்கூறி அவற்கு உறுதிபயத்தலின் வாயுறைவாழ்த்தாயிற்றென்றும், செவியறிவுறூஉவன்றென்றும் கூறினர் நச்சினார்க்கினியர்; அதனை, தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியலில், “கொடுப்போரேத்தி” என்னும் ௩௫ - ஞ் சூத்திரவுரையிற்காண்க. இப்பாட்டில் “எருமையன்ன கருங்கல் லிடைதோ, றானிற் பரக்கும் யானைய முன்பிற், கானக நாடனை நீயோ பெரும” என்பதை, அவர், தன்கட்டோன்றிய ஆக்கம்பற்றிய வியப்பென்னும்மெய்ப்பாட்டிற்கு உதாரணமாகக் காட்டினர்; அதனை, மெய்ப்பாட்டியலில், எ - ஞ் சூத்திரவுரையிற்காண்க.

சேரமான் கருவூரேறியவொள்வாட்கோப்பெருஞ்சேரலிரும்பொறையைக்கண்ட ஞான்று நின் உடம்புபெறுவாயாகேன அவனைச்சென்றுகண்டு தம்முடம்புபெற்று நின்ற நரிவெரூஉத்தலையார்பாடியது.

இ - ள்.—எருமைபோலும் வடிவையுடைய கரிய கற்பொருந்திய இடந்தோறும் பெற்றம்போலப் பரக்கும் யானையையுடையவாய் வலியையுடைய காட்டிற் குள்ளாகிய நாட்டினையுடையாய், பெரும, நீ இங்ஙனம் பகைவரான் அணுகப்படாத இயல்பாகிய பெருஞ்செல்வத்தையுடையனுதலால், நினக்கு ஒருகாரியஞ் சொல்லுவேன்; அதனைக் கேட்பாயாக; அருளையும் அன்பையுநீக்கிப் பாவஞ்செய்தாரை நீங்காத நரகத்தைத் தமக்கிடமாகக்கொள்பவரோடு பொருந்தாது நீ காக்கப்படும் தேயத்தைக் குழவியை வளர்ப்பாரைப்போலப் பாதுகாப்பாயாக; அளிக்கத் தக்கதொன்று அக்காவல்; அது பெறுதற்கரிது.—எ - று.

காவலென்றது, ஆகுபெயர். நாடனை, ஐகாரம் - முன்னிலைக்கண்வந்தது. ஓவும், ஒரும் - அசைநிலை. அருளாவது, ஒன்றின் துயர்கண்டாற் காரணமின்றித் தோன்றுமிரக்கம். அன்பாவது, தன்னாற் புரக்கப்படுவோர்மேலுளதாகியகாதல். இனி, ஓகாரத்தைப்பிரித்து வினவாக்கிக் கோப்பெருஞ்சேரலிரும்பொறையைக் கண்டஞான்று நின்னுடம்புபெறுவாயெனத் தம்முடம்புபெற்றமைதோன்ற, நீயோ வென வினாவினாக்கியுரைப்பாருமுளர்.

காவல் குழவிகொள்பவரினோம்பென்றமையாற் செவியறிவுறூஉவும், அருளும் அன்புநீக்கி நீங்கா நிரயங்கொள்பவரோடொன்றாதென்றமையாற் பொருண்மொழிக்காஞ்சியுமாயிற்று. (ரு)

(சு.) வடாஅது பனிபடு நெடுவரை வடக்குந்
தெனாஅ துருகெழு குமரியின் றெற்குங்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்குங்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்குங்
கீழது, முப்புண ரடுக்கிய முறைமுதற் கட்டி
னீர்நிலை நிவப்பின் கீழு மேல
தானிலை யுலகத் தானு மானா
துருவும் புகழு மாகி விரிசீர்த்
*தெரிகோன் ஞமன்ன் போல வொருதிறம்
†பற்ற லியரோ நிற்றிறஞ் சிறக்க
செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குளிப்ப மண்டி யடர்புகர்ச்
சிறுகண் யானை செவ்விதி ‡னேவிப்
பாசவற் படப்பை யாரெயில் பலதந்

---

* தெரிகோற்சமனென்றும் பாடம்.

† பற்றிலியரோவென்றும் பாடம்.

‡ எனவென்றும் பாடம்.

தவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கிப்
*பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
யிறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை †முனிவ ரேந்து கையெதிரே
வாடுக ‡விறைவநின் கண்ணி யொன்னார்
நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே
§செலிய ரத்தைநின் வெகுளி வாலிழை
மங்கையர் துனித்த வாண்முகத் தெதிரே
ஆங்க, வென்றி யெல்லாம் வென்றகத் தடக்கிய
தண்டா வீகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவுந் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவு
மன்னுக பெருமநீ நிலமிசை யானே.

திணை - பாடாண்டிணை; துறை - || செவியறிவுறூஉ; வாழ்த்தியலுமாம்.

பாண்டியன்பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதியைக் காரிகிழார் பாடியது.

இ - ள்.—வடக்கின்கண்ணது பனிதங்கிய நெடிய இமயமலையின்வடக்கும், தெற்கின்கண்ணது உட்குந்திறம்பொருந்திய கன்னியாற்றின்தெற்கும், கீழ்க்கண்ணது கரையைப்பொருகின்ற சகரரால் தோண்டப்பட்ட சாகரத்தின்கிழக்கும், மேல்கண்ணது பழைதாய் முதிர்ந்த கடலின்மேற்கும், கீழதாகிய நிலமும் ஆகாயமும் சுவர்க்கமுமென மூன்றுங்கூடிய புணர்ச்சியாக அடுக்கப்பட்ட அடைவின்கண் முதற்கட்டாகிய நீர்நிலைக்கண் ஓங்கிய நிலத்தின்கீழும், மேலதாகிய கோலோகத்தின்கண்ணும் அமையாது உட்கும் புகழுமாக; பரந்த அளவையுடைய பொருள்களை ஆராயும் துலாக்கோலின்கட் சமன்வாய்போல ஒருபக்கம்கோடாதொழிக; நினது படை குடிமுதலாகிய கூறுபாடுகள் சிறக்க; போர்செய்தற்கு மாறுபட்ட பகைவர்தேயத்தின்கண்ணே நினது கடல்போலும் படை மேல்விழுந்து உள்புக மிக்குச்சென்று அடர்ந்த புகரினையுடைய சிறுகண்யானையைத் தடையின்றி நேரேயேவிப் பசிய விளைநிலப்பக்கத்தையுடைய அரிய மதிலரண் பலவற்றையுங்கொண்டு அவ்வரணின்கட் கொள்ளப்பட்ட அழகுபடச்செய்த நல்ல அணிகலங்களைப் பரிசிலர்க்கு வரிசையின்வழங்கி நினது கொற்றக்குடை முனிவராற் பரவப்படும் மூன்றுதிருநயனத்தையுடைய செல்வரது கோயிலை வலம்வருவதற்குத்

---

* பணீஇயரத்தையென்றும் பாடம்.  † முதல்வரென்றும் பாடம்.

‡ இயவுணியென்றும் பாடம்.  § செலிகவத்தையென்றும் பாடம்.

|| ஒருவுதலை ஒரூஉதலெனவும் ஒரூஉவெனவும் கூறுமாறுபோல, உறுவும் உறூஉதலெனவும் உறூஉவெனவும் கூறப்படுமென்பர் நச்சினார்க்கினியர் [தொல், பொருள், புறத்திணையியல், ௩௪ - ம் சூத்திரவுரை].

தாழ்க; பெரும, நினதுமுடி, மிக்க நான்குவேதத்தினையுடைய அந்தணர் நின்னை நீடுவாழ்கவென்றெடுத்த கையின்முன்னே வணங்குக; இறைவ, நினதுகண்ணி, நின்பகைவரது நாட்டைச்சுடும் பலமணநாறும் புகையுறைத்தலான் வாடுக; நினது சினம்; வெளிய முத்தாரத்தையுடைய நின்தேவியருடைய துனித்த ஒளியையுடைய முகத்தின்முன்னர்த் தணிக; வென்று வென்றிமுழுதையும் வியவாது நின்மனத்தே உட்கொண்ட தணியாத வண்மையையுடைய தகுதிமாட்சிமைப்பட்ட குடுமி, குளிர்ந்த சுடரையுடைய திங்களையொப்பவும் சுடுகின்ற ஒளிபொருந்திய ஒள்ளிய கதிரையுடைய ஞாயிற்றையொப்பவும் நிலைபெறுவாயாக, நீ உலகத்தின்மேல்.—எ - று,

வடாதென்னும் முற்றுவினைக்குறிப்பைப் பெயர்ப்படுத்தி, பனிபடுநெடுவரையொடு பண்பொட்டாக்கி, அதன்வடக்குமென்க; ஒழிந்தனவுமன்ன. மேலது துறக்கத்தின்மேலுமென்பார், அதற்கு மேலதாகிய ஆனிலையுலகத்தானுமென்றார். உருவென்பது, இவனுணையாற் பிறரஞ்சும் உட்குடைமை. அத்தையும், ஆங்கவும் - அசைநிலை.

குடுமி, பெரும, உருவும் புகழும் ஆக; ஒருதிறம் பற்றுதொழிக; நிற்றிறஞ்சிறக்க; பணிக; இறைஞ்சுக; வாடுக; செல்லுக; பரிசின்மாக்கட்கு நல்கி மதியம் போலவும், ஞாயிறுபோலவும் நீ நிலத்தின்மிசை மன்னுகவெனக்கூட்டி வினை முடிவுசெய்க.

தேஎத்தென்பதனுள், அத்தை அசைநிலையாக்கி, தேயர் கடற்படைக்குள்ளோ குளிப்பவென்றுரைப்பாருமுளர். ஞமன் - யமனெனினுமமையும். அடற்புகர்ச் சிறுகண்யானையென்று பாடமோதி, கொலையைச்செய்யும் புகரையுடைய யானையெனினுமமையும். ஆகி - ஆகவெனத்திரிந்துநின்றது; ஆகியென்பதனைத் திரியாது, நிற்றிறஞ்சிறக்கவென்பதனோடு இயைத்துரைப்பாருமுளர். நின்றிறம் - நிற்றிறமென வலித்துநின்றது.

நகர்வலஞ்செயற்குப் பணியியரென வீடும், ஏந்துகையெதிர் இறைஞ்சுகவென அறமும், புகையெறித்தலான் வாடுகவெனப் பொருளும், முகத்தெதிர் தணிகவென இன்பமும் கூறியவாறாயிற்று.

இஃது, இவ்வாறு செய்கவென அரசியல்கூறலிற் செவியறிவுறூஉவும், மதியமும் ஞாயிறும்போல மன்னுகவென்றமையான் வாழ்த்தியலுமாயிற்று. (௬)

(எ.) *களிறு கடைஇய தாட்
கழலுரீஇய திருந்தடிக்
†கணைபொருது கவிவண்கையாற்
கண்ணொளிர் வரூஉங் கவின்சாபத்து
மாமறுத்த மலர்மார்பிற்
றோல்பெயரிய வெறுழ்முன்பி

---

* இப்பாட்டினை, வஞ்சித்திணைக்குரிய எரிபரந்தெடுத்தலென்னுந்துறைக்கு உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், ௮ - ம் சூத்திரவுரை].

† கணைக்கால் பொருதவென்றும் பாடம்.

னெல்லையு மிரவு *மெண்ணுப் பகைவ
ரூர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை யாகலி னல்ல
௧௦ வில்லவா குபவா லியறேர் வளவ
தண்புனல் பரந்த பூசன்மண் மறுத்து
மீனிற் செறுக்கும் யாணர்ப்
பயன்றிகழ் வைப்பிற்பிற ரகன்றலை நாடே.

திணை - வஞ்சி; துறை - கொற்றவள்ளை; மழபுலவஞ்சியுமாம்.

சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கருங்குழலாதனார் பாடியது.

இ - ள்.—களிற்றைச் செலுத்திய தாளையும், வீரக்கழலுரிஞ்சிய இலக்கணத் தாற்றிருந்திய அடியினையும், அம்பொடு †பொருது இடக்கவிந்த வள்ளிய கையுடனே கண்ணிற்கு விளங்கும் அழகினையுடைய வில்லையும், திருமகள் பிறர்மார்பை மறுத்தற்கு ஏதுவாகிய பரந்த மார்பினையும், யானையைப்பெயர்த்த மிக்க வலியினையுமுடைய, பகலுமிரவுமெண்ணாது பகைவரது ஊரைச்சுடுகின்ற தீயினது ஒளியின்கண்ணே தஞ்சுற்றத்தை அழைத்தலுடனே அழுகின்ற கூவுதலையுடைய ஆரவாரத்தோடுகூடிய கொள்ளையை விரும்புதலுடையை; ஆதலான், நல்ல பொருள்கள் இல்லையாகுவனவால்; இயற்றப்பட்ட தேரையுடையவளவ, குளிர்ந்த நீர் பரந்த ஓசையையுடைய உடைப்புக்களை மண்மறுத்தலான் மீனாலடைக்கும் புதுவருவாயினையுடைய பயன்விளங்கும் ஊர்களையுடைய மாற்றாரது அகன்ற இடத்தையுடைய நாடுகள்.—எ - று,

திருந்தடியென்பதற்குப் பிறக்கிடாத அடியெனினும் அமையும். சுணைபொருதென்றது, அதனொடுமெருவுதலை.

தாளையும், அடியையும், கையுடனே சாபத்தையும், மார்பையும், மூன்பையுமுடையவளவ, நீ கொள்ளைமேவலையாதலின், யாணரையும் வைப்பினையுமுடைய பிறர்நாடு, நல்ல இல்லவாகுபவெனக்கூட்டுக.

நாடு நல்ல இல்லவாகுபவென இடத்துநிகழ்பொருளின்றொழில், இடத்துமேலேறிநின்றது. இனித் தாளாலும் அடியாலும் கையாலும் சாபத்தாலும் மார்பாலும் மூன்பாலும் கொள்ளைமேவலையாகலினென ஆலுருபுவிரித்துரைப்பினுமமையும்.

இது, பிறரகன்றலைநாடு நல்ல இல்லவாகுபவென்றமையிற் கொற்றவள்ளையும், ஊர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலையென்றமையின் மழபுலவஞ்சியுமாயிற்று. (௭)

(அ.) ‡வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ

---

* என்றுமென்றும் பாடம்.

† பொருதவென்றும் பிரதிபேதமுண்டு.

‡ தொல்காப்பியப் பொருளதிகார உவமவியலில், "வேறுபட வந்த" என்னும் ௩௨ - ம் சூத்திரவுரையில், இப்பாட்டினுக்கு விளங்க விரித்துப் பொருள்கூறினார் நச்சினார்க்கினியர்.

இடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப
வொடுங்கா வுள்ளத் தோம்பா வீகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
யகலிரு விசும்பி னானும்
பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி; பூவைநிலையுமாம். சேரமான்கடுங்கோவாழியாதனைக் கபிலர் பாடியது.

இ - ள்.—உலகத்தைக்காக்குமரசர் வழிபாடுசொல்லிநடக்க நுகரும் இன்பத்தைவிரும்பிப் பூமி பிறவேந்தருக்கும் பொதுவென்னும் வார்த்தைக்குப்பொருது தன்னுடு இடஞ்சிறிதென்னும் மேற்கோள் செலுத்த மடியாத உள்ளத்தையும் பொருளைப் பாதுகாவாதுவழங்கும் வண்மையையும் வஞ்சியாது எதிர்நின்றுகொல்லும் படையையுமுடைய சேரலாதனை எவ்வாறொப்பை? மிக்க செலவையுடைய மண்டிலமே, நீ பகற்பொழுதை நினக்கெனக் கூறுபடுப்பை; திங்கள்மண்டிலத்திற்கு முதுகிட்டுப் போதி; தெற்கும் வடக்குமாகிய இடங்களில் மாறிமாறிவருவை; மலையின்கண்ணே வெளிப்படாதுகரப்பை; அகன்ற பெரிய ஆகாயத்தின்கண்ணும் பகற்பொழுதுவிளங்குவை, பலகிரணங்களையும் பரப்பி.—எ - று,

மாறிவருதியென்பதற்கு இராசிதோறும் மாறிவருதியெனினுமமையும்.

வீங்குசெலன்மண்டிலமே, வரைதி; இறத்தி; வருதி; ஒளித்தி; நீ விசும்பினானும் பகல்விளங்குதி; இக்குறைபாடெல்லாமுடைய நீ சேரலாதனை யாங்கனமொத்தியோவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

ஒழுகவென்னுமெச்சம், நுகருமென ஒருசொல்வருவித்து அதனோடுகூட்டி முடிக்கப்பட்டது; ஒழுகவும் போகநுகரவும்வேண்டியெனினுமமையும். வேண்டி, பொருது, துரப்ப எனநின்ற வினையெச்சங்கள், ஒடுங்காவென்னும் பெயரெச்சமறையோடு முடிந்தன. இனி, 'பகல்விளங்கலை' என்னும் பாடத்திற்குத் திங்கண்மண்டிலமாக்கி, 'மாறிவருதி' என்பதற்குத் தேய்ந்தும் வளர்ந்தும் வருதியெனவும் பிறவும் அதற்கேற்பவுரைப்ப. (அ)

(கூ.) ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரு
மெம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
வறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்று
மெங்கோ வாழிய குடுமி தங்கோச்

செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
க0 முந்நீர் விழவி னெடியோ
னன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன்பல்யாகசாலைமுதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடியது.

இ - ள்.—ஆவும், ஆனினதியல்பையுடைய அந்தணரும், மகளிரும், நோயுடையீரும், பாதுகாத்துத் தென்றிசைக்கண்வாழ்வோராகிய நுங்குடியிலிறந்தோர்க்குச் செய்தற்கரிய பிண்டோதகக்கிரியையைப்பண்ணும் பொன்போலும் பிள்ளைகளைப் பெறாதீரும், எம்முடைய அம்பை விரையச்செலுத்தக்கடவேம்; நீர் நுமக்கரணாகிய இடத்தை அடையுமென்று அறநெறியையச்சொல்லும் மேற்கோளினையும் அதற்கேற்ற மறத்தினையுமுடைய, கொல்யானைமேலே எடுக்கப்பட்ட கொடிகள் ஆகாயத்தைநிழற்செய்யும் எம்முடைய வேந்தனாகியகுடுமி வாழ்வானாக; தம்முடைய கோவாகிய, சிவந்த நீர்மையையுடைய போக்கற்ற பசியபொன்னைக் கூத்தர்க்கு வழங்கிய முந்நீர்க்கடற்றெய்வத்திற்கெடுத்த விழாவினையுடைய *நெடியோனாலுளதாக்கப்பட்ட நல்ல நீரையுடைய பஃறுளியென்னுமாற்றின்மணலினும் பலகாலம்.—எ - று.

எங்கோவாகிய குடுமி, பஃறுளியாற்றின்மணலினும் பலகாலம் வாழியவெனக் கூட்டுக.

கொடி விசும்பு நிழற்றுமென்பது, சினைவினைப்பாற்பட்டு எங்கோவென்னும் முதலொடுமுடிந்தது; கொடியால் விசும்பு நிழற்றுமென்றுரைப்பினுமமையும்; மீமிசைக்கொடி விசும்புநிழற்றும் களிற்றினையுமென மாறிக்கூட்டுவாருமுளர். தங்கோச் செந்நீர்ப் பசும்பொனென்பதற்குத் தமதரசாட்சியினது செவ்விய நீர்மையாற்செய்த பசும்பொனென்பாருமுளர். முந்நீர்க்கண் வடிம்பலம்பநின்றானென்ற வியப்பால், நெடியோனென்றாரென்ப. யாற்றுநீரும் ஊற்றுநீரும் மழைநீருமுடைமையால், கடற்கு முந்நீரென்றுபெயராயிற்று; அன்றி, முன்னீரென்றோதி, நிலத்திற்குமுன்னாகிய நீரென்றுமுரைப்ப. பிணியுடையீரும் புதல்வர்ப்பெறாதீருமென்னும் முன்னிலைப்பெயரோடு ஆவும் பார்ப்பனமாக்களும் பெண்டிருமென்னும் படர்க்கைப்பெயர்கள் விராய்வந்து, நும்மரண்சேர்மினென்னும் முன்னிலைவினையான்முடிதல், "†செய்யுண் மருங்கினும் வழக்கியன் மருங்கினும்" என்னும் அதிகாரப்புறனடையாற் கொள்ளப்படும். (கூ)

(க0.) வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே
நீமெய் கண்ட தீமை காணி
னொப்ப நாடி யத்தக வொறுத்தி

* உயர்ந்தோனாலென்றும் பிரதிபேதமுண்டு.

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், எச்சவியல், சுஎ.

வந்தடி பொருந்தி முந்தை நிற்பிற்
றண்டமுந் தணிதிநீ பண்டையிற் பெரிதே
யமிழ்தட் டானாக் கமழ்குய் யடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
மகளிர் மலைத்த லல்லது மள்ளர்
மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப
செய்திரங் காவினைச் சேண்விளங் கும்புகழ்
நெய்தலங் கான னெடியோ
யெய்தவந் தனம்யா மேத்துகம் பலவே.

திணையும் துறையும் அவை.

சோழன் *நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் பாடியது.

இ - ள்.—நின்னை வழிபட்டொழுகுவோரை விரையவறிவை; பிறருடைய குற்றஞ்சொல்லுவாரது வார்த்தையைத் தெளியாய்; நீ மெய்யாக மனத்தாலாராய்ந்து அறுதியிடப்பட்ட கொடுமையை ஒருவன்பாற்காணின், அதனை நீதிநூற்குத் தக ஆராய்ந்து அத்தீமைக்குத்தகத் தண்டஞ்செய்வை; வந்து நின்பாதத்தையடைந்து முன்னேநிற்பாராயின், அவர்பிழைசெய்வதற்குமுன் நீ செய்யுமருளினும் அருள்பெரிதாக அவரைச்செய்யுந் தண்டமும் தணிவை; அமிழ்தத்தைத் தன்சுவையால் வென்று உண்ணவுண்ண அமையாத மணங்கமழும் தாளிப்பையுடைய அடிசிலை விருந்தினர்க்கு மிகுதிகுறைபடாமல்வழங்கும் பழிதீர்ந்த மனைவாழ்க்கையையுடைய பெண்டிர்முயக்கத்தால் மாறுபடுத்தலல்லது வீரர் போரான் மாறுபடுத்தலொழிந்த இந்திரவிற்போலும் மாலையையுடைய மார்ப, ஒருதொழிலைச்செய்து பின் பிழைக்கச்செய்தேமென்று கருதாத செய்கையையும் சேய்மைக்கண்ணே விளங்கும் புகழினையுமுடைய நெய்தலங்கானலென்னும் ஊரையுடையநெடியோய், அணுக வந்தேம்யாம்; நின் பலகுணங்களையும் புகழ்வேமாக.—எ - று.

வழிபடுவோரை வல்லறிதியென்றது, அறிந்து அவர்களுக்கு அருள்செய்வையென்பதாம். பெரிதென்பது வினையெச்சக்குறிப்பாகலின், ஆகவென ஒருசொல் வருவித்துரைக்கப்பட்டது. பண்டையிற்பெரிதென்பதற்கு நீ பண்டுசெய்த கோபத்தினும் பெரிதாகத் தணிதியென்றுரைப்பினுமமையும். அடப்பட்டமையாத அமிழ்துபோலும் அடிசிலென்றுரைப்பினுமமையும்.

நெடியோய், பல ஏத்துவேமாக எய்தவந்தனமெனக்கூட்டுக. (௧௦)

(௧௧.) அரிமயிர்த் திரண்முன்கை
வாலிழை மடமங்கையர்
வரிமணற் புனைபாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து

* நெய்தலங்காலையென்றும் பிரதிபேதமுண்டு.

தண்பொருநைப் புனற்பாயும்
விண்பொருபுகழ் விறல்வஞ்சிப்
பாடல்சான்ற விறல்வேந்தனும்மே
வெப்புடைய வரண்கடந்து
துப்புறுவர் புறம்பெற்றிசினே
புறம்பெற்ற வயவேந்தன்
மறம்பாடிய பாடினியும்மே
ஏருடைய விழுக்கழஞ்சிற்
சீருடைய விழைபெற்றிசினே
யிழைபெற்ற பாடினிக்குக்
குரல்புணர்சீர்க் கொளைவல்பாண் மகனும்மே, எனவாங்
கொள்ளழற் புரிந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசில்கடாநிலை.

சேரமான்பாலைபாடியபெருங்கடுங்கோவைப் *பேய்மகள் இளவெயினி பாடியது.

இ - ள்.—ஐயா மயிரையுடைய திரண்ட முன்கையினையும் தூய ஆபரணத்தையுமுடைய பேதைமகளிர் வண்டலிழைத்த சிற்றிற்கட்செய்த பாவைக்கு வளைந்த கோட்டுப்பூவைப்பறித்துக் குளிர்ந்த ஆன்பொருந்தத்துநீரின்கட் பாய்ந்துவிளையாடும் வானைமுட்டிய புகழினையும் வென்றியையுமுடைய கருவூரின்கட் பாடுதற்கமைந்த வெற்றியையுடைய அரசனும், பகைதெறும் வெம்மையையுடைய அரணை அழித்து வலியோடு எதிர்ந்தவருடைய புறக்கொடையைப் பெற்றான்; அப்புறக்கொடையைப்பெற்ற வலிய அரசனது வீரத்தைபாடிய பாடினியும், தோற்றப் பொலிவுடைய சிறந்த பல கழஞ்சாற் செய்யப்பட்ட நன்மையையுடைய அணிகலத்தைப்பெற்றாள்; அவ்வணிகலத்தைப்பெற்ற விறலிக்கு முதற்றானமாகிய குரலிலே வந்துபொருந்தும் அளவையுடைய பாட்டைவல்ல பாணனும், விளங்கிய தழலின்கண்ணே ஆக்கப்பட்ட பொற்றாமரையாகிய வெள்ளிநாராற்றொடுத்த பூவைப் பெற்றான்.—எ - று.

பாடினி இழைபெற்றாள்; பாணன் பூப்பெற்றான்; யான் அதுபெறுகின்றிலேனெனப் பரிசில்கடாநிலையாயிற்று; இனி, இவள் பேயாயிருக்கக் கட்புலனாயதோர் வடிவுகொண்டுபாடினாளொருத்தியெனவும், ‘இக்களத்துவந்தோர்யாவரும் பரிசில் பெற்றார்கள்; ஈண்டு நின்னோடு எதிர்ந்து பட்டோரில்லாமையான், எனக்கு உணவாகிய தசை பெற்றிலேன்’ எனத் தான்பேய்மகளானமைதோன்றப் பரிசில்கடாயினாளெனவுங்கூறுவாருமுளர். ‘பாடினிக்கு... பாண்மகன்’ என்பது, அதுவெனுருபுகெடக் குகரம்வந்தது; உயர்திணையாகலின். பாடினிபாடலுக்கேற்பக் கொளைவல் பாண்மகனெனினுமமையும். எனவும், ஆங்கும் - அசைநிலை. பெற்றிசின் மூன்றும், படர்க்கைக்கண்வந்தன. (கக)

* பேய்மகள் இளவினியென்றும் பிரதிபேதமுண்டு.

(கஉ.) பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவு
மறனோ மற்றிது விறன்மாண் குடுமி
யின்னா வாகப் பிறர்மண்கொண்
டினிய செய்திநின் னார்வலர் முகத்தே.

திணை - பாடாண்டிணை ; துறை - இயன்மொழிவாழ்த்து.

பாண்டியன்பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதியை நெட்டிமையார் பாடியது.

இ - ள்.—பாணர் பொற்றாமரைப்பூவைச் சூடவும், புலவர் பட்டம்பொலிந்த மத்தகத்தையுடைய யானையுடனே அலங்கரிக்கப்பட்ட தேரினை ஏறுதற்கேற்ப அமைக்கவும், அறனோ? இவ்வாறுசெய்தல்; வென்றிமாட்சிமைப்பட்டகுடுமி, வேற்றரசருடைய நிலத்தை அவர்க்கின்னாவாகக்கொண்டு நின்னுடைய பரிசிலரிடத்து இனியவற்றைச்செய்வை.—எ - று.

குடுமி, பிறர்மண் இன்னாவாகக்கொண்டு, மலையவும் பண்ணவும் நின் ஆர்வலர் முகத்து இனியசெய்வை; இது நினக்கு அறனோ? சொல்லுவாயாகவெனக் கூட்டி வினைமுடிவுசெய்க.

மற்று - அசைநிலை.

இது, பழித்ததுபோலப் புகழ்ந்ததாகக்கொள்க. (கஉ)

(கங.) இவனியா ரென்குவை யாயி னிவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
வெய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
மறலி யன்ன களிற்றுமிசை யோனே
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீ னாப்பட் டிங்கள் போலவுஞ்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே
நோயில னாகிப் பெயர்கதி லம்ம
பழன மஞ்ஞை யுகுத்த பீலி
கழனி யுழவர் சூட்டொடு தொகுக்குங்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே.

திணை - பாடாண்டிணை ; துறை - வாழ்த்தியல்.

சோழன்முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி கருவூரிடைச்செல்வானைக்கண்டு சேரமானந்துவஞ்சேரலிரும்பொறையோடு வேண்மாடத்துமேலிருந்து உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார் பாடியது.

இ - ள்.—இவன்யாரென்று வினவுவாயாயின், இவன்றான், புலியினதுதோலாற்செய்யப்பட்ட மெய்புகுகருவிபொலிந்த கொளுத்தற எய்த அம்புகள் போழப்

பட்ட பாந்துயர்ந்த மார்பினையுடைய கூற்றம்போன்ற களிற்றின்மேலோன்; இக் களிறுதான், கடலின்கண்ணே இயங்கும் மரக்கலத்தையொப்பவும் பலமீனினது நடுவேசெல்லும் மதியத்தையொப்பவும் சுறவினினத்தையொத்த வாண்மறவர்சூழத் தன்னைமருவியபாகரையறியாது மதம்பட்டது; இவன் நோயின்றிப் பெயர்வானாக; வயலிடத்து மயிலுதிர்த்த பீலியை ஆண்டுள்ள உழவர் நெற்சூட்டுடனே திரட்டும் கொழுவிய மீனையும் விளைந்த கள்ளையுமுடைய மிக்கநீராகிய வேலியையுடைய நாட்டையுடையோன்.—எ - று.

களிற்றுமிசையோனாகிய இவன், யாரென்குவையாயின், நாடுகிழவோன்; இவன்களிறு மதம்பட்டது; அதனால், இவன் நோயின்றிப்பெயர்கவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

களிற்றுக்கு நாவாயோடு உவமை எதிர்ப்படையைக் கிழித்தோடலும், திங்களோடு உவமை வாளோர்சூழத் தன் தலைமைதோன்றச் செல்லுதலுமாகக்கொள்க. இல் - விழைவின்கண் நின்றது.

பெருநற்கிள்ளிகளிறு கையிகந்து பகையகத்துப் புகுந்தமையான் அவற்குத் தீங்குறுமென்று அஞ்சி வாழ்த்தினமையால், இது வாழ்த்தியலாயிற்று; இவற்குத் தீங்குறின் நமக்குத்தீங்குறுமென்னுங்கருத்தால் நோயிலனாகிப் பெயர்கவென்றாராயின், வாழ்த்தியலாகாது; துறையுடையானது பாட்டெனவுணர்க. (கங)

(கச.) கடுங்கண்ண கொல்களிற்றாற்
காப்புடைய வெழுமுருக்கிப்
பொன்னியற் புனைதோட்டியான்
முன்புதுரந்து சமந்தாங்கவும்
பாருடைத்த குண்டகழி
நீரழுவ நிவப்புக்குறித்து
நிமிர்பரிய மாதாங்கவும்
மாவஞ் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்
சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்
பரிசிலர்க் கருங்கல நல்கவுங் குரிசில்
வலிய வாகுநின் றடோய் தடக்கை
புலவுநாற்றத்த பைந்தடி
பூநாற் றத்த புகைகொளீஇ யூன்றுவை
கறிசோ றுண்டு வருந்துதொழி லல்லது
பிறிதுதொழி லறியா வாகலி னன்று
மெல்லிய பெரும தாமே நல்லவர்க்
காரணங் காகிய மார்பிற் பொருநர்க்
கிருநிலத் தன்ன நோன்மைச்
செருமிகு சேஎய்நிற் பாடுநர் கையே.

திணை - அது ; துறை - இயன்மொழி.

சேரமான்செல்வக்கடுங்கோவாழியாதன் கபிலர்கைப்பற்றி 'மெல்லியவா லால்நுங்கை' எனக் கபிலர் பாடியது.

இ - ள்.—வன்கண்மையையுடைய கொலையானையாலே காவலையுடைய கணைய மரத்தை முறித்து இரும்பாற்செய்யப்பட்ட அழகுசெய்த அங்குசத்தால் முன்னர்க் கடாவி அதுசெய்யும்வினையைப் பின்வேண்டுமளவிலே பிடிக்கவும், வலிய நிலத்தைக் குந்தாலியால் இடித்துச்செய்த குழிந்த இடங்களின்கண் நீர்ப்பரப்பினது ஆழமாகிய உயர்ச்சியைக் கருதி அதன்கட்செல்லாமல் மிகைத்த செலவினையுடைய குதிரையைக் குசைதாங்கி வேண்டுமளவிலே பிடிக்கவும், அம்பறாத்தூணிபொருந்திய முதுகையுடையையாய்த் தேர்மேலேநின்று வில்லினது வலியநாணுற்பிறந்த வடுப் பொருந்தும்படி அம்பைச் செலுத்தவும், பரிசிலர்க்குப் பெறுதற்கரிய அணிகலங்களை அளிக்கவும், தலைவ, வலியவாகும், நின் முழந்தாளைப்பொருந்திய பெரிய கைகள்; புலாலுற்றத்தையுடையவாகிய செவ்வித்தடியைப் பூநாற்றத்தவாகிய புகையைக் கொளுத்தி அமைந்த ஊனையும் துவையையும் கறியையும் சோற்றையும் உண்டு வருந்துஞ்செயலல்லது வேறுசெயலறியாவாகலான், அவைதாம், பெரிதும், மெல்லியவாயின ; பெரும, பெண்டிர்கட்கு ஆற்றுதற்கரிய வருத்தமாகிய மார்பினையும் பொருவார்க்குத் துளக்கப்படாமையிற் பெரியநிலம்போன்ற வலியினையுமுடைய போரின்கண்ணே மிக்க சேயையொப்பாய், நின்னைப்பாடுவாருடைய கைகள்.—எ - று.

கொளீஇயென்னுமெச்சம், அமைத்தவென்னும் ஒருசொல்வருவித்து முடிக்கப்பட்டது ; கொளுத்தவெனத்திரித்து, அவ்வூனென ஒருசுட்டுவருவித்து அதனொடுமுடிப்பினும் அமையும். உண்டென்பது, பொதுவினையன்றேனும் கறியொழிந்தவற்றிற்கெல்லாம் சேறலின், பன்மைபற்றி அமைத்துக்கொள்ளப்படும் ; ஊன் துவை கறியொடுகூடிய சோற்றை உண்டென உரைப்பினும் அமையும் ; இதனைப் பொதுவினையென்றுரைப்பாருமுளர்.

குரிசில், பெரும, சேஎய், வலியவாகும், நின்கை ; நிற்பாடுநர்கைதாம் மெல்லியவாகுமெனக்கூட்டுக.

இனி, மாதாங்கவுமென்பதற்கு அகழியைக் கடக்கப்பாய்தற்குக் குதிரைக் குசையைத்தாங்கி எடுத்துவிடவுமென்றுரைப்பாருமுளர். பாடுநரெனத் தம்மைப் படர்க்கையாகக்கூறினார்.

தம்கையின் மென்மையது இயல்புகூறுவார், அரசன்கையின் வலிய இயல்புங்கூறினமையான், இஃது இயன்மொழியாயிற்று. (கசு)

(கரு.) *கடுந்தேர் குழித்த ஞெள்ளல் லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்

* இப்பாட்டின் முதற்பாகத்தை, மக்கட்பாடாண்டிணைக்குரிய துறையாகிய மன்னெயிலழித்த மண்ணுமங்கலத்திற்கு உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், ௩௬ - ம் சூத்திரவுரை].

புள்ளின மிமிழும் புகழ்சால் விளைவயல்
வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகளத்
தேர்வழங் கினைநின் றெவ்வர் தேஎத்துத்
துளங்கியலாற் பணையெருத்திற்
பாவடியாற் செறனோக்கி
னொளிறுமருப்பிற் களிறவர
காப்புடைய கயம்படியினை
யன்ன சீற்றத் தனையை யாகலின்
விளங்குபொன் னெறிந்த நலங்கிளர் பலகையொடு
நிழல்படு நெடுவே லேந்தி யொன்னார்
ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்
நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய
வசைபட வாழ்ந்தோர் பலர்கொல் புரையி
னற்பனுவ னால்வேதத்
தருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட வியன்களம் பலகொல்
யாபல கொல்லோ பெரும வாருற்று
விசிபிணிக் கொண்ட மண்கனை முழவிற்
பாடினி பாடும் வஞ்சிக்கு
நாடல் சான்ற மைந்தினோய் நினக்கே.

திணையுந் துறையும் அவை.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியை நெட்டிமையார் பாடியது.

இ - ள்.—விரைந்த தேர் குழித்த தெருவின்கண்ணே வெளிய வாயையுடைய கழுதையாகிய புல்லிய நிரையைப் பூட்டி உழுது பாழ்படுத்தினை, அவருடைய அகலிய இடத்தையுடைய நல்ல அரண்களை; புள்ளினங்களொலிக்கும் புகழமைந்த விளைகழனிக்கண்ணே வெளிய தலையாட்டமணிந்த மனஞ்செருக்கிய குதிரையினுடைய கவிந்த குளம்புகள் தாவத் தேரைச் செலுத்தினை, நின்னுடைய பகைவர் தேயத்துக்கண்; அசைந்ததன்மையோடு பெரியகழுத்தினையும் பரந்த அடியோடு வெகுட்சிபொருந்திய பார்வையினையும் விளங்கியகோட்டினையுமுடைய களிற்றை அப்பகைவருடையனவாகிய காவலையுடைய வாவிக்கட் படிவித்தனை; அப்பெற்றிப்பட்ட சினத்துடனே அதற்கேற்றசெய்கையையுடையை; ஆதலான், விளங்கிய இரும்பாற்செய்யப்பட்ட ஆணியும்பட்டமும் அறைந்த அழகுமிக்க பலகையுடனே நிழலுண்டாகிய நெடிய வேலை எடுத்துப் பகைவர் ஒள்ளிய படைக்கலங்களையுடைய நின்னது விரைந்ததூசிப்படையின்வலியைக் கெடுத்தல்வேண்டித் தம் ஆசை

கொடுவர வந்தோர் அவ்வாசை பின் ஒழிய வசையுண்டாக உயிர்வாழ்ந்தோர் பலரோ? குற்றமில்லாத நல்ல தருமநூலினும் நால்வகைப்பட்ட வேதத்தினுஞ் சொல்லப்பட்ட எய்தற்கரிய மிக்கபுகழையுடைய சமிதையும் பொரியும்முதலாகிய பெரிய கண்ணுறையோடு நெய்மிக்க புகை மேன்மேற்கிளரப் பலமாட்சிமைப் பட்ட கெடாத தலைமையையுடைய யாகங்களை முடித்துத் தூண்நடப்பட்ட அகன்ற வேள்விச்சாலைகள் பலவோ? இவற்றுள், யாவையோ பல? பெரும, வார் பொருந்தி வலித்துக்கட்டுதலைப்பொருந்திய மார்ச்சனைசெறிந்த தண்ணுமையை யுடைய விறலிபாடும் மேற்செலவிற்கு ஏற்ப, ஆராய்தலமைந்த வலியையுடையோய், நினக்கு.—எ - று.

பூட்டி என்னும் வினையெச்சத்திற்கு உழுதென்னுஞ்சொல் தந்துரைக்கப்பட்டது. நற்பனுவலாகிய நால்வேதமென்பாருமுளர். நற்பனுவல்நால்வேதத்து வேள்வியென இயையும்.

பெரும, மைந்தினோய், பாழ்செய்தனை; தேர்வழங்கினை; கயம்படியினை; ஆகலின், நினக்கு ஒன்னாராகிய வசைபடவாழ்ந்தோர் பலர்கொல்? யூபம்நட்ட வியன்களம் பலகொல்? இவற்றுள், யா பலகொல்லோவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

விளங்குபொன்னெறிந்தவென்பதற்குக் கண்ணுடிதைத்தவெனினும் அமையும். தார் முன்பு தலைக்கொண்மாரென்பதற்குத் தாரை வலியால் தலைப்படவெனினும் அமையும். புரையுநற்பனுவலென்பதூஉம் பாடம். யாபலவோவென இவ்விரண்டின்பெருமையும் கூறியவாறு.

இவை எப்பொழுதுஞ்செய்தல் இயல்பெனக்கூறினமையின், இஃது இயன்மொழியாயிற்று. (க௫)

(கசு.) வினைமாட்சிய விரைபுரவியொடு
மழையுருவின தோல்பரப்பி
முனைமுருங்கத் தலைச்சென்றவர்
விளைவயல் கவர்பூட்டி
மனைமரம் விறகாகக்
கடிதுறைநீர்க் களிறுபடீஇ
எல்லுப்பட விட்ட சுடுதீ விளக்கஞ்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றோன்றப்
புலங்கெட விறுக்கும் வரம்பி றானைத்
துணைவேண்டாச் செருவென்றிப்
புலவுவாட் புலர்சாந்தின்
முருகற் சீற்றத் துருகெழு குரிசின்
மயங்குவள்ளை மலராம்பற்
பனிப்பகன்றைக் கனிப்பாகற்
கரும்பல்லது காடறியாப்
பெருந்தண்பணை பாழாக

வேம நன்று டொள்ளெரி யூட்டினை
நாம நல்லமர் செய்ய
வோராங்கு மலைந்தன பெருமநின் களிறே.

திணை - வஞ்சி; துறை - *மழபுலவஞ்சி.

சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியைப் பாண்டரங்கண்ணனார் பாடியது.

இ - ள்.—போரிற்கு நன்மையையுடையவாகிய விரைந்த குதிரையுடனே முகில்போலுநிறத்தையுடைய பரிசையைப் பரப்பி, முனையிடங்கலங்க மேற்சென்று, அவரது நெல்விளைகழனியைக் கொள்ளையூட்டி, மனையிடத்துமரமே விறகாகக் காவற்பொய்கைகளின் நீரிலே களிற்றைப் படிவித்து, விளக்கமுண்டாகவிடப்பட்ட நாடுசுடுநெருப்பினது ஒளிதான் விடுகின்ற கதிரையுடைய ஞாயிற்றினது செக்கர்நிறம்போலத் தோன்ற இடமில்லையாகச் சென்றுவிடும் எல்லையில்லாத படையினையும், துணைப்படைவேண்டாத போர்வெற்றியினையும், புலானாறும் வாளினையும், பூசிப்புலர்ந்த சாந்தினையும், முருகனது வெகுட்சிபோலும் வெகுட்சியினையுமுடைய உட்குப்பொருந்திய தலைவ, ஒன்றோடொன்றுகலந்த வள்ளையையும் மலர்ந்த ஆம்பலையும் குளிர்ச்சியையுடைய பகன்றையையும் பழத்தையுடைய பாகலையுமுடைத்தாகிய கரும்பல்லது பிறிதுகாடறியாத பெரிய மருதம் பாழாகக் காவலையுடைய நல்ல நாட்டை ஒள்ளிய தீயை ஊட்டி அஞ்சத்தக்க நல்ல போரைச் செய்ய, நின்கருத்திற்கேற்ப ஒருபெற்றிப்படப்பொருதன, பெரும, நின்னுடைய களிறுகள்.—எ - று.

தோல்பரப்பியென்பதுமுதலாகிய வினையெச்சங்களை இறுக்குமென்னும் பெயரெச்சவினையொடு முடித்து, அதனைத் தானையென்னும்பெயரொடு முடிக்க. பாகற்றண்பணையென இயையும். எல்லுப்படவிட்ட சுடுதீயென்றதனைத் தானைக்கு அடையாக்குக. கவர்பூட்டியென்பதற்கு விரும்பிக்கொள்ளையூட்டியெனவும், புலங்கெடவென்பதற்கு நாடழியவெனவும், புலவுவாளென்பதற்குப் புலாலுடையவாளெனவும் உரைப்பினும் அமையும்.

குரிசில், பெரும, நீ அமர்செய்ய, நின்களிறு ஓராங்குமலைந்தனவென வினைமுடிவுசெய்க.

பாகல் - பலாவென்று உரைப்பாருமுளர்.

ஏமநன்றுடொள்ளெரியூட்டியென்றதனால், இது மழபுலவஞ்சியாயிற்று. (கசு)

(கஎ.) தென்குமரி வடபெருங்கற்
குணகுடகட லாவெல்லை
குன்றுமலை காடுநா
டொன்றுபட்டு வழிமொழியக்

---

* இப்பாட்டினை, எரிபரந்தெடுத்தலென்னும் துறைக்கு உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், அ - ம் சூத்திரவுரை].

கொடிதுகடிந்து கோறிருத்திப்
படுவதுண்டு பகலாற்றி
யினிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல
குலையிறைஞ்சிய கோட்டாழை
யகல்வயன் மலைவேலி
நிலவுமணல் வியன்கானற்
றெண்கழிமிசைச் சுடர்ப்பூவிற்
றண்டொண்டியோ ரடுபொருந
மாப்பயம்பின் பொறைபோற்றாது
நீடுகுழி யகப்பட்ட
பீடுடைய வெறுழ்முன்பிற்
கோடுமுற்றிய கொல்களிறு
நிலைகலங்கக் குழிகொன்று
கிளைபுகலத் தலைக்கூடியாங்கு
நீபட்ட வருமுன்பிற்
பெருந்தளர்ச்சி பலருவப்பப்
பிறிதுசென்று மலர்தாயத்துப்
பலர்நாப்பண் மீக்கூறலி
னுண்டாகிய வுயர்மண்ணுஞ்
சென்றுபட்ட விழுக்கலனும்
பெறல்கூடு மிவனெஞ் சுறப்பெறி னெனவு
மேந்துகொடி யிறைப்புரிசை
வீங்குசிறை வியலருப்ப
மிழந்துவைகுது மினிநாமிவ
னுடன்றுநோக்கினன் பெரிதெனவும்
வேற்றரசு பணிதொடங்குநின்
னாற்றலொடு புகழேத்திக்
காண்கு வந்திசிற் பெரும வீண்டிய
மழையென மருளும் பஃறோன் மலையெனத்
தேனிறைகொள்ளு மிரும்பல் யானை
யுடலுநரூட்க வீங்கிக் கடலென
வானீர்க் கூக்குந் தானை யாணது
கடுவொடுங் கெயிற்ற ரவுத்தலை பனிப்ப
விடியென முழங்கு முரசின்
வரையா வீகைக் குடவர் கோவே.

திணை - வாகை; துறை - அரசவாகை; இயன்மொழியுமாம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்றநெடுஞ்செழியனாற் பிணியிருந்த யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை வலிதிற்போய்க்கட்டிலெய்தினானைக் *குறுங்கோழியூர்கிழார் பாடியது.

இ - ள்.—தென்றிசைக்கட் கன்னியும் வடதிசைக்கண் இமயமும் கீழ்த்திசைக்கண்ணும் மேற்றிசைக்கண்ணுங் கடலும் எல்லையாக நடுவுபட்ட நிலத்துக் குன்றும் மலையும் காடும் நாடும் என இவற்றையுடையோர் ஒருபெற்றிப்பட்டு வழிபாடு கூறத் தீத்தொழிலைப்போக்கிக் கோலைச் செவ்விதாக்கி அறிவொன்றாகிய இறையை உண்டு நடுவுநிலைமையைச்செய்து தடையின்றாக உருண்ட ஒளியையுடைய சக்கரத்தால் நிலமுழுதையும் ஆண்டோரது மரபைக் காத்தவனே, குலைதாழ்ந்த கோட்புக்க தெங்கினையும் அகன்ற கழனியையும் மலையாகிய வேலியையும் நிலாப்போன்ற மணலையுடைய அகன்ற கடற்கரையையும் தெளிந்த கழியிடத்துத் தீப்போலும் பூவினையுமுடைய குளிர்ந்த தொண்டியிலுள்ளோருடைய அடுபொருந, யானைபடுக்குங்குழிமேற்பாவின பாவைத் தன்மனச்செருக்காற் பாதுகாவாது ஆழ்த்தால் நெடியகுழியின்கண்ணே அகப்பட்ட பெருமையையுடைத்தாகிய மிக்கவலியையுடைய கொம்புமுதிர்ந்த கொல்லுங்களிறு அதன் நிலைசரியக் குழியைத்தூர்த்துத் தன்னினம்விரும்பத் தன்னினத்திலேசென்று பொருந்தினாற்போல, பொறுத்தற்கரிய வலியாற் பகையைமதியாது நீயுற்ற பெரியதளர்ச்சி நீங்கப் பிறிதொருசூழ்ச்சியாற் போய்ப் பலருமகிழப் பரந்த உரிமையையுடைய இடத்தின் நின்சுற்றத்தார் பலர்க்குநடுவே உயர்த்துச்சொல்லப்படுதலால், நீ செழியனாற்பிணிப்புண்பதற்கு முன்பு நின்னாலழிக்கப்பட்டுப் பின்பு தம்மரசுவௌவாது நின்வரவுபார்த்திருந்த அரசர் நமதாய் இவனாற்கொள்ளப்பட்டு உண்டு அடிப்பட்டுப்போந்த மேம்பட்ட நிலமும் இவன்பாற்சென்றுற்ற சீரிய அணிகலமும் கிடைத்தலுண்டாம், இவனது நெஞ்சு நமக்கு உரித்தாகப்பெறினென நினைந்தும், நின்வரவுபார்த்திராது தம்மரசுவௌவிய பகைவர் எடுத்தகொடியையுடைய உயர்ந்த மதிலையும் மிக்க காடும் அகழும் முதலாய காவலையுடைய அகலிய அரணினையும் நாம் இனி இழந்துதங்குவேம், இவன் நம்மை வெகுண்டுபார்த்தான் மிகவென நினைந்தும் பகைவேந்தர் ஏவல் செய்யத்தொடங்குதற்குக் காரணமாகிய நினது வலியுடனே புகழை வாழ்த்திக் காண்பேனாகவந்தேன்; பெரும, திரண்ட முகிலெனக் கருதி மயங்கும் பல்பரிசைப் படையினையும், மலையென்றுகருதித் தேனினந்தங்கும் பெரிய பல யானையினையும், மாறுபடுவோர் அஞ்சும்படி பெருத்தலாற் கடலெனக்கருதி மேகம் நீர்முகக்க மேற்கொள்ளும் படையினையும் அமையாது நஞ்சுகரக்கும் பல்லினையுடையவாகிய பாம்பினது தலை நடுங்கும்பரிசு இடியென்றுகருத முழங்கும் முரசினையும், எல்லார்க்கும் எப்பொருளும் வரையாதுகொடுக்கும் வண்மையையுமுடைய குடநாட்டார்வேந்தே.—எ - று.

காவல, பொருந, பெரும, கோவே, ஏத்திக் காண்கு வந்தேனெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

* குறுங்கொளியூர்கிழாரென்றும் பிரதிபேதமுண்டு.

குன்றென்றது, சிறுமலைகளை; அன்றி, மணற்குன்றென்று நெய்தனிலமாக்கி ஏனை மூன்றோடுங் கூட்டி, நானிலத்தோருமென்று உரைப்பாருமுளர். அடுபொருநவென்றது, வேந்தற்கு வெளிப்படையாய் நின்றது. தளர்ச்சியென்பதன் பின் நீங்கவென ஒருசொல் தந்தது. 'அருமுன்பிற் ......... பிறிதுசென்று' என்பதற்கு முன்பாலே தளர்ச்சி பிறிதாகப் பலருவப்பச் சென்றெனினும் அமையும்; அன்றி முன்பின் தளர்ச்சி பிறிதாகச் சென்றென்று உரைப்பாருமுளர். ஆனது முழங்கும் முரசென்க. (கஎ)

(கஅ.) முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்து பட்ட வியன்ஞாலம்
தாளிற் றந்து தம்புகழ் நிறீஇ
யொருதா மாகிய வுரவோ ரும்ப
லொன்றுபத் தடுக்கிய கோடிகடை யிரீஇய
பெருமைத் தாகநின் னாயு டானே
நீர்த்தாழ்ந்த குறுங்காஞ்சிப்
பூக்கதூஉ மினவாளை
நுண்ணாரற் பருவரால்
*குரூஉக்கெடிற்ற குண்டகழி
வானுட்கும் வடிநீண்மதின்
மல்லன்மூதூர் வயவேந்தே
செல்லு முலகத்துச் செல்வம் வேண்டினு
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி
யொருநீ யாகல் வேண்டினுஞ் சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினு மற்றதன்
றகுதி கேளினி மிகுதி யாள
நீரின் றமையா யாக்கைக் கெல்லா
முண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
யுண்டி முதற்றே யுணவின் பிண்ட
முணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரு நிலனும் புணரி யோரீண்
டுடம்பு முயிரும் படைத்திசி னோரே
வித்திவா னோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினு நண்ணி யாளு
மிறைவன் றாட்குத வாதே யதனா
லடுபோர்ச் செழிய விகழாது வல்லே
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்

* குரூஉக்கெடிற்றுக்குண்டகழியென்றும் பாடம்.

தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே.

திணை - பொதுவியல்; துறை - முதுமொழிக்காஞ்சி.

பாண்டியன்நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடியது.

இ - ள்.—ஒலிக்கின்ற கடலானது முழுதுஞ் சூழப்பட்டுப் பரந்துகிடக்கின்ற அகன்ற உலகத்தைத் தமதுமுயற்சியாற் கொண்டு தம்முடைய புகழை உலகத்தின்கண்ணே நிறுத்தித் தாமேயாண்ட வலியோருடைய வழித்தோன்றிஞோய், ஒன்றைப் பத்துமுறையாக அடுக்கப்பட்டதாகிய கோடியென்னும் எண்ணினைக்கடையெண்ணாக இருத்திய சங்குமுதலாகிய பேரெண்ணினை உடைத்தாக, நினது வாழ்நாள்; நீரின்கண்ணே உறத் தாழ்ந்த குறிய காஞ்சியினது பூவைக்கவரும் இனமாகிய வாளையினையும் நுண்ணிய ஆரலினையும் பரிய வராலினையும் நிறமுடைய கெடிற்றினையுமுடைத்தாகிய குழிந்த கிடங்கினையும் வானமஞ்சும் திருந்திய நெடிய மதிலையுமுடைத்தாகிய வளவிய பழைய ஊரினையுடைய வலியவேந்தே, நீ போகக்கடவ மறுமையுலகத்தின்கண் நுகருஞ் செல்வத்தைவிரும்பினும், உலகத்தைக் காப்பாரது தோள்வலியைக் கெடுத்து நீ ஒருவனுமே தலைவனாதலை விரும்பினும், மிக்க நல்ல புகழை இவ்வுலகத்தே நிறுத்துதலைவிரும்பினும், அவ்வேட்கைக்குத் தக்க செய்கையைக் கேட்பாயாக; இப்பொழுது, பெரியோய், நீரை இன்றியமையாத உடம்பிற்கெல்லாம் உணவுகொடுத்தவர்கள் உயிரைக்கொடுத்தார்; உணவை முதலாகவுடைத்து, அவ்வுணவாலுளதாகிய உடம்பு; ஆதலால், உணவென்றுசொல்லப்படுவது நிலத்தோடுகூடிய நீர்; அந்நீரையும் நிலத்தையும் ஒருவழிக்கூட்டினவர்கள் இவ்வுலகத்து உடம்பையும் உயிரையும் படைத்தவராவர்; நெல்முதலாயவற்றை வித்தி மழையைப்பார்த்திருக்கும் புல்லிய நிலம் இடமகன்ற நிலத்தையுடைத்தாயினும் அது பொருந்தியாளும் அரசனது முயற்சிக்குப் பயன்படாது; ஆதலால், கொல்லும்போரையுடைய செழிய, இதனைக் கடைப்பிடித்து விரைந்து நிலங்குழிந்தவிடத்தே நீர்நிலைமிகும்பரிசு தளைத்தோர், தாஞ்செல்லுமுலகத்துச் செல்வமுதலாகிய மூன்றினையும் இவ்வுலகத்துத் தம்பேரோடுதளைத்தோராவர்; அந்நீரைத் தளையாதவர், இவ்வுலகத்துத் தம்பெயரைத் தளையாதோர்.—எ - று.

இதனால், நீயும், நீர்நிலைபெருகத் தட்கவேண்டுமென்பது கருத்தாகக்கொள்க. மற்றும், அம்மவும் - அசைநிலை. உணவின்பிண்டம் உண்டிமுதற்றுதலான், உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரென மாறிக்கூட்டுக. தள்ளாதோர் இவட்டள்ளாதோராதலால், செழிய, இதனை இகழாது வல்லேசெய்யென ஒருசொல் வருவித்துரைப்பாருமுளர். தட்டோரென்பதற்குத் தம்பெயரைத் தளைத்தோரெனினும் அமையும்.

நீரும் நிலனும் புணரியோர் உடம்பும் உயிரும்படைத்தோரெனவே செல்லுமுலகத்துச் செல்வமும், வித்திவானோக்கும்புன்புலம் இறைவன்றாட்கு உதவாதெனவே, நீர்நிலைபெருகத்தட்டலால் வானோக்கவேண்டாத நன்புலம் இறைவன்றாட்கு உதவி ஞாலங்காவலர் தோள்வலிமுருக்குதலும், நிலனெளிமருங்கின் நீர்நிலைபெருகத் தட்டோர் இவட்டட்டோரெனவே நல்லிசைநிறுத்தலும் கூறப்பட்டன.

நீர்நிலைபெருகத்தட்கவே அறன்முதன்மூன்றும் பயக்குமென்பது கூறினமையான், இது முதுமொழிக்காஞ்சியாயிற்று. (௧௮)

(௧௯.) இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய *தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையுங் கூற்றத் தொருமையு
நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய
விரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய
பெருங்கல் லடாரும் போன்மென விரும்பி
முயங்கினே னல்லனோ யானே மயங்கிக்
குன்றத் திறுத்த குரீஇயினம் போல
வம்புசென் றிறுத்த வரும்புண் யானைத்
தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து
நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள
வெறிந்துகளம் படுத்த வேந்துவாள் வலத்த
ரெந்தையொடு கிடந்தோரெம் புன்றலைப் புதல்வ
ரின்ன விறலு முளகொ னமக்கென
மூதிற் பெண்டிர் கசிந்தழ நாணிக்
கூற்றுக் கண்ணோடிய வெருவரு பறந்தலை
யெழுவர் நல்வலங் கடந்தோய்நின்
கழூஉவிளங் காரங் கவைஇய மார்பே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—ஒலிக்குங் கடலாற் சூழப்பட்ட அணுச்செறிந்த அகன்ற உலகத்துக்கண் தமிழ்ப்படை கைகலந்த தலையாலங்கானத்துக்கண் நிலைபெற்ற உயிரது பன்மையையும் அவ்வுயிரைக்கொள்ளுங் கூற்றினது ஒருமையையும் நின்னுடனே சீர்தூக்கிக்காட்டிய வென்றிவேலையுடைய செழிய, பெரும்புலியைப்படுக்கும் வேட்டுவன் எந்திரமறிந்து கொளுத்திய பெரிய கல்லையுடைய அடாரையும்போலுமென்று விரும்பிப் புல்லினேனல்லனோ? யான்; கலங்கி மலைக்கண்ணே தங்கிய குருவியினம்போல அம்புசென்றுதைத்த பொறுத்தற்கரிய புண்ணையுடைய யானையினது தொளையையுடைய பெருங்கை வாயுடனே துணிந்துவீழ்ந்து கலப்பையையொப்ப நிலத்தின்மேலே புரள வெட்டிப் போர்க்களத்தின்கண்ணே வீழ்த்த ஏந்திய வாள்வெற்றியையுடையோராய் எந்தலைவனொடுகிடந்தார், எம்முடைய புல்லியதலையையுடைய மைந்தர்; இப்பெற்றிப்பட்ட வென்றியும் உளவோ நமக்கென்றுசொல்லி முதிய மறக்குடியிற்பிறந்த பெண்டிர் இன்புற்று உவகையால் அழ, அதுகண்டு நாணிக்

---

* "இமிழ்கடல் ......... ......... தலையாலங்கானத்து" எனத் தலையாலங்கானமென்றவழி ஆசிரிய அடியுள் இன்சீரியைய வெண்சீர்வந்தது என்பர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, செய்யுளியல், ௯௦ - ம் சூத்திரவுரை].

கூற்றம் இரங்கிய அஞ்சத்தக்க போர்க்களத்தின்கண்ணே இருபெருவேந்தரும் ஐம்பெருவேளிருமாகிய *எழுவரது நல்வலியை வென்றோய், நினது கழுவிவிளங்கின முத்தாரம் அகத்திட்ட மார்பை.—எ - று.

தமிழ்தலைமயங்கியவென்புழி, தலை - அசைநிலை; இடமுமாம்.

செழிய, கடந்தோய், நின்மார்பை யான் விரும்பி முயங்கினேனல்லேனெனக்கூட்டுக.

பெருங்கல்லடாருமென்ற உம்மை, எமக்கு விருப்புஞ்செய்தலேயன்றி நின் பகைவர்க்குவருத்தஞ்செய்தலான், நின்மார்பு கல்லடாரும்போலுமென எச்சவும்மையாயிற்று; சிறப்பும்மையுமாம். மூதிற்பெண்டிர் கசிதலால் நாணியெனவும் அழுதலாற் கண்ணோடியெனவும் நிரனிறையாகக்கொள்க. போர்முடிதலாற் போயினகூற்றை நாணியும் கண்ணோடியும் போயிற்றுப்போலக் கூறியது, ஓரணி கருதிநின்றது. இனி, அம்புதைத்தயானையை வெட்டிப்படுத்தல் மறத்திற்கிழிபென்று பெண்டிர் இரங்கியழுதலின், கூற்றுக் கண்டு நாணிக் கண்ணோடியவென்று உரைப்பாருமுளர். (கக)

(உ0.) †இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிதுநிலைஇய காயமும், என்றாங்
கவையளந் தறியினு மளத்தற் கரியை
யறிவு மீரமும் பெருங்கண் ணோட்டமுஞ்
சோறுபடுக்குந் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெற லறியார்நின் னிழல்வாழ் வோரே
திருவி லல்லது கொலைவில் லறியார்
நாஞ்சி லல்லது படையு மறியார்
திறனறி வயவரொடு தெவ்வர் தேயவப்
பிறர்மண் ணுண்ணுஞ் செம்மனின் னாட்டு
வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது

* எழுவராவார்:—சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேள், மான்பொருநன் என்பவர்; இதனை, பத்துப்பாட்டு கஅகூ - ம் பக்கத்திற்காண்க. "காலென்னக் கடிதுராஅய், நாடுகெட வெரிபரப்பி, யாலங் கானத் தஞ்சுவரவிறுத்,தரசுபட வமருழக்கி, முரசுகொண்டு களம்வேட்ட, வடுதிற லுயர் புகழ்வேந்தே" என்றார் மதுரைக்காஞ்சியிலும் [அடி கஉரு - கஙo].

† இப்பாட்டினை, மக்கட்பாடாண்டினைக்குரியதுறைகளுள் நாளும் புள்ளும் பிறவற்று நிமித்தமும் அச்சமும் உவகையும் எச்சமின்றிக் காலங் கண்ணிய ஓம்படைக்கு உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர்; அதனை, தொல், பொரு, புறத்திணையியலில், "தாவி னல்லிசை" என்னும் ஙகூ - ம் சூத்திரவுரையிற்காண்க.

பகைவ ருண்ணா வருமண் ணினையே
யம்புதுஞ்சுங் கடியரணா
லறந்துஞ்சுஞ் செங்கோலையே
புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்
விதுப்புற வறியா வேமக் காப்பினை
யனையை யாகன் மாறே
மன்னுயி ரெல்லா நின்னஞ் சும்மே.

திணையும் துறையும் அவை.

சேரமான்யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறையைக் குறுங்கோழியூர் கிழார் பாடியது.

இ - ள்.—பெரிய கடலினது ஆழமும், அகன்ற உலகத்துப் பரப்பும், காற்றியங்குந் திசையும், வடிவின்றி நிலைபெற்ற ஆகாயமும் என்றுசொல்லப்படுமவற்றை வரையறுத்தறியினும் வரையறுத்தற்கரியை, அறிவும் அன்பும் மிக்க கண்ணோட்டமும்; ஆகலால், சோற்றை ஆக்கும் நெருப்புடனே செஞ்ஞாயிற்றினது வெம்மையல்லது வேறுவெம்மையறியார், நின்குடைநிழற்கண்வாழ்வோர்; இந்திரவில்லல்லது பகைவரது கொலைவில்லையறியார்; கலப்பையல்லது வேறு படைக்கலமுமறியார்; போர்செய்யும் கூறுபாட்டையறியும் வீரருடனே பகைவர் மாய அம்மாற்றருடைய *மண்ணைக் கொண்டுண்ணுந் தலைவ, நின்னுடைய நாட்டின்கண் வேட்கைநோயுற்ற பெண்டிர் விரும்பி உண்ணினல்லது பகைவருண்ணப்படாத பெறுதற்கரிய மண்ணையுடையை; அம்புதங்குங் காவலையுடைய அரணுடனே அறந்தங்கும் செவ்விய கோலையுடையை; புதுப்புள் வரினும் பழையபுள் அவ்விடத்தைவிட்டுப்போகினும் அவற்றால் நடுக்கமுறுதலறியாத சேமமாகிய காவலையுடையை; அத்தன்மையையுடையையாதலான், உலகத்து நிலைபெற்ற உயிரெல்லாம், தத்தங்காதலால் நினக்கு ஏதம்வருங்கொலென்று அஞ்சும்.—எ - று.

அறிவும் ஈரமுங் கண்ணோட்டமுமென்பன சினைவினைப்பாற்பட்டு அளத்தற்கரியையென்னும் முதல்வினை கொண்டன. (உ0)

(உக.) புலவரை யிறந்த புகழ்சா றோன்ற
னிலவரை யிறந்த குண்டுகண் ணகழி
வான்றோய் வன்ன புரிசை விசும்பின்
மீன்பூத் தன்ன வுருவ ஞாயிற்
கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை
யருங்குறும் புடுத்த கானப்பே ரெயில்
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
விரும்பு ணீரினு மீட்டற் கரிதென
வேங்கை மார்ப னிரங்க வைகலு

* இப்பொருள்பற்றியே வடமொழியிலும் 'பூபுக்' என்று அரசனைக்கூறுவர்.

மாடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே
மிகழுந ரிசையொடு மாயப்
புகழொடு விளங்கிப் பூக்கநின் வேலே.

திணையும் துறையும் அவை.

கானப்பேரெயில்கடந்த உக்கிரப்பெருவழுதியை ஐயூர்மூலங்கிழார் பாடியது.

இ - ள்.—நின்னைப்பாடுவாரது அறிவினெல்லையைக் கடந்த புகழமைந்த தலைவ, நிலவெல்லையைக் கடந்த பாதலத்தேயுற ஆழ்ந்த இடத்தையுடைய அகழியினையும் உயர்ச்சியான் வானைப்பொருந்துவதுபோன்ற மதிலையும் அவ்வானிடத்து மீனைப் பூத்தாற்போன்ற வடிவையுடைய சூட்டினையும் வெயிற்கதிர்நுழையாத மாஞ்செறிந்த காவற்காட்டினையுமுடைத்தாய் அணைதற்கரிய சிற்றரண்களாற் சூழப்பட்ட கானப்பேரென்னும் அரண் வலிய கையையுடைய கொல்லன் செந்தீயின் கண்ணே மாட்டப்பட்ட இரும்புண்டநீரினும் மீட்டற்கரிதெனக் கருதி வேங்கைமார்பன் வருந்த நாடோறும் வென்றிகொளத் தழைத்த தும்பையையுடைய புலவர் பாடப்படுந் துறைகளைமுடித்த வெற்றியினையுடைய வேந்தே, நின்னைமதியாத பகைவர் தம்முடையபுகழுடனேபொன்ற வெற்றிப்புகழுடனே விளங்கிப் பொலிவதாக, நின்வேல்.—எ - று.

கானப்பேரெயில் மீட்டற்கரிதென வேங்கைமார்பனிரங்கப் பாடுதுறைமுற்றிய கொற்றவேந்தே, நின்வேல் பூக்கவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

குழைத்தவென்பது, குழைந்தவென மெலிந்துநின்றது. (உக)

(உஉ.) தூங்குகையா னோங்குநடைய
வுறழ்மணியா னுயர்மருப்பின
பிறைநுதலாற் செறனோக்கின
பாவடியாற் பணையெருத்தின
தேன்சிதைந்த வரைபோல
மிஞிறார்க்குங் கமழ்கடாத்
தயறுசோரு மிருஞ்சென்னிய
மைந்துமலிந்த மழகளிறு
கந்துசேர்பு நிலைஇவழங்கப்
பாஅனின்று கதிர்சோரும்
வானுறையும் மதிபோலு
மாலைவெண் குடைநிழலான்
வான்மருங்கிலோர் காப்புறங்க
வலங்குசெந்நெற் கதிர்வேய்ந்த
வாய்கரும்பின் கொடிக்கூரை
சாறுகொண்ட களம்போல

வேறுவேறு பொலிவுதோன்றக்
குற்றுறு வுலக்கையாற்
கலிச்சும்மை வியலாங்கட்
பொலந்தோட்டுப் பைந்தும்பை
மிசையலங் குளைய பனைப்போழ் செரீஇச்
சினமாந்தர் வெறிக்குரவை
யோத நீரிற் பெயர்பு பொங்க
வாய்கா வாது பரந்து பட்ட
வியன்பாசறைக் காப்பாள
வேந்துதந்த பணிதிறையாற்
சேர்ந்தவர் *கடும்பார்த்து
மோங்குகொல்லியோ ரடுபொருந
வேழ நோக்கின் விறல்வெஞ் சேனய்
வாழிய பெருமநின் வரம்பில் படைப்பே
நிற்பாடிய வலங்குசெந்நாப்
பிறரிசை நுவலாமை
யோம்பா தீயு மாற்ற லெங்கோ
மாந்தரஞ் சேர விரும்பொறை யோம்பிய நாடே
புத்தே ளுலகத் தற்றெனக் கேட்டுவந்
தினிது கண்டிகிற் பெரும முனிவிலை
வேறுபுலத் திறுக்குந் தானையொடு
சோறுபட நடத்திநீ துஞ்சாய் மாறே.

திணையும் துறையும் அவை; துறை - இயன்மொழியுமாம்.

சேரமான்யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறையைக் குறுங்கோழியூர் கிழார் பாடியது.

இ - ள்.—அசைந்த பெருங்கையுடனே தலையெடுத்துநடக்கும் உயர்ந்த நடையையுடையனவும் அந்நடைக்கேற்ப ஒன்றற்கொன்று மாறுபட்டொலிக்கும் மணியுடனே உயர்ந்த கோட்டினையுடையனவும் பிறைவடிவாகவிடப்பட்ட மத்தகத்துடனே சினம்பொருந்திய பார்வையையுடையனவும் பரந்த அடியுடனே பரிய கழுத்தையுடையனவும் தேனழிந்த மலைபோலத் தேனீயொலிக்கும் மணநாறும் மதத்துடனே புண்வழலைவடியும் பெரிய தலையையுடையனவுமாகிய வலிமிக்க இளங்களிறு கம்பத்தைப்பொருந்தித் தான் நின்றநிலையிலேநின்று அசையப் பக்கத்தே நின்று கிரணத்தைவிடுகின்ற வானத்தின்கண்ணே தங்கும் திங்கள்போலும் முத்தமாலையையுடைய வெண்கொற்றக்குடையினது நிழற்கண்ணே தம்பக்கத்து வாளில்லாதோர் அக்குடையேகாவலாக உறங்க அசைந்த செந்நெற்கதிரால் வேயப்

*கடும்பருத்து மென்றும்பாடம்.

பட்டு மெல்லிய கரும்பாற்கட்டப்பட்ட ஒழுங்குபட்டகூரை விழாவெடுத்துக்கொள்ளப்பட்ட இடம்போல வேறுவேறாகப் பொலிவுதோன்றக் குற்று அமையாத உலக்கையொலியுடனே மிக்க ஆரவாரத்தையுடைய அகன்றவிடத்துப் பொன்னாற் செய்யப்பட்ட இதழையுடைய பசிய தும்பையுடனே மிசையே அசைந்த தலையினையுடைய பனந்தோட்டைச்செருகிச் சினத்தையுடையவீரர் வெறியாடும் குரவைக் கூத்தொலி ஓதத்தையுடைய கடலொலிபோலக் கிளர்ந்துபொங்கப் படைப்பெருமையாற் பகைவருட்கும் மதிப்புடைமையின் இடங்காவாது பரந்துகிடக்கின்ற அகன்ற பாசறையிடத்துக் காவலாள, மாற்றரசர் பணிந்துதந்ததிறையால் தம்மை அடைந்தவருடைய சுற்றத்தைநிறைக்கும் உயர்ந்த கொல்லிமலையோருடைய அடுபொருந, யானையினது நோக்குப்போலும் நோக்கினையுடைய வெற்றியைவிரும்பும் சேயே, வாழ்க, பெருமானே, நினது எல்லையில்லாதசெல்வம்; நின்னைப்பாடிய விளங்கிய செவ்வியநாப் பின்னைப் பிறருடைய புகழைச்சொல்லாமற் பாதுகாவாது கொடுக்கும் வலியையுடைய எங்கோவே, மாந்தரஞ்சேரலிரும்பொறை பாதுகாத்த நாடு தேவருலகத்தையொக்குமென்று பிறர்சொல்லக்கேட்டுவந்து கட்கினிதாகக் கண்டேன்; பெருமானே, முயற்சிவெறுப்பில்லையாய் வேற்றுநாட்டின்கட்சென்றுவிடும் படையுடனே சோறுண்டாகநடப்பை; நீ மடியாயாதலான்.—எ - று.

கதிர்சோருமதியெனவியையும்; கதிர்சோருமென்னும் வினைவினை மதியென்னும் முதலொடுமுடிந்தது; கதிர்சோருமாலையென இயைப்பினுமமையும். பாய்நின்றென்று பாடமோதுவாருமுளர். கூரை பொலிவுதோன்றவென இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்துமேல் ஏறிநின்றது. செரீஇயென்னும் வினையெச்சத்தை ஆடுமென ஒருசொல்வருவித்து அதனோடுமுடிக்க. நிலைவழங்கக் காப்புறங்கப் பொலிவுதோன்றப் பெயர்புபொங்கவென்னும் செயவெனெச்சங்களும், வாய்காவாதென்னும் எதிர்மறைவினையெச்சமும் பரந்துபட்டவென்னும் பெயரெச்சவினையொடுமுடிந்தன.

காப்பாள, பொருந, சேஎய், பெரும, எங்கோ, பெரும, நீ துஞ்சாயாதலாற் சோறுபடநடத்தி; அதனால், இரும்பொறை ஓம்பியநாடு புத்தேளுலகத்தற்றெனக் கேட்டுவந்து இனிதுகண்டிசின்; நின்படைப்பு வாழியவெனக்கூட்டி வினைமுடிவு செய்க. அன்றி, எங்கோவே, நீ துஞ்சாதபடியாலே, இரும்பொறையோம்பியநாடு புத்தேளுலகத்தற்றெனப் பிறர்சொல்லக்கேட்டு நிற்பாடிய அலங்குசெந்நாப் பிறரிசைநுவலாதபடிவந்து இனிதுகண்டேன்; நினதுபடைப்பொடு வாழ்வாயாகவென இயைப்பினுமமையும்.

இசின் - தன்மைக்கண்வந்தது. சோறுபடநடத்தியென்பதனை வினையெச்சமாகவுரைப்பினுமமையும். உயர்மருப்பினென்பதூஉம், செறனோக்கினென்பதூஉம், பணையெருத்தினென்பதூஉம் பாடம். (உஉ)

(உ௩.) வெளிறி னோன்காழ்ப் பணைநிலை முனைஇக்
களிறுபடிந் துண்டெனக் கலங்கிய துறையுங்
கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியற்
சூர்நவை முருகன் சுற்றத் தன்னநின்
கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்

கொள்வது கொண்டு கொள்ளா மிச்சில்
கொள்பத மொழிய வீசிய புலனும்
வடிநவில் நவியம் பாய்தலி னூர்தொறுங்
கடிமரந் துளங்கிய காவு நெடுநகர்
வினைபுனை நல்லில் வெவ்வெரி யினைப்பக்
கனையெரி யுரறிய மருங்கு நோக்கி
நண்ணார் நாண நாடொறுந் தலைச்சென்
றின்னு மின்னபல செய்குவன் யாவருந்
துன்னல் போகிய துணிவி னோனென
ஞால நெளிய வீண்டிய வியன்படை
யாலங் கானத் தமர்கடந் தட்ட
கால முன்ப நிற் கண்டனென் வருவ
லறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
பூளை நீடிய வெருவரு பறந்தலை
வேளை வெண்பூக் கறிக்கு
மாளி லத்த மாகிய காடே.

திணையும் துறையும் அவை; துறை - நல்லிசைவஞ்சியுமாம்.

பாண்டியன்தலையாலங்கானத்துச் செருவென்றநெடுஞ்செழியனைக் கல்லாடனார் பாடியது.

இ - ள்.—வெண்மையில்லாத வலிய வயிரக்கம்பத்தையுடைய கூடத்தில் நிற்றலை வெறுத்துச்சென்று யானைபடிந்து நீருண்டதாகக் கலக்கமுற்ற துறையையும் கார்காலத்து நறிய கடம்பினது பசிய இலையோடுவிரவிய மாலையையுடைய சூரபன்மாவைக்கொன்ற முருகனது கூளிச்சுற்றத்தையொக்கும் நின்னுடைய கூரிய நல்ல அம்பினையும் வளைந்தவில்லினையுமுடைய மறவர் தம்மாற் கொள்ளலாவதனை முகந்துகொண்டு கொள்ளாத ஒழிபொருளை மாற்றார்முகந்துகொள்ளப்படும் உணவாக்காமற்சிதறிய நிலங்களையும் வடித்தல்பயின்ற கோடாலிவெட்டுதலான் ஊர்தோறும் காவல்மரங்கள் நிலைகலங்கிய காவையும் நெடிய நகரின்கண் தொழில் புனைந்த நல்ல மனைகளிடத்து விரும்பும் அடுதீயைக்கெடுக்க மிக்க தீமுழங்கிய பக்கத்தையும்பார்த்துப் பகைவர்நாண நாடோறும் அவரிடத்துச் சென்று இன்னமும் இத்தன்மையன பலவுஞ்செய்குவன், யாவரும் தன்னை அணுகவொண்ணாத சூழ்ச்சித் தெளிவினையுடையோனெனக்கருதி உலகம்பொறையாற்றாதுநெளியத் திரண்ட பரந்த படையினையுடைய தலையாலங்கானத்தின்கட் போரை எதிர்நின்றுகொன்ற காலன்போலும் வலியையுடையோய், நின்னைக் கண்டேனாய்வந்தேன்; அற்ற கோட்டையுடைய பெரிய கலை புலியின்கண்ணே அகப்பட்டதாகச் சிறிய மறியை யணைத்துக்கொண்ட துள்ளிய நடையையுடைய மெல்லியமான்பிணை பூளைபோங்கிய அஞ்சத்தக்க பாழிடத்து வேளையினதுவெளியபூவைத்தின்னும் ஆளற்ற அருஞ்சுரமாகிய காட்டுவழியே.—எ - று.

காலமுன்ப, துறையும் புலனும் காவும் மருங்கும் நோக்கி இன்னும் இன்ன பலசெய்குவன் றுணிவினேனென உட்கொண்டு காட்டின்கண்ணே நின்னைக் கண்டு அக்காட்டுவழியே வந்தேனெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

வருவலென்பது, ஈண்டு இறந்தகாலப்பொருட்டாய்நின்றது. இவனைக்காணு முன்னே கண்டுவந்தேனென்றான்; இவன்செய்த வென்றியெல்லாம் கண்டமை யின். பாசிலைத்தெரியன் முருகனென இயையும். நவியம்பாய்தலென்பது, கருவி கருத்தாவாய் நின்றது. கலை புலிப்பாற்பட்டெனச் சிறுமறிதழீஇய மடப்பிணை பறந்தலை வேளைவெண்பூக்கறிக்குமென்பது, அவன் பகைவரைக்கொன்றவழி அவர் பெண்டிர் தம் இளம்புதல்வரை ஓம்புதற்பொருட்டு இறந்துபடாது அடகுதின்று உயிர்வாழ்கின்றாரென்பதோர் பொருள்தோன்றநின்றது. இனித் துணிவினே னென்று பிறர்சொல்லவெனவும், கண்டனென் வருவலென்பதனைக் காலமயக்க மாக்கிக் கலங்கியதுறைமுதலாயினவற்றைநோக்கி இன்னும் இவ்வாறு பகைவர் நாட்டின்கண் மேற்செல்வனென நினைந்து காட்டிடத்தே நின்னைக்காணியவந்தே னெனவும் உரைப்பாருமுளர். (௨௩)

(௨௪.) நெல்லரியு மிருந்தொழுவர்
செஞ்ஞாயிற்று வெயின்முனையிற்
றெண்கடற்றிரை மிசைப்பாயுந்து
திண்டிமில் வன்பரதவர்
வெப்புடைய மட்டுண்டு
தண்குரவைச் சீர்தூங்குந்து
*தூவற் கலித்த தேம்பாய் புன்னை
மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்த
ரெல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து
வண்டுபட மலர்ந்த தண்ணறுங் கானன்
முண்டகக் கோதை யொண்டொடி மகளி
ரிரும்பனையின் குரும்பைநீரும்
பூங்கரும்பின் றீஞ்சாறு
மோங்குமணற் குவவுத்தாழைத்
தீநீரோ டுடன்விராஅய்
முந்நீ ருண்டு முந்நீர்ப் பாயுந்
தாங்கா வுறையு ணல்லூர் கெழீஇய
வோம்பா வீகை மாவே ளெவ்வி
புனலம் புதவின் மிழலையொடு கழனிக்
கயலார் நாரை போரிற் சேக்கும்
பொன்னணி யானைத் தொன்முதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு தந்த

* இவலையிற்கலித்தவெனவும் பாடம்.

கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய
நின்று நிலைஇயர்நின் னாண்மீ னில்லாது
படாஅச் செலீயர்நின் பகைவர் மீனே
நின்னொடு, தொன்று மூத்த வுயிரினு முயிரொடு
நின்று மூத்த யாக்கை யன்னநின்
னாடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த
வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த
விரவன் மாக்க ளீகை நுவல
வொண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய
தண்கமழ் தேறன் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி பெரும வாங்கது
வல்லுநர் வாழ்ந்தோ ரென்ப தொல்லிசை
மலர்தலை யுலகத்துத் தோன்றிப்
பலர்செலச் செல்லாது நின்றுவிளிந் தோரே.

திணை - பொதுவியல்; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

அவனை மாங்குடிகிழார் பாடியது.

இ - ள்.—நெல்லையரியும் பெரிய உழவர் செஞ்ஞாயிற்றினது வெயிலை வெறுப்பின் தெளிந்த கடற்றிரையின்மேலேபாயும் திண்ணிய திமிலையுடைய வலிய நுளையர் வெம்மையையுடைய மதுவையுண்டு மெல்லிய குரவைக்கூத்திற்கேற்ற தாளத்தையாடும் கடற்றுவலையாலே தழைத்த தேன்பரந்த புன்னையினது மெல்லிய பூங்கொத்தாற்செய்யப்பட்ட மாலையைச்சூடிய ஆடவர் விளங்கிய வளையையுடைய மகளிர்க்கு முதற்கைகொடுக்கும் வண்டுமொய்ப்ப மலர்ந்த குளிர்ந்த நறிய கானலிடத்துக் கடன்முள்ளிப்பூவாற் செய்யப்பட்ட மாலையையுடைய, விளங்கிய வளையையணிந்தமகளிர் பெரிய பனையினது நுங்கின் நீரும் பொலிவினையுடைய கரும்பினது இனியசாறும் உயர்ந்த மணலிடத்துத் திரண்ட தெங்கினது இனிய இளநீருடனே கூடக்கலந்து இம்மூன்றுநீரையுமுண்டு மூன்றுநீரையுடைய கடற்கண்ணேபாயும் பரிக்கவொண்ணாத பலமக்களும் வாழ்தலையுடைய நல்ல ஊர்கள்பொருந்திய பொருளைப்பாதுகாவாத வண்மையையுடைய பெரிய வேளாகிய எவ்வியது நீர்வழங்கும் வாய்த்தலைகளையுடைய மிழலைக்கூற்றத்துடனே வயலிடத்துக் கயலைமேயும் நாரை போரின்கண்ணேயுறங்கும் பொன்னணிந்த யானையையுடைய பழைய முதிர்ந்த வேளிரது திரண்ட நெல்லினையுடைய முத்தூற்றுக்கூற்றத்தைக்கொண்ட வெற்றிபொருந்திய உயர்ந்த குடையினையும் கொடியாற்பொலிந்த தேரினையுமுடைய செழிய, நின்றுநிலைப்பதாக, நினது நாளாகியமீன்; நில்லாது பட்டுப்போவதாக, நின்பகைவருடைய நாளாகியமீன்; நின்னொடு பழைதாய்முதிர்ந்த உயிரினும் உயிருடனே நின்றுமுதிர்ந்த உடம்புபோன்ற நினது வெற்றிக்குடியோடு மூத்த சீரிய குடியின்கட் சிறந்த வாட்போராலேவாழ்வார் நினது முயற்சியை வாழ்த்த இரக்கும்பரிசிலர் நின்வண்மையைச்சொல்ல ஒள்ளிய வளையையுடைய மகளிர் பொற்கலத்தின்கண் ஏந்திய குளிர்ந்த நறுநாற்றத்தையுடைய மதுவைமடு

ப்ப ஆதனையுண்டு மகிழ்ச்சிமிக்கு அப்படி இனிதாக நடப்பாயாக; பெரும, அவ்வொழுக்கம்வல்லவரை வாழ்ந்தோரென்றுசொல்லுவர் அறிவுடையோர்; பழைய புகழ்தான் பரந்த இடத்தையுடைய உலகத்தின்கண்ணே பிறந்து பரக்க ஒழுகாது நின்றுமாய்ந்தோர் பலர்; அவர் வாழ்ந்தோரெனப்படாராதலான்.—எ - று.

மேல் எண்ணப்பட்ட பெயரெச்சமூன்றும் மிழலையென்னும் பெயர்கொண்டன; அவை உம் உந்தாய்நின்றன. மூந்நீர்ப்பாயும் நல்லூரென்க. உயிரினும் சிறந்த ஆக்கையன்ன வாளின்வாழ்நரெனக்கூட்டி உயிர்க்கு யாக்கைபோலவும் யாக்கைக்கு உயிர்போலவும் இன்றியமையாது இரண்டுமாயிருக்கின்ற வாளின் வாழ்நரென்க. நின்குடியொடுமூத்த நின்யாக்கையன்ன விழுத்திணைக்கண் உளராய் நின்னுயிரினுஞ்சிறந்த வாளின்வாழ்நரெனக்கூட்டினுமமையும்.

செழிய, நின் நாண்மீன் நின்றுநிலைஇயர்; நின்பகைவர்மீன் படாஅச் செலீஇயர்; உலகத்துத் தோன்றி இசைசெலச்செல்லாது விளிந்தோர்பலர்; அவர் வாழ்ந்தோரெனப்படார்; ஆதலால், பெரும, வாழ்த்த நுவல மடுப்ப மகிழ்சிறந்து இனிது ஒழுகு; அதுவல்லுநரை வாழ்ந்தோரென்பவெனக்கூட்டி வினைமுடிவு செய்க.

தாங்காவிளையுளென்பதூஉம் பாடம். ஆங்கது - ஒருசொல்; ஆங்கு - அசைநிலையுமாம். இனி, தொல்லிசையையுடைய உலகத்துத்தோன்றி மேற்சொல்லப்பட்ட நன்மைகள் தமக்குப் பரக்கவொழுகாது நின்றுவிளிந்தோர் பலரென உரைப்பாருமுளர்.

இது, நிலையாமைகூறி இனிது ஒழுகென்றமையாற் பொருண்மொழிக் காஞ்சி. (உச)

(உரு.) மீன்றிகழ் விசும்பிற் பாயிரு ளகல
~~வீண்டு~~செலன் மரபிற் றன்னியல் வழாஅ
துரவுச்சினந் திருகிய வுருகெழு ஞாயிறு
நிலவுத்திகழ் மதியமொடு நிலஞ்சேர்ந் தாஅங்
குடலருந் துப்பி னொன்றுமொழி வேந்தரை
யணங்கரும் பறந்தலை யுணங்கப் பண்ணிப்
பிணியுறு முரசங் கொண்ட காலை
நிலைதிரி பெறியத் திண்படை கலங்கிச்
சிதைதலுய்ந் தன்றோ நின்வேல் செழிய
முலைபொலி யாக முருப்ப நூறி
மெய்ம்மறந்து பட்ட வரையாப் பூச
லொண்ணுதன் மகளிர் கைம்மை கூர
வவிரறல் கடுக்கு மம்மென்
குவையிருங் கூந்தல் கொய்தல் கண்டே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவனைக் கல்லாடனார் பாடியது.

இ - ள்.—மீன்விளங்கும் வானத்தின்கண் பரந்த இருள்நீங்க வோங்கிச்செல்லு தன்முறைமையையுடைய தனது தன்மையிற் பிழையாது வலிய வெம்மைமுறுகிய உட்குப்பொருந்திய ஞாயிறு நிலாவிளங்கும் திங்களுடனே நிலத்தைப்பொருந்தி னாற்போலப் பகைத்தற்கரிய வலியையுடைய வஞ்சினங்கூறிய *இருவேந்தரை வருத்துதற்கரிய போர்க்களத்தின்கண்ணே மாயப்பொருது அவருடைய வாராற் பிணிப்புற்ற முரசத்தைக்கொண்டகாலத்து நின்றநிலையிலேநின்று நின்னைச்சூழ்ந்து கொண்டவீரரைப் புரிந்தெறிதலால் திண்ணிய கொளுத்துக்கலங்கிக் கெடுதல் பிழைத்தது, நினதுவேல்; செழிய, முலைபொலிந்தமார்பம் அழல அறைந்துகொண்டு அறிவுமயங்கியுற்ற அளவற்ற அழுகைஆரவாரத்தையுடைய ஒண்ணுதல்மகளிர் கைம்மைநோன்பிலேமிக விளங்கும் அறலையொக்கும் அழகிய மெல்லிய குவிந்த கரிய மயிரினைக்கொய்தபரிசைக்கண்டு.—எ - று.

செழிய, மகளிர் கூந்தல்கொய்தல்கண்டு நின்வேல் சிதைதலுய்ந்ததெனக் கூட்டுக.

ஈண்டுசெலன்மரபெனவும், ஐம்பாற் குவையிருங்கூந்தலெனவும் பாடமோதுவாருமுளர். உய்ந்தன்றே, ஓ - அசைநிலை. (௨௫)

(௨௬.) நளிகட லிருங்குட்டத்து
வளிபுடைத்த கலம்போலக்
களிறுசென்று களனகற்றவும்
களனகற்றிய வியலாங்க
ணொளிறிலைய வெஃகேந்தி
யரசுபட வமருழக்கி
யுரைசெல முரசுவெளவி
முடித்தலை யடுப்பாகப்
புனற்குருதி யுலைக்கொளீஇத்
தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியி
னடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய
வான்ற கேள்வி யடங்கிய கொள்கை
நான்மறை முதல்வர் சுற்ற மாக
மன்ன ரேவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே
நோற்றோர் மன்றநின் பகைவர் நின்னொடு
மாற்றா ரென்னும் பெயர்பெற்
றாற்றா ராயினு மாண்டுவாழ் வோரே.

திணையும் துறையும் அவை.

அவனை மாங்குடிகிழார் பாடியது.

---

* இருவேந்தர் - சேரனும், சோழனும்.

இ - ள்.—பெரிய கடலின்கட் பெரிய ஆழத்திடத்துக் காற்றூற்புடைக்கப் பட்ட மரக்கலம் நீரைக்கிழித்து ஓடுமாறுபோலக் களிறுசென்று போர்க்களத்தை இடமகலச்செய்ய அவ்வாறு களமகலச்செய்த பரந்த இடத்தின்கண் விளங்கிய இலையையுடைய வேலையேந்தி வேந்துபடப் போரைக்கலக்கிப் புகழ்பரக்க அவர்முரசைக்கொண்டு முடித்தலையை அடுப்பாகக்கொண்டு குருதிப்புனலாகிய உலையின்கண் தசையும்மூளையுமுதலாயினவற்றைப்பெய்து வீரவளையையுடைய தோளாகிய துடுப்பால் துழாவியடப்பட்ட உணவால் அடுகளத்தின்கட் களவேள்விவேட்ட கொல்லும்வேலையுடைய செழிய, அமைந்த கேள்வியையும் ஐம்புலனுமடங்கிய விரதங்களையும் நான்கு வேதத்தையுமுடைய அந்தணர் சுற்றமாக வேந்தர் அதற்கேற்ப ஏவல்செய்ய நிலைபெற்ற வேள்வியைச்செய்துமுடித்த வாய்த்தவாளினையுடைய வேந்தே, தவஞ்செய்தார், யாவர்க்குந்தெளிவாக, நின்னுடைய பகைவர்; நினக்குப் பகைவரென்னும் பெயரைப்பெற்று நின்னொடு போர்செய்தற்கு மாட்டாராயினும் அத்துறக்கத்து வாழ்வோர்.—எ - று.

களனகற்றவுமென்னும் உம்மை - அசைநிலை. மன்னியவேள்வியென்றது, களவேள்வியொழிந்த வேள்விகளை.

செழிய, வேந்தே, ஆற்றாராயினும், ஆண்டுவாழ்வோராகிய நின்பகைவர் மாற்றாரென்னும் பெயர்பெற்று நோற்றோரெனக்கூட்டுக. (உசு)

(உஎ.) சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ்
நூற்றித ழலரி னிரைகண் டன்ன
வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை யெண்ணுங் காலை
யுரையும் பாட்டு முடையோர் சிலரே
மரையிலை போலமாய்ந் திசினோர் பலரே
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்தெனக்
கேட்ப லெந்தை சேட்சென்னி நலங்கிள்ளி
தேய்த லுண்மையும் பெருக லுண்மையு
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையு
மறியா தோரையு மறியக் காட்டித்
திங்கட் புத்தே டிரிதரு முலகத்து
வல்லா ராயினும் வல்லுந ராயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
யருள வல்லை யாகுமதி யருளிலர்
கொடாமை வல்ல ராகுக
கெடாத துப்பினின் பகையெதிர்ந் தோரே.

திணை - பொதுவியல்; துறை - முதுமொழிக்காஞ்சி.

சோழன்நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன்சாத்தனார் பாடியது.

இ - ள்.—சேற்றின்கண்ணேவளரும் தாமரைபூத்த ஒள்ளிய நிறத்தையுடைத் தாகிய நூறாகிய இதழையுடைய மலரினது நிரையைக் கண்டாற்போன்ற ஏற்றத் தாழ்வில்லாத சிறந்த குடியின்கட்பிறந்து வீற்றிருந்தவேந்தரை எண்ணுங்காலத் துப் புகழும் பாட்டும் உடையோர் சிலர்; தாமரையினது இலையையொப்பப் பயன் படாது மாய்ந்தோர் பலர்; புலவராற்பாடப்படும் புகழையுடையோர் ஆகாயத்தின் கண் பாகனாற் செலுத்தப்படாத விமானத்தைப் பொருந்துவரென்று சொல்லு வார் அறிவுடையோர், தாம்செய்யும் நல்வினையைமுடித்தென்று சொல்லக்கேட் பேன்; என்னுடைய இறைவ, சேட்சென்னி, நலங்கிள்ளி, வளர்ந்ததொன்று பின் குறைதலுண்டாதலும், குறைந்ததொன்று பின் வளர்தலுண்டாதலும், பிறந்ததொ ன்று பின் இறத்தலுண்டாதலும், இறந்ததொன்று பின் பிறத்தலுண்டாதலும், கல்விமுகத்தான் அறியாத மடவோரையும் அறியக்காட்டித் திங்களாகியதெய்வம் இயங்குகின்ற தேயத்தின்கண் ஒன்றை மாட்டாராயினும் வல்லாராயினும் வறுமை யான் வருத்தமுற்றுவந்தோரது உண்ணுதமருங்கைப்பார்த்து அவர்க்கருளி வழங்க வல்லையாகுக; அருளிலராய்க் கொடாமையை வல்லராகுக, கெடாத வலியை யுடைய நினக்குப் பகையாய் மாறுபட்டோர்.—எ - று.

நூற்றிதழலரின் நிரைகண்டன்ன உரையும் பாட்டும் உடையோர் சிலரென இயையும். நிரைகண்டன்ன விழுத்திணையென்றுரைப்பினுமமையும். அருளிலர் கொடாமைவல்லராகுகவென்றதனாற்பயன்: அவையுடையோர் தத்தம் பகைவரை வெல்வராதலால், பகையெதிர்ந்தோர் அவையிலராகவென்பதாம்.

செய்வினைமுடித்து வானவூர்தி எய்துபவென இயையும். (உஎ)

(உஅ.) சிறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமுங்
கூனுங் குறளு மூமுஞ் செவிடு
மாவு மருளு முளப்பட வாழ்நர்க்
கெண்பே ரெச்ச மென்றிவை யெல்லாம்
பேதைமை யல்ல தூதிய மில்லென
முன்னு மறிந்தோர் கூறின ரின்னு
மதன்றிற மத்தையா னுரைக்க வந்தது
வட்ட வரிய செம்பொறிச் சேவ
லேனல் காப்போ ருணர்த்திய கூஉங்
கானத் தோர்நின் றெவ்வர் நீயே
புறஞ்சிறை மாக்கட் கறங்குறித் தகத்தோர்
புய்த்தெறி கரும்பின் விடுகழை தாமரைப்
பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்த
ராடுகளங் கடுக்கு மகநாட் டையே
அதனால், அறனும் பொருளு மின்பமு மூன்று
மாற்றும் பெருமநின் செல்வ
மாற்றா மைந்நிற் போற்றா மையே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

இ - ள்.—மக்கட்பிறப்பிற் சிறப்பில்லாத குருடும், வடிவில்லாத தசைத்திரளும், கூனும், குறளும், ஊமும், செவிடும், மாவும், மருளுமுள்ப்பட உலகத்து உயிர் வாழ்வார்க்கு எட்டுவகைப்பட்ட பெரிய எச்சமென்றுசொல்லப்பட்ட இவையெல்லாம் பேதைத்தன்மையையுடைய பிறப்பாவதல்லது இவற்றாற் பயனில்லையென முற்காலத்தும் அறிந்தோர்சொன்னார் ; இன்னமும் அவ்வூதியத்தின் பாகுபாட்டை யான்சொல்லவந்தது, வட்டமாகிய வரியையுடைத்தாகிய செம்பொறியையுடைய காட்டுக்கோழிச்சேவல் தினைப்புனங்காப்போரைத் துயிலுணர்த்துவதாகக்கூவும் காட்டின்கண் உள்ளோர், நின்னுடைய பகைவர் ; நீதான், வேலிப்புறத்துநின்று வேண்டியமாக்கட்கு அறத்தைக்கருதி அகத்துள்ளோர்தாம் பிடுங்கியெறியும் கரும்பாகிய போகடப்பட்ட கழை வாவியகத்துத் தாமரையினது பொலிந்தபூச் சிதற வீழ்ந்ததாக, அது கூத்தர் ஆடுகளத்தையொக்கும் உள்ளாகிய நாட்டையுடையை ; ஆதலான், அறனும் பொருளும் இன்பமுமென்னப்பட்ட மூன்றும் செய்வதற்குதவும் பெரும, நினதுசெல்வம் உதவாதொழிதல் நின்னைப் பாதுகாவாமை,— எ - று.

பிண்டமென்பது, மணைபோலப் பிறக்குமது. மாவென்பது, விலங்குவடிவாகப் பிறக்குமது. மருளென்பது, அறிவின்றியே மயங்கியிருக்குமது. ஊதியமென்பது, அறம்பொருளின்பங்களை ; அன்றி அறமென்பாருமுளர். நிற்போற்றாமையென்றகருத்து, சிதடுமுதல் அறிவின்மை பிறப்பொடுகூடாதவாறுபோல நின் செல்வமும் அறமுதலியனசெய்தற்கேற்றிருப்பச் செய்யாமையாகிய அறிவின்மை மக்கள்யாக்கையிற்பிறந்தும் பயனில்பிறப்பாகப் பண்ணுதலால் நினக்குவரும் பொல்லாங்கைப் போற்றாமையென்பதாம். கானத்தோர்நின்பகைவ ரென்றவதனாற் பகையின்மைதோற்றிநின்றது. மாவும் மருளுமுள்ப்படச் சிதடுமுதலாகப் பிறப்பொடுகூட்டப்படாத பெரிய எச்சமெனப்பட்ட எட்டுமெனக் கூட்டியுரைப்பினும் அமையும். இஃது அறஞ்செய்யாதானை அறஞ்செய்கவெனக் கூறியவாறு. அதன்றிறமென்பதற்கு அப்பேதைமையென்றாக்கி, அஃது உண்டானால் வரும்பொல்லாங்கும், அதுபோனால்வருநன்மையுமென்றுரைப்பாருமுளர்.　　　(உஅ)

(உகூ.) அழல்புரிந்த அடர்தாமரை
ஐதடர்ந்த நூற்பெய்து
புனைவினைப் பொலிந்த பொலனறுந் தெரியல்
பாறுமயி ரிருந்தலை பொலியச் சூடிப்
பாண்முற் றுகநின் னாண்மகி ழிருக்கை
பாண்முற் றொழிந்த பின்றை மகளிர்
தோண்முற் றுகநின் சாந்துபுல ரகலம், ஆங்க
முனிவின் முற்றத் தினிதுமுர சியம்பக்
கொடியோர்த் தெறுதலுஞ் செவ்வியோர்க் களித்தலு
மொடியா முறையின் மடிவிலை யாகி
நல்லத னலனுந் தீயதன் றீமையு
மில்லை யென்போர்க் கினனா கிலியர்
நெல்விளை கழனிப் படுபுள் ளோப்புந

மறைமலையடிகள் நூல்நி...
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

ரொழிமடல் விறகிற் கழிமீன் சுட்டு
வெங்கட் டொலைச்சியு மமையார் தெங்கி
னிளநீ ருதிர்க்கும் வளமிகு நன்னாடு
பெற்றன ருவக்குநின் படைகொண் மாக்கள்
பற்றா மாக்களிற் பரிவுமுந் துறுத்துக்
கூவை துற்ற நாற்காற் பந்தர்ச்
சிறுமனை வாழ்க்கையி னொரீஇ வருநர்க்
குதவி யாற்று நண்பிற் பண்புடை
யூழிற் றாகநின் செய்கை விழவிற்
கோடியர் நீர்மை போல முறைமுறை
யாடுநர் கழியுமிவ் வுலகத்துக் கூடிய
நகைப்புற னாகநின் சுற்ற
மிசைப்புற னாகநீ யோம்பிய பொருளே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—எரியாலாக்கப்பட்ட தகடாகச்செய்த தாமரைப்பூவுடனே ஐதாகத் தட்டிக் கம்பியாகச்செய்த நூலின்கண்ணேயிட்டு அலங்கரித்த தொழிலாற்பொலிந்த பொன்னானியன்ற நல்லமாலையைப் பாறிய மயிரையுடைய கரியதலை பொலிவுபெறச்சூடிப் பாண்சுற்றம் சூழ்வதாக, நினது நாட்காலத்து மகிழ்ந்திருக்கும் ஓலக்கம்; பாண்சுற்றம் சூழலொழிந்தபின்னர் நினது உரிமைமகளிருடையதோள் சூழ்வதாக, நின் சாந்துபுலர்ந்தமார்பம்; எப்பொழுதும் வெறுப்பில்லாத அலங்காரத்தையுடைய கோயின்முற்றத்தின்கண்ணே இனிதாக முரசுஒலிப்பத் தீயோரைத் தண்டஞ்செய்தலும் நடுவுநிலைமையுடையோர்க்கு அருள்பண்ணுதலுமாகிய இடையறாத முறைமையாற் சோம்புதலையுடையையல்லையாகி நல்வினையினது நன்மையும் தீவினையினதுதீமையும் இல்லையென்றுசொல்லுவோர்க்கு இனமாகாதொழிவாயாக; நெல்விளைந்தவயலிடத்துளதாகிய புள்ளை ஓட்டுவோர் வீழ்ந்த பனங்கருக்காகின்ற விறகாற் கழிக்கண்மீனைச்சுட்டு அதனுடனே வெய்ய மதுவை உண்டுதொலைத்தும் அமையாராய்த் தெங்கினது இளநீரையுதிர்க்கும் செல்வமிக்க நல்லநாட்டைப் பெற்றுமகிழும் நின்னுடைய படைக்கலம்பிடித்தமாந்தர் நின்னுடைய பகைவரைப் போல இரக்கத்தைமுன்னிட்டுக்கொண்டு கூவையிலையால் வேயப்பட்ட நான்கு காலையுடைய பந்தராகிய சிறிய இல்லின்கண்வாழும் வாழ்க்கையினின்றுநீங்கி நின் பால்வருவார்க்கு உதவிசெய்யும்நட்போடு கூடிய குணத்தையுடைய முறைமையையுடைத்தாக, நினதுதொழில்; விழவின்கண் ஆடும் கூத்தரது வேறுபட்ட கோலம் போல அடைவடைவேதோன்றி இயங்கி இறந்துபோகின்ற இவ்வுலகத்தின்கண் பொருந்திய மகிழ்ச்சியிடத்ததாக, நின்னுடையகிளை; புகழிடத்ததாக, நீபாதுகாத்த பொருள்.—எ - று.

நின் நாண்மகிழிருக்கை பாண்முற்றுக; அதன்பின் அகலம் தோண்முற்றுக; நீ மடிவிலையாய் இனனாகாதொழிவாயாக; நின்பற்றாமாக்களைப்போல முற்காலத்

துச் சிறுமனைவாழும்வாழ்க்கையினீங்கி இப்பொழுது நின்னொடுபெற்றுவக்கும் நின் படைகொண்மாக்கள் வருநர்க்கு உதவியாற்றும் நண்போடுகூடிய பண்புடைத்தாகிய முறைமையையுடைத்தாக, நின்செய்கை ; நகைப்புறனாக, நின்சுற்றம் ; இசைப்புறனாக நீ ஓம்பிய பொருளெனக்கூட்டுக.

ஒரீஇயென்பதனை ஒருவவெனத் திரிப்பினுமமையும். நறுமை-பொன்னிற்கு இன்றெனினும் தெரியற்கு அடையாய்நின்றது ; நன்மையுமாம். ஆங்கு - அசை. நகைப்புறனாகவென்று உரைப்பாருமுளர்.

இதனாற்சொல்லியது : படைகொள்மாக்களும் முறைமுதலாயின தப்பாமற் செய்து இன்புற்றிருக்கும்படி சிறப்புச்செய்யவேண்டுமென்பதாயிற்று. (உ௯)

(௩௦.) செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போல வென்று
மினைத்தென் போரு முளரே யனைத்து
மறிவறி வாகாச் செறிவினை யாகிக்
களிறு கவுளடுத்த வெறிகற் போல
வொளித்த துப்பினை யாதலின் வெளிப்பட
யாங்ஙனம் பாடுவர் புலவர் கூம்பொடு
மிசைப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅ
ரிடைப்புலப் பெருவழிச் சொரியுங்
கடற்பஃ றாரத்த நாடுகிழ வோயே.

திணை - பாடாண்டிணை ; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—செஞ்ஞாயிற்றினது வீதியும், அஞ்ஞாயிற்றினது இயக்கமும், அவ்வியக்கத்தாற்சூழப்படும் பார்வட்டமும், காற்றியங்குந்திக்கும், ஓராதாரமுமின்றித் தானேநிற்கின்ற ஆகாயமும் என்றுசொல்லப்பட்ட இவற்றை ஆண்டாண்டுப்போய் அளந்தறிந்தவர்களைப்போல நாளும் இத்துணையளவை உடையனவென்று சொல்லும் கல்வியையுடையோருமுளர் ; அப்பெரியோர் அச்செலவுமுதலாயின அறியும் அறிவாலும் அறியாத அடக்கத்தையுடையையாகி யானை தன்கதுப்பின்கண் அடக்கிய எறியுங்கல்லைப்போல மறைத்தவலியையுடையையாதலான், நின்னை விளங்க எப்பரிசுபாடுவர் புலவர் ; கூம்புடனே மேற்பூரிக்கப்பட்ட பாயைமாற்றுமல் அதன்மேற்பாரத்தையும் பறியாமல் ஆற்றுமுகத்துப்புகுந்த பெரிய மரக்கலத்தைப் பாகுவரும் அளவருமுதலாகிய தகுதியில்லாதோர் தம்புலத்திற்கு இடையாகிய பெருவழிக்கண்ணே சொரியும் கடலால்வரும் பலபண்டத்தையுடைய நாட்டையுடையோய்.—எ - று.

செலவென்றது, செல்லப்படும்வீதியை. பரிப்பென்றது, இத்துணைநாழிகைக்கு இத்துணையோசனைசெல்லுமென்னும் இயக்கத்தை. பாய்களையாது பரந்தோண்டாதென்றதனால், துறைநன்மை கூறியவாறும். பெருங்கலத்தினின்றென ஐந்தாவதாக உரைப்பினுமமையும்.

துப்பினையாதலிற் புலவர் யாங்ஙனம் பாடுவரெனக்கூட்டுக. (௩௦)

(௩௧.) *சிறப்புடை மரபிற் பொருளு மின்பமு
மறத்து வழிப்படூஉந் தோற்றம் போல
விருகுடை பின்பட வோங்கிய வொருகுடை
யுருகெழு மதியி னிவந்துசேண் விளங்க
நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை யல்லது நீயொல் லாயே
நுதிமுக மழுங்க மண்டி யொன்னார்
கடிமதில் பாயுநின் களிறடங் கலவே
போரெனிற் புகலும் புனைகழன் மறவர்
காடிடைக் கிடந்த நாடுநனி சேஎய
செல்வே மல்லே மென்னார் கல்லென்
விழவுடை யாங்கண் வேற்றுப்புலத் திறுத்துக்
குணகடல் பின்ன தாகக் குடகடல்
வெண்டலைப் புணரிநின் மான்குளம் பலைப்ப
வலமுறை வருதலு முண்டென் றலமந்து
நெஞ்சநடுங் கவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே.

திணை - வாகை; துறை - அரசவாகை; மழபுலவஞ்சியுமாம்.

அவனைக் கோவூர்கிழார் பாடியது.

இ-ள்.—சிறப்புடைமுறைமையாற் பொருளும் இன்பமும் அறத்தின்பின்னே தோன்றும் காட்சிபோலச் சேரபாண்டியருடைய இரண்டுகுடையும் பின்னாக வோங்கிய நினது ஒன்றாகிய வெண்கொற்றக்குடை நிறம்பொருந்திய கலைநிறைந்த திங்கள்போல ஓங்கிச் சேய்மைக்கண்ணே விளங்க நல்லபுகழ்வேட்கையைவிரும்பி வெல்லும்போரினைச்செய்யும் பாடிவீட்டின்கண்ணேயிருத்தலல்லது நின்னகரின்கண் இருத்தலை உடம்படாய், நீ; கோட்டினது நுனைமுகந்தேய மடுத்துப் பகைவரது காவலையுடைய மதிலைக்குத்தும் நின்னுடைய யானைகள் அடங்கா; பூசலென்று கேட்பின் விரும்பும் அணிந்த வீரக்கழலையுடைய மறவர், காடு நடுவேகிடந்த நாடு மிகவும் தூரியவாதலால், யாம் போவேமல்லேமென்றுகருதார்; ஆதலான், ஓசை

* இப்பாட்டினை, வஞ்சித்திணைக்குரிய இயங்குபடையரவமென்னும் துறைக்கு உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், அ - ம் சூத்திரவுரை].

உண்டான விழாவினையுடைய அவ்விடத்துப் பகைப்புலத்தின்கண்ணே தங்கிவிட்டுக் கீழ்கடல்பின்னதாக மேல்கடலினது வெளிய தலையையுடைய திரை நினது குதிரையினது குளம்பையலைப்ப வலமாகமுறையே வருதலுமுண்டாமென்று சுழன்று நெஞ்சம்நடுங்கும் அவலம்பரப்பத் துயிலாத கண்ணையுடையவாயின, வடநாட்டுள்ள அரசுகள்.—எ - று.

அவம்பாயவென்பதூஉமாம். (௩௧)

(௩௨.) கடும்பி னடுகல நிறையாக நெடுங்கொடிப்
பூவா வஞ்சியுந் தருகுவ னொன்றோ
வண்ண நீவிய வணங்கிறைப் பணைத்தோ
ளொண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகென
மாட மதுரையுந் தருகுவ னெல்லாம்
பாடுகம் வம்மினோ பரிசின் மாக்க
டொன்னிலக் கிழமை சுட்டி னன்மதி
வேட்கோச் சிறாஅர் தேர்க்கால் வைத்த
பசுமட் குரூஉத்திரள் போலவவன்
கொண்ட குடுமித்தித் தண்பணை நாடே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

அவனை அவர்பாடியது.

இ - ள். நமதுசுற்றத்தினது அடுகலத்தை *நிறைக்கும்பொருட்டு விலையாக நெடிய துகிற்கொடியினையுடைய பூவாதவஞ்சியையும் தருகுவன்; நிறமுடைய கலவைபூசப்பட்ட வளைந்த சந்தினையுடைய முன்கையினையும் வேய்போன்றதோளினையும் ஒள்ளியநுதலினையுமுடைய விறலியர் பூவிற்குவிலையாகப்பெறுகவென்று மாடத்தையுடைய மதுரையையும் தருவன்; ஆதலால், யாமெல்லாம் அவனைப் பாடுவேமாக வாரீர்; பரிசின்மாக்கள், பழைய நிலவுரிமையைக்குறிப்பின், நல்ல அறிவையுடைய குயக்குலத்திளையோர் கலம்வனைதற்குத் திகிரிக்கண்ணேவைத்த பச்சைமண்ணாகிய கனத்ததிரள்போல அவன்கருத்திற்கொண்ட முடியையுடைத்து, இக்குளிர்ந்த மருதநிலத்தையுடைய நாடு.—எ - று.

பூவாவஞ்சியென்றது, கருவூர்க்குவெளிப்படை. ஒன்றோவென்றது, எண்ணிடைச்சொல். தேர்க்காலென்றது, தேர்க்கால்போலும் திகிரியை.

அவன்கொண்டகுடுமித்து, இந்நாடு; ஆதலால், வஞ்சியையுந்தருகுவன்; மதுரையையுந்தருகுவன்; ஆதலால், பரிசின்மாக்கள், நாமெல்லாம் அவனைப்பாடுகம் வம்மினோவெனக்கூட்டுக.

தொன்னிலக்கிழமையென்று பாடமோதுவாருமுளர். (௩௨)

(௩௩.) கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான்றசை சொரிந்த வட்டியு மாய்மக

* நிறைக்கும்பொருளாகவென்றும் பிரதிபேதமுண்டு.

டயிர்கொடு வந்த தசும்பு நிறைய
வேரின் வாழ்நர் பேரி லரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெ
ன்முகந்தனர் கொடுப்ப வுவந்தனர் பெயருந்
தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளு
மேழெயிற் கதவ மெறிந்துகைக் கொண்டுநின்
பேழ்வா யுழுவை பொறிக்கு மாற்றலை
பாடுநர் வஞ்சி பாடப் படையோர்
தாதெரு மறுகிற் பாசறை *பொலியப்
புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுத்த
மலரா மாலைப் பந்துகண் டன்ன
வூன்சோற் றமலை பாணகடும் பருந்துஞ்
செம்மற் றம்மநின் வெம்முனை யிருக்கை
வல்லோன் றைஇய வரிவனப் புற்ற
வல்லிப் பாவை யாடுவனப் பேய்ப்பக்
காம விருவ ரல்லதி யாமத்துத்
தனிமகன் வழங்காப் பனிமலர்க் காவி
னொதுக்கின் றிணிமணற் புதுப்பூம் பள்ளி
வாயின்மா டந்தொறு மைவிடை வீழ்ப்ப
நீயாங்குக் கொண்ட விழவினும் பலவே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—காட்டின்கண்ணே தங்கும் வாழ்க்கையையுடைய சினம்பொருந்திய நாயையுடைய வேட்டுவன் மானினது தசையைச்சொரிந்த கடகமும் இடைமகள் தயிர்கொண்டுவந்த மிடாவும் நிறைய ஏரானுழுது உண்டுவாழ்வாரது பெரிய மனையின்கண்மகளிர் குளத்துக்கீழ்விளைந்த களத்தின்கட்கொள்ளப்பட்ட வெண்ணெல்லை முகந்துகொடுப்ப உவந்துமீளும் தென்றிசைக்கட் பொதியின்மலையையுடைய பாண்டியனது நல்லநாட்டுள்ளும் ஏழாகிய அரணின்கட்கதவத்தையழித்துக் கைக்கொண்டு நினது பெரியவாயையுடைய புலியைப்பொறிக்கும் வலியை; ஆதலின், நின்னைப் பாடும்புலவர் நினது மேற்செலவைப்பாடப் படைக்கலத்தினையுடையோர் தாதாகிய எருப்பொருந்திய மறுகினையுடைய பாசறைக்கண்ணே பொலிவுபெறப் புலராத பசியஇலையை இடையிட்டுத்தொடுக்கப்பட்ட மலராத முகையினையுடைய மாலையினது பந்தைக்கண்டாற்போன்ற தசையோடுகூடிய பெருஞ்சோற்றுத்திரளையைப் பாண்சுற்றத்தையூட்டும் தலைமையையுடைத்து, நினது வெய்ய முனையாகிய இருப்பிடம்; கைவல்லோனாற் புனைந்துசெய்யப்பட்ட எழுதிய அழகு பொருந்திய அல்லிப்பாவை அல்லியமென்னும் கூத்தையாடும் அழகையொப்ப

* மலியவென்றும் பாடம்.

அன்பினையுடைய துணைவனும் துணைவியுமாகிய இருவரல்லது இடையாமத்தின்கண் தனிமகன்வழங்காத குளிர்ந்த மலரையுடைய காவின்கண் இயங்குதற்கினிய செறிந்த மணலையுடைய புதிய பூவையுடைய சாலையினது வாயிலின்கண் மாடந்தோறும் செம்மரிக்கிடாயைப்படுக்க நீ அவ்விடத்து எடுத்துக்கொண்ட விழவினும் பல.—எ - று.

நன்றாட்டுள்ளுமென்ற உம்மை - சிறப்பும்மை. அல்லிப்பாவையாடுவனப்பென்றது, ஆண்கோலமும் பெண்கோலமுமாய அவ்விருவருமாடுங்கூத்தை. படையோர் பாசறை பொலியவென்பதற்குப் படையோரது பாசறை பொலிவுபெறவென்று உரைப்பினுமமையும். பாசிலைமலையவென்று பாடமோதுவாருமுளர். தனிமகன்வழங்காவென்றது, தனித்துவழங்கின் அப்பொழில்வருத்துமென்பது. களத்துக்கொள்வெண்ணெலென்பது, களக்கொள்வெண்ணெலெனத் தொக்கது. முகந்தனர்கொடுப்ப, உவந்தனர்பெயருமென்பன - வினையெச்சமுற்று.

உழுவைபொறிக்கு மாற்றலையாகலின், பாண்கடும்பருத்தும் நின்வெம்முனையிருக்கை, நீ கொண்ட விழவினும் பலசெம்மற்றெனக்கூட்டுக.

விழவென்பது, சிறுசோற்றுவிழவினை; வேள்வியென்றுரைப்பினுமமையும்.();

(௩௪.) ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
* வறம்பா டிற்றே யாயிழை கணவ
காலை யந்தியு மாலை யந்தியும்
புறவுக் கருவன்ன புன்புல வரகின்
பாற்பெய் புன்கந் தேனொடு மயக்கிக்
குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த வொக்கலொ
டிரத்தி நீடிய வகன்றலை மன்றத்துக்
கரப்பி லுள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி
யமலைக் கொழுஞ்சோ றார்ந்த பாணர்க்
ககலாச் செல்வ முழுவதுஞ் செய்தோ
னெங்கோன் வளவன் வாழ்க வென்றுநின்
பீடுகெழு நோன்றாள் பாடே னாயிற்
படுபறி யலனே பல்கதிர்ச் செல்வன்
யானோ தஞ்சம் பெருமவிவ் வுலகத்துச்
சான்றோர் செய்த நன்றுண் டாயி
னிமயத் தீண்டி யின்குரல் பயிற்றிக்

---

* அறம்பாடின்றேயெனவும் பாடம்.

கொண்டன் மாமழை பொழிந்த
நுண்பஃ றுளியினும் வாழிய பலவே.

திணை - பாடாண்டிணை ; துறை - இயன்மொழி.

சோழன் குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவனை ஆலத்தூர்கிழார் பாடியது.

இ - ள்.—ஆனினது முலையாற்பெறும் பயனைக்கெடுத்த தீவினையாளர்க்கும் மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையுடைய பெண்டிரது கருப்பத்தை அழித்தோர்க்கும் பார்ப்பாரைப்பிழைத்த கொடுந்தொழிலையுடையோர்க்கும் அவர்செய்த பாதகத்தினை ஆராயுமிடத்து அவற்றைப்போக்கும்வழியுமுளவெனவும், நிலம் கீழ்மேலாம் காலமாயினும் ஒருவன்செய்த நன்றியைச் சிதைத்தோர்க்கு நரகம்நீங்குதலில்லையெனவும் அறநூல் கூறிற்று ; தெரிந்த ஆபரணத்தையுடையாள்தலைவ, காலையாகிய அந்திப்பொழுதும் மாலையாகிய அந்திப்பொழுதும் புறவினது கருவாகிய முட்டைபோன்ற புல்லிய நிலத்து வரகினது அரிசியைப் பாலின்கட்பெய்து அடப்பட்ட சோற்றைத் தேனோடுகலந்து உண்டு குறிய முயலினது கொழுவிய சூட்டிறைச்சியைத்தின்ற என்சுற்றத்தோடுகூட இலந்தைமரமோங்கிய அகன்ற இடத்தையுடைய பொதியிற்கண் ஒன்றனையும் மறைத்தலில்லாத உள்ளத்துடனே வேண்டியவார்த்தைகளைப் பலகாலுங்கூறிப் பெரிய கட்டியாகிய கொழுவியசோற்றை அருந்திய பாணர்க்கு நீங்காதசெல்வமெல்லாவற்றையும் செய்தோன் எம்முடையவேந்தனாகிய வளவன் வாழ்வானாகவென்றுசொல்லி நினது பெருமைபொருந்திய வலியதாளைப் பாடிற்றிலேனாயின், வாழ்நாட்கு அலகாகிய பலகதிரையுடையசெல்வன் தோன்றுதலறியான் ; யானோ எளியேன் ; பெரும, இந்தவுலகத்தின்கண் நற்குணங்களால் அமைந்தோர்செய்த நல்வினையுண்டாயின், இமயமலையின்கண்ணே திரண்டு இனிய ஓசையைப்பயிற்றிக் கீழ்காற்றான்வரும் பெரிய முகில்சொரிந்த நுண்ணிய பலதுளியினும் பலகாலம் வாழ்வாயாக.—எ - று.

நிலம்புடைபெயர்வதாயினுமென்பதற்கு ஊழிபெயருங்காலத்து யாவருஞ்செய்த இருவினையுநீங்குதலின், அக்காலத்தும் செய்திகொன்றோர்க்கு உய்தியில்லென்றும், நிலத்துள்ளார்யாவரும் இவன்கூற்றிலே நிற்பாராயினுமென்றும் உரைப்பாருமுளர். புன்கம் இவன்பாற் செல்வதற்குமுன்பு பெற்ற உணவாகவும், அமலைக்கொழுஞ்சோறு இவன்பாற்பெற்ற உணவாகவுங்கொள்க. அன்றிச் சென்ற இடந்தோறும்பெற்ற உணவாகவுரைப்பினுமமையும். மன்றத்துச் சூடுகிழித்த ஒக்கலொடுகூட வேண்டுமொழிபயிற்றி ஆர்ந்தபாணர்க்கெனக்கூட்டுக. பாணர்க்கெனத் தம்மைப் பிறர்போலக் கூறினர்.

ஆயிழைகணவ, செய்திகொன்றோர்க்கு உய்தியில்லென அறம்பாடிற்று ; ஆதலால், பாணர்க்குச் செல்வமுழுவதுஞ்செய்தோன், எங்கோன், வளவன் வாழ்கவென்று காலையந்தியும் மாலையந்தியும் நின்றாள்பாடேனாயின், பல்கதிர்ச்செல்வன் படுபறியான் ; பெரும, யானோ தஞ்சம் ; சான்றோர்செய்த நன்றுண்டாயின், நுண்டுளியினும் பலகாலம் வாழ்வாயாகவெனக்கூட்டுக.

கோவதைமுதலாயின வாக்காற்சொல்லவும்படாமையின், ஆன்முலையறுத்தவெனவும், மகளிர்கருச்சிதைத்தவெனவும், பார்ப்பார்த்தப்பியவெனவும் மறைத்துக் கூறப்பட்டன.

இது, பரிசில்பெற்றுப்போகின்றானை நீ எம்மை நினைத்துவருவையோவென்றாற்கு இவ்வாறுசெய்த நின்னை வளவன்வாழ்கவென்று பாடேனாயின், யானிருக்குமிடத்துப் பல்கதிர்ச்செல்வன் படுதலறியான் ; அதனால் இம்மையின்பம்பெறேனெனவும், செய்நன்றிகொன்றோர்க்கு உய்தியில்லையெனவே மறுமையின்கண் நரகம்புகுவேனெனவும் கூறியதாகக்கொள்க. (௩௪)

(௩௫.) நளியிரு முந்நீ ரேணி யாக
வளியிடை வழங்கா வானஞ் சூடிய
மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளு
மரசெனப் படுவது நினதே பெரும
வலங்குகதிர்க் கனலி நால்வயிற் றோன்றினு
மிலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினு
மந்தண் காவிரி வந்து கவர்பூட்டத்
தோடுகொள் வேலின் றோற்றம் போல
*வாடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கு
நாடெனப் படுவது நினதே யத்தை, ஆங்க
நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே
நினவ கூறுவ லெனவ கேண்மதி
யறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண்
டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே
ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பி னடுவுநின் றாங்குக்
கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ
வெளிற்றுப்பனந் துணியின் வீற்றுவீற்றுக் கிடப்பக்
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉங் கொற்றமு முழுபடை
யூன்றுசால் மருங்கி னீன்றதன் பயனே
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினு
†மியற்கை யல்லன செயற்கையிற் றோன்றினுங்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்

* ஆடுகழைக்கரும்பென்றும் பாடம்.
† இயற்கையல்லதென்றும் பாடம்.

மதுநற் கறிந்தனை யாயி னீயு
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
னடிபுறந் தருகுவ ரடங்கா தோரே.

திணை - அது ; துறை - செவியறிவுறூஉ.

அவனை வெள்ளைக்குடிநாகனார்பாடிப் பழஞ்செய்க்கடன் வீடுகொண்டது.

இ - ள்.—நீர்செறிந்த பெரிய கடல் எல்லையாகக் காற்று ஊடுபோகாத வானத்தைச்சூடிய மண்செறிந்த உலகத்திங்கட் குளிர்ந்த தமிழ்நாட்டிற்கு உரியராகிய முரசொலிக்கும் படையினையுடைய மூவேந்தருள்ளும் அரசென்றற்குச் சிறப்புடையது, நின்னுடையவரசே ; பெரும, விளங்கிய சுடரையுடைய ஞாயிறு நான்குதிக்கினுந் தோன்றினும், விளங்கிய கதிரையுடைய வெள்ளிமீன் தென்றிசைக்கட் செல்லினும், அழகிய குளிர்ந்த காவிரிவந்து பலகாலாயோடியூட்டத் தொகுதிகொண்ட வேலினது காட்சியையொப்ப அசைந்த கண்ணினையுடைய கரும்பினது வெளிய பூ அசையும் நாடென்றுசொல்லப்படுவது, நின்னுடையநாடே ; அந்நாடு பொருந்திய செல்வத்தையுடைய பெருமைபொருந்திய வேந்தே, நின்னுடையன சிலகாரியஞ்சொல்லுவேன் ; என்னுடையன சிலவார்த்தைகேட்பாயாக ; அறக்கடவுள் மேவி ஆராய்ந்தாற்போன்ற செங்கோலாரையும் ஆராய்ச்சியையுடைய நீதியைக் கேட்கவேண்டுங்காலத்துச் செவ்வியெளியோர் இவ்விடத்துத் துளிவேண்டுங்காலத்து மழைபெற்றவரே ; ஞாயிற்றைத் தன்மேற்கொண்ட பக்கந்திரண்ட முகில் மாகமாகிய உயர்ந்த வானத்தினது நடுவுநின்று அதன்வெயிலை மறைத்தாற்போலக் கண்ணொளியோடு மாறுபடவிளங்குகின்ற நினது வானைமுட்டிய பரந்த வெண்கொற்றக்குடை வெயிலைமறைத்தற்குக்கொண்டதோவெனின், அன்று ; வருத்தமுற்ற குடியை நிழற்செய்தல்காரணத்தாற்கொள்ளப்பட்டது ; கூரிய வேலினையுடைய வளவ, இளைய பனையினது துண்டம்போல வேறுவேறுகிடப்பக் களிற்றுத்திரளைப்பொருத இடமகன்ற போர்க்களத்தின்கண் வருகின்றபடையை எதிர்நின்று பொறுத்து அது சரிந்துமீளும் புறக்கொடைகண்டு ஆர்த்துக்கொண்டு நின்போர்செய்யும்படை தரும்வெற்றியும் உழுகின்ற கலப்பை நிலத்தின்கண்ணே ஊன்றுசாலிடத்து விளைந்த நெல்லினதுபயன் ; மழை பெய்யுங்காலத்துப் பெய்யாதொழியினும், விளைவு குறையினும், இயல்பல்லாதன மக்களது தொழிலிலே தோன்றினும் காவலரைப் பழித்துரைக்கும், இவ்விடமகன்ற உலகம் ; அதனை நன்குக அறிந்தனையாயின், நீயும் குறளைகூறுவாரது உறுதியிலலாத வார்த்தையை உட்கொள்ளாது ஏரைப் பாதுகாப்பாருடைய குடியைப் பாதுகாத்து அக்காவலாலே ஏனைக் குடிகளையும் பாதுகாப்பாயாயின், நின் அடியைப் போற்றுவர், நின்பகைவர்.— எ - று.

வளியிடை வழங்கா மண்டிணி கிடக்கையென இயையும் ; அன்றி, வாயுபதத்துக்கு மேலான வானமெனக் கிடந்தவாறே உரைப்பினுமமையும். அரசென்றது, அரசர்தன்மையை. முறைவேண்டுபொழுதிற் பதனெளியோர் ஈண்டு உறைவேண்டுபொழுதிற் பெயல்பெற்றோரென்றகருத்து : நீயும் பதனெளியையாதல்வேண்

டும்; அவ்வாறு பெயல்பெறுதற்கென்றவாறும். அன்றி, இதற்கு முறைவேண்டு பொழுதிற் பதனெளியோர் ஈண்டு உறைவேண்டுபொழுதிற் பெயல்பெற்றோரோ டொப்பரென்று உரைப்பாருமுளர். அத்தையும், ஆங்கவும், மதியும் - அசைநிலை. நினவ எனவவென ஈற்றுநின்ற அகரங்கள் - செய்யுள்நோக்கிவிரிக்கப்பட்டன.

நாடுகெழுசெல்வத்துப் பீடுகெழுவேந்தே, நினவகூறுவல்; எனவகேண்மதி; குடை வருந்தியகுடி மறைப்பதுவாகும்; கூர்வேல்வளவ, பதனெளியோர் உறை வேண்டுபொழுதிற் பெயல்பெற்றோராவர்; ஆகையால், நீயும் அவ்வாறு காலம் எளியையாய்க் கொற்றமும் ஈன்றதன்பயனென்றுகருதிக் காவலர்ப்பழிக்கும் இக்க ண்ணகன்ஞாலமென்றுகொண்டு நொதுமலாளர் பொதுமொழிகொள்ளாது பார மோம்பிப் புறந்தருகுவையாயின், நின்னடிபுறந்தருகுவர், அடங்காதோரென்றமை யால், செவியறிவுறூஉவாயிற்று. (௩௫)

(௩௬.) அடுநை யாயினும் விடுநை யாயினு
நீயளந் தறிதிநின் புரைமை வார்கோற்
செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடுந்
தண்ணான் பொருநை வெண்மணற் சிதையக்
கருங்கைக் கொல்ல னரஞ்செ யவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலி னிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறுங்
கடிமரந் தடியு மோசை தன்னூர்
நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப
வாங்கினி திருந்த வேந்தனோ டீங்குநின்
சிலைத்தார் முரசங் கறங்க
மலைத்தனை யென்பது நாணுத்தக வுடைத்தே.

திணை - வஞ்சி; துறை - துணைவஞ்சி.

அவன்கருவூர்முற்றியிருந்தானை ஆலத்தூர்கிழார் பாடியது.

இ - ள்.—கொல்வாயாயினும் கொல்லாது ஒழிவாயாயினும் அவற்றால் நினக்கு வரும் உயர்ச்சி யாம் சொல்லவேண்டா; நீயே எண்ணியறிவை; செறிந்த உள் ளிடுபருக்கையையுடைய சிலம்பினையும் நீண்ட கோற்றொழிலாற் செய்யப்பட்ட குறிய வளையினையுமுடைய மகளிர் பொன்னாற்செய்யப்பட்ட கழலான் வேதிகை போல உயர்ந்த எக்கர்க்கண்ணேயிருந்து விளையாடும் அணுமையையுடைய குளிர்ந்த ஆன்பொருந்தத்தினது வெளிய மணற்சிதற வலியகையையுடையகொல்லன் அரத் தாற் கூர்மைசெய்யப்பட்ட அழகிய வாயினையுடைத்தாகிய நெடிய கையையு டைய கோடாலிவெட்டுதலான் நின்றநிலைகலங்கி வீழ்ம்பூ நாறுகின்ற நெடிய கொம்புகள்தனிப்பக் காக்கடோறும் காவன்மரங்களைவெட்டுமோசை தன்னுடைய ஊரின்கண் நெடியமதிலெல்லையில் தனதுகாவலையுடைய கோயிற்கண்ணே சென் றொலிப்ப அவ்விடத்து மானமின்றி இனிதாகவிருந்த வேந்தனுடன் இவ்விடத்து

வினது இந்திரவிற்போலும் மாலையையுடைய முரசொலிப்பப் பொருதாரென்பது கேட்டார்க்கு நாணுந்தகுதியையுடைத்து; ஆதலால், அப் போரை ஒழியத்தகும்.— எ - று.

வார்கோற் குறுந்தொடியென மாறியுரைக்கப்பட்டது. இனிதிருந்தவென்றது, குறிப்புமொழி.

கடிமரந்தடியுமோசை தன்மனையியம்ப இனிதிருந்த வேந்தனொடு மலைத்தனை யென்பது நாணுத்தகவுடைத்து; அதனால், அடுனையாயினும் விடுனையாயினும் நின் புரைமை நீ அளந்தறிதியென மாறிக்கூட்டி வினைமுடிவுசெய்க.

மகளிர் தெற்றியாடும் பொருளையென்றகருத்து: இங்ஙனம் இளமகளிர் கழங்காடும் அணுமையதாயினும் புறப்பட்டுப் போர்செய்யாத அவன் வலியின்மைதோற்றிநின்றது. தெற்றியாடும் தன்னூரென இயைப்பினுமமையும்.

மேற்சென்றோனைச் சந்துசெய்துமீட்டலின், இது துணைவஞ்சியாயிற்று. (௩௬)

(௩௭.) நஞ்சுடை வாலெயிற் றைந்தலை சுமந்த
வேக வெந்திற னாகம் புக்கென
விசும்புதீப் பிறப்பத் திருகிப் பசுங்கொடிப்
பெருமலை விடரகத் துருமெறிந் தாங்குப்
புள்ளுறு புன்கண் டீர்த்த வெள்வேற்
சினங்கெழு தானைச் செம்பியன் மருக
கராஅங் கலித்த குண்டுகண் ணகழி
யிடங்கருங் குட்டத் துடன்றொக் கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉங்
கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மன் மூதூர்
வம்பணி யானை வேந்தகத் துண்மையி
னல்லவென் றது சிதைத்தல்
வல்லையா னெடுந்தகை செருவத் தானே.

*திணை - வாகை; துறை - அரசவாகை; முதல்வஞ்சியுமாம்.

அவனை †மாறோக்கத்துநப்பசலையார் பாடியது.

இ - ள்.—நஞ்சுடைத்தாகிய வெளிய பல்லினையுடைய ஐந்துபடம்பொருந்திய தலையைச்சுமந்த சினம்பொருந்திய வெய்ய திறலையுடைய பாம்பு புக்கதாக வானம் தீப்பிறக்கும்பரிசு முறுகிப் பசிய கொடியினையுடைய பெரிய மலைமுழையின்கண்ணே இடியேறெறிந்தாற்போல, புறவுற்ற துயரத்தைக் கெடுத்த வெள்வேலோடு சினம்பொருந்திய படையையுடைய செம்பியன்மரபிலுள்ளாய், கராம்செருக்கிய

* திணை - உழிஞை; துறை - குற்றுழிஞையென்றும் பிரதிபேதமுண்டு.
† மாறோகமென்றும் பிரதிபேதமுண்டு.

குழிந்த இடத்தையுடைய அகழியினையும், இடம் கரிதாகிய ஆழத்தின்கட் சேரத் திரண்டோடி இடையாமத்து ஊர்காப்பாருடைய விளக்குநிழலைக் கவரும் கடிய மாறுபாடுபொருந்திய முதலையையுடைய நீர்மிக்க மடுவினையும், செம்புபொருவும் மதிலையுமுடைய தலைமைபொருந்திய பழைய ஊரினுள்ளே கச்சணிந்த யானையை யுடைய அரசுண்டாகலின், அவற்றை நல்லவென்றுபாராது அழித்தலைவல்லையா யிருந்தாய்; பெருந்தகாய், போரின்கண்.—எ - று.

இலஞ்சியையுடைய அகழியென மாறிக்கூட்டினுமமையும்; இப்பொருட்குக் கராம் கலித்தலை அகழிக்கு அடையாக்குக. கராம் - முதலையுள் ஒருசாதி.

செம்பியன்மருக, நெடுந்தகாய், விடரகத்து நாகம்புக்கென உருமெறிந்தாங்கு மூதூரகத்து வேந்துண்மையின், செருவத்துச் சிதைத்தல் வல்லையென மாறிக் கூட்டுக.

புள்ளுறு புன்கண் தீர்த்த பேரருளினோன் மருகனும் செருவின்கண் இவற்றை நல்லவென்று பாராது அழித்தல் வல்லையாயிருந்தாயென அவன்மறம் வியந்து கூறியவாறு. ஐந்தலையென்றதற்கு ஐந்துதலையென்னினுமமையும். இடங்கருங்குட்டமென்பதனுள், உம்மையை அசைநிலையாக்கி, இடங்கரையுடைய குட்டமென்றுரைப்பாருமுளர். இடங்கரீட்டத்தென்று பாடமோதுவாருமுளர். (கூஎ)

(கூஅ.) *வரைபுரையு மழகளிற்றின்மிசை
வான்றுடைக்குந் தகையபோல
விரவுருவின கொடிநுடங்கும்
வியன்றானை விறல்வேந்தே
நீ, உடன்று நோக்கும் வாயெரி தவழ
நீ, நயந்து நோக்கும் வாய்பொன் பூப்பச்
செஞ்ஞா யிற்று நிலவு வேண்டினும்
வெண்டிங்களுள் வெயில்வேண்டினும்
வேண்டியது விளைக்கு மாற்றலை யாகலி
னின்னிழற் பிறந்து நின்னிழல் வளர்ந்த
வெம்மள வெவனோ மற்றே யின்னிலைப்
பொலம்பூங் காவி னன்னாட் டோருஞ்
செய்வினை மருங்கி னெய்த லல்லதை
யுடையோ ரீதலு மில்லோ ரிரத்தலுங்
கடவ தன்மையிற் கையற வுடைத்தென
வாண்டுச்செய் நுகர்ச்சி யீண்டுங் கூடலி

---

* இச்செய்யுள் புகழ்ச்சிக்கண்வந்த செந்துறைப்பாடாண் பாட்டென்றும் [தொல், பொரு, புறத்திணையியல், உஎ - ம் சூத்திரவுரை], இதனுள், 'வரைபுரையு மழகளிறு' என்பதை, முதற்குமுதலேவந்த உவமையென்றும் [தொல், பொரு, உவமவியல், கூ - ம் சூத்திரவுரை], கூறுவர் நச்சினார்க்கினியர்.

னின்று முள்ளுவர் பரிசில
ரொன்னார் தேஎத்து நின்னுடைத் தெனவே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

அவன் 'எம்முள்ளீர் எந்நாட்டீர்' என்றற்கு ஆவூர்மூலங்கிழார் பாடியது.

இ - ள்.—மலையையொக்கும் இளங்களிற்றின்மேல் ஆகாயத்தைத்தடவும் கூறுபாட்டையுடையனபோல விரவின பலநிறத்தையுடையனவாகிய கொடிகள் அசைந்துதோன்றும் பரந்த படையையுடைய விறல்வேந்தே, நீ முனிந்துபார்க்குமிடம் தீப்பரக்க, நீ அருளிப் பார்க்குமிடம் பொன்பொலிய, செஞ்ஞாயிற்றின்கண்ணே நிலவுண்டாகவேண்டினும், வெளிய திங்களின்கண்ணே வெயிலுண்டாகவேண்டினும் நீ வேண்டியபொருளை உண்டாக்கும் வலியையுடையையாகலின், நினது நிழற்கண்ணே பிறந்து நினது நிழற்கண்ணே வளர்ந்த எமது நினைவெல்லை சொல்லவேண்டுமோ? வேண்டாவன்றே; இனியநிலையையுடைத்தாகிய பொற்பூப்பொருந்திய கற்பகக்காவையுடைய நல்ல விண்ணுலகத்தவரும் தாஞ்செய்த நல்வினையாலுள்ள இன்பத்தின்பக்கத்தைப் பொருந்துவதல்லது, செல்வமுடையோர் வறியோர்க்குவழங்குதலும், வறியோர் செல்வமுடையோர்பாற் சென்றிரத்தலும் ஆண்டுச் செய்யக்கடவதல்லாமையான், அது செயலறவுடைத்தெனக்கருதி, அவ்விடத்துநுகரும் நுகர்ச்சி இவ்விடத்தும்கூடுதலான், நின்னாட்டைநினைப்பர் பரிசிலர்; ஆதலால், பகைவர்தேயத்திருந்தும், நின்னாடு நின்னையுடைத்தென்றுகருதி.—எ - று.

மற்று - அசை.

வேந்தே, நீ வேண்டியதுவிளைக்கும் ஆற்றலையாகலின், விண்ணுலகத்து நுகர்ச்சி ஈண்டுங்கூடலின், ஒன்னார்தேயத்திருந்தும், பரிசிலர், நின்னாடு நின்னையுடைத்தென்று நின்னாட்டையுள்ளுவர்; ஆதலான், நின்னிழற்பிறந்து நின்னிழல்வளர்ந்த எம்மளவு எவனோவென மாறிக்கூட்டுக. (௩௮)

(௩௯.) புறவி னல்லல் சொலியக் கறையடி
யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்
கோனிறை துலாஅம் புக்கோன் மருக
வீதனின் புகழ்ச்சி மன்றே சார்த
லொன்னா ருட்குந் துன்னருங் கடுந்திறற்
றூங்கெயி லெறிந்தநின் னூங்கணோர் நினைப்பி
னடுதனின் புகழ்ச்சி மன்றே கெடுவின்று
மறங்கெழு சோழ ருறந்தை யவையத்
தறநின் று நிலையிற் றாகலி னதனான்
முறைமைநின் புகழ்ச்சி மன்றே மறமிக்
கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோட்
கண்ணார் கண்ணிக் கலிமான் வளவ
யாங்கன மொழிகோ யானே யோங்கிய
வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட்

டிமயஞ் சூட்டிய வேம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் றொலைய
வாடா வஞ்சி வாட்டுநின்
பீடுகெழு நோன்றாள் பாடுங் காலே.

திணையும் துறையும் அவை.

அவனை மாறோக்கத்துநப்பசலையார் பாடியது.

இ - ள்.—புறவினது வருத்தத்தைக் களையவேண்டிக் கறைபொருந்திய அடியினையுடைய யானையினது வெளிய கோட்டாற் கடைந்துசெறிக்கப்பட்ட வெளிய கடையினையுடைய கோலாகிய நிறுக்கப்படும் துலாத்தின்கண்ணே துலைபுக்க செம்பியனது மரபினுள்ளாயாதலான், இரந்தோர்க்குக்கொடுத்தல் நினக்கு இயல்பாவதல்லது புகழுமல்லவே; அசுரர்க்குப் பகைவராகியதேவர்கள் இட்டுதற்குவெருவும் அணுகுதற்கரிய மிக்கவலியையுடைய ஆகாயத்துத் தூங்கெயிலை அழித்த நின்னுடைய முன்னுள்ளோரை நினைப்பின், ஈண்டுள்ள பகைவரைக்கொல்லுதல் நினது புகழுமல்லவே; கேடின்றி மறம்பொருந்திய சோழரது உறையூர்க்கண் அவைக்களத்து அறம் நின்றுநிலைபெற்றதாதலால், முறைமைசெய்தல் நினக்குப் புகழுமல்லவே; அதனால், மறம் மிக்கெழுந்திருந்த போரைவென்ற கணையமரத்தோடு மாறுபடும் தசைசெறிந்த தோளினையும், கண்ணிற்கு ஆர்ந்த கண்ணியையும், மனஞ்செருக்கிய குதிரையையுமுடைய வளவ, எவ்வாறுகூறுவேனோயான்; உயர்ந்த எல்லை அளந்தறியப்படாத பொன்படுகின்ற நெடிய சிகரங்களையுடைய இமயமலையின்கட்சூட்டப்பட்ட காவலாகிய விற்பொறியையும், மாட்சிமைப்பட்ட தொழில் பொருந்திய நெடியதேரையுமுடைய சேரனழிய அவனது அழிவில்லாத கருவூரை அழிக்கும் நினது பெருமைபொருந்திய வலியதாளைப்பாடுங்காலத்து.—எ - று.

நின்னைப்பாடுங்காலென்பார், அவனது சிறப்புத்தோன்றத் தாள்பாடுங்காலென்றார்; தாளை முயற்சியெனினுமமையும்.

நிறைதுலாம்புக்கோன்மருக, நீ அவன்மருகனாதலால், ஈதல் நின்புகழுமன்று; தூங்கெயிலெறிந்த நின் ஊங்கணோர்நினைப்பின், அடுதல் நின்புகழுமன்று; உறந்தை அவையத்து அறம் நின்றுநிலையிற்றாதலின், முறைமை நின்புகழுமன்று; அதனால், கலிமான்வளவ, நின்தாள்பாடுங்கால், யான் யாங்ஙனமொழிகோவெனக் கூட்டுக.

அதனால், யாங்ஙனமொழிகோவென இயையும்.

மருகவென்புழி, ஆதலானென்பது, ஆற்றலாற்போந்தபொருளெனக்கொள்க. கறையடியென்பதற்கு உரல்போலும் அடியென்பாருமுளர். (௩௯)

(௪௰.) நீயே பிறரோம் புற்ற மன்னெயி
லோம்பாது கடைந்தட் டவர்முடி புனைந்த
பசும்பொன்னி னடிபொலியக்
கழறைஇய வல்லாளனை
வயவேந்தே யாமேநின்
னிகழ்பாடுவோ ரெருத்தமடங்கப்

புகழ்பாடுவோர் பொலிவுதோன்ற
வின்றுகண் டாங்குக் காண்குவ மென்று
மின்சொலெண் பதத்தை யாகுமதி பெரும
வொருபிடி படியுஞ் சீறிட
மெழுகளிறு புரக்கு நாடுகிழ வோயே.

திணை - அது; துறை - செவியறிவுறூஉ.

அவனை ஆவூர்மூலங்கிழார் பாடியது.

இ-ள்.—நீ, பகைவரது பாதுகாத்த நிலைபெற்ற அரண்களைப் பாதுகாவாது எதிர்நின்று அழித்து அவரைக்கொன்று அவர் மகுடமாகச்செய்யப்பட்ட பசும்பொன்னால் நினது அடிபொலிய வீரக்கழல்செய்து புனைந்த வலிய ஆண்மையையுடையை; வயவேந்தே, யாங்கள், நின்னை இழித்துரைப்போர் கழுத்திறைஞ்சப் புகழ்ந்துரைப்போர் பொலிவுதோன்ற இன்றுகண்டாற்போலக் காண்போம்; எந்நாளும் இனியமொழியோடெளிய செவ்வியையாகுக; பெரும, ஒருபிடிகிடக்கும் சிறியவிடம் ஏழுகளிற்றுயானையைப் பாதுகாக்கும் நாட்டையுடையோய்.—எ - று.

நாடுகிழவோய், இன்சொல் எண்பதத்தை ஆகுமதி; அதனால், நின் இகழ்பாடுவோர் எருத்தமடங்கப் புகழ்பாடுவோர் பொலிவுதோன்ற யாம் இன்றுகண்டாங்குக் காண்குவமெனக்கூட்டுக.

வல்லாளனையென்பதனுள், ஐகாரம் - முன்னிலை விளக்கிநின்றது; அசைநிலையுமாம். மதி - முன்னிலையசைச்சொல். 'கழறைஇய வல்லாளன்' என்றதனாற் பகையின்மையும், 'ஒருபிடிபடியுஞ்சீறிடம் எழுகளிறுபுரக்கும் நாடுகிழவோய்' என்றதனாற் பொருட்குறைவின்மையும் கூறியவாறாயிற்று. (சo)

(சக.) காலனுங் காலம் பார்க்கும் பாராது
வேலீண்டு தானை விழுமியோர் தொலைய
வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே
*திசையிரு நான்கு முற்க முற்கவும் பெருமரத்
திலையி னெடுங்கோடு வற்றல் பற்றவும்
வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவு
மஞ்சுவரத் தகுந புள்ளுக்குர லியம்பவு
மெயிறுநிலத்து வீழவு மெண்ணெ யாடவுங்
களிறுமேல் கொள்ளவுங் காழக நீப்பவும்
வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவுங்
கனவி னரியன காணா நனவிற்
செருச்செய் முன்பநின் வருதிறனோக்கி
மையல் கொண்ட வேமமி லிருக்கையர்
புதல்வர் பூங்கண் முத்தி மனையோட்

* திசையிருநான்கு முற்கவுமென்றும் பாடம்.

கறு கெவ்வங் கரக்கும் பைதன் மாக்களொடு
பெருங்கலக் குற்றன்றாற் றானே காற்றோ
டெரிநிகழ்ந் தன்ன செலவிற்
செருமிகு வளவநிற் சினைஇயோர் நாடே.

திணை - வஞ்சி; துறை - கொற்றவள்ளை.

அவனைக் கோவூர்கிழார் பாடியது.

இ - ள்.—கூற்றும் தன்னால் உயிர்கொள்ளலாங்காலம் வருந்துணையும்பார்க்கும்; அவ்வாறு காலம்பாராது வேல்நெருங்கிய படையினையுடைய பெரியோர் மாளும்பரிசு நீ வேண்டியவிடத்தே கொல்லும் வெல்லும்போரையுடையவேந்தே, எட்டுத்திசையும் எரிகொள்ளி எரிந்துவீழவும், பெரியமரத்தின்கண்ணே இலையில்லாத நெடியகோடாகிய வற்றல் பற்றவும், வெய்ய சுடரையுடையஞாயிறு பலவிடத்தும் செறிந்துதோன்றவும், மற்றும் அஞ்சத்தகுவனவாகிய புட்கள் குரலிசைப்பவும், பல்லு நிலத்தின்கண்ணேவீழவும், எண்ணெயை மயிரின்கண்ணேவார்க்கவும், பன்றியேற்றை ஏறவும், ஆடையைக்களையவும், வெளிதாகிய வலிய படைக்கலம் தானிருந்த கட்டிலுடனே மறியவும், இங்ஙனம் கனவினும், மெய்ம்மையினும் பொறுத்தற்கரியவற்றைக்கண்டு போர்செய்யும் வலியையுடையோய், நின் மேற்செலவின் கூறுபாட்டைக்கருதி, மயக்கம்பொருந்திய காவலில்லாத இருத்தலையுடையராய்த் தம்பிள்ளைகளுடைய பூப்போலுங்கண்ணை முத்தங்கொண்டு தம்மனைவியர்க்குத் தமது வருத்தந்தோன்றாமல் மறைக்கும் துன்பத்தையுடைய ஆடவரோடு மிக்க கலக்கமுற்றது; காற்றுடன் எரிநிகழ்ந்தாற்போன்ற செலவையுடைய போரின்கண்ணே மிக்கவளவ, நின்னைச் சினைப்பித்தோருடைய நாடு.—எ - று.

உற்கவென்றது, வீழ்தலை. உற்கமுதலியநான்கும் உற்பாதமாய் நனவிற்காணப்பட்டன; எயிறுநிலத்துவீழ்தல்முதலாயின கனவிற் காணப்பட்டன. வருதிறன் - ஈண்டுச் செல்லுந்திறனென இடவழுவமைதியாய்நின்றது. 'மனையோட் கெவ்வங் கரக்கும்' என்பது, "ஏவ விளையர் தாய்வயிறு கரிப்ப" என்றாற்போலப் பன்மைக்கேற்பநின்றது. தான் - ஈண்டு அசைநிலை. பெருமரத்துப் பற்றவுமெனஇயையும். இலையி னெடுங்கோடு வற்றல் பற்றவுமென்பதற்கு நெடுங்கோட்டின்கண்ணே இலையில்வற்றற்றன்மை பற்றவுமென உரைப்பினுமமையும்.

வேந்தே, முன்ப, வளவ, நீ இத்தன்மையையாதலால், நிற் சினைஇயோர்நாடு, பைதன்மாக்களொடு பெருங்கலக்குற்றதெனக்கூட்டுக.

காற்றோ டெரிநிகழ்ந்தன்ன செலவிற் செருமிகு வளவவென மன்னவன்புகழும், நிற்சினைஇயோர்நாடு பைதன் மாக்களொடு பெருங்கலக் குற்றன்றென ஒன்னார்நாடழிபிரங்கியதும் ஆதலால், இது கொற்றவள்ளையாயிற்று. (சுக)

(சுஉ.)*ஆறு வீகை யுடுபோ ரண்ணனின்
யானையு மலையிற் றோன்றும் பெருமநின்

---

* இச்செய்யுளை, நச்சினார்க்கினியர், உழிஞைத்திணைக்குரிய 'கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம்' என்னுந்துறைக்கு உதாரணமாகக்காட்டினர் [தொல், பொரு, புறத்திணையியல், கஉ - ம் சூத்திரவுரை].

னையுங் *கடலென முழங்குங் கூர்நுனை
வேலு †மின்னின் விளங்கு முலகத்
தரசுதலை பனிக்கு மாற்றலை யாதலிற்
புரைதீர்ந் தன்றது புதுவதோ வன்றே
தண்புனற் பூச லல்லது நொந்து
களைக வாழி வளவ வென்றுநின்
முனைதரு பூசல் கனவினு மறியாது
புலிபுறங் காக்குங் குருளை போல
மெலிவில் செங்கோ னீபுறங் காப்பப்
பெருவிறல் யாணர்த் தாகி யரிநர்
கீழ்மடைக் கொண்ட வாளையு முழவர்
படைமிளிர்ந் திட்ட யாமையு மறைநர்
கரும்பிற் கொண்ட தேனும் பெருந்துறை
நீர்தரு மகளிர் குற்ற குவளையும்
வன்புலக் கேளிர்க்கு ‡வருவிருந் தமரு
மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந
மலையி னிழிந்து மாக்கட னோக்கி
நிலவரை யிழிதரும் பல்யாறு போலப்
புலவ ரெல்லா நின்னோக் கினரே
நீயே, மருந்தில் கணிச்சி வருந்தவட் டித்துக்
கூற்றுவெகுண் டன்ன முன்பொடு
மாற்றிரு வேந்தர் மண்ணோக் கினையே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவனை இடைக்காடனார் பாடியது.

இ - ள்.—அமையாத வண்மையையும், பகையைக்கொல்லும் பூசலையுமுடைய தலைவ, நினதுயானையும் மலைபோலத் தோன்றும்; பெரும, நின்படையும் கடல்போல் முழங்கும்; கூரிய நுனையையுடைய வேலும் மின்போல விட்டுவிளங்கும்; இங்ஙனம் உலகத்தின்கண் வேந்து தலைநடுங்குதற்கு ஏதுவாகிய வலியையுடையையாதலால், குற்றம் தீர்ந்தது; அது நினக்குப் பழையதாய்வருகின்றது; குளிர்ந்த நீராலுள்ளதாகிய பூசலல்லது வருந்தி 'எமது துயரத்தைத்தீர்ப்பாயாக வாழி வளவ' என்று சொல்லி, நினது முந்துற்றுச்செல்லும் படையுண்டாக்கும்பூசலைக் கனவின்கண்ணும் அறியாது, புலி பாதுகாக்கும் குட்டிபோலக் குறைவில்லாத செவ்வியகோலால் நீபாதுகாப்பப் பெரிய விசேடத்தையுடைய புதுவருவாயையுடைத்தாய் நெல்லறுப்பார் கடைமடைக்கட் பிடித்துக்கொள்ளப்பட்ட வாளையும், உழ

* கடலினொலிக்கும் வைந்நுதியென்றும் பாடம்.

† மின்போ லவிர்வரு ஞாலத்தென்றும் பாடம்.

‡ வருவிருந்தயருமென்றும் பாடம்.

வார் படைவாளால் மறிக்கப்பட்ட ஆமையும், கரும்பறுப்பார் கரும்பினின்றும் வாங்கப்பட்டதேனும், பெரிய துறைக்கண் நீரைமுகந்துகொள்ளும்பெண்டிர் பறித்த செங்கழுநீருமென இவற்றை வன்புலத்தினின்றும்வந்த சுற்றத்தார்க்கு விருந்தாக விரும்பிக்கொடுக்கும் மென்புலத்தூர்களையுடைய நல்ல நாட்டுக்குவேந்தே, மலையினின்றிழிந்து பெரிய கடலைநோக்கி நிலவெல்லையினின்றிழியும் பல யாறுகளையொப்பப் புலவர் யாவரும் நின்னைநோக்கினர்; நீதான் அவர்க்குப் பரிசில் கொடுத்தற்பொருட்டுப் பரிகாரமில்லாத கணிச்சியென்னும் படைக்கலத்தை உயிர் வருந்தச் சுழற்றிக் கூற்றம் சினந்தாற்போலும் வலியுடனே நினக்கு மறுதலையாகிய இருவேந்தருடைய நிலத்தைக் கொள்ள நோக்கினாய்.—எ - று.

அறியாதென்பதனை அறியாமலெனத் திரிப்பினுமமையும். வன்புலம் - குறிஞ்சியும், முல்லையும். மென்புலம் - மருதமும், நெய்தலும். கணிச்சியைக் குந்தாலியென்றும், மழுவென்றும் சொல்லுவர். யாணர்த்தாகி விருந்தமரும் நன்றாடென்க.

பொருந, புலவரெல்லாம் நின்னோக்கினர்; நீ அரசுதலைபணிக்கும் ஆற்றலையாதலின், இருவேந்தர் மண்ணோக்கினை; அதனால், இச்செய்தி புரைதீர்ந்தது, நினக்குப் புதுவதன்றாகலினெனக்கூட்டுக.

புரைதீர்ந்தன்றென்பதற்கு உயர்ச்சிதீர்ந்ததெனப் பொருளாக்கி, பொருந, நீ ஆற்றலையாதலின், இருவேந்தர்மண்ணோக்கினை; புலவரெல்லாம் பரிசில்பெறுதற் பொருட்டு நின்னோக்கினர்; இச்செய்தி நினக்குப் புதிதன்று; ஆகலின், உயர்ச்சிதீர்ந்ததென்றுரைப்பினுமமையும். (௪௨)

(௪௩.) *நிலமிசை வாழ்ந ரலமர றீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
காலுண வாகச் சுடரொடு கொட்கு
மவிர்சடை முனிவரு மருளக் கொடுஞ்சிறைக்
கூருகிர்ப் பருந்தி னேறு குறித்தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
றபுதி யஞ்சிச் சீரை புக்க
வரையா வீகை யுரவோன் மருக
நேரார்க் கடந்த முரண்மிகு திருவிற்
றேர்வண் கிள்ளி தம்பி வார்கோற்
கொடுமர மறவர் பெரும கடுமான்
கைவண் டோன்ற லைய முடையே
னார்புனை தெரியனின் முன்னோ ரெல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர் மற்றிது
நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி
நின்யான் பிழைத்தது நோவா யென்னினு

* இப்பாட்டினை, நச்சினார்க்கினியர் தொல், பொரு, புறத்திணையியலில், ௨௭ - ம் சூத்திரவுரையிற் புலவன் அரசனைநாடி நன்குரைத்தற்கு உதாரணமாகக் காட்டினர்.

நீபிழைத் தாய்போ னனிநா ணினையே
தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்குஞ் செம்ம
லிக்குடிப் பிறந்தோர்க் கெண்மை காணுமெனக்
காண்டகு மொய்ம்ப காட்டினை யாகலின்
யானே பிழைத்தனென் சிறக்கநின் னாயுண்
மிக்குவரு மின்னீர்க் காவிரி
யெக்க ரிட்ட மணலினும் பலவே.

திணையும் துறையும் அவை.

சோழன் நலங்கிள்ளிதம்பிமாவளத்தானும் தாமப்பல்கண்ணனும் வட்டுப் பொருவுழிக் கைகரப்ப வெகுண்டு வட்டுக்கொண்டெறிந்தானைச் சோழன்மகனல்லையென நாணியிருந்தானைத் தாமப்பல்கண்ணனார் பாடியது.

இ - ள்.—நிலத்தின்மேல் உயிர்வாழ்வார்க்கு வெம்மையான் உளதாகிய சுழற்சி நீங்கச் சுடுகின்ற கதிரையுடைய ஞாயிற்றினது வெப்பத்தைத் தாம்பொறுத்துக் காற்றை உணவாகக்கொண்டு அச்சுடருடனே சூழவரும் விளங்கிய சடையையுடைய அருந்தவரும் வியப்பான்மயங்க, வளைந்த சிறகினையும் கூரிய உகிரினையுமுடைய பருந்தினது எறிதலைக்கருதி அதனைத்தப்பித் தன்னிடத்தையடைந்த குறிய நடையையுடைய புறவினது அழிவிற்கு அஞ்சித் தன் அழிவிற்கு அஞ்சாது துலாத்தலையுட்புக்க வரையாத வண்மையையுடைய வலியோனது மரபினுள்ளாய், பகைவரைவென்ற மாறுபாட்டான் மிக்க செல்வத்தையுடைய தேர்வண்கிள்ளிக்குத் தம்பி, நீண்ட அம்பினையும் வளைந்தவில்லினையுமுடைய மறவர்க்குத் தலைவ, விரைந்தகுதிரையையுடைய கைவள்ளிய தோன்றல், நினது பிறப்பின்கண் ஐயப்பாடுடையேன்; ஆத்தியாற்செய்யப்பட்ட தாரையுடைய நினக்கு முன்னுள்ளாரியாவரும் பார்ப்பார்வெறுக்கத்தகுவன செய்யார்; மற்று இவ்வெறுக்கத்தக்க செய்கை நினக்கு நீர்மையையுடைத்தோவென்று நீ வெறுக்கச்சொல்லி நினக்கு யான்செய்த தவற்றிற்கு வெரூயென்னினும், நீ தவறுசெய்தாய்போல மிகநாணினாய்; இவ்வாறு தம்மைத்தப்பியவரைப் பொறுக்குந்தலைமை இக்குலத்தின்கட்பிறந்தோர்க்கு எளிமையுடைத்துக்காணுமெனக் காணத்தக்க வலியையுடையோய், நீ அறிவித்தாய்; ஆகலின், யானே தவறுசெய்தேன்; பெருகிவரும் இனிய நீரையுடைய காவிரி கொழித்திடப்பட்ட மணலினும் பலவாக நின்வாழ்நாள் சிறப்பதாக.—எ - று.

முனிவரென்றது, வேணுவியோரை; அன்றி, சுடர்திரிந்தவழித்திரிந்து தவஞ்செய்யுமுனிவரென்றும் உரைப்ப. சீரை - துலாக்கோற்றட்டு. 'மற்றிது நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி' என்றது, சூதுபொருவுழிக் கையாற்கவறுபுதைப்ப வெகுண்டு வட்டுக்கொண்டெறிந்தானை 'இவ்வாறுசெய்தல் நின்பெருமைக்குப் பொருந்துமோ அதனால் நின்பிறப்பிலே ஐயமுடையேன்' என்றசொல்லை.

இது, பொறுத்தற்கரியபிழையைப் பொறுத்த குணவென்றியான் அரசவாகையாயிற்று. (௪௩)

(௪௪.) இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ

திருந்தரை நோன்வெளில் வருந்த வொற்றி
நிலமிசைப் புரளுங் கைய வெய்துயிர்த்
தலமரல் யானை யுருமென முழங்கவும்
பாலில் குழவி யலறவு மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவு நீரில்
வினைபுனை நல்லி லினைகூஉக் கேட்பவு
மின்னா தம்ம *வீங்கினி திருத்த
றுன்னருந் துப்பின் வயமான் றோன்ற
லறவை யாயி னினதெனத் திறத்தன்
மறவை யாயிற் போரொடு திறத்த
லறவையு மறவையு மல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவி
னீண்மதி லொருசிறை யொடுங்குத
னாணுத்தக வுடைத்திது காணுங் காலே.

திணையும் துறையும் அவை.

அவன் ஆவூர்முற்றியிருந்தகாலத்து அடைத்திருந்த நெடுங்கிள்ளியைக் கோவூர்கிழார் பாடியது.

இ - ள்.—கரிய பிடியினது ஈட்டத்தோடு பெரிய கயத்தின்கட்படியாவாய் நெல்லையுடைய கவளத்துடனே நெய்யால் மிதித்துத் திரட்டப்பட்ட கவளமும் பெறாவாய்த் திருந்திய மருங்கையுடைய வலிய கம்பம்வருந்தச் சாய்த்து நிலத்தின் மேலேபுரளும் கையையுடையவாய் வெய்தாகவுயிர்த்துச் சுழலும்யானை உருமேறு போலமுழங்கவும், பாலில்லாதகுழவி அழவும், மகளிர் பூவில்லாத வறிய தலையை முடிப்பவும், நீரில்லாத தொழில்புனைந்த நல்ல மனையிடத்துள்ளார் வருந்திக்கூப்பிடும் கூப்பீட்டைக்கேட்கவும், இவற்றிற்குநாணாது இவ்விடத்து நீ இனிதாக இருத்தல் இன்னாது; நண்ணுதற்கரிய வலியையுடைய வலிய குதிரையையுடைய தோன்றல், அறத்தை உடையையாயின், இது நினதன்றோவென்று சொல்லித் திறத்தல் செய்வாயாக; மறத்தையுடையையாயின், போரால் திறத்தல்செய்வாயாக; அவ்வாறன்றி, அறத்தையும் மறத்தையுமுடையையல்லையாகத் திறவாது அடைக்கப்பட்ட திண்ணிய நிலையையுடைத்தாகிய கதவினையுடைய நீண்டமதிலுள் ஒருபக்கத்தே ஒதுங்குதல் நாணுந்தன்மையையுடைத்து, இஃது ஆராயுங்காலத்து.— எ - று.

செய்யென ஒருசொல்வருவித்து உரைக்கப்பட்டது; திறத்தலென்பதனை இது திறக்கவென வியங்கோள்வினையாகவுரைப்பினுமமையும். அம்ம - கேட்பித்தற்கண்வந்தது. 'அறவியு மறவியு மல்லையாயின்' என்று பாடமோதுவாருமுளர். படியா, பெறா என்பன - எதிர்மறைவினையெச்சமுற்று. கையவென்பது, வினையெச்ச வினைக்குறிப்புமுற்று. (சச)

* ஈண்டினிதிருத்தலென்றும் பாடம்.

(௪௫.) இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்ல
னின்ன கண்ணியு மார்மிடைந் தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியு மார்மிடைந் தன்றே
யொருவிர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
யிருவிர் வேற லியற்கையு மன்றே, அதனாற்
குடிப்பொரு ளன்றுநுஞ் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே.

திணை - வஞ்சி; துறை - துணைவஞ்சி.

சோழன் நலங்கிள்ளி உறையூர்முற்றியிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் கோவூர்கிழார் பாடியது.

இ - ள்.—பெரியபனையினது வெளியதோட்டைச் சூடினோனல்லன்; கரிய கோட்டினையுடைய வேம்பினது தாரையுடையோனல்லன்; நின்னுடையகண்ணியும் ஆத்தியாற் செறியக் கட்டப்பட்டது; நின்னுடன் பொருவானுடைய கண்ணியும் ஆத்தியாற் செறியக் கட்டப்பட்டது; ஆதலால், நும்முள், ஒருவீர்தோற்பினும் தோற்பது நுங்குடியன்றோ? இருவீரும்வெல்லுதல் இயல்புமன்று; ஆதலால், நுங் குடிக்குத்தக்கதொன்றன்று, நுமதுசெய்கை; கொடியாற்பொலிந்த தேரையுடைய நும்மைப்போலும் வேந்தர்க்கு உடம்புபூரிக்கும் உவகையைச்செய்யும், இம்மாறுபாடு; ஆதலான், இதுதவிர்தலே நுமக்குத் தக்கது.—எ - று.

நினகண்ணியுமென்பது, நின்னகண்ணியுமென விகாரமாயிற்று. அதனாலென்பதனை ஒழித்தும் பாடமோதுப.

இது, சந்துசெய்தலால் துணைவஞ்சியாயிற்று. (௪௫)

(௪௬.) *நீயே, புறவி னல்லலன் றியும் பிறவும்
பலவும் விடுத்தோன் மருகனை யிவரே
புலனுழு துண்மார் புன்க ணஞ்சித்
தமதுபகுத் துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்
களிறு கண்டழூஉ மழாஅன் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர்
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே.

திணையும் துறையும் அவை.

சோழன்குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் மலையமான்மக்களை யானைக் கிடுவுழிக் கோவூர்கிழார்பாடி உய்யக்கொண்டது.

* இச்செய்யுளும், பின்வரும் "வள்ளியோர்ப்படர்ந்த" என்னும் செய்யுளும் துணைவஞ்சியல்லவென்பர் நச்சினார்க்கினியர்; அதனை, தொல், பொரு, புறத்திணையியலில், "இயங்குபடையரவம்" என்னும் சூ - ம் சூத்திரவுரையிற்காண்க.

இ - ள்.—நீதான், புறவின் அல்லலன்றியும் பிறவும் உற்ற துன்பம்பலவற்றை யுந்தீர்த்த சோழனுடைய மரபிலுள்ளாய்; இவர்தாம், அறிவான் உழுதுண்ணுங் கற்றோரது வறுமையை யஞ்சித் தம்முடையபொருளைப் பகுத்துண்ணும் குளிர்ந்த நிழலையுடையராய் வாழ்வாரது மரபினுள்ளார்; இவர், இப்பொழுது களிற்றைக் கண்டு தம் இளமையால் தாம் முன்பு வெருவியழுகின்ற அழுகையைமறந்த புல்லிய தலையையுடைய சிறுபிள்ளைகள்; மன்றை வெருவிப் பார்த்து முன்பு அறியாத புதியதோர்வருத்தத்தையுடையர்; இதுகேட்டாயாயின், நீவிரும்பியதைச் செய்வாயாக.—எ - று.

தண்ணிழல்வாழ்நர் சிறுஅரென இயைப்பினுமமையும். அழால் களிறுகண்டு மறந்தவெனக்கூட்டுக. நீ புறாமுதலாயினவற்றின் துயர்தீர்த்தற்கு உயிர்க்கொடை பூண்டோன் மருகனாதலானும், இவர் கற்றோர்வறுமையஞ்சிப் பகுத்துண்ணும் தண்ணிழல்வாழ்நர் மரபினுள்ளாராதலானும், இவர், நின்னால் அருளத்தகினல்லது முனியத்தகாரென்பதாம்.

இதுவும், இவனைக்கொல்லாமற் சந்துசெய்வித்தலின் துணைவஞ்சியாயிற்று.()

(சஎ.) வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடியவென் னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி
யோம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே, திறப்பட
நண்ணார் நாண வண்ணாந் தேகி
யாங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணாள் செல்வ மெய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே.

திணையும் துறையும் அவை.

சோழன்நலங்கிள்ளியுழைநின்று உறையூர்புகுந்த இளந்தத்தனைக் காரியாற் றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்றுவந்தானென்று கொல்லப்புக்குழிக் கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது.

இ - ள்.—வண்மையையுடையோரைநினைத்துப் *பழுமரந்தேரும் பறவை போலப்போகி நெடியவென்றுகருதாது அரியவழிபலவற்றையுங்கழிந்து திருந்தாத நாவால் தாம்வல்லபடிபாடி ஆண்டுப்பெற்ற பரிசிலான்மகிழ்ந்து சுற்றத்தையூட்டித் தாமும் பொருளைப்பாதுகாவாது உண்டு உள்ளமலர்ந்து வழங்கித் தம்மைப்புரப் போராற்பெறும் சிறப்பு ஏதுவாகவருந்தும் இப்பரிசிலான்வாழும் வாழ்க்கை, பிறர்க்குச்செய்யும் கொடுமையறிந்ததோவெனின், இல்லை; கூறுபடக் கல்விமுகத்தால்

* "பழுமரந் தேரும் பறவை போல" என்பது பெரும்பாணாற்றுப்படை [அடி. : ௨0].

தம்மொடு மலைந்தோர்நாணத் தமதுகல்வியான்வென்று தலையெடுத்துநடந்து அவ்விடத்து இனிதாக ஒழுகினல்லது, உயர்ந்த புகழையுடைய நிலமாளும் திருப்பொருந்திய நும்மையொக்கும் தலைமையுமுடைத்து.—எ - று.

தூங்கியவென்பதூஉம், செல்வமுமுடைத்தென்பதூஉம் பாடம். சுரம்பலகடந்து புள்ளிற்போகியென மாறிக்கூட்டுக.

பரிசில்வாழ்க்கை, நண்ணார்நாண இனிதொழுகினல்லது, நும்மோரன்னசெம்மலுமுடைத்து ; ஆதலால், பிறர்க்குத்தீதறிந்தன்றோ ? இன்றெனக்கூட்டுக.

இக்கோவூர்கிழார் தாமும்பரிசில்வாழ்நருள் ஒருவராதலான், 'வடியாநாவின் வல்லாங்குப் பாடி' எனப் பணிந்துகூறினாரென்க. (சஎ)

(சஅ.)*கோதை மார்பிற் கோதை யானுங்
கோதையைப் புணர்ந்தோர் கோதை யானு
மாக்கழி மலர்ந்த நெய்த லானுங்
கண்ணு றும்மே கானலந் தொண்டி
யஃதெம் மூரே யவனெம் மிறைவ
னன்னோற் படர்தி யாயி னீயு
†மெம்மு முள்ளுமோ முதுவா யிரவல
வமர்மேம் படூஉங் காலைநின்
புகழ்மேம் படுநனைக் கண்டன மெனவே.

திணை - பாடாண்டிணை ; துறை - புலவராற்றுப்படை.

சேரமான்கோக்கோதைமார்பனைப் போய்கையார் பாடியது.

இ - ள்.—கோதையுடையமார்பிற்கு அணிந்த கோதையானும், அக்கோதையைப்புணர்ந்த மகளிர்சூடியகோதையானும், கரியகழியின்கண்மலர்ந்த நெய்தற்பூவானும் தேன்நாறுநிற்கும், கானலையுடைய தொண்டி ; அஃது எம்முடையவூர் ; அவன், எம்முடையதலைவன் ; அத்தன்மையோனிடத்தேபோகின்றாயாயின், நீயும் எம்மையும் நினைப்பாயாக, முதியவாய்மையையுடைய இரவல, நீ, அமரின்கண் மேம்படுங்காலத்து நினக்கு உளதாகிய புகழை மேம்படுத்துமவனைக் கண்டேய்யாமெனச்சொல்லி.—எ - று.

கண்டனமென எம்முமுள்ளென்றாரேனும், உள்ளிக் கண்டனமெனச்சொலென்பது கருத்தாகக்கொள்க.

இரவல, நீயும் அன்னோற்படர்குவையாயின், நின்புகழ்மேம்படுநனைக் கண்டனமென எம்மையும் உள்ளெனக்கூட்டுக.

மோ - முன்னிலை அசைச்சொல். நீயுமென்பதூஉம், எம்முமென்பதூஉம் எச்சவும்மை.

---

* இப்பாட்டின்முதலிரண்டடியையும் மோனைத்தொடைக்கு உதாரணமாகக் காட்டினார் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, செய்யுளியல், கூஉ-ம் சூத்திரவுரை].

† எம்மையுமுள்ளுமோவென்றும் பாடம்.

தலைவனதியல்பையும் ஊரையுங்கூறி, முதுவாயிரவல, எம்முமுன்ளெனத் தன் தலைமைதோன்றக்கூறினமையால், இது, புலவராற்றுப்படையாயிற்று. (சஅ)

(சகூ.) நாட னென்கோ வூர னென்கோ
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்ப னென்கோ
யாங்கன மொழிகோ வோங்குவாட் கோதையைப்
புனவர் தட்டை புடைப்பி னயல
திறங்குகதி ரலமரு கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே.

திணையும் துறையும் அவை; துறை - இயன்மொழியுமாம்.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—குறிஞ்சிநிலமுடைமையால், நாடனென்றுசொல்லுவேனோ? மருதநிலமுடைமையால், ஊரனென்றுசொல்லுவேனோ? நெய்தனிலமுடைமையால், ஒலிமுழங்குகின்ற குளிர்ந்த கடலையுடைய சேர்ப்பனென்றுசொல்லுவேனோ? எவ்வாறுசொல்லுவேன்? மேம்பட்ட வாளையுடையகோதையை; புனங்காப்போர் கிளிகடிகருவியைப்புடைப்பின், அப்புனத்திற்கு அயலாகிய வளைந்த நெற்கதிர்சுழலும் வயலின் கண்ணும், மிக்கநீரையுடைய கடற்கரையின்கண்ணும் உளவாகிய புட்கள் சேர எழுமாதலான்.—எ - று.

'புனவர்தட்டைப்புடைப்பின்' எனக் குறிஞ்சிக்கும் முல்லைக்கும் ஏற்பக்கூறினமையான், நாடனென்பதூஉம், அவ்விரண்டுநிலத்துக்கும் கொள்ளப்படும்; எனவே முல்லைநிலமுமுடையனென்றவாறும்.

புனவர்தட்டைபுடைப்பின், கழனியிலும் சேர்ப்பிலும் புள்ளெழுமாதலால், கோதையை யாங்கனமொழிகோவெனக்கூட்டுக.

இது, நானிலமுமுடையனுதலிற் பெருஞ்செல்வமுடையன்; நீ அவன்பாற் செல்லெனை ஆற்றுப்படுத்தவாறு; அவனது இயல்பைப்புகழ்ந்தமையான், இயன்மொழியுமாயிற்று. (சகூ)

(ருo.) மாசற விசித்த வார்புறு *வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
யொலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை யெண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
யறியா தேறிய வென்னைத் தெறுவர
விருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
யதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்

* வளப்பினென்றும், வள்ளினென்றும் பாடம்.

லதனொடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடங் கமழ
விவணிசை யுடையோர்க் கல்ல தவண
துயர்நிலை யுலகத் துறையு ளின்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குரிசினீ யீங்கிது செயலே.

திணை - அது ; துறை - இயன்மொழி.

சேரமான்தகடூரெறிந்தபெருஞ்சேரலிரும்பொறை முரசுகட்டிலறியாதேறிய *மோசுகீரனைத்தவறுசெய்யாது அவன்துயிலெழுந்துணையும் கவரிகொண்டுவீசி யானை மோசுகீரனர் பாடியது.

இ - ள்.—குற்றந்தீரவலித்துப்பிணித்த வாரப்பட்ட வாரையுடைய கருமரத் தாற்செய்தலான் இருட்சிபொருந்திய பக்கம்பொலிவுபெற மயிலினது தழைத்த நெடிய பீலியால்தொடுக்கப்பட்ட ஒள்ளிய பொறியையுடைத்தாகிய நீலமணி போலும் நிறத்தையுடையதாரைப் பொற்றளிரையுடைய உழிஞையுடனே பொலி யச்சூட்டப்பட்டுக் குருதிப்பலிகொள்ளும் விருப்பத்தையுடைய உட்குப்பொருந்திய வீரமுரசம் நீராடிவருவதன்முன்னே எண்ணெயினது நுரையைமுகந்தாற்போன்ற மெல்லிய பூவையுடைய கட்டிற்கண்ணே இதனை முரசுகட்டிலென்பதறியாது ஏறிக் கிடந்த என்னை வெகுட்சிதோன்ற இருகூறாக்கும் நின்னுடைய வாளை வாயைமாற் றியதாகிய அதுவும் அமையும், நல்ல தமிழ்முழுதும் அறிந்தமைக்கு; அவ்வெகுட்சி யொழிந்து அதனாலும் அமையாதே குறுகவந்து நினது வலியையுடைய முழவு போலும் தோளையெடுத்துச் சாமரத்தாற்குளிரவீசினாய்; இவ்வகன்ற உலகத்தின் கண்ணே பரக்கும்பரிசு இவ்வுலகத்துப் புகழுடையோர்க்கல்லது, அவ்விடத்த தாகிய உயர்ந்த நிலைமையையுடைய உலகத்தின்கண் உறைதலில்லாமையைத் தெரியக்கேட்ட பரிசாலேயோ? வெற்றிபொருந்தப்பட்டதலைவா, நீ இவ்விடத்து இச்சாமரையைவீசுதல், அதற்குக்காரணம்சொல்லுவாயாக.—எ - று.

சூட்டியென்பதனைச் சூட்டவென்றுதிரிப்பினுமமையும். உழிஞை - கொற் றான்; அது குடநாட்டார்வழக்கு. முழவுத்தோளோச்சியெனவும், தண்ணென வீசியோயெனவும் கூறியவாற்றால், சாமரையென்பதுபெற்றாம். கமழ்தல் - ஈண்டுப் பரத்தற்பொருட்டாய்நின்றது. தமிழென்பதற்குத் தமிழ்நாடெனினுமமையும்.

குரிசில், நீ இதுசெய்தல், இசையுடையோர்க்கல்லது உறையுளின்மை கேட்ட மாறுகொலெனக்கூட்டுக.

எண்ணென்பது, கருதெனவுமாம். எண்ணியென்றுபாடமாயின், கருதியெ ன்க. (௫௰)

(௫௧.) நீர்மிகிற் சிறையு மில்லைத் தீமிகின்
மன்னுயிர் நிழற்று நிழலு மில்லை

* மோசிகீரனாரென்றும் பிரதிபேதமுண்டு.

வளிமிகின் வலியு மில்லை யொளிமிக்
கவற்றோ ரன்ன சினப்போர் வழுதி
தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன் போரெதிர்ந்து
கொண்டி வேண்டுவ னாயிற் கொள்கெனக்
கொடுத்த மன்னர் நடுக்கற் றனரே
யளியரோ வளியரவ னளியிழந் தோரே
நுண்பல சிதலை யரிதுமுயன் றெடுத்த
செம்புற் றீயல் போல
வொருபகல் வாழ்க்கைக் கலம்வரு வோரே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

பாண்டியன்கூடகாரத்துத்துஞ்சியமாறன்வழுதியை *ஐயூர்முடவனார்பாடியது.

இ - ள்.—நீர்மிகுமாயின், அதனைத்தாங்கும் அரணுமில்லை; நெருப்புமிகுமாயின், உலகத்துநிலைபெற்ற உயிர்களை நிழல்செய்யும் நிழலுமில்லை; காற்றுமிகுமாயின், அதனைப்பொறுக்கும் வலியுமில்லை; விளக்கமிக்கு அவற்றையொத்த சினம்பொருந்திய போரையுடையவழுதி குளிர்ந்ததமிழ்நாட்டை மூவேந்தர்க்கும்பொதுவென்றுகூறப் பொறானாய்ப் போரையேற்றுத் திறையை வேண்டுவனாயின், கொள்கவென்றுசொல்லி முன்னேகொடுத்தமன்னர் நடுக்கந்தீர்ந்தார்; கொடாராயின், யாவராலும் மிக இரங்கத்தக்கார், அவனது அருளையிழந்த அரசர்; நுண்ணிய பல கறையான் அரிதாக உழந்தெடுக்கப்பட்ட செம்புற்றினின்றும் புறப்பட்ட ஈயலைப்போல ஒருபகற்பொழுதின்கண்வாழும் உயிர்வாழ்க்கையின்பொருட்டுச் சுழல்வோர்.—எ - று.

வழுதி தமிழ்பொதுவெனப்பொறானாய்க் கொண்டிவேண்டுவனாயின், கொடுத்தமன்னர், நடுக்கற்றனர்; கொடாமையின் அவன் அளியிழந்தோர், ஒருபகல் வாழ்க்கைக்கு அலம்வருவோர்; ஆதலான், அவர் அளியரோ வளியரெனக்கூட்டி வினைமுடிவுசெய்க; அவன் அளியிழந்தோராகிய அலம்வருவோர் அளியரெனக் கூட்டியுரைப்பினுமமையும்.

அளியரோ அளியரென இரங்கற்குறிப்புத்தோன்ற அடுக்கிநின்றது. (௫௧)

(௫௨.) அணங்குடை நெடுங்கோட் டளையக முனைஇ
முணங்குநிமிர் வயமான் முழுவலி யொருத்த
லூனசை யுள்ளந் துரப்ப விரைகுறித்துத்
தான்வேண்டு மருங்கின் வேட்டெழுந் தாங்கு
வடபுல மன்னர் வாட வடல்குறித்
தின்னா வெம்போ ரியறேர் வழுதி
யிதுநீ கண்ணிய தாயி னிருநிலத்
தியார்கொ லளியர் தாமே யூர்தொறு

* ஐயூர்கிழாரென்றும் பிரதிபேதமுண்டு.

மீன்சுடு புகையிற் புலவுநாறு நெடுங்கொடி
வயலுழை மருதின் வாங்குசினை வலக்கும்
பெருநல் யாணரி னொரீஇ யினியே
கலிகெழு கடவுள் கந்தங் கைவிடப்
பலிகண் மாறிய பாழ்படு பொதியி
னரைமூ தாளர் நாயிடக் குழிந்த
வல்லி னல்லக நிறையப் பல்பொறிக்
கான வாரண மீனுங்
காடாகி விளியு நாடுடை யோரே.

திணையும் துறையும் அவை.

அவனை *மருதனிளநாகனார் பாடியது.

இ - ள்.—தெய்வங்களையுடைத்தாகிய நெடிய சிகரங்களையுடைய மலையின்கண்ணே முழையின்கண் துயிலைவெறுத்து மூரிநிமிர்ந்த புலியாகிய நிரம்பியவலியையுடைய ஏற்றை ஊனைவிரும்பிய உள்ளம்செலுத்துதலான் அவ்விரையைக்கருதித் தான் வேண்டியவிடத்தே விரும்பிச்சென்றாற்போல வடநாட்டுவேந்தர்வாட அவரைக் கொல்லுதலைக்கருதி இன்னாத வெய்ய போரைச்செய்யும் இயற்றப்பட்ட தேரினையுடைய வழுதி, நீகருதியது இப்போராயின், பெரிய உலகத்தின்கண் யாரோ அளிக்கத்தக்கார்தாம்? ஊர்தோறும் மீன்சுடுகின்றபுகையினது புலால் நாறும் நெடியஒழுங்கு வயலிடத்து மருதினது வளைந்தகோட்டைச்சூழும் பெரிய நல்ல புதுவருவாயினீங்கி இப்பொழுது முழவுமுதலாகிய ஒலிபொருந்திய தெய்வங்கள் தூணத்தைக்கைவிடும்பரிசு பலி இடத்தின்மாறிய பாழ்பட்ட அம்பலத்தின்கண் முற்காலத்து நரையையுடையமுதியோர் சூதாடுங்கருவியை இடுதலாற் குழிந்த அச்சூதுகருவியினது நல்லமனையாகிய இடம்நிறையப் பலபொறியையுடைய காட்டுக்கோழி முட்டையிடும் காடாய்க்கெடும் நாடுடையோர்.—எ - று.

கலி - புகழுமரவமுமாம்.

வழுதி, அடல்குறித்து நீகருதியது இதுவாயின், விளியுநாடுடையோர்தாம் யார்கொல் அளியரெனக்கூட்டுக. (௫௨)

(௫௩.) முதிர்வா ரிப்பி முத்த வார்மணற்
கதிர்விடு மணியிற் கண்பொரு மாடத்
திலங்குவளை மகளிர் தெற்றி யாடும்
விளங்குசீர் விளங்கில் விழுமங் கொன்ற
களங்கொள் யானைக் கடுமான் பொறைய
விரிப்பி னகலுந் தொகுப்பி னெஞ்சு
மம்மர் நெஞ்சத் †தெம்மனோர்க் கொருதலை

* மருதினிளநாகனாரென்றும் பிரதிபேதமுண்டு.

† எமக்கோவொருதலையென்றும் பாடம்.

கைம்முற் றலநின் புகழே யென்று
மொளியோர் பிறந்தவிம் மலர்தலை யுலகத்து
வாழே மென்றலு மரிதே தாழாது
செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபில
னின்றுள னாயி னன்றும னென்றநின்
னாடுகொள் வரிசைக் *கொப்பப்
பாடுவன் மன்னாற் பகைவரைக் கடப்பே.

திணையும் துறையும் அவை.

சேரமான்மாந்தரஞ்சேரலிரும்பொறையைப் பொருந்திலிளங்கீரனார் பாடியது.

இ - ள்.—முற்றிநீண்டசிப்பிக்கண் முத்துப்போலும் வெளிய ஒழுங்குபட்ட மணற்கண்ணே, ஒளிவிடுகின்ற மணிகளாற் கண்ணைப்பொருகின்ற மாடத்திடத்து விளங்கிய வளையையுடையமகளிர் வேதிகைக்கண்ணேவிளையாடும் விளங்கியசீர்மையையுடைய விளங்கிற்குப் பகைவரான்வந்த இடும்பையைத்தீர்த்த போர்க்களத்தைத் தனதாக்கிக்கொண்ட யானையையும் விரைந்த குதிரையையுமுடைய பொறைய, விரித்துச்சொல்லிற் பரக்கும்; தொகுத்துச்சொல்லிற் பொருள் ஒழிவுபடும்; ஆதலான், மயக்கம்பொருந்திய நெஞ்சையுடைய எங்களுக்கு ஒருதலையாகமுடியா, நினதுபுகழ், எந்நாளும்; கல்வியால்விளக்கமுடையோர்பிறந்த இப் பெரிய இடத்தையுடைய உலகத்தின்கண்ணே வாழேமென்றிருத்தலும் கூடாது; விரைய, பல பொருளையும் அடக்கிய செய்யுளைச்செய்யும் செவ்விய நாவினையும் மிக்கேள்வியையும் விளங்கியபுகழையுமுடைய கபிலன் இன்று உளனாகப்பெறின், நன்று; அது பெற்றிலேனென்றுசொல்லிய நினது வென்றிகொண்ட சிறப்பிற்குப்பொருந்தப் பாடுவேன், நீ பகைவரைவென்றவெற்றியை.—எ - று.

மாடத்துமகளிர் மணலிடத்துத் தெற்றிக்கண் ஆடும் விளங்கிலென்க. தெற்றியென்பதனைக் கைகோத்தாடும் குரவையென்பாருமுளர்.

பொறைய, கபிலன் இன்றுளனாயின், நன்றுமன்னென்றநின் ஆடுகொள்வரிசைக்கொப்பப் பகைவரைக்கடப்பை யான் தாழாதுபாடுவேன்; நின்புகழ் விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும்; ஆதலான், எமக்குக் கைம்முற்றல; ஒளியோர்பிறந்த இம்மலர்தலையுலகத்து வாழேமென்றலும் அரிதெனமாறிக்கூட்டுக.

தாழாதுசெய்யுட்செய் செந்நாவென இயைப்பினுமமையும். 'ஒளியோர்' என்றது, கபிலன்முதலாயினோரை. வாழேமென்றலும் அரிதென்றகருத்து, பாடாதிருத்தலும் அரிதென்றதாக்கி, யாமும் வல்லபடி பாடிப்போதுவேமென்றதாகக் கொள்க. சிறந்தசெய்யுளென்பதூஉம் பாடம். நன்றுமனென்பது, கழிவின்கண் வந்தது. பாடுவன்மன்னாலென்றவழி, மன்னும், ஆலும் - அசைநிலை. [பாடுவன் மன்னென்பதனை அல்லீற்றுத்தனித்தன்மைவினையாக்கி, நின்வரிசைக்கொப்ப, நின் பகைவரைக்கடப்பைப் பாடுவேன்; அதனால், விரிப்பின் அகலும்; தொகுப்பின்

---

* ஏற்பவென்றும் பாடம்.

எஞ்சும்; மம்மர்நெஞ்சத்து எமக்கு நின்புகழ் கைம்முற்றலவென அவன்புகழை மேம்படுத்துக்கூறியவாறாகவுரைப்பினுமமையும். இப்பொருட்குப் பாடுவன்மனெ ன்றதனை ஒழியிசையாகக்கொள்க.] செய்யுட்செய்தசெந்நாவென்றும் பாடம். (௫௩)

(௫௪.) எங்கோ னிருந்த கம்பலை மூதூ
ருடையோர் போல விடையின்று குறுகிச்
செம்ம லுளவை யண்ணாந்து புகுத
லெம்மன வாழ்க்கை யிரவலர்க் கெளிதே
யிரவலர்க் கெண்மை யல்லது புரவெதிர்ந்து
வான நாண வரையாது சென்றோர்க்
கானா தீயுங் கவிகை வண்மைக்
கடுமான் கோதை துப்பெதிர்ந் தெழுந்த
நெடுமொழி மன்னர் நினைக்குங் காலைப்
பாசிலைத் தொடுத்த வுவலைக் கண்ணி
மாசு ணுடுக்கை மடிவா யிடையன்
சிறுதலை யாயமொடு குறுகல் செல்லாப்
புலிதுஞ்சு வியன்புலத் தற்றே
வலிதுஞ்சு தடக்கை யவனுடை நாடே.

திணையும் துறையும் அவை.

சேரமான்குட்டுவன்கோதையைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன்மதுரைக் குமரன் பாடியது.

இ - ள்.—எம்முடைய இறைவனிருந்த ஓசையையுடைய பழைய ஊரிடத்து அதனையுடையவர்களைப்போலக் காலம்பாராதே அணுகித் தலைமையையுடைய நாளோலக்கத்தின்கண்ணே தலையெடுத்துச் செம்மாந்து சென்றுபுகுதல் எம்மைப் போலும் வாழ்க்கையையுடைய இரப்போருக்கு எளிது; இங்ஙனம் இரப்போர்க்கு எளிதாவதல்லது, பாதுகாத்தலை ஏற்றுக்கொண்டு மழைநாணும்படி எப்பொருளை யும் வரையாது தன்பாற்சென்றவர்கட்கு இடக்கவிந்தகையால் அமையாதுகொடுக் கும் வண்மையையுடைய கடுமான்கோதையது வலியோடுமாறுபட்டெழுந்திருந்த வஞ்சினங்கூறியவேந்தர் கருதுங்காலத்து, பசிய இலையால் தொடுக்கப்பட்ட தழைக் கண்ணியையும் மாசுண்ட உடையையும் மடித்தவாயையுமுடைய இடையன் சிறிய தலையையுடைய ஆட்டினத்தினோடுகூட அணுகல்செல்லாத புலிதங்கும் அகன்ற நிலத்தையொக்கும், வலிதங்கிய பெரியகையையுடையவனுடையநாடு.—எ - று.

எங்கோனிருந்தமூதூர்ப்புகுதல், இரவலர்க்கெளிது; அவனுடையநாடு, மன் னர்நினைக்குங்காலை, இடையன் சிறுதலையாயமொடு குறுகல்செல்லாப் புலிதுஞ்சு வியன்புலத்தற்றெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

மன்னர்க்கு இடையனும், அவர்படைக்குச் சிறுதலை ஆயமும், கோதைநாட் டிற்குப் புலிதுஞ்சுவியன்புலமும் உவமையாகக்கொள்க. உவலைக்கண்ணியென்றத னைப் பெயராகக்கொள்க. புலியுடைவியன்புலமென்பதூஉம் பாடம். (௫௪)

(ருரு.) ஓங்குமலைப் பெருவிற் பாம்பு ஞாண்கொளீஇ
யொருகணை கொண்டு மூவெயி லுடற்றிப்
பெருவிற லமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கு மொருகண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற
கடுஞ்சினத்த கொல்களிறுங்
கதழ்பரிய கலிமாவு
நெடுங்கொடிய நிமிர்தேரு
நெஞ்சுடைய புகன்மறவருமென
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட
வறநெறி முதற்றே யரசின் கொற்றம்
அதனால், நமரெனக் கோல்கோடாது
பிறரெனக் குணங்கொல்லாது
ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையுந்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையு மூன்று
முடையை யாகி யில்லோர் கையற
நீ, நீடு வாழிய நெடுந்தகை தாழ்நீர்
வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தி
னெடுவே ணிலைஇய காமர் வியன்றுறைக்
கடுவளி தொகுப்ப வீண்டிய
வடுவா ழெக்கர் மணலினும் பலவே.

திணை - பாடாண்டிணை; துறை - செவியறிவுறூஉ.

பாண்டியன் இலவந்திப்பள்ளித்துஞ்சிய நன்மாறனை மதுரை மருதனிளநாகனார் பாடியது.

இ - ள்.—உயர்ந்தமலையாகிய பெரியவில்லைப் பாம்பாகிய நாணைக்கொளுத்தி ஒப்பில்லாததோரம்பைவாங்கி மூன்றுமதிலையுமெய்து பெரியவலியையுடைய தேவர்கட்கு வெற்றியைக்கொடுத்த கரியநிறஞ்சேர்ந்ததிருமிடற்றையுடைய இறைவனது அழகிய திருமுடிப்பக்கத்து அணிந்த பிறைசேர்ந்த திருநெற்றிக்கண்ணே விளங்கும் ஒருதிருநயனம்போல மூவேந்தருள்ளும் மேம்பட்ட பூந்தாரையுடைய மாற, கடிய சினத்தையுடையவாகிய கொல்களிறும் விரைந்த செலவையுடையவாகிய மனஞ்செருக்கிய குதிரையும் நெடிய கொடியையுடையவாகிய உயர்ந்த தேரும் நெஞ்சுவலியையுடைய போரைவிரும்பும் மறவருமென நான்குபடையுங் கூடமாட்சிமைப்பட்டதாயினும் மாட்சிமைப்பட்ட அறநெறியை முதலாகவுடைத்து, வேந்தரதுவெற்றி; அதனால், இவர் நம்முடையரென அவர்செய்தகொடுந்தொழிலைப்பொறுத்துக் கோல்வளையாது, இவர் நமக்கு அயலோரென்று அவர்

நற்குணங்களைக்கெடாது, ஞாயிற்றைப்போன்ற வெய்யதிறலையுடைய வீரமும், திங்களைப்போன்ற குளிர்ந்த பெரியமென்மையும், மழையைப்போன்றவண்மையும் என்றமூன்றையுமுடையையாகி இல்லாதோர் இல்லையாக நீ நெடுங்காலம் வாழ்வாயாக, நெடுந்தகாய், தாழ்ந்த நீரையுடைய கடலின்கண் வெளிய தலையையுடைய திரையலைக்கும் *செந்திலிடத்து நெடிய முருகவேள் நிலைபெற்ற அழகிய அகன்ற துறைக்கண் பெருங்காற்றுத் திரட்டுதலால் குவிந்த வடுவெழுந்திய எக்கர்மணலினும் பலகாலம்.—எ - று.

'குணம்கொல்லாது' என்பதற்கு முறைமையழிய நீ வேண்டியவாறுசெய்யாதெனினுமாம்.

பூந்தார்மாற, நெடுந்தகாய், நான்குடன்மாண்டதாயினும், அரசின்கொற்றம் அறநெறிமுதற்று; அதனால், கோல்கோடாது, குணங்கொல்லாது, ஆண்மையும் சாயலும் வண்மையும் உடையையாகி இல்லோர்கையற நீ மணலினும் பலகாலம் நீடுவாழியவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க. (ருரு)

(ருசு.) ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனுங்
கடல்வளர் புரிவளை புரையு மேனி
யடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்
†மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனு
மணிமயி லுயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தி யொண்செய் யோனுமென
ஞாலங் காக்குங் கால முன்பிற்
றோலா நல்லிசை நால்வ ருள்ளுங்
கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே யிகழுந ரடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலி
னாங்காங் கவரவ ரொத்தலின் யாங்கு
மரியவு முளவோ நினக்கே யதனா
லிரவலர்க் கருங்கல மருகா தீயா
யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளு
மொண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி யோங்குவாண் மாற

* செந்தில் - முருகக்கடவுளுடைய திருப்பதிகளுள் ஒன்று; அது பாண்டிநாட்டுள்ளது; திருச்செந்தூரென்று வழங்குகின்றது.

† மண்ணியவென்றும் பாடம்.

வங்கண் விசும்பி னாரிரு ளகற்றும்
வெங்கதிர்ச் செல்வன் போலவுங் குடதிசைத்
தண்கதிர் மதியம் போலவு
*உறு நின்று நிலைஇய ருலகமோ டுடனே.

திணை - அது; துறை - பூவைநிலை.

அவனை மதுரைக்கணக்காயனார்மகனார் நக்கீரனார் பாடியது.

இ - ள்.—ஆனேற்றை வெற்றியாகவுயர்த்த அழல்போலும் விளங்கியசடையினையும் விலக்குதற்கரிய மழுப்படையையுமுடைய நீலமணிபோலுந் திருமிடற்றையுடையோனும், கடற்கண்ணே வளரும் புரிந்த சங்கையொக்கும் திருநிறத்தையுடைய கொலையைவிரும்பும் கலப்பையையும் பனைக்கொடியையுமுடையோனும், கழுவப்பட்ட அழகிய நீலமணிபோலும் திருமேனியையும் வானுறவோங்கிய கருடக்கொடியையுமுடைய வென்றியைவிரும்புவோனும், நீலமணிபோலும் நிறத்தையுடைய மயிற்கொடியையெடுத்த மாறுதவெற்றியையுடைய அம்மயிலாகிய ஊர்தியையுடைய ஒள்ளியசெய்யோனுமென்றுசொல்லப்பட்ட உலகங்காக்கும் முடிவுகாலத்தைச்செய்யும் வலியினையும் தோல்வியில்லாத நல்லபுகழினையுமுடைய நால்வருள்ளும், விலக்குதற்கரியவெகுட்சியாற் கூற்றத்தையொப்பை; வலியால் வாலியோனையொப்பை; புகழாற் பகைவரைக்கொல்லும் மாயோனையொப்பை; கருதியதுமுடித்தலான் முருகனையொப்பை; அப்படி அப்படி அவரை அவரையொத்தலான், எவ்விடத்தும் அரியனவுமுளவோ நினக்கு? ஆதலால், இரப்போர்க்குப் பெறுதற்கரிய அணிகலங்களைப் பெரிதும்வழங்கி, யவனர் நல்லகுப்பியிற்கொடுவரப்பட்ட குளிர்ந்த நறுநாற்றத்தையுடையதேறலைப் பொன்னாற்செய்யப்பட்ட புனைந்த கலத்தின்கண்ணேயேந்தி நாடோறும் ஒள்ளிய வளையையுடைய மகளிரூட்ட மகிழ்ச்சிமிக்கு இனிதாக நடப்பாயாக; வென்றியானுயர்ந்த வாளையுடைய மாற, அழகிய இடத்தையுடைய வானத்தின்கண்ணே நிறைந்த இருளைப்போக்கும் வெய்ய கதிரையுடைய ஞாயிற்றையொப்பவும் மேலைத்திக்கிற்றோன்றும் குளிர்ந்த கதிரையுடைய பிறையைப்போலவும் இவ்வுலகத்தோடுகூட நின்றுநிலைபெறுவாயாக.—எ - று.

*பிணிமுகம் - பிள்ளையாரேறும் யானையென்றும் சொல்லுப. காலமுன்பென்றது, தம்மையெதிர்ந்தோர்க்குத் தாம் நினைந்தபொழுதே முடிவுகாலத்தைச்செய்யும்வலியை. மணிமிடற்றோனைக் கூற்றமென்றது, அழித்தற்றொழிலையுடைமையான். வாலியோனென்றது, நம்பிமூத்தபிரானை. இகழுநரடுநனென்றது, மாயோனை. ஆரிருளகற்றும் வெங்கதிர்ச்செல்வனென்றது, எழுகின்ற ஞாயிற்றை. மதி - இளம்பிறை.

இது, தேவரோடுவமித்தமையாற் பூவைநிலையாயிற்று. (டுசு)

---

* பிணிமுகம் - முருகக்கடவுளுக்குரிய யானையென்பதை, [திருமுருகாற்றுப்படை] "ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி" என்பதன் உரையாலும், [பரிபாடல்] "சேயுயர் பிணிமுக மூர்ந்தம ருழக்கி" என்பதனுரையானும் உணர்க.

(டுஎ.) வல்லா ராயினும் வல்லுந ராயினும்
புகழ்தலுற் றோர்க்கு மாயோ னன்ன
வுரைசால் சிறப்பிற் புகழ்சான் மாற
நின்னொன்று கூறுவ துடையே னென்னெனிற்
பிறர்நாடு கொள்ளுங் காலை யவர்நாட்
டிறங்குகதிர்க் கழனிநின் னிளையருங் கவர்க
நனந்தலைப் பேரூ ரெரியு நக்க
மின்னுநிமிர்ந் தன்னநின் னொளிறிலங்கு நெடுவே
லொன்னார்ச் செகுப்பினுஞ் செகுப்ப வென்னதூஉங்
கடிமரந் தடிதல் லோம்புநின்
னெடுநல் யானைக்குக் கந்தாற் றாவே.

திணை - வஞ்சி ; துறை - *துணைவஞ்சி.

அவனைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

இ - ள்.—யாதொரு கல்வியை மாட்டாராயினும் அதனை வல்லாராயினும் புகழ்தலைப்பொருந்தியவர்கட்கு மாயோனையொத்த சொல்லுதலமைந்த தலைமையையுடைய புகழமைந்தமாற, நினது ஒருகாரியஞ்சொல்லுதலுடையேன் ; அது யாதெனின், நின்பகைவர்நாட்டைக் கொள்ளுங்காலத்து அவர்நாட்டின்கண் வளைந்தகதிரையுடையவயலை நின்னுடையவீரரும் கொள்ளைகொள்க; அகலிய இடத்தையுடைய பெரிய ஊரைத் தீயுஞ்சுடுக; மின் நிமிர்ந்தாற்போன்ற நினது பாடஞ்செய்கின்ற விளங்கிய நெடியவேல் பகைவரை அழிக்கினும் அழிக்க; யாவதும் காவன்மரத்தைவெட்டுதலைப் பாதுகாப்பாயாக, நின்னுடைய நெடிய நல்லயானைகட்கு முன்பு நட்டுநிற்கின்ற தறிகள் ஆற்றமாட்டாவாதலான்.—எ - று.

அவை இளமரமாதலால், நின் நெடுநல்யானைக்குத் தறியாதற்குப் பொறையாற்றாவென்று உரைப்பாருமுளர். வல்லவர்க்கும் மாட்டார்க்கும் ஒப்பப் புகழ்ந்து முடியவொண்ணுமையான், மாயோனன்னவென்றார் ; அன்றி, அவ்விருவர்க்கும் ஒப்ப அருள்பண்ணுதலின், அவ்வாறு கூறிற்றெனினுமமையும்

மாற, நின்யானைக்குக் கந்து ஆற்றாவாதலால், கடிமரந்தடிதலோம்பெனக் கூட்டுக.

நின்யானைக்குக் கந்து ஆற்றாவாதலாற் கடிமரந்தடிதலோம்பெனக்கூறுவான் போற் சந்துசெய்விக்கும் நினைவாற் கூறினமையின், இது துணைவஞ்சியாயிற்று. ()

(டுஅ.) நீயே, தண்புனற் காவிரிக் கிழவனை யிவனே
†முழுமுத றொலைந்த கோளி யாலத்துக்

---

* இச்செய்யுள் கொற்றவள்ளையென்பர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், ௩௬ - ம் சூத்திரவுரை].

† இப்படியே "தாங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன, வோங்குகுல நையவத னுட்பிறந்த வீரர், தாங்கல்கட னாகும்" என்று சீவகசிந்தாமணியிலும் [காந்தருவதத்தையாரிலம்பகம் - ௬], "சிதலை தினப்பட்ட வால மரத்தை,

கொழுநிழ னெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல்செல் லாது
நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ
யிளைய தாயினுங் கிளையரா வெறியு
மருநரை யுருமிற் பொருநரைப் பொறாச்
செருமாண் பஞ்சவ ரேறே நீயே
யறந்துஞ் சுறந்தைப் பொருநனை யிவனே
நெல்லு நீரு மெல்லார்க்கு *மெளிய
வரைய சாந்தமுந் திரைய முத்தமு
மிமிழ்குரன் முரச மூன்றுட னாளுந்
தமிழ்கெழு கூடற் றண்கோல் வேந்தே
பானிற வுருவிற் பனைக்கொடி யோனு
நீனிற வுருவி னேமி யோனுமென்
றிருபெருந் தெய்வமு முடனின் றாஅங்
குருகெழு தோற்றமோ டுட்குவர விளங்கி
யின்னீ ராகலி னினியவு முளவோ
வின்னுங் கேண்மினும் மிசைவா ழியவே
யொருவீ ரொருவீர்க் காற்றுதி ரிருவீரு
முடனிலை திரியீ ராயி னிமிழ்திரைப்
பௌவ முடுத்தவிப் பயங்கெழு மாநிலங்
கையகப் படுவது பொய்யா காதே
அதனால், நல்ல போலவு நயவ போலவுந்
தொல்லோர் சென்ற நெறிய போலவுங்
காத னெஞ்சினும் மிடைபுகற் கலமரு
மேதின் மாக்கள் பொதுமொழி கொள்ளா
தின்றே போல்கநும் புணர்ச்சி வென்றுவென்
றடுகளத் துயர்கநும் வேலே கொடுவரிக்
கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி
நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த
குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே.

திணை - பாடாண்டிணை; துறை - உடனிலை.

சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்தாரைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

---

மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக், குதலைமை தந்தைகட் டோன்றிற்றான் பெற்றீ, புதல்வன் மறைப்பக் கெடும்." என்று நாலடியாரிலும் [தாளாண்மை, எ] கூறியிருத்தல்காண்க.

* எளியவெனவென்றும் பாடம்.

இ - ள்.—நீ, குளிர்ந்தநீரையுடைய காவிரிக்குத்தலைவன்; இவன், பரிய அடிமாய்ந்த கோளியாகிய ஆலத்துக் கொழுவியநிழலையுடைய நெடியகொம்பை அதன் வீழ் தாங்கினாற்போலத் தனக்குமுன்னுள்ளோர் இறந்தாராகத் தான் தளராது நல்லபுகழையுடைய பழையகுடியைத் தடுமாற்றமற அணைத்துத் தான்சிறிதேயாயினும் கிளையுடனே பாம்பையெறியும் பொறுத்தற்கரிய வெள்ளிய உருமேறுபோல இளமைக்காலத்தும் பகைவரைக் காணப்பொறாத போரின்கண்மாட்சிமைப்பட்ட பாண்டியர்குடியுள் ஏறுபோல்வான்; நீ அறந்தங்கும் உறையூரின்கண் அரசன்; இவன், நெல்லும் நீரும் யாவர்க்கும் எளியவெனக்கருதி அவைபோலாது யாவர்க்கும் பெறுதற்கரிய பொதியின்மலையிடத்துச் சந்தனமும் கடலிடத்து முத்துமென இவற்றை ஒலிக்கும் குரலையுடைய முரசம்மூன்றுடனேயாளும் தமிழ்பொருந்திய மதுரைக்கட் குளிர்ந்தசெங்கோலையுடையவேந்தன்; நீர், பால்போலும் நிறத்தையுடைய பனைக்கொடியையுடையோனும் நீலநிறம்போலும் திருமேனியையுடைய ஆழியையுடையோனுமென்றுசொல்லப்படும் இரண்டு பெரியதெய்வமும் ஒருங்கு நின்றாற்போல உட்குப்பொருந்திய காட்சியோடு அச்சம்வரவிளங்கி இத்தன்மையிராகுதலின், இதனினும் இனியபொருள் உளவோ? இன்னமும் கேளீர்; நும்முடையபுகழ் நெடுங்காலம் செல்வதாக; நும்முள் ஒருவீர் ஒருவீர்க்கு உதவுவீராக; நீங்களிருவீரும் கூடிநிற்கின்ற இந்நிலையின் வேறுபடீராயின் ஒலிக்கும்திரையையுடைய கடல்சூழ்ந்த இப்பயன்பொருந்திய உலகங்கள் கையகத்தேயகப்படுதல் பொய்யாகாது; ஆதலால், நல்லனபோலேயிருக்கவும் நியாயத்தையுடையனபோலேயிருக்கவும் பழையோரொழுகிய ஒழுக்கமுடையனபோலேயிருக்கவும் அன்புபொருந்திய நெஞ்சையுடைய நும் இடையேபுகுந்து நும்மைப்பிரித்தற்கு அலமரும் அயலோருடைய சிறப்பில்லாதமொழியைக் கேளாது இன்றுபோல்க, நுமது கூட்டம்; வென்றுவென்று கொலைக்களத்தின்கண் மேம்படுக, நும்முடைவேல்; வளைந்தவரியையுடைய புலிவடிவாகச்செய்யப்பட்ட சேய்மைக்கண்விளங்குகின்ற தோண்டிய இலாஞ்சனையைப் பெரியநீரின்கண்வாழும் கயலுடனேபொறித்த சிகரங்களையுடையவாக, பிறருடைய குன்றையுடைய நாடுகள்.—எ - று.

குன்றுகெழுநாடென்றதாயினும், கருதியது பிறர்நாட்டுக்குன்றுகளென்றதாகக் கொள்க. கோளியென்றது, பூவாதுகாய்க்குமரம். தமிழ்இப் பொருவென இயையும். முரசமூன்றாவன: வீரமுரசும், நியாயமுரசும், தியாகமுரசும். நெல்லும் நீரும் எல்லார்க்குமெளியவென மூற்றாகவுரைப்பாருமுளர். தொடுபொறி - பெயர் மாத்திரையாய்நின்றது.

இருவரரசர் ஒருங்கிருந்தாரைப்பாடினமையின், இஃது உடனிலையாயிற்று. ஒருவீர் ஒருவீர்க்கு உதவியாய் வலியையுடையீராய நீங்கள் இருவீருமென்பாருமுளர். மணமுரசுடனே ஏனை இரண்டுமுரசென்பாருமுளர். (௫௮)

(௫௯.) ஆரந் தாழ்ந்த வணிகிளர் மார்பிற்
றாடோய் தடக்கைத் தகைமாண் வழுதி
வல்லை மன்ற நீநயந் தளித்த
றேற்றாய் பெரும பொய்யே யென்றுங்
௫ காய்சினந் தவிராது கடலூர் பெழுதரு

ஞாயி றனையைநின் பகைவர்க்குத்
திங்க ளனையை யெம்ம னோர்க்கே.

திணை - அது; துறை - பூவைநிலை.

பாண்டியன் சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறனை மதுரைக்கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் பாடியது.

இ - ள்.—ஆரந்தாழ்ந்த அழகுமிக்கமார்பினையும் முழந்தாளிலேதோய்ந்த பெரியகையினையுமுடைய அழகுமாட்சிமைப்பட்டவழுதி, நீ யாவர்க்கும் உவந்து அருளைப்பண்ணுதலைத் தெளிவாக வல்லை; மெய்யாக யாவரிடத்தும் தெளியாய், பெரும, பொய்யை; எந்நாளும், சுடும்வெம்மையொழியாது கடலிடத்தே கிளர்ந்தெழுகின்ற ஞாயிற்றையொப்பை, நின்பகைவர்க்கு; எம்போல்வார்க்குத் திங்களையொப்பை.—எ - று.

தேற்றுயென்றது, தேறுயெனத் தன்வினையாய்நின்றது; தேற்றுயென்பதற்குப் பொய்தெளிக்கப்படாயெனினுமமையும்.

ஞாயிற்றோடும் திங்களோடுமுவமித்தமையால், இது பூவைநிலையாயிற்று.(௫௯)

(௬௦.) முந்நீர் நாப்பட் டிமிற்சுடர் போலச்
செம்மீ னிமைக்கு மாக விசும்பி
னுச்சி நின்ற வுவவுமதி கண்டு
கட்சி மஞ்ஞையிற் சுரமுதல் சேர்ந்த
சில்வளை விறலியும் யானும் வல்விரைந்து
தொழுதன மல்லமோ பலவே கானற்
கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கு
மாரைச் சாகாட் டாழ்ச்சி போக்கு
முரனுடை நோன்பகட் டன்ன வெங்கோன்
வலனிரங்கு முரசின் வாய்வாள் வளவன்
வெயின்மறைக் கொண்ட வுருகெழு சிறப்பின்
மாலை வெண்குடை யொக்குமா லெனவே.

திணை - அது; துறை - குடைமங்கலம்.

சோழன் குராப்பள்ளித்துஞ்சியபெருந்திருமாவளவனை உறையூர்மருத்துவன் தாமோதரனார் பாடியது.

இ - ள்.—கடனடுவேதோன்றுகின்ற திமிலின்கண் இடப்பட்ட விளக்குப்போலச் செவ்வாய்மீன்விளங்கும் மாகமாகிய விசும்பினது உச்சிக்கண்ணேநின்ற உவாநாளின் மதியத்தைக்கண்டு காட்டுள்வாழும் மயிலைப்போலச் சுரத்திடைப் பொருந்திய சிலவாகிய வளையையுடையவிறலியும் யானும் கடிதின் விரைந்து தொழுதேமல்லேமோ? பலகால்; கடற்கரையிடத்துக் கழியினீரான்விளைந்த உப்பை முகந்துகொண்டு மலைநாட்டைநோக்கிச்செல்கின்ற ஆரையுடைய சகடையினது குழிப்பாய்தலைத்தீர்த்துச்செலுத்தும் வலியையுடைய பாரம்பொறுக்கும் பகட்டையொக்கும் எங்கோன், வென்றியாகமுழங்கும் முரசினையும் தப்பாத வாளி

னையுமுடைய வளவனது வெயிலைமறைத்தற்கெடுத்த உட்குப்பொருந்திய தலைமையையுடைய தாமம்பொருந்திய வெண்கொற்றக்குடையை ஒக்குமெனக்கீருதி.— எ - று.

செம்மீனிமைக்கும் விசும்பினுச்சிநின்றமதியை உவமித்தமையின், இது தலைப்பெயலுவமையாய்நின்றது. கானல் - கடற்கரை. வெயிலென்றது, பகைவரானும் கொடியோரானும்வரும் வெம்மையை. இராச்சியபாரத்தைப் பொறுத்து நடத்துமாறுநோக்கி நோன்பகட்டோடு உவமித்தமையின், இறப்ப இழிந்த ஆனந்தவுவமை அன்முயிற்று.

உவாமதியைக்கண்டு வளவன்வெண்குடையையொக்குமென விறலியும் யானும் பலகால் தொழுதேமல்லேமோவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

வளவன்வெண்குடையைக்காட்டித் தொழுமினென்றார்க்கு நிறைமதிதொழப்படாதாயினும், குடையோடு ஒப்புமைகண்டு தொழுதயாம் குடைதன்னைக்கண்டால் தொழுதல் சொல்லவேண்டுமோவென அதன்சிறப்புக் கூறியவாறு.

செம்மீன் - திருவாதிரையுமாம். (சுo)

(சுக.) கொண்டைக் கூழைத் தண்டழைக் கடைசியர்
சிறுமா ணெய்த லாம்பலொடு கட்கு
மலங்குமிளிர் செறுவிற் றளம்புதடிந் திட்ட
பழன வாளைப் பருஉக்கட் டுணியல்
புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை யாக
விலாப்புடை மருங்கு விசிப்ப மாந்தி
நீடுகதிர்க் கழனிச் சூடுதடு மாறும்
வன்கை வினைஞர் புன்றலைச் சிறாஅர்
தெங்குபடு வியன்பழ *முனையிற் றந்தையர்
குறைக்க ணெடும்போ ரேறி விசைத்தெழுந்து
செழுங்கோட் பெண்ணைப் பழந்தொட முயலும்
வைகல் யாணர் நன்னாட்டுப் பொருந
னெஃகுவிளங்கு தடக்கை யியறேர்ச் சென்னி
சிலைத்தா ரகல மலைக்குந ருளரெனிற்
றமமறி குவர்தமக் குறுதி யாமவ
னெழுவுறழ் திணிதோள் வழுவின்று மலைந்தோர்
வாழக் கண்டன்று மிலமே தாழாது
திருந்தடி பொருந்த வல்லோர்
வருந்தக் காண்ட லதனினு மிலமே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

சோழன் †இலவந்திப்பள்ளித்துஞ்சியநலங்கிள்ளிசேட்சென்னியைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன்மதுரைக்குமரனார் பாடியது.

---

* முனையினென்றும் பாடம். † காலேகப்பள்ளியென்றும் பாடம்.

இ - ள்.—கொண்டையாகியமயிரையும் குளிர்ந்ததழையையுமுடையகடைசியர் சிறிய மாட்சிமையுடையநெய்தலை ஆம்பலுடனேகளையும் மலங்குபிறழ்கின்ற செய்யின்கண்ணே தளம்புதுணித்திடப்பட்ட பொய்கையிடத்துவாளையினது பரிய இடத்தையுடையதடியைப் புதியநெல்லினது வெள்ளியசோற்றிற்கு மேலீடாகக் கொண்டு விலாப்புடைப்பக்கம்விம்மவுண்டு நெடியகதிரையுடைய கழனியினிடத்துச் சூட்டை இடுமிடமறியாது தடுமாறும் வலிய கையையுடைய உழவர்புல்லிய தலையையுடையசிறுவர் தெங்குதரும் பெரிய பழத்தைவெறுப்பின், தந்தையருடைய தலைகுவியாமல் இடப்பட்ட குறைந்த இடத்தையுடைய நெடியபோரின்கண்ணேயேறி உகைத்தெழுந்து வளவிய கோட்புக்க பனையினதுபழத்தைத் தொடுதற்கு முயலும் நாடோறும் புதுவருவாயையுடைய நல்லநாட்டிற்கு வேந்தனாகிய வேல் விளங்கும்பெரியகையினையும் இயற்றப்பட்டதேரினையுமுடைய சென்னியது இந் திரவிற்போலும் மாலையையுடைய மார்போடும் மாறுபடுவோருளராயின், தாமறிகுவர், தமக்குற்றகாரியம்; யாங்கள், அவனுடைய கணையமரத்தோடு மாறுபடும் திணிந்ததோளைத் தப்பின்றாக மாறுபட்டோர் வாழக்கண்டதுமிலமே; விரைய அவனது திருந்திய அடியை அடையவல்லோர் வருந்தக்காண்டல் அவ்வாழக்கண்டதனினுமிலம்.—எ - று.

தளம்பென்றது, சேறுகுத்தியை. வழுவின்றுமலைதலாவது, வெளிப்படநின்று மலைதல்.

(௬௧)

(௬௨.) வருதார் தாங்கி யமர்மிகல் யாவது
பொருதாண் டொழிந்த மைந்தர்புண் டொட்டுக்
குருதிச் செங்கைக் கூந்த நீட்டி
நிறங்கிள ருருவிற் பேஎய்ப் பெண்டி
ரெடுத்தெறி யனந்தற் பறைச்சீர் தூங்கப்
பருந்தருந் துற்ற தானையொடு செருமுனிந்
தறத்தின் மண்டிய *மறப்போர் வேந்தர்
தாமாய்ந் தனரே குடைதுளங் கினவே
யுரைசால் சிறப்பின் முரசொழிந் தனவே
பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞில
மிடங்கெட வீண்டிய வியன்கட் பாசறைக்
களங்கொளற் குரியோ ரின்றித் தெறுவர
வுடன்வீழ்ந் தன்றா லமரே பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னோரு மாற்ற
வரும்பெற லுலக நிறைய
விருந்துபெற் றனராற் பொலிகநும் புகழே.

* விறற்போரென்றும், வயப்போரென்றும் பாடம்.

திணை - தும்பை; துறை - தொகைநிலை.

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன்வேற்பஃறடக்கைப்பெரு விறற்கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருதுவீழ்ந்தாரைக் கழாத்தலையார்பாடியது.

இ - ள்.—வருகின்ற தூசிப்படையைத்தடுத்துப் போரின்கண் ஒருவர் ஒருவரை வெல்வேமெனமிகுதல் எங்ஙனமாவது. பொருது அக்களத்தின்கட்பட்ட வீரரதுபுண்ணைத்தோண்டி அவ்வுதிரந்தோய்ந்த செய்யகையால் தமதுமயிரைக் கோதி நிறமிக்க வடிவையுடைய பேய்மகளிர் மேன்மேலுங்கொட்டுகின்ற மந்தமான ஓசையையுடைய பறையினது தாளத்தையாடப் பருந்து ஊனைத்தின்னப் பொருந்தியபடையானே போரின்கண்வெகுண்டு அறத்தான் அடர்த்துச்செய்த வலியபோரையுடைய அரசரிருவரும்பட்டார்; அவர்கொற்றக்குடையும் தளர்ந்தன; புகழமைந்த தலைமையையுடைய முரசுவீழ்ந்தன; பலநூறாக அடுக்கப்பட்ட பதினெண்பாடைமாக்களாகிய படைத்தொகுதி இடமில்லையாம்படி தொக்க அகன்ற இடத்தையுடைய பாடிவீட்டின்கட் போர்க்களம் தமதாக்கிக்கொள்ளுதற்கு உரியோரொருவரின்றிக்கண்டார்க்கு அச்சம்வர உடனேமடிந்தது, பூசல்; அவர் பெண்டிரும், பச்சையிலைதின்னாராய்க் குளிர்ந்தநீரின்கண்மூழ்காராய் அவர்மார்பத்தைக்கூடி அக்களத்தின்கண்ணே உடன்கிடந்தார்; வாடாத கற்பகத்தின் தாரினையும் இமையாதகண்ணினையும் நாற்றமாகிய உணவையுமுடையதேவர்களும் மிகப் பெறுதற்கரிய உலகநிரம்பவிருந்துபெற்றார்; அதனாற்பொலிக நுங்கள்புகழ்.—எ - று.

அனந்தல் - பறைகொட்டுவோர்கைபுண்படுதலின், மந்தமாக ஒலித்தல். அறத்தின்மண்டுதலாவது, படைபட்டபின்பெயராதுசென்று இருவேந்தரும்பொருதல். பட்ட இருவேந்தரும் அக்களத்துக் கிடக்கின்றபடியைக்கண்டு தம்மனத்தோடொந்துகூறுகின்றாராதலான், நும்புகழெனமுன்னிலையாக்கிக்கூறினார்.

வேந்தர்மாய்ந்தனர்; குடை துளங்கின; முரசு ஒழிந்தன; அமர் உடன்வீழ்ந்தது; பெண்டிரும், மார்பகம்பொருந்தி அமைந்தனர்; நாற்ற உணவினோரும், விருந்துபெற்றனர்; இவ்வாறானபின்பும், யாம் அமரினைமேற்கொண்டு பொருதுவெல்வேமென்று தாந்தாம்நினைந்தநினைவு எவ்வண்ணமாவதென்று தன்னெஞ்சோடு கூறிப் பின் பொலிகநும்புகழேயென அவ்வரசர்கிடந்தவாறுகண்டுகூறியவாறு.

மறத்தின்மண்டியவென்று பாடமோதுவாருமுளர். வருதார்தாங்கி அமர் மிகல்யாவதென்பதற்கு இவர்கள்செய்தபடிகண்டு ......... இனிச் சிலர்பொருது வேறல் எங்கேயுளதென வியந்துகூறியதாக உரைப்பாருமுளர். (சுஉ)

(சுங.) எனைப்பல் யானையு மம்பொடு துளங்கி
விளைக்கும்வினை யின்றிப் படையொழிந் தனவே
விறற்புகழ் மாண்ட புரவி யெல்லா
மறத்தகை மைந்தரொ டாண்டுப்பட் டனவே
ரு தேர்தர வந்த சான்றோ ரெல்லாந்
தோல்கண் மறைப்ப வொருங்குமாய்ந் தனரே
விசித்துவினை மாண்ட மயிர்க்கண் முரசம்

பொறுக்குந ரின்மையி னிருந்துவிளிந் தனவே
சாந்தமை மார்பி னெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருதுகளத் தொழிந்தன ரினியே
யென்னா வதுகொ றானே கழனி
யாம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவன் முக்கித் தண்புனற் பாயும்
யாணர றாஅ வைப்பிற்
காமர் கிடக்கையவ ரகன்றலை நாடே.

திணையும் துறையும் அவை.

அவனை அக்களத்திற் பரணர் பாடியது.

இ - ள்.—எத்துணையும் பலவாகிய யானையும், அம்பாற்கலங்கி இனிமேலுண்டாக்கும் போரின்றிப் படையிடத்துப் பட்டன; வெற்றிப்புகழ் மாட்சிமைப்பட்ட குதிரையெல்லாம், ஆண்மைக்கேற்ற வீரப்பாட்டுக்கூற்றையுடைய மேலாட்களுடனே அக்களத்தேபட்டன; தேர்கொடுவரவந்த போரிற்கு அமைந்தோரெல்லாம் தாம்பிடித்தபரிசை தம்கண்மறைப்பச் சேரப்பட்டனர்; வாரால்விசிக்கப்பட்டுத் தொழில் மாட்சிமைப்பட்ட மயிர்சீவாது போர்க்கப்பட்ட கண்ணையுடைய முரசமெல்லாம், பரிப்பார்படுதலான் இருந்துகெட்டன; சாந்தமைந்த மார்பின்கண்ணே நெடியவேல்பாய்ந்தனவாக அரசரும், பொருது அக்களத்தின்கண்ணே மடிந்தனர். இனி, என்னவருத்தமுறுவதோதான்? கழனிக்கண் ஆம்பற்றண்டாற் செய்த வளையணிந்த கையினையுடையமகளிர் செவ்வி அவலைமுக்கிக் குளிர்ந்தபுனற்கண்ணேபாயும் புதுவருவாயறாத ஊர்களையுடைய அழகிய கிடையையுடைய அவரது அகன்றவிடத்தையுடையநாடு.—எ - று.

அன்றோவென்னாவதுகொலென்று பாடமோதுவாருமுளர்.

நாடுதான் என்னாவதுகொலெனக்கூட்டுக.

நாடென்னும் ஒருமைநோக்கி, என்னாவதுகொலென ஒருமையாற்கூறப்பட்டது.

(௬௩)

(௬௪.) நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
*விசும்பா டெருவை பசுந்தடி தடுப்பப்
பகைப்புல மரீஇய தகைப்பெருஞ் சிறப்பிற்
குடுமிக் கோமாற் கண்டு
நெடுநீர்ப் புற்கை நீத்தனம் வரற்கே.

திணை - பாடாண்டிணை; துறை - விறலியாற்றுப்படை.

பாண்டியன் பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதியை நெடும்பல்லியத்தனார் பாடியது.

---

* விசும்போடெருவையென்றும் பாடம்.

இ-ள்.—நல்லியாழையும் சிறுபறையையும் ஒருதலைமாக்கிணையுடனேகட்டிப் போவேமல்லேமோ? சொல்லுவாயாக, சில வளையையுடையவிறலி, யானையணி பொருத இடமகன்ற பாசறைக்கண் ஆகாயத்தின்கண்ணேபறக்கும் எருவையைப் பசிய ஊன்றடிதகைப்ப மாற்றார்தேயத்தின்கண்ணேமருவிய அழகிய பெரிய செல்வத்தினையுடைய முதுகுடுமியாகிய கோமானைக்கண்டு மிக்கநீரான் அடப் பட்ட புற்கையைக் கைவிட்டுவருதற்கு.—எ-று.

எருவை - தலைவெளுத்து உடல்சிவந்திருக்கும் பருந்து; கழுகெனினுமமையும்.

விறலி, குடுமிக்கோமாற்கண்டு புற்கையைநீத்தனம்வரற்குச் செல்லாமோ வெனக்கூட்டி வினைமுடிவுசெய்க. (௬௪)

தகைப்பருஞ் சிறப்பினென்பதூஉம் பாடம்.

(௬௫.) மண்முழா மறப்பப் பண்யாழ் மறப்ப
விருங்கட் குழிசி கவிழ்ந்திழுது மறப்பச்
சுரும்பார் தேறல் சுற்ற மறப்ப
வுழவ ரோதை மறப்ப விழவு
மகலு ளாங்கட் சீறூர் மறப்ப
வுவவுத் தலைவந்த பெருநா ளமையத்
திருசுடர் தம்மு ணோக்கி யொருசுடர்
புன்கண் மாலை மலைமறைந் தாங்குத்
தன்போல் வேந்தன் முன்புகுறித் தெறிந்த
புறப்புண் ணாணி மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தன னீங்கு
நாள்போற் கழியல ஞாயிற்றுப் பகலே.

திணை - பொதுவியல்; துறை - கையறுநிலை.

சேரமான் *பெருஞ்சேரலாதன் சோழன்கரிகாற்பெருவளத்தானோடுபொருது புறப்புண்ணாணி வடக்கிருந்தானைக் கழாத்தலையார் பாடியது.

இ-ள்.—முழா மார்ச்சனையிடுதலொழிய, யாழ் பண்ணையொழிய, பெரிய இடத்தையுடைய பானை பாலின்மையிற் கவிழ்ந்து நெய்கடைதலையொழிய, தம் முடையகிளை வண்டார்ந்த மதுவையுண்ணுதொழிய, உழவர் தொழில்செய்யு மோசையையொழிய, அகன்ற தெருவினையுடையசீறூர் விழாவினையொழிய, உவா வந்துகூடிய பெரியநாளாகிய பொழுதின்கண் ஞாயிறும் திங்களுமாகிய இருசுட ரும் தம்முள் எதிர்நின்றுபார்த்து அவற்றுள் ஒருசுடர் புல்லிய மாலைப்பொழுதின் கண் மலையுள்ளேயொளித்தாற்போலத் தன்னையொக்கும்வேந்தன் முன்னாகக் கரு தியெறிந்த புறத்துற்ற புண்ணுக்குநாணி மறக்கூறுபாட்டையுடைய வேந்தன் வா ளோடு வடக்கிருந்தான்; ஆதலால், இவ்விடத்து யாம் அவனையன்றித் தனித்து உயிர்வாழும் ஞாயிற்றையுடையபகல் எமக்கு இனி முன்புகழிந்த நாள்போலக் கழியா.—எ-று.

---

* பெருந்தோளாதனென்றும் பிரதிபேதமுண்டு.

'மண்முழா மறப்ப' என்பதுமுதலாகிய செயவெனெச்சங்களெல்லாம், வாள் வடக்கிருந்தனனென்னும் வினையோடுமுடிந்தன. எறிந்தபுண் - எறிதல் ஏதுவாக உற்றபுண். 'முன்புகுறித் தெறிந்த புறப்புண்ணாணி' என்றது, மார்பில்தைத்துருவினபுண்ணும் புறப்புண்ணுதலையொக்குமென நாணியென்றதாகக்கொள்க. (சுரு)

(சுசு.) களியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழி லாண்ட வுரவோன் மருக
களியியல் யானைக் கரிகால் வளவ
சென்றமர்க் கடந்தநின் னாற்ற றோன்ற
ரு வென்றோய் நின்னினு நல்ல னன்றே
கலிகொள் யாணர் *வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் ணாணி வடக்கிருந் தோனே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

சோழன்கரிகாற்பெருவளத்தானை †வெண்ணிக்குயத்தியார் பாடியது.

இ - ள்.—நீர்செறிந்த பெரியகடலின்கண்ணே மரக்கலத்தையோட்டிப் போர் செய்தற்குக் காற்றின்றி நாவாய் ஓடாதாக ஆண்டு வளிச்செல்வனையழைத்து ஏவல்கொண்ட வலியோன்மரபிலுள்ளானே, மதம்பொருந்திய யானையையுடைய கரிகால்வளவ, மேற்சென்று போரை எதிர்நின்றுகொன்ற நினதுவலிதோற்ற வென்றவனே, நின்னினும் நல்லனல்லவே? தழைத்தலைக்கொண்ட புதுவருவாயையுடைய வெண்ணியென்னும் ஊர்ப்புறத்துப் போர்க்களத்தின்கண் மிகப் புகழை உலகத்துப்பொருந்திப் புறப்புண்ணிற்குநாணி வடக்கிருந்தோன், அவ்வாறிருத்தலான்.—எ - று.

புகழெய்தியென்றது, புறப்புண்நாணுதறன்னை. ஓட்டியென்பதனை ஓட்டவெனத்திரிக்க. எய்தி - எய்தவெனத்திரிப்பினுமமையும்; எய்தவென்றுபாடமோதுவாருமுளர்.

உரவோன்மருக, கரிகால்வளவ, வென்றோய், வெண்ணிப்பறந்தலைப்பட்ட புறப்புண்ணாணி உலகத்துப் புகழ்மிகவெய்தி வடக்கிருந்தோன், நின்னினு நல்லனன்றேயெனக்கூட்டுக.

இது கரிகால்வளவன் வென்றிகூறியதாகலின் ......... (சுசு)

(சுஎ.) அன்னச் சேவ லன்னச் சேவ
லாடுகொள் வென்றி யடுபோ ரண்ண
னாடுதலை யளிக்கு மொண்முகம் போலக்

---

* வெண்ணிற்பறந்தலையென்றும் பாடம்; "இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை, யரவாய் வேம்பி னங்குழைத் தெரியலு, மோங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த, விருபெரு வேந்தரு மொருகளத் தவிய, வெண்ணிற் றாக்கிய வெருவரு நோன்றாட், கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்" என்றார் பொருநராற்றுப்படையிலும் [அடி கசரு - கசஅ].

† வெண்ணிற்குயத்தியாரென்றும் பிரதிபேதமுண்டு.

கோடுகூடு மதிய முகிழ்நிலா விளங்கு
மையன் மாலையாங் கையறு பிணையக்
குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயி னிடையது
சோழநன் னாட்டுப் படினே கோழி
யுயர்நிலை மாடத்துக் குறும்பறை யசைஇ
வாயில் விடாது கோயில் புக்கெம்
பெருங்கோக் கிள்ளி கேட்க விரும்பிசி
ராந்தை யடியுறை யெனினே மாண்டநி
னின்புறு பேடை யணியத்த
னன்புறு நன்கல நல்குவ னினக்கே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.
கோப்பெருஞ்சோழனைப் *பிசிராந்தையார் பாடியது.

இ - ள்.—அன்னச்சேவலே, அன்னச்சேவலே, கொல்லுதலைப்பொருந்திய வென்றியையுடைய அடுபோரண்ணல் தன்னாட்டைத் தலையளிசெய்யும் விளங்கிய முகம்போல இரண்டுபக்கும்வந்துபொருந்தியமதியம் அரும்புநிலாவிளங்கும் தமியோராயினோர்க்கு மயக்கத்தைச்செய்யும் மாலைப்பொழுதின்கண் யாம் செயலற்று வருந்தக் குமரியாற்றினதுபெரியதுறைக்கண்ணே அயிரையைமேய்ந்து வடதிசைக்கண் இமயமலைக்கண்ணே போகின்றாயாயின், இவ்விரண்டிற்குமிடையதாகிய நல்ல சோழநாட்டின்கண் சென்றுபொருந்தின், உறையூரின்கண் உயர்ந்தநிலையையுடைய மாடத்தின்கண்ணே நினது குறும்பறையோடுதங்கி வாயில்காவலர்க்கு உணர்த்தி விடாதே தடையின்றிக் கோயிற்கண்ணேபுக்கு எம்முடைய பெருங்கோவாகிய கிள்ளிகேட்பப் பெரியபிசிரென்னுமூரின்கண் ஆந்தையுடைய அடிக்கீழென்று சொல்லின், மாட்சிமையையுடைய நினது இன்புறும் பேடைபூணத் தனது விருப்பமுறும் நல்ல அணிகலத்தைத்தையளிப்பன், நினக்கு.—எ - று.

'ஆடுகொள்வென்றி' என்பதற்கு வென்றிமிக்க வென்றியெனினுமமையும். குறும்பறையென்றது, பேடையை. வாயில்விடாதென்றதற்கு வாயில் காவலர் விடவேண்டாதெனினுமமையும். முகிழ்நிலாவென்பது, ஒருசொன்னடைத்தாய் மதியம் முகிழ்நிலாவிளங்குமென முதல்வினைகொண்டது; மதியம் முகிழ்க்கும் நிலாவெனினுமமையும். ஆந்தையடியுறையென்பதற்கு ஆந்தை நின் அடிக்கணுறைவானென்றுரைப்பாருமுளர். பேடையணிய நன்கலம் நல்குவனென்பதனாற்பயன்: மறவாதுபோதல்வேண்டுமென்னும் நினைவாயிற்று. (சுஎ)

(சுஅ.) உடும்புரித் தன்ன வென்பெழு மருங்கிற்
கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது
சில்செவித் தாகிய கேள்வி நொந்துநொந்
தீங்கெவன் செய்தியோ பாண பூண்சுமந்
தம்பகட் டெழிலிய செம்பொறி யாகத்து

* இரும்பிசிராந்தையாரென்றும் பிரதிபேதமுண்டு.

மென்மையின் மகளிர்க்கு வணங்கி வன்மையி
னாடவர்ப் பிணிக்கும் பீடுகெழு நெடுந்தகை
புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச்
சுரந்த காவிரி மரங்கொன் மலிநீர்
மன்பதை புரக்கு நன்னாட்டுப் பொருந
னுட்பகை யொருதிறம் பட்டெனப் புட்பகைக்
கேவா னாகலிற் சாவேம் யாமென
நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்பத்
தணிபறை யறைந்த மணிகொ டேர்வழிக்
கடுங்கட் பருகுநர் நடுங்குகை யுகுத்த
நறுஞ்சே றாடிய வறுந்தலை யானை
நெடுநகர் வரைப்பிற் படுமுழா வோர்க்கு
முறந்தை யோனே குரிசில்
பிறன்கடை மறப்ப நல்குவன் செலினே.

திணை - அது; துறை - பாணாற்றுப்படை.
சோழன் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார் பாடியது.

இ - ள்.—உடும்புரித்தாற்போன்ற எலும்பெழுந்த விலாப்புடையையுடைய சுற்றத்து மிக்கபசியைத் தீர்ப்பாரைக்காணாதே கேட்டார்பலரும் அறிதற்கரிதாய் அறிவார் சிலராதலின் சில்செவிக்கண்ணதாகிய யாழை இப்பாண்சாதியது உணவிற்கு முதலாகப்பெற்ற பரிசு என்னென்றுவெறுத்து இங்கே என்செய்கின்றாயோ பாண, பூணைத்தாங்கி அழகியபெருமையையுடைய எழில்பெற்ற செம்பொறிபொருந்திய மார்பினையுடைய மென்மையான் மகளிர்க்குத்தாழ்ந்து வன்மையான் வீரரை அகப்படுக்கும் பெருமைபொருந்திய நெடுந்தகை, ஈன்றணிமைபொருந்தி அதுதீர்ந்தகுழவிக்குச் சுரக்குமுலைபோல நீர்மிக்க காவிரியினது கரைமரத்தைச்சாய்க்கும் மிக்கவெள்ளம் உலகத்து உயிர்ப்பன்மையைப் பாதுகாக்கும் நல்ல சோழநாட்டையுடைய வேந்தன், உட்பகை ஒருகூற்றிலேபட்டதென்னும்படி எம்மைப் புட்செய்யும்பகையிடத்து ஏவானாகலான் யாம் எம்மிற்பொருது மடியக்கடவேமென்று நீங்காதமறத்தையுடையோர் தம்முடைய பூரித்ததோள்களைத்தட்ட அவருடைய மேற்கோள்தணிதற்குக் காரணமாகிய பறையறையும் அழகுபொருந்திய தேர்வழிக்கண் நெய்யகள்ளைப்பருகுவார் தம் நடுங்கு கையான் உகுக்கப்பட்ட நறிய அச்சேற்றின்கண் ஆடிய பாகரேறுதயானை நெடிய நகரிடத்தொலிக்கும் பறையினது ஓசையைச் செவிதாழ்த்துக்கேட்கும் உறையூரிடத்தான்; அவ்விறைவன், நீ பிறன் வாயிலைநினையாமை நினக்கு அளிப்பன், அவன்பாற்செல்வையாயின்.—எ - று.

செம்பொறியென்றது, *"வரையகன் மார்பிடை வரையுமூன்றுள" என்னும் குணத்தை; திருமகளெனினுமமையும். உறந்தையோனென்பது, வினைக்குறிப்பு முற்று. பூண்சுமந்தெழிலிய அம்பகட்டாகத்து நெடுந்தகையெனவியையும்.

* சீவகசிந்தாமணி, கேமசரியாரிலம்பகம், ௫௧:—"வரையகன் மார்பிடை வரையு மூன்றுள, புரைதபு பொன்புரை நாவு முள்ளுடைத், தருவரைத் தோள்களு மமரர் கோன்களிற், றுருவுகொ டடக்கையின் வடிவு கொண்டவே."

பாண, நீசெலின், நெடுந்தகை, பொருநன், குரிசில், உறந்தையோன்; அவன் பிறன்கடைமறப்ப நல்குவன்; நீ ஈங்கு எவன்செய்தியோவெனக்கூட்டுக.

‘உட்பகையொருதிறம்பட்டென’ என்பதற்கு உள்ளபகை சந்தாகிய ஒரு கூற்றிலே பட்டதாகவென்று உரைப்பினுமமையும். ‘புட்பகையேவாளுகலின்’ என்றோதி, உள்ளபகை தம்மிற்கூடிற்ருக, புள்நிமித்தத்திற்குப்பகைவன் ஏவாளுக லிற் சாவேம்யாமென மறவர் தோள்புடைப்பவென்று உரைப்பாருமுளர்; புட் பகையென்று இவனுக்கு ஓர்பெயர். பகட்டினுடையதோற்றம் பொலிவுபெற வென்பாருமுளர். (சுஅ)

(சுகூ.) கையது கடனிறை யாழே மெய்யது
புரவல ரின்மையிற் பசியே யரையது
வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅ
ரோம்பி யுடுத்த வுயவற் பாண
பூட்கை யில்லோன் யாக்கை போலப்
பெரும்புல் லென்ற விரும்பே ரொக்கலை
வையக முழுதுடன் வளைஇப் பையென
வென்னை வினவுதி யாயின் மன்ன
ரடுகளி றுயவுங் கொடிகொள் பாசறைக்
குருதிப் பரப்பிற் கோட்டுமா தொலைச்சிப்
புலாக்களஞ் செய்த கலாஅத் தானையன்
பிறங்குநிலை மாடத் துறந்தை யோனே
பொருநர்க் கோக்கிய வேல னொருநிலைப்
பகைப்புலம் படர்தலு முரியன் றகைத்தா
ரொள்ளெரி புரையு முருகெழு பசும்பூட்
கிள்ளி வளவற் படர்குவை யாயி
னெடுங்கடை நிற்றலு மிலையே கடும்பகற்
றேர்வீ சிருக்கை யார நோக்கி
நீயவற் கண்ட பின்றைப் பூவி
னாடும்வண் டிமிராத் தாமரை
சூடா யாத லதனினு மிலையே.

திணையும் துறையும் அவை.

சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர்கிழார் பாடியது.

இ - ள்.—நின்கையகத்தது, இலக்கணமுறைமைநிரம்பிய யாழ்; உடம்பின் கண்ணது, ஈத்தளிப்போரில்லாமையாற் பசி; அரையதாகிய வேற்றிழை ஊடு போன வேர்ப்பானனைந்த சீரையை அற்றமறைத்து உடுத்த வருத்தத்தையுடைய பாண, மடியால் மேற்கோளில்லாதவனுடம்பையொப்பப் பெரிதாகப் புற்கென்ற மிகப்பெரிய சுற்றத்தையுடையையாய் உலகமெல்லாவற்றையுஞ்சூழ்வந்து பின்னை என்னை மெல்ல வறுமைதீர்ப்பார் யாரெனக் கேட்கின்றாயாயின், கேளாய்; வேந்த

ரது கொல்யானை புண்பட்டுவருந்தும் கொடியெடுக்கப்பட்ட பாடிவீட்டின்கட் குருதிப்பரப்பின்கண்ணே யானையைக்கொன்று புலாலையுடைய போர்க்களத்தை யுண்டாக்கிய போர்செய்யும்படையையுடையவன், உயர்ந்தநிலையையுடைத்தாகிய மாடத்தையுடைய உறையூரிடத்திருந்தான்; அவன், பொருவோர்பொருட்டெடுக் கப்பட்ட வேலையுடையனாய் ஒருபெற்றியே பகைவர்நாட்டின்கட்போதலுமுரியன்; சுற்றப்பட்டமாலையையும் ஒள்ளிய எரியையொக்கும் நிறம்பொருந்திய பசும்பொன் னாற்செய்யப்பட்ட பூணினையுமுடைய கிள்ளிவளவனிடத்தே செல்குவையாயின், அவனது நெடியவாயிலின்கட் காலம்பார்த்துநிற்றலும் உடையையல்லை; விளங் கிய பகற்பொழுதின்கண் அவன் பரிசிலர்க்குத் தேர்வழங்கியிருக்குமிருப்பை நின் கண்ணாரப்பார்த்து நீ அவனைக்கண்டபின்பு பூவின்கணுடும் வண்டு ஊதாத பொற் றாமரைப்பூவைச் சூடாயாதல் அந்நெடுங்கடைநிற்றலினுமுடையையல்லை; அத னால், ஆண்டுச்செல்வாயாக.—எ - று.

தகைதார் - தகைத்தாரெனநின்றது; மேம்பட்ட தாருமாம்.

பாண, ஒக்கலையாய் வளைஇ வினவுதியாயின், தானையையுடையவன், உறந்தை யோன்; அவன்பாற்படர்குவையாயின், நின்கையது யாழாதலானும், மெய்யது பசியாதலானும், நெடுங்கடைநிற்றலுமிலை; நீ அவற்கண்டபின்றைத் தாமரைசூடா யாதல் அதனினுமிலையென மாறிக்கூட்டுக.

பூவாகியதாமரையெனினுமமையும்; அதற்கு இன் - அல்வழிச்சாரியை. புகழ்த் தகையில்லோனென்பதூஉம் பாடம். ஒருநாளுள் முதலனபத்துநாழிகையும் அற த்தின்வழியொழுகிப் பின்பத்துநாழிகையும் இறையின்முறைமைகேட்டுச் செய்த பொருளைப் பரிசிலர்க்குக்கொடுத்து மகிழ்ந்திருத்தலால், கடும்பகற்றேர்வீசிருக்கை யென்றார். (௬௯)

(௭0.) தேஎந் தீந்தொடைச் சீறியாழ்ப் பாண
கயத்துவாழ் யாமை காழ்கோத் தன்ன
நுண்கோற் றகைத்த தெண்கண் மாக்கிணை
யினிய காண்கிவட் டணிகெனக் கூறி
வினவ லானா முதுவா யிரவல
தைஇத் திங்கட் டண்கயம் போலக்
கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனக
ரடுதீ யல்லது சுடுதீ யறியா
திருமருந்து விளைக்கு நன்னாட்டுப் பொருநன்
கிள்ளி வளவ னல்லிசை யுள்ளி
நாற்ற நாட்டத் தறுகாற் பறவை
சிறுவெள் ளாம்பன் ஞாங்க ரூதுங்
கைவள் ளீகைப் பண்ணன் சிறுகுடிப்
பாதிரி கமழு மோதி யொண்ணுத
லின்னகை விறலியொடு மென்மெல வியலிச்
செல்வை யாயிற் செல்வை யாகுவை

விறகுகொய் மாக்கள் பொன்பெற் றன்னதோர்
தலைப்பா டன்றவ னீகை
நினைக்க வேண்டா வாழ்கவன் றாளே.

திணையும் துறையும் அவை.
அவனைக் *கோவூர்கிழார் பாடியது.

இ - ள்.—'தேன்போல இனிய நரப்புத்தொடைபொருந்திய சிறிய யாழை யுடையபாண, கயத்தின்கண்வாழும் யாமையை நாராசத்தின்கண்ணேகோத்தாற் போன்ற நுண்ணியகோலாற்பிணிக்கப்பட்ட தெளிந்த கண்ணையுடைய பெரிய உடுக்கையோசை இனிய காண்க இவ்விடத்தே சிறிது ஆறிப்போவீராக' என்று சொல்லிப் பலவும் என்னைவினவுதலமையாத முதியவாய்மையையுடைய இரவலனே, யான்சொல்லுவதனைக் கேட்பாயாக; தைமாதத்தின்கட் குளிர்ந்த பொய்கையைப்போலக் கொள்ளக்கொள்ளத்தொலையாத சோற்றையுடைய அகன்றநகரிடத்து அடுநெருப்பல்லது சுடுநெருப்பறியாது சோற்றையும் தண்ணீரையும்விளைக்கும் நல்ல நாட்டுக்கு வேந்தன், கிள்ளிவளவனது நல்லபுகழைநினைத்து மணத்தை ஆராயும் ஆராய்ச்சியையுடைய வண்டு சிறிய வெளிய ஆம்பலின்மீதே ஊதுங் கையான்வள்ளிய கொடையையுடைய பாணனது சிறுகுடிக்கட் பாதிரிநாறும் மயிரினையும் ஒள்ளியநுதலினையும் இனியமுறுவலையுமுடைய விறலியுடனே மெல்ல மெல்ல நடந்துசெல்வையாயின் செல்வத்தையுடையையாவை; விறகைக் காட்டினின்றும் ஊரகத்துச்செலுத்துமாந்தர் அக்காட்டகத்து விழுப்பொருள் எடுத்துக் கொண்டாற்போல்வதொரு நேர்பாடன்று, அவனது வண்மை; அதுபெறுவேங்கொலென்றுகருதவேண்டா; அவனது தாள் வாழ்க.—எ - று.

'பாண தணிக' எனக்கூறி வினவலாறு இரவல, விறலியொடு மென்மெலச் செல்குவையாயினென இயையும்; வியனகர்ச் செல்வையாயினெனவுமமையும். நகரையுடையநாடென இயைப்பாருமுளர்.

'விறகுகொய்மாக்கள் பொன்பெற்றன்னதோர் தலைப்பாடன்று' என்பதற்கு விறகிற்குச்சென்றோர் பொன்பெற்றாற்போல்வதோர் தலைப்பாடன்றென்று பொருளுரைப்பாருமுளர்; அதுபொருந்துமேல் அறிந்துகொள்க. (எ0)

(எக.) மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்
தடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
தென்னொடு பொருது மென்ப வவரை
யாரம ரலறத் தாக்கித் தேரோ
டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்க ணிவளினும் பிரிக
வறனிலை திரியா வன்பி னவையத்துத்
திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக மலிபுகழ்

* கோவூரழகியாரென்றும் பிரதிபேதமுண்டு.

வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயி லாந்தையு முரைசா
லந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறருங்
கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த
வின்களி மகிழ்நகை யிழுக்கியா னொன்றோ
மன்பதை காக்கு நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப்பிறர்
வன்புலங் காவன் மாறியான் பிறக்கே.

திணை - காஞ்சி; துறை - வஞ்சினக்காஞ்சி.

ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன்பாட்டு.

இ - ள்.—சிங்கம்போலச்சினத்து மீளாத மேற்கோள்பொருந்திய உள்ளத்தினையும் மிகைத்துச்செல்லும்படையையுமுடைய வேந்தர், தம்மில் ஒப்பக்கூடிவந்து என்னொடுபொருவேமென்றுசொல்லுவர்; அவ்வேந்தரைப் பொறுத்தற்கரியபோரின்கண்ணே அலறப்பொருது தேருடனே அவருடைந்தோடும் புறக்கொடையைக் கண்டிலேனாயின், எனக்குச்சிறந்த பெரியவாய் முகத்தோடுபொருந்தின மையுண்ட கண்ணினையுடைய இவளினும் நீங்குவேனாக; அறமானது நிலைகலங்காத அன்பினையுடைய அவைக்களத்து அறத்தின்திறப்பாடில்லாத ஒருவனைவைத்து முறைகலங்கிக் கொடுங்கோல்செய்தேனாகுக; மிக்கபுகழையுடைய வையையாறுசூழப்பட்ட செல்வம்பொருந்திய ஊர்களிற் பொய்யாத புதுவருவாயையுடைய மையலென்னும் ஊர்க்குத்தலைவனாகிய மாவனும், நிலைபெற்ற எயிலென்னும் ஊரையுடைய ஆந்தையும், புகழமைந்த அந்துவஞ்சாத்தனும், ஆதனழிசியும், வெய்ய சினத்தையுடைய இயக்கனுமென இவருட்படப் பிறரும் எனதுகண்போலும் நண்பினையுடைய நட்டாரோடுகூடிய இனிய செருக்கையுடைய மகிழ்நகையைத் தப்பியவனாகிப் பலவுயிரையும் பாதுகாக்கும் அரசர்குலத்திற்சிறந்த பாண்டிநாடுகாக்கும் காவலினீங்கிப் பிறருடைய வன்புலங்களைக்காக்கும் காவற்கண்ணே இக்குடிப்பிறப்பினீங்கி யான்பிறப்பேனாகுக.—எ - று.

'மெலிகோல்செய்தேனாகுக' என்பதனுள் ஆகுகவென்பது, எங்குந்தந்துரைக்கப்பட்டது. ஒன்றோவென்பது, எண்ணின்கண்வருவதோரிடைச்சொல். அதனை முன்னும்பின்னுங்கூட்டுக. (எக)

(எஉ.) நகுதக் கனரே நாடுமீக் கூறுந
ரிளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தா
ணெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்

சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
யருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
வோங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர்பா டாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
விரப்போர்க் கீயா வின்மையா னுறவே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன்பாட்டு.

இ - ள்.—நம்மாற்சிரிக்கத்தக்கார் இவன் ஆளுநாட்டை மிகுத்துச்சொல்லுவ ரெனவும் இவன்றான் இளையனெனவும் யான்வெறுப்பச்சொல்லி ஒலிக்குமணி இரு மருங்கும் ஒன்றோடொன்று மாறியிசைக்கும் பரந்த அடியினையும் பெரியகாலினையு முடைய உயர்ந்த நல்லயானையினையும் தேரையும் குதிரையையும் படைக்கலத் தொழிலமைந்த வீரரையும் உடையேம் யாமென்று எனது மிக்கவலிக்கு அஞ்சாதே மாறுபடுஞ்சினம்பெருகிப் புல்லியவார்த்தைகளைக்கூறிய சினம்பொருந்திய அரச ரைப் பொறுத்தற்கரிய போரின்கண்ணே சிதறப்பொருது முரசத்தோடுகூட அவ ரைக் கைக்கொண்டிலேனாயின், பொருந்திய எனது குடைநிழற்கண்வாழ்வார், தாங்கள்சென்றடையுநிழற்காணாதே கொடியன் எம்முடையவேந்தனென்றுகருதிக் கண்ணீரைப்பரப்பிக் குடிமக்கள் பழிதூற்றும் கொடுங்கோலையுடையேனாகுக; உயர்ந்த தலைமையுடனே மேம்பட்டகேள்வியையுடைய மாங்குடிமருதன்முதல்வ னாக உலகத்தோடுநிலைபெற்ற பலரும்புகழும் தலைமையையுடைய புலவர் பாடாது நீங்குக, எனது நிலவெல்லையை; என்னாற்புரக்கப்படுங்கேளிர் துயரம்மிக இரக்கு மவர்கட்குக் கொடாதவறுமையை யானுற.—எ - று.

என்னிழல்வாழ்நராகிய குடியென்க. உளையக்கூறியதனைத் தம்மிடத்திருந்து கூறியதாகவும், சிறுசொற்சொல்லியதனைப் போர்க்களத்து எதிர்ப்பட்டுக்கூறிய தாகவுங்கொள்க. இவனென்றார், தங்கருத்துக்கண் அணுமையான். அகப்படே னாயினென்றது, ஈண்டுப்பிறவினைமேல் நின்றது.

வேந்தரைத் தாக்கி அகப்படேனாயின், கோலேனாகுக; இன்மை யானுற; என் நிலவரை புலவர்பாடாது வரைகவென மாறிக்கூட்டி வினைமுடிவுசெய்க.

'நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்' என்பதனை, நாட்டாரால் மீக்கூறப்பட்ட மந்திரிச்சுற்றமுதலாயினோர் நகுதக்கனரெனப் பிரித்துரைப்பினுமமையும். நில வரைப்புரப்போரெனவும் பாடம். (௭௨.)

(எ௩.) மெல்ல வந்தெ னல்லடி பொருந்தி
யீயென விரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்ச
மின்னுயி ராயினுங் கொடுக்குவெ னிந்நிலத்
தாற்ற லுடையோ ராற்றல் போற்றாதென்
னுள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல
வுய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடைக்
கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொரேஎ னாயிற் பொருந்திய
தீதி னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளி
ரொல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே.

திணையும் துறையும் அவை.

சோழன் *நலங்கிள்ளிபாட்டு.

இ - ள்.—மெல்லவந்து எனது நல்ல அடியையடைந்து எமக்கு ஈயவேண்டுமென்று தாழ்ந்திரப்பாராயின், அவர்க்குச் சீர்மையையுடைய முரசுபொருந்திய பழையதாய்வருகின்ற உரிமையையுடைய எனது அரசாட்சிகொடுத்தலோ எளியது; இனிய உயிரேயாயினும் கொடுப்பேன், இந்நிலத்தின்கண்; அமைச்சர் படைத்தலைவர்முதலாகிய வலியையுடையோரது வலியைப் பாதுகாவாது என்னுள்ளத்தையிகழ்ந்த அறிவில்லாதோன் யாவர்க்கும்விளங்கத் துயில்கின்ற புலியை இடறிய குருடன்போலப் பிழைத்துப்போதலோ அரிது; மூங்கிலைத்தின்னும் வலியையுடைய யானையினது காலின்கணகப்பட்ட வலிய திணியமூங்கிலது நீண்ட முளையையொப்ப மேற்சென்று அவ்விடத்து வருந்தும்படி பொருதிலேனாயின், கூடிய தீதில்லாத நெஞ்சத்தாற் காதல்கொள்ளாத பலவகைப்பட்ட கரியகூந்தலையுடைய பொதுப்பெண்டிரது பொருந்தாத புணர்ச்சியிடை என்மாலை துவள்வதாக.— எ - று.

‘இரக்குவிராயின்’ என்று பாடமோதுவாருமுளர். தீதில்காதல்கொள்ளாவென இயைப்பினுமமையும். உள்ளமென்றது, உள்ளத்தாற்சூழும் சூழ்ச்சியை. தன்மேம்பாடு கூறுகின்ற இடமாதலின், நல்லடியென்பது தற்புகழ்தலென்னுங்குற்றமாகாது. (எ௩)

(எ௪.) குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினு
மாளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபத

* நல்லுருத்திரனெனவும் பிரதிபேதமுண்டு.

*மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்*
*தாமிரந் துண்ணு மளவை*
*யீன்ம ரோவிவ் வுலகத் தானே.*

திணை - பொதுவியல்; துறை - முதுமொழிக்காஞ்சி.

சேரமான்கணைக்காலிரும்பொறை சோழன்செங்கணனோடுபோர்ப்புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற்கோட்டத்துச் சிறையிற்கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப்பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சியபாட்டு.

*இ - ள்.—பிள்ளை இறந்துபிறப்பினும் தசைத்தடியாகிய மணை பிறப்பினும் அவற்றையும் ஆளல்லவென்றுகருதாது வாளோக்குதலில் தவிரார் அரசராயிருக்க, பகைவர்வாளாற்படாது, சங்கிலியாற்பிணிக்கப்பட்டநாய்போலப் பிணித்துத் துன்பத்தைச்செய்து இருத்திய கேளல்லாதகேளிருடைய உபகாரத்தான்வந்த தண்ணீரை இரந்துண்ணக்கடவேமல்லேமென்னும் மனவலியின்றி வயிற்றின்கட்டீயை மாற்றவேண்டித் தாமேயிரந்துண்ணும் அளவினையுடையாரை அவ்வரசர்பெறுவார்களோ இவ்வுலகத்தின்கண்.—எ - று.*

*அளவையுடையாரை அளவையென்றார். இதன்கருத்து: சாக்குழவியும் ஊன்பிண்டமுமென இவற்றின்மாத்திரையும் பெற்றிலேமெனப் பிறர்மேல் வைத்துக் கூறியவாறு. கேளல்கேளிரென்றது, சிறைக்கோட்டங்காவலரை.*

*அன்றி, இவனுண்மையுடையனல்லனென்று வாளாற்கொல்லாராய்த் தொடர்ப்படுஞமலிபோல இடர்ப்படுத்திருத்திய கேளல்கேளிர் வேளாண்சிறுபதத்தை மதுகையின்றி வயிற்றுத் தீத்தணிக்கவேண்டித் தாம் இரந்துண்ணுமளவாகக் குழவி செத்துப் பிறப்பினும் ஊன்தடிபிறப்பினும் இவ்வுலகத்து மகப்பெறுவாருளரோ வென உரைப்பினுமமையும்.*

*அரசர்க்கு மானத்தின்மிக்க அறனும் பொருளும் இன்பமுமின்மையின், இது முதுமொழிக்காஞ்சியாயிற்று.* (௭௪)

(௭௫.) *மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்*
*பாறர வந்த பழவிறற் றாயம்*
மெய்ந்நின மாயி னெய்தினஞ் சிறப்பெனக்
குடிபுர விரக்குங் கூரி லாண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே
மண்டமர்ப் பரிக்கு மதனுடை நோன்றாள்
விழுமியோன் பெறுகுவ னாயி னாழ்நீ
ரறுகய மருங்கிற் சிறுகோல் வெண்கிடை
யென்றூழ் வாடுவறல் போல நன்று
நொய்தா லம்ம தானே மையற்று
விசும்புற வோங்கிய வெண்குடை
முரசுகெழு வேந்த ரரசுகெழு திருவே.

திணை - அது ; துறை - *பொதுமொழிக்காஞ்சி.

சோழன் நலங்கிள்ளிபாட்டு.

இ - ள்.—தங்குடியின்முதியோரை முதியோரைக் கூற்றம் கொண்டு போயிற்றாக, விதிதரப்பட்டுத் தம்பால்வந்த பழையவெற்றியாலுண்டாகிய அரசுரிமையைப் பெற்றேமாதல் இத்தலைமையைப்பெற்றேமெனக்கொண்டு தங்குடிமக்களை இறைவேண்டியிரக்கும் மிகுதியில்லாத ஆண்மையையுடைய உள்ளஞ்சிறியோன் பெறின், அத்தாயம் அவனுக்குப் பரிக்கவொண்ணுதாம்படி கனத்தது, மிகவும் ; அடுத்துப்பொரும் போரைப்பொறுக்கும் மனவெழுச்சியையுடைத்தாகிய வலிய முயற்சியையுடைய சீரியோன்பெறுவனாயின், தாழ்ந்தநீரையுடைய வற்றிய கயத்திடத்துச் சிறிய தண்டாகிய வெளிய கிடேச்சினது கோடைக்கணுலர்ந்த சுள்ளியைப்போலப் பெரிதும் நொய்து, குற்றமற்று விண்ணின்கண்ணே பொருந்தவுயர்ந்த வெண்குடையினையும் முரசினையுமுடைய அரசரது அரசாட்சியைப்பொருந்திய செல்வம்.—எ - று

குடிபுரவிரக்குமென்பது, குடிமக்களைக்கொள்ளுங்கடமையன்றி மிகத்தரவேண்டுமென்று இரத்தலை.

தாயம் சிறியோன்பெறின், அது மிகவும்சிறந்தன்று ; வேந்தர் அரசுகெழுதிரு விழுமியோன்பெறுகுவனாயின், நன்றுநொய்தாலெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

மன் - ஆக்கத்தின்கண்வந்தது. அம்ம - அசைநிலை. (எரு)

(எசு.) ஒருவனை யொருவ னடுதலுந் தொலைதலும்
புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை
யின்றி னூங்கோ கேளலந் திரளரை
மன்ற வேம்பின் மாச்சினை யொண்டளிர்
நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிடைந்து
செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி
யொலியன் மாலையொடு பொலியச் சூடிப்
பாடின் றெண்கிணை கறங்கக் காண்டக
நாடுகெழு திருவிற் பசும்பூட் செழியன்
பீடுஞ் செம்மலு மறியார் கூடிப்
பொருது மென்று தன்றலை வந்த
புனைகழ லெழுவர் நல்வல மடங்க
வொருதா னாகிப் பொருதுகளத் தடலே.

திணை - வாகை ; துறை - அரசவாகை.

பாண்டியன்தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனை இடைக்குன்றூர்கிழார் பாடியது.

இ - ள்.—ஒருவனை ஒருவன் கொல்லுதலும் ஒருவற்கு ஒருவன் தோற்றலும் புதிதன்று, இந்தவுலகத்தின்கண் முன்னேதொட்டு இயல்பு; இன்றையின்முன் கேட்

*பொருள்மொழிக்காஞ்சியென்றும் பிரதிபேதமுண்டு.

டறியேம்; திரண்ட தாளையுடைய மன்றத்திடத்து வேம்பினது பெரியகொம்பின் கண் உண்டாகிய ஒள்ளியதளிரை நீண்டகொடியாகிய உழிஞைக்கொடியுடனே விரவிச் செறியத்தொடுக்கப்பட்ட தேன்மிக்கமாலையை வளையமாலையுடனே சிறப்பச்சூடி ஓசையினிய தெளிந்த போர்ப்பறையொலிப்பக் காட்சிதக நாடுபொருந்திய செல்வத்தினையுடைய பசும்பொன்னாற்செய்த பூணையணிந்த நெடுஞ்செழியனது பெருமையையும் உயர்ந்ததலைமையையும் அறியாராய்த் தம்மிற்கூடிப் பொருவேமென்று தன்னிடத்துவந்த புனைந்த வீரக்கழலினையுடைய இருபெருவேந்தரும் ஐம்பெருவேளிருமாகிய எழரசருடைய நல்ல வென்றியடங்கத் தான் ஒருவனாய் நின்று பொருது களத்தின்கட்கொல்லுதல்.—எ - று.

ஒருவனையொருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்று, இவ்வுலகத்தியற்கை; செழியன் பொருதுமென்றுவந்த எழுவர்நல்வலமடங்க ஒருவனாகித் தெரியலை மாலையொடு காண்டகச்சூடிக் கிணைகறங்கப் பொருது களத்து அடல் இன்றின் ஊங்கோ கேளலமெனக்கூட்டி வினைமுடிவுசெய்க. (௭௬)

(௭௭.) *கிண்கிணி களைந்தகா லொண்கழ றொட்டுக்
குடுமி களைந்தநுதல் வேம்பி னொண்டளிர்
நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்கவவன் கண்ணிதார் பூண்டு
தாலி களைந்தன்று மிலனே பால்விட்
டயினியு மின்றயின் றனனே வயின்வயி
னுடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்று மிழிந்தன்று மிலனே யவரை
யழுந்தப் பற்றி யகல்விசும் பார்ப்பெழக்
கவிழ்ந்துநிலஞ் சேர வட்டதை
மகிழ்ந்தன்று மலிந்தன்று மதனினு மிலனே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—சதங்கை வாங்கப்பட்டகாலிலே ஒள்ளிய வீரக்கழலினைச்செறித்துக் குடுமியொழிக்கப்பட்ட சென்னிக்கண்ணே வேம்பினது ஒள்ளியதளிரை நெடிய கொடியாகிய உழிஞைக்கொடியோடுசூடிக் குறியவளைகளையொழிக்கப்பட்ட கையின்கண்ணே வில்லைப்பிடித்து நெடிய தேரினது மொட்டுப் பொலிவுபெறநின்றவன் யாரோதான்? யாரேயாயினும், அவன்கண்ணி வாழ்வதாக; தாரையணிந்து ஐம்படைத்தாலி கழித்ததுமிலன்; பாலையொழித்து உணவும் இன்றுண்டான்;

* இச்செய்யுளை, மெய்ப்பாடெட்டனுள் வியப்பின்வகையாகிய சிறியோர் பெருந்தொழில்செய்தற்கு உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, மெய்ப்பாட்டியல் எ - ம் சூத்திரவுரை].

முறைமுறையாகவெருண்டு மேல்வந்த புதியவீரரை மதித்ததும் அவமதித்தது மிலன்; அவரை இறுகப்பிடித்துப் பரந்த ஆகாயத்தின்கண்ணே ஒலியெழக் கவிழ்ந்து உடலம் நிலத்தின்கண்ணே பொருந்தக் கொன்றதற்கு மகிழ்ந்ததுவும் இவ் வாறுசெய்தேமென்று தன்னைமிகுத்ததுவும் அதனினுமிலன்.—எ - று.

யார்கொலென்றது, வியப்பின்கட்குறிப்பு. இழித்தன்றென்பது, இழிந்தன்றென மெலிந்துநின்றது. (எ௭)

(எஅ.) வணங்குதொடைப் பொலிந்த *வலிகெழு நோன்றா
ளணங்கருங் கடுந்திற லென்னை முணங்குநிமிர்ந்
தளைச்செறி யுழுவை யிரைக்குவந் தன்ன
மலைப்பரு மகல மதியார் சிலைத்தெழுந்து
விழுமியம் பெரியம் யாமே நம்மிற்
பொருநனு மிளையன் கொண்டியும் பெரிதென
வெள்ளி வந்த வம்ப மள்ளர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
வீண்டவ ரடுதலு மொல்லா னாண்டவர்
மாணிழை மகளிர் நாணினர் கழியத்
தந்தை தம்மூ ராங்கட்
டெண்கிணை கறங்கச்சென் றாண்டட் டனனே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—வளைந்த சந்துகளாற்பொலிந்த வலிபொருந்திய போரின்கண் நிலை தளராத பொறையினையுடைய தாளினையும் வருத்துதற்கரிய மிக்கவலியையுமுடைய என்னிறைவன் மூரிநிமிர்ந்து முழையின்கட்கிடந்த புலி தான் விரும்பியதோர் இரையை நோக்கிவந்தாற்போன்ற மாறுபடுதற்கரிய மார்பத்தை மதியாராய் ஆர்த்து எழுந்திருந்து, 'சிறப்புடையேம் படையாற் பெரியேம்யாங்கள் நம்மிற் பொருவானும் இளையன் கொள்ளையும்பெரிது' என இகழ்ந்துவந்த நிலையில்லாத வீரர், புற்கென்ற கண்ணராய் நின்றவிடத்துநில்லாது புறத்தேபோக அவரை இப்போர்க்களத்தின்கண்ணே கொன்றிடுதலும் உடம்படானாய் அவ்விடத்து அவர் மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையுடைய மகளிர் நாணினராய் இறந்துபடத் தந்தையருடையவாகிய தங்களூரிடத்துத் தெளிந்த போர்ப்பறையொலிப்பச்சென்று அவ்விடத்தேகொன்றான்.—எ - று.

தந்தைதம்மூரெனறதனை, "ஏவ லிளையர் தாய்வயிறு கரிப்ப" என்றாற்போலக் கொள்க. தந்தைதம்மூரென்றது, தாம் தோற்றிச்செய்த நகரியன்றி உறையூரும் கருவூருமுதலாகிய ஊர்களை. (எஅ)

(எகூ.) மூதூர் வாயிற் பனிக்கய மண்ணி
மன்ற வேம்பி னொண்குழை மலைந்து

*மதனுடை நோன்றாளென்றும் பாடம்.

தெண்கிணை முன்னர்க் களிற்றி னியலி
வெம்போர்ச் செழியனும் வந்தன னெதிர்ந்த
வம்ப மள்ளரோ பலரே
யெஞ்சுவர் கொல்லோ பகறவச் சிறிதே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—தனது பழையநகரிவாயிற்கட் குளிர்ந்த பொய்கையின்கண்ணே மூழ்கி மன்றத்திடத்து வேம்பினது ஒள்ளிய தளிரைச்சூடித் தெளிந்த ஓசையையுடைய பறைமுன்னாகக் களிறுபோலப் பெருமிதத்தோடுநடந்து வெய்ய போரையுடைய நெடுஞ்செழியனும்வந்தான்; அவனோடுபகைத்த நிலையில்லாதமறவர் பலரே; பகற்பொழுது மிகச்சிறிதாதலால், அவருட் சிலர் படாதொழியவுங்கூடும்.—எ - று.

போர்மடந்தையைப் புணரவருகின்ற கன்னிப்போராதலாற் பனிக்கயமண்ணியென்றார். கிணைமுன்னர்வருதல் - யானைக்கும், இவனுக்கும் ஒக்கும். (எக)

(அ0.) இன்கடுங் கள்ளி னாமூ ராங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
யொருகான் மார்பொதுங் கின்றே யொருகால்
வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே
நல்கினு நல்கா னாயினும் வெல்போர்ப்
போராருந் தித்தன் காண்கதி லம்ம
பசித்துப் பணைமுயலும் யானை போல
விருதலை யொசிய வெற்றிக்
களம்புகு மல்லற் கடந்தடு நிலையே.

திணை - தும்பை; துறை - எருமைமறம்.

சோழன் போர்வைக்கோப்பெருநற்கிள்ளி மூக்காவனுட்டு ஆமூர்மல்லனைப் பொருது அட்டுநின்றானைச் சாத்தந்தையார் பாடியது.

இ - ள்.—இனிய அழன்ற கள்ளினையுடைய ஆமூரிடத்து வலியையுடைய மல்லனது மிக்கவலியைக்கெடுத்து ஒருகால் மண்டியாகமார்பிலே மடித்துவைத்து ஒருகால் அவன்செய்கின்ற உபாயத்தைவிலக்கி முதுகின்கண்வளைத்துப் பசித்து மூங்கிலைத் தின்றற்குமுயலும் யானையையொப்பத் தலையுங் காலுமாகிய இரண்டிடமும் முறியமோதி அக்களத்தின்கட்புக்க அம்மல்லனை எதிர்ந்துநின்றுகொன்றநிலையை, கண்டால் உவப்பினும் உவவானாயினும், இவன்றந்தையாகிய வெல்லும் போரினையுடைய பொருதற்கரிய தித்தன்காண்பானாக.—எ - று.

என்றது, தந்தையுடன் வெறுத்துப்போந்தான் அமருட்புகுந்து இப்போர்செய்தானை விரும்பின் உவக்கின்றான், விரும்பாவிடின் அஞ்சுகின்றானென்பதாம்.

'பணைமுயலும் யானைபோல வொருதலை யொசிய வெற்றி' என்று பாடமோதி, அம்மல்லன்முற்கூறாயினும் பிற்கூறாயினும் ஒருதலைமுறியமோதியென்று உரைப்பாருமுளர். இல் - விழைவின்கண்வந்தது. (அ0)

(அக.) ஆர்ப்பெழு கடலினும் பெரிதவன் களிறே
காரப்பெய லுருமின் முழங்கலா னுவே
யார்கொ லளியர் தாமே யாரநார்ச்
செறியத் தொடுத்த கண்ணிக்
ரு கவிகை மள்ளன் கைப்பட் டோரே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—படையினது ஆரவாரம், எழுகடலுங்கூடி ஒலிக்கும் ஒலியினும் பெரிது; அவனுடையகளிறு, கார்காலத்துமழையின்கண் இடியினும் முழங்குதலை அமையா; நாரால் பயிலத்தொடுக்கப்பட்ட ஆத்திக்கண்ணியையும் இடக்கவிந்தகையினையுமுடைய வீரனது கையின்கண் பட்டோராகிய இரங்கத்தக்கார்தாம் யார்கொல்.—எ - று. (அக)

(அஉ.) *சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டி னிணக்கு மிழிசினன் கையது
போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ
ரு வூர்கொள வந்த பொருநனொ
டார்புனை தெரிய னெடுந்தகை போரே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—ஊரின்கண் விழாத் தொடங்கிற்றாக அவ்விழாவிற்கு உதவப்போகவும் தன்மனைவி பிள்ளைப்பெறுதலைப்பொருந்தினளாக அவள் மெய்நோவிற்கு உதவப்போகவும்வேண்டிப் பெய்கின்றமழையையுடைய ஞாயிறுவீழ்ந்தபொழுதின்கட் கட்டிலைப்பிணிக்கும் புலைமகன்கையதாகிய வாரைச்செலுத்தும் ஊசியினும் விரைந்தது, ஊரைக்கொள்ளவந்த வீரனோடு ஆத்தியாற்றொடுக்கப்பட்ட கண்ணியையுடைய பெருந்தகையது போர்.—எ - று.

நெடுந்தகைபோர், பட்டமாரி ஞான்றஞாயிற்றின்கட் சாறுதலைக்கொண்டெனப் பெண்ணீற்றுற்றென இழிசினன்கையதாகிய ஊசியின் விரைந்தன்றெனக் கூட்டுக.

---

* இப்பாட்டினுள், 'உவமப்பொருளாகிய போழ்தூண்டூசிக்குப் பல அடை கூறி அதனோடு உவமிக்கப்படும் போர்த்தொழிலினை யாதும் ஓரடையின்றி வாளாது கூறினாறாயினும், உவமப்பொருளானே போர்த்தொழிற்குற்றதும் உணரக் கூறினாம்; என்னை? உண்டாட்டும் கொடையும் உரனொடுநோக்கி மறுத்தலும் முதலாகிய உள்ளக்கருத்தினான் ஒருகணத்துள்ளே பலவேந்தரை ஒருங்குவேறற்கு விரைகின்றது போர்த்தொழிலென்பது தெளியப்பட்டமையின்' என்பர் நச்சினார்க்கினியர் [தொல், பொருு, உவமவியல், உ௦- ம் சூத்திரவுரை].

சாறுதலைக்கொண்டென அதற்கு உதவப்போகவும், பெண்ஈற்றுற்றென அதற்கு உதவப்போகவுமென வேறுவேறுகொள்க; ஒன்றாகவுரைப்பாருமுளர். (அஉ)

(அங.) அடிபுனை தொடுகழன் மையணற் காளைக்கென்
றொடிகழித் திடுதல்யான் யாயஞ் சுவலே
*யடுதோண் முயங்க லவைநா ணுவலே
யென்போற் பெருவிதுப் புறுக வென்று
மொருபாற் படாஅ தாகி
யிருபாற் பட்டவிம் மைய லூரே.

திணை - கைக்கிளை; துறை - பழிச்சுதல்.

அவனைப் பெருங்கோழிநாய்கன் †மகள் கண்ணனார் பாடியது.

இ - ள்.—அடியின்கட்புனைந்த செறிந்த வீரக்கழலினையும் மைபோன்ற தாடியினையுமுடைய இளையோன்பொருட்டு எனதுவளை என்னைக்கைவிடுதலான், யான் யாயை அஞ்சுவேன்; அவன்பகைவரைக்கொல்லுந்தோளைத்தழுவுதற்கு அவையின்கணுள்ளாரைநாணுவேன்; என்னைப்போல மிக்க நடுக்கமுறுவதாக, எந்நாளும், யாயேயர்தல் அவையேயாதல் ஒருகூற்றிற்படாதாகி யாயும் அவையுமாகி இருகூற்றிற்பட்ட இம்மயக்கத்தையுடைய ஊர்.—எ - று.

மையலூர் பெருவிதுப்புறுகவெனக்கூட்டுக.

யாயில்லையாயின், வளைகழலுதற்கு அஞ்சவேண்டா; அவையில்லையாயின், முயங்குதற்கு அஞ்சவேண்டாவென்பது கருத்தாகக்கொள்க.

'ஒருபாற் படாஅ தாகி யிருபாற் பட்டவிம் மைய லூர்' என்பதற்கு அச்சமும் நாணுமுண்டாய்வருந்தும் என்கூற்றிலும்நில்லாது என்காதலறிந்து அவனோடு கூட்டநினையாத யாய்கூற்றிலும்நில்லாது இருவர்கூற்றிலும்நின்று மயங்குகின்றவூரெனினுமமையும். (அங)

(அச.) என்னை, புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே
யாமே, புறஞ்சிறை யிருந்தும் பொன்னன் னம்மே
போரெதிர்ந் தென்னை போர்க்களம் புகினே
கல்லென் பேரூர் விழவுடை யாங்க
ணேமுற்றுக் கழிந்த மள்ளர்க்
குமணர் வெரூஉந் துறையன் னன்னே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—என்னுடையதலைவன், தன்னுடிழந்தவறுமையாற் புற்கைநுகர்ந்தானாயினும் பகைவரஞ்சத்தக்க பெரியதோளையுடையன்; யாம், அவனுடைய சிறைப்புறத்திருந்தும் பலகாலுங்காணப்பெறினும் மெய்யுறப்பெறுமையின் வருந்திப்

* அடுதொறுமுயங்கலென்றும் பாடம்.

† மகள் நக்கண்ணையாரென்றும் பிரதிபேதமுண்டு.

பொன்போலும் நிறத்தையுடையேமாயினேம்; போரையேற்று என்தலைவன் போர்க்களத்தின்கட்புகிற் கல்லென்னும் ஒலியையுடைய பெரியவூரின்கட் போர்செய்தற் கெடுத்த விழாவினையுடையவிடத்துத் தோள்வலிபேசி இன்பமுற்றுப்போந்தவீரர்க்கு உப்புவிற்பாரஞ்சத்தக்க ஏற்றிழிவுடைய துறையையொப்பன்.—எ - று.

என்னை புற்கையுண்டும் பகைவெல்லும் பெருந்தோளனும்; யாம் அவன் சிறைப்புறத்திருந்தும் பசப்பை வெல்லமாட்டாமையால் பொன்போன்றனமெனத் தன்வேட்கைமிகுதிகூறியவாறு; அன்றி, இதற்கு என்னை புற்கையுண்டும் வழங்கும் பெரியதோளையுடையனும் நம்மிடத்து அருளின்மையின், அவன் சிறைப்புறத் திருந்தும், பொன்போற்பசந்தேமென்று அழிந்துகூறியதாகப் பொருளுரைப்பாருமுளர்.

உமணர் வெரூஉம் துறையன்னனென்றதனாற்பயன் : வருத்துங்கூற்றின் ஆடவரையும் மகளிரையும் ஒக்கவருத்துவதல்லது அருளுமாறு கற்றிலனோவென்னும் நினைவிற்றுக்குக. (அச)

(அரு.) என்னைக் கூரிஃ தன்மை யானு
மென்னைக்கு நாடிஃ தன்மை யானு
மாடா டென்ப வொருசா ரோரே
யாடன் றென்ப வொருசா ரோரே
ரு நல்ல பல்லோ ரிருநன் மொழியே
சிறுசிலம் பொலிப்ப வோடி யெம்மின்
பொதும ரப் போந்தைப் பொருந்தி நின்று
யான்கண் டனன்வ னாடா குதலே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—என்னுடையதலைவனுக்கு ஊர் இஃதல்லாமையானும் என்னுடைய தலைவனுக்கு நாடு இஃதல்லாமையானும் அவனுக்கு இயல்பாயவென்றியை அவனதுவென்றியென்று சிறப்பாகச்சொல்லுவர் ஒருபக்கத்தார்; அவனதுவென்றியன்றென்றுசொல்லுவர் ஒருபக்கத்தார்; பலரும் ஒத்து ஒவ்வாமற்கூறும் இவ்விருவகைப்பட்ட நல்லவார்த்தையும் நல்லவாயிருந்தன; அவ்வாறுகூறினராயினும், அழகிய சிலம்பார்ப்ப ஓடிச்சென்று, எம்முடையமனையின்கண் முழாப்போலும் பக்கத்தையுடைய பனையைப்பொருந்திநின்று, எனதுவலையும் கலையுமுதலானவை தோற்கும் ஆண்மையுடைமையின், அவனதுவென்றியாதல் யான்கண்டேன்.—எ - று.

பின்னும் ஒருகால் என்னையென்றதனால், இவளது ஆதரவுதோற்றிநின்றது. நல்லவென்றது, இகழ்ச்சிக்குறிப்பு; ஆடென்றதூஉம் ஆடன்றென்றதூஉம் அவனைச் சுட்டியேகூறினமையின், இருநன்மொழியும் நல்லவென்றாரெனினுமமையும். ()

(அசு.) சிற்றி னற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியே னோரும்

புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ விதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

திணை - வாகை; துறை - ஏறாண்முல்லை.

காவற்பெண்டின் பாட்டு.

இ - ள்.—சிறிய இல்லின்கண் நல்லதூணைப்பற்றிநின்று நின்மகன் எவ்விடத்துளனோவென்று கேட்பை; என்னுடையமகன் எவ்விடத்துளனாயினும் அறியேன்; புலிகிடந்துபோன கன்முழைபோல அவனைப்பெற்றவயிறோ இஃது; அவன் செருக்களத்தின்கண்ணே தோன்றுவன்; அவனைக்காணவேண்டின், ஆண்டுச்சென்றுகாண்.—எ - று.

'ஈன்றவயிறோவிது' என்றகருத்து: புலிசேர்ந்துபோகிய அளைபோல அவனுக்கு என்னிடத்து உறவும் அத்தன்மைத்தென்பதாம். ஒருமென்பதூஉம், மாதோவென்பதூஉம் - அசைச்சொல். (அசு)

(அஎ.) *களம்புக லோம்புமின் றெவ்விர் போரெதிர்ந்
தெம்முளு முளனொரு பொருநன் வைக
லெண்டேர் செய்யுந் தச்சன்
றிங்கள் வலித்த காலன் னோனே.

திணை - தும்பை; துறை - தானைமறம்.

†அதியமான்நெடுமானஞ்சியை ஔவையார் பாடியது.

இ - ள்.—போர்க்களத்தின்கட்புகுதலைப் போற்றுமின், பகைவிர், போரின்கண் மாறுபட்டு எங்களுள்வைத்தும் ஒருவீரனுளன்; ஒருநாள் எட்டுத்தேரைச் செய்யுந்தச்சன் ஒருமாதங்கூடிக் கருதிச்செய்யப்பட்டதோர் தேர்க்காலையொப்பன்.—எ - று.

போரெதிர்ந்து களம்புகலோம்புமின், எம்முளுமுளனெனக்கூட்டுக.

எம்முளுமென்ற உம்மை - சிறப்பும்மை. தேர்க்காலோடு உவமை - விரைவும் திண்மையுமாகக்கொள்க. (அஎ)

(அஅ.) யாவி ராயினுங் கூழை தார்கொண்
டியாம்பொருது மென்ற லோம்புமி னோங்குதிற
லொளிறிலங்கு நெடுவேன் மழவர் பெருமகன்
கதிர்விடு நுண்பூ ணம்பகட்டு மார்பின்

---

* இச்செய்யுளை, வாகைத்திணையின் துறையாகிய அரும்பகைதாங்கும் ஆற்றற்கு உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், உக - ம் சூத்திரவுரை].

† அதிகமான் நெடுமான்வஞ்சியென்றும் பிரதிபேதமுண்டு.

விழவுமேம் பட்ட நற்போர்
முழவுத்தோ ளென்னையைக் காணு வூங்கே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

இ - ள்.—எப்பெற்றிப்பட்டீராயினும், அணியையும் தூசியையுங்கொண்டு யாம் அவனோடு பொருவோமென்றுசொல்லுதலைப் பாதுகாமின், உயர்ந்த வலியையுடைய பாடஞ்செய்யும் விளங்கிய நெடிய வேலையுடைய இளையோர்க்குத் தலைவனாகிய சுடர்விடுகின்ற நுண்ணிய தொழிலையுடைய பூணணிந்த அழகிய வலிய மார்பினையும் களவேள்விமுதலாகிய விழாச்சிறந்த நல்லபோரைச்செய்யும் முழாப்போலுந்தோளினையுமுடைய என்னிறைவனைக்காண்பதற்குமுன்; கண்டால் அதுசெய்தல் அரிதாகலான்.—எ - று.

என்னையைக் காணுவூங்கு யாவிராயினும் பொருதுமென்றல் ஓம்புமினெனக் கூட்டுக. (௮௮)

(௮௯.) இழையணிப் பொலிந்த வேந்துகோட் டல்குன்
மடவர லுண்கண் வாணுதல் விறலி
பொருநரு முளரோநும் மகன்றலை நாட்டென
வினவ லானுப் பொருபடை வேந்தே
யெறிகோ லஞ்சா வரவி னன்ன
சிறுவன் மள்ளரு முளரே யதான்று
பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பி
னதுபோ ரென்னு மென்னையு முளனே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

இ - ள்.—மணிக்கோவையாகிய அணியாற்பொலிந்த ஏந்திய பக்கத்தினையுடைய அல்குலினையும் மடப்பத்தினையும் மையுண்டகண்ணினையும் ஒளிதங்கிய நுதலினையுமுடைய விறலி, என்னோடு பொருவாருமுளரோ நும்முடைய பெரிய இடத்தினையுடைய நாட்டின்கண்ணென என்னைக் கேட்டலமையாத செருச்செய்யுந்தானையையுடைய வேந்தே, நீ போர்செய்யக் கருதுவையாயின், எம்முடைய நாட்டின்கண்ணே அடிக்குங்கோலுக்கு அஞ்சாது எதிர்மண்டும் பாம்புபோன்ற இளைய வலியவீரருமுளர்; அதுவேயன்றி, மன்றின்கண் தூங்கும் பிணிப்புற்ற முழவினது காற்றெறிந்த தெளிந்த ஓசையையுடைய கண்ணின்கண் ஒலியைக் கேட்பின், அது போர்ப்பறையென்றுமகிழும் என்னுடைய தலைவனுமுளன்.—எ - று.

'தெண்கண்' என்றது, அதன்கண் ஓசையை. போரென்றது, போர்ப் பறையை. (௮௯)

(௯௦.) உடைவளை கடுப்ப மலர்ந்த காந்த
ளடைமல்கு குளவியொடு கமழுஞ் சாரன்

மறப்புலி யுடலின் மான்கண முளவோ
மருளின விசும்பின் மாதிரத் தீண்டிய
விருளு முண்டோ ஞாயிறு சினவி
னச்சொடு தாக்கிய பாருற் றியங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி சொலிய
வரிமணன் ஞெமலக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ
வெழுமரங் கடுக்குந் தாடோய் தடக்கை
வழுவில் வண்கை மழவர் பெரும
விருநில மண்கொண்டு சிலைக்கும்
பொருநரு முளரோ நீகளம் புகினே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ-ள்.—முரிந்த வளையையொப்ப மலர்ந்த வெண்காந்தட்பூ இலைதழைத்த குளவியுடனேநாறும் மலைச்சாரற்கண் மறத்தையுடைய புலிசீறின் எதிர்நிற்கவல்ல மானினமுமுளவோ? மயங்கிய ஆகாயத்திடத்தும் திசையின்கண்ணும செறிந்த இருளுமுண்டோ ஞாயிறு கொதித்தெழுமாயின்? பாரத்துமிகுதியாற் பார் அச்சுமரத்தோடு வந்து தாக்கி உற இருத்தலின் நிலத்தின்கட்குளித்த பண்டத்தையுடைய சகடத்தினது ஆழ்ச்சியைப்போக்குதற்குப் புனல்கொழிக்கப்பட்ட மணற்பரக்கவும் கற்பிளக்கவும் நடக்கவல்ல மிக்க மனச்செருக்கினையுடைய கடாவிற்குப் போதற்கரிய துறையுமுண்டோ? இல்லையன்றே; அவைபோல, கணையமரத்தையொக்கும் முழந்தாளிலேபொருந்திய பெரியகையாகிய தப்பாத வண்மையைச் செய்யும் கையினையுடைய வீரர்க்குத்தலைவ, பெரிய நிலத்தின்கண் நினது மண்ணைக்கொண்டு ஆர்க்கும் வீரரும் உளரோ? இல்லையன்றே, நீ போர்க்களத்திற் புகின்.—எ-று.

மழவர்பெரும, நீ களம்புகின், பொருநருமுளரோ? இல்லையன்றேயெனக் கூட்டி வினைமுடிவுசெய்க; தடக்கையையுடைய பெருமவெனக்கூட்டி, வண்கையை மழவரொடுகூட்டியுரைப்பினுமமையும்.

இருநிலமாகிய மண்ணென்பாருமுளர். மதப்பகடென்பதூஉம் பாடம். (௯௦)

(௯௧.) வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழறொடித் தடக்கை
யார்கலி நறவி னதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட

சிறியிலை *நெல்லித் தீங்கனி குறியா
தாத னின்னகத் தடக்கிச்
சாத னீங்க †வெமக்கீத் தனையே.

திணை - பாடாண்டிணை ; துறை - வாழ்த்தியல்.

அவனை அவர் நெல்லிப்பழம்பெற்றுப் பாடியது.

இ - ள்.—வென்றியுண்டான தப்பாத வாளையெடுத்துப் பகைவர் களத்தின் கட்பட வென்ற கழலவிடப்பட்ட வீரவளைபொருந்திய பெரிய கையினையுடைய மிக்க ஆரவாரத்தைச்செய்யும் மதுவினையுடைய அதியர்கோமான், மாற்றாரைப் போரின்கட்கொல்லும் வீரச்செல்வத்தினையும் பொன்னாற்செய்யப்பட்ட மாலையையுமுடைய அஞ்சி, நீ பால்போலும்பிறை நுதல்போலப்பொலிந்த திருமுடியினையும் நீலமணிபோலும் கரிய திருமிடற்றினையுமுடைய ஒருவனைப்போல நிலைபெறுவாயாக ; பெரும, நீ, பழையநிலைமையையுடைய பெரியமலையிடத்து விடரின்கண் அரிய உச்சிக்கட்கொள்ளப்பட்ட சிறிய இலையினையுடைய நெல்லியின் இனிய பழத்தைப்பெறுதற்கு அரிதென்றுகருதாது அதனாற்பெறும் பெரும்பேற்றினை எமக்குக்கூறாது நின்னுள்ளே அடக்கிச் சாதலொழிய எமக்கு அளித்தாயாதலால்.— எ - று.

'நீல மணிமிடற் றொருவன் போல' என்றகருத்து, சாதற்குக்காரணமாகிய நஞ்சுண்டும் நிலைபெற்றிருந்தாற்போல நீயும் சாவாதிருத்தல் வேண்டுமென்பதாம்.

அதியர்கோமான், அஞ்சி, நெல்லித்தீங்கனி எமக்கு ஈத்தாயாதலால், பெரும, நீ நீலமணிமிடற்றொருவன்போல மன்னுகவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

'பிறைநுதற் பொலிந்த சென்னி' என்பதற்குப் பிறைதான் நுதலிடத்தே பொலிந்தசென்னியெனினுமமையும். (௯௧)

(௯௨.) யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்
கருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை
யென்வாய்ச் சொல்லு மன்ன வொன்னார்
கடிமதி லரண்பல கடந்த
நெடுமா னஞ்சிநீ யருளன் மாறே.

திணை - அது ; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—யாழோசைபோல இசையால் இன்பமும்செய்யா ; காலத்தோடும் கூடியிரா ; பொருளும் அறியவாரா ; ஆயினும், தந்தையர்க்கு அருளுதல்வந்தன, பிள்ளைகளுடைய இளஞ்சொல் ; என்னுடைய வாயின்கட்சொல்லும் அத்தன்மை

"* மால்வரைக், கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி, யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த, வுரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவே, லரவக் கடற்றானை யதிகனும்" என்றார் சிறுபாணாற்றுப்படையிலும் [அடி - ௯௯ - ௧0௩].

† எமக்கீத்தோயேயென்றும் பாடம்.

யன, பகைவராது காவலையுடைத்தாகிய மதிலையுடைய அரண்பலவற்றையும்வென்ற நெடுமானஞ்சி, நீ அருளுதலால்.—எ - று.

புதல்வர்மழலை தந்தையர்க்கு அருள்வந்தன; அஞ்சி, நீ அருளுதலால், என் வாய்ச்சொல்லும் அன்னவெனக்கூட்டுக.

யாழென்றது, யாழிற்பிறந்த ஓசையை. பொருளுமென்னும் உம்மை - விகாரத்தால் தொக்கது. (௯௨)

(௯௩.) திண்பிணி முரச மிழுமென முழங்கச்
சென்றமர் கடத்தல் யாவது வந்தோர்
தார்தாங் குதலு மாற்றார் வெடிபட்
டோடன் மரீஇய பீடின் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதன் மறந்தவர் தீதுமருங் கறுமா
ரறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி *பசும்புற் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழன் மறவர் செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந் தடக்கலு முய்ந்தனர் மாதோ
வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்
தண்ணல் யானை யடுகளத் தொழிய
வருஞ்சமந் ததைய நூறிநீ
பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவன் பொருது புண்பட்டுநின்றானை அவர் பாடியது.

இ - ள்.—திண்ணிய பிணிப்பையுடையமுரசம் இழுமென்னும் ஓசையை யுடைத்தாய் ஒலிப்ப மேற்சென்று போரைவெல்லுதல் இனி எங்கேயுள்ளது? நின்னோடு எதிர்ந்துவந்தோர், நினது தூசிப்படையைப்பொறுத்தற்கும் மாட்டாராய்ச் சிதறிக் கெட்டுப்போகவிலேமருவிய பெருமையில்லாத அரசரது நோயின்பக்கத் தான் இறந்த உடம்பையணைத்துத் தமது ஆசைத்தன்மையை மறந்து அவர்வாளாற் படாதகுற்றம் அவரிடத்தினின்றும் நீக்கவேண்டி அறத்தைவிரும்பிய கோட்பாட்டையுடைய நான்குவேதத்தையுமுடைய அந்தணர் நல்லகூற்றிலேபொருந்திய பசிய தருப்பைப்புல்லைப் பரப்பினராய்க் கிடத்தித் தமது ஆண்மையே பற்றுக்கோ

* தருப்பையிற்கிடத்தி வாளாற் போழப்படுதல் அரசகுலத்தினர்க்கு இயல்பென்பதைப் பின்வரும் மணிமேகலைப்பாட்டானுமுணர்க; ௨௩ - வது சிறைவிடு காதை: "கொற்றங் கொண்டு குடிபுறங் காத்துச், செற்ற தெவ்வர் தேயந்தமதாக்கியுந், தருப்பையிற் கிடத்தி வாளிற் போழ்ந்து, செருப்புகன் மன்னர் செல்வுழிச் செல்கென, மூத்து விளிதலிக்குடிப் பிறந்தோர்க்கு, நாப்புடை பெயராது நாணுத்தக வுடைத்தென."

டாக நல்லபூசலிலேபட்ட மேம்பட்ட வீரக்கழலினையுடைய வேந்தர்செல்லும் உலகத்திலே செல்கவென்று வாளோக்கியடக்கும் இழிதகவும் பிழைத்தார்கள்; வரியையுடைய தேனீ ஒலிக்கும் வாயின்கண்வந்துபுகுகின்ற மதத்தினையுடைய தலைமை பொருந்திய யானை போர்க்களத்தின்கண்ணேபடப் பொறுத்தற்கரிய பூசற்கண்ணே சிதறவெட்டி, பெரிய தகைமையையுடையாய், நீ சீரிய புண்பட்டபடியால்.—எ-று.

பெருந்தகாய், நீ அருஞ்சமம் ததையநூறி விழுப்புண்பட்டவாற்றால் நின்னோடெதிர்த்துவந்தோர்தாம் பீடின்மன்னர்விளிந்த யாக்கைதழீஇ நீள்கழன்மன்னர் செல்வழிச்செல்கென வாள்போழ்ந்தடக்கலும் உய்ந்தனராதலின், இனி நின்னோடெதிர்ப்பாரின்மையின், முரசமுழங்கச்சென்று அமர்கடத்தல் யாவதெனக்கூட்டுக.

சென்றமர்கடத்தல் யாவது என்றதனானும், வாள்போழ்ந்தடக்கலுமுய்ந்தனரென்றதனானும் வந்தோர்பட்டமை விளங்கும். இன்னும் இதற்கு நின்வாளாற்பட்டுத் துறக்கம்பெற்றதேயன்றி வாள்போழ்ந்து அடக்கலுமுய்ந்தனராகலின், அவர்க்குப் பிறர்மேற்சென்று அமர்கடத்தல் என்னபயனுடைத்தென்றுரைப்பினுமமையும்; இனி, வந்தோராகிய மன்னர் நீ விழுப்புண்பட்டபடியாலே வாள்போழ்ந்தடக்கலும் உய்ந்தார்; இனி நின்னோடெதிர்ப்பாரின்மையின் மேற்சென்று அமர்கடத்தல் யாவதெனக்கூட்டி அதற்கேற்ப உரைப்பாருமுளர். தார்தாங்கலுமென்ற உம்மை - இழிவுசிறப்பு. வாள்போழ்ந்தடக்கலுமென்பது, நினக்குத்தோலைந்தாரென்னும் இழிதகவேயன்றித் தமர்வாள்போழ்ந்தடக்குமிழிவையும் உய்ந்தனரென எச்சவும்மையாய்நின்றது. (௯௩)

(௯௪.) ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலி
னீர்த்துறை படியும் பெருங்களிறு போல
வினியை பெரும வெமக்கே மற்றதன்
றுன்னருங் கடாஅம் போல
வின்னாய் பெருமநின் னொன்னா தோர்க்கே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—ஊரின்கட் சிறுபிள்ளைகள் தனதுவெள்ளிய கோட்டைக் கழுவுதல் காரணமாக நீரையுடையதுறைக்கட்படியும் பெரியகளிறு அவர்க்கு எவ்வாறு எளிதாய் இனிதாம்? அவ்வாறே எங்களுக்குப் பெரும, இனியை; மற்றதனுடைய அணுதற்கரிய மதம்பட்டநிலைமை எவ்வாறு இன்னாதாம்? அதுபோலப் பெரும, நின்பகைவர்க்கு இன்னாய்.—எ - று.

கழாஅலினென்பதற்குக் கழுவப்படுதலாலெனினுமமையும். (௯௪)

(௯௫.) இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்று
முண்டாயிற் பதங்கொடுத்

தில்லாயி னுடனுண்ணு
மில்லோ ரொக்கற் றலைவ
னண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே.

திணை - பாடாண்டிணை ; துறை - வாண்மங்கலம்.

அவன்தூதுவிடத் தொண்டைமானுழைச்சென்ற ஒளவைக்கு அவன்படைக் கலக்கொட்டில்காட்ட அவர் பாடியது.

இ - ள்.—இவைதாம், பீலி அணியப்பட்டு மாலைசூட்டப்பட்டு உடலிடந் திரண்ட வலியகாம்பை அழகுபடச்செய்யப்பட்டு நெய்யிடப்பட்டுக் காவலையுடைய அகன்ற கோயிலிடத்தன ; அவைதாம், பகைவரைக்குத்துதலாற் கங்குநுனியுமுரிந்து கொல்லனது பணிக்களரியாகிய குறிய கொட்டிலிடத்தனவாயின, எந்நாளும் ; செல்வமுண்டாயின் உணவுகொடுத்து இல்லையாயின் உள்ளதனைப் பலரோடுகூடவுண்ணும் வறியோருடைய சுற்றத்திற்குத்தலைவனாகிய தலைமையையுடைய எம் வேந்தனுடைய கூரிய நுனியையுடைய வேல்.—எ - று.

பீலியணிந்தென்பதுமுதலாகிய வினையெச்சம் நான்கும் வியனகரவென்னும் குறிப்புவினையோடு முடிந்தன ; இவற்றைச் செயவெனெச்சமாகத் திரிப்பினுமமையும். 'சிதைந்து ......... குற்றில' என்பது, பழித்ததுபோலப் புகழ்ந்து கூறப்பட்டது.

இவை வியனகர ; வைநுதிவேலாகிய அவை கொற்றுறைக் குற்றிலத்தன வெனக்கூட்டுக.

இது, கொடைச்சிறப்பும் வென்றிச்சிறப்பும் கூறியவாறு. வினைக்குறிப்பாக லின், ஆக்கம் கொடுக்கப்பட்டது. (கரு)

(கசு.) அலர்பூந் தும்பை யம்பகட்டு மார்பிற்
றிரண்டுநீடு தடக்கை யென்னை யிளையோற்
கிரண்டெழுந் தனவாற் பகையே யொன்றே
பூப்போ லுண்கண் பசந்துதோ ணுணுகி
ரு நோக்கிய மகளிர்ப் பிணித்தன் றொன்றே
விழவின் றாயினும் படுபதம் பிழையாது
மையூன் மொசித்த வொக்கலொடு துறைநீர்க்
கைமான் கொள்ளு மோவென
வுறையுண் முனியுமவன் செல்லு மூரே.

திணை - அது ; துறை - இயன்மொழி.

அவன்மகன்போதுட்டேழினியை அவர் பாடியது.

இ - ள்.—மலர்ந்த பூவையுடைய தும்பைக்கண்ணியையணிந்த அழகிய வலிய மார்பினையும் திரண்டு நீண்ட பெரிய கையினையுமுடைய என்னிறைவன்மகன் இளையோனுக்குப் பகை இரண்டுதோன்றின ; அவற்றுள், பூப்போலும் வடிவினையுடைய மையுண்டகண்கள்பசப்பத் தோள்மெலியத் தன்னைப் பார்த்தமகளிரை

நெஞ்சுபிணித்ததனால் அவர்துனிகூருதலின் உள்ளதாயது ஒருபகை; அவன் எடுத்துவிட்டுச்சென்றிருக்கும் ஊர், விழாவில்லையாயினும், உண்டாக்கப்படும் உணவு யாவர்க்குந்தப்பாமற் செம்மறியாட்டுத்தசையைத்தின்ற சுற்றத்துடனே யாறுங்குளனுமுதலாகியவற்றின் துறைநீரை அவன்யானை முகந்துண்ணுமெனக்கருதி அவ்விடத்துறைதலைவெறுக்கும், அவ்வெறுத்ததனுலுளதாயது ஒருபகை, ஆகப் பகை இரண்டு.—எ - று.

பசந்து நுணுகி என்னும் செய்தெனெச்சங்களைச் செயவெனெச்சமாக்கி, அவற்றைப் பிணித்தன்றென்னும் வினையோடுமுடிக்க.

இதனால், அவன் இன்பச்சிறப்பும் வென்றிச்சிறப்புங்கூறியவாறு. ஓகாரம் — அசைநிலை. (கூசு)

(கூஎ.) போர்க்குறைஇப் புகன்றுகழித்தவா
ளுடன்றவர்காப் புடைமதிலழித்தலி
னூனுற மூழ்கி யுருவிழந் தனவே
வேலே, குறும்படைந்த வரண்கடந்தவர்
நறுங்கள்ளி னாடுகைத்தலிற்
சுரைதழீஇய விருங்காழொடு
மடைகலங்கி நிலைதிரிந்தனவே
களிறே, எழூஉத்தாங்கிய கதவுமலைத்தவர்
குழூஉக்களிற்றுக் குறும்புடைத்தலிற்
பரூஉப்பிணிய தொடிகழிந்தனவே
மாவே, பரந்தொருங்கு மலைந்தமறவர்
பொலம்பைந்தார் கெடப்பரிதலிற்
களனுழந் தசைஇய மறுக்குளம் பினவே
அவன்றானும், நிலந்திரைக்குங் கடற்றானைப்
பொலந்தும்பைக் கழற்பாண்டிற்
கணைபொருத துளைத்தோலன்னே
ஆயிடை, உடன்றோ ருய்தல் யாவது தடந்தாட்
பிணிக்கதிர் நெல்லின் செம்மன் மூதூர்
நுமக்குரித் தாகல் வேண்டிற் சென்றவற்
கிறுக்கல் வேண்டுந் திறையே மறுப்பின்
ஒல்வா னல்லன் வெல்போ ரானெனச்
சொல்லவுந் தேறீ ராயின் மெல்லியற்
கழற்கனி வகுத்த துணைச்சில் லோதிக்
குறுந்தொடி மகளிர் தோள்விட
லிறும்பூ தன்றஃ தறிந்தா டுமினே.

திணையும் துறையும் அவை.

அதியமான் நெடுமானஞ்சியை அவர் பாடியது.

இ - ள்.—போரைச்செய்தற்குப் புடைபெயர்ந்து உலாவி விரும்பி உறைகழித்தவாள்கடாம், பகைத்தவரது காவலையுடைய அரணையழித்தலால் அவர்தசையின் கண்ணே உறக்குளித்துக் கதுவாய்போய் வடிவிழந்தன; அவன்வேல்கள்தாம், குறும்பர்சேர்ந்த அரண்களைவென்று அப்பகைவரது நறிய மதுவையுடைய நாட்டையழித்தலாற் சுரையோடுபொருந்திய கரியகாம்புடனே ஆணிகலங்கி நிலைகெட்டன; அவன்களிறுதாம், கணையமரத்தாற் றடுக்கப்பட்ட கதவைப்பொருது அப்பகைவரது திரண்ட கிளிற்றையுடைய அரணையழித்தலாற் பரியபிணித்தலையுடையவாகிய கிம்புரிகள் கழன்றன; அவன்குதிரைதாம், பரந்துவந்து ஒக்கப்பொருதவீரரது பொன்னாற்செய்யப்பட்ட பசிய மாலையையுடையமார்பு உருவழிய ஓடுதலாற் போர்க்களத்தின்கட் பொருதுவருந்திய குருதியான் மறுப்பட்ட குளம்பையுடையவாயின; அவன்றானும், நிலவகலத்தைத் தன்னுள்ளேயடக்கும் கடல்போன்ற படையுடனே பொன்னானியன்ற தும்பைக்கண்ணியையுடைய, கழல்வடிவாகவும் கிண்ணிவடிவாகவும்செய்து செறிக்கப்பட்டு அம்புபடுதலால் துளைபட்ட பரிசையையுடையன்; அவ்விடத்து அவனால் வெகுளப்பட்டோர் பிழைத்தல் எங்கேயுள்ளது? பெரியதாளினையும் ஒன்றோடொன்று தெற்றிக்கிடக்கின்ற கதிரினையுமுடைத்தாகிய நெல்லினையுடைய தலைமைபொருந்திய பழையவூர் நுங்கட்கு உரித்தாகவேண்டுவீராயிற் போய் அவனுக்குத் திறைகொடுத்தல்வேண்டும்; கொடீராயின், அதற்கு உடம்படுவானல்லன் வெல்லும்பூசலையுடையானென்று யான்சொல்லவும் தெளியீராயின், நுமக்கு மெல்லிய தன்மையையும் கழன்மணியினது கனியால் கூறுபடுத்துச்சுருட்டப்பட்ட இனமாகிய சிலவாகிய பனிச்சையையும் குறிய வளையையுமுடைய உரிமைமகளிரது தோளைப் பிரிந்துறைதல் வியப்பன்று; அதனையறிந்து போர்செய்ம்மின்.—எ - று.

அறிந்தாடுமினென்றகருத்து: அறியிற் போர்செய்தல் அரிதென்பதாம். குறும்பு - சிற்றரண். கடற்றானையினையும், பொலந்தும்பையினையுமுடைய அவன்றானுமென்க. (௬௭)

(௬௮.) முனைத்தெவ்வர் முரணவியப்
பொரக்குறுகிய நுதிமருப்பி
னினக்களிறு செலக்கண்டவர்
மதிற்கதவ மெழுச்செல்லவும்
பிணனழுங்கக் களனுழக்கிச்
செலவசைஇய மறுக்குளம்பி
னினநன்மாச் செலக்கண்டவர்
கவைமுள்ளிற் புழையடைப்பவும்
மார்புறச் சேர்ந்தொல்காத்
தோல்செறிப்பினின் வேல்கண்டவர்
தோல்கழியொடு பிடிசெறிப்பவும்
வாள்வாய்த்த வடுப்பரந்தநின்
மறமைந்தர் மைந்துகண்டவர்

புண்படு குருதி யம்பொ டிக்கவும்
நீயே, ஐயவி புகைப்பவுந் தாங்கா தொய்யென
வுறுமுறை மரபிற் புறநின் றுய்க்குங்
கூற்றத் தனையை யாகலிற் போற்று
ரிரங்க விளிவது கொல்லோ வரம்பணைந்
திறங்குகதி ரலம்வரு கழனிப்
பெரும்புனற் படப்பையவ ரகன்றலை நாடே.

திணை - வாகை ; துறை - அரசவாகை ; திணை - வஞ்சியும், துறை - கொற்ற வள்ளையுமாம்.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—போர்முனைக்கட் பகைவரது மாறுபாடு அடங்கப் பொருதலால் தேய்ந்துகுறைந்த நுனையுடைத்தாகிய கோட்டையுடைய நினது இனமாகிய யானை போகக்கண்ட பகைவர் தமது மதில்வாயிற்கதவங்களும் கணையமரங்களும் புதிதாக விடுதற்குப் பழையன போக்கவும், பட்டோரது பிணம் உருவழியப் போர்க்களத்தை உழக்கிச்செல்லுதலால் வருந்திய குருதிக்கறைபொருந்திய குளம்பையுடைய நினது இனமாகிய நல்லகுதிரைபோகக்கண்ட அப்பகைவர்தாம் கவைந்தவேலமுள்ளாற் காட்டுவாயில்களை அடைப்பவும், நின்பகைவரது மார்பின்கண்ணெறிந்த வழி ஆண்டுத்தைத்து நில்லாது உருவிப்போன உறையின்கட் செறித்தலில்லாத நின்வேலைக்கண்டபகைவர் தமது கிடுகைக் காம்புடனே கைந்நீட்டைச்செறிக்கவும், வாள் வாய்க்கத்தைத்த வடுப்பரந்த நின்னுடைய மறத்தையுடையவீரரது வலியைக் கண்ட அப்பகைவர் புண்பட்ட குருதியையுடைய அம்பைத் தூணியகத்தடக்கிக் கொள்ளவும், நீதான் வெண்சிறுகடுகைக் காவலாகப்புகைப்பவும் தரியாது விரைய வந்து பொருந்துதன்முறைமையையுடைய இயல்பிற் புறத்தேநின்று உயிரைக் கொடுபோதும் கூற்றத்தையொப்பை ; ஆதலாற் பகைவரிரங்கக் கெடுவதுகொல்லோ! வரம்பைச்சேர்ந்து வளையும் நெற்கதிர்சுழலும் கழனியொடு மிக்க நீர்ப்பக்கத்தையுடைய அவரது அகன்ற இடத்தையுடைய நாடு.—எ - று.

செல்லவுமென்பதுமுதலாய செயவெனெச்சங்கள் கூற்றத்தனையையென்னும் வினைக்குறிப்பொடுமுடிந்தன.

நீ கூற்றத்தனையையாகலிற் போற்றார்நாடு அவரிரங்க விளிவதுகொல்லெனக் கூட்டுக.

கொல்லும், ஓவும் - அசைநிலை. (கூஅ)

(கூகூ.) அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியு
மரும்பெறன் மரபிற் கரும்பிவட் டந்து
நீரக விருக்கை யாழி சூட்டிய
தொன்னிலை மரபினின் முன்னோர் போல
வீகையங் கழற்கா லிரும்பனம் புடையற்
பூவார் காவிற் புனிற்றுப்புலா னெடுவே

லெழுபொறி நாட்டத் தெழாஅத் தாயம்
வழுவின் றெய்திய மமையாய் செருவேட்
டிமிழ்குரன் முரசி னெழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்துநின் னாற்ற றோற்றிய
வன்றும் பாடுநர்க் கரியை யின்றும்
பரணன் பாடினன் மற்கொன் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநி
னரணடு திகிரி யேந்திய தோளே.

திணையும் துறையும் அவை.

அவன் கோவலூரெறிந்தானை அவர் பாடியது.

இ - ள்.—தேவர்களைப்போற்றிவழிபட்டும் அவர்களுக்கு வேள்விக்கண் ஆவுதியை அருந்துவித்தும் பெறுதற்கரிய முறைமையையுடைய கரும்பை விண்ணுலகத்தினின்று இவ்வுலகத்தின்கட் கொடுவந்து தந்தும் கடலுக்குட்பட்ட நிலத்தின் கண்ணே சக்கரத்தைநடாத்திய பழையநிலைமைபொருந்திய முறைமையையுடைய நின்குடியிற் பழையோரையொப்பப் பொன்னாற்செய்யப்பட்ட வீரக்கழல் புனைந்த காலினையும், பெரிய பனந்தோடாகிய தாரினையும் பூநிறைந்த காவினையும் நாடோறும் புதிய ஈரம்புலராத புலாலையுடைய நெடிய வேலினையுமுடைய எழிலாஞ் சனையும் நாடுதலையுடைய ஒருநாளும்நீங்காத அரசவுரிமையைத் தப்பின்றாகப்பெற்றும் அமையாயாய்ப் போரைவிரும்பி ஒலிக்கும் ஓசைபொருந்திய முரசினையுடைய எழரசரோடுபகைத்து மேற்சென்று போரின்கண்வென்று நின்வலியைத்தோற்றுவித்த அற்றைநாளும் பாடுவார்க்குப் பாட அரியை; இற்றைநாளும் பரணன்பாடினன், நீ மாறுபாடுமிக்க கோவலூரை அழித்து வென்று பிறவும் அரண்களையழிக்கின்ற ஆழியைத்தாங்கிய நினதுதோளை.—எ - று.

இன்றும் பரணன்பாடினனென்றது, அவனும் தன்பெருமையாற்பாடினன்; பிறராற்பாடப்படுதலரிதென்றதாம்.

நின் ஆற்றறோற்றிய அன்றும் பாடுநர்க்கு அரியை; திகிரியேந்தியதோளை இன்றும் பரணன்பாடினனெனக்கூட்டுக.

கழற்காலையும் புடையலையும் காவையும் வேலையுமுடைய நின்முன்னோர்போலத் தாயமெய்தியும் அமையாயென மாறிக்கூட்டுக. நாடுதல் - ஆய்தல். ழுவரொடுமுரணியென்றும், முரணடுதிகிரியென்றும் பாடம். கொல் - ஐயம். மன் - அசைநிலை. பூவார்கா - வானோர் இவன்முன்னோர்க்கு வரங்கொடுத்தற்குவந்திருந்தசோலை. இவனுக்குப் பனந்தார்கூறியது, *சேரமாற்கு உறவாதலின். எழுபொறிநாட்டமென்பதற்கு எழரசர்நாடுங்கூடி ஒருநாடாய் அவ்வேழரசர்பொறியும் கூடிய பொறியோடுகூடிநின்று நன்மையும் தீமையுமாராய்தலெனினுமமையும். ()

(கOO.) கையது வேலே காலன புனைகழன்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்

* உதியவேந்தாதலினென்றும் பிரதிபேதமுண்டு.

வட்கர் போகிய வளரிளம் போந்தை
யுச்சிக் கொண்ட வூசிவெண் டோட்டு
வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச்
சுரியிரும் பித்தை பொலியச் சூடி
வரிவயம் பொருத வயக்களிறு போல
வின்னுமா றாதுசினனே யன்னோ
வுய்ந்தன ரல்லரிவ னுடற்றி யோரே
செறுவர் நோக்கிய கண்டன்
சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னாவே.

திணையும் துறையும் அவை.

அதியமான்தவமகன்பிறந்தவனைக்கண்டானை அவர் பாடியது.

இ - ள்.—கையின்கண்ணது, வேலே; காலின்கண்ண, அணிந்த வீரக்கழல்; உடம்பின்கண்ணது, வேர்ப்பு; மிடற்றின்கண்ணது, ஈரம்புலராத பசியபுண்; பகைவர் தொலைதற்கு ஏதுவாகிய வளரும் இளைய பனையினது உச்சிக்கண்ணே வாங்கிக் கொள்ளப்பட்ட ஊசித்தன்மையைப்பொருந்திய வெளியதோட்டையும் வெட்சியினது பெரியமலரையும் வேங்கைப்பூவுடனே விரவிச் சுருண்ட கரியமயிர் பொலிவுபெறச்சூடிப் புலியொடுபொருத வலிய யானையையொப்ப இன்னமும்நீங்காது, சினம்; ஆதலால், ஐயோ! பிழைத்தாரல்லர், இவனைச்சினப்பித்தவர்கள்; பகைவரை வெகுண்டுபார்த்தகண் தன்னுடைய புதல்வனைப்பார்த்தும் சிவப்பமையாவாயின.—எ - று.

காலனபுனைகழலென்பது, வீரத்திற்கும் வென்றிக்கும் கட்டின; போர்தோறும் வென்றுகட்டினவெனவுமாம். உம்மை - சிறப்பு.

தோட்டையும் மலரையும் வேங்கையொடுவிரைஇச் சூடிச் செறுவர்நோக்கிய கண் சிறுவனைநோக்கியும் சிவப்பானா; ஆதலால், அன்னோ! இவனுடற்றியோர் உய்ந்தனரல்லரெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

வட்காரென்பது, வட்கரெனக்குறுகிநின்றது; வட்கர் - குற்றமெனினுமமையும். (௧௦௦)

(௧௦௧.) ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினுந்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
வணிபூ ணணிந்த யானை யியறே
ரதியமான் பரிசில் பெறூஉங் கால
நீட்டினு நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே

யருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசில்கடாநிலை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—யாம் ஒருநாட்செல்லேம் இரண்டுநாட்செல்லேம் பலநாளும்பயின்று பலரோடுகூடச்செல்லினும் முதற்சென்றநாள்போன்ற விருப்பத்தையுடையன், அணிகலமணிந்தயானையையும் இயன்றதேரையுமுடைய அதியமான்; பரிசில்பெறுங்காலை நீட்டிப்பினும் நீட்டியாதொழியினும், யானை தனதுகொம்பினதிடையே வைக்கப்பட்ட கவளம்போல நமது கையகத்தது, அப்பரிசில்; அது தப்பாது; உண்ண ஆசைப்பட்டநெஞ்சே, நீ பரிசிற்கு வருந்தவேண்டா; அவன்தாள் வாழ்வதாக.—எ - று.

அதியமான்விருப்பினனென முன்னேகூட்டுக. கோட்டிடைவைத்தகவளம் போலவென்றதற்கு யானை வாயிற்கொண்டுநுகருமளவும் கோட்டிடைவைத்தகவளம்போலப் பரிசில் கையகத்ததுவென்க; அன்றிக் களிறுகோட்டிடைவைத்தகவளத்தைச் சிறிதுதாழ்த்ததாயினும் அஃது அதற்குத்தப்பாதவாறுபோலப் பரிசில் சிறிது தாழ்ப்பினும் நமக்குத்தருதல் தப்பாதென்பதாக்கி உரைப்பினுமமையும்.

தாளை முயற்சியென்பாருமுளர். அருந்தவென்பது, அருந்தெனக் கடைக்குறைக்கப்பட்டது; அருந்தென முன்னிலையேவலாக்கி உரைப்பினுமமையும்.(கoக)

(கoஉ.) எருதே யிளைய நுகமுண ராவே
சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே
யவலிழியினு மிசையேறினு
மவண தறியுநர் யாரென வுமணர்
கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன
விசைவிளங்கு கவிகை நெடியோய் திங்க
ணாணிறை மதியத் தனையையிருள்
யாவண தோநின் னிழல்வாழ் வோர்க்கே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவன்மகன் போதுட்டெழனியை அவர் பாடியது.

இ - ள்.—எருதுகள் இளையதாம் நுகம்பூண்டலைமதியா; சகடந்தான் பண்டம் பெரிதாக இடப்பட்டது; ஆதலால், அது பள்ளத்தே இழியினும் மேட்டிலே ஏறினும் அவ்விடத்துவரும் இடையூறறிவார் யார்தானென்றுநினைந்து உப்புவாணிகர் அச்சுமரத்தின்கண்ணே அடுத்துக் கட்டப்பட்ட சேமவச்சுப்போன்ற புகழ்விளங்கிய இடக்கவிந்த கையையுடைய உயர்ந்தோய், நீ திங்களாகிய நாள்நிறைந்தமதியத்தையொப்பை; ஆதலின், நின் நிழற்கண்வாழும்வர்கட்குத் துன்பமாகிய இருள் எவ்விடத்துள்ளது.—எ - று.

திங்கள்நாணிறைமதியத்தனையையென்றது, அறிவும் நிறைவும் அருளுமுதலாகிய குணங்களால் அமைந்தாயென்றவாறும். சேமவச்சன்னவென்றது, ஏற்றிழி

வுடையவழி அச்சுமுறிந்தழிச் சேமவச்சு உதவினாற்போல நீ காக்கின்றநாட்டிற்கு ஓரிடையூறு உற்றால் அதுநீக்கிக் காத்தற்குரியையென்பதாம். 'எருதே யிளைய நுகமுண ராவே, சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே' என்பது உவமங்கருதாது சகடத்திற்குவரும் ஏதங்குறித்து உமணர் சேமவச்சுயாத்தற்குக் காரணமாய்நின்றது. (க0உ)

(க0௩.) ஒருதலைப் பதலை தூங்க வொருதலைத்
தூம்பகச் சிறுமுழாத் தூங்கத் தூக்கிக்
கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யாரெனச்
சுரன்முத லிருந்த சில்வளை விறலி
செல்வை யாயிற் சேணோ னல்லன்
முனைசுட வெழுந்த மங்குன் மாப்புகை
மலைசூழ் மஞ்சின் மழகளி றணியும்
பகைப்புலத் தோனே பல்வே லஞ்சி
பொழுதிடைப் படாஅப் புலரா மண்டை
மெழுகுமெல் லடையிற் கொழுநிணம் பெருப்ப
*வலத்தற் காலை யாயினும்
புரத்தல் வல்லன் வாழ்கவன் றாளே.

திணை - அது; துறை - விறலியாற்றுப்படை.
அதியமான்நெடுமானஞ்சியை அவர் பாடியது.

இ - ள்.—காவினது ஒருதலைக்கண்ணே பதலைதூங்க ஒருதலைக்கண்ணே துளையை அகத்தேயுடைய சிறிய முழாவைத் தூங்கும்பரிசு தூக்கி இடுவோரின்மையின் ஏலாதுகவிழ்ந்த என்மண்டையை இட்டுமலர்த்தவல்லார் யாரெனச்சொல்லிச் சுரத்திடத்தேயிருந்த சிலவாகியவளையையுடைய விறலி, நீ அவன்பாற்போவையாயின், அவன் சேய்மைக்கண்ணானல்லன்; முனைப்புலத்தைச் சுடுதலானெழுந்த இருட்சியையுடைய கரியபுகை மலையைச்சூழும்முகில்போல இளங்களிற்றைச்சூழும் பகைவர்தேயத்திருந்தான், பலவேற்படையையுடைய அதியமான்; ஒருபொழுதும் ஓயாமல் உண்ணவும் தின்னவும் படுதலான் ஈரம்புலராத மண்டை மெழுகானியன்ற மெல்லிய அடைபோலக் கொழுத்தநிணம் மிக உலகம் வறுமையுறுதலையுடைய காலமாயினும் பாதுகாத்தலைவல்லன்; அவன்றாள்வாழ்க.—எ - று.

பதலையென்பது, ஒருதலைமுகமுடையதோர் தோற்கருவி; பகைப்புலத்தோனென்றகருத்து: பகைவர்பால் திறைகொண்டபொருளுடையனாதலின், நீ வேண்டியவெல்லாந்தருதல் அவனுக்கு எளிதென்பதாம். சேணோனல்லனென்பதற்குப் பரிசில் நீட்டிப்பானல்லனென்று உரைப்பினுமமையும். உம்மை - சிறப்பு. (க0௩)

(க0௪) போற்றுமின் மறவீர் சாற்றுது நும்மை
யூர்க்குறு மாக்க ளாடக் கலங்குந்
தாட்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கு

* வறத்தற்காலையென்றும் பாடம்.

மீப்புடைக் கராஅத் தன்ன *வென்னை
௫ நுண்பல் கருமம் நினையா
திளையனென் றிகழிற் பெறலரி தாடே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—நீங்கள் பாதுகாமின், மறவீர், நுமக்கு நாங்கள் அறிவிப்பேம்; ஊரின்கண் இளம்புதல்வர் ஆடக் கலங்குகின்ற காலளவான அளவிற்பட்ட நீருள்ளே யானையைக்கொன்றுவீழ்க்கும் இழுத்தலையுடைய முதலையையொக்கும் என் இறைவனது நுண்ணிய பலகருமத்தையும் நினையாதே அவனை இளையனென்று மதியாதிருப்பின் நுங்களுக்கு வென்றிபெறுதல் அரிது.—எ - று.

மறவீர், நுமக்குச் சாற்றுதும்; என்னை இளையனென்றிகழின் வென்றிபெறுதல் அரிது; ஆதலால், நீர் போற்றுமினெனக்கூட்டுக.

மீப்புடையென்றோதி, மிகுதியையுடையவென்று செப்பினுமமையும். (க0௪)

(க0௫.) சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி
தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினு மருவி
௫ கொள்ளுழு வியன்புலத் துழைகாலாக
மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரு
நீரினு மினிய சாயற்
பாரி வேள்பாற் பாடினை செலினே.

திணை - பாடாண்டிணை; துறை - விறலியாற்றுப்படை.

வேள்பாரியைக் கபிலர் பாடியது.

இ - ள்.—சிவந்த அணியைப்பெறுகுவை, ஒளிதங்கிய நுதலினையுடைய விறலி, பெரிய இடத்தையுடைய சுனையின்கண் தழைத்த கரிய இதழையுடைய நீலத்தினது வண்டுமொய்க்கும் புதியமலரின்கட் குளிர்ந்ததுளிகலக்க மழைபெய்யினும் பெய்யாதொழியினும் அருவி கொள்ளிற்கு உழுத பரந்தநிலத்திடை நீர் ஓடுகாலாக ஓடக் கண்ணேணியையுடைய நெடியமலையினது சிகரந்தோறும் இழிதரும் நீரினும் மிகவினிய மென்மையையுடைய வேள் †பாரிபக்கலே நீ பாடிச்செல்லின்.—எ - று.

விறலி, பாரிவேள்பாற் பாடினை செலின், சேயிழைபெறுகுவையெனக் கூட்டுக.

---

* எந்தையென்றும் பாடம்.

† பாரியின்பெருமையை, "கொடுக்கி லாதானைப் பாரி யேயென்று கூறினுங்கொடுப் பாரிலை" என்ற ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனார் திருவாக்கானுமுணர்க.

இவன்மலையாதலால், எக்காலமும் அருவி கோடுதோறிழிதருமெனப்பட்டது. புதுமலர்த் தண்சிதர் கலாவப்பெய்யினும் பெய்யாதாயினும் உழைகாலாகக் கோடு தோறிழிதரும் அருவிநீரினும் இனியவெனவியையும்.

எனவே அவன்குணங்கள் தோன்றிநின்றன. (௧௦௫)

(௧௦௬.) நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினு முடையவை
கடவுள் *பேணே மென்னா வாங்கு
மடவர் மெல்லியர் செல்லினுங்
௫ கடவன் பாரி கைவண் மையே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—நல்லனவென்றும் தீயனவென்றும் சொல்லப்படுவன சூடும்பூவாதலால் அவை இரண்டினும்வைத்து எண்ணப்படாத குவிந்த பூங்கொத்தினையும் புல்லிய இலையையுமுடைய எருக்கம்பூவாயினும் ஒருவனுடையனவற்றைத் தெய்வங்கள் விரும்பேமென்னா; அதுபோல, யாதும் அறிவில்லாதாரும் புல்லியகுணங்களையுடையாரும் செல்லினும் பாரி கைவண்மைசெய்தலைக் கடப்பாடாகவுடையன்.—எ - று.

'குவியிணர்ப் புல்லிலை யெருக்கம்' என்றது, முதற்கேற்ற அடையடுத்த ஆகுபெயர். உம்மை - இழிவுசிறப்பு. மெல்லியரென்பதற்கு வறுமையுற்றாரென்று முரைப்பர். (௧௦௬)

(௧௦௭.) †பாரி பாரி யென்றுபல வேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—பாரிபாரியென்றுசொல்லி அவன்பலபுகழையும்வாழ்த்தி அவ்வொருவனையே புகழ்வர், செவ்விய நாவையுடைய அறிவுடையோர்; பாரியாகிய ஒருவனுமேயல்லன், மாரியுமுண்டு, இவ்விடத்து உலகத்தைப் பாதுகாத்தற்கு.—எ - று.

உலகுபுரத்தற்கு மாரியுமுண்டாயிருக்கப் பாரியொருவனைப்புகழ்வர் செந்நாப் புலவரெனப் பழித்ததுபோலப் புகழ்ந்தவாறு. (௧௦௭)

---

* வேண்டேமென்னாவென்றும் பாடம்.

† இப்பாட்டினை, தொல், பொரு, புறத்திணையியலில், ௩௫ - ம் சூத்திரத்தில் "கொடுப்போ ரேத்திக் கொடாஅர்ப் பழித்தல்" என்பதிற் கொடுப்போரை யேத்தியதற்கும், உவமவியலில், "உவமத்தன்மையும்" என்னும் ௩௨ - ம் சூத்திரத்திற்கும் உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர்.

(கoஅ.) குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி
யார மாதலி னம்புகை யயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும்
பறம்பு பாடின ரதுவே யறம்பூண்டு
பாரியும் பரிசில ரிரப்பின்
வாரே னென்னு னவர்வரை யன்னே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—குறத்திமடுத்தெரிக்கப்பட்ட வற்றிய கடைக்கொள்ளி சந்தனமாதலால் அதன் அழகியதாகியபுகை அதற்கு அருகாகிய சாரற்கண் வேங்கையின் பூங்கொம்பின்கட் பரக்கும் பறம்பு, பாடுவார்க்குக் கூறிட்டுக்கொடுத்தலின் அவருடையதாயிற்று; தன்மத்தைப்பரித்துப் பாரியும் பரிசிலர்வேண்டுவாராயின் அவ்வழி வாரேனென்னுனய் அவரெல்லையின்கண்ணே நிற்பன்.—எ - று.

சந்தனப்புகை வேங்கையின்மிசைத்தவழும் பறம்பெனவே, இவையொழிய மரமின்மையும், பகைவர்சுடும் புகையின்மையும் கூறியவாருயிற்று. (கoஅ)

(கoகூ.) அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினு
முழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுந்
தாளிற் கொள்ளலிர் வாளிற் ருரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
வாடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே.

திணை - காஞ்சி; துறை - மகண்மறுத்தல்.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—இரங்கத்தக்கது, பாரியுடையபறம்பு, பெருமையைக்கொண்ட முரசினையுடைய நீயிர் மூவேந்தரும் சூழிடினும்; உழவரால் உழுது விளைக்கப்படாதன

நான்குவிளையுளையுடைத்து ; அவற்றுள், முதலாவது, சிறிய இலையையுடைய மூங்கிலினது நெல்விளையும் ; இரண்டாவது, இனிய சுளையையுடைய பலாவினதுபழம் ஊழ்க்கும் ; மூன்றாவது, கொழுவிய கொடியையுடைய வள்ளிக்கிழங்கு தாழவிருக்கும் ; நான்காவது, அழகிய நிறத்தையுடைய ஓரிபாய்தலான் அதன்மேற் *பவ ரழிந்து கனத்த நெடியமலை தேனைப்பொழியும் ; அகலநீள உயரத்தால் வானிடத்தையொக்கும், அவனதுமலை ; அவ்வானத்தின்கண் மீனையொக்கும், அம்மலையின் கட்சுனை ; அவ்விடத்து மரந்தோறும் கட்டப்பட்ட யானையையுடையீராயினும் இடந்தோறும் பரப்பப்பட்ட தேரையுடையீராயினும் உங்கள்முயற்சியாற்கொள்ள மாட்டீர் ; நுமது வாள்வலியால் அவன்தாரான் ; யான் அறிவேன், அதனைக் கொள்ளும்பரிசை: வடித்துமுறுக்கப்பட்ட நரம்பினையுடைய சிறியயாழைப்பண்ணி வாசித்து நறுநாற்றத்தையுடைய தழைத்த கூந்தலையுடைய நும்விறலியர்பின்வர ஆடினிராய்ப் பாடினிராய்ச் செல்லின் அவன் நுமக்கு நாட்டையும் மலையையும் கூடத்தருவன்.—எ - று.

அளிதோவென்பது, ஈண்டு வியப்பின்கண்வந்தது. ஓரியென்பது, தேன் முதிர்ந்தாற் பரக்கும் நீலநிறம் ; முசுக்கலையெனினும் அமையும். குன்றம் தேன் சொரியுமென இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்துமேல் ஏறிநின்றது. நான்குபயனுடைத்தென்றுவைத்து, நெல்விளையும் பழமூழ்க்கும் கிழங்குவீழ்க்கும் தேன்சொரியுமென்று அவற்றின் செய்கைதோன்றக் கூறினாரெனினும் கருதியது நெல்லும் பழனும் கிழங்கும் தேனுமாகக்கொள்க. வான்கண்ணற்றணிமலையேயென்று பாடமோதுவாருமுளர். வான்கணற்றென்றது, மலையின் ஒக்கமும், பரப்பும். மீன்கணற்றென்றது, சுனையினது பன்மையும், தெளிவும், சிறுமையும். ஈண்டுக் கண்ணென்பது, அசைநிலை. தாளேயென்றது, படையறுத்தலும் அழித்தற்கு வேண்டும் கருவிமுதலாயின இயற்றலும். விறலியரென்றது, அவர் உரிமைமகளிரை. (கoக)

(ககo.) கடந்தடு தானை மூவிருங் கூடி
யுடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே.

திணையும் துறையும் அவை.

மூவேந்தரும் பறம்புமுற்றியிருந்தாரை அவர் பாடியது.

இ - ள்.—வஞ்சியாது எதிர்நின்றுகொல்லும் படையினையுடைய மூன்றுதிறத்திருங்கூடிப் பொருதீராயினும் பறம்பு கொள்ளுதற்கு அரிது ; முந்நூறு ஊரையுடைத்து, குளிர்ந்த நல்ல பிறம்புநாடு ; அம்முந்நூறூரும் பரிசிலர்பெற்றனர் ; நீயிர் பாடினிராய்வரின், நுமக்கு யாமும் பாரியுமுள்ளேம் ; அதுவேயன்றி மலையுமுண்டு.—எ - று.

* பவணழிந்தென்றும் பிரதிபேதமுண்டு.

நீர் பாடிவரினும் பறம்புநாடு பரிசிலர்முன்னேபெற்றமையின், அது நமக்குக் கிடையாதென்பது கருத்தாகக்கொள்க. (௧௧௦)

(௧௧௧.) அளிதோ தானே பேரிருங் குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே
நீலத் திணைமலர் புரையு முண்கட்
கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—இரங்கத்தக்கது, பெரிய கரிய குன்றம்; அது வேலான்வெல்லுதல் வேந்தர்க்கோ அரிது; நீலத்தினது இணைந்தமலரையொக்கும் மையுண்டகண்ணையுடைய கிணையையுடைய விறலிக்கு எளிது, பாடினளாய்வரின்.—எ - று.

பாடினளாய்வரினென்றகருத்து: அவட்கும் அவ்வாறன்றித் தன் பெண்மையால் மயக்கி வென்றுகோடல் அரிதென்பதாம். (௧௧௧)

(௧௧௨.) அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவி
னெந்தையு முடையேமெங் குன்றும் பிறர்கொளா
ரிற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெங்
௫ குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே.

திணை - பொதுவியல்; துறை - கையறுநிலை.

பாரிமகளிர் பாடியது.

இ - ள்.—மூவேந்தரும் முற்றியிருந்த அற்றைத்திங்களின் அவ்வெள்ளிய நிலாவின்கண் எம்முடையதந்தையையுமுடையேம்; எம்முடையமலையையும் பிறர் கொள்ளார்; இற்றைத்திங்களது இவ்வெள்ளியநிலவின்கண் வென்றறைந்த முரசினையுடைய அரசர் எம்முடைய மலையையுங்கொண்டார்; யாம் எம்முடைய தந்தையையுமிழந்தேம்.—எ - று.

திங்களை மாதமென்பாருமுளர். ஒருவனை மூவேந்தருமுற்றியிருந்தும் வஞ்சித்துக்கொன்றமையின், 'வென்றெறி முரசின்வேந்தர்' என்றது, ஈண்டு இகழ்ச்சிக்குறிப்பாய்நின்றது. (௧௧௨)

(௧௧௩.) மட்டுவாய் திறப்பவு மைவிடை வீழ்ப்பவு
மட்டான் றானாக் கொழுந்துவை யூன்சோறும்
பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ முன்னே யினியே
௫ பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே

கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே.

திணையும் துறையும் அவை.

அவன்மகளிரைப் பார்ப்பார்ப்படுக்கக்கொண்டுபோவான் பறம்புவிடுத்த கபிலர் பாடியது.

இ - ள்.—மதுவிருந்தசாடியை வாய்திறப்பவும் ஆட்டுக்கிடாயைவீழ்ப்பவும் அடப்பட்டு அமைந்தொழியாத கொழுவிய துவையையும் ஊனையுமுடைய சோற்றையும் விரும்பிய பரிசே தரும் மிக்கசெல்வமுதிர்ந்து எம்மோடு நட்புச்செய்தாய், முன்பு; இப்பொழுது, பாரி இறந்தானாகக் கலங்கிச் செயலற்று நீர்வார்க்கண்ணையுடையேமாய்த் தொழுது நின்னைவாழ்த்திச்செல்லுதும், பெரிய பெயரையுடைய பறம்பே, கோற்றொழிலாகச்செய்யப்பட்ட திரண்ட குறியவளையையணிந்த முன்கையினையுடைய மகளிரது மணங்கமழும் கரியகூந்தலைத் தீண்டுதற்கு உரியவரை நினைந்து.—எ - று.

பறம்பே, பெருவளம்பழுனி நட்டனை, முன்; இனி நாறிருங்கூந்தற்கிழவரைப்படர்ந்து சேறுமெனக்கூட்டுக.

மன் - கழிவின்கண்வந்தது. வாழியும், ஓவும் - அசைநிலை. ஆணுக்கொழுந்துவையென்பதற்கு விருப்பம் அமையாத கொழுந்துவையெனினுமமையும். (கஙக)

(கஙச.) ஈண்டுநின் றோர்க்குந் தோன்றுஞ் சிறுவரை
சென்றுநின் றோர்க்குந் தோன்று மன்ற
களிறுமென் றிட்ட கவளம் போல
நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல்
ரு வாரசும் பொழுகு முன்றிற்
றேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே.

திணையும் துறையும் அவை.

அவன்மகளிரைக்கொண்டுபோம் கபிலர் பறம்புநோக்கி நின்றுசொல்லியது.

இ - ள்.—இவ்விடத்துநின்றோர்க்குந்தோன்றும், சிறிது எல்லைபோய் நின்றோர்க்குந்தோன்றும், நிச்சயமாக; யானை மென்றுபோகடப்பட்ட கவளத்தினது கோதுபோல மதுப்பிழிந்துபோகடப்பட்ட கோதுடைத்தாகிய சிதறியவற்றினின்றும் வார்ந்த மதுச்சேறொழுகும் முற்றத்தையுடைய தேர்வழங்கும் இருப்பையுடைய உயர்ந்தோனுடைய மலை.—எ - று.

நெடியோன்குன்று தோன்றுமென்றது, புகழான் உயர்ந்து காணாதார்க்கும் செவிப்புலனாகத்தோன்றும், அவனுளனாயகாலத்து; இப்பொழுது பிறமலைபோலக் கட்புலனாகத்தோன்றுமளவாயிற்றெனக் கையற்றுக்கூறியவாறாகக்கொள்க. (கஙச)

(கஙரு.) ஒருசா ரருவி யார்ப்ப வொருசார்
பாணர் மண்டை நிறையப் பெய்மார்
வாக்க வுக்க தேக்கட் டேறல்

கல்லலைத் தொழுகு மன்னே பலவே
லண்ணல் யானை வேந்தர்க்
கின்னா னாகிய வினியோன் குன்றே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—ஒருபக்கம் அருவி ஆர்த்தொழுக ஒருபக்கம் பாணருடைய மண்டைகள்நிரம்ப வாக்கவேண்டிவடிக்க உக்க இனிய கள்ளாகியதேறல் கல்லையுருட்டியொழுகும், பலவேற்படையுடனே தலைமைபொருந்திய யானையையுமுடைய வேந்தர்க்குக் கொடியோனாகிய இனியோன்மலை; அது கழிந்தது.—எ - று.

குன்று தேறல் கல்லலைத்தொழுகும்; இனி அதுகழிந்ததென்றுகூட்டுக.

அருவியும் அவனுள்ளாயின் உளதாவதென்பதுகருத்து. மன் - கழிவின்கண் வந்தது. குன்று தேறல் கல்லலைத்தொழுகுமென இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்துமேல் ஏறிநின்றது. (ககரு)

(ககசு.) தீநீர்ப் பெருங்குண்டு சுனைப்பூத்த குவளைக்
கூம்பவிழ் முழுநெறி புரள்வரு மல்கு
லேந்தெழின் மழைக்க ணின்னகை மகளிர்
புன்மூசு கவலைய முண்மிடை வேலிப்
பஞ்சி முன்றிற் சிற்றி லாங்கட்
பீரை நாறிய சுரையிவர் மருங்கி
னீத்திலைக் குப்பை யேறி யுமண
ருப்போ யொழுகை யெண்ணுப மாதோ
நோகோ யானே தேய்கமா காலை
பயில்பூஞ் சோலை மயிலெழுந் தாலவும்
பயிலிருஞ் சிலம்பிற் கலைபாய்ந் துகளவுங்
கலையுங் கொள்ளா வாகிப் பலவுங்
கால மன்றியு மரம்பயம் பகரும்
யாண ரறாஅ வியன்மலை யற்றே
யண்ண னெடுவரை யேறித் தந்தை
பெரிய நறவிற் கூர்வேற் பாரிய
தருமை யறியார் போரெதிர்ந்து வந்த
வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா வெண்ணு வோரே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—இனியநீரையுடைய பெரிய ஆழ்ந்த சுனைக்கட்பூத்த செங்கழுநீரினது முகையவிழ்ந்த புறவிதழொடித்த முழுப்பூவாற்செய்யப்பட்ட தழையசையுமல்குலை

யும் மிக்க அழகையுடைய குளிர்ந்த கண்ணினையும் இனியமுறுவலையுமுடையமகளிர் புல்மொய்த்த கவலையையுடையவாகிய முள்ளால்நெருங்கிய வேலியையும் பஞ்சுபரந்த முற்றத்தையுமுடைய சிறியமனையிடத்தின்கட் பீர்க்குமுளைத்த சுரை படர்ந்தவிடத்தில் ஈத்திலையையுடைய குப்பையின்கண்ணேறி உமணர் உப்புச் செலுத்தும் சகடத்தை எண்ணுவர்; நோவேன், யான்; எனதுவாழ்நாள் கெடுவதாக; பயின்ற பூவையுடையசோலைக்கண் மயிலெழுந்து ஆடவும் பயின்ற பெரிய மலையின்கண்ணேயேறி முசுக்கலை தாவியுகளவும் அம்முசுக்கலையும் நுகர்ந்துவெறுத்தலாற் கொள்ளாவாம்பரிசு காலமன்றாகவும் மரங்கள்பலவும் காயும்பழமுமுதலாயினவற்றை விளைந்துகொடுக்கும் புதுவருவாயொழியாத அகன்ற மலையைப்போலும் பயனுடைத்தாகிய தலைமையையுடைய உயர்ந்த வரையின்கண்ணேயேறித் தம்முடைய தந்தையாகிய மிக்க மதுவினையும் கூரியவேலினையுமுடைய பாரியது பெறுதற்கருமையை யறியாராய்ப் போரேற்றுவந்த வென்றிப்பட்ட சேனையையுடைய அரசரது பொன்னாற்செய்யப்பட்ட கலமுதலியவற்றையுடைய மனஞ்செருக்கிய குதிரையையெண்ணுவார்.—எ - று.

வியன்மலையென்றது, அரைமலையை. நெடுவரையென்றது, உச்சிமலையை.

இன்னகைமகளிர், நெடுவரையேறி முன்பு வேந்தர்கலிமாவை எண்ணுவோர், இப்பொழுது ஈத்திலைக்குப்பையேறி உமணர் உப்போயொழுகையை எண்ணுவர்; இதற்கு நோவேன்யான்; எனதுவாழ்நாள் கெடுவதாகவென வினைமுடிவுசெய்க.

அற்றேயென்னுமேகாரம் - அசைநிலை; வியன்மலை அத்தன்மைத்தெனப் பிறிதோர்தொடராக்கி உரைப்பினுமமையும். (ககசு)

(ககஎ.) மைமீன் புகையினுந் தூமந் தோன்றினுந்
தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்
வயலக நிறையப் புதற்பூ மலர
மனைத்தலை மகவை யீன்ற வமர்க
ணாமா நெடுநிரை நன்பு லாரக்
கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே
பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கு
மாய்தொடி யரிவையர் தந்தை நாடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—சனிமீன் புகைக்கோளொடுகூடிப் புகையினும் எல்லாத்திசையினும் புகைதோன்றினும் தென்றிசைக்கண்ணே வெள்ளிபோக்குறினும் வயலிடம் விளைவுமிகப் புதலிடத்துப் பூமலர மனையிடத்துக் குழவியையீன்ற மேவியகண்ணையுடைய ஆமாவினது நெடியநிரை நல்லபுல்லைமேயக் கோல் செவ்விதாகலின் அமைந்தோர் பலராக மழைபிழைப்பறியாத புல்லியநிலத்தின்கண்ணது, இளையவெருகினது

கூரிய பல்லையொப்பப் பசிய இலையையுடைய முல்லைமுகைக்கும் நுண்ணிய தொழிலையுடைய வளையினையணிந்த மகளிருடைய தந்தைநாடு.—எ - று.

பல்கியென்பதனைப் பல்கவெனத்திரிக்க.

அரிவையர்தந்தைநாடு, பெயல்பிழைப்பறியாப் புன்புலத்ததுவெனக்கூட்டுக.

என்றதனாற்போந்தது: புன்புலத்ததாயிருந்ததே! அது பெயல்பிழைப்பறியாமை, கோல்செம்மையினான் உளதாயதன்றே; அவ்வாறு கோல்செவ்விதாக நிறுத்தியவனை இழப்பதேயென்று அவன் நாடுகண்டு இரங்கியவாறாகக்கொள்க. (கக எ)

(கக அ.) அறையும் பொறையு மணந்த தலைய
வெண்ணாட் டிங்க ளனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளங் கீள்வது மாதோ
கூர்வேற் குவைஇய மொய்ம்பிற்
௫ தேர்வண் பாரிதண் *பறம்பு நாடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—பாறையும் சிறுகுவடுங்கூடிய தலையையுடையவாகிய எட்டாம்பக்கத்துப்பிறைபோலும் வளைந்த கரைகளையுடைத்தாகிய தெளிந்தநீரையுடைய சிறிய குளம் பாதுகாப்பாரின்மையின் உடைவதுபோலும், கூரியவேலையேந்திய திரண்டதோளையுடைய தேர்வண்மையைச்செய்யும் பாரியதுகுளிர்ந்த பறம்புநாடு.—எ-று.

நாடுகுளங்கீள்வதென இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்துமேல் ஏறி நின்றது. மாதோ - அசைநிலை. (கக அ)

(ககக.) கார்ப்பெய றலைஇய காண்பின் காலைக்
களிற்றுமுக வரியிற் றெறுழ்வீ பூப்பச்
செம்புற் றீயலி னின்னளைப் புளித்து
மென்றினை யாணர்த்து நந்துங் கொல்லோ
௫ நிழலி னீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை யிறந்து
மிரவலர்க் கீயும் வள்ளியோ னாடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—கார்காலத்துமழை பெய்துமாறிய காட்சியினியகாலத்துக் களிற்றுமுகத்தின்கட் புகர்போலத் தெறுழினது மலர்பூப்பச் செம்புற்றின்கண் ஈயலை இனியமோரோடு கூட்டி அடப்பட்ட புளிங்கறியையுடைத்து; மெல்லிய தினையா

* "சுரும்புண, நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச், சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய, பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற், பறம்பிற் கோமான் பாரியும்" என்பது சிறுபாணாற்றுப்படை [அடி அ௯ - கக].

கிய புதுவருவாயையுடைத்து, முன்பு; இனி அது கெடுங்கொல்லோ! நிழலில்லாத நெடிய வழிக்கணின்ற தனிமரத்தையொப்ப முரசையுடைய அரசரின்மிகுத்தும் இரவலர்க்குவழங்கும் வண்மையையுடையவனதுநாடு.—எ - று.

பூப்பவென்னும் வினையெச்சம் இன்னாப் புளித்தென்னும் குறிப்பொடுமுடிந்தது.

வள்ளியோனுடு, இன்னாப்புளித்து ; யாணர்த்து ; அது நந்துங்கொல்லோ வெனக்கூட்டுக.

தெறுழென்றது, காட்டகத்ததோர்கொடி ; புளிமாவென்றுரைப்பாருமுளர்.

(கஉ0.) வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவற்
கார்ப்பெயற் கலித்த பெரும்பாட் டீரத்துப்
பூழி மயங்கப் பலவுழுது வித்திப்
பல்லி யாடிய பல்கிளைச் செவ்விக்
களைகால் கழாலிற் றோடொலிபு நந்தி
மென்மயிற் புனிற்றுப் பெடைகடுப்ப நீடிக்
கருந்தாள் போகி யொருங்குபீள் விரிந்து
கீழு மேலு மெஞ்சாமைப் பலகாய்த்து
வாலிதின் விளைந்த புதுவர கரியத்
தினைகொய்யக் கவ்வை கறுப்ப வவரைக்
கொழுங்கொடி விளர்க்காய் கோட்பத மாக
நிலம்புதைப் பழுனிய மட்டின் றேறல்
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து
நறுநெய்க் கடலை விசைப்பச் சோறட்டுப்
பெருந்தோ டாலம் பூசன் மேவர
வருந்தா யாணர்த்து நந்துங் கொல்லோ
இரும்பல் கூந்தன் மடந்தையர் தந்தை
யாடுகழை நரலுஞ் சேட்சிமைப் புலவர்
பாடி யானாப் பண்பிற் பகைவ
ரோடுகழற் கம்பலை கண்ட
செருவெஞ் சேஎய் பெருவிற லூரே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—வெம்மைமுதிர்ந்த வேங்கைமரத்தையுடைய சிவந்த மேட்டுநிலத்துக் கார்காலத்துமழையான்மிகுந்த பெரியசெவ்வியையுடைய ஈரத்தின்கட் புழுதி கலக்கப் பலசால்பட உழுது வித்தித் தாளியடிக்கப்பட்ட பலகிளையையுடைய செவ்வியின்கட் களையை அடியினின்றும் களைதலான் இலைதழைத்துப் பெருகி மெல்லிய மயிலினது ஈன்றணிய பேடையையொப்ப ஓங்கிக் கரிய தண்டுநீண்டு

எல்லாம் ஒருங்கு சூல்விரிந்து கதிரினது அடியும் தலையும் ஒழியாமல் மிகக்காய்த்துச் சீரிதாகவிளைந்த புதியவரகையறுக்கத் தினையையரிய எள்ளிளங்காய்கறுப்ப அவரையினது கொழுவிய கொடியின்கண் வெள்ளைக்காய் அறுக்கும்செவ்வியாக நிலத்தின்கட் புதைக்கப்பட்ட முற்றிய மதுவாகிய தேறலைப் புல்லாலே வேயப்பட்ட சிறியமனையின்கட் குடியுள்ள இடந்தோறும் நுகரக்கொடுக்க நறியநெய்யிலே கடலைதுள்ள அதனோடு சோற்றையட்டு ஊட்டுதற்குப் பெரியதோளையுடைய மனையாள் கலம்பூசுதலைப்பொருந்த வருந்தவேண்டாத புதுவருவாயையுடைத்து, முன்பு; இனி அது கெடும்போலும்! கரிய பலவாகியகூந்தலையுடைய மடந்தையர்க்குத் தந்தையாகிய அசைந்த மூங்கில் இழைந்தொலிக்கும் உயர்ந்த உச்சியையுடைய, புலவர் பாடப்பட்டமையாத தன்மையையுடைய பகைவரது புறக்கொடுத்தோடும் வீரக்கழலினது ஆரவாரத்தைக்கேட்டுநாணிப் பின்செல்லாது கண்டுநின்ற போரைவிரும்பிய சேயையொக்கும் பெரிய வென்றியையுடையவனது நாடு.—எ - று.

வித்தி ஆடியசெவ்வியெனவியையும். நந்தியென்பதுமுதலாய வினையெச்சங்கள் விளைந்தவென்னும் பெயரெச்சவினையோடும், அரியவென்பதுமுதலாக மேவரவென்பதிறுகநின்ற வினையெச்சங்கள் யாணர்த்தென்னும் குறிப்புவினையோடுமுடிந்தன. பகர்ந்தென்பது, பகரவெனத் திரிக்கப்பட்டது. விசைப்பச் சோறட்டு மேவரவென இயையும்.

செருவெஞ்சேஎய் பெருவிறலது சேட்சிமையையுடையநாடு, யாணர்த்து; அது நந்துங்கொல்லோவெனக்கூட்டுக.

பெருந்தோளென்பது, பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. வெப்புளென வெம்மைக்கு அதுவும் ஓர் வாய்பாடாய்நின்றது. வெம்மையை உள்ளும் முதிர்ந்தவெனினுமமையும். (கஉ0)

(கஉக.) *ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிது
மீத லெளிதே மாவண் டோன்ற
லதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே.

திணை - அது; துறை - பொருண்மொழிக்காஞ்சி.
மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியது.

இ - ள்.—ஒருதிசைக்கண் வள்ளியோனாகிய ஒருவனைநினைந்து நான்குதிசையினுமுள்ள பரிசின்மாக்கள்பலரும் வருவர்; அவர் வரிசையறிதல் அரிது; கொடுத்தல் மிகவும் எளிது; பெரிய வண்மையையுடையதலைவ, நீ அவ்வரிசையறிதலை நன்றாக அறிந்தாயாயின், அறிவுடையோரிடத்து வரிசை கருதாது ஒருதரமாகப்பார்த்தலைத் தவிர்வாயாக.—எ - று. (கஉக)

---

* இப்பாட்டினை, பாடாண்டிணைக்குரிய இருவகைவிடையுள் சிறிதென்றவிடைக்கு உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், ௩௫ - ம் சூத்திரவுரை].

(கஉஉ.) கடல்கொளப் படாஅ துடலுந ருட்கார்
கழல்புனை திருந்தடிக் காரிநின் னாடே
யழல்புறந் தரூஉ மந்தண ரதுவே
வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவரு ளொருவன் றுப்பா கியரென
வேத்தினர் தரூஉங் கூழே நுங்குடி
வாழ்த்தினர் வரூஉ மிரவல ரதுவே
வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
யரிவை தோளள வல்லதை
நினதென விலைநீ பெருமிதத் தையே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—கடலாற்கொள்ளப்படாது, அதனைக்கொள்ளுதற்குப் பகைவர் மேற்கொள்ளார், வீரக்கழலணிந்த இலக்கணத்தாற்றிருந்திய நல்ல அடியையுடைய காரி, நினதுநாடு; அது, வேள்வித்தீயைப் பாதுகாக்கும் பார்ப்பாருடையது; (கெடாத செல்வத்தினையும் வென்றிபொருந்திய படையையுமுடைய மூவேந்தருள் ஒருவனுக்கு வலியாகவேண்டுமென்று அம்மூவர்பானின்றும்வந்தோர் தனித்தனி புகழ்ந்து நினக்குத்தரும்பொருள், நுமதுகுடியை வாழ்த்தினராய்வரும் பரிசிலருடையது); ஆதலால், வடதிசைக்கட்டோன்றும் அருந்ததியையொக்கும் கற்பினையும் மெல்லிய மொழியினையுமுடைய அரிவையுடைய தோள்மாத்திரையல்லது நின்னுடையதென்றுசொல்ல ஒன்றுடையையல்லையாயிருக்கவும் நீ பெரிய செருக்கினையுடையையாயிராநின்றாய்; இதற்குக்காரணமென்னை.—எ - று.

ஏத்தினர்தரூஉமென்று பன்மையாற்கூறியது, அவ்வேந்தன் அமைச்சரை. மூவருள் யாதொருவன்; எனக்குத் துப்பாகியரென அம்மூவரும் ஏத்தினர்தரூஉமென்று உரைப்பினுமமையும்.

நாடு அந்தணரது; கூழ் இரவலரது; அரிவைதோளளவல்லதை நினக்கு உரித்தாகக்கூறுதற்கு யாதும் இல்லையாயிருந்தது; நீ பெருமிதத்தையுடையையாயிருந்தாயென வியந்துகூறியவாறு. (கஉஉ)

(கஉகூ.) நாட்கள் ளுண்டு நாண்மகிழ் மகிழின்
யார்க்கு மெளிதே தேரீ தல்லே
தொலையா நல்லிசை விளங்கு மலையன்
மகிழா தீத்த விழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி யுறையினும் பலவே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—நாட்காலையே மதுவையுண்டு நாளோலக்கத்துமகிழ்ச்சியைமகிழின், தேர்வழங்குதல் யாவர்க்கும் எளிது; கெடாத நல்ல புகழ்விளங்குமலையன் மது நுகர்ந்து மகிழாது வழங்கிய பொற்படைகளால் அணியப்பட்ட உயர்ந்ததேர், பயன்பொருந்திய முள்ளூர்மலையுச்சியின்கணுண்டாகிய மழையினதுதுளியினும் பல.—எ - று.

இதன்கருத்து: ஏனையோர்கொடை செயற்கையென்றும், இவன்கொடை இயற்கையென்றும் கூறியவாறு. (கஉ௩)

(கஉ௪.) நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குவ ரல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—நல்லநாளன்றாகப்போகிப் புள்நிமித்தம் இடையேநின்று தடுப்பச் செவ்வியன்றாகச்சென்றுகூடிக் கூறுபாடன்றாக முனியும்வார்த்தைகளைச்சொல்லி னும் வறிதாக மீள்வாரல்லர், ஒழுங்குபட ஓசைநிறைந்து ஒலிக்கும் அருவியை யுடைய பெருமைபொருந்திய மலையையுடையோனைப்பாடியவர்கள்.—எ - று.

மலையற்பாடியோர், வறிதுபெயர்குவரல்லரெனக்கூட்டுக.

அன்றியென்பது, அன்றெனத்திரிந்தது; செய்யுளாகலின். வறிதென்னும் குறிப்புவினையெச்சம், பெயர்குவரல்லரென்பதனுட் பெயர்தலோடு முடிந்தது. வறியரென்றுரைப்பாருமுளர். (கஉ௪)

(கஉரு.) பருத்திப் பெண்டின் பனுவ லன்ன
நெருப்புச்சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை
பரூஉக்கண் மண்டையொ டூழ்மாறு பெயர
வுண்கு மெந்தைநிற் காண்குவந் திசினே
நள்ளா தார்மிடல் சாய்த்தவல் லாள
நின்மகி ழிருக்கையே
யுழுத நோன்பக டழிதின் றாங்கு
நல்லமிழ் தாகநீ நயந்துண்ணு நறவே
குன்றத் தன்ன களிறு பெயரக்
கடந்தட்டு வென்றேனு நிற்கூ றும்மே
வெலீஇயோ னிவனெனக்
கழலணிப் பொலிந்த சேவடி நிலங்கவர்பு
விரைந்து வந்து சமரந் தாங்கிய
வல்வேன் மலைய னல்ல னாயி

நல்லமர் கடத்த லெளிதும னமக்கெனத்
தோற்றோன் றானு நிற்கூ றும்மே
தொலைஇயோ னிவனென,
வொருநீ யாயினை பெரும பெருமழைக்
கிருக்கை சான்ற வுயர்மலைத்
திருத்தகு சேஎய்நிற் பெற்றிசி னோர்க்கே.

திணை - வாகை; துறை - அரசவாகை.

சேரமான்மாந்தரஞ்சேரலிரும்பொறையும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருதவழிச் சோழற்குத் *துப்பாகிய தேர்வண்மலையனை வடவண்ணக்கன்பெருஞ்சாத்தனார் பாடியது.

இ - ள்.—பருத்திநூற்கும்பெண்டாட்டியது சுகிர்ந்த பஞ்சுபோன்ற நெருப்புத் தன்வெம்மை ஆறுதற்கேதுவாகிய நிணமசைந்த கொழுவியதடிகளைப் பெரிய உடலிடத்தையுடைய கள்வார்த்தமண்டையோடு முறைமுறையாக ஒன்றற்கொன்று மாறுபட உண்பேமாக, எம்முடைய தலைவ, நின்னைக்காண்பேன்வந்தேன்; பகைவரது வலியைத்தொலைத்த வலிய ஆண்மையையுடையோய், நினது மகிழ்ச்சியையுடைய இருக்கைக்கண்; உழுத வலியபகடு பின் வைக்கோலைத்தின்றாற்போல நினது தாளாற்றலாற்செய்தபொருளை யாவர்க்கும் அளித்துப் பின் நீ விரும்பியுண்ணுங்கள்ளு, நல்ல அமிழ்தாவதாக; மலைபோலும்யானைபட எதிர்நின்று கொன்று வென்றவனும், நம்மை வெல்வித்தோனிவனென நின்னையே மகிழ்ந்துசொல்லும்; வீரக்கழலாகிய அணியாற்சிறந்த செய்ய அடியாலே போர்க்களத்தைக் கைக்கொள்ளவேண்டி விரைந்துவந்து போரைத்தடுத்த வலிய வேலினையுடைய மலையனல்லனாயின் நல்ல போரைவெல்லுதல் நமக்கு எளிதெனத் தோற்றவனும், நம்மைத் தொலைவித்தோன் இவனென நின்னையே புகழ்ந்துசொல்லும்; ஆதலால், நீ ஒருவனாயினாய், பெரும, பெரிய மழைக்கு இருப்பிடமாதற்கமைந்த உயர்ந்த மலையையுடைய திருத்தக்க சேயையொப்பாய், நின்னை நட்பாகவும் பகையாகவும் பெற்றோர்க்கு.—எ - று.

பனுவலன்னநிணமென இயையும். நிலங்கவர்பென்பது, கவரவெனத் திரிக்கப்பட்டது; எமதுநிலத்தைக் கைக்கொண்டெனினுமமையும். தாளாற்றலாற் செய்தபொருளில் நல்லனவெல்லாம் பரிசிலர்க்குவழங்கி எஞ்சியது உண்டலான், அழிதின்றாங்கென்றார். காண்குவந்தென்பன - ஒருசொன்னீர்மைப்பட்டு உண்குமென்பதற்கு முடிபாய்நின்றன. உண்குமென்பது, சுற்றத்தை உளப்படுத்திநின்றமையின், பன்மையொருமை வழுவமைதியாய்நின்றது. மன் - கழிவின்கண்வந்தது.

பெரும, சேஎய், வென்றோனும், வெலீஇயோனிவனென நிற்கூறும்; தோற்றோனும், தொலைஇயோனிவனென நிற்கூறும்; அதனால், நிற் பெற்றிசினோர்க்கு ஒருநீயாயினையாதலால், நின்மகிழிருக்கைக்கண்ணே உண்கும் காண்குவந்திசின்; பகடு அழிதின்றாங்கு நீ உண்ணுநறவு நல்ல அமிழ்தாகவென மாறிக்கூட்டுக.

---

* துப்பாகிய ஒருவனும் மலையனை வடமவண்ணத்தன் பேரிசாத்தனென்றும் பிரதிபேதமுண்டு.

கரிய மங்கலியசூத்திரத்தையணிந்த மகளிருடனே பொலிவழிந்துசாய்ந்ததென்று சொல்லுப, ஆயுடையகோயிலை; நுகர்தற்கினிதாகிய தாளிப்பையுடைய அடிசிலைப் பிறர்க்கு உதவலின்றித் தம்முடையவயிற்றையேநிறைத்துச் சொல்லுதற்கமைந்த மேம்பட்டபுகழைநீங்கிய முரசுபொருந்திய செல்வத்தினையுடைய அரசர்கோயில், அதனை ஒவ்வாது.—எ - று.

என்றதன் கருத்து: செல்வர்நகர், பெருந்திருவுடைமையிற் சிறந்ததுபோன்றிருப்பினும் ஆய்கோயில் வறிதெனினும் அஃது அதனினுஞ்சிறந்ததென்பதாம்.

ஆய்கோயில் சாயின்றென்ப; ஆயினும், முரசுகெழுசெல்வர்நகர் இதனையொவ்வாதெனக்கூட்டுக. (கஉஎ)

(கஉஅ.) மன்றப் பலவின் மாச்சினை மந்தி
யிரவலர் நாற்றிய விசிகூடு முழவின்
பாடின் றெண்கண் கனிசெத் தடிப்பி
னன்னச் சேவன் மாறெழுந் தாலுங்
௫ கழல்றொடி யாஅய் மழைதவழ் பொதியி
லாடுமகள் குறுகி னல்லது
பீடுகெழு மன்னர் குறுகலோ வரிதே.

திணை - பாடாண்டிணை; துறை - வாழ்த்து; இயன்மொழியுமாம்.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—ஊர்ப்பொதுவின்கண் பலவினது பெரிய கோட்டின்கண்வாழும் மந்தி பரிசிலர்தூக்கிவைக்கப்பட்ட பிணிப்புப்பொருந்திய மத்தளத்தினது ஓசையினிய தெளிந்தகண்ணைப் பலாப்பழமென்றுகருதித் தட்டினவிடத்து அதன்கண் வாழும் அன்னச்சேவல் அவ்வோசைக்குமாறாகவெழுந்து ஒலிக்கும் கழலவிடப்பட்ட வீரவளையையுடைய ஆயது முகில்படியும் பொதியின்மலை, ஆடச்செல்லுமகள் அணுகினல்லது பெருமைபொருந்திய அரசரணுகுதலரிது.—எ - று.

இது, கொடைச்சிறப்பும் வென்றியும் கூறியவாறாயிற்று. (கஉஅ)

(கஉகூ.) குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கமைப் பழுனிய தேறன் மகிழ்ந்து
வேங்கை முன்றிற் குரவை யயருந்
தீஞ்சுளைப் பலவின் மாமலைக் கிழவ
௫ ஞாஅ யண்டிர னடுபோ ரண்ணா
லிரவலர்க் கீத்த யானையிற் கரவின்று
வான மீன்பல பூப்பி னானா
தொருவழிக் கருவழி யின்றிப்
பெருவெள் ளென்னிற் பிழையாது மன்னே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—குறிய இறப்பையுடைய சிறியமனையின்கட்குறமக்கள் வளைந்த மூங்கிற்குழாயின்கண் வார்த்திருந்துமுதிர்ந்த மதுவைநுகர்ந்து வேங்கைமரத்தையுடைய முற்றத்தின்கட் குரவைக்கூத்தையாடும் இனியசுனையையுடைத்தாகிய பலமரத்தையுடைய பெரியமலையையுடையோன், ஆயாகிய அண்டிரன், கொல்லும் போரைச்செய்யுந்தலைவன், அவன் இரப்போர்க்குக்கொடுக்கப்பட்ட ஆனைத்தொகை, மேகமறைத்தலின்றி ஆகாயம் பலமீனையும்பூக்குமாயின் அமையாது, ஒரிடத்தும் கரிய இடம் இல்லையாகப் பெருக வெண்மையைச்செய்யுமாயின் அம்மீன்றொகை அதனுக்குத் தப்பாது.—எ - று.

யானையிற்பிழையாதென இயையும். மன் - அசை. (கஉகூ)

(கூ௱௦.) விளங்குமணிக் கொடும்பூ ணாஅய் நின்னாட்
டிளம்பிடி யொருசூல் பத்தி னும்மோ
நின்னுநின் மலையும் பாடி வருநர்க்
கின்முகங் கரவாது வந்துநீ யளித்த
௫ வண்ணல் யானை யெண்ணிற் கொங்கர்க்
குடகட லோட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—விளங்கிய மணிகளானியன்ற வளைந்தபூணாகிய ஆரத்தையுடைய ஆயே, நினதுநாட்டின்கண் இளையபிடி ஒருகருப்பம் பத்துக்கன்றுபெறுமோதான்? நின்னையும் நின்மலையையும் பாடிவரும் பரிசிலர்க்கு இனியமுகத்தை ஒளியாது வெளிப்படுத்திக் காதலித்து நீகொடுத்த தலைமையையுடைத்தாகிய யானையையெண்ணின், நீ கொங்கரை மேல்கடற்கண்ணே ஒட்டப்பட்டநாளில் அவர் புறக்கொடுத்தலால் தம்மிடத்தினின்றும் பெயர்த்துப்போகடப்பட்ட வேலினும்பல.—எ - று.

தலைப்பெயர்த்திட்டவேலென்றகருத்து : படைக்கலமில்லாதாரை ஏதஞ்செய்வாரில்லையாதலின், தம்முயிர்க்கு அரணாகப் பெயர்த்திடப்பட்டவேலென்பதாம்; அன்றி, புறக்கொடுத்தோடுகின்றார் முன்னோக்கிச் சாய்த்துப்பிடித்த வேலென்பாருமுளர்.

இதனால், கொடைச்சிறப்பும் வென்றிச்சிறப்பும் கூறியவாறு. (கூ௱௦)

(கூ௱க.) மழைக்கணஞ் சேக்கு மாமலைக் கிழவன்
வழைப்பூங் கண்ணி வாய்வா ளண்டிரன்
குன்றம் பாடின் கொல்லோ
களிறுமிக வுடையவிக் கவின்பெறு காடே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—முகிலினம் சென்றுறங்கும் உயர்ந்தமலைக்குத்தலைவன், சுரபுன்னைப் பூவால் தொடுக்கப்பட்ட கண்ணியினையும் வாய்த்தவாளினையுமுடைய அண்டிரனது

மலையைப்பாடினவோ? களிறுகளை மிகவுமுடைய, இந்தக் கவிகையுடையகாடு.—எ - று.

யானைக்குப் பிறப்பிடமாயிருக்கிறகாட்டினும் அண்டிரனைப்பாடினோர், யானை மிகவுமுடையரென்று அவன் கொடைச்சிறப்புக் கூறியவாறு.

ஆய்க்கு அண்டிரனென்பதும் ஓர்பெயர். (கருக)

(கருஉ.) முன்னுள் ளுவோனைப் பின்னுள்ளி னேனே
யாழ்கென் னுள்ளம் போழ்கென் னாவே
பாழூர்க் கிணற்றிற் றூர்கவென் செவியே
நரந்தை நறும்புன் மேய்ந்த கவரி
ரு குவளைப் பைஞ்சுனை பருகி யயல
தகரத் தண்ணிழற் பிணையொடு வதியும்
வடதிசை யதுவே வான்றோ யிமயந்
தென்றிசை யாஅய் குடியின் றாயிற்
பிறழ்வது மன்னோவிம் மலர்தலை யுலகே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

இ - ள்.—யாவரினும் முன்னே நினைக்கப்படுமவனைப் பின்பே நினைத்தேன், யான்; அவ்வாறுநினைந்தகுற்றத்தால் எனதுள்ளம் அமிழ்ந்திப்போவதாக; அவனையன்றிப் பிறரைப்புகழ்ந்தநாவும் கருவியாற் பிளக்கப்படுவதாக; அவன்புகழன்றிப் பிறர்புகழைக்கூறக்கேட்ட எனதுசெவியும் பாழ்பட்ட ஊரின்கட் கிணறுபோலத் தூர்வதாக; நரந்தையையும் நறியபுல்லையுமேய்ந்தகவரிமாக் குவளைப்பூவையுடைய பசிய சுனையினீரைநுகர்ந்து அதன்பக்கத்தவாகிய தகரமரத்தினது குளிர்ந்தநிழலின்கண் தனது பிணையுடனேதங்கும் வடதிசைக்கண்ணதாகிய வானைப்பொருந்தும் இமயமலையும் தென்றிசைக்கண் ஆய்குடியும் இல்லையாயின் இந்தப் பரந்த இடத்தையுடைய உலகம் கீழ்மேலதாகிக்கெடும்.—எ - று.

*'முன்னுள்ளுவோனைப் பின்னுள்ளினேன்' என உள்ளம் ஆழ்தற்குக்காரணங்கூறினமையால், பிறரைப்புகழ்ந்த நாவெனவும், பிறர்புகழ்கேட்ட செவியெனவும் ஏனையவற்றிற்கும் காரணம் வருவித்துரைக்கப்பட்டது; அன்றி வடதிசை, தேவருலகோடு ஒத்தலான், இமயத்தால் தாங்கவேண்டுவதில்லை; தென்றிசைக்கண் ஆய்குடி தாங்கிற்றில்லையாயின், இவ்வுலகுபிறழும்; அதனால் இமயத்துக்குமுன்னுள்ளப்படுவோனைப் பின்னுள்ளினேனாதலால், எனதுள்ளம் ஆழ்க; எனதுநாப் போழ்க; எனதுசெவி தூர்வதாகவென்றதாக்கி உரைப்பினுமமையும். (கருஉ)

(கருரு.) மெல்லியல் விறலிநீ நல்லிசை செவியிற்
கேட்பி னல்லது காண்பறி யலையே

* 'இமயத்திற்கு ஒருதாரமாக உலகத்தைத்தாங்கும் ஆய் உளனாகவும் பிறரிசையைக்கேட்டசெவி தூர்க; கேட்டுப் பிறரை நினைத்தவுள்ளம் ஆழ்க; நினைத்துப் பிறரைப்பாடியநாப் போழ்வதாகவென உள்ளமொழிந்தனவற்றிற்கும் காரணம் வருவித்துக்கொள்க' என்று மிதிலைப்பட்டிப் பிரதியிலுள்ளது.

காண்டல் வேண்டினை யாயின் மாண்டநின்
விரைவளர் கூந்தல் வரைவளி யுளரக்
கலவ மஞ்ஞையிற் காண்வர வியலி
மாரி யன்ன வண்மைத்
தேர்வே ளாயைக் காணிய சென்மே.

திணை - அது ; துறை - விறலியாற்றுப்படை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—மெல்லிய இயல்பினையுடையவிறலி, நீ நல்லபுகழைச் செவியாற் கேட்பினல்லது அவன்வடிவைக் காண்டலறியாய் ; காண்டலை விரும்பினுயாயின், மாட்சிமைப்பட்ட நினது மணம்வளரும் கூந்தலிலே வரையிடத்துக் காற்றுவந் தசைப்பப் பீலியையுடைய மயில்போலக் காட்சியுண்டாகநடந்து மழைபோன்ற வண்மையையுடைய தேரினையுடைய வேள் ஆயைக்காணச்செல்வாயாக.—எ - று.

'விரைவளர் கூந்தல் வரைவளி யுளர' என்றது, 'கொண்டைமேற்காற் றடிக்க' என்பதோர்வழக்குப்பற்றிநின்றது. அதனாற் பயன்: பிறிதொன்ருல் இடை யூறில்லையென்பதாம். ஆய் மாரியன்னவண்மையனுதலின், விறலியை அம்மாரி யைக்கண்ட மயில்போலக் களித்துச்செல்லென்றவாறும். யாழநின்னென்று பாட மோதுவாருமுளர். (கஙங)

(கஙச.) இம்மைச் செய்தது மறுமைக் காமெனு
மறவிலை வாணிக னாஅ யல்லன்
பிறருஞ் சான்ருேர் சென்ற நெறியென
வாங்குப் பட்டன் றவன்கைவண் மையே.

திணை - அது ; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—இப்பிறப்பின்கட்செய்ததொன்று மறுபிறப்பிற்குதவுமென்றுகருதிப் பொருளை விலையாகக்கொடுத்து அதற்கு அறங்கொள்ளும்வாணிகன் ஆயல்லன் ; அமைந்தோர்பிறரும் போயவழியென்று உலகத்தார்கருத அந்த நற்செய்கையிலே பட்டது, அவனது கைவண்மை.—எ - று.

அன்றி, ஆய் அறவிலைவாணிகனல்லன் ; பிறரும் சான்ருேர்சென்ற நெறி யெனக்கருதி அச்செய்கையிலேபட்டதன்று, அவன் கைவண்மையென்றுரைப்பாரு முளர். இதற்குப் பட்டன்றென்பது மறைப்பொருள்படாமையின், பட்டதன்றென் பது பட்டன்றென விகாரமாகக்கொள்க. (கஙச)

(கஙரு.) கொடுவரி வழங்குங் கோடுயர் நெடுவரை
யருவிடர்ச் சிறுநெறி யேறலின் வருந்தித்
தடவரல் கொண்ட தகைமெல் லொதுக்கின்
வளைக்கை விறலியென் பின்ன ளாகப்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
வரிநவில் பனுவல் புலம்பெயர்ந் திசைப்பப்

படுமலை நின்ற பயங்கெழு சீறியா
ழொல்க லுள்ளமொ டொருபுடைத் தழீஇப்
புகழ்சால் சிறப்பினி னல்லிசை யுள்ளி
வந்தனெ னெந்தை யானே யென்று
மன்றுபடு பரிசிலர்க் காணிற் கன்றொடு
கறையடி யானை யிரியல் போக்கு
மலைகெழு நாடன் மாவே ளாஅய்
களிறு மன்றே மாவு மன்றே
யொளிறுபடைப் புரவிய தேரு மன்றே
பாணர் பாடுநர் பரிசில ராங்கவர்
தமதெனத் தொடுக்குவ ராயி னெமதெனப்
பற்ற றேற்றுப் பயங்கெழு தாயமொ
டன்ன வாகநின் னூழி நின்னைக்
காண்டல் வேண்டிய வளவை வேண்டா
ருறுமுரண் கடந்த வாற்றற்
பொதுமீக் கூற்றத்து நாடுகிழ வோயே.

திணை - அது ; துறை - பரிசிற்றுறை.

அவனை அவர் பாடியது.

இ - ள்,—புலியியங்கும் சிகரமுயர்ந்த நெடியமலையின்கண் ஏறுதற்கரிய பிளப்பின்கட் சிறியவழியையேறுதலான் வருத்தமுற்று]உடல்வளைவைப்பொருந்திய பயில அடியிட்டுநடக்கின்ற மெல்லியநடையினையுடைய வளையையணிந்த கையையுடைய விறலி என்பின்னேவரப் பொன்னைக் கம்பியாகச்செய்தாற்போன்ற முறுக்கடங்கிய நரம்பினையுடைய வரிப்பொருண்மையோடுபயிலும் பாட்டு நிலந்தோறும் மாறிமாறி யொலிப்பப் படுமலைப்பாலை நிலைபெற்ற பயன்பொருந்திய சிறியயாழைத் தளர்ந்த நெஞ்சத்துடனே ஒருமருங்கிலேயணைத்துக்கொண்டு புகழ்தற்கமைந்த தலைமையை யுடைய நினது நல்லபுகழை நினைந்துவந்தேன், என்னுடைய இறைவா, யான் ; எந்நாளும் மன்றத்தின்கண்வந்த பரிசிலரைக்காணிற் கன்றுடனே கறைபொருந்திய அடியையுடைய யானையை அணியணியாகச் சாய்த்துக்கொடுக்கும் மலையையுடையநாடனே, மாவேளாகிய ஆயே, யாம்வேண்டியது : யானையுமன்று; குதிரையுமன்று ; விளங்கிய பொற்படையையுடைய குதிரையிற்பூட்டப்பட்ட தேருமன்று ; பாணரும் புலவரும் கூத்தர்முதலாயினருமாகிய அவர்கள் தம்முடைய பொருளென வளைத்துக்கொள்வாராயின் அதனை எம்முடையதென்று அவர்பானின்றும் மீண்டு கைக்கொள்ளுதலைத் தெளியாத பயன்பொருந்திய உரிமையோடுகூடி மற்றும் அத்தன்மைத்தாக, நின்னுடையவாழ்நாட்கள் ; யான்வந்தது நின்னைக்காண்டல்வேண்டியமாத்திரையே. பகைவரது மிக்கமாறுபாட்டைவென்ற வலியையுடைய யாவரும் ஒப்பப்புகழும் நாட்டையுடையாய்.—எ - று.

நாடுகிழவோய், யான்வந்தது, களிறுமுதலாயினவேண்டியன்று ; நின்னைக் காண்டல்வேண்டிய அளவே ; நின்னூழி அன்னவாகவெனக்கூட்டுக ; அல்லதூஉம்,

யானைமுதலாயினவன்றிப் பிறவற்றையும் பாணர்முதலாயினோர் தமதெனத்தொடுக்குவராயினென்ன இயைத்துரைப்பினுமமையும்.

கொடுவரி - பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; ஆகுபெயருமாம். இனித் தகைமெல்லொதுக்கினெனவும், வடிநவில்பனுவலெனவும், ஒளிறுநடைப்புரவியவெனவும் பாடமோதுவாருமுளர். வடிநவில் பனுவல் புலம்பெயர்ந் திசைப்பவென்பதற்கு வடித்தல்பயின்ற பாட்டை இசைதோறும் பெயர்ந்துவாசிக்கவென்றுரைப்பாருமுளர். (௧௩௫)

(௧௩௬.) யாழ்ப்பத்தர்ப் புறங்கடுப்ப
விழைவலந்த பஃறுன்னத்
திடைப்புரைபற்றிப் பிணிவிடாஅ
வீர்க்குழாத்தோ டிறைகூர்ந்த
பேஎற்பகையென வொன்றென்கோ
வுண்ணாமையி னூன்வாடித்
தெண்ணீரிற் கண்மல்கிக்
கசிவுற்றவென் பல்கிளையொடு
பசியலைக்கும் பகையொன்றென்கோ
வன்னதன்மையு மறிந்தீயார்
நின்னதுதாவென நிலைதளர
மரம்பிறங்கிய நளிச்சிலம்பிற்
குரங்கன்னபுன் குறுங்கூளியர்
பரந்தலைக்கும் பகையொன்றென்கோ
ஆங், கனைப்பகையு மறியுனை
யெனக்கருதிப் பெயரேத்தி
வாயாரநின் னிசைநம்பிச்
சுடர்சுட்ட சுரத்தேறி
யிவண்வந்த பெருநசையே
மெமக்கீவோர் பிறர்க்கீவோர்
பிறர்க்கீவோர் தமக்கீபவென
வனைத்துரைத்தனன் யானாக
நினக்கொத்தது நீநாடி
நல்கினை விடுமதி பரிசி லல்கலுந்
தண்புனல் வாயிற் றுறையூர் முன்றுறை
நுண்பல மணலினு மேத்தி
யுண்குவம் பெருமநீ நல்கிய வளனே.

திணை - அது; துறை - பரிசில்கடாநிலை.
அவனைத் *துறையூர் ஓடைகிழார் பாடியது.

* துறையூர் அரிசில்கிழாரென்றும் பிரதிபேதமுண்டு.

இ - ள்.—யாழ்ப்பத்தரினதுபுறத்தையொப்ப இழைசூழ்ந்த பல தையலினது இடைக்கண் உளவாகிய புரைகளைப்பற்றி ஒன்றோடொன்றுதொடர்ந்த பிணிப்பு விடாதேகிடக்கின்ற ஈரினது திரளோடு தங்குதல் மிக்க பேனாகியபகையை ஒரு பகையென்பேனோ? உண்ணாமையின் ஊடம்பு புலர்ந்து கண் தெளிந்தநீரால் நிறைந்து வியர்ப்புற்ற எனது பலசுற்றத்தோடு பசிநோய்வருத்தும்பகையை ஒருபகையென்பேனோ? அப்பெற்றிப்பட்ட எனதியல்பையும் அறியாராய் நின்கைப்பொருளைத் தாவென்றுசொல்லி எம்முடையநிலைகள் தளரும்படி மரங்கள்செறிந்த குளிர்ந்தமலையிற் குரங்குபோலப் பறித்துக்கொள்ளும் இயல்பையுடைய புல்லிய குறிய ஆறலை கள்வர் பரந்துவந்தலைக்கும்பகையை ஒருபகையென்பேனோ? எல்லாப் பகையும் அறிவான் ஆயேயெனக்கருதி எமதுவாக்கினால் மிகவும் நினதுபெயரை வாழ்த்தி நின்னுடையபுகழை நச்சி ஞாயிறுசுடப்பட்ட சுரத்தின்கண்ணேயேறி இவ்விடத்துவந்த பெரிய நச்சுதலையுடையேம்; இங்ஙனம் வறுமையுற்ற எங்களுக்கு ஒன்றை இடுவோரன்றோ பயன்கருதாது பிறர்க்கு இடுமவர்களாவாரெனவும் எம்மையொழிந்த பிறர்க்கு இடுவோரன்றோ பயன்கருதியிடுதலால் தங்களுக்கே இடுவோரெனவும் அவ்வளவாக யான் சொன்னேனாக, நினக்குப்பொருந்தியது நீ ஆராய்ந்து எமக்குப் பரிசில்தந்தனையாய் விடுவாயாக; நாடோறும், குளிர்ந்தநீரோடும் வாய்த்தலைகளையுடைய துறையூரின்கண் துறைமுன்னர் நுண்ணிய பலமணலினும் பல நாள்வாழ்கவெனவாழ்த்தி உண்பேம், பெரும, நீதந்தசெல்வத்தை.—எ - று.

பெரும, நீ நல்கியவளத்தை அல்கலும் ஏத்தி உண்பேம்; நினக்கொத்தது நீ நாடிப் பரிசில்நல்கினை விடுமதியெனக் கூட்டுக.

'ஆயென' என்பதற்கு ஆயென்று பிறர்சொல்லவென்றும், 'எமக்கீவோர் பிறர்க்கீவோர்' என்பதற்கு எமக்கீவோர் எம்வறுமைகண்டு வருத்தமுறுவோர்யாவர்க்கும் ஈவோரெனவும், 'பிறர்க்கீவோர்தமக்கீப' என்பதற்குப் பிறர்க்குக்கொடுப்போர் அக்கொடுக்கப்படுகின்றோர்தமக்கேகொடுப்போராவரெனவுமுரைப்பாருமுளர். கசிவுற்றவென்பதற்கு இரக்கமுற்றவெனினுமமையும். பேற்பகையெனவென்புழி, எனவும், ஆங்கெனைப்பகையுமென்புழி, ஆங்கும் அசைநிலை. கண் தெண்ணீரின்மல்கியெனவும், வாயாரப்பெயரேத்தியெனவும் மாற்றப்பட்டன. (௧௩௬)

(௧௩௭.) இரங்கு முரசி னினஞ்சால் யானை
முந்நீ ரேணி விறல்கெழு மூவரை
யின்னு மோர்யான் வரவறி யேனே
நீயே, முன்யா னறியு மோனே துவன்றிய
கயத்திட்ட வித்து வறத்திற் சாவாது
கழைக்கரும்பி னொலிக்குந்து
கொண்டல் கொண்டநீர் கோடை காயினுங்
கண்ணன்ன மலர்பூக்குந்து
கருங்கால் வேங்கை மலரி னாளும்
பொன்னன்ன வீசுமந்து
மணியன்னநீர் கடற்படருஞ்
செவ்வரைப் படப்பை நாஞ்சிற் பொருந

சிறுவெள் ளருவிப் பெருங்க லாடனை
நீவா ழியநின் றந்தை
தாய்வா ழியர்நிற் பயந்திசி னோரே.

திணை - அது; துறை - இயன்மொழி; பரிசிற்றுறையுமாம்.
நாஞ்சில்வள்ளுவனை ஒருசிறைப்பெயரியனார் பாடியது.

இ - ள்.—ஒலிக்குமுரசினையும் இனமமைந்தயானையையுமுடைய கடலாகிய எல்லையையுடைய நிலத்தின்கண் வென்றிபொருந்திய மூவேந்தரை இன்னமும் யானொருவனே பாடும்வரவையறியேன்; நீதான் முன்னேதொடங்கி யானறியு மவன்; நீர்நிறைந்த பள்ளத்தின்கண் விதைத்தவித்து நீரின்மையாற் சாவாது கரும்புபோலத்தழைக்கும், மழையால் முகந்துசொரியப்பட்டநீர் கோடைகாயினும் மகளிர்கண்போன்ற குவளைமுதலிய மலர்பூக்கும், கரியதாளையுடைய வேங்கை மலரின் நாடோறும் பொன்போலும்பூவைச்சுமந்து மணிபோலும்நீர் கடற்கட்செல்லும் செவ்விய மலைப்பக்கத்தையுடைய நாஞ்சிலென்னுமலையையுடைய பொருந, சிறிய வெளிய அருவியையுடைய பெரிய மலையையுடையநாட்டையுடையாய், நீவாழ்வாயாக; நின்னைப் பெற்றோராகிய நின்றந்தையும் தாயும்வாழ்க.—எ - று.

நீர்மலர்பூக்குமென இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்துமேல் ஏறிநின்றது. 'கோடைக்காயினுமென்பதுபாடமாயின், கோடைகட்காயினுமென்றானும் கோடைக்கண்ணுயினுமென்றானுமுரைக்க. முன்னின்ற பெயரெச்சமூன்றும், நாஞ்சிலென்னும் நிலப்பெயர்கொண்டன; தன்பழமைதோன்றப் புகழ்ந்துகூறுவான், மூவரையும் இன்னும் வரவறியேனென்றதாகக்கொள்க. (கருஎ)

(கருஅ.) ஆனினங் கலித்த வதர்பல கடந்து
மானினங் கலித்த மலைபின் னொழிய
மீனினங் கலித்த துறைபல நீந்தி
யுள்ளி வந்த வள்ளுயிர்ச் சிறியாழ்ச்
சிதாஅ ருடுக்கை முதாஅரிப் பாண
நீயே பேரெண் ணலையே நின்னிறை
மாறி வாவென மொழியலன் மாதோ
வொலியிருங் கதுப்பி னாயிழை கணவன்
கிளிமரீஇய வியன்புனத்து
மரனணி பெருங்குர லனைய னாதலி
னின்னை வருத லறிந்தனர் யாரே.

திணை - அது; துறை - பாணாற்றுப்படை.
அவனை மருதனிளநாகனார் பாடியது.

இ - ள்.—பெற்றத்தினது இனமிக்க வழிபலவும்வந்து மான்றிரள்மிக்க மலை பின்கழிய மீனினந்தழைத்த துறைபலவற்றையுநீந்தி நினைந்துவந்த வள்ளிய ஓசையையுடைத்தாகிய சிறியயாழையும் சிதாராகிய உடையையுமுடைய மூத்தபாணனே, நீதான், அவன்பாற் சிலகருதிப் போகின்றமையின் பெரிய எண்ணத்தையுடையை; நின்னுடையதலைவன் இப்பொழுது போய்ப் பின் ஒருநாட் பரிசிற்கு

வாவென்றுசொல்லான்; தழைத்த கரியகூந்தலையுடைய ஆயிழைக்குத்தலைவன், கிளி மருவிய அகன்ற புனத்தின்கண் மரப்பொதும்பின்கண்வைத்த பெரிய கதிரை யொப்பனுதலின், நீ அவன்பாற் பரிசில்பெற்றுவருதற்கண் நின்னைப் பழையபாண னென்று அறிவார்யார்.—எ - று.

'நின்னைவருதலறிந்தனர்யார்' என்பதற்குக்கருத்து: நின்னை அறிவாரும் அறியாததன்மையையாவையென்பதாம். அறிவார்யாரென்பது, அறிந்தனர்யாரெனக் காலமயக்கமாயிற்று. நினக்கு அவன் பரிசில் தப்பாமல் தருமென்பான், நின்னிறை யென்றான். 'மரனணிபெருங்குரலனையன்' என்றது, கிளியீடுவாய்த்தாற்போல்வ னென்னும் வழக்கைப்பற்றிநின்றது. (கஙஅ)

(கஙகூ.) சுவலழுந்தப் பலகாய
சில்லோதிப் பல்லிளைஞருமே
யடிவருந்த நெடிதேறிய
கொடிமருங்குல் விறலியருமே
வாழ்தல் வேண்டிப்
பொய்கூறேன் மெய்கூறுவ
லோடாப் பூட்கை யுரவோர் மருக
வுயர்சிமைய வுழா நாஞ்சிற் பொருந
மாயா வுள்ளமொடு பரிசி றுன்னிக்
கனிபதம் பார்க்கும் காலை யன்றே
யீத லானான் வேந்தே வேந்தற்குச்
சாத லஞ்சாய் நீயே யாயிடை
யிருநில மிளிர்ந்திசி னாஅங் கொருநா
ளருஞ்சமம் வருகுவ தாயின்
வருந்தலு முண்டென் பைதலங் கடும்பே.

திணை - அது; துறை - பரிசில்கடாநிலை.
அவனை அவர் பாடியது.

இ - ள்.—தோள் வடுப்படப் பலமூட்டுக்களையுங்காவிய சிலவாயமயிரையுடைய பல இளையோரும் அடிவருந்த நெடும்பொழுது ஏறிய கொடிபோலும் இடையினையுடைய விறலியரும் என இவர் வாழ்தலைவிரும்பிப் பொய்சொல்லேன்; மெய் சொல்லுவேன்; புறக்கொடாத மேற்கோளையுடைய வலியோர்மரபிலுள்ளானே, உயர்ந்த உச்சியையுடைத்தாய் உழப்படாத நாஞ்சிலென்னும் பெயரையுடைய மலைக்குவேந்தே, மறவாதநினைவுடனே பரிசிற்குவந்துபொருந்திப் பின்புநின்று நின் மனம்நெகிழும் செவ்விபார்க்கும் காலமல்ல, யான் வறுமையுற்று நிற்கின்றநிலைமை; நினக்கு வேண்டிற்றுத்தருதலை அமையான், நின்னுடைய அரசன்; அவ்வரசன் பொருட்டுச் சாதலுக்கு அஞ்சாய், நீ; அவ்விடத்துப் பெரிய நிலம்பிறழ்ந்தாற் போல ஒருநாள் பொறுத்தற்கரிய பூசல் வருவதாயின், வருந்துதலுமுளதாம், எனது பசித்துன்பத்தையுடைய சுற்றம்.—எ - று.

அதனாற் போர்வருவதன்முன்னே பரிசில்தந்துவிடுவாயாகவென்பதுகருத்து.()

(கசO.) *தடவுநிலைப் பலவி னாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
வடகின் கண்ணுறை யாக யாஞ்சில
வரிசி வேண்டினே மாகத் தான்பிற
வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி
யிருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே யன்னதோர்
தேற்றா வீகையு முளதுகொல்
போற்றா ரம்ம பெரியோர்தங் கடனே.

திணை - அது ; துறை - பரிசில்விடை.

அவனை †ஆவர் பாடியது.

இ - ள்.—பெரிய நிலைமையையுடைய பலாமரத்தையுடைத்தாய நாஞ்சின் மலைக்குவேந்தன், அறிவுமெல்லியன், நிச்சயமாக ; செவ்விய நாவையுடையபுலவீர், வளையணிந்த கையையுடைய விறலியர் மனைப்பக்கத்தின்கட்பறித்த இலைக்கு மேல் தூவுவதாக யாங்கள் சில அரிசிவேண்டினேமாக, தான் பரிசிலர்க்குதவும் வரிசை யறிதலால் எம்வறுமையைப்பார்த்தலேயன்றித் தனதுமேம்பாட்டையும் சீர்தூக்கிப் பெரிய சுரஞ்சூழ்ந்த மலைபோல்வதொரு பெரிய யானையையளித்தான் ; ஆதலான், ஒருவற்கு ஒன்றனைக்கொடுக்குமிடத்து அப்பெற்றிப்பட்டதோர் தெளியாக்கொடையும் உள்ளதோதான்? பெரியோர் தாங்கள்செய்யக்கடவமுறைமையைத் தெரிந்து பாதுகாத்துச் செய்யார்கொல்.—எ - று.

பிறவென்பது, அசைநிலை. கொல்லென்பது, பின்புங்கூட்டியுரைக்கப்பட்டது. (கசO)

(கசக.) பாணன் சூடிய பசும்பொற் றாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ
யூரீர் போலச் சுரத்திடை யிருந்தனிர்
யாரீ ரோவென வினவ லானாக்
காரெ னொக்கற் கடும்பசி யிரவல
வென்வே லண்ணற் காணா வூங்கே
நின்னினும் புல்லியே மன்னே யினியே
யின்னே மாயினே மன்னே யென்று

---

* இப்பாட்டினை, மக்கட்பாடாண்டிணைக்குரிய ‘கொடுப்போரேத்தல்’ என்னுந்துறைக்கு உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல் ருடு - ம் சூத்திரவுரை].

† ஔவையாரென்றும் பிரதிபேதமுண்டு.

*முடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேக
னெத்துணை யாயினு மீத்த னன்றென
மறுமைநோக் கின்றோ வன்றே
பிறர், வறுமைநோக் கின்றவன் கைவண் மையே.

திணை - அது ; துறை - பாணாற்றுப்படை ; புலவராற்றுப்படையுமாம்.

வையாவிக்கோப் பெரும்பேகனைப் பரணர் பாடியது.

இ - ள்.—'பாணன்சூடிய ஓட்டற்ற பொன்னாற்செய்யப்பட்ட தாமரைப்பூ மாட்சிமைப்பட்ட அணியினையுடைய விறலியணிந்த பொன்னரிமாலையுடனேவிளங்கக் கடியகுதிரையைப்பூண்ட நெடியதேரைப் பிணிப்பைவிட்டு இளைப்பாறி ஊரின்கண் இருந்தீர்போலச் சுரத்திடையிருந்தீர் ; நீர்யாவிர் பாணரோ' என எம்மைக்கேட்டலமையாத புல்லென்ற சுற்றத்தையும் மிக்கபசியையுமுடைய இரவலனே, வென்றிவேலையுடைய தலைவனைக் காண்பதன்முன் யாம் நின்னினும்வறியேம்; இப்பொழுது அவ்வறுமைநீங்கி இத்தன்மையேமாயினேம், எந்நாளும் ; உடா போராவாதலை அறிந்துவைத்தும் படாத்தினை மயிலுக்குக்கொடுத்த எம்மிறைவன், மதமிக்கயானையினையும் மனஞ்செருக்கிய குதிரையினையுமுடைய பேகன், எவ்வளவாயினும் கொடுத்தல் அழகிதென்று மறுபிறப்பைநோக்கிற்றோவெனின், அன்று ; பிறரது மிடியைக்கருதிற்று, அவனது கைவண்மை.—எ - று.

எங்கோ, பேகன், அவன்கைவண்மை மறுமைநோக்கிற்றன்று ; பிறர்வறுமைநோக்கிற்றெனக்கூட்டுக.

'நின்னினும்புல்லியேமன்' என்பது, 'பண்டுகாடுமன்' என்பதுபோலநின்றது. ஒழிந்த மன் - அசைநிலை. (௧௪௧)

(௧௪௨.) அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்து
†முறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே.

திணை - அது ; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—வற்றியகுளத்தின்கண்ணே பெய்தும் அகன்றவிளைநிலத்தின்கண்ணே சொரிந்தும் இவ்வாறு குளத்தும் விளைநிலத்தும்பெய்யாது களர்நிலத்தைநிறைத்

* "வானம் வாய்த்த வளமலைக் கவாஅற், கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய, வருந்திற லணங்கி னாவியர் பெருமகன், பெருங்க லாடன் பேகனும்" என்பது சிறுபாணாற்றுப்படை [அடி ௮௪ - ௮௭].

† உறுநிலத்துதவாதென்றும் பாடம்,

தும் எவ்விடத்தும் வரையாதமரபினையுடைய மழைபோல மதமிக்க யானையினையுடைய கழல்புனைந்த காலையுடைய பேகன் கொடையிடத்துத் தான் அறியாமைப் படுதலல்லது பிறர்படைவந்து கலந்தபொரின் அப்படையிடத்துத் தான் அறியாமைப்படான்.—எ - று.

படைமடமென்றது, வீரரல்லாதார்மேலும், முதுகிட்டார்மேலும், புண்பட்டார்மேலும் மூத்தார் இளையார்மேலும் செல்லுதல். (கசஉ)

(கசஙு.) மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்
மாரி யான்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்
பெயல்கண் மாறிய வுவகையர் சாரற்
புனத்தினை யயிலு நாட சினப்போர்க்
கைவள் ளீகைக் கடுமான் பேக
யார்கொ லளிய டானே நெருநற்
சுரனுழந்து வருந்திய வொக்கல் பசித்தெனக்
குணில்பாய் முரசி னிரங்கு மருவி
நளியிருஞ் சிலம்பிற் சீறூ ராங்கண்
வாயிற் றோன்றி வாழ்த்தி நின்று
நின்னுநின் மலையும் பாட வின்னா
திகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையக நனைப்ப விம்மிக்
குழலினை வதுபோ லழுதனள் பெரிதே.

திணை - பெருந்திணை ; துறை - குறுங்கலி ; தாபதநிலையுமாம்.

அவனால் துறக்கப்பட்ட கண்ணகிகாரணமாக அவனைக் கபிலர் பாடியது.

இ - ள்.—மலையை மழைவந்துசூழ்கவென்று மிக்கபலியைத்தூவி அம்மழை மிகப்பெய்தலான் அப்பெயல் அமைந்து முகில் மேலேபோவதாகவேண்டுமெனத் தெய்வத்தைப்போற்றிய குறமாக்கள் மழை இடத்துமாறிய உவகையராய் மலைச் சாரற்கட் புனத்தினையை உண்ணுநாட, சினத்தினாற்செய்யும் போரையும் கைவண்மையாற்கொடுக்கும் கொடையினையுமுடைய விரைந்த குதிரையையுடைய பேக, அவ்விரங்கத்தக்காள், யாரோதான்? நெருநற்றுச்சுரத்தின்கண்ணே நடந்துவருந்திய எனதுசுற்றம் பசித்ததாக, கடிப்பு அறையப்பட்ட முரசுபோல ஒலிக்கப்பட்ட அருவியையுடைய பெரிய உயர்ந்தமலைக்கட் சிறிய ஊராகிய அவ்விடத்து வாயிற் கண்ணேவந்துதோன்றி வாழ்த்திநின்று நின்னையும் நின்மலையையும்பாட, அப்பொழுது இன்னாதாகச்சொரியப்பட்ட கண்ணீரை ஒழித்தல்மாட்டாளாய் அக்கண்ணீர் முலையிடத்தைநனைப்பப் பொருமிக் குழல் இரங்கியொலிப்பதுபோல் அழுதாள், மிகவும்.—எ - று.

மழைவேண்டுங்காலத்துப் பெய்வித்தற்கும் வேண்டாக்காலத்து ஒழித்தற்கும் பலிதூஉய்ப்பேணிய குறவராகியமாக்களென்க.

மாக்கள் புனத்தினை அயிலுகாட, பேக, என்னைக்கல்பசித்தென வாயிற்றோன்றி வாழ்த்திநின்று நின்னும்நின்மலையும்பாடக் குழல் இனைவதுபோல அழுதாள்; அவ்வளிக்கத்தக்கான் யார்கொல்? அவள்பால் அருள்பண்ணத்தகுமென வினை முடிக்க.

இது, நின்மலையிற்குறவர்மாக்கள் கடவுட்பேணி மழைவேண்டியபொழுது பெற்றுத் தாம்வேண்டுமுணவு நுகருமாறுபோல் இவளும் நின்னருள்பெற்று இன்ப நுகர்வாளாகவேண்டுமென்பதோர் நயந்தோன்றநின்றது. மழைமிகப்பெய்தலா னென்பது, ஆற்றலாற் கூறப்பட்டது.

பேகனாற்றுறக்கப்பட்ட கண்ணகியை அவனோடுகூட்டலுறுவார், அருள்பண்ணவேண்டுமென்று இரந்துகொண்டுகூறினமையின், குறுங்கலியாயிற்று.

குறவர்மாக்கள் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. (௧௪௩)

(௧௪௪.) அருளா யாதலோ கொடிதே யிருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக
நீனறு நெய்தலிற் பொலிந்த வுண்கண்
கலுழ்ந்துவீ ழரிப்பனி பூணக நனைப்ப
வினைத லானா ளாக விளையோய்
கிளையை மன்னெங் கேள்வெய் யோற்கென
யாந்தற் றொழுதனம் வினவக் காந்தண்
முகைபுரை விரலிற் கண்ணீர் துடையா
யாமவன் கிளைஞரே மல்லேங் கேளினி
யெம்போ லொருத்தி நலனயந் தென்றும்
வரூஉ மென்ப வயங்குபுகழ்ப் பேக
னொல்லென வொலிக்குந் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே.

திணையும் துறையும் அவை.

அவனை அவள்காரணமாகப் *பரணர் பாடியது.

இ - ள்.—அருள்பண்ணுயாதல் கொடிது; மாலைக்காலம்வந்தவளவிலே சிறிய யாழை இரங்கற்பண்ணாகிய செவ்வழியென்னும்பண்ணிலே வாசிக்கும்பரிசுபண்ணி நினது மழையையேற்றுக்கொண்ட காட்டைப்பாடினேமாக, நீலநறுநெய்தல்போன்று பொலிந்த மையுண்டகண்கள் கலங்கிவீழ்ந்த இடைவிட்ட துளிகள் பூணையுடைய மார்பைநனைப்ப வருந்துதல் அமையாளாக, இளையோய், ‘கிளைமையையுடையையோ எம்முடையகேண்மையைவிரும்புவோனுக்கு’ என யாங்கள் தன்னை வணங்கிக்கேட்டேமாக, அவள் காந்தள்மொட்டைப்போலும் விரலாலே தன் கண்ணீரைத்துடைத்து நாங்கள் அவனுடைய கிளைஞரேமல்லேம்; கேட்பாயாக, நீ இப்பொழுது; எம்மை ஒப்பாளொருத்தியுடைய அழகைக்காதலித்து எந்நாளும்வரு

* வன்பரணரென்றும் பிரதிபேதமுண்டு.

மென்று பலரும் சொல்லுவரென்றுகூறினாள்; விளங்கிய புகழையுடையபேகன், ஒல்லெனமுழங்கும்தேருடனே முல்லைவேலியையுடைய நல்லூரின்கண்.—எ - று.

இளையையோவென ஓகாரமும், என்றுளென ஒருசொல்லும் வருவித்துரைக்கப்பட்டன.

நின்கானம் பாடினேமாக, இனைதலானுளாக, யாம் தற்றொழுதனம் வினவ, தன்கண்ணீர்துடைத்துப் பேகன் ஒருத்திநலனயந்து நல்லூரின்கண் என்றும் வரூஉமென்பவென்றாள்; அவனை அருளாயாதல் கொடிதெனக்கூட்டிவினைமுடிவுசெய்க.

எம்போலொருத்தியென்றது, உவமைகருதாது வன்மையுரை தோன்றநின்றது. இனி, யாம் தற்றொழுதனம்வினவினேமாக, அவளாயத்தார் தம்விரலால் அவள் கண்ணீரைத்துடைத்து யாம் அவன்கிளைஞரேமல்லேம் இதுபுகுந்தவாறு யாம் கூறக்கேளென முன்புகூறிப் பின் பேகன் எம்போலொருத்தி நலன் நயந்து நல்லூரின்கட்சென்று வருமென்றுசொன்னார்கள்; இவ்வாறு இளையோளும் ஆயத்தாரும் உறும் துன்புறவுதீர்த்து அருளாயாதல் கொடிதெனவுரைப்பினுமமையும்.

எம்போலொருத்தியென்றது, எம்மைப்போலும் பொதுமகளொருத்தியென அவனை இழித்துக்கூறியவாறு. (கசச)

(கசரு.) மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக
பசித்தும் வாரேம் பாரமு மிலமே
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி
யறஞ்செய் தீமோ வருள்வெய் யோயென
விஃதியா மிரந்த பரிசிலஃ திருளி
னினமணி நெடுந்தே ரேறி
யின்னா துறைவி யரும்படர் களைமே.

திணையும் துறையும் அவை.

அவனை அவள்காரணமாக அவர் பாடியது.

இ - ள்.—மெல்லிய தகைமையையுடைய கரிய மயில் குளிரால்நடுங்குமென்று அருள்செய்து படாம்கொடுத்த அழியாத நல்லபுகழினையுடைய மதம்பட்டயானையையும் மனஞ்செருக்கியகுதிரையையுமுடைய பேக, யாம் பசித்தும்வருவேமல்லேம்; எம்மாற் பரிக்கப்படுஞ்சுற்றமுமுடையேமல்லேம்; களாப்பழம்போன்ற கரிய கோட்டையுடைய சிறிய யாழை இசையின்பத்தைவிரும்பியுறைவார் அவ்விசையின்பத்தால் தலையசைத்துக் கொண்டாடும்படி வாசித்து, அறத்தைச்செய்வாயாக அருளைவிரும்புவோயென இது, நின்பால் யாம் இரந்தபரிசில்; இற்றையிரவின்கண் இனமாகிய மணியையுடைய உயர்ந்ததேரையேறிப்போய்க் காண்டற்கு இன்னாதாக உறைகின்றவள் பொறுத்தற்கரிய நினைவாலுண்டாகியநோயைத் தீர்ப்பாயாக.—எ - று.

பேக, தேரேறி இன்னாதுறைவி அரும்படர் களை; யாழைப்பண்ணி யாம் இரந்தபரிசில் இதுவெனக்கூட்டுக.

இதுவென்றது, அப்படிப் படர்களைதலை. 'மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப் படாஅ மீத்தபேக' என்றகருத்து: இவ்வாறு ஒருகாரணமுமின்றியும் அருள்பண்ணுகின்ற நீ நின்னால்வருந்துகின்ற இவட்கு அருளாதொழிதல் தகாதென் பதாம். இனி, அருள்வெய்யோய், யாமிரந்தபரிசில், அறஞ்செய்யவேண்டுமென்று கூறுமிது; அவ்வறந்தான் யாதென்றுகேட்பின், நின்பால் அருள்பெறாமையின் இன் னாதுறைவி அரும்படரை நீசென்றுகளைதல்; அதனைச்செய்வாயாகவெனக் கூட்டி யுரைப்பினுமமையும்.

மடத்தகை மாமயில் பனிக்குமென் றஞ்சியென்பதூஉம் பாடம். (கசரு)

(கசசூ.) அன்ன வாகநின் னருங்கல வெறுக்கை
யவைபெறல் வேண்டே மடுபோர்ப் பேக
சீறியாழ் செவ்வழி பண்ணிநின் வன்புல
நன்னாடு பாட வென்னை நயந்து
பரிசி னல்குவை யாயிற் குரிசினீ
நல்கா மையி னைவரச் சாஅ
யருந்துய ருழக்குநின் றிருந்திழை யரிவை
கலிமயிற் கலாவங் கால்குவித் தன்ன
வொலிமென் கூந்தற் கமழ்புகை கொளீஇத்
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே.

திணையும் துறையும் அவை.

அவனை அவள்காரணமாக அரிசில்கிழார் பாடியது.

இ - ள்.—அத்தன்மையவாக; நின்னால்தரப்பட்ட பெறுதற்கரிய ஆபரணமும் செல்வமுமாகிய அவைபெறுதலைவிரும்பேம்; கொல்லும்போரையுடைய பேக, சிறியயாழைச் செவ்வழியாகப்பண்ணி வாசித்து நினது வலியநிலமாகிய நல்ல மலை நாட்டைப்பாட, என்னைக்காதலித்துப் பரிசில்தருகுவையாயின், தலைவனே, நீ அரு ளாமையாற் கண்டாரிரங்க மெலிந்து அரிய துயரத்தான்வருந்தும் உன்னுடைய திருந்திய அணியையுடைய அரிவையது தழைத்த மயிலினதுபீலியைக் காலொன் றக் குவித்தாற்போன்ற தழைத்த மெல்லியகூந்தற்கண்ணே மணங்கமழும்புகை யைக் கொள்ளுவித்துக் குளிர்ந்த மணங்கமழும் மாலையைச்சூட வளவிய செலவை யுடைய உயர்ந்ததேரை நின்குதிரைகள் பூண்பனவாக.—எ - று.

அன்னவாகவென்றது, இரவலர்க்கு அருங்கலவெறுக்கைகளை எளிதிற்கொடுப் பையன்றே? அவ்வெறுக்கை எமக்கும் எளிதாகவென்றவாறும். (கசசூ)

(கசஎ.)*கன்முழை யருவிப் பன்மலை நீந்திச்
சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததைக்
கார்வா னின்னுறை தமியள் கேளா
நெருந லொருசிறைப் புலம்புகொண் டுறையு

* கன்முகையருவியென்றும் பாடம்.

(ரு) மரிமதர் மழைக்க ணம்மா வரிவை
நெய்யொடு துறந்த மையிருங் கூந்தன்
மண்ணுறு மணியின் மாசுற மண்ணிப்
புதுமலர் கஞல வின்று பெயரி
னதுமனெம் பரிசி லாவியர் கோவே.

திணையும் துறையும் அவை.
அவள்காரணமாக அவனைப் பெருங்குன்றூர்கிழார் பாடியது.

இ - ள்.—கன்முழைக்கணின்றும் விழும் அருவியையுடைய பலமலைகளை அரி திற்கழித்துச் சிறியயாழைச் செவ்வழியென்னும்பண்ணை வாசிக்கும்படியாகப் பண்ணி வாசித்துவந்ததற்குக் கார்காலத்துமழையினது இனியதுளி வீழ்கின்ற ஓசையைத் தமியளாகக்கேட்டு நெருநற்று ஒருபக்கத்துத் தனிமைகொண்டிருந்த அரிபரந்த மதர்த்த குளிர்ச்சியையுடைய கண்ணினையும் அழகியமாமைநிறத்தினையு முடைய அந்த அரிவையினது நெய்யாற்றுறக்கப்பட்ட மைபோலும் கரியமயிரை ஒப்பமிடப்பட்ட நீலமணியினும் மாசறக்கழுவிச் செவ்விமலர்நெருங்கும் பரிசு இன்று வருவையாயின், அதுவாகும், எம்முடையபரிசில்; ஆவியருடையவேந்தே.— எ - று.

உறை - துளி ; என்பது, ஆகுபெயரால் துளியினோசையை. மன் - அசை.

சிறியாழ் செவ்வழிபண்ணிவந்ததற்கு அரிவைகூந்தல் புதுமலர்கஞலும்படி அவ ள்பால் என்னுமெம்வரின் எம்பரிசில் அதுவெனக்கூட்டுக.

நெய்பூசுதலோடு பேணுதலைத்துறந்தவெனினுமமையும். செவ்வழிபண்ணிவந் தது, புதுமலர்கஞலவென்று இயைத்துரைப்பாருமுளர். (கசஎ)

(கசஅ.) கறங்குமிசை யருவிய பிறங்குமலை நள்ளிநின்
னசைவி னொன்று ணசைவள னேத்தி
நாடொறு நன்கலங் களிற்றொடு கொணர்ந்து
கூடுவிளங்கு வியனகர்ப் பரிசின்முற் றளிப்பப்
(ரு) பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்த
லெய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே.

திணை - பாடாண்டிணை ; துறை - பரிசிற்றுறை.
*கண்டீரக்கோப் †பெருநள்ளியை வன்பரணர் பாடியது.

இ - ள்.—உச்சிக்கணின்றும் ஆலித்து இழிதரும் அருவியினையுடைய உயர்ந்த மலையையுடைய நள்ளி, நினது தளர்ச்சியில்லாத வலியமுயற்சியானாய நச்சப்படும் செல்வத்தைவாழ்த்தி நாடோறும் நல்ல அணிகலத்தைக் களிற்றோடே கொண்டு வந்து நெற்கூடுவிளங்கும் அகலியநகரின்கணிருந்து சூழ்ந்திருந்தபரிசிலர்க்கு அளி த்துவிடுத்தலாற் பிறர்க்கீயும்பெருமையில்லாத அரசரைப்புகழும்புகழ்ச்சியைவிரு

---

* கண்டீற்கோவென்றும் பிரதிபேதமுண்டு.
† பெருநற்கிள்ளியென்றும் பிரதிபேதமுண்டு.

ம்பி அவ்வரசர்செய்யாதனவற்றைச்சொல்லி அவர்குணங்களைக் கூறுதலை அறியாததாயிற்று, எம்முடைய சிறிய செவ்வியநா.—எ - று.

பொய்கூறுமையிற் செந்நாவென்றார்; தற்புகழ்ந்தாராகாமற் சிறுசெந்நாவென்றார். அருவியவென்றது, விகாரம்.

நள்ளி, நீ பரிசின்முற்றளித்தலான், எம் சிறுசெந்நா நின்னசைவளனேத்தி மன்னரைப்புகழ்ச்சிவேண்டிக் கிளத்தல் எய்யாதாகின்றெனக்கூட்டுக; நின்னசைவளன் ஏத்திக் கொணர்ந்து முற்றளித்தலாலெனப் பரிசிலர்மேலேற்றி உரைப்பினுமமையும். (௧௪௮)

(௧௪௯.) நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தன ரதுநீ
புரவுக்கடன் பூண்ட வண்மை யானே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—நள்ளி, வாழ்வாயாக; நள்ளி, நள்ளென்னும் ஓசையையுடைய மாலைப்பொழுதின்கண்ணே மருதமென்கின்றபண்ணை வாசித்துக் காலைப்பொழுதின்கண் கைவழியாகிய யாழின்கட் செவ்வழியென்னும் பண்ணைவாசித்து *வரலாற்றுமுறைமையை எம்முடைய பாணர்சாதியிலுள்ளோர் மறந்தார்; அவ்வாறு மறந்தது, நீ கொடுத்து ஓம்புதலைக் கடனாக மேற்கொண்டவண்மையான்.—எ - று.

கையகத்து எப்பொழுதும் இருத்தலான், யாழைக் கைவழியென்றார்; ஆகுபெயரான். வரவவர் மறந்தனரென்பதூஉம் பாடம். (௧௪௯)

(௧௫௦.) கூதிர்ப் பருந்தி னிருஞ்சிற கன்ன
பாறிய சிதாரேன் பலவுழுதற் பொருந்தித்
தன்னு முள்ளேன் பிறிதுபுலம் படர்ந்தவென்
னுயங்குபடர் வருத்தமு முலைவு நோக்கி
மான்கணந் தொலைச்சிய குருதியங் கழற்கால்
வான்கதிர்த் திருமணி விளங்குஞ் சென்னிச்
செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்
றொழுதனெ னெழுவேற் கைகவித் திரீஇ
யிழுதி னன்ன வானிணக் கொழுங்குறை
கானதர் மயங்கிய விளையர் வல்லே
தாம்வந் தெய்தா வளவை யொய்யெனத்
தான்ஞெலி தீயின் விரைவினன் சுட்டுநின்

* வரலாற்றுமுறைமையாவது, காலைப்பண் மருதமும், மாலைப்பண் செவ்வழியுமென்பது.

னிரும்பே ரொக்கலொடு தின்மெனத் தருதலி
னமிழ்தின் மிசைந்து காய்பசி நீங்கி
நன்மர னளிய நறுந்தண் சாரற்
*கன்மிசை யருவி தண்ணெனப் பருகி
விடுத்த றொடங்கினே னாக வல்லே
பெறுதற் கரிய வீறுசா னன்கலம்
பிறிதொன் றில்லைக் காட்டுநாட் டேமென
மார்பிற் பூண்ட வயங்குகா ழார
மடைசெறி முன்கைக் கடகமொ டீத்தன
னெந்நா டோவென நாடுஞ் சொல்லான்
யாரீ ரோவெனப் பெயருஞ் சொல்லான்
பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே
யிரும்புபுனைந் தியற்றாப் பெரும்பெயர்த் தோட்டி
யம்மலை காக்கு மணிநெடுங் குன்றிற்
பளிங்குவகுத் தன்ன தீநீர்
†நளிமலை நாட னள்ளியவ னெனவே.

திணை - அது; துறை - இயன்மொழி.
அவனை அவர் பாடியது.

இ - ள்.—கூதிர்க்காலத்துப் பருந்தினது கரியசிறகையொத்த துணியாகிய சீரையையுடையேனாய்ப் பலாவடியைப்பொருந்தி, தன்னையுடையேனாய் வேற்று நாட்டின்கட்சென்ற எனது ஓய்ந்த செலவானுளதாகிய வருத்தத்தினையும் மிடியையும்பார்த்து மானினது திரளைத்தொலைத்த குருதிதோய்ந்த அழகிய வீரக்கழலினையுடைய காலினையும் வாலிய ஒளியையுடைய அழகிய நீலமணிவிளங்கும் உச்சியையுமுடைய செல்வத்தையுடைய தலைவனாகிய ஓர்வலியவில்லினையுடைய வேட்டுவன், தன்னை அஞ்சலிபண்ணினேனாய் எழுந்திருப்பேனைக் கைகவித்து இருத்தி நெய்யிழுதுபோன்ற வெள்ளியநிணத்தையுடைய கொழுவியதடியைக் காட்டுவழியின்கண் வழிமயங்கிப்போகிய இளையர்தாம் விரையவந்துபொருந்துவதற்குமுன்னே கடிதாகத் தான்கடைந்த தீயான் விரைந்துசுட்டு நினது மிகப்பெரியசுற்றத்துடனே தின்மினென்றுதருதலான் அதனை யாங்கள் அமிழ்துபோலத்தின்று சுடுகின்ற பசிதீர்ந்ததாக, நல்லமரச்செறிவையுடைய நறிய குளிர்ந்த மலைச்சாரற்கண் மலையுச்சியினின்றும்வீழ்ந்த அருவிநீரைக் குளிரக்குடித்து விடைகொள்ளத்தொடங்கினேனாக, விரையவந்து பெறுதற்கரிய பெருமையமைந்த நல்ல அணிகலங்கள் தருதற்கு வேறொன்றில்லை, யாம் காட்டுநாட்டின்கண்ணேமெனச்சொல்லித் தனது மார்பிற்பூணப்பட்ட விளங்கிய முத்துவடங்களையுடைய ஆரத்தைக் கொடுத்துச்

* கன்முகையருவியென்றும் பாடம்.

† "காவாது, நட்டோ ருவப்ப நடைப்பரி கார, முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத், துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு, நளிமலை நாட னள்ளியும்" என்பது சிறுபாணாற்றுப்படை [அடி. க0எ - கஉஎ].

செறிந்த முன்கைக்கணிந்த கடகத்துடனே தந்தனன்; நும்முடையநாடு எந்நாடோ வென்றுகேட்ப நாடும் சொல்லிற்றிலன்; நீ யாரெனக்கேட்பப் பெயரும் சொல்லிற்றிலன்; அவனுடைய பெயரும் பிறர்பிறர் வழியின்கண்ணே சொல்லக்கேட்டேன் யான்; இரும்பாற் புனைந்து செய்யப்படாத மிக்கபுகழையுடைய தோட்டியாகிய அம்மலையைக்காக்கும், அழகிய பெரிய பக்கமலையினையும் பளிங்கை வகுத்தாற்போன்ற வெளியநிறத்தையுடைய இனியநீரையுமுடைய பெரிய மலைநாட்டையுடைய நள்ளி அவனென.—எ - று.

பலவுமுதற்பொருந்தித் தொழுதனனெனவும், மலைகாக்கும் நள்ளியெனவுமியையும். அவன் நள்ளியெனப் பிறர்பிறர்கூற வழிக்கேட்டிசினெனக்கூட்டுக.

நீங்கி - நீங்க. (கரு0)

(கருக.) பண்டும் பண்டும் பாடுந ருவப்ப
விண்டோய் சிமைய விறல்வரைக் கவாற்
கிழவன் சேட்புலம் படரி னிழையணிந்து
புன்றலை மடப்பிடி பரிசி லாகப்
பெண்டிருந் தம்பதங் கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீ ரக்கோ னாகலி னன்று
முயங்க லான்றிசின் யானே பொலந்தேர்
நன்னன் மருக னன்றியு நீயு
முயங்கற் கொத்தனை மன்னே வயங்குமொழிப்
பாடுநர்க் கடைத்த கதவி னாடுமழை
யணங்குசா லடுக்கம் பொழியுநு
மணங்கமழ் மால்வரை வரைந்தன ரெமரே.

திணையும் துறையும் அவை.

இளங்கண்டீரக்கோவும் *இளவச்சிரக்கோவும் ஒருங்கிருந்தவழிச் சென்ற பெருந்தலைச்சாத்தனுர் இளங்கண்டீரக்கோவைப்புல்லி இளவச்சிரக்கோவைப் புல்லாராக, என்னை என்செயப் புல்லீராயினீரென அவர் பாடியது.

இ - ள்.—முன்பேயும் முன்பேயும் பாடுவார்விரும்ப விசும்பைப்பொருந்திய உச்சியையுடைய சிறந்த மலைப்பக்கத்துத் தம்கணவர் நெடுந்தூரத்தேசெல்லின் ஆபரணத்தையணிந்து புல்லியதலையையுடைய மெல்லியபிடியைப் பரிசிலாகக் கொண்டு அவர்பெண்டிரும் தம் தாத்திலே பரிசில்கொடுக்கும் வள்ளியபுகழையுடைய கண்டீரக்கோனுகலாலே பெரிதும் தழுவிக்கொள்ளுதலையமைந்தேன் யான்; பொன்னாற்செய்யப்பட்ட தேரினையுடைய நன்னன்மரபிலுள்ளானுதலன்றியும் நீயும் தழுவுதற்குப்பொருந்தினுயாயினும் விளங்கும் மொழியையுடைய பாடுவார்க்கு அடைத்த கதவுகாரணமாக, இயங்குமுகில் தெய்வமமைந்த அரமைலக்கண்ணே சொரியும் நுமது மணநாறும் உயர்ந்தமலையைப் பாடுதலைநீக்கினுர், எம்முள்ளார்; ஆதலான், முயங்கிற்றிலேன்.—எ - று.

---

* இளவிச்சிக்கோவென்றும் பிரதிபேதமுண்டு.

பெண்டிரும் தம்பதங்கொடுக்குமெனவே ஆடவரும் தம் தரத்தே களிறுகொடுத்தல் போந்தது. 'கிழவன்' என்பது, 'ஏவலிளையர் தாய்வயிறு கரிப்ப' என்பது போலப் பன்மைசுட்டிநின்றது. 'நன்னன்மருகனன்றியும்' என்றதற்கு 'பெண்கொலைபுரிந்த நன்னன் போல, வரையா நிரயத்துச் செலியரோ வென்னை' என்றமையின், அதுவும் வரைதற்கு ஓர்காரணமாக உரைப்பாருமுளர். பதமென்றது, பரிசிலை. மன் - ஒழியிசைக்கண்வந்தது. (கருக)

(கருஉ.) வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்
கேழற் பன்றி வீழ வயல
தாழற் புற்றத் துடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்
புகழ்சால் சிறப்பி னம்புமிகத் திளைக்குங்
கொலைவன் யார்கொலோ கொலைவன் மற்றிவன்
விலைவன் போலான் வெறுக்கைநன் குடைய
னாரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
சார லருவிப் பயமலைக் கிழவ
னோரி கொல்லோ வல்லன் கொல்லோ
பாடுவல் விறலியோர் வண்ண நீரு
மண்முழா வமைமின் பண்யாழ் நிறுமின்
கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமி
னெல்லரி தொடுமி னாகுளி தொடுமின்
பதலை யொருகண் பையென வியக்குமின்
மதலை மாக்கோல் கைவலந் தமினென்
றிறைவ னாகலிற் சொல்லுபு குறுகி
மூவேழ் துறையு முறையுளி கழிப்பிக்
கோவெனப் பெயரிய காலை யாங்கது
தன்பெய ராகலி னாணி மற்றியாம்
நாட்டிட னாட்டிடன் வருது மீங்கோர்
வேட்டுவ ரில்லை நின்னொப் போரென
வேட்டது மொழியவும் விடாஅன் வேட்டத்திற்
றானுயிர் செகுத்த மானிணப் புழுக்கோ
டானுருக் கன்ன வேரியை நல்கித்
தன்மலைப் பிறந்த தாவி னன்பொன்
பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்மெனச்
சுரத்திடை நல்கி யோனே விடர்ச்சிமை

யோங்கிருங் கொல்லிப் பொருந
ஞெம்பா வீகை விறல்வெய் யோனே.

திணை - அது; துறை - பரிசில்விடை.

வல்வில்லோரியை வன்பரணர் பாடியது.

இ - ள்.—ஆனையைக் கொன்றுவீழ்த்த சிறந்த தொடையையுடைய அம்பு பெரியவாயையுடைய புலியை இறந்துபாட்டையுறுவித்துத் துளைபொருந்திய கோட்டையுடைத்தாகிய தலையினையுடைய புள்ளிமான்கலையையுருட்டி உரல்போலும் தலையையுடைய கேழலாகிய பன்றியைவீழச்செய்து அதற்கு அயலதாகிய ஆழ்தலையுடைய புற்றின்கட்கிடக்கின்ற உடும்பின்கட்சென்றுசெறியும் வல்வில்லாலுண்டாகிய வேட்டத்தை வென்றிப்படுத்தியிருந்தவன், புகழமைந்த சிறப்பினையுடைய அம்பு எத்தொழிலிலேமிகச் சென்றுறுதற்குக்காரணமாகிய கொலைவன் யாரோதான்? கொலைவன் மற்றிவன், விலை எதுவாகக் கொன்ருனுகமாட்டான்; செல்வத்தை மிகவுடையனுயிருந்தான்; சந்தனம்பூசிப்புலர்த்திய அழகிய பரந்தமார்பினையுடைய, சாரற்கண்ணே அருவியையுடைய பயன்படமேலைக்குத் தலைவனுகிய ஓரியோ அல்லனோதான்? அவனுகத்தகும்; யான்பாடுவேன், விறலி, ஒருவண்ணம்; நீங்களும் முழாவின்கண்ணே மார்ச்சனையையிடுமின்; யாழிலே பண்ணை நிறுத்துமின்; கண்திறக்கப்பட்ட தூம்பாகிய களிற்றினதுகைபோலும் வடிவையுடைய பெருவங்கியத்தை இசையுங்கோள்; சல்லியை வாசியுமின்; சிறுபறையை அறையுங்கோள்; பதலையில் ஒருமுகத்தை மெல்லெனக்கொட்டுமின்; நமதுபிறப்புணர்த்தும் கரியகோலைக் கையின்கண்ணே தாருங்கோளென்றுசொல்லி அணுகித் தலைவனுதலாலே இருபத்தொரு பாடற்றுறையையும் முறையாற் பாடிமுடித்துப் பின்னர்க் கோவேயென்று அவன்பெயர்கூறியகாலத்து அவ்விடத்து அவ்வார்த்தை தன்பெயராதலால் நாணிப் பின்னை யாங்கள் நாட்டிடந்தோறும் நாட்டிடந்தோறும் சென்றுவருவேம், இவ்விடத்து ஒருவேட்டுவரில்லை, நின்னை ஒப்போரென யாம்விரும்பியதுகூறவும் அதற்குக் காலந்தாராய் வேட்டையின்கண் தானெய்த மானினது நிணத்தையுடைய தசையினது புழுக்குடனே ஆவின் நெய்யை உருக்கினாற்போன்ற மதுவைத்தந்து தன்னுடைய மலையின்கட்பிறந்த வலியில்லாத நல்ல பொன்னைப் பலமணித்திரளுடனேகலந்து இதனைக் கொண்மினெனச்சொல்லிச் சுரத்திடத்தே எமக்குத்தந்தான்; முழையையுடைத்தாகிய உச்சியையுடைய உயர்ந்த பெரிய கொல்லிக்குத்தலைவன், பாதுகாவாத வண்மையினையுடைய வென்றியைவிரும்புவோன்.—எ - று.

புழலென்றது, ஆகுபெயராற் புழலையுடையகோட்டை. களிற்றுயிரென்றது, ஆகுபெயராற் களிற்றினதுகைபோலும் வடிவையுடைய பெருவங்கியத்தை. பாடுவல்விறலியோர்வண்ணமென்றது, நீயும் ஒன்றுபாடுவாயாகவென்னுநினைவிற்று. நீருமென்றது, கூட்டத்தை. மூவேழ்துறையுமென்றது, வலிவு மெலிவு சமமென்னும் மூன்றுதானத்திலும் ஒவ்வொன்றில் ஏழுதானமுடித்துப்பாடும் பாடற்றுறையை; அன்றி, இருபத்தொருநரம்பாற்றொடுக்கப்படும் பெரிய யாழெனினுமமையும். தம்மினென்றது, தமினெனக் குறைந்துநின்றது.

கொல்லிப்பொருநனாகிய விறல்வெய்யோன் கோவெனப் பெயரியகாலை, அது தன்பெயராகலின்நாணி வேட்டதுமொழியவும்விடானாய் நல்கியோனெனக் கூட்டுக.

(கருஉ)

(கருங.) மழையணி குன்றத்துக் கிழவ னாளு
மிழையணி யானை யிரப்போர்க் கீயுஞ்
சுடர்விடு பசும்பூட் சூர்ப்பமை முன்கை
யடுபோ ரானா வாத னோரி
மாரி வண்கொடை காணிய நன்றுஞ்
சென்றது மன்னெங் கண்ணுளங் கடும்பே
பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை
வானார்த் தொடுத்த கண்ணியுங் கலனும்
யானை யினத்தொடு பெற்றனர் நீங்கிப்
பசியா ராகன் மாறுகொல் விசிபிணிக்
கூடுகொ ளின்னியங் கறங்க
வாடலு மொல்லார்தம் பாடலு மறந்தே.

திணை - அது ; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—முகில்சூழ்ந்த மலைக்குத்தலைவன், நாடோறும் பட்டமுதலாகியபூண் களையணிந்த யானையை இரப்போர்க்குக்கொடுக்கும் கதிர்விடுகின்ற பசும்பொன் னாற்செய்த அணியினையும் வளைந்தகடகமமைந்த முன்கையினையுமுடைய கொல் லும்போர் அமையாதி ஆதனோரியது மழைபோலும் வள்ளிய கொடையைக்காண் டற்கு மிகவும்சென்றது, எம்முடையகூத்தச்சுற்றம் ; அச்சுற்றத்தார் குளிர்ந்த நீரின்கட்பூவாத மணிமிடைந்த குவளைப்பூவை வெள்ளிநாராற்றொடுக்கப்பட்ட பொன்னரிமாலையினையும் பிற அணிகலங்களையும் யானையணிகளுடனேபெற்றன ராய்நீங்கிப் பசியாராகலானேகொல்லோதான், வாரால்வலித்துப்பிணிக்கப்பட்ட பலகருவியும் தொகுதிகொண்ட இனிய இயங்களொலிப்ப ஆடுதலுமாட்டாராயி னார், தமதுபாடுதலையுமறந்து.—எ - று.

சூர்ப்புடையதனைச் சூர்ப்பென்றார். குடிமை ஆண்மைத் தொடக்கத்தன, நின்றுங்கேநின்று உயர்திணைமுடிவும்பெறுதலின் இக்கடும்பென்பதும் பொருணோ க்கால் முடிவுபெற்றது. கண்ணுளங்கடும்பெனநின்றவழி, அம் - அல்வழிச்சாரி யை. மன் - அசைநிலை.

ஓரிவண்கொடைகாணிய கண்ணுளங்கடும்புசென்றது ; சென்றபின்றை அக் கடும்பாயினோர் தமதுபாடலுமறந்து ஆடலும் ஒல்லாராயினார் ; அதற்குக்காரணம் பசியாராகன்மாறுகொலெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

நுண்பூணென்று பாடமோதுவாருமுளர். (கருங)

(கருச.) திரைபொரு முந்நீர்க் கரைநணிச் செலினு
மறியுநர்க் காணின் வேட்கை நீக்குந்
தின்னீர் வினவுவர் மாந்த ரதுபோ
லரச ருழைய ராகவும் புரைதபு
வள்ளியோர்ப் படர்குவர் புலவ ரதனால்

யானும், பெற்ற தூதியம் பேறியா தென்னே
னுற்றனெ னாதலி னுள்ளிவந் தனனே
யீயென விரத்தலோ வரிதே நீயது
நல்கினு நல்கா யாயினும் வெல்போ
ரெறிபடைக் கோடா வாண்மை யறுவைத்
தூவிரி கடுப்பத் துவன்றி மீமிசைத்
தண்பல விழிதரு மருவியின்
கொண்பெருங் கானம் பாடலெனக் கெளிதே.

திணை - அது; துறை - பரிசிற்றுறை.
கோண்கானங்கிழானை மோசுகீரனர் பாடியது.

இ - ள்.—திரையலைக்கும் கடலினது கரைக்கண் அணியவிடத்தேபோகினும் அறிவாரைக்காணின் நீர்வேட்கையினைத் தணிக்கும் சிறியநீரைக்கேட்பர், உலகத்துமக்கள்; அதுபோல வேந்தரிடத்தாராகவும், குற்றந்தீர்ந்த வள்ளியோரைநினைத்துச்செல்வர், அறிவுடையோர்; அதனால், யானும் பெற்றதனைப் பயனாகக்கொண்டு பெற்றபொருள்சிறிதாயினும் இவன்செய்தது என்னென்று இகழேன், வறுமையுற்றேனாதலின்; நின்னைநினைத்துவந்தேன்; எனக்கு ஈயாயென்று இரத்தல் அரிது; நீ அப்பரிசிலைத் தரினும் தாராயாயினும் பூசலிடத்து எறியும் படைக்கலத்துக்குப்புறத்து அடியிடா ஆண்மையையும், துகிலினது தூயவிரியையொப்ப நெருங்கி உச்சியினின்றும் பலவாயிழியும் குளிர்ந்த அருவியையுடைய நினது கொண்கானத்தையும் பாடல் எனக்கு எளிது.—எ - று.

புரைதபவென்றுபாடமோதிப் புரைதபப்படர்குவரெனினுமமையும்.

நீ அதுநல்கினும் நல்காயாயினும் ஈயெனவிரத்தல் எனக்கு அரிது; நினது ஆண்மையையும் கொண்பெருங்கானத்தையும்பாடல் எனக்கு எளிதெனக்கூட்டி வினைமுடிவுசெய்க. (௧௫௪)

(௧௫௫.) வணர்கோட்டுச் சிறியாழ் வாடுபுடைத் தழீஇ
யுணர்வோர் யாரென் னிடும்பை தீர்க்கெனக்
கிளக்கும் பாண கேளினி நயத்திற்
பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ
வேர்தரு சுடரி னெதிர்கொண் டாஅங்
கிலம்படு புலவர் மண்டை விளங்குபுகழ்க்
கொண்பெருங் கானத்துக் கிழவன்
றண்டா ரகல நோக்கின மலர்ந்தே.

திணை - அது; துறை - பாணாற்றுப்படை.
அவனை அவர் பாடியது.

இ - ள்.—வளைந்தகோட்டையுடைய சிறியயாழை உலர்ந்தமருங்கிலேதழுவிக்கொண்டு அறிவோர்யார்தான் எனது துன்பத்தைத் தீர்க்கவென்றுசொல்லும் பாண, யான்சொல்லுகின்றதனை இப்பொழுது கேட்பாயாக; நயத்தால், பாழூரின்

கண் *நெருஞ்சியினது பொன்னிறத்தையுடைய வாலியபூ எழுகின்றஞாயிற்றை எதிர்கொண்டாற்போல, வறுமையுற்ற யாழ்ப்புலவரது ஏற்குமண்டை, விளங்கிய புகழையுடைய கொண்பெருங்கானங்கிழானது குளிர்ந்த தாரையுடைய மார்பத்தை மலர்ந்துநோக்கின.—எ - று.

'ஏர்தரு சுடரி னெதிர்கொண் டாங்கு' என்புழி, இன் - சாரியை; அது, தோற்றம்வேண்டாத்தொகுதிக்கண்வந்தது. அன்றி, ஐகாரம் - விகாரத்தால் தொக்கதெனினுமமையும். நயத்திற்கிளக்கும்பாணவென இயையும்; நயத்தின் அகல நோக்கினவென இயைப்பினுமமையும். மண்டை அகலநோக்கி மலர்ந்தவென்ற கருத்து: கொடுக்கும்பொருள் மார்பின்வலியான் உளதாமாகலின், அகலநோக்கின வென்றதாகக்கொள்க. (கருரு)

(கருசு.) ஒன்றுநன் குடைய பிறர்குன்ற மென்று
மிரண்டுநன் குடைத்தே கொண்பெருங் கான
நச்சிச் சென்ற விரவலர்ச் சுட்டித்
தொடுத்துணக் கிடப்பினுங் கிடக்கு மஃதான்று
நிறையருந் தானை வேந்தரைத்
திறைகொண்டு பெயர்க்குஞ் செம்மலு முடைத்தே.

திணை - அது; துறை - இயன்மொழி.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—வண்மையாதல் வலியாதல் நன்மையொன்றுடைய, பிறருடைய மலைகள்; எந்நாளும் இரண்டுநன்மையையுடைத்து, பெரிய கொண்கானமென்னு மலை; அது, தன்பாற் பரிசில்நச்சிப்போன இரப்போர்காரணமாகத் தான் அவர்க்கு முன்புகடன்கொடுத்தோராலே வளைப்புண்ணப்பட்டுக் கிடப்பினுங்கிடக்கும்; அது வன்றி, நிறுத்தற்கரிய படையையுடைய அரசரைத் திறைகொண்டு அவரை மீட்கும் தலைமையையுமுடைத்து.—எ - று.

இரவலர் சுட்டியென்றுபாடமோதி, இரவலர்கருதிக்கொண்டு புகழ்களைத் தொடுத்துண்ணக்கிடக்கினுங்கிடக்குமெனவும், இரவலர் எமது எமதென்று கூறிட்டுண்ணக் கிடக்கினுங்கிடக்குமெனவும் உரைப்பினுமமையும்.

இது, கொடைச்சிறப்பும் வென்றிச்சிறப்பும் கூறியவாறு. (கருசு)

(கருஎ.) தமர்தற் றப்பி னதுநோன் றல்லும்
பிறர்கை யறவு தானா ணுதலும்
படைப்பழி தாரா மைந்தின னாகலும்
வேந்துடை யவையத் தோங்குபு நடத்தலு
நும்மோர்க்குத் தகுவன வல்ல வெம்மோன்
சிலைசெல மலர்ந்த மார்பிற் கொலைவேற்
கோடற் கண்ணிக் குறவர் பெருமக

* "நீள்சுடர் நெறியை நோக்கு நிரையிதழ் நெருஞ்சிப்பூ" என்றார் சிந்தாமணியிலும்; கோவிந்தையாரிலம்பகம், ருக - ம் செய்யுள்.

னாடுமழை தவிர்க்கும் பயங்கெழு மீமிசை
யெற்படு பொழுதி னினந்தலை மயங்கிக்
கட்சி காணாக் கடமா னல்லேறு
மடமா னாகு பிணைபயி ரழைப்பின்
விடர்முழை யிரும்புலிப் புகர்ப்போத் தோர்க்கும்
பெருங்க னாடனெம் மேறைக்குத் தகுமே.

திணையும் துறையும் அவை.

ஏறைக்கோனைக் குறமகள் இளவெயினி பாடியது.

இ - ள்.—தனக்குச்சிறந்தோர் தன்னைப்பிழைப்பின் அதுபொறுத்தலும், பிறருடையமிடிமைக்குத் தான் நாணுதலும், படையிடத்துப் பிறர் பழிக்கப்படாத வலியையுடையனாதலும், அரசுடைத்தாகிய அவைக்களத்தின்கண் மேம்பட்டுநடத்தலும் நும்மால் மதிக்கப்படுந்தலைவர்க்குத் தருவனவல்ல; எம்முடையதலைவன், வில்லைப் பூரணமாகவலித்தலான் அகன்றமார்பினையும் கொல்லும்வேலினையும் காந்தட்பூவாற்செய்த கண்ணியினையுமுடைய குறவர்க்குத்தலைமகன், இயங்குகின்றமுகிலைத் தனது உயரத்தால் தடுக்கும் பயன்பொருந்தியமலையினது உச்சிக்கண் ஞாயிறு படுகின்றகாலத்தில் இனத்தினின்றும் தலைமயங்கித் தான்சேரும் சேக்கையைக் காணாத காட்டின்கண் மானினதுநல்லகலை மடப்பத்தினையுடைய மானாகிய இளம்பிணையைப் பயிரான் அழைப்பின் அவ்வோசையை விடராகிய முழையின்கட் கிடக்கின்ற பெரும்புலியாகிய புகர்நிறத்தினையுடைய ஏறு செவிதாழ்த்துக்கேட்கும் பெரிய மலைநாடனாகிய எம்முடைய ஏறைக்கோனுக்குப்பொருந்தும்.—எ - று.

'சிலைசெலமலர்ந்தமார்பு' என்பதற்கு மலைதோற்க மலர்ந்த மார்பெனினும் அமையும். தலைமயங்கியென்பதனுள், தலை - அசைநிலை. (கருஎ)

(கருஅ.) முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவு
மரசுடன் பொருத வண்ண னெடுவரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும் பிறங்குமிசைக்
கொல்லி யாண்ட வல்வில் லோரியுங்
காரி யூர்ந்து பேரமர்க் கடந்த
மாரி யீகை மறப்போர் மலையனு
மூரா தேந்திய குதிரைக் கூர்வேற்
கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியு
மீர்ந்தண் சிலம்பி னிருடூங்கு நளிமுழை
யருந்திறற் கடவுள் காக்கு முயர்சிமையப்
பெருங்க னாடன் பேகனுந் திருந்துமொழி
மோசி பாடிய வாயு மார்வமுற்
றுள்ளி வருந ருலைவுநனி தீரத்
தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்

கொள்ளா ரோட்டிய நள்ளியு மெனவாங்
கெழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
யிரந்தோ ரற்றந் தீர்க்கென விரைந்திவ
ணுள்ளி வந்தனென் யானே விசும்புறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
யாசினிக் கவினிய பலவினார் வுற்று
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
றுய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரு
மதிரா யாணர் முதிரத்துக் கிழவ
விவண்விளங்கு சிறப்பி னியறேர்க் குமண
விசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுகநீ யேந்திய வேலே.

திணை - அது ; துறை - வாழ்த்தியல் ; பரிசில்கடாநிலையுமாம்.
குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது.

இ - ள்.—முரசு கடிப்பு அறையவும் வெள்ளியசங்கு முழங்கவும் வேந்தருடனேபொருத தலைமையையுடைய நெடியமலைக்கண் ஒலிக்கும் வெளிய அருவி கல்லை உருட்டியோடும் பறம்பிற்குவேந்தனாகியபாரியும், உயர்ந்த உச்சியையுடைய கொல்லிமலையையாண்ட வலியவில்லையுடைய ஓரியும், காரியென்னும் பெயரையுடைய குதிரையைச்செலுத்திப் பெரியபூசலைவென்ற மாரிபோலும்வண்மையையும் மிக்கபோரினையுமுடைய *மலையனும், செலுத்தப்படாது உயர்ந்த குதிரையென்னுமலையையும் கூரியவேலையும் கூவிளங்கண்ணியையும் வளைந்த ஆரத்தையுமுடைய எழினி அதியமானும், மிகக்குளிர்ந்த மலையின்கண் இருள்செறிந்த பெரிய முழையினையும் மலைத்தற்கரியவலியினையுமுடைய தெய்வங்காக்கும் உயர்ந்தசிகரங்களையுடைய பெரியமலைநாடனாகிய பேகனும், திருந்தியசொல்லையுடைய மோசியென்னும்புலவன்பாடப்பட்ட ஆயும், ஆசைப்பட்டுத் தன்னை நினைந்துவருவாருடையவறுமை மிகவுநீங்கத் தவிராதுகொடுக்கும் கூறுபாடமைந்த வண்மையினையுடைய பகைவரைத்துரத்திய நள்ளியும் எனச்சொல்லப்பட்ட †எழுவரும் இறந்த

* காரியென்பவன், இவனே; இவனை மலையமான்றிருமுடிக்காரியென்றுங் கூறுவர்.

† இச்செய்யுளிற்போலவே "வானம் வாய்த்த வளமலைக் கவாஅற், கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய, வருந்திற லணங்கி னாவியர் பெருமகன், பெருங்கனாடன் பேகனுஞ் சுரும்புண, நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச், சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய, பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற், பறம்பிற் கோமான் பாரியுங் கறங்குமணி, வாலுளைப் புரவியொடு வையக மருள, வீர நன்மொழி யிரவலர்க் கீந்த, வழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேற், கழல்தொடித் தடக்கைக் காரியு நிழறிகழ், நீல நாக நல்கிய கலிங்க, மாலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த, சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோ, ளார்வ நன்மொழி யாயு மால்வரைக், கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி, யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த, வுரவுச்சினங்

பின்பு கண்டார்க்கு இரக்கம்வரப் பாடிவருவாரும் பிறருங்கூடி இரந்தோரது துன்பத்தைத்தீர்க்கக்கடவேன் யானென்று நீ இருத்தலால் விரைந்து இவ்விடத்தே பரிசில்பெறநினைந்துவந்தேன், யான்; வானகத்தின்கண்ணே பொருந்த மூங்கில்வளரும்மலையின்கட் சுரபுன்னையோடு ஓங்கி ஆசினியோடு அழகுபெற்ற பலாவின்கண் ஆசைப்பட்டு முள்ளைப்புறத்தேயுடைய முதிர்ந்த பலாப்பழத்தைப்பெற்றகடுவன் பஞ்சுபோலும் மயிரையுடைத்தாகிய தலையினையுடைய மந்தியைக் கையாற்குறிசெய்தழைக்கும் தளராத புதுவருவாயையுடைய முதிரமென்னுமலைக்குத்தலைவ, உலகமுழுவதிலும் விளங்குகின்ற தலைமையினையும் இயற்றப்பட்ட தேரினையுமுடைய குமணனே, புகழ்மேம்பட்டவண்மையுடனே பகையிடத்து உயர்க, நீ எடுக்கப்பட்டவேல் —எ - று.

ஆசினியொடுங்கவினியவென, ஒடு - விரித்துரைக்கப்பட்டது. ஆர்வுற்றுப்பயிருமென்க. ஆசினியென்பது, ஒருமரம்; ஈரப்பலாவென்பாருமுளர். பாடிவருநரும் பிறருங்கூடி இரந்தோரற்றம்தீர்க்கவேண்டுமெனக்கருதியென்று உரைப்பாருமுளர்.

(கருகூ.) வாழு நாளோ டியாண்டுபல வுண்மையிற்
றீர்தல்செல் லாதென் னுயிரெனப் பலப்புலந்து
கோல்கா லாகக் குறும்பல வொதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்டுயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்
பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
முற்றா விளந்தளிர் கொய்துகொண் டுப்பின்று
நீருலை யாக வேற்றி மோரின்
றவிழ்ப்பத மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த வுடுக்கைய ளறம்பழியாத்
துவ்வா ளாகிய வென்வெய் யோளும்
என்றாங், கிருவர் நெஞ்சமு முவப்பக் கானவர்
கரிபுன மயக்கிய வகன்கட் கொல்லை

---

கனலு மொளிதிகழ் நெடுவே, லரவக்கடற் றானை யதிகனுங் கரவாது, நட்டோருவப்ப நடைப்பரி கார, முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத், துளிமழைபொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு, நளிமலை நாட னள்ளியு நளிசினை, நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக், குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த, காரிக் குதிரைக் காரியொடு மலைந்த, வோரிக் குதிரை யோரியு மெனவாங், கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோ, ளெழுவர் பூண்ட வீகைச் செந்நுகம், விரிகடல்வேலி வியலகம் விளங்க, வொருதான் றாங்கிய வுரனுடை நோன்றாள் ...... ...... ஓவியர் பெருமகன்'' என்று வள்ளல் எழுவரையும் சிறுபாணாற்றுப்படையிலுங்கூறியிருத்தல்காண்க [அடி அசு - கஉஉ].

ஐயவனம் வித்தி மையுறக் கவினி
யீனல் செல்லா வேனற் கிழுமெனக்
கருவி வானந் தலைஇ யாங்கு
மீத்த நின்புக ழேத்தித் தொக்கவென்
பசிதினத் திரங்கிய வொக்கலு முவப்ப
வுயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினுந்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலே னுவந்துநீ
யின்புற விடுதி யாயிற் சிறிது
குன்றியுங் கொள்வல் கூர்வேற் குமண
வதற்பட வருளல் வேண்டுவல் விறற்புகழ்
வசையில் விழுத்திணைப் பிறந்த
விசைமேந் தோன்றனிற் பாடிய யானே.

திணை - அது; துறை - பரிசில்கடாநிலை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—தனக்குச்சென்ற ஆண்டுகள் பல உண்டாதலின், இன்னும்போகின்றதில்லை எனதுயிரென்று சொல்லிக்கொண்டு வாழுநாளோடு பலவாகவெறுத்துத் தான்பிடித்ததண்டே காலாகக்கொண்டு ஒன்றற்கொன்று அணுகப் பலஅடியிட்டுநடந்து நூலைவிரித்தாற்போலும் மயிரையுடையவளாய்க் கண்மறைந்து முற்றத்திடத்துப் புறப்படமாட்டாத மூப்பையுடைய தாயும், பசப்புற்றமேனியுடனே நினைவுவருத்த வருந்தி மருங்கிலே எடுத்த பலசிறுபிள்ளைகள் பிசைந்துமெல்லுதலால் உலர்ந்தமுலையினையுடையளாய் மிகவும்வருந்திக் குப்பையின்கண் படுமுதலாகவெழுந்த கீரையினது முன்புகொய்யப்பட்ட கண்ணிலேகிளைத்த முதிராத இளையதளிரைப்பறித்துக்கொண்டு உப்பின்றியே நீரை உலையாகக்கொண்டு ஏற்றிக் காய்ச்சி மோரின்றி அவிழாகியவுணவைமறந்து பசிய இலையைத்தின்று மாசோடு கூடித் துணிபட்ட உடையினளாய் அறக்கடவுளைப்பழித்து உண்ணுளாகிய என்னை விரும்பியோளுமென்றுசொல்லப்பட்ட இருவருடையநெஞ்சமும் காதலிப்ப, வேடர் சுடப்பட்டுக் கரிந்தபுனத்தை மயங்கவுழுத அகன்ற இடத்தையுடையகொல்லைக்கண் ஐவனநெல்லோடுவித்தி இருட்சியுற அழகுபெற்றுக் கோடைமிகுதியான் ஈன்றலைப் பொருந்தாத தினைக்கு இழுமெனும் அனுகரணவொலியுடனே மின்னும் இடியு முதலாகிய தொகுதியையுடையமழை துளியைச்சொரிந்தாற்போலத் தந்த நினது புகழைவாழ்த்திப் பசிதினலால்வருத்தமுற்ற ஈண்டிய எனது சுற்றமுமகிழ, மேம்பட்டு ஏந்தியகோட்டையுடைய கொல்யானையைப்பெறினும் முகமாறித்தரும்பரிசிலைக் கொள்ளேன்; மகிழ்ந்து நீ யான் இன்புற விரையத் தந்து விடுவையாயிற் சிறிதாகிய குன்றியென்னும் அளவையுடையபொருளாயினும் கொள்வேன்; கூரிய வேலையுடைய குமணனே, அவ்வின்புறுதற்கண்ணே பட அருளுதலைவேண்டுவேன், வென்றிப்புகழையுடைய வசையில்லாத சிறந்த குடியின்கட்பிறந்த இசைமேம்பட்ட அண்ணலே, நின்னைப்பாடியயான்.—எ - று.

குமண, இசைமேந்தோன்றல், நிற்பாடியயான் கொல்களிறுபெறினும் தவிர்ந்துவிடுபரிசில் கொள்ளலேன்; இருவர்நெஞ்சமுமுவப்ப, ஒக்கலுமுவப்ப உவந்து

இன்புறவிடுதியாயிற் குன்றியுங்கொள்வேன்; அதற்பட அருளல்வேண்டுவலெனக் கூட்டி வினைமுடிவுசெய்க.

'வாழு நாளோடி யாண்டுபல வுண்மையின்' என்பதற்கு, இன்பநுகர்ந்துகழிந்த இளமைநாளுடனே மூப்புவந்துதுன்பமுற்ற யாண்டுபலவுண்மையினெனினுமமையும். குன்றியுமென்பதற்குக் குறைந்துமென்று உரைப்பாருமுளர். ஆங்குமென்னும் உம்மை - இசைநிறைவு. (௧௫௯)

(௧௬௦.) உருகெழு ஞாயிற் றொண்கதிர் மிசைந்த
முளிபுற் கானங் குழைப்பக் கல்லென
வதிர்குர லேறொடு துளிசொரிந் தாங்குப்
பசிதினத் திரங்கிய கசிவுடை யாக்கை
யவிழ்புகு வறியா தாகலின் வாடிய
நெறிகொள் வரிக்குடர் குளிப்பத் தண்ணெனக்
குய்க்கொள் கொழுந்துவை நெய்யுடை யடிசின்
மதிசேர் நாண்மீன் போல நவின்ற
சிறுபொ னன்கலஞ் சுற்ற விரீஇக்
கேடின் றாகப் பாடுநர் கடும்பென
வரிதுபெறு பொலன்கல மெளிதினின் வீசி
நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத் தோனே
செல்குவை யாயி னல்குவன் பெரிதெனப்
பல்புகழ் நுவலுநர் கூற வல்விரைந்
துள்ளந் தூரப்ப வந்தனெ னெள்ளுற்
றில்லுணாத் துறத்தலி னின்மறந் துறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்
கூழுஞ் சோறுங் கடைஇ யூழி
னுள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மறப்புலி யுரைத்து மதியங் காட்டியு
நொந்தன ளாகி நுந்தையை யுள்ளிப்
பொடிந்தநின் செவ்வி காட்டெனப் பலவும்
வின்வ லாது ளாகி நனவி
னல்ல லுழப்போண் மல்லல் சிறப்பச்
செல்லாச் செல்வ மிகுத்தனை வல்லே
விடுத்தல் வேண்டுவ லத்தை படுதிரை
நீர்சூழ் நிலவரை யுயரநின்
சீர்கெழு விழுப்புக ழேத்துகம் பலவே.

திணையும் துறையும் அவை.
அவனை அவர் பாடியது.

இ - ள்.—உட்குப்பொருந்திய ஞாயிற்றினது ஒள்ளிய சுடர்தின்னப்பட்ட மூளிந்த புல்லையுடையகாடு தளிர்ப்பக் கல்லென ஓசையுண்டாக நடுக்கத்தைச்செய்யும் ஓசையையுடைய உருமேற்றுடனேகூடித் துளியைப்பொழிந்தாற்போலப் பசிதின்னப்பட்டு உலர்ந்த வேர்ப்புடைய உடம்பு அவிழ்புகுவதறியாதாகலால் வாட்டமுற்ற முடக்கங்கொண்ட பலவரியையுடைய குடர் தன்கண்ணேசூழ்கும் பரிசுகுளிரத் தாளிப்புச்சேரப்பட்ட கொழுவிய துவையோடுகூடிய நெய்யுடைய அடிசிலைத் திங்களைச்சேர்ந்த நாளாகியமீனையொப்பப் பயின்ற பொன்னாற்செய்யப்பட்ட சிறிய நல்லகலங்களைச் சூழவைத்திருத்தி ஊட்டிக் கேடில்லையாகப் பாடுவாரதுசுற்றமெனச்சொல்லிப் பெறுதற்கரிய பொன்னாற்செய்யப்பட்ட அணிகலங்களை எளிதாகவழங்கித் தன்னுடைய நட்டோரினும் எம்மோடுநட்புச்செய்த நல்ல புகழையுடைய குமணன், மதநிறைந்த தெருவினையுடைய முதிரமென்னுமலையிடத்தான்; நீ அவன்பாற் செல்வையாயின், நினக்கு மிகவுந்தருவனென நினது பல புகழையும் சொல்லுவார்சொல்ல, அதுகேட்டுக் கடிதாக விரைந்து எனது உள்ளம் செலுத்துதலான் வந்தேன்; எனதுமனை உண்ணப்படுவனவற்றைக் கைவிடுதலான் அம்மனையையிகழ்ந்துநினையாது உறைகின்ற புல்லிய உளைமயிர்போலும் குடுமியையுடையபுதல்வன் பல்படியும் பாலில்லாத வறுவியமுலையைச் சுவைத்துப் பால் பெறானாய்க் கூழையும் சோற்றையும்வேண்டி முடுகி முறைமுறையே உள்ளொன்றில்லாத வறிய அடுகலத்தைத் திறந்து அங்கு ஒன்றுங்காணாதழ, அதனைப்பார்த்து மறத்தையுடைய புலியைவரவுசொல்லி அச்சமுறுத்தியும் அம்புலியைக்காட்டியும் அவற்றால் தணிக்க அருமையின் வருந்தினளாய் நின்பிதாவைநினைந்துவெறுத்த நின் செவ்வியைக்காட்டெனச்சொல்லிக்கேட்டல் அமையாளாய் மிகுதிப்பட நனவின்கண்ணும் துயருறுவோள் வளப்பமிகத் தொலையாதசெல்வத்தை மிகுத்தனையாய் விரையப் பரிசில்தந்து விடுத்தலைவிரும்புவேன், யான்; ஒலிக்குந்திரையையுடைய நீராற்சூழப்பட்டநிலவெல்லையிலேயோங்க நினது சீர்மைபொருந்திய சிறந்த புகழைப் பலவாகவாழ்த்துவேம்.—எ - று.

அத்தை - அசைநிலை. நன்கலமிரீஇ அடிசிலைக் குடர்குளிப்பத் தண்ணென ஊட்டியென்க.

ஊட்டியென ஒருசொல் தரப்பட்டது. 'நட்டோர்நட்ட' என்பதற்கு நட்டோரைநாட்டியவெனினுமமையும். 'செல்லாச்செல்வமிகுத்தனை' என்பதூஉம், 'நிலவரையுணர' என்பதூஉம் பாடம். (கசு0)

(கசுக.) நீண்டொளி யழுவங் குறைபட முகந்துகொண்
டீண்டுசெலற் கொண்மூ வேண்டுவயிற் குழீஇப்
பெருமலை யன்ன தோன்றல சூன்முதிர்
புருமுரறு கருவியொடு பெயல்கட னிறுத்து
வளமழை மாறிய வென்றூழ்க் காலை
மன்பதை யெல்லாஞ் சென்றுணக் கங்கைக்
கரைபொரு மலிநீர் நிறைந்து தோன்றியாங்
கெமக்கும் பிறர்க்குஞ் செம்மலை யாகலி
னன்பிலா டவர்கொன் றாறு கவரச்

சென்றுதலை வருந வல்ல வன்பின்று
வன்கலை தெவிட்டு மருஞ்சுர மிறந்தோர்க்
கிற்றைநா ளோடும் யாண்டுதலைப் பெயரவெனக்
*கண்பொறி போகிய கசிவோ டுரனழிந்
தருந்துய ருழக்குமென் பெருந்துன் புறுவினின்
ருள்படு செல்வங் காண்டொறு மருளப்
பனைமரு டடக்கையொடு முத்துப்பட முற்றிய
வுயர்மருப் பேந்திய வரைமரு ணோன்பக
டொளிதிக ழோடை பொலிய மருங்கிற்
படுமணி யிரட்ட வேறிச் செம்மாந்து
செலனசைஇ யுற்றனென் விறன்மிகு குரிசி
லின்மை துரப்ப விசைதர வந்துநின்
வண்மையிற் றொடுத்தவென் னயந்தனை கேண்மதி
வல்லினும் வல்லே னாயினும் வல்லே
யென்னளந் தறிந்தனை நோக்காது சிறந்த
நின்னளந் தறிமதி பெரும வென்றும்
வேந்தர் நாணப் பெயர்வேன் சாந்தருந்து
பல்பொறிக் கொண்ட வேந்தெழி லகல
மாணிழை மகளிர் புல்லுதொறும் புகல
நாண்முர சிரங்கு மிடனுடை வரைப்பினின்
றாணிழல் வாழ்நர் நன்கல மிகுப்ப
வாளம ருழந்தநின் றானையுஞ்
சீர்மிகு செல்வமு மேத்துகம் பலவே.

திணை - அது; துறை - பரிசிற்றுறை.

அவனை அவர்பாடிப் பகடுபெற்றது.

இ - ள்.—பெரிதாய் ஒலிக்கின்ற பரப்பினையுடைய கடல்குறைபட நீரை முகந்துகொண்டு விரைந்தசெலவையுடையமுகில்கள் வேண்டியவிடத்தே திரண்டு பெரிய மலைபோலுந்தோற்றத்தையுடையவாய்ச் சூல்முதிர்ந்து உருமேறிடிக்கும் மின்முதலாகியதொகுதியுடனேகூடிப் பெயலைமுறைமையாகப்பெய்து வளத்தைத் தரும் மழைநீங்கிய கோடைகாலத்து உயிர்ப்பன்மைகளெல்லாஞ்சென்று நீருண்டற்குக் கங்கையினது கரையைப்பொரும் மிக்கவெள்ளம் நிறைந்துதோன்றிய வாறுபோல எங்கட்கும் பிறர்க்கும் தலைமையையுடையையாதலின், யாவரோடும் உறவில்லாத ஆறலை கள்வர் கொன்று வழியிலே அடித்துப்பறித்தலாற் போய் முடிவனவல்ல அருஞ்சுரமாயிருக்கத் தம்முயிர்மேல் அன்பின்றி வலிய கலைகிடந்து அசையிடும் போதற்கரிய சுரத்தின்கண்ணே அளவின்றிப்பிரிந்தவர்க்கு இற்றைநாளோடுங்கூடி யாண்டுகழிகவெனச்சொல்லிக் கண்ணொளிமழுங்கிய இரக்கத்

* கண்பொறிமாறியவென்றும் பாடம்.

துடனே வலிகெட்டுப் பொறுத்தற்கரிய துன்பமுறும் எனது பெரியவறுமையுறுவோன் நினது முயற்சியாலுண்டாகிய செல்வத்தைக்காணுந்தோறும் வியப்பப் பனையையொக்கும் பெருங்கையுடனே முத்துப்படும்படிமுதிர்ந்த உயர்ந்த கொம்பேந்திய மலையையொக்கும் வலிய களிற்றை ஒளிவிளங்கும் பட்டம் பொலியப் பக்கத்தேயொலிக்குமணி ஒன்றற்கொன்று மாறியொலிப்ப ஏறித் தலைமைதோன்ற இருந்து போதலைவிரும்பினேன்; வென்றிமிக்கதலைவனே, எனதுவறுமை பின்னே நின்றுதுரத்த நின்புகழ்கொடுவரவந்து நினதுகைவண்மையிலே சிலவற்றைத்தொடுத்த என்னைக் காதலித்துக்கேட்பாயாக; சிலவற்றைச்சொல்ல அறிவேனாயினும் அறியேனாயினும் விரைய என்கல்வியளவை ஆராய்ந்தறிந்தனையாய் ஆராயாதுசிறந்த நின்னளவை அளந்தறிவாயாக, பெருமானே, எந்நாளும்; எனதுமிகுதியைக் கண்டு அரசர்நாணும்படி பெயர்வேன்; சாந்துபூசப்பட்டுப் பல நல்ல இலக்கணத்தைப்பொருந்திய மேம்பட்ட அழகினையுடையமார்பை மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையுடையமகளிர்தழுவுந்தோறும் விரும்ப நாட்காலையே முரசுமுழங்கும் இடனுடைத்தாய எல்லையின்கண் நினதுதாணிழற்கண்வாழ்வார் நல்ல ஆபரணத்தை மிகுப்ப வாளாற்செய்யும் போரின்கண்ணே உழக்கப்பட்ட நினதுபடையையும் நினதுசீர்மிக்கசெல்வத்தையும் பலபடப்புகழ்வேம்.—எ - று.

அருஞ்சுரம் சென்று தலைவருவனவல்லவென முற்றுக்கி, அவ்வருஞ்சுரமிறந்தோரெனவும், அன்பின்றியிறந்தோரெனவுங்கூட்டுக. நின்வண்மையிற்றொடுத்த வென்பதற்கு நின்வண்மையால்வளைத்துக்கொள்ளப்பட்டவெனினுமமையும். புகல மிகுப்பவென்னும் செயவெனெச்சங்கள், வாளமருழந்தவென்னும் பிறவினையொடு முடிந்தன.

துன்புறுவிமருளப் பகடேறிச் செலல்நசைஇ உற்றனெனெனவும், மகளிர்புகலத் தாணிழல்வாழ்நர் நன்கலமிகுப்ப வாளமருழந்தநின்தானையும் செல்வமும் ஏத்துகமெனவுங்கூட்டுக. (கசுக)

(கசூஉ.)*இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்ல
ரிரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல் யானே.

திணை - அது; துறை - பரிசில்விடைப்பாற்பட்டது.

அவர் வெளிமானுழைச்சென்றார்க்கு வெளிமான்துஞ்சுவான் தம்பியைப் பரிசில்கொடுவென அவன் சிறிதுகொடுப்பக் கொள்ளாதுபோய்க் குமணனைப் பாடிக் குமணன் பகடுகொடுப்பக் கொணர்ந்துநின்று வெளிமானூர்க் கடிமரத்து யாத்துச்சென்று அவர்சொல்லியது.

---

* இப்பாட்டு 'பிறன்பாற் பெரிதுபெற்றுச் சிறிதுதந்தவற்குக்காட்டியவிடை' என்பர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், கூசு-ம் சூத்திரவுரை].

இ - ள்.—இரப்போர்க்கு ஈந்து பாதுகாப்பாய் நீயுமல்லை; புரப்போர் இரப்போர்க்கு இல்லையுமல்லர்; இனி இரப்போருண்டாதலையும் காண்பாயாக; இரப்போர்க்கு இடுவோருண்டாதலையும் காண்பாயாக; நின்னுடைய ஊரின்கட் காவலையுடையமரம்வருந்தக் கொடுவந்து யாம்கட்டிய உயர்ந்த நல்ல இலக்கணமுடைய யானை எமதுபரிசில்; விரைந்தசெலவினையுடைய குதிரையையுடைய தலைவனே, இனி யான் போவல்.—எ - று.

யான்போவலென்றகருத்து: முன்சிறிதுகொடுப்பக் கொள்ளாதமிகுதிதோன்றநின்றது. இரவலருண்மையுங்காணினியென்றகருத்து: இரப்போர்க்குப் பெருந்தன்மையுளதாதல் என்னளவிலேகாணென்பதாம். 'யாம்பிணித்த' என்னும் பன்மை, பெருமிதந்தோன்றநின்றது. *"நடைவயிற் றோன்று மிருவகை விடையும்" என்பதனால், இது பெருநுபெயர்ந்தபரிசில்விடை. (கசுஉ)

(கசுங.) நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்குங்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
னெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கு
மின்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயு
மெல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
றிருந்துவேற் குமண னல்கிய வளனே.

திணை - அது; துறை - பரிசிற்பாற்பட்டது.

பெருஞ்சித்திரனார் குமணனைப்பாடிப் பரிசில்கொணர்ந்து மனையோட்குச் சொல்லியது.

இ - ள்.—நின்னைக்காதலித்துறையும் நின்சார்வாய மகளிர்க்கும் நீ அன்புசெய்தொழுகப்பட்டமகளிர்க்கும் பலகுணங்களும் மாட்சிமைப்பட்ட கற்பினையுடைய நினதுசுற்றத்து மூத்தமகளிர்க்கும் நமதுசுற்றத்தினது மிக்கபசிநீங்க நினக்கு நெடுநாட்படக் குறித்த எதிர்ப்பை தந்தோர்க்கும் மற்றும் இன்னதன்மையாரென்றுகருதாது என்னொடுகூடி உசாவுவதுஞ்செய்யாது சதுரப்படக் குடிவாழ்க்கைவாழக்கடவேமென்றுகருதாது நீயும் யாவர்க்கும் வழங்குவாயாக, எனது மனைக்குரியோயே, பலாப்பழமுதலாயினதூங்கும் முதிரமென்னுமலைக்குத்தலைவனாகிய திருந்தியவேலையுடையகுமணன் நல்கியசெல்வத்தை.—எ - று.

மனைகிழவோய், குமணனல்கியசெல்வத்தை நீயும் எல்லோர்க்குங்கொடுமதியெனக்கூட்டுக.

நின்பன்மாண்கற்பிற்கிளைமுதலோர்க்குமெனவியையும்; நின்முங்குரைப்பினுமையும். நீயுமென்றஉம்மை, யானுங்கொடுப்பேன் 'நீயுங்கொடுவென எச்சவும்மையாய்நின்றது. (கசுங)

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ௩௬.

(கசுச.) ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பி
னாம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
யில்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
வென்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரிய
ரின்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே.

திணை - அது; துறை - பரிசிற்கடாநிலை.

தம்பியால்நாடுகொள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்தகுமணனைப் பெருந்தலைச் சாத்தனார் பாடியது.

இ - ள்.—அடுதலை மிகவுமறந்த புடையோங்கிய அடுப்பின்கட் காளாம்பிபூப்ப உடம்புமெலியும்பசியான்வருந்திப் பாலின்மையால் தோலாந்தன்மையுடனேதிரங்கித் துளைதூர்ந்த பொல்லாத வறியமுலையை வறிதேசுவைக்குந்தோறும் அழுகின்ற தனதுபிள்ளையதுமுகத்தைப்பார்த்து நீரானிரம்பிய ஈரிய இமையையுடைய குளிர்ந்தகண்ணையுடைய என்மனைவியது வருத்தத்தைப்பார்த்து இந்தவருத்தந்தீர்த்தற்குரியாய் நீயெனநினைந்து நின்பால்வந்தேன்; நல்லபோரையுடையகுமண, எனது வறுமைநிலையை நீ அறிந்தாயாயின் இவ்வாறு வறுமையுற்றுநின்றநிலைமைக்கண் வளைத்தாயினும் பரிசில்கொள்ளாதுவிடேன்; பலவாக அடுக்கப்பட்ட பண்ணுதலமைந்த நரம்பினையுடைய தோலாற்போர்க்கப்பட்ட நல்லயாழையும் மார்ச்சனை நிறைந்த மத்தளத்தினையுமுடைய கூத்தரது மிடியைக்கெடுக்கும் குடியின்கட்பிறந்தோயாதலால்.—எ - று.

அடுதலைமிகவுமறத்தலால் தேய்ப்பின்றி உயர்ந்த அடுப்பென்றவாறாம்.

குமண, நீ இன்மைதீர்க்குங்குடிப்பிறந்தோயாதலால் இந்நிலைத்தொடுத்தும் கொள்ளாது அமையலெனெனக்கூட்டுக. (கசுச)

(கசுரு.)*மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வ
ரின்மையி னிரப்போர்க் கீஇ யாமையிற்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே

* இப்பாட்டு, வாகைத்திணையின்பகுதியாகிய 'இடையில் வண்புகழ்க்கொடைமை' என்னுந்துறைக்கு உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், உக - ம் சூத்திரவுரை].

தாடாழ் படுமணி யிரட்டும் பூநுத
லாடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றனெ னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
னாடிழந் ததனினு நனியின் னாதென
வாடந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையி
னாடுமலி யுவகையொடு வருவ
லோடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே.

திணை - அது; துறை - பரிசில்விடை.

தம்பியால்நாடுகொள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த குமணனைக்கண்டு அவன் தன்வாள்கொடுப்பக் கொண்டுவந்து இளங்குமணற்குக்காட்டிப் பெருந்தலைச் சாத்தனார் பாடியது.

பரிசில்விடையாவது,—
*" வேந்தனுண் மகிழ வெல்புக ழறைந்தோர்க்
கீந்து பரிசி லின்புற விடுத்தன்று."

இ - ள்.—எப்பொருளும்நிலையாத இவ்வுலகத்தின்கண் நிலைபெறுதலைக்கருதி னோர் தம்முடையபுகழைப் பூமியிடத்தேநிறுத்தித் தாங்களிறந்தார்; நணுகுதற்கரிய தலைமையையுடைய மிக்கசெல்வர், வறுமையால் இரப்போர்க்குக் கொடாமையிற் பழைய வண்மையையுடைய மாக்கள்போலப் பின்னும் தம்பெயரைநிறுத்தி உலகோடுதொடர்ந்துபோதுதலை அறியார்; தாளின்கண் தாழ்ந்த ஓசையையுடைய மணி ஒன்றற்கொன்றுமாறியொலிக்கும் புகர்நுதலையுடைய வென்றியியன்றயானையைப் பாவலர்க்குமிகக்கொடுக்கும் அழிவில்லாத நல்லபுகழையுடைய வலிய குதிரையையுடைய தலைவனைப்பாடிநின்றேனாக, பயனின்றியே பெருமைபெற்றபரிசிலன் வாடினனாகப்பெயர்தல் எனது நாட்டையிழந்ததனினும் மிக இன்னாதென நினைந்து வாளைத்தந்தான், தனதுதலையை எனக்குத்தருவானாக; ஆங்குத்தருதற்குத் தன்னிற்சிறந்தபொருள் வேறொன்றில்லாமையின். வென்றிமிக்க உவகையான்வந்தேன், புறக்கொடாத மேற்கோளையுடைய நின்தமையனைக்கண்டு,—எ - று.

வருவலென்பது, காலமயக்கம். மன்னுதல்குறித்தோர் புகழ்நிறுத்துதலும், புகழ்நிறுத்தாதோர் மன்னாராதலும் இவ்வாறன்றேவென்பது கருத்தாகக்கொள்க. நின்கிழமையோற்கண்டு வருவலெனவும், வயமான்றோன்றலைப்பாடிநின்றேனாகப் பரிசிலன் கொன்னேபெயர்தல் இழந்ததனினும் இன்னாதெனத் தன்னிற்சிறந்தது பிறிதொன்றின்மையின் தலை எமக்கீய வாள்தந்தனனாதலால், ஆடுமலியுவகையின் வருவலெனவும் கூட்டுக. கிளைமையோற்கண்டென்று பாடமோதுவாருமுளர். ()

(கசூசூ.) நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகா

* புறப்பொருள்வெண்பாமாலை, பாடாண்படலம், உசூ.

தொன்றுபுரிந்த வீரிரண்டி
னாறுணர்ந்த வொருமுதுநூ
லிகல்கண்டோர் மிகல்சாய்மார்
மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்யோராது மெய்கொளீஇ
மூவேழ் துறையு முட்டின்று போகிய
வுரைசால் சிறப்பி னுரவோர் மருக
வினைக்குவேண்டி நீபூண்ட
புலப்புல்வாய்க் கலைப்பச்சை
சுவற்பூண்ஞாண் மிசைப்பொலிய
மறங்கடிந்த வருங்கற்பி
னறம்புகழ்ந்த வலைசூடிச்
சிறுநுதற்பே ரகலல்குற்
சிலசொல்லிற் பலகூந்தனி
னிலைக்கொத்தநின் றுணைத்துணைவியர்
தமக்கமைந்த தொழில்கேட்பக்
காடென்றா நாடென்றாங்
கீரேழி னிடமுட்டாது
நீர்நாண நெய்வழங்கியு
மெண்ணாணப் பலவேட்டும்
மண்ணாணப் புகழ்பரப்பியு
மருங்கடிப் பெருங்காலை
விருந்துற்றநின் றிருந்தேந்துநிலை
என்றும், காண்கதில் லம்ம யாமே குடாஅது
பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பிற்
பூவிரி புதுநீர்க் காவிரி புரக்குந்
தண்புனற் படப்பை யெம்மூ ராங்க
ணுண்டுந் தின்று மூர்ந்து மாடுகஞ்
செல்வ லத்தை யானே செல்லாது
மழையண் ணாப்ப நீடிய நெடுவரைக்
கழைவள ரிமயம் போல
நிலீஇய ரத்தைநீ நிலமிசை யானே.

திணை - வாகை; துறை - பார்ப்பனவாகை.

சோணாட்டுப்*பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன்விண்ணந்தாயனை ஆவூர்மூலங்கிழார் பாடியது.

---

* பூஞ்சிற்றூரென்றும் பிரதிபேதமுண்டு.

பார்ப்பனவாகையாவது,—

*"கேள்வியாற் சிறப்பெய்தியானை
வேள்வியான் விறன்மிகுத்தன்று."

இ - ள்.—பெரிதும் ஆராயப்பட்ட மிக்க நீண்டசடையினையுடைய முதிய இறைவனது வாக்கைவிட்டுநீங்காது அறமொன்றையேமேவி நான்குகூற்றை யுடைத்தாய் ஆறங்கத்தாலும் உணரப்பட்ட ஒருபழையநூலாகிய வேதத்திற்குமாறு பட்டநூல்களைக் கண்டோராகிய புத்தர்முதலாயின புறச்சமயத்தோரது மிகுதியைச் சாய்க்கவேண்டி அவரதுமெய்போன்றபொய்யை உளப்பட்டறிந்து அப்பொய்ம்மையை மெய்யென்றுகருதாமல் உண்மைப்பொருளை அவர்களுக்கு ஏற்பச் சொல்லி இருபத்தொருவேள்வித்துறையையும் குறையின்றாகச் செய்துமுடித்த புகழமைந்ததலைமையையுடைய அறிவுடையோர்மரபிலுள்ளானே, வேள்வித்தொழிற்கு வேண்டி நீபோர்க்கப்பட்ட காட்டுநிலத்துவாழும் புல்வாய்க்கலையினது உறுப்புத்தோல் நினதுதோளின்கண் இடப்பட்ட பூணுநூன்மீதே சிறந்துதோன்றக் கொடுமையைநீக்கிய பெறுதற்கரியகற்பினையும், அறநூல்புகழப்பட்ட †சாலகத்தைச்சூடி, சிறியநுதலினையும் பெரிய அகன்ற அல்குலையும் மெத்தென்றசொல்லையும் பலவாகியகூந்தலையுமுடைய நின்னுடையநிலைமைக்கு மனமொத்த நின்னுடையதுணைவியராகிய காதலிமார் தத்தமக்குப்பொருந்திய ஏவற்றொழிலைக்கேட்டுச் செய்யக் காடென்றும் நாடென்றுஞ்சொல்லப்பட்ட அவ்விடத்தின்கட் காட்டுள் ஏழுவகைப்பட்டபசுவானும் நாட்டுள் ஏழுவகைப்பட்டபசுவானும் முட்டாது நீர் நாணும்பரிசு நெய்யைவழங்கியும் எண்ணிறப்பப் பலவேள்விகளைவேட்டும் மண் பொருமற் புகழைப்பரப்பியும் அவ்வாறு பெறுதற்கரிய விளக்கமுற்ற வேள்விமுடிபாகிய பெரியகாலத்து விருந்தினைப்பொருந்திய நினது திருந்திய மேம்பட்ட நிலைமையை எந்நாளுங்காண்பேமாக, யாங்கள்; மேற்றிசைக்கண் பொன்படுகின்ற நெடியகுடகமலைக்கண்ணே முகிலின்கண் இடியேறுமுழங்கிற் பூப்பரந்த புதுநீரையுடைய காவிரி உலகத்தைப்பாதுகாக்கும் குளிர்ந்த புனற்பக்கத்தையுடைய எம்மூரிடத்தின்கண் உண்ணப்படுவனவற்றையுண்டும் தின்னப்படுவனவற்றைத்தின்றும் ஏறப்படுவனவற்றையேறியும் கொண்டாடுவேமாகப் போவேன், யான்; போகாது, மழை தலையெடுப்ப உயர்ந்த நெடிய பக்கவரைகளையுடைத்தாய் மூங்கில்வளரும் இமயமலைபோல நிலைபெறுவாயாக, நீ நிலத்தின்மேலே.—எ - று.

முதுமுதல்வன்வாய்போகாதென்றகருத்து: அப்பெரியோனாலும் எக்காலமும் அத்தியயனம் பண்ணப்படுமென்றதாகக்கொள்க; 'வாய்போகாதொன்றுபுரிந்த' என்பதற்கு மெய்மைநீங்காமல் வீடொன்றையுமே புரிந்தவென்றும், 'பொய்யோராது' என்பதற்குத் தாம்பொய்ம்மையை விசாரியாதென்றும், 'மூவேழ்துறை' என்பதற்கு இருபத்தொருகூறுபட்டதருக்கநூலென்றும், 'ஈரேழின்' என்பதற்குக் காட்டுள் ஏழுநாளும் நாட்டுள் ஏழுநாளுமென்றும், 'கற்பின்வலைசூடி' என்பதற்குக் கற்பினால்வலைசூடியென்றுமுரைப்பினுமமையும்.

உரவோர்மருக, பொலியக் கேட்ப வழங்கியும் வேட்டும் பரப்பியும் இவ்வாறு விருந்துற்ற நின்திருந்தேந்துநிலை என்றும் இன்றுபோலக் காண்பேமாக, யாமும்;

* புறப்பொருள்வெண்பாமாலை, வாகைப்படலம், ௬.

† சாலகம் - ஜாலகம்; இது யாகபத்தினிகள் அணியும் அணிவிசேடம்.

எம்மூரிடத்து உண்டும் தின்றும் ஊர்ந்தும் இவ்வாறுசெய்து நீதந்தபரிசில்கொண்டு கொண்டாடுவேமாகச் செல்வேன்; நீதானும் இமயம்போல நிலைபெறுவாயாக வெனமுடிக்க.

நன்றாய்ந்த ஒருமுதுநூலெனவும், கற்பையும் நுதலையும் அல்குலையும் சொல்லையும் கூந்தலையுமுடையதுணைவியர் வலைசூடித் தொழில்கேட்பவெனவும், செல்லாதுநிலீயரெனவுமியையும். மூவேழ்துறையுமென்பதற்கு இருபத்தொருகூறுபட்ட அருத்தநூலென்பாருமுளர். விருந்தென்றது, அதிதிகளை; அன்றி, உறுப்புத்தோல்முதலியவற்றாற் புதுமையுற்றவெனினுமமையும். காவிரிபரக்குமென்பதூஉம் பாடம். தில் - விழைவின்கண்வந்தது. (கசுசு)

(கசுஎ.) நீயே, அமர்காணி னமர்கடந்தவர்
படைவிலக்கி யெதிர்நிற்றலின்
வாஅள் வாய்த்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக் கினியை கட்கின் னாயே
அவரே, நிற்காணிற் புறங்கொடுத்தலி
னூறறியா மெய்யாக்கையொடு
கண்ணுக் கினியர் செவிக்கின் னாரே
அதனா, னீயுமொன் றினியை யவருமொன் றினிய
ரொவ்வா யாவுள மற்றே வெல்போர்க்
கழல்புனை திருந்தடிக் கடுமான் கிள்ளி
நின்னை வியக்குமிவ் வுலகமஃ
தென்னோ பெரும வுரைத்திசி னெமக்கே.

திணை - அது ; துறை - அரசவாகை.

ஏனாதிதிருக்கிள்ளியைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன்மதுரைக்குமரனார் பாடியது.

இ - ள்.—நீதான், போரைக்காணின் அப்போரைவென்று அப்பகைவரது படையைவிலக்கி எதிர்நிற்றலான் வாள்வாய்க்கத்தைத்த வடுவழுந்திய உடம்புடனே கேட்டசெவிக்கு இனியை, கண்ணுக்கு இன்னாய்; பகைவராகிய அவர்தாம், நின்னைக்காணிற் புறந்தருதலாற் புண்ணறியாத உடம்பாகியவடிவுடனே கண்ணுக்கு இனியர், செவிக்கு இனியரல்லர்; அதனால், இங்ஙனம் நீயும் ஒன்றினியை; அவரும் ஒன்றினியர்; இனி அவரொவ்வாதன வேறுயாவையுள; வெல்லும் போரினைச் செய்யும் வீரக்கழலணிந்த திருந்திய அடியினையும் கடிய செலவினையுடைய குதிரையையுமுடையகிள்ளி, நின்னை மதித்திருக்கும் இவ்வுலகம்; அதற்குக்காரணம் யாதோ பெருமானே, எமக்குச்சொல்லுவாய்.—எ - று.

நீ கட்கின்னாயெனப் பழித்ததுபோலப் புகழ்தலும், அவர் கட்கினியரெனப் புகழ்ந்ததுபோலப் பழித்தலும் சில அணிதோன்றநின்றன. (கசுஎ)

(கசுஅ.) அருவி யார்க்குங் கழைபயி னனந்தலைக்
கறிவள ரடுக்கத்து மலர்ந்த காந்தட்

கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு
கடுங்கட் கேழ லுழுத பூழி
நன்னாள் வருபத நோக்கிக் குறவ
ருழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை
முந்துவிளை யாணர் நாட்புதி துண்மார்
மரையான் கறந்த நுரைகொ டீம்பான்
மான்றடி புழுக்கிய புலவுநாறு குழிசி
வான்கே ழிரும்புடை கழாஅ தேற்றிச்
சாந்த விறகி னுவித்த புன்கங்
கூதளங் கவினிய குளவி முன்றிற்
செழுங்கோள் வாழை யகலிலைப் பகுக்கு
மூராக் குதிரைக் கிழவ கூர்வே
னறைநார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி
வடிநவி லம்பின் வில்லோர் பெரும
கைவள் ளீகைக் கடுமான் கொற்ற
வையக வரைப்பிற் றமிழகங் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய வேத்திப்
பாடுப வென்ப பரிசிலர் நாளு
மீயா மன்னர் நாண
வீயாது பரந்தநின் வசையில்வான் புகழே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசிற்றுறை; இயன்மொழியும், அரசவாகையுமாம்.

பிட்டங்கொற்றனைக் கருவூர்க் கந்தப்பிள்ளைசாத்தனார் பாடியது.

இ - ள்.—அருவி ஒலித்திழியும் வேய்பயின்ற அகன்றவிடத்து மிளகுகொடி வளரும் மலைச்சாரலினிடத்து மலர்ந்தகாந்தளினது கொழுவிய கிழங்குபிறழக்கிளறித் தன்னினத்தோடேகூடத் தறுகண்மையையுடைய கேழலுழுதபுழுதிக்கண்ணே நல்லநாள்வந்த செவ்வியைப்பார்த்துக் குறவர் அந்நிலமுழாதே அதுவே உழவாக வித்திய பரியதோகையையுடைய சிறியதினை முற்படவிளைந்த புதுவருவாயாகிய கதிரை நல்லநாளின்கண்ணே புதிதுண்ணவேண்டி மரையாவைக்கறந்த நுரைகொண்ட இனியபாலை மான்றடிபுழுக்கப்பட்ட புலால்நாறும் பானையினது நிணந்தோய்ந்த வெளியநிறத்தினையுடைய பெரியபுறத்தைக்கழுவாதே உலைநீராகவார்த்தேற்றிச் சந்தனவிறகான் உவிக்கப்பட்ட சோற்றைக் கூதாளி கவின்பெற்ற மலைமல்லிகைநாறுமுற்றத்து வளவியகுலையையுடைய வாழையினது அகன்ற இலைக்கண்ணே பலருடனேபகுத்துண்ணும் ஊரப்படாத குதிரையென்னுமலைக்குத்தலைவ, கூரியவேலையும் நறைக்கொடியின் நாராற்றொடுக்கப்பட்ட வேங்கைப்பூமாலையினையும் வடித்தல்பயின்ற அம்பினையுமுடைய வில்லாட்களுக்குத்தலைவ, கையான்வழங்கும் வள்ளிய கொடையினையும் கடிய குதிரையையுமுடையகொற்ற, உலகத்தெல்லையுள் தமிழ்நாடுகேட்கப் பொய்யாத செவ்வியநா வருந்தும்படி வாழ்த்திப்

பாடுவரென்றுசொல்லுவர் பரிசிலர், நாடோறும்; கொடாதவேந்தர்நாணக் கெடாது பரந்த நினது வசையில்லாத வாலியபுகழை.—எ - று.

கிழவ, பெரும, கொற்ற, பரிசிலர் நின்புகழையேத்திப் பாடுபவென்ப; அதனால், யானும் நின்பாற் பரிசில்பெற்றுப் பாடுவேனாகவேண்டுமெனப் பரிசிற்றுறைக் கேற்கக் கூறியதாக்குக.

ஊராக்குதிரை - மலைக்குவெளிப்படை. நறை - பச்சிலை. (கசுஅ)

(கசுகூ.) நும்படை செல்லுங் காலை யவர்படை
யெடுத்தெறி தானை முன்னரை யெனாஅ
வவர்படை வரூஉங் காலை நும்படைக்
கூழை தாங்கிய வகல்யாற்றுக் குன்று
விலங்கு சிறையி னின்றனை யெனாஅ
வரிதாற் பெருமநின் செவ்வி யென்றும்
பெரிதா லத்தையென் கடும்பின திடும்பை
யின்னே விடுமதி பரிசில் வென்வே
லிளம்பல் கோசர் விளங்குபடை கன்மா
றிகலின ரெறிந்த வகலிலை முருக்கின்
பெருமரக் கம்பம் போலப்
பொருநர்க் குலையாநின் வலன்வா ழியவே.

திணை - அது; துறை - பரிசில்கடாநிலை.

அவனைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

இ - ள்.—நும்முடையபடை பகைவர்மேற் போங்காலத்து அவரதுபடையாகிய வேல்முதலாயவற்றை ஒக்கியெறியும் படைக்கு முன்னேநிற்பையாகலானும், அவர்படை அடர்த்துவருங்காலத்து நும்படையினது அணியைத்தாங்க வேண்டி அகன்ற ஆற்றின்கட் குறுக்கேதடுத்துக்கிடக்கின்ற மலையையொப்ப அதனைத்தடுத்துநின்றாயாதலானும் பெருமா, நின்னைக் காணலாங்காலம் பெறுதலரிது, எந்நாளும்; எனதுசுற்றத்தினது இடும்பை பெரிதாதலால் நீ இப்பொழுதே எனக்குப் பரிசில்தந்துவிடுவாயாக; வென்றிவேலையுடைய இளைய பலகோசர் விளங்கிய படைக்கலங்கற்பார் மாறுபட்டனராயெறிந்த அகன்ற இலையையுடைய முருக்காகிய பெரியமரத்தாற்செய்யப்பட்ட தூணமாகிய இலக்கைப்போலப் பொருவார்க்குத்தொலையாத நினது வென்றிவாழ்வதாக.—எ - று.

'எனா' என்பது, எண்ணிடைச்சொல். எளிதாலத்தையென்று பாடமோதுவாருமுளர். (கசுகூ)

(கஎ0.) மரைபிரித் துண்ட நெல்லி வேலிப்
பரலுடை முன்றி லங்குடிச் சீறூ
ரெல்லடிப் படுத்த கல்லாக் காட்சி
வில்லுழு துண்மார் நாப்ப ணொல்லெனச்
சிழிபிறப் பாளன் கருங்கை சிவப்ப

வலிதுரந்து சிலைக்கும் வன்கட் கடுந்துடி
புலிதுஞ்சு நெடுவரைக் குடிஞையோ டிரட்டு
மலைகெழு நாடன் கூர்வேற் பிட்டற்
குறுக லோம்புமின் றெவ்வி ரவனே
சிறுகண் யானை வெண்கோடு பயந்த
வொளிதிகழ் முத்தம் விறலியர்க் கீத்து
நார்பிழிக் கொண்ட வெங்கட் டேறல்
பண்ணமை நல்யாழ்ப் பாண்கடும் பருத்தி
நசைவர்க்கு மென்மை யல்லது பகைவர்க்
கிரும்பு பயன்படுக்குங் கருங்கைக் கொல்லன்
விசைத்தெறி கூடமொடு பொரூஉ
முலைக்க லன்ன வல்லா ளன்னே.

திணை - வாகை; துறை - வல்லாண்முல்லை; தானைமறமுமாம்.

அவனை உறையூர்மருத்துவன்தாமோதரனார் பாடியது.

வல்லாண்முல்லையாவது,—

*" இல்லும் பதியு மியல்புங் கூறி
நல்லாண் மையை நலமிகுத் தன்று."

இ - ள்.—மரையாவாற் பிரித்துண்ணப்பட்ட நெல்லியாகிய வேலியையுடைத்தாய் அதனது விதையாகிய பரலுடைத்தாகியமுற்றத்தினையுடைய அழகிய குடியையுடைய சிறிய ஊரின்கட் பகற்பொழுதெல்லாம் வேட்டையாடித்திரிந்த கல்வியில்லாத காட்சியையுடைய வில்லாகிய ஏராலுழுதுண்பாருடையநடுவே ஓசையையுடைத்தாக இழிந்தபிறப்பினையுடையபுலையன் தனதுவலியகைசிவப்ப வலியாண் முடுக்கிக்கொட்டும் வலியகண்ணையுடைய அச்சத்தைச்செய்யும் துடி புலிகிடக்கும் நெடியமலையின்கட் பேராந்தையோடுகூடியொலிக்கும் மலைபொருந்தியநாட்டையுடையனாகிய கூரியவேலையுடையபிட்டனை அணுகுதலைப் பாதுகாமின், பகைவீர், அவன்றான் சிறுகண்ணையுடையயானையினது வெளியகோடுதரப்பட்ட ஒளிவிளங்குமுத்தத்தை விறலியருக்குக்கொடுத்து நாரைப்பிழிந்துகொள்ளப்பட்ட விரும்பத்தக்க கள்ளாகியதெளிவைப் பண்பொருந்தின நல்லயாழினையுடைய பாணர் சுற்றத்தைநுகர்வித்து இவ்வாறு தன்பாற் பரிசினச்சிவந்தோர்க்கு மெல்லியனாயிருத்தலல்லது பகைவர்க்கு இரும்பைப்பயன்படுத்துகின்ற வலியகையையுடைய கொல்லன் விசைத்தடிக்கப்பட்ட கூடத்தோடேயேற்று மாறுபடும் உலையிடத்து அடைகல்போலும் வலிய ஆண்மையையுடையன்.—எ - று.

பிட்டன் நசைவர்க்குமென்மையல்லது பகைவர்க்குக் கல்லன்னவல்லாளனாதலால், தெவ்விர், அவனைக் குறுகலோம்புமினெனக் கூட்டுக.

வலிதுரந்தென்பதற்கு மாற்றார்வலியைக்கெடுத்தெனினுமமையும். நார்பிழிக் கொண்டவென்பதற்குக் கோதைப் பிழிந்துகொண்டவெனினுமமையும். (கஎ0)

* புறப்பொருள்வெண்பாமாலை, வாகைப்படலம், உரு.

(களக.) இன்று செலினுந் தருமே சிறுவரை
நின்று செலினுந் தருமே பின்னு
முன்னே தந்தனெ னென்னாது துன்னி
வைகலுஞ் செலினும் பொய்யல னாகி
யாம்வேண்டி யாங்கெம் வறுங்கல நிறைப்போன்
றான்வேண்டி யாங்குத் தன்னிறை யுவப்ப
வருந்தொழின் முடியரோ திருந்துவேற் கொற்ற
னினமலி கதச்சேக் களனொடு வேண்டினுங்
களமலி நெல்லின் குப்பை வேண்டினு
மருங்கலங் களிற்றொடு வேண்டினும் பெருந்தகை
பிறர்க்கு மன்ன வறத்தகை யன்னே
யன்ன னாகலி னெந்தை யுள்ளடி
முள்ளு நோவ வுறாற்க தில்ல
வீவோ ரரியவிவ் வுலகத்து
வாழ்வோர் வாழவவன் றாள்வா ழியவே.

திணை - பாடாண்டிணை ; துறை - இயன்மொழி.

அவனைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் பாடியது.

இ - ள்.—இன்றுபோகினும்தருவன் ; சிறிதுநாட் கழித்துப்போகினும் தருவன் ; பின்னையும் முன்னேதந்தேனென்னாது பயின்று நாடோறும்செலினும் பொய்யானாகி யாம்வேண்டினபடியே எம்முடைய வறியகலத்தைநிரப்புவோன் ; தான் விரும்பினபடியே தன்னுடைய அரசனுவப்பச் செய்தற்கரிய போர்த்தொழில்களை முடிப்பானாக, திருந்தியவேலையுடையகொற்றன் ; இனமாகிய மிக்க வெவ்விய சேக்களைத் தொழுவோடேவேண்டினும் களத்தின்கண்மலிந்த நெல்லின்குவையையவேண்டினும் பெறுதற்கரிய அணிகலங்களைக் களிற்றுடனேவேண்டினும், பெரியதகைமையையுடையான், பிறர்க்கும் அத்தன்மைய அறஞ்செய்யுங்கூற்றையுடையான் ; அத்தன்மையனாதலால், எம்முடைய இறைவனது உள்ளடிக்கண் முள்ளுமுளப்பட நோவச் சென்று உறாதொழியவேண்டும் ; ஈவோரரிதாகிய இவ்வுலகத்தின்கண் உயிர்வாழ்வோர்வாழும்பரிசு அவனதுதாள்வாழ்வதாக.—எ - று.

பிறர்க்குமென்பது, எச்சம். தில் - விழைவின்கண்வந்தது.

திருந்துவேற்கொற்றன், பெருந்தகை, சேக் களனொடுவேண்டினும், நெல்லின் குப்பைவேண்டினும், அருங்கலம் களிற்றொடுவேண்டினும் நமக்கேயன்றிப் பிறர்க்கும் 'அத்தன்மைய அறஞ்செய்யுந்தகுதியையுடையன் ; யாம் வேண்டியாங்கு எம் வறுங்கலம் நிறைப்போன் ; 'தான்வேண்டியாங்குத் தன் இறையுவப்ப அருந்தொழில்முடிப்பானாகவேண்டுவது ; எந்தை உள்ளடி முள்ளும் நோவவுறாற்க ; வாழ்வோர் வாழ அவன்தாள் வாழியவெனக்கூட்டுக.

'வாழ்வோர்வாழ்வு' என்றோதி, வாழ்வோர்வாழும்வாழ்வெல்லாம் அவன்றாள் வாழ்வென்றுரைப்பினுமமையும். தாளை முயற்சியெனினுமமையும். (களக)

(கஎஉ.) ஏற்றுக வுலையே யாக்குக சோறே
கள்ளுங் குறைபட லோம்புக வொள்ளிழைப்
பாடுவல் விறலியர் கோதையும் புனைக
வன்னவை பிறவுஞ் செய்க வென்னதூஉம்
பரியல் வேண்டா வருபத நாடி
யைவனங் காவலர் பெய்தீ நந்தி
னொளிதிகழ் திருந்துமணி நளியிரு ளகற்றும்
வன்புல நாடன் வயமான் பிட்ட
னாரமர் கடக்கும் வேலு மவனிறை
மாவள் ளீகைக் கோதையு
மாறுகொண் மன்னரும் வாழியர் நெடிதே.

திணையும் துறையும் அவை.

அவனை வடமவண்ணக்கன் தாமோதரனார் பாடியது.

*இ - ள்.—உலையை ஏற்றுக; சோற்றை ஆக்குக; மதுவையும்நிறைய உண்டாக்குக; விளங்கிய அணிகலத்தையுடைய பாடுதல்வல்லவிறலியர், மாலையும் சூடுக; அத்தன்மையனமற்றும் செய்க; சிறிதும் இரங்குதல்வேண்டா, மேல் வரக்கடவ உணவை ஆராய்ந்து; ஐவனநெல்லைக்காப்பார் காவற்கிடப்பட்ட தீ அவ்விடத்துக்கெட்டகாலத்து ஒளிவிளங்கும் திருந்தினமாணிக்கம் செறிந்த இருளைத்துரக்கும் வலியநிலமாகிய மலைநாட்டையுடையவன், வலியகுதிரையையுடையபிட்டன் பொருதற்கரியபோரைவெல்லும்வேலும் அவன்றலைவனாகிய பெரிய வள்ளியகொடையையுடையகோதையும் அவனோடுபகைத்தவேந்தரும் நெடிதுவாழ்க.—எ - று.*

*பிட்டன்வேலும் கோதையும் மாறுகொள்மன்னரும் நெடிதுவாழியர்; அதுவேவேண்டுவது; மேல்வரும் உணவைத்தேடி என்னதூஉம் பரியல்வேண்டா; ஆதலால், ஏற்றுக; ஆக்குக; ஓம்புக; கோதையும்புனைக; பிறவும்செய்கவென மாறிக் கூட்டுக.*

*மாறுகொண்மன்னரும் வாழியரென்றகருத்து: இவன்வென்றுதிறைகொள்வது அவருளராயினென்பதாம். விறலியரென்பது, ஈண்டு முன்னிலைக்கண்வந்தது. வேண்டாவென்பது, வினைமேனின்றதோர்முற்றுச்சொல். அன்னவைபிறவுமென்பது, பூசுவன உடுப்பன பூண்பன முதலாயினவற்றை. வருவதுநாடியென்றோதி, ஐவனத்துக்குவரும் இடையூறுநாடியென்று அதனைக் காவலென்பதனுன்முடிப்பினுமமையும்.* (கஎஉ)

(கஎஙா.) யான்வாழு நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
வூணொலி யரவந் தானுங் கேட்கும்
பொய்யா வெழிலி பெய்விட நோக்கி
முட்டை கொண்டு வற்புலஞ் சேருஞ்
சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்

சோறுடைக் கையர் வீற்றுவீற் றியங்கு
மிருங்கிளைச் சிறுஅர்க் காண்டுங் கண்டு
மற்று மற்றும் வினவுதுந் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவ னில்ல
மணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே.

திணையும் துறையும் அவை.

சிறுகுடிகிழான்பண்ணனைச் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் பாடியது.

இ - ள்.—யான் உயிர்வாழுநாளையும்பெற்றுப் பண்ணன்வாழ்வானாக; பாணரே, காண்பீராக, இந்தப் பரிசிலனது சுற்றத்தின்வறுமையை. புதுவருவாயையுடைத்தாகிப் பழுத்தமரத்தின்கண்ணே புள்ளினமொலித்தாற்போன்ற ஊணொலியுண்டாகிய ஆரவாரந்தானுங்கேட்கும்; காலந்தப்பாத மழை பெய்யுங்காலத்தைப்பார்த்துத் தம்முட்டைகளைக்கொண்டு மேட்டுநிலத்தினையடையும் மிகச்சிறிய எறும்பினது சிலவாகிய ஒழுக்கத்தையொப்பச் சோறுடைக்கையினராய் வேறுவேறுபோகின்ற பெரியசுற்றத்தோடுங்கூடியபிள்ளைகளைக்காண்பேம்; கண்டுவைத்தும் எம்பசிவருத்தத்தானும் வழிவரல்வருத்தத்தானும் பின்னரும்பின்னரும் விதுப்புற்றுக் கேளாநின்றேம்; தெளிய, பசிநோய்தீர்க்குமருத்துவனதுமனை அணித்தோ? அரித்தோ? எங்களுக்கு நீர்சொல்லுமின்.—எ - று.

காண்க இவனென்பது, காண்கிவனெனக் கடைக் குறைந்துநின்றது. தானென்பது, அசைநிலை.

இது, பரிசில்பெறப்போகின்றான் வருகின்றவனைக்கண்டுவினவுவான் பண்ணனது இயல்புகூறிவாழ்த்தியவாறு.

இனி, பரிசிலன்றான், 'அரவமுங்கேட்கும்; சிறாரைக்காண்டும்; கண்டும் மற்றும் மற்றும்வினவுதும்; நீர் எமக்குப் பசிப்பிணிமருத்துவனில்லம் அணித்தோ சேய்த்தோ கூறுமின்' என்றுநின்றான்; இவன்கடும்பினது இடும்பையைப் பாணர் காண்க; இங்ஙனம் எம்போலும் இரவலர்வறுமையைத்தீர்க்கின்றபண்ணன்வாழியவென்று பெறப்போகின்றானைக்கண்டு பெற்றுவருகின்றான் பக்கப்பாணரைநோக்கிக் கூறியதாக உரைப்பினுமமையும். இதற்கு என்றுநின்றானென ஒருசொல் வருவித்துரைக்கப்பட்டது. அன்றியும், பரிசிற்குச்செல்கின்றான், பசிப்பிணிமருத்துவனில்லம் அணித்தோசேய்த்தோவென்று பலகாலும்வினவ, அதனை உட்கொண்டு, ஊணொலியரவமுங்கேட்கும்; இருங்கிளைச்சிறார்க்காண்டும்; கண்டும் மற்றும் மற்றும்வினவுதுமெனச் சாதியொருமையாலுளப்படுத்திக்கூறிப் பின்பு இங்ஙனம் காணவும்கேட்கவும்படுவது நமக்கு எற அணித்தோ சேய்த்தோகூறுமின் எமக்கென்று அவரைநோக்கிக்கூறி, பின்பு இங்ஙனம் என்வறுமையும்தீர்த்து இவன்வறுமையுந்தீர்க்கவிருக்கின்றபண்ணன் யான் வாழுநாளும்பெற்றுவாழ்வானாகவெனப் பரிசில்பெற்றுவருகின்றான் தன்பக்கப்பாணரைநோக்கிக் கூறியவாறாகவுரைப்பாருமுளர். இனி, செல்கின்றான்பக்கப்பாணருள் ஒருவன் ஆண்டுநிற்கின்ற பாணன் பக்கப்பாணரைநோக்கிக் கூறியதாகவுரைப்பாருமுளர். ஈண்டும் இவனென்றது, பரிசிலனை. மற்றுமற்றும்வினவுந்தெற்றெனவென்று பாடமோதுவாருமுளர். ()

(கஎச.) அணங்குடை யவுணர் கணங்கொண் டொளித்தெனச்
சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணா
திருள்கண் கெடுத்த பரிதி ஞாலத்
திடும்பைகொள் பருவர றீரக் கடுந்திற
*லஞ்சன வண்ணன் றந்து நிறுத்தாங்
கரசிழந் திருந்த வல்லற் காலை
முரசெழுந் திரங்கு முற்றமொடு கறைபொரு
திரங்குபுன னெரிதரு மிகுபெருங் காவிரி
மல்ல னன்னாட் டல்ல றீரப்
பொய்யா நாவிற் கபிலன் பாடிய
மையணி நெடுவரை யாங்க ணொய்யெனச்
செருப்புகன் மறவர் செல்புறங் கண்ட
வெள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை
யருவழி யிருந்த பெருவிறல் வளவன்
மதிமருள் வெண்குடை காட்டி யக்குடை
புதுமையி னிறுத்த புகழ்மேம் படுந
விடர்ப்புலி பொறித்த கோட்டைச் சுடர்ப்பூட்
சுரும்பார் கண்ணிப் பெரும்பெயர் நும்முன்
னீண்டுச்செய் நல்வினை யாண்டுச்சென் றுணீஇய
ருயர்ந்தோ ருலகத்துப் பெயர்ந்தன னாகவி
னாறுகொன் மருங்கின் மாதிரந் துழவுங்
கவலை நெஞ்சத் தவலந் தீர
நீதோன் றினையே நிரைத்தா ரண்ணல்
கல்கண் பொடியக் கானம் வெம்ப
மல்குநீர் வரைப்பிற் கயம்பல வுணங்கக்
கோடை நீடிய பைதறு காலை
யிருநில நெளிய வீண்டி
யுருமுரறு கருவிய மழைபொழிந் தாங்கே.

திணை - வாகை ; துறை - அரசவாகை.

மலையமான்சோழியவேனாதி†திருக்கண்ணனை மாறோக்கத்துநப்பசலையார்பாடியது.

இ - ள்.—பிறரைவருத்தும் அச்சத்தினையுடைய அசுரர் திரள்கொண்டுபோய் மறைத்தார்களாக, செய்மைக்கண்ணே விளங்காநின்ற தலைமையினையுடைய ஞாயிற்றைக் காணாமையால் இருளானது உலகத்தாரதுகண்ணைமறைத்த வட்டமாகிய

* அஞ்சனவுருவனென்றும் பாடம்.
† திருக்கிள்ளியையென்றும் பிரதிபேதமுண்டு.

உலகத்தினது நோய்கொண்டதுன்பம் நீங்கும்பரிசு மிக்கவலியையுடைய அஞ்சனம்போலும் நிறத்தையுடைய திருமேனியையுடையகண்ணன் அந்தஞாயிற்றைக் கொண்டுவந்து இவ்வுலகத்தின்கண் அந்தகாரநீங்கும்பரிசு ஆகாயத்தின்கண்ணே நிறுத்தினாற்போலப் பகைவேந்தரொடுபொருது உடைந்துபோதலால் தம்வேந்தனையிழந்துழலும் இன்னாமையையுடைய பொழுதின்கண் முரசுகிளர்ந்துமுழங்கும் செண்டுவெளியையுடையகோயிலுடனே கரையைப்பொருது முழங்கும் நீராலே உடைந்து ஆழ்ந்தோடுகின்ற மிக்க பெரியகாவிரியையுடைய வளவிய நல்லநாட்டினது துயரங்கெடப் பொய்யாதநாவினையுடைய கபிலனாற்பாடப்பட்ட முகிலணிந்த பெரியமலையிடத்து விரையப் போரைவிரும்புமறவர் ஓடுபுறங்கண்ட இகழ்ச்சியற்றதலைமையினையுடைய முள்ளூரின்மலையுச்சியின்கண் பிறராற்காண்டற்கரிய இடத்தின்கணிருந்த பெரியவென்றியையுடைய சோழனது திங்கள்போலும் வெண்குடையைத்தோற்றுவித்து அக்குடையைப் புதுமையுண்டாகநிலைபெறுவித்த புகழ் மேம்படுந, வரைமுழைஞ்சில்வாழும் புலியையெழுதப்பட்ட இலாஞ்சனையையுடைய கோட்டையையும் விளங்குதலையுடைய அணிகலத்தினையும் வண்டார்க்கப்பட்டகண்ணியையும் பெரியபுகழினையுமுடைய நம்முன்னாகியதந்தை இவ்வுலகத்துச்செய்யப்பட்ட நல்ல அறத்தின்பயனை ஆண்டாகிய தெய்வலோகத்துப்போய் நுகரவேண்டிப்போனானாதலின், நல்ல நெறியைக்கொன்ற பக்கத்தினையுடைய திசையெங்குஞ்சூழ்வரும் கவலையுற்றமனத்தின்கண்வருத்தங்கெட நீவந்துதோன்றினாய், இணர்ந்தமாலையையுடையதலைவ, மலையிடம்பொடியக் காடு தீமிக மிக்க நீரெல்லையையுடைய நீர்நிலைகள்பலவும் முளிய இவ்வாறு கோடைநீடப்பட்ட பசுமையற்றகாலத்துப் பெரியநிலங்குழியும்பரிசு திரண்டு உருமேறுமுழங்கும் மின்முதலாயின தொகுதியையுடைய மழை சொரிந்தாற்போல.—எ - று.

முற்றமென்றது, அதனையுடையகோயிலை. வெளிமுற்றமொடு வெண்குடை காட்டியென இயைப்பினுமமையும். கோட்டைவெளியாகிய சுடர்ப்பூணென்றுமாம்.

ஞாயிற்றை அஞ்சனவுருவன் தந்துநிறுத்தாங்கு முற்றமொடு நாட்டு அல்லல் தீர வளவன்வெண்குடைகாட்டி அக்குடைநிறுத்த புகழ்மேம்படுந, நிரைத்தாரண்ணல், நும்முன் பெயர்ந்தனனாகலின், நெஞ்சத்து அவலந்தீரப் பைதறுகாலை மழைபொழிந்தாங்கு நீதோன்றினை; ஆதலால், இவ்வுலகத்திற்குக் குறை என்னையெனக் கூட்டி வினைமுடிவுசெய்க.

அவுணர் கணங்கொண்டொளித்தென ஞாயிறுகாணாத பருவரறீர அஞ்சனவுருவன் தந்துநிறுத்தாங்கென்பது, தேவர்களும் அசுரர்களும் பொருவுழிப் பகலும் இராப்போல இயங்கித் தாம்போர்செய்தற்பொருட்டு அசுரர் ஞாயிற்றைக் கரந்தார்கள்; ஞாலம் அதனால் உள்ளபருவரறீரத் திருமால் அதைக்கொண்டுவந்துவிட்டதோர்கதை. ‘விடர்ப்புலிபொறித்தகோட்டை’ என்றதனால், சோழனோடுதொடர்புபட்டு அவனுக்குத்துப்பாதல் தோன்றி நின்றது. ஆறுகொண்மருங்கினென்று பாடமோதுவாருமுளர். (கஎச)

(கஎரு.) எந்தை வாழி யாத னுங்க.
என்னெஞ்சந் திறப்போர் நிற்காண் குவரே
நின்னியான் மறப்பின் மறக்குங் காலை

யென்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுது
மென்னியான் மறப்பின் மறக்குவென் வென்வேல்
விண்பொரு நெடுங்குடைக் *கொடித்தே ரோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
வுலக விடைகழி யறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்
பலர்புர வெதிர்ந்த வறத்துறை நின்னே.

திணை - பாடாண்டிணை ; துறை - இயன்மொழி.

ஆதனுங்கனைக் கள்ளில் ஆத்திரையனார் பாடியது.

இ - ள்.—என்னுடைய இறைவ, வாழ்வாயாக; ஆதனுங்க, யான் ஒன்றைச் சொல்லநினைப்பின், நினதுபுகழல்லது சொல்லாமையான், எனதுநெஞ்சை வெளிப்படுத்திக் காணலுறுவோர் ஆங்குநின்னைக் காணுநிற்பர்; நின்னையுடைய யான் நின்னைமறப்பின் மறக்குங்காலமாவது சொல்லக்கேட்பாயாக; என்னுடைய உயிரானது என்னுடம்பைவிட்டுநீங்குங்காலத்தும் என்னை யான்மறக்குங்காலம் உண்டாயின் அப்பொழுது மறப்பேனல்லது மறவேன். வென்றிவேலையுடைய விசும்பைத்தோயும் நெடியகுடையினையும் கொடியணிந்த தேரினையுமுடைய நிலமுழுது மாண்டவேந்தரது திண்ணிய ஆர்சூழ்ந்த சக்கரமியங்குதற்குக் குறைக்கப்பட்ட வெள்ளிமலைக்கு அப்பாலாகிய உலகத்திற்குக் கழியும் இடைகழியாகிய அற்றவாயின்கண் தேவர்களால்நிறுத்தப்பட்டு இருபொழுதும் ஒருபெற்றியே நிலைபெற்று விளங்கும் பரந்த இடத்தையுடைய ஆதித்தமண்டலத்தையொப்ப நாள்தோறும் இரவுபகலென்னுமல் பலரையும்காத்தலை ஏற்றுக்கொண்டு ஒருபெற்றியேவிளங்கிய அறத்துறையாகியநின்னை.—எ - று.

எந்தை, வாழி; ஆதனுங்கனே, மண்டிலத்தன்ன அறத்துறைநின்னை நின்னுடையேனாகியயான் மறப்பின் மறக்குங்காலமாவது என்யான்மறப்பின் மறக்குவென்; ஆதலால், என்னெஞ்சைத்திறப்போர் நிற்காண்குவரெனக்கூட்டி வினைமுடிக்க.

ஓரியராவார் - சக்கரவாளசக்கரவர்த்திகள்; விச்சாதரரும், நாகருமென்பர். 'திகிரி திரிதரக்குறைந்த' என்றேதி, சக்கரவாளத்திற்கு அப்பாற்பட்ட உலகத்து ஓரியர் திகிரி ஊடறுத்துச்சேறலிற் பிளவுபட்ட வாயிற்கு அப்பாலாகிய உதயகிரிக்கண் நிலைபெற்ற ஆதித்தமண்டலமென்றுரைப்பாருமுளர். (கஎரு)

(களசு.) ஓரை யாயத் தொண்டொடி மகளிர்
கேழ லுழுத விருஞ்சே றிகிளைப்பின்
யாமையின் புலவு நாறு முட்டையைத்
தேனா ரும்பற் கிழங்கொடு பெறூஉ
மிழுமென வொலிக்கும் புனலம் புதவிற்
பெருமா விலங்கைத் தலைவன் சீறியா

* கொடித்தேர் மோரியரென்றும் பாடம்.

ழில்லோர் சொன்மலை நல்லியக் கோடனை
யுடையை வாழியெற் புணர்ந்த பாலே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீ
ரோரூ ருண்மையி னிகந்தோர் போலக்
காண்டு கழிந்த வைகல் காணா
வழிநாட் கிரங்கு மென்னெஞ்சமவன்
கழிமென் சாயல் காண்டொறு நினைந்தே.

திணையும் துறையும் அவை.

*ஓய்மாநல்லியக்கோடனைப் புறத்திணைநன்னாகனார் பாடியது.

இ - ள்.—விளையாட்டுத்திரட்சிக்கண் ஒள்ளியவளையையுடையமகளிர் கேழற் பன்றியுழுத கரியசேற்றைக்கிளறின், அதன்கண்ணே ஆமையீனப்பட்ட புலானாறும்முட்டையைத் தேனாறும் ஆம்பலினதுகிழங்குடனேபெறும் இழுமென்னும் அனுகரணமுண்டாகமுழங்கும் நீர்வழங்கும்வாய்த்தலைகளையுடைய பெரிய †மாவிலங்கையென்னும் ஊர்க்குத் தலைவன், சிறியயாழையுடைய வறியோர்தொடுக்கும் புகழ்மாலைசூடும் நல்லியக்கோடனைத் துணையாக நீயுடையையாதலான், என்னைப் பொருந்தியவிதியே, நீ ஒருகுறையுடையையல்லை; வாழ்வாயாக; பாரியதுபறம்பின்கட் குளிர்ச்சியையுடைய சுனையிடத்துத் தெளிந்தநீர் போய்த்தேடிக்கொள்ள வேண்டாமல் ஓரூரின்கண்ணேயுண்டாதலின் அதனை யாம் வேண்டியபொழுது உண்கின்றேமென்று நெகிழ்ந்திருந்தாரையொப்ப அவனைக்காணாதொழிந்தநாட்கள் எனக்கு நாட்களாய்க்கழிந்தனவல்லவென்று உட்கொண்டு அவனோடுதொடர்ந்த நட்பு இன்றேபோல இடையறாதுசெல்லவேண்டுமெனாறு பின்வருநாளைக்கு இரங்காநின்றது என்னுடையநெஞ்சம், அவனது மிக்க மெல்லிய சாயலைக் காணுந்தோறும்நினைந்து.—எ - று.

என்னெஞ்சம் அவன்சாயலைக்காணுந்தோறும்நினைந்து வழிநாட்கிரங்கும்; என்னைப்புணர்ந்தவிதியே, நீ நல்லியக்கோடனை உடையையாதலால், நீ என்னகுறையையுடையை; நீவாழ்வாயாகவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

'இல்லோர்சொன்மலை' என்பதற்கு இல்லோர்சொல்லைச்சூடுமென்றும், 'எற்புணர்த்தபாலே' என்றோதி என்னை அவனோடுகூட்டியவிதியேயென்றும், 'வழிநாட்கிரங்கும்' என்பதற்கு இன்னும் இவனோடுதொடர்ந்தநட்பு இடையற்றுக்கழியுங்கொலென்று இரங்குமென்றும் உரைப்பாருமுளர். (௧எ௬)

(௧எஎ.) ஒளிறுவாண் மன்ன ரொண்சுடர் நெடுநகர்
வெளிறுகண் போகப் பன்னாட் டிரங்கிப்
பாடிப் பெற்ற பொன்னணி யானை

---

* இவன், பத்துப்பாட்டிற் சிறுபாணாற்றுப்படைத்தலைவன்.

† "தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய, நன்மா விலங்கை மன்னருள்ளும் ......... ஓவியர் பெருமகன்" என்பது சிறுபாணாற்றுப்படை [அடி ௧௧௯-௧௨௨].

தமரெனின் யாவரும் புகுப வமரெனிற்
றிங்களு நுழையா வெந்திரப் படுபுழைக்
கண்மா றாடிய நீட்ட நணிநணி யிருந்த
குறும்பல் குறும்பிற் றதும்ப வைகிப்
புளிச்சுவை வேட்ட செங்க ணாடவர்
தீம்புளிக் களாவொடு துடரி முனையின்
மட்டற னல்யாற் றெக்க ரேறிக்
கருங்கனி நாவ லிருந்துகொய் துண்ணும்
பெரும்பெய ராதி பிணங்கரிற் குடநாட்
டெயினர் தந்த வெய்ம்மா னெறிதசைப்
பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ளமலை
வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய
விரும்பனங் குடையின் மிசையும்
பெரும்புலர் வைகறைச் சீர்சா லாதே.

திணையும் துறையும் அவை.

மல்லிகிழான்காரியாதியை ஆவூர்மூலங்கிழார் பாடியது.

இ - ள்.—விளங்கிய வாளையுடைய வேந்தரது ஒள்ளியவிளக்கத்தினையுடைய உயர்ந்தகோயிற்கண் கண்ணொளிகெடப் பலநாள் நின்றுலர்ந்து அவ்விடத்துப் பாடிப்பெற்ற பொற்படையணிந்தயானை, தமக்குச்சிறந்தாராயின் எல்லாரும் எளிதிற்புகப்பெறுவர் போராயின் திங்களாலும் நுழையப்படாத பொறிகளைப்பொருந்திய இட்டியவாயிலையுடைத்தாய்க் கள்ளை ஒருவர்க்கொருவர் மாறுமாறுகநீட்டிட ஒன்றற்கொன்று அணித்தாயிருந்த குறிய பல அரணின்கண்ணேயிருந்து அக்கள்ளை நிரம்பவுண்டுகாலங்கழித்துப் பின்னைச் செருக்கினால்விடாய்மிக்குப் புளிச்சுவையை விரும்பிய மதத்தாற்சிவந்தகண்ணையுடைய ஆண்மக்கள் இனியபுளிப்பையுடைய களாப்பழத்துடனே துடரிப்பழத்தைத்தின்றுவெறுப்பிற் கரைமரத்துப் பைந்தேன் அரித்தொழுகுகின்ற நல்ல கான்யாற்றினது மணற்குன்றின்கண்ணேயேறிக் கரிய நாவற்பழத்தைப்பறித்து இருந்துண்ணும் பெரியபெயரையுடையனாகிய ஆதியினது, பிணங்கிய அரில்பட்ட காட்டையுடைய குடநாட்டின்கண் மறவர் எய்து கொடுவரப்பட்ட வெய்யபன்றியினது கடியப்பட்டதசையினது செவ்வியையுடைய நிணமிக்க புதிய வெண்சோற்றுக்கட்டியை வருவார்க்கெல்லாம் ஒப்பக்கொடுவந்து சொரியப் பெரிய பனையோலையானியன்றகுடையிலேயுறகரும் பெரிய புலர்ச்சியையுடைய விடியற்காலத்துச்சிறுக்கு நிகரொவ்வாது.—எ - று.

எந்திரப்புழையையுடைய நணிநணியிருந்த குறும்பிற் கண்மாறுநீட்டத் ததும்பவுண்டுவைகிப் புளிச்சுவைவேட்ட ஆடவர் முனையின் எக்கரேறியிருந்து நாவற்கனி கொய்து உண்ணுமெனவியையும். பாடிப்பெற்றயானையும் பன்னாள்திரங்கிப் பெற்றமையிற் பனங்குடையின்மிசையும் வைகறைச்சீர்சாலாதென்றார். வெளிறு கண்போகப்பாடியெனக்கூட்டி, வெண்மை இடத்தினின்றும்நீங்கப் பாடியெனினுமமையும். வைகறைச் சீர்சாலாதென்றது, அக்காலத்து அவன்செய்யுஞ்சிறப்பினை

நோக்கி. 'கைமாறு நீட்டி நணிநணி யிருந்து குறும்பல் குறும்பிற் றதும்ப வுவ்வே வைகி' என்று பாடமோதுவாருமுளர். (கஎஎ)

(கஎஅ.) கந்துமுனிந் துயிர்க்கும் யானையொடு பணைமுனிந்து
காலியற் புரவி யாலு மாங்கண்
மணன்மலி முற்றம் புக்க சான்றோ
ருண்ணு ராயினுந் தன்னொடு சூளுற்
ரு றுண்மென விரக்கும் பெரும்பெயர்ச் சாத்த
னீண்டோ வின்சா யலனே வேண்டா
ரெறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பிற்
கள்ளுடைக் கலத்த ருள்ளூர்க் கூறிய
நெடுமொழி மறந்த சிறுபே ராள
க0 ரஞ்சி நீக்குங் காலை
யேம மாகத் தான்முந் துறுமே.

திணை - வாகை; துறை - வல்லாண்முல்லை.

*பாண்டியன்கீரஞ்சாத்தனை அவர் பாடியது.

இ - ள்.—கம்பத்தைவெறுத்து நெட்டுயிர்ப்புக்கொள்ளும்யானையோடு பந்தியைவெறுத்துக் காற்றுப்போலும் இயல்பையுடையகுதிரை ஆலிக்கும் அவ்விடத்து இடுமணன்மிக்க முற்றத்தின்கட் புக்கசான்றோர் அப்பொழுது உண்ணாராயினும் தன்னுடனேசார்த்திச் சூளுற்று உண்மினென்று அவரைவேண்டிக்கொள்ளும் பெரியபெயரையுடையசாத்தன் எம்போல்வாரிடத்து இனிய மென்மையையுடையன்; இங்ஙனம் மெல்லியனாயினும் விரும்பாதாரெறியும் படைக்கலம் தம்மிற்கலந்த அஞ்சத்தக்கபோரின்கண் வீரபானத்தையுடைய கலத்தினராய் அதனையுடைய செருக்கான் ஊர்க்குள்ளேயிருந்துசொல்லிய வீரம் மேம்பட்டவார்த்தையைப் போரின்கண்மறந்த சிறியபோராண்மையையுடையோர் போர்க்களத்து அஞ்சிப் புறங்கொடுத்து ஓடுங்காலத்து அவர்க்கு அரணாகத் தான் தன்வலியான் முந்துற்றுநிற்பன்.—எ - று.

நெடுமொழிமொழிதலாற்பேராண்மையும், பின் அதனை மறத்தலாற் சிறுமையுமுடைமையின், சிறுபேராளரென்றார். நெடுமொழிமறந்தென்பதூஉம் பாடம். (கஎஅ)

(கஎகூ.) ஞால மீமிசை வள்ளியோர் மாய்ந்தென
வேலாது கவிழ்ந்தவெ னிரவன் மண்டை
மலர்ப்போர் யாரென வினவலின் மலைந்தோர்
விசிபிணி முரசமொடு மண்பல தந்த
ரு திருவீழ் நுண்பூட் பாண்டியன் மறவன்
படைவேண்டுவழி வாளுதவியும்
வினைவேண்டுவழி யறிவுதவியும்
வேண்டுப வேண்டுப வேந்தன் றேஎத்

* பாண்டிக்குதிரைச்சாக்கையவன் பாடியதென்றும் பிரதிபேதமுண்டு.

தசைநுகம் படாஅ வாண்டகை யுள்ளத்துத்
தோலா நல்லிசை நாலை கிழவன்
பருந்துபசி தீர்க்கு நற்போர்த்
திருந்துவே ளுகற் கூறினர் பலரே.

திணையும் துறையும் அவை.

*நாலைகிழவனுகனை †வடநெடுந்தத்தனர் பாடியது.

இ-ள்.—உலகத்தின்மேல் வண்மையுடையோர் இறந்தாராகப் பிறர்பால் ஏலாதுகவிழ்ந்த எனது இரத்தலையுடையமண்டையை ஏற்கும்பரிசு இட்டுமலர்த்த வல்லார்யாரென்று கேட்டவில், தன்னொடு மாறுபட்டோரது வலித்துப் பிணிக்கப் பட்டமுரசத்தோடு மண்பலவற்றையும்கொண்ட திருமகள்விரும்பிய நுண்ணிய தொழில்பொருந்திய ஆபரணத்தையுடையபாண்டியன்மறவன், அவனுக்குப் படை வேண்டியவிடத்து வாட்போராயுதவியும் அரசியற்கேற்றகருமச்சூழ்ச்சிவேண்டிய விடத்து அமைச்சியலோடுநின்று அறிவு உதவியும் இவ்வாறு வேண்டுவன அவ்வரச னிடத்து உதவித் தான்பூண்ட நுகம் ஒருபாற்கோடித் தளராமற்செலுத்தும்பகடு போல ஆண்மையினும் சூழ்ச்சியினுந்தளராத ஆண்மைக்கூறுபாடுபொருந்திய ஊக் கத்தினையும் தோலாத நல்லபுகழையுமுடைய நாலைகிழவன், பருந்தினது பசிதீர்க் கும் நல்ல போரைச்செய்யும் திருந்தியவேலையுடைய நாகனைப் பலரும் சொன் னர்.—எ-று.

பருந்துபசிதீர்க்கும்வேலெனவியையும். (கஎகூ)

(கஎ0.) நிரப்பாது கொடுக்குஞ் செல்வமு மிலனே
யில்லென மறுக்குஞ் சிறுமையு மிலனே
யிறையுறு விழுமந் தாங்கி யமரகத்
திரும்புசுவைக் கொண்ட விழுப்புண்ணோய் தீர்ந்து
மருந்துகொண் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடையெதிர்ந்
தீர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞ
னின்மை தீர வேண்டி னெம்மொடு
நீயும் வம்மோ முதுவா யிரவல
யாந்த னிரக்குங் காலைத் தானெம்
முண்ணா மருங்கு காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை யிரக்குந்
திருந்திலை நெடுவேல் வடித்திசி னெனவே.

திணையும் துறையும் அவை; துறை-பாணாற்றுப்படையுமாம்.

ஈரந்தூர்கிழான் ‡தோயன்மாறனைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன்மது ரைக்குமரனர் பாடியது.

---

* இஃது ஏட்டுப்பிரதியில் நாலைகிழவனென்றும் படித்தற்கிடமுண்டு; உண் மை விளங்கவில்லை.

† வடமநெடுநத்தனென்றும், வடமநெடுந்தச்சனென்றும் பிரதிபேதமுண்டு.

‡ கோயமானென்றும் பிரதிபேதமுண்டு.

இ - ள்.—நாடோறும் தொடர்ந்துகொடுக்கும் செல்வமுமுடையானல்லன்; இங்ஙனம் வறிஞனாயினும் இரந்தோர்க்கு இல்லையெனச்சொல்லிமறுக்கும் புன்மையுமுடையனல்லன்; தன் அரசுக்குவந்துற்ற போரானமைந்த இடும்பைகளைத் தான்பொறுத்து அந்தப்போரின்கட் படைக்கலங்கள் சுவைக்கொண்ட சிறந்தபுண்ணாகியநோய்தீர்ந்து, மருந்துவாங்கிக்கொள்ளப்பட்டமரம்போல வாளுற்ற வடு ஒன்றோடொன்றுவிரவி ஆண்மைக்குறைபாடின்மையின் வசையின்றி அழகுபெற்ற உடம்பையுடையனாய் வண்மையை ஏற்றுக்கொண்டு ஈந்தையென்னுமூரின்கண்ணேயிருந்தான், பாணரதுபசிக்குப்பகைவனாயவன்; நினதுவறுமைநீங்கவேண்டுவையாயின் எம்முடனே நீயும் வாராய் முதியவாயையுடைய இரவல, யாம் தன்னையிரக்கும்பொழுது தான் எம்முடைய உண்ணாதமருங்கினைக்காட்டித் தன்னுடைய ஊரின் வலியகையினையுடைய கொல்லனைவேண்டிக்கொள்ளாநிற்கும் அவன்; திருந்தின இலையையுடைய நெடியவேலைவடிப்பாயாகவெனச்சொல்லி.—எ - று.

பாண்பசிப்பகைஞன் ஈந்தையோன்; அவன் தன்னை யாமிரக்குங்காலைத் தான் எம்மருங்குலைக்காட்டி வேலைவடித்திசினெனக் கொல்லனையிரக்கும்; இரவல, இன்மைதீரவேண்டின், எம்மோடு நீயும்வருவாயாகவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இரக்குமென்று இழித்துக்கூறியது, பலகாலும் வடிக்கவேண்டுதலானும் பசிக்கு உதவவேண்டுதலானும். (௧௮௰)

(௧௮௧.) மன்ற விளவின் மனைவீழ் வெள்ளில்
கருங்க ணெயிற்றி காதன் மகனொடு
கான விரும்பிடிக் கன்று தலைக்கொள்ளும்
பெருங்குறும் புடுத்த வன்புல விருக்கைப்
புலாஅ லம்பிற் போரருங் கடிமிளை
வலாஅ ரோனே வாய்வாட் பண்ண
னுண்ணா வறுங்கடும் புய்தல் வேண்டி
னின்னே சென்மதி நீயே சென்றவன்
பகைப்புலம் படரா வளவைநின்
பசிப்பகைப் பரிசில் காட்டினை கொளற்கே.

திணையும் துறையும் அவை.

வல்லார்கிழான்பண்ணனைச் சோணாட்டுமுகையலூர்ச் சிறுகருந்தும்பியார் பாடியது.

இ - ள்.—மன்றத்தின்கண்ணேநிற்கப்பட்ட விளாவினது மனையிடத்துவீழ்ந்த விளாம்பழத்தைக், கரியகண்ணையுடையமறத்தி காதன்மகனுடனே காட்டுவாழும் கரிய பிடியினதுகன்று வந்தெடுக்கும் பெரிய அரண்சூழ்ந்த வலிய நிலத்தின்கண் ஊராகிய இருப்பையும் புலால்நாறும் அம்பினையும் பொருதற்கரிய காவற்காட்டினையுமுடைய வல்லாரென்கின்ற ஊரிடத்தான், வாய்த்தவாளையுடைய பண்ணன்; நினது உண்ணப்பெறாத வறியசுற்றம் உண்டு பிழைத்தல்வேண்டுவையாயின், நீ இப்பொழுதேசெல்வாயாக; போய் அவன் வேற்றுப்புலத்துச்செல்லாத எல்லையில்

நினது பசிக்குப்பகையாகியபரிசிலை நினது வறுமையைக்காட்டினையாய்க் கொள்ளுதற்கு.—எ - று.

'அம்பிற்போரருங்கடிமிளை' என்பதற்கு அம்பாற்பொருதற்கரிய கடிமிளையெனினுமமையும்.

காட்டிப் பரிசில்கொள்ளுதற்கு இன்னேசென்மதியெனக்கூட்டுக.

மதி - முன்னிலையசைக்கும் அசை. (கஅக)

(கஅஉ.) *உண்டா லம்மவிவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே.

திணை - பொதுவியல்; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி பாட்டு.

இ - ள்.—உண்டேகாண், இவ்வுலகம் ; இந்திரர்க்குரிய அமிழ்தம் தெய்வத்தாலாதல் தவத்தாலாதல் தமக்குவந்துகூடுவதாயினும் அதனை இனிதென்றுகொண்டு தனித்து உண்டலுமிலர் ; யாரோடும் வெறுப்பிலர் ; பிறர் அஞ்சத்தகுந்துன்பத்திற்குத் தாமும் அஞ்சி அதுதீர்த்தற்பொருட்டு மடிந்திருத்தலுமிலர் ; புகழ்கிடைக்கின் தம்முடைய உயிரையுங்கொடுப்பர் ; பழியெனின் அதனான் உலகமுழுதும்பெறினும் கொள்ளார் ; மனக்கவற்சியில்லார் ; அப்பெற்றித்தாகிய மாட்சிமைப்பட்ட அத்தன்மையராகித் தமக்கென்றுமுயலாத வலியமுயற்சியையுடைய பிறர்பொருட்டெனமுயல்வார் உண்டாதலான்.—எ - று.

அஞ்சித்துஞ்சலுமிலரென மாறிக்கூட்டுக.

இவ்வுலகம், பிறர்க்கெனமுயலுநருண்மையான் உண்டெனக்கூட்டுக.

ஆலும், அம்மவும் - அசை. (கஅஉ)

(கஅஙு.) †உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியு

---

* இச்செய்யுளை, 'வகைபடமுன்னோர்கூறிய குறிப்பின்கண்வந்த செந்துறைப் பாடாண்பாட்டு' என்பர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல் உஎ - ம் சூத்திரவுரை].

† இச்செய்யுள், 'வேளாளர் ஓதலின் சிறப்புக்கூறியது' என்பர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல் உ0 - ம் சூத்திரவுரை].

மொருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன் வருக வென்னா தவரு
ளறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே.

*திணையும் துறையும் அவை.

பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன் பாட்டு.

இ - ள்.—தம்மாசிரியற்கு ஒருறுபாடுற்றவிடத்து அதுதீர்த்தற்குவந்து உதவியும் மிக்கபொருளைக்கொடுத்தும் வழிபாட்டுநிலைமையைவெருது கற்றல் ஒருவற்கு அழகிது; அதற்கு என்னேகாரணமெனின், பிறப்பு ஒருதன்மையாகிய ஒருவயிற்றுப்பிறந்தோருள்ளும் கல்விவிசேடத்தால் தாயும் மனம்வேறுபடும்; ஒருகுடியின்கட்பிறந்தபலருள்ளும் மூத்தோன்வருகவென்னாது அவருள் அறிவுடையோன்சென்றநெறியே அரசனும்செல்லும்; வேறுபாடுதெரியப்பட்டநாற்குலத்துள்ளும் கீழ்க்குலத்துள் ஒருவன்கற்பின் மேற்குலத்துளொருவனும் இவன் கீழ்க்குலத்தானென்று பாராது கல்விப்பொருட்டு அவனிடத்தேசென்று வழிபடுவனுதலான்.—எ - று. ()

(கஅச.) †காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகு
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கு
மறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்து
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே.

திணையும் துறையும் அவை.

அறிவுடைநம்பியுழைச்சென்ற பிசிராந்தையார் பாடியது.

இ - ள்.—காய்த்தநெல்லையறுத்துக் கவளமாகக்கொள்ளின் ஒருமாவிற்குறைந்தநிலத்திற்கதிரும் பலநாளைக்காகும்; நூறுசெய்யாயினும் யானை தனித்துப்புக்கு உண்ணுமாயின் அதனதுவாயின்கட்புகுந்தநெல்லினும் கால் மிகவும் கெடுக்கும்; அப்பெற்றியே அறிவுடைய அரசன் இறைகொள்ளுநெறியை அறிந்துகொள்ளின்

* திணை - பாடாண்டிணை; துறை - செவியறிவுறூஉவென்றும் பிரதிபேதமுண்டு.

† இப்பாட்டு, வாயுறைவாழ்த்தென்றும் செவியறிவுறூஉவன்றென்றும் கூறுவர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல் 35 - ம் சூத்திரவுரை].

அவனுடு கோடிபொருளினை ஈட்டிக்கொடுத்துத் தானும் மிகவுந்தழைக்கும்; வேந்தன் அறிவால் மெல்லியனாகி நாடோறும் தரமறியாத உறுதிகூறாது அவன்விரும்புவதனையேதானுங்கூறும் ஆரவாரத்தையுடையசுற்றத்தோடுகூடி அன்புகெடக்கொள்ளும் பொருட்டொகுதியைவிரும்பின் அந்தயானைபுக்கபுலம்போலத் தானும் உண்ணப்பெறான், உலகமுங்கெடும்.—எ - று.

பரிவுதவவென்றோதி, அக்குடிகட்கு வருத்தமிகவென்றுரைப்பாருமுளர். மெல்லியன்கிழவனாகியென்றும் பாடம். (கஅச)

(கஅரு.) கால்பார் கோத்து *ஞாலத் தியக்குங்
காவற் சாகா டுகைப்போன் மாணி
னூறின் றாகி யாறினிது படுமே
யுய்த்த றேற்றா னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே.

திணையும் துறையும் அவை.
தொண்டைமான் இளந்திரையன் பாட்டு.

இ - ள்.—உருளையையும் பாரையுங்கோத்து உலகின்கண்ணேசெலுத்தும் காப்புடையசகடந்தான் அதனைச்செலுத்துவோன் மாட்சிமைப்படின் ஊறுபாடில்லையாய் வழியை இனிதாகச்செல்லும் அவன் அதனை இனிதாகச்செலுத்துதலைத் தெளியமாட்டானாயின் அது நாடோறும் பகையாகிய செறிந்த சேற்றிலேயழுந்தி மிகப்பல தீயதுன்பத்தை மேன்மேலுமுண்டாக்கும்.—எ - று.

இஃது, உலகாளுமுறைமைகூறுதலையுட்கொண்டு சகடம்செயலுறுமாற்றைக் கூறினமையின், நுவலாநுவற்சியென்னுமலங்காரமாயிற்று; ஒட்டென்றுகூறுவாருமுளர்; அன்றி இதற்கு உலகத்தின்கண்ணே உலகியற்கையைநிறுத்தி அதனோடு ஞாலத்தின்கண்ணேசெலுத்தப்படும் காப்பாகியசகடம் தன்னைச்செலுத்துவோன் மாட்சிமைப்படின் தனக்கு ஓரிடையூறுமின்றாகி நெறிமுன்றமையேநடக்கும்; அதனைச்செலுத்துதல் தெளியானாயின் அச்சாகாடு நாளும் மாறுதலையென்னும் செறிந்த அள்ளலிலே அகப்பட்டுத் தனக்கும் தன்கீழ்வாழ்வார்க்கும் மிகப்பலவாகிய தீக்கேட்டினை மேன்மேலேதருமெனவும் பொருளுரைப்பர். இப்பொருட்குப் பாரென்றது, உலகியற்கையை. கால் - உருளை. (கஅரு)

(கஅசு.) நெல்லு முயி ரன்றே நீரு முயி ரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே.

திணையும் துறையும் அவை.
†மோசிகீரனார் பாடியது.

---

* ஞாலத்தியங்குமென்றும் பாடம்.
† மாதிமாதிரத்தனார்பாட்டென்றும் பிரதிபேதமுண்டு.

இ - ள்.—வேந்தனாகிய உயிரையுடைத்து, பரந்த இடத்தையுடைய உலகம், அதனான், இவ்வுலகத்தார்க்கு நெல்லும் உயிரன்று, நீரும் உயிரன்று, யான் உயிரென்பதனை அறிகை வேலான்மிக்க படையையுடைய அரசனுக்குமுறைமை.—எ - று.

மன்னனுயிர்த்தென்றகருத்து: உயிரையாக்கும் நெல்லும் நீரும் உளவாவது மன்னன்முறைசெய்துகாப்பினென்றதாம். (௧௮௬)

(௧௮௭.) நாடா கொன்றோ காடா கொன்றோ
வவலா கொன்றோ மிசையா கொன்றோ
வெவ்வழி நல்லவ ராடவ
ரவ்வழி நல்லை வாழிய நிலனே.

திணையும் துறையும் அவை.

ஒளவையார் பாடியது.

இ - ள்.—நிலனே, நீ ஒன்றில் நாடேயாக, ஒன்றிற் காடேயாக; ஒன்றிற் பள்ளமேயாக, ஒன்றில் மேடேயாக; எவ்வாறாயினும் எவ்விடத்து நல்லர் ஆண்மக்கள் அவ்விடத்து நீயும் நல்லையல்லது, நினக்கென ஓர் நலமுடைமையில்லை; வாழி.—எ - று.

தீயநிலனேயாயினும் நல்லோருறையின் நன்றெனவும், நல்லநிலனேயாயினும் தீயோருறையின் தீதெனவும், தன்னிடத்துவாழ்வோரியல்பல்லது தனக்கென ஓரியல்புடையதன்றென நிலத்தை இழித்துக்கூறுவதுபோல உலகத்தியற்கைகூறியவாறாயிற்று. ஒன்றோவென்பது, எண்ணிடைச்சொல். (௧௮௭)

(௧௮௮.) படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணு
முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் அறிவுடைநம்பி பாட்டு.

இ - ள்.—படைக்கப்படும்செல்வம் பலவற்றையும்படைத்துப் பலருடனே கூடவுண்ணும் உடைமைமிக்க செல்வத்தையுடையோராயினும் காலம் இடையேயுண்டாகக் குறுகக்குறுக நடந்துசென்று சிறியகையைநீட்டிக் கலத்தின்கட்கிடந்ததனைத் தரையிலேயிட்டும் கூடப்பிசைந்துதோண்டியும் வாயாற்கவ்வியுங் கையால் துழாவியும் நெய்யையுடையசோற்றை உடம்பின்கட்படச்சிதறியும் இங்ஙனம் அறிவை இன்பத்தான்மயக்கும்புதல்வரை இல்லாதார்க்குப் பயனாகிய முடிக்கப்படும் பொருளில்லை, தாம் உயிர்வாழுநாளின்கண்.—எ - று.

தொட்டென்பதற்குக் கூட வாரிப்பிடித்தெனினுமமையும். குறையென்பது, முடிக்கப்படுங்கால் முடிக்கப்படும்பொருள். இனிப் பயக்குறையுள்ளதென ஒரு சொல்வருவித்துத் தாம்வாழுநாளும் இல்லையென்றுகூறுவாருமுளர். (௧௮௮)

(கஅகூ.) தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கு
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கு
முண்பன நாழி யுடுப்பன விரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீத
றுய்ப்பே மெனினே தப்புந பலவே.

திணையும் துறையும் அவை.

மதுரைக் கணக்காயனார்மகனார் நக்கீரர் பாடியது.

இ - ள்.—தெளிந்தநீராற்சூழப்பட்டவுலகமுழுதையும் பிறவேந்தர்க்குப்பொதுவாதலின்றித் தமக்கேயுரித்தாக ஆண்டு வெண்கொற்றக்குடையால்நிழற்செய்த ஒருதன்மையையுடையோர்க்கும் இடையாமத்தும் நண்பகலும் துயிலாதாய் விரைந்தசெலவையுடைய மாக்களைப் படுக்கக்கருதிச்செல்லும் கல்வியில்லாத ஒருவனுக்கும் உண்ணப்படும்பொருள்நாழி, உடுக்கப்படுமவை இரண்டே, பிறவுமெல்லாம் ஒக்குமாதலாற் செல்வத்தாற்பெறும்பயனாவது கொடுத்தல்; செல்வத்தை யாமே நுகர்வேமென்றுகருதின் தவறுவன பல.—எ - று.

பலவென்றது, அறம்பொருளின்பங்களை. பகலை ஒருமாத்திரையென்றும், கடுமாவை யானையென்றும், கல்லாத ஒருவனைப் பாகனென்றும் உரைப்பாருமுளர். ()

(ககூ0.) விளைபதச் சீறிட நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கு
மெலிமுயன் றனைய ராகி யுடையதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொ
டியைந்த கேண்மை யில்லா கியரோ
கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
வன்றவ ணுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்த னல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மையோ
டியைந்த வைக லுளவா கியரோ.

திணையும் துறையும் அவை.

*சோழன் நல்லுருத்திரன் பாட்டு.

இ - ள்.—விளைந்தசெவ்வியையுடைய சிறிய இடத்தைப்பார்த்து வளைந்தகதிராகிய உணவைக்கொண்டு முழையின்கண்ணே நிறையவைக்கும் எலிமுயன்றாற்

* சோழன் நல்லுத்தரனென்றும் பிரதிபேதமுண்டு.

போலும் சிறியமுயற்சியராகி உள்ள தம்முடையசெல்வத்தைநுகராது இறுகப்பிடிக்கும் உள்ளமிகுதியில்லாருடன்பொருந்தியநட்பு இல்லையாக; தறுகண்மையையுடையகேழலாகியபன்றி தனது இடப்பக்கத்தே பட வீழ்ந்ததாக, அன்று அவ்விடத்து உண்ணுதாகிப் பிற்றைநாட் பெரியமலையின்கண் தனதுமுழையிடம் தனிமைப்பட உணவைவிரும்பியெழுந்து பெரியகளிறாகிய ஒருத்தலை நல்லவலப்பக்கத்தே படப் படுக்கும் புலிபசித்தாற்போலும் குறையில்லாத மேற்கோளையுடைய வலியையுடையோர்நட்போடு பொருந்தியநாட்கள் உளவாக.—எ - று.

சிறிடமென்றது, விளைந்துமுற்றியபின் அறுப்பதற்குமுன்னாகிய இடத்தை. இல்லாகியர், உளவாகியரென்பன - ஈண்டு வியங்கோட்பொருளவாய்நின்றன. ()

(கக௯க.) யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனு
௫ மல்லவை செய்யான் காக்கு மதன்றலை
யான்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.

திணையும் துறையும் அவை.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தானுழைச்சென்ற பிசிராந்தையாரை, 'கேட்குங்காலம் பலவாலோ? நரை நுமக்கில்லையாலோ' என்றசான்றோர்க்கு அவர் சொற்றது.

இ - ள்.—நுமக்குச்சென்றயாண்டுகள் பலவாயிருக்க நரையில்லையாகுதல் எப்படியாயினீரெனக் கேட்பீராயின், என்னுடைய மாட்சிமைப்பட்ட குணங்களையுடைய மனைவியுடனே புதல்வரும் அறிவுநிரம்பினர்; யான்கருதிய அதனையே கருதுவர், என்னுடைய ஏவல்செய்வாரும்; அரசனும் முறையல்லாதனசெய்யானாய்க்காக்கும்; அதற்குமேலே யானிருக்கின்றவூரின்கண் நற்குணங்களால் அமைந்து பணியவேண்டுமியர்ந்தோரிடத்துப்பணிந்து ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினையுடையசான்றோர் பலராதலான்.—எ - று.

'ஆன்றவிந்தடங்கிய' என்பதற்குக் கல்வியால்நிறைந்து அதற்கேற்பச் சுவைமுதலியவற்றிற்செல்லும் அறிவவிந்து மனமொழிமெய்களான் அடங்கியவெனினுமமையும். 'யாஙகாகியர்' என்பதற்கு எவ்வாறாயிற்றென்றும், எப்படியாலாயிற்றென்றும் பொருள்கூறுவாருமுளர். (கக௯க)

(கக௯உ.) யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்த
௫ லினிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவி
னின்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது

கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.

திணையும் துறையும் அவை.

கணியன்பூங்குன்றன் பாட்டு.

இ - ள்.—எமக்கு எல்லாம் ஊர்; எல்லாரும் சுற்றத்தார்; கேடும் ஆக்கமும் தாமேவரினல்லது, பிறர்தரவாரா; நோதலும் அதுதீர்தலும் அவற்றையொப்பத் தாமேவருவன; சாதலும் புதிதன்று, கருவிற்றோன்றியநாளே தொடங்கியுள்ளது; வாழ்தலை இனிதென்று உவந்ததுமிலம்; ஒருவெறுப்புவந்தவிடத்து இன்னாதென் றிருத்தலுமிலம்; மின்னுடனே மழை குளிர்ந்ததுளியைப் பெய்தலான் அமையாது கல்லையலைத்து ஒலிக்கும் வளவிய பேர்யாற்றுநீரின்வழியேபோம் மிதவை போல அரியவுயிர் ஊழின்வழியேபடுமென்பது நன்மைக்கூறுபாடறிவோர் கூறிய நூலாலேதெளிந்தேமாகலான், நன்மையான்மிக்கவரைமதித்தலுமிலேம்; சிறியோரைப்பழித்தல் அம்மதித்தலினுமிலேம்.—எ - று.

தலைஇயென்பதனைத் தலையவெனத்திரிக்க. 'முனிவி னின்னா தென்றலு மிலமே' என்றதற்கு முன்னேகூறிய வாழ்தலை வெறுப்பான் இன்னாதென்று இகழ்ந்திருத்தலுமில்லேமெனினுமமையும். (௧௯௨)

(௧௯௩.) அதளெறிந் தன்ன நெடுவெண் களரி
னொருவ னட்டும் புல்வாய் போல
வோடி யுய்தலுங் கூடும
னொக்கல் வாழ்க்கை தட்குமா காலே.

திணையும் துறையும் அவை.

*ஓரேருழவர் பாட்டு.

இ - ள்.—தோலைப் புடைத்துவைத்தாற்போன்ற நெடிய வெளிய களரின்கண் ஒருவனலைக்கும்புல்வாய் எளிதின் ஓடிப்பிழைக்குமாபோலே யானும் நன்னெறிக்கண்ணேயொழுகிப் பிழைக்கவுங்கூடும்; சுற்றத்தோடுகூடிவாழும் இல்வாழ்க்கை அதன்கட்செல்லவொட்டாது காலைத் தளையாநிற்கும்; ஆதலான் உய்தல்கூடாது.—எ - று.

மன் - கழிவின்கண்வந்தது. மா - அசைநிலை. (௧௯௩)

(௧௯௪.) ஓரி னெய்தல் கறங்க வோரி
லீர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்

* ஒன்னாருழவர்பாட்டென்றும் பிரதிபேதமுண்டு.

பைத லுண்கண் பனிவார் புறைப்பப்
(ரு) படைத்தோன் மன்றவப் பண்பி லாள
னின்னா தம்மவிவ் வுலக
மினிய காண்கித னியல்புணர்ந் தோரே.

திணை - அது; துறை - பெருங்காஞ்சி.

பக்குடுக்கைநன்கணியார் பாடியது.

இ - ள்.—ஒருமனையின்கண்ணே சாக்காட்டுப்பறை ஒலிப்ப ஒருமனையின்கண்ணே மணத்திற்குக்கொட்டும் மிகக்குளிர்ந்த முழவினது ஓசை மிக ஒலிப்பக் காதலரோடு கூடினமகளிர் பூவணியையணியப் பிரிந்தமகளிரது வருத்தத்தையுடைய உண்கண்கள் நீர்வார்ந்துதுளிப்ப இப்பரிசு ஒத்து ஒவ்வாமைபடப் படைத்தான், நிச்சிதமாக அப்பண்பில்லாதோனாகிய நான்முகன்; கொடிது, இவ்வுலகினதியற்கை; ஆதலான், இவ்வுலகினதுதன்மையறிந்தோர் வீட்டின்பத்தைத்தரும் நல்ல செய்கைகளை அறிந்து செய்துகொள்க.—எ - று.

காண்கவென்பது, காண்கெனக் குறைக்கப்பட்டது; இதனியல்புணர்ந்தோர் இவ்வின்னாமையை இனியவாகக் காண்கவென்றுரைப்பினுமமையும். (கசுச)

(கசுரு.) *பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
(ரு) பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினு
மல்லது செய்த லோம்புமி னதுதா
னெல்லாரு முவப்ப தன்றியு
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே.

திணை - அது; துறை - பொருண்மொழிக்காஞ்சி.

நரிவெரூஉத்தலையார் பாடியது.

இ - ள்.—பல அமைந்தகுணங்களையுடையீர், பல அமைந்தகுணங்களையுடையீர், கயலினது முட்போன்ற நரைமுதிர்ந்த திரைந்தகதுப்பினையும் பயனில்லாத முதுமையையுமுடைய பல அமைந்தகுணங்களையுடையீர், மழுவாகிய கூரிய படைக்கலத்தினையும் கடிய வலியினையுமுடைய ஒருவன் பாசத்தாற் கட்டிக்கொண்டு போங்காலத்து இரங்குவீர் நீர்; நல்வினையைச்செய்யமாட்டீராயினும் தீவினையைச் செய்தலைப் பரிகரிமின்; அதுதான் யாவரும் புகழ்வரென்றது ஒழியவும் நல்ல நெறியின்கண்ணேசெலுத்தும் வழியும் அதுதான்.—எ - று.

---

* இச்செய்யுள், 'வீடேதுவாகவன்றி வீடுபேற்றுநெறிக்கட்செல்லும் நெறியேதுவாகக்கூறியது' என்பர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், உச - ம் சூத்திரவுரை].

பலராகிய சான்றீரென்பது, பல்சான்றீரெனத்தொக்கது; *"பல்குட்டுவர்" என்பதுபோல. பலவாகிய குணங்களால் அமைந்தீரெனினுமமையும். பயனின் மூப்பென்றுவைத்துப் பல்சான்றீரேயென்றது இகழ்ச்சிக்குறிப்பு; அடுக்கு - விரைவின்கண்வந்தது. (௧௯௫)

(௧௯௬.) †ஒல்லுவ தொல்லு மென்றலும் யாவர்க்கு
மொல்லா தில்லென மறுத்தலு மிரண்டு
மாள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே
யொல்லா தொல்லு மென்றலு மொல்லுவ
தில்லென மறுத்தலு மிரண்டும் வல்லே
யிரப்போர் வாட்ட லன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயி லத்தை
யனைத்தா கியரினி யிதுவே யெனைத்துஞ்
சேய்த்துக்கா ணாது கண்டனம் அதனா
னோயில ராகநின் புதல்வர் யானும்
வெயிலென முனியேன் பனியென மடியேன்
கல்குயின் றன்னவெ னல்கூர் வளிமறை
நாணல தில்லாக் கற்பின் வாணுதல்
மெல்லியற் குறுமக ளுள்ளிச்
செல்வ லத்தை சிறக்கநின் னாளே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசில்கடாநிலை.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சியநன்மாறன் பரிசில்நீட்டித்தானை ஆவூர்மூலங்கிழார் பாடியது.

இ - ள்.—தம்மாற்கொடுக்கவியலும்பொருளை இயலுமென்றுசொல்லிக்கொடுத்தலும், யாவர்க்கும் தம்மாற்கொடுக்க இயலாதபொருளை இல்லையென்றுசொல்லி மறுத்தலுமாகிய இரண்டும் தாளாண்மைப்பக்கத்துளவாகிய நட்பின்கூற்றினுள்ளன; தனக்கு இயலாததனை இயலுமென்றலும் இயலும்பொருளை இல்லையென்று மறுத்தலுமாகிய இரண்டும் விரைய இரப்போரை மெலிவித்தலன்றியும் ஈவோர் புகழ் குறைபடும்வழியாம்; இப்பொழுது நீ எம்மளவிற்செய்தசெய்தியும் அத்தன்மைத்தாகுக; இஃது எத்துணையும் எங்குடியிலுள்ளார் முன்புகாணாதது, யாம்கண்டேம்; அத்தீங்கினால், நின்பிள்ளைகள் நோயின்றியேயிருப்பாராக; யானும் வெயிலென்றுநினைந்து போக்கைவெறேனாய்ப் பனியென்றுகொண்டு மடிந்திரேனாய் விட்டுநீங்காமையாற் கல்லாற்செய்தாற்போன்ற எனது நல்குரவின்மிகுதியான் வளிமறையாகியமனையிடத்து நாணல்லது வேறில்லாத கற்பினையும் ஒளியையுடைத்தாகிய நுதலினையும் மெல்லிய இயலினையுமுடைய குறுமகளை நினைந்து போவேன்; நின் ஆயுள்மிகுவதாக.—எ - று.

---

* பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி; ௧௦௫ - ம் அடி.

† இப்பாட்டினை, கொடார்ப்பழித்தலுக்கு உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், ௩௫ - ம் சூத்திரவுரை].

'நோயிலராகநின்புதல்வர்' என்பதூஉம், 'சிறக்கநின்னாள்' என்பதூஉம் குறிப்புமொழி; அன்றி, பரிசில்மறுத்தலான் இவன்புதல்வர்க்கும் இவனுக்கும் தீங்கு வருமென்றஞ்சி நோயிலராகவெனவும், சிறக்கநின்னாளெனவும் கூறினாராக உரைப்பினுமமையும். நல்குரவென்பது, நல்லெனக் குறைந்துநின்றது. 'கல்குயின் றன்னவென் னல்கூர் வளிமறை' என்பதற்குக் கல்லாற்செய்தாற்போன்ற பயன் கொள்ளாத யாக்கையையுடைய எனது நல்கூர்ந்தவளிமறையெனவும், கல்லைத் துளைத்தாற்போன்ற காற்றடைமாத்திரையாகச்செய்யப்பட்ட நல்கூர்ந்த என்மனையெனவுமுரைப்பாருமுளர். (ககூசு)

(ககூஎ.) வளிநடந் தன்ன வாஅய்ச்செ லிவுளியொடு
கொடிநுடங்கு மிசைய தேரின ராயினுங்
கடல்கண் டன்ன வொண்படைத் தானையொடு
மலைமாறு மலைக்குங் களிற்றின ராயினு
முருமுரன் றன்ன வுட்குவரு முரசமொடு
செருமேம் படூஉம் வென்றிய ராயினு
மண்கெழு தானை யொண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தலோ விலமே
யெம்மால் வியக்கப் படூஉ மோரே
யிடுமுட் படப்பை மறிமேய்ந் தொழிந்த
குறுநறு முஞ்ஞைக் கொழுங்கட் குற்றடகு
புன்புல வரகின் சொன்றியொடு பெறூஉஞ்
சீறூர் மன்ன ராயினு மெம்வயிற்
பாடறிந் தொழுகும் பண்பி னோரே
மிகப்பே ரெவ்வ முறினு மெனைத்து
முணர்ச்சி யில்லோ ருடைமை யுள்ளே
நல்லறி வுடையோர் நல்குர
வுள்ளுதும் பெருமயா முவந்துநனி பெரிதே.

திணையும் துறையும் அவை.

சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன் பரிசில்நீட்டித்தானைக் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் பாடியது.

இ - ள்.—காற்றியங்கினாற்போலும் தாவுதலுடைத்தாகிய கதியையுடைய குதிரையோடு கொடிநுடங்கும் உச்சியையுடைய தேரினையுடையரெனவும் கடலைக் கண்டாற்போலும் ஒள்ளியபடைக்கலத்தையுடைய சேனையுடனே மலையோடுமாறுபட்டுப் பொருங் களிற்றினையுடையரெனவும் இடிமுழங்கினாற்போலும் அஞ்சத்தக்க முரசத்தோடு போரின்மேம்படும் வெற்றியையுடையரெனவுங்கருதி நிலத்தைப்பொருந்தின படையினையுடைய ஒள்ளியபூணினையுடைய அரசர் வெண்கொற்றக்குடைநிழற்றப்படுஞ்செல்வத்தை மதித்தலில்லேம்; எங்களால் மதிக்கப்படுவோர், இடப்பட்ட முள்வேலியையுடையதோட்டத்து மறிதின்ன ஒழிந்துநின்ற குறிய நாற்றத்தினையுடைய முஞ்ஞையது கொழுவியகண்ணிற்கிளைக்கப்

ட்ட குறிய இலையைப் புல்லியநிலத்தில்விளைந்த வரகினதுசோற்றுடனேபெறு கின்ற சிறிய ஊரையுடைய வேந்தராயினும் எம்மிடத்துச்செய்யும் முறைமையை யறிந்துநடக்கும் குணத்தினையுடையோர்காண்; யாம் மிகப்பெரிய துன்பமுறினும் சிறிதும் அறிவிலாதோருடையசெல்வம் பயன்படாமையின் அதனைநினையேம்; நல்லறிவினையுடையோரதுவறுமை பயன்படுதலின் அதனைப் பெருமானே, யாம் உவந்து மிகப்பெரிதும் நினைப்பேம்.—எ - று.

எனவென்பது, எண்ணிடைச்சொல். (கூகஎ)

(ககூஅ.) அருவி தாழ்ந்த பெருவரை போல
வாரமொடு பொலிந்த மார்பிற் றண்டாக்
கடவுள் சான்ற கற்பிற் சேயிழை
மடவோள் பயந்த மணிமரு ளவ்வாய்க்
கிண்கிணிப் புதல்வர் பொலிகென் றேத்தித்
திண்டே ரண்ண னிற்பா ராட்டிக்
காதல் பெருமையிற் கனவினு மரற்றுமென்
காமர் நெஞ்ச மேமாந் துவப்ப
வாலமர் கடவு ளன்னநின் செல்வம்
வேல்கெழு குரிசில் கண்டே னாதலின்
விடுத்தனென் வாழ்கநின் கண்ணி தொடுத்த
தண்டமிழ் வரைப்பகங் கொண்டி யாகப்
பணித்துக்கூட் டுண்ணுந் தணிப்பருங் கடுந்திற
னின்னோ ரன்னநின் புதல்வ ரென்று
மொன்னார் வாட வருங்கலந் தந்துநும்
பொன்னுடை நெடுநகர் நிறைய வைத்தநின்
முன்னோர் போல்கிவர் பெருங்க ணோட்டம்
யாண்டு நாளும் பெருகி யீண்டுதிரைப்
பெருங்கட னீரினு மக்கடன் மணலினு
நீண்டுயர் வானத் துறையினு நன்று
மிவர்பெறும் புதல்வர்க் காண்டொறு நீயும்
புகன்ற செல்வமொடு புகழினிது விளங்கி
நீடு வாழிய நெடுந்தகை யானுங்
கேளில் சேஎய் நாட்டினெந் நாளுந்
துளிநசைப் புள்ளினின் னளிநசைக் கிரங்கிநின்
னடிநிழற் பழகிய வடியுறை
கடுமான் மாற மறவா தீமே.

திணையும் துறையும் அவை.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறனை வடமவண்ணக்கன் பேரிசாத்தனார் பாடியது.

இ - ள்.—அருவிதாழ்ந்த பெரியமலைபோல ஆரத்தோடுபொலிந்தமார்பின்கண் வேட்கைதணியாத தெய்வத்தன்மையமைந்த கற்பினையும் செய்ய ஆபரணத்தையு முடைய உன்னுடையமடவோள்பெறப்பட்ட பவழமணிபோன்ற அழகிய வாயை யும் கிண்கிணியையுமுடையபுதல்வர் பொலிகவென்றுவாழ்த்தித் திண்ணியதேரை யுடையவேந்தே, நின்னைப் புகழ்ந்துபரிசின்மேல் அன்புபெரிதாகவிற் கனவின் கண்ணும் நின்புகழையேகூறும் எனதுவிருப்பத்தையுடையநெஞ்சம் இன்புற்று மகிழ ஆலிலையின்கண்மேவியதிருமால்போலும் நின்னுடையசெல்வத்தையெல்லாம் வேலையுடையதலைவ, கண்டேன்; ஆதலால் விடைகொண்டேன்; வாழ்க, நினது கண்ணி, தொடர்புபட்ட குளிர்ந்த தமிழ்நாடெல்லாமுழுதும் கொள்ளையாகக்கொ ண்டு நின்பகைவரைத்தாழ்த்தி அவர்கள்பொருள்களையும் வாங்கிக்கொண்டுண்ணும் தணித்தற்கரிய மிக்கவலியையுடைய நின்னையொக்கும்வலியையுடைய நின்னு டையமைந்தர்; எந்நாளும் பகைவர்தேய அவருடைய பெறுதற்கரிய அணிகலத்தைக் கொண்டுவந்து நம்முடைய பொன்னுடையநெடியநகரின்கண் பொலியவைத்த நின்னுடைய முன்னுள்ளோரைப்போல்க, இவருடைய பெரியகண்ணோட்டம்; யாண்டும்நாளும்மிக்குச் செறிந்ததிரையையுடைய பெரியகடனீரினும் அக்கடல் கொழித்திடப்பட்டமணலினும் நீண்டுயர்ந்தமழையிற்றுளியினும் பெரிதும் இவர் பெறும்பிள்ளைகளைக்காணுந்தோறும் நீயும் விரும்பியசெல்வத்துடனே புகழும் இனி தாகவிளங்கி நெடுங்காலம்வாழ்க; பெருந்தகாய், யானும், உறவில்லாத்தூரிய நாட்டின்கண்ணே நாடோறும் துளியைநச்சுதலையுடைய வானம்பாடியென்னும் புட்போல நின்னுடைய வண்மைநசையான் இரங்கி நினது அடிநிழற்கட் பழகிய அடியின்வாழ்வேன்; விரைந்தசெலவையுடைய குதிரையையுடையமாறனே, நீ செய்தசெயலை மறவாதொழிவாயாக.—எ - று.

புதல்வர்மார்பிற் பொலிகெனக் கூட்டினுமமையும். 'ஆலமர் கடவு ளன்ன நின்' என்றதற்கு ஆலின்கீழமர்ந்த முக்கட்செல்வனாகிய கடவுளையொப்ப என்றும் நிலைபெற்றிருப்பேனென்றிருக்கின்ற நின்னென்றுரைப்பினுமமையும். 'நின்முன் னோர்போல்கிவர்பெருங்கண்ணோட்டம்' என்றது, அவரும் வழங்காதுவைத்தலிற் கண்ணோட்டமிலர்; இவரும் அவரையொக்கக் கண்ணோட்டமிலராகவென்பதா யிற்று. 'முன்னோர்போல்கிவர்பெருங்கண்ணோட்டம்' எனவும், 'வாழ்கநின்கண்ணி' எனவும், 'நீடுவாழியர்' எனவுநின்றவை - குறிப்புமொழி; அன்றி, என்னிடத்து நீ செய்தகொடுமையால் நினக்குத் தீங்குவரும்; அதுவாராதொழிகவென வாழ்த்திய தூஉமாம். மறவாதீமேயென்றது, என்னளவில் நீசெய்தசெய்தியை மறவாதொழி யென்பதாயிற்று. 'யாண்டுநாளும்பெருகி' என்பதற்கு நின்னாளே திங்களனைய வாக; அத்திங்கள் யாண்டோரனையவாக; யாண்டே ஊழியனையவரம்பினவாக வென்பது கருத்தாகக்கொள்க. (ககூஅ)

* (ககூகூ.) கடவு ளாலத்துத் தடவுச்சினைப் பல்பழ
நெருந லுண்டன மென்னாது பின்னுஞ்
செல்வா ருவே கலிகொள் புள்ளின
மனையர் வாழியோ விரவல ரவரைப்
ரு புரவெதிர் கொள்ளும் பெருஞ்செய் யாடவ

ருடைமை யாகு மவருடைமை
யின்மை யாகு மவரின் மையே.

திணையும் துறையும் அவை.

பெரும்பதுமனூர் பாட்டு.

இ - ள்.—தெய்வமுறையும் ஆலமரத்தினது பெரியகொம்பின்கட் பலபழத்தை நென்னலுமுண்டேமென்னுவாய்ப் பின்னும் அவ்விடத்துப்போதலையமையா, ஒலி பொருந்தின புள்ளினம்; அத்தன்மையினையுடையார் இரப்போர்; அவரைக் காத்தற்கு எதிர்ந்துகொள்ளும் மிக்கசெய்கையையுடைய ஆண்மக்களது செல்வமாகும், அவ்விரப்போர்செல்வம்; அவ்வாண்மக்களுடைய வீறுமையாகும், அவ்விரப்போருடைய வறுமை.—எ - று.

வாழியும், ஓவும், அசைநிலை. (கககூ)

(உ00.) பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்
கனிகவர்ந் துண்ட கருவிரற் கடுவன்
செம்முக மந்தியொடு சிறந்துசேண் விளங்கி
மழைமிசை யறியா மால்வரை யடுக்கத்துக்
கழைமிசைத் துஞ்சுங் கல்லக வெற்ப
நிணந்தின்று செருக்கிய நெருப்புத்தலை நெடுவேல்
களங்கொண்டு கனலுங் கடுங்கண் யானை
விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே
இவரே, பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினுங்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்
யானே, பரிசிலன் மன்னு மந்தண னீயே
வரிசையில் வணக்கும் வாண்மேம் படுந
னினக்கியான் கொடுப்பக் கொண்மதி சினப்போ
ரடங்கா மன்னரை யடக்கு
மடங்கா விளையு ளுடுகிழ வோயே.

திணை - அது; துறை - பரிசிற்றுறை.

பாரிமகளிரை விச்சிக்கோனுழைக் கொண்டுசென்ற கபிலர் பாடியது.

இ - ள்.—குளிர்ந்தமலையின்கணோங்கிய பசிய இலையையுடைய பலாவினது பழத்தைக்கவர்ந்துண்ட கரியவிரலையுடையகடுவன் சிவந்தமுகத்தையுடைய தனது மந்தியுடனேபொலிந்து சேய்மைக்கண்ணேவிளங்கி முகிலாலும் உச்சியறியப்படாத உயர்ந்தமலைப்பக்கத்து மூங்கிலுச்சியின்கண் துயிலும் மலையகத்துத் தாழ்ந்த வரையையுடையோய், நிணத்தைத்தின்றுகளித்த நெருப்புப்போலும் தலையையுடைய நெடியவேலினையும் களத்தைத் தனதாக்கிக்கொண்டு காயும் தறுகண்மையையுடைய யானையினையும் விளங்கியமணிகளாற்செய்யப்பட்ட வளைந்த ஆபரணத்

தினையுமுடைய விச்சிக்கோவே, இவர்கடாம், பூவைத் தனது தலையின் கண்மாறுத அலங்கரித்தாற்போலும் கொடிமுல்லைதான் நாத்தழும்பேறப் பாடாதாயினும் ஒலிக்குமணியையுடைய நெடியதேரைக் கொள்கவென்றுசொல்லிக் கொடுத்த பரந்து மேம்பட்ட தலைமையினையுடைய பாரிக்குமகளிர் ; யான் பரிசிலன் ; அதுவன்றியும் நிலைபெற்ற அந்தணன் ; நீ, பகைவரைப்போர்செய்யுமுறைமையாற்பொருது தாழ்விக்கும் வாளான்மேம்படுபவன் ; ஆதலால், நினக்கு யான்தரக்கொள்வாயாக ; சினத்தையுடையபோராலே பகைவேந்தரை மிகையடக்கும், மடக்கப்படாத மிக்க விளைதலையுடைய நாட்டையுடையோய்.—எ - று.

மடக்குதல் - போகமொருக்குதல்.

பலவின்கனிகவர்ந்துண்டகடுவன் மந்தியொடுசிறந்து சேண்விளங்கிக் கழைமிசைத்துஞ்சுமென்றதனால், நீயும் இவரைவரைந்துகொண்டு இன்புற்று வாழ்தல் வேண்டுமென்பது தோற்றிநின்றது.

'யானே பரிசிலன்' என்பதனால் நினக்கு என்குறை முடிக்கவேண்டுமென்பதூஉம், அந்தணனென்றதனால் யான் தருதற்குரியேனென்பதூஉங்கொள்ளப்படும்.

உலகத்துமகட்பேசிவிடக் கொடுத்தலையன்றித் தாமே இவரைக்கொள்வாயாக வென்று இரந்துகூறினமையின், இது பரிசிற்றுறையாயிற்று. (உ00)

(உ0க.) இவர்யா ரென்குவை யாயி னிவரே
ஊருட னிரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்வா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமா
னெடுமாப் பாரி மகளிர் யானே
தந்தை தோழ னிவரென் மகளி
ரந்தணன் புலவன் கொண்டுவந் தனனே
நீயே, வடபான் முனிவன் றடவினுட் டோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
யுவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறற்போ ரண்ண
லுரணி யானைச் சேட்டிருங் கோவே
யாண்கட னுடைமையிற் பாண்கட னாற்றிய
வொலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
யான்றர விவரைக் கொண்மதி வான்கவித்
திருங்கட லுடுத்தவிவ் வையகத் தருந்திறற்
பொன்படு மால்வரைக் கிழவ வென்வே
லுடலுந ருட்குந் தானைக்
கெடலருங் குரைய நாடுகிழ வோயே.

திணையும் துறையும் அவை.

பாரிமகளிரை இருங்கோவேளுழைக்கொண்டுசென்ற கபிலர் பாடியது.

இ - ள்.—இவர் யாரென்றுவினவுவாயாயின், இவர்தாம், ஊரெல்லாவற்றையும் இரப்போர்க்குவழங்கித் தேரை ஏறுதற்கேற்பச்சமைத்த அணியோடும் புரவியோடுங்கூட முல்லைக்குவழங்கிய தொலையாத நல்லபுகழையும் ஒலிக்கும் மணியையுடைய யானையையுமுடைய பறம்பிற்குத்தலைவனாகிய மிக்க பெரிய பாரியுடைய மகளிர்; யான், இவர்பிதாவின்தோழனாதலான் இவர் என்னுடையமகளிர்; அந்தணனாகிய புலவன்யான் கொண்டுவந்தேன்; நீதான் வடபக்கத்து முனிவனுடைய ஓமகுண்டத்தின்கட்டோன்றிச் செம்பாற்புனைந்துசெய்தாலொத்த சேய்மையையுடைத்தாகிய நெடியமதிலையுடைய துவராபதியென்னும் படைவீட்டையாண்டு வெறுப்பில்லாத கொடையினையுடையாராய நாற்பத்தொன்பதுதலைமுறை தொன்றுபட்டுவந்த வேள்களுள்வைத்து வேளாயுள்ளாய், வென்றிப்போரையுடைய தலைவா, தாரணிந்தயானையினையுடைய பெரிய இருங்கோவே, நீதான், ஆண்டன்மையைக் கடப்பாடாக உடைமையாற் பாணர்க்குச் செய்யக்கடவமுறைமையையுதவிய தழைத்தகண்ணியையுடைய புலிகடிமாலே, யான் நினக்குத்தர இவரைக் கொள்வாயாக; வானுற்கவிக்கப்பட்டுப் பெருங்கடல்சூழ்தரப்பட்ட இவ்வுலகத்தின்கண் அணுகுதற்கரிய வலியையுடைய பொன்னுண்டாகும் பெரியமலைக்குத்தலைவ, வென்றிவேலையுடைத்தாகிய பகைவரஞ்சும் படையையுடைய கேடில்லாதநாட்டுக்குரியவனே.—எ - று.

உவராவீகை வேளிரெனக்கூட்டுக. 'வடபான் முனிவன் றடவினுட் டோன்றி' என்பதற்குக் கதையுரைப்பிற்பெருகும்; அது கேட்டுணர்க. புலிகடிமாலென்பது, இவனுக்கு ஓர் பெயர்.

வேளே, அண்ணல், இருங்கோவே, புலிகடிமாஅல், கிழவ, நாடுகிழவோய், நீ இப்படிப்பட்ட உயர்ந்தகுடியிற்பிறந்தவனாதலால், யான்தர இவரைக்கொண்மதியெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

யான் இவருடையதந்தைதோழனாதலானும் அந்தணனாதலானும் யான்றர நீ இவரைக் கோடற்குக் குறையில்லையென்பது கருத்து. (உ0க)

(உ0உ.) வெட்சிக் கானத்து வேட்டுவ ராட்டக்
கட்சி காணாக் கடமா நல்லேறு
கடறுமணி கிளரச் சிதறுபொன் மிளிரக்
கடிய கதழு நெடுவரைப் படப்பை
வென்றி நிலைஇய விழுப்புக ழொன்றி
யிருபாற் பெயரிய வுருகெழு மூதூர்க்
கோடிபல வடுக்கிய பொருணுமக் குதவிய
நீடுநிலை யரையத்துக் கேடுங் கேளினி
நுந்தை தாய நிறைவுற வெய்திய
வொலியற் கண்ணிப் புலிகடி மாஅ
னும்போ லறிவி னுமரு ளொருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
யிகழ்ந்ததன் பயனே யியறே ரண்ண

லெவ்வி தொல்குடிப் படீஇயர் மற்றிவர்
கைவண் பாரி மகளி ரென்றவென்
றேற்றாப் புன்சொ னோற்றிசிற் பெரும
விடுத்தனென் வெலீஇயர்நின் வேலே யடுக்கத்
தரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ தாய துறுக
லிரும்புலி வரிப்புறங் கடுக்கும்
பெருங்கல் வைப்பி னாடுகிழ வோயே.

திணையும் துறையும் அவை.

இருங்கோவேள் பாரிமகளிரைக்கோள்ளானாகக் கபிலர் பாடியது.

இ - ள்.—வெட்சியையுடையகாட்டின்நடுவண் வேட்டுவரலைப்பத் தனக்குப் புகலிடங்காணாத கடமாவினது நல்ல ஏறு வரைச்சாரன்மணி மேலேகிளம்பவும் சிதறியபொன் விளங்கவும் விரையவோடும் நெடியமலைப்பக்கத்து வெற்றிநிலை பெற்ற சிறந்த புகழ்பொருந்திச் சிற்றரையம் பேரரையமென இருகூற்றுற்பெயர் பெற்ற உட்குப்பொருந்திய பழைய ஊரின்கட் பலகோடியாக அடுக்கப்பட்ட பொன்னை நுங்களுக்கு உதவிய நீடியநிலையையுடைய அரையத்தினது கேட்டையும் இனிக் கேட்பாயாக; அதுகெடுதற்குக்காரணம்: நினதுதாளால்தரப்பட்ட பொருளையன்றி நுந்தையுடைய உரிமையை நிறையப்பெற்ற தழைத்தகண்ணியை யுடைய புலிகடிமாலே, நும்மையொக்கும் அறிவினையுடைய நுங்குடியுளொருவன், புகழ்ந்தசெய்யுளையுடையகழாஅத்தலையாரென்னும் புலவரை அவமதித்ததனாலுண்டான பயன்; இயற்றப்பட்டதேரையுடையதலைவ, இவர் எவ்வியுடைய பழைய குடியிலேபடுவோர்களாக; பின்னை இவர் கைவண்மையையுடைய பாரிமகளிரென்று சொல்லிய எனது தெளியாதபுன்சொல்லைப் பொறுப்பாயாக; பெருமானே, யான் நின்னை விடைகொண்டேன்; நின்வேல் வெல்வதாக; அரைமலையில் முகையற மலர்ந்த கரியகாலையுடைய வேங்கையினது கரிய புறவிதழையுடைய ஒள்ளியபூப் பரந்த பொற்றைக்கல் பெரும்புலியினது வரியையுடையபுறத்தையொக்கும் பெரிய மலையிடத்தூர்களையுடைய நாட்டையுடையோய்.—எ - று.

புலிகடிமால், அண்ணல், நாடுகிழவோய், அரையத்துக்கேடும் கேள், இனி; அது கழாத்தலையையிகழ்ந்ததன்பயன். இப்பொழுது எவ்விதொல்குடிப்படீஇயர், இவர் பாரிமகளிரென்ற புன்சொல்லைப்பொறுப்பாயாக; பெருமானே, நின்னை விடுத்தேன்; நின்வேல் வெல்வதாகவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

ஒலியற்கண்ணி - தனிமாலையெனினுமமையும். நீடுநிலையரையத்துக்கேடும் கழாத்தலையையிகழ்ந்ததன்பயனென்ற உம்மையான், இவ்விகழ்ச்சியும் உனக்குக் கேடுதருமென்பதாயிற்று. அது கெடுதற்குக்காரணம், கழாத்தலையை நுமருள் ஒருவன் இகழ்ந்ததனால், அவன்வாக்குத்தப்பாதாகலின், அவன்வசையாகப்பாடினனென்றுசொல்லுவர்; அதுவேயென்பதாம். 'வெலீஇயர்நின்வேல்' என்றது, குறிப்புமொழி. 'நுந்தைதாயம்நிறைவுறவெய்திய' என்பதூஉம், 'நும்போலறிவின்' என்பதூஉம் - இகழ்ச்சிதோன்றநின்றன. வேங்கைவீதாயதுறுகல் இரும்புலிவரிப்புறங்கடுக்குமென்றகருத்து: ஏதம்செய்யாததூஉம் ஏதம்செய்வதுபோலத்

கண்டார்க்கு அச்சம்வரத்தோன்றுமென்றமையான், இதுவும் இகழ்ச்சிதோன்ற நின்றது. (உ0உ)

(உ0௩.) கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினுந்
தொல்லது விளைந்தென நிலம்வளங் கரப்பினு
மெல்லா வுயிர்க்கு மில்லால் வாழ்க்கை
யின்னுந் தம்மென வெம்மனோ ரிரப்பின்
முன்னுங் கொண்டிரென நும்மனோர் மறுத்த
லின்னா தம்ம வியறே ரண்ண
லில்லது நிரப்ப லாற்றா தோரினு
முள்ளி வருநர் நசையிழப் போரே
யனையையு மல்லை நீயே *யொன்னா
ராரெயி லவர்கட் டாகவு நுமதெனப்
பாண்கட னிறுக்கும் வள்ளியோய்
பூண்கட னெந்தைநீ யிரவலர் புரவே.

திணையும் துறையும் அவை.

சேரமான் பாமுளூரெறிந்த நெய்தலங்கானலிளஞ்சேட்சென்னியை ஊன்பொதிபசுங்குடையார் பாடியது.

இ - ள்.—கழிந்தகாலம் பெய்தேனெனக்கருதி மழை பெய்யாதுமாறினும் முற்காலத்துவிளைந்தேனெனக்கருதி நிலம் விளைவை ஒழியினும் எல்லாவுயிர்கட்கும் உயிர்வாழ்க்கையில்லை; அதுபோல இன்னமும் எனக்குப்பரிசில்தாருமென்றுசொல்லி எம்போல்வாரிரப்பின் அவர்க்கு முன்னும்பரிசில்கொண்டீரென்று நும்போல்வார்மறுத்தல் இன்னாது; கேளாய். இயற்றப்பட்ட தேரையுடைய அண்ணலே, இல்லாதபொருளைத் தேடிநிரப்பமாட்டாத வறுவியோரினும், அவராற்பரிசில்நினைந்துவரப்படுவோர்கொடாராயின் அவ்விரப்போரால் நச்சப்படும் இன்பத்தையிழப்பர்; தம்வறுமையாற்கொடுக்கமுடியாமையின் நாணி அவரெதிர்முகநோக்கமாட்டாது இன்பமிழக்குமாந்தர்தன்மையையுமல்லை நீ, இறந்துபடுவை; நீ, பகைவரது அரிய அரண் அவரிடத்ததாகவும் அதனை அழித்துக்கொள்ளுவதன்முன்னே நும்முடையதெனப் பாணர்க்குக் கடனாகக்கொடுக்கும்வென்றியோடுகூடிய வண்மையையுடையோயாதலான் எம் இறைவர், நீ இரப்போரைப்பாதுகாத்தலை முறைமையாகப் பரிகரிப்பாயாக.—எ - று.

அனையையுமல்லையென்பதற்கு இரவலர்வேண்டுமளவும் பாணியாது முன்னே அளித்தலின், நசையிழப்போர்தன்மையையுடையாயல்லையென்றுமாம். எம்மனோரென்றது, பிறரைநோக்கியன்றெனவுணர்க. 'பொழிந்தென' 'விளைந்தென' என்

* "ஒன்னா, ராரெயி லவர்கட் டாகவு நுமதெனப், பாண்கட னிறுக்கும் வள்ளி யோய்" என்பது, உழிஞைத்திணைக்குரியதுறைகளுள், 'கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம்' என்னுந்துறைக்கு உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், கஉ - ம் சூத்திரவுரை].

பனவற்றை வினையெச்சமாக்கி, மாறினும் கரப்பினுமென்னும் வினையோடுமுடிப்பினுமமையும். (உ0௩)

(உ0௪.) ஈயென விரத்த லிழிந்தன் றதனெதிர்
ஈயே னென்ற லதனினு மிழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்த லுயர்ந்தன் றதனெதிர்
கொள்ளே னென்ற லதனினு முயர்ந்தன்று
தெண்ணீர்ப் பரப்பி னிமிழ்திரைப் பெருங்கட
லுண்ணா ராகுப நீர்வேட் டோரே
யாவு மாவுஞ் சென்றுணக் கலங்கிச்
சேற்றொடு பட்ட சிறுமைத் தாயினு
முண்ணீர் மருங்கி னதர்பல வாகும்
புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை
யுள்ளிச் சென்றோர்ப் பழியல ரதனாற்
புலவேன் வாழிய ரோரி விசும்பிற்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே.

திணையும் துறையும் அவை.
வல்விலோரியைக் கழைதின்யானையார் பாடியது.

இ - ள்.—இழிந்தோன்கூற்றால் ஈயெனச்சொல்லியிரத்தல் இழிந்தது; அவ்வீயென்றதனெதிர் ஈயேனென்றுசொல்லிமறுத்தல் அவ்விரத்தலினுமிழிந்தது; ஒருவன் இரப்பதன்முன்னே அவன்குறிப்பைமுகத்தானுணர்ந்து இதனைக்கொள்வாயாகவென்றுசொல்லித் தானிரந்துகொடுத்தல் ஒருவற்கு உயர்ந்தது; அதனை அவன் அவ்வாறுகொடுப்ப அதனெதிர் கொள்ளேனென்றுசொல்லிமறுத்தல் அக்கொடையினுமுயர்ந்தது; தெளிந்தநீர்ப்பரப்பின் ஒலிக்குந்திரையையுடைய பெரியகடல் நீரையுண்ணாராவர், தண்ணீரைவிரும்பினோர்; ஆவும் மாவுஞ்சென்று நீரை உண்ணக் கலங்கிச் சேற்றோடேகூடிய சிறுமையையுடைத்தேயாயினும் உண்ணுநீரையுடைய தாழ்ந்தவிடத்துச் செல்லும்வழி பலவாகும்; தாம்புறப்பட்டுச்செல்லப்பட்டவழியிடத்து அப்பொழுதுசெய்யும் புள்நிமித்தத்தையும் புறப்பட்டமுகுத்தத்தையும் பழித்தலல்லது தாம்பரிசில்பெறக்கருதிச்செல்லப்பட்டோரை அவரீத்திலராயினும் பரிசிலர்பழியார்; அதனால் நீ எனக்கு இன்னையாயினும் வெறேன், வாழ்வாயாக, ஓரி, ஆகாயத்தின்கண் மின்முதலியதொகுதியையுடையமழைபோல் யாவர்க்கும் எப்பொருளையும் வரையாதுவழங்கும் வண்மையையுடையோய், நின்னை.—எ - று.

ஓரி, வள்ளியோய், பரிசிலர் புள்ளும்பொழுதும்பழித்தலல்லது உள்ளிச்சென்றோர்ப்பழியலர்; அதனால், யானும் நின்னைப்புலவேன்; வாழியரெனக்கூட்டுக.

மேற்கூறிய இரத்தல்முதல் நான்கிற்கும், ஈயெனவிரத்தலால் இழிபுபெற்றுக் கொள்ளேனென்னுமுயர்பு யான்பெற்றிலேனென்பதூஉம், அவ்வாறிரப்பவும் ஈயேனென்றாற்போலப் பரிசினீட்டித்தலால் உள்ள இழிபுபெற்றுக் கொள்ளெனக்

கொடுக்குமுயற்சி நீ பெற்றிலையென்பதூஉம் கருத்தாகக்கொள்க. இதனால், ஈயேனென்னுமிழிபினும் கொள்ளெனக்கொடுக்குமுயர்பினும் நினக்குத் தக்கதறிந்து செய்யென்பதுகூறினாராம். 'பெருங்கட லுண்ணு ராகுப நீர்வேட்டோர்' என்பதனாற் செல்வரேயாயினும் வள்ளியோரல்லார்பாற்செல்லேனென்பதும், 'உண்ணீர் மருங்கி னதர்பல வாகும்' என்பதனால் நீ வள்ளியையாகலின் நின்பால்வந்தேனென்பதும் கொள்ளப்படும். (உ௦௪)

(உ௦௫.) முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே
விறற்சினந் தணிந்த விரைபரிப் புரவி
யுறுவர் செல்சார் வாகிச் செறுவர்
தாளுளந் தபுத்த வாண்மிகு தானை
வெள்வீ வேலிக் கோடைப் பொருந
சிறியவும் பெரியவும் புழைகெட விலங்கிய
மான்கணந் தொலைச்சிய கடுவிசைக் கதநாய்
நோன்சிலை வேட்டுவ நோயிலை யாகுக
வார்கலி யாணர்த் தரீஇயகால் வீழ்த்துக்
கடல்வயிற் குழீஇய வண்ணலங் கொண்மூ
நீரின்று பெயரா வாங்குத் தேரோ
டொளிறுமருப் பேந்திய செம்மற்
களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே.

திணையும் துறையும் அவை.

கடியநெடுவேட்டுவன் பரிசினீட்டித்தானைப் பெருந்தலைச்சாத்தனார்பாடியது.

இ - ள்.—நிறைந்தசெல்வத்தையுடைய மூவேந்தராயினும் எம்மைப்பேணுதலின்றி ஈதலை யாங்கள் விரும்பேம்; வென்றியானுளதாகிய சினந்தீர்ந்த விரைந்த செலவையுடைத்தாகிய குதிரையையுடைய அஞ்சிவந்தடைந்தபகைவர்க்குச்செல்லும் புகலிடமாய் அவ்வாறன்றிப் போர்செய்யும்பகைவர் முயற்சியையுடைய கிளர்ந்த உள்ளத்தைக்கெடுத்த வாட்போரின்மிக்க படையினையுடைய வெள்ளியபூவையுடைத்தாகிய முல்லைவேலியையுடைய கோடையென்னுமலைக்குத்தலைவ, சிறியனவும் பெரியனவுமாகிய புழைகளைப் போக்கறவிலக்கிய மானினதுதிரட்சியைத் தொலைத்த கடியசெலவையுடைய சினமிக்கநாயையும் வலியவில்லையுமுடைய வேட்டுவ, நீ நோயின்றியிருப்பாயாக; இடியினது மிக்க ஓசையையுடைய புதுப்பெயலைத்தரவேண்டிக் கால்வீழ்த்துக் கடலிடத்தேதிரண்ட தலைமையையுடைய முகில் நீரின்றி மீளாவாறுபோலத் தேருடன் விளங்கிய கோடுயர்ந்ததலைமையையுடைய களிற்றையின்றி மீளா, பரிசிலரதுசுற்றம்.—எ - று.

புரவியையுடைய விறற்சினந்தணிந்த உறுவரெனவியையும். செல்சார்வாகித் தாளுளந்தபுத்த பொருநவெனவியையும். வெள்வீயென்றது, அதனையுடையமுல்லையை. புழைகெடவிலங்கிய நாயெனவியையும். மூவராயினுமென்ற உம்மை - சிறப்பும்மை. புழைகெடவிலங்கியென்பதூஉம் பாடம்.

கோடைப்பொருந, வேட்டுவ, பெட்பின்றீதல் யாம்வேண்டலம் ; பரிசிலர்கம்பு களிறின்றுபெயரல ; நீ நோயிலையாகுகவெனக்கூட்டுக.

யான்களிறின்றிப்பெயராகின்றேனென்பதுகருத்தாகலின், நோயிலையாகவென்பது இகழ்ச்சிக்குறிப்பு. (உ0ரு)

(உ0சு.) *வாயி லோயே வாயி லோயே
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்
தாம், முன்னியது முடிக்கு முரணுடை யுள்ளத்து
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க் கடையா வாயி லோயே
கடுமான் றோன்ற னெடுமா னஞ்சி
தன்னறி யலன்கொ லென்னறி யலன்கொ
லறிவும் புகழு முடையோர் மாய்ந்தென
வறுந்தலை யுலகமு மன்றே யதனாற்
காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை
மரங்கொ றச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
யெத்திசைச் செலினு மத்திசைச் சோறே.

திணையும் துறையும் அவை.

அதியமான்நெடுமானஞ்சிபரிசினீட்டித்தானை ஔவையார் பாடியது.

இ - ள்.—வாயில்காப்போய், வாயில்காப்போய், வண்மையுடையோரது செவியிடத்தே விளங்கியசொற்களைவிதைத்துத் தாம்நினைந்தபரிசிலை விளைக்கும் வலியையுடைத்தாகிய நெஞ்சினையுடைய, மேம்பாட்டிற்குவருந்தும் இப்பரிசிலான்வாழும் இல்வாழ்க்கையையுடைய பரிசிலர்க்கு அடையாத வாயில்காப்போய், விரைந்த குதிரையையுடைய குரிசிலாகிய நெடுமானஞ்சி தான் தன்தரமறியான்கொல்லோ? அதுகிடக்க, என்தரமறியான்கொல்லோ? அறிவும்புகழுமுடையோர் இறந்தாராக வறிய இடத்தையுடைய உலகமுமன்றே ; ஆகலாற் காவினேம், கலங்களை ; கட்டினேம், †முட்டுக்களை ; மரத்தைத்துணிக்குந்தச்சன் பயந்த மழுவையுடைய கைத்தொழில்வல்ல மகார் காட்டிடத்துச்சென்றால் அக்காட்டகம் பயன்படுமாறு அவர்க்கு எத்தன்மைத்து ? எமக்கும் யாதொருதிசைக்கட்போகினும் அத்திசைக்கட் சோறு அத்தன்மைத்து.—எ - று.

கலப்பை - யாழுமாம். உள்ளத்தையுடைய பரிசிலரெனினுமமையும். மழுவென்றது, வாய்ச்சியை ; தறிகையுமாம். காட்டகமென்றாரேனும் கருதியது அதன்கண் மரமாகக்கொள்க. பரிசிலர்க்குச் சிறாரும், கல்விக்கு மழுவும், செல்லுந்திசைக்குக் காடும், சோற்றிற்குக் காட்டுள்மரமும் உவமையாகக்கொள்க. (உ0சு)

* இப்பாட்டு, பரிசில்கடாநிலை அன்றென்பர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், ரு௫ - ம் சூத்திரவுரை].

† இங்கே கலத்தையிட்டுவைக்கும்பையையென்றும் பிரதிபேதமுண்டு.

(உ0எ.) எழுவினி நெஞ்சஞ் செல்கம் யாரோ
பருகு வன்ன வேட்கை யில்வழி
யருகிற் கண்டு மறியார் போல
வகனகு வாரா முகனழி பரிசி
ற்ருளி லாளர் வேளா ரல்லர்
வருகென வேண்டும் வரிசை யோர்க்கே
பெரிதே யுலகம் பேணுநர் பலரே
மீளி முன்பி ணாளி போல
வுள்ள முள்ளவிந் தடங்காது வெள்ளென
நோவா தோன்வயிற் றிரங்கி
வாயா வன்கனிக் குலம்வரு வோரே.

திணையும் துறையும் அவை.

வெளிமான்துஞ்சியபின் அவன்தம்பி இளவெளிமானைப்பரிசில்கொடுவென அவன்சிறிதுகொடுப்பக் கொள்ளாது பெருஞ்சித்திரனூர் பாடியது.

இ - ள்.—எழுந்திருப்பாயாக, இனி எம்முடையநெஞ்சமே, யாம்போவேமாக; யார்தாம், கண்ணாற்பருகுவதுபோலும் விருப்பமில்லாதவிடத்துத் தம்மருகே கண்டுவைத்தும் கண்டறியாதார்போல உள்ளமகிழ்வாராத தம்முகமாறித்தரப்பட்ட பரிசிலைப் பிறிதோரிடத்துச்செல்லமுயலும் முயற்சியில்லாதோர் விரும்பாரல்லர்; இங்ஙனம்வருவீராகவென்று எதிர்கோடல்வேண்டும் தரமுடையோர்க்குப் பெரிது, உலகம்; விரும்புவோரும் பலர்; ஆதலால், மறம்பொருந்திய வலியையுடைய யாளியையொப்ப, உள்ளம் மேற்கோளின்றித் தணியாது, கண்டோர்யாவர்க்கும்தெரிய நம்மைக்கண்டிரங்காதவனிடத்தேநின்றுதிரங்கி உள்ளுறக்கனியாத வலியபழத்தின்பொருட்டுச் சுழல்வோர்.—எ - று.

வன்கனியென்றது, நெஞ்சுநெகிழ்ந்துகொடாதபரிசிலை. உலமரலும் - அலமரல்போல்வதோருரிச்சொல்.

வாயாவன்கனிக்கு உலம்வருவோர்யாரோ? நெஞ்சமே, உள்ளம் உள்ளவிந் தடங்காது யாளிபோல இனி எழுவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

வரிசையோர்க்கு யாளிபோல உள்ளம் உள்ளவிந்தடங்காதென மாற்றாக்கி உரைப்பாருமுளர்.

(உ0எ)

(உ0அ.) குன்று மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற வென்னயந் தருளி யீதுகொண்
டீங்கனஞ் செல்க தானென வென்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணா தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்

இனையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே.

திணையும் துறையும் அவை.

அதியமான்நெடுமானஞ்சியுழைச்சென்ற பெருஞ்சித்திரனாரைக்காணாது இது கொண்டுசெல்கென்று அவன்பரிசில்கொடுப்பக் கொள்ளாது அவர் சொல்லியது.

இ - ள்.—குன்றுகளும் மலைகளும் பல பின்கழியவந்தேன் யான் பரிசில்கொண்டேனாய்ப் போதற்கெனச்சொல்லிநின்றவென்னை அன்புற்றருளி இப்பொருளைக்கொண்டு இவ்வாறுபோக தானெனச்சொல்ல என்னை எப்பரிசறிந்தான், பகைவரால் தடுத்தற்கரியவேந்தன்; என்னையழைத்துக்காணாதே தந்த இப்பொருட்கு யான் ஓர் ஊதியமேகருதும் பரிசிலனல்லேன்; விரும்பித் தினைத்துணையளவாயினும் நன்று, அந்தப்பரிசிலரது கல்விமுதலாகிய பொருந்திய எல்லையையறிந்து கொடுத்துவிடின்.—எ - று.

ஈங்கனஞ்செல்கவென்றது, காணாதே அவன்சொல்லிவிட்டவார்த்தையை.

அவர்துணையளவறிந்து பேணி நல்கினர்விடின், இனையளவாயினுமினிதெனக் கூட்டி வினைமுடிவுசெய்க.

யான்தரங்கெடப் பொருள்கொடுபோமவனல்லேன்; அவனாயின் இதுவும் கொடுபோவன்; நீ எனக்குத் தரமறிந்து தரவேண்டுமென்பதாம். 'அவர்துணையளவு' எனத் தம்மை உலகின்மேலிட்டுக்கூறினார். (உ0அ)

(உ0கூ.) பொய்கை நாரை போரிற் சேக்கு
நெய்தலங் கழனி நெல்லரி தொழுவர்
கூம்புவிடு மென்பிணி யவிழ்ந்த வாம்ப
லகலடை யரியன் மாந்தித் தெண்கடற்
படுதிரை யின்சீர்ப் பாணி தூங்கு
மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந
பல்கனி நசைஇ யல்குவிசும் புகந்து
பெருமலை விடரகஞ் சிலம்ப முன்னிப்
பழனுடைப் பெருமரந் தீர்ந்தெனக் கையற்றுப்
பெறாது பெயரும் புள்ளினம் போலநின்
னசைதர வந்துநின் னிசைநுவல் பரிசிலென்
வறுவியேன் பெயர்கோ வாண்மேம் படுந
வீயா யாயினு மிரங்குவே னல்லே
னோயிலை யாகுமதி பெரும நம்முட்
குறுநணி காண்குவ தாக நாளு
நறும்ப லொலிவருங் கதுப்பிற் றேமொழித்
தெரியிழை மகளிர் பாணி பார்க்கும்
பெருவரை யன்ன மார்பிற்
செருவெஞ் சேஎய்நின் மகிழிருக் கையே.

திணை - அது ; துறை - பரிசில்கடாநிலை.

மூவன்பரிசில்நீட்டித்தானைப் பெருந்தலைச்சாத்தனார் பாடியது.

இ - ள்.—பொய்கைக்கண்மேய்ந்தநாரை போரின்கண்ணேயுறங்கும் நெய்தலையுடையஅழகியவயற்கண் நெல்லையறுக்குமுழவர் முகையவிழ்கின்ற மெல்லிய இதழ்கள் நெகிழ்ந்த ஆம்பலினது அகன்ற இலையதனாலே மதுவையுண்டு தெளிந்த கடலினது ஒலிக்குந்திரையின் இனியசீராகியதாளத்தேயாடும் மென்புலத்தார்களையுடைய நல்லநாட்டுக்கு வேந்தே, பலபழத்தையுநச்சித் தாம்வாழ்தற்கிடமாகிய ஆகாயத்தின்கண்ணே உயரப்பறந்து பெரியமலையின்மூழை எதிரொலிமுழங்கச் சென்று அவ்விடத்துப் பழமுடைய பெரியமரம் பழுத்துமாறிற்றாகவருந்திப் பழம்பெறாதேமீளும் புள்ளினத்தையொப்ப நினது நச்சப்படுந்தன்மைகொடுவரவந்து நின்புகழைக்கூறும் பரிசிலேன்யான் வறியேனாய் மீளக்கடவேனோ? வாட்போரின்கண்மேம்படுவோய், நீ ஒன்றை ஈத்திலையாயினும் யான் அதற்கு வருந்துவேனல்லேன் ; அதுநிற்க, நோயின்றியிருப்பாயாக ; பெருமா, நம்மிடத்துளதாகிய அணிய அணுமையைக் காண்பதாக, நாடொறும் நறிய பலவாகிய தழைத்தமயிரையும் தேன்போலுஞ்சொல்லையும் ஆராய்ந்த ஆபரணத்தினையுமுடையமகளிர் ஒருவரினொருவர் புணர்தற்குக்காலம்பார்க்கும் பெரியமலைபோலுமார்பினையுடைய போரைவிரும்பும் சேயையொப்பாய், நினதுமகிழ்ச்சியையுடைய நாளோலக்கம்.—எ - று.

பாணிபார்க்கும் மார்பு - பாணிபார்த்தற்கு ஏதுவாகிய மார்பு. நம்முட் குறுநணிகாண்குவதாகவென்றது, நீ என்மாட்டுச்செய்த அன்பின்மையை அவ்விருக்கையன்றிப் பிறரறியாதொழிவாராகவென்னும் நினைவிற்று.

பொருந, வாண்மேம்படுந, சேஎய், நின் இசைநுவல்பரிசிலேன் வறுவியேன்பெயர்கோ நீ ஈயாயாயினும் இரங்குவேனல்லேன் ; பெரும, நோயிலையாகுமதி ; நம்முட் குறுநணியை நின்னிருக்கைகாண்குவதாக ; பிறர்காணாதொழிகவெனக் கூட்டுக.

நோயிலையாகென்பது, நீசெய்ததீங்கால் நோயுறுவை, அஃதுறாதொழிகவென்பதாம். இனி, நின்மகிழிருக்கைக்கண் நம்முள் மிக அணித்தாகக்காணுங்காட்சி உளதாகவென்றுமாம். இதனாற் காட்சியுண்டாகாதென்பது குறிப்பு. இனி, 'குறுநணிகாண்குவதாக' என்பதற்கு நம்மிடத்து மிகவும் மனத்தாற்காணுங்காட்சி உளதாகவென்பதுகூடாது, நீசெய்தகொடுமையானென்றுரைப்பினுமமையும். ()

(உ௧0.) மன்பதை காக்குநின் புரைமை நோக்கா
தன்புகண் மாறிய வறனில் காட்சியொடு
நும்ம னோருமற் றினைய ராயி
னெம்ம னோரிவட் பிறவலர் மாதோ
செயிர்தீர் கொள்கை யெம்வெங் காதலி
யுயிர்சிறி துடையா ளாயி னெம்வயி
னுள்ளா திருத்தலோ வரிதே யதனா
லறனில் கூற்றந் திறனின்று துணியப்
பிறனா யினன்கொ லிறீஇயரென் னுயிரென

நவல்வுறு சிறுமையள் பலபுலந் துறையு
மிடுக்கண் மனையோ ளிரிய விந்நிலை
விடுத்தேன் வாழியர் குரிசி லுதுக்கா
ணவல நெஞ்சமொடு செல்வனிற் கறுத்தோ
ரருங்கடி முனையரண் போலப்
பெருங்கை யற்றவென் புலம்புமுந் துறுத்தே.

திணையும் துறையும் அவை.

சேரமான்குடக்கோச்சேரலிரும்பொறை பரிசினீட்டித்தானைப் பெருங்குன்றூர் கிழார் பாடியது.

இ - ள்.—உயிர்ப்பன்மையைக்காக்கும் நினது உயர்ச்சியைப்பாராது காதல் கண்மாறிய அறமில்லாதபார்வையுடனேகூடி நும்போல்வார்யாவரும் இதற்கொத்த அறிவையுடையராய் அருள்மாறுவாராயின் எம்போல்வார் இவ்வுலகத்துப் பிறவாதொழியக்கடவர்; குற்றந்தீர்ந்தகற்பினையுடையளாய் எம்மைவிரும்பியகாதலி இறந்துபடாது உயிர்வாழ்வுடையாளாகக்கூடின் எம்மிடத்து நினையாதிருத்தல் அரிது; அதனால், அறனில்லாதகூற்றம் திறப்பாடின்றி உயிர்கொளத்துணிய இறந்துபட்டான்கொல்லோ? என்னுயிர் கெடுவதாகவென்று சொல்லுதலுற்றநோயையுடையாளாய்ப் பலபடவெறுத்துறையும் மனைவியது துன்பந்தீர்க்கவேண்டி இப்பொழுதே விடைகொண்டேன்; வாழ்வாயாக; இறைவ, இதனைப்பாராய்; இன்னாமையையுடையநெஞ்சத்துடனே போவேன், நின்னைவெகுண்டாரது அணுகுதற்கரிய காவலையுடையமுனையிடத்து அரணைப்போலப் பெரிய செயலற்ற எனது வறுமையை முன்போகவிட்டு.—எ - று.

குரிசிலே, நும்மனோரும் இனையராயின் எம்மனோர் இவட்பிறவார்; எங்காதலி உயிர் சிறிதுடையளாயின் நினையாதிருத்தலரிது; அதனால், அம்மனையோளிடுக்கண் தீர்க்கவேண்டி இப்பொழுதேவிடுத்தேன்; நிற்கறுத்தோர்முனையரண்போலக் கையற்ற என்புலம்புமுந்துறுத்துச்செல்வேன், வாழியரெனக்கூட்டி வினைமுடிவு செய்க.

‘உதுக்காண்’ என்றது, அச்செலவை. என்வறுமை என்னை விட்டுநீங்கப்போதலையொழியப் புலம்பைமுந்துறுத்துக்கொண்டு போகாநின்றேனென இரங்கிக் கூறியவதனால், ‘வாழியர்குரிசில்’ என்பது, இகழ்ச்சிக்குறிப்பாயிற்று. உயிர்வெங் காதலியென்று பாடமோதுவாருமுளர். (௨௧0)

(௨௧௧.) அஞ்சுவரு மரபின் வெஞ்சினப் புயலே
றணங்குடை யரவி னருந்தலை துமிய
நின்றுகாண் பன்ன நீண்மலை மிளிரக்
குன்றுதூ வெறியு மரவம் போல
முரசெழுந் திரங்குந் தானையொடு தலைச்சென்
றரசுபடக் கடக்கு முரைசா றோன்றனின்
னுள்ளி வந்த வோங்குநிலைப் பரிசிலென்
வள்ளியை யாதலின் வணங்குவ னிவனெனக்

கொள்ளா மாந்தர் கொடுமை கூறநின்
னுள்ளியது முடித்தோய் மன்ற முன்னாட்
கையுள் ளதுபோற் காட்டி வழிநாட்
பொய்யொடு நின்ற புறநிலை வருத்த
நாணு யாயினு நாணக் கூறியெ
னுணங்கு செந்நா வணங்க வேத்திப்
பாடப் பாடப் பாடுபுகழ் கொண்டநின்
னாடுகொள் வியன்மார்பு தொழுதனென் பழிச்சிச்
செல்வ லத்தை யானே வைகலும்
வல்சி யின்மையின் வயின்வயின் மாறி
யில்லெலி மடிந்த தொல்சுவர் வரைப்பிற்
பாஅ லின்மையிற் பல்பாடு சுவைத்து
முலைக்கோண் மறந்த புதல்வனொடு
மனைத்தொலைந் திருந்தவென் வாணுதற் படர்ந்தே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—அஞ்சத்தக்க முறைமையையுடைய வெய்யசினத்தையுடைய மழையின்கணுள்ள இடியேறு அச்சமுடைய பாம்பினது அணுகுதற்கரிய தலைதுணிய நிலவகலத்தைநின்றுபார்ப்பதுபோன்ற நீண்டமலைபிறழச் சிறுமலைதூவவெறியும் ஓசைபோல வீரமுரசு கிளர்ந்தொலிக்கும் படையுடனே மேற்சென்று வேந்தர்பட எதிர்நின்றுகொல்லும் புகழமைந்த தலைவ, நீ வள்ளியையாதலான் எமக்குத் தாழ்ந்து பரிசில் நல்குவனிவனென்று நின்னை நினைந்துவந்த உயர்ந்தநிலைமையையுடைய பரிசிலேனாகியயான் நினக்கு எம்மை எதிரேற்றுக்கொள்ளாமாந்தரது கொடுமையைச்சொல்லவும் நின்னுடையநினைவேசெய்தாய், நிச்சயமாக; முன்னைநாட் பரிசில்கையிலேபுகுந்ததுபோலக்காட்டிப் பிற்றைநாட் பொய்யைப்பெற்றுநின்ற நினதுபுறநிலைமைக்கு யான்வருந்தியவருத்தத்திற்கு நீதான்நாணுயாயினும் நீநாணச் சொல்லி எனது நுண்ணிய ஆராய்ச்சியையுடைய செவ்வியநா வருந்தப்புகழ்ந்து நாடோறும் பாடப்பாடப் பின்னரும் பாடவேண்டும்புகழையேற்றுக்கொண்ட நினது வென்றிபொருந்திய அகன்றமார்பை வணங்கிவாழ்த்திப்போவேன் யான்; நாடோறும் உணவில்லாமையான் இடந்தோறுமிடந்தோறும் மாறிமாறி அகழ்தலால் இல்லெலிமடிந்த பழையசுவராகிய எல்லையையுடைய பாலில்லாமையாற் பலபடிசுவைத்து முலையுண்டலைவெறுத்த பிள்ளையுடனே மனையின்கண்ணே வறுமையுற்றிருந்த என்னுடைய ஒளிபொருந்திய நுதலையுடையாளை நினைந்து.—எ - று.

தோன்றல், நின்னுள்ளிவந்தபரிசிலென், நான்கூற, நின்னுள்ளியதுசெய்தாயாதலான் வருத்தங்கூறி ஏத்தித் தொழுதனென்பழிச்சி வரைப்பின்மனைக்கண்ணே புதல்வனொடு தொலைந்திருந்த என்வாணுதலை நினைந்துசெல்வல் யானெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

நாணக்கூறியென்றதன்பின்னே ஏத்திப் பழிச்சிச் செல்வலென்றமையான், அவை குறிப்புமொழி. வரைப்பின்மனையென இயையும். 'வள்ளிய னாதலின்

வணங்குவ னிவனென' என்று பாடமாயின், வண்மையையுடையனாதலால் இவன் எமக்குத்தாழ்ந்து பரிசிலளிப்பனெனக்கருதியென்க. 'வள்ளியையாகலின் வணங்குவனிவனெனக் கொள்ளாமாந்தர் கொடுமைகூற' என்றதற்கு வள்ளியையாதலின் இவனைவணங்குவேனெனநினைந்துவணங்க அதுபாராது நின்பாற்பரிசில்பெறாத மாந்தர் ......... தூவவெறியுமென்பது, தூவெறியுமென வகரங்கெட முடிதல் புறநடையாற்கொள்க; தூவவெறியுமென்பதூஉம் பாடம்; விகாரமெனினுமமையும். 'புறநிலை' என்பதற்குப் புறங்கடைநின்றநிலையென்றுமாம். 'இல்லெலிமடிந்ததொல்சுவர்' என்பதற்கு இல்லெலிதான் தொழில்மடிந்த தொல்சுவரென்றுரைப்பினுமமையும். நின்னைக்கொடுமைகூறவென்றுரைப்பினுமமையும். (உகக)

(உகஉ.) நுங்கோ யாரென வினவி னெங்கோக்
களமர்க் கரித்த விளையல் வெங்கள்
யாமைப் புழுக்கிற் காமம் வீட வாரா
வாரற் கொழுஞ்சூ டங்கவு ளடாஅ
வைகுதொழின் மடியு மடியா விழவின்
யாணர் நன்னாட் டுள்ளும் பாணர்
பைதற் சுற்றத்துப் பசிப்பகை யாகிக்
கோழி யோனே கோப்பெருஞ் சோழன்
பொத்தி னண்பிற் பொத்தியொடு கெழீஇ
வாயார் பெருநகை வைகலு *நக்கே.

திணை - அது; துறை - இயன்மொழி.

கோப்பெருஞ்சோழனைப் பிசிராந்தையார் பாடியது.

இ - ள்.—உம்முடைய இறைவன் யார்தானென்று கேட்பீராயின், எம்முடைய இறைவன் களமர்க்கு அரிக்கப்பட்ட முதிர்ந்த விரும்பத்தக்கமதுவை ஆமையிறைச்சியுடனே வேட்கைதீர அக்களமர் உண்டு ஆரன்மீனாகிய கொழுவியசூட்டை அழகியகதுப்பகத்தேயடக்கி மதுவுண்டமயக்கத்தால் வைகுந்தொழிலொழியும் நீங்காத விழவினையுடைய புதுவருவாயுளதாகிய நல்லசோழநாட்டுள்ளும் பாணருடைய வருத்தமுற்றசுற்றத்தினது பசிக்குப்பகையாய் உறையூரென்னும் படைவீட்டிடத்திருந்தான், கோப்பெருஞ்சோழன்; புரையில்லாத நட்பினையுடைய பொத்தியென்னும்புலவனோடுகூடி மெய்ம்மையார்ந்த மிக்கமகிழ்ச்சியை நாடோறுமகிழ்ந்து.—எ - று.

நன்னாட்டுள்ளுமென்றவும்மை - சிறப்பும்மை. கோழி - உறையூர்.

நுங்கோயாரெனவினவின், எங்கோக் கோப்பெருஞ்சோழன், அவன் பசிப்பகையாகிப் பொத்தியொடு வைகலும் நக்குக் கோழியிடத்திருந்தானெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

ஆகிக் கெழீஇ நக்கென்னுஞ் செய்தெனெச்சங்களைக் கோழியோனென்னும் வினைக்குறிப்போடு முடிக்க. (உகஉ)

---

* முகிழ்ந்தென்றும் பாடம்.

(உகங.) மண்டம ரட்ட மதனுடை நோன்றாள்
வெண்குடை விளக்கும் விறல்கெழு வேந்தே
பொங்குநீ ருடுத்தவிம் மலர்தலை யுலகத்து
நின்றலை வந்த விருவரை நினைப்பிற்
றொன்றுறை துப்பினின் பகைஞரு மல்ல
ரமர்வெங் காட்சியொடு மாறெதிர் பெழுந்தவர்
நினையுங் காலை நீயு மற்றவர்க்
கனையை யல்லை யடுமான் றோன்றல்
பரந்துபடு நல்லிசை யெய்தி மற்றுநீ
யுயர்ந்தோ ருலக மெய்திப் பின்னு
மொழித்த தாய மவர்க்குரித் தன்றே
அதனால், அன்ன தாதலு மறிவோய் நன்று
மின்னுங் கேண்மதி யிசைவெய் யோயே
நின்ற துப்பொடு நிற்குறித் தெழுந்த
வெண்ணில் காட்சி யிளையோர் தோற்பி
னின்பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே
யமர்வெஞ் செல்வ நீயவர்க் குலையி
னிகழுந ருவப்பப் பழியெஞ் சுவையே
அதனால், ஒழிகதி லத்தைநின் மறனே வல்விரைந்
தெழுமதி வாழ்கநின் னுள்ள மழிந்தோர்க்
கேம மாகுநின் றாணிழன் மயங்காது
செய்தல் வேண்டுமா னன்றே வானோ
ரரும்பெற லுலகத் தான்றவர்
விதுப்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே.

திணை - வஞ்சி; துறை - துணைவஞ்சி.

அவன்மக்கண்மேற்சென்றானைப் புல்லாற்றூர் *எயிற்றியனார் பாடியது.

இ - ள்.—மடுத்தெழுந்த போரின்கட்கொன்ற மிகுதிபொருந்திய வலியமுயற்சியையுடைய வெண்கொற்றக்குடையான் உலகத்தைநிழற்செய்து புகழால்விளக்கும் வென்றியையுடையவேந்தே, கிளர்ந்தநீரையுடைய கடலாற்சூழப்பட்ட இப் பரந்தவிடத்தையுடைய உலகத்தின்கண் நின்னிடத்துப் போர்செய்யவந்த இருவரையுங்கருதிற் பழையதாய்த் தங்கப்பட்ட வலியையுடைய நின்பகைவேந்தராகிய சேரபாண்டியருமல்லர், போரின்கண் விரும்பியகாட்சியுடனே நின்னோடுபகையாய் வேறுபட்டெழுந்த அவ்விருவர்தாம்; நினையுங்காலத்து நீயும் அவர்க்கு அத்தன்மையையாகிய பகைவனல்லை; பகையைக்கொல்லும் யானையையுடையதலைவ, நீ பரந்துபட்ட நல்லபுகழை இவ்வுலகத்துப்பொருந்தித் தேவருலகத்தின்கட்போய்ப் பின்பு நீ ஒழித்த அரசாட்சியுரிமை அவர்க்குரித்து; ஆதலால் அப்பெற்றித்தாதலு

* எயிற்றியாரென்றும் பிரதிபேதமுண்டு.

மறிவோய், பெரிதும் இன்னமும் கேட்பாயாக ; புகழைவிரும்புவோய், நிலைபெற்ற வலியோடு நின்னைக்கருதிப் போர்செய்தற்கு எழுந்திருந்த சூழ்ச்சியில்லாத அறிவையுடையநின்புதல்வர்தோற்பின் நினதுபெரியசெல்வத்தை அவர்க்கொழியயாவர்க்குக் கொடுப்பை ; போரைவிரும்பியசெல்வ, நீ அவர்க்குத்தோற்பின் நின்னையிகழும் பகைவருவப்பப் பழியை உலகத்தேநிறுத்துவை ; ஆதலான், ஒழிவதாக, நின்னுடையமறன் ; கடிதின்விரைந்தெழுந்திருப்பாயாக ; நின்னுடைய உள்ளம் வாழ்வதாக ; அஞ்சினோர்க்கு அரணாகும் நினதடிநிழல் மயங்காமற் செய்தல்வேண்டும், நல்வினையை ; விண்ணோரது பெறுதற்கரிய உலகத்தின்கண் அமைந்தவர் விரைந்த விருப்பத்தோடு விருந்தாக ஏற்றுக்கொள்ள.—எ - று.

மற்று - அசை. தில் - விழைவின்கண்வந்தது. வானோருலகென்றது, ஒட்டன்றி ஒருபெயராய்நின்றது.

வேந்தே, நின்மறனொழிக ; ஆன்றவர் விருந்தெதிர்கொளற்கு நன்றுசெய்தல் வேண்டும் ; ஆதலால், அதற்கு விரைந்தெழுவாயாக ; நின்னுள்ளம் வாழ்வதாக வெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

செல்வமும்பழியுஞ்சினைவினைப்பாற்பட்டு முதல்வினைகொண்டன. எஞ்சுதல் - இவற்குப்பின்னும்நிற்றல். தாணிழல்மயங்காதென்பதற்கு நினக்கு ஒருதீங்கும் வாராமலென்றதாகக்கொள்க. இனி 'அதனு லன்ன தாதலு மறிவோய்' என்றதற்கு உயர்ந்தோருலகமெய்துவதுகாரணத்தால் அத்தாயம் அவர்க்கு அப்படியே யுரித்து ; அன்னதாதல் நீயறிவையெனமுற்றாகவும், அழிந்தோர்க்கு ஏமமாகுநின் றாணிழலெனமுற்றாக்கி மடங்காதுதெளிந்துநின்று நன்றுசெய்தல்வேண்டுமெனவுமுரைப்பாருமுளர். 'மாவெங்காட்சியொடு மாறெதிர்ந்தெழுந்தவர்' என்று பாடமோதுவாருமுளர். (உகரு)

(உகச.) செய்குவங் கொல்லோ நல்வினை யெனவே
ஐய மறாஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவ னானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால், உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனிற்
றொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடுந்
தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப்பி னின்மையுங் கூடு
மாறிப் பிறவா ராயினு மிமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தறவத் தலையே.

திணை - பொதுவியல் ; துறை - பொருண்மொழிக்காஞ்சி.
அவன்வடக்கிருந்தான் சொற்றது.

இ - ள்.—அறவினையைச்செய்வேமோ அல்லேமோவென்றுகருதி ஐயப்பாடு நீங்கார், அழுக்குச்செறிந்தகாட்சிநீங்காத உள்ளத்தினையுடைய தெளிவில்லாதோர் ;

யானைவேட்டைக்குப்போவோன் யானையையும் எளிதாகப்பெறுவன்; குறும்பூழ் வேட்டைக்குப்போவோன் அதுபெறாது வறியகையினனாயும் வருவன்; அதனால் உயர்ந்தவிருப்பத்தையுடைய உயர்ந்தோர்க்குத் தாஞ்செய்யப்பட்ட நல்வினைக்கூற்றிலே அதனை அனுபவித்தலுண்டாமாயின் அவர்க்கு இருவினையும் செய்யப்படாத உம்பருலகத்தின்கண் இன்பமனுபவித்தலுங்*கூடும்; அவ்வுலகத்தின்கண் நுகர்ச்சியில்லையாயின், மாறிப்பிறத்தலிலேகூடும் பிறப்பின்கண் இன்மையெய்தவுங்கூடும்; மாறிப்பிறவாரென்று சொல்லுவாருளராயின் இமயமலையின்சிகரம் ஓங்கினாற்போன்ற தமதுபுகழை நிலைபெறுத்தி வசையில்லாத உடம்பொடுகூடிநின்றிறத்தல் மிகத் தலையாயது; அதனால், எவ்வாற்றானும் நல்வினைசெய்தல் அழகிது.—எ - று.

உயர்ந்திசினோர்க்கென்னும் நான்காவதன்றியும் உயர்ந்திசினோர்செய்வினை மருங்கினெய்தலுண்டெனின், இவர்க்கு நுகர்ச்சியுங்கூடுமென்றுரைப்பினுமமையும். 'காட்சியொடுநீங்காநெஞ்சத்து' என்பதூஉம் பாடம். 'பிறவாராயினும்' என்னும் உம்மை - அசைநிலை; உம்மையின்றியோதுவாருமுளர். (உகச)

(உகரு.) கவைக்கதிர் வரகி னவைப்புறு வாக்க
லுதெரு மறுகிற் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்டயிர் கொளீஇ
யாய்மக ளட்ட வம்புளி மிதவை
ரு யவரை கொய்யுந ரார மாந்துந்
தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்
பிசிரோ னென்பவெ னுயிரோம் புநனே
செல்வக் காலை நிற்பினு
மல்லற் காலை நில்லலன் மன்னே.

திணை - பாடாண்டிணை; துறை - இயன்மொழி.

கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார்வாராரென்றசான்றோர்க்கு அவர்வருவாரென்று சொல்லியது.

இ - ள்.—கவர்த்தகதிரினையுடைய வரகினது குத்துதலுற்ற வடிக்கப்பட்ட சோற்றையும் தாதாக உதிர்ந்த எருவையுடையதெருவின்கண் போதொடுதழைத்த வேளையினது வெள்ளியபூவை வெளியதயிரின்கட்பெய்து இடைமகள் அடப்பட்ட அழகிய புளிங்கூழையும் அவரைகொய்வார் நிறையவுண்ணும் தென்றிக்கின்கட் பொதியின்மலையையுடையபாண்டியனது நல்லநாட்டினுள்ளும் சேய்த்தாகிய பிசிரென்னுமூரிடத்தானென்று சொல்லுவார், என்னுயிரைப் பாதுகாப்போனை; அவன் எமக்குச் செல்வமுடையகாலத்துநிற்பினும் யாம் இன்னாமையுறுங்காலத்து ஆண்டுநில்லான்.—எ - று.

மன் - அசைநிலை. (உகரு)

(உகசு.) கேட்டன் மாத்திரை யல்ல தியாவதுங்
†காண்ட லில்லா தியாண்டுபல கழிய

* கூட்டுமெனவும் பிரதிபேதமுண்டு.

† காண்டலீயாதென்றும் பாடம்.

வழுவின்று பழகிய கிழமைய ராயினு
மரிதே தோன்ற லதற்பட வொழுகலென்
றையங் கொள்ளன்மி னாரறி வாளீர்
ரிகழ்வில னினிய னியாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த
காதற் கிழமையு முடைய னதன்றலை
யின்னதோர் காலை நில்லல
னின்னே வருகுவ னொழிக்கவவற் கிடமே.

திணையும் துறையும் அவை.

அவன்வடக்கிருந்தான்பிசிராந்தையார்க்கு இடனொழிக்கவென்றது.

இ - ள்.—'நின்னை அவன் கேட்டிருக்குமளவல்லது, சிறிதுபொழுதுங்காண்டல்கூடாது; பல்லியாண்டுசெல்லத் தவறின்றாக மருவிப்போந்த உரிமையையுடையோராயினும் அரிதே தலைவா அவ்வழுவாதகூற்றிலேபடவொழுகுதல்' என்றுகருதி ஐயப்படாதொழிமின், நிறைந்த அறிவினையுடையீர், அவன் என்னை என்றும் இகழ்ச்சியிலனாய் இனியகுணங்களையுடையன்; பிணித்தநட்பினையுடையன்; புகழழியவரூஉம் பொய்மையைவிரும்பான்; தனதுபெயரைப் பிறர்க்குச்சொல்லும்பொழுது என்னுடையபெயர் பேதைமையையுடைய சோழனென்று எனதுபெயரைத் தனக்குப்பெயராகச்சொல்லும் மிக்க அன்புபட்ட உரிமையையுமுடையன்; அதற்குமேலே இப்படி யான்துயரமுறுங்காலத்து ஆண்டுநில்லான், இப்பொழுதே வருவன்; அவனுக்கு இடமொழிக்க.—எ - று.

'அதற்பட' என்பதற்கு அவ்விறந்துபாட்டிலேபடவென்றும், 'இகழ்விலன்' என்பதற்கு இகழப்படுவன குணமிலனென்றுமுரைப்பினுமமையும். பேதைச் சோழனென்றது, தான்றன்னை இழித்துக்கூறியது. (உகசு)

(உகஎ.) நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
யெனைப்பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணித
லதனினு மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்
தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி
யிசைமர பாக நட்புக் கந்தாக
வினையதோர் காலை யீங்கு வருதல்
வருவ னென்ற கோனது பெருமையு
மதுபழு தின்றி வந்தவ னறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே
அதனால், தன்கோ லியங்காத் தேயத் துறையுஞ்
சான்றோ னெஞ்சுறப் பெற்ற தொன்றிசை

யன்னோனை யிழந்தவிவ் வுலக
மென்னு வதுகொ லளியது தானே.

திணை - பொதுவியல்; துறை - கையறுநிலை.

அவன்வடக்கிருந்தானுழைச்சென்ற பிசிராந்தையாரைக்கண்டு பொத்தியார் பாடியது.

இ - ள்.—கருதுங்காலத்து வியக்குந்தன்மையையுடைத்து, எத்துணையும் பெரியதலைமையுடனேகூடியும் இவ்விடத்தே இவன்சிறப்புக்களைக்கைவிட்டுவரத் துணிதல்; இவன் இவ்வாறுதுணிந்த அதனினும்வியக்குந்தன்மையையுடைத்து, வேற்றுவேந்தனது நாட்டின்கண் விளக்கமமைந்த சான்றோன் பாதுகாத்துப் புகழ் மேம்பாடாக நட்பே பற்றுக்கோடாக இத்தன்மைத்தாகிய ஓர் இன்னுக்காலத்து இவ்விடத்துவருதல். இவ்வாறுவருவனென்று துணிந்துசொல்லிய வேந்தனது மிகுதியும் அவன் சொல்லியசொற் பழுதின்றாகவந்தவனது அறிவும் வியக்குந்தோறும்வியக்குந்தோறும் வியப்புக் கைமிக்கது; ஆதலால், தன்செங்கோல்செல்லாத தேயத்துறையும் அமைந்தோனதுநெஞ்சைத் தன்னிடத்தேயுரித்தாகப்பெற்ற பழைய புகழையுடைய அப்பெற்றிப்பட்ட பெரியோனையிழந்த இத்தேயம் என்ன இடும்பையுறுங்கொல்லோ! *இதுதான் இரங்கத்தக்கது.—எ - று.

இதுவென்பது, அரசனைக்கைவிட்டு இறந்துபடத்துணிதலென்றுமாம். (உ௧எ)

(உ௧அ.) பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியு
மிடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல மமைக்குங் காலை
௫ யொருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே.

திணையும் துறையும் அவை.

† பிசிராந்தையார் வடக்கிருந்தாரைக் கண்டகண்ணகனார் பாடியது.

இ - ள்.—பொன்னும் பவளமும் முத்தும் நிலைபெற்ற பெரியமலைதரப்பட்ட விரும்பத்தக்கமணியும் ஒன்றற்கொன்று இடைநிலம்படச் சேய்நிலத்தினவாயினும் கோவைபொருந்தி அரியவிலையினையுடைய நல்ல அணிகலங்களைச்செய்யுங்காலத்து ஓரிடத்துத்தோன்றினாற்போல எந்நாளும் அமைந்தோர் அமைந்தோர்பக்கத்தராவார்; அமைதியில்லார் அமைதியில்லார்பக்கத்தராவார்.—எ - று.

சான்றோர்குழுவினைப்புகழுங்கருத்தாகலின், அவர்க்கேற்ற உவமங்கூறினார். சாலாதார்க்கும் ஏற்றவுவமம் வருவித்துக்கொள்க. தொடைபுணர்ந்துதோன்றியாங்கென இயையும். (உ௧அ)

---

* 'கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்போல உணர்ச்சியொப்பின் அதுவே, உடனுயிர்நீங்கும் உரிமைத்தாயநட்பினைப்பயக்கும்' என்பது, திருக்குறள் எ௯ - ம் அதிகாரம் நட்பு, ௫ - ம் பாட்டு, பரிமேலழகருரை.

† பிசிராந்தையாரைக் கண்டநத்தத்தனார் பாடியதென்றும் பிரதிபேதமுண்டு.

(உகசு.) உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழன்
முழூஉ வள்ளுர முணக்கு மள்ள
புலவுதி மாதோ நீயே
பலரா லத்தைநின் குறியிருந் தோரே.

திணையும் துறையும் அவை.

அவன் வடக்கிருந்தானைக் கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப்பூதநாதனர் பாடியது.

இ - ள்.—யாற்றிடைக்குறையுட் புள்ளிப்பட்ட மாநிழற்கணிருந்து உடம்பாகிய முழுத்தசையைவாட்டும்வீர, நின்கருத்திற்கேற்ப நின்னோடு வடக்கிருந்தார் பலராதலான், யான் இதற்கு உதவாது பிற்படவந்ததற்கு என்னை அவரோடுசொல்லி வெறுத்தி நீ.—எ - று.

யான் பிற்படவந்ததற்கு என்னைப்புலந்து என்னோடு சொல்லாடாதிருந்தாய் நீயென்றும், இவனுடனே வடக்கிருந்தோர்களும் எதிரேற்றுக்கொள்ளாமைநோக்கி நின்குறிப்பிற்கேற்பப் புலந்தார்பலரென்றுமுரைப்பினுமமையும். 'உள்ளாற்றுக் கவலை' என்பதற்குவழிக்குள்ளாகிய நாற்றிசையுங்கூடிய இடமென்றுமாம்; கவர்த்த வழிக்குள்ளென்றுரைப்பாருமுளர். அரசுதுறந்து வடக்கிருந்து உயிர்நீத்த உள்ள மிகுதியான் மள்ளவென்றார். (உகசு)

(உஉ0.) பெருஞ்சோறு பயந்து பல்யாண்டு புரந்த
பெருங்களி றிழந்த பைதற் பாக
னதுசேர்ந் தல்கிய வழுங்க லாலை
வெளில்பா ழாகக் கண்டுகலுழ்ந் தாங்குக்
ரு கலங்கினே னல்லனோ யானே பொலந்தார்த்
தேர்வண் கிள்ளி போகிய
பேரிசை மூதூர் மன்றங் கண்டே.

திணையும் துறையும் அவை.

அவன் வடக்கிருந்தானுழைச்சென்று மீண்டுவந்து உறையூர்கண்டபொத்தியார் அழுது பாடியது.

இ - ள்.—பெரியசோற்றையுண்டாக்கிப் பலயாண்டுபோதுகாத்த பெரியகளிற்றையிழந்த வருத்தத்தினையுடையபாகன் அவ்வியானைசேர்ந்துதங்கிய இரக்கத்தையுடையகூடத்தின்கட் கம்பம்வறிதேநிற்கப் பார்த்துக் கலங்கினதன்மைபோல யான் இறந்துபடுதலின்றிக் கலங்கினேனல்லனோ, பொன்னுனியன்றமாலையையுடைய தேர்வண்மையைச்செய்யும் கிள்ளிபோகப்பட்ட பெரியபுகழினையுடைய பழைய உறையூரின்மன்றத்தைப்பார்த்து.—எ - று.

மூதூர்மன்றங்கண்டு கலங்கினேனல்லனோவெனக்கூட்டுக.

மன்றம் - ஈண்டுச் செண்டுவெளி. அழுங்கல் - முன்புள்ள ஆரவாரமுமாம். இறந்தென்றுசொல்லுதல் இன்னாமையால், போகியென்றார். (உஉ0)

(உஉக.)*பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே
யாடுநர்க் கீத்த பேரன் பினனே

* இப்பாட்டினை, காஞ்சித்திணைக்குரிய மன் அட்டாதுவந்த மன்னைக்காஞ்சிக்கு உதாரணமாகக்காட்டினர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், உச - ம் சூத்திரவுரை].

யறவோர் புகழ்ந்த வாய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண்ணண் பினனே
மகளிர் சாயன் மைந்தர்க்கு மைந்து
துகளறு கேள்வி யுயர்ந்தோர் புக்கி
லனைய னென்னு தத்தக் கோனை
நினையாக் கூற்ற மின்னுயி ருய்த்தன் று
பைத லொக்கற் றழீஇ யதனை
வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்
நனந்தலை யுலக மரந்தை தூங்கக்
கெடுவி னல்லிசை சூடி
நடுக லாயினன் புரவல னெனவே.

திணையும் துறையும் அவை.

அவன் நடுகற்கண்டு அவர் பாடியது.

இ - ள்.—பாடுநர்க்குக்கொடுத்த பலபுகழினையுமுடையன்; கூத்தர்க்குக்கொடுக்கப்பட்ட மிக்க அன்பினையுமுடையன்; அறத்திறமுடையோர்புகழப்பட்ட நீதிநூற்குத்தக ஆராய்ந்துநடத்திய செங்கோலையுடையன்; சான்றோர்புகழப்பட்ட திண்ணியநட்பினையுடையன்; மகளிரிடத்து மென்மையையுடையன்; வலியோரிடத்து மிக்கவலியுடையன்; குற்றமற்றகேள்வியையுடைய அந்தணர்க்குப் புகவிடம்; அத்தன்மையையுடையோனென்றுகருதாது அத்தகுதியையுடையோனை அவ்வாறுகருதாத கூற்றம் அவனது இனிய உயிர் கொடுபோயிற்று. அதனால், பையாப்புற்ற நம்முடையசுற்றத்தை அணைத்துக்கொண்டு அக்கூற்றத்தை வைவேமாக வாரீர், மெய்யுரையையுடையபுலவீர், நல்ல இடத்தினையுடையவுலகம் துன்பமிகக் கேடில்லாத நல்லபுகழ்ச்சிமாலையைச்சூடி நடப்பட்டகல்லாயினான் எம்மைப் பாதுகாப்போனெனச்சொல்லி.—எ - று.

ஈத்தபுகழ் - ஈதலாலுளதாகியபுகழெனவும், ஈத்தவன்பு - ஈத்தற்கு ஏதுவாகிய அன்பெனவுங்கொள்க.

வாய்மொழிப்புலவீர், அத்தக்கோனைக் கூற்றம் இன்னுயிருய்த்தது; அதனால், புரவலன் கல்லாயினானென ஒக்கல்தழீஇ அதனைவைகம் வம்மோவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

சாயல் மைந்து புக்கிலென்பன - ஆகுபெயர். புக்கில் - வினைத்தொகை. கேடென்பது, கெடுவெனக் குறைந்துநின்றது. (உஉக)

(உஉஉ.) அழலவிர் வயங்கிழைப் பொலிந்த மேனி
நிழலினும் போகாநின் வெய்யோள் பயந்த
புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாவென
வென்னிவ ணொழித்த வன்பி லாள
வெண்ணா திருக்குவை யல்லை
யென்னிடம் யாதுமற் றிசைவெய் யோயே.

திணையும் துறையும் அவை.

அவனைத் தன்மகன்பிறந்தபின் பெயர்த்துச்சென்று போத்தியார் எனக்கு இடந்தாவென்றுசொற்றது.

*இ - ள்.—தீயால்விளங்கிய ஒளியையுடைய ஆபரணத்தாற்சிறந்த வடிவினையுடையளாய் நின்நிழலினும் ஒருபொழுதுநீங்காத நீவிரும்பத்தக்கமனைவிபெறப்பட்ட புகழமைந்தபிள்ளையானவன் பிறந்தபின் வாவெனச்சொல்லி என்னை இவ்விடத்துநின்றும்போக்கிய என்னோடு உறவில்லாதவனே, நின்னோடு என்னிடை நட்பைக் கருதாதிருப்பையல்லை; புகழைவிரும்புவோய், நீ எனக்குக்குறித்தவிடம் யாது ? சொல்லுவாயாக.—எ - று.*

*மற்று - அசை. அழல்போலப் பாடஞ்செய்யுமேனியெனினுமமையும்.* ()

(உஉங.) *பலர்க்குநிழ லாகி யுலகமீக் கூறித்*
*தலைப்போ கன்மையிற் சிறுவழி மடங்கி*
*நிலைபெறு நடுக லாகியக் கண்ணு*
*மிடங்கொடுத் தளிப்ப மன்ற வுடம்போ*
*டின்னுயிர் விரும்புங் கிழமைத்*
*தொன்னட் புடையோர் தம்முழைச் செலினே.*

திணையும் துறையும் அவை.

கல்லாகியும் இடங்கொடுத்தகோப்பெருஞ்சோழனை வடக்கிருந்தபோத்தியார் பாடியது.

*இ - ள்.—பலர்க்கும் அருளுடைமையான் நிழலையொத்து உலகத்தார் மிகுத்துச்சொல்ல உலகத்தையாளுந்தன்மை முடியச்செலுத்துதற்கு மறுமையைநினைத்தலால் முடிவுபோகாமையின் வடக்கிருத்தற்குவரைந்த சிறிய இடத்தின்கணிருந்து உயிர்நீத்தலின்நிலைபெறநடப்பட்ட கல்லானவிடத்தும் இடங்கொடுத்தளிப்பர், நிச்சயமாக; உடம்போடு இனியவுயிர்விரும்புமாறுபோல விரும்புமுரிமையையுடைய பழையதாகிய நட்பையுடையோர் தம்மிடத்தேசெல்லின்.—எ - று.*

*மீக்கூறியென்பது, மீக்கூறவெனத்திரிக்கப்பட்டது; ஆணைகூறியென்றுமாம்.*

*தொன்னட்புடையோர்தம்முழைச்செலின், இடங்கொடுத்தளிப்பவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.*

*அவன் நட்பினை வியந்துகூறியது.* (உஉங)

(உஉச.) *அருப்பம் பேணா தமர்கடந் ததூஉந்*
*துணைபுண ராயமொடு தசும்புடன் றொலைச்சி*
*யிரும்பா ணொக்கற் கடும்பு புரந் ததூஉ*
*மறமறக் கண்ட நெறிமா ணவையத்து*
*முறைநற் கறியுநர் முன்னுறப் புகழ்ந்த*
*தூவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு*
*பருதி யுருவிற் பல்படைப் புரிசை*
*யெருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்*
*வேத வேள்வித் தொழின்முடித் ததூஉ*

மறிந்தோன் மன்ற வறிவுடை யாள
னிறந்தோன் றானே யளித்திவ் வுலக
மருவி மாறி யஞ்சுவரக் கழிகிப்
பெருவறங் கூர்ந்த வேனிற் காலைப்
பசித்த வாயத்துப் பயனிரை தருமார்
பூவாட் கோவலர் பூவுட னுதிரக்
கொய்துகட் டழித்த வேங்கையின்
மெல்லியன் மகளிரு மிழைகளைந் தனரே.

திணையும் துறையும் அவை.
சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கருங்குழலாதனார் பாடியது.

இ - ள்.—அரிய அரண்களைப் பாதுகாவாது போரைச்செய்தழித்ததுவும் துணையாய்க்கூடிய இனத்துடனேயுங்கூட மதக்குடங்களைச் சேரநுகர்ந்துதொலைத்துப் பெரிய பாண்சுற்றமாகியசுற்றத்தைப் பாதுகாத்ததுவும் அறத்தைத்தெளியவுணர்ந்த ஒழுக்கம் மாட்சிமைப்பட்ட அந்தணரது அவைக்களத்தின்கண் வேள்விக்குரிய முறைமையை நன்றாகவறியுஞ்சடங்குகள் அம்முறைமையை முன்னின்றுகாட்டப் பலராலும்புகழப்பட்ட தூய இயல்பையுடைத்தாகிய கற்பொழுக்கமாகிய கொள்கையையுடைய குற்றந்தீர்ந்த குலமகளிரோடு வட்டமாகியவடிவினையுடைத்தாகிய பலபடையாகச்செய்யப்பட்ட மதிலாற்சூழப்பட்ட வேள்விச்சாலையுட் பருந்துவிழுங்குவதாகச்செய்யப்பட்டவிடத்து நாட்டிய யூபமாகிய நெடிய கம்பத்து வேதத்தாற்சொல்லப்பட்ட வேள்வியினைச்செய்துமுடித்ததுவுமாகிய இவற்றானுயபயனையறிந்தநிச்சயமாக அறிவினையுடையோன்; அவன்றான் துஞ்சினன்; ஆதலால், இனி இவ்வுலகம் இரங்கத்தக்கது; அருவிநீர்மறுத்து உலகத்தாரஞ்சும்பரிசு வெம்மையுற்றுப் பெரிய வற்கடமிக்கவேனிற்காலத்துப் பசித்த ஆயமாகியபயன்படும் ஆனிரையை இரக்கித்தல்செய்வாராகக் கூர்மைபொருந்திய கொடுவாளாற் கோவலரானவர்கள் பூக்களுடனேயுதிரக் கொம்புகளைக்கழித்து அதன்றழைச்செறிவையழித்த வேங்கையினையொப்ப மெல்லிய இயல்பினையுடைய உரிமைமகளிரும் அருங்கலவணிமுதலவாகிய அணிகளையொழித்தார்.—எ - று.

முறைநற்கறியுநர் முன்னுற வேள்வித்தொழின்முடித்ததூஉமெனவியையும். எருவையென்றது, பருந்தாகச்செய்யப்பட்டவடிவினை.

அறிவுடையாளனிறந்தான்; மகளிரும் இழைகளைந்தனர்; இவனையிழந்தவுலகம் அளித்தெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

எருவைநுவற்சியென்று பாடமோதுவாருமுளர். 'ஆயத்துப்பயனிரை' என்பதற்கு ஆயத்திற்குப்பயனாகிய இரையெனினுமமையும். (௨௨௪)

(௨௨௫.) தலையோர் நுங்கின் றீஞ்சேறு மிசைய
விடையோர் பழத்தின் பைங்கனி மாந்தக்
கடையோர், விடுவாய்ப் பிசிரொடு சுடுகிழங்கு நுகர
நிலமலர் வையத்து வலமுறை வளைஇ
வேந்துபீ டழித்த வேந்துவேற் றானையொ

டாற்ற லென்பதன் றேற்றங் கேளினிக்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
முள்ளுடை வியன்காட் டதுவே நன்றுஞ்
சேட்சென்னி நலங்கிள்ளி கேட்குவன் கொல்லென
வின்னிசைப் பறையொடு வென்றி நுவலத்
தூக்கணங் குரீஇத் தூங்குகூ டேய்ப்ப
வொருசிறைக் கொளீஇய திரிவாய் வலம்புரி
ஞாலங் காவலர் கடைத்தலைக்
காலைத் தோன்றினு நோகோ யானே.

திணையும் துறையும் அவை.

சோழன் நலங்கிள்ளியை ஆலத்தூர்கிழார் பாடியது.

இ-ள்.—முன்செல்லும் தூசிப்படையோர் பனையின்கணுளதாகிய நுங்கினது இனிய செறிவையயில, இடைச்செல்வோர் பழத்தினது செவ்விக்கனியை நுகர, பின்செல்வோர் நீங்கியவாயையுடைய பிசிருடனே சுடப்பட்ட கிழங்கினை நுகர இப்படியொழுங்குடைத்தாகி இடமகன்ற உலகத்து வலமுறையாகச்சூழ்ந்து மன்னரை வலிகெடுத்த மேம்பட்டவேலையுடைய சேனையுடனேகூடிய வலியென்றுசொல்லப்பட்ட விளைவை இனிக் கேட்பாயாக; கள்ளியோங்கிய களர்நிலமாகிய பாழ்பட்டவிடத்து முள்ளுடைத்தாகிய பெரிய புறங்காட்டின்கண்ணதாயிற்று; பெரிதும் சேட்சென்னிநலங்கிள்ளி கேட்பான்கொல்லோவென அஞ்சி இனிய ஓசையையுடைய முரசுடனே வெற்றியைச்சொல்லாநிற்க முன்பு தூக்கணங்குருவியினது தூங்கப்பட்ட கூட்டையொப்ப ஒருபக்கத்தேதூங்கப்பட்ட வலத்திலேபுரிந்த திரிந்தவாயையுடையசங்கம் இப்பொழுது உலகங்காக்கும் அரசரது வாயிலிடத்தே பள்ளியெழுச்சிக்காலத்தேதோன்றினும் அதனைக்கேட்டு இறந்துபடாது நோமளவினேனாயினேன்.—எ-று.

முன்பு நலங்கிள்ளிசேட்சென்னி கேட்குவன்கொல்லென ஒருசிறைக்கொளீஇய வலம்புரி இன்றுவென்றிநுவலாநிற்கப் பறையொடு காலைத்தோன்றினும் யானோவேனெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

கேளினியென்றது, நெஞ்சினை. வென்றிநுவலாவென்றும், காலைத்தோன்றினவென்றும் பாடமோதுவாருமுளர். (உஉரு)

(உஉசு.) செற்றன் றாயினுஞ் செயிர்த்தன் றாயினு
முற்றன் றாயினு முய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழு தேத்தி
யிரந்தன் றாகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்குந் தானைத்
திண்டேர் வளவற் கொண்ட கூற்றே.

திணையும் துறையும் அவை.

சோழன் குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவனை மாறோக்கத்து நப்பசலையார் பாடியது.

இ - ள்.—தன்மனத்துள்ளே கறுவுகொண்டதாயினும் வெளிப்படநின்று வெகுண்டதாயினும் உற்றுநின்று கையோடுமெய்தீண்டிவருத்திற்றாயினும் அதற்குப் பிழைத்தலுண்டாகாது; பாடுவாரைப்போலத் தோன்றிநின்று கையாற்றொழுது வாழ்த்தி இரந்து உயிர்கொண்டதாகல்வேண்டும்; பொன்னானியன்றமாலையினையும் மண்டியபோரின்கண் எதிர்நின்றுவெல்லும் படையினையும் திண்ணியதேரினையுமுடைய வளவனைக்கொண்டகூற்று.—எ - று.

பொலந்தார்வளவனென வினையயும்.

கூற்றமிரந்ததாகல்வேண்டும்; இம்மூன்றினுள் ஒன்றுசெய்யினும் பிழைப்பின்றெனக்கூட்டுக.

இஃது, அவனாண்மைமிகுதியினையும் வண்மையினையும் வியந்து இரங்கிக் கூறியவாறு. (உஉசு)

(உஉஎ.) நனிபே தையே நயனில் கூற்றம்
விரகின் மையின் வித்தட் டுண்டனை
யின்னுங் காண்குவை நன்வா யாகுத
லொளிறுவாண் மறவருங் களிறு மாவுங்
குருதியங் குரூஉப்புனற் பொருகளத் தொழிய
நாளு மானுன் கடந்தட் டென்றுநின்
வாடுபசி யருத்திய பழிதீ ராற்ற
னின்னோ ரன்ன பொன்னியற் பெரும்பூண்
வளவ னென்னும் வண்டுமூசு கண்ணி
யினையோற் கொண்டனை யாயி
னினியார் மற்றுநின் பசிதீர்ப் போரே.

திணையும் துறையும் அவை.

அவனை ஆடுதுறைமாசாத்தனார் பாடியது.

இ - ள்.—மிகவும் அறிவுடையையல்லை; ஈரமில்லாத கூற்றமே, நினக்குப் போவதொருவிரகில்லாமையினான் மேல் விளைந்து பயன்படும்விதையைக் குத்தியுண்டாய்; ஆயின் நினக்கு இவ்வாறுசொல்லியவார்த்தை நல்லமெய்யாதல் இன்னமுங்காண்பை; ஒளிவிளங்கிய வாட்போரைவல்ல வீரரும் யானையுங்குதிரையும் உதிரமாகிய நிறமுடைய அழகியநீர்மிக்க போர்க்களத்தின்கண்மாய நாடோறும் அமையானாய் எதிர்நின்றுகொன்று நாடோறும் நினதுமெய்வாடுதற்கேதுவாகிய பசிதீர்த்தற்கு ஊட்டிய வசையற்ற வலியையுடைய கொலைத்தொழிலுக்கு நின்னையொத்த பொன்னானியன்ற பேரணிகலத்தையுடைய வளவனென்றுசொல்லப்படும் வண்டுகள்மொய்க்கப்படுங்கண்ணியையுடைய இத்தன்மையினையுடையோனை நீ கொண்டாயாயின், இனி நின்பசியைக்கெடுப்போர் யாரோ சொல்லுவாயாக.—எ-று.

கூற்றமே, இத்தன்மையோனைக் கொண்டாயாயின், நின் பசியைத்தீர்ப்போர் இனி யார்? விரகின்மையின் வித்தட்டுண்டனை; நன்வாயாகுதல் இன்னுங்காண்குவையெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

நயம் - நியாயமுமாம்.

(உஉஎ)

(உஉஅ.) கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே
யிருடிணிந் தன்ன குருஉத்திரட் பருஉப்புகை
யகலிரு விசும்பி னூன்றுஞ் சூளை
நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே
யளியை நீயே யாங்கா குவைகொ
னிலவரை சூட்டிய நீணெடுந் தானைப்
புலவர் புகழ்ந்த பொய்யா நல்லிசை
விரிகதிர் ஞாயிறு விசும்பிவர்ந் தன்ன
சேண்விளங்கு சிறப்பிற் செம்பியர் மருகன்
கொடிநுடங்கு யானை நெடுமா வளவன்
றேவ ருலக மெய்தின னாதலி
னன்னோற் கவிக்குங் கண்ணகன் றாழி
வனைதல் வேட்டனை யாயி னெனையதூஉ
மிருநிலந் திகிரியாப் பெருமலை
மண்ணா வனைத லொல்லுமோ நினக்கே.

திணை - அது ; துறை - ஆனந்தப்பையுள்.

அவனை *ஐயூர்முடவனார் பாடியது.

ஆனந்தப்பையுளாவது :—

†"விழுமங் கூர வேய்த்தோ ளரிவை
கொழுநன் வீயக் குழைந்துயங் கின்று."

இ - ள்.—அடுகலம்வனையும் வேட்கோவே, அடுகலம்வனையும் வேட்கோவே, இருள்நீங்கி ஓரிடத்தேசெறிந்துநின்றாற்போன்ற நிறமுடைத்தாய்த் திரண்ட மிக்க புகை அகலிய பெரிய ஆகாயத்தின்கட்சென்றுதங்கும் சூளையையுடைய அகலிய இடத்தினையுடைய பழையவூரின்கட் கலம்வனையும்வேட்கோவே, இரங்கத்தகுவை நீ, என்னவருத்தமுறுவைதான், நிலவெல்லையின்கண்பரப்பிய மிக்க பெரியசேனையினையுடைய அறிவுடையோர்புகழ்ந்த பொய்யாதநல்லபுகழினையும் பரந்தசுடரினையுமுடைய ஆதித்தன் வானத்தின்கண்பரந்தாலொத்த சேய்மைக்கண்ணேவிளங்கும் தலைமையையுடைய செம்பியர்மரபினுள்ளான், கொடிகள் நுடங்காநின்ற யானையினையுடைய மிகப்பெரியவளவன், அவன் தேவருடையவிண்ணுலகத்தையடைந்தானாகலான், அப்பெற்றிப்பட்டோனைக் கவிக்கும் இடமகன்றதாழியை வனைதலை நீவிரும்பினையாயின் எப்படியும் பெரியநிலவட்டம் உருளியாகப் பெரிய மேருமலை மண்ணாக வனைய இயலுமோ இயலாதன்றே நினக்கு.—எ - று.

அடுக்கு - விரைவின்கண்வந்தது.

கலஞ்செய்கோவே, வளவன் தேவருலகமெய்தினனாதலால், அன்னோற்கவிக்குந்தாழிவனைதல் வேட்டனையாயின் இருநிலந்திகிரியாக மாமேரு மண்ணாக வனைத

* உறையூர்முடவனாரென்றும் பிரதிபேதமுண்டு.

† புறப்பொருள்வெண்பாமாலை, சிறப்பிற்பொதுவியற்படலம், கரு.

லொல்லுமோ? ஒல்லாமையின் யாங்காகுவை; நீ இரங்கத்தக்காயெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

இது, சுற்றத்தார் இரங்கிக்கூறுதலின், ஆனந்தப்பையுளாயிற்று. (உஉஅ)

(உஉகூ.) *ஆடிய லழற்குட்டத்
தாரிரு ளரையிரவின்
முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயங்காயப்
பங்குனி யுய ரழுவத்துத்
தலைநாண்மீ னிலைதிரிய
நிலைநாண்மீ னதனெதிரேர்தரத்
தொன்னாண்மீன் றுறைபடியப்
பாசிச் செல்லா தூசி முன்னா
தளக்கர்த்திணை விளக்காகக்
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
யொருமீன் விழுந்தன்றால் விசும்பி னானே
அதுகண், டியாமும் பிறரும் பல்வே றிரவலர்
பறையிசை யருவி நன்னாட்டுப் பொருந
னோயில னாயி னன்றுமற் றில்லென
வழிந்த நெஞ்ச மடியுளம் பரப்ப
வஞ்சின மெழுநாள் வந்தன் றின்றே
மைந்துடை யானை கைவைத் துறங்கவுந்
திண்பிணி முரசங் கண்கிழிந் துருளவுங்
காவல் வெண்குடை கால்பரிந் துலறவுங்
காலியற் கலிமாக் கதியின்றி வைகவு
மேலோ ருலக மெய்தின னாகலி
னொண்டொடி மகளிர்க் குறுதுணை யாகித்
தன்றுணை யாய மறந்தனன் கொல்லோ
பகைவர்ப் பிணிக்கு மாற்ற லசைவர்க்
களந்துகொடை யறியா வீகை
மணிவரை யன்ன மாஅ யோனே.

திணையும் துறையும் அவை.

---

* இப்பாட்டு, பாடாண்டலைவனது நாண்மீனை வீழ்மீன் நலிந்தமைபற்றிக் கூறப்பட்டதென்பர் நச்சினார்க்கினியர் [தொல், பொரு, புறத்திணையியல், கூகூ-ம் சூத்திரவுரை].

*கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை இன்னநாளிற்றுஞ்சுமென அஞ்சி, அவன்றுஞ்சியவிடத்துக் கூடலூர்கிழார் பாடியது.

இ - ள்.—மேடவிராசிபொருந்திய கார்த்திகைநாளின்முதற்காலின்கண் நிறைந்த இருளையுடைய பாதியிரவின்கண் முடப்பனைபோலும்வடிவையுடைய அனுடநாளின் அடியின் வெள்ளிமுதலாகக் கயமாகிய குளவடிவுபோலும்வடிவையுடைய புனர்பூசத்துக்கடையின்வெள்ளி எல்லையாகவிளங்கப் பங்குனிமாதத்தினது முதற்பதினைந்தின்கண் உச்சமாகிய உத்தரம் அவ்வுச்சியினின்றுஞ்சாய அதற்கு எட்டாமீனாகியமூலம் அதற்கெதிரே எழாநிற்க அந்த உத்தரத்திற்கு முன்செல்லப்பட்ட எட்டாமீனாகிய மிருகசீரிடமாகியநக்கத்திரம் துறையிடத்தேதாழக் கீழ்த்திசையிற்போகாது வடதிசையிற்போகாது கடலாற்சூழப்பட்டபூமிக்கு விளக்காக முழங்காநின்ற தீப்பரக்கக் காற்றுற்பிதிர்ந்துகிளர்ந்து ஒருமீன்வீழ்ந்தது, வானத்தினின்றும்; அதனைப்பார்த்து யாமும்பிறருமாகிய பல்வேறுவகைப்பட்ட இரவலர் எம்முடைய பறையொலிபோலும் ஒலியையுடைய அருவியையுடைய நல்லமலைநாட்டுக்குவேந்தனாகியவன் நோயையுடையனல்லனாகப்பெறின் அழகிதெனை இரங்கிய நெஞ்சத்துடனே மடிந்தவுள்ளம் பரப்ப யாம் அஞ்சினேம்; அஞ்சினபடியே ஏழாநாள் வந்ததாகலின் இன்று, வலியையுடையயானை கையை நிலத்தேயிட்டுவைத்துத் துஞ்சவும் திண்ணிய வாராற்பிணிக்கப்பட்டமுரசம் கண்கிழிந்துருளவும் உலகிற்குக் காவலாகிய வெண்கொற்றக்குடை கால்துணிந்து உலறவுங் காற்றுப்போலுமியல்பையுடைய மனஞ்செருக்கிய குதிரைகள் கதியின்றிக்கிடக்கவும் இப்படிக்கிடக்கத் தேவருலகத்தையடைந்தான்; ஆகையாலே, ஒள்ளியவளையையுடைய மகளிர்க்கு மேவப்பட்டதுணையாகித் தனக்குத்துணையாகிய மகளிரையும் மறந்தான்கொல்லோ; பகைவரைப்பிணித்துக்கொள்ளும் வலியையும் நச்சியோர்க்கு அளந்துகொடுத்தலறியாத வண்மையையுமுடைய நீலமலைபோலும்மாயோன்.—எ - று.

மன்னும், தில்லும் - அசை. கயத்துக்குளக்கடையென்க. நற்றிசையாகிய கிழக்கும்வடக்குஞ்செல்லாது தீத்திசையாகியதெற்கும் மேற்குமாகிய ஒருதிசைக்கண் வீழ்ந்ததென்று ஆம்; அன்றி வடக்குங்கிழக்குஞ்செல்லாதெனவே வடகிழக்கேவீழ்ந்ததென்றுமாம். பட்டவென்றல் இன்றுமையிற் கைவைத்துறங்கவும் கண்கிழிந்துருளவும் கால்பரிந்துலறவும் கதியின்றிவைகவுமெனத் தகுதிபற்றிகூறப்பட்டன.

மாயோன் மகளிர்க்குறுதுணையாகித் தன்றுணையாயம் மறந்தனனோ இல்லையோ யாம் மறவாநிலைமையமாயினமென இரங்கிக்கூறியவாறு.

"அஞ்சினமெழுநாள்வந்தன்றின்றென" என்பதூஉம் பாடம். (உஉக)

(உ௱௦.) கன்றமர் ஆயங் கானத் தல்கவும்
வெங்கால் வம்பலர் வேண்டுபுலத் துறையவுங்

* 'கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையென்றவழி, அரசனென்பதோர்சாதியும், சேரமானென்பது ஒருகுடியும், வேழநோக்கினையுடையானென்பதோர்வடிவும், சேயென்பதோரியற்பெயரும், மாந்தரஞ்சேரலிரும்பொறையென்பதொருசிறப்புப்பெயரும்' என்பது, திருக்குறள், ஙக - ம் அதிகாரம், மெய்யுணர்தல், ரு - ம்பாட்டு, பரிமேலழகருரை.

களமலி குப்பை காப்பில வைகவும்
விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்
வையகம் புகழ்ந்த வயங்குவினை யொள்வாட்
பொய்யா வெழினி பொருதுகளஞ் சேர
வீன்றோ ளிழந்த குழவி போலத்
தன்னமர் சுற்றந் தலைத்தலை யினையக்
கடும்பசி கலக்கிய விடும்பைகூர் நெஞ்சமொடு
நோயுழந்து வைகிய வுலகினு மிகநனி
நீயிழந் தனையே யறனில் கூற்றம்
வாழ்தலின் வரூஉம் வயல்வள னறியான்
வீழ்குடி யுழவன் வித்துண் டாஅங்
கொருவ னுருயி ருண்ணு யாயி
னோரார் பல்லுயிர் பருகி
யார்குவை மன்னோவவ னமரடு களத்தே.

திணை - அது; துறை - கையறுநிலை.

அதியமான்தகடூர்பொருதுவீழ்ந்த எழினியை அரிசில்கிழார் பாடியது.

இ - ள்.—கன்றைமேவிய ஆனிரை மேய்ந்தகாட்டிடத்தே பிறிதொன்றால் ஏதமின்றிக்கிடப்பவும் சுரத்தின் நடத்தலால் வெம்மையுற்றகாலினையுடையவழி போவார் தாம்வேண்டியவிடத்தேதங்கவும் களத்தின்கணிறைந்த நெற்பொலி காவலின்றியேகிடப்பவும் எதிரில்நின்றுதடுக்கும்பகையைத்துரந்த நிலங்கலங்காத செவ்விய ஆட்சியினையும் உலகத்தார்புகழ்ந்த விளங்கியபோரைச்செய்யும் ஒள்ளிய வாளினையும் தப்பாதமொழியினையுமுடைய வெழினி பொருது போர்க்களத்தின் கண்ணேவீழப் பெற்றதாயாற்கைவிடப்பட்ட உண்ணுதகுழவியையொப்பத் தன்னைமேவியகிளை இடந்தோறுமிடந்தோறும் வருந்த மிக்கபசிவருத்திய கலக்கமுற்ற துன்பமிக்க நெஞ்சமோடு அவனையிழந்து வருத்தமுற்றுக்கிடந்த உலகத்து விதனத்தினும் மிகப்பெரிதாக நீயிழந்தாய், அறமில்லாதகூற்றமே, வாழ்தலேதுவாகவரும் வயலிடத்துவிளையும் வருவாயையறியானாய்த் தளர்ந்தகுடியையுடைய உழவன் விதையையுண்டாற்போல இந்த ஒருவனதுபெறுதற்கரிய உயிரையுண்டிலையாயிற் பகைவருடைய பலவுயிரையும் பருகிநிறைவை, அவன் போரிற் பகைவரைக்கொல்லும் களத்தின்கண்.—எ - று.

மன் - கழிவின்கண்வந்தது. உயிர் உண்ணவும் பருகவும் படுவதன்றாயினும் அவ்வாறுகூறுதல், "அகவிரு விசும்பிற் பாயிருள் பருகிப், பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பருதி" என்றாற்போல ஓரணிகுறித்துநின்றது.

எழினி களஞ்சேர ஒருவனுருயிருண்ணுயாயின், அவன் அமரடுகளத்துப் பல்லுயிரும் பருகியார்குவை ; அதுகழிந்ததேயெனக்கூட்டி வினைமுடிவுசெய்க.

கடும்பசிகலங்கியவென்றும் பாடம்.

(உருo)

(உருக.) எறிபுனக் குறவன் குறைய லன்ன
கரிபுற விறகி னீம வொள்ளழற்

குறுகினுங் குறுகுக குறுகாது சென்று
விசும்புற நீளினு நீள்க பசுங்கதிர்த்
ரு திங்க ளன்ன வெண்குடை
யொண்ஞாயி றன்னோன் புகழ்மா யலவே.

திணையும் துறையும் அவை.

*அதியமானெடுமானஞ்சியை ஔவையார் பாடியது.

இ - ள்.—வெட்டிச்சுட்டகொல்லைநிலத்துக் குறவனால் தறிக்கப்பட்ட துண்டம்போன்ற கரிந்தபுறத்தையுடையவிறகால் அடுக்கப்பட்ட ஈமத்தின்கண் எரிகின்ற ஒள்ளிய அழலின்கண் உடல் சுடச் சென்றணுகினும் அணுகுக, அவ்வாறணுகாதுபோய் வறிதே ஆகாயத்தையுற ஓங்கினுமோங்குக, குளிர்ந்தசுடரையுடைய மதிபோலும் வெண்கொற்றக்குடையையுடைய ஒள்ளிய ஞாயிற்றையொப்போனதுபுகழ் மாயா.—எ - று.

ஈமமென்பதி, பிணஞ்சுடுதற்கு அடுக்கும் விறகடுக்கு. இனி, ஈமவொள்ளழல் இவனுடல்சிதையாமற் சிறுகினுஞ்சிறுகுக; அன்றிச் சிதையும்படி சென்றுநீளினு நீளுக; இவன்புகழ் மாயாவெனினுமமையும். எரிபுனக்குறவனென்று பாடமோதுவாருமுளர். (உகூக)

(உகூஉ.) இல்லா கியரோ காலை மாலை
யல்லா கியர்யான் வாழு நாளே
நடுகற் பீலி சூட்டி நாரரி
சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ
ரு கோடுயர் பிறங்குமலை கெழீஇய
நாடுடன் கொடுப்பவுங் கொள்ளா தோனே.

†திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—அவனையின்றிக் கழிகின்ற காலையும் மாலையும் இனி இல்லையாகுக; யான் உயிர்வாழுநாளும் எனக்கு ஓர்பயன்படாமையின் அவையல்லவாக; நடப்பட்டகல்லின்கட் பீலியைச்சூட்டி நாரரலரிக்கப்பட்டதேறலைச் சிறியகலத்தானுகுப்பவும் அதனைக்கொள்வனோ கொள்ளானோ, சிகரமோங்கிய உயர்ந்தமலைபொருந்திய நாடுமுழுவதுங்கொடுப்பவும் கொள்ளாதவன்.—எ - று.

நாடுடன்கொடுப்பவும் கொள்ளாதோன் நாரரி சிறுகலத்துகுப்பவும் கொள்வன் கொல்லோவெனக்கூட்டி வினைமுடிவுசெய்க. (உகூஉ)

(உகூங.) பொய்யா கியரோ பொய்யா கியரோ
பாவடி யானைப் பரிசிலர்க் கருகாச்
சீர்கெழு நோன்று ளகுதைகட் டோன்றிய

* அவனை அவர்பாடியதென்றும் பிரதிபேதமுண்டு.

† திணை - தும்பை; துறை - பாண்பாட்டென்றும் பிரதிபேதமுண்டு.

பொன்புனை திகிரியிற் பொய்யா கியரோ
விரும்பா ணொக்கற் றலைவன் பெரும்பூட்
போரடு தானை யெவ்வி மார்பி
னெஃகுறு விழுப்புண் பலவென
வைகுறு விடிய லியம்பிய குரலே.

திணையும் துறையும் அவை.

வேள் எவ்வியை வெள்ளெருக்கிலையார் பாடியது.

இ - ள்.—பொய்யாகுக; பொய்யாகுக; பரந்த அடியினையுடையயானையைப் பரிசிலர்க்குக் குறைவறக்கொடுக்கும் சீர்மைபொருந்திய வலியமுயற்சியையுடைய அகுதையிடத்து உளதாகிய பொன்னாற்செய்யப்பட்ட ஆழிபோலப் பொய்யாகுக; பெரியபாண்சுற்றத்திற்குமுதல்வன், பேரணிகலத்தினையுடைய போரின்கட்கொல்லும் படையினையுடைய எவ்வியதுமார்பின்கண் வேல்தைத்த சிறந்தபுண் பலவென வைகுதலுற்ற விடியற்காலத்துச்சொல்லிய வார்த்தை.—எ - று.

திகிரியென்றது, திகிரிதைத்ததென்றுபிறந்த வார்த்தையை. பொன் - ஈண்டு இரும்பு. அடுக்கு - விரைவின்கண்வந்தது. பெரும்பூண்மார்பென இயையும்.

இயம்பியகுரல் பொய்யாகியரெனக்கூட்டுக. (உ௱௩)

(உ௱௪.) நோகோ யானே தேய்கமா காலை
பிடியடி யன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
வின்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொ
லுலகுபுகத் திறந்த வாயிற்
பலரோ டுண்டன் மரீஇ யோனே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—நோவக்கடவனோ யான்; எனதுவாழக்கடவ மிக்கநாள் மாய்வதாக; பிடியினது அடிபோன்ற சிறிய இடத்தினைமெழுகித் தன்னைமேவப்பட்ட காதலி புன்மேல்வைக்கப்பட்ட இனியசிறியபிண்டத்தை எவ்வாறுண்டான்கொல்லோ? உலகத்தார்யாவரும் புகும்பரிசு திறந்தவாயிலையுடைய பலரோடுங்கூடி உண்டலைமருவியோன்.—எ - று.

இன்சிறுபிண்டமென்றது, இகழ்ச்சிக்குறிப்பு.

பலரோடுண்டலைமரீஇயோன் பிண்டம் யாங்குண்டனன்கொலெனக்கூட்டுக.

(உ௱௫.) சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பா டத்தான் மகிழ்ந்துண்ணு மன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே

யென்பொடு தடிபடு வழியெல்லா
மெமக்கீயு மன்னே
யம்பொடு வேனுழை வழியெல்லாந்
தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே
யருந்தலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
யிரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
வஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவ னருநிறத் தியங்கிய வேலே
யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வினிப்பா டுநரு மில்லைப் பாடுநர்க்
கொன்றீ குநரு மில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே.

திணையும் துறையும் அவை.

அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் பாடியது.

இ - ள்.—சிறிய அளவினையுடைய மதுவைப்பெறின் எங்களுக்குத்தருவன்; அதுகழிந்தது! பெரிய அளவினையுடையமதுவைப்பெற்றானாயின் அதனை யா முண்டுபாட எஞ்சியமதுவைத் தான்விரும்பிநுகர்வான்; அதுகழிந்தது! சோறு எல்லார்க்கும்பொதுவாதலாற் சிற்றளவினையுடைய சோற்றின்கண்ணும் மிகப்பல கலத்தோடுங்கூட உண்பன்; அதுகழிந்தது! மிக்க அளவினையுடைய சோற்றின் கண்ணும் மிகப்பலகலத்தோடுங்கூட உண்பன்; அதுகழிந்தது! என்போடுகூடிய ஊன்றடியுளதாகிய இடமுழுதும் எங்களுக்கு அளிப்பன்; அதுகழிந்தது! அம் போடுவேல்தைத்து உருவுமிடமாகிய போர்க்களமுழுதும் தான்சென்றுநிற்பன்; அதுகழிந்ததே! தான்காதலிப்பார்க்கு மாலைசூட்டுதலான் நரந்தப்பூநாறும் தன்னு டையகையால் தான் அருளுடைமையிற் புலால்நாறும் எம்முடையதலையைத்தடவு வன்; அதுகழிந்ததே! அரியதலைமையையுடைய பெரியபாணரது அகலியமண் டையின்கண் துளையையுருவி இரப்பவர்கையுளும்தைத்துருவித் தன்னாற்புரக்கப் படும் சுற்றத்தாரது புல்லியகண்ணிற் பாவை ஒளிமழுங்க அழகியசொல்லை ஆரா யும் நுண்ணிய ஆராய்ச்சியையுடைய அறிவினையுடையோர்நாவின்கண்ணே போய் வீழ்ந்தது, அவனது அரியமார்பத்தின்கண்தைத்தவேல். எமக்குப் பற்றாகிய எம் மிறைவன் எவ்விடத்துள்ளான்கொல்லோ? இனிப் பாடுவோருமில்லை; பாடுவார்க்கு ஒன்றீவாருமில்லை; குளிர்ச்சியையுடைய நீரையுடையதுறையின்கட் பகன்றையி னது தேனைப்பொருந்திய பெரியமலர் பிறராற்சூடப்படாதுகழிந்தாற்போலப் பிறர்க்கு ஒருபொருளைக்கொடுக்காது மாய்ந்துபோமுயிர் மிகப்பல.—எ - று.

*அவன்பிறத்து உருவியவேல் அவனுக்கு இறந்துபாட்டைச்செய்தலோடே பாணர்முதலாயினார்க்கும் இறந்துபாட்டினைச்செய்தலான் ஒருகாலத்தே யாவரிடத்தும்தைத்ததென்றாராகக்கொள்க. மன் - கழிவின்கண்வந்தது.* (௨௬௫)

(௨௬௬.) *கலையுணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழஞ்*
*சிலைகெழு குறவர்க் கல்குமிசை யாகு*
*மலைகெழு நாட மாவண் பாரி*
*கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற்*
*புலந்தனை யாகுவை புரந்த யாண்டே*
*பெருந்தகு சிறப்பி னட்பிற் கொல்லா*
*தொருங்கு வரல்விடாஅ தொழிகெனக் கூறி*
*யினையை யாதலி னினக்கு மற்றியான்*
*மேயினே னன்மை யானே யாயினு*
*மிம்மை போலக் காட்டி யும்மை*
*யிடையில் காட்சி நின்னோ*
*டுடனுறை வாக்குக வுயர்ந்த பாலே.*

திணை - அது ; துறை - கையறுநிலை.

வேள்பாரிதுஞ்சியவழி மகளிரைப் பார்ப்பார்ப்படுத்து வடக்கிருந்தகபிலர் பாடியது.

*இ - ள்.—முசுக்கலைகிழித்துண்டலாற்பீறிய முழவுபோலும் பெரியபலாப்பழம் வில்லையுடையகுறவர்க்கு ஆதன்பெருமையாற் சிலநாளைக்கு இட்டுவைத்துண்ணு முணவாம் மலையையுடையநாட்டையுடையோய், பெரியவண்மையையுடையபாரி, நீயும்யானுங்கலந்தநட்பிற்குப் பொருந்த ஒழுகாயாய் நீ என்னை வெறுத்தாயாகக் கடவை, நீ எனக்கு உதவிசெய்த யாண்டுகளும்; பெருமைதக்க தலைமையினை யுடைய நட்பிற்குப்பொருந்தாமல் யானும் நின்னோடு கூடப்போதுதற்கு இயை யாது நீ ஈண்டுத்தவிர்கவெனச்சொல்லி இப்படி வேறுபட்டதன்மையையுடையை யாதலின், நினக்கு யான் பொருந்தினேனல்லாமையான். இங்ஙனம்பொருந்திற் றிலேனாயினும் இப்பிறப்பின்கண் நீயும்யானுங்கூடி இன்புற்றிருந்தவாறுபோலக் காட்டி மறுபிறப்பினும் இடைவிடாத காட்சியினையுடையநின்னோடு கூடிவாழ்தலை உயர்ந்தவிதி கூட்டுவதாக.—எ - று.*

*உலந்தயாண்டென்றுபாடமாயின், கழிந்தயாண்டென்க. மற்று - அசைநிலை.*

(௨௬௭.) *நீடுவாழ் கென்றியா னெடுங்கடை குறுகிப்*
*பாடி நின்ற பசிநாட் கண்ணே*
*கோடைக் காலத்துக் கொழுநிழ லாகிப்*
*பொய்த்த லறியா வுரவோன் செவிமுதல்*
*வித்திய பனுவல் விளைந்தன் று நன்றெ‌ன*
*நச்சி யிருந்த நசைபழு தாக*
*வட்ட குழிசி யழற்பயந் தாஅங்*

களியர் தாமே யார்க வென்று
வறனில் கூற்றந் திறனின்று துணிய
ஊழி னுருப்ப வெருக்கிய மகளிர்
வாழைப் பூவின் வளைமுறி சிதற
முதுவா யொக்கற் பரிசில ரிரங்கக்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்வேல் விடலை சென்றுமாய்ந் தனனே
ஆங்கது நோயின் றாக வோங்குவரைப்
புலிபார்த் தொற்றிய களிற்றிரை பிழைப்பி
னெலிபார்த் தொற்றா தாகு மலிதிரைக்
கடன்மண்டு புனலி னிழுமெனச் சென்று
நனியுடைப் பரிசிற் றருக
மெழுமதி நெஞ்சே துணிபுமுந் துறுத்தே.

திணையும் துறையும் அவை.

வெளிமானுழைச்சென்றார்க்கு அவன்றுஞ்ச இளவெளிமான்சிறிதுகொடுப்பக் கொள்ளாது பெருஞ்சித்திரனார் பாடியது.

இ - ள்.—நெடுங்காலம்வாழ்வாயாகவென்று யான் நெடியவாயிலையணுகிப் பாடிநின்ற பசியையுடையகாலத்தின்கண்ணே, கோடையான்வெம்மையுற்றபொழுதின்கண் அடைந்தார்க்குக் கொழுவியநிழலையொத்து யார்கண்ணும்பொய்கூறுதலறியாத அறிவையுடையோனதுசெவியிடத்து நல்லோர்விதைத்த கேள்வியாகிய பயிர் நன்றாகவிளைந்ததெனநினைத்துப் பரிசிலைவிரும்பியிருந்த அவ்விருப்பம் பயனில்லையாக அடப்பட்டபானையினின்றும் சோறின்றி எரி புறப்பட்டாற்போல அளிக்கத்தக்கார் உண்பாராகவென்றுகருதாத அறமில்லாதகூற்றம் கூறுபாடின்றாகி அவனுயிரைக்கொள்ளத்துணிய முறையான் வெய்தாக மார்பின்கண் அறைந்துகொண்டமகளிர் கையிலணிந்த வளைகளின்முறிகள் வாழைப்பூப்போலச் சிதற முதியவாக்கினையுடைய சுற்றத்தோகூடிய பரிசிலரிரங்கக் கள்ளியோங்கிய களர்நிலமாகிய பாழ்பட்டபுறங்காட்டின்கண் வெளியவேலையுடையவீரன்போய் இறந்துபட்டான்; கூற்றம் நோயின்றியிருப்பதாக; உயர்ந்தமலையிடத்துப் புலிபார்த்துவீழ்த்த களிறாகிய இரைதப்பின் தனக்கு இரையாதற்குப்போதாத எலியைப் பார்த்துவீழ்த்தாதாகும்; மிக்க திரையையுடைய கடலின்கண்மண்டிய ஆற்றுநீர்போல விரையப்போய் மிகுதியையுடைத்தாகியபரிசிலைக்கொடுவருவேமாக, எழுந்திராய்நெஞ்சே, தெளிவை முன்னிட்டுக்கொண்டு.—எ - று.

நசைபழுதாக அழப்பயந்தாங்குக் கூற்றந்துணிய விடலைமாய்ந்தனனெனவும், மகளிர்வளைமுறி வாழைப்பூவிற்சிதறவெனவும், துணிபுமுந்துறுத்து நெஞ்சமே எழுவெனவுங்கூட்டுக.

நோயின்றாகவென்றது, குறிப்பிற்றேன்றல். 'ஆங்கதுநோயின்றாக' என்றது, இளவெளிமான் சிறிதுகொடுப்ப அதனை இகழ்ந்துகூறியதென்பாருமுளர். 'புலிபார்த் தொற்றிய களிற்றிரை பிழைப்பி, னெலிபார்த் தொற்றா தாகும்' என்

பதூஉம் - இவன்பின்கொடுத்தபரிசிலின் சிறுமைநோக்கிநின்றது. 'ஊழை யுருப்ப வெருக்கிய மகளிர்' என்றோதி, விதியைவெறுப்ப எருக்கியமகளிரென்றுரைப்பினு மமையும்." (௨௩௭)

(௨௩௮.) கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த
செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா
வாய்வன் காக்கையுங் கூகையுங் கூடிப்
பேஎ யாயமொடு பெட்டாங்கு வழங்குங்
காடுமுன் னினனே கட்கா முறுநன்
றொடிகழி மகளிரிற் றொல்கவின் வாடிப்
பாடுநர் கடும்பும் பையென் றனவே
தோடுகொண் முரசுங் கிழிந்தன கண்ணே
ஆளில், வரைபோல் யானையு மருப்பிழந் தனவே
வெந்திறற் கூற்றம் பெரும்பே துறுப்ப
வெந்தை யாகுத லதற்பட லறியே
னந்தோ வளியேன் வந்தனென் மன்ற
வென்னா குவர்கொலெற் றுன்னி யோரே
மாரி யிரவின் மரங்கவிழ் பொழுதி
னாரு ருற்ற நெஞ்சமொ டோராங்குக்
கண்ணி லூமன் கடற்பட் டாங்கு
வரையளந் தறியாத் திரையரு நீத்தத்
தவல மறுசுழி மறுகலிற்
றவலே நன்றுமற் றகுதியு மதுவே.

திணையும் துறையும் அவை.

வெளிமான் துஞ்சியபின் அவர் பாடியது.

இ - ள்.—பிணமிட்டுப்புதைக்கப்பட்ட கவிக்கப்பட்ட செய்யதாழியினது குவிந்தபுறத்தேயிருந்த செவிசிவந்த கழுகின்சேவலும் பொகுவலென்னும்புள்ளும் அஞ்சாவாய் வாய்வலிய காக்கையும் கோட்டானும் கூடிப் பேயினத்துடனே தாம் விரும்பியவழியேயியங்கும் சுடுகாட்டைத் தலைப்பட்டான், வீரபானத்தைக்காமுறுவான்; அவனுடைய வளைகழிக்கப்பட்ட உரிமைமகளிரைப்போலப் பழைய அழகு தொலைந்து பாடுவாரதுசுற்றமும் ஒளிமழுங்கின; தொகுதிகொண்டமுரசங்களும் கண்கிழிந்தன; பாகர்முதலாயின ஆளில்லாத மலைபோன்ற யானைகளும் மருப்பிழந்துவிட்டன; இவ்வாறு வெவ்வியதிறலையுடையகூற்றம் பெரிய இறந்துபாட்டை எய்துவிப்ப என்னிறைவன் ........ அவ்விறந்துபாட்டிலேபடுதலை அறியேனாய் ஐயோ! அளித்தலையுடையேன் வந்தேன்; நிச்சயமாக என்னதுயரமுறுவர்கொல்லோ என்னையடைந்தசுற்றத்தார்! மழையையுடைய இரவின்கண் மரக்கலங்கவிழ்ந்தகாலத்துப் பொறுத்தற்கரியதுன்பமுற்றநெஞ்சுடனே ஒருபெற்றிப்படக் கண்ணில்லாதமன்னை கடலின்கண் அழுந்தினாற்போல எல்லையளந்தறியப்படாத திரை

யரிதாகிய வெள்ளத்தின்கண் துன்பமாகிய மறுசுழியின்கட்பட்டுச் சுழலுமதனில் இறந்துபடுதலேநன்று; நமக்குத் தக்கசெய்கையும் அதுவே.—எ - று.

யான் அதுசெய்யப்பெற்றிலேனென்னும் நினைவிற்று. மன் - கழிவின்கண் வந்தது. வெருவா வழங்குமென்றி இயையும். 'முரசும் கண்கிழிந்தன' 'யானையும் மருப்பிழந்தன' என்றகருத்து: அவற்றால்தொழில்கொள்வாரின்மையின், அவை பயனிழந்தனவென்பதாம். (உஙஅ)

(உஙக.) தொடியுடைய தோண்மணந்தனன்
கடிகாவிற் பூச்சூடினன்
றண்கமழுஞ் சாந்துநீவினன்
செற்றோரை வழிதபுத்தன
னட்டோரை யுயர்புகூறினன்
வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்
பிறரைத்தா னிரப்பறியல
னிரந்தோர்க்கு மறுப்பறியலன்
வேந்துடை யவையத் தோங்குபுகழ் தோற்றினன்
வருபடை யெதிர்தாங்கினன்
பெயர்படை புறங்கண்டனன்
கடும்பரிய மாக்கடவின
னெடுந்தெருவிற் றேர்வழங்கின
னோங்கியல களிறூர்ந்தனன்
றீஞ்செறி தசும்புதொலைச்சினன்
பாணுவப்பப் பசிதீர்த்தனன்
மயக்குடைய மொழிவிடுத்தனன்
செய்ப வெல்லாஞ் செய்தன னாகலி
னிடுக வொன்றோ சுடுக வொன்றோ
படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் றலையே.

திணையும் துறையும் அவை.

நம்பிநெடுஞ்செழியனைப் பேரெயின்முறுவலார் பாடியது.

இ - ள்.—இளையமகளிரது வளையணிந்ததோளைமுயங்கினான்; காவலையுடைய இளமரக்காக்களிற் பூவைச்சூடினான்; குளிர்ந்த மணநாறும் சாந்தைப்பூசினான்; பகைத்தோரைக் கிளையொடுங்கெடுத்தான்; நட்டோரை மிகுத்துக்கூறினான்; இவர் நம்மில்வலியவரென்றுகருதி அவர்க்கு வழிபாடுகூறியறியான்; இவர் நம்மில் எளிய ரென்றுகருதி அவரின் மிகுத்துச்சொல்லியறியான்; பிறரைத் தான் ஒன்றீயெனச் சொல்லி இரந்தறியான்; சூழ்ந்துநின்று இரந்தோர்க்கு யாதும் இல்லையென்று மறுத்தலை அறியான்; அரசருடைய அவைக்களத்தின்கண் தனது உயர்ந்தபுகழை வெளிப்படுத்தினன்; தன்மேல்வரும்படையைத் தன் எல்லையுட்புகுதாமல் எதிர்

நின்று தடுத்தான்; புறக்கொடுத்துப்பெயரப்பட்ட படையினது புறக்கொடை கண்டு அதன்பின் செல்லாது நின்றான்; விரைந்தசெலவையுடையகுதிரையைத் தன்மனத்தினும் விரையச்செலுத்தினான்; நெடியவீதியின்கண் தேரைச் சூழவிய க்கினான்; உயர்ந்த இயல்பையுடையவாகிய களிற்றைச்செலுத்தினான்; இனிய செறிவையுடைத்தாகிய மதுவையுடையகுடங்களைப் பலர்க்கும்வழங்கித் தொலைவித்தான்; பாணருவப்ப அவர்பசியை மாற்றினான்; நடுவுநிலைமையின் மயக்குதலையுடையசொற்களை அந்நடுவுநிலைமையிற்பிழையாதபடி மயக்கந்தீரக்கூறினான்; அப்படிச் செய்யத்தகுவனவெல்லாம் செய்தானாதலான், இப்புகழைவிரும்புவோனது தலையை வாளான் அறுத்துப்போகடினும்போகடுக; அன்றிச் சுடினும்சுடுக; பட்டபடி படுக.—எ - று.

'கட்டோரையுயர்புகூறினன்' என்றது, தான் உயர்த்துக்கூறவே யாவரும் உயர்த்துக்கூறுவரென்பதாம். 'மயக்குடைய மொழிவிடுத்தனன்' என்பதற்கு உலகவொழுக்கத்தில் மயக்கமுடையசொற்கள் தன்னிடைப்புகுதாமல் விடுத்தானென்றும், பொருண்மயங்கியசொற்களைத் தன்னிடத்துப்புகுதாமல் விடுத்தானென்று முரைப்பினுமமையும். ஒன்றேவென்பது, எண்ணிடைச்சொல். (௨௩௯)

(௨௪௦.) ஆடுநடைப் புரவியுங் களிறுந் தேரும்
வாடா யாணர் நாடு மூரும்
பாடுநர்க் கருகா வாஅ யண்டிரன்
கோடேந் தல்குற் குறுந்தொடி மகளிரொடு
கால னென்னுங் கண்ணிலி யுய்ப்ப
மேலோ ருலக மெய்தின னெனாஅப்
பொத்த வறையுட் போழ்வாய்க் கூகை
சுட்டுக் குவியெனச் செத்தோர்ப் பயிருங்
கள்ளியம் பறந்தலை யொருசிறை யல்கி
யொள்ளெரி நைப்ப வுடம்பு மாய்ந்தது
புல்லென் கண்ணர் புரவலர்க் காணாது
கல்லென் சுற்றமொடு கையழிந்து புலவர்
வாடிய பசிய ராகிப்பிறர்
நாடுபடு செலவின ராயின ரினியே.

திணையும் துறையும் அவை.

ஆயைக் குட்டுவன்கீரனார் பாடியது.

இ - ள்—களத்திற்கேற்பநடக்கும் அசைந்தநடையையுடைய குதிரைகளும் யானைகளும் தேர்களும் அழியாதபுதுவருவாயையுடையநாடும் ஊர்களும் பாடுவார்க்குக்குறையறக்கொடுக்கும் ஆயாகிய அண்டிரன், கோடேந்திய அல்குலினையும் குறியவளைகளையுமுடைய உரிமைமகளிரோடுகாலனென்றுசொல்லப்படாநின்ற கண்ணோட்டமில்லாதவன் கொண்டுபோகத் தேவருலகத்தையடைந்தானாகக்கொண்டு பொந்தாகிய தான்வாழுமிடத்துப் போழ்ந்தாற்போலும் வாயலகையுடைய பேராந்தை சுட்டுக்குவியென்று செத்தாரை அழைப்பதுபோலக்கூவும் கள்ளியை

யுடைய பாழிடமாகிய புறங்காட்டுள் ஒருபுடையிலேதங்கி ஒள்ளியதீச்சுட உடம்பு மாய்ந்துவிட்டது ; பொலிவழிந்தகண்ணினையுடையாய்த் தம்மைப்பாதுகாப்போரைக்காணாது ஆரவாரிக்குங்கிளையுடனே செயலற்று அறிவுடையோர் தம்மெய்யுணங்கியபசியையுடையராய்ப் பிறருடையநாட்டின்கண் தலைப்படும் போக்கையுடையராயினர் இப்பொழுது ; இஃதோர்நிலை இருந்தவாறென்னை.—எ - று.

'மேலோ ருலக மெய்தின னெனவே' எனவும், 'ஒள்ளெரி நைப்ப வுடம்பு மாய்ந் தனனென' எனவும் பாடமோதுவாருமுளர். (உசo)

(உசக.) திண்டே ரிரவலர்க் கீத்த தண்டா
ரண்டிரன் வரூஉ மென்ன வொண்டொடி
வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுட்
போர்ப்புறு முரசங் கறங்க
ரு வார்ப்பெழுந் தன்றால் விசும்பி னானே.

திணையும் துறையும் அவை.

அவனை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

இ - ள்.—திண்ணியதேரை இரவலர்க்கீத்த குளிர்ந்தமாலையையுடைய ஆய் வருகின்றானென்று ஒள்ளியதொடியினையும் வச்சிராயுதத்தையுமுடைய விசாலமாகிய கையையுடைய இந்திரனதுகோயிலுள்ளே போர்த்தலுற்றமுரசமுழங்க வானத்தின்கண் ஓசைதோன்றிற்று.—எ - று.

இப்பெற்றிப்பட்டவள்ளியோனை வானோர் எதிர்கோடல் தப்பாதென்றவாறு.

இது, தற்குறிப்பேற்றமென்பதோரணிப்பொருட்டாய்நின்றது. (உசக)

(உசஉ.) இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி யணியா
ளாண்மை தோன்ற வாடவர்க் கடந்த
ரு வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ வொல்லையூர் நாட்டே.

திணையும் துறையும் அவை.

ஒல்லையூர்கிழான்மகன் பெருஞ்சாத்தனைக் குடவாயில் நல்லாதனார் பாடியது.

இ - ள்.—இளையவீரர் சூடார், வளையணிந்த இளையமகளிர் பறியார், நல்ல யாழ்க்கோட்டின் மெல்லவளைத்துப் பாணன்பறித்துச் சூடிக்கொள்ளான், பாணிச்சி சூடாள், தன்னுடைய ஆண்மைப்பாடுதோன்ற யாவர்க்கும் வெளிப்பட்டவீரரை எதிர்நின்றுகொன்றுவென்ற வலியவேலையுடையசாத்தன் இறந்துபட்டபின்பு முல்லையாயநீயும் பூக்கக்கடவையோ! அவனது ஒல்லையூர்நாட்டின்கண்.—எ - று.

அவனையிழந்து கொடியேனாய்வாழ்கின்ற யானேயன்றி நீயும் கொடியையாய்ப் பூக்கின்றாயோவென எச்சவும்மையாய்நின்றது.

என்றது, பூச்சூடி நுகர்வாரின்மையிற் பயனில்லையென்றதாம். (உசஉ)

(௨௪௩.) இனிநினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் *தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
†நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை
யளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே.

திணையும் துறையும் அவை.

~~அவனைத்~~ தொடித்தலைவிழுத்தண்டினார் பாடியது.

இ - ள்.—இப்பொழுதுநினைந்து இரக்கமாகாநின்றது; செறிந்தமணலிடத்துச்செய்யப்பட்ட வண்டற்பாவைக்குப் பறிக்கப்பட்டபூவைப் பறித்துச்சூடிக் குளிர்ந்தபொய்கையின்கண்விளையாடும் மகளிரோடுகைகோத்து அவர்தழுவினவிடத்தே தழுவி ... ... ... யசைந்து ஒளித்துச்செய்யுமஃது அறியாத வஞ்சனையில்லாத இளைமைந்தருடனேகூட உயர்ந்தகோடுகளையுடைய மருதினது துறையிலேவந்து உறத்தாழ்ந்து நீர்க்கு அண்ணிதாகப்படிந்த கொம்பிலேயேறி அழகுமிகக் கரையிடத்து நிற்போர்வியப்பத் திரையிடத்துத் திவலையெழ ஆழத்தானெடிய நீரையுடையமடுவின்கண் துடுமென்றொலிப்பக்குதித்து மூழ்கி மணலைமுகந்துகாட்டிய கல்வியில்லாத இளமை இரங்கத்தக்கது; அவ்விளமை எவ்விடத்துண்டுகொல்லோ; பூண்செறிந்த தலையையுடைய பரியதண்டுக்கோலையூன்றித் தளர்ந்து இருமல் இடையே நெருங்கின சிலவார்த்தையையுடைய பெரியமுதுமையையுடையேமாகிய எங்களுக்கு.—எ - று

எமக்கு இளமை யாண்டுண்டுகொல்லோ? அதுதான் இரங்கத்தக்கதெனக் கூட்டுக.

இளமைகழிந்து இரங்கிக்கூறுதலான் இதுவும் கையறுநிலையாயிற்று. 'மறையெனவறியா' என்று பாடமோதுவாருமுளர். (௨௪௩)

(௨௪௪.) பாணர் சென்னியும் வண்டுசென் றாதா
விறலியர் முன்கையுந் தொடியிற் பொலியா
விரவன் மாக்களு ......... .........

---

* தங்குவழித்தங்கியென்றும் பாடம்.

† நீர்க்கணிப்படிந்தவென்றும் பாடம்.

இ - ள்.— ......... .........

......... ......... முசுக்கலையினீக்குதற்கு இரலையென விசேடித்தனர் .........
......... சாதலென்பது இன்னாதாதலிற் பெரும்பிறிதாயின்றேயென்றான்.

தானுறுகின்றதுன்பத்தைக் கலைமேல்வைத்துக்கூறியவாறு. (உ௪௪)

(உ௪௫.) யாங்குப் பெரிதாயினு நோயள வெனைத்தே
யுயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையிற்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்ளிடைப் பொத்திய விளைவிற கீமத்
௫ தொள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனண் மடந்தை
யின்னும் வாழ்வ லென்னிதன் பண்பே.

திணையும் துறையும் அவை.

சேரமான் கோட்டம்பலத்துத்துஞ்சியமாக்கோதை தன் பெருங்கோப்பெண்டு துஞ்சியகாலைச் சொல்லியபாட்டு.

இ - ள்.—எப்படிப்பெரிதாயினும் யானுற்றநோயினது எல்லை எவ்வளவாயிற்று, என்னுயிரைப்போக்கமாட்டாத வலியையுடைத்தல்லாமையால். கள்ளிவளரப்பட்ட புறங்காட்டுள் வெள்ளிடையின்மூட்டிய தீயைவிளைக்கும் சிறியவிறகையுடைய படுக்கையின்கண் ஒள்ளிய அழலாகியபாயலின்கண்ணே பொருந்தப்பண்ணி, மேலுலகத்தேபோயினாள், மடவாள்; அவள்மாயவும் இன்னமும் உயிரிருந்துவாழ்வேன்; இவ்வுலகியற்கையிருந்தவாறு என்னோ.—எ - று.

எனைத்தென்றது, உயிரைப்போக்கமாட்டாமையின் நோயை இகழ்ந்துகூறியவாறு. 'பாவைசேர்த்தி' என்றோதி அவளுடம்பை அழகுபடப் பள்ளியுட்கிடத்தியென்றுரைப்பாருமுளர். உயிர்செகுக்கலாமைக்குக்காரணம் மதுகையுடைத்தல்லாமையெனவுணர்க.

பாயல்சேர்த்தி இன்னும்வாழ்வலெனவியையும். சேர்த்தவெனத் திரிப்பினுமமையும். 'ஞாங்கர்மாய்ந்தனள்' என்பதற்கு என்னைநீத்து முன்னே இறந்தாளென்றுமாம். (உ௪௫)

(உ௪௬.) பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
யணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
௫ காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
*தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்

* அடகிடைமிடைந்தவென்றும் பாடம்.

பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியு
முயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீம
நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே.

திணை - அது; துறை - ஆனந்தப்பையுள்.

பூதபாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்வாள் சொல்லியது.

ஆனந்தப்பையுளாவது,—

"விழுமங் கூர வேய்த்தோ ளரிவை
கொழுநன் வீயக் குழைந்துயங் கின்று."

இ - ள்.—பலசான்றவிரே, பலசான்றவிரே, நின்தலைவனோடு இறப்ப நீயேபோ வென்றுகூறாது அதனைத் தவிர்கவென்றுசொல்லிவிலக்கும் பொல்லாதவிசாரத்தை யுடைய பலசான்றவிரே, அணிலினதுவரிபோலும்வரியையுடைய வளைந்த வெள்ளரிக்காயை அரிவாளால் அரிந்திடப்பட்ட விதைபோன்ற நல்ல வெள்ளிய நறிய நெய்தீண்டாமல் இலை இடையேபயின்ற கையாற்பிழிந்துகொள்ளப்பட்ட நீர்ச்சோற்றுத்திரளுடனே வெள்ளிய எள்ளரைத்தவிழுதுடனே புளிகூட்டி அடப்பட்ட வேளையிலைவெந்த வேவையுமாகிய இவை உணவாகக்கொண்டு பருக்கைகளாற்படுக்கப்பட்ட படுக்கையின்கண் பாயுமின்றிக்கிடக்கும் கைம்மைநோன்பால் வருந்தும் பெண்டிருள்ளேமல்லேம், யாம்; புறங்காட்டின்கண் உண்டாக்கப்பட்ட கரிய முருட்டால் அடுக்கப்பட்டபிணப்படுக்கை உங்களுக்கு அரிதாவதாகுக; எமக்கு எம்முடையபெரியதோளையுடையனாகிய கொழுநன் இறந்துபட்டானாக, முகையில்லையாகவளவிய இதழ்மலர்ந்த தாமரையையுடையநீர்செறிந்த பெரியபொய்கையும் தீயும் ஒருதன்மைத்து.—எ - று.

இல் - விழைவின்கண்வந்தது.

எமக்குப் பொய்கையும் தீயும் ஒருதன்மைத்து; நுமக்கு அரிதாகுகவெனக் கூட்டுக. (உசசு)

(உசஎ.) யானை தந்த முளிமர விறகிற்
கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து
மடமான் பெருநிரை வைகுதுயி லெடுப்பி
மந்தி சீக்கு மணங்குடை முன்றி
னீர்வார் கூந்த லிரும்புறந் தாழப்
பேரஞர்க் கண்ணள் பெருங்காடு நோக்கித்
தெருமரு மம்ம தானே தன்கொழுநன்
முழவுகண் டுயிலாக் கடியுடை வியனகர்ச்

சிறுநனி தமிய ளாயினு
மின்னுயிர் *நடுங்குந்த னிளமைபுறங் கொடுத்தே.

திணையும் துறையும் அவை.

அவள் தீப்பாய்வாளைக்கண்டு மதுரைப்பேராலவாயார் சொல்லியது.

இ - ள்.—யானைகொண்டுவரப்பட்ட உலர்ந்தமரத்துவிறகால் வேடர்மூட்டப் பட்டு கடைந்துகொள்ளப்பட்ட எரியாகியவிளக்கினது ஒளியையுடைத்தாகிய மடவியமானாகிய பெரியநிரை வைகிய உறக்கத்தையெழுப்பி மந்திதூர்க்கும் அணங் குடைத்தேவியையுடையமுற்றத்து நீர்வடிந்த மயிர் மிக்கபுறத்தில்வீழப் பெரிய துன்பமேவியகண்ணையுடையளாய்ப் புறங்காட்டைப்பார்த்துத் தான்சுழலும், தன் தலைவன் முழவினதுகண் மார்ச்சனையுலராதகாவலையுடைய அகலியகோயிலுள் மிகச் சிறிதுபொழுது தனித்திருப்பினும் இனியவுயிர்தளரும் தன் இளமைபுறங்கொடுத்து.—எ - று.

......... .........யானவற்கு அஞ்சிநடுங்குதல் ......... .........

அம்ம - அசை.

இளமைபுறங்கொடுத்துப் பெருங்காடுநோக்கித் தான் தெருமருமெனக்கூட்டுக.

(௨௪௮.) அளிய தாமே சிறுவெள் ளாம்ப
லிளைய மாகத் தழையா யினவே
இனியே, பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்
தின்னா வைக லுண்ணு
மல்லிப் படூஉம் புல்லா யினவே.

திணை - அது; துறை - தாபதநிலை.

.........†எக்கூர்மாசாத்தனார் பாடியது.

தாபதநிலையாவது,—

‡"குருந்தலர் கண்ணிக் கொழுநன் மாய்ந்தெனக்
கருந்தடங் கண்ணி கைம்மை கூறின்று."

இ - ள்.—இரங்கத்தக்கன, சிறிய வெளிய ஆம்பல்; அவைதாம், யாம் இளையே மாயிருக்க முற்காலத்துத் தழையாயுதவின; இக்காலத்துப் பெரியசெல்வத்தை யுடையதலைவன் இறந்தானாக உண்ணுங்காலைமாறி இன்னாத வைகும்பொழுதின் கண் உண்ணும் தம் அல்லியிடத்துண்டாம் புல்லரிசியாயுதவின.—எ - று.

தாமின்புறுங்காலத்தும் துன்புறுங்காலத்தும் துணையாயுதவினவாதலான், அளியவாயினவென ஆம்பலைநோக்கிக்கூறியவாறாயிற்று.

நெல்லலாவுணவெல்லாம் புல்லென்றல் மரபு. (௨௪௮)

(௨௪௯.) கதிர்மூக் காரல் கீழ்ச்சேற் றொளிப்பக்
கணைக்கோட்டு வாளை மீநீர்ப் பிறழ

* நீங்குமென்றும் பிரதிபேதமுண்டு. † ஒக்கூரென்றும் பிரதிபேதமுண்டு.

‡ புறப்பொருள்வெண்பாமாலை, சிறப்பிற்பொதுவியற்படலம், ௯.

வெரிப்பூம் பழன நெரித்துடன் வலைஞ
ரரிக்குட ரரியின் யாமை யிளிரப்
பனை நுகும் பன்ன சினைமுதிர் வராலொ
டுறழ்வே லன்ன வொண்கயன் முகக்கு
மகனுட் டண்ணல் புகவே நெருநைப்
பகலிடங் கண்ணிப் பலரொடுங் கூடி
யொருவழிப் பட்டன்று மன்னே யின்றே
யடங்கிய கற்பி னாய்நுதன் மடந்தை
யுயர்நிலை யுலக மவன்புக வரிநீ
றாடு சுளகிற் சீறிட நீக்கி
யழுத லானாக் கண்ணண்
மெழுகு மாப்பிகண் கலுழ்நீ ரானே.

திணையும் துறையும் அவை.

.........  .........தும்பிசேர்கீரனர் பாடியது.

இ - ள்.—கதிர்நுனைபோலும் மூக்கையுடைய ஆரல்மீன் சேற்றின்கீழேசெருகத் திரண்ட [மிசையாகிய] கோட்டையுடையவாளைமீன் நீர்மேலேபிறழ எரிபோலுநிறத்தபூவையுடைய பொய்கைகளைநெருங்கி உடனே வலைஞரானவர்; ஒலி நரம்பால் ஓசையையுடையகிணையினது முகமேபோலும் யாமைபிறழப் பனையினது நுகும்பையொத்த சினைமுற்றியவராலோடு மாறுபடும்வேல்போன்ற ஒள்ளியகயலை முகந்துகொள்ளும் முன்னதன்றநாட்டையுடையகுரிசிலது உணவு நெருநலைநாளாற் பகுத்த இடத்தைக்கருதிப் பலருடனே இயைந்து ஒருவழிப்பட்டது, அது கழிந்தது; இன்று, தன்கண்ணேயடங்கியகற்பினையும் சிறியநுதலினையுமுடைய மடந்தை உயர்ந்தநிலைமையையுடைய விண்ணுலகத்தே அவன்சென்றுபுக அவனுக்கு உணவுகொடுத்தல்வேண்டிச் சுளகுபோலச் சிறியவிடத்தைத்துடைத்து அழுதலமையாதகண்ணையுடையளாய்த் தன்கண்கலுழ்கின்றநீராலே சாணகத்தைக்கொண்டு மெழுகுமளவிலேபட்டது.—எ - று.

மெழுகுமளவாயிற்றென்றது பொருளெனவுரைக்க. மன் - கழிவின்கண் வந்தது.

இது, கண்டார் நிலையாமைகூறி இரங்கியவாறு. (உசகூ)

(உருo.) குய்குரன் மலிந்த கொழுந்துவை யடிசி
லிரவலர்த் தடுத்த வாயிற் புரவலர்
கண்ணீர்த் தடுத்த தண்ணறும் பந்தர்க்
கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
யல்லி யுணவின் மனைவியோ டினியே
புல்லென் றனையால் வளங்கெழு திருநகர்
வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டு

முனித்தலைப் புதல்வர் தந்தை
தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே.

திணையும் துறையும் அவை.

......... தாயங்கண்ணியார் பாடியது.

இ - ள்.—தாளிப்போசைமிக்க கொழுவியதுவையோடுகூடிய அடிசில் இரவலரைத் தன்கண்ணே தகைத்தவாயிலினையும் தன்னுற்புரக்கப்படுவோர்கண்ணீரை மாற்றிய குளிர்ந்த நறிய பந்தரினையுமுடையமனையிடத்து மயிரைக்குறைத்துக் குறியவளையைக்களைந்து அல்லியரிசியாகிய உணவையுடையமனையாளுடனே இப்பொழுது பொலிவழிந்தாய்; செல்வம்பொருந்திய அழகாகியநகரே, வான்சோற்றைக்கொண்டு இனியபாலைவேண்டும் வெறுப்பைத் தம்மிடத்தேயுடைய புதல்வர் தந்தை தனியிடத்தையுடைய புறங்காட்டை அடைந்தபின்.—எ - று.

கொய்து நீக்கியென்னும்வினையெச்சங்களை உணவினையுடையவென்னுங்குறிப்புவினையோடுமுடிக்க.

நகரே, நீ புதல்வர்தந்தை காடுமுன்னியபின் புல்லென்றனையெனக்கூட்டுக.

முனித்தலை - குடுமித்தலையெனினுமமையும். (உ௫0)

(உ௫க.) ஓவத் தன்ன விடனுடை வரைப்பிற்
பாவை யன்ன குறுந்தொடி மகளி
ரிழைநிலை நெகிழ்த்த மள்ளற் கண்டிகுங்
கழைக்க ணெடுவரை யருவி யாடிக்
௫ கான யானை தந்த விறகிற்
கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே.

திணை - வாகை; துறை - தாபதவாகை.

.........மாற்பித்தியார் பாடியது.

இ - ள்.—ஓவியம்போலும் அழகினையுடைத்தாகிய இடமுடைய இல்லின்கண் கொல்லிப்பாவைபோன்றவடிவினையுடைய சிறியவளையணிந்தமகளிருடைய அணிகலங்களை அவைநிற்குநிலையினின்றும்கழலும்வகை ஆதாஞ்செய்தவனைக்கண்டேம்; மூங்கிலிடத்தையுடைய நெடியமலையிடத்து அருவிநீரையாடிக் காட்டியானைகொண்டுவரப்பட்டவிறகால் மிக்கவெம்மையையுடைய செந்தீயைவேட்டு முதுகின்கண்ணே தாழ்ந்த புரிந்தசடையைப்புலர்த்துவோன்.—எ - று.

ஆடி வேட்டுப் புலர்த்துவோனென இயையும்.

முன்பு இழைநெகிழ்த்தமள்ளற்கண்டேம், அவன் இப்பொழுது புறந்தாழ் புரிசடை புலர்த்தாநின்றேனென அவனைக்கண்டு வியந்துகூறியவாறு.

பாவையென்றது, பிறிது எவ்வுணர்வுமின்றிக் காமவேட்கையாகிய ஒருகுறிப்பினை. கானயானைதந்தவிறகென்றது, இவன்தவமிகுதியான் அதுவும் ஏவல்செய்தல். (உ௫க)

(உ௫உ.) கறங்குவெள் ளருவி யேற்றலி னிறம்பெயர்ந்து
தில்லை யன்ன புல்லென் சடையோ
டள்ளிலைத் தாளி கொய்யு மோனே
யில்வழங்கு மடமயில் பிணிக்குஞ்
௫ சொல்வலை வேட்டுவ னாயினன் முன்னே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர் பாடியது.

இ - ள்.—ஒலிக்கும்வெள்ளிய அருவிநீரை ஏற்றலாற் பழையநிறம் மாறித் தில்லந்தளிர்போன்ற புற்கென்றசடையோடுகூடிநின்று செறிந்த இலையையுடைய தாளியைப் பறிப்போன், மனையின்கணியங்கும் மடப்பத்தையுடையமயிலை அகப் படுத்திக்கொள்ளும் சொல்லாகிய வலையையுடைய வேட்டைக்காரனாயினான்மு ன்பு.—எ - று.

இதுவும் அவன்நிலைமையைக்கண்டு வியந்துகூறியது. (உ௫உ)

(உ௫௩.) என்றிறத் தவலங் கொள்ள லினியே
வல்லார் கண்ணி யிளையர் திளைப்ப
*நகாஅலென வந்த மாறே யெழாநெற்
பைங்கழை பொதிகளைந் தன்ன விளர்ப்பின்
௫ வளையில் வறுங்கை யோச்சிக்
கிளையு ளோய்வலோ கூறுநின் னுரையே.

திணை - பொதுவியல்; துறை - முதுபாலை.

.........†குளம்பாதாயனார் பாடியது.

முதுபாலையாவது,—

‡"காம்புயர் கடத்திடைக் கணவனை யிழந்த
பூங்கொடி யரிவை புலம்புரைத் தன்று."

இ - ள்.—நின்னைப்பிரிந்து ஆற்றேனுகின்றேன்; என்னுடையதிறத்து வருத் தங்கொள்ளாதொழிவாயாக, இப்பொழுது; சுற்றப்பட்ட கண்ணியையுடைய நின் னோடுகூடி விளையாடப்போந்த இளையோர் விளையாடாநிற்ப அவரோடு நகுகின் றிலேனென்றுகருதவந்த நின் இறந்துபாட்டை நெல் எழாத பசியமூங்கில் பட்டை யொழித்தாற்போன்ற வெளுத்திருந்த வளையில்லாதவறியகையைத் தலைமேலே யேற்றிக்கொண்டு நின் சுற்றத்திடத்தேசெலுத்தச் செல்லுவேனோ இன்னும், இற ந்துபடினல்லது, நின்வார்த்தையை எனக்குச்சொல்லுவாயாக.—எ - று.

அவலமென்றது, பிரிந்தவழி ஆற்றேனென்றுவருந்தும் அவலத்தை. கூறு நின்னுரையென அவன்சொற்கேட்டவிருப்பினாற் கூறுவான்போன்று மயங்கிக் கூறியவாறு. (உ௫௩)

---

* நகாரெனவந்தவென்றும் பாடம்.

† குளம்பாதயாறுரென்றும் பிரதிபேதமுண்டு.

‡ புறப்பொருள்வெண்பாமாலை, சிறப்பிற்பொதுவியற்படலம், ௧.

(உருச.) இளையரு முதியரும் வேறுபுலம் படர
வெடுப்ப வெழாஅய் மார்பமண் புல்ல
விடைச்சுரத் திறுத்த மல்லல் விளர்த்த
வளையில் வறுங்கை யோச்சிக் கிளையு
ளின்ன னாயின னிளையோ னென்று
நின்னுணர் *செல்லு மாயின் மற்று
முன்னூர்ப் பழுனிய கோளி யாலத்துப்
புள்ளார் யாணர்த் தற்றே யென்மகன்
வளனுஞ் செம்மலு மெமக்கென நாளு
மானாது புகழு மன்னை
யாங்கா குவள்கொ லளிய டானே.

திணையும் துறையும் அவை.
......... கயமனார் பாடியது.

இ - ள்.—இளையோரும் முதியோரும் வேற்றுநிலத்தே விலங்கிப்போக யான் எடுப்பவும் நீ எழுந்திராயாய் நினதுமார்பம் நிலத்தைப்பொருந்தச் சுரத்திடை மேம்படவீழ்ந்த இளையோய், வெளுத்தவளையில்லாத வறியகையைத் தலைமேலே வைத்துச் சுற்றத்தின்கண் இத்தன்மையனாயினான் இளையனென்று யான்சொல்ல நின் இறந்துபாடுகூடியவார்த்தைசெல்லுமாயின், ஊர்முன்னர்ப்பழுத்த கோளியாகிய ஆலமரத்தின்கீட் புள்ளுக்கள்மிகும் புதுவருவாயையுடைய அத்தன்மைத்து, என்னுடையமகனது செல்வமும் தலைமையும் எமக்கென்று நாடோறும் அமையாது புகழும் நின்னுடையமாதா எவ்வாறாவாள்கொல்! அவள் இரங்கத்தக்கவள்தான்.— எ - று.

வளனும்செம்மலும் புள்ளார்யாணர்த்தற்றென்றது, புள்ளெல்லாஞ்சென்றணுக ஆலமரம் பயன்பட்டுநின்றாற்போல இவனும் தன்சுற்றத்தாரும் பிறரும் நாட்டாரும் நுகரும்படி நின்றமைதோன்றிநின்றது. ‘நின்னுணர்செல்லுமாயின் யாங்காகுவள்கொல்’ என்றகருத்து: யான் இறந்துபட்டவாறுசொல்லினன்றே அவள் வருத்தமுறுவள்; அது யான்மாட்டேனென்பதாம். முன்னூர் - முன்மொழிநிலையல். மற்று - அசைநிலை. (உருச)

(உருரு.) ஐயோ வெனின்யான் புலியஞ் சுவலே
†யணைத்தனன் கொளினே யகன்மார் பெடுக்க வல்லே
னென்போற் பெருவிதிர்ப் புறுக நின்னை
யின்னா துற்ற வறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் சேர்க நடத்திசிற் சிறிதே.

திணையும் துறையும் அவை.
......... ......... வன்பரணர் பாடியது.

---

* சொல்லுமாயினென்றும் பாடம்.
† எடுத்தனன்கொளினென்றும் பாடம்.

இ - ள்.—ஐயோவென்று அரற்றுவேனாயின் அவ்வுரைவழியேவந்து நின் உடம்பாயினும் யான்காணப்பெறாமல் ஏதஞ்செய்யுமோவென்று புலியையஞ்சுவேன்; இவ்விடத்தினின்றும் எடுத்துக்கொண்டுபோவேனென்றுநினைப்பின் நினது அகலிய மார்பை எடுக்கமாட்டேன்; என்னையொப்பப் பெரிய நடுக்கத்தை உறுவதாக, உன்னை இறந்துபடும்பரிசுவந்துதாக்கிய அறமில்லாதகூற்றே; யாம் மலையினது நிழற்கண்ணே அடைவேமாக; எனது நிரைத்த வளையையுடைய முன்கையைப் பிடித்து மெல்லநடப்பாயாக.—எ - று.

நடவாயென்னும் முன்னிலைவினைச்சொல் சின்னென்னும் இடைச்சொல்லான் அசைக்கப்பட்டுநின்றது. (உருரு)

(உருசா.) கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே
யச்சுடைச் சாகாட் டாரம் பொருந்திய
சிறுவெண் பல்லி போலத் தன்னொடு
சுரம்பல வந்த வெமக்கு மருளி
வியன்மல ரகன்பொழி லீமத் தாழி
யகலி தாக வனைமோ
நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே.

திணையும் துறையும் அவை.

......... ......... ......... .........

இ - ள்,—கலம்வனையும் வேட்கோவே, கலம்வனையும் வேட்கோவே, சகடஞ்செலுத்தும் உருளின்கண் ஆரத்தைப்பொருந்திவந்த சிறிய வெளியபல்லிபோல் நெருநலைநாளாற் பலசுரமும் தன்னோடுகழிந்துவந்த எமக்கும் அருள்பண்ணியானும் அவனோடேகூடியிருக்கும்படி பெரியபரப்பினையுடைய அகலியபூமியிடத்துக் காட்டின்கண் முதுமக்கட்டாழியை இடமுடைத்தாக வனைவாயாக, பெரிய இடத்தினையுடைய பழைய ஊரின்கட் கலம்வனையும்வேட்கோவே.—எ - று.

'எமக்கும்' என்றது, பன்மையும் தலைமையுங்கருதாது மயங்கக்கூறிநின்றது.

கோவே, கோவே, மூதூர்க்கலஞ்செய்கோவே, எமக்கும் அருளி அகலிதாக வனைகவெனக்கூட்டுக.

அடுக்கு - விரைவின்கண்வந்தது. (உருசா)

(உருஎ.) செருப்பிடைச் சிறுபர லன்னன் கணைக்கா
லவ்வயிற் றகன்ற மார்பிற் பைங்கட்
குச்சி னிரைத்த குரூஉமயிர் மோவாய்
செவியிறந்து தாழ்தருங் கவுளன் வில்லோ
டியார்கொலோ வளியன் றானே தேரி
னூர்பெரி திகந்தன்று மிலனே யரணெனக்
காடுகொண் டன்று மிலனே காலைப்
புல்லா ரினநிரை செல்புற நோக்கிக்
கையிற் சுட்டிப் பையென வெண்ணிச்

சிலையின் மாற்றி யோனே யவைதா
மிகப்பல வாயினு மென்னா மெனைத்தும்
வெண்கோ டோன்றாக் குழிசியொடு
நாளுறை மத்தொலி கேளா தோனே.

திணை - வெட்சி; துறை - உண்டாட்டு.

......... ......... .........

உண்டாட்டாவது,—

*“ தொட்டிமிழுங் கழன்மறவர்
மட்டுண்டு மகிழ்தூங்கின்று.”

இ - ள்.—......... ......... திரண்டகாலையும் அழகியவயிற்றினையும் பரந்த மார்பினையும் பசியகண்ணினையும் குச்சிற்புல் நிரைத்தாற்போன்ற நிறம்பொருந்திய மயிரினையுடையதாடியினையும் செவியிறந்துமுன்னேதாழ்ந்த கதுப்பினையுமுடையனாய் வில்லுடனே யார்தான் இவ்வளிக்கத்தக்கான்றான்? ஆராயின் ஊரைப் பெரிதும்நீங்கினதுமிலன்; தனக்கு அரணெனக்கருதிக் காட்டைக் கொண்டதுமிலன்; இற்றைநாட்காலையே பொருந்தாரது இனமாகியநிரைபோகின்ற இடத்தைப்பார்த்துத் தன்கையாற்குறித்து மெல்ல எண்ணிக் கரந்தையார்செய்யும்பூசலைமாற்றி வில்லாலேகொடுபோந்தனன்; அந்நிரைதாம் மிகப்பலவேயாயினும் என்னபயன்படும் எத்தன்மைத்தும், பால்முதலியன பெய்யப்படாமையிற் சிறிதும் வெள்ளியமுகந்தோன்றாதபானையைக்கண்டவுடனே நாட்காலத்து உறைதெறிப்பக்கடையும் மத்தினொலியைக் கேளாதபடி பிறருக்குநேராகக்கொடுத்தல் வல்லனாயினான், அவனுக்கு.—எ - று.

பகைவர் மேல்நடக்கவொட்டாது எதிரினின்றுவிலக்குதலின், ‘செருப்பிடைச் சிறுபர லன்னன்’ எனப்பட்டது. ‘அன்ன’ என்று பாடமோதி, செருப்பிடைச் சிறுபரலோசைபோல நெடிய ஓசையையுடைய காலென்றுரைப்பாருமுளர். யார்கொலென்றது, அறியான்வினாதலன்றி வியப்பின்கண்வந்தது. ‘ஊர்பெரிதிகந்தன்றுமிலனே’ என்பது, நிரைகோட்கடுமை.

சிறுபரலன்னன் கவுளனாகிய அளியனானவன்றான் யார்கொல்லோ? தேரின் வில்லோடு ஊர்பெரிது இகந்தன்றுமிலனாய்க் காடுகைக்கொண்டதுமிலனாய் நோக்கி எண்ணி மாற்றினான்; மாற்றிக் குழிசிகாண்டலோடு மத்தொலிகேளாதோனாயினவனுக்கு அவைதாம் மிகப்பலவாயினும் என்னாமெனக்கூட்டுக.

கேளாதோற்கென உருபுவிரித்துரைப்பினுமமையும். (உ௫௭)

(உ௫௮.) முட்காற் காரை முதுபழ னேய்ப்பத்
தெறிப்ப விளைந்த தீங்கட் டார
நிறுத்த வாயந் தலைச்சென் றுண்டு
பச்சூன் றின்று பைந்நிணம் பெருத்த
வெச்சி லீர்ங்கை விற்புறந் திமிரிப்

* புறப்பொருள்வெண்பாமாலை, வெட்சிப்படலம், ௪௫.

புலம்புக் கனனே புல்லணற் காளை
யொருமுறை யுண்ணா வளவைப் பெருநிரை
யூர்ப்புற நிறையத் தருகுவன் யார்க்குந்
தொடுத லோம்புமதி முதுகட் சாடி
யாத்தரக் கழுமிய துகளன்
காய்தலு முண்டக் கள்வெய் யோனே.

திணையும் துறையும் அவை.

......... உலோச்சனார் பாடியது.

இ - ள்.—முட்டாளையுடைய காரையினது முதிர்ந்தபழத்தையொப்ப முற்ற விளைந்த இனிய கந்தாரமென்னும்பெயரையுடைய மதுவையுடைய வேற்றுப்புலத்துத் தான்கொண்டுவந்துநிறுத்தினநிரையைக் கள்விலைக்கு நேராகக்கொடுத்து உண்டு செவ்வித்தசையைத்தின்று செவ்வி நிணமிக்க எச்சிலாகிய ஈரமுடையகையை வில்லினதுபுறத்தேதிமிர்ந்து வேற்றுநாட்டின்கட்புக்கானே, புல்லியதாடியையுடையகாளை ; இவ்விருந்தமறவர் ஒருகாலுண்பதன்முன்னே பெரிய ஆனிரையை இவ்வூர்ப்புறமெல்லாம் நிறப்பக் கொடுதருகுவன் ; யாவர்க்கும்வாராது அதற்பொருட்டுத் தொடுதலைப் பாதுகாத்துவைப்பாயாக, முதிர்ந்தமதுவையுடையசாடியை ; ஆவைக்கொண்டுவரக் கலந்ததூளியையுடையனாய் அம்மதுவை விரும்புவோன் விடாய்த்தலுமுண்டாம்.—எ - று.

தலைச்சென்றென்பது, தலைச்செலவெனத்திரிக்கப்பட்டது. இதுக்குக் கள்விலையாட்டியிடத்தேசெல்லவென்றுமாம். தீங்கட்டாரமென்றோதிக் கள்ளாகிய இனியபண்டமெனினுமமையும். காய்தலுமுண்டென்பதற்குக் கள்வெய்யோனாகலின், நின்னை வெகுளவுங்கூடுமென்பாருமுளர். இவன்நிரைகொள்ளச் செல்கின்றமைகண்டார் கள்விலையாட்டிக்குக்கூறியது. (உருஅ)

(உருகூ.) ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயரா
திலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த
வல்வின் மறவ ரொடுக்கங் காணாய்
செல்லல் செல்லல் சிறக்கநின் னுள்ள
முருகுமெய்ப் பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கு மான்மேற்
புடையிலங் கொள்வாட் புனைகழ லோயே.

திணை - கரந்தை ; துறை - செருமலைதல்; பிள்ளைப்பெயர்ச்சியுமாம்.

.........கோடைபாடியபெரும்பூதனார் பாடியது.

செருமலைதலாவது,—

*"வெட்சியாரைக் கண்ணுற்றுவளைஇ
யுட்குவரத்தாக்கி யுளர்செருப்புரிந்தன்று."

* புறப்பொருள்வெண்பாமாலை, கரந்தைப்படலம், ச.

இ-ள்.—தாங்கொள்ளப்பட்ட ஏற்றையுடைய பெரிய ஆனிரை முன்னே போக மீட்கவருவாரைக்குறித்து அந்நிரையோடு தாம்போகாது தழையால்மூடிய பெரியகாட்டின்கண் தலைகரந்திருந்த வலியவில்லையுடையமறவரது ஒடுங்கியநிலையைக்கருதாய்; போகாதொழி போகாதொழி, நினது மேற்கோள் சிறப்பதாக; தெய்வம் மெய்யின்கணேறிய புலைமகளையொப்பத் தாவித்துள்ளும் ஆனிரைமேல்; மருங்கிலேவிளங்காநின்ற ஒள்ளிய வாளினையும் வீரக்கழலினையுமுடையோய்.—எ-று.

புனைகழலோய், காணாய்; செல்லல், செல்லல்; நின்னுள்ளம் சிறப்பதாக வெனக்கூட்டுக.

செல்லலென்றது, அவரைக்கண்டு பொருது கொன்றன்றிச் செல்லலென்பதாம். (உருக)

(உசுo.) வளரத் தொடினும் வௌவுபு திரிந்து
விளரி யுறுதரும் தீந்தொடை நினையாத்
தளரு நெஞ்சந் தலைஇ மனையோ
ளுளரும் கூந்த னோக்கிக் களர
கள்ளி நீழற் கடவுள் வாழ்த்திப்
பசிபடு மருங்குலை கசிபுகை தொழாஅக்
காணலென் கொல்லென வினவினை வரூஉம்
பாண கேண்மதி யாணரது நிலையே
புரவுத்தொடுத் துண்குவை யாயினு மிரவெழுந்
தெவ்வங் கொள்குவை யாயினு மிரண்டுங்
கையுள போலுங் கடிதண் மையவே
முன்னூர்ப் பூசலிற் றோன்றித் தன்னூர்
நெடுநிரை தழீஇய மீளி யாளர்
விடுகணை நீத்தந் துடிபுணை யாக
வென்றி தந்து கொன்றுகோள் விடுத்து
வையகம் புலம்ப வளைஇய பாம்பின்
வையெயிற் றுய்ந்த மதியின் மறவர்
கையகத் துய்ந்த கன்றுடைப் பல்லா
னிரையொடு வந்த வுரைய னாகி
யுரிகளை யரவ மானத் தானே
யரிதுசெ லுலகிற் சென்றன னுடம்பே
கானச் சிற்றியாற் றருங்கரைக் *காலுற்றுக்
கம்பமொடு துளங்கிய †விலங்கு போல
வம்பொடு துளங்கி யாண்டொழிந் தன்றே
யுயரிசை வெறுப்பத் தோன்றிய பெயரே

---

* காலுறவென்றும் பாடம். † இலக்கம்போலவென்றும் பாடம்.

மடஞ்சான் மஞ்ஞை யணிமயிர் சூட்டி
யிடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படஞ்செய் பந்தர்க் கன்மிசை யதுவே.

திணை - அது; துறை - கையறுநிலை ; பாடாண்பாட்டுமாம்.
......... ......... ........., வடமோதங்கிழார் பாடியது.

இ - ள்.—ஓசைமிகவேண்டுமென்று அறையினும் ஓசையை உள்வாங்கி வேறுபட்டு இரங்கற்பண்ணாகிய விளரியைச்சென்றுறுகின்ற இனிய நரப்புத்தொடையினது தீங்கைநினைந்து நடுங்குநெஞ்சத்தைத்தலைப்பட்டுப் புறப்பட்டவளவின் நிமித்தவழியாக ஒருமனைவி விரித்துவருகின்ற மயிரைப்பார்த்துக் களர்நிலத்துள்ள கள்ளிமரத்தின் நிழற்கணுண்டாகிய தெய்வத்தையேத்திப் 'பசிதங்கிய வயிற்றையுடையையாய் இரங்கிக் கையாற்றொழுது நங்குரிசிலைக் காணமாட்டேன்கொல்லோவென்று எதிர்வருவாரைப்பார்த்துக் கேட்டுவருகின்றபாண, கேட்பாயாக, நமது செல்வம்பட்டநிலைமை ; இனி நீ அவன் நமக்குவிட்ட விளைநிலங்களைக் கைப்பற்றி உண்பாயாயினும் அன்றி அவனோடுகூடி இன்புற்றிருந்தவிடத்து அவனையின்றி உயிர்வாழ்தற்பொருட்டு இரக்கக்கடவோமென்றெழுந்திருந்து வருத்தங்கொள்வாயாயினும் இரண்டும் நினது கையகத்துள்ளன ; மிக்க அனுமையையுடைய. ஊர் முன்னாகச்செய்யப்பட்ட பூசலின்கட்டோன்றித் தன்னுடைய ஊரின்கண் மிக்க நிரையைக்கொண்ட மறத்தினையுடையவீரர் எய்யப்பட்ட அப்புவெள்ளத்தைத் தன் துடியே புணையாகவென்று பகைவரைக்கொன்று அவர்கொண்டநிரையை மீட்டு உலகம்தனிப்பச் சூழ்ந்துகொண்ட பாம்பினது கூரியபல்லினின்றும் பிழைத்துப் போந்த திங்களைப்போல மறவருடைய கையினின்றும் பிழைத்துப்போந்த கன்றையுடைய பலவாகிய ஆனிரையுடனேவந்த சொல்லையுடையனாய்த் தோலுரித்த பாம்புபோலத் தானொருவனுமேயாக அரிதாகச்செல்லப்படும் தேவருலகத்தின் கட்போயினான் ; அவனதுடம்பு, காட்டுட் சிற்றியாற்றினது அரியகரையிடத்துக் காலுற நின்று நடுக்கத்தோடுசாய்ந்த விலங்கினையொப்ப அம்பாற்சலித்து அவ்விடத்துவீழ்ந்தது ; உயர்ந்தகீர்த்தி மிகவுந்தோன்றிய மறவன்பெயர் மென்மையமைந்த மயிலினது அழகியமயிராகிய பீலியைச்சூட்டப் பிறர் இடங்கொள்ளப்படாத சிறியவிடத்துப் புடைவையாற்செய்யப்பட்டபந்தர்க்கீழ் நட்ட கன்மேலது.—எ - று.

சூட்டியென்பது, சூட்டவெனத் திரிக்கப்பட்டது ; சூட்டப்பட்டெனினுமமையும். 'மனையோள்கூந்தனோக்கி' என்பதற்குப் பாண என்மனைவியது சரியும் மயிரைநோக்கியெனவும், 'புரவுத்தொடுத்து' என்பதற்கு அன்று உம்மைப்புரந்தபரிசைப்பாடியெனவுமுரைப்பாருமுளர். (௨௬௦)

(௨௬௧.) அந்தோ வெந்தை யடையாப் பேரில்
வண்டுபடு நறவிற் றண்டா மண்டையொடு
வரையாப் பெருஞ்சோற்று முரிவாய் முற்றம்
வெற்றியாற் றம்பியி னெற்றற் றாகக்
கண்டனென் மன்ற சோர்கவென் கண்ணே
வையங் காவலர் வளங்கெழு திருநகர்
மையல் யானை வயாவுயிர்த் தன்ன

நெய்யுலை சொரிந்த மையூ னோசை
புதுக்கண் மாக்கள் செதுக்க ணாரப்
பயந்தனை மன்னான் முன்னே யினியே
பல்லாத் தழீஇய கல்லா வல்வி
லுழைக்குரற் கூகை யழைப்ப வாட்டி
நாகுமுலை யன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மரபிற் சூட்ட
நிரையிவட் டந்து நடுக லாகிய
வென்வேல் விடலை யின்மையிற் புலம்பிக்
கொய்ம்மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய
கழிகல மகடூஉப் போலப்
புல்லென் றனையாற் பல்லணி யிழந்தே.

திணையும் துறையும் அவை.

......... ......... ஆவூர்மூலங்கிழார் பாடியது.

இ - ள்.—அந்தோ! என்னிறைவனது அடையாத பெரிய இல்லே, வண்டு கள்படியும் மதுவினால் ஒழியாதமண்டையுடனே யாவர்க்கும் வரையாமல்வழங்கும் மிக்க சோற்றையுடைய முரிந்த குறட்டையுடைத்தாகியமுற்றம் நீரற்றயாற்றினோடம் எத்தன்மைத்து அத்தன்மைத்தாகக்கண்டேன், நிச்சயமாக; என்கண்மணி சோர்ந்துவீழ்வனவாக; உலகத்தைக்காக்கும்வேந்தருடைய செல்வமிக்கதிருநகரின்கண் மதத்தான் மயங்கியயானை உயங்குதலான் நெட்டுயிர்ப்புக்கொண்டாற்போன்ற நெய்காய்கின்ற உலையின்கண்சொரியப்பட்ட ஆட்டிறைச்சியினது ஓசையையுடைய பொரியலைப் புதுமாந்தருடைய ஒளிமழுங்கினகண்கள்நிறையவுண்டாக்கினாய், முன்பு; அதுகழிந்தது; இப்பொழுது பல ஆனிரையைக்கைக்கொண்ட கற்கவேண்டாத வலிய விற்படையைத் தன்னிடத்தே குரலைமிகவுடைய கூகை தன் இனத்தையழைக்கும்படி அலைத்து நாகினதுமுலைபோன்ற நறியபூவையுடையகரந்தையை அறிவுடையோர்சூட்டுமுறைமையிலேசூட்ட நிரையை யூரின்கண்மீட்டுத்தந்து நடப்பட்ட கல்லாகிய வென்றிவேலையுடைய இளைஞன் இல்லாமையால் தனித்துக் கொய்யப்பட்ட மட்டையாகியதலையுடனே கைம்மைத் துன்புமிகக் கலக்கமுற்ற ஒழிக்கப்பட்ட அணிகலத்தையுடைய அவன்பெண்டிரை யொப்பப் பொலிவழிந்தனை, பல அழகுமிழந்து.—எ - று.

அம்பியிலென்புழி, இன் - அசைநிலை. 'அம்பியினற்றை
வாருமுளர். மன் - கழிவின்கண்வந்

எந்தைபேரில்லே, செதுக்கணா
பல அணியுமிழந்து புல்லென்றனையா
சோர்கவெனக்கூட்டுக.

ஓசையென்றது, ஆகுபெயரான்
சொல். 'செதுக்கணார' என்பதற்குச்
மிஞ்சவென்றுமாம்.

(உகூஉ.) நறவுந் தொடுமின் விடையும் வீழ்மின்
பாசுவ லிட்ட புன்காற் பந்தர்ப்
புனறரு மிளமண னிறையப் பெய்ம்மி
னொன்னார் முன்னிலை முருக்கிப் பின்னின்று
நிரையொடு வரூஉ மென்னைக்
குழையோர் தன்னினும் பெருஞ்சா யலரே.

திணை - வெட்சி; துறை - உண்டாட்டு; தலைத்தோற்றமுமாம்.

......... ......... மதுரைப்பேராலவாயார் பாடியது.

தலைத்தோற்றமாவது,—

*" உரவெய்யோ னினந்தழீஇ
வரவுணர்ந்து கிளைமகிழ்ந்தன்று."

இ - ள்.—மதுவையும் அலைத்துண்ணும்படி பிழிமின்; ஆட்டுவிடையையும் படுமின்; பசிய தழையாலே வேயப்பட்ட புல்லிய காலையுடைய பந்தரின்கண் நீர் கொழித்துக் கொடுவரப்பட்ட இளையமணலை நிரம்பப்பரப்புமின்; பகைவரது தூசிப்படையை முறித்துப் பெயர்ந்துபோதுகிற தனதுபடைக்குப்பின்னே நின்று நிரையுடனே வருகின்ற என்னிறைவனுக்குப் பக்கமறவராய் நிரைகொண்டுவருவோர் அவன்றன்னினும் பெரிய இளைப்பையுடையர்.—எ - று.

சாயல் - விடாயாலுண்டானமென்மை.

என்னைக்கு உழையோர் தன்னிலும் பெருஞ்சாயலர்; அவர்க்கு நறவும்தொடுமின்; விடையும்வீழ்மின்; பெய்ம்மினெனக்கூட்டுக. (உகூஉ)

(உகூங.) †பெருங்களிற் றடியிற் றோன்று மொருகண்
ணிரும்பறை யிரவல சேறி யாயிற்
றொழுதனை கழித லோம்புமதி வழாது
வண்டுமேம் படூஉமிவ் வறநிலை யாறே
பல்லாத் திரணிரை பெயர்தரப் பெயர்தந்து
கல்லா விளையர் நீங்க நீங்கான்
வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல்புனற் சிறையின் விலங்கியோன் கல்லே.

திணை - கரந்தை; துறை - கையறுநிலை.

......... ......... ......... ......... .........

இ - ள்.—பெரியகளிற்றின் அடிபோலத்தோன்றும் ஒருகண்ணினையுடைத்தாகிய பெரிய பறையினையுடைய இரவலனே, நீபோகின்றாயாயின் தொழாயாய்ப்

* புறப்பொருள்வெண்பாமாலை, வெட்சிப்படலம், கஉ.

† இதுமுதலிய மூன்றுபாட்டுக்களின் உரையும், உகூ௬-ம் பாட்டும் அதனுரையும் மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக்கவிராயரவர்கள்வீட்டுப் பிரதியில்மட்டுமிருந்தன.

போதலைப்பரிகரிப்பாயாக; த தெ......... வண்டுகள் மேம்பட்டுவாழும், இக் கொடியவழி; பல ஆக்களாகிய திரண்ட நிரை மீண்டு தன்னோடுபோதரப்போந்து இயல்பாகிய போர்த்தொழிலையுடையவீரர் இரிந்தோடத் தான்போகானாய் வில் லுமிழப்பட்ட விரைந்த அம்புகுளிப்பக் கரையைக்கொல்லும் புனலின்கண் அணை போல எதிர்நின்றுவிலக்கியவனது கல்லை.—எ - று.

புனற்சிறை நயின்விலங்கியோன்கல்லைத் தொழாதனைகழிதலை ஓம்பு; தொழவே அவ்வறநிலையாறுவண்டுமேம்படுமெனக்கூட்டுக.

தொழுதுபோகவே சொடுங்கானம்மழைபெய்தலாற்குளிருமென்பான், காரிய மாகியவண்டுமேம்படுதலைக்கூறினான். வண்டென்பது, மறவருளொருசாதியென்பா ருமுளர். ஆறு வண்டுமேம்படூஉமென இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்து மேலேறிநின்றது. (உசரு)

(உசசு.) பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொ
டணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
தினிநட் டனரே கல்லுங் கன்றொடு
ரு கறவை தந்து பகைவ ரோட்டிய
நெடுந்தகை கழிந்தமை யறியா
தின்றும் வருங்கொல் பாணரது கடும்பே.

திணையும் துறையும் அவை.

......... *உறையூர் இளம்பொன்வாணிகனார் பாடியது.

இ - ள்.—பருக்கைக்கலையுடையவிடத்துத் திட்டையைச்சேர்த்தி ஆண்டுள்ள மரலைக்கீறித்தொடுக்கப்பட்ட சிவந்தபூவையுடைய கண்ணியுடனே அழகியமயிலி னது பீலியைச்சூட்டிப் பெயரையெழுதி இப்பொழுதுநட்டார், கல்லையும்; கன் றுடனே கறவையையுமீட்டுக்கொண்டுவந்து மறவரையோட்டிநோக்கிய நெடுந் தகை பட்டமையறியாது இன்றும்வருங்கொல்லோ பாணரது சுற்றம்.—எ - று.

பட்டமையறிந்துவாராதொழியுமோ அறியாதுவருமோவென ஐயமாக்குக. பதுக்கைசேர்த்தலேயன்றிக் கல்லும் நட்டனரென உம்மை எஞ்சிநின்றது (உசசு)

(உசரு.) ஊர்நனி யிறந்த பார்முதிர் பறந்தலை
யோங்குநிலை வேங்கை யொள்ளிணர் நறுவீப்
போந்தையந் தோட்டிற் புனைந்தனர் தொடுத்துப்
பல்லான் கோவலர் படலை சூட்டக்
ரு கல்லா யினையே கடுமான் றோன்றல்
வானேறு புரையுநின் றாணிழல் வாழ்க்கைப்
பரிசிலர் செல்வீ மன்றியும் விரிதார்க்
கடும்பகட் டியானை வேந்த
ரொடுங்கா வென்றியு நின்னொடு செலவே.

---

* .........ன்சாத்தங்கொற்றனார் பாடியதென்றும் பிரதிபேதமுண்டு.

திணையும் துறையும் அவை.

........ மூகையலூர்ச் சிறுகருந்தும்பியார் பாடியது.

இ - ள்.—ஊரைமிகவுங்கடந்த முரம்புநிலமாகிய முதிர்ந்த பறந்தலையிடத்து உயர்ந்தநிலையையுடைய வேங்கையினது ஒள்ளிய கொத்தாகிய நறியபூவைப் பனை யோலையாலலங்கரித்துத்தொடுத்து .................... .................... (உகூரு)

(உகூகூ.)*பயங்கெழு மாமழை பெய்யாது மாறிக்
கயங்களி முளியுங் கோடை யாயினும்
புழற்கா லாம்ப லகலடை நீழற்
கதிர்க்கோடு நந்தின் சுரிமுக வேற்றை
நாகிள வளையொடு பகன்மணம் புகூஉ
நீர்திகழ் கழனி நாடுகெழு பெருவிறல்
வான்றோய் நீள்குடை வயமான் சென்னி
சான்றோ ரிருந்த வவையத் துற்றோ
ஞசா கென்னும் பூசல் போல
வல்லே களைமதி யத்தை யுள்ளிய
விருந்துகண் டொளிக்குந் திருந்தா வாழ்க்கைப்
பொறிப்புண ருடம்பிற் றோன்றியென்
னறிவுகெட நின்ற நல்கூர் மையே.

திணை - பாடாண்டிணை; துறை - பரிசில்கடாநிலை.

சோழன் உருவப் பஃறேரிளஞ்சேட்சென்னியைப் பெருங்குன்றூர்கிழார் பாடியது.

இ - ள்.—பயன்பொருந்திய பெரியமுகில் பெய்யாதொழிதலால் நீர்நிலைகள் களியாய்முளியும் கோடைக்காலமாயினும் துளைபொருந்திய தாளையுடைய ஆம்பலினது அகலிய இலையினிழற்கண் கதிர்போலுங்கோட்டையுடைய நத்தையினது சுரிமுகத்தையுடைய ஏற்றை நாகாகிய இளையசங்குடனே பகற்காலத்தேமணங் கூடும் நீர்விளங்கும் வயலையுடைத்தாகிய நாட்டையுடைய பெரிய வென்றியை யுடையோய், ஆகாயத்தைப்பொருந்தும் நெடியகுடையினையும் வலியகுதிரையினை யுமுடைய சென்னி, அறிவானமைந்தோர் தொக்கிருந்த அவையின்கண் சென்று பொருந்தினானொருவன் யானுற்ற துன்பத்திற்குத்துணையாய் எனக்கு நீர் பற்றுக வேண்டுமென்னும் ஆரவாரத்தை அவர் விரையத்தீர்க்குமாறுபோல விரையத் தீர்ப் பாயாக, என்னைக் கருதிவரப்பட்ட விருந்தினரைக்கண்டுவைத்து அவர்க்கு விருந் தாற்றமாட்டாமல் ஒளிக்கும் நன்மையில்லாத இல்வாழ்க்கையையுடைய ஐம் பொறியும் குறைவின்றிப்பொருந்திய எனது யாக்கையின்கட்டோன்றி அவற்றா னாயபயன்கொள்ளாதபடி எனது அறிவுகெட நிலைபெற்ற வறுமையை.—எ - று.

மதியும் அத்தையும் - அசைநிலை.

* இப்பாட்டு, புறத்திரட்டிலுங் காணப்பட்டது.

பெருவிறல், சென்னி, சான்றோரிருந்த அவையத்துற்றோன்பூசலை அவர் விளையக்களைந்தாற்போல எனது நல்கூர்மையை வல்லேகளைகெனக்கூட்டி வினை முடிவுசெய்க.

நந்து வளையொடு பகன்மணம் புகூஉமென்றகருத்து : அவை தம்செருக்கினால் சாதியறியாது மயங்கிப்புணருமென்று நாட்டின்மிகுதி கூறியதனால், அவன் செயல் மிகுதிகூறியவாறு. 'நாகிளந் தவளையொடு பகன்மணம் புகூஉம்' என்று பாடமோதி, நந்தினேற்றை நாகிளந்தவளையுடனே தத்தம் இனத்தொடு மணம்புகூஉமென்றுரைப்பினுமமையும். 'ஆசாகு' என்பதனை இரங்கற்குறிப்புப்படுமொழியென்பாருமுளர். பெருவிறலையுடைய வயமான்சென்னியெனினுமாம். 'பொறிப்புணருடம்பிற் றோன்றி' என்பதற்குப் பாவைபோலும் வடிவுமாத்திரையேதோயன்றித் தோன்றியபயன்கொள்ளாமையால் என் அறிவுகெடநின்ற நல்கூர்மையென்றும், 'விருந்துகண் ணொளிக்கும்' என்பதற்கு வறுமைகண்டு வந்தவிருந்து தாம் அது காணமாட்டாது ஒளிக்குமென்றும் உரைப்பாருமுளர். மாறியென்பது, மாறவெனத்திரிக்கப்பட்டது. (உசாசா)

*(உசாஎ.)......... ......... ......... .........

*(உசாஅ.)......... ......... ......... .........

(உசாகூ.) †குயில்வா யன்ன கூர்முகை யதிரல்
பயிலா தல்கிய பல்காழ் மாலை
மையிரும் பித்தை பொலியச் சூட்டிப்
புத்தகற் கொண்ட புலிக்கண் வெப்ப
றொன்றிரு முறையிருந் துண்ட பின்றை
யுவலைக் கண்ணித் துடியன் வந்தெனப்
பிழிமகிழ் வல்சி வேண்ட மற்றிது
கொள்ளா னென்ப கள்ளின் வாழ்த்திக்
கரந்தை நீடிய வறிந்துமாறு செருவிற்
பல்லா னினநிரை தழீஇய வில்லோர்க்
கொடுஞ்சிறைக் குரூஉப்பருந் தார்ப்பத்
தடிந்துமாறு பெயர்த்தவிக் கருங்கை வாளே.

திணை - வெட்சி; துறை - உண்டாட்டு.

ஔவையார். (உசாகூ)

(உஎ0.) பன்மீ னிமைக்கு மாக விசும்பி
னிரங்கு முரசி னினஞ்சால் யானை

---

* இவ்வெண்களுக்குரியபாட்டுக்கள், கிடைத்த கையெழுத்துப்பிரதிகளுள் ஒன்றிலும் காணப்படவில்லை.

† இதுமுதலிய எல்லாப்பாட்டிற்கும் உரை அகப்படவில்லை; மூலங்களும் இடையிடையே சிதைந்தும் பொருளினுண்மைகாணக்கூடாதவண்ணம் பிறழ்ந்தும் போயிருக்கின்றன.

நிலந்தவ வுருட்டிய நேமி யோருஞ்
சமங்கண் கூடித் தாம்வேட் பவ்வே
நறுவிரை துறந்த நாறா நரைத்தலைச்
சிறுவர் தாயே பேரிற் பெண்டே
நோகோ யானே நோக்குமதி நீயே
மறப்படை நுவலு மரிக்குரற் றண்ணுமை
யின்னிசை கேட்ட துன்னரு மறவர்
வென்றிதரு வேட்கையர் மன்றங் கொண்மார்
பேரம ருழந்த வெருவரு பறந்தலை
விழுநவி மாய்ந்த மரத்தின்
வாண்மிசைக் கிடந்த வாண்மையோன் றிறத்தே.

திணை - கரந்தை; துறை - கையறுநிலை.

கண்டார் தாய்க்குச்சொல்லியது.

கழாத்தலையார். (உஎ0)

(உஎக.) நீரற வறியா நிலமுதற் கலந்த
கருங்குர னொச்சிக் கண்ணார் குவவுத்தழை
மெல்லிழை மகளி ரைதக லல்குற்
றொடலை யாகவுங் கண்டன மினியே
வெருவரு குருதியொடு மயங்கி யுருவுகரந்
தெற்றுவாய்ப் பட்ட தெரிய லூரன்
செத்துப் பருந்துண் டெவ்வயாங் கண்டன
மறம்புகன் மைந்தன் மலைந்த மாறே.

திணை - நொச்சி; துறை - செருவிடைவீழ்தல்.

வெறிபாடிய காமக்கண்ணியார். (உஎக)

(உஎஉ.) மணிதுணர்ந் தன்ன மாக்குர னொச்சி
போதுவிரி பன்மர னுள்ளுஞ் சிறந்த
காத னன்மர நீமற் றிசினே
கடியுடை வியனகர்க் காண்வரப் பொலிந்த
தொடியுடை மகளி ரல்குலுங் கிடத்தி
காப்புடைப் புரிசை புக்குமா றழித்தலி
னூர்ப்புறங் கொடாஅ நெடுந்தகை
பீடுகெழு சென்னிக் கிழமையு நினதே.

திணையும் துறையும் அவை.

மோசிசாத்தனார். (உஎஉ)

(உஎ௩.) மாவா ராதே மாவா ராதே
யெல்லார் மாவும் வந்தன வெம்மிற்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் றந்த
செல்வ னூரு மாவா ராதே
யிருபேர் யாற்ற வொருபெருங் கூடல்
விலங்கிடு பெருமரம் போல
வுலந்தின்று கொல்லவன் மலைந்த மாவே.

திணை - தும்பை; துறை - குதிரைமறம்.
எருமைவெளியனார். (உஎ௩)

(உஎ௪.) நீலக் கச்சைப் பூவா ராடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்றொடு வேறுரந் தினியே
தன்னுந் துரக்குவன் போலு மொன்னல
ரெஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பி னூக்கி மெய்க்கொண் டனனே.

திணை - அது; துறை - எருமைமறம்.
உலோச்சனார். (உஎ௪)

(உஎ௫.) கோட்டங் கண்ணியுங் கொடுந்திரை யாடையும்
வேட்டது சொல்லி வேந்தனைத் தொடுத்தலு
மொத்தன்று மாதோ விவற்கே செற்றிய
திணிநிலை யலறக் கூழை போழ்ந்துதன்
வடிமா ணெஃகங் கடிமுகத் தேந்தி
யோம்புமி னோம்புமி னிவணென வோம்பாது
தொடர்கொள் யானையிற் குடர்கா றட்பக்
கன்றமர் கறவை மான
முன்சமத் தொழிந்ததன் றோழற்கு வருமே.

திணையும் துறையும் அவை.
ஒரூஉத்தனார். (உஎ௫)

(உஎ௬.) நறுவிரை துறந்த நரைவெண் கூந்த
லிரங்கா ழன்ன திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் காதலஞ் சிறாஅன்
குடப்பாற் சில்லுறை போலப்
படைக்குநோ யெல்லாந் தானா யினனே.

திணை - அது; துறை - தானைநிலை.
மதுரைப்பூதனிளநாகனார். (உஎ௬)

(உஎஎ.) ......... ......... ......... .........னை
வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
யீன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
கொன்கழை துயல்வரும் வெதிர .........
.........த் தூங்கிய சிதரினும் பலவே.

திணை - அது; துறை - உவகைக்கலுழ்ச்சி.

பூங்கணுத்திரையார். (உஎஎ)

(உஎஅ.) நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோண்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
வீன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.

திணையும் துறையும் அவை.

காக்கைபாடினியார் *நச்செள்ளையார். (உஎஅ)

(உஎகூ.) கெடுக சிந்தை கடிதிவ டுணிவே
மூதின் மகளி ராத றகுமே
மேனா ளுற்றசெரு விற்கிவ டன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்றசெரு விற்கிவள் கொழுநன்
பெருநிரை விலக்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
யொருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே.

திணை - வாகை; துறை - மூதின்முல்லை.

ஒக்கூர்மாசாத்தியார். (உஎகூ)

(உஅ0.) என்னை மார்பிற் புண்ணும் வெய்ய
நடுநாள் வந்து தும்பியுந் துவைக்கு

* நச்செள்ளையாரென்றும், நச்செளையாரென்றும் பிரதிபேதமுண்டு.

நெடுநகர் வரைப்பின் விளக்கு நில்லா
துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கு
மஞ்சுவரு குராஅற் குரலுந் தூற்று
நென்னீ ரெறிந்து விரிச்சி யோர்க்குஞ்
செம்முது பெண்டின் சொல்லு நிரம்பா
துடிய பாண பாடுவல் விறலி
யென்னா குவிர்கொ லளியிர் நுமக்கு
மிவணுறை வாழ்க்கையோ வரிதே யானு
மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாரத்
தொன்றுநா முடுத்த வம்பகைத் தெரியற்
சிறுவெள் ளாம்ப லல்லி யுண்ணுங்
கழிகல மகளிர் போல
வழிநினைந் திருத்த லதனினு மரிதே.

திணை - பொதுவியல்; துறை - ஆனந்தப்பையுள்.
மாறோக்கத்துநப்பசலையார். (௨௮௦)

(௨௮௧.)*(௧)தீங்கனி யிரமொடு வேம்பு (௨)மனைச்செரீஇ
(௩)வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்கப்
(௪)பைப் பெயர்த்து (௫)மைவிழு திழுகி
யையவி சிதறி யாம்ப லூதி
யிசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
(௬)காக்க வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறி யுடைய நெடுந்தகை புண்ணே.

திணை - [காஞ்]சி; துறை - பேய்க்காஞ்சி.
அரிசில்கிழார். (௨௮௧)

௧. தீங்கினியிரமொடு. ௩. யாங்குமருப்பு. ௬. காக்கம்வம்மோ.
தீங்கனியிரவமொடு. ௪. கைபயப்பெயர்த்து.
௨. மனைச்செரீஇய. ௫. மையிழுதிழுகி.

(௨௮௨.) எஃகுளங் கழிய விருநில மருங்கி
னருங்கட னிறுத்த பெருஞ்செ யாளனை
யாண்டுள னோவென வினவுதி யாயிற்
......... ......... ......... .........

* இதுமுதலாக மூலத்தில் இயைபிலிசைக்குறிக்கப்பட்ட எண்களுக்குச் சரியாக அவ்வப்பாட்டின்கீழே எழுதப்பட்டுள்ள குறிப்புக்கள், பிரதிபேதங்களிலுள்ள பாடபேதங்களெனக்கொள்க.

வருபடை தாங்கிய கிளர்தா ரகல
மருங்கட னிறுமார் (க)வயவ ரெறிய
வுடம்புந் தோன்று வுயிர்கெட் டன்றே
மலையுநர் மடங்கி மாறெதிர் (உ)கழியத்
......... ......... ......... .........
யலகை (ங)போகிச் சிதைந்துவே றாகிய
பலகை யல்லது களத்தொழி யாதே
சேண்விளங்கு நல்லிசை நிறீஇ
நாநவில் புலவர் வாயு ளானே.

திணை - ......... ......... ......... .........
பாலைபாடியபெருங்சடுங்கோ. (உஅஉ)

---

க. வாயரெறிய. உ. கழறிய. ங. பொறகச.

(உஅங.)*ஒண்செங் குரலித் தண்கயங் கலங்கிக், (க)களைநீகாயநாளிரை
பெறாஉம் பௌவவுறையளவா......... .............விமயகசி
மாறுகொளமுதலையொடூழமாறுபெயரு, மழிமபிலனடாஙகாற
கையுமெனறுமவலம்புரிகொசரவைககளத்தானு மனறுளென
பதுகெட..................... ....................ானெபாங்கற
கதிரசூழகுறட்டினவெனிறததிஙக ஞயிர்புறப்படாவளவைத
தெறுவா தெறறியபாவைதிணிமணலயரு மென்றோண்மகளிர்
நனறுபப ......................ண்டபாசிலைக், கமழ்பூந்தும்பை
நுதலசைத்தோனே.

திணை - தும்பை; துறை - பாடாண்பாட்டு.
அணநெடுங்க..........................யார். (உஅங)

---

க. களையுளானெ..................விமயககி மாறுகொளமுதலையொடுழமா நீர்
நாய்நாளிரைபெறாஉமயெளவவுறையளவா............... ானெபாஙகறகதிர்
பெயருமழிமபிலணடஙகாறகையுமெனறுமவலம்புரிகோச ாவைக்களத்தானுமனறு
ளென்பதுகெட.........சூழ்குறட்டினவேனிறத்திங்கணுயிறுபுறப்படாவளவை.

(உஅச.) வருகதில் வல்லே வருகதில் வல்லென
வேந்துவிடு விழுத்தா தாங்காங் கிசைப்ப
நூலரி மாலை (க)சூடிக் காலிற்
றமியன் வந்த மூதி லாளன்
னருஞ்சமந் தாங்கி முன்னின் றெறிந்த
வொருகை யிரும்பிணத் தெயிறு (உ)மிறையாகத்

---

* இப்பாட்டு, பொருள்விளங்காமையால் ஏட்டிலுள்ளவாறே பதிப்பிக்கப்பட்டது. பின்னும் இப்படியே பலவிடத்தும் பதிப்பிக்கப்படும்.

(௩)திரிந்த வாய்வா டிருத்தாத்
(௪)தனக்கிரிந் தானைப் பெயர்புற நகுமே.

திணையும் துறையும் அவை.

ஓரம்போகியார். (உஅ௪)

---

க. சூட்டி. உ. பிறையாக. ௩. திருந்த. ௪. தனக்கிருந்தானை.

(உஅ௫.) பாசறை யீரே பாசறை யீரே
துடியன் கையது வேலே யடிபுணர்
வாங்கிரு மருப்பிற் றீந்தொடைச் சீறியாழ்ப்
பாணன் கையது தோலே காண்வரக்
கடுந்தெற்று மூடையின்............
வாடிய மாலை மலைந்த சென்னியன்
வேந்துதொழி லயரு மருந்தலைச் சுற்றமொடு
நெடுநகர் வந்தென விடுகணை யொசித்த
(க)மூரிவெண் டோள்..................
சேறுபடு குருதிச் செம்மலுக் கோஒ
(உ)மாறுசெறு நெடுவேன் மார்புளம் போக
நிணம்பொதி கழலொடு நிலஞ்சேர்ந் தனனே
அதுகண்டு, (௩)பரந்தோ ரெல்லாம் புகழத் தலைபணிந்
திறைஞ்சி யோனே குரிசில் பிறங்குநி
ரலமருங் கழனித் தண்ணடை யொழிய
(௪)விலம்பா டொக்கற் றலைவற்கோர்
கரம்பைச் சீறூர் நல்கின னெனவே.

திணை - வாகை; துறை - ........... முல்லை-

அரிசில்கிழார். (உஅ௫)

---

க. மூரிவெண்டோல். உ. மாறுபடுநெடு. ௩. பார்த்தோர். ௪. வலம்பாடு.

(உஅசு.) வெள்ளைவெள் யாட்டுச் செச்சை போலத்
தன்னோ ரன்ன விளைய ரிருப்பப்
பலர்மீது நீட்டிய மண்டை(க)யென் சிறுவனைக்
கால்கழி கட்டிலிற் கிடப்பித்
தூவெள் ளறுவை (உ)போர்ப்பித் திலதே.

திணை - தும்பை; துறை - வேத்தியல்.

ஔவையார். (உஅசு)

---

க. எண். உ. போர்ப்பித்திலவே.
போர்ப்பித்திலனே.

(உஅஎ.) துடியெறி யும்புலைய
வெறிகோல்கொள்ளு மிழிசின
கால மாரியி னம்பு தைப்பினும்
வயற்கெண்டையின் வேல்பிறழினும்
பொலம்புனை யோடை யண்ணல் யானை
யிலங்குவான் மருப்பி னுதிமடுத் தூன்றினு
மோடல் செல்லாப் பீடுடை யாளர்
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதற் (க)புரளுந்
தண்ணடை பெறுதல் யாவது படினே
மாசின் மகளிர் (உ)மன்ற னன்று
முயர்நிலை யுலகத்து நுகர்ப வதனால்
வம்ப வேந்தன் றானை
யிம்பர் நின்றுங் காண்டிரோ வரவே.

திணை - கரந்தை ; துறை - நீண்மொழி.

சாத்தந்தையார். (உஅஎ)

க. பிறழும். உ. மன்னகன்று.

(உஅஅ.) மண்கொள வரிந்த வைந்நுதி மருப்பி
னண்ண னல்லே றிரண்டுடன் மடுத்து
வென்றதன் பச்சை சீவாது போர்த்த
திண்பிணி முரச மிடைப்புலத் திரங்க
வாரமர் மயங்கிய ஞாட்பிற் றெறுவர்
நெடுவேல் பாய்ந்த நாணுடை நெஞ்சத்
(க)தருகுகை ......... ......... மன்ற
குருதியொடு துயல்வரு மார்பின்
முயக்கிடை யீயாது மொய்த்தன பருந்தே.

திணை - தும்பை, துறை - மூதின்முல்லை.

கழாத்தலையார். (உஅஅ)

க. தருகுறை.

(உஅகூ.) ஈரச் செவ்வியு......... .........
......... ......... .........கவினு
கல்லெருது நோக்கி வீறு.........
வேறல் லாயு முழவன் போலப்
பாடுபெறு தொல்குடிப் பாடுபல தாங்கிய

மூதி லாள ருள்ளுங் காதலிற்
றனக்குமுகந் தேந்திய ல...... .........
......... ......று மதுவுமன் றிசினே
கேட்டியோ வாழி பாண பாசறைப்
பூக்கோ ளின்றென் றிறையு
மடிவாய்த் தண்ணுமை யிழிசினன் குரலே.

திணை - ......... .........; துறை - .........மூல்லை.

கழாத்தலையார். (உஅக)

(உகூ0.) இவற்கீத் துண்மதி கள்ளே சினப்போ
ரினக்களிற் றியானை யியறேர்க் குரிசி
லுந்தை தந்தைக் கிவன்றந்தை தந்தை
யெடுத்தெறி ஞாட்பி னிமையான் றச்ச
னடுத்தெறி குறட்டி னின்றுமாய்ந் தனனே
மறப்புகழ் நிறைந்த மைந்தினோ னிவனு
முறைப்புழி யோலை போல
மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே.

திணை - கரந்தை; துறை - குடிநிலையுரைத்தல்.

ஔவையார். (உகூ0)

(உகூக.) சிறாஅர் துடியர் பாடுவன் மகாஅர்
தூவெள் ளறுவை மாயோற் குறுகி
(க)யிரும்புட் பூச லோம்புமின் யானும்
விளரிக் கொட்பின் வெண்ணரி கடிகுவெ
னெம்போற் பெருவிதுப் புறுக வேந்தே
கொன்னுஞ் சாதல் வெய்யோற்குத்தன்றலை
மணிமருண் மாலை சூட்டி யவன்றலை
யொருகாழ் மாலை தான்மலைந் தனனே.

திணை - கரந்தை; துறை - வேத்தியல்.

நெடுங்கழுத்துப்பரணர். (உகூக)

---

க. இரும்பூட்பூசல்.

(உகூஉ.) வேந்தர்க் கேந்திய தீந்தண் ண......
......... தனக்குமுறை வளாவ விலக்கி
வாய்வாள் பற்றி நின்றன னென்று
சினவ லோம்புமின் சிறுபுல் லாள
ரீண்டே போல வேண்டுவ னாயி

னென்முறை வருக வென்னான் கம்மென
வெழுதரு பெரும்படை விலக்கி
யாண்டு நிற்கு மாண்டகை யன்னே.

திணை - வஞ்சி; துறை - பெருஞ்சோற்றுநிலை.
விரிச்சியூர் நன்னாகனார். (௨௯௨)

(௨௯௩.) (௧)நிறபபுடகொலலாயானைமெலொன
குறுமபறகெறியுமொவறறணணுமை
நாணுடைமாககடகிரஙகுமாயி
(௨)னெமபிறுமபேரெழிலிழிநதுவிலையெனப
பிறர்மனை புகுவர் கொல்லோ
வளிய டானே பூவிலைப் பெண்டே.

திணை - காஞ்சி; துறை - பூக்கோட்காஞ்சி.
நொச்சிநியமங்கிழார். (௨௯௩)

௧. நிறபபுடகொலலைமெலொனதுவமபறகெறியு. ௨. னெமபிறும.

(௨௯௪.) வெண்குடை மதிய மேனிலாத் திகழ்தரக்
(௧)கண்கூ டியாத்த கடன்மருள் பாசறைக்
குமரிப்படை (௨)தழீஇய கூற்றுவினை யாடவர்
தமர்பிற (௩)ரறியா வமர்மயங் கழுவத்
திறையும் பெயருந் தோற்றி னுமரு
ணாண்முறை தபுத்தீர் வம்மி னீங்கெனப்
போர்மலைந் (௪)தொருசிறை நிற்ப யாவரு
மரவுமிழ் மணியிற் குறுகார்
(௫)நிரைதார் மார்பினின் கேள்வனைப் பிறரே.

திணை - தும்பை; துறை - தானைமறம்.
பெருந்தலைச்சாத்தனார். (௨௯௪)

௧. கண்கூடிறுத்த. ௩. அறியாதமர். ௫. நிரைகாழ்மாலையெங் கேள்வனை.
௨. தழீஇக். ௪. ஒருசிறநிற்ப.

(௨௯௫.) கடல்கிளர்ந் தன்ன கட்டூர் நாப்பண்
வேந்துவாய் மடித்து வேறலைப் (௧)பெயரித்
(௨)தோடுகைத் தெழுதரு (௩)தூரந்தெறி ஞாட்பின்
வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கி
யிடைப்படை யழுவத்துச் சிதைந்துவே றாகிய
சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி

வாடுமுலை யூறிச் சுரந்தன
வோடாப் பூட்கை விடலை தாய்க்கே.

திணை - தும்பை; துறை - உவகைக்கலுழ்ச்சி.

ஔவையார். (உகூ௫)

க. பெயரத். உ. தொழுகைத். ௩. தூர்ந்தெறி.

(உகூசு.) வேம்புசினை யொடிப்பவுங் காஞ்சி பாடவு
நெய்யுடைக் கைய ரையவி புகைப்பவு
மெல்லா மனையுங் கல்லென் றனவே
வேந்துடன் றெறிவான் கொல்லோ
நெடிதுவந் தன்று நெடுந்தகை தேரே.

திணை - வாகை; துறை - ஏறாண்முல்லை.

வெள்ளைமாளர். (உகூசு)

(உகூஎ.) பெருநீர் மேவற் றண்ணடை யெருமை
யிருமருப் புறழு நெடுமா (க)ணெற்றின்
பைம்பய றுதிர்த்த கோதின் கோலணைக்
கன்றுடை மரையா துஞ்சுஞ் சீறூர்க்
கோளிவண் வேண்டேம் புரவே (உ)நாரரி
(௩)நனைமுதிர் சாடி நறவின் வாழ்த்தித்
துறைநனி கெழீஇக் கம்பு ளீனுந்
தண்ணடை பெறுதலு முரித்தே (ச)வைந்நுதி
நெடுவேல் பாய்ந்த மார்பின்
மடல்வன் போந்தையி னிற்கு மோர்க்கே.

திணை - வெட்சி; துறை - உண்டாட்டு.

......... ......... ......... ......... ......... (உகூஎ)

க. நெற்றின். உ. நாரி. ௩. நிறைமுதிர். ச. வைந்நுனை.

(உகூஅ.) எமக்கே கலங்க றருமே தானே
தேற லுண்ணு மன்னே நன்று
மின்னான் மன்ற வேந்தே யினியே
நேரா ராரெயின் முற்றி வாய்மடித்
......... ......... ரநீமூந் தெனவே.

திணை - கரந்தை; துறை - நெடுமொழி.

*ஆலியார். (உகூஅ)

* ஆனியாரென்றும் பிரதிபேதமுண்டு.

(௨௯௯.) பருத்தி வேலிச் சீறூர் மன்ன
(௧)னுழுத்தத ருண்ட வோய்நடைப் புரவி
கடன்மண்டு தோணியிற் படைமுகம் போழ
நெய்ம்மிதி யருந்திய கொய்சுவ லெருத்திற்
றண்ணடை மன்னர் தாருடைப் புரவி
யணங்குடை முருகன் கோட்டத்துக்
(௨)கலந்தொடா மகளிரி னிகழ்ந்துநின் றவ்வே.

திணை - நொச்சி; துறை - குதிரைமறம்.
பொன்முடியார். (௨௯௯)

௧. உழுத்தருண்ட. ௨. கலங்கொடா.

(௩௦௦.) தொருஅ தொருஅ வென்றி தோலொடு
துறுகன் மறையினு முய்குவை போலா
............ ......... ......... .........யே
கற்பெய் குன்றியிற் சுழலுங் கண்ணன்
பேரூ ரட்ட கள்ளிற்
(௧)கோரிற் கோரிற் றேருமா னின்னே.

திணை - தும்பை; துறை - தானைமறம்.
அரிசில்கிழார். (௩௦௦)

௧. கோரிற்கோயிற்.

(௩௦௧.) பல்சான் றீரே பல்சான் றீரே
குமரி மகளிர் கூந்தல் புரைய
வமரி னிட்ட வருமுள் வேலிக்
கல்லென் பாசறைப் பல்சான் றீரே
முரசுமுழங்கு (௧)தானைநு மரசு மோம்புமி
னொளிறேந்து மருப்பினுங் களிறும் போற்றுமி
னெனைநாட் (௨)டங்குநும் போரே யனைநா
ளெறியா (௩)ரெறிதல் யாவண (௪)தெறிந்தோ
ரெதிர்சென் றெறிதலுஞ் (௫)செல்லா னதனா
லறிந்தோர் யாரவன் கண்ணிய பொருளே
பலமென் றிகழ்த லோம்புமி னுதுக்கா
ணிலனளப் பன்ன நில்வாக் குறுநெறி
வண்பரிப் புரவிப் பண்புபா ராட்டி
யெல்லிடைப் படர்தந் தோனே கல்லென
வேந்தூர் யானைக் கல்ல
தேந்துவன் (௬)போலான்ற னிலங்கிலை வேலே.

திணையும் துறையும் அவை.

ஆவூர்மூலங்கிழார். (௩௦௧)

௧. டாணையு. ௩. அறிதல். ௫. செல்லாது.
௨. தானு. ௪. அறிந்தோன். ௬. போலானி.

(௩௦௨.) வெடிவேய் கொள்வது போல வோடித்
(௧)தாவு புகளு மாவே பூவே
விளங்கிழை மகளிர் கூந்தற் கொண்ட
நரந்தப் பல்யாழ்க் கோதை (௨)சுற்றிய
வைதமை பாணி வணர்கோட்டுச் சீறியாழ்க்
கைவார் நரம்பின் பாணர்க் கோக்கிய
நிரம்பா வியல்பிற் கரம்பைச் சீறூர்
நோக்கினர்ச் செகுக்குங் காளை (௩)யூக்கி
(௪)வேலி னட்ட களிறுபெயர்த் தெண்ணின்
விண்ணிவர் விசும்பின் மீனுந்
தண்பெய லுறையு முறையாற் றாவே.

திணை - அது ; துறை - குதிரைமறம்.

வெறிபாடிய காமக்கண்ணியார். (௩௦௨)

௧. தாவுபுகளு. ௨. சுற்றியைதமை. ௩. ஊக்கு. ௪. வேலினிட்ட.

(௩௦௩.) நிலம்பிறக் கிடுவது போற்குளம்பு கடையூ
வுள்ள மொழிக்குங் கொட்பின் மான்மேல்
லெள்ளுநர்ச் செகுக்குங் காளை கூர்த்த
வெந்திற லெஃகு நெஞ்சுவடு விளைப்ப
வாட்டிக் காணிய வருமே நெருநை
யுரைசால் சிறப்பின் (௧)வேந்தர் முன்னர்க்
கரைபொரு முன்னீர்த் (௨)திரையிற் போழ்ந்தவர்
கயந்தலை மடப்பிடி புலம்ப
விலங்குமருப் பியானை யெறிந்த வெற்கே.

திணையும் துறையும் அவை.

எருமைவெளியனார். (௩௦௩)

௧. வேந்தன். ௨. திழவிற.

(௩௦௪.) கொடுங்குழை மகளிர் கோதை சூடி
நடுங்கு (௧)பனிக் களைஇயர் நாரரி பருகி
வளிதொழி லொழிக்கும் வண்பரிப் புரவி
பண்ணற்கு விரைதி நீயே நெருநை
யெம்முற் றப்பியோன் றம்பியொ டொராங்கு

நாளைச் செய்குவ னமரெனக் கூறிப்
(௨)புன்வயி றருத்தலுஞ் செல்லான் (௩)பன்மான்
கடவு மென்ப பெரிதே யதுகேட்டு
வலம்படு முரசின் வெல்போர் வேந்த
னிலங்கிரும் பாசறை நடுங்கின்
றிரண்டா காதவன் கூறிய தெனவே.

திணையும் துறையும் அவை.

அரிசில்கிழார். (௩௦௪)

௧. பனிக்கசாஅய். ௨. புன்மையிற. ௩. பனமாண.

(௩௦௫.) வயலைக் கொடியின் வாடிய (௧)மருங்கு
லுயவ லூர்திப் பயலைப் பார்ப்பா
னெல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே யதற்கே
யேணியுஞ் சீப்பு மாற்றி
மாண்வினை யானையு மணி(௨)களைந் தனவே.

திணை - வாகை; துறை - பார்ப்பனவாகை.

மதுரைவேளாசான். (௩௦௫)

௧. மருங்கின். ௨. களைந்தனனே.

(௩௦௬.) களிறுபொரக் கலங்கு (௧)கழன்முள் வேலி
யரிதுண் கூவ லங்குடிச் சீறூ
ரொலிமென் கூந்த லொண்ணுத லரிவை
நடுகற் கைதொழுது பரவு மொடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே யென்னையு
மொ...... ......... ......... வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை யெய்துக வெனவே.

திணை - அது; துறை - முதின்முல்லை.

அள்ளூர்நன்முல்லையார். (௩௦௬)

௧. கன்முள்வேலி.

(௩௦௭.) ஆசா கெந்தை யாா................
களிறொடு பட்டோன் வம்பலன் போலத்
தோன்று முதுக்காண் வெரினில் வரியணில்
வாலத் தன்ன கான ஆகின்
கழன்றுகு முதுவிய ரி..................
.....................ல்லுமயா(௧)துமணர்
யாருமி லொருசிறை முடத்தொடு துறந்த

வாழா வண்பக டேய்ப்பத் (உ)தெறுவர்
(௩)பேருயிர் கொள்ளு மாதோ வடுகளத்
தெஞ்சலிற் சிறந்தது பிறிதொன் றில்லெனப்
பண்கொளற் கருமை நோக்கி
நெஞ்சிற வீழ்ந்த புரைமை யோனே.

திணை - தும்பை; துறை - ..................
.............................................. (௩0எ)

---

க. மன்ற. உ. தெறுவாப. ௩. பெருயிர்க்கொ.

(௩0அ.) பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
மின்னேர் பச்சை மிஞிற்றுக்குரற் சீறியாழ்
நன்மை நிறைந்த நயவரு பாண
சீறூர் மன்னன் சிறியிலை யெஃகம்
வேந்தூர் யானை யேந்துமுகத் ததுவே
வேந்துடன் றெறிந்த வேலே யென்னை
சார்ந்தா ரகல முளங்கழிந் தன்றே
யுளங்கழி சுடர்ப்படை யேந்திநம் பெருவிற
லோச்சினன் றுரந்த காலை மற்றவன்
புன்றலை மடப்பிடி நாணக்
குஞ்சர மெல்லாம் புறக்கொடுத் தனவே.

திணை - வாகை; துறை - மூதின்முல்லை.
கோவூர்கிழார். (௩0அ)

(௩0௯.) இரும்புமுகஞ் சிதைய நூறி யொன்னா
ரருஞ்சமங் கடத்த லெனோர்க்கு மெளிதே
நல்லரா வுறையும் புற்றம் போலவுங்
கொல்லேறு திரிதரு மன்றம் போலவு
மாற்றருந் துப்பின் மாற்றோர் பாசறை
யுளனென வெரூஉ மோரொளி
வலனுயர் நெடுவே லென்னைகண் ணதுவே.

திணை - தும்பை; துறை - நூழிலாட்டு.
மதுரையிளங்கண்ணிக்கௌசிகனார். (௩0௯)

(௩௧0.) பால்கொண்டு மடுப்பவு முண்ணா னாகலிற்
செறாஅ தோச்சிய சிறுகோ லஞ்சியொ
டுயவொடு மனனே யினியே .........
புகர்நிறங் கொண்ட களிறட் டானான்
முன்னாள் வீழ்ந்த வுரவோர் மகனே

யுன்னில னென்னும் புண்ணொன் றம்பு
மானுளை யன்ன குடுமித்
தோன்மிசைக் கிடந்த புல்லண லோனே.

திணையும் துறையும் அவை.

பொன்முடியார். (ருக0)

(ருகக.) களர்ப்படு கூவற் றோண்டி நாளும்
புலைத்தி கழீஇய தூவெள் ளறுவை
தாதெரு மறுகின் மாசுண விருந்து
பலர்குறை செய்த மலர்தா ரண்ணற்
கொருவரு மில்லை மாதோ செருவத்துச்
சிறப்புடைச் செங்கண் புகையவோர்
தோல்கொண்டு மறைக்குஞ் சால்புடை யோனே.

திணை - அது; துறை - பாடாண்பாட்டு.

ஔவையார். (ருகக)

(ருகஉ.) ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
யொளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

திணை - வாகை; துறை - மூதின்முல்லை.

பொன்முடியார். (ருகஉ)

(ருகங.) அத்த நண்ணிய நாடுகெழு பெருவிறல்
கைப்பொருள் யாதொன்று மிலனே நச்சிக்
காணிய சென்ற விரவன் மாக்கள்
களிற்றொடு நெடுந்தேர் வேண்டினுங் கடல
வுப்போய் சாகாட் டுமணர் காட்ட
கழிமுரி குன்றத் தற்றே
யெள்ளமை வின்றவ னுள்ளிய பொருளே.

திணை - அது; துறை - வல்லாண்முல்லை.

மாங்குடிகிழார். (ருகங)

(ருகச.) மனைக்குவிளக் காகிய வாணுதல் கணவன்
முனைக்குவரம் பாகிய வென்வே னெடுந்தகை
நடுகற் பிறங்கிய வுவலிடு பறந்தலைப்
புன்காழ் நெல்லி வன்புலச் சீறூர்க்

குடியு மன்னுந் தானே கொடியெடுத்து
(௧)நிறையழிந் தெழுதருந் தானைக்குச்
சிறையுந் தானேதன் னிறைவிழு முறினே.

திணையும் துறையும் அவை.
ஐயூர்முடவனார். (௩௧௪)

௧. நிறையறிந்து.

(௩௧௫.) உடைய னாயி னுண்ணவும் வல்லன்
கடவர் மீது மிரப்போர்க் கீயு
மடவர் மகிழ்துணை நெடுமா னஞ்சி
யில்லிறைச் செரீஇய ஞெலிகோல் போலத்
தோன்றா திருக்கவும் வல்லன் மற்.........
........ ......... கனையெரி போலத்
தோன்றவும் வல்லன்றான் றோன்றுங் காலே.

திணையும் துறையும் அவை.
நெடுமானஞ்சியை ஔவையார். (௩௧௫)

(௩௧௬.) கள்ளின் வாழ்த்திக் கள்ளின் வாழ்த்திக்
காட்டொடு மிடைந்த சீயா முன்றி
னாட்செருக் (௧)கனந்தர்த் துஞ்சு வோனே
யவனெம் மிறைவன் யாமவன் பாணர்
நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்த
னிரும்புடைப் பழவாள் வைத்தன னின்றிக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணைய மிதுகொண்
டுவந்தி லாள னென்னாது நீயும்
வள்ளி மருங்குல் வயங்கிழை யணியக்
கள்ளுடைக் கலத்தேம் யாமகிழ் தூங்கச்
(௨)சென்றுவாய் சிவந்துமேல் வருக
சிறுகண் யானை வேந்துவிழு முறவே.

திணையும் துறையும் அவை.
மதுரைக்கள்ளிற்கடையத்தன்வெண்ணாகனார். (௩௧௬)

௧. களந்தரத்துஞ்சு. ௨. செறுவர்சிவந்து.
செறுநர்சிவந்து.

(௩௧௭.) வெ......... .......... ......... .......நது
முன்றிற் கிடந்த பெருங்களி யாளர்க்
கதளுண் டாயினும் பாயுண் டாயினும்
யாதுண் டாயினுங் கொடுமின் வல்லே

வேட்கை மீளப... ......... .........
......... ......... .........ரு மெமக்கும்
பிறர்க்கும் யார்க்கு மீயகதுயிலெறபினனெ.

திணையும் துறையும் அவை.
வேம்பற்றூர்க் குமரனார். (௩௧௭)

(௩௧௮.) கொய்யடகு வாடத் தருவிற் குணங......
மயிலஞ்சாயன் மாஅ யோளொடு
பசித்தன் றம்ம பெருந்தகை யூரே
மனையுறை குரீஇக் கறையணற் சேவல்
பாணர் (க)நரம்பிசை நீரொடு வயமான
குரசை பீலியி னிளமை(உ)மூத்த குடம்பைப்
பெருஞ்செய் நெல்லி னரிசி யார்ந்துதன்
புன்புறப் பெடையொடு வதியும்
யாணர்த் தாகும் வேந்துவிழு முறினே.

திணையும் துறையும் அவை.
பெருங்குன்றூர்கிழார். (௩௧௮)

க. நரம்பின்சுகிரொடு. உ. பூத்த.

(௩௧௯.) பூவற் படுவிற் கூவற் (க)றொண்டிய
செங்கட் சின்னீர் பெய்த சீறின்
முன்றி லிருந்த முதுவாய்ச் சாடி
(உ)யாங்கஃ துண்டென வறிதுமா சினறு
படலை முன்றிற் சிறுதினை யுணங்கல்
புறவு மீதலு மறவு முண்கெனப்
பெய்தற் கெல்லின்று பொழுதே யதனால்
முயல்சுட்ட வாயினுந் தருகு வேம்(௩)புகுந்
தீங்கிருந் தீமே முதுவாய்ப் பாண
கொடுங்கோட் டாமா னடுங்குதலைக் குழவி
புன்றலைச் சிறாஅர் கன்றெனப் பூட்டுஞ்
சீறூர் மன்ன னுருநை ஞாங்கர்
வேந்துவிடு தொழிலொடு சென்றனன் வந்துநின்
பாடினி மாலை யணிய
வாடாத் தாமரை சூட்டுவ னினக்கே.

திணையும் துறையும் அவை.
ஆலங்குடி வங்கனார். (௩௧௯)

க. றொடிய. உ. யாறஃதுண. ௩. புகுசீரமிரு.

(௩௨௦.) முன்றின் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப்
பந்தர் வேண்டாப் பலர்தூங்கு நீழற்
கைம்மான் வேட்டுவன் கனைதுயின் மடிந்தெனப்
பார்வை மடப்பிணை தழீஇப் பிறிதோர்
தீர்தொழிற் றனிக்கலை திளைத்துவிளை யாட
வின்புறு புணர்நிலை கண்ட மனையோள்
கணவ னெழுதலு மஞ்சிக் கலையே
பிணவயிற் றீர்தலு மஞ்சி யாவது
மில்வழங் காமையிற் கல்லென வொலித்து
மான்கட் பெய்த வுணங்குதினை வல்சி
கானக் கோழியொ டிதல்கவர்ந் துண்டென
வார நெருப்பி னார னாறத்
தடிவார்ந் திட்ட முழுவள் ளூர
மிரும்பே ரொக்கலொ டொருங்கினி தருந்தித்
தங்கினை சென்மோ பாண தங்காது
வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க் கென்று
மருகா தீயும் வண்மை
யுரைசா னெடுந்தகை யோம்பு மூரே.

திணையும் துறையும் அவை.
வீரைவெளியனார். (௩௨௦)

(௩௨௧.) பொறிப்புறப் பூழின் போர்வல் (க)சேவன்
மேந்தோல் களைந்த தீங்கொள் வெள்ளெட்
களிகிடை யுணங்கற் செவ்வி கொண்டென
வேனிற் கோங்கின் பூம்பொகுட் டன்ன
குடந்தையஞ் செவிய கோட்டெலி யாட்டக்
கலியார் வரகின் பிறங்குபீ ரொளிக்கும்
வன்புல வைப்பி னதுவே சென்று
தின்பழம் பசீஇ ............னனோ பாண
வாள்வடு விளங்கிய சென்னிச்
செருவெங் குரிசி லோம்பு மூரே.

திணையும் துறையும் அவை.
உறையூர் மருத்துவன் தாமோதரனார். (௩௨௧)

---

க. செலவன.

(௩௨௨.) (க)உழு...... ........................ன
கவைமுட் கள்ளிப் பொரியரைப் பொருந்திப்

புதுவர கரிகாற் கருப்பை யெய்த
புன்றலைச் சிறாஅர் வில்லெறிந் தார்ப்பிற்
........................................றுடைய
முன்றிற் பாயும் வன்புலத் ததுவே
கரும்பி னெந்தஞ் சிலம்பி னயலிற்
பெருஞ்சுவல் வாளை பிறழு மாங்கட்
பணை.....................................
.....................யாவேலோ.........ரே.

திணையும் துறையும் அவை.
ஆவூர்கிழார். (௩௨௨)

---

௧. வழு.
ஒழு.

(௩௨௩.) புலிப்பாற் பட்ட வாமான் குழவிக்குச்
சினங்கழி மூதாக் கன்றுமடுத் தூட்டுங்
கா.........................................க்
குள்ளியது சுரக்கு மோம்பா வீகை
வெள்வே லாவ மாயி னொள்வாட்
கறையடி யானைக் கல்ல
துறைகழி யாவேலோனா...........
.................................................
.........................டார்கிழார். (௩௨௩)

(௩௨௪.) வெருக்குவிடை யன்ன வெருள்நோக்குக் கயந்தலைப்
புள்ளூன் றின்ற புலவுநாறு கயவாய்
வெள்வாய் (௧)வேட்டுவர் வீழ்துணை மகாஅர்
சிறியிலை யுடையின் சுரையுடை வான்முள்
ளூக நுண்கோற் செறித்த வம்பின்
வலாஅர் வல்விற் குலாவரக் கோலிப்
பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலந் தழீஇய வங்குடிச் சீறூர்க்
குமிழுண் வெள்ளை (௨)பகுவாய் பெயர்த்த
வெண்காழ் (௩)தாய (௪)வண்காற் பந்த
ரிடையன் பொத்திய சிறுதீ விளக்கத்துப்
பாணரொ டிருந்த நாணுடை நெடுந்தகை
வலம்படு தானை வேந்தற்
குலந்துழி யுலக்கு நெஞ்சறி துணையே.

திணையும் துறையும் அவை.

ஆலத்தூர்கிழார். (௩௨௪)

---

௧. வேட்டுவன். ௨. மறுகுவாய். மறுவாய். ௩. காய. ௪. வன்காழ்ப்பந்தர்.

(௩௨௫.) களிறுநீ ருடிய விடுநில மருங்கின்
வம்பப் பெரும்பெயல் வரைந்துசொரிந் திறந்தெனக்
குழிகொள் சின்னீர் குராஅ லுண்டலிற்
சேறுகிளைத் திட்ட கலுழ்கண் ணூறன்
முறையி னுண்ணு நிறையா வாழ்க்கை
முளவுமா தொலைச்சிய முழுச்சொ லாடவ
ருடும்புழு தறுத்த (௧)வொடுங்காழ்ப் படலைச்
சீறின் முன்றிற் கூறுசெய் திடுமார்
கொள்ளி வைத்த கொழுநிண நாற்ற
மறுகுடன் கமழு மதுகை மன்றத்
திலந்தலை யிரத்தி யலங்குபடு நீழற்
கயந்தலைச் சிறாஅர் கணைவிளை யாடு
(௨)மருமுனை யிருக்கை யதுவே வெண்வேல்
வேந்துதலை வரினுந் தாங்குந்
தாங்கா வீகை நெடுந்தகை யூரே.

திணையும் துறையும் அவை.

உறையூர் முதுகண்ணன்சாத்தனார். (௩௨௫)

---

௧. கொடுங்காழ். ௨. அருமிளை.

(௩௨௬.) ஊர்முது வேலிப் பார்நடை வெருகி
னிருட்பகை வெரீஇய நாகிளம் பேடை
யுயிர்நடுக் குற்றுப் புலாவிட் டாறறச்
சிறையுஞ் செற்றையும் புடையுநள் ளெழுந்த
பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்துக்
கதிர்ப்பூ நெற்றிச் சேவலிற் றணியு
மருமுனை யிருக்கை யதுவே மனைவியும்
வேட்டச் சிறாஅர் சேட்புலம் படராது
படமடைக் கொண்ட குறுந்தா ளுடும்பின்
விழுக்குநிணம் பெய்த தயிர்க்கண் விதவை
யாணர் நல்லவை பாணரொ டொராங்கு
வருவிருந் தயரும் விருப்பினள் கிழவனு
மருஞ்சமந் ததையத் தாக்கிப் பொருஞ்சமத்

தண்ணல் யானை யணிந்த
கருஞ் பொன்செ யோடைப் பெரும்பரி சிலனே.
திணையும் துறையும் அவை.
*தங்கால் பூட்கோவலனார். (௩௨௬)

(௩௨௭.) எருது காலுறா திளைஞர் கொன்ற
(க)சில்விளை வரகின் புல்லென் குப்பை
தொடுத்த கடவர்க்குக் கொடுத்த மிச்சில்
பசித்த பாண ருண்டுகடை தப்பலின்
ஒக்க லொற்கஞ் சொலியத் தன்னூர்ச்
சிறுபுல் லாளர் முகத்தவை கூறி
(உ)வரகுகட னிரக்கு நெடுந்தகை
யரசுவரிற் றுங்கும் வல்லா ளன்னே.
திணையும் துறையும் அவை.
........................................ (௩௨௭)

க. சில்வினை. உ. வரகுகடனீர்க்கு.

(௩௨௮) .........டைமுதற் புறவுசேர்ந் திருந்த
புன்புலச் சீறூர் நெல்விளை யாதே
வரகுந் தினையு முள்ளவை யெல்லா
மிரவன் மாக்களுக் கீயத் தொலைந்தன
.........................டமைந் தனனே
யன்ன னாயினும் பாண நன்றும்
வெள்ளத் திடும்பா லுள்ளுறை தொட......
களவுப் புளியன்ன விளை..................
..............................வா டின்குறை
கொய்குர லரிசியொடு நெய்பெய் தட்டுத்
துடுப்பொடு சிவணிய களிக்கொள் வெண்சோ
றுண்டினி திருந்த பின்..........................
...........................குவன்மாதோ
தாளிமுத னீடிய சிறுநறு முஞ்ஞை
முயல்வந்து கறிக்கு முன்றிற்
சீறூர் மன்னனைப் பாடினை செலினே.
திணையும் துறையும் அவை.
........................................ (௩௨௮)

(௩௨௯.) இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்
புடைநடு கல்லி னாட்பலி யூட்டி

* தங்கால் தாட்கோவலனாரென்றும் பிரதிபேதமுண்டு.

(௧)நன்னீ ராட்டி நெய்ந்நறைக் கொளீஇ
மங்குன் மாப்புகை மறுகுடன் கமழு
மருமுனை யிருக்கைத் தாயினும் வரிமிடற்
றரவுறை புற்றத் தற்றே நாளும்
புரவலர் புன்க ணோக்கா திரவலர்க்
கருகா தீயும் வண்மை
யுரைசா னெடுந்தகை யோம்பு மூரே.

திணையும் துறையும் அவை.

மதுரை அறுவைவாணிகனிளவேட்டனர். (௩௨௯)

௧. நன்னீராட்டி.

(௩௩௦.) வேந்துடைத் தானை முனைகெட நெரிதலி
னேந்துவாள் வலத்த னொருவ னாகித்
தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்
காழி யனையன் மாதோ வென்றும்
பாடிச் சென்றோர்க் கன்றியும் வாரிப்
புரவிற் காற்றாச் சீறூர்த்
தொன்மை சுட்டிய வண்மை யோனே.

திணையும் துறையும் அவை.

மதுரைக்கணக்காயனர். (௩௩௦)

(௩௩௧.) கல்லுறுத் தியற்றிய வல்லுவர்க் கூவல்
வில்லேர் வாழ்க்கைச் சீறூர் மதவலி
நனிநல் கூர்ந்தன னாயினும் பனிமிகப்
புல்லென் மாலைச் சிறுதீ ஞெலியுங்
கல்லா விடையன் போலக் குறிப்பி
னில்லது படைக்கவும் வல்ல னுள்ளது
தவச்சிறி தாயினு மிகப்பல ரென்னா
(௧)னீணெடும் (௨)பந்த ரூண்முறை யூட்டு
மிற்பொலி மகடூஉப் போலச் சிற்சில
வரிசையி னளிக்கவும் வல்ல னுரிதினிற்
காவன் மன்னர் கடைமுகத் துகுக்கும்
போகுபலி வெண்சோறு போலத்
தூவவும் வல்லனவன் றாவுங் காலே.

திணையும் துறையும் அவை.

உறையூர் முதுகூத்தனர். (௩௩௧)

௧. னீணெடு. ௨. பந்தருண்.

(௩௩௨.) பிறர்வேல் போலா தாகி யிவ்வூர்
மறவன் வேலோ பெருந்தகை யுடைத்தே
(௧)யிரும்புற (௨)நீறு மாடிக் (௩)கலந்திடைக்
குரம்பைக் கூரைக் கிடக்கினுங் கிடக்கு
மங்கல மகளிரொடு மாலை சூட்டி
யின்குர (௪)லிரும்பை (௫)யாழொடு ததும்பத்
தெண்ணீர்ப் படுவினுந் தெருவினுந் திரிந்து
மண்முழு தழுங்கச் செல்லினுஞ் (௬)செல்லுமாங்
கிருங்கடற் றானை வேந்தர்
பெருங்களிற்று முகத்தினுஞ் செலவா னாதே.

திணையும் துறையும் அவை.

விரியூர்நக்கனார். (௩௩௨)

---

௧. இரும்புக. ௩. கலத்திடை. ௫. யாழெடுத்தியம்ப
௨. நீரு. ௪. இரும்பை. ௬. செல்லுங்கண்ணுறின்.

(௩௩௩.) நீருட் பட்ட மாரிப் பேருறை
மொக்கு ளன்ன பொகுட்டுவிழிக் கண்ண
கரும்பிடர்த் தலைய பெருஞ்செவிக் குறுமுயல்
உள்ளூர்க் குறும்புதற் றுள்ளுவன வுகளுந்
தொள்ளை மன்றத் தாங்கட் படரி
னுண்டென வுணரா வுயவிற் றாயினுந்
தங்கினிர் சென்மோ புலவிர் நன்றுஞ்
சென்றதற் கொண்டு மனையோள் விரும்பி
வரகுந் திணையு முள்ளவை யெல்லா
மிரவன் மாக்க ளுணக்கொளத் தீர்ந்தெனக்
குறித்துமா றெதிர்ப்பை பெறாஅ மையிற்
குரலுணங்கு விதைத்திணை யுரல்வாய்ப் பெய்து
சிறிதுபுறப் பட்டன்றோ விலளே தன்னூர்
வேட்டக் குடிதொறுங் கூட்டு...............
.................................... உடும்புசெய்
பாணி நெடுந்தேர் வலவ ரோரே
வம்பணி யானை வேந்துதலை வரினு
முண்பது மன்னு மதுவே
பரிசில் மன்னுங் குரிசில்கொண் டதுவே.

திணையும் துறையும் அவை.

.................................................... (௩௩௩)

(௩௩௪.) ......................பழனக்கண்பினன்ன
தூமயிர்க் குறுந்தா ணெடுஞ்செவிக் குறுமுயல்
புன்றலைச் சிறாஅர் மன்றுநு தார்ப்பிற்
படபபொடுங்கும்மே.........பின்பு.........
..........................னூரே மனையோள்
பாண ரார்த்தவும் பரிசில ரோம்பவு
மூனொலி யரவமொடு கைதூ வாளே
யுயர்மருப் பியானைப் புகர்முகத் தணிந்த
பொலம்.................................ப்
பரிசில் பரிசிலர்க் கீய
வுரவுவேற் காளையுங் கைதூ வானே.

திணையும் துறையும் அவை.
மதுரைத் தமிழ்க்கூத்தனார். (௩௩௪)

(௩௩௫.) அடலருந்து.................................
.....................குருந்தே முல்லையென்
றிந்நான் கல்லது பூவு மில்லை
கருங்கால் வரகே யிருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிள ரவரையொடு
இந்நான் கல்லது...................................
துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியு மில்லை
யொன்னாத் தெவ்வர் முன்னின்று விலக்கி
யொளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தே
.........................................வினல்லது
நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே.

திணையும் துறையும் அவை.
மாங்குடிகிழார். (௩௩௫)

(௩௩௬.) வேட்ட வேந்தனும் பெருஞ்சினத் தினனே
கடவன கழிப்பிவ டந்தையுஞ் செய்யா
னொளிறுமுகத் தேந்திய வீங்குதொடி மருப்பிற்
களிறு கடிமரஞ் சேரா சேர்ந்த
வொளிறுவேன் மறவரும் வாய்மூழ்த் தனரே
யியவரு மறியாப் பல்லியங் கறங்க
வன்னோ பெரும்பே துற்றன் றில்லம்
அருங்கடி மூதூ ரறனின் மன்ற

தானே விறன்மலை....................
வேங்கை வெற்பின் விரிந்த கோங்கின்
முகைவனப் பேந்திய முற்றா விளமுலைத்
தகைவளர்த் தெடுத்த நகையொடு
பகைவளர்த் திருந்தவிப் பண்பி றாயே.

திணை - காஞ்சி; துறை - மகட்பாற்காஞ்சி.
பரணர். (௩௩௬)

(௩௩௭.) ஆர்கலி யினனே சோணாட் டண்ணல்
கவிகை மண்ணாள் செல்வ ராயினும்
வாள்வலந் தொழியப் பாடிச் சென்றா அர்
வாறெறு கமலா..............................
வீத லாகு விலங்குதொடித் தடக்கைப்
பாரி பறம்பிற் பனிச்சுனை போலக்
காண்டற் கரிய ளாகி மாண்ட
பெண்மை நிறைந்த பொலிவொடு மண்ணிய
துகில்விரி கடுப்ப நுடங்கித் தண்ணென
வகிலார் நறும்புகை யைதுசென் றடங்கிய
கபில நெடுநகர்க் கமழு நாற்றமொடு
மனைச்செறிந் தனளே வாணுத லினியே
யற்றன் றாகலிற் றெற்றெனப் போற்றிக்
காய்நெற் கவளந் தீற்றிக் காவுதொறுங்
கடுங்கண் யானை காப்பன ரன்றி
வருத லானார் வேந்தர் தன்னையர்
பொருசமங் கடந்த வுருகெழு நெடுவேற்
குருதி பற்றிய வெருவரு தலையர்
மற்றிவர் மறனு மிற்றாற் றெற்றென
யாரா குவர்கொ றாமே நேரிழை
யுரித்தல் பல்சுணங் கணிந்த
மருப்பிள வனமுலை ஞெமுக்கு வோரே.

திணையும் துறையும் அவை.
கபிலர். (௩௩௭)

(௩௩௮.) ஏர்பரந்தவய னீர்பரந்தசெறுவி
னென்மலிந்தமனைப் பொன்மலிந்தமறுகிற்
படுவண் டார்க்கும் பன்மலர்க் காவி
னெடுவே ளாதன் போந்தை யன்ன
பெருஞ்சீ ரருங்கொண் டியளே கருஞ்சினை

வேம்பு மாரும் போந்தையு மூன்று
மலைந்த சென்னிய ரணிந்த வில்லர்
கொற்ற வேந்தர் வரினுந் தற்றக
வணங்கார்க் கீகுவ னல்லன் வண்டோட்டுப்
பிணங்குகதிர்க் கழனி நாப்ப ணேமுற்
(க)றுணங்குகல னாழியிற் றோன்று
மோரெயின் மன்ன னொருமட மகளே.

திணையும் துறையும் அவை.

குன்றூர்கிழார்மகனார். (௩௱௩௮)

---

க. உணங்குகாழி.

(௩௱௩௯.) வியன்புலம் படர்ந்த பல்லா நெடுவேறு
மடலை மாணிழ லசைவிடக் கோவல
ரத்தை முல்லைப் பூப்பறிக் குந்து
குறுங்கோ லெறிந்த நெடுஞ்செவிக் குறுமுய
னெடுநீர்ப் பரப்பின் வாளையொ டுகளுந்து
தொடலை யல்குற் றொடித்தோண் மகளிர்
கடலாடிக் கயம்பாய்ந்து
கழிநெய்தற் பூக்குறூஉந்து
பைந்தழை துயல்வருஞ் செறுவிறற......
..............................லத்தி
வளர வேண்டு மவளே யென்று
மாரம ருழப்பது மமரிய ளாகி
முறஞ்செவி யானை வேந்தர்
மறங்கெழு நெஞ்சங் கொண்டொளித் தோளே.

........................................
........................................ (௩௱௩௯)

(௩௱௪௰.) அணித்தழை நுடங்க வோடி (க)மணிப்பொறிக்
(உ)குரலங் குன்றி கொள்ளு மிளையோள்
மாமகள்..............................
..................லென வினவுதி கேணீ
வெடுப்பவெ..............................
..........................மைந்தர் தந்தை
பிரும்பனை யன்ன பெருங்கை யானை
கார்ந்தையஞ் செறுவிற் பெயர்க்கும்
பெருந்தகை மன்னர்க்கு வரைந்திருந் தனனே.

திணையும் துறையும் அவை.
அ....................................... (௩௪௦)

---

௧. பணிப்பொறி. ௨. கூரலங்குன்றி.

(௩௪௧.) .......................டாஅ னேந்துகோட்
டம்பூந் தொடலை யணிந்ததழை டேல்குற்
செம்பொறிச் சிலம்பி னிளையோ டந்தை
யெழுவிட் டமைத்த திண்ணிலைக் கதவி
னரைமணி குசிநா.......................
.........கணத் தன்ன கடுங்கட் சுற்றமொடு
மாற்ற மாறான் மறலிய சினத்தன்
பூக்கோ ளென்ப கயம்புக் கனனே
விளங்கிழைப் பொலிந்த வெ...ாமெல்லியற்
சுணங்கணி வனமுலை ..................ண்
மணம்புகு வைக லாகுத லொன்றோ
வாரம ருழக்கிய மறங்கிளர் முன்பி
னீணிலை யெஃக மறுத்த வுடம்பொடு
வாரா வுலகம் புகுத லொன்றெனப்
படைதொட் டனனே குரிசி லாயிடைக்
களிறுபொரக் கலங்கிய தண்கயம் போலப்
பெருமகி ழிழப்பது கொல்லோ
மென்புனல் வைப்பினித் தண்பணை யூரே.

திணையும் துறையும் அவை.
பரணர். (௩௪௧)

(௩௪௨.) கானக் காக்கைக் கலிசிற கேய்க்கு
மயிலைக் கண்ணிப் பெருந்தோட் குறுமக
ளேனோர் மகள்கொ லிவளென விதுப்புற்
றென்னொடு வினவும் வென்வே னெடுந்தகை
திருநயத் தக்க பண்பினிவ ளலனே
பொருநர்க் கல்லது பிறர்க்கா காதே
பைங்காற் கொக்கின் பகுவாய்ப் பிள்ளை
மென்சேற் றடைகரை மேய்ந்துண் டதற்பி
னாரீன்ற வையவி முட்டை
கூர்ந விறவின் பிள்ளையொடு பெறூஉந்
தண்பணைக் கிழவனிவ டந்தையும் வேந்தரும்
பெறாமை யின்மையிற் பேரமர் செய்தலிற்
பிணம்பி றங்குபோ ரழிகளி றெருதா

வாட்கை வைகலு முழக்கு
மாட்சி யிலரிவ டன்னைமாரே.
திணையும் துறையும் அவை.
அரிசில்கிழார். (௩௪௨)

(௩௪௩.) மீனொடுத்து நெற்குவைஇ
மிசையம்பின மனைமறுக்குந்து
(௧)மனைக்குவைஇய கறிமூடையாற்
கலிச்சும்மையகருந்து
கலந்தந்த பொற்பரிசங்
கழித்தோணியாற் கரைசேர்க்குந்து
மலைத்தாரமுங் கடற்றாரமுந்
தலைப்பெய்து வருநர்க்கீயும்
புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்
முழங்குகடன் முழவின் முசுறி யன்ன
நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்
புரைய ரல்லோர் வரையல ளிவளெனத்
தந்தையுங் கொடாஅ னாயின் வந்தோர்
வாய்ப்பட் விறுத்த வேணி யாயிடை
வருந்தின்று கொல்லோ தானே பருந்துயிர்த்
திடைமதிற் சேக்கும் புரிசைப்
படைமயங் காரிடை நெடுந லூரே.
திணையும் துறையும் அவை.
பரணர். (௩௪௩)

௧. மனைமறுக்குவைஇய.

(௩௪௪.) செந்நெ லுண்ட பைந்தோட்டு மஞ்ஞை
செறிவளை மகளி ரோப்பலிற் (௧)பறந்தெழுந்து
(௨)துறைநணி மருதத் திறுக்கு மூரொடு
நிறைசால் விழுப்பொரு டருத லொன்றோ
புகைபடு கூரெரி பரப்பிப் பகைசெய்து
பண்பி லாண்மை தருத லொன்றோ
விரண்டினு ளொன்று காமையோ வரிதே
காஞ்சிப் பனிமுறி யாரங் கண்ணி
கணிமேவந்தவளல்குலவ்வரியே.
திணையும் துறையும் அவை.
.................. அடைநெடுங்கல்லியார். (௩௪௪)

௧. பிறந்தெழுந்து. ௨. துறைநணி.

(௩௪௫.) களிறணைப்பக் கலங்கினகாஅ
தேரோ டத்துகள் கெழுமின தெருவு
(க)மாமறுகலின் மயக்குற்றன, வழி
கலங்கழாஅலிற், றுறை, கலக்குற்றன
தெறன்மறவ ரிறைகூர்தலிற்
பொறைமலிந்து நிலனெளிய
வந்தோர் பலரே வம்ப வேந்தர்
பிடியுயிர்ப் பன்ன கைகவ ரிரும்பி
னோவுற ழிரும்புறங் காவல் கண்ணிக்
கருங்கண் கொண்ட நெருங்கல் வெம்முலை
மைய னோக்கிற் றையலை நயந்தோ
ரளியர் தாமேயிவ டன்னை மாரே
செல்வம் வேண்டார் செருப்புகல் வேண்டி
நிரலல் லோர்க்குத் தரலோ வில்லெனக்
கழிப்பிணிப் பலகையர் (உ)கதுவாய் வாளர்
குழாஅங் கொண்ட குருதியம் புலவொடு
கழாஅத் தலைய கருங்கடை நெடுவே
(ங)லின்ன மறவர்த் தாயினு மன்னோ
வென்னா வதுகொ றானே
(ச)பன்னல் வேலிப் பணைநல் லூரே.

திணையும் துறையும் அவை.

அவனை அவர். (௩௪௫)

---

க. மாவழங்கலின். ங. இன்னம்பிறவர்த்தாயினும்.
உ. ததுவாய். ச. பன்னெல்வேலி.

(௩௪௬.) பிற..............ளபாலென மடுத்தலி
னீன்ற தாயோ வேண்டா ளல்லள்
கல்வி யென்னும் வல்லாண் சிறாஅ
னொல்வ..................ாது குடியே
யழிந்தோ ரழிய வொழிந்தோ ரொக்கல்
பேணுநர்ப் பெறாஅது விளியும்
புன்றலைப் பெரும்பாழ் செய்யுமிவ ணலனே.

திணையும் துறையும் அவை.

அண்டர்மகன்குறுவழுதி. (௩௪௬)

(௩௪௭.) உண்போன்றானறுங்கள்ளினிடச்சில
நாவிடைப் பஃறேறு கொலச் சிவந்த

வொளிறொளவாடக்குழைந்தபைந்தும்பை
யெறிந்திலை முரிந்த கதுவாய்..............
மணநாறு மார்பின் மறப்போ ரகுதை
குண்டுநீர் வரைப்பிற் கூட லன்ன
குவையிருங் கூந்தல் வருமு மணநாறு
மார்பின்மறப்போராலைசெபப
வென்னு வதுகொ ளுனே சேந்த
சினைநீர் வரைப்பிற் கூட லன்ன
விளங்குழைய வாயினும் வேந்தர்
வினைநவில் யானை பிணிப்ப
வேர்துளங் கினநம் மூருண் மரனே.

திணையும் துறையும் அவை.

கபிலர். (௩௪எ)

(௩௪அ.) வெண்ணெல் லரிநர் தண்ணுமை வெரீஇக்
கணக கொண்ட தீந்தே னிரியக்
கள்ளரிக் குங்குயஞ் சிறுமீன் சீவும்
பாண்சேரி வாய்மொழித் தழும்பனூ ரன்ன
குவளை யுண்க ணிவளைத் தாயே
யீனு ளாயின ளாயி னுனது
நிழறொறு நெடுந்தேர் நிற்ப வயின்றொறுஞ்
செந்நுதல் யானை பிணிப்ப
வருந்தன் மன்னெம் பெருந்துறை மரனே.

திணையும் துறையும் அவை.

பரணர். (௩௪அ)

(௩௪௯.) நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையாக்
கடிய கூறும் வேந்தே தந்தையு
நெடிய வல்லது பணிந்துமொழி யலனே
யிஃதிவர் படிவ மாயின் வையெயிற்
றரிமதர் மழைக்க ணம்மா வரிவை
மரம்படு சிறுதீப் போல
வணங்கா யினடான் பிறந்த வூர்க்கே.

திணையும் துறையும் அவை.

மதுரை மருதனிளநாகனார். (௩௪௯)

(௩௫௦.) தூர்ந்த கிடங்கிற் சோர்ந்த ஞாயிற்
சிதைந்த விஞ்சிக் கதுவாய் மூதூர்

யாங்கா வதுகொ றானே தாங்காது
படுமழை யுருமி னிரங்கு முரசிற்
கடுமான் வேந்தர் காலை வந்தெந்
நெடுநிலை வாயிற் கொட்குவர் மாதோ
பொருந்தா தமருவ ரல்லர் போருழந்
தடுமுரண் முன்பிற் றன்னைய ரேந்திய
வடிவே லெஃகிற் சிவந்த வுண்கட்
டொடிபிறழ் முன்கை யிளையோ
ளணிநல் லாகத் தரும்பிய சுணங்கே.

திணையும் துறையும் அவை.
மதுரையோலைக்கடைக்கண்ணம்புகுந்தாராயத்தனார். (௩௱௫௰)

(௩௱௫௰௧.) படுமணி மருங்கின பணைத்தாள் யானையுங்
கொடிநுடங்கு மிசைய தேரு மாவும்
படையமை மறவரொடு துவன்றிக் கல்லெனக்
கடல்கண் டன்ன கண்ணகன் றானை
வென்றெறி வேந்த ரென்றும.........
வண்கை யெயினன் வாகை யன்ன
இவணலந் தாரா தமைகுவ ரல்ல
ரென்னா வதுகொ றானே தெண்ணீர்ப்
பொய்கை மேய்ந்த செவ்வரி நாரை
தேங்கொண் மருதின் பூஞ்சினை முனையிற்
காமர்நாஞ்சி..............................
மேமஞ்சால் சிறப்பினிப் பணைநல் லூரே.

திணையும் துறையும் அவை.
மதுரைப்படைமங்கமன்னியார். (௩௱௫௰௧)

(௩௱௫௰௨.) தேஎங்கொண்ட வெண்மண்டையான்
வீ..............................கறக்குந்து
அவல்வகுத்த பசுங்குடையாற்
புதன்முல்லைப் பூப்பறிக்குந்து
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
குன்றேறிப் புனற்பாயிற்
புனல்வளா...........................
......................நொடைநறவின்
மாவண் டித்தன் வெண்ணெல் வேலி
யுறந்தை யன்ன வுரைசா னன்கலங்
கொடுப்பவுங் கொடாஅ னென.........

.........ர்தந்த நாகிள வேங்கையிற்
கதிர்த்தொளி திகழு நுண்பல் சுணங்கின்
மாக்கண் மலர்ந்த முலையா டன்னையுஞ்
சிறுகோ லுளையும் புரவி............
.......................................யமரே.

திணையும் துறையும் அவை.
பரணர். (கூருஉ)

(கூருக.) ஆசில் கம்மியன் மாசறப் புனைந்த
பொலஞ்செய் பல்கா சணிந்த வல்குல்
ஈகைக் கண்ணி யிலங்கத் தைஇத்
தருமமொ டியல்வோள் சாய னோக்கித்
தவிர்த்த தேரை விளர்த்த கண்ணை
வினவ லானு வெல்போ ரண்ணல
யார்மக ளென்போய் கூறக் கேளினிக்
குன..................நிலைப்பல போர்பு
நாட்கடா வழித்த நனந்தலைக் குப்பை
வல்வி லிளையர்க் கல்குபத மாற்றாத்
தொல்குடி மன்னன் மகளே முன்னாட்
கூறி வந்த மாமுது வேந்தர்க்கு
......................................
.........யுழக்கிக் குருதி யோட்டிக்
கதுவாய் போகிய நுதிவா யெஃகமொடு
பஞ்சியுங் களையாப் புண்ண
ரஞ்சுதக வுடையரிவ டன்னை மாரே.

திணையும் துறையும் அவை.
காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார். (கூருக)

(கூருச.) அரசு தலைவரினு மடங்கலானு
நிரைகா ழெஃக நீரின் மூழ்கப்
புரையோர் சேர்ந்தெனத் தந்தையும் பெயர்க்கும்
வயலமர் கழனி வாயிற் பொய்கைக்
கயலார் நாரை யுகைத்த வாளை
புனலாடு மகளிர் வளமனை யொய்யு
மூர்கவி னிழப்பவும் வருவது கொல்லோ
சுணங்கணிந் தேந்திய வணங்குதேந் திளமுலை
வீங்கிறைப் பணைத்தோண் மடந்தை
மான்பிணை யன்ன மகிழ்மட நோக்கே.

திணையும் துறையும் அவை.

பாணர். (௩௫௪)

(௩௫௫.) மதிலு ஞாயி லின்றே கிடங்கு
நீஇ ரின்மையிற் கன்றுமேய்ந் துகளு
மூரது நிலைமையு மிதுவே
..................................
..................................
.................................. (௩௫௫)

(௩௫௬.) பனிபழுநிய பல்யாமத்துப்
பாறுதலை மயிர்நனைய
வினிது துஞ்சுந் திருநகர் வரைப்பி
னினைய லகற்றவென் கிணைதொடாக் குறுகி
யவியுணவினோர் புறங்காப்ப
வறநெஞ்சத்தோன் வாழ்நாளென்
றதற்கொண்டு வரலேத்திக்
கரவில்லாக் கவிவண்கையான்
வாழ்கவெனப் பெயர்பெற்றோர்
பிறர்க்குவமந் தானல்லது
தனக்குவமம் பிறரில்லென
வதுநினைந்து மதிமழுங்கி
யாங்குநின்ற வெற்காணூஉச்
சேய்நாட்டுச் செல்கிணைஞனை
நீபுரவலை யெமக்கென்ன
மலைபயந்தமணியுங் கடறுபயந்தபொன்னுங்
கடல்பயந்த கதிர்முத்தமும்
வேறுபட்டவுடையுஞ் சேறுபட்டதசும்புங்
கனவிற்கண்டாங்கு வருந்தாதுநிற்ப
நனவி னல்கியோ னசைசா றோன்றல்
நாடென மொழிவோரவ னாடென மொழிவோர்
வேந்தென மொழிவோரவன் வேந்தென மொழிவோர்
காதல ரழுகண்ணீ
ரென்புபடு சுடலை வெண்ணீ றவிப்ப
வெல்லார் புறனுந் தான்கண் டுலகத்து
ம..................................
தன்புறங் காண்போர்க் காண்பறி யாதே.

திணையும் துறையும் அவை.

கதையங்கண்ணனார். (௩௫௬)

(௩௫௭.) குன்றுதலை மணந்த மலைபிணித் தியாத்தமண்
பொதுமை சுட்டிய மூவ ருலகமும்
பொதுமை யின்றி யாண்டிசி னோர்க்கு
மாண்ட தன்றே யாண்டுக டுணையே
வைத்த தன்றே வெறுக்கை வி......
.............................ணை
புணைகை விட்டோர்க் கரிதே துணையழத்
தொக்குயிர் வெளவுங் காலை
யிக்கரை நின்றிவர்ந் துக்கரை கொளலே.

திணை - அது; துறை - .................பெருங்காஞ்சியுமாம்.
பிரமனார். (௩௫௭)

(௩௫௮.) பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநில
மொருபக லெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்றா தாகலிற்
கைவிட் டனரே காதல ரதனால்
விட்டோரை (௧)விடாஅ டிருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே.

திணை - அது; துறை - மனையறம் துறவறம்.
வான்மீகையார். (௩௫௮)

௧. விடாஅதிரு.

(௩௫௯.) பாறுபடப் பறைந்த பன்மாறு மருங்கின்
வேறுபடு குரல வெவ்வாய்க் கூகையொடு
பிணந்தின் குறுநரி நிணந்திகழ் பல்ல
பேஎ மகளிர் பிணந்தழூஉப் பற்றி
விளருன் றின்ற வெம்புலான் மெய்யர்
களரி மருங்கிற் கால்பெயர்த் தாடி
யீம விளக்கின் வெருவரப் பேருங்
காடுமுன் னினரே நாடுகொண் டோரு
நினக்கும் வருதல் வைக லற்றே
வசையு நிற்கு மிசையு நிற்கும்
அதனால், வசைநீக்கி யிசைவேண்டியு
நசைவேண்டாது நன்றுமொழிந்து
நிலவுக்கோட்டுப் பலகளிற்றொடு
பொலம்படைய மாமயங்கிட
விழைகிளர் நெடுந்தே ரிரவலர்க் கருகாது

கொள்ளென விடுவை யாயின் வெள்ளென
வாண்டுநீ பெயர்ந்த பின்னு
மீண்டுநீடு விளங்குநீ யெய்திய புகழே.

திணை - அது; துறை - பெருங்காஞ்சி.
அந்துவன்கீரனைக்காவட்டனார். (௩௫௧)

(௩௫௦.) பெரிதாராச் சிறுசினத்தர்
சிலசொல்லாற் பலகேள்வியர்
நுண்ணுணர்வினாற் பெருங்கொடையர்
கலுழ்நனையாற் றண்டேறலர்
கனிகுய்யாற் கொழுந்துவையர்
தாழுவந்து தழூஉமொழியர்
பயனுறப்பப் பலர்க்காற்றி
யேம மாக விந்நில மாண்டோர்
சிலரே பெரும கேளினி நாளும்
பலரே தகையஃ தறியா தோரே
யன்னோர் செல்வமு மன்னி நில்லா
தின்னு மற்றதன் பண்பே யதனா
னிச்சமு மொழுக்க முட்டிலை பரிசி
னச்சுவர் கையி னிரப்ப லோம்புமதி
யஞ்சுவரப் பாறிறை கொண்ட பறந்தலை மாகத
கள்ளி போகிய களரி மருங்கின்
வெள்ளி னிறுத்த பின்றைக் கள்ளொடு
புல்லகத் திட்ட சில்லவிழ் வல்சி
புலைய னேவப் புன்மே லமர்ந்துண்
டழல்வாய்ப் புக்க பின்னும்
பலர்வாய்த் திராஅர் பருத்துண் டோரே.

திணையும் துறையும் அவை.
தந்துமாரனைச் சங்கவருணரென்னும் நாகரியர்பாடியது. (௩௫௦)

(௩௫௧.) காரெதி ருருமி னுரறிக் கல்லென, வாருயிர்க் கலமரு மாராக்
கூற்ற, நின்வர வஞ்சலன் மாதோ நன்பல, கேள்வி முற்றிய
வேள்வி யந்தணர்க், கருங்கல நீரொடு சிதறிப் பெருந்தகைத்,
தாயினன்று பலர்க்கீத்துத், தெருணடைய மாகளிறொடுதன்,
றுள்பாடுநர்க்கு நன்கருளியு, முருணடை.......................
............ான்றதன், றுள்சேருநர்க் கினிதீத்தும், புரிமாலையர்
பாடினிக்கும், பொலந்தாமரைப் பூம்பாணரொடு, கலந்தளைஇய
நீளிருக்கையாற், பொறையொ.......................ழானேக்கின்

வில்லென விலங்கியபுருவததுவலலெனனஙகிளுலஞ்சுமூள்
ளெயிற்றுமகளிரலகுறுஙகாவசைமெலவெ... ...ங்கலத்தேந்தி
யமிழ்தெனமடுப்பமாந்தியிகழ்வில, னில்லாவுலகத்து..........
............மைநீசொல்லவேண்டாமூந்தறிந்த..............
.....................................................
.................................................ஞர். (கசுக)

(கசுஉ.) ஞாயிற் றன்ன வாய்மணி மிடைந்த
மதியுற ழார மார்பிற் புரளப்
பலிபெறு முரசம் பாசறைச் சிலைப்பப்
பொழிலகம் பரந்த பெ.................
..................குமவிசய வெண்கொடி
யணங்குருத் தன்ன கணங்கொ டானைக்
கூற்றத் தன்ன மாற்றரு முன்பி
ஞக்குரற் காண்பி னந்த ணாளிர்
நான்மறைக் குறி..........................யி
னறங்குறித் தன்று பொருளா குதலின்
மருளூர்ந்து மயக்கொரீஇக்
கைபெய்தநீர் கடற்பரப்ப
வாமிருந்த வடைநல்கிச்
சோறுகொடுத்து மிகப்பெரிதும்
வீறுசான..................நன்றுஞ்
சிறுவெள் ளென்பி னெடுவெண் களரின்
வாய்வன் காக்கை கூகையொடு கூடிப்
பகலுங் கூவு மகலு ளாங்கட்
காடுகண் மறைத்த கல்லென் சுற்றமொ
டில்லென் றில்வயிற் பெயர மெல்ல
விடஞ்சிறி தொதுங்க லஞ்சி
யுடம்பொடுஞ் சென்மா ருயர்ந்தோர் நாட்டே.

திணை - பொதுவியல்; துறை - பெருங்காஞ்சி.
அவனைச் சிறுவெண்டேரையார். (கசுஉ)

(கசுரு.) இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநில
முடையிலை நடுவணுத் திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவல
ரிடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்த
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே

அதனுல், நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்க
ணுப்பிலாஅ வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினே னீயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையு
மின்னு வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே.

திணையும் துறையும் அவை.
..................ஐயாதிச் சிறுவெண்டேரையார். (௩௬௩)

(௩௬௪.) வாடா மாலை பாடினி யணியப்
பாணன் சென்னிக் கேணி பூவா
வெரிமரு டாமரைப் பெருமலர் தயங்க
மைவிடை யிரும்போத்துச் செந்தீச் சேர்த்திக்
காயங் கனிந்த கண்ணகன் கொழுங்குறை
நறவுண் செவ்வாய் நாத்திறம் பெயர்ப்ப
வுண்டு தின்று மிரப்போர்க் கீந்து
மகிழ்கம் வம்மோ மறப்போ ரோயே
யரிய வாகலு முரிய பெரும
நிலம்பக வீழ்ந்த வலங்கற் பல்வேர்
முதுமரப் பொத்திற் கதுமென வியம்புங்
கூகை கோழி யானாத்
தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே.

திணையும் துறையும் அவை.
அவனைக் கூகைக்கோழியார். (௩௬௪)

(௩௬௫.) மயங்கிருங் கருவிய விசும்பு (க)முக னாக
வியங்கிய விருசுடர் கண்ணெனப் பெயரிய
(உ)வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்
வயிரக் குறட்டின் (௩)வயங்குமணி யாத்துப்
பொன்னந் திகிரி முன்சமத் துருட்டிப்
பொருநர்க் காணாச் செருமிகு முன்பின்
முன்னோர் செல்லவுஞ் செல்லா தின்னும்

விலைநலப் பெண்டிரிற் பலர்மீக் கூற
(௪)வுள்ளேன் வாழியர் யானெனப் பன்மா
ணிலமக ளழுத காஞ்சியு
முண்டென வுரைப்பரா லுணர்ந்திசி னோரே.

திணையும் துறையும் அவை.
மார்க்கண்டேயனார். (௩௬௫)

௧. முகனக. ௨. வழியிடை. ௩. வயிரமணியாரத்துப். ௪. உளனேவாழிய.

(௩௬௬.) விழுக்கடிப் பறைந்த முழுக்குரன் முரச
..............ருங்கி ஞெருமொழித் தாக
வரவெறி யுருமி னூறுபு சிலைப்ப
வொருதா மாகிய பெருமை யோருந்
தம்புகழ் நிறீஇச் சென்றுமாய்ந் தனரே
அதனால், அறவோன் மகனே மடு...........
..........................................
.................. உரைப்பக் கேண்மதி
நின்னூற்றம் பிறரறியாது
பிறர்கூறிய மொழிதெரியா
ஞாயிற் றெல்லை யாள்வினைக் குதவி
யிரவி னெல்லை வருவது நாடி
யுை..................................
உழவொழி பெரும்பக டழிதின் றுங்குச்
செங்கண் மகளிரொடு சிறுதுனி யளைஇ
யங்கட் டேற லாய்கலத் துகுப்பக்
கெடலருந் திருவ...................
மடைவேண் டுநர்க் கிடையருகா
தவிழ்வேண் டுநர்க் கிடையருளி
விடைவீழ்த்துச் சூடுகிழிப்ப
நீர்நிலை பெருத்த வார்மண லடைகரைக்
காவுதோறும்..........................
மடங்க லுண்மை மாயமோ வன்றே.

திணையும் துறையும் அவை.
தருமபுத்திரனைக் கோதமனார். (௩௬௬)

(௩௬௭.) நாகத் தன்ன பாகார் மண்டிலந்
தமவே யாயினுந் தம...............
வேற்றோ ராயினு நோற்றோர்க் கொழியு
மேற்ற பார்ப்பார்க் கீரங்கை நிறையப்

பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
பூசிறை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரரி தேறல்..................மகிழ்ந்
திரவலர்க் கருங்கல மருகாது வீசி
வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை யல்ல
தாழுங் காலைப் புணைபிறி தில்லை
யொன்றுபுரிந் தடங்கிய விருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்டக விருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்தர்
யானறி யளவையோ விதுவே வானத்து
வயங்கித் தோன்று மீனினு மிம்மென
வியங்கு மாமழை யுறையினு
முயர்ந்துமேந் தோன்றிப் பொலிகநுந் நாளே.

திணை - பாடாண்டிணை; துறை - வாழ்த்தியல்.

சேரமான்மாவெண்கோவும், பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதியும், சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தாரை ஔவையார். (கூசுஎ)

(கூசுஅ.) களிறு முகந்து பெயர்குவ மெனினே
யொளிறுமழை தவிர்க்குங் குன்றம் போலக்
கைம்மா வெல்லாங் கணையிடத் தொலைந்தன
கொடிஞ்சி நெடுந்தேர் முகக்குவ மெனினே
கடும்பரி நன்மான் வாங்குவயி னொல்கி
நெடும்பீ டழிந்து நிலஞ்சேர்ந் தனவே
கொய்சுவற் புரவி முகக்குவ மெனினே
மெய்நிறைந்த வடுவொடு பெரும்பிறி தாகி
வளிவழக் கறுத்த வங்கம் போலக்
குருதி யம்பெரும் புனல்கூர்ந் தனவே
யாங்க, முகவை யின்மையி னுகவை யின்றி
யிரப்போ ரிங்கு...னொடு வியன்களத்
தாளழிப் படுத்த வாளே ருழவ
கடாஅ யானைக் கால்வழி யன்னவென்
றெடாரித் தெண்கண் டெளிர்ப்பவொற்றிப்
பாடி வந்த தெல்லாங் கோடியர்
முழவுமரு டிருமணி மிடைந்த
நிரைவுறு மார முகக்குவ மெனவே.

திணை - வாகை; துறை - மறக்களவழி.

சேரமான்கடுக்கோநெடுஞ்சேரலாதன் சோழன்வேற்பஃறடக்கைப்பெருநற் கிள்ளியோடு போர்ப்புறத்துப்பொருதுவீழ்ந்தாரங்கழுத்தன்னதாக உயிர்போகாது கிடந்தானைக் கழாத்தலையார். (௩௬௮)

(௩௬௯.) இருப்புமுகஞ் செறித்த வேந்தெழின் மருப்பிற்
கருங்கை யானை கொண்மூ வாக
நீண்மொழி மறவ ரெறிவன ருயர்த்த
வாண்மின் னாக வயங்குகடிப் படைந்த
குருதிப் பலிய முரசுமுழக் காக
வரசராப் பனிக்கு மணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளி யாக
விசைப்புறு வல்வில் வீங்குநா ணுகைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
யீரச் செறுவிற் றேரே ராக
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்த்த திருத்துறு செஞ்சாற்
பிடித்தெறி வைவேற் கணையமொடு வித்தி
விழுத்தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்ப்
பேய்மகள் பற்றிய பிணம்பிறங்கு பல்போர்க்
கணநரி யோடு கழுதுகளம் படுப்பப்
பூதங் காப்பப் பொலிகளந் தழீஇப்
பாடுநர்க் கிருந்த பீடுடை யாள
தேய்வை வெண்காழ் புரையும் விசிபிணி
வேய்வை காணா விருந்திற் போர்வை
யரிக்குரற் றடாரி யுருப்ப வொற்றிப்
பாடி வந்திசிற் பெரும பாடான்
றெழிலி தோயு மிமிழிசை யருவிப்
பொன்னுடை நெடுங்கோட் டிமயத் தன்ன
வோடை நுதல வொல்குத லறியாத்
துடியடிக் குழவிப் பிடியிடை மிடைந்த
வேழ முகவை நல்குமதி
தாழா வீகைத் தகைவெய் யோயே.

திணையும் துறையும் அவை; துறை - ஏர்க்கள உருவகமுமாம்.

சேரமான்கடலோட்டிய வேல்கெழுகுட்டுவனைப் பரணர். (௩௬௯)

(௩௭௦.) ..........................................ளி
நாரும் போழுஞ் செய்துண் டோராங்குப்

பசிதினத் திரங்கிய விரும்பே ரொக்கற்
கூர்பதங் கண்ணென மாதிரந் துழைஇ
வேருழந் துலறி மருங்குசெ..?....கொழிய
வத்தக் குடிஞை துடிமரு டீங்குர
லுழுஞ்சிலங் கவட்டிடை யிருந்த பருந்தின்
பெடைபயிர் குரலோ டிசைக்கு மாங்கட்
கழைகாய்ந் துலறி............................
வரிமரற் றிரங்கிய கானம் பிற்படப்
பழுமர முள்ளிய பறவை போல
வொண்படை மாறி வீழ்கனி பெய்தெனத்
துவைத்தெழு குருதி நிலமிசைப் பரப்ப
விளைந்த ......குர லரிந்துகால் குவித்து
...............பல்போர் பழிய வாங்கி
யெருதுகளி றாக வாண்மட லோச்சி
யதரி திரித்த வாளுகு கடாவி
னகன்கட் டடாரி தெளிர்ப்ப வொற்றி
வெந்திறல் வியன்களம் பொலிகென் றேத்தி
யிரும்புமுகஞ் செறித்த வேந்தெழின் மருப்பின்
வரைமருண் முகவைக்கு வந்தனென் பெரும
வடிநவி லெஃகம் பாய்ந்தெனக் கிடந்த
தொடியுடைத் தடக்கை யோச்சி வெருவா
ரினத்தடி விராய வரிக்குட ரடைச்சி
யழுகுரற் பேய்மக ளயரக் கழுகொடு
செஞ்செவி யெருவை திரிதரு
மஞ்சுவரு கிடக்கைய களங்கிழ வோயே.

திணையும் துறையும் அவை.

சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னியை ஊன்பொதிபசுங்குடையார்.

(௩௭௦)

(௩௭௧.) அகன்றலை வையத்துப் புரவற் காணாது
மரந்தலைச் சேர்ந்து பட்டினி வைகிப்
போதவி முலரி நாரிற் றொடுத்துத்
தயங்கிரும் பித்தை பொலியச் சூடிப்
பறையொடு தகைத்த கலப்பையென் முரவுவா
யாடுறு குழிசி பாடின்று தூக்கி
மன்ற வேம்பி னொண்பூ வுறைப்பக்
குறைசெயல் வேண்டா நசைய விருக்கையே

னரிசி யின்மையி னூரிடை நீந்திக்
கூர்வா யிரும்படை நீரின் மிளிர்ப்ப
வருகணை ய......ளி யன்பின்று தலைஇ
யிரைசுரும் பார்க்கு மூரைசால் பாசறை
வில்லேர் முழவநின் னல்லிசை யுள்ளிக்
குறைத்தலைப் பிணனெதிர்ப்போர் பழித்தி
யானை யெருத்தின் வாண்மட லோச்சி
யதரி திரித்த வாளுகு கடாவின்
மதியத் தன்னவென் விசியுறு தடாரி
யகன்க ணதிர வாகுளி தொடாவிற்
பணைமரு ணெடுந்தாட் பல்பிணர்த் தடக்கைப்
புகர்முக முகவைக்கு வந்திசிற் பெரும
களிற்றுக்கோட் டன்ன வாலெயி றழுத்தி
விழுக்கொடு விரைஇய வெண்ணிணச் சுவையினள்
குடர்த்தலை மாலை சூடி (யுணத்தின)
வாழுப் பெருவள்ஞ் செய்தோன் வானத்து
வயங்குபன் மீனினும் வாழியர் பலவென
வுருகெழு பேஎய்மக ளயரக்
குருதித் துகளாடிய களங்கிழ வோயே.

திணையும் துறையும் அவை.
தலையாலங்கானத்துச் செருவென்றநெடுஞ்செழியனைக் கல்லாடனார். (௩௭௧)

(௩௭௨.) விசிபிணித் தடாரி விம்மென வொற்றி
யேத்தி வந்த தெல்லா முழுத்த
விலங்குவா ளவிரொளி வலம்பட மின்னிக்
கணைத்துளி பொழிந்த கண்கூடு பாசறைப்
பொருந்தாத் தெவ்வ ரிருந்தலை யடுப்பிற்
கூவிள விறகி னாக்குவரி நுடங்க
லானா மண்டை வன்னியந் துடுப்பி
னீனா வெண்மா னிடந்துழந் தட்ட
மாமறி பிண்டம் வாலுவ னேந்த
வதுவை விழவிற் புதுவோர்க் கெல்லாம்
வெவ்வாய்ப் பெய்த பூதநீர் சால்கெனப்
புலவுக்களம் பொலிய வேட்டோய்நின்
னிலவுத்திக ழார முகக்குவ மெனவே.

திணை - வாகை; துறை - மறக்களவேள்வி.
அவனை மாங்குடிகிழார். (௩௭௨)

(௩௭௩.) உருமிசை முரச முழக்கென விசைப்பச்
செருநவில் வேழங் கொண்மூ வாகத்
தேர்மா வளிதுளி தலைஇ நாமுறக்
கணைக்காற் றெடுத்த கண்ணகன் பாசறை
யிழிதரு குருதியொ டேந்திய வொள்வாட்
பிழிவது போலப் பிட்டையூ றுவப்ப
மைந்த ராடிய மயங்குபெருந் தானைக்
கொங்கு புறம்பெற்ற கொற்றவேந்தே
........................தண்ட மாப்பொறி
மடக்கண் மயிலியன் மறலி யாங்கு
நெடுஞ்சுவர் நல்லில் புலம்பக் கடைசுழிந்து
மென்றோண் மகளிர் மன்றம் பேணார்
புண்ணுவ....................................
........................யணிப் புரவி வாழ்கெனச்
சென்னிழ லின்மையி னன்னிழற் சேர
நுண்பூண் மார்பிற் புன்றலைச் சிறாஅ
ரம்பழி பொழுதிற் றமர்முகங் காணா
..................................ற் றெக்கான
வேந்து புறங்கொடுத்த வீந்துகு பறந்தலை
மாட மயங்கெரி மண்டிக் கோடிறு
புருமெறி மலையி னிருநிலஞ் சேரச்
சென்றோன் மன்ற சொ................
.............ண்ணறிநர் கண்டுகண் ணலைப்ப
வஞ்சி முற்றம் வயக்கள னாக
வஞ்சா மறவ ராட்போர் பழித்துக்
கொண்டனை பெரும குடபுலத் ததரி
பொலிக வத்தைநின் பணிதனற......ளம்
விளங்குதிணை வேந்தர் களந்தொறுஞ் சென்று
புகர்முக முகவை பொலிகென் றேத்திக்
கொண்ட னென்ப பெரியோர் யானு
மங்கண் மாக்கிணை யதிர வொற்ற
..................லனாயினுங் காதலி னேத்தி
நின்னோர் பிறரில ணின்மையின் ........
மன்னெயின் முகவைக்கு வந்திசிற் பெரும
பகைவர் புகழ்ந்த வாண்மை நகைவர்க்குத்
தாவின் றுதவும் பண்பிற் பேயொடு

கணநரி திரிதரு மாங்க ணிணனருந்து
செஞ்செவி யெருவை குழீஇ
யஞ்சுவரு கிடக்கைய களங்கிழ வோயே.

திணை - அது; துறை - மறக்களவழி; ஏர்க்கள உருவகமுமாம்.

சோழன் குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன் கருவூரெறிந்தானைக் கோவூர்கிழார். (௩௭௩)

(௩௭௪.) கானன் மேய்ந்து வியன்புலத் தல்கும்
புல்வா யிரலை நெற்றி யன்ன
பொலமிலங்கு சென்னிய பாறுமயி ரவியத்
தண்பனி யுறைக்கும் புலரா ஞாங்கர்
மன்றப் பலவின் மால்வரை பொருந்தியென்
றெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி
யிருங்கலை யோர்ப்ப விசைஇக் காண்வரக்
கருங்கோற் குறிஞ்சி யடுக்கம் பாடப்
புலிப்பற் றாலிப் புன்றலைச் சிறாஅர்
மான்கண் மகளிர்க் கான்றோ ரகனறுவா
சிலைப்பாற் பட்ட முளவுமான் கொழுங்குறை
விடர்முகை யடுக்கத்துச் சினைமுதிர் சாந்தம்
புகர்முக வேழத்து மருப்பொடு மூன்று
மிருங்கேழ் வயப்புலி வரியதட் குவைஇ
விருந்திறை நல்கு நாட னெங்கோன்
கழறொடி யாஅ யண்டிரன் போல
வண்மையு முடைமையோ ஞாயிறு
கொன்விளங் குதியால் விசும்பி னானே.

திணை - பாடாண்டிணை; துறை - பூவைநிலை.

ஆய் அண்டிரனை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார். (௩௭௪)

(௩௭௫.) அலங்குகதிர் சுமந்த கலங்கற் சூழி
நிலைதளர்வு தொலைந்த வொல்குநிலைப் பல்காற்
பொதியி லொருசிறை பள்ளி யாக
முழாஅரைப் போந்தை யரவாய் மாமடற்
றாரும் போருங் கிணையொடு சுருக்கி
யேரின் வாழ்நர் குடிமுறை புகாஅ
வூழிரந் துண்ணு முயவல் வாழ்வைப்
புரவெதிர்ந்து கொள்ளுஞ் சான்றோர் யாரெனப்
பிரசந் தூங்கு மறாஅ யாண

ரவரை யணிப்படப்பை நன்னாட்டுப் பொருந
பொய்யா வீகைக் கழறொடி யாஅய்
யாவரு மின்மையிற் கிணைப்பத் தாவது
பெருமழை கடற்பரந் தாஅங்கி யானு
மொருநின் னுள்ளி வந்தனெ னதனாற்
புலவர் புக்கி லாகி நிலவரை
நிலீய ரத்தை நீயே யொன்றே
நின்னின்று வறுவி தாகிய வுலகத்து
நிலவன் மாரோ புரவலர் துன்னிப்
பெரிய வோத்தினுஞ் சிறிய வுணராப்
பீடின்று பெருகிய திருவிற்
பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே.

திணை - பாடாண்டிணை; துறை - வாழ்த்தியல்.

அவனை அவர். (௩௭௫)

(௩௭௬.) விசும்பு நீத்த மிறந்த ஞாயிற்றுப்
பசுங்கதிர் மழுகிய சிவந்துவாங் கந்திச்
சிறுநனி யிறந்த பின்றைச் செறிபிணிச்
சிதாஅர் வள்பினென் றடாரி தழீஇப்
பாண ராரு மளவை யான்றன்
யாணர் நன்மனைக் கூட்டுமுத னின்றனெ
னிமைத்தோர் விழித்த மாத்திரை ஞெரேரெனக்
குணக்கெழு திங்கள் கனையிரு ளகற்றப்
பண்டறி வாரா வுருவோ டென்னரைத்
தொன்றுபடு துளையொடு பருவிழை போகி
நைந்துகரை பறைந்தவென் னுடையு நோக்கி
விருந்தின னளிய னிவனெனப் பெருந்தகை
(க)நின்ற முரற்கை மிக்கு நன்று
மரவுவெகுண் டன்ன தேறலொடு சூடுருபு
நிரயத் தன்னவென் வறன்களைந் தன்றே
யிரவி னானே யீத்தோ னெந்தை
யன்றை ஞான்றினோ டின்றி னூங்கு
மிரப்பச் சிந்தியே னிரப்படு புணையி
னுளத்தி னளக்கு னிரந்த கையே
னிறைக்குளப் புதவின் மகிழ்ந்தனெ னாகி
ஒருநாள், இரவலர் வனாயா வள்ளியோர் கடைத்தலை

ஞாங்கர் நெடுமொழி பயிற்றித்
தோன்றல் செல்லாதென் சிறுகிணைக் குரலே.

திணை - அது; துறை - இயன்மொழி.

ஓய்மான்நல்லியாதனைப் புறத்திணைநன்னாகனார். (௩௭௬)

---

௧. நின்றமூரற்.
நின்றமுரற்கைநீக்கி.

(௩௭௭.) ...................................................... பொற்கோட்டி
யானையரியக்கவர்பரிக் (௧) கச்சைநன்மான் (௨) வடிமணிவாங்கு
சினைநற்றேர்க்குழுவின (௩) கதழிசைவனதனிவுவாளினவாழ்
நரார்வமொமனறிடநதடலொலிகொண்டகானையடலயெங்
குருசினிமன்னியநெடிதே.

திணை - அது; துறை - வாழ்த்தியல்.

சோழன் இராசசூயம் வேட்டபெருநற்கிள்ளியை உலோச்சனார். (௩௭௭)

---

௧. கச்சமை. ௨. வடிமணியாங்குருள.
௩. கதழ்பரி..............டண்டிக்கடலொலிகோசமா.

(௩௭௮.) தென்பரதவர் மிடல்சாய
வடவடுகர் வாளோட்டிய
தொடையமை கண்ணித் திருந்துவேற் றடக்கைக்
கடுமா கடைஇய விடுபரி வடிம்பி
னற்றார்க் கள்ளின் சோழன் கோயிற்
புதுப்பிறை யன்ன சுதைசெய் மாடத்துப்
பணிக்கயத் தன்ன நீணகர் நின்றே
னரிக்கூடு மாக்கிணை யிரிய வொற்றி
யெஞ்சா மரபின் வஞ்சி பாட
வெமக்கென வகுத்த வல்ல மிகப்பல
மேம்படு சிறப்பி னருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே யதுகண்
டிலம்பா டுழந்தவென் னிரும்பே ரொக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநருஞ்
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரு
மரைக்கமை மரபின மிடற்றியாக் குநரு
மிடற்றமை மரபின வரைக்கியாக் குநருங்
கடுந்தே ரிராம னுடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வெளவிய ஞான்றை
நிலஞ்சேர் மதாணி கண்ட குரங்கின்

செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்
கறாஅ வருநகை யினிதுபெற் றிகுமே
யிருங்கிளைத் தலைமை யெய்தி
யரும்பட ரெவ்வ முழந்ததன் றலையே.

திணை - அது; துறை - இயன்மொழி.

சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னியை ஊன்பொதிபசுங் குடையார். (கூஎஅ)

(கூஎக.) யானே பெறுகவன் றாணிழல் வாழ்க்கை
யவனே பெறுகவென் னாவிசை நுவற
னெல்வரி தொழுவர் கூர்வாண் மழுங்கிற்
பின்னை மறத்தோ டரியக் கல்செத்
தள்ளல் யாமைக் கூன்புறத் துரிஞ்சு
நெல்லமல் புறவி னிலங்கை கிழவோன்
வில்லி யாதன் கிணையேம் பெரும
குறுந்தா ளேற்றைக் கொழுங்க ணவ்விளர்
நறுநெய் யுருக்கி நாட்சொறி...............
வல்ல னெந்தை பசிதீர்த் தல்லெனக்
கொன்வரல் வாழ்க்கைநின் கிணைவன் கூறக்
கேட்டதற் கொண்டும் வேட்கைதண் டாது
விட்டோய் தலைய குன்றம் பின்படர
.......................கனென் யானே தாயி
றூவாக் குழவி போல வாங்கத்
திருவுடைத் திருமனை யைதுதோன்று கமழ்புகை
வருமழை மங்குலின் மறுகுடன் மறைக்குங்
குறும்ப.........டநெடுகழி நீண்மதி லூரே.

திணை - அது; துறை - பரிசிற்றுறை.

ஓய் மான்வில்லியாதனைப் புறத்திணைநன்னாகனார். (கூஎக)

(கூஅ0.) தென்பவ் வத்து முத்துப் பூண்டு
வடகுன்ற..................................
...............................ங்கடற் றானை
யின்னிசை விறல்வென் றித்
தென்னவர் வயமறவன்
மிசைப்பெய்த நீர் கடற்பரந்து முத்தாகுந்து
நாறிதழ்க் குளவியொடு கூதளங் குழைய

வெறுபெ.............................த்துந்து
நீஞ்சுளைப் பலவி னுஞ்சிற் பொருநன்
றுப்பெதிர்ந் தோர்க்கே யுள்ளாச் சேய்மைய
னட்பெதிர்ந் தோர்க்கே யங்கை நண்மையன்
வல்லேற் கந்த நல்லிசை யல்ல
.....................த்தார்ப் பிள்ளையஞ் சிறாஅ
ரன்ன னாகன் மாறே யிந்நில
மிலம்படு காலை யாயினும்
புலம்பல்போ யின்று பூத்தவென் கடும்பே.

திணை - பாடாண்டிணை : துறை - இயன்மொழி.

நாஞ்சில்வள்ளுவனைக் கருவூர்க் கதப்பிள்ளை. (௩௮0)

(௩௮௧.) ஊனுமூணு முனையி னினிதெனப்
பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவும்
மளவுபு கலந்து மெல்லியது பருகி
விருந்துறுத் தாற்றி யிருந்தனெ மாகச்
சென்மோ பெருமவெம் விழவுடை நாட்டென
யாந்தன் னறியுன மாகத் தான்பெரி
தன்புடை மையி னெம்பிரி வஞ்சித்
துணரியது கொளாஅ வாகிப் பழமூழ்த்துப்
பயம்பகர் வறியா மயங்கரின் முதுபாழ்ப்
பெயல்பெய் தன்ன செல்வத் தாங்க
ணீயா மன்னர் புறங்கடைத் தோன்றிச்
சிதாஅர் வள்பிற் சிதர்ப்புறத் தடாரி
யூனுகிர் வலந்த தெண்க ணொற்றி
விரல்விசை தவிர்க்கு மரலைப் பாணியி
னிலம்பா டகற்றல் யாவது புலம்பொடு
தெருமர லுயக்கமுந் (௧)தீர்க்குவோ மதனா
லிரு(௨)நிலங் கூலம் பாறக் (௩)கோடை
வருமழை (௪)முழக்கிசைக் கோடிய பின்றைச்
சேயை யாயினு மிவணை யாயினு
மிதற்கொண் டறிநை வாழியோ கிணைவ
சிறுநனி, ஒருவழிப் படர்கென் றோனே யெந்தை
யொலிவெள் ளருவி வேங்கட நாட
னுறுவருஞ் சிறுவரு மூழ்மா றுய்க்கு
மறத்துறை யம்பியின் மானப் பிறப்பிறன்

திருங்கோ ளீராப் பூட்கைக்
கரும்ப னூரன் காதன் மகனே.

திணையும் துறையும் அவை.

கரும்பனூர்கிழானை நன்னாகனார். (கூஅக)

க. தீர்க்குவோனதனால். கூ. கொண்டவருமழை.
உ. நிலங்கடலம். ச. முழக்கிடைக்.

(கூஅஉ.) கடற்படை யடற்கொண்டி
மண்டுற்ற மறனோன்றாட்
டண்சோழ நாட்டுப்பொருந
னலங்கிள்ளி யணியியவுளி
நலங்கிள்ளி நசைப்பொருநரேம்
பிறர்ப்பாடிப் பெறல்வேண்டே
மவற்பா டுதுமவன் றாள்வா ழியவென
நெய்குய்ய வூனவின்ற
பல்சோற்றா னின்சுவைய
நல்குரவினபசிதுனபவெனபகிள
முன்னாள் விட்ட மூதறி சிறாஅரும்
யானுமே மணியங் கேழணி யுத்திக்
கட்கேள்விக் கவைநாவிற்
றாநிறத்த வரீஇஅப்போல
வறனொரீஇ வயங்குவாய்ப்ப
விடுமதி யத்தை கடுமான் றோன்ற
னினதே, முந்நீ ருடுத்தவிவ் வியனுல கறிய
வெனதே கிடைக்கா ழன்னவென் றெண்கண் மாக்கிணைக்
கண்ணகத் தியாத்த நுண்ணரிச் சிறுகோ
லெறிதொறு நுடங்கி யாங்குநின் பகைஞர்
கேட்டொறு நடுங்க வேந்து
வென்ற தோபிறர் வேத்தவை யானே.

திணை - அது; துறை - கடைநிலை.

சோழன் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார். (கூஅஉ)

(கூஅகூ.) ஒண்பொறிச் சேவ லெடுப்பவேற் றெழுந்து
தண்பனி யுறைக்கும் புலரா ஞாங்கர்
நுண்கோற் சிறுகிணை சிலம்ப வொற்றி
நெடுங்கடை நின்று பகடுபல வாழ்த்தித்
தண்புக ழேத்தினெ னாகபலங்

தருங்கடி வியனகர்க் குறுகல் வேண்டிக்
கூம்புவிடு மென்பிணி யவிழ்த்த வாம்பற்
றேம்பா யுள்ள தங்கமழ் மடருளப்
பாம்பு பயந்தன்ன வடிவின் (க)சாம்பின்
கழைபடு சொலியி னிழையணி வாரா
வொண்பூங் கலிங்க முடீஇ நுண்பூண்
வசிந்துவாங்கு நுசுப்பி னவ்வாங் குந்திக்
கற்புடை மடந்தை தற்புறம் புல்ல
வெற்பெயர்ந்த நோக்கி.....................
..................................கற்கொண்
(உ)டளித்துப் பிறந்தனெ னாகி யவ்வழிப்
பிறர், பாடுபுகழ் பாடிப் படர்பறி யேனே
குறுமுலைக் கலமரும் பாலார் வெண்மறி
நரைமுக வூகமொடு கஞ்சென...............
....................(௩)கன்றுபல கெழீஇய
கான்கெழு நாடன் கடுந்தேர் வியனென
வொருவனை யுடையேன் மன்னே யானே
யருனெவின் பரிகோ வெள்ளியது நிலையே.

திணையும் துறையும் அவை
மாறேக்கத்து *நப்பசலையார். (௩௮௩)

---

க. காம்பின. உ. டழிளிதது௨. ௩. தனறுபல.

(௩௮௪.) மென்பாலா னுடனணைஇ
வஞ்சிக்கோட் டுறங்குநாரை
வாடைக்கரும்பின் பூவருந்து
வன்(க)பாலாற் கருங்கால்வரகின்
........................................
வங்கட் குறுமுயல் வெருவ வயல
கருங்கோட் டிருப்பைப் பூவுறைக் குந்து
விழவின் றாயினு முழவர் மண்டை
யிருங்கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து
...............துணையேம் பெரும
நெல்லென்னும் பொன்னென்னுங்
கன்னற்கொண்ட நறவென்னு
............மன்னு வவைபலவும்

---

* நப்பாலையாரென்றும் பிரதிபேதமுண்டு.

யான்றண்டவு (௨)மூன்றண்டா
நிணம்பெருத்த கொழுஞ்............
.................................
நீர்நாண நெய்வழங்கிப்
புரந்தோ னெந்தை யாமலந் தொலை.........
யன்னோனை யுடையேமென்பவற.........
கியாண்டு நிற்க வெள்ளி மாணட
வுண்டநன்கலம் பெய்துநுடக்கவுந்
தின்றநண்ப (௩)லூன்றோண்டவும்
வந்த வைக லல்லது
சென்ற வெல்லைச் செலவறி யேனே.

திணையும் துறையும் அவை.

கரும்பனூர்கிழானைப் புறத்திணைநன்னாகனார். (௩௮௪)

க. பாலாற்கு. ௨. மதூன்றண்டா. ௩. லூன்றொணறணடவு.

(௩௮௫.) வெள்ளி தோன்றப் புள்ளுக்குர லியம்பப்
புலரி விடியற் பகடுபல வாழ்த்தித்
தன்கடைத் தோன்றினு மிலனே பிறன்கடை
யகன்கட் டடாரிப் பாடுகேட் டருளி
வறனியா னீங்கல் வேண்டி யென்னரை
நீலத்தின் சிதாஅர்களைந்து
வெளிது டீஇயென் பசிகளைந் தோனே
காவிரி கணையுந் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி யம்பர் கிழவோ
னல்லரு வந்தை வாழியர் புல்லிய
வேங்கட விறல்வரைப் பட்ட
வோங்கல் வானத் துறையினும் பலவே.

திணை - அது; துறை - வாழ்த்தியல்.

அம்பர்கிழான் அருவந்தையைக் கல்லாடனார். (௩௮௫)

(௩௮௬.) நெடுநீர நிறைகயத்துப்
படுமாரித் துளிபோல
நெய்துள்ளிய வறைமுகக்கவுஞ்
சூடு கிழித்து வாடூன் மிசையவு
மூன்கொண்ட வெண்மண்டை
யான்பயத்தான் முற்றழிப்பவும்
வெய்துண்ட வியர்ப்பல்லது

செய்தொழிலான் வியர்ப்பறியாமை
யீத்தோ னெந்தை யிசைதன தாக
வயலே, நெல்லின் வேலி நீடிய கரும்பின்
பாத்திப் பன்மலர்ப் பூத்த தும்பின
புறவே, புல்லருந்து பல்லாயத்தான்
வில்லிருந்த வெங்குறும்பின்று
கடலேகரந்த கலனெண்ணுவோர்
கானற் புன்னைச் சினைநிலைக் குந்து
கழியே, சிறுவெள் ளுப்பின் கொள்ளை சாற்றிப்
பெருங்கன் னாட் டுமணொலிக்குந்து
அன்னநன் னாட்டுப் பொருநன் யாமே
பொராஅப் பொருநரேம்
குணதிசை நின்று குடமுதற் செலினுங்
குடதிசை நின்று குணமுதற் செலினும்
வடதிசை நின்று தென்வயிற் செலினுந்
தென்றிசை நின்று குறுகாது நீடினும்
யாண்டு நிற்க வெள்ளியாம்
வேண்டிய துணர்ந்தோன் றாள்வா ழியவே.

திணையும் துறையும் அவை.

சோழன்குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனைக் கோவூர்கிழார். (௩௮௬)

(௩௮௭.) வள்ளுகிர வயலாமை
வெள்ளக கெணடனன வீங்குவிசிப் புதுப்போர்வைத்
தெண்கண் மாக்கிணை யியக்கி யென்று
மாறுகொண்டோர் மதிலிடறி
நீறாடிய நறுங்கவுள
பூம்பொறிப் பணையெருத்தின
வேறுவேறு பாந்தியங்கி
வேந்துடைமிளை யயல்பரக்கு
மேந்துகோட் டிரும்பிணர்த்தடக்கைத்
திருந்துதொழிற் பலபகடு
பகைப்புல மன்னர் பணிதிறை தந்துநின்
னசைப்பல வாழ்நர் நல்குர வகற்றி
மிகப்பொலியர்தசெவடிகுயரதகை
யெனறியானிசபபிணனினனறெனிற
பலபிறன வாழ்த்த விருந்தோ ரென்கோ
மிருவவினகாசனறிருந்துகழற்

சேவடி குறுகல் வேண்டி
வென்றி ரக்கும் விறன்முரசினோ
னென்சிறுமையி னிழித்துநோக்கான்
றன்பெருமையிற் றகவுநோக்கிக்
குன்றகழ் களிறென்கோ
கொ.................ரவென்கோ
மன்றுநிறையு நிரையென்கோ
மனைக்களமரொடு களமென்கோ
ஆங்கவை, கனவென மருள வல்லே நனவி
னல்கி யோனே நசைசா ரோன்ற
னூழி...................................
பூழியர்பெருமபியானைச்
செருமிகு நோன்றாட் செல்வக் கடுங்கோ
வாழி யாத னென்னுத் தெவ்வ
ருயர்குடை பணித்திவண் விடுவர் மாதோ
நெடிதே, நி......வஞ்சிப் புறமதி லலைக்குங்
கல்லென் பொருநை மணலினு மாங்கட்
பல்லூர் சுற்றிய கழனி
யெல்லாம் விளையு நெல்லினும் பலவே.

திணையும் துறையும் அவை.

சேரமான் சிக்கற்பள்ளித்துஞ்சிய செல்வக்கடுங்கோவாழியாதனைக் குண்டு கட்பாலியாதன். (௩௮௭)

(௩௮௮.) வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்
பள்ளம் வாடிய பயனில் காலை
யிரும்பறைக் கிணைமகன் சென்றவன் பெரும்பெயர்
................................பொருந்தித்
தன்னிலை யறியுந னாக வந்நிலை
யிடுக்க ணிரியல் போக வுடைய
கொடுத்தோ னெந்தை கொடைமேந் தோன்ற
னுமருப்பாக, வெல்லும் வாய்மொழிப் புல்லுடைவி
.........பெயர்க்கும்பணைணாகெடடழொமககிறொன
வினைப்பக டேத்து மேனி தினைத்தோடர்
நாடொறும் பாடே னாயினே னாக
நானு, மணிகிளர் முன்றிற் றென்னவன் மருகன்
பிணிமுர சிரங்கும் பீடுகெழு தானை

யண்ணல் யானை வழுகண
மாறி லியரென் பெருங்கிளைப் புரவே.

திணை - அது; துறை - இயன்மொழி.

சிறுகுடிகிழான்பண்ணனை மதுரை அளக்கர்ஞாழார்மகனார் மள்ளனார். (ருஅஅ)

(ருஅகூ.) நீர்நுங்கின் கண்வலிப்பக்
கானவேம்பின் காய்திரங்கக்
கயங்களியுங் கோடையாயினு
மேலா வெண்பொன் போகுறு காலை
யெம்மூ முன்னுமோ பின்னையம் பொருந
வென்றீத் தனனே யிசைசா னெடுந்தகை
யின்றுசென் றெய்தும் வழியனு மல்லன்
செலினே காணா வழியனு மல்லன்
புன்றலை மடப்பிடி யினையக் கன்றுதந்து
குன்றக நல்லூர் மன்றத்துப் பிணிக்குங்
கல்லிழி யருவி வேங்கடங் கிழவோன்
செல்வுழி யெழாஅ நல்லேர் முதிய
ணுத னுங்கன் போல நீயும்
பசித்த வொக்கற் பழங்கண் வீட
வீறுசா னன்கல நல்குமதி பெரும
வைதக லல்குன் மகளிர்
நெய்தல்கே ளன்மார் நெடுங்கடை யானே.

திணையும் துறையும் அவை.

ஆதனுங்கனைக் கள்ளிலாத்திரையனார். (ருஅகூ)

(ருகூ0.) அறவை நெஞ்சத் தாயர் வளரு
மறவை நெஞ்சத் தாயி லாள
ரரும்பலர் செருந்திநெறிங் கான்மலர் கமழு
மன்னமுற்றத், தார்வலர் குறுகி னல்லது காவலர்
கனவினுங் குறுகாக் கடியுடை வியனகர்
மலைக்கணத் தன்ன மாடஞ் சிலம்பவென்
னரிக்குரற் றடாரி யிரிய வொற்றிப்
பாடி நின்ற பன்னா ளன்றியுஞ்
சென்ற ஞான்றைச் சென்றுபட ரிரவின்
வந்ததற் கொண்டு நெடுங்கடை நின்ற
புன்றலைப் பொருந னளியன் றானெனத்
தன்னுழைக் குறுகல் வேண்டி யென்னரை

முதுநீர்ப் பாசி யன்ன வுடைகளைந்
ததிரும வானன்ன புதுமடிக் கொளீஇ
மகிழ்தரன் மரபின் மட்டே யன்றியு
மமிர்தன மரபி னூன்றுவை யடிசில்
வெள்ளி வெண்கலத் தூட்ட லன்றி
முன்னூர்ப் பொதியிற் சேர்ந்த மென்னடை
யிரும்பே ரொக்கல் பெரும்புலம் பகற்றக்
கடுங்கண் வேங்கை வீகண் டன்ன
படுதரு செங்நெற் போரொடு நல்கிக்
கொண்டி பெறுகென் றுனே யுண்டுறை
மலையல ரணியுந் தலைநீர் நாடன்
கண்டாற் கொண்டுமனை திருந்தடி வாழ்த்தி
வான்றி யலவென் பாடுபசி போக்க
லண்ணல் யானை வேந்த
ருண்மையோ வறியல காண்பறி யலரே.

திணையும் துறையும் அவை.

அதியமானெடுமானஞ்சியை ஔவையார். (௩௯0)

(௩௯௧.) தண்டுளி பலபொழிந் தெழிலி யிசைக்கும்
விண்டு வனைய விண்டோய் பிறங்கன்
முகடுற வுயர்ந்த நெல்லின் கீழ்வரப்
பகடுதரு பெருவளம் வாழ்த்திப் பெற்றதிருந்தா
மூரிபரந்துபட கெண்டி யரிய லார
கெ............ய லார்தைய ருண்டினி துவக்கும்
வேங்கட வரைப்பின் வடபுலம் பசித்தென
வீங்குவந் திறுத்தவெ னிரும்பே ரொக்கல்
தீர்கை விடுக்கும் பண்பின் முதுகுடி
நன.......................................
வினவலின் முன்னும் வந்தோன் மருங்கி
னின்னுமன் னகவிற் பொருந னிவனென
நின்னுணர்ந் தறியுந ரென்னுணர்ந்து கூறக்
காண்கு வந்திசி.............................
............பெருங்கழி நுழைமீ னருந்துந்
துதைந்த தூவியம் புதாஞ் சேக்குந்
தந்தை, தந்தபுன யாணின செழுநகர் வரைப்பி
னெஞ்சமர் காத னின்வெய் யோளொ
டின்றுயி...............................ஞ்சா

றளிபத னறிந்து பொழிய
வேலி யாயிரம் விளைகநின் வயலே.

திணை - அது; துறை - கடைநிலை.

பொறையாற்றுகிழானைக் கல்லாடனார். (௩௯௧)

(௩௯௨.) மதியேர் வெண்குடை யதியர் கோமான்
கொடும்பூ ணெழினி நெடுங்கடை நின்றியான்
பசலை நிலவின் பனிபடு விடியற்
பொருகளிற் றடிவழி யன்ன வென்கை
யொருகண் மாக்கிணை யொற்றுபு கொடாஅ
வுருகெழு மன்ன ராரெயில் கடந்த
நிணம்படு குருதிப் பெரும்பாட் டீரத்
தணங்குடை மரபி னிருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்
வைக லுழவ வாழிய பெரிதெனச்
சென்றியா னின்றனெ னாக வன்றே
யூருண் கேணிப் பகட்டிலைப் பாசி
வேர்புரை சிதாஅர் நீக்கி நேர்கரை
நுண்ணூற் கலிங்க முடீஇ யுண்ணெனத்
தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்
கோண்மீ னன்ன பொலங்கலத் தளைஇ
யூண்முறை யீத்த லன்றியுங் கோண்முறை
விருந்திறை நல்கி யோனே யந்தரத்
தரும்பெற லமிழ்த மன்ன
கரும்பிவட் டந்தோன் பெரும்பிறங் கடையே.

திணையும் துறையும் அவை.

அதியமான்மகன் பொகுட்டெழினியை ஔவையார். (௩௯௨)

(௩௯௩.) பதிமுதற் பழகாப் பழங்கண் வாழ்க்கைக்
குறுநெடுந் துணையொடு கூமை வீதலிற்
குடிமுறை பாடி யொய்யென வருந்தி
யடனசை மறந்தவெங் குழிசி மலர்க்குங்
கடனறி யாளர் பிறநாட் டின்மையின்
வள்ளன் மையினெம் வரைவோர் யாரென
வுள்ளிய வுள்ளமொ டுலைநசை துணையா
கவக மெல்லா மொருபாற் பட்டென

மலர்தா ரண்ணனி னல்லிசை யுள்ளி
யீர்ங்கை மறந்தவெ னிரும்பே ரொக்கல்
கூர்ந்த வெவ்வம்விடக் கொழுநிணங் கிழிப்பக்
கோடைப் பருத்தி வீடுநிறை பெய்த
மூடைப் பண்ட மிடைநிறைந் தன்ன
வெண்ணிண மூரி யருள நாளுற
வீன்ற வரவி னாருக் கடுக்குமென்
றொன்றுபடு சிதாஅர் துவர நீக்கிப்
போதுவிரி பகன்றைப் புதுமல ரன்ன
வகன்றுமடி கலிங்க முடீஇச் செல்வமுங்
கேடின்று நல்குமதி பெரும மாசின்
மதிபுரை மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி
யாடுமக ளல்கு லொப்ப வாடிக்
கோடை யாயினுங் கோடி..................
காவிரி புரக்கு நன்னாட்டுப் பொருந
வாய்வாள் வளவன் வாழ்கெனப்
பீடுகெழு நோனருள் பாடுகம் பலவே.

திணையும் துறையும் அவை.

சோழன் குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவனை நல்லிறையனார். (௩௯௩)

(௩௯௪.) சிலையுலா நிமிர்ந்த சாந்துபடு மார்பி
னொலிபுனற் கழனி வெண்குடைக் கிழவோன்
வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்
வள்ளிய னாதல் வையகம் புகழினு
முள்ள லோம்புமி னுயர்மொழிப் புலவீர்
யானும், இருணிலாக் கழிந்த பகல்செய் வைகறை
யொருகண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றிப்
பாடிமிழ் முரசி னியறேர்த் தந்தை
வாடா வஞ்சி பாடினே னாக
வகமலி யுவகையொ டணுகல் வேண்டிக்
கொன்றுசினந் தணியாப் புலவுநாறு மருப்பின்
வெஞ்சின வேழ நல்கின னஞ்சி
யானது பெயர்த்தனெ னாகத் தானது
சிறிதென வுணர்ந்தமை நாணிப் பிறிதுமோர்
பெருங்களிறு நல்கி யோனே யதற்கொண்
டிரும்பே ரொக்கல் பெரும்புலம் புறினுங்

துன்னரும் பரிசி றருமென
வென்றுஞ் செல்லேனவன் குன்றுகெழு நாட்டே.

திணையும் துறையும் அவை.

கடைநிலையாயினவெல்லாம் பாடாண்டிணை.

சோழியவேனாதித்திருக்குட்டுவனைக் கோனாட்டு எறிச்சலூர்மாடலன்மதுரைக் குமரனார். (௩௩௪)

(௩௯௫.) வயலுழவர் வன்புலத்துப்
பகடுவிட்டுக் குறுமுயலின்
கழைச்சூட்டொடு நெடுவாளைப்
பல்லுவியற் பழஞ்சோற்றுப்
புகவருத்திப் புதற்றளவின்
பூச்சூடி..............................
.....................அரியலாருந்து
மனைக்கோழிப் பைம்பயிரின்னே
கானக்கோழிக் கவர்குரலொடு
நீர்க்கோழிக் கூப்பெயர்க்குந்து
வேயன்ன மென்றோளாள்
மயிலன்ன மென்சாயலாற்
கிளிகடியின்னே
யகலள்ளற் புள்ளிரீஇயுந்து
யாங்கப், பலநல்ல புலனணியுஞ்
சீர்சான்ற விழுச்சிறப்பிற்
சிறுகண் யானைப் பெறலருந் தித்தன்
செ.....................உறந்தைக்குணாது
நெடுங்கை வேண்மா னருங்கடிப் பிடவூர்
றப்பெயர்ச் சாத்தன் கிளையேம் பெரும
முன்னா ணண்பகற் சுரனுழந்து வருந்திக்
கதிர்நனி செ..........................மாலைத்
தன்கடைத் தோன்றி யென்னுற விசைத்தலிற்
றீங்குரல்............கினரிக்குரற் றடாரியொ
டாங்குநின்ற வெற்கண்டு
சிறிதுநில்லான் பெரிதுங்கூறி
னருங்கலம் வரவே யருளினன் வேண்டி
யென்னரைத் தன்றி நல்கித் தன்மனைப்
பொன்போன் மடந்தையைக் காட்டி யிவனை
யென்போற் போற்றென் றோனே யதற்கொண்

டவன்மறவலேனே பிறருள்ளலேனே
யகன்ஞாலம் பெரிதுவெம்மினு
மிகவானு ளெரிதோன்றினுங்
குளமீனொடுந் தாட்புகையினும்
பெருஞ்செய் நெல்லின் கொக்குகிர் நிமிரல்
பசுங்கட் கருனைச் சூட்டொடு மாந்தி
விளைவெனவேண்டு வெள்ளங்கொள்கென
வுள்ளது மில்லது மறியா
தாங்கமைந் தன்றால் வாழ்கவன் றாளே.

திணையும் துறையும் அவை.

சோழநாட்டுப் பிடவூர்கிழார்மகன் பெருஞ்சாத்தனை மதுரைநக்கீரர். (௩௯௫)

(௩௯௬.) கீழ்நீரான் மீன்வழங்குந்து
மீநீராற் கண்ணன்ன மலர்பூக்குந்து
கழிசுற்றிய விளைகழனி
யரிப்பறையாற் புள்ளோப்புந்
துண்டுநீர் கூறு மணற்றண்கான்
மென்பறையாற் புள்ளிரியுந்து
நனைக்கள்ளின் மனைக்கோசர்
தீந்தேறல் நறவுமகிழ்ந்து
தீங்குரலைக் கொளைத்தாங்குந்து
வுள்ளிலோர்க்கு வலியாகுவன்
கேளிலோர்க்குக் கேளாகுவன்
கழுமியவேளே
வளநீர் வாட்டாற் றெழினி யாதன்
கிணையெம்பெரும, கொழுந்தடிய சூடென்கோ
வளநனையின் மட்டென்கோ
குறுமுயலி னிணம்பெய்தந்
தறுநெய்ய சோறென்கோ
திறந்துமறந்து கூட்டுமுதன்
முகந்துகொள்ளு முணவென்கோ
வனனவைபலபல.....................
..............................ருந்தய
விருந்துசெஞ்சிய
வழித்துவப்ப வீத்தோனெந்தை
யெம்மோராக்கக் கங்குண்டே
மாரிவானத்து மீனப்பண்

விரிகதிர வெண்டிங்களின்
விளங்கித் தோன்றுகவவன் கலங்கா நல்லிசை
யாமும் பிறரும் வாழ்த்த நாளும்
நிரைசா னன்கல னல்கி
யுரைசெலச் சிறக்கவவன் பாடல்சால் வளனே.

திணையும் துறையும் அவை.
வாட்டாற்றெழினியாதனை மாங்குடிகிழார். (௩௯௬)

(௩௯௭.) வெள்ளியு மிருவிசும் பேர்தரும் புள்ளு
முயர்சினைக் குடம்பைக் குரற்றோற் றினவே
பொய்கையும் போதுகண் விழித்தன பைபயச்
சுடருஞ் சுருங்கின் றொளியே பாடெழுந்
திரங்குகுரன் முரசமொடு வலம்புரி யார்ப்ப
விரவுப் புறங்கண்ட காலைத் தோன்றி
யெஃகிரு ளகற்று மேமப் பாசறை
வைகறை யரவங் கேளியர் பலகோட்
செய்தார் மார்ப வெழுமதி துயிலெனத்
தெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி
நெடுங்கடைத் தோன்றி யோனே யதுநயந்
துள்ளி வந்த பரிசில னிவனென
நெய்யுறப் பொரித்த குய்யுடை நெடுஞ்சூடு
மணிக்கல னிறைந்த மணநாறு தேறல்
பாம்புரித் தன்ன வான்பூங் கலிங்கமொடு
மாரி யன்ன வண்மையிற் சொரிந்து
வேனி லன்னவென் வெப்பு நீங்க
வருங்கல நல்கி யோனே யென்றுஞ்
செறுவிற் பூத்த சேயிதழ்த் தாமரை
யறுதொழி லந்தண ரறம்புரிந் தெடுத்த
தீயொடு விளங்கு நாடன் வாய்வாள்
வலம்படு தீவிற் பொலம்பூண் வளவ
னெறிதிரைப் பெருங்கட லிறுதிக்கட் செலினுந்
தெறுகதிர்க் கனலி தென்றிசைத் தோன்றினு
மென்னென் றஞ்சலம் யாமே வென்வே
லருஞ்சமங் கடக்கு மாற்றலவன்
றிருந்துகழ னோன்றாட் டண்ணிழ லேமே.

திணை - பாடாண்டிணை ; துறை - பரிசில்விடை; கடைநிலைவிடை.
சோழன் குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவனை எருக்காட்டூர்த்தாயங்கண்ணனார். (௩௯௭)

(௩௯௮.) மதிநிலாக் கரப்ப வெள்ளி யேர்தர
வகைமா ணல்லிற..........................
பொறிமயிர் வாரணம் பொழுதறிந் தியம்பப்
பொய்கைப் பூமுகை மலரப் பாணர்
கைவல் சீறியாழ் கடனறிந் தியக்க
விரவுப் புறம்பெற்ற வேம வைகறைப்
பரிசிலர் விசையெ.........................
வரிசையி னிறுத்த வாய்மொழி வஞ்ச
னசைவர் குறுகி னல்லது பகைவர்க்குப்
புலியின மடிந்த கல்லளை போலத்
துன்னல் போகிய பெரும்பெயர் மூதூர்
மதியத் தன்ன வென்.........றுகுடாரி
யிரவுரை நெடுவா ரிப்ப வட்டித்
துள்ளி வருநர் கொள்கல நிறைப்போய்
தள்ளா நிலையை யாகிய ரெமக்கென
வென்வர வறீஇய சிறிதிற்குப் பெரிதுவந்து
விரும்பிய முகத்த னாகி யென்னரைத்
துரும்புபடு சிதாஅர் நீக்கித் தன்னரைப்
புகைவிரிந் தன்ன பொங்கு துகிலுடீஇ
யழல்கான் றன்ன வரும்பெறன் மண்டை
நிழல்காண் டேற னிறைய வாக்கி
யானுண வருள லன்றியுந் தானுன்
மண்டைய கண்ட மான்வறைக் கருனைக்
கொக்குகிர் நிமிர லொக்க லார
வளையுறழ் மார்பின் வையகம் விளக்கும்
விரவுமணி யொளிர்வரு மரூஉஅற மாரமொடு
புரையோன் மேனிப் பூத்தசல.....................
முரைசெலவருளியோனே
..........................யருவிப் பாயற் கோவே.

திணை - அது ; துறை - கடைநிலை.
சேரமான்வஞ்சனைத் திருத்தாமனார். (௩௯௮)

(௩௯௯.) அடுமகண் முகந்த வளவா வெண்ணெற்
றொடிமா ணுலக்கைப் பருஉக்குற் றரிசி
காடி வெள்ளுலைக் கொளீஇ நீழ
லோங்குசினை மாவின் றீங்கனி நறும்புளி
மோட்டிரு வராஅற் கோட்டுமீன் கொழுங்குறை

செறுவின் வள்ளை சிறுகொடிப் பாகற்
பாதிரி யூழ்முகை யவிழ்விடுத் தன்ன
மெய்களைந் தினனொடு விரைஇ .........
மூழ்ப்பப் பெய்த முழுவவிழ் புழுக்கல்
.........களற் படுநர் களியுட வைகிற்
பழஞ்சோ றயிரு மூழங்குநீர்ப் படப்பைக்
காவிரிக் கிழவன் மாயா நல்லிசைக்
கிள்ளி வளவ னுள்ளி யவற்படர்ந்துஞ்
செல்லேன் செல்லேன் பிறர்முக நோக்கே
னெடுங்கழைத் தூண்டி விடுமீ னொடுத்துக்
கிணைமக ளட்ட பாஅற் புளியங்கூழ்
பொழுதுமறுத் துண்ணு முண்டியே னழிவுகொண்
டொருசிறை யிருந்தே னென்னே யினியே
யறவ ரறவன் மறவர் மறவன்
மள்ளர் மள்ளன் றொல்லோர் மருக
னிசையிற் கொண்டா னசையமு துண்கென
மீப்படர்ந் திறந்து வன்கோன் மண்ணி
வள்பரிந்து கிடந்த ........... மணக்க
விசிப்புறுத் தமைந்த புதுக்காழ்ப் போர்வை
யலகின் மாலை யார்ப்ப வட்டித்துக்
கடியு முணவென்னக் கடவுட்குந் தொடேன்
கடுந்தேர்ப் பள்ளற் கசாவா நோன்சுவற்
பகடே யத்தையான் வேண்டிவந் ததுவென
வொன்றியான் பெட்டா வளவை யன்றே
வான்று விட்டன னத்தைய விசும்பின்
மீன்பூத் தன்ன வுருவப் பன்னிரை
யூர்தியொடு நல்கி யோனே சீர்கொள
விழுமென விழிதரு மருவி
வான்றோ யுயர்சிமையத் தோன்றிக் கோவே.

திணை - அது; துறை - பரிசில்விடை.

தாமான்தோன்றிக்கோனை ஐயூர்முடவனார். (௩௯௯)

(௪00.) மாகவிசும்பின் வெண்டிங்கண்
மூவைந்தான் முறைமுற்றக்
கடனடுவட் கண்டன்னவென்
னியமிசையா மரபேத்திக்

கடைத்தோன்றிய கடைக்கங்குலாற்
பலர்துஞ்சவுந் தான்றுஞ்சா
துலகுகாக்கு முயர்செ......................ங்
கேட்டோ னெந்தையென் றெண்கிணைக் குரலே
கேட்டதற் கொண்டும் வேட்கைதணி டாது
தொன்றுபடு சிதா றருங்கு நீக்கி
மிகப்பெருஞ் சிறப்பின் வீறு............
.....................................லவண
கலிங்க மழித்ததோட் டொன்னலா நோக்கி
நாரரித்த நறவுமகிழ்ந்து
போதறியேன் பதிப்பழகவுந்
தன்பகை கடித லன்றியுஞ் சேர்ந்தோர்
பசிப்பகை கடிதலும் வல்லன் மாதோ
மறவர் மலிந்தத ...........................
கேள்வி மலிந்த வேள்வித் தூணத்
திருங்கழி யிழிதரு ............ கலிவங்கந்
தெறுநீர்ப் பரப்பின் யாறற சித்துத்
துறைதொறும் பிணிக்கு நல்லூ
ருறைவின் யாண.........கிழவோனே.

திணை - பாடாண்டிணை ; துறை - இயன்மொழி.
சோழன் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார். (௪௦௦)

புறநானூறு முற்றிற்று.

# பாட்டு முதற்குறிப்பகராதி.

[பின்வரும் எண்கள் பாட்டைக் குறிப்பன.]


| பாட்டு. | எண். |
| --- | --- |
| அகன்றலைவை, | ௩௭௧ |
| அஞ்சுவருமரபின், | ௨௧௧ |
| அடலருந்து, | ௩௩௫ |
| அடிபுனைதொடு, | ௮௩ |
| அடுநையாயினும், | ௩௬ |
| அடுமகண்முகந்த, | ௩௯௯ |
| அணங்குடைநெடு, | ௫௨ |
| அணங்குடையவுணர், | ௧௭௪ |
| அணித்தழை, | ௩௪௦ |
| அத்தநண்ணிய, | ௩௧௩ |
| அதளெறிந்தன்ன, | ௧௯௩ |
| அந்தோவெந்தை, | ௨௬௧ |
| அமரர்ப்பேணியு, | ௯௯ |
| அரசுதலைவரி, | ௩௫௪ |
| அரிமயிர்த்தி, | ௧௧ |
| அருப்பம்பேணு, | ௨௨௪ |
| அருவிதாழ்ந்த, | ௧௯௮ |
| அருவியார்க்கும், | ௧௬௮ |
| அருளாயாகலோ, | ௧௪௪ |
| அலங்குகதிர், | ௩௭௫ |
| அலர்பூந்தும்பை, | ௯௬ |
| அழல்புரந்தவடர், | ௨௯ |
| அழலவிர்வயங்கி, | ௨௨௨ |
| அளிதோதானேபாரி, | ௧௦௯ |
| அளிதோதானேபேரிருங், | ௧௧௧ |
| அளியதாமே, | ௨௪௮ |
| அற்றைத்திங்கள், | ௧௧௨ |
| அறவைநெஞ்சத், | ௩௯௦ |
| அறுகுளத்துகுத்து, | ௧௪௨ |
| அறையும்பொறையும், | ௧௧௮ |
| அன்னச்சேவலன்ன, | ௬௭. |
| அன்னவூரகின், | ௧௪௬ |
| ஆசாகெந்தை, | ௩௦௭ |
| ஆசில்கம்மி, | ௩௫௩ |
| ஆடியலழற்குட்டத், | ௨௨௯ |
| ஆடுநடைப்புரவி, | ௨௪௦ |
| ஆடுநனிமறந்த, | ௧௬௪ |
| ஆர்கலியினனே, | ௩௩௭ |
| ஆர்ப்பெழுகடலினும், | ௮௧ |
| ஆரந்தாழ்ந்த, | ௫௯ |
| ஆவுமானியற்பா, | ௯ |
| ஆன்முலையறுத்த, | ௩௪ |
| ஆனாவீகையடுபோர், | ௪௨ |
| ஆனினங்கலித்த, | ௧௩௮ |
| இம்மைச்செய்தது, | ௧௩௪ |
| இமிழ்கடல்வளைஇய, | ௧௯ |
| இரங்குமுரசின், | ௧௩௭ |
| இரவலர்புரவலை, | ௧௬௨ |
| இருங்கடலுடுத்த, | ௩௬௩ |
| இருப்புமுகஞ்செறித்த, | ௩௬௯ |
| இரும்படைவெண்டோடு, | ௪௫ |
| இரும்பிடித்தொழுதி, | ௪௪ |
| இரும்புமுகஞ்சிதைய, | ௩௦௯ |
| இருமுந்நீர்க்குட்டமு, | ௨௦ |
| இல்லடுகள், | ௩௨௯ |
| இல்லாகியரோ, | ௨௩௨ |
| இவ்வே, பீலியணிந்து, | ௯௫ |
| இவர்யாரென்குவை, | ௨௦௧ |
| இவற்கீத்துண்மதி, | ௨௯௦ |
| இவனியாரென்குவை, | ௧௩ |
| இழையணிப்பொலிந்த, | ௮௯ |
| இளையருமுதியரு, | ௨௫௪ |
| இளையோர்சூடார், | ௨௪௨ |
| இன்கடுங்கள்ளின், | ௮௦ |

| பாட்டு. | எண். |
|---|---|
| இன்றுசெலினுங், | கஎக |
| இனிநினைந்திரங்க, | உசங |
| ஈண்டுநின்றோர்க்குங். | ககச |
| ஈயெனவிரத்த, | உ0ச |
| ஈரச்செவ்வி, | உஅகூ |
| ஈன்றுபுறந்தரு, | ஙகஉ |
| உடும்புரித்தன்ன, | சுஅ |
| உடையனுயி, | ஙகரு |
| உடைவளைகடுப்ப', | கூ0 |
| உண்டாலம்ம, | கஅஉ |
| உண்போன்றானு, | ஙசஎ |
| உருகெழுஞாயிற்றோன், | கசு0 |
| உருமிசைமுரச, | ஙஎங |
| உவவுமதியுருவி, | ங |
| உள்ளாற்றுக்கவலை, | உககூ |
| உற்றுழியுதவியும், | கஅங |
| ஊர்க்குறுமாக்கள், | கூச |
| ஊர்நணியிறந்த, | உசுரு |
| ஊர்முதுவேலி, | ஙஉசு |
| ஊனுமூனுமிசை, | ஙஅக |
| எஃகுளங்கழி, | உஅஉ |
| எங்கோனிருந்து, | ருச |
| எந்தைவாழி, | கஎரு |
| எமக்கேகலங்க, | உகூஅ |
| எருதுகாலுறு, | ஙஉஎ |
| எருதேயிளைய, | க0உ |
| எருமையன்ன, | ரு |
| எழுவிணிநெஞ்ச, | உ0எ |
| எறிபுனக்குறவன், | உஙக |
| என்றிறத்தவலங், | உருங |
| என்னைக்கூரிஃத, | அரு |
| என்னை, புற்கையுண்டும், | அச |
| என்னைமார்பிற், | உஅ0 |
| எனைப்பல்யாணையும், | சுங |
| ஏர்பரந்தவய, | ஙஙஅ |
| ஏற்றுகவுலையே, | கஎஉ |
| ஏற்றுவலனுயரிய, | ருசு |
| ஏறுடைப்பெரு, | உருகூ |
| ஐயோவெனின், | உருரு |
| ஒண்செங்குரலி, | உஅங |
| ஒண்பொறிச்சேவல், | ஙஅங |
| ஒருசாருவியார்ப்ப', | கசரு |
| ஒருதலைப்பதலை, | க0ங |
| ஒருதிசையொருவனை, | கஉக |
| ஒருநாட்செல்லலை, | க0க |
| ஒருவனையொருவன், | எசு |
| ஒல்லுவதொல்லும், | ககூசு |
| ஒளிறுவாண்மன்னர், | கஎஎ |
| ஒன்றுநன்குடைய, | கருசு |
| ஒன்னார்யானை, | கஉசு |
| ஓங்குமலைப்பெருவிற், | ருரு |
| ஓரிநெய்தல், | ககூச |
| ஓரையாயத்து, | கஎசு |
| ஓவத்தன்ன, | உருக |
| கடந்தடுதானை, | கக0 |
| கடல்கிளர்ந்தன்ன, | உகூரு |
| கடல்கொளப்படாஅது, | சஉஉ |
| கடவுளாலத்து, | ககூகூ |
| கடற்படையடற், | ஙஅஉ |
| கடுங்கண்ணகொல், | கச |
| கடுந்தேர்குழித்த, | கரு |
| கடும்பினடுகலை, | ஙஉ |
| கண்ணிகார், | க |
| கதிர்மூக்காரல், | உசகூ |
| கந்துமுனிந்துயிர்க்கும், | கஎஅ |
| கல்லறுத்தியற்றிய, | ஙஙக |
| கலஞ்செய்......அச்சு, | உருசு |
| கலஞ்செய்......இருடிணிந், | உஉஅ |
| கலையுணக்கிழி, | உஙசு |
| கவிசெந்தாழிக், | உஙஅ |
| கவைக்கதிர், | உகரு |
| கழிந்ததுபொழிந்தென, | உ0ங |
| கள்ளின்வாழ்த்தி, | ஙகசு |
| களங்கனியன்ன, | கஉஎ |
| களம்புகலோம்பு, | அஎ |
| களர்ப்படு, | ஙகக |
| களிறணைப்ப', | ஙசரு |
| களிறுகடைஇய, | எ |
| களிறுநீருடிய, | ஙஉரு |
| களிறுபொரக், | ங0சு |

| பாட்டு. | எண். | பாட்டு. | எண். |
|---|---|---|---|
| களிறுமுகந்து, | ௩௬௮ | சுவலழுந்த, | ௧௩௯ |
| கறங்குமிசையருவிய, | ௧௪௮ | செஞ்ஞாயிற்றுச், | ௩௦ |
| கறங்குவெள்ளருவி, | ௨௫௨ | செந்நெலுண்ட, | ௩௪௪ |
| கன்முழையருவிப், | ௧௪௭ | செய்குவங்கொல்லோ, | ௨௧௪ |
| கன்றமராயங், | ௨௩௦ | செருப்பிடைச், | ௨௫௭ |
| காய்நெல்லறுத்து, | ௧௮௪ | செற்றன்றாயினுஞ், | ௨௨௬ |
| கார்ப்பெயறலைஇய, | ௧௧௯ | சேயிழைபெறுகுவை, | ௧௦௫ |
| காரெதிருருமி, | ௩௬௧ | சேற்றுவளர்தாமரை, | ௨௭ |
| கால்பார்கோத்து, | ௧௮௫ | ஞாயிற்றன்ன, | ௩௬௨ |
| காலனுங்காலம், | ௪௧ | ஞாலமீமிசை, | ௧௭௯ |
| கானக்காக்கை, | ௩௪௨ | தடவுநிலைப்பலவின், | ௧௪௦ |
| கானன்மேய்ந்து, | ௩௭௪ | தண்டுளிபல, | ௩௯௧ |
| கானுறைவாழ்க்கை, | ௩௩ | தமர்தற்றப்பின, | ௧௫௭ |
| கிண்கிணிகளைந்த, | ௭௭ | தலையோர்நுங்கின், | ௨௨௫ |
| கீழ்நீரான், | ௩௯௬ | திண்டேரிரவலர், | ௨௪௧ |
| குய்குரன்மலிந்த, | ௨௫௦ | திண்பிணிமுரச, | ௯௩ |
| குயில்வாயன்ன, | ௨௬௯ | திரைபொருமுந்நீர், | ௧௫௪ |
| குழவியிறப்பினு, | ௭௪ | தீங்கனியிரவமொடு, | ௨௮௧ |
| குறத்திமாட்டிய, | ௧௦௮ | தீநீர்ப்பெருங்குண்டு, | ௧௧௬ |
| குறியிறைக்குரம்பை, | ௧௨௯ | துடியெறியும், | ௨௮௭ |
| குன்றுதலைமணந், | ௩௫௭ | தூங்குகையா, | ௨௨ |
| குன்றுமலையும், | ௨௦௮ | தூர்ந்தகிடங்கிற், | ௩௫௦ |
| கூதிர்ப்பருந்தி, | ௧௫௦ | தெண்கடல்வளாகம், | ௧௮௯ |
| கெடுகசிந்தை, | ௨௭௯ | தென்குமரிவடபெரு, | ௧௭ |
| கேட்டன்மாத்திரை, | ௨௧௬ | தென்பரதவர், | ௩௭௮ |
| கையதுகடனிறை, | ௬௯ | தென்பவ்வத்து, | ௩௮௦ |
| கையதுவேலே, | ௧௦௦ | தேஎங்கொண்ட, | ௩௫௨ |
| கொடுங்குழை, | ௩௦௪ | தேஎந்தீந்தொடை, | ௭௦ |
| கொடுவரிவழங்கு, | ௧௩௫ | தொடியுடைய, | ௨௩௯ |
| கொண்டைக்கூழை, | ௬௧ | தொறுஅத்தொறுஅ, | ௩௦௦ |
| கொய்யடகுவாட, | ௩௧௮ | நகுதக்கனரே, | ௭௨ |
| கோட்டங்கண்ணி, | ௨௭௫ | நஞ்சுடைவாலெயிற், | ௩௭ |
| கோதைமார்பிற், | ௪௮ | நரம்பெழுந், | ௨௭௮ |
| சாறுதலைக்கொண்டென, | ௮௨ | நல்யாழ்குளி, | ௬௪ |
| சிலையுலாநிமிர்ந்த, | ௩௯௪ | நல்லவுந்தீயவு, | ௧௦௬ |
| சிற்றினற்றாண், | ௮௬ | நளிவாழியோ, | ௧௪௯ |
| சிறப்பில்சிதடு, | ௨௮ | நளிகடலிருங், | ௨௬ |
| சிறப்புடைமாபிற், | ௩௧ | நளியிருமுந்நீர்நாவாய், | ௬௬ |
| சிறுஅர்துடி, | ௨௧௯ | நளியிருமுந்நீரேணி, | ௩௫ |
| சிறியகட்பெறினே, | ௨௩௫ | நறவுந்தொடுமி, | ௨௬௨ |

# பாட்டு முதற்குறிப்பகராதி.


| பாட்டு. | எண். |
|---|---|
| நறுவிரைதுறந்த, | ௨௭௬ |
| நன்றாய்ந்தநீணிமிர், | ௧௬௬ |
| நனிபேதையே, | ௨௨௭ |
| நாகத்தன்ன, | ௩௬௭ |
| நாட்கள்ளுண்டு, | ௧௨௩ |
| நாடனென்கோ, | ௪௯ |
| நாடாகொன்றோ, | ௧௮௭ |
| நாளன்றுபோகி, | ௧௨௪ |
| நிரப்பாதுகொடுக்கும், | ௧௮௦ |
| நிலம்பிறக்கிடுவது, | ௩௦௩ |
| நிலமிசைவாழ்நர், | ௪௩ |
| நிறப்படைகொ, | ௨௯௩ |
| நின்னயந்துறைநர்க், | ௧௬௩ |
| நினைக்குங்காலை, | ௨௧௭ |
| நீடுவாழ்கென்றி, | ௨௩௭ |
| நீண்டொலியழுவம், | ௧௬௧ |
| நீயே, அமர்காணின், | ௧௬௭ |
| நீயே, தண்புனற்காவிரி, | ௫௮ |
| நீயே, பிறரோம்புற்ற, | ௪௦ |
| நீயே, புறவினல்லல், | ௪௬ |
| நீர்நுங்கின், | ௩௮௯ |
| நீர்மிகிற்சிறையு, | ௫௧ |
| நீரறவறியா, | ௨௭௧ |
| நீருட்பட்ட, | ௩௩௩ |
| நீலக்கச்சை, | ௨௭௪ |
| நுங்கோயாரென, | ௨௧௨ |
| நுதிவேல்கொண்டு, | ௩௪௯ |
| நும்படைசெல்லுங், | ௧௬௯ |
| நெடுநீரநிறை, | ௩௮௬ |
| நெல்லரியுமிருந், | ௨௪ |
| நெல்லுமுயிரன்றே, | ௧௮௬ |
| நோகோயானே, | ௨௩௪ |
| படுமணிமருங், | ௩௫௧ |
| படைப்புப்பலபடைத்து, | ௧௮௮ |
| பண்டும்பண்டும், | ௧௫௧ |
| பதிமுதற்பழகா, | ௩௯௩ |
| பயங்கெழுமாமழை, | ௨௬௬ |
| பாலுடைமருங், | ௨௬௪ |
| பருத்திப்பெண்டின், | ௧௨௫ |
| பருத்திவேலிச், | ௨௯௯ |
| பருதிசூழ்ந்த, | ௩௫௮ |
| பல்சான்றீ.....கயன்முள், | ௧௯௫ |
| பல்சான்றீ.....குமரி, | ௩௦௧ |
| பல்சான்றீ.....செல்கென, | ௨௪௬ |
| பலர்க்குநிழலாகி, | ௨௨௩ |
| பன்மீனிமைக்கு, | ௨௭௦ |
| பனிபழுனிய, | ௩௫௬ |
| பனிவரைநிவந்த, | ௨௦௦ |
| பாசறையீரே, | ௨௮௫ |
| பாடுநர்க்கீத்த, | ௨௨௧ |
| பாணர்சென்னி, | ௨௪௪ |
| பாணர்தாமரை, | ௧௨ |
| பாணன்சூடிய, | ௧௪௧ |
| பாரிபாரி, | ௧௦௭ |
| பால்கொண்டு, | ௩௧௦ |
| பாறுபடப்பறைந்த, | ௩௫௯ |
| பிறர்வேல்போலா, | ௩௩௨ |
| புலவரையிறந்த, | ௨௧ |
| புலிப்பாற்பட்ட, | ௩௨௩ |
| புறவினல்லல், | ௩௯ |
| பூவற்படுவிற், | ௩௧௯ |
| பெரிதாராற், | ௩௬௦ |
| பெருங்களிற், | ௨௬௩ |
| பெருஞ்சோறுபயந்து, | ௨௨௦ |
| பெருநீர்மேவ, | ௨௯௭ |
| பொய்கைநாரை, | ௨௦௯ |
| பொய்யாகியரோ, | ௨௩௩ |
| பொறிப்புறப், | ௩௨௧ |
| பொன்வார்ந்தன்ன, | ௩௦௮ |
| பொன்னுந்துகிரு, | ௨௧௮ |
| போர்க்குரைஇ, | ௯௭ |
| போற்றுமின்மறவீர், | ௧௦௪ |
| மட்டுவாய்திறப்பவு, | ௧௧௩ |
| மடங்கலிற்சினைஇ, | ௭௧ |
| மடத்தகைமாமயில், | ௧௪௫ |
| மண்கொளவரி, | ௨௮௮ |
| மண்டமரட்ட, | ௨௧௩ |
| மண்டிணிந்தநில, | ௨ |
| மண்முழாமறப்ப, | ௬௫ |
| மணிதுணர்ந்தன்ன, | ௨௭௨ |

| பாட்டு. | எண். | பாட்டு. | எண். |
|---|---|---|---|
| மதிநிலாக்கரப்ப, | ௩கூஅ | யானேபெறுக, | ௩எகூ |
| மதியேர்வெண்குடை, | ௩கூஉ | யானைதந்த, | உசஎ |
| மதிலுஞாயி, | ௩ருரு | வடாஅதுபனிபடு, | சா |
| மயங்கிருங்கருவி, | ௩சாரு | வணங்குதொடை, | எஅ |
| மரைபிரித்துண்ட, | கஎ0 | வணர்கோட்டு, | கருரு |
| மலைவான்கொள்கென, | கச௩ | வயலுழவர், | ௩கூரு |
| மழைக்கணஞ், | க௩க | வயலைக்கொடி, | ௩0ரு |
| மழையணிகுன்றத், | கரு௩ | வருகதில்வல், | உஅச |
| மன்பதைகாக்கு, | உக0 | வருதார்தாங்கி, | சாஉ |
| மன்றப்பலவின், | கஉஅ | வரைபுரையு, | ௩அ |
| மன்றவிளவின், | கஅக | வல்லாராயினும், | ருஎ |
| மன்னுவுலகத்து, | கசாரு | வலம்படுவாய், | கூக |
| மனைக்குவிளக், | ௩கச | வழிபடுவோரை, | க0 |
| மாகவிசும்பின், | ச00 | வள்ளியோர், | சஎ |
| மாசறவிசித்த, | ரு0 | வள்ளுகிரவய, | ௩அஎ |
| மாவாராதே, | உஎ௩ | வளரத்தொடி, | உசா0 |
| மீன்றிகழ்விசும்பி, | உரு | வளிநடந்தன்ன, | சகூஎ |
| மீனுடுத்துநெற், | ௩ச௩ | வாடாமாலை, | ௩சாச |
| முட்காற்காரை, | உருஅ | வாயிலோயே, | உ0சா |
| முதிர்வாரிப்பி, | ரு௩ | வாழுநாளோ, | கருகூ |
| முந்நீர்நாப்பட்டிமிற்சுடர், | சா0 | வாள், வலந்தர, | ச |
| முரசுகடிப்பிகுப்ப, | கருஅ | விசிபிணித்தடா, | ௩எஉ |
| முழங்குமுந்நீர், | கஅ | விசும்புநீத்த, | ௩எசா |
| முற்றியதிருவின், | உ0ரு | வியன்புலம், | ௩௩கூ |
| முன்றின்முஞ்ஞை, | ௩உ0 | விழுக்கடிப்பறை, | ௩கூசா |
| முன்னுள்ளுவோனை, | க௩உ | விளங்குமணி, | க௩0 |
| முனைத்தெவ்வர், | கூஅ | விளைபதச்சீறி, | ககூ0 |
| மூத்தோர்மூத்தோர், | எரு | வினைமாட்சிய, | கசா |
| மூதூர்வாயில், | எகூ | வெட்சிக்கானத், | உ0உ |
| மெல்லவந்தெனல்ல, | எ௩ | வெடிவேய், | ௩0உ |
| மெல்லியல்விறலி, | க௩௩ | வெண்குடைமதி, | உகூச |
| மென்பாலா, | ௩அச | வெண்ணெலரி, | உசஅ |
| மைம்மீன்புகையினும், | ககஎ | வெப்புள்விளைந்த, | கஉ0 |
| யாங்குப்பெரிதா, | உசரு | வெருக்குவிடை, | ௩உச |
| யாண்டுபலவாக, | ககூக | வெள்ளிதென்புல, | ௩அஅ |
| யாதுமூரே, | ககூஉ | வெள்ளிதோன்ற, | ௩அரு |
| யாவிராயினுங், | அஅ | வெள்ளியுமிருவிசும், | ௩கூஎ |
| யாழ்ப்பத்தர், | க௩க | வெள்ளைவெள், | உஅசா |
| யாழொடுங்கொள்ளா, | கூஉ | வெளிறின்னோன்காழ், | உ௩ |
| யான்வாழுநாளும், | கஎ௩ | வேட்டவேந்தனும், | ௩௩சா |

# பாட்டு முதற்குறிப்பகராதி.



| பாட்டு. | எண். | பாட்டு. | எண். |
|---|---|---|---|
| வேந்தர்க்கேந்தி, | உ௬உ | வேழம்வீழ்த்த, | ௧௫உ |
| வேந்துடைத்தானை, | ௩௩0 | வையங்காவலர், | அ |
| வேம்புசினை, | உ௬௬ | | |



முதலில்லாதபாட்டுக்கள் :—

உஎஎ, ௩௧எ, ௩உஉ, ௩உஅ, ௩௩௪, ௩௪௧, ௩௪௬, ௩௭0, ௩எஎ.

முற்றுமில்லாதபாட்டுக்கள் :—

உ௬எ, உ௬அ.

சிலபாட்டுக்களின் பிற்பாகமும் சிலபாட்டுக்களின் இடைப்பாகமும் பிரதிகளிற் கிடைக்கவில்லை.

## திணைதுறைவிளக்கங்களின்

# முகவுரை.

புறநானூற்றில் ஒவ்வொருசெய்யுட்களின் ஒழுக்கத்தைப்புலப்படுத்தி அவ்வச்செய்யுட்களின்பின் எழுதப்பட்டுள்ள திணையும் துறையும் தொல்காப்பியப்புறத்திணையியலிற்கூறிய இலக்கணத்தோடு சிறுபான்மை ஒத்திருப்பினும் பெரும்பாலும் ஒவ்வாமையாலும், இவை புறப்பொருட் பன்னிருபடலத்தின்படியே அமைக்கப்பட்டுள்ளனவெனத்தோற்றினும் இப்பொழுது அந்நூல் அகப்படாமையின் அதிலிருந்தெடுத்து யாதொன்றும் எழுதக்கூடாமையாலும், அந்நூலின்வழித்தாகிய புறப்பொருள் வெண்பாமாலையின் கருத்திற்கு இவை பெரும்பாலும் ஒத்திருக்கின்றமையாலும் இத்திணைவிளக்கமும் பின்னுள்ள துறைவிளக்கமும் புறப்பொருள் வெண்பாமாலையின்படியே எழுதப்பட்டன. சில அந்நூலிற்காணப்படாமையால், அவற்றிற்கு விளக்கம் எழுதப்படவில்லை. அந்நூலின்படி பார்க்குமிடத்தும் புறநானூற்றில் ஒருதிணைக்குரியதுறை மற்றொருதிணையிலும் ஒருதுறைக்குரியதிணை மற்றொன்றிலுமாக மாறிக் கையெழுத்துப் பிரதிகளிலேயே எழுதப்பட்டுள்ளன. ஆனாலும் மேற்கோள் இன்னதென்று உண்மைவிளங்காமையால் அவற்றைத்திருத்தவில்லை.

---

# திணைவிளக்கம்.

கரந்தைத்திணை: — *௨௫௯, ௨௬௦, ௨௬௧, ௨௬௩, ௨௬௪, ௨௬௫, ௨௭௦, ௨௮௭, ௨௯௦, ௨௯௧, ௨௯௮. கரந்தைத்திணையாவது - பகைவர் கைப்பற்றிய பசுக்கூட்டங்களை மீட்டல்; 'மலைத்தெழுந்தோர் மறஞ்சாயத்-தலைக்கொண்ட நிரைபெயர்த்தன்று.' — புறப்பொருள் வெண்பாமாலை, கரந்தைப்படலம், ௧.

காஞ்சித்திணை: — ௭௧, ௭௨, ௭௩, ௧௦௯, ௧௧௦, ௧௧௧, ௨௮௧, ௨௯௩, ௩௩௬, ௩௩௭, ௩௩௮. காஞ்சித்திணையாவது - பகையரசன் போர்குவந்துவிட, ஓரரசன் காஞ்சிப்பூவைச்சூடித் தன்னிடத்தைப் பாதுகாத்தல்; 'வெஞ்சின வேந்தன் விடுதர வேந்தன் - காஞ்சி சூடிக் கடிமனை கருதின்று.' — புறப்பொருள் வெண்பாமாலை, காஞ்சிப்படலம், ௧.

கைக்கிளைத்திணை: — ௮௩, ௮௪, ௮௫. கைக்கிளைத்திணையாவது - ஒருதலைக்காமம்; அஃது ஆண்பாற்கூற்றுக்கைக்கிளை பெண்பாற்கூற்றுக்கைக்கிளை என இருவகைப்படும்.

தும்பைத்திணை: — ௬௨, ௬௩, ௮௦, ௮௭, ௮௮, ௮௯, ௯௦, ௨௭௩, ௨௭௪, ௨௭௫, ௨௭௬, ௨௭௭, ௨௭௮, ௨௮௩, ௨௮௪, ௨௮௬, ௨௮௮, ௨௯௪, ௨௯௫, ௩௦௦, ௩௦௧, ௩௦௨, ௩௦௩, ௩௦௪, ௩௦௭, ௩௦௯, ௩௧௦, ௩௧௧. தும்பைத்திணை

---

*இவ்வெண்களும் பின்னுள்ள எண்களும் புறநானூற்றுச்செய்யுட்குரிய எண்களெனக்கொள்க.

யாவது - பகைவரோடு போர்செய் தலைநினைந்து தும்பைப்பூவைச்சூடுதல்; 'செங்களத்து மறங்கருதிப் - பைந்தும்பை தலைமலைந்தன்று.' — புறப்பொருள் வெண்பாமாலை, தும்பைப் படலம், ௧.

நொச்சித்திணை:—௨௭௧, ௨௭௨, ௨௯௯. நொச்சித்திணையாவது - மதிலைக்காக்கும் வீரர்கள்சூடிய போர்ப்பூவைப் புகழ்வது; 'ஏப்புழை ஞாயி லேந்துநிலை யரணங் - காப்போர் சூடிய பூப் புகழ்ந் தன்று.'—புறப்பொருள்வெண்பாமாலை, நொச்சிப்படலம், ௧.

பாடாண்டிணை:—௧, ௨, ௩, ௫, ௬, ௮, ௯, ௧௦, ௧௧, ௧௨, ௧௩, ௧௪, ௧௫, ௩௦, ௩௨, ௩௪, ௩௫, ௩௮, ௩௯, ௪௦, ௪௮, ௪௯, ௫௦, ௫௫, ௫௬, ௫௮, ௫௯, ௬௦, ௬௪, ௬௭, ௬௮, ௬௯, ௭௦, ௯௧, ௯௨, ௯௫, ௯௬, ௯௭, ௧௦௧, ௧௦௨, ௧௦௩, ௧௦௫, ௧௦௬, ௧௦௭, ௧௦௮, ௧௨௨, ௧௨௩, ௧௨௪, ௧௨௬, ௧௨௭, ௧௨௮, ௧௨௯, ௧௩௦, ௧௩௧, ௧௩௨, ௧௩௩, ௧௩௪, ௧௩௫, ௧௩௬, ௧௩௭, ௧௩௮, ௧௩௯, ௧௪௦, ௧௪௧, ௧௪௨, ௧௪௮, ௧௪௯, ௧௫௦, ௧௫௧, ௧௫௨, ௧௫௩, ௧௫௪, ௧௫௫, ௧௫௬, ௧௫௭, ௧௫௮, ௧௫௯, ௧௬௦, ௧௬௧, ௧௬௨, ௧௬௩, ௧௬௪, ௧௬௫, ௧௬௮, ௧௬௯, ௧௭௧, ௧௭௨, ௧௭௩, ௧௭௫, ௧௭௬, ௧௭௭, ௧௯௬, ௧௯௭, ௧௯௮, ௧௯௯, ௨௦௦, ௨௦௧, ௨௦௨, ௨௦௩, ௨௦௪, ௨௦௫, ௨௦௬, ௨௦௭, ௨௦௮, ௨௦௯, ௨௧௦, ௨௧௧, ௨௧௨, ௨௧௫, ௨௧௬, ௨௬௬, ௩௬௭, ௩௭௪, ௩௭௫, ௩௭௬, ௩௭௭, ௩௭௮, ௩௭௯, ௩௮௦, ௩௮௧, ௩௮௨, ௩௮௩, ௩௮௪, ௩௮௫, ௩௮௬, ௩௮௭, ௩௮௮, ௩௮௯, ௩௯௦, ௩௯௧, ௩௯௨, ௩௯௩. பாடாண்டிணையாவது - ஒருவனுடையகீர்த்தியும் வலியும் கொடையும் அளியும் ஆகிய இவற்றைத் தெரிந்துசொல்லுதல்; 'ஒளியு மாற்றலு மோம்பா வீகையு - மளியு மென் றிவை யாய்ந்துரைத் தன்று.'—புறப்பொருள்வெண்பாமாலை, பாடாண்டிணைப்படலம், ௧.

பெருந்திணை:—௧௪௩, ௧௪௪, ௧௪௫, ௧௪௬, ௧௪௭. பெருந்திணையாவது - பொருந்தாக்காமம்.

பொதுவியல்:—௧௮, ௨௪, ௨௭, ௨௮, ௨௯, ௬௫, ௭௪, ௭௫, ௧௧௨, ௧௧௩, ௧௧௪, ௧௧௫, ௧௧௬, ௧௧௭, ௧௧௮, ௧௧௯, ௧௨௦, ௧௨௧, ௧௮௨, ௧௮௩, ௧௮௪, ௧௮௫, ௧௮௬, ௧௮௭, ௧௮௮, ௧௮௯, ௧௯௦, ௧௯௧, ௧௯௨, ௧௯௩, ௧௯௪, ௧௯௫, ௨௧௪, ௨௧௭, ௨௧௮, ௨௧௯, ௨௨௦, ௨௨௧, ௨௨௨, ௨௨௩, ௨௨௪, ௨௨௫, ௨௨௬, ௨௨௭, ௨௨௮, ௨௨௯, ௨௩௦, ௨௩௧, ௨௩௨, ௨௩௩, ௨௩௪, ௨௩௫, ௨௩௬, ௨௩௭, ௨௩௮, ௨௩௯, ௨௪௦, ௨௪௧, ௨௪௨, ௨௪௩, ௨௫௩, ௨௫௪, ௨௫௫, ௨௫௬, ௨௮௦, ௩௬௨, ௩௬௩, ௩௬௪, ௩௬௫, ௩௬௬.

வஞ்சித்திணை:—௪, ௭, ௧௬, ௩௬, ௪௧, ௪௫, ௪௬, ௪௭, ௫௭, ௯௮, ௨௧௩, ௨௯௨. வஞ்சித்திணையாவது - அரசன் வஞ்சிப்பூவைத்தலையிலேசூடிப் பகைவருடையபூமியைக் கைக்கொள்ளக்கருதுதல்; 'வாடா வஞ்சி தலைமலைந்து - கூடார்மண் கொளக்குறித் தன்று.'— புறப்பொருள்வெண்பாமாலை, வஞ்சிப்படலம், ௧.

வாகைத்திணை:—௧௭, ௧௯, ௨௦, ௨௧, ௨௨, ௨௩, ௨௫, ௨௬, ௩௧, ௩௩, ௩௭, ௪௨, ௪௩, ௪௪, ௫௧, ௫௨, ௫௩, ௫௪, ௬௧, ௬௬, ௭௬, ௭௭, ௭௮, ௭௯, ௮௧, ௮௨, ௮௬, ௯௩, ௯௪, ௯௮, ௯௯, ௧௦௦, ௧௦௪, ௧௨௫, ௧௬௬, ௧௬௭, ௧௭௦, ௧௭௪, ௧௭௮, ௧௭௯, ௧௮௦, ௧௮௧, ௨௭௯, ௨௮௫, ௨௯௬, ௩௦௫, ௩௦௬, ௩௦௮, ௩௧௨, ௩௧௩, ௩௧௪, ௩௧௫, ௩௧௬, ௩௧௭, ௩௧௮, ௩௧௯, ௩௨௦, ௩௨௧, ௩௨௨, ௩௬௮, ௩௬௯, ௩௭௦, ௩௭௧, ௩௭௨, ௩௭௩. வாகைத்திணையாவது - வாகைப்பூவைத்தலையிலே சூடிப் பகைவரைக்கொன்று ஆரவாரித்தல்; 'இலைபுனை வாகை சூடி யிகன்மலைந் - தலைகடற் றானை யரசட்டார்த் தன்று.'—புறப்பொருள்வெண்பாமாலை, வாகைப்படலம், ௧.

வெட்சித்திணை: — ௨௫௭, ௨௫௮, ௨௬௨, ௨௯௯, ௨௯௭. வெட்சித்திணையாவது - வீரர், அரசனுடையகட்டளையைப்பெற்றேனும் பெருமலேனும்போய்ப் பகைவருடைய பசுக்களைக்கவர்தல்; 'வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியுஞ் - சென்

ற்கன்முனை யாத்தந் தன்று.'—புறப்பொருள்வெண்பாமாலை, வெட்சிப்படலம்; ௧.

திணையிறந்துபோனபாட்டுக்கள் :— ௨௪௪, ௨௪௫, ௨௪௬, ௨௪௭, ௨௪௮, ௨௪௯, ௨௫௦, ௨௫௧, ௨௫௨, ௨௬௭, ௨௬௮, ௨௮௨, ௨௮௯, ௩௨௩, ௩௨௪, ௩௨௫, ௩௨௬, ௩௨௭, ௩௨௮, ௩௨௯, ௩௩௦, ௩௩௧, ௩௩௨, ௩௩௩, ௩௩௪, ௩௩௫, ௩௩௯, ௩௪௦, ௩௪௧, ௩௪௨, ௩௪௩, ௩௪௪, ௩௪௫, ௩௪௬, ௩௪௭, ௩௪௮, ௩௪௯, ௩௫௦, ௩௫௧, ௩௫௨, ௩௫௩, ௩௫௪, ௩௫௫, ௩௫௬, ௩௫௭, ௩௫௮, ௩௫௯, ௩௬௦, ௩௬௧.

# துறைவிளக்கம்.

அரசவாகை :— ௧௭, ௧௯, ௨௦, ௨௧, ௨௨, ௨௩, ௨௫, ௨௬, ௩௧, ௩௩, ௩௭, ௪௨, ௪௩, ௪௪, ௫௧, ௫௨, ௫௩, ௫௪, ௬௧, ௬௬, ௭௬, ௭௭, ௭௮, ௭௯, ௮௧, ௮௨, ௯௩, ௯௪, ௯௮, ௯௯, ௧௦௦, ௧௦௪, ௧௨௫, ௧௬௭, ௧௬௮, ௧௭௪. அரசவாகை யென்பது - அரசனது இயல்பைக் கூறுதல்; 'பகலன்ன வாய்மொழி - யிகல்வேந்த னியல்புரைத் தன்று' — புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப்படலம், ௩.

ஆனந்தப்பையுள் :— ௨௨௮, ௨௨௯, ௨௪௬, ௨௪௭, ௨௮௦. ஆனந்தப்பையுளாவது - ஒரு குலமகள் தன் கணவன்மரிக்கத் துன்பமுறுதல்; 'விழுமங்கூர வேய்த்தோளரிவை - கொழுநன்வீயக் குழைந்துயங்கின்று.'—புறப்பொருள் வெண்பாமாலை, சிறப்பிற்பொதுவியற்படலம், ௧௩,

இயன்மொழி :— ௮, ௯, ௧௦, ௧௪, ௧௫, ௧௭, ௨௨, ௩௦, ௩௨, ௩௪, ௩௮, ௩௯, ௪௯, ௫௦, ௬௭, ௯௨, ௯௬, ௯௭, ௧௦௨, ௧௦௬, ௧௦௭, ௧௦௮, ௧௨௨, ௧௨௩, ௧௨௪, ௧௨௮, ௧௨௯, ௧௩௦, ௧௩௧, ௧௩௨, ௧௩௪, ௧௩௭, ௧௪௨, ௧௪௯, ௧௫௦, ௧௫௧, ௧௫௩, ௧௫௬, ௧௫௭, ௧௬௮, ௧௭௧, ௧௭௨, ௧௭௩, ௧௭௫, ௧௭௬, ௧௭௭, ௨௧௨, ௨௧௫, ௨௧௬, ௩௭௬, ௩௭௮, ௩௮௦, ௩௮௧, ௩௮௮, ௩௮௯, ௩௯௦. இயன்மொழியாவது - 'தலைவனெதிர் சென்றேறி அவன் செய்தியையும் அவன் குலத்தோர் செய்தியையும் அவன்மேலே ஏற்றிப் புகழ்தல்' என்பர் நச்சினார்க்கினியர்; இதனைத் தொல்காப்பியம் புறத்திணையியலில், ௩௫ - ம் சூத்திரவுரையிற் காண்க. இயன்மொழியே இயன்மொழிவாழ்த்தென்று அவர் கூறுவர். இதனையும் அச்சூத்திரவுரையானுணர்க.

இயன்மொழிவாழ்த்து :— ௯௨. இயன்மொழி வாழ்த்தாவது - இன்னோர் இன்னதுகொடுத்தார், அவர்கள்போல நீயும் எமக்குக் கொடுப்பாயாகவென்று சொல்லுதல்; 'இன்னோரின்னவை கொடுத்தார் நீயு - மன்னோர் போலவவையெமக் கீயென - வென்னோரு மறிய வெடுத்துரைத் தன்று.'—புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலம், ௬. இவ்விலக்கணம் புறநானூற்றுள் ௧௨ - ம் செய்யுளுக்குப் பொருந்தவில்லை. பின்னும் இப்படியே பலவுள.

உடனிலை :— ௫௮.

உண்டாட்டு :— ௨௫௭, ௨௫௮, ௨௬௨, ௨௬௯, ௨௯௭. உண்டாட்டாவது - வீரர் மதுவையுண்டு மனங்களித்தல்; 'தொட்டிமிழுங் கழன்மறவர் - மட்டுண்டு மகிழ்தூங்கின்று.'—புறப்பொருள் வெண்பாமாலை, வெட்சிப்படலம், ௧௫.

உவகைக்கலுழ்ச்சி :— ௨௭௭, ௨௭௮, ௨௯௫. உவகைக் கலுழ்ச்சியாவது - வாட்புண்மிகுந்த உடம்பையுடைய கணவனைக்கண்டு மனைவிமகிழ்ந்து கண்ணீர்வீழ்த்தல்; 'வாள்வாய்த்த வடுவாழ்யாக்கைக் - கேள்கண்டு கலுழ்ந்துவந்தன்று'—புறப்பொருள் வெண்பாமாலை, தும்பைப்படலம், ௨௫.

எருமை மறம் :— ௮௦, ௨௭௪, ௨௭௫. எருமை மறமாவது - முதுகிட்ட தன் சேனைக்குப்பின் பகைவர் சேனையையஞ்சாது மிகுந்த கோபங்கொண்டு நிற்றல்; 'வெயர்பொடிப்பச் சினங்கடை இப் - பெயர் படைக்குப்பி

ன்னின்றன்று.'—புறப்பொருள் வெண்பாமாலை, தும்பைப்படலம், ௧௩.

ஏர்க்களவுருவகம் :—௩௬௧, ௩௭௩.

ஏறாண்முல்லை :—௮௬, ௨௯௬. ஏறாண்முல்லையாவது-எதிரில்லாதபடி ஆண்மைத்தன்மை மேன்மேல் ஏறுநின்ற குடியொழுக்கத்தினை உயர்த்திச்சொல்லுதல்; 'மாறின்றி மனங்கனலு - மேறாண்குடியெடுத்துரைத்தன்று.'—புறப்பொருள்வெண்பாமாலை, வாகைப்படலம், ௨௨.

கடவுள்வாழ்த்து : — ௧. கடவுள்வாழ்த்தாவது - அயன்முதலிய மும்மூர்த்திகளுள் ஒருவரை உயர்த்திச்சொல்லுதல்; 'காவல் கணணிய கழலோன் கைதொழு - மூவரி லொருவனை யெடுத்துரைத் தன்று.' — புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலம், ௩

கடைநிலை : — ௧௨௭, ௩௮௨, ௩௮௩, ௩௮௪, ௩௯௧, ௩௯௨, ௩௯௩, ௩௯௪.

குடிநிலையுரைத்தல் :—௨௯௦. குடிநிலையுரைத்தலாவது - பழமையிலும் வீரத்திலும் புகழ்பெற்ற குடியின்வரலாற்றைச்சொல்லுதல்; 'மண்டிணி ஞாலத்துத் தொன்மையு மறனுங் - கொண்டு பிறராறியுங் குடிவர வுரைத்தன்று.' — புறப்பொருள்வெண்பாமாலை, கரந்தைப்படலம், ௧௪.

குடைமங்கலம் : — ௬௦. குடைமங்கலமாவது - அரசன்குடையைப்புகழ்ந்து சொல்லுதல்; 'நாற்றிசையும் புகழ்பெருக - வீற்றிருந்தான் குடைபுகழ்ந்தன்று.'— புறப்பொருள்வெண்பாமாலை, பாடாண்படலம், ௩௪.

குதிரைமறம் : — ௨௭௩, ௨௯௯, ௩௦௨, ௩௦௩, ௩௦௪. குதிரைமறமாவது - ஒரு வீரனுடைய குதிரையின்மறத்தைக் கூறுதல்; 'எறிபடையா னிகலமருட்- செறிபடைமான்றிறங்கிளந்தன்று.'— புறப்பொருள் வெண்பாமாலை, தும்பைப்படலம், ௭.

குறுங்கலி :—௧௪௩, ௧௪௪, ௧௪௫, ௧௪௬, ௧௪௭. குறுங்கலியாவது - வேறுமகளிரைவிரும்பிய ஒருவனுடைய காதல்கெடும்படி சொல்லுதல; 'நாடிருங் கூந்தன் மகளிரை நயப்ப - வேறுபடு வேட்கை வீயக் கூறின்று' — புறப்பொருள்வெண்பாமாலை,இருபாற்பெருந்திணை, ௧௮.

கையறுநிலை :—௬௫, ௧௧௨, ௧௧௩, ௧௧௪, ௧௧௫, ௧௧௬, ௧௧௭, ௧௧௮, ௧௧௯, ௧௨௦, ௨௧௭, ௨௧௮, ௨௧௯, ௨௨௦, ௨௨௧, ௨௨௨, ௨௨௩, ௨௨௪, ௨௨௫, ௨௨௬, ௨௨௭, ௨௩௦, ௨௩௧, ௨௩௨, ௨௩௩, ௨௩௪, ௨௩௫, ௨௩௬, ௨௩௭, ௨௩௮, ௨௩௯, ௨௪௦, ௨௪௧, ௨௪௨, ௨௪௩, ௨௬௦, ௨௬௧, ௨௬௩, ௨௬௪, ௨௬௫, ௨௭௦. கையறுநிலையாவது - அரசனிறப்ப அவனைச்சேர்ந்தோர் அவ்விறந்துபாட்டைச்சொல்லி ஒழுக்கந்தளர்தல்; 'செய்கழன்மன்னன் மாய்ந்தெனச்சேர்ந்தோர் - கையறவுரைத்துக் கைசோர்ந் தன்று.' — புறப்பொருள் வெண்பாமாலை, சிறப்பிற்பொதுவியற்படலம், ௧௪.

கொற்றவள்ளை: — ௬, ௭, ௪௧, ௯௮. கொற்றவள்ளையாவது - அரசனுடைய கீர்த்தியைச்சொல்லி அவன் பகைவர் தேசங்கெடுதற்கு வருந்துதல்; 'மன்னவன் புகழ்கிளந் - தொன்னார்நாடழி பிரங்கின்று.' — புறப்பொருள்வெண்பாமாலை, வஞ்சிப்படலம், ௮.

செருமலைதல் : — ௨௫௯. செருமலைதலாவது - வெட்சியாரைக்கிட்டி அவர் அஞ்சத்தாக்கி மிக்க போர்செய்தலை மேற்கொள்ளுதல்; [வெட்சியார்-பசுக்களைக்கவர்ந்தோர்] 'வெட்சியாரைக் கண்ணுற்றவரை இ - யுட்குவரத்தாக்கி யுளர்செருப்புரிந்தன்று.' — புறப்பொருள் வெண்பாமாலை, கரந்தைப்படலம், ௪.

செருவிடைவீழ்தல் : — ௨௭௧, ௨௭௨. செருவிடைவீழ்தலாவது - அகழியையும் காவற்காட்டையுங்காத்து இறந்த வீரருடைய வெற்றியைச்சொல்லுதல்; 'ஆழ்ந்துபடுகிடங்கி னருமிளைகாத்து - வீழ்ந்தவேலோர் விறன்மிகுத்தன்று.'— புறப்பொருள்வெண்பாமாலை, நொச்சிப்படலம், ௪.

செவியறிவுறூஉ :—௨, ௩, ௫, ௬, ௩௫, ௪௦, ௫௫. செவியறிவுறூஉவாவது - மாற்சரியமும் கெடுதலுமில்லாத பெரிய எண்ணத்தை அரசனுக்குச்சொல்லுதல்; 'மறந்திரிவில்லா மன்பெருஞ்சூழ்ச்சி - யறந்தெரிகோலாற் கறியவுரைத்தன்று.'— புறப்பொருள்வெண்பாமாலை, பாடாண்படலம், ௩௩.

தலைத்தோற்றம் : — உசுஉ. தலைத்தோற்றமாவது - ஒருவீரன் பகைவர்பசுங்களைக் கைக்கொண்டுவருதலறிந்து உறவுமுறையார்மனமகிழ்தல் ; 'உரவெய்யோ னினந்தழீஇ-வரவுணர்ந்து கிளைமகிழ்ந்தன்று.' — புறப்பொருள்வெண்பாமாலை, வெட்சிப்படலம், கஉ.

தாபதநிலை : — கசரு, உசஅ, உசகூ, உரு0, உருக, உருஉ. தாபதநிலையாவது - கணவனிறப்ப மனைவி வைதவ்யமடைந்ததைச்சொல்லுதல் ; 'குருந்தலர்க்கண்ணிக் கொழுநன்மாய்ந்தெனக் - கருந்தடங்கண்ணி கைம்மைகூறின்று.' — புறப்பொருள்வெண்பாமாலை, சிறப்பிற்பொதுவியற்படலம், சு.

தானைநிலை :—உஎரு. தானைநிலையாவது- இரண்டுசேனையும் தனது வீரத்தைக் கொண்டாடும்படி ஒருவீரன் போர்க்களத்திற்சிறப்பெய்திநிற்றல் ; 'இருபடையு மறம்பழிச்சப் - பொருகளத் துப்பொலிவெய்தின்று.' — புறப்பொருள் வெண்பாமாலை, தும்பைப்படலம், உஉ.

தானைமறம் :—அஎ, அஅ, அகூ, கூ0, கஎ0, உகூசு, ங00, ங0க. தானைமறமாவது-போர்செய்தற்கெதிர்ந்த இருவகைச்சேனைகளும் தம்முட்பொருது மடியாதவண்ணம் ஒருவீரன் பாதுகாத்த ஆற்றலினது உயர்ச்சியைச்சொல்லுதல் ; 'தாம்படைத் தலைக்கொள்ளாமை - யோம்படுத்த வுயர்வுகூறின்று.' — புறப்பொருள்வெண்பாமாலை, தும்பைப்படலம், ங. இஃது இன்னும் இரண்டுவகைப்படும் : சு, ரு.

துணைவஞ்சி :—ஙகூ, சரு, சசு, சஎ, ருஎ, உகங.

தொகைநிலை :—சுஉ, சுங. தொகைநிலையாவது - போர்க்களத்திலே எல்லாரும் ஒருங்குமாய்ந்ததைச்சொல்லுதல் ; 'அழிவின்றுபுகழ்சிறீஇ - யொழிவின்றுகளத்தொழிந்தன்று.' — புறப்பொருள்வெண்பாமாலை, தும்பைப்படலம், உஅ.

நல்லிசைவஞ்சி :—உங. நல்லிசைவஞ்சியாவது - பகைவருடைய இடங்கள் கெடும்படி சென்றுவிட்டவீரனுடைய வெற்றியைச்சொல்லுதல் ; 'ஒன்னார் முனைகெடவிறுத்த - வென்வேலாடவன் விறன்மிகுத்தன்று.' — புறப்பொருள்வெண்பாமாலை, வஞ்சிப்படலம், உரு.

நீண்மொழி : — உஅஎ.

நூழிலாட்டு : — ங0க, ஙக0. நூழிலாட்டாவது - ஒரு வீரன் பகைவருடைய சேனை கெடும்படி தன் மார்பைத்திறந்த வேலைப்பறித்து எறிதல் ; 'களங்கெழுமிய படையிரிய - வுளங்கழிந்த வேலெடுத்தோச்சின்று.' — புறப்பொருள் வெண்பாமாலை, தும்பைப்படலம், கசு.

நெடுமொழி : — உகூஅ. நெடுமொழியாவது - சிறந்த அரசனுக்கு ஒரு வீரன் தன்னுடைய மேம்பாட்டைத் தான் உயர்த்திச்சொல்லுதல் ; 'மன்மேம்பட்ட மதிக்குடையோற்குத் - தன்மேம்பாடு தானெடுத்துரைத்தன்று.' — புறப்பொருள் வெண்பாமாலை, கரந்தைப்படலம், கக.

பரிசில் கடாநிலை : — கக, க0க, கஙசு, கஙகூ, கருஅ, கருகூ, கசு0, கசுச, கசுகூ, ககூசு, ககூஎ, ககூஅ, ககூகூ, உ0கூ, உக0, உகக, உசுசு. பரிசில் கடாநிலையாவது - 'பரிசிலரை நீங்குதலையாது நெடிதுகொண்டொழுகிய தலைவனுக்குப் பரிசில் வேட்டோன் தன் கடும்பினது இடும்பைமுதலியனகூறித் தான்குறித்த பொருண்மையினைச்செலுத்திக் கடாவினநிலை' என்பர் நச்சினார்க்கினியர் ; இதனைத் தொல்காப்பியம், புறத்திணையியல், ஙரு-ம் சூத்திரவுரையிற்காண்க.

பரிசில்விடை : — கச0, கருஉ, கசுஉ, கசுரு. பரிசில்விடையாவது - அரசன் தன்புகழைக்கூறினோர்க்குப் பரிசில்வழங்கி இன்பமிகும்படி அவர்களுக்கு விடைகொடுத்தல்; 'வேந்தனுண் மகிழ வெல்புக ழறைந்தோர்க்- கீந்து பரிசி லின்புற விடுத்தன்று.' — புறப்பொருள்வெண்பாமாலை, பாடாண்படலம், உசு.

பரிசிற்றுறை : — கஉசு, கஙரு, கஙஎ, கசஅ, கருச, கசுக, கசுங, கசுஅ, உ00, உ0க, உ0உ, உ0ங, உ0ச, உ0ரு, உ0சு, உ0எ, உ0அ, ஙஎகூ. பரிசிற்றுறையாவது - அரசன்முன்னே பரிசிலர் தாம் கருதியபேறு இதுவெனச் சொல்லுதல் ; 'மண்ணகங் காவன் மன்னன் முன்ன - ரெண்

ணிய பரிசி லிதுவென வுரைத்தன்று.'—புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலம், ரு.

பழிச்சுதல் : — அங, அச, அரு.

பாடாண்பாட்டு :—உசா0, உஅங, உஅச, ஙகக. பாடாண்பாட்டாவது - ஒருவனுடைய ஒளி ஆற்றல் ஈகை அளி என்னுமிவற்றை ஆராய்ந்துசொல்லுதல் ; 'ஒளியு மாற்றலு மோம்பா வீகையு - மளியு மென்றிவை யாய்ந்துரைத் தன்று.'—புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலம், க.

பாணாற்றுப்படை : — சாஅ, சாகூ, எ0, கஙஅ, கசக, கருரு, கஅ0. பாணாற்றுப்படையாவது - மலைவழியிற் பாணனை வழிப்படுத்துதல் ; 'சேணோங்கிய வரையதரிற் - பாணனை யாற்றுப் படுத்தின்று.'—புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலம், உஅ.

பார்ப்பனவாகை : — கசாசா, ஙா0ரு. பார்ப்பனவாகையாவது - கேட்கக்கடவனகேட்டுத் தலைமைபெற்ற அந்தணனை யாகத்தால் வெற்றியைப்பெருக்குதல் ; 'கேள்வியாற் சிறப்பெய்தியானை - வேள்வியான் விறன்மிகுத் தன்று.' — புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப்படலம், ஏ.

பிள்ளைப்பெயர்ச்சி : — உருகூ. பிள்ளைப்பெயர்ச்சியாவது - காரியென்னும் புள் தடுக்கவும் அந்நிமித்தத்திற்கு அஞ்சாமற்போய்ப் போர்செய்த வீரனுக்கு அரசன் தண்ணளிசெய்தல் ; 'போர்தாங்கிப் புள்விலங்கி யோனைத்-தார் வேந்தன் றலையளித்தன்று.'—புறப்பொருள் வெண்பாமாலை, கரந்தைப்படலம், கஉ.

புலவராற்றுப்படை : — சஅ, சகூ, கசக. புலவராற்றுப்படையாவது - மிக்க அறிவுடையோனைத் தேவர்களிடத்து வழிப்படுத்துதல் ; 'இருங்கண் வானத் திமையோருழைப் - பெரும்புலவனை யாற்றுப்படுத்தன்று.'—புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண படலம், சஉ.

பூக்கோட்காஞ்சி : — உகூங.

பூவைநிலை : — அ, ருசா, ருகூ, ஙஎச. பூவைநிலையாவது - திருமாலின் திருவுருவோடு உவமித்துக்கூறும் காயாம்பூவைப்புகழ்தல் ; 'கறவை காவலனிறனொடு பொரீஇப்-புறவலர் பூவைப்பூப்புகழ்ந்தன்று.' — புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண்படலம், ச.

பெருங்காஞ்சி : — ககூச, ஙருஎ, ஙருகூ, ஙசா0, ஙசாஉ, ஙசாங, ஙசாச, ஙசாரு, ஙசாசா. பெருங்காஞ்சியாவது-நிலையாமையைக் கருதிச்சொல்லுதல் ; 'மலையோங்கிய மாநிலத்து - நிலையாமை நெறியுரைத்தன்று.'— புறப்பொருள் வெண்பாமாலை, காஞ்சிப்பொதுவியற்படலம், உ.

பெருஞ்சோற்று நிலை : — உகூஉ. பெருஞ்சோற்றுநிலையாவது - பகைவருடைய வேற்றுப்புலத்தை நமக்கு அழித்துத் தருவரென்று, மிக்கசோற்றை வீரர்கொள்ளும்படி அரசன்கொடுத்தல் ; 'திருந்தார் தெம்முனை தெறுகுவரெனப் - பெருஞ்சோ றுடவர் பெருமூன்ற வகுத்தன்று.' — புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சிப்படலம், உங.

பேய்க்காஞ்சி : — உஅக. பேய்க்காஞ்சியாவது - போர்க்களத்திலே பட்டார்க்குப் பேய் மிகவும் அச்சமுறுத்துதல் ; 'பிணம்பிறங்கிய களத்து வீழ்ந்தார்க் - கணங்காற்ற வச்சுறீஇயன்று.'—புறப்பொருள் வெண்பாமாலை, காஞ்சிப்படலம், கஎ.

போதுமொழிக்காஞ்சி : எரு.

பொருண்மொழிக்காஞ்சி : — ரு, உச, கஉக, கஅஉ, கஅங, கஅச, கஅரு, கஅசா, கஅஎ, கஅஅ, கஅகூ, ககூ0, ககூக, ககூஉ, ககூங, ககூரு, உகச. பொருண்மொழிககாஞ்சியாவது - முனிவர் தெளிந்த பொருளைச்சொல்லுதல் ; 'எரிந்திலங்குஞ் சடைமுடி முனிவர் - புரிந்து கண்ட பொருண்மொழிந்தன்று.'—புறப்பொருள் வெண்பாமாலை, காஞ்சிப் பொதுவியற்படலம், ங.

மகட்பாற்காஞ்சி:—ஙஙசா, ஙஙஎ, ஙஙஅ. மகட்பாற்காஞ்சியாவது - நின்மகளைத் தருகவென்னும் அரசனோடு மாறுபட்டுநிற்றல் ; 'ஏந்திழையாட் டருகென்னும்-வேந்தனோடு வேறுநின்றன்று.'— புறப்பொருள்வெண்பாமாலை, காஞ்சிப்படலம், உச.

மகண்மறுத்தல் : — க0கூ, ககூ0, ககக. மகண்மறுத்தலாவது - ஒருவீரன் மண

ங்கோடற்குத் தம்மகளைவேண்டச் சிற்றரண்களிலுள்ளோர் மறுத்துச்சொல்லுதல்; 'விம்முரஞ்ஞன் மகள்வேண்ட - இம்மதிலோர் மறுத்துரைத்தன்று.' — புறப்பொருள்வெண்பாமாலை, நொச்சிப்படலம், ௯.

மழபுலவஞ்சி :—௭, ௧௯, ௩௧. மழபுலவஞ்சியாவது - பகைவருடைய வேற்றுப்புலத்தைக்கொள்ளையூட்டி அவர்கள்வீடுகள்பாழ்படக் கவர்ந்ததொழிலைச்சொல்லுதல்; 'கூடார்முனை கொள்ளைசாற்றி - வீடறக்கவர்ந்த வினைமொழிந்தன்று.' — புறப்பொருள்வெண்பாமாலை, வஞ்சிப்படலம், ௧௫.

மறக்களவழி :—௩௬௮, ௩௬௯, ௩௭0, ௩௭௧, ௩௭௩. மறக்களவழியாவது - அரசனை உழும்வேளாளனாக மிகுத்துச்சொல்லுதல்; 'முழவுறழ் திணிதோளானை - யுழவனாக, வுரைமலிந்தன்று.' —புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப்படலம், ௫.

மறக்களவேள்வி : — ௩௭௨. மறக்களவேள்வியாவது - பேய்மகள் வயிறார உண்ணும்படி வீரன் களவேள்விசெய்தல்; 'அடுதிற லணங்கார - விடுதிறலான் களம்வேட்டன்று.' — புறப்பொருள்வெண்பாமாலை, வாகைப்படலம், ௬. இது களவேள்வியெனவும் வழங்கும்.

மனையறந்துறவறம் :—௩௫௮.

முதல்வஞ்சி :—௩௭.

முதுபாலை : — ௨௫௩, ௨௫௪, ௨௫௫, ௨௫௬. முதுபாலையாவது - காட்டில் தன் கணவனையிழந்த மடந்தையினுடைய தனிமையைச் சொல்லுதல்; 'காம்புயர்கடத்திடைக் கணவனையிழந்த - பூங்கொடிமடந்தை புலம்புரைத்தன்று.' — புறப்பொருள்வெண்பாமாலை, சிறப்பிற்பொதுவியற்படலம், ௧.

முதுமொழிக்காஞ்சி :—௧௮, ௨௭, ௨௮, ௨௯, ௭௪. முதுமொழிக்காஞ்சியாவது - அறிவுடையோர் குற்றம்நீக்கி ஆராயும் உலகத்தியலுள் முடிந்தபொருளாகிய அறம்பொருளின்பத்தை அறியச்சொல்லுதல்; 'பலர்புகழ் புலவர் பன்னின தெரியு-முலகியல் பொருண்முடி புணரக்கூறின்று.'—புறப்பொருள் வெண்பாமாலை, காஞ்சிப்பொதுவியற்படலம், ௧.

மூதின்முல்லை :—௨௭௯, ௨௮௮, ௩0௬, ௩0௮, ௩௧௨. மூதின்முல்லையாவது - வீரர்க்கல்லாமல் அம்மறக்குடியிற்பிறந்த மகளிர்க்கும் கோபமுண்டாதலை மிகுத்துச்சொல்லுதல்; 'அடல்வேலாடவர்க் கன்றியுமக்குடி - மடவரன் மகளிர்க்கு மறமிகுத்தன்று.'—புறப்பொருள்வெண்பாமாலை, வாகைப்படலம், ௨௧.

வஞ்சினக்காஞ்சி :—௭௧, ௭௨, ௭௩. வஞ்சினக்காஞ்சியாவது - அரசன் பகைவரைத்தாழ்வித்தற்பொருட்டு இவ்வாறுசெய்வேனெனச்சொல்லிய கூறுபாட்டைச்சொல்லுதல்; 'வெஞ்சின வேந்தன் வேற்றவர்ப்பணிப்ப - வஞ்சினங்கூறிய வகைமொழிந்தன்று.'—புறப்பொருள்வெண்பாமாலை, காஞ்சிப்படலம், ௯.

வல்லாண்முல்லை :—௧௭0, ௧௭௮, ௧௭௯, ௧௮0, ௧௮௧, ௩௧௩, ௩௧௪, ௩௧௫, ௩௧௬, ௩௧௭, ௩௧௮, ௩௧௯, ௩௨0, ௩௨௧, ௩௨௨. வல்லாண்முல்லையாவது - ஒருவீரனுடைய வீட்டையும் ஊரையும் இயல்பினையுஞ்சொல்லி அவனுண்மைத்தன்மையை நன்மைபெருகச்சொல்லுதல்; 'இல்லும் பதியுமியல்புங்கூறி - நல்லாண்மையை நலமிகுத்தன்று.' — புறப்பொருள்வெண்பாமாலை, வாகைப்படலம், ௨௩.

வாண்மங்கலம் :—௧௫. வாண்மங்கலமாவது - அரசனுடைய வாளைப்புகழ்தல்; 'கயக்கருங் கடற்றானை - வயக்களிற்றான் வாட்புகழ்ந்தன்று.'—புறப்பொருள்வெண்பாமாலை, பாடாண்படலம், ௩௫.

வாழ்த்தியல் :—௨, ௬, ௧௩, ௬௧, ௧௫௮, ௩௬௭, ௩௭௫, ௩௭௭, ௩௮௫, ௩௮௬, ௩௮௭.

வாழ்த்து :—௧௨௮.

விறலியாற்றுப்படை :—௬௪, ௧0௩, ௧0௫, ௧௩௩. விறலியாற்றுப்படையாவது - அரசனுடைய கீர்த்தியைப்பாடும்பாடினியை வழிப்படுத்தல்; 'திறல்வேந்தன் புகழ்பாடும் - விறலியை யாற்றுப்படுத்தன்று.'—புறப்பொருள்வெண்பாமாலை, பாடாண்படலம், ௩௧.

வேத்தியல் :—௨௮௬, ௨௬௬.

துறையிறந்தபாட்டுக்கள் : — ௨௪௪, ௨௪௫, ௨௬௭, ௨௬௮, ௨௮௨, ௨௮௫,

௨௮௧, ௩௦௭, ௩௨௩, ௩௨௪, ௩௨௫, ௩௨௬, ௩௨௭, ௩௨௮, ௩௨௯, ௩௩௦, ௩௩௧, ௩௩௨, ௩௩௩, ௩௩௪, ௩௩௫, ௩௩௯, ௩௪௦, ௩௪௧, ௩௪௨, ௩௪௩, ௩௪௪, ௩௪௫, ௩௪௬, ௩௪௭, ௩௪௮, ௩௪௯, ௩௫௦, ௩௫௧, ௩௫௨, ௩௫௩, ௩௫௪, ௩௫௫, ௩௫௬, ௩௫௭, ௩௬௧.

# துறைக்குறிப்பு.

[புறநானூற்றின் உரையைக்கொண்டே ஒருவாறுவிளங்கிய துறைகளும், அவற்றின் இலக்கணமும்.]

அரசவாகை :— அஃதாவது - அரசனது வெற்றியைக் கூறுதல் ; 'பொறுத்தற்கரியபிழையைப்பொறுத்த குணவென்றியான் அரசவாகையாயிற்று' என்றார் உரைகாரராதலின். ௬௩.

ஆனந்தப்பையுள் :— அஃதாவது - ஒருவன் இறந்ததைப்பற்றிச் சுற்றத்தார் இரங்கிக்கூறுதல் ; 'சுற்றத்தார் இரங்கிக்கூறுதலின் ஆனந்தப்பையுளாயிற்று' என்றார்உரைகாரராதலின். ௨௨௮.

இயன்மொழி :— அஃதாவது - இயல்பைக்கூறுதல் ; 'தம்மையின் மென்மையது இயல்புங்கூறுவார் அரசன் கையின் வலிய இயல்புங்கூறினமையான் இஃது இயன்மொழியாயிற்று' எனவும், 'இவைவைப்பொழுதுஞ்செய்தல் இயல்பெனக்கூறினமையின் இஃது இயன்மொழியாயிற்று' எனவும், 'அவனது இயல்பைப் புகழ்ந்தமையான் இயன்மொழியுமாயிற்று' எனவும், 'பண்ணனது இயல்புகூறி வாழ்த்தியவாறு' எனவும் முறையேகூறிப் போந்தார் உரைகாரராதலின். ௧௪, ௧௫; ௬௧, ௧௭௩.

உடனிலை :— அஃதாவது - உடனிருந்த இருவரைப்பாடுதல் ; 'இருவரரசர் ஒருங்கிருந்தாரைப் பாடினமையின் இஃது உடனிலையாயிற்று' என்றார் உரைகாரராதலின். ௫௮.

குறுங்கலி :— அஃதாவது - ஒருவனால் துறக்கப்பட்ட அவன்மனைவியை அவனோடு கூடுவிக்கும்பொருட்டு, நீ இவள்பால் அருள்செய்தல் வேண்டுமென வேண்டுதல்; 'பேகனால் துறக்கப்பட்ட கண்ணகியை அவனோடுகூட்டலுறுவார் அருள்பண்ணவேண்டுமென்று இரந்து கொண்டுகூறினமையின் குறுங்கலியாயிற்று' என்றார் உரைகாரராதலின். ௧௪௩.

கையறுநிலை :— அஃதாவது - கழிந்துபோன பொருளைக்குறித்து இரங்கிக் கூறுதல் ; 'இளமைகழிந்து இரங்கிக் கூறுதலான் இதுவும் கையறுநிலையாயிற்று' என்றார் உரைகாரராதலின். ௨௪௩.

கொற்றவள்ளை :— அஃதாவது - அரசனதுபுகழையும், அவன் பகைவரது நாடுஅழிதற்கு இரங்குதலையுங் கூறுதல் ; 'செஞ்ஞாயிற்றுக்கவினையென்றதனையும் மன்னவன்புகழும் ஓவாதுகூஉநின் உடற்றியோர் நாடெனஒன்னார் நாடழிபிரங்கலுமாதலான் இது கொற்றவள்ளையாயிற்று' எனவும், 'இது பிறரகன்றலை நாடு நல்ல இல்லவாகுபவென்றமையின் கொற்றவள்ளையும்' எனவும், 'காற்றோடெரிநிகழ்ந்தன்ன செலவிற்செருமிகுவளவவென மன்னவன்புகழும், நிற்சினையியோர்நாடு பைதன்மாக்களொடு பெருங்கலக் குற்றன்றென ஒன்னார் நாடழிபிரங்கியது மாதலால் இது கொற்றவள்ளையாயிற்று' எனவும் முறையே கூறிப்போந்தார் உரைகாரராதலின். ௪, ௭, ௬௧.

செவியறிவுறூஉ :— அஃதாவது - அரசன்செய்யவேண்டும் உலகங்காவன் முறைமையை அவனிடஞ் சொல்லி அவன்செவியிற்புகுத்தி அறிவித்தல்; 'காவல் குழவிகொள்பவரினோம் பென்றமையாற் செவியறிவுறூஉவும்' எனவும், 'இஃது இவ்வாறுசெய்கவென அரசியல்கூறலிற் செவியறிவுறூஉ

வும்' எனவும், 'நாடுகெழுசெல்வத் துப்பீடுகெழுவேந்தே,......பாரமோ ம்பிப் புறந்தருகுவையாயின் நின்னடி புறந்தருகுவர் அடங்காதோ ரென்ற மையாற் செவியறிவுறூஉவாயிற்று' எனவும் முறையே கூறிப்போந்தார் உரைகாரராதலின். ரு, சு, கூரு.

துணைவஞ்சி :— அஃதாவது - பிறரை வெல்லவாவது கொல்லவாவது துணிந்து நிற்கின்றாெருவனைச் சில கூறிச் சந்திசெய்வித்தல்; 'மேற்சென்றோனைச் சந்துசெய்துமீட்டலின் இது துணைவஞ்சியாயிற்று' எனவும், 'இது சந்துசெய்வித்தலால் துணைவஞ்சியாயிற்று' எனவும், 'இதுவும் இவரைக்கொல்லாமற் சந்துசெய்வித்தலின் துணைவஞ்சியாயிற்று' எனவும், 'சந்துசெய்விக்கும் நினைவாற்கூறினமையின் இது துணைவஞ்சியாயிற்று' எனவும் முறையே கூறிப்போந்தார் உரைகாரராதலின். கூசு, சரு, சசு, ருஎ.

பரிசில்கடாநிலை :— அஃதாவது - 'யாவரும்பரிசில்பெற்றார், யான்பெற்றிலேன்' எனத் தனது பரிசில்பெறும் வேட்கையைப் பரிசில்கொடுப்போனிடத்தே புலப்படுத்திக் கூறுதல்; 'பாடினி இழைபெற்றாள், பாணன் பூப்பெற்றான், யான் அதுபெறுகின்றிலேன் எனப் பரிசில்கடாநிலையாயிற்று' என்றார் உரைகாரராதலின். கக.

பரிசில்விடை :— அஃதாவது - பரிசில் பெறவந்தவன் அதனைப்பெற்றாயினும் பெறுமலாயினும் பரிசிலளிப்பவனைநோக்கிக்கூறும் விடை; 'இது பெறுதுபெயர்ந்தபரிசில்விடை' என்றார் உரைகாரராதலின். கசூஉ.

பரிசிற்றுறை :— அஃதாவது - பரிசிலர் அரசன்முன்னே தாங்கருதிய பேற்றைச்சொல்லுதல்; 'உலகத்துமகட்பேசிவிடக் கொடுத்தலையன்றித் தாமே இவரைக்கொள்வாயாகவென்று இரந்துகூறினமையின் இது பரிசிற்றுறையாயிற்று' என்றார் உரைகாரராதலின். உ௦௦.

புலவராற்றுப்படை :— அஃதாவது - புலவனொருவன் இரவலனுய் வந்தானொருபுலவனைநோக்கித் தலைவனது இயல்பையும் ஊரையுந் தன் தலைமை தோன்றக்கூறி அவ்விரவலனை அத்தலைவனிடத்தே செலுத்துதல்; 'தலைவனதியல்பையும் ஊரையுங்கூறி முதுவாயிரவல எம்முமுள்ளெனத் தன் தலைமைதோன்றக்கூறினமையால் இது புலவராற்றுப்படையாயிற்று' என்றார் உரைகாரராதலின். சஅ.

பூவைநிலை :— அஃதாவது - மனிதனைத் தேவரோடு உவமித்துக்கூறுதல்; 'இது தேவரோடுவமித்தமையாற் பூவைநிலையாயிற்று' எனவும், 'ஞாயிற்றோடும் திங்களோடும் உவமித்தமையால் இது பூவைநிலையாயிற்று' எனவும் முறையே கூறிப்போந்தார் உரைகாரராதலின். ருசு, ருக.

பொருண்மொழிக்காஞ்சி :— அஃதாவது - உயிருக்கு இம்மைமறுமைகளில் உறுதிதருகிற பொருளை ஒருவனுக்குக் கூறுதல்; 'அருளும் அன்புநீக்கி நீங்கா நிரயங் கொள்பவரோ டொன்றாதென்றமையாற் பொருண்மொழிக்காஞ்சியுமாயிற்று' எனவும், 'இது நிலையாமைகூறி இனிதொழுகென்றமையாற் பொருண்மொழிக்காஞ்சி' எனவும் முறையேகூறிப்போந்தார் உரைகாரராதலின். ரு, உசு.

மழபுலவஞ்சி :— அஃதாவது - அரசனொருவன் பகைவர்நாட்டை எரியூட்டிக் கொள்ளைகொண்டு அழித்ததனைச் சிறப்பித்துக்கூறுதல்; 'ஊர்சுடுவிளக்கத்தழுவிளிக்கம்பலை யென்றமையின் மழபுலவஞ்சியுமாயிற்று' எனவும்,'எமநன்றொடொள்ளெரியூட்டியென்றதனுல் இது மழபுலவஞ்சியாயிற்று' எனவும் முறையே கூறிப்போந்தார் உரைகாரராதலின். எ, கசு.

முதுமொழிக்காஞ்சி :— அஃதாவது - அறம்பொருள் இன்பமென்னும் முப்பொருளினது உறுதிதருந் தன்மையைக் கூறுதல்; 'நீர்நிலைபெருகத்தட்கவே அறமுதல்மூன்றும் பயக்குமென்பது கூறினமையான் இது முதுமொழிக்காஞ்சியாயிற்று' எனவும், 'அரசர்க்கு மானத்தின்மிக்க அறனும் பொருளும் இன்பமும் இன்மையின் இது முதுமொழிக்காஞ்சியாயிற்று' எனவும் முறையே கூறிப்போந்தார் உரைகாரராதலின். கஅ, எசு.

வாழ்த்தியல் :— அஃதாவது - தலைவனை வாழ்த்துதல்; 'நீடுவாழ்கவென வாழ்த்தியவாறாயிற்று' எனவும், 'வாழ்த்தியலாதல்விளங்க வேண்டுமென ஒருசொல் தந்துரைக்கப்பட்டது' எனவும், 'மதியமும் ஞாயிறும்போல மன்னுகவென்றமையான் வாழ்த்தியலுமாயிற்று' எனவும், 'வாழ்த்தினமையால் இது வாழ்த்தியலாயிற்று' எனவும் முறையே கூறிப்போந்தார் உரைகாரராதலின். உ, ரு, சு, கரு.

இவ்விலக்கணக்குறிப்பு அவ்வப்பாட்டின் விசேடவுரையின் இறுதியிலேயே பெரும்பாலும் காணப்படும்.

# அரும்பத அகராதி.

## அ

அகம் - உள், 'கானக நாடனை' *௫.

அகல - நீங்க, 'மீன்றிகழ் விசும்பிற் பாயிரு ளகல' ௨௫.

அகலம் - மார்பு, 'மலைப்பரு மகல மதியார்' ௭௮.

அகலும் - விரியும், 'விரிப்பி னகலுந் தொகுப்பி னெஞ்சும்' ௫௩.

அகழி - கிடங்கு, 'பாருடைத்த குண்டகழி' ௧௪.

அகற்ற - அகலச்செய்ய, 'களிறு சென்று களனகற்றவும்' ௨௬.

அகன்ற - விசாலித்த, 'விலங்ககன்ற வியன்மார்ப' ௩.

அகுதை - ஒருவன், 'சீர்கெழு நோன்றா ளகுதை' ௨௩௩; 'மறப்போரகுதை' ௩௪௭.

அகைத்த - கிளைத்த, 'குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த' ௧௫௯.

அசும்பு - சேறு, 'வாரசும் பொழுகு முன்றில்' ௧௧௪.

அசைஇ - இளைப்பாறி, 'கடும்பரி நெடுந் தேர்ப் பூட்டுவிட் டசைஇ' ௧௪௧. தங்கி, 'குறும்பறை யசைஇ' ௬௭.

அசைஇய - வருந்திய, 'களனுழந் தசைஇய' ௯௭.

அஞ்சி - அதியமான்நெடுமானஞ்சி, 'ஆர் கலி நறவி னதியர் கோமான் போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி' ௯௧; 'பல் வே லஞ்சி' ௧௦௩; 'கடுமான் றோன்ற னெடுமா னஞ்சி' ௨௦௬.

அஞ்சுவரத் தகுந - அஞ்சத்தகுவன, 'அஞ் சுவரத் தகுந புள்ளுக்குர லியம்பவும்' ௪௧.

அஞ்சுவல் - அஞ்சுவேன், 'யான் யா யஞ் சுவலே' ௮௩.

அஞர் - துன்பம், 'பேரஞர்க் கண்ணள் பெருங்காடு நோக்கி' ௨௪௭.

அட்ட - கொன்ற, 'ஆலங் கானத் தமர் கடந் தட்ட' ௨௩.

அட்டு - குத்தி, 'வித்தட் டுண்டனை' ௨௨௭. வென்று, 'அமிழ்தட்டு' ௧௦.

அடக்கி - ஒடுக்கி, 'தன்னு ளடக்கி' ௧.

அடகு - இலை, 'படப்பைக் கொய்த வடகு' ௧௪௦; 'பாசடகு மிசைந்து' ௧௫௯.

அடங்காதோர் - பகைவர், 'அடிபுறந் தருகுவ ரடங்கா தோரே' ௩௫.

அடர் - தகடு, 'அழல்புரிந்த வடர்தாமரை' ௨௯.

அடர்தல் - நெருங்குதல், 'அடர்புகர்ச் சிறுகண் யானை' ௬.

அடர்ந்த - கம்பியாகச்செய்த, 'ஐதடர்ந்த நூற்பெய்து' ௨௯.

அடார் - கல்லடார், 'பெருங்கல் லடாரும்' ௧௯.

அடி - பாதம், 'வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்' ௧௦.

அடிசில் - உணவு, 'கமழ்குய் யடிசில்' ௧௦.

அடியுறை - அடியின்வாழ்வேன், 'நின்னடிநிழற் பழகிய வடியுறை' ௧௩௮; ஒருவிதவணக்கமொழி, 'ஆங்கை யடியுறை யெனினே' ௬௭.

அடுக்கம் - அரைமலை, 'அடுக்கத்துச் சிறுதலை நவ்வி' ௨; 'அணங்குசா லடுக்கம்' ௧௫௧; மலைச்சாரல், 'கறிவளரடுக்கத்து' ௧௬௮; மலைப்பக்கம், 'மழைமிசை யறியா மால்வரை யடுக்கத்து' ௨௦௦.

அடுதல் - கொல்லுதல், 'கடந்தடு தானை' ௮.

அடுநை - கொல்லுவாய், 'அடுநை யாயினும் விடுநை யாயினும்' ௩௬.

அடை - இலை, 'புழற்கா லாம்ப லகலடை நீழல்' ௨௬௬.

அண்டிரன் - ஆயென்னும் வள்ளல், 'ஆஅ யண்டிர னடுபோ ரண்ணல்' ௧௨௯; 'வழைப்பூங் கண்ணி வாய்வா ளண்டிரன்' ௧௩௧; 'தண்டா ரண்டிரன்' ௨௪௧; 'ஆஅயண்டிரன்' ௩௭௪.

அண்ணாந்து - தலையெடுத்து, 'நண்ணார் நாண வண்ணாந் தேகி' ௪௭.

அணங்கு - தெய்வம், 'அணங்குடை நெடுங்கோடு' ௫௨. வருத்தம், 'நல்லவர்க் காரணங் காகிய மார்பின்' ௧௪;

---

*எண்கள் புறநானூற்றுச் செய்யுட்குறியனவெனக்கொள்க.

'அணங்கருங் கடுந்திற லென்னை' எஅ.

அணல் - தாடி, 'மையணற் காளை' அங; 'புல்லணற் காளை' உருஅ.

அணிந்தன்று - அழகுசெய்தது, 'அணியலு மணிந்தன்று' க.

அணியல் - அழகுசெய்தல், 'அணியலு மணிந்தன்று' க.

அத்தம் - அருஞ்சுரம், 'ஆளி லத்த மாகிய காடே' உங.

அதர் - வழி, 'ஆனினங் கலித்த வதர்' கஙஅ; 'கானதர்மயங்கிய விளையர்' கருO.

அதள் - தோல், 'அதளெறிந் தன்ன நெடுவெண் களரின்' கஙங.

அந்தி - அந்திக்காலம், 'அந்தி யந்தணரருங்கட னிறுக்கும்' உ. காலையந்தி மாலையந்தி, 'காலை யந்தியு மாலை யந்தியும்' ஙச.

அந்துவஞ்சாத்தன் - ஒல்லையூர்தந்த பூதபாண்டியனுடைய நண்பருளொருவன், 'அந்துவஞ் சாத்தனும்' எக.

அம்பர் - ஓரூர், 'நெல்விளை கழனி யம்பர் கிழவோன் - நல்லரு வந்தை வாழியர்' ஙஅரு.

அம்பு - பாணம், 'எம்மம்புகடி விடுதும்' க.

அமரும் - விரும்பும், 'வருவிருந் தமரும்' சஉ.

அமலை - சோற்றுத்திரளை, 'ஊன்சோற்றமலை' ஙங; 'அமலைக் கொழுஞ்சோறு' ஙச; 'பைஞ்ஞிணம் பெருத்த பெருவெள் ளமலை' கஎஎ.

அமிழ்து - அமிர்தம், 'அமிழ்தட்டு' கO.

அயர்வு - மனக்கவற்சி, 'உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்' கஅஉ.

அயறு - புண்வழலை, 'அயறுசோரு மிருஞ்சென்னிய' உஉ.

அயிரை - ஒருமீன், 'குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி' சுஎ.

அயினி - உணவு, 'அயினியு மின்றயின் றனனே' எஎ.

அரண் - அரணுகியஇடம், 'நும்மரண் சேர்மின்' க.

அரி - ஐம்மை, 'அரிமயிர்த்திரண்முன்கை' கக. கிணைப்பறை, 'அரிக்குடாரியின்' உசக. பருக்கை, 'செறியரிச்சிலம்பு' ஙரு.

அரிநர் - அறுப்பார், 'அரிநர் கீழ்மடைக் கொண்ட வாளையும்' சஉ.

அருப்பம் - அரண், 'வீங்குசிறைவியலருப்பம்' கஎ; அரியஅரண், 'அருப்பம்பேணு தமர்கடந்ததூஉம்' உஉச.

அருமை - செய்தற்கருமை, 'அருங்கடனிறுக்கும்' க.

அருவந்தை - அம்பர்கிழான் அருவந்தையென்போன்; இவன் கொடையாளிகளுள் ஒருவன், 'நெல்விளைகழனியம்பர்கிழவோ, னல்லருவந்தை வாழியர்' ஙஅரு.

அருள் - ஒன்றின் துயர்கண்டாற் காரணமின்றித் தோன்றுமிரக்கம், 'அருளு மன்பும்' ரு.

அருளன்மாறு - அருளுதலால், 'நெடுமானஞ்சிநீ யருளன்மாறே' கூஉ.

அரையம், - இது சிற்றரையம் பேரரையமென்னும் இரண்டுகூற்றினையுடையதோர் பெரியநகரம், 'நீடுநிலையரையத்துக்கேடுங்கேளினி' உOஉ.

அல்கிய - தங்கிய, 'அதுசேர்ந் தல்கிய வழுங்கலாலை' உஉO.

அல்குமிசைவு - இட்டுவைத்துண்ணுமுணவு, 'சிலைகெழு குறவர்க் கல்கு மிசைவாகும்' உஙச.

அலங்குதல்-அசைதல். 'அலங்குளைப்புரவி' உ; 'அலங்குசெந்நெற்கதிர்' உஉ.

அலத்தல் - வறுமையுறுதல், 'அலத்தற் காலையாயினும்' கOங.

அலைத்து - உருட்டி, 'கல்லலைத்தொழுகும்' ககரு.

அவ் - அவை, 'அவ்வேபகைவர்க்குத்திக்கோடு நனிசிதைந்து கொற்றுறைக் குற்றில' கரு.

அவ்வாய் - அழகியவாய், 'கருங்கைக் கொல்லனரஞ்செயவ்வாய்' ஙசு; மணிமரு ளவ்வாய்க் கிண்கிணிப் புதல்வர்' ககஅ.

அவணது - அவ்விடத்தது, 'அவணதுயர்நிலையுலகத்து' ருO.

அவல் - பள்ளம், 'அவலிழியினும்' கOஉ; 'அவலா கொன்றோ' கஅஎ. விளைநிலம், 'பிரசவற்படப்பை' சு.

அவற்றோரன்ன - அவற்றையொத்த, 'அவற்றோரன்ன சினப்போர்வழுதி' ருக.

அவைப்பு - குற்றுதல், 'வரகி னவைப்புறு வாக்கல்' உகரு.

அழல் - நெருப்பு, 'ஒள்ளழற்புரந்ததாம ரை' கக.

அழற்குட்டம் - கார்த்திகைநாள், 'ஆடி யலழற்குட்டத்து' உஉகூ.

அழால் - அழுகை, 'அழாஅன்மறந்த புன்றலைச்சிரு அர்' சுரு.

அழி - இரகசம், 'அழிவரப்பாடி வரு நரும் பிறருங்கூடி' கருஅ; வைக் கோல், 'உழுதநோன்பக டழிதினரு ங்கு' கஉரு.

அழிந்த - இரங்கிய, 'அழிந்தநெஞ்சம்' உஉகூ.

அழுங்க - அழிய, 'பிணனழுங்கக்கள னுழக்கி' கூஅ.

அழுங்கல் - இரக்கம், 'அதுசேர்ந்தல் கிய வழுங்கலாலே' உஉ௦.

அழுந்த - இறுக, 'அழுந்தப்பற்றி' எஎ.

அழுவம் - பரப்பு, 'நீரழுவநிவப்புக்குறி த்து' கசு; 'நீண்டொலியழுவங் கு றைபடமுகந்து' கசுக.

அள்ளிலை - செறிந்தஇலை, 'அள்ளிலைத் தாளி' உருஉ.

அள்ளூர் - ஓரூர், கூ௦சு.

அளந்து - எண்ணி, 'நீயளந்தறிதி' கூசு; வரையறுத்து, 'அளந்தறியினும்' உ௦.

அளி - அருள், 'வலியுந்தெறலுமளியு முடையோய்' உ.

அளிது - அளிக்கத்தக்கது, 'அளிதோ தானே' ரு; இரங்கத்தக்கது, 'அளி தோதானே பாரியதுபறம்பே' கயக.

அளிய - இரங்கத்தக்கன, 'அளியதாமே சிறுவெள்ளாம்பல்' உசஅ.

அளியர் - அளிக்கத்தக்கார், 'யார்கொ லளியர்தாமே' ருஉ; இரங்கத்தக்கார், 'அளியரோவளியரவனளியிழந்தோ ரே' ருக.

அளியை - இரங்கத்தகுவை, 'அளியை நீயே' உஉஅ.

அளை - குகை, 'அளையகமுழைஇ' ருஉ; மோர், 'செம்புற்றீயலி னின்னளைப் புளித்து' கககூ.

அற்றம் - துன்பம், 'இரந்தோரற்றந்தீ ர்க்கென' கருஅ.

அற்று - ஒக்கும், 'புத்தேளுலகத்தற்றெ ன' உஉ.

அற - தெளிய, 'அறமறக்கண்ட' உஉச.

அறல் - அரித்தொழுகுதல், 'மட்டறனு ல்யாற்று' கஎஎ.

அறவு - அறுதல், 'நீரறவறியாக்கரகத் து' க.

அறவை - அறத்தையுடையாய், 'அற வையாயினினதெனத்திறத்தல்' சச.

அறிதீ=அறிதி - அறிவாய், 'வழிபடு வோரை வல்லறிதீயே' க௦.

அறிந்தீயார் - அறியார், 'அன்னதன் மையுமறிந்தீயார்' கூகூ.

அறியலை - அறியாய், 'காண்பறியலை' கூகூ.

அறியுமோன் - அறியுமவன், 'நீயே, மு ன்யானறியுமோனே' கூஎ.

அறிவாரா - அறியவாரா, 'பொருளறி வாராவாயினும்' கூஉ.

அறுபு - அற்று, 'மையன்மாலையாங்கை யறுபினைய' சுஎ.

அறுமார் - நீக்கவேண்டி, 'தீதுமருங்க றுமார்' கூகூ.

அறை - பாறை, 'அறையும்பொறை யும்' ககஅ.

அறைநர் - அறுப்பவர், 'அறைநர் கரும் பிற்கொண்டதேனும்' சஉ.

அன்பு - தன்னாற்புரக்கப்படுவார் மேல் உளதாகியகாதல், ரு.

அன்ன - ஒத்த, 'எருமையன்னகருங் கல்' ரு.

அனந்தல் - மந்தம், 'எடுத்தெறியனந் தற்பறை' சுஉ.

அனையை - அத்தன்மையையுடையை, 'அனையையாகன்மாறே' உ௦; அதற் கேற்றசெய்கையையுடையை, 'அன் னசிறத்தனையையாகலின்' கரு.

## ஆ

ஆ - பசு, 'ஆவுமானியற்பார்ப்பனமாக் களும்' கூ.

ஆகம் - மார்பு, 'முலைபொலியாகமுருப் பநூறி' உரு.

ஆகியர் - ஆகவேண்டும், 'மூவருளொரு வன்றுப்பாகியரென' கஉஉ.

ஆகிலியர் - ஆகாதொழிக, 'நல்லதன லனுந் தீயதன் றீமையும், இல்லையெ ன்போர்க்கினனாகிலியர்' உகூ.

ஆகின்று - ஆயிற்று, 'பெண்ணுருவொ ருதிறனாகின்று' க.

ஆகுப - ஆகுவன, 'இல்லவா குபவால்' எ.

ஆகுளி - சிறுபறை, 'நல்யாழாகுளி' சுகூ; 'ஆகுளிதொடுமின்' கருஉ.

ஆங்கு - அப்படி, 'ஆங்கினிதொழுகு மதி' உச; போல, 'நடுவுநின்றாங்கு' ருடு.

ஆசினி - ஒருமரம்; ஈரப்பலாவுமாம், 'ஆசினிக் கவினிய பலவினார் வுற்று' கடுஅ.

ஆசு - பற்று, 'ஆசா கெந்தை' உருடு; 'ஆசா கென்னும் பூசல் போல' உகுகு.

ஆட்டி - அலைத்து, 'உழைக்குரற் கூகை யழைப்ப வாட்டி' உசுக.

ஆட்டும் - அலைக்கும், 'ஒருவனாட்டும் புல்வாய்' ககரு.

ஆடு - அடுதல், 'ஆடுகொள் வென்றி' சுஎ; வென்றி, 'ஆடுகொளக் குழைந்த' உக.

ஆடுதுறை - ஓரூர், உஉஎ.

ஆதனழிசி - ஒல்லையூர்தந்தபூதப்பாண்டியன் நண்பருள் ஒருவன், 'ஆதனழிசியும்' எக.

ஆதனுங்கன் - ஒரு கொடையாளி, 'எந்தை வாழி யாத னுங்க' கஎடு; 'கல்விழி யருவிவேங் கடங்கிழ வோன் செல்வழியெழாஅ நல்லேர் முதியனாதனுங்கன்' ருஅக.

ஆதனோரி - ஓரியென்னும்வள்ளல், 'அடுபோ ராஅ வாத னோரி' கடுரு.

ஆதி - மல்விகிழான்காரியாதி, 'பெரும்பெய ராதி பிணங்கரிற் குடநாட்டு' கஎஎ.

ஆந்தை - ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியனுடைய நண்பருள் ஒருவன்; இவனுடைய ஊர் எயிலென்பது, 'மன்னெயி லாந்தையும்' எக.

ஆப்பி - சாணகம், 'மெழுகு மாப்பி' உசக.

ஆப - ஆவார், 'சான்றோர் சான்றோர் பால ராப' உகஅ.

ஆம்பி - காளாம்பி, 'ஆம்பி பூப்ப' கசுச.

ஆமூர் - இது மூக்காவனாட்டுள்ளது, 'இன்கடுங்கள்ளினாமூராங்கண் மைந்துடைமல்லன்' அo.

ஆய் - சிறுமை, 'ஆய்நுதன் மடந்தை' உசக; நுண்மை, 'ஆய்தொடி யரிவை' ககஎ; மென்மை, 'ஆய் கரும்பு' உஉ; வள்ளல்களுள் ஒருவன், 'ஆஅய் கோயில்' கஉஎ; 'தென்றிசை யாய் குடியின் றாயின்' கஉஉ; 'தேர்வே ளாயைக் காணிய சென்மே' கஙரு; 'அறவிலை வாணிக னாஅ யல்லன்' ககச; 'மலைகெழு நாடன் மாவே ளாஅய்' கஙடு; 'எனைப் பகையு மறியுநனு, மெனக்கருதி' ககசு; 'திருந்துமொழி மோசி பாடிய வாயும்' கடுஅ; 'பாடுநர்க் கருகாவா யண்டிரன்' உசo; 'பொய்யா வீகைக் கழறொடி யாஅய்' ருஎடு.

ஆய்குடி - ஆயென்னும் வள்ளலினூர், 'தென்றிசை யாய் குடியின் றாயின்' இது பொதியின்மலைக்கு அருகேயுள்ளது, கஙஉ.

ஆர்த்தும் - நிறைக்கும், 'சேர்ந்தவர்கடும் பார்த்தும்' உஉ.

ஆர்தல் - உண்ணுதல், 'கயலார் நாரை' உச.

ஆர்ந்த - உண்ட, 'அமலைக் கொழுஞ்சோ றார்ந்தபா ணர்க்கு' ருச.

ஆர்வலர் - பரிசிலர், 'இனிய செய்தி நின் னார்வலர் முகத்தே' கஉ.

ஆர்வுற்று - ஆசைப்பட்டு, 'பலவினார் வுற்று' கடுஅ.

ஆரணங்கு - ஆற்றுதற்கரிய வருத்தம், 'நல்லவர்க் கீரணங் காகிய மார்பு' கச.

ஆரம் - முத்தாரம், 'கழுஉவிளங் காரங் கவைஇய மார்பே' கக; வண்டியின் ஆரம், 'அச்சுடைச் சாகாட்டாரம்' உருசு.

ஆரல் - ஒருவகை மீன்; இது சிறிய வடிவையுடையது, 'நுண்ணாரல்' கஅ.

ஆல - ஆட, 'மயிலெழுந் தால' கககு.

ஆலங்கானம் - தலையாலங்கானமென்னும் பெயரையுடையதோரூர்; இப்பொழுது தலையாலங்காடென்று வழங்கப்படுகின்றது; இதில் நெடுஞ்செழியன் இருபெருவேந்தரையும் ஐம்பெருவேளிரையும் பொருதுவென்றனன், 'ஆலங் கானத் தமர்கடந் தட்ட கால முன்ப' உரு.

ஆலங்குடி - ஓரூர், ருகக.

ஆலத்தூர் - ஓரூர், ருச, ருசு, சுக, உஉடு, ருஉச.

ஆலும் - ஒலிக்கும், 'மாறெழுந் தாலும்' கஉஅ.

ஆலை - யானைக்கூடம், 'அதுசேர்ந் தல்கிய அழுங்க லாலை' உஉo.

ஆவம் - அம்பறாத்தூணி, 'ஆவஞ்சேர்ந்த புறத்தை' கச.

ஆவியர்கோ - பேகனென்னும்வள்ளல், 'அதுமனெம் பரிசி லாவியர் கோவே' ௧௪௭.

ஆவுதி - ஆகுதி, 'ஆவுதி யருத்தியும்' ௯௯; யாகப்புகை, 'நெய்மலி யாவுதி' ௧௫.

ஆவூர் - ஓரூர், ௩௮, ௪0, ௪௮, ௧௬௬, ௯௭௭, ௧௭௮, ௧௯௬, ௨௬௧, ௩0௧, ௩௨௨.

ஆற்றல் - வலி, 'ஓம்பா தீயு மாற்ற லெங்கோ' ௨௨.

ஆற்றலை - வலியையுடையை, 'பேழ்வா யுழுவை பொறிக்கு மாற்றலை' ௩௩; 'வேண்டியது விளைக்குமாற்றலை' ௩௮; 'அரசுதலை பணிக்கு மாற்றலை' ௪௨.

ஆற்றார் - மாட்டார், 'ஆற்று ராயினும்' ௨௬; வலியில்லார், 'தார்தாங்குதலு மாற்றார்' ௯௩.

ஆற்றுதிர் - உதவுவீர், 'ஒருவீரொருவீர்க் காற்றுதிர்' ௫௮.

ஆறு - வழி, 'அறத்தாறு நுவலும் பூட்கை' ௯.

ஆன் - பெற்றம், 'ஆனிற்பரக்கும் யானை' ௫.

ஆன்பொருநை - ஆன்பொருந்தமென்னுமாறு; இது கருவூர்க்கருகில் ஓடுவது, 'தண்பொருநைப் புனற்பாயும், விண்பொருபுகழ் விறல்வஞ்சி' ௧௧; 'தண்ணான்பொருநை வெண்மணல்' ௩௬; 'வஞ்சிப் புறமதி லலைக்குங் கல்லென்பொருநை' ௩௮௭.

ஆன்று - அமைந்தேன், 'முயங்கலான்றிசின்யானே' ௪௫௧.

ஆனா - அமையாத, 'அமிழ்தட் டானாக் கமழ்குய் யடிசில்' ௧0; 'ஆனா வீகை' ௪௨.

ஆனாது - அமையாது, 'ஆனா, திருவும் புகழுமாகி' ௬.

ஆனிலை - கோலோகம், 'மேல தானிலையுலகத் தானும்' ௬.

## இ

இகழ்பு - இகழ்ந்து, 'இகழ் பாடுவோ ரெருத்த மடங்க' ௪0.

இகழுநர் - மதியாதபகைவர், 'இகழுநரிசையொடு மாய' ௨௧.

இகுத்த - சொரியப்பட்ட, 'இகுத்த கண்ணீர்' ௧௪௩.

இகுப்ப - அறைய, 'முரசுகடிப் பிகுப்பவும்' ௧௫௮.

இசை - கீர்த்தி, 'இசைப்புறனாகநீ யோம்பிய பொருளே' ௨௯.

இட்டிய - சிறிய.

இடாஅ - குத்தி, 'எயிறுபடை யாக வெயிற்கத விடாஅ' ௩.

இடுபு - இட்டு, 'புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுத்த' ௩௩.

இடும்பை - நோய், 'இடும்பைகொள் பருவரல்' ௧௭௪.

இடை - இடம், 'கருங்கல் லிடைதோறு' ௫; காலம், 'உடையோர் போல விடையின்று குறுகி' ௫௪; வழி, 'நீரில்ல நீளிடைய' ௩.

இடைக்காடு - ஓரூர், ௪௨.

இடைக்குன்றூர் - ஓரூர், ௭௬, ௭௭, ௭௮, ௭௯.

இணர் - பூங்கொத்து, 'மெல்லிணர்க் கண்ணி' ௨௪.

இதழ் - கண்ணிமை, 'நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கண்' ௧௬௪.

இப்பி - சிப்பி, 'முதிர்வா ரிப்பி' ௫௩.

இமயம் - இமயமலை, 'பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே' ௨; 'வடாஅது பனிபடு நெடுவரை' ௬; 'வரையளந் தறியாப் பொன்படு நெடுங்கோட், டிமயம்' ௩௯; 'வடதிசை யதுவே வான்றோ யிமயம்' ௧௩௨; 'மழையண் ணாப்ப நீடிய நெடுவரைக், கழைவள ரிமயம்' ௧௬௬; 'பொன்னுடை நெடுங்கோட் டிமயத் தன்ன' ௩௬௯.

இமிழும் - ஒலிக்கும், 'புள்ளின மிமிழும் புகழ்சால் விளைவயல்' ௧௫.

இயக்கன் - ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியனுடைய நண்பருள் ஒருவன், 'வெஞ்சின வியக்கனும்' ௭௧.

இயம்ப - ஒலிப்ப, 'கடிமனை யியம்ப' ௩௬.

இயல் - இயல்பு, 'ஆனியற் பார்ப்பன மாக்களும்' ௯; தன்மை, 'தன்னியல் வழாஅது' ௨௫.

இயலி - நடந்து, 'களிற்றி னியலி' ௭௯; 'கலவ மஞ்ஞையிற் காணவர வியலி' ௧௩௩.

இயலுதல் - இயற்றுதல், 'இயறேர்வளவ' ௭; செய்தல், 'பொலங்னியற்புனை தோட்டி' ௧௪.

இயற்கை - இயல்பு, 'இயற்கையல்லன செயற்கையிற் ரேன்றினும்' கூரு. தன்மை, 'ஐம்பெரும் பூதத்தியற்கை போல' உ.

இரங்க - வருந்த, 'வேங்கைமார்பனிரங்க' உக.

இரட்டும் - மாறியொலிக்கும், 'பமணியிரட்டும்......யானை' எஉ.

இரத்தி - இலந்தைமரம், 'இரத்தி நீடியவகன்றலைமன்றம்' கூச.

இரவல் - இரத்தல், 'இரவன்மாக்கள்' உச.

இரவு - இரா, 'எல்லையுமிரவுமெண்ணுய்' எ.

இரியல்போக்கும் - சாய்த்துக்கொடுக்கும், 'கறையடியானையிரியல்போக்கும்' கஙரு.

இரீஇய - இருத்திய, 'கோடிகடையிரீஇய' கஅ; 'இடர்ப்படுத்திரீஇய' எச.

இருக்கை - இருப்பிடம், 'பார்வலிருக்கை' கூ.

இரும் - இருமல், 'இருமிடைமிடைந்த சிலசொல்' உசகூ

இரும்பிசிராந்தை - பிசிராந்தையாரென்னும் புலவர், 'பெருங்கோக்கிள்ளி கேட்க விரும்பிசிராந்தையடியுறை யெனினே' கூஎ.

இருமருந்து - சோறும் தண்ணீரும், 'இருமருந்து விளைக்கு நன்னாடு' எ௦.

இருமை - கருமை, 'இரும்பிடித்தொழுதி' சச; பெருமை, 'அகலிருவிசும்பு' அ; 'இருநிலத்தன்ன' கச.

இல்லாகியர் - இல்லையாகுக, 'இமையந்த கேண்மையில்லாகியர்' கக௦; இல்லாகியரோ காலை மாலை' உகஉ.

இல்லி - துளை, 'இல்லிதூர்ந்த பொல்லாவறுமுலை' ககூச.

இலக்கம் - குறி, 'நிலைக்கொராஅ விலக்கம்போன்றன' ச.

இலங்கை - வில்லியாதனார், 'நெல்லமல் புறவி னிலங்கைகிழவோன், வில்லி யாதன்' கூஎக.

இலஞ்சி - மடு, 'கடுமுரண்முதலையநெடுநீரிலஞ்சி' கூஎ.

இலம் - வறுமை, 'இலம்படு புலவர்' கடு.

இலிற்றுதல் - சுரத்தல், 'குழவிக்கிலிற்றுமுலை' கூஅ.

இவ் - இவை, 'இவ்வே, பீலியணிந்து' கூரு.

இவர்தல் - படர்தல், 'சுரையிவர்மருங்கின்' கககூ.

இவுளி - குதிரை, 'அலங்குளைப்பரீஇயிவுளி' ச; 'வாஅய்ச்செலவிவுளி' ககஎ.

இழிசினன் - புலைமகன், 'கட்டினிணக்குமிழிசினன்' அஉ.

இழித்தன்று - அவமதித்தது, 'வியந்தன்று மிழிந்தன்றுமிலன்' எஎ.

இழிபிறப்பாளன் - புலையன், 'இழிபிறப்பாளன் கருங்கைசிவப்ப' கஎ௦.

இழுக்கி - தப்பி, 'மகிழ்நகையிழுக்கி' எக.

இழுது - நெய், 'குழிசிகவிழ்ந்திழுது மறப்ப' கூரு; நெய்யிழுது, 'இழுதினன்னவானிணக் கொழுங்குறை' கரு௦.

இழுமெனமுழங்க - இழுமென்னுமோசையை யுடைத்தாய்முழங்க, 'ஏமமுரசமிழுமெனமுழங்க' கூ.

இழை - ஆபரணம், 'சேயிழை கணவ' கூ; 'வாலிழை மடமங்கையர்' கக; நூலிழை, 'இழைவலந்த பஃறுன்னம்' ககூசா.

இறங்குதல் - வளைதல், 'இறங்கு கதிரலம்வருகழனி' கூஅ.

இறத்தி - போகின்றாய், 'புறக்கொடுத்திறத்தி' அ.

இறந்த-கடந்த, 'புலவரை யிறந்த புகழ்' உக.

இறந்தன்று - மிக்கது, 'வியப்பிறந் தன்றே' உகஎ.

இறீயர் - கெடுவதாக, 'இறீயரென் னுயிரென' உச௦

இறக்கல் - திறைகொடுத்தல், 'இறக்கல் வேண்டுந் திறையே' கூஎ.

இறுக்கும் - தங்கும், 'புலங்கெட விறுக்கும் வரம்பி ருனே' கரு; பண்ணும், 'தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்' கூ.

இறுத்த - தங்கிய, 'குன்றத் திறுத்த குரீஇயினம்' கூகூஅ, 'அம்புசென் றிறுத்த' கக.

இறும்பு - சிறுகாடு, 'தூங்கிரு ளிறும்பு' கஉரு.

இறை - உயர்ச்சி, 'ஏந்துகொடி யிறைப் புரிசை' கஎ; சந்தையுடையமுன்கை,

'வணங்கிறைப் பணைத்தோள்' ௯௨; தங்குதல், 'ஈர்க்குழாத்தோ டிறை கூர்ந்த' ௧௯௬; வீட்டின் இறப்பு, 'குறியிறைக் குரம்பை' ௧௨௯.

இறைகொள்ளும் - தங்கும், 'தேனிறை கொள்ளு மிரும்பல் யானை' ௧௭.

இறைஞ்சிய - தாழ்ந்த, 'குலையி றைஞ் சிய கோட் டாழை' ௧௭.

இறைஞ்சுக - வணங்குக, 'இறைஞ்சுக பெரும' ௬.

இன்மை - வறுமை, 'இன்மை தீர்த்தல் வன்மை யானே' ௯.

இன்னா - துன்பம், 'இன்னா வாகப் பிற ர்மண் கொண்டு' ௧௨.

இன்னீர் - இத்தன்மையையுடையீர், 'இன்னீ ராகலி னினியவு முளவோ' ௫௮.

இன்னேம் - இத்தன்மையையுடையேம், 'இன்னே மாயினேம்' ௯௬௧.

இனம் - கூட்டம், 'சுறவினத்தன்ன வா ளோர்' ௧௯; நிரை, 'வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி' ௧௫.

இனி - இப்பொழுது, ௫௨; ௧௧௯; 'இனிநினை ந் திரக்கமா கின்று' ௨௬௯.

இனிய - இனியவைகள், 'இனிய செய் தி' ௧௨.

இனைகூஉ - வருந்திக்கூப்பிடும்கூப்பீடு, 'வினைபுனை நல்லி லினைகூஉக் கேட் பவும்' ௬௬.

இனைப்ப - கெடுப்ப, 'வினைபுனை நல் லில் வெவ்வெரி யினைப்ப' ௨௯.

ஈ

ஈகை - கொடை, 'தண்டா வீகைத் தகைமாண் குடுமி' ௬; பொன், 'ஈகையங் கழற்கால்' ௯௮; வண்மை, 'ஓம்பா வீகை' ௮.

ஈகையரியவிழை - மங்கலியசூத்திரம், 'ஈகை யரிய விழையணி மகளிர்' ௧௨௭.

ஈண்டிய - திரண்ட, 'ஈண்டிய மழை யென மருளும் பல்தோல்' ௧௭.

ஈண்டுசெலல் - ஓங்கிச்செல்லுதல், 'ஈண் டுசெலன் மரபின் ........ ஞாயிறு' ௨௫.

ஈண்டுதல் - செறிதல், 'ஈண்டகன்கிடக் கை' ௧௧; விரைதல், 'ஈண்டுசெலற் கொண்மூ' ௧௯௧.

ஈத்த - வழங்கிய, 'செந்நீர்ப்பசும்பொ ன்வயிரியர்க்கீத்த' ௯.

ஈத்தனை - கொடுத்தாய், 'சாறுனீங்கவெ மக்கீத்தனையே' ௯௧.

ஈப - ஈவார், 'பிறர்க்கீவோர்தமக்கீப வென' ௧௯௬.

ஈமம் - பிணஞ்சுடுதற்கு அடுக்கும் விறக டுக்கு, 'கரிபுறவிறகினீமவொள்ளழ ல்' ௨௯௧.

ஈயும் - கொடுக்கும், 'ஓம்பாதீயுமாற்ற லெங்கோ' ௨௨.

ஈர்ப்பு - இழுத்தல், 'ஈர்ப்புடைக்கராஅ த்தன்னவென்னை' ௧0௪.

ஈரந்தூர் - ஓரூர்; இஃது ஈரந்தையெ னவும் வழங்கும், ௧௮0.

ஈரந்தை - ஈரந்தூர், 'ஈரந்தையோனே பாண்பசிப்பகைஞன்' ௧௮0.

ஈற்று - ஈனுதல், 'பெண்ணீற்றுற்றென' ௮௨.

ஈன்மர் - பெறுவார், 'ஈன்மரோவிவ்வு லகத்தானே' ௭௪.

உ

உகந்து-உயரப்பறந்து, 'பல்கனிநசைஇ யல்குவிசும்புகந்து' ௨0௯.

உகள - தாவ, 'வெள்ளுளைக் கலிமான் கவிகுளம்புகள' ௧௫.

உகுத்த - உதிர்த்த, 'பழனமஞ்ஞையுகு த்தபீலி' ௧௯.

உட்க - அஞ்ச, 'உடலுநருட்கவீங்கி' ௧௭.

உட்கு-அச்சம், 'உட்குவரவிளங்கி' ௫௮.

உட்கும் - அஞ்சும், 'வானுட்கும்வடி நீண்மதில்' ௧௮; 'ஒன்னருட்குந் துன்னருங்கடுந்திறல்' ௯௧.

உடலுதல் - பகைத்தல், 'உடலருந்துப் பு' ௨௫; உடல்சினம்' ௭௨.

உடலுநர் - மாறுபடுவோர், 'உடலுநரு ட்க' ௧௭.

உடற்றியோர் - சினப்பித்தவர், 'ஒவா து கூஉநின்னுடற்றியோர்நாடே' ௪

உடன்று - கோபித்து, 'உடன்றுநோக் கினன்' ௧௭; 'நீ, உடன்றுநோக்கும் வாய்' ௯௮; உடன்றுமேல்வந்த வம் பமள்ளர்' ௭௭.

உடுத்த - சூழப்பட்ட, 'அருங்குறும்பு டுத்தகானப்பேரெயில்' ௨௧.

உண்கும் - உண்பேம், 'உண்குமெந்தை நிற்காண்குவந்திசின்' ௧௨௫.

உண்டி - உணவு, 'உண்டிகொடுத்தோ ருயிர்கொடுத்தோரே' கஅ.
உண்மார் - உண்போர், 'புலனுழுதுண் மார்' சுரு; உண்ணவேண்டி, 'முந் துவிளையாணர் நாட்புதி துண்மார்' கசுஅ.
உண்மென - உண்ணுமினென்று, 'உண் மெனவிரக்கும் பெரும்பெயர்ச்சாத் தன்' கஎஅ.
உண்மை - உண்டாதல், 'தேய்தலுண் மையும் பெருகலுண்மையும்' உஎ.
உணர்த்திய - துயிலெழுப்ப; 'சேவலே னல் காப்போருணர்த்திய கூஉம்' உஅ.
உணர்ந்து - அறிந்து, 'முன்னமுகத்தி னுணர்ந்து' ரு.
உணவின்பிண்டம் - உடம்பு, 'உண்டி முதற்றேயுணவின்பிண்டம்' கஅ.
உம்பல் - வழித்தோன்றினேன், 'உர வோரும்பல்' கஅ.
உமணர் - உப்புவிற்பார், 'உமணர்வெ ரூஉந்துறை' அசு.
உய்த்த - செலுத்திய, 'நேமியுய்த்த' ரு.
உய்தல் - பிழைத்தல், 'உணாஅவறுங் கடும்புய்தல்வேண்டி' கஅக.
உய்தி - நீங்குதல், 'செய்திகொன்றோ ர்க்குய்தியில்லெனா' ருசு.
உய்ந்தன்று - பிழைத்தது, 'சிதைதலுய் ந்தன்று' உரு.
உயர்ந்திசினோர்-உயர்ந்தோர், 'உயர்ந்த வேட்டத்துயர்ந்திசினோர்க்கு' உகசு.
உயரிய - உயர்த்திய, 'ஏற்றுவலனுயரிய .........மணிமிடற்றோனும்' ருசு.
உயவல் - வருத்தம், 'உயவற்பாண'சுசு.
உயவு - வருத்தம், 'உயவரிய' ரு.
உயவும் - வருந்தும், 'அடிகளிறுயவுங் கொடிகொள்பாசறை' சுசு.
உயிர் - ஓசை, 'வள்ளுயிர்ச் சிறியாழ்' கருஅ.
உரவு - வலிமை, 'உரவுச்சினந்திருகிய' உரு.
உரவோர் - வலியோர், 'ஒருதாமாகிய உரவோர்' கஅ.
உரறிய - முழங்கிய, 'கனையெரியுரறிய மருங்கும்' உரு.
உரறுதல் - ஒலித்தல், 'உருமுரறுகருவி யொடு' கசுக.
உராய் - உலாவி, 'கதவெறியாச்சிவந்து ராய்' சு.

உரீஇய - உரிஞ்சிய, 'கழலுரீஇய திருந் தடி' எ.
உரு - தன் ஆணையாற்பிறரஞ்சும் உட் குடைமை, 'உருவும் புகழுமாகி, சு; 'உருகெழு ஞாயிறு, உரு; 'உரு கெழு முரசம்' ருo; வடிவு, 'பெண் ணுருவொருதிற னாகின்று' க; 'உவவு மதியுருவி னோங்கல்வெண்குடை' ரு.
உருப்ப - அழல, 'முலைபொலி யாக முருப்ப நூறி' உரு.
உரும் - இடி, 'பெருமலை விடரகத் துரு மெறிந் தாங்கு' ருஎ.
உறை - புகழ், 'உறைசெல முரசுவெள வி' உசு; 'உறைசாலந்துவஞ் சாத்த னும்' எக.
உறைஇ - புடைபெயர்ந்துலாவி, 'போ ர்க்குறைஇ' கூஎ.
உலகம் - தேசம், 'திங்கட்புத்தேடிரிதரு முலகத்து' உஎ.
உலம்வருவோர் - சுழல்வோர்; உலம்வ ரலும் அலம்வரல்போல்வதோ ருரிச் சொல், 'வாயாவன்கனிக் குலம்வரு வோரே' உoஎ.
உலைவு - தரித்திரம், 'உயங்குபடர் வரு த்தமு முலைவுநோக்கி' கருo.
உவல் - தழை, 'பாசுவலிட்ட புன்காற் பந்தர்' உசுஉ.
உவலை - தழை, 'பாசிலைத் தொடுத்த வுவலைக்கண்ணி' ருசு.
உவவு - உவாநாள், 'உவவுமதி' ரு.
உவித்த - அவித்த, 'சாந்தவிறகி னுவித் தபுன்கம்' கசுஅ.
உழக்கி - கலக்கி, 'அரசுபடவமருழக்கி' உசு.
உழக்கும் - வருந்தும் 'அருந்துயருழக்கு நின் றிருந்திழையரிவை' கசுசு.
உழிஞை - கொற்றான்; இது குடநாட் டார் வழக்கு, 'பொலங்குழையுழி ஞையொடு பொலியச்சூட்டி' ருo.
உழுபடை - கலப்பை, 'உழுபடை யூ ன்றுசான்மருங்கி னீன்றதன்பயனே' ருரு.
உழுவை - புலி, 'அளைச்செறி யுழுவை யிரைக்குவந்தன்ன' எஅ; 'பேழ்வா யுழுவையை' கருஉ.
உள்ளம் - ஊக்கம்.
உள்ளாற்றுக்கவலை - ஆற்றிடைக்குறை, 'உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல்' உகசு.

உள்ளி - நினைந்து, 'ஒருதிசை யொருவ னையுள்ளி' கஉக.
உளர - அசைப்ப, 'விரைவளியுளர' கஙூ.
உளருங்கூந்தல் - விரித்துவருமயிர், உகூ௦.
உளவாகியர் - உளவாகுக, 'இயைந்த வைக லுளவாகியரோ' ககூ௦.
உளை - தலையாட்டம், 'அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ' உ.
உளை - தலை, 'மிசையலங்குளைய பனை' உஉ.
உளைய - வெறுப்ப, 'இளைய னிவனென வுளையக்கூறி' எஉ.
உற்க - எரிந்துவீழ, 'திசையிரு நான்கு முற்க முற்கவும்' சக.
உற்கம் - எரிகொள்ளி, சக. (உற்கை)
உறந்தை - உறையூர், 'அறங்கெழு சோழ ருறந்தை யவையத்து' ஙக; 'அறந்துஞ் சுறந்தைப்பொருநனை' ருஅ; 'பிறங்குநிலை மாடத் துறந்தை யோனே' சாக; 'மாவண் டித்த னுறந்தை யன்ன வுரைசா னன்கலம்' ஙரு௨.
உறழ்தல் - மாறுபடுதல், 'உறழ்மணியா னுயர் மருப்பின' உஉ.
உறுற்க - உறுதொழிதல் வேண்டும், 'உள்ளடி முள்ளுறோவ வுறுற்கதில்' கஎக.
உறுதி - உற்றகாரியம், 'தாமறி குவர் தமக் குறுதி' சாக.
உறுவர் - எதிர்ந்தவர், 'துப்புறுவர் புறம் பெற்றிசினே' கக.
உறை - நீர்த்துளி, 'உறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே' ஙரு; 'கார்வா னின்னுறை' கசஎ; 'நீண்டுயர் வானத் துறையினும்' ககூஅ.
உறையுள் - உறைதல், 'தாங்கா வுறையு ணல்லூர்' உச; 'உயர்நிலை யுலகத் துறையு ளின்மை' ரு௦; 'உறையுண் முனியுமவன் செல்லு மூரே' கூசா.
உறையூர் - ஒரூர்; இது சோழர்களுடைய பழைய இராசதானி; இஃது உறந்தையென்றும் கோழியென்றும் வழங்கப்படும்; கஙு, உஎ, சரு, சஎ, எஅ, கஎ௦, உ௦உ, ஙஉக, ஙஉரு, ஙஙக.
உறையூர் ஏணிச்சேரி, கஙு
உறைவி - உறைகின்றவள், 'இன்னாதுறைவியரும்படர்களைமே' கசரு.
உன்னம் - உன்னமரம் 'உன்ன மரத்த துன்னருங் கவலை' ஙு.

## ஊ

ஊக்கம் - மேற்கோள், 'இடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப' அ.
ஊக்கார் - மேற்கொள்ளார், 'உடனுநரூக்கார்' கஉஉ.
ஊக்கும் - மேற்கொள்ளும், 'வானீர்க் கூக்கும்' கஎ.
ஊங்கணோர் - முன்னுள்ளோர், 'நின்னூங்கணோர் நினைப்பின்' ஙக.
ஊங்கு - முன், 'இன்றி னூங்கோ கேளலம்' எசா; 'முழவுத்தோ ளென்னையைக் காணூங்கே' அஅ; 'வென்வே லண்ணற் காணூங்கே - நின்னினும் புல்லியேம்' கசக.
ஊசி=உதீசி - வடக்கு, 'ஊசிமுன்னது' உஉகூ.
ஊதியம் - பயன், 'பேதைமை யல்லதூதிய மில்லென' உஅ; 'பெற்றதூதியம்' கருச.
ஊம் - ஊமை; இஃது எண்வகை எச்சத்துளொன்று, 'கூனுங் குறளு மூமுஞ் செவிடும்' உஅ.
ஊர்தி - ஏறப்படுவது, 'ஊர்தி வால்வெள்ளேறே' க.
ஊர்பு - ஊர்ந்து, 'கடலூர் பெழுதரு ஞாயிறு' ருக.
ஊரன் - மருதநிலமுடையோன், 'ஊரனென்கோ' சாகூ.
ஊழ் - முறைமை, 'ஊழிற்றுகநின் செய்கை' உகூ; 'ஊழ்மாறுபெயர' கஉரு.
ஊழி - வாழ்நாள், 'அன்ன வாக நின்னூழி' கஙரு.
ஊறு - புண், 'ஊறறியா மெய்யாக்கை யொடு' கசாஎ.
ஊன் - தசை, 'ஊன்சோற்றமலை' ஙஙு.
ஊன்றும் - சென்றுதங்கும், 'அகலிரு விசும்பி னூன்றும்' உஉஅ.

## எ

எஃகு - வேல்; 'ஒளிறிலைய வெஃகேந்தி' உசா.
எக்கர் - மணற்குன்று, 'நல்யாற் றெக்கரேறி' கஎஎ.
எக்கூர்=ஒக்கூர் - ஒரூர், உசஅ.
எடுப்பி - எழுப்பி, 'வைகுதுயி லெடுப்பி' உசாஎ.

எண்ணலை - எண்ணத்தையுடையை, 'நீயே பேரெண் ணலையே' கஙஅ.

எண்மை - எளிமை, 'இக்குடிப் பிறந் தோர்க் கெண்மை காணுமென' சஙு.

எதிர்ந்த - மாறுபட்ட, 'செய்வினைக்கெ திர்ந்த தெவ்வர்' சு.

எதிர்ந்து - ஏற்றுக்கொண்டு, 'புரவெதி ர்ந்து' ருச; 'போரெதிர்ந் தென்னை போர்க்களம் புகினே' அச; மாறுப ட்டு, 'கடுமான் கோதை துப்பெதிர் ந்தெழுந்த' ருச; 'போரெதிர்ந்து' அஎ.

எந்திரம் - பொறி, 'திங்களு நுழையா வெந்திரப் படுபுழை' கஎசா.

எந்தை - என்தலைவன், 'எந்தையொடு கிடந்தோரெம் புன்றலைப் புதல்வர்' கக.

எம்மனோர் - எங்கள், 'எம்மனோர்க்கொ ருதலை கைம்முற்றல' ருங.

எம்மோன் - எம்முடைய தலைவன், 'எம் மோன் ......... குறவர் பெருமகன்' கருஎ.

எய்த - அணுக, 'எய்த வந்தனம் யாம்' க0.

எய்ம்மான் - எய்ப்பன்றி, 'எயினர் தந்த வெய்ம்மா ணெறிதசை' கஎஎ.

எய்யாதாகின்று - அறியாததாயிற்று, 'கி ளந்த - லெய்யா தாகின்றே சிறு செந் நாவே' கசஅ.

எயில் - பாண்டியநாட்டு ஊர்களுளொ ன்று, 'மன்னெயி லாந்தையும்' எக; மதில், 'எயிற்கதவு' ங; 'ஆரெயில்பல தந்து' சு.

எயிற்றி - மறத்தி, 'கருங்க ணெயிற்றி' கருக.

எருக்கிய - அறைந்துகொண்ட, 'ஊழி னுருப்ப வெருக்கிய மகளிர்' உஙஎ.

எருத்தம் - கழுத்தம், 'இகழ்பாடுவோ ரெருத்தமடங்க' ச0.

எருத்து - கழுத்து, 'எருத்து வவ்விய புலிபோன்றன' ச.

எருவை - தலைவெளுத்து உடல் சிவந்தி ருக்கும்பருந்து; கழுகுமாம், 'விசும் பா டெருவை பசுந்தடி தடுப்ப' ஙச.

எல் - பகற்பொழுது, 'எல்லிடிப் படுத் த' கசா0; விளக்கம், 'எல்லுப்பட வி ட்ட சுடுதீ' கஙு.

எல்லரி - சல்லியென்னும் வாத்தியம், 'எல்லரி தொடுமின்' கருஉ.

எல்லை - பகல், 'எல்லையு மிரவு மெண் ணாய்' எ.

எவ்வி - ஒருவேள், 'மாவே ளெவ்வி - புனலம் புதவின் மிழலை' உச; இரும் பா ணொக்கற் றலைவன் பெரும்பூட் போரடு தானை யெவ்வி' உஙங.

எழில் - உயர்ச்சி, 'நெட்டெழின்மார்பு' கங; பெருமை, 'அறுமருப் பெழிற் கலை' உங.

எழிலிய - எழில்பெற்ற, 'அம்பகட்டெ ழிலிய செம்பொறி யாகத்து' சுஅ.

எழினி - ஒருவள்ளல், 'ஊரா தேந்திய குதிரைக் கூர்வேற் கூவிளங் கண் ணிக் கொடும்பூ ணெழினியும்' கருஅ; 'வையகம் புகழ்ந்த வயங்குவினை யொ ள்வாட் பொய்யா வெழினி' உங0; இவனை எழினி அதியமானென்றும் கூறுவர்.

எழு - கணையமரம், 'காப்புடைய வெழு முருக்கி' கச; 'எழுவுறழ் திணிதோ ள்' ஙக.

எள்ளிய - இகழ்ந்த, 'உள்ள மெள்ளிய மடவோன்' எங.

எறிச்சிலூர் - இது கோனாட்டுள்ள ஊர் களுளொன்று, ருச, சுக, கூஎ.

எறித்தல் - உறைத்தல், 'நாடுசுடு கமழ் புகை யெறித்த லானே' சு.

எறிதல் - அடித்தல், 'எறிகோ லஞ்சா வரவி னன்ன' அக.

எறிந்த - அறைந்த, 'விளங்குபொன் னறை நலங்கிளர் பலகை' கரு; க டைந்து செறிக்கப்பட்ட, 'யானை வா ன்மருப் பெறிந்த வெண்கடைக் கோ னிறை துலாம்' ஙக.

எறிந்து - வெட்டி, 'எறிந்துகளம் படுத் த வேந்துவாள்' கக.

எறியா - முறித்து, 'களிறே - கதவெறி யாச் சிவந்து' ச.

எறுழ்முன்பு - மிக்கவலி, 'தோல்பெய ரிய வெறுழ்முன்பு' எ.

என்குவை - என்று வினவுவாய், 'இவ ன்வா ரென்குவையாயின்' கங.

என்றூழ் - கோடை, 'வெண்கிடை - யென்றூழ் வாடுவறல்' எரு; 'வளம ழை மாறிய வென்றூழ்க்காலை' கஙுக.

என்னதூஉம் - சிறிதும், 'என்னதூஉங் கடிமரந் தடிதலோம்பு' ருஎ.

என்னை - என்னிறைவன், 'அணங்கருங் கடுந்திறலென்னை' எஅ; 'நிணையொ

டு வரூஉ மென்னைக்கு' உ௬உ.

எனவ - என்னுடையன சிலவார்த்தை, 'எனவ கேண்மதி' ௬௫.

## ஏ.

ஏணி - எல்லை, 'நளியிரு முந்நீ ரேணி யாக' ௬௫; 'முந்நீ ரேணி' க௬எ.

ஏத்தி - வாழ்த்தி, 'மூன்றுறை நுண்பல மணலினு மேத்தி' க௬௬.

ஏத்துகம் - புகழ்வோம், 'ஏத்துகம் பலவே' க0.

ஏதின்மாக்கள் - அயலோர், 'ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளாது' ௫அ.

ஏந்திய - ஓங்கிய, 'நிலனேந்திய விசும்பு' உ.

ஏமம் - காவல், 'எல்லா வுயிர்க்கு மேம மாகிய' க; 'ஏம முரச மிழுமென முழங்க', ௬.

ஏமாந்த - ஆசைப்பட்ட, 'அருந்தே மாந்த நெஞ்சம்' க0க.

ஏமாந்து - இன்புற்று, 'காமர் நெஞ்ச மேமாந் துவப்ப' க௬அ.

ஏமுற்று - இன்பமுற்று, 'ஏமுற்றுக் கழிந்த மள்ளர்க்கு' அ௪.

ஏய்ப்ப - ஒப்ப, 'அல்லிப் பாவை யாடுவனப் பேய்ப்ப' ௬௬.

ஏர்தல் - எழுதல், 'ஏர்தரு சுடரின்' க௫௫.

ஏறு - இடபம், 'ஊர்தி வால்வெள் ளேறே' க; இடி, 'அதிர்குர லேறொடு துளிசொரிந் தாங்கு' க௬0; எறிதல், 'பருந்தி னேறு குறித்து' ௪௬.

ஏறை - ஏறைக்கோன், 'பெருங்கனுடனெம் மேறைக்குத் தகுமே' க௫எ.

ஏனல் - தினை, 'ஏனல் காப்போர்' உஅ.

## ஐ.

ஐயவி - வெண்சிறுகடுகு, 'ஐயவி புகைப்பவும்' ௬அ.

ஐயூர் - ஒரூர், உக, ௫க, உஉஅ, ௬க௪.

ஐவனம் - மலைநெல், 'ஐவனம் வித்தி' க௫க.

## ஒ.

ஒக்கல் - சுற்றம், 'இல்லோரி னொக்கற் றலைவ' ௬௫.

ஒக்கலை - சுற்றத்தையுடையை, 'பெரும்புல் லென்ற விரும்பே ரொக்கலை' ௪க.

ஒக்கூர் - ஒரூர், உஎக.

ஒசிய - முறிய, 'இருதலை யொசிய வெற்றி' அ0.

ஒடியா - இடையறாத, 'ஒடியா முறையின்' உக.

ஒடுக்கம் - ஒடுங்கியநிலை, 'வல்லின் மறவ ரொடுக்கங் காணாய்' உ௫க.

ஒடுங்கா - மடியாத, 'ஒடுங்கா வுள்ளத்து' அ.

ஒண்மை - விளக்கம், 'ஒள்ளழல்' கக.

ஒத்தி - ஒப்பை, 'யாங்கன மொத்தியோ' அ.

ஒதுக்கு - இயங்குதல், 'ஒதுக்கின் றிணி மணற் புதுப்பூம் பள்ளி' ௬௬; நடை, 'தகைமெல் லொதுக்கின் வளைக்கை விறலி' க௬௫.

ஒதுங்கி - நடந்து, 'கோல்கா லாகக் குறும்பல் லொதுங்கி' க௫க.

ஒப்ப - தக, 'ஒப்ப நாடி' க0.

ஒய்யென - விரைய, 'ஐயவிப் புகையுந் தாங்கா தொய்யென' ௬அ.

ஒரா - தப்பாத, 'நிலைக்கொராஅ விலக்கம்' ௪.

ஒரீஇ - தப்பி, 'கூருகிர்ப் பருந்தி னேறு குறித்தொரீஇ' ௪௬; நீங்கி, 'சிறுமனை வாழ்க்கையி னொரீஇ' உ௬; 'பெருநல் யாணரி னொரீஇ' ௫உ; 'தென்புலங் காவலி னொரீஇ' எக.

ஒருசார் - ஒருபக்கம், 'ஒருசா ரருவி யார்ப்ப' க௫.

ஒல்கல் - தளர்தல், 'ஒல்க லுள்ள மொடு' க௬௫.

ஒல்லாய் - உடம்படாய், 'யாசறை யல்லது நீயொல் லாயே' ௬க.

ஒல்லான் - உடன்படான், 'ஈண்டவ ரடுதலு மொல்லான்' எஅ.

ஒல்லையூர் - ஒரூர்; இது பெருஞ்சாத்தனுடையது, 'முல்லையும் பூத்தியோ வொ னொல்லையூர் நாட்டே' உ௪உ.

ஒலிக்குந்து - தழைக்கும், உம் - உந்தாயிற்று, 'கழைக்கரும்பி னொலிக்குந்து' க௬எ.

ஒலித்தல் - தழைத்தல், 'ஒலிநெடும் பீலி' ௫0.

ஒலிபு - தழைத்து, 'தோடொலிபு நந்தி' கஉ0.

ஒலிமென்கூந்தல் - தழைத்த மெல்லிய கூந்தல், க௪௬.

ஒலியல் - தழைத்தல், 'ஒலியற் கண்ணி' உ0க.

ஒலியற்கண்ணி - தளிர்மாலை, உ0உ.
ஒலியன்மாலை - வளையமாலை, 'ஒலியன் மாலையொடு பொலியச் சூடி' எசு.
ஒழிய - சாக, 'ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழிய' உ.
ஒழுக - நடக்க, 'வையங் காவலர் வழிமொழிந் தொழுக' அ.
ஒழுகை - வண்டி, 'உப்போ யொழுகை' ககசு.
ஒளித்தி - ஒளிப்பாய், 'மலைமறைந் தொளித்தி' அ.
ஒளிர்வரூஉம் - விளங்கும், 'கண்ணொளிர் வரூஉங் கவின்சா பத்து' எ.
ஒளிறுதல் - விளங்குதல், 'ஒளிறுவாண் மன்னர்' களஎ.
ஒற்றி - சாய்த்து, 'திருந்தரை நோன் வெளில் வருந்த வொற்றி' சச.
ஒற்றிய - வீழ்த்த, 'புலிபார்த் தொற்றிய களிற்றினை பிழைப்பின்' உகஎ.
ஒறுத்தி - தண்டஞ்செய்வை, 'அத்தக வொறுத்தி' க0.
ஒன்றுது - பொருந்தாது, 'நிரயங் கொள்பவரோ டொன்றுது' ரு.
ஒன்றுபட்டு - ஒருபெற்றிப்பட்டு, 'ஒன்றுபட்டு வழிமொழிய' கஎ.
ஒன்னுதோர் - பகைவர், 'இன்னுய் பெருமநி னொன்னு தோர்க்கே' கஎ.
ஒன்னர் - பகைவர், 'ஒன்னர் நாடுசுடு கமழ்புகை' சு.

## ஓ.

ஓக்கிய - எடுக்கப்பட்ட, 'பொருநர்க் கோக்கிய வேலன்' சுக.
ஓங்கல் - உயர்தல், 'ஓங்கல் வெண்குடை' ரு.
ஓச்சி - எடுத்து, 'மதனுடை முழவுத் தோ ளோச்சி' ரு0.
ஓடை - யானை நெற்றிப்பட்டம், 'பொன்னோடைப் புகரணிநுதல்' ரு; 'ஒன்னார் யானை யோடைப்பொன் கொண்டு' கஉசு; 'நோன்பக டொளிதிக ழோடை பொலிய' கசுக.
ஓப்புநர் - ஓட்டுவோர், 'நெல்வினை கழனிப் படுபுள் ளோப்புநர்' உக.
ஓம்பா - பாதுகாவாத, 'ஓம்பா வீகை' அ.
ஓம்பாது - பாதுகாவாது, 'ஓம்பா தீயுமாற்ற லெங்கோ' உஉ; 'ஓம்பாது கடந்தட்டு' சு0.
ஓம்புற்ற - பாதுகாத்த, 'பிறரோம் புற்ற மன்னெயில்' சு0.
ஓய்தல் - செலுத்துதல், 'உப்போ யொழுகை' ககசு.
ஓர்க்கும் - செவிதாழ்த்துக் கேட்கும், 'இரும்புலிப் புகர்ப்போத் தோர்க்கும்' கருஎ.
ஓராங்கு - ஒருபெற்றிப்பட, 'ஓராங்கு மலைந்தன பெருமநின் களிறே' கசு.
ஓரி - ஒருவள்ளல், 'கொல்லி யாண்ட வல்வி லோரியும்' கருஅ; இவனை வல்விலோரியென்றுங்கூறுவர். தேன் முதிர்ந்தாற்பரக்கும் நீலநிறம்; முசுக்கலையுமாம், 'அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து - திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே' க0க.
ஓரியர் - சக்கரவாள சக்கரவர்த்திகள்; விச்சாதரரும் நாகருமென்பர், 'விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேரோரியர்' களரு.
ஓரை - மகளிர்விளையாட்டு, 'ஓரை யாயத் தொண்டொடி மகளிர்' களசு.
ஓவாது - ஒழியாது, 'ஓவாது கூஉம்' ச.

## க.

கங்கை - ஓராறு, 'மன்பதை யெல்லாஞ் சென்றுணக் கங்கைக், கரைபொரு மலிநீர் நிறைந்து தோன்றியாங்கு' கசுக.
கசடு-அழுக்கு, 'கசடுண்டு காட்சி'உகச.
கசிந்து - இன்புற்று, 'மூதிற் பெண்டிர் கசிந்தழ' கக.
கசிபு - இரங்கி, 'கசிபு கைதொழாஅ' உசு0.
கசிவு - இரக்கம், 'கண்பொறி போகிய கசிவோடு' கசுக; வியர்ப்பு, 'கசிவுற்றவென் பல்லிதழொடு' கருசு; 'பசித்தினத் திரங்கிய கசிவுடை யாக்கை' கசு0.
கஞல-நெருங்க, 'புதுமலர் கஞல'கசஎ.
கட்கும் - களையும், 'ஆம்பலொடு கட்கும்' சுக.
கட்சி - காடு, 'கட்சி மஞ்ஞையின்' சு0; சேக்கை, 'கட்சி காணுக் கடமா நல்லேறு' கருஎ; புகலிடம், 'கட்சி காணுக் கடமா நல்லேறு' உ0உ.
கடந்து - அழித்து, 'வெப்புடைய வரண்கடந்து' கக; எதிர்நின்றழித்து, 'ஓம்பாதுகடந்து' சு0; எதிர்நின்று,

'ஆலங் கானத் தமர்கடந்து' ௨௯; 'களம்புகு மல்லற் கடந்து' ௮௦; வஞ்சியாதெதிர்நின்று, 'கடந்தடு தானைச் சேர லாதனை' ௮.
கடம்பு - ஒருமரம், 'கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல்' ௨௯.
கடவன் - கடப்பாடுகளுடையன், 'கடவன் பாரி கைவண் மையே' ௧௦௬.
கடறு - சுரம், 'இருங்கடறு வளைஇய குன்றம்' ௧௪௦; மலைச்சாரல், 'கடறு மணிகிளர' ௨௦௨.
கடன் - கிரியை, 'அந்தி யந்தண ரருங் கட னிறுக்கும்' ௨; தென்புல வாழ் நர்க் கருங்கட னிறுக்கும்' ௯.
கடாம் - யானைமதம், 'கமழ்கடாத்து... ......யானை' ௩.
கடி-காவல், 'கடியுடை வியனகர்' ௯௫; விரைவு, 'எம்மம்பு கடிவிடுதும்' ௯; விளக்கம், 'அருங்கடிப் பெருங்காலை' ௧௬௬.
கடிந்து-போக்கி, 'கொடிதுகடிந்து' ௧௭.
கடிப்பு - முரசடிக்குங்குறுந்தடி, 'முரசுகடிப் பிகுப்பவும்' ௧௫௮.
கடுக்கும்-ஒக்கும், 'அவிரறல் கடுக்கும்' ௨௫.
கடுங்கண்ண - வன்கண்மையையுடைய, 'கடுங்கண்ண கொல்களிற்றால்' ௧௪.
கடுங்கள்-அழன்றகள், 'இன்கடுங் கள்ளினூழர்' ௮௦.
கடுப்ப - ஒப்ப, 'உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்' ௯௦.
கடும்பகல் - விளங்கியபகற்பொழுது.
கடும்பசி - மிக்கபசி, 'கடும்பசி கலக்கிய விடும்பைகூர் நெஞ்சமொடு' ௨௯௦.
கடும்பு - சுற்றம், 'சேர்ந்தவர்கடும்பார்த்தும்' ௨௨; 'உடும்புரித்தன்னவென் பெழுமருங்கிற்கடும்பின்' ௬௮.
கடுமான்கோதை - சேரமான்குட்டுவன் கோதை, 'கவிகைவண்மைக்கடுமான் கோதை' ௫௪.
கடுவளி - பெருங்காற்று, 'கடுவளிதொகுப்ப வீண்டிய' ௫௫.
கடைஇ - முடுகி, 'கூழுஞ்சோறுங் கடைஇ' ௧௬௦.
கடைஇய-செலுத்திய, 'களிறுகடைஇய தாள்' ௭.
கண் - அசைநிலை, 'மீன்கணற்று' ௧௦௩; கரும்பின்கண், 'ஆடுகட் கரும்பின் வெண்பூ' ௯௫.

கண்ட - மனத்தான் ஆராய்ந்தறியப்பட்ட, 'நீமெய்கண்ட தீமைகாணின்' ௧௦.
கண்டன்று - கண்டது, 'வாழக் கண்டன்று மிலமே' ௬௧.
கண்டிகும் - கண்டேம், 'மள்ளற்கண்டிகும்' ௨௫௧.
கண்டிசின் - கண்டேன், 'இனிது கண்டிசிற் பெரும' ௨௨.
கண்டீரக்கோன் - கண்டீரக்கோப்பெருநள்ளி, 'வண்புகழ்க் கண்டீரக்கோனாதலின்' ௧௫௧.
கண்டுயின்று - கண்மறைந்து, 'நூல்விரித்தன்ன கதுப்பினள் கண்டுயின்று' ௧௫௩.
கண்ணி - தலைமேற்சூடப்படுமாலை, 'கண்ணி கார்நறுங் கொன்றை' ௧; மாலை, 'மெல்லிணர்க்கண்ணி மிலைந்தமைந்தர்' ௨௪.
கண்ணுறை - மேலீடு, 'புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை யாக' ௬௧; மேலேதூவுவது, 'அடகின் கண்ணுறை யாக யாஞ்சில அரிசி வேண்டினே மாக' ௧௪௦.
கண்ணோடிய-இரங்கிய, 'கூற்றுக் கண்ணோடிய வெருவரு பறந்தலை' ௧௩.
கணிச்சி - ஓர் ஆயுதம்; குந்தாலியென்றும் மழுவென்றுஞ்சொல்லுவர்; 'மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்து' ௪௨; மழுவாயுதம், 'மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்' ௫௬; 'கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்' ௧௧௫.
கணை - அம்பு, 'எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்' ௧௯.
கதம் - சினம், 'கதநாய் வேட்டுவன்' ௯௯.
கதழும் - ஓடும், 'கடிய கதழு நெடுவரைப் படப்பை' ௨௦௨.
கதிர் - கிரணம், 'பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே' ௮; சுடர், 'தண்கதிர் மதியம்,' 'ஒண்கதிர் ஞாயிறு' ௬.
கதுஉம் -, கவரும், 'பூக்கதுஉ மினவாளை' ௧௮; 'சுடர்நிழற் கதுஉங் கடுமுரண் முதலை' ௯௭.
கந்தம் - தூணம், 'கலிகெழு கடவுள் கந்தங் கைவிட' ௫௨.
கந்தாரம் - மது, 'தெறிப்ப விளைந்த தீங்கந் தாரம்' ௨௫௮.

கந்து - கம்பம், 'கந்துமுனிந் துயிர்க்கும் யானை' கஎஅ; 'களிறு - கந்து சேர்பு நிலைஇ வழங்க' உஉ; தறி, 'நெடுநல் யானைக்குக் கந்தாற் றூவே' ருஎ; பறுக்கோடு, 'மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த நீள்கழன் மறவர்' கூகூ; 'நட்புக் கந்தாக' உகஎ.

கபிலர் - சங்கப்புலவருளொருவர்; இவர் அந்தணர்; 'புலனழுக் கற்ற வந்தணாள, னிரந்துசென் மாக்கட் கினியிட னின்றிப், பரந்திசை நிற்கப் பாடினன்' கஉசு; 'பொய்யா நாவிற் கபிலன் பாடிய, மையணி நெடுவரை' கஎச.

கம்பலை - ஆரவாரம், 'அழுவிளிக்கம்பலை' எ.

கமழ - பரக்க, 'வியலிடங் கமழ விவணிசை யுடையோர்க்கு' ருo.

கயம் - நீர்நிறைந்தபள்ளம், 'கயத்திட்ட வித்து' ககஎ.

கரக்கினும் - மறைக்கினும், 'தன்னுளடக்கிக் கரக்கினுங் கரக்கும்' க.

கரகம் - குண்டிகை, 'நீரற வறியாக் கரகத்து' க.

கரப்பு - மறைத்தல், 'கரப்பி லுள்ளமொடு' கூச.

கராம் - முதலை, 'ஈர்ப்புடைக் கராஅத் தன்ன வென்னை' கoச; முதலையுள் ஒருசாதி, 'கராஅங் கலித்த குண்டு கண் ணகழி' கூஎ.

கரிகால்வளவன் - ஒருசோழன், 'களியியல் யானைக் கரிகால் வளவ' சுசு.

கரு - கருப்பம், 'மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்' கூச; முட்டை, 'புறவுக் கருவன்ன புன்புல வரகு' கூச.

கரும்பனூர் - ஓரூர், கூஅச.

கருமை - வலிமை, 'கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி' க; 'கருங்கைக் கொல்லன்' உக.

கருவி - தொகுதி, 'கருவி வானம்' கருக.

கருவூர் - இது சேரர்களுடைய இராசதானிகளுளொன்று; இது வஞ்சியெனவும் வழங்கும், கக, ககூ, கூஉ, கூசு, எஅ, கசூஅ, உகக.

கலக்குற்றன்று - கலக்கமுற்றது, 'பெருங்கலக் குற்றன்றால்' சுக.

கலப்பை - மூட்டைகள்; யாழுமாம், 'காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை' உoசு.

கலம் - ஆபரணம், 'செய்வுறு நன்கலம்' சு; குப்பி, 'யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல்' ருசு.

கலவம் - மயிற்பீலி, 'கலவ மஞ்ஞையிற் காண்வர வியலி' கருரு.

கலாம் - போர், 'புலாற்களஞ் செய்த கலாஅத் தானையன்' சுக.

கலாவ - கலக்க, 'தண்சிதர் கலாவப் பெய்யினும்' கoரு.

கலி - ஓசை, 'கலிகெழு கடவுள்' ருஉ; செருக்கு, 'வெள்ளுளைக் கலிமான்' கரு; 'கலிமான் வளவ' கூக; 'கதழ் பரிய கலிமாவும்' ருரு; தழைத்தல், 'கலிகொள் யாணர் வெண்ணெலிப் பறந்தலை' சுசு.

கலிச்சும்மை - மிக்க ஆரவாரம், 'கலிச் சும்மை வியலாங்கண்' உஉ.

கலித்த - செருக்கிய, 'கராஅங் கலித்த' கூஎ; தழைத்த, 'தூவற் கலித்த தேம் பாய் புன்னை' உச; மிக்க, 'மானினங் கலித்த மலை' ககூஅ.

கலுழ்ந்து - கலங்கி, 'உண்கண் கலுழ்ந்து வார் அரிப்பனி' கசூச.

கவ்வை - எள்ளிளங்காய், 'கவ்வை கறுப்ப' கஉo.

கவசம் - மெய்புகு கருவி, 'புலிநிறக் கவசம்' ககூ.

கவர்பு - கவர்ந்து, 'அந்தண் காவிரி வந்துகவர் பூட்ட' கூரு; கவர்ந்து, 'விளைவயல் கவர்பூட்டி' கசூ.

கவலை - கவர்தவழி, 'துன்னருங் கவலை' கூ.

கவான் - மலைப்பக்கம், 'விறல்வரைக் கவான்' கருக.

கவிகண்ணோக்கு - கையாற்கவிக்கப்பட்ட கண்ணாற்குறித்துப்பார்க்கும்பார்வை, 'கவிகண் ணோக்கின்......... ஆடவர்' கூ.

கவிகுளம்பு - கவிந்தகுளம்பு, 'வெள்ளுளைக்கலிமான் கவிகுளம் புகள' கரு.

கவிகை - இடக்கவிந்தகை, 'கவிகை வண்மைக் கடுமான் கோதை' ருச.

கவினிய - அழகுபெற்ற, 'ஆசினி கவினிய பலவின்' கருஅ.

கவினை - ஒளியையுடையாய், 'செஞ்ஞாயிற்றுக் கவினை' ச.

கவுள் - கன்னம், 'களிறுகவு ளடுத்த வெறிகல்' ௩௦.
கவைஇய-அகத்திட்ட, 'ஆரங் கவைஇய மார்பே' ௧௯.
கவைமுள் - வேலமுள், 'கவைமுள்ளிற் புழையடைப்பவும்' ௯௮.
கழங்கு - கழற்சிக்காய், 'மகளிர் - பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்' ௩௬.
கழல் - ஒருகொடி, 'கழற்கனிவகுத்த' ௯௭; வீரகண்டை, 'தாள் - களங்கொளக் கழல்பறைந்தன' ௪.
கழனி - வயல், 'கழனி யுழவர்' ௧௩.
கழாத்தலை - கழாத்தலையாரென்னும் சங்கப்புலவர்; 'நம்போ லறிவி னுமருளொருவன், புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை, யிகழ்ந்ததன் பயனே' ௨௦௨.
கழால் - கழுவுதல், 'ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாலின்' ௯௪; களைதல், 'களைகால் கழாலின்' ௧௨௦.
கழி - காம்பு, 'தோல் கழியொடு பிடிசெறிப்பவும்' ௯௮.
கழிப்பி - முடித்து, 'மூவேழ்துறையு முறையுளி கழிப்பி' ௧௫௨.
கழிய - இறப்ப, 'மாணிழை மகளிர் நாணினர் கழிய' ௭௮.
கழியும் - இறக்கும், 'ஆடுநர் கழியுமிவ் வுலகத்து' ௨௯.
கழுமிய - கலந்த, 'ஆத்தாக் கழுமிய துகளன்' ௨௫௮.
கழுவாய் - போக்கும்வழி, 'வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென' ௩௪.
கழூஉ - கழுவி, 'கழூஉவிளங் காரம்' ௧௧.
களம் - போர்க்களம், 'ஈராம் பதின்மரும் பொருதுகளத் தொழிய' ௨; யாகசாலை, 'யூப நட்ட வியன்களம் பலகொல்' ௧௫.
களரி - களர்நிலம், 'கள்ளி போகிய களரியம் பறந்தலை' ௨௨௫.
களிறு - ஆண்பன்றி, 'களிறுமேல் கொள்ளவும்' ௪௧; யானை, 'கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்' ௯.
கறங்க - ஒலிப்ப, 'சிலைத்தார் முரசங் கறங்க' ௩௬.
கறி - மிளகுகொடி, 'கறிவள ரடுக்கத்து' ௧௬௮.
கறிக்கும் - தின்னும், 'மடப்பிணை...... வேளை வெண்பூக் கறிக்கும்' ௨௩.
கறுழ் - குதிரைமுகக்கருவி, 'மாவே,... கறுழ்பொருத செவ்வாயான்' ௪.
கறை - கறுப்பு, 'கறைமிட றணியலு மணிந்தன்று' ௧.
கறையடியானை - கறைபொருந்திய அடியினையுடைய யானை, ௩௮, ௧௩௫.
கன்மார் - கற்பார், 'இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்' ௧௬௯.
கனலி - சூரியன், 'அலங்குகதிர்க் கனலி நால்வயிற் றோன்றினும்' ௩௫; 'வெங்கதிர்க் கனலி துற்றவும்' ௪௧.
கனை - மிகுதி, 'கனையெரி யுரறிய மருங்கும்' ௨௩.

## கா.

கா - சோலை, 'கடிமரந் துளங்கிய காவும்' ௨௩; தோட்சுமை, ௧௦௩.
காண்கு - காண்பேன், 'காண்கு வந்திசிற் பெரும' ௧௭; எந்தைநிற் காண்குவந் திசினே' ௧௨௫.
காண்பு - காட்சி, 'கார்ப்பெய றலைஇய காண்பின் காலை' ௧௧௯.
காப்பினை - காவலையுடையை, 'விதுப்புற வறியா வேமக் காப்பினை' ௨௦.
காப்பு - காவல், 'காப்புடைய வெழுமுருக்கி' ௧௪.
காமர் - அழகு, 'காமர் - வண்ண மார்பு' ௧.
காய்தல் - விடாய்த்தல், 'காய்தலு முண்டக் கள்வெய் யோனே' ௨௫௮.
காய - காவிய = சுமந்த, 'சுவலழுந்தப் பலகாய' ௧௩௯.
காயம் - ஆகாயம், 'வறிதுநிலைஇய காயமும்' ௨௦, ௩௦.
கார் - கார்காலம், 'கண்ணி கார்நறுங் கொன்றை' ௧.
காரியாறு - ஓராறு, ௪௭.
காரெருக்கல் - புல்லென்றசுற்றம் 'காரெ ருக்கற் கடும்பசி யிரவல' ௧௪௧.
காரை - ஒருசெடி, 'முட்காற் காரை முதுபழன்' ௨௫௮.
காலம் - முடிவு, 'ஞாலங் காக்குங் கால முன்பின்' ௫௬.
காலமுன்ப - காலன்போலும் வலியையுடையோய், 'கால முன்பநிற் கண்டனென்' ௨௩.

காவல் - காக்கப்படுந்தேயம்; ஆகுபெயர், 'காவல் - குழவி கொள்பவரி னோம்புமதி' ரு.

காவலர் - காக்கும் அரசர், 'வையங் காவலர்' அ.

காவிரி - ஒருநதி, 'அந்தண் காவிரி வந்து கவர் பூட்ட' கூரு; 'மிக்குவரு மின் னீர்க் காவிரி' சஅ; 'நீயே தண்பு னற் காவிரிக் கிழவனை' ருஅ; 'புனி றுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச், சுரந்த காவிரி மரங்கொன் மலிநீர்' கூஅ; 'பொன்படு நெடுவரைப் புய லேறு சிலைப்பிற், பூவிரி புதுநீர்க் கா விரி புரக்குந், தண்புனற் படப்பை' கூகூ; 'கரைபொருது இரங்குபுன னெரிதரு மிகுபெருங் காவிரி, மல்ல னன்னாட்டு' கஎச; 'கோடை யாயி னுங் கோடி......காவிரி புரக்கு நன் னாடு' கூகூ; 'மூழங்குநீர்ப் படப் பைக் காவிரிக் கிழவன்' கூகக.

காவிரிப்பூம்பட்டினம் - சோழநாட்டில் கடற்கரைக்கண் இருந்ததோர் பழை யநகரம், ருஎ, ருஅ, கஎக, கூருகூ.

காழ் - கம்பம், 'வெளிறி னோன்காழ்ப் பணைநிலை முனைஇ' உகூ; காம்பு, 'கண்டிர னோன்காழ் திருத்தி' கரு; நாராசம், 'கயத்துவாழ் யாமை காழ் கோத் தன்ன' எ0; முத்துவடம், 'மார்பிற் பூண்ட வயங்குகா ழாரம்' கரு0; விதை, 'அணில்வரிக் கொடு ங்காய் வாள்போழ்ந் திட்ட - காழ்' உசகூ.

காழகம் - ஆடை, 'காழக நீப்பவும்' சக.

கான் - காடு, 'கானக நாடனை' ரு.

கானப்பேர் - கானையார்கோயில்; இது பல சிற்றரண்களையுடையதோர் பே ரரண்; இதன்தலைவன் வேங்கைமார் பன்; இவனைவென்று இதனைக்கைக் கொண்டான் உக்கிரப் பெருவழுதி, 'அருங்குழும் புடுத்த கானப் பேரெ யில், ........ வேங்கை மார்ப னிர ங்க' உக; கூகூஎ.

கானல் - கடற்கரை, 'நிலவுமணல் விய ன்கானல்' கஎ; 'கானற் கழியுப்பு முகந்து' கூ0.

## கி.

கிடப்பி - கிடத்தி, 'பசும்புற் பரப்பினர் கிடப்பி' கூகூ.

கிடை - நெட்டி, 'அறுகய மருங்கிற் சிறுகோல் வெண்கிடை' எரு.

கிண்கிணி - சதங்கை, 'கிண்கிணி களை ந்தகா லொண்கழ லொட்டு' எஎ.

கிணை - உடுக்கை, 'நுண்கோற் றகை த்த தெண்கண் மாக்கிணை' எ0; போ ர்ப்பறை, 'பாடின் றெண்கிணை கற ங்க' எகூ; தெண்கிணை கறங்கச்சென் றாண்டட் டனனே' எஅ.

கிணைமகள் - விறலி, 'கிணைமகட் கெளி தாற் பாடினள் வரினே' ககக.

கிணைமகன் - கிணையென்னும்பறையை யுடையவன், 'இரும்பறைக் கிணைம கன்' கூஅஅ.

கிணைவன் - கிணைமகன், 'கொன்வரல் வாழ்க்கைநின் கிணைவன்' கூஎக.

கிழவோன் - உரித்தாந்தன்மையையுடை யோன், 'விழுநீர் வேலி நாடுகிழ வோனே' கூ.

கிழித்த - தின்ற, 'குறுமுயற் கொழுஞ் சூடு கிழித்த வொக்கலொடு' கூச.

கிள்ளி - ஏறுதி திருக்கிள்ளி, 'கழல் புனை திருந்தடிக் கடுமான் கிள்ளி' கசூஎ. சோழன்.

கிள்ளிவளவன் - சோழன் குளமுற்றத் துத்துஞ்சிய கிள்ளிவளவன், 'உரு கெழு பசும்பூட் கிள்ளி வளவன்' சகூ; 'கிள்ளி வளவ னல்லிசை யுள்ளி' எ0.

கிளை - இனம், 'கிளைபுகலத் தலைக்கூடி யாங்கு' கஎ.

கிளைப்பின் - கிளறின், 'கேழ லுழுத வி ருஞ்சேறு கிளைப்பின்' கஎசு.

கிளையை - கிளைமையை யுடையோய், 'கிளையை மன்னெனங் கேள்வெய் யோ ற்கென' கசுசு.

## கீ.

கீழ்மடை - கடைமடை, 'அரிநர் கீழ் மடைக் கொண்ட வாளையும்' சஉ.

கீள்வது - உடைவது, 'சிறுகுளங் கீள் வது மாதோ' ககஅ.

## கு.

குச்சு - குச்சுப்புல், 'குச்சி னிரைத்த குரூஉமயிர் மோவாய்' உருஎ.

குட்டம் - ஆழம், 'இருமுந்நீர்க் குட்ட மும்' உ0; 'நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து' உசகூ.

குட்டுவன் - சோழியவேனாதி திருக்குட்டுவன், 'வலிதுஞ்சு தடக்கை வசுய் வாட் குட்டுவன்' ௬௬௬.
குடக்கு - மேற்கு, 'வெண்டலைப் புணரிக் குடகடல்' ௨; 'குடாஅது தொன்றுமுதிர் பௌவத்துக் குடக்கும்' ௬.
குடகமலை - மேற்றிசையின்கண்ணதோர் மலை, 'குடாஅது பொன்படு நெடுவரை' ௧௬௬.
குடர் - நரம்பு, 'அரிக்குட ரரியின் யாமை மிளிர' ௨௪௬.
குடவாயில் - ஓரூர், ௭௪, ௨௪௨.
குடவர் - குடநாட்டார், 'வரையா வீகைக் குடவர் கோவே' ௧௭.
குடாது - மேற்கின்கண்ணது, 'குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்' ௬.
குடிஞை - பேராந்தை, 'கடுந்துடி குடிஞையோ டிரட்டும்' ௧௭௦.
குடுமி - பாண்டியன் பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதி, 'குடுமிக் கோமாற் கண்டு நெடுநீர்ப் புற்கை நீத்தனம் வரற்கே' ௬௪.
குடுமித்து - முடியுடைத்து, 'கொண்ட குடுமித்தித் தண்பணை நாடே' ௯௨.
குடை - பனையோலையாற்செய்யப்படும் ஒருவகை உண்கலம், 'இரும்பனங் குடையின் மிசையும்' ௧௭௭.
குண்டு - ஆழம், 'குண்டகழி' ௧௪; 'குண்டுசுனை' ௧௧௬.
குணக்கு - கிழக்கு.
குணாது - கிழக்கின்கண்ணது, 'குணாது கரைபொரு தொடுகடற் குணக்கும்' ௬.
குணில் - முரசடிக்கும் குறுந்தடி, 'குணில்பாய் முரசி னிரங்கு மருவி' ௧௪௬.
குதிரை - ஒருமலை, 'ஊரா தேந்திய குதிரைக் கூர்வேற், கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியும்' ௧௫௮; 'ஊராக் குதிரைக் கிழவ' ௧௬௮.
குப்பை - திரட்சி, 'குப்பை நெல்லின் முத்தூறு தந்த' ௨௪.
குமணன் - ஒருகொடையாளி, 'குன்றியுங் கொள்வல் கூர்வேற் குமண' ௧௫௯; 'நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்' ௧௬௦; 'திருந்துவேற் குமணன்' ௧௬௩; 'நிற்படர்க் கிசினே நற்போர்க் குமண' ௧௬௪.

குமரி - கன்னியாறு, 'தெனாஅ துருகெழு குமரி' ௬; 'தென்குமரி' ௧௭; 'குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி' ௬௭.
குய் - தாளிப்பு, 'கமழ்குய் யடிசில்' ௧௦; 'சுவைக்கினி தாகிய குய்யுடை யடிசில்' ௧௨௭.
குரம்பை - சிறியமனை, 'குறியிறைக் குரம்பை' ௧௨௯.
குரல் - ஏழுநரம்பில் முதற்றானம், 'குரல்புணர்சீர்க் கொளைவல்பாண் மகனும்' ௧௧; கதிர், 'மரனணி பெருங்குர லனையன்' ௧௯௮; தோகை, 'பருஉக்குரற் சிறுதினை' ௧௬௮.
குரவை - குரவைக்கூத்து, 'சினமாந்தர் வெறிக்குரவை - யோத நீரிற் பெயர்பு பொங்க' ௨௨.
குரிசில் - தலைவன், 'பரிசிலர்க் கருங்கல நல்கவுங் குரிசில்' ௧௪.
குரீஇ - குருவி, 'குன்றத் திறுத்த குரீஇயினம்' ௧௧; 'தூக்கணங் குரீஇத் தூங்குகூ டேய்ப்ப' ௨௨௫.
குரும்பை - பனைநுங்கு, 'இரும்பனையின் குரும்பைநீரும்' ௨௪.
குரூஉ - கனம், 'பசுமட் குரூஉத்திரள் போல' ௩௨.
குலவு - வளைவு, 'குலவுச்சினைப் பூக்கொய்து' ௧௧.
குவவு - திரட்சி, 'ஓங்குமணற் குவவுத் தாழை' ௨௪.
குவளை - செங்கழுநீர், 'நீர்தரு மகளிர் குற்ற குவளையும்' ௪௨; 'குண்டுசுனைப் பூத்த குவளை' ௧௧௬. நீலம், 'தடவுவாய்க் கலித்தமாயிதழ்க் குவளை' ௧௦௫.
குவை - குவிவு, 'குவையிருங் கூந்தல்' ௨௫.
குவைஇய - திரண்ட, 'கூர்வேற் குவைஇய மொய்ம்பின்' ௧௧௮.
குழவி - குழந்தை, 'தாயி றூவாக் குழவி போல' ௪.
குழவிகொள்பவர் - குழந்தையை வளர்ப்போர், 'குழவி கொள்பவரி னோம்புமதி' ௫.
குழிசி - பானை, 'இருங்கட் குழிசி கவிழ்ந்திழுது மறப்ப' ௬௫.
குழீஇ - திரண்டு, 'கொண்மூ வேண்டு வயிற் குழீஇ' ௧௬௧.
குழை - தளிர், 'பொலங்குழை யுழிஞை' ௫௦.

குழைப்ப - தளிர்ப்ப, 'முளிபுற் கானங் குழைப்ப' கசு௦.
குளவி - மலைமல்லிகை, 'அடைமல்கு குளவி' கூ௦; 'கூதளங் கவினிய குளவி முன்றில்' கசுஅ.
குளிப்ப - மேல்விழுந்து உள்புக, 'கடற்படை குளிப்ப மண்டி' சு.
குற்ற - பறித்த, 'குற்ற குவளை' சஉ.
குற்றுதல் - குறுதல், 'குற்றுறு வுலக்கை' உஉ.
குறித்து - கருதி, 'நீரழுவ நிவப்புக் குறித்து' கச.
குறியெதிர்ப்பை - குறித்த எதிர்ப்பை, 'நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி' கசுகூ.
குறுகி - அணுகி, 'இடையின்று குறுகி' ருச.
குறுங்கோழியூர் - ஓரூர், கஎ, உ௦, உஉ.
குறுநணி - அணிமை, 'நம்முட் - குறுநணி காண்குவ தாக' உ௦க.
குறும்பறை - பேடை, 'உயர்நிலை மாடத்துக் குறும்பறை யசைஇ' சுஎ.
குறும்பு - அரண், 'குறும்பல் குறும்பிற் றதும்பவைகி' கஎஎ; குறும்பர், 'குறும்படைந்த வரண்கடந்தவர்' கூஎ. சிற்றரண், 'குரூஉக்களிற்றுக் குறும்புடைத்தலின்' கூஎ.
குறுமகள் - மனைவி, 'மெல்லியற் குறுமக ளுள்ளிச் செல்வல்' கககூ.
குறுமாக்கள் - சிறுபிள்ளைகள், 'ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாலின்' கூச.
குறை - முடிக்கப்படும்பொருள், 'பயக் குறை யில்லைத்தாம் வாழு நாளே' கஅஅ.
குன்றினும் - குறையினும், 'மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்' ருரு.
குன்று - சிறுமலை, 'குன்றுமலை காடுநாடு' கஎ; 'குன்றுதூ வெறியு மரவம் போல' உகக; பக்கமலை, 'அம்மலை காக்கு மணிநெடுங் குன்றின்' கரு௦.
குன்றூர் - ஓரூர், ருகூஅ.

## கூ.

கூஉம் - கூப்பிடும், 'ஓவாது கூஉநின் னுடற்றியோர் நாடே' சு; கூவும், 'சேவல்...... ஏனல் காப்போ ருணர்த்திய கூஉம்' உஅ.
கூகை - கோட்டான், 'வாய்வன் காக்கையுங் கூகையுங் கூடி' உருஅ.
கூடல் - மதுரை, 'தமிழ்கெழு கூடற் றண்கோல் வேந்தே' ருஅ.
கூடலூர் - ஓரூர், உஉக.
கூடு - நெற்கூடு, 'கூடு வியனகர்' கசஅ.
கூதளம் - கூதாளி, 'கூதளங் கவினிய குளவி முன்றில்' கசுஅ.
கூம்பு - பாய்மரம், 'கூம்பொடு மீசைப் பாய் களையாது' கூ௦.
கூர் - மிகுதி, 'கூரி லாண்மை' எரு.
கூழ் - சோறு, 'கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்' எ௦; பொருள், 'எத்தினர் தரூஉங் கூழே' கஉஉ.
கூழை - பின்படை, 'கூழைதார் கொண்டு' அஅ; மயிர், 'கொண்டைக் கூழைத் தண்டழைக் கடைசியர்' சுக.
கூளியர் - ஆறலைகள்வர், 'குரங்கன்ன புன் குறுங்கூளியர்' கஙசு; மறவர், 'கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்' உகூ.
கூற்றம் - நாட்டின் ஒருபாகம், உச; யமன், 'மருந்தில்கூற்றத்து' கூ.
கூற்று - யமன், 'உயிருண்ணுங் கூற்றுப் போன்றன' ச.

## கெ.

கெடிறு - ஒருவகைமீன், 'குரூஉக் கெடிற்ற குண்டகழி' கஅ.
கெடுவின்று - கெடுதலில்லாமல், 'கெடுவின்று.........அறநின்று நிலையிற்று' கூக.

## கே.

கேட்டிசின் - கேட்டேன், 'பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே' கரு௦.
கேட்பல் - கேட்பேன், 'கேட்ப லெந்தே' உஎ.
கேழ் - நிறம், 'சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ் - நூற்றித ழலரின்' உஎ.
கேளலம் - கேட்டறியோம், 'இன்றி னுங்கோ கேளலம்' எசு.
கேளிர் - சுற்றத்தார், 'வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தமரும்' சஉ.
கை - கோடாவியின்கை, 'நெடுங்கை நவியம்' ஙசு; செயல், 'மையன் மாலையாங் கையறு பிணைய' சுஎ.
கைம்முற்றல் - முடியா, 'கைம்முற் றல நின் புகழே' ருகூ.
கைம்மை - கைம்மைநோன்பு, 'ஒண்ணுதன் மகளிர் கைம்மை கூர' உரு.

கையறவு - மிடிமை, ‘பிறர்கை யறவு தானு ணுதலும்’ கருஎ.

கைவழி - யாழ், எப்பொழுதும் கையகத்திருத்தலால் இப்பெயர்பெற்றது; ‘கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி’ கசகூ.

## கொ.

கொட்கும் - சூழவரும், ‘காலுண வாகச் சுடரொடு கொட்கும்’ சரு.

கொடி - ஒழுங்கு, ‘ஆய் கரும்பின் கொடிக்கூரை’ உஉ; ‘மீன்சுடு புகையின் புலவுநாறு நெடுங்கொடி’ ருஉ; துவசம், ‘கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்’ கூ.

கொடிஞ்சி - தேர்மொட்டு, ‘நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்’ எஎ.

கொடிது - தீத்தொழில், ‘கொடிது கடிந்து கோறிருத்தி’ கஎ.

கொடுத்தோய் - வழங்கினோய், ‘பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்’ உ.

கொடுமை - வளைவு, ‘கொடுவிற் கூளியர்’ உரு; ‘கொடுங்கரைத் தெண்ணீர்ச் சிறுகுளம்’ ககஅ.

கொடுவரி - புலி, பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; ஆகுபெயருமாம், ‘கொடுவரி வழங்குங் கோடுயர் நெடுவரை’ கருரு.

கொண்கானம் - ஒருமலை, கருச, கருரு, கருசா.

கொண்டல் - கீழ்காற்று, ‘கொண்டன் மாமழை’ கூச.

கொண்டி - கொள்ளை, ‘கொண்டியும் பெரிதென’ எஅ; ‘தண்டமிழ் வரைப்பகங் கொண்டி யாக’ ககஅ; திறை, ‘கொண்டி வேண்டுவ னாயிற் கொள்கென’ ருக.

கொண்பெருங் கானத்துக் கிழவன் - கொண்கானங்கிழான், கருசா.

கொண்பெருங்கானம் - கொண்கானமென்னுமலை, ‘தண்பல விழிதரு மருவிக் கொண்பெருங் கானம் பாடலெனக் கெளிதே’ கருச; ‘விளங்குபுகழ்க் கொண்பெருங் கானத்துக் கிழவன்’ கருரு; ‘இரண்டுநன் குடைத்தே கொண்பெருங் கானம்’ கருசா.

கொண்மார் - கொள்ளல்வேண்டி, ‘ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்’ கரு.

கொண்மென - கொண்மியெனச்சொல்லி, ‘கொண்மெனச் - சுரத்திடை நல்கி யோனே’ கருஉ.

கொய்து - பறித்து, ‘குலவுச்சினைப் பூக்கொய்து’ கக.

கொல்லாது - கெடுக்காமல், ‘பிறரெனக் குணங்கொல்லாது’ ருரு.

கொல்லி - ஒருமலை, ‘ஓங்கு கொல்லியோ ரடுபொருந’ உஉ; ‘ஓங்கிருங் கொல்லிப் பொருநன்’ கருஉ; ‘பிறங்குமிசைக் கொல்லி யாண்ட வல்வில்லோரியும்’ கருஅ.

கொலைவன் - கொல்லுதலைச்செய்பவன், ‘கொலைவன் யார்கொலோ’ கருஉ.

கொழுநன் - தலைவன்.

கொழுமீன் - கொழுவியமீன், ‘கழனியுழவர் சூட்டொடு தொகுக்குங் - கொழுமீன்’ கூ.

கொள்கை - விரதம், ‘ஆன்ற கேள்வியடங்கிய கொள்கை’ உசா.

கொள்ளார் - பகைவர், ‘கொள்ளாரோட்டிய நள்ளியும்’ கருஅ.

கொளீஇ - கொளுத்தி, ‘பூநாற்றத்த புகைகொளீஇ’ கச; ஓங்குமலைப் பெருவிற் பாம்பு நாண் கொளீஇ’ ருரு; பெய்து, ‘புனற்குருதி யுலைக் கொளீஇ’ உசா.

கொளை - பாட்டு, ‘கொளைவல்பாண் மகனும்’ கக.

கொற்றம் - வெற்றி, ‘பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே’ உக.

கொற்றன் - பிட்டங்கொற்றன், ‘கைவள் ளீகைக் கடுமான் கொற்ற’ கசஅ; ‘திருந்துவேற் கொற்றன்’ கஎக.

கொன்றோர் - சிதைத்தோர், ‘ஒருவன் - செய்தி கொன்றோர்க்கு’ கூச.

## கோ.

கோ - அரசன், ‘ஆற்றலெங்கோ’ உஉ.

கோடாது - வளையாமல், ‘நமரெனக் கோல்கோடாது’ ருரு.

கோடியர் - கூத்தர், ‘விழவிற் கோடியர் நீர்மை போல’ உகூ.

கோடு - கொம்பு, ‘நுதிமழுங்கிய வெண்கோட்டான்’ ச. சிகரம், ‘பொற்கோட் டிமயமும்’ உ. பக்கம், ‘கோ

டுதிரன் கொண்மூ' ௩௫. புடை, 'கோடிய ரடுப்பு' கசுச. யாழின் ஓருறுப்பு, 'கருங்கோட்டுச் சீறியாழ்' கஉஎ; கசரு.

கோடை - கடிய நெடுவேட்டுவன்மலை, 'வெள்வீ வேலிக் கோடைப் பொரு ந' உ0௫.

கோதை - சேரமான் கோக்கோதை மார்பன், 'கோதை மார்பிற் கோதை யானும்' சஅ; 'யாங்கன மொழிகோ வோங்குவாட் கோதையை' சக. சேரன், 'மாவள் ளீகைக் கோதையு ம்' கஎ௨. மாலை, 'கோதை மார்பிற் கோதை யானும்' சஅ.

கோயில் - அரண்மனை, ௩௬.

கோல் - கோற்றொழில், 'வார்கோல் ......குறுந்தொடி மகளிர்' ௩௬.

கோவல் - கோவலூர்.

கோவலூர் - இது பெண்ணையாற்றின் கரையின் கண்ணதோர் நகரம்; இதன் தலைவர் மலையமான் திருமுடிக்காரி முதலியோர், இஃது ஒரு காலத்து அதியமான் நெடுமானஞ்சியால் வெல்லப்பட்டது; கோவலெனவும் வழங்கும், 'மூரண்மிகு கோவலூர் நூறி நின், அரணடு திகிரி யேந்திய தோளே' கக.

கோவூர் - ஓரூர், ௩க.

கோழி - உறையூர், 'கோழி - யுயர்நிலை மாடத்து' சுஎ; 'கோழி யோனே கோப்பெருஞ் சோழன்' உகஉ.

கோள் - குலை, 'செழுங்கோள் வாழை' கசுஅ.

கோளி - பூவாது காய்க்கு மரம், 'முழு முத லொருலைந்த கோளி யாலத்து' ௫அ.

கோனாடு - இது சோழநாட்டின் உள் நாடுகளுளொன்று, ௫ச.

## கௌ.

கௌரியர்-பாண்டியர், 'தவிரா வீகைக் கௌரியர் மருக' ௩.

## சா.

சாஅய் - மெலிந்து, 'நல்கா மையி னைவ ரச் சாஅய்' கசுசு.

சாகாடு - உருள், 'அச்சுடைச் சாகாட் டாரம்' உருசு. சகடம்-வண்டி, 'ஆ ரைச் சாகாட் டாழ்ச்சி யோக்கும்' ௯0; 'பண்டச் சாகாட் டாழ்ச்சி சொலிய' ௯0; 'காவற் சாகா டுகைப்போன்' கஅ௫; 'அச்சுடைச் சாகாட் டாரம் பொருந்திய - சிறுவெண் பல்லி' உருசு.

சாத்தன் - ஒல்லையூர்கிழார்மகன் பெருஞ் சாத்தன், 'வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை, முல்லையும் பூத்தியோவவ வொல்லையூர் நாட்டே' உசஉ; பாண்டியன் கீரஞ்சாத்தன், 'உண்மென விரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்' கஎஅ.

சாந்து - சந்தனம், 'பொலங்கழற்காற் புலர்சாந்தின்' ௩.

சாபம் - வில், 'சாப நோன்ஞாண்' கச; 'குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி' ௭0.

சாயலர் - இளைப்பையுடையர், 'உழையோர் தன்னினும் பெருஞ்சா யலரே' உசுஉ.

சாயா - இளையாத, 'மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயா' ௩.

சாயின்று - சாய்ந்தது, 'சாயின் றென்ப வாஅய் கோயில்' கஉஎ.

சார்வு - புகலிடம், 'உறுநர் செல்சார் வாகி' உ0௫.

சாறு - விழா, 'சாறுகொண்ட களம் போல' உஉ; 'சாறுதலைக் கொண்டெனப்' அஉ.

சான்ற - அமைந்த, 'பாடல் சான்ற வி றல்வேந்தனும்' கக.

சான்றோர்-நற்குணங்களாலமைந்தோர், 'சான்றோர் செய்த நன்றுண் டாயின்' ௩ச.

## சி.

சிதடன் - குருடன், 'துஞ்சுபுலி யிடறிய சிதடன் போல' ௭௩.

சிதடு - குருடு; இஃது எண்வகையெச்சத்துள் ஒன்று, 'சிறப்பில் சிதடு முறுப்பில் பிண்டமும்' உஅ.

சிதர் - துளி, 'தண்சிதர் கலாவப் பெய்யினும்' க0௫.

சிதலை - கறையான், 'நுண்பல் சிதலை யரிதுமுயன் றெடுத்த - செம்புற்று' ௫க.

சிதார் - சீரை, 'வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்' சுக; 'கூருகிர்ப் பருந்தி னிருஞ்சிற கன்ன - பாறிய சிதாரேன்' கடு0.

சிதைய - அற, 'புலிநிறக் கவசம் பூம் பொறி சிதைய' ௧௬; சிதற, 'தண்ணுன் பொருகை வெண்மணற் சிதைய' ௩௬.
சிமை - மலயுச்சி, 'ஆடுகழை நரலுஞ் சேட்சிமை' ௧௨௦.
சிலம்பு - மலை, 'குவியில்பாய் முரசினிரங்கு மருவி-நளியிருஞ் சிலம்பு' ௧௭௩.
சிலை - வில், 'சிலைத்தாரகலம்' ௬௧.
சிலைக்கும் - கொட்டும், 'வலிதுரந்து சிலைக்கும் வன்கட் கடுந்துடி' ௧௭௦.
சிலைத்து - ஒலித்து, 'சிலைத்தெழுந்து' ௭௮.
சிவந்து - கோபித்து, 'கதவெறியாச் சிவந்துராஅய்' ௪.
சிற்றஸாயம் - அசையமென்னும் நகரத்தின் ஒருபாகம், ௨௦௨.
சிறந்த - மிகுந்த, 'சிறந்த சீர்கெழுகொடியும்' கீ; 'சிறந்த - நான்மறை முனிவர்' ௬.
சிறந்தன்று - கனத்தது, 'சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே' ௭௫.
சிறப்பு - செல்வம், 'தகைப்பெருஞ் சிறப்பிற் குடிமிக் கோமான்' ௬௪; தலைமை, 'வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி' ௧௫; 'உரைசால் சிறப்பிற் புகழ்சான் மாற' ௫௭; 'உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்' ௭௨.
சிறுகுடி - பண்ணனூர், 'கைவள் ளீகைப் பண்ணன் சிறுகுடி' ௭௦.
சிறுபதம் - தண்ணீர், 'கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்' ௭௪.
சிறுபேராளர் - சிறியபெரிய ஆண்மையையுடையோர், 'நெடுமொழி மறந்த சிறுபேராளர்' ௧௭௮.
சிறை - அரண், 'நீர்மிகிற் சிறையு மில்லை' ௫௧; காவல், 'வீங்குசிறை வியலருப்பம்' ௧௭; சிறகு, 'இருந்துசிறை வளைவாய்ப் பருந்து' ௩.
சினவின் - கொதித்தெழுமாயின், 'இருஞ் முண்டோ ஞாயிறு சினவின்' ௬௦.
சினை - மரக்கிளை, 'குலவுச்சினைப் பூக்கொய்து' ௧௧.
சினைஇ - கோபித்து, 'அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ' ௨; 'மடங்கலிற் சினைஇ' ௭௧.
சினைஇயோர் - சினப்பித்தோர், 'வளவநிற் சினைஇயோர் நாடே' ௭௪.

## சீ.

சீக்கும் - தாக்கும், 'மந்தி சீக்கு மணங்குடை முன்றில்' ௨௪௭.
சீர் - அளவு, 'விரிசீர்த் - தெரிகோல்' ௬. தலைமை, 'விழுச்சீர் - ஓடாப் பூட்கை' ௧௨௬; 'தண்குரவைச் சீர்தூங்குந்து' ௨௪. தாளம், 'பறைச்சீர் தூங்க' ௬௨. நன்மை, 'சீருடைய விழைபெற் றிசினே' ௧௧. பெருமை, 'சீர்கெழு கொடியு மவ்வே றென்ப' ௧.
சீர்த்தி - மிகுபுகழ், 'அருஞ்சீர்த்திப் பெருங்கணுறை' ௧௫.
சீரை - துலாம், 'சீரை புக்க வரையா வீகை யுரவோன்' ௪௩.

## சு.

சுட்டின் - குறிப்பின், 'தொன்னிலக் கிழமை சுட்டின்' ௩௨.
சுடர் - ஒளி, 'தெறுசுடர் ஒண்கதிர் ஞாயிறு' ௬. சூரியன், 'சுடர் சுட்ட சுரத்தேறி' ௧௩௬.
சும்மை - ஆரவாரம், 'கலிச்சும்மை வியலாங்கண்' ௨௨.
சுரம் - அரியவழி, 'நெடிய வென்னாது சுரம்பல கடந்து' ௪௭.
சுருக்கி - கட்டி, 'நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கி' ௬௪.
சுருக்கினெம் - கட்டினேம், 'சுருக்கினெங் கலப்பை' ௨௦௬.
சுவல் - தோள், 'சுவலழுந்தப் பலகாய' ௧௩௧; 'சுவற்பூண் ஞாண்மிசைப் பொலிய' ௧௬௬. மேட்டுநிலம், 'வேங்கைச் செஞ்சுவல்' ௧௨௦.
சுவைக்க - உண்ண, 'சுவைக்கினி தாகிய குய்யுடை யடிசில்' ௧௨௭.
சுற்றம் - கிளைகள், 'நகைப்புறச் சுற்றம்' ௨௧.
சுறவு - ஒருமீன், 'சுறவினத் தன்ன வாளோர்' ௧௩.

## சூ.

சூட்டிய - நடாத்திய, 'நீரக விருக்கையாழி சூட்டிய' ௧௬. பரப்பிய, 'நிலவரை சூட்டிய நீணெடுந் தானை' ௨௨௮.
சூடு - சூட்டிறைச்சி, 'குறுமுயற் கொழுஞ்சூடு' ௩௪. நெற்சூடு, 'பீலி - கழனி யுழவர் சூட்டொடு தொகுக்கும்' ௧௩.

சூர் - சூரபன்மா, 'சூர்நவை முருகன்' ௨௩.

சூர்ப்பு - வளைந்தகடகம், 'சுடர்விடு பசும்பூட் சூர்ப்பமை முன்கை' ௧௫௩.

சூல் - கருப்பம், இளம்பிடி யொருசூற் பத்தீ னும்மோ' ௧௩௦.

சூழ்ச்சி - உசாவுதல், 'போற்றார்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்' ௨.

## செ.

செக்கர் - செந்நிறம், 'செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றோன்ற' ௧௬.

செங்கோலை - செங்கோலையுடையை, 'அறந்துஞ்சுஞ் செங்கோலையே' ௨௦.

செத்து - அறிந்து, 'முழவின் - பாடின் றெண்கண் கனிசெத்து' ௧௨௮.

செதுக்கண் - ஒளிமழுங்கினகண், 'பீதுக்கண் மாக்கள் செதுக்க ணார' ௨௬௧.

செந்தில் - திருச்செந்தூர், 'வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில், நெடுவேணிலைஇய காமர் வியன்றுறை' ௫௫.

செம்பியன் - சோழன், 'சினங்கெழு தானைச் செம்பியன் மருக' ௩௭.

செம்பியர் - சோழர், 'சேண்விளங்கு சிறப்பிற் செம்பியர் மருகன்' ௨௨௮.

செம்மல் - தலைமை, 'தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்குஞ் செம்மல்' ௪௩; நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே' ௪௭.

செம்மலை - தலைமையையுடையாய், 'எமக்கும் பிறர்க்குஞ் செம்மலை யாகலின்' ௧௬௬.

செம்மற்று-தலைமையையுடையது, 'செம்மற் றம்மநின் வெம்முனை யிருக்கை' ௩௩.

செம்மீன் - அங்காரகன்; திருவாதிரையுமாம்; 'செம்மீ னிமைக்கு மாக விசும்பின்' ௬௦.

செம்மை - நேர்மை, 'செந்தொடை பிழையா வன்க ணாடவர்' ௩.

செய் - செய்கை, 'பெருஞ்செய் யாடவர்' ௧௩௩.

செய்தி - செய்கை, 'குடிப்பொரு ளன்றுநுஞ் செய்தி' ௪௫. செய்ந்நன்றி, 'செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென' ௩௪. செய்வை, 'இனிய செய்திநின் னார்வலர் முகத்தே' ௧௨.

செய்திமோ - செய்வாயாக, 'அறஞ்செய்திமோ வருள்வெய் யோய்' ௧௪௫.

செய்ம்மே - செய்வாயாக, 'வேட்டது செய்ம்மே' ௪௬.

செயற்கை - தொழில்; 'இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்' ௩௫.

செயிர் - குற்றம், 'செயிர்தீர் கற்பிற் சேயிழை' ௩.

செயிர்த்தன்று - வெகுண்டது, 'செற்றன் றாயினுஞ் செயிர்த்தன் றாயினும்' ௨௨௬.

செரீஇ - செருகி, 'மிசையலங் குளைய பனைப்போழ் செரீஇ' ௨௨.

செரு - சண்டை, 'செருமிகு சேஎய்' ௧௪.

செருக்கிய - களித்த, 'நிணந்தின்று செருக்கிய நெருப்புத்தலை நெடுவேல்' ௨௦௦.

செல்ல - பரக்க, 'உரைசெல முரசு வௌவி' ௨௬.

செல்லாமோ - போவேமல்லேமோ, 'செல்லா மோதில் சில்வளை விறலி' ௬௪.

செல்வக்கடுங்கோவாழியாதன் - சேரமான்சிக்கற்பள்ளித்துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதன், 'செருமிகு நோன்றாட் செல்வக்கடுங்கோ, வாழியாத னென்றுந் தெவ்வர்' ௩௮௭.

செல்வை - செல்வமுடையாய், 'செல்வை யாயிற் செல்வை யாகுவை' ௭௦.

செலல் - செல்லுதல், 'வீங்குசெலன் மண்டிலம்' ௮

செலவு - வீதி, 'செஞ்ஞா யிற்றுச் செலவும்' ௩௦.

செலியர் - தணிக, 'செலிய ரத்தைநின் வெகுளி' ௬.

செலீயர் - போவதாக, 'படாஅச் செலீயர்நின் பகைவர் நாளே' ௨௪.

செவ்வழி - இரங்கற்பண், 'சீறியாழ் செவ்வழி பண்ணி' ௧௪௪, ௧௪௭. மாலைப்பண், 'கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி' ௧௪௯.

செவ்வானம் - செக்கர்வானம், 'செவ்வானத்து வனப்புப் போன்றன' ௪.

செவ்வியோர் - நடுவுநிலைமையையுடையோர், 'செவ்வியோர்க் களித்தலும்' ௨௯.

செவிசெஞ்சேவல் - கழுகின் சேவல், 'கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த செவிசெஞ் சேவலும்' ௨௩௮.

செழியன் - பாண்டியன்; 'வென்வேற் செழிய' ௧௯; 'சிதைதலுய்ந் தன்றே நின்வேற் செழிய' ௨௫.
செற்றன்று - கறுவுகொண்டது, 'செற் றன் றாயினுஞ் செயிர்த்தன் றாயினும்' ௨௨௬.
செற்றும் - சென்றுசெறியும், 'ஆழற் புற றத் துமெம்பிற் செற்றும்' ௧௫௨.
செறல் - வெகுட்சி, 'செறனோக்கின் ......களிறு' ௧௫.
செறிவினை - அடக்கத்தையுடையாய், 'அறிவறி வாகாச் செறிவினை யாகி' ௩௦.
செறு - வயல், 'மலங்குமிளிர் செறுவில்' ௬௧; 'நூறுசெறு வாயினும்' ௧௮௪.
செறுக்கும் - அடைக்கும், 'மீனிற் செ றுக்கும்' ௭.
செறுத்த - அடக்கிய, 'செறுத்த செய் யுள்' ௫௩.
செறுவர் - பகைவர், 'செறுவர் நோக் கியகண்' ௧௦௦.
சென்மே - செல்வாயாக, 'தேர்வே ளாயைக் காணிய சென்மே' ௧௩௩.
சென்னி - சோழன், ௨௦௩. தலை, 'இ றைஞ்சுக பெருமநின் சென்னி சிற ந்த, நான்மறை முனிவ ரேந்துகை யெதிரே' ௬.

## சே.

சேக்கும் - உறங்கும், 'கயலார் நாரை போரிற் சேக்கும்' ௨௪; 'பொய்கை நாரை போரிற் சேக்கும்' ௨௦௯.
சேக்கை - கட்டில், 'நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை' ௫௦.
சேண் - நெடுந்தூரம், 'சேண்விளங் கும் புகழ்' ௧௦; 'சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு' ௧௭௪. நெடுநாள், 'திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி'௨.
சேட்சென்னி - சோழன் நலங்கிள்ளி யின்பெயர், 'சேட்சென்னி நலங்கி ள்ளி' ௨௭; 'சேட்சென்னி நலங்கிள் ளி கேட்குவன் கொல்லென' ௨௨௫.
சேப்ப - தங்க, 'கான மஞ்ஞை கண னொடு சேப்ப' ௧௨௭.
சேய்-முருகக்கடவுள், 'செருமிகுசேஎய்' ௧௪.
சேர்ப்பன் - நெய்தனிலமுடையவன், 'பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்ப னெ ன்கோ' ௪௯.
சேர்ப்பு-கடற்கரை, 'பிறங்குநீர்ச் சேர் ப்பினும் புள்ளொருங் கெழுமே' ௪௯.
சேர்பு - பொருந்தி, 'மழகளிறு கந்து சேர்பு நிலைஇவழங்க' ௨௨.
சேர்மின் - அடையும், 'நும்மரண் சேர் மின்' ௯.
சேறு - செறிவு, 'தலையோர் நுங்கின் றீஞ்சேறு மிசைய' ௨௨௫.
சேறும் - செல்லுதும், 'சேறும் வாழி யோ பெரும்பெயர்ப் பறம்பே' ௧௧௩.

## சொ.

சொலிய - களையவேண்டி, 'புறவி னல் லல் சொலிய' ௩௯; 'பண்டைச் சா காட் டாழ்ச்சி சொலிய' ௬௦.
சொன்றி - சோறு, 'புண்பூல வரகின் சொன்றியொடு பெறூஉம்' ௧௯௭.

## சோ.

சோரும் - வடியும், 'அயறுசோரு மிருஞ் சென்னிய' ௨௨.

## ஞ.

ஞமலி-நாய், 'தொடர்ப்படு ஞமலியின்' ௭௪.
ஞமன் - சமன், யமன், 'தெரிகோன் ஞமன்ன்போல' ௬.

## ஞா.

ஞாண் - நாண், 'சாப் நோன்ஞாண்' ௧௪; 'ஓங்குமலைப் பெருவிற் பாம்பு ஞாண் கொளீஇ' ௫௫.
ஞாயில் - மதிற்சூட்டு, 'மீன்பூத் தன்ன வுருவ ஞாயில்' ௨௧.
ஞாயிறு - சூரியன், 'கின்கடற் பிறந்த ஞாயிறு' ௨; 'செஞ்ஞா யிற்றுக் கவி னை' ௪; 'ஒண்கதிர், ஞாயிறு' ௬.
ஞான்ற - வீழ்ந்த, 'பட்ட மாரி ஞான்ற ஞாயிற்று' ௮௨.

## ஞி.

ஞிமிறு - தேனீ, 'வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாம்' ௯௩.

## ஞெ.

ஞெமல-பரக்க, 'வரிமணன் ஞெமல' ௯௦.
ஞெலிதல் - கடைதல், 'தான்ஞெலி தீயின் விரைவினன் சுட்டு' ௧௫௦.
ஞெலிதீ - கடைந்துகொள்ளப்பட்டதீ, 'கானவர் பொத்திய ஞெலிதீ விளக் கத்து' ௨௪௭.
ஞெள்ளல் - தெரு, 'கடுந்தேர் கழித்த ஞெள்ளல்' ௧௫.

## த.

தகடு - புறவிதழ், 'மாத்தகட் டொள்வீ தாய துறுகல்' உ0உ.
தகடூர் - ஒரூர், ௫0.
தகரம் - ஒருமரம், 'தகரத் தண்ணிழற் பிணையொடு வதியும்' கருஉ.
தகவு - தகுதி, 'காணுத்தக வுடைத்தே' கூசு.
தகுதி - தக்கசெய்கை, 'தகுதி கேளினி மிகுதி யாள' கஅ.
தகை - அழகு, 'தகைமாண் வழுதி'௫க. கூறுபாடு, 'வான்றுடைக்குந் தகைய போல' கூஅ. தகுதி, 'தகைமாண் குடுமி' சு.
தகைத்த - கட்டப்பட்ட, 'நுண்கோற் றகைத்த தெண்கண் மாக்கிணை' கூ0.
தகைத்தல் - சுற்றுதல், 'தகைத்தார்' சுக.
தங்கால் - திருத்தங்காலென்னுமோரூர், கூஉசு.
தசும்பு - குடம், 'துணைபுண ராயமொடு தசும்புடன் றொலைச்சி' உஉச. மிடா, 'தயிர்கொடு வந்த தசும்பு' கூகூ.
தஞ்சம் - எளியது, 'முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்' எரு. எளியேன், 'யானோ தஞ்சம்' கூச.
தட்கும் - தளையாநிற்கும், 'ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே' ககரு.
தட்டை - கிளிகடிகருவி, 'புனவர் தட்டை புடைப்பின்' சக.
தட்டோர்-தடைப்படச்செய்தோர், 'தட்டோ ரம்ம விவட்டட் டோரே' [தன்-பகுதி]. கஅ.
தட்ப - தடுப்ப, 'புள்ளிடை தட்ப' கஉச.
தட - பெருமை, 'தாடோய் தடக்கை' கச.
தடவரல் - வளைவு, 'தடவரல் கொண்ட தகைமெல் லொதுக்கின்' கருடு.
தடவு - ஓமகுண்டம், 'வடபான் முனிவன் றடவினுட் டோன்றி' உ0க. சுனை, 'தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை' க0௫. பெருமை, 'தடவு நிலைப்பலவு' கச0; 'தடவுச்சினைப் பல்பழம்' கககூ.
தடி - ஊன்றடி, 'என்பொடு தடிபடு வழியெல்லா மெமக்கீயு மன்னே' உகூ௫. தசை, 'புலவுநாற்றத்த பைந்தடி' கச.
தடியும் - வெட்டும், 'கடிமரந் தடியு மோசை' கூசு.
தண்டம் - தண்டனை, 'தண்டமுந் தணிதி' க0.
தண்டா - தணியாத, 'தண்டா வீகை' சு.
தண்மை - குளிர்ச்சி, 'தண்பொருனைப் புனற்பாயும்' கக; மென்மை, 'தண் குரவை' உச.
தண்ணுமை - முழவு, 'விசியுறு தண்ணுமை' அக.
தணிதி - தணிவை, 'தண்டமுந் தணிதி' க0.
ததும்ப - நிரம்ப, 'ததும்ப லைவதி' கஎஎ. மிகவொலிப்ப, 'ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப' ககூச.
ததைய - சிதற, 'அருஞ்சமந் ததைய நூறி' கூரு; 'அருஞ்சமந் ததையத் தாக்கி' கஉசு.
தந்து - கொண்டு, 'ஆரெயில் பலதந்து' சு.
தப்பிய - பிழைத்த, 'பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்' கூச.
தபுதி - அழிவு, 'புறவின் றபுதியஞ்சி' சுகூ.
தம்மென - தாருமென, 'இன்னுந் தம்மென வெம்மனோ ரிரப்பின்' உ0கூ.
தமர் - தனக்குச்சிறந்தோர், 'தமர்தற் றப்பி னதுநோன் றல்லும்' க௫எ.
தமித்து - தனித்து, 'நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே' கஅச.
தரீஇய - தரவேண்டி, 'ஆர்கலியாணர்த் தரீஇயகால் வீழ்த்து' உ0௫.
தரூஉந்து - தரும், 'எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து' உச.
தரூஉம் - தரும், 'பொருபடை தரூஉங் கொற்றமும்' கூ௫.
தலை - இடம், 'பெருங்கை யானையிரும் பிடர்த்தலை யிருந்து' கூ.
தலைஇய - தலைப்பட்ட, 'வளிதலைஇய தீயும்' உ; பெய்துமாறிய, 'கார்ப்பெய றலைஇய' கககூ.
தலைக்கை - முதற்கை, 'தலைக்கை தரூஉந்து' உச.
தலைக்கொண்ட - தன்னிடத்தேகொண்ட, 'நிலந்தலைக் கொண்ட......ஈரைம் பதின்மரும்' உ.
தலைக்கொண்டென - தொடங்கிற்றாக, 'சாறுதலைக் கொண்டென' அஉ.

தலைப்பாடு - நேர்படுதல், 'தலைப்பாடன்றவ னீகை' ௭௦.
தலைப்போகன்மையின் - முடிவுபோகாமையின், 'தலைப்போ கன்மையிற் சிறுவழி மடங்கி' ௨௨௩.
தலைமயங்கிய - கைகலந்த, 'தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து' ௧௯.
தலையாலங்கானம் - தலையாலங் காடென்னுமூர், 'தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து' ௧௯; இதன் வரலாற்றை, 'ஆலங்கானம்' என்பதிற் காண்க.
தவல் - இறந்துபடுதல், 'அவல மறுசுழி மறுகலிற் றவலே நன்று' ௨௩௮.
தவழ - பரக்க, 'எரிதவழ' ௩௮.
தவிரா - ஒழியாத, 'தவிரா வீகை, ௩.
தழீஇ - தழுவி, 'நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇ' ௯௩. அணைத்துக்கொண்டு, 'ஒருபுடைத் தழீஇ' ௧௩௫.
தழீஇய - அணைத்துக்கொண்ட, 'சிறுமறி தழீஇய தெருநடை மடப்பிணை' ௨௩.
தழும்பனூர் - ஓரூர், 'பாண்சேரி வாய்மொழித் தழும்பனூ ரன்ன' ௩௪௮.
தழை - மகளிரணியும் ஒருவகையுடை; இதுமலராலும் தளிராலும் செய்யப்படுவது, ௧௧௬, ௨௪௮.
தள்ளாதோர் - தளையாதவர், 'தள்ளாதோரிவட் டள்ளா தோரே' ௧௮.
தளம்பு - சேறுகுத்தி, 'மலங்குமிளிர் செறுவிற் றளம்புதடிந் திட்ட பழனவாளை' ௬௧.

## தா.

தா - வலி, 'தாவி னன்பொன்' ௧௫௨.
தாக்கி - வெட்டி, 'அருஞ்சமந்ததையத் தாக்கி' ௧௨௬.
தாங்க - பிடிக்க, 'முன்புதுரந்து சமந் தாங்கவும்' ௧௪.
தாங்கி - தடுத்து, 'வருதார் தாங்கி' ௬௨. பொறுத்து.
தாங்கிய - தடுத்த, 'எழூஉத் தாங்கிய கதவு' ௯௭.
தாயம் - உரிமை, 'மலர்தாயத்து' ௧௭; 'முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்' ௭௩.
தார் - மாலை, 'வண்ண மார்பிற் றாருங் கொன்றை' ௧; 'சிலைத்தார் மார்பு' ௧௦; 'சிலைத்தா ரகலம்' ௯௧. முன்படை, 'ஒண்படைக் கடுந்தார் முன்பு தலைக் கொண்மார்' ௧௫; 'வருதார் தாங்கி' ௬௨.
தாரம் - பலபண்டம், 'கடற்பஃ றாரத் த நாடுகிழ வோயே' ௩௦.
தாலம் - உண்கலம், 'பெருந்தோ டாலம் பூசன் மேவர' ௧௨௦.
தாலி - ஐம்படைத்தாலி; இஃது இளமைப்பருவத்திற் கழுத்திலணியும் ஒருவகை அணி; 'தாலி களைந்தன்று மிலனே' ௭௭.
தாழை - தெங்கு, 'குலையிறைஞ்சிய கோட்டாழை' ௧௭.
தாள் - முயற்சி, 'தாளிற் றந்து' ௧௮; மதனுடை நோன்றாள்' ௩௫; 'தாளிற் கொள்ளலிர்' ௧௦௧.
தானை - சேனை, 'நிலவரை சூட்டிய நீணெடுந் தானை' ௨௨௮.

## தி.

திகழ்தல் - விளங்குதல், 'மீன்றிகழ் விசும்பு' ௨௫.
திங்கள் - சந்திரன், 'பன்மீ னாப்பட் டிங்கள் போலவும்' ௧௩. மாதம், 'திங்கள் வலித்த காலன் ஞோனே' ௮௭.
திணிந்த - செறிந்த, 'மண்டிணிந்த நிலனும்' ௨.
திணை - குடி, 'ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த - வாளின் வாழ்நர்' ௨௪; 'வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து' ௨௭; விழுத்திணைப் பிறந்த - விசைமேந் தோன்றல்' ௧௫௧.
தித்தன் - ஒரு சோழன், 'போரருந் தித்தன் காண்கதில்' ௮௦; 'மாவண் டித்தன் வெண்ணெல் வேலியுறந்தை யன்ன' ௩௫௨; 'சிறுகண் யானைப் பெறலருந் தித்தன்' ௩௩௫.
திமிரி - திமிர்ந்து, 'எச்சி லீர்ங்கை விற்புறந் திமிரி' ௨௫௮.
திமில் - மீன்படகு, 'திண்டிமில் வன்பரதவர்' ௨௪; 'முந்நீர் நாப்பட் டிமிற் சுடர் போல' ௬௦.
திரங்கி - உலர்ந்து, 'ஒளிறுவாண் மன்னரொண்சுடர் நெடுநகர் - வெளிறு கண் போகப் பன்னாட் டிரங்கி' ௧௭௭.
திரங்கிய - உலர்ந்த, 'பசிதினத் திரங்கிய கசிவுடை யாக்கை' ௧௬௦.
திரியினும் - வேறுபடினும், 'நால்வேத நெறிதிரியினும்' ௨.

திரியீர் - வேறுபடீர், 'உடனிலை திரியீ ராயின்' ௫௮.

திருகி - முறுகி, 'விசும்புதீப் பிறப்பத் திருகி' ௩௭.

திருகிய - முறுகிய, 'சினந்திருகிய' ௨௫.

திருத்தி - செவ்விதாக்கி, 'கொடிது கடிந்து கோறிருத்தி' ௧௭.

திருவில் - இந்திரவில், 'திருவி லல்லது கொலைவி லறியார்' ௨0.

திரைக்கும் - சுருட்டும், 'நிலந்திரைக் குங் கடற்றனை' ௯௭.

தில்லை - ஒருமரம், 'தில்லை யன்ன புல்லென் சடையோன்' ௨௫௨.

திளைப்ப - விளையாடாநிற்க, 'இளையர் திளைப்ப' ௨௫௩.

திறத்தல் - திறத்தல் செய்வாயாக, 'அறவை யாயி னினதெனத் திறத்தல்' ௪௪.

திறம் - கூறுபாடு, 'நிற்றிறஞ் சிறக்க' ௬. பக்கம், 'பெண்ணுரு வொருதிற னாகின்று' ௧.

திறல் - வலி, 'துன்னருந் திறல்' ௩; 'துன்னருங் கடுந்திறல்' ௩௯.

திறவோர் - கூறுபாடறிவோர், 'திறவோர் - காட்சியிற் றெளிந்தனம்' ௧௯௨.

தின்மென - திண்மினென, 'இரும்பேரொக்கலொடு தின்மெனத் தருதலின்' ௧௫0.

## தீ.

தீஞ்சாறு - இனியசாறு, 'பூங்கரும்பின் றீஞ்சாறும்' ௨௪.

தீஞ்சுளை - இனியசுளை, 'தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே' ௧0௯.

தீட்டி - கோதி, 'கூந்த றீட்டி' ௬௨.

தீது - குற்றம், 'தீதுமருங் கறுமார்' ௯௩.

தீநீர் - இனியஇளநீர், 'குவவுத்தாழைத் தீநீரோடு' ௨௪.

தீமை - கொடுமை, 'நீமெய் கண்ட தீமை காணின்' ௧0.

தீர்தல் - அறுதல், 'செயிர்தீர் கற்பு' ௩.

தீர்ந்தன்று - தீர்ந்தது, 'புரைதீர்ந் தன்றது' ௪௨.

## து.

துகிர் - பவழம், 'பொன்னுந் துகிரு முத்தும்' ௨௧௮.

துஞ்சாய் - மடியாய், 'துஞ்சாய் மாறே' ௨௨.

துஞ்சுதல் - தங்குதல், 'புலிதுஞ்சு வியன்புலம்' ௫௪.

துஞ்சும் - தங்கும், 'அறந்துஞ்சுஞ் செங்கோலையே' ௨0. தூங்கும், 'முத்தீ விளக்கிற் றுஞ்சும்' ௨.

துடைக்கும் - தடவும், 'வான்றுடைக் குந் தகையபோல' ௩௮.

துணி - துண்டம், 'வெளிற்றுப் பனந் துணி' ௩௫.

துணியல் - தடி, 'பழன வாளைப் பரூஉக்கட் டுணியல்' ௬௧.

துணிவு - தெளிவு, 'துன்னல் போகிய துணிவி னோனென' ௨௩; 'துணிவி லோரே' ௨௧௪.

துப்பு - வலி, 'துப்புறுவர்' ௧௧; 'கடுமான் கோதை துப்பெதிர்ந் தெழுந்த' ௫௪.

துமிந்து - துணிந்து, 'தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து' ௭௯.

துமிய - துணிய, 'அணங்குடை யரவி னருந்தலை துமிய' ௨௧௧.

துய் - பஞ்சு, 'துய்த்தலை மந்தியை' ௧௫௮.

துயின்மடிதல் - உறங்குதல், 'துயின்மடிந் தன்னே' ௧௭௬.

துரந்து - செலுத்தி, 'முன்பு துரந்து' ௧௪.

துரப்ப - செலுத்த, 'ஊக்கந் துரப்ப' ௮.

துவ்வாள் - உண்ணாள், 'துவ்வா ளாகிய வென்வெய் யோளும்' ௧௫௯.

துவராபதி - இது பழையவேளிர்களின் நகரம்; இருங்கோவேளுடையது; துவரையெனவும் வழங்கும். 'உவராவீகைத் துவரை யாண்டு, நாற்பத்தொன்பது வழிமுறை வந்த, வேளிருள் வேளே' ௨0௧; இது துவாரஸமுத்திரமென்று இப்பொழுது வழங்கப்படுகின்றது. 'அகத்தியனார் ... துவராபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல்வழிக்கண் அரசர்பதினெண்மரையும் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையுங்கொண்டுபோந்து காடுகெடுத்து நாடாக்கி' எனத் தொல்காப்பியப்பாயிரவுரையிலும், 'மலயமாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன்கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்க்கும்' என அகத்திணையியல் ௩௨-ம் சூத்திரவுரையிலும் நச்சினார்க்கினியர் எழுதியிருத்தல்காண்க.

துவரை - துவராபதி, ௨௦௧.
துவை - உணவின்விசேடம், 'ஊன்றுவை - கறிசோறுண்டு' ௧௪; 'அட்டான் றானைக் கொழுந்துவை யூன்சோறு' ௧௧௯.
துவைத்து - ஒலித்து, 'துவைத்தம்பிற் றுளைதோன்றுவ' ௪.
துழந்த - துழாவிய, 'துடுப்பிற் றுழந்த' ௨௬.
துழந்து - துழாவி, 'இட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்தும்' ௧௮௮.
துழவும் - சூழ்வரும், 'மாதிரந் துழவுங்- கவலை நெஞ்சத்து' ௧௭௪.
துளங்கல்செல்லாது - தளராது, 'தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல்செல் லாது' ௫௮.
துளங்கிய - நிலைகலங்கிய, 'கடிமரந் துளங்கிய காவும்' ௨௯.
துளங்கின - தளர்ந்தன, 'குடைதுளங்கினவே' ௬௨.
துளங்குதல் - அசைதல், 'துளங்கியலாற் பணையெருத்தின' ௧௫.
துறுகல் - பொற்றைக்கல், 'மாத்தகட்டொள்வீ தாய துறுகல்' ௨௦௨.
துறையூர் - ஓரூர், 'தண்புனல் வாயிற் றுறையூர் முன்றுறை, நுண்பல மணலினும்' ௧௩௬.
துன்னம் - தையல், 'இழைவலந்த பஃறுன்னத்து' ௧௩௬.
துன்னல் - அணுகுதல், 'துன்னல் போகிய' ௨௯.

## தூ.

தூஉய் - தூவி, 'உயர்பலி தூஉய்' ௧௪௯.
தூங்க - ஆட, 'பறைச்சீர் தூங்க' ௬௨.
தூங்குதல் - செறிதல், 'தூங்கிருளிறும்பில்' ௧௨௬.
தூங்குந்து - ஆடும், 'தண்குரவைச் சீர் தூங்குந்து' ௨௪.
தூம்பு - துளை, 'தூம்புடைத் தடக்கை' ௧௩.
தூவல் - துவலை, 'தூவற் கலித்த தேம்பாய் புன்னை' ௨௪.
தூவாத - உண்ணாத, 'தூவாக் குழவி போல' ௪.

## தெ.

தெரிகோல் - பொருள்களை ஆராயும் துலாக்கோல், 'தெரிகோன் ஞமன்ன் - போல' ௬.
தெரியல் - மாலை, 'பாசிலைத் தெரியல்' ௨௯; 'பொலனறுந் தெரியல்' ௨௩; 'ஆர்புனைதெரியல்' ௮௨.
தெவ்வர் - பகைவர், 'செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர்' ௬.
தெவ்விர் - பகைவிர், 'களம்புகலோம்புமின்றெவ்விர்' ௮௭.
தெவிட்டும் - அசையிடும், 'வன்கலை தெவிட்டும்' ௧௬௧.
தெற்றி - திண்ணை, 'இலங்குவளை மகளிர் தெற்றி யாடும்' ௫௯; வேதிகை, 'குறுந்தொடி மகளிர் - பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்' ௯௬.
தெறல் - அழித்தல், 'வலியுந் தெறலு மளியு முடையோய்' ௨; வெம்மை, 'செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது' ௨௦.
தெறிக்கும் - துள்ளும், 'தாவுபு தெறிக்கு மான்மேல்' ௨௫௩.
தெறித்தல் - துள்ளல், 'தெறிநடை மடப்பிணை' ௨௯.
தெறிப்ப - முற்ற, 'தெறிப்ப விளைந்த தீங்கந் தாரம்' ௨௫௮.
தெறுகதிர் - சுடுகின்றகதிர், 'தெறுகதிர்க் கனலி' ௪௯.
தெறுதல் - சுடுதல், 'தெறுசுட - ரொண் கதிர் ஞாயிறு' ௧௫. தண்டஞ்செய்தல், 'கொடியோர்த் தெறுதலும்' ௨௩.
தெறுவர - வெகுட்சிதோன்ற, 'தெறுவர விருபாற் படுக்குநின் வாய்வாள்' ௫௦.
தெறுழ் - காட்டிலுள்ள தோர்கொடி; புளிமாவென்றுமுரைப்பர், 'தெறுழ் வீ பூப்ப' ௧௧௩.
தென்புலவாழ்நர் - தென்றிசைக்கண்வாழ்வோர்=பிதிரர், 'தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும் - பொன்போற் புதல்வர்' ௯.
தென்னம்பொருப்பு - பொதியின்மலை, 'தென்னம் பொருப்பனன்னாடு' ௯௯.
தெனாஅது - தெற்கின்கண்ணது, 'தெனாஅ துருகெழு குமரி' ௬.

## தே.

தேம் - தேயம், 'தெவ்வர் தேஎத்து' ௬. தேன், 'தேம்பாய் புன்னை' ௨௪.
தேர்க்கால் - குயவன் கலம்வனையுந் திகிரி; தேர்க்கால்போன்றிருத்தலின் இப்பெயர்பெற்றது, 'வேட்கோச் சிறாஅர் தேர்க்கால் வைத்த - பசுமண்' ௯௨.

தேற்றாய் - தெளியாய், 'தேற்றாய் பெரும பொய்யே' ௫௧.

தேறலை - தெளியாய், 'பிறர்பழி கூறுவோர் மொழிதேறலையே' ௧௦.

## தை.

தைஇ - செய்த, 'பாணர் சென்னி பொலியத் தைஇ' ௧௨௬.

தைஇய - செய்துபுனைந்த, 'கழறைஇய வல்லாளனை' ௪௦. புனைந்துசெய்த, 'வல்லோன் றைஇய' ௯௯.

தைவருதல் - தடவிவருதல், 'விசும்பு தைவரு வளியும்' ௨.

## தொ.

தொகுக்கும் - திரட்டும், 'தொகுக்குங் கொழுமீன்' ௧௯.

தொட்டு - செறித்து, 'கழறொட்டு' ௭௭. தோண்டி, 'மைந்தர் புண்டொட்டு' ௬௨.

தொடர் - சங்கிலி, 'தொடர்ப்படு ஞமலியின்' ௭௪.

தொடி - பூண், 'தொடித்தலை விழுத்தண்டு' ௨௪௯. வளை, 'ஒண்டொடி மகளிர்' ௨௪; 'தொடிகழித் திடுதல்' ௮௯. வீரவளை, 'தொடித்தோள்' ௨௬.

தொடுக்குவர் - வளைத்துக்கொள்வர், 'தமதெனத் தொடுக்குவ ராயின்' ௧௯௫.

தொடுதல் - தோண்டுதல், 'தொடுகடல்' ௬.

தொடுமின் - பிழிமின், 'நறவுந் தொடுமின்' ௨௬௨.

தொடை - சந்து, 'தொடைப் பொலிந்த வலிகெழு நோன்றாள்' ௮; தொடுத்தல், 'செந்தொடை பிழையா வன்கணவர்' ௯; யாழ்நரம்பு, 'தேஎந் தீந்தொடைச் சீறியாழ்' ௭௦.

தொண்டி - இது கடற்கரையிலுள்ள தொருநகரம், சேரருடையது, 'தண்டொண்டியோ ரடுபொருந' ௧௭; 'கண்ணறும்மே கானலந் தொண்டி' ௪௮.

தொலைஇயோன் - தொலைவித்தோன், 'தொலைஇயோ னிவனென' ௧௨௫.

தொலைச்சி - தொலைத்து, 'வெங்கட் டொலைச்சியு மமையார்' ௨௧; 'தசும்புடன் றொலைச்சி' ௨௨௪.

தொலைச்சிய - தொலைத்த, 'மான்கணந் தொலைச்சிய' ௧௫௦.

தொழில் - செயல், 'பிறிதுதொழி லறியா வாகலின்' ௧௪.

தொழுதி - கூட்டம், 'இரும்பிடித் தொழுதி' ௪௪.

தொழுவர் - உழவர், 'நெல்லரி தொழுவர்' ௨௦௧.

தொன்று - பழைமை, 'தொன்றிசை' ௨௧௭.

## தோ.

தோட்டி - அங்குசம், 'பொன்னியற் புனைதோட்டியால்' ௧௪. ஒருமலை, இது கண்டீரக்கோப்பெருநள்ளியுடையது, 'இருப்புபுனைந் தியற்றாப் பெரும் பெயர்த் தோட்டி' ௧௫௦.

தோடு - இதழ், 'பொலந்தோட்டுப் பைந்தும்பை' ௨௨. இலை, 'தோடொலிபுநந்தி' ௧௨௦. தொகுதி, 'தோடுகொண் முரசு' ௨௯௮.

தோண்டாது - பறியாமல், 'மிசைப்பரந் தோண்டாது' ௯௦.

தோய்தல் - பொருந்துதல், 'தாடோய் தடக்கை' ௧௪.

தோல் - கேடகம், 'தோல் - துவைத் தம்பிற் றுனைதோன்றுவ' ௪. பரிசை, 'மழையுருவின தோல்பரப்பி' ௧௬; 'தோல்கழியொடு பிடிசெறிப்பவும்' ௬௭. யானை, 'தோல்பெயரிய வெறுழ்முன்பின்' ௭.

தோற்றம் - காட்சி, 'அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல' ௯௪.

தோன்றல் - தலைவன், 'புகழ்சா றோன்றல்' ௨௧.

## ந.

நக்க - சுடுக, 'எரியு நக்க' ௫௭.

நகர் - கோயில், 'முக்கட் செல்வர் நகர்' ௬; 'ஒளிறுவாண் மன்னரொண்சுடர் நெடுநகர்.' நகரம், 'நெடுநகர் வினைபுனை நல்லில்' ௨௯.

நகாஅல் - நகுகின்றிலேன், 'நகாஅலென வந்த மாறே' ௨௫௯.

நகுதக்கனர் - சிரிக்கத்தக்கார், 'நகுதக்கனரே நாடுமீக் கூறுநர்' ௭௨.

நகை - மகிழ்ச்சி, 'வாயார் பெருநகை' ௨௧௨.

நசை - ஆசை, 'நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய' ௧௫.

நசைவர் - விரும்பிவந்தோர், 'நசைவர்க்கு மென்மை யல்லது' ௧௭௦.

நசைவேட்கை - நச்சியவிருப்பம், 'நின்னசை வேட்கையி னிரவலர் வருவர்' ௯.

நடுக்கு - நடுக்கம், 'நடுக்கின்றி நிலீய ரோ' ௨.
நடுங்க - தலையசைத்துக்கொண்டாட, 'சீறியாழ் நயம்புரிந் துறையுநர் நடுங் கப் பண்ணி' ௧௪௫.
நண்ணார் - பகைவர், 'நண்ணார் நாண நாடொறுந் தலைச்சென்று' ௨௯.
நணி - அணிமை, 'திரைபொரு முந்நீர்க் கரைநணிச் செலினும்' ௧௫௪.
நம்பி - விரும்பி, 'வாயார நின் னிசைநம்பி' ௧௩௬.
நயந்து - மகிழ்ந்து, 'நயந்தளித்தல்' ௫௧. விரும்பி, 'நலனயந் தென்றும் வருஉம்' ௧௪௪.
நயம் - இன்பம், 'நயம்புரிந் துறையுநர்' ௧௪௫.
நயவ - நியாயத்தை யுடையன, 'நல்ல போலவு நயவ போலவும்' ௫௮.
நயன் - ஈரம், 'நயனில் கூற்றம்' ௨௨௭.
நரந்தம் - நரந்தப்பூ, 'நரந்த நாறுந் தன் கையால்' ௨௩௫.
நரலுதல் - மூங்கிலிலைழந்தொலித்தல், 'ஆடுகழை நரலும்' ௧௨௦.
நல் - வறுமை; நல்குரவென்பது நல்லெனக் குறைந்து நின்றது; 'கல்குயின் றன்னவெனல்கூர் வளிமறை' ௧௩௬.
நல்க - அளிக்க, 'பரிசிலர்க் கருங்கல நல்கவும்' ௧௪.
நல்கி - கொடுத்து, 'பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கி' ௬.
நல்கினும் - உவப்பினும், 'நல்கினு நல்கா ரெயினும்' ௮௦.
நல்லவர் - பெண்டிர், 'நல்லவர்க் கார ணங் காகிய மார்பு' ௧௪.
நல்லியக்கோடன் - ஓய்மா நல்லியக்கோடன், 'பெருமா விலங்கைத் தலைவன் சீறியா - ழிலலோர் சொன்மலை நல்லி யக் கோடனை' ௧௭௬.
நவ்வி - மான்குட்டி, 'சிறுதலை நவ்வி' ௨.
நவியம் - கோடாலி, 'வடிநவி னவியம் பாய்தலின்' ௨௯; 'நெடுங்கை நவியம் பாய்தலின்' ௩௬.
நவியம்பாய்தல் - வெட்டுதல், ௨௯; ௩௬.
நவிலுதல் - பயிலுதல், 'மறைநவி லந்த ணர்' ௧.
நள்ளி - கண்டீரக்கோப் பெருநள்ளி; இவன் ஒருவள்ளல், 'பிறங்குமலை நள்ளி' ௧௪௮; 'நளிமலை நாடனள்ளியவ னெனவே' ௧௫௦; 'ஆர்வமுற் - றுள்ளி வருந ருலைவுநனி தீரத் - தள்ளா தீயுந் தகைசால் வண்மைக் - கொள்ளா ரோட்டிய நள்ளியும்' ௧௫௮.
நள்ளென்மாலை - நள்ளென்னும் ஓசை யையுடையமாலை, 'நள்ளென் மாலை மருதம் பண்ணி' ௧௪௧.
நளி - குளிர்ச்சி, 'மரம்பிறங்கிய நளிச் சிலம்பு' ௧௩௬. செறிவு, 'நளியிரு முந் நீர்' ௬௬. பெருமை, 'நளிகடல' ௨௬.
நளிய - செறிவையுடைய, 'நன்மர னளிய நறுந்தண் சாரல்' ௧௫௦.
நற்கு - நன்கு, 'அதுநற் கறிந்தனை யாயின்' ௩௫; 'அதுநற்கறிந்தனையாயின்' ௧௨௧.
நறும்புல் - ஒருவகைப்புல், 'நரந்தை நறும்புன் மேய்ந்த கவரி' ௧௩௨.
நறுமை - நன்மை, 'பொலனறுந் தெரியல்' ௨௧.
நறை - நறைக்கொடி, 'நறைநார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி' ௧௬௮.
நன்று - பெரிது, 'நன்று மெல்லிய பெருமை' ௧௪; 'நன்று நொய்தா லம்ம' ௭௫. நல்வினை, 'சான்றோர் செய்த நன்றுண் டாயின்' ௩௪.
நன்னன் - ஒருசிற்றரசன், 'பொலந்தேர் நன்னன் மருகன்' ௧௫௧.
நனந்தலை - அகன்றவிடம், 'நனந்தலை நல்லெயில்' ௧௫; 'நனந்தலைப் பேரூர்' ௫௭; 'கழைபயி னனந்தலைக் கறிவள ரடுக்கம்' ௧௬௮.

## நா.

நாகன் - நாலைகிழான்நாகன், 'இருந்தே னாகன்' ௧௭௧.
நாஞ்சில் - கலப்பை, 'நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள' ௧௧; நாஞ்சின்மலை, 'செவ்வரைப் படப்பை நாஞ்சிற் பொருந' ௧௩௭; 'உயர்சிமய வுழாஅ நாஞ்சிற் பொருந' ௧௩௧; 'தடவுநிலைப் பலவி னாஞ்சிற் பொருநன்' ௧௪௦; 'தீஞ்சுளைப் பலவி னாஞ்சிற் பொருந' ௩௮௦.
நாட்டம் - ஆராய்ச்சி, 'அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து' ௩௫; 'நாற்ற நாட்டத் தறுகாற் பறவை' ௭௦.
நாட்டை - நாட்டையுடையாய், 'ஆடு களங் கடுக்கு மகநாட் டையே' ௨௮.
நாடல் - ஆராய்தல், 'நாடல் சான்றமை ந்திசினோய்' ௧௫.

நாடன் - குறிஞ்சிநிலமுடையோன், 'நாட னென்கோ வூர னென்கோ' ௪௧.
நாடனை - நாட்டையுடையாய், 'கானக நாடனை நீயோ' ௫; 'பெருங்க ளுடனை' ௧௩௭.
நாடி - ஆராய்ந்து, 'ஒப்ப நாடி' ௧௦.
நாப்பண் - நடு, 'பன்மீ னுப்பட் டிங் கள் போலவும்' ௧௩; 'முந்நீர் நாப்பட் டிமிற்சுடர் போல' ௬௦.
நாம் - அச்சம், 'நாம நல்லமர் செய்ய' ௧௬.
நாய் - சூதாடுகருவி, 'நாயிடக் குழிந்த - வல்லி னல்லகம்' ௫௨.
நார் - பன்னாடை, 'நார்பிழிக் கொண்ட வெங்கள்' ௧௭௦; 'நாரரி' ௨௩௨.
நாலைகிழவன் - நாலைகிழவனாகன், 'தோலா நல்லிசை நாலை கிழவன் - பருந்து பசி தீர்க்கு நற்போர்த் - திருந்துவேனாகன்' ௧௭௧.
நாவாய் - மரக்கலம், 'முந்நீர் வழங்கு நாவாய்' ௧௩.
நாள் - காலை, 'நாண்மகி ழிருக்கை' ௨௧.
நாளவை - நாளோலக்கம், 'செம்ம லுளவை யண்ணாந்து புகுதல்' ௫௪.
நாற்றம் - மணம், 'நாற்ற நாட்டத் தறு காற் பறவை' ௭௦.

## நி.

நிமிர்தல் - மிகைத்தல், 'நிமிர்பரிய மாத் தாங்கவும்' ௧௪.
நிரயங்கொள்பவர் - நரகத்தைத் தமக்கு இடமாகக்கொள்பவர், 'நிரயங் கொள்பவரொ டொன்றாது' ௫.
நிரயம் - நரகம், ௫.
நிணக்கும் - கட்டும், 'கட்டி னிணக்கு மிழிசினன்' ௮௨.
நிலவு - நிலைத்தல், 'நிலவுக்கடல் வளைப்பு' ௩.
நிலியர் - நிற்பாயாக, 'நடுக்கின்றி நிலியரோ வத்தை' ௨.
நிலீயர் - நிலைபெறுவாயாக, 'நிலீய ரத்தைநீ நிலமிசை யானே' ௧௬௬.
நிலை - நிற்றல், 'பணைநிலை முனைஇ' ௨௩.
நிலைஇய - நிலைபெற்ற, 'வறிது நிலைஇய காயமும்' ௨௦; 'செந்தில் - நெடுவேணிலைஇய காமர் வியன்றுறை' ௫௫; 'வறிது நிலைஇய காயமும்' ௩௦.
நிலைஇயர் - நிற்பதாக, 'நின்று நிலைஇயர் நின் னுண்மீன்' ௨௪.
நிலையழிந்து - நிலைகலங்கி, 'நவியம்பாய் தலினிலையழிந்து' ௩௬.
நிவந்து - ஓங்கி, 'மாக்கட னிவந்தெழுதரும்' ௪; 'உருகெழு மதியி னிவந்து சேண் விளங்க' ௩௧.
நிவப்பு - ஓங்குதல், 'நீர்நிலை நிவப்பு' ௬; 'நீரழுவ நிவப்பு' ௪.
நிழற்ற - நிழலைச்செய்ய, 'வெண்குடை - மண்ணக நிழற்ற' ௩.
நிழற்றிய - நிழலைச்செய்த, 'வெண்குடை நிழற்றிய' ௧௮௧.
நிழற்றும் - நிழலைச்செய்யும், 'கொடிவிசும்பு நிழற்றும்' ௯; 'தீமிகின் - மன்னுயிர் நிழற்று நிழலு மில்லை' ௫௧.
நிற்பின் - நின்றால், 'முந்தை நிற்பின்' ௧௦.
நிறீஇ - நிறுத்தி, 'தம்புகழ் நிறீஇ' ௧௮.
நினவ - நின்னுடையனசிலகாரியம், 'நினவ கூறுவல்' ௩௫.

## நீ.

நீர் - தன்மை, 'செந்நீர்ப் பசும்பொன்' ௯.
நீர்த்து - தன்மையையுடையது, 'இது நீர்த்தோ நினக்கென' ௪௩.

## நு.

நுணங்கு - நுண்மை, 'நுணங்கு செந்நா வணங்க வேத்தி' ௨௧௧.
நுணுகி - மெலிந்து, 'தோணுணுகி' ௯௬.
நுதல் - சென்னி, 'குடுமி களைந்த நுதல்' ௭௭. யானைமத்தகம், 'புகரணிநுதல்' ௩; 'பூநுதல் யானை' ௧௨.
நுதி - நுனி, 'நுதிமழுங்கிய வெண்கோடு' ௪; 'நுதிமுக மழுங்க' ௩௧.
நும்மோரன்ன - நும்மைப்போலும், 'நும்மோ ரன்ன வேந்தர்' ௪௫; 'நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே' ௪௨.
நுவல - சொல்ல, 'ஈகை நுவல' ௨௪.
நுவலும் - சொல்லும், 'அறத்தாறு நுவலும்' ௯
நுழைகல்லா - நுழையாத, 'கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை' ௨௧.
நுனை - நுனி, 'கூர்நுனை வேல்' ௪௨.

## நூ.

நூறி - அறைந்துகொண்டு, 'முலைபொலி யாக முருக்ப நூறி' ௨௫; வெட்டி, 'அருஞ்சமந் ததைய நூறி' ௯௩.

## நெ.

நெடியோன் - வடிம்பலம்பநின்றபாண்டியன், 'முந்நீர் விழவி னெடியோன்' ௯.

நெடுமாவளவன் - சோழன்குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவன், 'கொடிநுடங்கு யானை நெடுமா வளவன்' உஉஅ.

நெடுமானஞ்சி - அதியமான்நெடுமானஞ்சி, 'நெடுமானஞ்சிநீ யருளன் மாறே' கூஉ; 'கடுமான் றோன்றல நெடுமானஞ்சி' உ0கூ.

நெடுமொழி - வஞ்சினம், 'நெடுமொழி மன்னர்' ருச. வீரமேம்பட்டவார்த்தை, 'நெடுமொழி மறந்த சிறுபேராளர்' களஅ.

நெடுவேளாதன் - ஒரு சிற்றரசன், 'நெடுவேளாதன் போந்தை யன்ன' ஙஙஅ.

நெய்தல - சாக்காட்டுப்பறை, 'ஓரி னெய்தல் கறங்க' ககச.

நெய்தலங்கானல் - இஃது இளஞ்சேட்சென்னியூர், 'நெய்தலங் கானனெடியோய்' க0; இது நெய்தலங்காலையெனவும் வழங்கும்.

நெய்ம்மிதி - நெய்யால்மிதித்துத் திரட்டப்பட்ட கவளம், 'நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ' சச.

நெருநை - நேற்று, 'நெருநைப் பகலிடங்கண்ணி' உசக.

நெளிமருங்கு - குழிந்த இடம், 'நிலனெளி மருங்கின்' கஅ.

நெளிய - வருந்த, 'பொய்யாச் செந்நா நெளிய வேத்தி' கசுஅ.

நெறி - ஒழுக்கம், 'நாஅல்வேத நெறி திரியினும்' உ; முடக்கம், 'நெறிகொள் வரிக்குடர்' கசு0.

## நே.

நே - ஈரம், 'நேஎ நெஞ்சின்' கூ.

நேமி - சக்கரம், 'நேமி யுய்த்த' கூ.

## நை.

நைத்தல் - அழித்தல், 'நாடு நைத்தலின்' கூஎ.

நைவர - இரங்க, 'நல்கா மையி னைவரச் சாஅய்' கசசு.

## நொ.

நொதுமலாளர் - குறளைகூறுவார், 'நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது' ஙரு.

## நோ.

நோக்கின்று - நோக்கியது, 'மறுவைநோக்கின்றோ வன்றே' கசக.

நோகு - நோவேன், 'நோகோ யானே' ககசு, உஙச.

நோன் - வலி, 'சாப நோன்ஞாண்' கயு; 'மதனுடை நோன்றாள்' எரு.

நோன்றல் - பொறுத்தல், 'தமர்தற் றப்பி னதுநோன் றல்லும்' கருஎ.

## ப.

பஃறுளி - வடிம்பலம்பநின்ற பாண்டியனாலுண்டாக்கப்பட்டதோராறு, 'முந்நீர் விழவி னெடியோன், நன்னீர்ப் பஃறுளி' கூ.

பகடு - ஏர், 'பகடு புறந்தருநர் பார மோம்பி' ஙரு. கடா, 'பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ' கூ0. பரப்பு, 'பகட்டெழின் மார்பின்' கங; 'ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பின்' கருஉ. வலி, 'கதிர்விடு நுண்பூ ணம்பகட்டு மார்பின்' அஅ; 'அலர்பூந் தும்பை யம்பகட்டு மார்பின்' கூசு.

பகல் - சூரியன், 'பகலிருளினும்' உ. நடுவுநிலைமை, 'படுவ துண்டு பகலாற்றி' கஎ. பகற்பொழுது, 'பகல்விளங் குதியால்' அ. பகுத்தல், 'நெருநைப் பகலிடங் கண்ணி' உசக.

பகழி - அம்பு, 'விழுத்தொடைப் பகழி' கருஉ.

பகன்றை - பகன்றைப்பூ, 'பணித்துறைப் பகன்றை' உஙரு.

பச்சூன் - செவ்வித்தசை, 'பச்சூன் றின்று' உருஅ.

பச்சை - தோல், 'பச்சை நல்யாழ்' கசுச.

பசலை - பொன்னிறம், 'பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ' கருரு.

பசும்பொன் - ஓட்டற்றபொன், 'பாணன் சூடிய பசும்பொற் றாமரை' கசக.

பஞ்சவர் - பாண்டியர், 'செருமாண் பஞ்சவ ரேறே' ருஅ.

பஞ்சி - பஞ்சு, 'பஞ்சி முன்றிற் சிற்றில்' ககன.

பஞிலம் - தொகுதி, 'பன்னூ றடுக்கிய வேறுபடு பஞிலம்' கூஉ.

பட்டமாறு - பட்டபடியால், 'பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே' கூங.

பட்டன்று - பட்டது, 'மைந்துபட் டன்றே' கங; 'ஆங்குப் பட்டன் றவன் கைவண் மையே' கஙச.

பட்டென - பட்டதாக, 'அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டென' உங.

படை - மொய்ப்ப, 'வண்டுபட மலர்ந்த' உச.

படப்பை - பக்கம், 'பாசவற் படப்பை' சா; 'பெரும்புனற் படப்பை' கூஅ; 'தண்புனற் படப்பை' ககசா. மனைப் பக்கம், 'வனைக்கை விறலியர் படப் பைக் கொய்த வடகு' கசo.

படர் - நினைவாலுண்டாகிய நோய், 'அ ரும்படர் களைமே' கசரு.

படர்தி - போகின்றாய், 'அன்றோற் படர்தி யாயின்' சஅ.

படர்ந்து - நினைத்து, 'வள்ளியோர்ப் படர்ந்து' சஎ; 'நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே' ககரு.

படாஅ - பட்டு, 'படாஅச் செலீயர்நின் பகைவர் மீனே' உச.

படியினை - படிவித்தனை, 'காப்புடைய கயம்படியினை' கரு.

படுக்கும் - உண்டாக்கும், 'சோறுபடுக் குந் தீயோடு' உo.

படுத்த - வீழ்த்த, 'எறிந்துகளம் படுத்த வேந்துவாள்' கக.

படுத்து - செய்து, 'இடர்ப்படுத் திரீஇய' உச.

படுதல் - விளித்தல், 'படுமணி யிரட்டும்' எஉ.

படுபு - தோன்றுதல், 'படுபறி யலனே பல்கதிர்ச் செல்வன்' ருச.

படுமலை - ஒருவகைப்பாலைப்பண், 'படு மலை நின்ற பயங்கெழு சீறியாழ்' கருரு.

படை - ஆயுதம், 'எயிறு படையாக' ரு; 'ஒண்படைக் கடிந்தார்' கரு. குதி ரைக்கலம், 'பொலம்படைக் கலிமா' ககசா; 'ஒளிறுபடைப் புரவிய தே ரும்' கருரு. கொளுத்து, 'திண்படை கலங்கிச் சிதைதலுய்ந் தன்றே நின் வேல்' உரு.

படைத்திசினோர் - படைத்தவர், 'உட ம்பு முயிரும் படைத்திசி னோரே' கஅ.

படைப்பு - செல்வம், 'வாழிய பெரும நின் வரம்பில் படைப்பே' உஉ.

படைமடம் - வீரரல்லாதார்மேலும் மு துகிட்டார்மேலும் புண்பட்டார்மே லும் மூத்தார் இளையார்மேலும் போர் செய்தற்குச்செல்லுதல், 'படைமடம் படாஅன்பிறர் படைமயக் குறினே' கசஉ.

பண்டை - முன், 'பண்டையிற் பெரி தே' கo.

பண்ண - எற்ப அமைக்க, 'புனைதேர் பண்ணவும்' சஉ.

பண்ணன் - சிறுகுடிகிழான்பண்ணன், 'கைவள் ளீகைப் பண்ணன் சிறுகுடி' எo; 'யான்வாழு நாளும் பண்ணன் வாழிய' கஎரு. வல்லார்கிழான்பண் ணன், 'வலாஅ ரோனே வாய்வாட் பண்ணன்' கஅக.

பணி - ஏவல், 'வேற்றரசு பணிதொட ங்குநின்' கஉ.

பணியியர் - தாழ்க, 'பணியிய ரத்தை நின் குடையே முனிவர் - முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே' சா.

பணை - குதிரைப்பந்தி, 'பணைமுனிந்து - காலியற் புரவி யாலு மாங்கண்' கஎஅ. பெருமை, 'பணையெருத்தின்' கரு; 'பாவடிப் பணைத்தாள்' எஉ. மருத நிலம், 'பெருந்தண்பணை பாழாக' கசா. யானைக்கூடம், 'பணைநிலை மு னைஇக் - களிறுபடிந் துண்டெனக் கலங்கிய துறையும்' உரு.

பதத்தை - செவ்வியையுடையாய், 'இன் சொலெண் பதத்தை யாகுமதி' சo.

பதம் - உணவு, 'பெருஞ்சோற்று மிகு பதம் வரையாது கொடுத்தோய்' உ; 'கொள்பத மொழிய' உரு. கால், 'எறிபதத்தா னிடங்காட்ட' ச. கா லம், 'எறிபதத்தான்' ச. செவ்வி, சo; 'கொழுங்கொடி விளர்க்காய் கோட் பத மாக' கஉo; 'பதனன்று புக்கு' கஉச. தரம், 'பெண்டிருந் தம்பதங் கொடுக்கும்' கருக.

பதலை - ஒருகண்மாக்கிணையென்னும் பறை, 'நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கி' சாச; 'ஒருதலைப் பதலை தூ ங்க' கoரு, 'பதலை யொருகண் பை யென வியக்குமின்' கருஉ.

பதுக்கை - கற்குவியல், 'அம்புவிட வீழ் ந்தோர் வம்பப் பதுக்கை' ரு. திட் டை, 'பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி' உகசாச.

பயந்த - பூத்த, 'சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ் - நூற்றித ழலர்' உஎ.

பயம்-பயன், 'பயங்கெழு மாநிலம்' ருஅ.

பயம்பு - குழி, 'மாப்பயம்பின் பொறை போற்றாது' கஎ.

பயன் - பிரயோசனம், 'பயன்றிகழ் வைப்பின்' எ.

பயிர் - மிருகங்களுள் ஒன்றை மற்றொன்று அழைக்கும் ஓசைக்குறிப்பு, 'கடமா னல்லேறு மடமா ணுகுபிணை பயிரழைப்பின்' கருஎ.

பயிரும் - அழைக்கும், 'கடுவன் - றய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்' கருஅ.

பயிலுதல் - செறிதல், 'மரம்பயில் கடிமிளை' உக.

பயிற்றி - பலகாற்கூறி, 'வேண்டுமொழி பயிற்றி' ருச.

பரக்கும் - பரவும், 'ஆனிற்பரக்கும் யானைய முன்பிற் - கானகம்' ரு.

பரணன் - ஒருபுலவர், 'பரணன் பாடினன் மற்கொல்' கூo.

பரதவர் - நுளையர், 'திண்டிமில் வன்பரதவர்' உசு.

பரம் - பாரம், 'மிசைப்பரந் தோண்டாது' ருo.

பரல் - பருக்கைக்கல், 'பரலுடை மருங்கில்' உகூச.

பரி - கதி, 'அலங்குளைப் பரீஇ யிவுளி' ச. குதிரைநடை, 'கதழ்பரிய கலிமாவும்' ருரு. செலவு, 'நிமிர்பரிய மாதாங்கவும்' கச; 'வண்பரி நெடுந்தேர்' கசகூ.

பரிக்கும் - தாங்கும், 'மண்டமர்ப் பரிக்கு மதனுடை நோன்றாள்' எரு.

பரிசிலர் - இரந்துவந்தோர், 'பரிசிலர்க்கருங்கல நல்கவும்' கச.

பரிசின்மாக்கள் - பரிசிலர், 'பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கி' கூ.

பரிதல் - ஓடுதல், 'பொலம்பைந்தார்கெடப்பரிதலின்' கூஎ.

பரிதி - வட்டம், 'பரிதி ஞாலத்து' கஎச.

பரிந்து - துணிந்து, 'கால்பரிந்துருள' உஉக.

பரிப்பு - இயக்கம், 'அஞ்ஞா யிற்றுப் பரிப்பும்' ருo.

பரியல் - இரங்குதல், 'பரியல் வேண்டா' கஎஉ.

பரிவு - அன்பு, 'பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்' கஅச; இரக்கம், 'பற்றா மாக்களிற் பரிவுமுந் துறுத்து'.

பருத்திப்பெண்டு - பருத்திநூற்கும் பெண்டு, 'பருத்திப் பெண்டின் பனுவலன்ன' கஉரு.

பல்லியாடிய - தாளியடிக்கப்பட்ட, 'பல்லி யாடிய பல்கிளைச் செவ்வி' கஉo.

பலகை - கேடகம், 'இலங்குபொன் னெறிந்த நலங்கிளர் பலகை' கரு.

பவர் - கொடி, 'உழிஞைப் பவரொடு மிடைந்து' எகூ.

பழனம் - பொய்கை, 'பழன வாளை' கூக. வயல், 'பழன மஞ்ஞை யுகுத்த பீலி' கரு.

பழி - குற்றம், 'பிறர்பழி கூறுவோர்' கூ. வசை, 'பழிதீ ராற்றல்' உஉஎ.

பழிச்சி - வாழ்த்தி, 'நிற்பழிச்சிச்சேறும்' ககரு.

பழிதாரா - பழிக்கப்படாத, 'படைப் பழி தாரா மைந்தினை ஞ்தலும்' கருஎ.

பழுமரம் - பழுத்தமரம், 'யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன' கஎரு.

பழுனி - முதிர்ந்து, 'பெருவளம் பழுனி' ககரு.

பள்ளி - சாலை, 'திணிமணற் புதப்பூம் பள்ளி' ருரு.

பற்றலியர் - பற்றுதொழிக, கூ.

பறந்தலை - பாசறை, 'களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை' கூச. பாழ், 'பூளை நீடிய வெருவரு பறந்தலை' உரு. பாழ்பட்டவிடம், 'கள்ளி போகிய களரியம் பறந்தலை' உஉரு. பாழி—மாகியபுறங்காடு, 'கள்ளியம் பறந்தலை' உசo. போர்க்களம், 'கூற்றுக் கண்ணோடிய வெருவரு பறந்தலை' கக; 'களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை' ருரு; 'கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை' கூகூ.

பறம்பு - ஒருமலை; இது பாரியென்னும் வள்ளலுடையது, 'பறம்பு பாடினரதுவே' கoஅ; 'அளிதோ தானே பாரியது பறம்பு' கoக; 'உடன்றனிராயினும் பறம்புகொளற் கரிதே' ககo; 'சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே' ககரு; 'பறம்பிற் கோமான் பாரியும்' கருஅ; 'பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்' கஎகூ; 'பாரி பறம்பிற் பனிச்சுனை போல' ருருஎ. பறம்புநாடு, பாரியென்பவனுடைய நாடு, 'முந்நூ றூர்த்தே தண் பறம்பு நன்னாடு' ககo; 'தேர்வண் பாரி தண் பறம்பு நாடே' ககஅ.

பறைந்தன - நீங்கின, 'களங்கொளக் கழல்பறைந்தன' ச.

பனங்குடை - பனையோலையாற்செய்யப் படுமுண்கலம், 'இரும்பனங் குடையின் மிசையும்' ௧௭௭.
பனிக்கும் - நடுங்கும், 'அரசு தலைபனிக்கு மாற்றலை' ௪௨; 'மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளி' ௧௪௫.
பனிச்சை - கழன்மணியினதுகனியாற் கூறுபடுத்துச் சுருட்டப்பட்டகூந்தல், 'கழற்கனி வகுத்த துணைச்சில் லோதிக் குறுந்தொடி மகளிர்' ௯௭.
பனுவல்-இசைப்பாட்டு, 'வரிநவில் பனுவல் புலம்பெயர்ந் திசைப்ப' ௧௩௫. கேள்வி, 'செவிமுதல் வித்திய பனுவல்' ௨௩௭. சுகிர்ந்தபஞ்சு, 'பருத்திப் பெண்டின் பனுவ லன்ன' ௧௨௫. பாட்டு, 'பாடின் பனுவற் பாணர்' ௧௨௭.
பனைப்போழ் - பனந்தோடு, 'மிசையலங் குளைய பனைப்போழ் செரீஇ' ௨௨.

## பா.

பா - பரப்பு, 'பாவடி' ௧௫; ௭௨.
பாசவல் - செவ்வியவல், 'பாசவன் மொக்கி' ௪௩.
பாசறை - பாடிவீடு, 'பாசறை யல்லது நீயொல் லாயே' ௩௧; 'இடங்கெட வீண்டிய வியன்கட் பாசறை' ௪௨.
பாசி=பிராசி - கிழக்கு, 'பாசிச் செல்லாது' ௨௨௯.
பாடிற்று - கூறிற்று, 'அறம்பா டிற்றே' ௩௪.
பாடினி - பாணிச்சி, 'பாடினி யணியாள்' ௨௪௨; விறலி, 'இழைபெற்ற பாடினிக்கு' ௧௧.
பாடு - ஒலி, 'பாடிமிழ் பனிக்கடல்' ௬௯. செவ்வி, 'பெரும்பாட் டீரத்து' ௧௨௦. முறைமை, 'பாடறிந் தொழுகும் பண்பி னோரே' ௧௯௭.
பாடுகம் - பாடுவேம், 'பாடுகம் வம்மினோ' ௩௨.
பாடுநர் - புலவர், 'பாணர் பாடுநர் பரிசிலர்' ௧௩௫.
பாண்டியன்மறவன் - நாலைகிழவன்நாகன், 'திருவீழ் நுண்பூட் பாண்டியன் மறவன்' ௧௭௯.
பாண்டில் - கிண்ணி, 'கழற்பாண்டில்' ௯௭.
பாணி-ஓசை, 'ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப' ௧௯௪. தாளம், 'படுகிளையின்சீர்ப் பாணி தூங்கும்' ௨௦௧.
பாமுளூர்-இது சேரநாட்டுள்ள தோரூர்; ௨௦௩.
பாய்தல் - பரவுதல், 'தேம்பாய் புன்னை' ௨௪.
பாயுந்து - பாயும், 'தெண்கடற் றிரைமிசைப்பாயுந்து' ௨௪.
பார் - முரம்புநிலம், 'ஊர்நனி யிறந்த பார்முதிர் பறந்தலை' ௨௬௫; வண்டிப்பார், 'கால்பார் கோத்து' ௧௮௫; வலியநிலம், 'பாருடைத்த குண்டகழி' ௧௪.
பார்வல் - பார்த்தல், 'பார்வலிருக்கை' ௩.
பாரம் - பரிக்கப்படுஞ்சுற்றம், 'பாரமு மிலமே' ௧௪௫.
பாரி - ஒருவள்ளல், 'பாரிவேள்பாற் பாடினை செலினே' ௧௦௫; 'கடவன் பாரி கைவண் மையே' ௧௦௬; 'பாரி பாரி யென்றுபல வேத்தி' ௧௦௭; 'பாரியும் பரிசில ரிரப்பின் வாரே னென்னுன்' ௧௦௮; 'பாரியது பறம்பே' ௧௦௯; 'யாமும் பாரியு முளமே' ௧௧௦; 'பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று' ௧௧௩; 'பாரிய தருமை யறியார்' ௧௧௬; 'பறம்பிற் கோமான் பாரியும்' ௧௫௮; 'கைவண் பாரி' ௨௦௨; 'மலைகெழு மாவண் பாரி' ௨௩௬.
பாரிமகளிர், பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்' ௨௦௦; 'நெடுமாப் பாரி மகளிர்' ௨௦௧; 'கைவண் பாரி மகளி ரென்ற' ௨௦௨.
பால் - பக்கம், 'பானின்று' ௨௨. விதி, 'பாறர வந்த பழவிறற் றாயம்' ௭௫; 'வாழியெற் புணர்ந்த பாலே' ௧௭௬.
பாவை - கண்மணிப்பாவை, 'புரப்போர் புன்கண் பாவை சோர' ௨௩௫.
பாறிய - நுணியாகிய, 'பாறிய சிதாரேன்' ௧௫௦.

## பி.

பிசிர் - இது பாண்டிநாட்டிலுள்ளதோரூர், 'இரும்பிசி ராந்தை யடியுறை யெனினே' ௬௭; 'தென்னம் பொருப்பனன் னாட்டுள்ளும், பிசிரோனென்ப வென்னுயிரோம்புநனே' ௨௧௫.
பிசிராந்தை - ஒருபுலவர், 'இரும்பிசிராந்தை யடியுறை' ௬௭.
பிட்டன் - பிட்டங்கொற்றன், 'மலைகெழு நாடன் கூர்வேற் பிட்டன்' ௧௭௦;

'வன்புல நாடன் வயமான் பிட்டன்' கஎ௨.
பிடர் - கழுத்து, 'யானையிரும் பிடர்த் தலை யிருந்து' ௬.
பிடவூர் - சோழநாட்டிலுள்ள தோரூர், 'நெடுங்கை வேண்மா னருங்கடிப் பிடவூர்' ௬௬௫.
பிடி - கைந்நீட்டு=கைப்பிடி, 'தோல்கழியொடு பிடிசெறிப்பவும்' ௬அ.
பிண்டம் - எண்வகை யெச்சத்துளொன்று; மணைபோலப் பிறப்பது, 'உறுப்பில் பிண்டமும்' ௨அ.
பிணி - கட்டு, 'பிணியுறு முரசம்' ௨௫. நோய், 'பெண்டிரும் பிணியுடை யீரும்' ௬.
பிணிக்கொண்ட - கட்டுதலைச்செய்த, 'கயிறுபிணிக் கொண்ட' ௬.
பிணிமுகம் - மயில், முருகக் கடவுள் ஏறும்யானையென்றுமாம், 'பிணிமுக வூர்தி யொண்செய் யோனும்' ௫௬.
பிணை - பெண்மான், 'பெருங்கண் மாப் பிணை' ௨.
பிழையாத - தவறாத, 'செந்தொடை பிழையா வன்க ணாடவர்' ௬.
பிற்றைநிலை - வழிபாட்டுநிலை, 'பிற்றை நிலை முனியாது கற்ற னன்றே' ௧அ௬.
பிறக்கு - பிறப்பேன், 'மாறியான் பிறக்கே' எக. பின், 'நசைபிறக் கொழிய' க௫.
பிறங்கிய - செறிந்த, 'மரம் பிறங்கிய நளிச்சிலம்பில்' க௬௬.
பிறங்குதல் - உயர்தல், 'பிறங்குநிலை மாடத் துறந்தை' ௬க. மிகுதல், 'பிறங்குநீர்ச்சேர்ப்பினும்' சக.
பிறர் - பகைவர், 'பிற ரகன்றலை நாடே' எ; 'பிறரோம் புற்ற மன்னெயில்' ௪௦. வேற்றரசர், 'பிறர்மண் கொண்டு' க௨.
பின்றை - பின்பு, 'பாண்முற் றொழிந்த பின்றை' ௨௬.

## பீ.

பீடு - பெருமை, 'பீடுடைய வெறுழ் முன்பின்' கஎ; 'பீடுகெழு வேந்தே' ௬௫; 'பீடுஞ் செம்மலு மறியார்' எ௬. வலி, 'வேந்துபீ டழித்த வேந்துவேற் றானை' ௨௨௫.
பீரை - பீர்க்கு, 'பீரை நாறிய சுரை யிவர் மருங்கின்' ககச.
பீலி - மயிலின்றோகை, 'மஞ்ஞை யுகுத்த பீலி' க௬.
பீள் - சூல், 'கருந்தாள் போகி யொருங்குபீள் விரிந்து' க௨௦.

## பு.

புக்கில் - புகலிடம், 'தகளறு கேள்வி யுயர்ந்தோர் புக்கில்' ௨௨க.
புகர் - யானைமத்தகத்துப்புள்ளி, 'புகரணிநுதல்' ௬.
புகர்க்கலை - புள்ளிமான்கலை, 'புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி' க௫௨.
புகல - விரும்ப, 'கிளைபுகலத் தலைக்கூடியாங்கு' கஎ.
புகலுதல் - விரும்புதல், 'நெஞ்சுநடுக்குடைய புகன்மறவரும்' ௫௫.
புகலும் - விரும்பும், 'போரெனிற் புகலும் புனைகழன் மறவர்' ௬க.
புகவு - உணவு, 'அகநாட் டண்ணல் புகவே' ௨௪க.
புகழ்-கீர்த்தி, 'சேண்விளங் கும்புகழ்' க௦.
புகழ்மேம்படுநன் - புகழை மேம்படுத்துமவன், ௪அ.
புகார் - ஆற்றுமுகம், 'புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்' ௬௦.
புடைபெயர்தல் - கீழ்மேலாதல், 'நிலம் புடை பெயர்வ தாயினும்' ௬௪.
புடையல் - மாலை, 'இரும்பனம்புடையல்' ௬௬.
புணர்தல் - பொருந்துதல், 'குரல்புணர் சீர்க் கொளைவல்பாண் மகனும்' கக.
புணரி - அலை, 'வெண்டலைப் புணரி' ௨; ௬க.
புணரியோர் - கூட்டினவர்கள், 'நீரு நிலனும் புணரியோர்' கஅ.
புத்தேள் - தெய்வம், 'புத்தே ளுலகத் தற்று' ௨௨.
புதல்வர் - பிள்ளைகள், 'பொன்போற் புதல்வர்' ௬; 'புன்றலைப் புதல்வர்' க௬.
புதவு - கதவு, 'புனலம் புதவின்' ௨௪.
புதுவது - புதிது, 'புதுவதோ வன்றே' ௪௨; 'தொலைதலும் புதுவ தன்று' எ௬.
புயத்து - பீர்க்கு, 'புயத்தெறி கரும்பின்' ௨அ.
புரந்த - உண்டாக்கப்பட்ட, 'ஒள்ளழற் புரந்த தாமரை' கக; 'அழல்புரந்த வடர்தாமரை' ௨௬.

புரவலை - பாதுகாப்பாய், 'இரவலர் புரவலை நீயு மல்லை' கசுஉ.
புரவி - குதிரை, 'அலங்குளைப் புரவி' உ.
புரவு - அரசிறை, 'குடிபுர விரக்குங் கோலே னாகுக' எரு; விளைநிலம், 'புரவத்தொடுத் துண்குவை யாயினும்' உசுo.
புரி - முறுக்கு, 'புரியடங்கு நரம்பின்' கஙரு.
புரிசை - மதில், 'ஏந்துகொடி யிறைப்புரிசை' கஎ; 'பல்படைப் புரிசை' உஉச.
புரிதல் - ஆராய்தல், அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து' ஙரு.
புரிந்து - விரும்பி, 'கயம்புரிந் துறையுநர்' கசரு.
புரை - குற்றம், 'புரையி னற்பனுவல்' கரு; 'புரைதீர்ந் தன்றது புதுவதோ வன்றே' சஉ.
புரைமை - உயர்ச்சி, 'நீயளந் தறிதிநின் புரைமை' ஙகூ; 'மன்பதை காக்கு நின் புரைமை நோக்காது' உகo.
புல்லாற்றூர் - ஓரூர், உகங.
புல்லென் கண்ணர் - புற்கென்ற கண்ணர், எஅ.
புல்லென்சடை - புற்கென்ற சடை, உருஉ.
புல்லென் றனை - பொலிவழிந்தாய், 'புல்லென் றனையால் வளங்கெழு திருநகர்' உoக.
புலம் - அறிவு, 'புலவரை யிறந்த புகழ்சா ன்றோன் றல்' உக. இடம், 'புலங்கெட விறுக்கும் வரம்பி னானை' கசு. திசை, 'தென்புல வாழ்நர்க்கு' க.
புலம்பு - தனிமை, 'புலம்புகொண் டுறையும்' கசஎ.
புலர்தல் - உலர்தல், 'புலர்சாந்தின்' ங.
புலவர் - அறிவுடையோர்' கஉ.
புலவு - புலால், 'புலவுநாற்றத்த பைந்தடி' கச.
புலவுதி - வெறுத்தி, 'புலவுதி மாதோ நீயே' உகக.
புலன் - அறிவு, ''புலனழுக் கற்ற வந்தணாளன்' கஉசு.
புலனுழுதுண்மார் - அறிவாலுழுதுண்ணுங்கற்றோர், 'புலனுழு துண்மார் புன்க ணஞ்சி' சுசு.
புலிகடிமால் - இருங்கோவேள், 'ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்' உoக; உoஉ: ஒரு முனிவர் தவஞ்செய்து கொண்டிருக்கையில், புலியொன்று அவரைக்கொல்லவர, அவர் இவனை நோக்கி (ஹொய்ஸள.ா) இப்புலியைக் கொல்லென்று கட்டளையிட, இவன் அதனைக்கொன்றமையின், இவனுக்கு இப்பெயர் வந்ததென்று பழையசிலாசாசன ஆராய்ச்சியையுடையோர் கூறுவர். இதன்விரிவை அவரிடம் கேட்டுணர்க.
புலைத்தி - புலைமகள், 'முருகுமெய்ப் பட்ட புலைத்தி போல' உருங.
புழல் - துளை, 'புழற்றலைப் புகர்க்கலையுருட்டி' கருஉ.
புழுக்கு - இறைச்சி, 'யாமைப் புழுக்கின்' உகஉ.
புழை - காட்டுவாயில், 'கவைமுள்ளிற் புழையடைப்பவும்' கூஅ.
புற்கை - மிக்கநீரால் அடப்பட்ட உணவு, 'நெடுநீர்ப் புற்கை நீத்தனம் வாற்கே' சுச.
புறக்கொடுத்து - முதுகிட்டு, 'புறக்கொடுத் திறத்தி' அ.
புறங்காப்ப - பாதுகாப்ப, 'மெலிவில் செங்கோ னீபுறங் காப்ப' சஉ.
புறஞ்சிறை - வேலிப்புறம், 'புறஞ்சிறை மாக்கட்கு' உஅ.
புறத்தை - முதுகையுடையை, 'ஆவஞ் சேர்ந்த புறத்தை' கச.
புறந்தருநர் - பாதுகாப்பார், 'பகடு புறந்தருநர் பார மோம்பி' ஙரு.
புறந்தரும் - பாதுகாக்கும், 'அழல்புறந் தருஉ மந்தண ரதுவே' கஉஉ.
புறப்புண் - மார்பில்தைத்துருவினபுண், 'புறப்புண் ணாணி' சுரு.
புறம் - புறக்கொடை, 'தப்புறுவர் புறம்பெற் றிசினே' கக.
புன்கண் - வறுமை, 'புன்கணஞ்சி' சுசு.
புன்கம் - சோறு, 'பாற்பெய் புன்கந் தேனொடு மயக்கி' ஙச; 'சாந்த விறகி னுவித்த புன்கம்' கசுஅ.
புனல் - நீர், 'தண்புனல் பரந்த பூசல்' எ; 'தண்பொருநைப் புனற்பாயும்' கக.
புனைதல் - அலங்கரித்தல், 'புனைதேர் பண்ணவும்' கஉ. அழகு செய்தல், 'பொன்னியற் புனைதோட்டியால்' கச. செய்தல், 'வரிமணற் புனைபாவைக்கு' கக.

## பூ.

பூ - புகர், 'பூநுத - லாடியல் யானை' ௧௬௫. பொலிவு, 'பூநிறக் கவசம்' ௧௩. மலர், 'குலவுச்சினைப் பூக்கொய்து' ௧௧. யானைநெற்றிப்பட்டம், 'பூநுத லியானை யொடு' ௧௨.

பூக்க - பொலிவதாக, 'பூக்கநின் வேலே' ௨௩.

பூங்குன்றம் - ஒருமலை, ௧௩௩.

பூசல் - ஆரவாரம், 'மெய்ம்மறந்து பட்ட வரையாப் பூசல்' ௨௫; 'ஆசா கென்னும் பூசல் போல' ௨௬௬ ஓசை, 'தண்புனல் பரந்த பூசல்' ௭.

பூஞ்சாற்றூர் - இதுசோழநாட்டுள்ளதோரூர்' ௧௬௬.

பூட்கை - மேற்கோள், 'அறத்தாறு நுவலும் பூட்கை' ௯; 'பூட்கை யில்லோன் யாக்கை போல' ௬௯.

பூட்டு - பிணிப்பு, 'கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட்டு' ௧௪௧.

பூவாவஞ்சி - கருவூர், 'பூவாவஞ்சியுந்தருகுவன்' ௩௨.

பூழி - புழுதி, 'பூழி மயங்கப் பலவுழுது வித்தி' ௧௨௦; கடுங்கட் கேழ லுழுத பூழி' ௧௬௮.

## பெ.

பெட்டாங்கு - விரும்பியபடியே, 'பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி' ௧௧௩.

பெட்பு - பேணுதல், 'பெட்பின் றீதல் யாம்வேண் டலமே' ௨௦௫.

பெண் - மனைவி, 'பெண்ணீற் றுற்றென' ௮௨.

பெண்டிர் - மகளிர், 'பெண்டிரும் பிணியுடை யீரும்' ௯.

பெண்ணை - பனை, 'செழுங்கோட் பெண்ணைப் பழந்தொட முயலும்' ௬௧. ஓர் ஆறு, 'பெண்ணையம் படப்பை நாடுகிழ வோயே' ௧௨௬.

பெய்மார் - வார்க்கவேண்டி, 'பாணர் மண்டை நிறையப் பெய்மார்' ௧௧௫.

பெயர்க - பெயர்வாருக, 'நோயில ராகிப் பெயர்கதி லம்ம' ௧௩.

பெயர்த்தும் - பின்னும், 'நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின் வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்' ௨.

பெயர்தல் - பிறழ்தல், 'நிலம்பெயரினு நின்சொற் பெயரல்' ௩.

பெயர்பு - கிளர்ந்து, 'பெயர்பு பொங்க' ௨௨.

பெயர்புறம் - சரிந்து மீளும் புறக்கொடை, 'வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்து' ௩௫.

பெயரல் - பிறழாதொழியல்வேண்டும், 'நிலம்பெயரினு நின்சொற் பெயரல்' ௩.

பெயரிய - பெயர்கூறிய, 'சோவெனப் பெயரிய காலை' ௧௫௨. பெயர்த்த, 'தோல்பெயரிய வெறுழ்முன்பின்' ௭.

பெயல் - மழை, 'உறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே' ௩௫; 'கார்ப்பெயற் கலித்த' ௧௨௦.

பெருங்காடு - பறங்காடு, 'பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்' ௨௪௬.

பெருங்குன்றூர் - ஓரூர், ௧௪௭, ௨௧௦, ௨௬௬, ௩௧௮.

பெருங்கோக்கிள்ளி - கோப்பெருஞ்சோழன், 'பெருங்கோக் கிள்ளி கேட்க' ௬௭.

பெரும்பிறிது - இறந்துபடுதல், 'பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇ' ௧௫௨.

பெரும்பேது - இறந்துபாடு, 'வெந்திறற் கூற்றம் பெரும்பே துறுப்ப' ௨௩௮.

பெருமிதத்தை - செருக்கினையுடையையாயிராநின்றாய், 'நினதென விலைநீ பெருமிதத் தையே' ௧௨௨.

பெருமிதம் - மிக்கமனச்செருக்கு, 'பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ' ௯௦.

பெருவங்கியம் - ஒருவகைவாத்தியம்; இது யானையின் துதிக்கைபோலும் வடிவையுடையது, 'கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்' ௧௫௨.

பெற்றிசின் - பெற்றாள், 'சீருடைய விழைபெற் றிசினே' ௧௧. பெற்றான், 'வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே' ௧௧.

பெறலருங்குரைத்து - பெறுதற்கரிது, 'அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே' ௫.

## பே.

பேகன் - வையாவிக்கோப்பெரும்பேகன்; இவன் ஒருவள்ளல், 'கடாஅ

யானைக் கலிமான் பேகன்' கசக; 'கடாஅ யானைக் கழற்காற் பேகன்' தசஉ; 'கைவள் ளீகைக் கடுமான் பேக' கசங; 'வயங்குபுகழ்ப் பேகன்' கசச; 'கடாஅ யானைக் கலிமான் பேக' கசரு; 'அடுபோர்ப் பேக' கசசு; 'பெருங்க ளுடன் பேகனும்' கருஅ.

பேணி - பாதுகாத்து, 'பேணித், தென் புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்' கூ.

பேர் - தோற்றப்பொலிவு, 'பேருடைய விழுக்கழஞ்சின்' கக.

பேரையம் - இஃது அரையமென்னும் நகரத்தின் ஒருபாகம், உ0உ.

பேழ்வாய் - பெரியவாய், 'பேழ்வா யுழுவை' ஙங; கருஉ.

பேறு - பெற்றபொருள், 'பேறியா தெ ன்னேன்' கருச.

## பை.

பைஞ்ஞிணம் - செவ்வியையுடையநிண ம், 'பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ளமலே' கஎஎ.

பைதல் - துன்பம், 'எவ்வங் கூர்க்கும் பைதன் மாக்களொடு' சக.

பைதறுகாலை - பசுமையற்றகாலம், 'கோ டை நீடிய பைதறு காலை' கஎச.

பைந்தடி - செவ்வித்தசை, 'புலவுநாற் றத்த பைந்தடி' கச.

பையாப்பு - துன்பம், உஉக.

பையென்றன - ஒளிமழுங்கின, 'பாடுநர் கடும்பும் பையென் றனவே' உஙஅ.

பையென - மெல்ல, 'பையென, வெ ன்னை வினவுதி யாயின்' சுங.

## பொ.

பொகுவல் - ஒருபறவை, 'செவிசெஞ் சேவலும் பொகுவலும்' உஙஅ.

பொங்க - மேன்மேற்கிளர, 'மெய்மலி யாவுதி பொங்க' கரு.

பொடிந்த - வெறுத்த, 'பொடிந்தநின் செவ்வி காட்டென' கசு0.

பொத்திய - மூட்டிய, 'கானவர் பொத் திய ஞெலிதீ விளக்கத்து' உசஎ.

பொத்து - புரை, 'பொத்தி னண்பிற் பொத்தியொடு கெழீஇ' உகஉ.

பொதி - பட்டை, 'பைங்கழை பொதி களைந் தன்ன விளர்ப்பின்' உருங.

பொதியம் - பொதியின்மலை, 'பொதிய மும் போன்றே' உ; 'தென்னம் பொ ருப்பன்' ஙங; 'கழுறொடி யாஅய் மழைதவழ் பொதியில்' கஉஅ; 'தென் னம் பொருப்பன்' உகரு.

பொதியில் - அம்பலம், 'பலிகண் மாறிய பாழ்படு பொதியில்' ருஉ.

பொது - மன்று, 'பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை' அக.

பொதுச்சொல் - பூமி பிறவேந்தருக்கும் பொதுவென்னும்வார்த்தை, 'போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ ன்' அ.

பொதுமொழி - உறுதியில்லாதவார்த்தை, 'நொதும லாளர் பொதுமொழி கொ ள்ளாது' ஙரு. சிறப்பில்லாதமொழி, 'எதின் மாக்கள் பொதுமொழி கொ ள்ளாது' ருஅ.

பொர - மாறுபட, 'கண்பொர விளங்கு நின் விண்பொரு வியன்குடை' ஙரு.

பொருத - பொரப்பட்ட, 'கறும்பொரு த செவ்வாயான்' ச.

பொருதல் - முட்டுதல், 'விண்பொருபு கழ் விறல்வஞ்சி' கக.

பொருது - சண்டைசெய்து, 'ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழிய' உ.

பொருந்தி - அடைந்து, 'வந்தடி பொ ருந்தி' க0.

பொருந்தில் - ஓரூர், ருங.

பொருநர் - சண்டைசெய்வார், 'பொ ருநர்க் கிருநிலத் தன்ன நோன்மை' கச. பகைவர், 'அருநரை யுருமிற் பொருநரைப் பொறு' ருஅ.

பொருநன் - அரசன், 'அறந்துஞ் சுறந் தைப் பொருநனை யிவனே' ருஅ; 'மன்பதை புரக்கு நன்னாட்டுப் பொ ருநன்' சுஅ. பொருவான், 'பொரு நனு மிளையன்' எஅ. வீரன், 'எம் முனு முளனொரு பொருநன்' அஎ.

பொருநை - ஆன்பொருந்தமென்னும் ஆறு; இது கருவூர்க்குச்சமீபத்திலோ டுவது, 'தண்பொருநைப் புனற்பா யும், விண்பொருபுகழ் விறல்வஞ்சி' கக; 'வஞ்சிப் புறமதி லலைக்குங், கல் லென்பொருநை மணலினும்' ஙஅஎ.

பொலம் - பொன், 'பொலம்பூந் தும் பை' உ; 'பொலங்குழை யுழிஞை' ரு0.

பொலிந்த - சிறந்த, 'தாழ்சடைப் பொ லிந்த வருந்தவத் தோர்க்கே' க.

பொழிந்து - பொழிந்தேன், 'கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்' உ0௲.

பொறி - இலக்கணம், 'பல்பொறிக் கொண்ட வேந்தெழி லகலம்' கசுக. இலாஞ்சனை, 'கோண்மாக் குயின்ற சேண்விளங்கு தொடுபொறி' ருஅ. எந்திரம், 'இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய, பெருங்கல் லடாரும்' கக. ஒளி, 'கண்பொறி போகிய' கசுக. கொளுத்து, 'புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய' க௲.

பொறுத்தல்-தாங்குதல், 'கொழுநிழ னெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்கு' ருஅ.

பொறை - சிறுகுவடு, 'அறையும் பொறையு மணந்த தலைய' ககஅ.

பொறையன் - சேரன், 'களங்கொள் யானைக் கடுமான் பொறைய' ரு௲.

பொறையாறு - ஓரூர், ௲கக.

பொன் - இரும்பு, 'பொன்னியற் புனைதோட்டி' கச; 'விளங்குபொன் னெறிந்த நலங்கிளர் பலகை' கரு; 'பொன்புனை திகிரி' உ௲.

## போ.

போகம் - நுகரும் இன்பம், 'போகம் வேண்டி' அ.

போகிய - ஒழிந்த, 'மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப' க0. ஓங்கிய, 'கள்ளி போகிய களரியம் பறந்தலை' உருஎ.

போந்தை - பனை, 'முழாவரைப் போந்தை' அரு.

போழ் - வார், 'போழ்தூண் டூசி' அஉ.

போழ்க - பிளக்கப்படுவதாக, 'போழ்கென் றவே' க௲உ.

போற்றார் - பகைவர், 'போற்றார்ப் பொறுத்தலும்' உ.

போன்ம் - போலும், 'போன்மென விரும்பி' கக.

போன்றன - ஒத்தன, 'இலக்கம் போன்றன' சு.

போன்று - ஒத்து, 'இமயமும் பொதியமும் போன்றே' உ.

## பௌ.

பௌவம் - கடல், 'தொன்றுமுதிர் பௌவம்' சு; 'இமிழ்திரைப் பௌவம்' அஅ.

## ம.

மகளிர் - பெண்டிர், 'மகளிர் மலைத்த லல்லது' க0.

மகிழ்சிறந்து - உண்டு, 'தண்கமழ் தேறன் மடுப்ப மகிழ்சிறந்து' உசு.

மகிழ்ந்து - உண்டு, 'வாங்கமைப் பழுனிய தேறன் மகிழ்ந்து' கஉகூ.

மங்குல் - இருட்சி, 'மங்குன் மாப்புகை' க0௲.

மங்கையர் - மகளிர், 'வாலிழை மடமங்கையர்' கக.

மஞ்ஞை - மயில், 'பழன மஞ்ஞை யுகுத்த பீலி' கரு; 'மஞ்ஞை - யொலி நெடும் பீலி' ரு0.

மட்டு - மது, 'வெப்புடைய மட்டுண்டு' உசு. மதுவைக்கும்சாடி, 'மட்டுவாய் திறப்பவும்' கக௲.

மடங்க - இறைஞ்ச, 'இகழ்பாடுவோ ரெருத்த மடங்க' ச0.

மடம் - பேதைமை, 'வாலிழை மடமங்கையர்' கக. மென்மை, 'தெறிநடை மடப்பிணை' உரு; 'மடத்தகை மாமயில்' கசரு; 'மடப்பிடி' கருக.

மடல் - பனங்கருக்கு, 'ஒழிமடல் விறகிற் கழிமீன் சுட்டு' உகூ.

மடவர் - யாதும் அறிவில்லாதார், 'மடவர் மெல்லியர் செல்லினும்' க0சு.

மடவரல் - மடப்பம், 'மடவர லுண்கண் வாணுதல் விறலி' அகூ.

மடவோன் - அறிவில்லாதோன், 'உள்ள மொள்ளிய மடவோன்' எ௲.

மடிவிலை - சோம்புதலையுடையாயல்லை, 'ஒடியா முறையின் மடிவிலை யாகி' உகூ.

மடுப்ப - ஊட்ட, 'ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து' ருசு.

மடை - ஆணி, 'மடைகலங்கி நிலைதிரிந் தனவே' கூஎ. கொளுத்து, 'மடை செறி முன்கைக் கடகம்' கரு0.

மண் - அணு, 'மண்டிணிந்த நிலனும்' உ.

மண்டி - மடுத்து, 'நுதிமுக மழுங்க மண்டி' ௲க. மிக்குச்சென்று, 'கடற்படை குளிப்ப மண்டி' சு.

மண்டிய - அடர்த்துச்செய்த, 'அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்' சுஉ.

மண்டிலம் - சூரியமண்டிலம் சந்திரமண்டிலம், 'யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்' அ. பார்வட்டம், 'பரிப்புச் சூழ்ந்த மண்டில மும்' ௲0.

மண்டை - பாணர்கையிலுள்ள ஏற்கும் பாத்திரம், 'கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யாரோ' ௧௦௩; 'பாணர் மண்டை நிறையப் பெய்மார்' ௧௧௫; 'பருஉக்கண் மண்டையொடு' ௧௨௫; 'ஏலாது கவிழ்ந்தவென் னிரவன் மண்டை' ௧௭௩.

மண்ணி - முழுகி, 'பனிக்கய மண்ணி' ௭௯.

மண்ணிவனை - மண்ணையுடைய, 'பகைவருண்ணு வருமண் ணினையே' ௨௦.

மண்ணுதல் - ஒப்பமிடுதல், 'மண்ணுறு மணி' ௧௪௭.

மணந்த - சேர்ந்த, 'அறையும் பொறையு மணந்த தலைய' ௧௧௮.

மணி - நீலமணி, 'ஒலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்' ௫௦.

மதவலி - மிக்கவலி, 'மைந்துடை மல்லன் மதவலி முருக்கி' ௮௦.

மதன் - மனவெழுச்சி, 'மண்டமர்ப் பரிக்கு மதனுடை நோன்றாள்' ௭௫. மிகுதி, 'மண்டமர் அட்ட மதனுடை நோன்றாள்' ௨௧௩. வலி, 'மதனுடை முழவுத்தோ ளோச்சி' ௫௭.

மதி - சந்திரன், 'உவவுமதி' ௩.

மதுகை - வலி, 'மதுகை யின்றி' ௭௪.

மதுரை - பாண்டியர்களின் நகரம், ௫௯.

மம்மர் - மயக்கம், 'மம்மர் நெஞ்சத் தெம்ம னோர்க்கு' ௫௩.

மயக்கி - கலந்து, 'பாற்பெய் புன்கந் தேனொடு மயக்கி' ௩௪.

மயங்கிய - கலந்த, 'தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து' ௧௯.

மரபு - தன்மை, 'தெறலரு மரபினின் கிளையொடும் பொலிய' ௧௨௯. முறைமை, 'ஈண்டுசெலன் மரபிற் றன்னியல் வழாது' ௨௫; 'உறுமுறை மரபின்' ௯௮. மேம்பாடு, 'இசைமரபாக' ௨௧௭.

மரீஇய - மருவிய, 'பகைப்புல மரீஇய தகைப்பெருஞ் சிறப்பின்' ௯௪.

மரீஇயோர் - மருவியவர், 'மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே' ௧௩.

மருக - மரபினுள்ளாய், 'ஓடாப் பூட்கை யுரவோன் மருக' ௧௨௯.

மருகனை - மரபினுள்ளாய்; 'பலவும் விடுத்தோன் மருகனை' ௫௯.

மருங்கு - பக்கம், 'கவிழ்மணி மருங்கின்' ௩; 'கனையெரி யுரறிய மருங்கு நோக்கி' ௨௩.

மருங்குல் - வயிறு, 'பசிபடு மருங்குலை' ௨௬௦.

மருட்கை - வியப்பு, 'நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே' ௨௧௭.

மருண்டு - பயந்து, 'புன்றலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி' ௪௯.

மருதம் - காலைப்பண், 'மாலை மருதம் பண்ணி' ௧௪௯.

மருந்து - பரிகாரம், 'மருந்தில் கூற்றத் தருந்தொழில்' ௩; 'மருந்தில் கணிச்சி' ௪௨.

மருப்பு - கொம்பு, 'கொல்லேற்றின் மருப்புப்போன்றனை' ௪. யாழ்க்கோடு, 'நல்லிசை யாழ்மருப்பு' ௨௪௨.

மருள் - எண்வகைமெய்ச்சத்துளொன்று; அது அறிவின்றிமயங்கியிருப்பது, 'மாவு மருளும்' ௨௮. ஒப்பு, 'எரிமருளவிர்சடை' ௫௯; 'மதிமருள் வெண்குடை' ௭௪.

மருள - வியப்ப, 'தாள்படு செல்வங் காண்டொறு மருளக்' ௧௯௯.

மரை - தாமரை, 'மரையிலை போலமாய்ந் திசினோர் பலரே' ௨௭.

மல்லல் - வளம், 'மல்லன் மூதூர்' ௧௮.

மலங்கு - ஒருவகைமீன், 'மலங்குமிளிர் செறு' ௯௧.

மலர்தல் - பரத்தல், 'மலர்தா யத்து' ௧௭.

மலைக்குநர் - மாறுபடுவோர், 'சிலைத்தாரகல மலைக்குந ருளரெனின்' ௯௬.

மலைத்தல் - மாறுபடுத்தல், 'மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப' ௧௦.

மலைத்தனை - பொருதாய், 'மலைத்தனை யென்பது நாணுத்தக வுடைத்தே' ௯௬.

மலைய - சூட, 'பாணர் தாமரை மலையவும்' ௧௨.

மலையன் - ஒருவள்ளல், 'காரி யூர்ந்து பேரமர்க் கடந்த, மாரி யீகை மறப் போர் மலையனும்' ௧௫௮; இவன், மலையமான் திருமுடிக்காரியென்றும் சொல்லப்படுவான்.

மழகளிறு - இளங்களிறு, 'மைந்துமலிந்த மழகளிறு' ௨௨.

மழலை - இளஞ்சொல், 'புதல்வர்தம் மழலை' ௯௨.

மழவர் - வீரர், 'மழவர் பெரும' ௯௦.

மழித்தலை - மட்டையாகியதலை, 'கொய்ம்மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய' உகூக.

மழுங்க - தேய, 'நுதிமுக மழுங்க' ௬௯.

மழுங்கிய - தேய்ந்த, 'நுதிமழுங்கிய வெண்கோடு' ச.

மள்ள - வீர, 'முளூஉ வள்ளூர முணக்கு மள்ள' உகங.

மள்ளர் - வீரர், 'மள்ளர், மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப' கഠ; 'உடன்று மேல் வந்த வம்ப மள்ளரை' எஎ.

மறம் - ஆண்மை, 'மறத்தகை மைந்தரொடு' சுரு. வீரம், 'மறத்திற் கொல்களிறு' கூ; 'மறம்பாடிய பாடினி' கக.

மறலி - கூற்றம், 'மறலியன்ன களிற்றுமிசை யோனே' கரு.

மறவை - மறத்தையுடையாய், 'மறவையாயிற் போரொடு திறத்தல்' சச.

மறுகு - தெரு, 'தாதெரு மறுகு' உகரு.

மறுத்த - மறுத்தற்குஏதுவாகிய, 'மாமறுத்த மலர்மார்பின்' எ.

மறை - வேதம், 'மறைநவி லந்தணர்' க; 'நான்மறை முனிவர்' சு.

மறைக்கொண்ட - மறைத்தற்குக்கொண்ட, 'வெயின்மறைக் கொண்ட வுருகெழு சிறப்பின் - மாலை வெண்குடை' சுഠ.

மறைக்கொண்டன்றோ - மறைத்தற்குக் கொண்டதோ, 'வெண்குடை - வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே' ௬௫.

மன் - நிலைபேறு, 'மன்னுயிர்ப் பன்மையும்' கக. மிகவும், 'சிறந்தன்று மன்னே' எரு.

மன்பதை - உயிர்ப்பன்மை, 'மன்பதை காக்குநின்புரைமை' உகഠ.

மன்ற - தெளிவாக, 'நோற்றோர் மன்ற நின்பகைவர்' உசு; 'வல்லை மன்ற நீநயந் தளித்தல்' ருக. நிச்சயமாக, 'சிறுவரை - சென்றுநின் றோர்க்குந் தோன்று மன்ற' ககச.

மன்றம் - பொதியில்=பொதுவிடம், 'இரத்தி நீடிய வகன்றலை மன்றம்' ௬ச; 'மன்றப் பலவின்' கஉஅ. வெண்டு வெளி, 'பேரிசை மூதூர் மன்றங் கண்டே' உஉഠ.

மன்னுக - நிலைபெறுவாயாக, 'மன்னுக பெருமநீ நிலமிசை யானே' சு.

## மா.

மா - எண்வகையெச்சத்து ளொன்று; அது விலங்குவடிவாகப் பிறப்பது, 'மாவு மருளு முளப்பட' உஅ. ஒரு மாவெண், 'மாநிறை வில்லதும் பன்னாட் காகும்' கஅச. கருமை, 'மாக்கடல்' ச; 'மாக்கழி மலர்ந்த நெய்தல்' சஅ. குதிரை, 'மாவே, எறிபதத்தா னிடங்காட்ட' ச; 'நிமிர்பரிய மாதாங்கவும்' கச. திருமகள், 'மாமறுத்த மலர்மார்பின்' எ. மாமைநிறம், 'அம்மா வரிவை' கசஎ.

மாகம் - ஆகாயம், 'மாக விசும்பு' ௬௫.

மாங்குடி - ஒரூர், உச.

மாங்குடிமருதன் - மாங்குடி மருதனார்; இவர் சங்கப்புலவருள் ஒருவர்; பத்துப்பாட்டுள் மதுரைக்காஞ்சி நூலாசிரியர் இவரே, 'ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன் றலைவனாக, வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற், புலவர்பா டாது வரைக வென் னிலவரை' எஉ.

மாட்சி - தன்மை, 'வினைமாட்சிய விரைபுரவி' கசு.

மாட்டிய - கொளுத்திய, 'பொறியறிந்து மாட்டிய' கக.

மாதிரம் - திசை, 'மாதிரத் தீண்டிய' கഠ.

மாமறுத்தமலர்மார்பு - திருமகள் பிறர் மார்பை மறுத்தற்கேதுவாகிய பரந்த மார்பு, எ.

மாய்ந்திசினோர் - மாய்ந்தோர், 'மாய்ந்திசினோர் பலரே' உஎ.

மாய்ந்தென - மாய, 'தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல்செல் லாது' ருஅ.

மாயா - மறவாத, 'மாயா வுள்ளமொடு' கருக.

மாரி - மழை, 'மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்' ௬௫.

மால்பு - கண்ணேணி, 'மால்புடை நெடுவரை' கஎ௫.

மாவன் - ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியனுடைய நண்பருளொருவன்; இவனுடைய ஊர் மையலென்பது, 'பொய்யாயாணர் மையற் கோமான், மாவனும்' எக.

மாவிலங்கை - ஓய்மாநல்லியக் கோடனூர், 'இழுமென வொலிக்கும் புனலம் புதவிற் பெருமா விலங்கைத்

தலைவன் சீறியா, ழில்லோர் சொன்ம
லை நல்லியக் கோடனை, யுடையை
வாழியெற் புணர்ந்த பாலே' ௧௭௯.
மாறன் - பாண்டியன், 'வேந்துமேம் ப
ட்ட பூந்தார் மாற' ௫௫; 'கடுமான்
மாற மறவா தீமே' ௧௯௮.
மாறு - இறந்துபாடு, 'நகாலென வந்த
மாறே' ௨௫௩. ஏதுப்பொருள் படு
வதோரிடைச்சொல், 'அனையை யா
கன் மாறே' ௪. பரிசு=விதம், 'விள
ங்கக் கேட்ட மாறுகொல்' ௫௦.
மாறோக்கம் - கொற்கையைச் சூழ்ந்த
நாடென்பர்; இதுமாறோகமெனவும்
வழங்கும், ௩௭, ௩௯, ௧௨௯, ௨௮௦.

## மி.

மிச்சில் - ஒழிபொருள், 'கொள்வது
கொண்டு கொள்ளா மிச்சில்' ௨௩.
மிசை-மேடு, 'அவலா கொன்றோ மிசை
யா கொன்றோ' ௧௮௭. மேல், 'மறலி
யன்ன களிற்றுமிசை யோனே' ௧௩.
மிசைவு - உணவு, 'அல்கு மிசைவாகும்'
௨௩௯.
மிஞிறு - தேனீ, 'மிஞிறூர்க்குங் கமழ்க
டாம்' ௨௨.
மிடறு - கழுத்து, 'கறைமிடறு' ௧.
மிதவை - கூழ், 'அம்புளிமிதவை' ௨௧௫.
மிலைந்த - சூடிய, 'மெல்லிணர்க் கண்
ணி மிலைந்த மைந்தர்' ௨௪.
மிலைந்து - சூடி, 'உழிஞைப் பவரொடு
மிலைந்து' ௭௭.
மிழலைக்கூற்றம் - இது வேள் எவ்வியினு
டையது; கூற்றம் - நாட்டின் உட்பிரி
வுக்கு ஓர்பெயர்; 'ஓம்பா வீகை மா
வே ளெவ்வி, புனலம் புதவின் மிழலை
யொடு' ௨௪.
மிளிர்தல் - பிறழ்தல், 'மலங்குமிளிர்
செறு' ௯௧; 'இருநில மிளிர்ந்திசி
னாஅங்கு' ௧௩௩.
மிளிர்ந்திட்ட - மறிக்கப்பட்ட, 'படை
மிளிர்ந் திட்ட யாமையும்' ௪௨.
மிளிர - பிறழ, 'கொழுங்கிழங்கு மிளி
ரக் கிண்டி' ௧௯௮.
மிளை - காவற்காடு, 'கதிர்நுழை கல்லா
மரம்பயில் கடிமிளை' ௨௧; 'போரரு
ங் கடிமிளை' ௧௮௧.

## மீ.

மீக்கூற்றம் - புகழ், 'பொதுமீக் கூற்ற
த்து நாடுகிழ வோயே' ௧௩௫.
மீமிசை - மேல், 'கொல்களிற்று மீமி
சைக் கொடி' ௯.
மீளி - மறம், 'மீளி முன்பி னாளி' ௨௦௭.
மீன் - நட்சத்திரம், 'பன்மீ னப்பட்
டிங்கள் போலவும்' ௧௩.

## மு.

முக்காவனாடு - ஓர்நாடு, ௮௦.
முக்கி - உண்டு, 'பாசவன் முக்கி' ௯௩.
முகம் - இடம், 'இனிய செய்திநின் னார்
வலர் முகத்தே' ௧௨.
முகிழ்த்தல் - அரும்புதல்.
முகையலூர் - இது சோழநாட்டிலுள்ள
தோரூர், ௧௮௧, ௨௯௫.
முசிறி - ஓரூர், 'முழங்கடன் முழவின்
முசிறி யன்ன' ௩௪௩.
முட்டு - குறை, 'மூவேழ் துறையு முட்
டின்று போகிய' ௧௯௯.
முடியர்-முடிப்பானாக, 'அருந்தொழின்
முடியரோ திருந்துவேற் கொற்றன்'
௧௬.
முண்டகம் - கடல்முள்ளி, 'முண்டகக்
கோதை யொண்டொடி மகளிர்'
௨௪.
முணங்குநிமிர்தல்-மூரிநிமிர்தல், 'முண
ங்குநிமிர் வயமான்' ௫௨.
முணங்குநிமிர்ந்து-மூரிநிமிர்ந்து, 'அண
ங்கருங் கடுந்திற லென்னை முணங்கு
நிமிர்ந்து' ௭௮.
முத்தி - முத்தங்கொண்டு, 'புதல்வர்
பூங்கண் முத்தி' ௪௧.
முத்தூற்றுக்கூற்றம் - இது பழையவே
ளிர்களுடையது, 'பொன்னணி யா
னைத் தொன்முதிர் வேளிர், குப்பை
நெல்லின் முத்தூறு தந்த' ௨௪. இது
முத்தூர்க்கூற்றமெனவும் வழங்கும்.
முதல் - இடம், 'சுரமுதல் சேர்ந்த சில்
வளை விறலி' ௯௦.
முதற்று - முதலாகவுடையது, 'அற
நெறி முதற்றே யரசின் கொற்றம்'
௫௫.
முதாரி - முதுமை, 'முதாரிப் பாண'
௧௩௮.
முதிர்பு-முதிர்ந்து, 'சூன்முதிர்பு' ௧௯௧.
முதிரம் - ஒருமலை, 'அதிரா யாணர் மு
திரத்துக் கிழவ, இவண்விளங்கு சிற
ப்பி னியறேர்க் குமண' ௧௫௮; 'நட்
டோர் நட்ட நல்லிசைக் குமணன்,
மட்டார் மறுகின் முதிரத் தோனே'

௧௬௦ ; 'பழந்தூங்கு முதிரத்துக் கிழவன், திருந்துவேற் குமணன்' ௧௬௯.
முந்நீர் - கடல்; ஆற்றுநீரும் ஊற்றுநீரும் மழைநீருமுடையதென்பதுபொருள், 'முந்நீர் விழவி னெடியோன்' ௯; 'முந்நீர் வழங்கு நாவாய்' ௧௯.
முந்துறுத்து - முன்னிட்டுக்கொண்டு, 'பற்று மாக்களிற் பரிவுமுந் துறுத்து' ௨௯.
முந்தை - முன்னே, 'முந்தை நிற்பின்' ௧௦.
முயங்கினேன் - புல்லினேன், 'முயங்கினே னல்லனோ யானே' ௧௯.
முரஞ்சியூர் - ஓரூர், ௨.
முரண் - மாறுபாடு, 'கடுமுரண் முதலை' ௯௭. வலி, 'முரணுடை யுள்ளம்' ௨௦௬.
முரணிய - மாறுபட்ட, 'தீமுரணிய நீரும்' ௨.
முருக்கி - கெடுத்து, 'தோள்வலி முருக்கி' ௧௮ ; 'மதவலி முருக்கி' ௮௦. முறித்து, 'காப்புடைய வெழுமுருக்கி' ௧௪.
முருகு - தெய்வம், 'முருகுமெய்ப் பட்ட புலைத்தி' ௨௫௧.
முழவு - தண்ணுமை, 'மண்கனை முழவின்' ௧௫. மத்தளம், 'விசிகூடு முழவின்' ௧௨௮.
முழுநெறி - புறவிதழொடிக்கப்பட்ட முழுப்பூ, 'கூம்பவிழ் முழுநெறி' ௧௧௬.
முள்ளூர் - ஓரூர், ௧௭௪.
முள்ளூர்மலை - மலையமான்திருமுடிக்காரியின்மலை, 'பயன்கெழு முள்ளூர் மீமிசைப், பட்ட மாரி யுறையினும்' ௧௨௯; 'பறையிசை யருவி முள்ளூர்ப் பொருந' ௧௨௬ ; 'எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை' ௧௭௪,
முளிதல் - உலர்தல், 'முளிபுற்கானங் குழைப்ப' ௧௬௦.
முற்றி-முடித்து, 'வேள்வி முற்றி' ௧௫.
முற்றிய - முடித்த, 'பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே' ௨௧.
முற்றுக - சூழ்வதாக, 'பாண்முற் றுக நின் னாண்மகி ழிருக்கை' ௨௯.
முறை - அடைவு, 'முறைமுறை யாடுநர் கழியுமிவ் வுலகத்து' ௨௯. ஊழ், 'ஆருயிர் - முறைவழிப் படூஉ மென்பது' ௧௧௨. நீதி, 'முறைவேண்டு பொழுதில்' ௯௫.

முன்ப - வலியையுடையோய், 'செருச்செய் முன்ப' ௪௧.
முன்பு - முன்னிடம், 'முன்பு துரந்து' ௧௪. வலி, 'முன்பிற் - கானக நாடனை' ௫ ; 'கடுந்தார் முன்பு தலைக்கொண்மார்' ௧௫ ; 'மீளி முன்பி னாளி' ௨௦௭.
முன்றுறை - துறைமுன்னர், 'முன்றுறை நுண்பல மணலினும்' ௧௯௬.
முன்னம் - மனக்குறிப்பு, 'முன்ன முகத்தி னுணர்ந்து' ௯.
முன்னனை - முன்னேநிற்பை, 'தானை முன்னனை யெறுஅ' ௧௬௧.
முன்னீர்-நிலத்திற்குமுன்னாகியநீர், 'முன்னீர் விழவி னெடியோன்' ௯.
முன்னூர் - ஊர்முன், 'முன்னூர்ப் பழுனிய கோளியா லத்து' ௨௫௪.
முனித்தலை - குடுமித்தலை, 'முனித்தலைப் புதல்வர்' ௨௫௦.
முனிவர் - அந்தணர், 'நான்மறை முனிவர்' ௬.
முனிவிலை - வெறுப்பில்லாய், 'முனிவிலை.........நடத்தி'
முனிவு - வெறுப்பு, 'முனிவிலர்' ௧௮௨.
முனைஇ-வெறுத்து, 'பனைநிலை முனைஇ' ௨௯ ; 'அளையகமுனைஇ' ௫௨.
முனையின் - வெறுப்பின்; 'செஞ்ஞாயிற்று வெயின்முனையின்' ௨௪.

## மூ.

மூதாளர் - முதியோர்; 'நரைமூ தாளர்' ௫௨.
மூதிற்பெண்டிர் - முதிய மறக்குடியிற் பிறந்த பெண்டிர், 'மூதிற் பெண்டிர் கசிந்தழ நாணி' ௧௯.

## மெ.

மெய் - அறிவு, 'மெய்ம்மறந்து பட்ட வரையாப் பூசல்' ௨௫.
மெய்புகுகருவி - கவசம், ௧௯.
மெய்ம்மறந்து - அறிவுமயங்கி, 'மெய்ம்மறந்து பட்ட வரையாப் பூசல்' ௨௫.
மெல்லிய-மென்மையையுடையன, 'மெல்லிய பெரும தாமே' ௧௪.
மெல்லியர் - அற்பகுணங்களையுடையர், வறுமையுற்றோர் ; 'மடவர் மெல்லியர் செல்லினும்' ௧௦௬.
மென்புலம் - மருதமும்நெய்தலும், 'மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந' ௪௨.

### மே.

மேந்தோன்றல் - மேம்பட்டதோன்றல், 'இசைமேந் தோன்றல்' கநுக.

மேந்தோன்றிய - மேம்பட்ட, 'இசை மேந் தோன்றிய வண்மை' கநுஅ.

மேவலை - விரும்புதலுடையை, 'கொள் ளை மேவலை' எ.

### மை.

மை - இருட்சி, 'மைபடுமருங்குல்' ௫0. செம்மறியாடு, 'மையூன் மொசித்த வொக்கலொடு' கூசு.

மைந்து - மறம், 'மைந்துபட் டன்றே' கரு. வலி, 'நாடல் சான்ற மைந்தி னோய்' கநு; 'மைந்துடைக் கழை தின் யானை' எரு.

மைம்மீன் - சனிமீன், 'மைம்மீன் புகை யினும்' ககள.

மையல் - பாண்டிநாட்டுள்ளதோரூர்; இது மாவனென்பவ னுடையது, 'பொய்யா யாணர் மையற் கோமான், மாவனும்' எக.

மைவிடை - ஆட்டுக்கிடாய், 'மைவிடை வீழ்ப்பவும்' ககரு. செம்மறிக் கிடா ய், 'மைவிடை வீழ்ப்பு' ருரு.

### மொ.

மொசித்த - தின்ற, 'மையூன்மொசித்த' கூசு.

மொய்ப்ப - நெருங்க, 'வாளோர் மொ ய்ப்ப' கரு.

மொழி - வார்த்தை, 'பிறர்பழி கூறு வோர் மொழிதே றலையே' க0.

மொழிவல் - சொல்லுவேன், 'நின்னொ ன்று மொழிவல்' ரு.

### மோ.

மோசி - ஒருபுலவர்; இவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரென்றும் சொல்லப்படுவோர், 'இருந்துமொழி, மோசி பாடிய வாயும்' கநுஅ.

மோவாய் - தாடி, 'குச்சி னிரைத்த குரூஉமயிர் மோவாய்' உருஎ.

### யா.

யா - யாவை, 'யாபல கொல்லோ பெ ரும' கரு.

யாங்கனம் - எவ்வாறு, 'யாங்கன மொ த்தியோ வீங்குசெலன் மண்டிலம்' அ; 'யாங்கன மொழிகோ வோங்கு வாட் கோதையை' சக.

யாணர் - புதுவருவாய், 'யாணர் வைப்பி னன்னாட்டுப் பொருந' உ.

யாணர்த்து - புதுவருவாயை யுடைத்து, 'பெருவிறல் யாணர்த் தாகி' சஉ.

யாத்த - பிணித்த, 'யாத்த நண்பினன்' உகசு.

யாமங்கொள்பவர் - இடையாமத்து ஊர் காப்பவர், 'யாமங் கொள்பவர் சுடர் நிழற் கதூஉம்' ருசு.

யாமம் - இடையாமம், 'யாமத்துந் தனி மகன் வழங்காப் பணிமலர்க் காவின்' ருரு.

யாமை - ஆமை, 'படைமிளிர்ந் திட்ட யாமையும்' சஉ; 'அரிக்குட ரரியின் யாமை மிளிர' உசக.

யாய் - தாய், 'முதிர்வின ளியாயும்' கநுக.

யாவணது - எவ்விடத்துள்ளது, 'இருள், யாவண தோநின் னிழல்வாழ் வோர் க்கே' க0உ.

யாவது - எங்ஙனமாவது, 'அமர்மிக வியா வது' ருஉ.

யாவிர் - எப்பெற்றிப்பட்டீர், 'யாவி ரா யினும்' அஅ.

யான்கண்டனையர் - யான்கருதியவதனை யேகருதுவர், 'யான்கண் டனையரென் னிளையரும்' ககக.

### யூ.

யூபம் - யாகத்தூண், 'யூப நட்ட வியன் களம் பலகொல்' கரு; 'யூப நெடுந் தூண் வேத வேள்வி' உஉச.

### வ.

வசை - பழி, 'வசையில் வாழ்க்கை' க0.

வஞ்சி - கருவூர், 'விண்பொருபுகழ் விற ல்வஞ்சி' கக; 'பூவா வஞ்சியுந் தரு குவ னொன்றோ' ருஉ; 'வாடா வஞ்சி வாட்டுநின்' ருக; 'வஞ்சி முற்றம் வயக்கள னாக' ருஎரு; 'வஞ்சிப் புற மதி லலைக்கும், கல்லென் பொருநை' ருஅஎ. பகைமேற்செலவு, 'பாடினி பாடும் வஞ்சிக்கு' கரு.

வட்கர் - குற்றம், 'வட்கர் போகிய வள ரிளம் போந்தை' க00.

வட்கார் - பகைவர், க00.

வட்டி - கடகம், 'மான்றசைச் சொரிந்த வட்டி' ருரு.

வட்டித்து - சுழற்றி, 'மருந்தில் கணிச்சி வருந்தவட் டித்து' சஉ.

வடமலை - இமயமலை, 'வடமலைப் பெயர் குவை யாயின்' ௬௭.

வடமீன் - அருந்ததி, 'வடமீன் புரையுங் கற்பின்' ௧௨௨.

வடாஅது-வடக்கின்கண்ணது, 'வடாஅது பனிபடு நெடுவரை' ௬.

வடி - திருத்தம், 'வானுட்கும் வடி நீண் மதில்' ௧௮. வடித்தல், 'வடிநவிலினவி யம்' ௨௬.

வடிந்த - அழகுபெற்ற, 'வடுவின்று வடிந்த யாக்கையன்' ௧௮௦.

வடியா - திருந்தாத, 'வடியா நாவின்' ௬௭.

வடு - தழும்பு, 'சாப நோன் ஞாண் வடுக்கொள வழங்கவும்' ௧௪.

வண்ணம் - அழகியநிறம், 'வண்ணமார்பு' ௧. நிறமுடையகலவை, 'வண்ண நீவிய' ௯௨.

வணர் - வளைவு, 'வணர்கோட்டுச் சீறியாழ்' ௧௫௫.

வந்தனம் - வந்தேம், 'எய்தவந் தனம் யாம்' ௪௦.

வந்திசின் - வந்தேன், 'காண்கு வந்திசிற் பெரும' ௧௭. 'எந்தைநிற் காண்குவந் திசினே' ௧௨௫.

வம் - வா, 'நீயும் வம்மோ' ௧௮௦.

வம்பலர் - வழிபோவார், 'வெங்கால் வம்பலர் வேண்டுபுலத் திறுத்தவும்' ௨௯௦.

வம்பு - கச்சு, 'வம்பணி யானை' ௯௭. நிலையின்மை, 'எள்ளி வந்த வம்ப மள்ளர்' ௭௮; 'வம்ப மள்ளரோ பலரே' ௭௯. புதுமை, 'வம்பப் பதுக்கை' ௩.

வம்மின் - வாரீர், 'பாடுகம் வம்மினோ பரிசின் மாக்கள்' ௯௨.

வயம் - வலி, 'வயவேந்தன்' ௧௧; 'வயமான் றோன்றல்' ௬௪.

வயமான் - புலி, 'முணங்குநிமிர் வயமான்' ௫௨.

வயவர்-வீரர், 'திறனறி வயவரொடு' ௨௦.

வயவு-வேட்கைநோய், 'வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது, பகைவ ருண்ணா வருமண் ணினையே' ௨௦.

வயிரியர் - கூத்தர், 'பசும்பொன் வயிரியர்க் கீத்த' ௯; 'வயிரிய, ரின்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே' ௧௬௪.

வயின் - முறை, 'வயின்வயி, னுடன்று மேல் வந்த வம்ப மள்ளரை' ௭௭.

வரம்பு - எல்லை, 'வரம்பி ருனை' ௧௬.

வரால் - ஒருமீன், இது பெருத்தவடிவமுடையது, 'நுண்ணாரற் பருவரால்' ௧௮.

வரி - எழுத்து, 'வல்லோன் றைஇய, வரிவனப் புற்ற வல்விப் பாவை' ௩௩. ஒருவகைப்பொருள், 'வரிநவில் பனுவல்' ௧௩௫. வண்டல், 'வரிமணற் புனை பாவைக்கு' ௧௧.

வரிசை - சிறப்பு, 'ஆடுகொள் வரிசைக் கொப்ப' ௫௩. தம்மைப் புரப்போரால்வருஞ்சிறப்பு, 'இவரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை' ௬௭. தரம், 'வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு' ௧௮௪; 'வருகென வேண்டும் வரிசை யோர்க்கே' ௨௦௯. மேம்பாடு, 'வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப், பரிசிலர்க்கு' ௨௦௬.

வரிவயம் - புலி, 'வரிவயம் பொருத வயக்களிறு போல' ௧௦௦.

வருதி - வருவை, 'மாறி வருதி' ௮.

வருநர் - விருந்தினர், 'வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை' ௧௦.

வருவல் - வந்தேன்; காலமயக்கம், 'கண்டனென் வருவல்' ௨௧.

வரை - எல்லை, 'புலவரை யிறந்த புகழ்சா லேன்றல்' ௨௧; 'சிறுவரை சென்றுநின் றோர்க்கும்' ௧௧௪. மலை, 'பனிபடு நெடுவரை' ௬.

வரைதி - கூறுபடுப்பை, 'பொழுதெனவரைதி' ௮.

வரைப்பு - எல்லை, 'நிலவுக்கடல் வரைப்பின் மண்ணகம்' ௩.

வரையா - அளவில்லாத, 'மெய்ம்மறந்து பட்ட வரையாப் பூசல்' ௨௫. மிகுதிகுறைபடாமல்வழங்கும், 'வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை' ௧௦.

வரையாவீகை - எப்பொருளையும் எல்லார்க்கும் வரையாதுகொடுக்கும் வண்மை, 'வரையா வீகைக் குடவர் கோவே' ௧௭.

வல் - சூதாடுகருவி, 'வல்லி னல்லகம்' ௫௨. வல்ல, 'கொளைவல் பாண்மகன்' ௧௧. விரைவு, 'வழிபடு வோரை வல்லறி தீயே' ௧௦; 'வல்லே நின்வயிற் கிளக்குவ மாயின்' ௧௨௬.

வல்சி-உணவு, 'துழந்த வல்சியின்' ௨௬. வளைகதிர், 'வல்சி கொண்டளை மல்கவைக்கு, மெலிமுயன் றனையர்' ௧௯௦.

வல்லாங்கு - சதுரப்பாடு, 'வல்லாங்கு வாழ்தும்' ௧௬௩. வல்லபடி, 'வல்லாங்குப் பாடி' ௪௭.

வல்லார் - ஒரூர், 'வலாஅ ரோனே வாய்வாட் பண்ணன்' ௧௮௧. வல்லமையில்லாதவர், 'வல்லா ராயினும் வல்லுந ராயினும்' ௨௭; ௫௭.

வல்லார்கண்ணி - கற்றப்பட்டகண்ணி, ௨௫௨.

வல்லாள - வலியவாண்மையையுடையோய், 'நள்ளா தார்மிடல் சாய்த்த வல் லாள' ௧௨௫.

வல்லாளனை - வலிய ஆண்மையையுடையை, 'அடிபொலியக் கழறைஇய வல்லாளனை' ௪௰.

வல்லினும் - அறிவேனாயினும், 'வல்லினும் வல்லே னாயினும்' ௧௬௧.

வல்லுநர் - வல்லமையையுடையவர், 'வல்லா ராயினும் வல்லுந ராயினும், ஆங்கது, வல்லுநர் வாழ்ந்தோ ரென்ப' ௨௪; ௨௭; ௫௭.

வல்லேம் - வல்லமை யில்லேம், 'வல்லே மல்லே மாயினும்' ௧௨௬.

வல்லை - வல்லமையுடையாய், 'அருளவல்லை யாகுமதி' ௨௭; 'வல்லை மன்ற நீநயந் தளித்தல்' ௫௧.

வலக்கும் - சூழும், 'வயலுழை மருதின் வாங்குசினை வலக்கும்' ௫௨.

வலந்த - சூழ்ந்த, 'இழைவலந்த பஃறுன்னத்து' ௧௩௬.

வலம் - வலி, 'தாள்வலம் வாழ்த்த' ௨௪. வெற்றி, 'வாள்வலந்தர மறுப்பட்டன' ௪; 'எழுவர் நல்வலங் கடந்தோய்' ௧௧; 'ஏற்றுவல னுயரிய' ௫௬; 'வலம்படு வாய்வாள்' ௯௧.

வலவன் - தேர்ப்பாகன், 'வலவ னேவா வான வூர்தி' ௨௭.

வலித்த - கருதிச்செய்யப்பட்ட, 'தச்சன், திங்கள் வலித்த காலன் னோனே' ௮௭.

வலியுறுக்கும் - இறுகப்பிடிக்கும், 'வளன்வலி யுறுக்கு முளமி லாளரொடு' ௧௯௰.

வலை - யாகபத்தினிகள் நெற்றியிலணிந்துகொள்ளுவது; இதனைச்சாலகமென்பர், 'அறம்புகழ்ந்த வலைசூடி' ௧௬௬.

வழங்க - அசைய, 'மழகளிறு, கந்து சேர்பு நிலைஇ வழங்க' ௨௨. செலுத்த, 'சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்' ௧௪.

வழங்கும் - இயங்கும், 'முந்நீர் வழங்கும் நாவாய்' ௧௩.

வழாஅது - பிழையாமல், 'ஈண்டுசெலன் மரபிற் றன்னியல் வழாஅது' ௨௫.

வழி - வழிபாடு, 'வலியரென வழிமொழியலன்' ௨௯௧.

வழிநாள் - பின்வருநாள், 'வழிநாட் கிரங்குமென் னெஞ்சம்' ௧௭௬.

வழிபடுவோர் - வழிபட்டுநடப்போர், 'வழிபடு வோரை வல்லறி தீயே' ௧௰.

வழிமொழிந்து - வழிபாடுசொல்லி, 'வையங் காவலர் வழிமொழிந் தொழுக' ௮.

வழிமொழிய - வழிபாடுகூற, 'தொன்றுபட்டு வழிமொழிய' ௧௭.

வழு - பாதகம், 'வழுவாய் மருங்கிற் கழுவாயு முள' ௯௪.

வழுதி - பாண்டியன், 'கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி' ௩; 'சினப்போர் வழுதி' ௫௧; 'தாடோய் தடக்கைத் தகைமாண் வழுதி' ௫௯.

வழை - சுரபுன்னை, 'வழையொடு நீடி' ௧௫௮.

வள்பு - வார், 'மாசற விசித்த வார்புறு வள்பின்' ௫௰.

வள்ளி - வளை, 'ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்' ௯௩.

வள்ளியோர் - வண்மையையுடையோர், 'வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி' ௪௭.

வள்ளூரம் - தசை, 'முழூஉ வள்ளூர முணக்கு மன்ன' ௨௧௧.

வளம் - செல்வம், 'வளங்கெழு வைப்பின்' ௭௧.

வளவன் - சோழன், 'இயறேர் வளவ' ௭; 'பெருவிறல் வளவன்' ௧௭௪; 'திண்டேர் வளவற் கொண்ட கூற்றே' ௨௨௬.

வளி - காற்று, 'விசும்பு தைவரு வளியும்' ௨; 'வளிவழங்கு திசையும்' ௨௰; 'வளிமிகின் வலியு மில்லை' ௫௧.

வளைஇ - சூழ்ந்து, 'முழுவதும் வளைஇ' ௧௮; 'வையகமுழுதுடன் வளைஇ' ௬௧.

வளைஇய - சூழப்பட்ட, 'இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கை' ௧௧.

வறம் - நீரில்லாமை, 'கயத்திட்ட வித்து வறத்திற் சாவாது' ௧௩௭. வற்கடம், 'பெருவறங் கூர்ந்த வேனிற் காலை' ௨௨௪.

வறல் - சுள்ளி, 'வெண்கிடை யென்றூழ் வாடுவறல் போல' எரு.

வன்கண்மை - தறுகண்மை, 'வன்கணாடவர்' கூ.

வன்புலம் - குறிஞ்சியும் முல்லையும், 'வன்புலக் கேளிர்க்கு' சஉ.

வனப்பு - அழகு, 'செவ்வானத்து வனப்புப் போன்றன' ச.

## வா.

வாக்க - வடிக்க, 'வாக்க வுக்க தேக்கட் டேறல்' ககரு.

வாக்கல் - வடிக்கப்பட்டசோறு, 'கவைக்கதிர் வரகி னவைப்புறு வாக்கல்' உகரு.

வாட்டாறு - ஓரூர், 'வளநீர் வாட்டாற் றெழினி யாதன்' கூகூசு.

வாணிகம் - ஊதியம், 'வாணிகப் பரிசிலனல்லேன்' உ0அ.

வாய் - இடம், 'வாய்கா வாது, பரந்துபட்ட வியன்பாசறை' உஉ. தாவி, 'வாய்ச்செலவிவுளியொடு' ககஎ. மெய்ம்மை, 'முதுமுதல்வன் வாய்போகாது' கசுசு.

வாய்வாள் - தப்பாதவாள், 'வலம்படு வாய்வா ளேந்தி' சுக; வாய்த்தவாள், 'வாய்வாள் வேந்தே' உசு.

வாயில் - வழி, 'புகழ்குறை படூஉம் வாயில்' ககசு.

வாயில் விடாது - வாயில்காவலர்க்குச் சொல்லிவிடாமல், 'வாயில் விடாது கோயில் புக்கு' சுஎ.

வார்பு - வார்தல், 'வார்புறு வள்பு' ரு0.

வாரணம் - கோழி, 'கான வாரண மீனுங் காடு' ருஉ.

வாரி - விளைவு, 'வாரி குன்றினும்' கூரு.

வால் - தூய்மை, 'வால்வெள் ளேறு' க. 'வாலிழை மடமங்கையர்' கக. வெண்மை, 'வாலிழை மங்கையர்' சு.

வாலியோன் - பலராமன், 'வலியொத்தீயே வாலி யோனை' ருசு.

வாலிழை - வெள்ளியமுத்தாரம், சு.

வாழ்நர் - வாழ்வோர், 'தென்புல வாழ்நர்க்கு' கூ. 'வாளின் வாழ்நர்' உச. 'நிலமிசை வாழ்நர்' சகூ.

வாழிய-வாழ்வானாக, 'எங்கோவாழிய' கூ.

வான் - ஒளி, 'வான்முகத் தெதிரே' சு.

வான்கதிர் - வாலிய ஒளி, 'வான்கதிர்த் திருமணி' கரு0.

வானம் - மழை, 'வான நாண வரையாது சென்றோர்க், கானு தீயும்' அசு.

வானவரம்பன் - சேரன், 'வான வரம்பனை நீயோ' உ.

வானவன் - சேரன், 'சினமிகு தானை வானவன்' கஉசு.

வானவூர்தி - விமானம், 'வலவ னேவா வான வூர்தி' உஎ.

## வி.

விசித்த - வலித்துக்கட்டிய, 'மாசற விசித்த வார்புறு வள்பின்' ரு0.

விசிப்ப - விம்ம, 'விலாப்புடை மருங்கு விசிப்ப மாந்தி' கூக.

விசும்பு - ஆகாயம், 'விசும்புதைவரு வளியும்' உ; 'அகலிரு விசும்பி னும்' அ; 'கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்' கூ.

விசைப்ப - துள்ள, 'நறுநெய்க் கடலை விசைப்ப' கஉ0.

விடர் - குகை, 'பெருமலை விடரகத்து' கூஎ; மலைப்பிளப்பு, 'அருவிடர்ச் சிறுநெறி' ககூரு.

விடுத்தேன் - விடைகொண்டேன், 'விடுத்தேன் வாழிய குரிசில்' உக0.

விடுதும் - செலுத்தக்கடவேம், 'எம்மம்பு கடிவிடுதும்' கூ.

விடுநை - ஒழிவாய், 'அடுநை யாயினும் விடுநை யாயினும்' கூசு.

விடை - ஆட்டுவிடை, 'விடையும் வீழ்மின்' உசுஉ.

விண் - ஆகாயம், 'விண்பொருபுகழ்' கக.

வித்தி - விதைத்து, 'வள்ளியோர் செவி முதல் வயங்குமொழி வித்தி' உ0சு.

விதிர்த்து - சிதறி, 'நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து' கஅஅ.

விதிர்ப்பு - நடுக்கம், 'என்போற் பெரு விதிர்ப் புறுக' உருரு.

விதுப்பு - நடுக்கம், 'விதுப்புற வறியா வேமக் காப்பினை' உ0; 'என்போற் பெருவிதுப் புறுக' ருகூ. விரைவு, 'விதுப்புறு விருப்பொடு' உககூ. இது விதிர்ப்பெனவும் வழங்கும்.

விம்மி - பொருமி, 'முலையக நனைப்ப விம்மி' கசுகூ.

வியத்தொறும் - வியக்குந்தோறும், 'வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே' உகஎ.

வியந்தன்று - மதித்தது, 'வியந்தன்று மிழிந்தன்று மிலனே' எஎ.
வியல் - அகலம்; 'கலிச்சும்மை வியலாங்கண்' உஉ.
வியன்புலம் - அகன்றநிலம், 'புலிதுஞ்சு வியன்புலத் தற்றே' ருஉ.
விரகு - அறிவு, 'விரகறி யாளர்' உசுக.
விரிச்சியூர் - ஓரூர், உகூஉ.
விரித்து-பரப்பி, 'பல்கதிர் விரித்தே' அ.
விரிதல் - பரத்தல், 'விரிசிர்' சு.
விரியூர் - ஓரூர், கூகூஉ.
விரைஇ - கலந்து, 'பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்மெனக' கருஉ; விரவி, 'வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇ' சுOO.
விரைவினன் - விரைந்து, 'விரைவினன் சுட்டு' கருO.
வில்வியாதன் - ஒரு கொடையாளி, 'நெல்லமல் புறவி னிலங்கை கிழவோன், வில்வி யாதன்' கூஎக.
விலங்கு - குறுக்கு, 'விலங்ககன்ற வியன்மார்ப' கூ.
விலங்குதல் - எதிர்நின்றுதடுத்தல், 'விலங்கு சிறையின்' கசுகூ; 'விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்' உகூO.
விழவு - திருவிழா, 'மூந்நீர் விழவி னெடியோன்' கூ.
விழு - சிறப்பு, 'விழுக்கழஞ்சு' கக.
விழுப்புண் - சிறந்தபுண், 'வெஃகுறு விழுப்புண் பல' உகூகூ.
விழுமியம் - சிறப்புடையேம், 'விழுமியம் பெரியம் யாமே' எஅ.
விழுமியோர் - பெரியோர், 'வேலீண்டு தானை விழுமியோர் தொலைய' சுக.
விளக்கம் - ஒளி, 'ஊர்சுடு விளக்கத்து' எ; 'சுடுதீ விளக்கம்' கசு.
விளக்கு - தீபம், 'முத்தீ விளக்கிற் றுஞ்சும்' உ.
விளங்கில் - ஓரூர், 'விளங்குசீர் விளங்கில் விழுமங் கொன்ற' ருகூ.
விளங்குதி - விளங்குவாய், 'பகல்விளங்குதியால்' அ.
விளங்குபொன் - கண்ணடி, 'விளங்கு பொன் னெறிந்த நலங்கிளர் பலகை' கரு.
விளர் - வெண்மை, 'கொழுங்கொடி விளர்க்காய்' கஉO.
விளரி - இரங்கற்பண், 'விளரி யுறுதருந் தீந்தொடை நினையா' உசுO.
விளைந்த - முதிர்ந்த, 'வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவல்' கஉO.
விளைந்து - விளைந்தேன், 'தொல்லது விளைந்தென நிலம்வளங் கரப்பினும்' உOகூ.
விறல் - வென்றி, 'விறல்வஞ்சி' கக; 'இன்னவிறலு முளகொ னமக்கென' ககூ; 'விறற்புகழ் மாண்டபுரவி' சுகூ.
வினை - செய்கை, 'செய்திரங் காவினை' கO. போர், 'செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர்' சு; 'வினைக்கும்வினை யின்றிப் படையொழிந் தனவே' சுகூ.

## வீ.

வீ - பூ, 'வீகமழ் நெடுஞ்சினை' கூசு.
வீங்குதல் - மிகுதல், 'வீங்குசெலன் மண்டிலம்' அ.
வீசிய - சிதறிய, 'வீசிய புலனும்' உகூ.
வீயா - கெடாத, 'வீயாச் சிறப்பின் வேள்வி' கரு.
வீழ் - ஆலம்வீழ், 'கொழுநிழ னெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்கு' ருஅ.
வீழ்தல் - விரும்புதல், 'திருவீழ் நுண்பூண்' கஎக.
வீழ்ந்தென - வீழ்ந்ததாக, 'பூம்போது சிதைய வீழ்ந்தென' உஅ.
வீறு - வேறு, 'சோறுடைக் கையர் வீற்றுவீற் றியங்கும்' கஎகூ.

## வெ.

வெகுளி - சினம், 'செலிய ரத்தைநின் வெகுளி' சு.
வெடிபட்டு - சிதறி, 'வெடிபட்டு - ஓடன் மரீஇய பீடின் மன்னர்' கூகூ.
வெண்ணி - கரிகாற்பெருவளத்தான் சேரமான் பெருஞ்சேரலாதனை வென்றவூர், 'கலிகொள்யாணர் வெண்ணிப் பறந்தலை' சுசு.
வெதிர் - மூங்கில், 'சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே' கOக.
வெந்தை - வெந்தவேவை, 'வேவை வெந்தை' உசுசு.
வெப்பு - வெம்மை, 'வெப்புடைய வரண்கடந்து' கக.
வெப்புள் - வெம்மை, 'வெப்புள் விளைந்தவேங்கை' கஉO.
வெம்மை - விருப்பம், 'வேழ நோக்கின் விறல்வெஞ்சேய்' உஉ; 'புட்கொடி விறல்வெய்யோனும்' ருசு.
வெய்யோன் - விரும்புவோன், ருசு.

வெருவரு - அஞ்சத்தக்க, 'வெருவரு பறந்தலை' கக.
வெலீஇயோன்-வெல்வித்தோன், 'வெலீஇயோ னிவனெனன' கஉரு.
வெள்ளி - வெண்மை, 'வெள்ளி நோன்படை' சக; வெள்ளிமீன்=சுக்கிரன், 'இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்' ரு.
வெள்ளில் - விளாமரம், 'மன்ற விளவின் மனைவீழ் வெள்ளில்' கமக.
வெள்ளென-யாவர்க்குந்தெரிய, 'உள்ள முள்ளவிந் தடங்காது வெள்ளென' உ0எ.
வெள்ளைக்குடி - ஓரூர், ருரு.
வெளில் - யானைகட்டுங்கம்பம், 'திருந்தனை நோன்வெளில் வருந்த வொற்றி' சச; 'களிறில வாகிய புல்லரை நெடுவெளில்' கஉஎ.
வெளிறு - இளமை, 'வெளிற்றுப் பனந்துணி' ருரு. வெண்மை, 'வெளிறின்றோன்காழ்' உரு.
வெறி - வெறியாட்டு, 'சினமாந்தர் வெறிக்குரவை' உஉ.
வெறுக்கை - செல்வம், 'அருங்கல வெறுக்கை' கசரு.
வெறுத்த - மிக்க, 'வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்' ருரு.
வெறுப்ப - மிக, 'உயரிசை வெறுப்பத் தோன்றி' உரு0.
வென் - வென்றி, 'வென்வேற் செழிய' கக; 'வென்வே லண்ணற் காணுங்கே' கசக; 'வென்வே - விளம்பல் கோசர்' கருக.
வென்று - வியவாமல், 'வென்றி யெல்லாம் வென்றகத் தடக்கிய' ரு.

## வே.

வேங்கடம் - ஒருமலை, 'ஒலிவெள் ளருவி வேங்கட நாடன்' ருஅக; 'வேங்கட விறல்வரைப் பட்ட, வோங்கல் வானத்து' ருஅரு; 'கல்லிழி யருவி வேங்கடங் கிழவோன்' ருஅக; 'வேங்கட வரைப்பின் வடபுலம்' ருகக.
வேட்கை - விருப்பம், 'நின்னசை வேட்கையி னிரவலர்' ரு; 'குருதி வேட்கை யுருகெழு முரசம்' ரு0.
வேட்கோச்சிறுஅர் - குயக்குலத்திளையோர், 'வேட்கோச் சிறுஅர் தேர்க்கால் வைத்த - பசுமண்' ருஉ.
வேட்டம்-விருப்பம், 'உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்கு' உகச; வேட்கை, 'நல்லிசை வேட்டம் வேண்டி' ருக.
வேட்டு - விரும்பி, 'வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது' உ0.
வேட்டுவன் - வேடன், 'கதநாய் வேட்டுவன்' ருரு. வேட்டைக்காரன், 'சொல்வலை வேட்டுவ னாயினன்' உருஉ.
வேண்டி - விரும்பி, 'போகம் வேண்டி' அ.
வேந்தன் - அரசன், 'புறம்பெற்ற வயவேந்தன்' கக.
வேந்து - அரசன், 'கொற்ற வேந்தே' உக.
வேம்பற்றூர் - ஓரூர், ருகஎ.
வேளாண்மை - உபகாரம், 'வேளாண் சிறுபதம்' எச.
வேளிர்-குறுநிலமன்னர், 'தொன்முதிர் வேளிர்' உச.
வேளை - ஒருசெடி, 'வேளை வெண்பூ' உகரு.
வேற்றுப்புலம் - பகையிடம், 'வேற்றுப் புலத் திறுத்து' ருக.

## வை.

வைகம் - வைவோம், 'வைகம் வம்மோ' உஉக.
வைகல் - நாள், 'வேங்கை மார்ப னிரங்க வைகலும்' உக.
வைகுறுவிடியல் - வைகுதலுற்றவிடியற்காலம், 'வைகுறு விடிய லியம்பிய குரலே' உருரு.
வைப்பு - இடம், 'வித்திவா னோக்கும் புன்புலங், கண்ணகன் வைப்பிற் றாயினும்' கஅ. ஊர், 'யாணர் வைப்பி னன்னாட்டுப் பொருந' உ; 'பயன்றிகழ் வைப்பிற் பிறரகன்றலை நாடு' எ; 'மென்புல வைப்பி னன்னாடு' சஉ; யாண ரறாஅ வைப்பிற் - காமர் கிடக்கையவ ரகன்றலை நாடு' ருரு.
வையம் - உலகம், 'வையங் காவலர்' அ.
வையை - ஒருநதி, 'மலிபுகழ், வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பின்' எக.

## வெள.

வெளவிய - கவ்விய, 'எருத்து வெளவிய புலி' ச.

புறநானூற்று உரையிற்கண்ட

# இலக்கணக்குறிப்பகராதி.

(எண்கள் பாட்டின் எண்.)


அசைநிலை (அசை, அசைச்சொல்) :— ௨, ௫, ௬, ௧௧, ௧௨, ௧௮, ௧௯, ௨௪, ௨௫, ௨௬, ௨௯, ௩௫, ௩௭, ௩௮, ௪௦, ௪௧, ௫௩, ௭௫, ௮௬, ௯௬, ௯௮, ௯௯, ௧௦௯, ௧௧௩, ௧௧௬, ௧௧௮, ௧௨௬, ௧௩௬, ௧௪௦, ௧௪௨, ௧௪௭, ௧௫௩, ௧௫௭, ௧௬௦, ௧௭௩, ௧௮௨, ௧௯௩, ௧௯௯, ௨௧௩; ௨௧௪, ௨௧௫, ௨௨௨, ௨௨௯, ௨௩௬, ௨௪௭, ௨௫௪, ௨௬௧.

அடுக்கு இரங்கற்குறிப்புத்தோன்ற வருதல் :—௫௧.

அடுக்கு விரைவின்கண்வருதல்:—௧௯௫, ௨௨௮, ௨௩௩, ௨௫௬.

அணிகருதிநிற்றல் (அணிதோன்றநிற்றல்) :—௧௯, ௧௬௭.

அம்மவென்பது கேட்பித்தற்கண்வருதல் :—௪௪.

அல்வழிச்சாரியை :—௬௯, ௧௫௩.

ஆகுபெயர் :—௫, ௧௦௬, ௧௪௭, ௧௫௨, ௨௨௧.

ஆற்றலாற்சொல்வருவித்தல் : — ௩௯, ௧௪௩.

இகழ்ச்சிக்குறிப்பு :—௮௫, ௧௧௨, ௧௯௫, ௨௦௫, ௨௧௦, ௨௩௪.

இசின் தன்மைக்கண்வருதல் :—௨௨.

இசின் படர்க்கைக்கண் வருதல் :— ௧௧.

இசைநிறையும்மை :—௧௫௯.

இடத்துநிகழ்பொருளின்ரொழில் இடத்துமேல் ஏறிநிற்றல் :—௨, ௭, ௨௨, ௧௦௯, ௧௧௫, ௧௧௮, ௧௩௭, ௨௬௩.

இடவழுவமைதி :—௪௧.

இரங்கற்குறிப்புப்படுமொழி :—௨௬௬.

இருபெயரொட்டுப்பண்புத்தொகை :— ௧௪௩.

இழித்துக்கூறல் :—௧௪௪.

இழிவுசிறப்பும்மை :—௯௩, ௧௦௬.

இறப்ப இழிந்த ஆனந்தவுவமை அன்றென்றல் :—௬௩.

உண்டென்பது பொதுவினையன்றென்றல் :—௧௪.

எச்சவும்மை :—௧௯, ௪௮, ௧௬௩, ௧௭௧, ௨௬௪.

எண்ணிடைச்சொல் (எண்ணின்கண்வருவதோ ரிடைச்சொல்) :—௩௨, ௭௧, ௧௬௯, ௧௮௭, ௧௯௭, ௨௪௦.

எதிர்மறை வினையெச்சமுற்று :—௪௪.

ஐகாரம் முன்னிலைவிளக்கிநிற்றல் :—௨, ௫, ௪௦.

ஒட்டென்னும் அலங்காரம் :—௧௮௫.

ஒருசொன்னீர்மைப்பாடு :—௨௪, ௧௨௫.

ஒருமைச்சொல் பன்மைக்கேற்பநிற்றல் (பன்மை சுட்டிநிற்றல்) :—௪௧, ௭௮, ௧௫௧.

கடைக்குறை :—௧௦௧, ௧௭௩, ௧௯௪.

கருவி கருத்தாவாய்நிற்றல் :—௨௩.

காரணக்குறி இடுகுறிமாத்திரையாய் நிற்றல் :—௫௪.

காரியவாசகம் ஒரு சொல்முழுவதும் தானாய் நிற்றல், ௧.

காலமயக்கம் :—௨௩, ௧௩௮, ௧௬௫.

குறிப்புமொழி (குறிப்பு, குறிப்பிற்றோன்றல்) :—௩௬, ௧௯௬, ௨௦௨, ௨௦௯, ௨௧௧, ௨௩௭.

குறுகிநிற்றல் (குறைந்துநிற்றல் = விகாரம்) :—௧௦௦, ௧௫௨, ௧௯௬.

கூட்டியுரைத்தல் :—௧௪௦.

கொல் ஐயப்பொருளில்வருதல் :—௯௯, ௨௬௪.

சாரியை, தோற்றம் வேண்டாத் தொகுதிக்கண் வருதல் :—௧௫௫.

சிறப்பும்மை :—௧௯, ௩௩, ௮௭, ௧௦௦, ௧௦௩, ௨[illegible]௨.

சின்னென்னுமிடைச்சொல்லால் அசைக்கப்பட்டுநிற்றல் :—௨௫௫.

சினைவினை முதல்வினையொடு முடிதல் (முதல்வினைகொள்ளல்) : — ௯, ௨௦, ௨௨, ௬௭, ௨௧௩.

செய்யுள்நோக்கிவிரித்தல் :—கூரு.
சொல்வருவித்தல் :—கூ, அ, க0, கச, கஎ, உஉ, சச, கசு0.
தம்மைப் பிறர்போலக்கூறுதல் :—கூச.
தலைப்பெயலுவமையணி :—சு0.
தற்குறிப்பேற்றவணி :—உசுக.
தன்வினை பிறவினைப்பொருளில் வருதல் :—எஉ.
திசைச்சொல் :—உசுக.
தில்லென்பது விழைவின்கண் வருதல் :—ககூ, அ0, கசுசு, கஎக, உககூ, உசசு.
தொகுத்தல் (விகாரத்தால்தொகுதல்) :—கூகூ, சுகூ, கூஉ, கருரு.
நிரனிறை :—ககூ.
நுவலாநுவற்சியென்னும் அலங்காரம் :—கஅரு.
படர்க்கைப்பெயர் முன்னிலைக்கண்வருதல் :—கஎஉ.
பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை :—கஉ0, ககூரு.
பண்பொட்டு :—சு.
பழித்ததுபோலப்புகழ்தல் (புகழ்ந்தவாறு) :—கஉ, கூரு, க0எ.
பன்மை யொருமை வழுவமைதி :—கஉரு.
பிறவினைதன்வினையாய்நிற்றல் :—ருக.
பெயரெச்சத்தின் உம் உந்தாதல் :—உச, ககூஎ.
பெயரெச்சமுடிபு :—கசு, உச, ககூஎ, உ0கூ, உஉக.
பொருள் பன்மையாயிருப்பினும் சொல்லின் ஒருமைநோக்கி ஒருமையால் முடித்தல் :—சுகூ.
மன் ஆக்கத்தின்கண்வருதல் :—எரு.
மன் ஒழியிசைக்கண்வருதல் :—கருக.
மன் கழிவின்கண்வருதல் :—ருகூ, ககூ, ககரு, கஉரு, கககூ, உகூ0, உகூரு, உகூஅ, உசுக.
மாறிக்கூட்டுதல் :—கூ, கூ, கஅ, கூஎ, சஎ, கஉரு.
மாறியுரைத்தல் :—கூசு.
மாறென்னுமிடைச்சொல் ஏதுப்பொருள்பட்டுவருதல் :—ச, உ0, உஉ, கூஉ, கூகூ.
முதற்கேற்றஅடையடுத்தஆகுபெயர் :—க0சு.
முற்றுவினைக்குறிப்பு :—சு.
முன்மொழிநிலையல் :—உருச.
முன்னிலைப்பெயரும் படர்க்கைப்பெயரும் விராய்வந்து முன்னிலைவினையால் முடிதல் :—கூ.
முன்னிலையசைச்சொல் (முன்னிலைவிளக்கும் அசை) :—ச0, சஅ, கஅக.
மெலிந்துநிற்றல் (விகாரம்) :—உக, எஎ.
யார்கொலென்பது வியப்பின்கட் குறிப்பாய்வருதல் :—எஎ, உருஎ.
வலித்துநிற்றல் (விகாரம்) :—சு.
வன்மையுணர்தோன்றநிற்றல் :—கசரு.
விகாரம் :—சரு, ககூச, கசகூ, உகக.
வியங்கோட் பொருளவாய் நிற்றல் :—ககூ0.
வியப்பின்கட்குறிப்பு :—எஎ, உருஎ.
வியப்பின்கண்வரும் இடைச்சொல் :—க0கூ.
வினைக்குறிப்பு ஆக்கம்பெற்றுவருதல் :—கூரு.
வினைக்குறிப்பு முற்று :—சுஅ.
வினைத்தொகை :—உஉக.
வினைமேனின்றதோர் முற்றுச்சொல் (வேண்டாவென்பது) :—கஎஉ.
வினையெச்சக்குறிப்பு :—க0.
வினையெச்சத்திரிபு :—சு, உகூ, ரு0, கூரு, கூசு, கஉ0, கஉச, கஉரு, கரு0, ககூஉ, உருஅ, உசுசு.
வினையெச்சமுடிபு :—அ, கசு, உஉ, கூகூ, கூரு, கூஅ, உ0கூ, உகஉ, உரு0.
வினையெச்சமுற்று :—கூகூ.
வினையெச்ச வினைக்குறிப்பு முற்று :—சச.
வெளிப்படை :—கஎ, கூஉ, கசுஅ.
வேற்றுமையுருபுமயக்கம் :—கஉசு.
வேறுவினைப்பொருள்களைப் பொதுவினையால் முடியாது பன்மைபற்றி ஒருவினையால் முடித்தல் :—கச.

# பிரயோகவிளக்கம்.

பழைய நூல்களின் உரைகளில் உரையாசிரியர்களாற் புறநானூற்றிலிருந்து உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்ட மூலங்களில் எனக்குக்கிடைத்தவைகள் இங்கே பதிப்பிக்கப்பட்டன. ஒப்புநோக்கின் பாடபேதங்கள் பலகாணப்படும்.

அந்நூல்களின் பெயராகராதி:—

க. இலக்கணவிளக்கவுரை.
உ. கலித்தொகை நச்சினார்க்கினியருரை.
௩. சிலப்பதிகாரம் அடியார்க்குநல்லாருரை.
௪. ,, அரும்பதவுரை.
ரு. சீவகசிந்தாமணி நச்சினார்க்கினியருரை.
௬. திருக்குறள் பரிமேலழகருரை.
எ. திருச்சிற்றம்பலக்கோவையாருரை.
அ. தொல்காப்பியம் (சொல்லதிகாரம்) சேனாவரையருரை.
௯. ,, நச்சினார்க்கினியருரை.
க0. நன்னூல் விருத்தியுரை.
கக. பத்துப்பாட்டு நச்சினார்க்கினியருரை.
கஉ. புறத்திரட்டு.
க௩. யாப்பருங்கலவிருத்தியுரை.

இங்கேகாட்டப்பட்டநூல்களுள், புறத்திரட்டென்பது பலநூல்களிலிருந்து எடுத்துத்தொகுக்கப்பட்ட செய்யுட்களையுடையது. இதற்கு உரையில்லை.

# இலக்கணவிளக்கவுரை.


| சூத்திர வெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| ௪௬. | "வாழ்தல் வேண்டிமிவண் வரைந்த வைகல்" ... ... | ௩௬௭. |
| ௫0. | ,, | ,, |
| ,, | "கழிந்தது பொழிந்தென ........... கரப்பினும்" ... ... | ௨0௩. |
| ௫௪. | "நனிபே தையே நயனில் கூற்றம்" ... ... ... ... | ௨௨௭. |
| ௭௫. | "மறங்கடிந்த வருங்கற்பின்" ... ... ... ... ... | ௧௬௬. |
| ,, | "சிலசொல்லிற் பலகூந்தல்" ... ... ... ... ... | ,, |
| ௯௧. | "நாளன்று போகி ........... மொழியினும்" ... ... ... | ௧௨௪. |
| ௯௫. | "எழூஉத்தாங்கிய ........... குறும்புடைத்தலின்" ... ... | ௯௭. |
| ௧0௨. | "கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை" ... ... ... | ௧. |
| ௧௨௯. | "புலம்புக் கனனே புல்லணற் காளை"... ... ... ... | ௨௫௮. |
| ௧௩௩. | "வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்" ... ... | ௧௮௪. |
| ௧௩௯. | "அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட" ... ... | ௨௪௬. |
| ,, | "நீள்கழன் மறவர் செல்வுழிச் ........... மாதோ" ... ... | ௯௩. |
| ௧௬௮. | "மெழுகு மாப்பிகண் கலுழ்நீ ரானே" ... ... ... | ௨௪௯. |
| ௧௭0. | "அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ" ... ... ... | ௨. |
| ௨00. | "தூங்குகையா ........... மருப்பின" ... ... ... | ௨௨. |
| ௨0௭. | "ஆவு மானியற் பார்ப்பன ........... சேர்மின்" ... ... | ௯. |
| ௨௧௨. | "விளங்குமணிக் கொடும்பூ ........... னும்மோ" ... ... | ௧௩0. |
| ௨௩௨. | "பீடின்று பெருகிய ...........மா ரெமரே" ... ... ... | ௩௭௫. |
| ௨௩௭. | "நோகோ யானே" ... ... ... ... ... ... | ௨௩௪. |
| ௨௩௯. | "அருளிலர் கொடாமை வல்ல ராகுக" ... ... ... | ௨௭. |
| ,, | "யான்வாழு நாளும் பண்ணன் வாழிய" ... ... ... | ௧௭௩. |
| ,, | "மன்னிய பெருமநீ நிலமிசை யானே" ... ... ... | ௬. |
| ,, | "நடுக்கின்றி நிலியரோ வத்தை" ... ... ... ... | ௨. |
| ,, | "நீவா ழியர்நின் றந்தை, தாய்வா ழியர்" ... ... ... | ௧௩௭. |
| ,, | "வாழ்தல் வேண்டிமிவண் வரைந்த வைகல்"... ... ... | ௩௬௭. |
| ,, | "பீடின்று பெருகிய ........... ரெமரே" ... ... ... | ௩௭௫. |
| ௨௪௩. | "அன்னதன்மையு மறிந்தியார்" ... ... ... ... | ௧௩௬. |
| ௨௪௪. | "திரைமிசைப் பாயுந்து" ... ... ... ... ... | ௨௪. |
| ,, | "நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து" ... ... ... ... | ௩௯௫. |
| ௨௪௬. | "படுமகன் கிடக்கை ...........துவந் தனளே" ... ... | ௨௭௮. |
| ,, | "நாளன்று போகி" ... ... ... ... ... ... | ௧௨௪. |
| ௨௪௭. | "ஐவரொடு சினைஇ, நிலந்தலைக் கொண்ட" ... ... ... | ௨. |
| ௨௪௮. | "கண்டுயின்று முன்றிற் ........... யாயும்" ... ... ... | ௧௫௯. |
| ௨௫0. | "நிலமிசைப் புரளுங் கையவெய் துயிர்த்து" ... ... ... | ௪௪. |
| ,, | "நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சி" ... ... ... | ௧௧௩. |

| சூத்திர வெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| ௨௫௧. | "அனையை யாகன் மாறே" ... | ௪. |
| ௨௫௫. | "மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்" ... | ௧௪௩. |
| ௨௬௩. | "சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே" ... | ௨௩௫. |
| ௨௭௧. | "முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்" ... | ௭௩. |
| ௨௭௫. | "ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே" ... | ௧௯௩. |
| ௨௭௬. | "செலிய ரத்தைநின் வெகுளி" ... | ௬. |
| ௨௭௭. | "யாஞ்சில வரிசி வேண்டி........றன்னுந் தூக்கி" ... | ௧௪௦. |
| ,, | "நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய" ... | ௧௫. |
| ௨௮௧. | "ஈயாது வீயு முயிர்தவப் பலவே" ... | ௨௩௫. |
| ,, | "வரைபுரையு மழகளிறு" ... | ௩௮. |
| ,, | "விதுப்புற வறியா வேமக் காப்பினை" ... | ௨௦. |
| ,, | "அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்" ... | ௯௯. |
| ,, | "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" ... | ௫௩. |
| ,, | "ஒக்க லொற்கஞ் சொலிய" ... | ௩௨௭. |
| ,, | "கல்லே பரவி னல்லது........கடவுளு மிலவே" ... | ௩௩௫. |
| ௨௮௨. | "வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி" ... | ௪௭. |
| ,, | "வேற்றுமை யில்லா விழுத்........காலை" ... | ௨௭. |
| ,, | "கடிமரந் தடியு மோசை" ... | ௩௬. |
| ,, | "கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்" ... | ௧௫. |
| ௨௮௪. | "வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்" ... | ௩௯௪. |
| ,, | "நளிமலை நாடன்" ... | ௧௫௦. |
| ௨௮௫. | "முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்" ... | ௧௫௮. |
| ,, | "கடிமரந் தடியு மோசை........கடிமனை யியம்ப" ... | ௩௬. |
| ௨௮௬. | "செய்திரங் காவினைச் சேண்விளங் கும்புகழ்" ... | ௧௦. |
| ௨௮௭. | "தவப்பல" ... | ௨௩௫. |
| ௨௯௦. | "உருகெழு ஞாயிற் றொண்கதிர் மிசைந்த" ... | ௧௬௦. |
| ,, | "வளன்வலி யுறுக்கு ........யில்லா கியரோ ... | ௧௩௦. |
| ,, | "அரிமயிர்த் திரண்முன்கை"... | ௧௧. |
| ,, | "துன்னருந் துப்பின் வயமான் றோன்றல்" ... | ௪௪. |
| ௨௯௮. | "நசைதர வந்தோர் ........... கொல்லோ பெரும" ... | ௧௫. |
| ,, | "கடுஞ்சினத்த கொல்...... . மாண்ட தாயினும்" ... | ௫௫. |
| ,, | "துடியன் பாணன் ...........குடியு மில்லை"... | ௩௩௫. |
| ௨௯௯. | "மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்" ... | ௧௮௬. |
| ௩௦௧. | "பெருவிற லமரர்க்கு வென்றி தந்த"... | ௫௫. |
| ௩௧௨. | "பொற்கோட் டிமய........மும் போன்றே" ... | ௨. |
| ,, | "வேனிற் கோங்கின் பூம்பொருட் டன்ன" ... | ௩௨௧. |
| ,, | "செஞ்ஞாயிற்று ........... வேண்டினும்" ... | ௩௮. |
| ௩௧௪. | "கவிசெந் தாழிக் ........... கூடையுங் கூடி" ... | ௨௩௮. |
| ௩௧௫. | "ஊன்றுவை கறிசோறு ...........தொழி லல்லது"... | ௧௪. |

| சூத்திர வெண். | | புறப்பாட்டி னெண். |
|---|---|---|
| ௩௨௦. | "மாமறுத்த மலர்மார்பு" ... ... ... ... ... | எ. |
| ௩௨௮. | "நெல்லரியு மிருந்தொழுவர்" ... ... ... ... | ௨௪. |
| ௩௭௦. | "ஒள்வாள், கறையடி யானைக் ......... வேலோ னூரே" ... | ௩௨௩. |
| ௩௭௨. | "இவன்யா ரென்குவை யாயி னிவனே" ... ... ... | ௧௩. |
| ௪௪௩. | (முற்றும்) "வயலைக் கொடியின் ...... களைந் தனவே"... ... | ௩௦௫. |
| ௫௦௨. | "ஆவு மானியற் ........... பூட்கை மறத்தின்" ... ... | ௯. |
| ௫௧௭. | (முற்றும்) "ஏற்றுவல னுயரிய வெரி......முளவோ நினக்கே"... | ௫௬. |
| ௫௩௩. | "மாரி யன்ன வண்மை ........... சென்மே" ... ... | ௧௩௩. |
| ,, | "சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப" ... ... ... | ௧௩. |
| ,, | "ஒவத் தன்ன விடனுடை வரைப்பின்" ... ... ... | ௨௫௧. |
| ,, | "சேற்றுவளர் தாமரை .........வீற்றிருந் தோளை" ... ... | ௨௭. |
| ௫௪௧. | (முற்றும்) "சாறுதலைக் கொண்.........தகை போரே" ... | ௮௨. |
| ,, | "ஈர்ங்கா ழன்ன திரங்குகண்.........தானு யினனே"... ... | ௨௭௫. |
| ௫௪௨. | "விண்பொருபுகழ் விறல்வஞ்சி" ... ... ... ... | ௧௧. |
| ,, | "மாரி யன்ன வண்மை" ... ... ... ... ... | ௧௩௩. |
| ௫௪௫. | (முற்றும்) "பாரிபாரி யென்றுபல .........புரப் பதுவே" ... | ௧௦௭. |
| ௭௩௪. | (முற்றும்) "சிறியகட் பெறினே ...... முயிர்தவப் பலவே" ... | ௨௩௫. |
| ௭௫௧. | "மாமறுகலின் மயக்குற்றன, வழி" ... ... ... ... | ௩௪௫. |
| ,, | "கலங்கழாஅலிற் றுறை, கலக்குற்றன" ... ... ... | ,, |

---

## கலித்தொகை.

### நச்சினார்க்கினியருரை.

---

| கலித்தொகைப் பாட்டினெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| ௧. | "இனிநினைந் திரக்க மாகின்று" ... ... ... ... | ௨௪௩. |
| ௫௦. | "ஊன்சோற் றமலை பாண்கடும் பருத்தும்" ... ... ... | ௩௩. |
| ௧௦௧. | "வளிவழக் கறுத்த வங்கம்" ... ... ... ... ... | ௩௫௮. |

---

# சிலப்பதிகாரம்.

## அடியார்க்குநல்லாருரை.

| பக்கம். | வரி. | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|---|
| | | **பதிகம்.** | |
| ௧௮. | ௨௪. | "வரிசைக்கு வருந்தும்" ... ... ... ... | ௪௭. |
| | | **மனையறம்படுத்தகாதை.** | |
| ௪௭. | ௧௬. | "தீநீர்ப் பெருங்......... முழுநெறி" ... ... ... | ௧௧௬. |
| ௪௯. | ௧௯. | "அப்பிறை, ......... மேத்தவும் படுமே" ... ... | ௧. |
| | | **அந்திமாலைச்சிறப்புச்செய்காதை.** | |
| ௧௧௭. | ௨௬. | "நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்" ... ... | ௧௮௯. |
| | | **இந்திரவிழவூரெடுத்தகாதை.** | |
| ௧௨௮. | ௧௯. | "மீனெடுத்து நெற்குவைஇ"... ... ... ... | ௩௪௩. |
| ௧௩௧. | ௭. | "பகடுபுறந் தருநர் ......... யாயின்" ... ... ... | ௩௫. |
| ௧௩௬. | ௧௯. | "மழையென மருளும் பஃறோல்" ... ... ... | ௧௭. |
| ௧௪௫. | ௧௮. | "வலியொத்தி வாலியோனை"... ... ... ... | ௫௬. |
| | | **கடலாடுகாதை.** | |
| ௧௭௪. | ௬. | "முந்நீர் நாப்பட் ......... விசும்பின்" ... ... | ௬௦. |
| | | **நாடுகாண்காதை.** | |
| ௨௪௦. | ௨௪. | "மைம்மீன் புகையினும் ......... யோடினும்" ... | ௧௧௭. |
| | | **காடுகாண்காதை.** | |
| ௨௭௩. | ௧௯. | "இவணிசை யுடையோர்க் ......... மாறுகொல்" ... | ௫௦. |
| | | **அடைக்கலக்காதை.** | |
| ௩௫௭. | ௪. | "கண்பொர விளங்கு ......... பதுவே" ... ... | ௩௫. |
| ௩௬௪. | ௯. | "களிறுமேற் கொள்ளவும்......காணு" ... ... | ௪௧. |
| | | **கொலைக்களக்காதை.** | |
| ௩௮௦. | ௨௩. | "பூவற் படுவிற் கூவற் றோண்டிய" ... ... ... | ௩௧௯. |
| ௩௮௨. | ௨௬. | "கோளியாலத்து" ... ... ... ... ... | ௫௮. |
| ,, | ௨௯. | "அணில்வரிக் கொடுங்காய்"... ... ... ... | ௨௪௬. |
| ௩௮௩. | ௩௫. | "ஊர்தி வால்வெள் ளேறே" ... ... ... ... | ௧. |
| ௩௯௩. | ௧௦. | "இந்திர ரமுத மியைவ தாயினும்" ... ... ... | ௧௮௨. |
| | | **துன்பமாலை.** | |
| ௪௨௦. | ௨௬. | "வெள்ளெட் சாந்தொடு புளி........வதியும்"... ... | ௨௪௬. |

## சிலப்பதிகாரம் அரும்பதவுரை.


| பக்கம். | வரி. | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|---|
| | | ௧௦. நாடுகாண்காதை. | |
| ௩௭. | ௩௩. | "புகர்முக முகவை" ... ... ... ... ... | ௩௭௧. |
| | | ௨௩. கட்டுரைகாதை. | |
| ௬௩. | ௨௧. | "துளியிரு முந்நீ ரேணி யாக"... ... ... ... | ௩௫. |


## சீவகசிந்தாமணி.

### நச்சினார்க்கினியருரை.


| இலம்பகக் கவித்தொகை. | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| | நாமகளிலம்பகம். | |
| ௧௭௨. | "வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்"... ... ... | ௩௬௭. |
| ௨௨௮. | "தேற்றாய் பெருமநின் பொய்யே" ... ... ... ... | ௫௯. |
| ௨௫௪. | "மகளிர் மலைத்த ........... சிலைத்தார் மார்ப" ... ... | ௧௦. |
| ௨௯௪. | "மன்னெயின் முகவை" ... ... ... ... ... | ௩௭௩. |
| ௩௬௭. | "ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே"... ... ... ... | ௧௯௩. |
| | கோவிந்தையாரிலம்பகம். | |
| ௪௩. | "நாமுறக் - கலைக்காற் றெடுத்த கண்ணகன் பாசறை" ... | ௩௭௩. |
| ௬௫. | "சான்றோ ருக்குத றந்தைக்குக் கடனே" ... ... ... | ௩௧௨. |
| | காந்தருவதத்தையாரிலம்பகம். | |
| ௨௭௮. | "தேற்றாய் பெரும" ... ... ... ... ... ... | ௫௯. |
| ௨௮௧. | "நகுதக் கனரே" ... ... ... ... ... ... | ௭௨. |
| ௨௯௪. | "பசுமட் குரூஉத்திரள்" ... ... ... ... ... | ௩௨. |
| | குணமாலையாரிலம்பகம். | |
| ௧௦௭. | "மன்னுயி ரெல்லா நின்னஞ் சும்மே" ... ... ... | ௨௦. |
| | கேமசரியாரிலம்பகம். | |
| ௪௨. | "என்றிறத் தவலங் கொள்ளல்" ... ... ... ... | ௨௫௩. |
| | கனகமாலையாரிலம்பகம். | |
| ௩௦௯. | "கொற்றுறைக் குற்றில" ... ... ... ... ... | ௯௫. |

| இலம்பகக் கவித்தொகை. | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| | **விமலையாரிலம்பகம்.** | |
| அஅ. | "கொடிக்கூரை" ... ... ... ... ... ... | உஉ. |
| | **சுரமஞ்சரியாரிலம்பகம்.** | |
| எ. | "நட்குமா காலே" ... ... ... ... ... ... | கஙஙு. |
| | **மண்மகளிலம்பகம்.** | |
| சக. | "வென்றதன் பச்சை ........... முரசம்" ... ... ... | உஅஅ. |
| கஉ0. | "நிலமக ளழுத காஞ்சியும்" ... ... ... ... ... | ஙசரு. |
| உ0க. | "அணியலு மணிந்தன்று" ... ... ... ... ... | க. |
| | **முத்தியிலம்பகம்.** | |
| உஎரு. | "வளிவழக் கறுத்த வங்கம்" ... ... ... ... ... | ஙசஅ. |
| ஙகஉ. | "களிறுகவு ளடுத்த ........... துப்பினை" ... ... ... | ஙய. |
| ஙஅச. | "புலைய னேவப் புன்மே லமர்ந்துண்டு" ... ... ... | ஙச0. |
| ஙஅச. | "இழிபி றப்பினே னீயப் பெற்று" ... ... ... ... | ஙசங. |

---

# திருக்குறள்.

## பரிமேலழகருரை.

| | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| உரைப்பாயிரம். | [உரைநடை] "ஒப்ப நாடி யத்தக வொறுத்தல்"... | க0. |
| அறன்வலியுறுத்தல். | "சிறப்புடை மரபிற் பொருளு மின்பமு மறத்து வழிப்படூஉந் தோற்றம் போல"... ... | ஙக. |
| குறள். | | |
| ஙக. | "தூங்கு கையா னோங்கு நடைய" ... ... ... ... | உஉ. |
| சச. | [உரைநடை] "இட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்து நெய்யுடை யடிசின் மெய்ப்பட விதிர்த்தும்"... | கஅஅ. |
| எஉ. | "தன்னகம் புக்க ......... யுரவோன்" ... ... ... | சங. |
| கக0. | [உரைநடை] "ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும் பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்" ... | ஙச. |
| உ0எ. | "வீயா - துடம்பொடு நின்ற வுயிரு மில்லை" ... ... ... | ஙசங. |
| உஙக. | "உண்டி முதற்றே யுணவின் பிண்டம்" ... ... ... | கஅ. |
| உஙஉ. | [உரைநடை] "உரையும்பாட்டுமுடையோர்"... ... ... | உஎ. |

| குறள் எண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| ௨௩௪. | "புலவர் பாடும் ......... முடிந்து" ... ... ... ... | ௨௭. |
| ௩௮௪. | "மாண்ட - வறநெறி முதற்றே யரசின் கொற்றம்" .... ... | ௫௫. |
| ௩௯௫. | [உரைநடை] "பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே" ... | ௧௮௩. |
| ௫௪௬. | "மாண்ட - வறநெறி முதற்றே யரசின் கொற்றம்" ... ... | ௫௫. |
| ௬௧௨. | "பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே" ... ... ... | ௧௮௮. |
| ௭௭௮. | "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்" ... ... ... | ௩௧. |
| ,, | "புட்பகைக் - கேவா னாகலிற் ........ புடைப்ப" ... ... | ௬௮. |
| ௭௮௫. | "இன்றே பொல்கநும் புணர்ச்சி" ... ... ... ... | ௫௮. |
| ௮௯௩. | [உரைநடை] "காலனுங் காலம் பார்க்கும் பாராது<br>வேலீண்டு தானை விழுமியோர் தொலைய<br>வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே" ... | ௪௧. |
| ௯௪௮. | "கழுவாயு முள" ... ... ... ... ... ... | ௩௪. |
| ௯௭௦. | [உரைநடை] "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்<br>வலவ னேவா வான வூர்தி<br>யெய்துப" ... ... ... ... ... | ௨௭. |
| ௯௮௯. | "பெருங்கடற் - காழி யனையன் மாதோ" ... ... ... | ௩௩௦. |
| ௧௦௨௯. | "உறைப்புழி யோலை போல<br>மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே"<br>(உறைப்பெயல்) ... ... ... ... ... ... | ௨௯௦. |
| ௧௦௩௪. | "ஊன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே" ... ... ... | ௩௫. |
| ௧௦௯௦. | "அரிமயிர்த் திரண்முன்கை"... ... ... ... ... | ௧௧. |
| ௧௩௧௩. | "கோட்டங் கண்ணியுங் கொடுந்திரை யாடையும்" ... ... | ௨௭௫. |

## திருச்சிற்றம்பலக்கோவையாருரை.

| தி - கோ, பா. எண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| ௪௫. | "தேற்றாப் புன்சொ னோற்றிசின்" ... ... ... ... | ௨௦௨. |
| ௬௩. | "புனவர் தட்டை புடைப்பி .........ழுமே" ... ... ... | ௪௯. |

# தொல்காப்பியம், சொல்லதிகாரம்.

## சேனாவரையருரை.

| சூத்திர வெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| ௧௬. | "பொன்னுந் துகிரு முத்து மணியும்"... ... ... ... | ௨௧௮. |
| ௧௮. | "செஞ்ஞாயிற்று..............வேண்டினும்" ... ... ... | ௩௮. |
| ௨௬. | "கவிசெந் தாழிக் குவிபுறத் ............கூடி" ... ... ... | ௨௩௮. |
| ௨௯. | "பெருவிற லமரர்க்கு வென்றி தந்த"... ... ... ... | ௫௫. |
| ௪௬. | "நெடுநல் யானையுந் தேரும்..............யாம்" ... ... ... | ௭௨. |

| சூத்திர வெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| ௪௬. | "ஆவு மானியற் பார்ப்பன.........சேர்மின்" | ௯. |
| ௪எ. | "ஊன்றுவை கறிசோ று............லல்லது"... | ௧௪. |
| ௫௧. | "கடுஞ்சினத்த கொல்களிறு ............தாயினும்" | ௫௫. |
| ,, | "பாணன் பறையன் ............குடியு மில்லை" | ௩௩௫. |
| ௨௦எ. | "பீடின்று பெருகிய............ரெமரே" | ௩எ௫. |
| ௨௨௦. | "அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே"... | ௧எ௩. |
| ,, | "வடாது", "தெனாது" | ௬. |
| ௨௩௩. | "நெல்லரியு மிருந்..................மிழலை" | ௨௪. |
| ௨௫௦. | "அனையை யாகன் மாறே" | ௪. |
| ௨௫௨. | "சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே" | ௨௩௫. |
| ௨௫அ. | "மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்" | ௧௪௩. |
| ௨௬௬. | "முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்"... | எ௩. |
| ௨௬௯. | "எல்வளை" | ௨௪. |
| ௨எ௨. | "அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே" | ௫. |
| ௨எ௯. | "தான்பிற வரிசை .....................தூக்கி"... | ௧௪௦. |
| ௨௯௨. | "நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து" | ௩௯௫. |
| ௨௯௯. | "ஈயாது வீயு முயிர்தவப் பலவே" | ௨௩௬. |
| ௩௧௬. | "விதுப்புற வறியா வேமக் காப்பினை" | ௨௦. |
| ௩௨௦. | "வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்"... | ௩௯௪. |
| ,, | "நளிமலை நாடன்" | ௧௫௦. |
| ௩௩அ. | "அமரர்ப் பேணியு.............தியும்"... | ௯௯. |
| ௩௪௦. | "வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி" | ௪எ. |
| ௩௪எ. | "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்"... | ௫௩. |
| ௩௪௯. | "கம்பலை மூதூர்" | ௫௪. |
| ௩௫௩. | "வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து"... | ௨எ. |
| ௩௫௬. } ௩௫எ. } | "அரிமயிர்த் திரண்முன்கை"... | ௧௧. |
| ,, | "கழூஉ விளங் காரங் கவைஇய மார்பே" | ௩௫அ. |
| ௩௫அ. | "கடிமரந் தடியு மோசை..........யியம்ப"... | ௩௬. |
| ௩௫௯. | "செய்திரங் காவினை" | ௧௦. |
| ௩௬௦. | "ஒக்க லொற்கஞ் சொலிய"... | ௩௨எ. |
| ௩எ௧. | "வயவுறு மகளிர்" | ௨௦. |
| ௩அ௨. | "கெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே" | ௩௩௫. |
| ௩அ௯. | "தவப்பல" | ௨௩௫. |
| ௩௯௬. | "பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே" | ௧அஅ. |
| ௩௯எ. | "பெறலருங் குரைத்து" | ௫. |
| ௪௧௪. | "என்போற் பெரு............ கூற்றே" | ௨௫௫. |
| ,, | "நம்மனோருமற் றி............... மாதோ" | ௨௧௦. |
| ௪௬௩. | "அரசெனப் படுவது ...............பத்தை" | ௩௫. |

# தொல்காப்பியம், நச்சினார்க்கினியருரை.

## ௧.—எழுத்ததிகாரம்.

| சூத்திர வெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| ௧௧௧. | "எயிறுபடை யாக..........தருந்தொழில் சாயா" ... ... | ௩. |
| ௧௧௫. | "நினவ றுவ லெனவ கேண்மதி" ... ... ... ... | ௩௫. |
| ௧௫௭. | "மறங்கடிந்த வருங்கற்பின்" ... ... ... ... ... | ௧௬௬. |
| ,, | "சிலசொல்லிற் பலகூந்தல்" ... ... ... ... ... | ,, |
| ,, | "புலம்புக் கன்னே புல்லணற் காளை" ... ... ... ... | ௨௫௮. |
| ௨௩௭. | "நாளன்று போகி" ... ... ... ... ... ... | ௧௨௪. |
| ௨௬௧. | "எழூஉத்தாங்கிய கதவுமலைத்தவர் குழூஉக்களிற்றுக் குறும்புடைத்தவின்" ... ... ... | ௯௭. |
| ௩௧௨. | "புலம்புக் கனனே" ... ... ... ... ... ... | ௨௫௮. |
| ௪௮௧. | "பயங்கெழு மாமழை" ... ... ... ... ... | ௨௬௬. |
| ௪௮௩. | "தடவுநிலை" ... ... ... ... ... ... ... | ௧௪0. |
| ,, | "காரெதிர் கானம் பாடினே மாக" ... ... ... ... | ௧௪௪. |

## ௨.—சொல்லதிகாரம்.

| சூத்திர வெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| ௧. | "சிலசொல்லிற் பலகூந்தல்", "மறங்கடிந்த வருங்கற்பின்" ... | ௧௬௬. |
| ௧௮. | "செஞ்ஞாயிற்று ........வெயில்வேண்டினும்" ... ... | ௩௮. |
| ௨௬. | "கவிசெந் தாழிக்........ கூகையுங் கூடி" ... ... ... | ௨௩௮. |
| ௨௯. | "பெருவிற லமரர்க்கு வென்றி தந்த" ... ... ... ... | ௫௫. |
| ௩௪. | "மன்னுக பெரும நிலமிசை யானே" ... ... ... | ௬. |
| ,, | "மன்ற வுலகத்து மன்னுதல் குறித்தோர்" ... ... ... | ௧௬௫. |
| ௪௫. | "ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்" ... ... ... | ௯. |
| ௪௭. | "ஊன்றுவை, கறிசோ றுண்டு வருந்துதொழி லல்லது" ... | ௧௪. |
| ௫௧. | "கடுஞ்சினத்த ..........மாண்ட தாயினும்" ... ... ... | ௫௫. |
| ௫௭. | "ஆண்மை தோன்ற வாடவர்க் கடந்த" ... ... ... | ௨௪௨. |
| ௬௭. | "கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கி" ... ... ... | ௧௧௭. |
| ௧௧௨. | "கறைமிட றணியலு மணிந்தன்று" ... ... ... ... | ௧. |
| ௧௩௧. | "வாயி லோயே வாயி லோயே" ... ... ... ... | ௨0௬. |
| ,, | "விளங்குமணிக் கொடும்பூ ணாய்" ... ... ... ... | ௧௩0. |
| ,, | "பெருங்கல் வைப்பி னடுகிழ வோயே" ... ... ... | ௨0௨. |

| சூத்திர வெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| ௧௩௧. | "ஆவு மானியற் ......... பேணி" ... ... ... ... | ௯. |
| ௧௯௫. | "நீயே, பிறர்நாடு கொள்ளுங் காலை" ... ... ... ... | ௫௭. |
| ௨௦௫. | "கழிந்தது பொழிந்தென ......... கரப்பினும்" ... ... | ௨௦௯. |
| ௨௦௬. | "காண்கு வந்திசிற் பெரும" ... ... ... ... ... | ௧௭. |
| ,, | "நோகோ யானே" ... ... ... ... ... ... | ௨௩௪. |
| ௨௦௯. | "பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே" ... ... ... | ௩௭௫. |
| ௨௧௯. | "தாலி களைந்தன்று மிலனே"... ... ... ... ... | ௭௭. |
| ,, | "வியந்தன்று மிழிந்தன்று மிலனே" ... ... ... ... | ,, |
| ௨௨௨. | "அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே" ... ... | ௧௭௩. |
| ௨௨௮. | "நாடா கொன்றோ காடா கொன்றோ" ... ... ... | ௧௮௭. |
| ௨௩௦. | "நாளன்று போகி" ... ... ... ... ... ... | ௧௨௪. |
| ,, | "துன்னிப், பெரிய வோத்தினுஞ் சிறிய வுணரா" ... ... | ௩௭௫. |
| ௨௩௩. | "கண்டுயின்று, முன்றிற் ......... யாயும்" ... ... ... | ௧௫௯. |
| ௨௩௫. | "பசந்த மேனி........... வெய் யோளும்" ... ... ... | ,, |
| ,, | "நெல்லரியு மிருந்தொழுவர்" ... ... ... ... | ௨௪. |
| ௨௩௬. | "அன்னதன்மையு மறிந்தீயார்" ... ... ... ... | ௧௩௬. |
| ௨௫௨. | "அனையை யாகன் மாறே" ... ... ... ... ... | ௪, ௨௦. |
| ௨௫௪. | "புதுமலர் ............கோவே" ... ... ... ... | ௧௪௭. |
| ,, | "சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே" ... ... ... | ௨௩௫. |
| ௨௫௫. | "வருகதில் ............தமியன் வந்த"... ... ... | ௨௮௪. |
| ௨௫௭. | "மண்டிணிந்த ............வளியும்" ... ... ... ... | ௨. |
| ௨௬௦. | "நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து" ... ... | ௨௬௩. |
| ௨௬௮. | "முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்"... ... ... ... | ௭௩. |
| ௨௭௪. | "அளிதோ ..............குரைத்தே" ... ... ... ... | ௫. |
| ௨௭௭. | "ஊனு மூனு முனையின்" ... ... ... ... | ௩௮௧. |
| ௨௮௧. | "தான்பிற, வரிசை .........தூக்கி" ... ... ... ... | ௧௪௦. |
| ,, | "நகைதர வந்தோர் நகைபிறக் கொழிய" ... ... ... | ௧௫. |
| ௨௮௨. | "காரெதிர் கானம் பாடினே மாக" ... ... ... ... | ௧௪௪. |
| ,, | "இனைத லானு ளாக" ... ... ... ... ... | ,, |
| ,, | "அருளா யாதலோ கொடிதே" ... ... ... ... | ,, |
| ,, | "தன்பெய ராகலி னுணி" ... ... ... ... ... | ௧௫௨. |
| ,, | "அனையை யாகன் மாறே" ... ... ... ... ... | ௪, ௨௦. |
| ௨௮௪. | "அந்தோ வெந்தை யடையாப் பேரில் ... ... ... | ௨௬௧. |
| ,, | "அன்னோ, வென்னு வதுகொ றுனே" ... ... ... | ௩௪௫. |
| ௨௯௪. | "நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து" ... ... ... ... | ௩௯௫. |
| ௨௯௫. | "உண்டுந் .........செல்வ லத்தை யானே" ... ... ... | ௧௬௬. |
| ௨௯௭. | "ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே"... ... ... ... | ௧௯௩. |
| ௩௦௧. | "ஈயாது வீயு முயிர்தவப் பலவே" ... ... ... ... | ௨௩௫. |
| ௩௦௯. | "வளன்வலி .........யில்லாகி யரோ" ... ... ... | ௧௯௦. |

| சூத்திர வெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| ௩௧௯. | "விதுப்புற வறியா வேமக் காப்பினை" ... ... ... | ௨0. |
| ௩௨0. | "நளிமலை நாட ........னனவே" ... ... ... ... | ௧௫0. |
| ,, | "வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்"... ... ... | ௩௯௪. |
| ௩௩௮. | "அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்" ... ... ... | ௯௯. |
| ௩௪0. | "வள்ளியோர்ப் படர்.........யானும்" ... ... ... | ௧௫௪. |
| ,, | "பசந்த மேனியொடு படரட வருந்தி" ... ... ... | ௧௫௯. |
| ௩௪௭. | "வெறுக்க கேள்வி ......... கபிலன்" ... ... ... | ௫௩. |
| ௩௫௩. | "வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து"... ... ... | ௨௭. |
| ௩௫௭. | "கழூஉவிளங் காரங் கவைஇய மார்பே" ... ... ... | ௧௯. |
| ௩௫௮. | "முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்" ... ... | ௧௫௮. |
| ,, | "கடிமரந் தடியு ............ யியம்ப"... ... ... ... | ௩௬. |
| ௩௫௯. | "செய்திரங் காவினைச் சேண்விளங் கும்புகழ்" ... ... | ௧0. |
| ,, | "இனிநினைந் திரக்க மாகின்று" ... ... ... ... | ௨௪௩. |
| ௩௬0. | "ஒக்க லொற்கஞ் சொலியத் தன்னூர்" ... ... ... | ௩௨௭. |
| ௩௬௪. | "வியன்றுனை விறல்வேந்தே" ... ... ... ... | ௩௮. |
| ௩௭௫. | "புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போல" ... ... ... | ௬௮. |
| ௩௮௩. | "கடிமரந் தடியு மோசை" ... ... ... ... ... | ௩௬. |
| ,, | "கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்" ... ... ... | ௧௫. |
| ,, | "அம்புதுஞ்சுங் கடியரணால்"... ... ... ... ... | ௨0. |
| ௩௯௨. | "சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே" ... ... ... | ௨௩௫. |
| ௪0௧. | "பொன்னோடைப் ............ சாயா" ... ... ... | ௩. |
| ௪௧0. | "நும்ம ரோருமற்.........வலர் மாதோ" ... ... ... | ௨௧0. |
| ௪௧௨. | "கேழற் பன்றி" ... ... ... ... ... ... | ௧௫௨. |
| ,, | "கழூஉவிளங் காரங் கவைஇய மார்பே" ... ... ... | ௧௯. |
| ,, | "பொன்னோடைப் .........யானை" ... ... ... ... | ௩. |
| ௪௧௩. | "பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்" ... ... ... | ௩௨௪. |
| ,, | "மன்ற வேம்பி......... மலைந்து" ... ... ... ... | ௭௯. |
| ௪௧௪. | "என்போற் ..................புறுக" ... ... ... ... | ௮௩. |
| ,, | "நும்ம ரொரு .........யின்" ... ... ... ... ... | ௨௧0. |
| ௪௧௫. | "வென்வே லண்ணற் காணு வூங்கே" ... ... ... | ௧௪௧. |
| ,, | "நெல்லரி தொழுவர் .............கின்" ... ... ... | ௩௭௯. |
| ௪௪௩. | "மெழுகு மாப்பிகண் கலுழ்நீ ரானே" ... ... ... | ௨௪௯. |
| ௪௪௫. | "ஈயென விரத்தலோ வரிதே நீயது" ... ... ... ... | ௧௫௪. |
| ,, | "சிறியகட் ............ மன்னே" ... ... ... ... | ௨௩௫. |
| ,, | "இவற்கீத் துண்மதி கள்ளே" ... ... ... ... | ௨௯0. |
| ௪௪௬. | "நின்னது தாவென .........றென்கோ" ... ... ... | ௧௩௬. |
| ௪௫௫. | "கண்ணி ............. ளேறே" ... ... ... ... | ௧. |
| ,, | "ஈரந்தை யோனே பாண்பசிப் பகைஞன்" ... ... ... | ௧௮0. |
| ,, | "இழிபி றப்பினோ னீயப்......... மிசையும்" ... ... ... | ௩௬௩. |

| சூத்திர வெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| சரு. | "நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய" ... ... ... | ககூ. |
| சஎ. | "வறுவியேன் பெயர்கோ வாண்மேம் படுந" ... ... ... | உ0கூ. |
| ,, | "தூங்குந்து ........... பாயுந்து" ... ... ... ... | உச. |
| சசாங. | "இவன்யா ரென்குவை யாயி னிவனே" ... ... ... | கங. |
| ,, | "முரசு முழங்கு...........பெரும" ... ... ... ... | ஙரு. |

---

## ங.—பொருளதிகாரம்.

| சூத்திர வெண். | | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|---|
| உசா. | | "வயலைக் கொடியின் வாடிய மருங்குல்" ... ... | ங0ரு. |
| ங0. | | "நெடுங்கை [இருங்கோ] வேண்மா .........பிடவூர்" | ஙகரு. |
| ,, | | "பகடுபுரந் தருநர் பார மோம்பி.........யாயின்" ... | ஙரு. |
| ருச. | (முற்றும்) | "முட்காற் காரை .........வெய் யோனே" ... | உருஅ. |
| ருரு. | | "முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்"... | கருஅ. |
| ருஎ. | | "ஆவு மானியற் பார்ப்பன மாக்களு......மறத்தின்" | கூ. |
| ருஅ. | ,, | "நறவுந் தொடுமின் .........சாயலரே" ... ... | உசாஉ. |
| சா0. | | "ஏற்றுவல னுயரிய ......முளவோ நினக்கே" ... | ருசா. |
| ,, | ,, | "பொன்வார் .........புறக்கொடுத் தனவே" ... | ங0அ. |
| ,, | ,, | "கள்ளின் வாழ்த்திக்.........முறவே" ... ... | ஙகசா. |
| ,, | ,, | "வெருக்குவிடை யன்ன .........துணையே" ... | ஙஉச. |
| ,, | ,, | "ஏறுடைப் பெருநிரை .........லோயே" ... ... | உருகூ. |
| ,, | ,, | "வளரத் தொடி.........மிசை யதுவே" ... ... | உசா0. |
| ,, | | "பெருங்களிற் றடி.........மகன்"... ... ... | உசாங. |
| ,, | ,, | "அத்த நண்ணிய .........பொருளே" ... ... | ஙகங. |
| ,, | ,, | "பெருநீர் மேவற் .........மோர்க்கே" ... ... | உகூஎ. |
| ,, | | "கெடுக சிந்தை கடிதிவ டுணிவே" ... ... | உஎகூ. |
| ,, | | "அந்தோ வெந்தை" ... ... ... ... | உசாக. |
| ,, | ,, | "ஊர்நனி யிறந்த .........செல்வே" ... ... | உசாரு. |
| ,, | ,, | "இல்லடு கள்ளி .........மூரே" ... ... ... | ஙஉகூ. |
| ,, | | "பெருங்களிற் றடியில்" ... ... ... ... | உசாங. |
| ,, | | "பாலுடை மருங்கிற் பதுக்கை" ... ... ... | உசாச. |
| சாங. | | "சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்" ... | ஙக. |
| ,, | | "வினைமாட்சிய .........ருனை" ... ... ... | கசா. |
| ,, | | "களிறுகடைஇயதாட் .........கையால்" ... ... | எ. |
| ,, | ,, | "சிறுஅர் துடியர்.........மலைந் தனனே" ... ... | உகூக. |
| ,, | ,, | "துடியெறியும் புலைய.........வரவே" ... ... | உஅஎ. |
| ,, | ,, | "பல்சான் றீரே.......... வேழலே" ... ... ... | ங0க. |

| சூத்திர வெண். | | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|---|
| ௬௩. | (முற்றும்) | "வேந்துடைத் தானை.........யோனே" ... ... | ௩௩0. |
| ,, | | "வருகதில் வல்லே" ... ... ... ... | ௨௮௪. |
| ,, | ,, | "வெள்ளைவெள் யாட்டு.........இலதே" ... ... | ௨௮௬. |
| ,, | | "நீயே, புறவி னல்லல் .........வும்" ... ... | ௪௬. |
| ,, | | "வள்ளியோர்ப் படர்ந்து"... ... ... ... | ௪௭. |
| ௬௪. | | "பிணங்குகதிர் .........மன்னன்" ... ... ... | ௩௩௮. |
| ௬௭. | | "கழிந்தது பொழிந்தென" ... ... ... ... | ௨0௩. |
| ,, | | "ஆனா வீகை யடுபோர்" ... ... ... ... | ௪௨. |
| ,, | ,, | "அடுநை யாயினு .........தக வுடைத்தே"... ... | ௩௬. |
| ,, | ,, | "வயலைக் கொடியி ......களைந் தனவே" ... ... | ௩0௫. |
| ,, | ,, | "அளிதோ தானே...... யும்மே" ... ... ... | ௧0௯. |
| ,, | ,, | "வருகதில் ......... நகுமே" ... ... ... | ௨௮௪. |
| ௬௮. | ,, | "மணிதுணர் .........னதே" ... ... ... | ௨௭௨. |
| ,, | ,, | "பிறர்வேல் .........ஞ்சே" ... ... ... | ௩௩௨. |
| ,, | | "மதியேர் வெண்குடை" ... ... ... ... | ௩௯௨. |
| ௭௧. | | "நெடுவேல் ............ மோர்க்கே" ... ... | ௨௯௭. |
| ௭௨. | ,, | "வெண்குடை மதி............பிறரே" ... ... | ௨௯௪. |
| ,, | ,, | "நறுவிரை............தானையினனே" ... ... | ௨௭௬. |
| ,, | ,, | "கோட்டங் ................வருமே" ... ... | ௨௭௫. |
| ,, | ,, | "மாவா ராதே..............மாவே" ... ... | ௨௭௩. |
| ,, | ,, | "பருத்தி வேலிச் ...........றவ்வே" ... ... | ௨௯௯. |
| ,, | | "இலம்பிறக் கிடுவது போல" ... ... ... | ௩0௩. |
| ,, | | "இரப்பாது கொடுக்கும்" ... ... ... ... | ௧௮0. |
| ,, | ,, | "இவற்கீத்...............வேலே" ... ... ... | ௨௯0. |
| ,, | ,, | "நீலக் கச்சை.........கொண்டனனே" ... ... | ௨௭௪. |
| ,, | ,, | "வருதார் தாங்...........புகழே" ... ... ... | ௬௨. |
| ௭௫. | ,, | "நன்றாய்ந்த நீணிமிர்சடை......யானே" ... ... | ௧௬௬. |
| ,, | | "நளிகட லிருங்குட்டத்து" ... ... ... | ௨௬. |
| ,, | | "கடுங்கண்ண கொல்களிற்றான்" ... ... ... | ௧௪. |
| ,, | ,, | "உற்றுழி யுதவியு .........படுமே" ... ... ... | ௧௮௩. |
| ,, | ,, | "ஓவத் தன்ன ...........வோனே" ... ... | ௨௫௧. |
| ,, | ,, | "இன்கடுங் கள்ளி.............லையே" ... ... | ௮0. |
| ௭௬. | [உரை நடை] | "ஈண்டுவேண்மானிடந்துழந்தட்ட" ... ... ... | ௩௭௨. |
| ,, | (முற்றும்) | "இருப்புமுகஞ்............யோயே" ... ... | ௩௬௯. |
| ,, | | "நளிகட லிருங்குட்டத்து" ... ... ... | ௨௬. |
| ,, | | "களிற்றுக்கோட்டன் .........கிழவோயே" ... | ௩௭௧. |
| ,, | ,, | "இரும்புமுகஞ் சிதைய.........ணதுவே" ... ... | ௩0௯. |
| ,, | | "இவ்வே, பீலி யணிந்து" ... ... ... ... | ௯௫. |
| ,, | ,, | "எருது காலுறா தி .............ளன்னே" ... ... | ௩௨௭. |

| சூத்திர வெண். | | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|---|
| ௭௬. | | "களம்புக லோம்புமின்" ... ... ... ... | ௮௭. |
| ,, | (முற்றும்) | "பருதி சூழ்ந்த ............டோரே" ... ... | ௩௫௮. |
| ,, | ,, | "மன்னு வுலகத்து .........கண்டே" ... ... | ௧௬௫. |
| ,, | ,, | "படைப்புப் பலபடை......... நாளே" ... ... | ௧௮௮. |
| ௭௮. | ,, | "மயங்கிருங் .................. ஞரே" ... ... | ௩௬௫. |
| ௭௯. | ,, | "பல்சான் றீரே............... றதுவே" ... ... | ௧௯௫. |
| ,, | | "இருங்கட லுடுத்த" ... ... ... ... | ௩௬௩. |
| ,, | ,, | "இனிநினைந் திரக்க மா.........மக்கே" ... ... | ௨௪௩. |
| ,, | | "சிறியகட் பெறினே.........தானிற்கு மன்னே" ... | ௨௩௫. |
| ,, | ,, | "பாடுநர்க் கீத்த ..............னெனவே" ... ... | ௨௨௧. |
| ,, | | "செற்றன் றாயினும்" ... ... ... ... | ௨௨௨. |
| ,, | ,, | "மெல்ல வந்தெ ...............றாரே" ... ... | ௭௩. |
| ,, | | "நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்" ... ... ... | ௭௨. |
| ,, | | "மடங்கலிற் சினைஇ" ... ... ... ... | ௭௧. |
| ,, | ,, | "திங்களி யிரவ............புண்ணே" ... ... | ௨௮௧. |
| ,, | ,, | "நுதிவேல் ..................ர்க்கே" ... ... | ௩௪௧. |
| ,, | ,, | "களிறணைப்பக் கலங்கினகா......... ஞரே" ... | ௩௪௫. |
| ,, | ,, | "மீனுண் கொக்கின்" (இப்பாடல் புறநானூற்றில் அகப்பட்டிலது.) | |
| ,, | ,, | "கதிர்மூக் காரற் கீழ்ச்சேற்று" ... ... ... | ௨௪௯. |
| ,, | ,, | "குழவி யிறப்பினு ............தானே" ... ... | ௭௪. |
| ,, | ,, | "இளையரு முதிய.........ளிய டானே" ... ... | ௨௫௪. |
| ,, | ,, | "யாங்குப்பெரி தாயி......... பண்பே" ... ... | ௨௪௫. |
| ,, | ,, | "அளிய தாமே............புல்லா யின்வே" ... | ௨௪௮. |
| ,, | ,, | "பல்சான் றீரே............றற்றே" ... ... ... | ௨௪௬. |
| ,, | ,, | "நரம்பெழுந் துல............தனளே" ... ... | ௨௭௮. |
| ,, | ,, | "ஈன்றுபுறந் தருதல்" ... ... ... ... | ௩௧௨. |
| ,, | ,, | "களரி பரந்து ............பறி யாதே" ... ... | ௩௫௬. |
| ௮௧. | | "செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவன்" ... ... | ௩. |
| ௮௨. | ,, | "வரைபுரையு ............தெனவே" ... ... | ௩௮. |
| ,, | ,, | "உண்டா லம்மவிவ் ............யானே" ... ... | ௧௮௨. |
| ,, | | "நிலமிசை வாழ்நர்" ... ... ... ... | ௪௩. |
| ௮௩. | ,, | "அடிபுனை தொடு............மையலூரே" ... ... | ௮௩. |
| ௮௬. | | "ஆவஞ் சேர்ந்த ............வழங்கவுய்" ... ... | ௧௪. |
| ,, | | "வெயின்மறைக் ............லெனவே" ... ... | ௬0. |
| ,, | | "நீயேயல்லங்குளைப்............மாதோ" ... ... | ௪. |
| ,, | | "மள்ளர், மலைத்தல் ............மார்ப" ... ... | ௧0. |
| ௮௯. | | "வல்லா ராயினும்............னும்"... ... ... | ௫௭. |
| ,, | | "காலனுங் காலம்" ... ... ... ... | ௪௧. |

| சூத்திர வெண். | | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|---|
| ௯௦. | (முற்றும்) | "தடவுநிலைப் ..........கடனே" ... ... ... | கச௦. |
| ,, | ,, | "பாரிபாரி..........புரப் பதுவே" ... ... ... | க௦எ. |
| ,, | ,, | "ஒல்லுவ தொல்லு.......... நாளே" ... ... | க௯௬. |
| ,, | ,, | "களிங்கனி யன்ன........லாதே" ... ... ... | க௨எ. |
| ,, | ,, | "மாசற விசித்த ..........செயலே" ... ... | ௫௦. |
| ,, | ,, | "முரசுகடிப் ..........வேலே" ... ... ... | க௫அ. |
| ,, | ,, | "இன்று செலினுங்.......ழியவே" ... ... ... | கஎக. |
| ,, | ,, | "இம்மைச் ........வண் மையே" ... ... ... | க௯ச. |
| ,, | ,, | "வாயி லோயே.......... சோறே" ... ... | உ௦௬. |
| ,, | ,, | "எருமை யன்ன ........குழைத்தே" ... ... | ௫. |
| ,, | ,, | "காய்நெல் ..........கெடுமே" ... ... ... | கஅச. |
| ,, | ,, | "வடாஅது பனி.......... யானே" ... ... | ௬. |
| ,, | ,, | "அருளா யாத.......... ரானே" ... ... ... | கசச. |
| ,, | | "கன்முழை யருவி" ... ... ... ... | கசஎ. |
| ௯க. | ,, | "பாணன் சூடிய .....வண் மையே" ... ... | கசக. |
| ,, | ,, | "சிலையுலா நிமிர்ந்த........ட்டே" ... ... ... | ௯௯ச. |
| ,, | ,, | "சேயிழை பெறுகுவை..........செலினே" ... | க௦௫. |
| ,, | | "மெல்லியல் ..........செவியிற்" ... ... ... | க௯௯. |
| ,, | | "ஞாயிறு சுமந்த..........வளவ" ... ... ... | ௯௫. |
| ,, | | "கடுந்தேர் குழித்த..........நல்லெயில்" ... ... | க௫ |
| ,, | | "வீயாச் சிறப்பின்.......... நட்ட" ... ... | க௫. |
| ,, | ,, | "ஆடுநனி மற.......... தோயே" ... ... | க௬ச. |
| ,, | ,, | "மதியேர் வெண்குடை........கடையே" ... ... | ௯௯உ. |
| ,, | ,, | "நல்யா ழாகுளி ..........வரற்கே" ... ... | ௬ச |
| ,, | ,, | "ஊனு மூணு..........மகனே" ... ... | ௯அக |
| ,, | ,, | "குன்றுமலை ..........விடினே" ... ... | உ௦அ |
| ,, | ,, | "தென்பரதவர் ..........றலையே" ... ... | ௯எஅ. |
| ,, | ,, | "ஒருதிசை யொரு.......... மாட்டே" ... ... | க௨க. |
| ,, | ,, | "இரவலர் புரவலை ..........யானே" ... | க௬உ. |
| ,, | | "வேழம் வீழ்த்த ..........பகழி" ... ... ... | க௫உ. |
| ,, | ,, | "நின்னயந் .......... வளனே" ... ... ... | க௬௯. |
| ,, | [உரை நடை] | "புதுப்புள்வரினும் பழம்புட்போகினும்" ... ... | உ௦. |
| ,, | | "நெல்லரியு மிருந்தொழுவர்" ... ... ... | உச. |
| ,, | (முற்றும்) | "ஆடிய லழற்.......... யோனே" ... ... | உ௨௯. |
| ,, | ,, | "இருமுந்நீர் ..........சும்மே" ... ... | உ௦. |
| ,, | ,, | "மண்டிணிந்த ..........ன்றே" ... ... ... | உ. |
| ,, | | "காலனுங் காலம்" ... ... ... ... ... | சக. |
| உச௬. | | "என்னைக் கூரிஃ .......... யானும்" ... ... | அ௫. |
| | | "என்னை மார்பிற் புண்ணும் வெய்ய" ... ... | உஅ௦. |

| சூத்திர வெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| உசஎ. | "வரை புரையு மழகளிற் றின்மிசை" ... | ... கூஅ. |
| ,, | "வெறுத்த கேள்வி ...........கபிலன்" ... | ... ருகூ. |
| உருஉ. | "நகுதக் கனரே...........கூறுநர்" ... | ... எஉ. |
| உருகூ. | "மெழுகு மாப்பிகண் கலுழ்நீ ரானே" ... | ... உசக. |
| ,, | "ஐயோ வெனின் யான் புலியஞ் சுவல்" ... | ... உருரு. |
| ,, | "இல்வழங்கு ...........முன்னே" ... | ... உருஉ. |
| ,, | "இல்லி தூர்ந்த ...........குமண" ... | ... கசாச. |
| ,, | "இன்ன விறலு ...........பறந்தலை" ... | ... கக. |
| உருச. | "தொடித்தலை ...........வெமக்கே" ... | ... உசகூ. |
| ,, | "வலியரென ...........மீக்கூறலன்" ... | ... உகூக. |
| உருரு. | "எருமை யன்ன ........... பெரும" ... | ... ரு. |
| ,, | "கிண்கிணி ...........கழ ஞெரூட்டு" ... | ... எஎ. |
| உருஎ. | "தன்னகம் புக்க........... மருக" ... | ... சாகூ. |
| ,, | "பல்லிருங் கூந்தன் .........வென் றூரே" ... | ... எகூ. |
| உருஅ. | "மண்டமர்க் குடைந்தன .........சினைஇ" ... | ... உஎஅ. |
| ,, | "வரிவயம் பொருத .........மாறூது சினனே" | ... க00. |
| ,, | "உறுதுப் பஞ்சா ...........வேந்தரை" ... | ... எஉ. |
| ,, | "நெருப்புச்சினந் தணி...........குறை" ... | ... கஉரு. |
| உசா0. | "உறையுண் முனியுமவன் செல்லு மூரே" ... | ... கூசா. |
| உஎசா. | "மாரி யன்ன ...........சென்மே" ... | ... ககூகூ. |
| ,, | ,, | ,, |
| உஎகூ. | "ஓவத் தன்ன........... வரைப்பின்" | ... உருக. |
| உஅக. | "வரைபுரையு மழகளிற்றின்மிசை"... ... | ... கூஅ. |
| உஅஅ. | "மாரி யன்ன வண்மை" ... ... | ... ககூகூ. |
| உஅகூ. | "விண்பொருபுகழ் விறல்வஞ்சி" ... ... | ... கக. |
| உகூச. | "கூற்றுவெருண் ...........கினையே" ... | ... சாஉ. |
| உகூரு. | (முற்றும்) "சாறுதலைக்கொ...........போரே" ... | ... அஉ. |
| ,, | "உழுத நோன்பக டழிதின் றாங்கு" ... | ... கஉரு. |
| ,, | "மருந்துகொண் மரத்தின் வாள்வடு மயங்கி" | ... கஅ0. |
| கூ0சா. | "வன்புலக் கேளிர்க்கு ......... பொருந" ... | ... சாஉ. |
| கூ0எ. | "வையங் காவலர்.........கதிர் விரித்தே" ... | ... அ. |
| ,, | "ஊர்க்குறு மாக்கள்......... வெமக்கே" ... | ... கூச. |
| கூ0கூ. | "பாரிபாரி யென்று........... புலவர்" ... | ... க0எ. |
| கூகஉ. | "பேரு ரட்ட கள்........... ளின்னே"... | ... கூ00. |
| கூஉசா. | "ஓங்குமலைப் பெருவிற் .........கொளீஇ" | ... ருரு. |
| ,, | "உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை" | ... கூ. |
| ,, | "நிலவுமணல் வியன்கானல்" ... ... | ... கஎ. |
| கூகூஅ. | "அகல்வயன் ...........கானல்"... | ... ,, |
| ,, | "மண்டிணிந்த ...........விசும்பும்" ... | ... உ. |

| சூத்திர வெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| ௩௩௮. | "மண்டிணிந்த ...... நீரும்" ... ... | ௨. |
| ௩௪௨. | "இமிழ்கடல் ...... கானத்து" ... ... | ௧௧. |
| ௩௫௬. | "வாள்வலந்தர ...... போன்றன" ... ... | ௪. |
| ,, | "களிறே ...... போன்றன" ... ... | ,, |
| ௩௬௨. | "உவவு மதியுருவி ...... குடை" ... ... | ௩. |
| ௩௭௦. | "பாஅல் புளிப்பினும் பகலிருளினும்" ... ... | ௨. |
| ௩௭௧. | "சிறுசோற் றானு ...... மன்னே" ... ... | ௨௩௫. |
| ௩௭௬. ௩௭௭. | "நீரற வறியா ...... தோற்கே" ... ... | ௧. |
| ,, | "நரந்த நாறுந் ...... மன்னே" ... ... | ௨௩௫. |
| ,, | "பெரியகட் பெறினே" ... ... ... ... | ,, |
| ,, | "உப்பிலாஅ வவிப் ...... நோக்காது" ... ... | ௩௬௩. |
| ,, | "உப்பிலாஅ வவிப்புழுக்கல்" ... ... ... | ,, |
| ௩௭௯. | "மாக்கட னிவந்தெழு ...... நாடே" ... ... | ௪. |
| ,, | "அனையை யாகன் மாறே" ... ... ... ... | ,, |
| ,, | "இழைபெற்ற ...... பெற்றிசினே" ... ... | ௧௧. |
| ௩௯௫. | "நரந்த நாறுந் ...... மன்னே" ... ... | ௨௩௫. |
| ௪௦௦. | "கோதை மார்பிற் ...... யானும்" ... ... | ௪௮. |
| ௪௦௨. | "உவவுமதி ...... நிழற்ற" ... ... | ௩. |
| ௪௨௪. | (முற்றும்) "இருங்கட லுடுத்த ...... றுறந்தே" ... ... | ௩௬௩. |
| ௪௨௬. | "வடாது ...... வடக்கும்" ... ... | ௬. |
| ௪௩௮. | "இன்றுள னாயி ...... கடப்பே" ... ... | ௫௩. |
| ௪௪௦. | "அறவை யாயி னி ...... காலே" ... ... | ௪௪. |
| ௪௭௩. | "என்னை, புற்கையுண்டும்பெருந்தோளன்னே" ... | ௮௪. |
| ௫௨௭. | "பெரியகட் பெறினே" ... ... ... ... | ௨௩௬. |
| ௫௩௩. | "மாவா ராதே மாவா ராதே" ... ... ... | ௨௭௩. |
| ௫௩௮. | "முன்னே செய்நீ ...... றுறந்தே" ... ... | ௩௬௩. |
| ௫௪௦. | "சிறியகட் பெறினே" ... ... ... ... | ௨௩௬. |
| ௫௭௯. | "காவல், குழவி ...... னோம்புமதி" ... | ௫. |
| ௬௧௮. ௬௧௯. | "நாகிள வளை ...... புகூஉம்" ... ... | ௨௧௬. |
| ௬௨௪. | "கான வாரண மீ ...... யோரே" ... ... ... | ௫௨. |
| ,, | "வெருக்குவிடை ...... கயந்தலை" ... ... | ௩௨௪. |
| ௬௨௮. | "அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய" ... ... | ௨௬. |
| ௬௪௨. | "இரும்பனை வெ ...... னல்லன்" ... ... | ௪௫. |
| ,, | "பனைநுகும் பன்ன ...... லாரலோடு" ... | ௨௪௧. |

# நன்னூல் விருத்தியுரை.

| சூத்திர வெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| ௧௫௫. | "சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே" ... ... ... | ௧0௯. |
| ௧௭௩. | (முற்றும்) "நாளன்று போகி...........பாடி யோரே" ... | ௧௨௪. |
| ௧௮௩. | "கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை" ... ... ... | ௧. |
| ௨௨௯. | "வாள்போழ்ந் திட்ட" ... ... ... ... ... ... | ௨௪௬. |
| ,, | "நீள்கழன் மறவர்" ... ... ... ... ... ... | ௯௩. |
| ௨௪௪. | "திறுகன் மறையினு முய்குவை போலாய்" ... ... ... | ௩00. |
| ௨௬௯. | "அலங்குளைப் புரவி...........நிலந்தலைக் கொண்ட" ... ... | ௨. |
| ,, | "பல்சான் றீரே...........பல்சான் றீரே" ... ... ... | ௧௯௫. |
| ,, | "அறனோ மற்றிது...........ஆர்வலர் முகத்தே" ... ... | ௧௨. |
| ௨௯௭. | "தூங்குகையா ........... மருப்பின" ... ... ... | ௨௨. |
| ௩0௨. | "உறைப்புழி யோலை போல" ... ... ... ... | ௨௯0. |
| ௩0௭. | "வாயி லோயே" ... ... ... ... ... ... | ௨0௬. |
| ௩0௯. | "பல்சான் றீரே" ... ... ... ... ... ... | ௧௯௫. |
| ௩௨௧. | "மாற்றருந் துப்பின் மாற்றோர் பாசறையுளன்" ... ... | ௩0௯. |
| ௩௨௭. | "பெரிய வேதஙினுஞ் ...........ரெமரெ" ... ... ... | ௩௭௫. |
| ௩௩௮. | "மன்னிய பெரும்நீ நிலமிசை யானே" ... ... ... | ௬. |
| ௩௪௧. | "நெல்லரியு மிருந்தொழுவர்...........றிரை மிசைப்பாயுந்து" ... | ௨௪. |
| ௩௪௧. | "நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து" ... ... ... ... | ௩௯௫. |
| ௩௪௪. | "ஐவரொடு சினைஇ .........கொண்ட" ... ... ... | ௨. |
| ,, | "புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுத்த" ... ... ... | ௩௩. |
| ,, | "படுமகன் கிடக்கை .........துவந் தனளே" ... ... ... | ௨௭௮. |
| ௩௫௧. | "முகந்தனர் கொடுப்ப" ... ... ... ... ... | ௩௩. |
| ,, | "நிலமிசைப் புரளுங் .........துயிர்த்து" ... ... ... | ௪௪. |
| ,, | "நீர்வார் கண்ணேந் ......... பழிச்சி" ... ... ... ... | ௧௧௩. |
| ௩௫௩. | "பெருஞ்சோற்று மிகுபதம் .........தோய்" ... ... ... | ௨. |
| ,, | "படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்" ... ... ... | ௧௯௪. |
| ௩௫௫. | "நாளன்று போகிப் .........கொள" ... ... ... ... | ௧௨௪. |
| ௩௬0. | "அலங்குளைப் புரவி .........சினைஇ" ... ... ... ... | ௨. |
| ௩௭௮. | "நகைதர வந்தோர் ......... பெரும" ... ... ... ... | ௧௫. |
| ,, | "துடியன் பாணன் .........குடியு மில்லை" ... ... ... | ௩௯௫. |
| ௩௯0. | "மாமறுத்த மலர்மார்பு" ... ... ... ... ... | ௭. |
| ௪0௧. | "பொற்கோட் டிமயமும் ......... போன்றே" ... ... | ௨. |
| ,, | "வேனிற் கோங்கின் .........டன்ன" ... ... ... ... | ௩௨௧. |
| ,, | "செஞ்ஞாயிற்று ணிலவு...... வேண்டினும்" ... ... ... | ௩௮. |
| ௪0௩. | "கவிசெந் தாழிக் .........கூடி" ... ... ... ... | ௨௩௮. |
| ௪௧0. | "துஞ்சாக் கண்ண ......... தாசே" ... ... ... ... | ௩௧. |

| சூத்திர வெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| சஉ0. | "வருகதில்" ... ... ... ... ... ... ... | உஅச. |
| சஉச. | "நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து" ... ... | உசக. |
| சகூஉ. | "சிறியகட் பெறினே......... மன்னே" ... ... ... | உ.கூரு |
| சசக. | "அது பெறலருங் குரைத்தே" ... ... ... ... | ரு. |
| சருசா. | "நனிபே தையே......... கூற்றம்" ... ... ... ... | உஉ௯. |
| சருஎ. | "எம்மம்பு கடிவிடுது .........மின்" ... ... ... ... | கூ. |
| சருஅ. | "ஒருவன், செய்நன்றி கொன்......... டின்றே" ... ... | கூச. |
| சருகூ. | "முழங்கு முந்நீர் .........வளைஇ" ... ... ... ... | கஅ. |
| ,, | "இமிழ்கடல் வளைஇய........, கிடக்கை ... ... ... | கக. |
| ,, | "சிலைத்தார் முரசங் கறங்க" ... ... ... ... ... | கூசா. |

# பத்துப்பாட்டு

## நச்சினார்க்கினியருரை.

| பக்கம். | வரி. | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|---|
| | | **க.—திருமுருகாற்றுப்படை.** | |
| உக. | ககூ. | "நிலமிசை வாழ்ந ரலமர நீர..........மருள" ... | சகூ. |
| கூஎ. | கூஉ. | "நின், கூர்நல் லம்பிற்........... கூளியர்" ... ... | உகூ. |
| | | **உ.—பொருநராற்றுப்படை.** | |
| ருகூ. | உசா. | "தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்" ... ... ... | கூகூஉ. |
| | | **கூ.—சிறுபாணாற்றுப்படை.** | |
| கூக. | சா. | "மகளிர் மலைத்த.......சிலைத்தார் மார்ப" ... ... | க0. |
| | | **ச.—பெரும்பாணாற்றுப்படை.** | |
| கக0. | ககூ. | "இல்செவித் தாகிய கேள்வி நொந்து" ... ... | சாஅ. |
| | | **சா.—மதுரைக்காஞ்சி.** | |
| ககூ0. | கூ. | "தென்பரதவர் மிடல்சாய - வடவடுகர் வாளோட்டிய" | கூஎஅ. |
| | | **கூ.—பட்டினப்பாலை.** | |
| கூகரு. | உகூ. | "கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக் - குடிபழி தூற்றுங் கோலே னாகுக" ... ... ... | எஉ. |

# புறத்திரட்டு.


புறப்பாட்டின் எண்.

(முற்றும்,)

“கண்ணி கார்நறுங் ........... தோற்கே” ... ... ௧.

“செய்குவங் கொல்...........தலையே” ... ... ... ௨௧௪.

“யாண்டுபல வா...........வாழுமூரே” ... ... ... ௧௯௧.

“படைப்புப் பலப...........நாளே” ... ... ... ௧௮௮.

“ஆன்முலை யறுத்த வறனி........... பலவே” ... ... ௩௪.

“தென்கடல் வளாகம் ...........புலவே” ... ... ௧௮௯.

“பருதி சூழ்ந்தவிப் ..............டோரே” ... ... ௩௫௮.

“கறங்குவெள் ..............முன்னே” ... ... ... ௨௫௨.

“இனிநினைந் திரக்..............வெமக்கே” ... ... ௨௪௩.

“மயங்கிருங் கருவிய..............ஞோரே” ... ... ௩௬௫.

“ஓரி னெய்தல் ....................தோரே” ... ... ௧௯௪.

“யாது மூரே யாவருங் ........லமே” ... ... ... ௧௯௨.

“நெல்லு முயிரன்றே..............கடனே” ... ... ௧௮௬.

“கால்பார் கோத்து............தருமே” ... ... ... ௧௮௫.

“மூத்தோர்-மூத்தோர்...........திருவே” ... ... ௭௫.

“உற்றுழி யுதவியும்................படுமே” ... ... ௧௮௩.

“பல்சான் றீ........... கயன்முள் .........ரதுவே” ... ௧௯௫.

“எருமை யன்ன ..............குழைத்தே” ... ... ௫.

“சேற்றுவளர் தாமரை ...........தோரே” ... ... ௨௭.

“ஒருதிசை யொருவனை........மாட்டே” ... ... ௧௨௧.

“நீயே, பிறரோம் புறு...........வோயே” ... ... ௪0.

“இருமுந்நீர் ................ளஞ் சும்மே” ... ... ௨0.

“காய்நெல் லறுத்து .............. கெடுமே” ... ... ௧௮௪.

“விளைபதச் சீறி.................... கியரோ” ... ... ௧௯0.

“இவ்வே, பீலி யணி.............. வேலே” ... ... ௯௫.

“இரும்பனை வெண்.............. மிகலே” ... ... ௪௫.

“வயலைக் கொடி....................களைந்தனவே” ... ... ௩0௫.

“இரும்பிடித் தொழுதி........காணுங் காலே” ... ... ௪௪.

“அடுநை யாயினு...........தக வுடைத்தே” .. ... ௩௬.

“பலர்க்குநிழ...............செவினே” ... ... ... ௨௨௩.

“பொன்னுந் துகிரு ..............குபவே” ... ... ௨௧௮.

“நாடா கொன்றோ............ நிலனே” ... ... ௧௮௭.

“உண்டா லம்ம.........ருண்மை யானே” ... ... ௧௮௨.

“ஆடுநனி மறந்த...........தோயே” ... ... ... ௧௬௪.

“பயங்கெழு மா...........கூர் மையே” ... ... ௨௬௬.

# யாப்பருங்கலவிருத்தியுரை.

[பாடபேதங்கள் மிக அதிகமாகவுள்ளன]

| சூத்திர வெண். | | புறப்பாட்டின் எண். |
|---|---|---|
| | [தளையோத்து.] | |
| ரு. | "திரியச் சுற்றமொடு............விளங்கி" ... ... ... | உ. |
| | [அடியோத்து.] | |
| எ. | (முழுதும்) "இருங்கடற் றானையொடு............துறந்தே" ... | ருளரு. |
| | [செய்யுளியலோத்து.] | |
| ச0. | (முழுதும்) "சிறியகட் பெறினே... ........தவப் பலவே" ... | உருரு. |
| ,, | ,, "தொடியுடைய ............தலையே" ... ... | உருக. |
| | [ஒழிபியலோத்து.] | |
| க. | "மாவழுங்கலின் மயங்குற்றன, வழி" ... ... ... ... | ருசரு. |
| ,, | "கலங்கஞர் அலிற் றுறை கலக்கானுதே" ... ... ... | ,, |
| ,, | "வடாஅது ............கீழும்" ... ... ... ... ... | சா. |
| உ. | "சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே" ... ... ... | உருரு. |

# பிழைத் திருத்தம்.

## புறநானூறு.

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௫ | ௫ | வருவதை | வருவாது |
| ,, | ௩௧ | வருகுவர் ; அவர் | வருகுவர் ; அங்ஙனம்வருவது அவர் |
| ௬ | ௪ | வருவது | வருவர் ; அது |
| ௭ | ௧௨ | கழனீங்கியஅவை | கழனீங்கியவை |
| ,, | ௨௩ | நீயொ | நீயோ |
| ௯ | ௧௫ | மன்னுக | மன்னிய |
| ௧௫ | ௧ | பொருனை | பொருநை |
| ,, | ௨௦ | யைமுடைய | யையுமுடைய |
| ௧௮ | ௧௪ | அமைந்த | அமைத்த |
| ௧௯ | ௧௦ | ஒன்னார் | ஒன்னு |
| ,, | ௨௦ | மண்கணைமுழ | மண்கனைமுழ |
| ,, | ௩ | பொய் | போய் |
| ,, | ௨௯ | பல்பரிசை | பலபரிசை |
| ,, | ௩௮ | கொளி | கோளி |
| ௨௪ | ௩ | வேளி | வெளி |
| ௨௫ | ௧௭ | கேட்பாயாக; இப்பொழுது, | கேட்பாடாக, இப்பொழுது ; |
| ௨௭ | ௧௦ | ஞேடியென | ஞேடியவென |
| ௩௧ | ௨௧ | நிலைவழங்க | நிலைஇவழங்க |
| ௩௫ | ௩ | தான் | தான், |
| ,, | ௩௦ | வேற் | வேல் |
| ௩௯ | ௧௨ | ஆதலான், | ஆதலான் ; |
| ௪௧ | ௬ | ஆங்கு - அசை. | ஆங்க - அசை. |
| ௪௩ | ௨௪ | வாரீர்; பரிசின்மாக்கள், | வாரீர்பரிசின்மாக்கள் ; |
| ௪௫ | ௪ | செம்மரி | செம்மறி |
| ௫௧ | ௨௩ | நிலவு | ணிலவு |
| ௫௬ | ௧௨ | மிளர் | மிளிர் |
| ௬௦ | ௩௫ | படர்ந்த | படர்ந்து |
| ௬௪ | ௧௦ | மோசு | மோசி |
| ,, | ௧௧ | ,, | ,, |
| ௬௫ | ௧௭ | கொடாராயின் | கொடாமையின் |
| ௬௬ | ௧ | புகையிற் | புகையின் |
| ௬௯ | ௧௧ | மாணட | மாண்ட |
| ,, | ௨௫ | வந்திப் | வந்திகைப் |
| ௭௨. | ௫ | பிறர் | நீயே, பிறர் |
| ,, | ௯ | செகுப்ப | செருக்க |
| ௭௪ | ௩௩ | ஒருலீர் | ஒருவீர் |
| ௭௬ | ௩௫ | வந்தி | வந்திகை |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| அஉ | உ0 | உயாந்த | உயர்ந்த |
| அரு | ௩ரு | பாணன் | பண்ணன் |
| அ௬ | க௬ | யுடைப | யுடைய |
| ,, | ௩௩ | பிரிகி | பிரிகு |
| அஎ | உ0 | புழை | புகழை |
| அஅ | ௩௬ | சுற்றமுதலாயினுரென | சுற்றமுதலாயினர் |
| ௯0 | உ௪ | மின்மையின் | மில்லையென்று கூறினமையின் |
| ௯௩ | ௩உ | மூரென | மூரென் |
| க0க | உஎ | மல | பல |
| க0உ | உஅ | அவர்வாளாற் | அவர் வாளாற் |
| க0௪ | ௯ | கங்குநுனியுமுரிந்து | கங்கும்நுனியும்முரிந்து |
| கக0 | உஅ | டெமு | டெழி |
| ககஉ | ௩ | தாடெ | தாடே |
| கக௪ | ௩௪ | காஞ்சி | நொச்சி |
| ககரு | க0 | பரிசை ; | பரிசை. |
| ,, | உஉ | தானேயென் | தானென் |
| ககஅ | உரு | வாகி | வாக |
| கக௯ | உக | மைமீன் | மைம்மீன் |
| கஉ௬ | க௪ | சைப்பிறந்த | சைப்பரந்த |
| ,, | உ0 | பிறர் | பிற |
| கஉ௯ | ௬ | ஆனைத்தொகை | ஆனைத்தொகைபோல |
| ,, | க0 | மணிக்கொடும் பூணுஅய் நின்னுட் | மணிக்கொடும் பூணய் நின்னுட் |
| க௩உ | ௩௪ | தன்மைத்தாக | தன்மையவாக |
| க௩ரு | உ | ீவாழிய நின்றந்தை | நீவாழியர் நின்றந்தை |
| ,, | கஎ | கோடைகட்கா | கோடைக்கட்கா |
| க௩௬ | க௯ | கும்காலே | குங்காலே |
| க௩அ | கரு | னேம், எந்நாளும் ; | னேம் ; எந்நாளும் |
| க௪0 | கஉ | யாத | யாக |
| க௪௬ | உ௪ | வச்சிர | விச்சி |
| ,, | உரு | ,, | ,, |
| கரு0 | க0 | மோசு | மோசி |
| ,, | கஎ | தாராயாயினும | தாராயாயினும். |
| கரு௪ | எ | வருவா | வருவா |
| ,, | கரு | பலப்புலந்து | பலபுலந்து |
| கருஅ | கஎ | சாந்தருந்து | சாந்தருந்திப் |
| ,, | ௩ரு | கரியசுரத் | கரிய அச்சுரத் |
| க௬0 | க௩ | மன் | பன் |
| கஎ௪ | உ௯ | சேறலிற்பிள | சேறலிற் குறைந்தபினு |
| கஎரு | ௯ | ய்மாநல் | ய்மானல் |
| கஅக | உ௯ | அறிவுடை | பாண்டியன் அறிவுடை |
| கஅரு | ௩0 | யாங | யாங் |
| கஅஎ | க0 | தான், நிச்சிதமாக | தான் நிச்சிதமாக, |
| கஅ௯ | ௯ | செலிவு | செலவிவு |
| க௯உ | கஎ | வேல் | வேற் |
| க௯ரு | ௩உ | தனி | தளிர் |

# பிழைத்திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| கசுரு | ஙச | கெடுதத | கெடுத்த |
| கசுசு | உரு | ரெதிர்மூக | ரெதிர் மூக |
| கசுஎ | சு | னுயர் | னுமுயர் |
| ,, | உஅ | முருத்த | முழுத்த |
| உ0ங | கங | யளாய் | யளாய |
| உ0ச | கஅ | யேறு | யேறு, |
| ,, | ஙச | லென், நான் | லெனுகிய நான் |
| உ0எ | ரு | வப்பப | வப்பப் |
| ,, | ஙச | தம | தம் |
| உ0அ | கசு | யிர்கொ | யிர்க்கொ |
| ,, | உசு | குத்று | குற்று |
| உக0 | கஎ | அரச | அரசி |
| உகக | ஙரு | இறந்தென்......போகியென் | இறந்தவென்.........போகியவென் |
| உகச | உக | யறிந்தநிச்சயமாக | நிச்சயமாகவறிந்த |
| உககூ | உரு | கிய ஒருதி | கிய இரண்டனுள் ஒருதி |
| ,, | உஎ | பட்டவெ | படவெ |
| உஉக | ஙங | யானைப் | யானை |
| உஉச | கஎ | வழிமக | வழிஅவன்மக |
| உஉசு | ஙஎ | மன்ஊ | ஊமன் |
| உஉஎ | உச | தனன் | தனன், ஆங்குச் |
| உஉகூ | ஙக | பாடுதோன்ற | பாடு |
| ,, | ,, | வெளிப்பட்ட | வெளிப்பட |
| உங0 | உச | துடுமன் | துடுமென் |
| உஙங | எ | தூர்க்கும் | தூக்கும் |
| ,, | உஉ | எக். | ஒக் |
| உஙச | கச | சோகிர | சேர்கிர |
| உஙகூ | கக | குச்சிற் | குச்சுப் |
| உச0 | உரு | தலைகரந் | தலைக்கரந் |
| உசக | ங | தலைக | தலைக்க |
| *உசஎ | க0 | தோயன்றி | தோன்றி |
| உசகூ | ஙஉ | பெண்டின | பெண்டின் |
| உருஅ | கஉ | லா | லாய் |
| ,, | கங | ............யே | நெருநலெல்லைநீயெறிந்தோன்றம்பி |
| ,, | கச | கற்பெய் | யகற்பெய் |
| உசுசு | கஎ | வாட் | வாள் |
| ,, | கசு | யாவேலொனனு......... | ப் பறியா வேலோ னூரே. |
| உஎக | உச | .........வினல்லது | கல்லே பரவி னல்லது |
| உஎஉ | ரு | பி னுயே. | பி ழுயே. |
| உஎங | சு | ணங்குகலனு | ணங்கனு |
| உஅ0 | ஙக | காதல | நெஞ்சமர்காதல |
| ,, | ஙச | ம............ | மன்பதைக் கெல்லாந்தானுய்த் |
| உஅக | உ0 | மீகை | மீகி |
| உஅஉ | உஅ | மாரனை | மாறனை |

* உசஅ - முதல் உஅ0 - இறுதியாகவுள்ள பக்கங்களின் தலைப்பிலுள்ள 'புறநானூறுமூலமுமுரையும்' என்பதைப் புறநானூறுமூலமெனத் திருத்திக்கொள்க.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௨௧௧ | ௧ | தரு | தரு |
| ௨௧௨ | ௨௮ | சூழ்ருபு | சூடுதருபு |
| ௩௦௫ | ௧௯ | கோழிக்கூ | கோழிகூ |
| ௩௧௦ | ௨௧ | கிண்ளி | கிள்ளி |

## பாட்டு முதற்குறிப்பகராதி.

| | | | |
|---|---|---|---|
| ௨ | ௨௧ | மிசை | முனை |

## துறைவிளக்கம்.

| | | | |
|---|---|---|---|
| ௬ | ௧௮ | படுத்தின் | படுத்தன் |
| ,, | ௧௩ | ருமுறை | மூமுறை |
| ௭ | ௩ | விம்மு | வெம்மு |
| ,, | ௪ | இம்ம | அம்ம |

## துறைக்குறிப்பு.

| | | | |
|---|---|---|---|
| ௮ | ௨௦ | இயல்புங்கூ | இயல்புகூ |
| ௯ | ௪௯ | இன்மையின் | இல்லையென்று கூறினமையின் |

## அரும்பதவகராதி.

| | | | |
|---|---|---|---|
| ௧௫ | ௪௫ | காண | காண் |
| ௨௦ | ௪௨ | ன்வா | ன்யா |
| ௨௨ | ௨௩ | பவரோ | பவரொ |
| ௨௮ | ௩௪ | தே | தை |
| ,, | ௪௫ | வல்.........ஏ | வலே |
| ௩௦ | ௨௧ | முக்கா | முடிக்கா |
| ௩௨ | ௫ | இளம் | ‘இளம் |
| ௩௩ | ௧௫ | பண்பல | புன்புல |
| ,, | ௪௯ | கழி | குழி |
| ௩௫ | ௧௪ | மழு | மறு |
| ,, | ௨௧ | தெரு | தெறி |
| ௩௯ | ௩௯ | கின்றது. | கின்றதென்பர். |
| ௪௪ | ௨௧ | மொக்கி | முக்கி |

இராசாங்கத்துச் சிலாசாதனபரிசோதகருள் ஒருவராகிய

ம-ா-ா-ஸ்ரீ வி. வெங்கையாவர்கள் எழுதிய

# விசேடக்குறிப்பு.

அதியமான், அதிகயான், அதிகைமான், அதிகன், அதியன்: இவ்வைந்தும், சேரவம்சத்தைச்சேர்ந்த ஓரரசனைக்குறிக்கும் ஒருபொருட்பலபெயரென்று தோற்றுகின்றன. அதிகன் என்று சொல்லப்பட்ட ஓரரசன் புகழ்ச்சோழநாயனருடன் யுத்தஞ்செய்ததாகப் பெரியபுராணத்திலிருந்து அறியலாம். சித்தூரைச்சார்ந்த போலுருக்கடுத்த திருமலை என்ற சமணக்கிராமத்திலுள்ள ஓர் கல்வெட்டால், அதிகைமான் அதிகன் அல்லது வடமொழியில் ஸ்ரீதிதுகூ என்று கூறப்பட்டுள்ள கேரளதேசத்தரசனொருவன் இருந்தானென்பதும் அவனுக்கு இராஜராஜனென்று மற்றொருபெயருண்டென்பதும் இவன்வம்சத்தில் எழினி அல்லது வடமொழியில் யவநிகா என்ற ஓரரசனிருந்தானென்பதும் இராஜராஜனுடைய குமாரனை விடுகாதழகியபெருமாள் தகடா என்று சொல்லப்பட்ட ஊரை ஆண்டானென்பதும் தெரிகின்றன. வடமொழியில் தகடா என்று சொல்லப்பட்ட இந்த ஊர் தமிழில் தகடூர் என்று வழங்கிவந்ததாகத்தோற்றுகின்றது. மைஸூர் இராச்சியத்தில் தகடூர் என்று சொல்லப்பட்ட ஊர் ஒன்றிருக்கிறது. நெடுஞ்சடையன் என்று பெயர் பெற்ற பாண்டிய அரசனாற் கொடுக்கப்பட்டுள்ள ஓர் வட்டெழுத்துத் தாம்பிரப் பட்டயத்தில், அப்பாண்டியன் அதியன் என்ற சிற்றரசனைக் காவிரி வடகரையி லிருக்கும் ஆயிரவேலி அயிநூர் புகழியூர் என்ற ஊர்களில் யுத்தஞ்செய்து சயித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

கரிகால்வளவன்: இப்பெயர் வடமொழியில் கரிகாலஃ என்று வழங்கியதாகத் தெரிகிறது. கரிகாலஃ என்பது, யானை அல்லது யானைச்சேனைகளுக்கு நமன் என்று பொருள்படும். கால்கறுத்திருந்ததனால், இவன் கரிகால்வளவனென்று பெயர்பெற்றானென்று சிலர்கூறுவர். [வளவன் - சோழன்.] சோழராஜாக்களில் கரிகாலன் என்று பெயர்பெற்றவரிருவர்; முதல்வன், பட்டினப்பாலை கொண்டவன்; இரண்டாங்கரிகாலன், சிறுபிராயத்தில் வீரபாண்டியனோடு போர்செய்தவன்; இவன், தஞ்சைக்கோயிலெடுப்பித்த ராஜராஜசோழனுடைய தமையன். பொருநராற்றுப்படையில், "தாய்வயிற் றிருந்து தாயமெய்திப் பிறந்து" என்று கரிகால்வளவனை முடத்தாமக்கண்ணியார் சிறப்பித்திருக்கிறார்; இதேவிஷயம், பெரியபுராணத்தில் கோச்செங்கட்சோழநாயனர்புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

சோழன்செங்கணுன், கோச்செங்கட்சோழன்: அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவன்; நன்னிலம் அம்பர் முதலான ஸ்தலங்களில் எடுப்பித்த சிவாலயங்கள், இவனால் எடுப்பிக்கப்பட்டனவென்று தேவாரத்திற் கூறப்பட்டுள்ளன.

# விசேடக்குறிப்பு.

"களவழிக்கவிதைபொய்கையுரைசெய்யவுதியன்
கால்வழித்தளையைவெட்டியரசிட்டவவன்"

என்று கலிங்கத்துப்பரணியிற் சிறப்பிக்கப்பட்டவன் இவனே. திருமங்கைமன்னன் பாடிய பெரியதிருமொழியில் ஆரம்பத்தில் ஆறுந்திருமொழியில் செங்கணன் சிறப்பிக்கப்பட்டிருக்கிறான்.

*தொண்டைமான்: ஒருசோழன் சிறப்புப்பெயராகிய ஆதொண்டையென்னும் பதத்திலிருந்துண்டான காரணப்பெயரென்று சிலர்கூறுவர். சோழர் பல்லவர்களைச் சயித்து அவர்களுடையநாட்டைக் கைக்கொண்டபின், பல்லவகுலத்தைச் சேர்ந்த மன்னவர்கள் தொண்டைமான் என்ற பட்டப்பெயரைப்பெற்றுச் சோழராஜாக்களின்கீழ்ச் சிற்றரசராய்க் காஞ்சிமண்டலத்தையும் அதனைச்சூழ்ந்த நாட்டையும் ஆண்டுகொண்டுவந்தார்கள். கலிங்கத்துப்பரணியிற் சிறப்பிக்கப்பட்ட கருணாகரத்தொண்டைமான் என்பவன் இத்தன்மையையுடைய சிற்றரசர்களில் ஒருவன். தஞ்சாவூரில் சாமந்தநாராயணவிண்ணகர் என்று ஒரு விஷ்ணுகோயில் எடுப்பித்துச் சாமந்தநாராயண சதுர்வேதிமங்கலம் என்று ஒரு கிராமம் உண்டாக்கி அந்தக்கிராமத்தில் வியாக்கியாதாக்களாயிருந்த சதுர்வேதிபட்டர்கள் நூற்றுறுபேர்க்கு விருத்திகளை நியமித்தானென்று தஞ்சாவூர்ப் பெரியகோயிற் கல்வெட்டுக்களுள் ஒன்றிற் கூறப்பட்டுள்ள சாமந்தநாராயணத்தொண்டைமான் என்பவன் மற்றொருவன். சேக்கிழார்நாயனார்சகோதரருக்கு அநபாயச்சோழமஹாராஜன் தொண்டைமான் என்னும் பட்டப்பெயர்கொடுத்ததாகச் சேக்கிழார்நாயனார்சரித்திரத்தால் தெரியவருகிறது. தொண்டைநாடு என்பது, முற்காலத்திற் பல்லவர்கள் அரசாட்சிசெய்த நாட்டின்பெயர். இந்நாட்டுக்கு ஜயங்கொண்ட சோழமண்டலமென்று மற்றொருபெயருண்டு.

நன்னன்: இப்பெயரையுடைய சிற்றரசனொருவன், மலைபடுகடாம் என்ற பாட்டிற் சிறப்பிக்கப்பட்டவன். இவன் ஆண்ட பல்குன்றக்கோட்டம் என்றநாடு வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு 'ஜில்லா'க்களில் அடங்கியிருக்கின்றது.

வெண்ணி: வெண்ணிக்கூற்றம் என்பது அடிக்கடி தஞ்சாவூர்க் கல்வெட்டுக்களில் சொல்லப்படுகின்றது. பெருநங்கைமங்கலம், பூவனூர் என்ற ஊர்கள் இக்கூற்றத்தைச்சேர்ந்தவை.

மிழலைக்கூற்றம்: இக்கூற்றம், தஞ்சாவூர்ப்பெரியகோயிற் கல்வெட்டு ஒன்றிலும் திருப்பூவணத்துத் தாம்பிரப்பட்டயத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. துஞ்சலூர், தண்டலை என்ற ஊர்கள் இக்கூற்றத்தைச்சேர்ந்தவை.

முத்தூற்றுக்கூற்றம்: இது திருப்பூவணத்துத் தாம்பிரப்பட்டயத்தில் அடிக்கடி கூறப்பட்டுள்ளது; கயலூர் என்ற ஊர் இதைச்சேர்ந்தது.

போதியின்மலை: இம்மலை போதலை என்றும் போதலக என்றும் பூர்வகாலத்திற் கூறப்பட்டுள்ளது. அவலோகிதேசுவரன் என்ற பௌத்தமுனி இம்மலையின்மீது இருந்ததாகச்சொல்வதுண்டு.

---

* தொண்டைமானென்பதற்குப்பொருள், பெரும்பாணாற்றுப்படையுரையிற் காண்க.

அரிசில்: இது சோழநாட்டிலுள்ள நதிகளுள் ஒன்றன்பெயர். இந்நதிக்கும் காவிரிக்கும் நடுவிலிருந்தநாட்டுக்கு முற்காலத்தில் உய்யக்கொண்டார் வளநாடு என்ற பெயர் வழங்கிவந்தது.

குதிரைமலை: தென்கன்னட 'ஜில்லா'வில் குதிரைமூக்குமலையென்ற ஒருமலையுண்டு.

கானப்பேர்: பாண்டிநாட்டிற் பாடல்பெற்ற சிவஸ்தலங்களிற் கானப்பேர் என்ற ஊர் ஒன்றுண்டு. தஞ்சாவூர்க் கல்வெட்டு ஒன்றில் பாண்டிநாட்டைச்சேர்ந்த திருக்கானப்பேர்க்கூற்றம் கூறப்பட்டுள்ளது. பாளூர் என்ற ஊர் இக்கூற்றத்தைச் சேர்ந்தது. இது ஈழத்தரசன் பராக்கிரமபாது என்பவனுடைய சேனாதிபதியின் கைவசத்திற் சிலகாலம் இருந்ததாக மகாவம்சத்திலிருந்து தெரியவருகிறது.

தகடூர்: இது மைஸூர் இராச்சியத்திலுள்ளது; விடுகாதழகியபெருமாள் என்ற சேரனால் ஆளப்பட்டது.

அம்பர்: (அம்பல்) பாடல்பெற்ற சிவஸ்தலங்களில் இப்பெயரையுடையது ஒன்றுண்டு. தஞ்சாவூர்க் கல்வெட்டுக்களில் அம்பர் என்ற ஊர் அடிக்கடி சொல்லப்படுகின்றது.

ஆமூர்: மகாபலிபுரம், ஆமூர்க்கோட்டத்தைச்சேர்ந்த ஆமூர்நாட்டிலிருந்ததாக அவ்விடத்துக் கல்வெட்டுக்களிலிருந்து தெரியவருகிறது.

ஆலங்குடி: இப்பெயரையுடைய ஊரொன்று, சோழநாட்டிலிருக்கின்றது. பழைய கல்வெட்டுக்களில் இவ்வூரின்பெயர், இரும்பூளை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆவூர்: பாடல்பெற்ற சிவஸ்தலங்களில் இப்பெயரையுடையது ஒன்றுண்டு; நித்தவிநோதவளநாட்டின் உட்பிரிவான ஆவூர்க்கூற்றம், தஞ்சாவூர்க் கல்வெட்டுக்களில் அடிக்கடி கூறப்பட்டுள்ளது. விளத்தூர், இரும்புதல் என்ற ஊர்கள் இக்கூற்றத்தைச்சேர்ந்தவை.

எயில்: காஞ்சிநகரம், எயிற்கோட்டத்தைச் சேர்ந்திருந்ததென்று கல்வெட்டுக்களினால் வெளிப்படுகின்றது. தென் ஆர்க்காடு 'ஜில்லா' திண்டிவனம் 'தாலூகா'வில் எயில் என்ற கிராமம் ஒன்றுண்டு.

தபால் ஸூபரின்டேண்டன்ட்

# ம-௱-௱-ஸ்ரீ வி. கனகசபைப்பிள்ளையவர்கள் எழுதிய

# விசேடக்குறிப்பு.

---

## 'துஞ்சிய' என்பதற்குப் பொருள்.

௧. காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி.
௨. சேரமான் கோட்டம்பலத்துத்துஞ்சிய மாக்கோதை.
௩. சேரமான் சிக்கற்பள்ளித்துஞ்சிய செல்வக்கடுங்கோவாழியாதன்.
௪. சோழன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளிசேட்சென்னி.
௫. சோழன் குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன்.
௬. சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன்.
௭. சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன்.
௮. பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறன்.
௯. பாண்டியன் கூடகாரத்துத்துஞ்சிய மாறன்வழுதி.
௧௦. பாண்டியன் சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறன்.
௧௧. பாண்டியன் வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி.

மேற்கூறியதொடர்களிலுள்ள 'துஞ்சிய' என்னுஞ்சொல்லின்பொருள் இறந்தவென்பதே; சிலப்பதிகாரம் மதுரைக்காண்டமுடிவில் 'அரசுகட்டிலிற்றுஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்' என்று இளங்கோவடிகள் கூறியிருத்தல்காண்க; இன்னும் ஸ்ரீ சுந்தரமூர்த்திநாயனுர், திருத்தொண்டத்தொகையில் "கருவூர்த்துஞ்சிய புகழ்ச்சோழர்" என்று எடுத்தோதியதுங்காண்க. அக்காலத்தரசர் புறநாட்டைக் கைப்படுத்தி மாற்றரசனைப் போர்க்களத்தில் முறிய அடித்திருந்தால் அதனைவிளக்குந் தொடர்ச்சொற்களைச்சேர்த்து, 'பாண்டியன் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்' என்றும், 'பாண்டியன் தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன்' என்றும், 'பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதி' என்றும் அவர்பெயரைப் பிற்காலத்தார் வழங்கிவந்ததுபோலவே, மேலேகூறப்பட்ட இடங்களில் அவ்வவ்வரசர் இறந்ததனுல் அதனையே விசேடணமாக்கி அவர்கள்பெயரைப் பிற்காலத்தார் வழங்கிவந்தார்களென்று தோற்றுகின்றது. *

---

* இப்படியே, அரசர்கள் இறந்தகாலத்தை அவர்கள்பெயர்க்கு விசேடணமாக்கிக்கூறுதல், கோழிக்கோட்டு ஸாமூதிரி அரசரின் பரம்பரைவழக்கம்; திருவனந்தபுரத்தரசரின் பரம்பரைவழக்கமு மிதுவே.

# பிரகடனபத்திரம்.

| | ரூபா. | அணா. |
|---|---|---|
| புறநானூறு மூலமும் உரையும் ... ... ... ... | ௪ | 0 |
| தபாற்கூலி ரிஜிஸ்திரேஷன் சார்ஜ் ... ... | 0 | ௫ |
| பத்துப்பாட்டு நச்சினார்க்கினியருரை ... ... ... ... | ௩ | 0 |
| தபாற்கூலி ரிஜிஸ்திரேஷன் சார்ஜ் ... ... | 0 | ௫ |
| சீவகசிந்தாமணி நச்சினார்க்கினியருரை ... ... ... | ௫ | 0 |
| தபாற்கூலி ரிஜிஸ்திரேஷன் சார்ஜ் ... ... | 0 | ௮ |
| சிலப்பதிகாரம் அடியார்க்குநல்லாருரை, அரும்பதவுரை | ௬ | ௮ |
| தபாற்கூலி ரிஜிஸ்திரேஷன் சார்ஜ் ... ... | 0 | ௭ |
| மதுரைக்காஞ்சி நச்சினார்க்கினியருரை... ... ... ... | ௧ | 0 |
| திருப்பெருந்துறைப்புராணம் ... ... ... ... ... | ௧ | 0 |
| இவ்விரண்டிற்கும் தனித்தனி தபாற்கூலி ... | 0 | ௨ |
| நெடுநல்வாடை நச்சினார்க்கினியருரை ... ... ... ... | 0 | ௫ |
| கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது ... ... ... | 0 | ௨ |
| திருமயிலைத்திரிபந்தாதி ... ... ... ... ... ... | 0 | ௧ |
| தியாகராஜசெட்டியாரவர்கள் பிரபந்தத்திரட்டு ... ... | 0 | ௨ |
| இலந்தைநகர்த் தண்டபாணி ஸ்துதி ... ... ... ... | 0 | ௧ |

நெடுநல்வாடை முதலியவற்றிற்குத் தனித்தனியே தபாற்கூலி அரை அணா.

இப்புத்தகங்களை அடியிற்சொல்லப்படுபவர்களிடத்தும் என்னிடத்தும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

சென்னபட்டணத்தைச்சார்ந்த திருவல்லிக்கேணி புக்ஸெல்லர்,
**ஸ்ரீநிவாஸ, வரதாசாரியார்.**

திருச்சிராப்பள்ளி ஸெண்ட் ஜோஸப் காலெஜ் தமிழ்ப்பண்டிதர்,
**முத்துச்சிதம்பரம்பிள்ளை.**

சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை உபாத்தியாயர்,
**அ. சிவராமசெட்டியார்.**

மதுரைப் புதுமண்டபம் புஸ்தகக்கடை,
**சண்முகம்பிள்ளை.**

யாழ்ப்பாணம் ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலை உபாத்தியாயர்
**அ. குமாரசாமிப்பிள்ளை.**

இங்ஙனம்
கும்பகோணம்
காலேஜ்
**வே. சாமிநாதையன்.**

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை